வெளியீடு : 10-4-2024 Issued: 10-4-2024

தமிழ்நாடு
சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
செயலக வெளியீடு
(பதினாறாவது பேரவை)

TAMIL NADU
LEGISLATIVE ASSEMBLY DEBATES
OFFICIAL REPORT
(SIXTEENTH ASSEMBLY)

வியாழக்கிழமை, ஏப்ரல் 13, 2023—தொகுதி 65—எண் 1

Thursday the 13th April 2023—Volume 65—No. 1

சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை-600 009.
Legislative Assembly Secretariat, Chennai-600 009.

விலை ரூ. 3.00] **[Price Rs. 3.00**

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

13–4–2023

உள்ளடக்கம்

	பக்கங்கள்
ஆளுநரும் அமைச்சரவையும்	ix-xiv
Governor and Council of Ministers	xv-xix
பேரவைத் தலைவர், பேரவைத் துணைத் தலைவர், மாற்றுத் தலைவர்கள், செயலாளர் மற்றும் முக்கிய அலுவலர்கள்	xxi-xxiv
பேரவை உறுப்பினர்கள் (அகர வரிசைப்படி)	xxv-xxxii
1. வினாக்கள்-விடைகள்—	
உடுக்குறியிட்ட வினாக்கள்	1-33
2. அறிவிப்புகள்—	33-34, 342-343, 493
(அ) சமத்துவ நாள் உறுதிமொழி நிகழ்ச்சி, சட்டமன்ற உறுப்பினர்கள் பங்கேற்கும் வகையில் பேரவையை தற்காலிகமாக ஒத்திவைத்தல்	33-34
(ஆ) 13—4—2023 அன்று காலை திருமதி ஆ தமிழரசி அவர்கள் கேள்வி கேட்ட சமயம்-பேரவைத் தலைவர் குறிப்பிட்ட சில வார்த்தைகள் நீக்கம்-சில ஊடகங்கள் தவறாக செய்தி வெளியிடுவதை நிறுத்த ஆணை	342-343
(இ) செவித்திறன் மாற்றுத் திறனாளிகள், சைகை மொழியில் பேரவை நடவடிக்கைகளின் தொகுப்பு ஒளிப்பதிவை வெளியிடுதல்—தொடக்க விழா	493

பக்கங்கள்

3. சிறப்புக் கவன ஈர்ப்பு— 34-50, 53-54

மிகவும் பிற்படுத்தப்பட்டோருக்கான இடஒதுக்கீட்டில், வன்னியர்களுக்கு 10.5 சதவிகித உள் ஒதுக்கீடு, பிற்படுத்தப்பட்டோர் ஆணையத்திற்கான கால அவகாசம் நீட்டித்திருப்பது

திரு. ஜி.கே. மணி 34-39, 41, 54

**மாண்புமிகு திரு. துரைமுருகன்* 37-38, 44-45

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்* 39-40, 47

திரு. தி. வேல்முருகன் 41-43

திரு. ஈ.ஆர். ஈஸ்வரன் 43, 49

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் 43-44

திரு. கே.பி. முனுசாமி 46-48, 53-54

திரு. கு. செல்வபெருந்தகை 48-49

திரு. S.S. பாலாஜி 50

4. இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் 11—4—2023 அன்று ஒன்றிய உள் துறை அமைச்சர் மகன் பெயரை குறிப்பிட்டது, நீக்கக் கோருதல்— 50-53

திரு. நயினார் நாகேந்திரன் 51-52

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்* 52

பக்கங்கள்

5. கவன ஈர்ப்பு— 55-74

(அ) செங்கல் தயாரிப்புக்குத் தேவையான மண் எடுக்க அனுமதி வேண்டியது குறித்து 55-67

திரு. ந. தளவாய் சுந்தரம் 55-56, 58-64

*மாண்புமிகு திரு. துரைமுருகன் 56-58, 64-67

திரு. கோ. தளபதி 62

திரு. ரூபி ஆர். மனோகரன் 63

(ஆ) கன்னியாகுமரி மாவட்டம் நான்குவழித் தடச் சாலைப் பணிகளை விரைந்து முடித்தல் 67-74

திரு. ஜே.ஜி. பிரின்ஸ் 67-71, 73

மாண்புமிகு திரு. எ.வ. வேலு 67-68, 71-74

6. அரசினர் சட்டமுன்வடிவு (அறிமுகம் செய்தல்)— 74-75

தமிழ்நாடு கடைகள் மற்றும் நிறுவனங்கள் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2023

மாண்புமிகு திரு. சி.வி. கணேசன் 74-75

திரு. வி.பி. நாகைமாலி 75

திரு. ட்டி. இராமச்சந்திரன் 75

பக்கங்கள்

7. **மானியக் கோரிக்கைகள், 2023–2024, விவாதமும் வாக்கெடுப்பும்**—*தொடர்ச்சி*	76-274
(அ) கோரிக்கை எண் 9– பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை	76-274
(ஆ) கோரிக்கை எண் 18– கதர், கிராமத் தொழில்கள் மற்றும் கைவினைப் பொருட்கள் (கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை)	
(இ) கோரிக்கை எண் 15– சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றம் (சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத் துறை)	
(ஈ) கோரிக்கை எண் 54– வனம் (சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத் துறை)	
*மாண்புமிகு திரு. R.S. ராஜகண்ணப்பன்	76, 97, 147, 210-211
*மாண்புமிகு திரு. சிவ.வீ. மெய்யநாதன்	113, 148-149, 227-228, 255-274
மாண்புமிகு டாக்டர் மா. மதிவேந்தன்	130-131, 149, 165, 180, 235-255
*மாண்புமிகு திரு. செஞ்சி K.S. மஸ்தான்	148
*திரு. திண்டுக்கல் சி. சீனிவாசன்	150-164

	பக்கங்கள்
7. மானியக் கோரிக்கைகள், 2023–2024, விவாதமும் வாக்கெடுப்பும்— *தொடர்ச்சி*	
**மாண்புமிகு திரு. துரைமுருகன்*	159
திரு. ப. கார்த்திகேயன்	165-171
திரு. கே. பொன்னுசாமி	171-180
**திரு. தி. ராமச்சந்திரன்*	77, 98, 113, 131, 181-192
திரு. ஆ. வெங்கடேசன்	192-198
**திரு. ஜெ. முகம்மது ஷாநவாஸ்*	198-206
திரு. வி.பி. நாகைமாலி	206
மாண்புமிகு திரு. எஸ். ரகுபதி	207
திரு. ஜி.கே. மணி	80, 100,116, 133-134, 206-214
**மாண்புமிகு திரு. கே.என். நேரு*	213
திரு. மொ. பழனியாண்டி	214-221
திரு. K.C. *கருப்பணன்*	88-89, 125, 222-235
**மாண்புமிகு திரு. பி.கே. சேகர்பாபு*	224-225
மாலைக் கூட்டம்	
7. மானியக் கோரிக்கைகள், 2023–2024, விவாதமும் வாக்கெடுப்பும்—*தொடர்ச்சி*	
(அ) கோரிக்கை எண் 9–பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை *(ஆ) கோரிக்கை எண் 18– கதர், கிராமத் தொழில்கள் மற்றும் கைவினைப் பொருட்கள் (கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை)*	275-492

பக்கங்கள்

7. மானியக் கோரிக்கைகள், 2023–2024, விவாதமும் வாக்கெடுப்பும்—*தொடர்ச்சி*

(இ) கோரிக்கை எண் 15–சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றம் (சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத் துறை)

(ஈ) கோரிக்கை எண் 54–வனம் (சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத் துறை)

மாண்புமிகு திரு. RS. ராஜகண்ணப்பன்	275-312
மாண்புமிகு திரு. செஞ்சி KS. மஸ்தான்	312-328
மாண்புமிகு திரு. தா.மோ. அன்பரசன்	328-339
(உ) கோரிக்கை எண் 26 – வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை	343-492
மாண்புமிகு திரு. சு. முத்துசாமி	343, 355-356, 423-452
மாண்புமிகு திரு. கே.என். நேரு	356
மாண்புமிகு திரு. தா.மோ. அன்பரசன்	356-357, 367-368, 476-491
*மாண்புமிகு திரு. பி.கே. சேகர்பாபு	357, 452-476
*திரு. A.K. செல்வராஜ்	354, 358-371
திரு. கோ. ஐயப்பன்	371, 373-381

		பக்கங்கள்
7.	**மானியக் கோரிக்கைகள், 2023–2024, விவாதமும் வாக்கெடுப்பும்**—*தொடர்ச்சி*	
	மாண்புமிகு திரு. எ.வ. வேலு	372-373
	**திரு. A.J. மணிக்கண்ணன்*	379, 381-394
	திரு. ஜே.ஜி. பிரின்ஸ்	354, 394-402
	**மாண்புமிகு திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி*	396
	திரு. செ. ஸ்டாலின் குமார்	402-408
	திரு. செ. முருகேசன்	408-412
	திரு. S. ஜெயக்குமார்	352-353, 412-423
8.	**பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்**	493-495
9.	**இணைப்புகள்**	497-942

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

ஆளுநரும் அமைச்சரவையும்

ஆளுநர்—மாண்புமிகு திரு. ஆர்.என். ரவி

அமைச்சரவையின் உறுப்பினர்கள்

1.	முதலமைச்சர் ..	**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்:** *பொது, பொது நிர்வாகம், இந்திய ஆட்சிப் பணி, இந்தியக் காவல் பணி, இந்திய வனப் பணி, மற்ற அகில இந்திய பணி, மாவட்ட வருவாய் அலுவலர்கள், காவல், உள் துறை, சிறப்பு முயற்சிகள், மாற்றுத் திறனாளிகள் நலன்*
2.	நீர்வளத் துறை அமைச்சர் ..	**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** *சிறு பாசனம் உள்ளிட்ட பாசனத் திட்டங்கள், சட்டமன்றம், ஆளுநர் மற்றும் அமைச்சரவை, தேர்தல்கள் மற்றும் கடவுச் சீட்டுகள், கனிமங்கள் மற்றும் சுரங்கங்கள்*
3.	நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் ..	**மாண்புமிகு திரு. கே.என். நேரு:** *நகராட்சி நிர்வாகம், நகர்ப்பகுதி மற்றும் குடிநீர் வழங்கல்*
4.	ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் ..	**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:** *ஊரக வளர்ச்சி, ஊராட்சிகள் மற்றும் ஊராட்சி ஒன்றியங்கள்*
5.	உயர் கல்வித் துறை அமைச்சர் ..	**மாண்புமிகு முனைவர் க. பொன்முடி:** *தொழில்நுட்பக் கல்வி உள்ளிட்ட உயர் கல்வி, மின்னணுவியல், அறிவியல் மற்றும் தொழில்நுட்பவியல்*
6.	பொதுப் பணித் துறை அமைச்சர் ..	**மாண்புமிகு திரு. எ.வ. வேலு:** *பொதுப் பணிகள் (கட்டடங்கள்), நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள்*

7. **வேளாண்மை — உழவர் நலத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்:**

வேளாண்மை, வேளாண்மைப் பொறியியல், வேளாண் பணிக் கூட்டுறவுச் சங்கங்கள், தோட்டக்கலை, சர்க்கரை, கரும்புத் தீர்வை, கரும்புப் பயிர் மேம்பாடு மற்றும் தரிசு நில மேம்பாடு

8. **வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. K.K.S.S.R. இராமச்சந்திரன்:**

வருவாய், மாவட்ட வருவாய் பணியமைப்பு, துணை ஆட்சியர்கள், பேரிடர் மேலாண்மை

9. **தொழில் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு:**

தொழில்கள், தமிழ் ஆட்சி மொழி மற்றும் தமிழ்ப் பண்பாடு, தொல்லியல்

10. **இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. உதயநிதி ஸ்டாலின்**

இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை, சிறப்புத் திட்ட செயலாக்கத் துறை, வறுமை ஒழிப்புத் திட்டங்கள் மற்றும் ஊரகக் கடன்கள்

11. **சட்டத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. எஸ். ரகுபதி:**

சட்டம், நீதிமன்றங்கள், சிறைச்சாலை மற்றும் ஊழல் தடுப்புச் சட்டம்

12. வீட்டு வசதி மற்றும் நகர்ப்புர வளர்ச்சித் துறை அமைச்சர்	..	**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி:** *வீட்டு வசதி, ஊரக வீட்டு வசதி, நகரமைப்புத் திட்டமிடல் மற்றும் வீட்டு வசதி மேம்பாடு, இட வசதிக் கட்டுப்பாடு, நகரத் திட்டமிடல் மற்றும் நகர்ப்பகுதி வளர்ச்சி*
13. கூட்டுறவுத் துறை அமைச்சர்	..	**மாண்புமிகு திரு. கேஆர். பெரியகருப்பன்:** *கூட்டுறவுத் துறை*
14. குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர்	..	**மாண்புமிகு திரு. தா.மோ. அன்பரசன்:** *குடிசைத் தொழில்கள், சிறு தொழில்கள் உள்ளிட்ட ஊரகத் தொழில்கள், தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியம்*
15. செய்தித் துறை அமைச்சர்	..	**மாண்புமிகு திரு. மு.பெ. சாமிநாதன்:** *செய்தி மற்றும் விளம்பரம், திரைப்படத் தொழில்நுட்பவியல் மற்றும் திரைப்படச் சட்டம், பத்திரிகை அச்சுக் காகிதக் கட்டுப்பாடு, எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை மற்றும் அரசு அச்சகம்*
16. சமூக நலன் — மகளிர் உரிமைத் துறை அமைச்சர்	..	**மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன்:** *மகளிர் மற்றும் குழந்தைகள் நலம் உள்ளிட்ட சமூக நலம், ஆதரவற்றோர் இல்லங்கள் மற்றும் குற்றவாளிகள் சீர்திருத்த நிருவாகம், ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சி மற்றும் இரவலர் காப்பு இல்லங்கள் மற்றும் சமூக சீர்திருத்தம் மற்றும் சத்துணவுத் திட்டம்*

17. **மீன்வளம் – மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. அனிதா R. ராதாகிருஷ்ணன்:**
மீன்வளம், மீன் வளர்ச்சிக் கழகம் மற்றும் கால்நடை பராமரிப்பு

18. **பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. R.S. ராஜகண்ணப்பன்:**
பிற்படுத்தப்பட்டோர் நலன், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் நலன் மற்றும் சீர்மரபினர் நலன் மற்றும் கதர் மற்றும் கிராமத் தொழில் வாரியம்

19. **சுற்றுலாத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. கா. ராமசந்திரன்:**
சுற்றுலா மற்றும் சுற்றுலா வளர்ச்சிக் கழகம்

20. **உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. அர. சக்கரபாணி:**
உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல், நுகர்வோர் பாதுகாப்பு, விலைக் கட்டுப்பாடு

21. **மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. V. செந்தில்பாலாஜி:**
மின்சாரம், மரபுசாரா எரிசக்தி மேம்பாடு, மதுவிலக்கு, ஆயத்தீர்வை மற்றும் கருப்பஞ்சாற்றுக் கசண்டு

22. **கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. ஆர். காந்தி:**
கைத்தறி மற்றும் துணிநூல் துறை, பூதானம் மற்றும் கிராம தானம்

23. **மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன்:**
மருத்துவம், மருத்துவக் கல்வி மற்றும் மக்கள் நல்வாழ்வு

24. **வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர்**	..	**மாண்புமிகு திரு. பி. மூர்த்தி:** *வணிக வரிகள், பதிவு மற்றும் முத்திரைத்தாள் சட்டம், எடைகள் மற்றும் அளவைகள், கடன் கொடுத்தல் குறித்த சட்டம் உள்ளிட்ட கடன் நிவாரணம், சீட்டுகள் மற்றும் கம்பெனிகள் பதிவு*
25. **போக்குவரத்துத் துறை அமைச்சர்**	..	**மாண்புமிகு திரு. எஸ்.எஸ். சிவசங்கர்:** *போக்குவரத்து, நாட்டுடைமையாக்கப்பட்ட போக்குவரத்து மற்றும் இயக்கூர்தி சட்டம்*
26. **இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்**	..	**மாண்புமிகு திரு. பி.கே. சேகர்பாபு:** *இந்து சமயம் மற்றும் அறநிலையங்கள் மற்றும் சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழுமம்*
27. **நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர்**	..	**மாண்புமிகு முனைவர் பழனிவேல் தியாக ராஜன்:** *நிதித் துறை, திட்டம், மனிதவள மேலாண்மை, ஓய்வூதியம் மற்றும் ஓய்வுக்கால நன்மைகள் மற்றும் புள்ளியியல் துறை*
28. **பால்வளத் துறை அமைச்சர்**	..	**மாண்புமிகு திரு. சா.மு. நாசர்:** *பால்வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சி*
29. **சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத் துறை அமைச்சர்**	..	**மாண்புமிகு திரு. செஞ்சி K.S. மஸ்தான்:** *சிறுபான்மையினர் நலன், வெளிநாடு வாழ் தமிழர் நலன், அகதிகள், வெளியேற்றப்பட்டவர்கள் மற்றும் வக்ஃப் வாரியம்*

30. பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்	..	**மாண்புமிகு திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி:** *பள்ளிக் கல்வி*
31. சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத் துறை அமைச்சர்	..	**மாண்புமிகு திரு. சிவ.வீ. மெய்யநாதன்:** *சுற்றுச்சூழல், மாசுக் கட்டுப்பாடு மற்றும் முன்னாள் படைவீரர்கள்*
32. தொழிலாளர் நலன் — திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர்	..	**மாண்புமிகு திரு. சி.வி. கணேசன்:** *தொழிலாளர்கள் நலன், மக்கள் தொகை, வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சி, மக்கள் தொகை கணக்கெடுப்பு, நகரம் மற்றும் ஊரக வேலைவாய்ப்பு*
33. தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை அமைச்சர்	..	**மாண்புமிகு திரு. த. மனோ தங்கராஜ்:** *தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள்*
34. வனத் துறை அமைச்சர்	..	**மாண்புமிகு டாக்டர் மா. மதிவேந்தன்:** *வனம்*
35. ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்	..	**மாண்புமிகு திருமதி என். கயல்விழி செல்வராஜ்:** *ஆதி திராவிடர் நலன், மலைவாழ் பழங்குடியினர்கள் மற்றும் கொத்தடிமைத் தொழிலாளர்கள் நலன்*

GOVERNOR AND COUNCIL OF MINISTERS

GOVERNOR–HON'BLE THIRU R.N. RAVI

MEMBERS OF THE COUNCIL OF MINISTERS

1.	**Chief Minister**	..	**The Hon. Thiru M.K. Stalin:** Public, General Administration, Indian Administrative Service, Indian Police Service, Indian Forest Service, Other All India Service, District Revenue Officers, Police, Home, Special Initiatives and Welfare of the Differently abled persons
2.	**Minister for Water Resources**	..	**The Hon. Thiru Duraimurugan:** Irrigation Projects including small Irrigation, Legislative Assembly, Governor and Ministry, Elections and Passports, Minerals and Mines
3.	**Minister for Municipal Administration**	..	**The Hon. Thiru K.N. Nehru:** Municipal Administration, Urban and Water Supply
4.	**Minister for Rural Development**	..	**The Hon. Thiru I. Periyasamy:** Rural Development, Panchayats and Panchayat Union
5.	**Minister for Higher Education**	..	**The Hon. Dr. K. Ponmudi:** Higher Education including Technical Education, Electronics, Science and Technology
6.	**Minister for Public Works**	..	**The Hon. Thiru E.V. Velu:** Public Works (Buildings), Highways and Minor Ports

7.	**Minister for Agriculture and Farmer's Welfare**	..	**The Hon. Thiru M.R.K. Panneerselvam:** Agriculture, Agricultural Engineering, Agro Service Co–operatives, Horticulture, Sugars, Sugarcane Excise, Sugarcane Development and Waste Land Development
8.	**Minister for Revenue and Disaster Management**	..	**The Hon. Thiru K.K.S.S.R. Ramachandran:** Revenue, District Revenue Establishment, Deputy Collectors, Disaster Management
9.	**Minister for Industries**	..	**The Hon. Thiru Thangam Thennarasu:** Industries, Tamil Official Language and Tamil Culture, Archeology
10.	**Minister for Youth Welfare and Sports Development**	..	**The Hon. Thiru Udhayanidhi Stalin** Youth Welfare and Sports Development, Special Programme Implementation Department & Poverty Alleviation Programme and Rural Indebtedness
11.	**Minister for Law**	..	**The Hon. Thiru S. Regupathy:** Law, Courts, Prisons and Prevention of Corruption
12.	**Minister for Housing and Urban Development**	..	**The Hon. Thiru S. Muthusamy:** Housing, Rural Housing, Town Planning Projects and Housing Development, Accommodation Control, Urban Planning and Urban Development

13.	**Minister for Co–operation** ..	**The Hon. Thiru KR. Periakaruppan:** Co–operation
14.	**Minister for Micro, Small and Medium Enterprises** ..	**The Hon. Thiru T.M. Anbarasan:** Rural Industries including Cottage Industries, Small Industries, Tamil Nadu Urban Habitat Development Board
15.	**Minister for Information & Publicity** ..	**The Hon. Thiru M.P. Saminathan:** Information & Publicity, Film Technology and Cinematograph Act, Newsprint Control, Stationery and Printing, Government Press
16.	**Minister for Social Welfare & Women Empowerment** ..	**The Hon. Tmt. P. Geetha Jeevan:** Social Welfare including Women and Children Welfare, Orphanages and Correctional Administration, Integrated Child Development Scheme and Beggar Homes and Social Reforms & Nutritious Meal Programme
17.	**Minister for Fisheries - Fishermen Welfare and Animal Husbandry** ..	**The Hon. Thiru Anitha R. Radhakrishnan:** Fisheries, Fisheries Development Corporation and Animal Husbandry
18.	**Minister for Backward Classes Welfare** ..	**The Hon. Thiru R.S. Rajakannappan:** Backward Classes Welfare, Most Backward Classes Welfare, Denotified Communities Welfare and Khadi & Village Industries Board

19.	**Minister for Tourism** ..	**The Hon. Thiru K. Ramachandran:** Tourism and Tourism Development Corporation
20.	**Minister for Food and Civil Supplies** ..	**The Hon. Thiru R. Sakkarapani:** Food and Civil Supplies, Consumer Protection and Price Control
21.	**Minister for Electricity, Prohibition & Excise** ..	**The Hon. Thiru V. Senthilbalaji:** Electricity, Non Conventional Energy Development, Prohibition and Excise, Molasses
22.	**Minister for Handlooms and Textiles** ..	**The Hon. Thiru R. Gandhi:** Handlooms and Textiles, Boodhan and Gramadhan
23.	**Minister for Health and Family Welfare** ..	**The Hon. Thiru Ma. Subramanian:** Health, Medical Education and Family Welfare
24.	**Minister for Commercial Taxes and Registration** ..	**The Hon. Thiru P. Moorthy:** Commercial Taxes, Registration and Stamp Act, Weights and Measures, Debt Relief including legislation on Money lending, Chits and Registration of Companies
25.	**Minister for Transport** ..	**The Hon. Thiru S.S. Sivasankar:** Transport, Nationalised Transport and Motor Vehicles Act
26.	**Minister for Hindu Religious and Charitable Endowments** ..	**The Hon. Thiru P.K. Sekarbabu:** Hindu Religious and Charitable Endowments and CMDA

27.	**Minister for Finance and Human Resources Management** ..	**The Hon. Dr. Palanivel Thiaga Rajan:** Finance, Planning, Human Resources Management, Pensions and Pensionary benefits and Statistics
28.	**Minister for Milk & Dairy Development** ..	**The Hon. Thiru S.M. Nasar:** Milk and Dairy Development
29.	**Minister for Minorities Welfare and Non Resident Tamils Welfare** ..	**The Hon. Thiru Gingee K.S. Masthan:** Minorities Welfare, Non Resident Tamils Welfare, Refugees & Evacuees and Wakf Board
30.	**Minister for School Education** ..	**The Hon. Thiru Anbil Mahesh Poyyamozhi:** School Education
31.	**Minister for Environment and Climate Change** ..	**The Hon. Thiru Siva.V. Meyyanathan:** Environment and Pollution Control and Ex–Servicemen
32.	**Minister for Labour Welfare and Skill Development** ..	**The Hon. Thiru C.V. Ganesan:** Labour Welfare, Population, Employment and Training, Census, Urban and Rural Employment
33.	**Minister for Information Technology and Digital Services** ..	The Hon. Thiru T. Mano Thangaraj: Information Technology and Digital Services
34.	**Minister for Forests** ..	**The Hon. Dr. M. Mathiventhan:** Forests
35.	**Minister for Adi Dravidar Welfare** ..	**The Hon. Tmt. N. Kayalvizhi Selvaraj:** Adi Dravidar Welfare, Hill Tribes and Bonded Labour Welfare

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

பேரவைத் தலைவர், பேரவைத் துணைத் தலைவர், மாற்றுத் தலைவர்கள், செயலாளர் மற்றும் முக்கிய அலுவலர்கள்

பேரவைத் தலைவர்

மாண்புமிகு திரு. மு. அப்பாவு

பேரவைத் துணைத் தலைவர்

மாண்புமிகு திரு. கு. பிச்சாண்டி

மாற்றுத் தலைவர்கள்#

திரு. க. அன்பழகன்

திரு. நா. இராமகிருஷ்ணன்

திரு. S.R. இராஜா

திரு. தா. உதயசூரியன்

திரு. துரை. சந்திரசேகரன்

முனைவர் T.R.B. ராஜா

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

செயலாளர்

முனைவர் கி. சீனிவாசன்

11-1-2023 அன்று மாண்புமிகு பேரவைத் தலைவரால் அறிவிக்கப்பட்டவாறு.

முக்கிய அலுவலர்கள்

திருமதி லி.சு. வசந்திமலர், எம்.ஏ., எம்.ஏ., பி.ஜி.எல்.	..	சிறப்புச் செயலாளர்
திரு. ந. இரவிசந்திரன், பி.எஸ்சி., பி.எல்.	..	கூடுதல் செயலாளர் (பதிப்பாளர்)
திரு. தே. நாகராஜன், பி.எஸ்சி., பி.எல்.	..	கூடுதல் செயலாளர் (பதிப்பாளர்)
திரு. பா. சுப்பிரமணியம், பி.காம்., பி.ஜி.எல்.	..	கூடுதல் செயலாளர்
திருமதி ச. ஆண்டாள், பி.எஸ்சி., பி.ஜி.எல்.	..	இணைச் செயலாளர் (பதிப்பாளர்)
திரு. ச. ஜெயகணேசன், பி.எஸ்சி., பி.ஜி.எல்.	..	இணைச் செயலாளர் (பதிப்பாளர்)
திரு. வ. பூபாலன், பி.காம்., பி.ஜி.எல்.	..	இணைச் செயலாளர் (பதிப்பாளர்)
திருமதி ஸ்ரீ. ஸ்ரீவித்யா, பி.எஸ்சி., பி.ஜி.எல்.	..	இணைச் செயலாளர் (பதிப்பாளர்)
திருமதி இரா. சாந்தி, எம்.ஏ., எம்.ஃபில்., பி.ஜி.எல்.	..	இணைச் செயலாளர்
திரு. அ. அய்யன்பெருமாள், எம்.ஏ., பி.ஜி.எல்.	..	இணைச் செயலாளர்
திரு. செ. பாண்டியன், எம்.ஏ., எம்.ஃபில்., எம்.எல்.	..	இணைச் செயலாளர்
திரு. மு. ஆதிசேசன், எம்.காம்., பி.எட்., எல்.எல்.பி.	..	மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் சிறப்பு தனிச் செயலர் (இணைச் செயலாளர் நிலை)
திரு. ப. பத்மகுமார், எம்.எஸ்சி., பி.எட்., பி.எல்.	..	மாண்புமிகு பேரவைத் தலைவரின் சிறப்பு தனிச் செயலர் (இணைச் செயலாளர் நிலை)
திரு. மு. கருணாநிதி, பி.ஏ., பி.ஜி.எல்.	..	இணைச் செயலாளர்

திருமதி பி. தேன்மொழி, எம்.ஏ., பி.எட்., எம்.ஃபில்., பி.எல்.	..	இணைச் செயலாளர்
திருமதி சி. சாந்தா, எம்.காம்., பி.ஜி.எல்.	..	துணைச் செயலாளர் (பதிப்பாளர்)
திரு. த. ரகுபதி, எம்.காம்., பி.ஜி.எல்.	..	துணைச் செயலாளர் (பதிப்பாளர்) மாற்றுப் பணியில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் துணைச் செயலாளர்
திரு. சி. ஸ்ரீதரன், எம்.காம்., பி.எட்., எல்.எல்.பி.	..	துணைச் செயலாளர் (பதிப்பாளர்)
திருமதி பு. சங்கீதா, பி.காம்., பி.ஜி.எல்.	..	துணைச் செயலாளர் (பதிப்பாளர்)
திருமதி சு.சீ. அலமேலு, எம். காம்., பி.ஜி.எல்.	..	துணைச் செயலாளர் (பதிப்பாளர்)
திருமதி டி.வி. ஜெயஸ்ரீ , பி.ஏ., பி.ஜி.எல்.	..	துணைச் செயலாளர்
திருமதி பா. ரேவதி, பி.எஸ்சி., பி.எட்., பி.ஜி.எல்.	..	துணைச் செயலாளர்
திரு. கே. ரமேஷ், பி.எஸ்சி., பி.எல்.	..	துணைச் செயலாளர்
திரு. க.லோ. சிவகுமரன், பி.எஸ்சி., பி.ஜி.எல்.	..	துணைச் செயலாளர்
திருமதி பெர்லின் ரூப்குமார், எம்.ஏ., பி.எல்.	..	துணைச் செயலாளர்
திரு. கோ. கணேஷ், பி.எஸ்சி., பி.எல்.	..	துணைச் செயலாளர்
திரு. சு. பாலகிருஷ்ணன், பி.ஏ., பி.எல்.	..	துணைச் செயலாளர்
திருமதி சீ. உஷா, பி.காம்., பி.ஜி.எல்.	..	துணைச் செயலாளர்
திரு. ஸ்ரீரா. ரவி, எம்.காம்., பி.எல்.	..	துணைச் செயலாளர்

திருமதி த. சுஜாதா தேவி, பி.இ., பி.ஜி.எல்.	..	துணைச் செயலாளர்
திரு. அ.சு. கேளுடை நம்பி, எம். எஸ்சி., பி.ஜி.எல்.	..	குழு அலுவலர் (பொதுக் கணக்குக் குழு)
திரு. மு. மோகன் ராஜா, எம்.ஏ., பி.எட்., பி.ஜி.எல்.	..	குழு அலுவலர் (துணைச் செயலாளர் நிலை) மாற்றுப் பணியில் மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்களின் சிறப்பு நிலை நேர்முக உதவியாளர்
திருமதி வி. விமலா தேவி, பி.காம்., பி.ஜி.எல்., எம்.பி.ஏ.	..	தலைமை நிருபர்
திரு. கோ. வரதராஜன், பி.காம்., எம்.பி.ஏ., எல்.எல்.பி.	..	தலைமை நிருபர்
திருமதி ஆர். மலர்விழி, பி.ஏ.	..	தலைமை நிருபர்
திரு. இரா. இராஜேந்திரன், பி.ஏ., பி.ஜி.எல்.	..	சார்புச் செயலாளர்
திரு. கி. முரளீதரன் நாயர், பி.ஏ.	..	சார்புச் செயலாளர்
திருமதி வி. சுமதி, பி.காம்., பி.ஜி.எல்.	..	சார்புச் செயலாளர்
திரு. அ. பாஸ்கரன், பி.காம்., பி.ஜி.எல்.	..	சார்புச் செயலாளர்
திரு. ஜெ. பாலசீனிவாசன், எம். காம்., எம்.ஃபில்., பி.ஜி.எல்.	..	சார்புச் செயலாளர்
திரு. வே. லோகநாதன், பி.எஸ்சி.	..	சார்புச் செயலாளர்
திருமதி த. இந்திராகாந்தி, பி.ஏ.	..	சார்புச் செயலாளர்
திருமதி ஏ. மகாலட்சுமி, பி.ஏ., பி.ஜி.எல்.	..	சார்புச் செயலாளர்
திருமதி பாஸ்ஹரிதேசிங், பி.காம், பி.ஜி.எல்.	..	சார்புச் செயலாளர்

பேரவை உறுப்பினர்கள்

(அகர வரிசைப்படி)

பெயர்களும் தொகுதிகளும்

1.	அக்ரி. எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி, திரு.	.. போளூர்
2.	அசன் மௌலானா, திரு. JMH.	.. வேளச்சேரி
3.	அசோகன், திரு. G.	.. சிவகாசி
4.	அசோக்குமார், திரு. கி.	.. கிருஷ்ணகிரி
5.	அசோக்குமார், திரு. N.	.. பேராவூரணி
6.	அண்ணாதுரை, திரு. கா.	.. பட்டுக்கோட்டை
7.	அப்துல் சமது, திரு. ப.	.. மணப்பாறை
8.	அப்துல் வஹாப், திரு. மு.	.. பாளையங்கோட்டை
9.	அப்பாவு, திரு. மு.	.. ராதாபுரம்
10.	அமலு, திருமதி V.	.. குடியாத்தம் (தனி)
11.	அமுல் கந்தசாமி, திரு. T.K.	.. வால்பாறை (தனி)
12.	அம்பேத்குமார், திரு. S.	.. வந்தவாசி (தனி)
13.	அம்மன் K. அர்ச்சுணன், திரு.	.. கோயம்புத்தூர் (வடக்கு)
14.	அய்யப்பன், திரு. பி.	.. உசிலம்பட்டி
15.	அரவிந்த் ரமேஷ், திரு. ச.	.. சோழிங்கநல்லூர்
16.	அருண்குமார், திரு. P.R.G.	.. கவுண்டம்பாளையம்
17.	அருண்மொழிதேவன், திரு. ஆ.	.. புவனகிரி
18.	அருள், திரு. இரா.	.. சேலம் (மேற்கு)
19.	அர்ஜூனன், திரு. பொ.	.. திண்டிவனம் (தனி)
20.	அனிதா R. ராதாகிருஷ்ணன், திரு.	.. திருச்செந்தூர்
21.	அன்பரசன், திரு. தா.மோ.	.. ஆலந்தூர்
22.	அன்பழகன், திரு. க.	.. கும்பகோணம்
23.	அன்பழகன், திரு. கே.பி.	.. பாலக்கோடு
24.	அன்பில் மகேஸ் பொய்யாமொழி, திரு.	.. திருவெறும்பூர்
25.	ஆனந்தன், திரு. எம்.எஸ்.எம்.	.. பல்லடம்
26.	இசக்கி சுப்பையா, முனைவர்	.. அம்பாசமுத்திரம்
27.	இராசேந்திரன், திரு. சபா.	.. நெய்வேலி

28.	இராமகிருஷ்ணன், திரு. நா.	.. கம்பம்
29.	இராமச்சந்திரன், திரு. ட்டி.	.. தளி
30.	இராமச்சந்திரன், திரு. K.K.S.S.R.	.. அருப்புக்கோட்டை
31.	இராஜா, திரு. S.R.	.. தாம்பரம்
32.	இராஜேந்திரன், திரு. இரா.	.. சேலம் (வடக்கு)
33.	இராஜேந்திரன், திரு. வி.ஜி.	.. திருவள்ளூர்
34.	இலட்சுமணன், டாக்டர் இரா.	.. விழுப்புரம்
35.	இளங்கோ, திரு. ரா.	.. அரவக்குறிச்சி
36.	இளங்கோவன், திரு. ஈ.வெ.கி.ச.	.. ஈரோடு (கிழக்கு)
37.	இனிகோ இருதயராஜ், முனைவர் த.	.. திருச்சிராப்பள்ளி (கிழக்கு)
38.	ஈஸ்வரப்பன், திரு. J.L.	.. ஆற்காடு
39.	ஈஸ்வரன், திரு. ஈ.ஆர்.	.. திருச்செங்கோடு
40.	உடுமலை K. ராதாகிருஷ்ணன், திரு.	.. உடுமலைப்பேட்டை
41.	உதயகுமார், திரு. ஆர்.பி.	.. திருமங்கலம்
42.	உதயசூரியன், திரு. தா.	.. சங்கராபுரம்
43.	உதயநிதி ஸ்டாலின், திரு.	.. சேப்பாக்கம்–திருவல்லிக்கேணி
44.	ஊர்வசி அமிர்தராஜ், திரு. செ.	.. ஸ்ரீவைகுண்டம்
45.	எடப்பாடி K. பழனிசாமி, திரு.	.. எடப்பாடி
46.	எபினேசர் என்கிற ஜான் எபினேசர், திரு. ஜே.ஜே.	.. டாக்டர் இராதாகிருஷ்ணன் நகர்
47.	எழிலரசன், திரு. சி.வி.எம்.பி.	.. காஞ்சிபுரம்
48.	எழிலன், டாக்டர் நா.	.. ஆயிரம் விளக்கு
49.	ஐட்ரீம் இரா. மூர்த்தி, திரு.	.. இராயபுரம்
50.	ஐயப்பன், திரு. கோ.	.. கடலூர்
51.	கடம்பூர் ராஜு, திரு.	.. கோவில்பட்டி
52.	கணபதி, திரு. க.	.. மதுரவாயல்
53.	கணேசன், திரு. சி.வி.	.. திட்டக்குடி (தனி)
54.	கணேஷ், திரு. ஆர்.	.. உதகமண்டலம்
55.	கண்ணன், திரு. க.சொ.க.	.. ஜெயங்கொண்டம்

56. கதிரவன், திரு. சீ.	.. மண்ணச்சநல்லூர்
57. கந்தசாமி, திரு. V.P.	.. சூலூர்
58. கயல்விழி செல்வராஜ், திருமதி என்.	.. தாராபுரம் (தனி)
59. கருணாநிதி, திரு. இ.	.. பல்லாவரம்
60. கருணாநிதி, திரு. ஜெ.	.. தியாகராய நகர்
61. கருப்பணன், திரு. K.C.	.. பவானி
62. கருமாணிக்கம், திரு. இராம.	.. திருவாடனை
63. காதர்பாட்சா முத்துராமலிங்கம், திரு.	.. இராமநாதபுரம்
64. காந்தி, திரு. ஆர்.	.. ராணிப்பேட்டை
65. காந்தி, திரு. எம்.ஆர்.	.. நாகர்கோவில்
66. காந்திராஜன், திரு. எஸ்.	.. வேடசந்தூர்
67. காமராஜ், திரு. இரா.	.. நன்னிலம்
68. கார்த்திகேயன், திரு. க.	.. ரிஷிவந்தியம்
69. கார்த்திகேயன், திரு. ப.	.. வேலூர்
70. கிரி, திரு. மு.பெ.	.. செங்கம் (தனி)
71. கிருஷ்ணசாமி, திரு. ஆ.	.. பூந்தமல்லி (தனி)
72. கிருஷ்ணமுரளி, திரு. செ.	.. கடையநல்லூர்
73. கீதா ஜீவன், திருமதி பி.	.. தூத்துக்குடி
74. கோவிந்தசாமி, திரு. ஆ.	.. பாப்பிரெட்டிப்பட்டி
75. கோவிந்தராஜன், திரு. டி.ஜெ.	.. கும்மிடிப்பூண்டி
76. சக்கரபாணி, திரு. அர.	.. ஒட்டன்சத்திரம்
77. சக்ரபாணி, திரு. மு.	.. வானூர் (தனி)
78. சங்கர், திரு. கே.பி.	.. திருவொற்றியூர்
79. சண்முகையா, திரு. எம்.சி.	.. ஒட்டப்பிடாரம் (தனி)
80. சதன் திருமலைக்குமார், டாக்டர் தி.	.. வாசுதேவநல்லூர் (தனி)
81. சதாசிவம், திரு. S.	.. மேட்டூர்
82. சந்திரசேகரன், திரு. துரை.	.. திருவையாறு
83. சந்திரசேகர், திரு. துரை.	.. பொன்னேரி (தனி)
84. சந்திரன், திரு. S.	.. திருத்தணி
85. சம்பத்குமார், திரு. வே.	.. அரூர் (தனி)

86. சரவணக்குமார், திரு. கே.எஸ். .. பெரியகுளம் (தனி)
87. சரவணன், திரு. பெ.சு.தி. .. கலசப்பாக்கம்
88. சரஸ்வதி, டாக்டர் சி. .. மொடக்குறிச்சி
89. சாமிநாதன், திரு. மு.பெ. .. காங்கேயம்
90. சித்ரா, திருமதி கு. .. ஏற்காடு (ஆ.வ.)
91. சிந்தனை செல்வன், திரு. ம. .. காட்டுமன்னார் கோவில் (தனி)
92. சிவகாமசுந்தரி, திருமதி க. .. கிருஷ்ணராயபுரம் (தனி)
93. சிவகுமார் என்கிற தாயகம் கவி, திரு. ப. .. திரு.வி.க. நகர் (தனி)
94. சிவகுமார், திரு. ச. .. மயிலம்
95. சிவசங்கர், திரு. எஸ்.எஸ். .. குன்னம்
96. சின்னதுரை, திரு. மா. .. கந்தர்வகோட்டை (தனி)
97. சின்னப்பா, திரு. கு. .. அரியலூர்
98. சீனிவாசன், திரு. ஏ.ஆர்.ஆர். .. விருதுநகர்
99. சுதர்சனம், திரு. எஸ். .. மாதவரம்
100. சுந்தரராஜன், திரு. செ. .. சங்கரி
101. சுந்தர், திரு. க. .. உத்திரமேரூர்
102. சுப்பிரமணியன், திரு. மா. .. சைதாப்பேட்டை
103. செங்கோட்டையன், திரு. கே.ஏ. .. கோபிசெட்டிபாளையம்
104. செஞ்சி K.S. மஸ்தான், திரு. .. செஞ்சி
105. செந்தில்குமார், திரு. ஐ.பி. .. பழனி
106. செந்தில் குமார், திரு. கோ. .. வாணியம்பாடி
107. செந்தில்குமார், திரு. மா. .. கள்ளக்குறிச்சி (தனி)
108. செந்தில்நாதன், திரு. பெரி. .. சிவகங்கை
109. செந்தில்பாலாஜி, திரு. V. .. கரூர்
110. செல்லூர் கே. ராஜூ திரு. .. மதுரை (மேற்கு)
111. செல்வபெருந்தகை, திரு. கு. .. ஸ்ரீபெரும்புதூர் (தனி)
112. செல்வராஜ், திரு. க. .. திருப்பூர் தெற்கு
113. செல்வராஜ், திரு. A.K. .. மேட்டுப்பாளையம்
114. செழியன், முனைவர் கோவி. .. திருவிடைமருதூர் (தனி)
115. சேகர், திரு. R.D. .. பெரம்பூர்

116. சேகர், திரு. S.	.. பரமத்தி–வேலூர்
117. சேகர்பாபு, திரு. பி.கே.	.. துறைமுகம்
118. சேவூர் S. இராமச்சந்திரன், திரு.	.. ஆரணி
119. சௌந்தரபாண்டியன், திரு. அ.	.. லால்குடி
120. தங்கப்பாண்டியன், திரு. எஸ்.	.. ராஜபாளையம்
121. தங்கமணி, திரு. பி.	.. குமாரபாளையம்
122. தங்கம் தென்னரசு, திரு.	.. திருச்சுழி
123. தமிழரசி, திருமதி ஆ.	.. மானாமதுரை (தனி)
124. தமிழ்செல்வம், திரு. T.M.	.. ஊத்தங்கரை (தனி)
125. தளபதி, திரு. கோ.	.. மதுரை (வடக்கு)
126. தளவாய் சுந்தரம், திரு. ந.	.. கன்னியாகுமரி
127. தனபால், திரு. ப.	.. அவினாசி (தனி)
128. தாமோதரன், திரு. செ.	.. கிணத்துக்கடவு
129. திண்டுக்கல் சி. சீனிவாசன், திரு.	.. திண்டுக்கல்
130. தியாகராஜன், திரு. ந.	.. முசிறி
131. துரைமுருகன், திரு.	.. காட்பாடி
132. தேவராஜி, திரு. க.	.. ஜோலார்பேட்டை
133. தேன்மொழி, திருமதி எஸ்.	.. நிலக்கோட்டை (தனி)
134. நத்தம் ஆர். விசுவநாதன், திரு.	.. நத்தம்
135. நந்தகுமார், திரு. A.P.	.. அணைக்கட்டு
136. நயினார் நாகேந்திரன், திரு.	.. திருநெல்வேலி
137. நல்லதம்பி, திரு. அ.	.. கெங்கவல்லி (தனி)
138. நல்லதம்பி, திரு. A.	.. திருப்பத்தூர்
139. நாகைமாலி, திரு. வி.பி.	.. கீழ்வேளூர் (தனி)
140. நாசர், திரு. சா.மு.	.. ஆவடி
141. நிவேதா எம். முருகன், திரு.	.. பூம்புகார்
142. நீலமேகம், திரு. டி.கே.ஜி.	.. தஞ்சாவூர்
143. நேரு, திரு. கே.என்.	.. திருச்சிராப்பள்ளி (மேற்கு)
144. பண்ணாரி, திரு. அ.	.. பவானிசாகர் (தனி)
145. பரந்தாமன், திரு. இ.	.. எழும்பூர் (தனி)
146. பழனி நாடார், திரு. S.	.. தென்காசி

147. பழனியாண்டி, திரு. மொ. .. ஸ்ரீரங்கம்
148. பழனிவேல் தியாக ராஜன், முனைவர் .. மதுரை (மத்தி)
149. பன்னீர்செல்வம், திரு. எம்.ஆர்.கே. .. குறிஞ்சிப்பாடி
150. பன்னீர்செல்வம், திரு. ஓ. .. போடிநாயக்கனூர்
151. பன்னீர்செல்வம், திரு. மு. .. சீர்காழி (தனி)
152. பாண்டியன், திரு. K.A. .. சிதம்பரம்
153. பாபு, திரு. மு. .. செய்யூர் (தனி)
154. பாலசுப்ரமணியன், திரு. ஈ. .. சேலம் (தெற்கு)
155. பாலாஜி, திரு. S.S. .. திருப்போரூர்
156. பால் மனோஜ் பாண்டியன், திரு. .. ஆலங்குளம்
157. பிச்சாண்டி, திரு. கு. .. கீழ்பெண்ணாத்தூர்
158. பிரகாஷ், திரு. ஒய். .. ஓசூர்
159. பிரபாகரராஜா, திரு. எ.எம்.வி. .. விருகம்பாக்கம்
160. பிரபாகரன், திரு. ம. .. பெரம்பலூர் (தனி)
161. பிரின்ஸ், திரு. ஜே.ஜி. .. குளச்சல்
162. புகழேந்தி, திரு. நா. .. விக்கிரவாண்டி
163. பூண்டி கே. கலைவாணன், திரு. .. திருவாரூர்
164. பூமிநாதன், திரு. மு. .. மதுரை (தெற்கு)
165. பெரியகருப்பன், திரு. கேஆர். .. திருப்பத்தூர்
166. பெரியசாமி, திரு. இ. .. ஆத்தூர்
167. பெரியபுள்ளான் என்கிற செல்வம், திரு. பெ. .. மேலூர்
168. பொள்ளாச்சி V. ஜெயராமன், முனைவர் .. பொள்ளாச்சி
169. பொன்முடி, முனைவர் க. .. திருக்கோவிலூர்
170. பொன்னுசாமி, திரு. கே. .. சேந்தமங்கலம் (ஆ.வ.)
171. மகாராஜன், திரு. ஆ. .. ஆண்டிப்பட்டி
172. மகேந்திரன், திரு. சி. .. மடத்துக்குளம்
173. மணி, திரு. ரா. .. ஓமலூர்
174. மணி, திரு. ஜி.கே. .. பெண்ணாகரம்
175. மணிக்கண்ணன், திரு. A.J. .. உளுந்தூர்பேட்டை

176. மணியன், திரு. ஓ.எஸ். .. வேதாரண்யம்
177. மதியழகன், திரு. தே. .. பர்கூர்
178. மதிவேந்தன், டாக்டர் மா. .. ராசிபுரம் (தனி)
179. மரகதம் குமரவேல், திருமதி கு. .. மதுராந்தகம் (தனி)
180. மனோ தங்கராஜ், திரு. த. .. பத்மநாபபுரம்
181. மாங்குடி, திரு. சா. .. காரைக்குடி
182. மாணிக்கம், திரு. இரா. .. குளித்தலை
183. மாரிமுத்து, திரு. K. .. திருத்துறைப்பூண்டி (தனி)
184. மார்க்கண்டேயன், திரு. G.V. .. விளாத்திகுளம்
185. மான்ராஜ், திரு. இ.மா. .. ஸ்ரீவில்லிபுத்தூர் (தனி)
186. முகம்மது ஷாநவாஸ், திரு. ஜெ. .. நாகப்பட்டினம்
187. முத்துசாமி, திரு. சு. .. ஈரோடு (மேற்கு)
188. முத்துராஜா, டாக்டர் வை. .. புதுக்கோட்டை
189. முருகேசன், திரு. செ. .. பரமக்குடி (தனி)
190. முனிரத்தினம், திரு. ஆ.மு. .. சோளிங்கர்
191. முனுசாமி, திரு. கே.பி. .. வேப்பனஹள்ளி
192. மூர்த்தி, திரு. பி. .. மதுரை (கிழக்கு)
193. மெய்யநாதன், திரு. சிவ.வீ. .. ஆலங்குடி
194. மோகன், திரு. M.K. .. அண்ணா நகர்
195. ரகுபதி, திரு. எஸ். .. திருமயம்
196. ரகுராமன், திரு. A.R.R. .. சாத்தூர்
197. ரவி, திரு. சு. .. அரக்கோணம் (தனி)
198. ராதாகிருஷ்ணன், திரு. R. .. விருத்தாசலம்
199. ராமசந்திரன், திரு. கா. .. குன்னூர்
200. ராமச்சந்திரன், திரு. தி. .. அறந்தாங்கி
201. ராமலிங்கம், திரு. பெ. .. நாமக்கல்
202. ராஜகண்ணப்பன், திரு. R.S. .. முதுகுளத்தூர்
203. ராஜகுமார், திரு. S. .. மயிலாடுதுறை
204. ராஜமுத்து, திரு. M. .. வீரபாண்டி
205. ராஜன் செல்லப்பா, திரு. வி.வி. .. திருப்பரங்குன்றம்
206. ராஜா, திரு. ஈ. .. சங்கரன்கோவில் (தனி)
207. ராஜா, முனைவர் T.R.B. .. மன்னார்குடி

208. ராஜேஷ் குமார், திரு. செ.	.. கிள்ளியூர்
209. ரூபி ஆர். மனோகரன், திரு.	.. நாங்குநேரி
210. வரலட்சுமி, திருமதி ம.	.. செங்கல்பட்டு
211. வானதி சீனிவாசன், திருமதி	.. கோயம்புத்தூர் (தெற்கு)
212. வில்வநாதன், திரு. அ.செ.	.. ஆம்பூர்
213. விஜயகுமார், திரு. K.N.	.. திருப்பூர் (வடக்கு)
214. விஜயதரணி, திருமதி S.	.. விளவங்கோடு
215. விஜயபாஸ்கர், டாக்டர் சி.	.. விராலிமலை
216. வெங்கடாசலம், திரு. A.G.	.. அந்தியூர்
217. வெங்கடேசன், திரு. ஆ.	.. சோழவந்தான் (தனி)
218. வெங்கடேஷ்வரன், திரு. எஸ்.பி.	.. தருமபுரி
219. வெற்றிஅழகன், திரு. அ.	.. வில்லிவாக்கம்
220. வேலு, திரு. எ.வ.	.. திருவண்ணாமலை
221. வேலு, திரு. த.	.. மயிலாப்பூர்
222. வேலுமணி, திரு. எஸ்.பி.	.. தொண்டாமுத்தூர்
223. வேல்முருகன், திரு. தி.	.. பண்ருட்டி
224. வைத்திலிங்கம், திரு. ஆர்.	.. ஒரத்தநாடு
225. ஜவாஹிருல்லா, முனைவர் எம்.எச்.	.. பாபநாசம்
226. ஜெகன் மூர்த்தி, திரு. மு.	.. கீழ்வைத்தினான்குப்பம் (தனி)
227. ஜெயக்குமார், திரு. S.	.. பெருந்துறை
228. ஜெயசங்கரன், திரு. A.P.	.. ஆத்தூர் (தனி)
229. ஜெயசீலன், திரு. பொன்.	.. கூடலூர் (தனி)
230. ஜெயராம், திரு. கே.ஆர்.	.. சிங்காநல்லூர்
231. ஜோசப் சாமுவேல், திரு.	.. அம்பத்தூர்
232. ஜோதி, திரு. ஓ.	.. செய்யாறு
233. ஸ்டாலின், திரு. மு.க.	.. கொளத்தூர்
234. ஸ்டாலின் குமார், திரு. செ.	.. துறையூர் (தனி)

பேரவை நடவடிக்கைகளில் பங்குகொள்ள உரிமை பெற்றவர்

திரு. ஆர். சண்முகசுந்தரம் .. மாநில அரசுத் தலைமை வழக்குரைஞர்

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

பங்குனி 30, திருவள்ளுவர் ஆண்டு—2054

2023 ஏப்ரல் 13, வியாழக்கிழமை

சென்னை, புனித ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் மாண்புமிகு பேரவைத் தலைவர் **திரு. மு. அப்பாவு** *அவர்கள் தலைமையில் காலை 10–00 மணியளவில் பேரவை கூடியது.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

"பயன்மரம் உள்ளூர்ப் பழுத்தற்றால் செல்வம்
நயனுடை யான்கண் படின்."

ஈர நெஞ்சம் கொண்டவனிடம் செல்வம் சேருமேயானால் அது ஊரின் நடுவே செழித்து வளர்ந்த மரம், பழுத்துக் குலுங்குவது போல எல்லோருக்கும் பயன்படுவதாகும்.

(அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் கருப்பு நிற மாஸ்க் அணிந்து அவைக்குள் வந்திருந்தனர்.)

1. வினாக்கள்—விடைகள்

உடுக்குறியிட்ட வினாக்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினாக்கள்–விடைகள். வினா வரிசை எண் 151, மாண்புமிகு உறுப்பினர் திருமதி ஆ. தமிழரசி, மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள்.*

151—

பாதாளச் சாக்கடைத் திட்டம்

***2604—திருமதி ஆ. தமிழரசி:**

மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதி, மானாமதுரையில் பாதாளச் சாக்கடைத் திட்டத்தினைச் செயல்படுத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. கே.என். நேரு, நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருத்திய விடையை அளிப்பதற்கு அனுமதியளிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

(அ) மற்றும் (ஆ) மானாமதுரை பேரூராட்சியானது, அக்டோபர் 2021 ஆம் ஆண்டு முதல் இரண்டாம் நிலை நகராட்சியாக தரம் உயர்த்தப்பட்டது. 2011 ஆம் ஆண்டு மக்கள்தொகை கணக்கெடுப்பின்படி, இந்நகராட்சியின் மக்கள்தொகை 32,257 ஆகும். தற்போதைய மக்கள்தொகை 38,558 ஆகும். இந்நகராட்சியின் பரப்பளவு, 5.6 சதுர கிலோ மீட்டர், மொத்தம் 27 ward-கள் உள்ளன.

மானாமதுரை நகராட்சியில் பாதாளச் சாக்கடைத் திட்டத்திற்கு மாற்றாக, தூய்மை இந்தியா திட்டம் 2.0–ன்கீழ் மாங்குளம், வள மீட்பு பூங்காவில் கசடு கழிவு சுத்திகரிப்பு நிலையம் மற்றும் கழிவுநீர் சுத்தகரிப்பு நிலையம் அமைக்க ரூ.9.91 கோடியில் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டுள்ளது. விரைந்து நடவடிக்கை எடுத்து, பணிகள் முடிக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திருமதி ஆ. தமிழரசி அவர்கள். (குறுக்கீடுகள்) உறுப்பினர்கள் அமைதியாக இருக்கவும். அவையில் கேட்கப்படும் கேள்வி என்ன, பதில் என்ன என்று கொஞ்சம் கவனியுங்கள். ** இது சட்டமன்றம்; யார் என்ன பேசுகிறார்கள், என்ன என்பதை கவனிக்கக்கூடிய இடம், பார்த்துக்கொள்ளுங்கள்.

திருமதி ஆ. தமிழரசி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு, முதற்கண் எனது நெஞ்சார்ந்த நன்றியைக் கூறிக்கொள்கின்றேன்.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

2023 ஏப்ரல் 13]

முத்தமிழறிஞர் ஐயா கலைஞர் வழியில், ஆட்சிப் பொறுப்பை ஏற்று நடத்திக்கொண்டிருக்கின்ற நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆட்சிப் பொறுப்பை ஏற்றவுடன், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டுச் சொன்னதைப்போல, அக்டோபர் மாதம் மானாமதுரை பேரூராட்சி என்பது நகராட்சியாக மாற்றப்பட்டது. தற்போது, கழிவுநீர் வாய்க்காலை சரிசெய்வதற்கு திட்ட மதிப்பீடு தயாரிக்கப்பட்டு, அதற்கு ஒப்பந்தப்புள்ளியும் கோரப்பட்டுள்ளதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். எங்கள் தொகுதி மக்களின் சார்பாகவும், மானாமதுரை நகராட்சி மக்களின் சார்பாகவும் நெஞ்சார்ந்த நன்றியைக் கூறிக்கொள்கிறேன்.

எனது, மானாமதுரை தொகுதிக்குட்பட்டு, திருப்புவனம் பேரூராட்சி, இளையான்குடி பேரூராட்சி என இரண்டு பேரூராட்சிகள் உள்ளன. இவற்றிலும் 38,000-க்கும் அதிகமான மக்கள்தொகை இருக்கின்றது. அங்கும் கழிவுநீர் செல்வதற்கு வழிகள் இல்லை. ஆகவே, அந்த இரு பேரூராட்சிகளையும் இணைத்து, கழிவுநீர் வாய்க்கால், சுத்திகரிப்பு நிலையம் அமைத்துத் தரும்படி மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களை அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.என். நேரு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிவகங்கை மாவட்டத்தில் சிவகங்கை, காரைக்குடி, தேவகோட்டை மற்றும் மானாமதுரை ஆகிய நான்கு நகராட்சிகள் உள்ளன. கானாடுகாத்தான், புதுவயல், கோட்டையூர், பள்ளத்தூர், திருப்பத்தூர், நாட்டரசன்கோட்டை, இளையான்குடி, நெற்குப்பை, சிங்கம்புணரி, திருப்புவனம், கண்டனூர் ஆகிய 11 பேரூராட்சிகள் இருக்கின்றன. இதில், ஏற்கெனவே, கோட்டையூர், பள்ளத்தூர் ஆகிய இரு பேரூராட்சிகளில், கசடு கழிவு மேலாண்மைத் திட்டம் உருவாகிக்கொண்டிருக்கிறது. மீதம் இருக்கின்ற பேரூராட்சிகளில் நிதி நிலைமைக்கேற்ப பணிகள் எடுத்துக்கொள்ளப்படும். மற்ற பகுதிகளில், பாதாளச் சாக்கடைத் திட்டம் அமைப்பதற்கு காலதாமதமாகிறது. கசடு கழிவு மேலாண்மைத் திட்டம் என்பது, ஒரு இடத்தில் உருவாக்கி, நகர் முழுவதும், பேரூராட்சி முழுவதும் இருக்கின்ற கழிவுநீரைக்கொண்டு வந்து, ஒரு இடத்தில் கொட்டி, வெயிலின்மூலமாக அதை காயவைத்து, மக்களுக்கு உரமாகத்

தயாரிக்கும் திட்டம் ஆகும். எனவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதையும் கவனத்தில்கொண்டு, வருங்காலத்தில் நிதி நிலைமைக்கேற்ப அதைச் செய்யலாம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திருமதி ஆ. தமிழரசி அவர்கள்.*

திருமதி ஆ. தமிழரசி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு மீண்டும் ஒருமுறை நன்றிகூறி, வருகின்ற ஆண்டிலேயே திருப்புவனம் பேரூராட்சியிலும், இளையான்குடி பேரூராட்சியிலும் இத்திட்டத்தினைச் செயல்படுத்த வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.என். நேரு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே, சொல்லியிருக்கிறேன். அரசு ஆய்விற்கு எடுத்து, நிதி நிலைமைக்கேற்ப அதனைச் செய்வதற்கு ஆவன செய்யப்படும்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினாக்கள்-விடைகள் நேரத்தை சரியாக 10–45 மணிக்குள் முடிக்கவேண்டும். ஆகவே, கேள்வி–பதில் இரண்டுமே, சுருக்கமாக இருக்கும்படி எல்லோரையும் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.*

வினா வரிசை எண் 152, மாண்புமிகு உறுப்பினர் திரு. இராம. கருமாணிக்கம், மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

152—

மகளிர் கலைக் கல்லூரி

***62949—திரு. இராம. கருமாணிக்கம்:**

மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவாடனை தொகுதி, தொண்டி பகுதியில் மகளிர் கலைக் கல்லூரி துவக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2023 ஏப்ரல் 13]

மாண்புமிகு முனைவர் க. பொன்முடி, உயர் கல்வித் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) திருவாடனை தொகுதி, தொண்டி அமைந்துள்ள இராமநாதபுரம் மாவட்டத்தில், எட்டு அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளும், ஓர் அரசு உதவிபெறும் கல்லூரியும் மற்றும் 13 சுயநிதி கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளும் இயங்கி வருகின்றன. இவற்றை தவிர, அண்ணா பல்கலைக்கழக உறுப்புக் கல்லூரி ஒன்றும் 3 சுயநிதி பொறியியல் கல்லூரிகளும், ஓர் அரசு உதவிபெறும் பாலிடெக்னிக் கல்லூரியும் மற்றும் 2 சுயநிதி பாலிடெக்னிக் கல்லூரிகளும் இயங்கி வருகின்றன. இக்கல்லூரிகள் அத்தொகுதி மாணவ/ மாணவியர்களின் உயர் கல்வித் தேவைகளை நிறைவு செய்து வருவதால், திருவாடனை தொகுதி, தொண்டி பகுதியில் மகளிர் கலைக் கல்லூரியைத் துவக்க வேண்டிய அவசியம் எழவில்லை.

முற்பகல் 10–05

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. இராம. கருமாணிக்கம் அவர்கள்.*

திரு. இராம. கருமாணிக்கம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொண்டி, இஸ்லாமிய மக்கள் அதிகமாக வாழக் கூடிய பகுதியாகும். இங்கு பெண்கள் படிப்பதற்குப் போதிய வசதிகள் இல்லை. ஆதலால், இங்கு மகளிர் கல்லூரி அவசியம் தேவைப்படுகிறது. மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் முன்பு இதே துறையில் அமைச்சராக இருந்தபோது தொண்டிக்கு ஒரு கல்லூரி வேண்டுமென்று, அழகப்பா பல்கலைக்கழகத்திற்கு ஒரு பரிந்துரைக் கடிதம் அனுப்பி இருந்தார்கள். ஆதலால், தொண்டிக்கு அவசியம் ஒரு மகளிர் கலைக் கல்லூரி அமைத்துத்தர வேண்டுமென்று தங்கள் வாயிலாக அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு முனைவர் க. பொன்முடி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தத் தொகுதியில் மட்டும் 2 அரசு கலைக் கல்லூரிகள் இருக்கின்றன. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், எந்தெந்த தொகுதிகளில் அரசு கலைக் கல்லூரிகள்*

இல்லையோ, அந்தத் தொகுதிகளுக்கு, முன்னுரிமை கொடுக்க வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். ஆகவே, இந்தத் தொகுதியைப் பொறுத்தவரையில், ஏற்கெனவே இரண்டு அரசு கலைக் கல்லூரிகள் இருக்கின்றன. அந்த இரண்டு அரசு கலைக் கல்லூரிகளில் மொத்தமுள்ள 3,069 இடங்களில் 2,456 இடங்கள்தான் நிரப்பப்பட்டிருக்கின்றன. அங்கே 613 இடங்கள் காலியாக இருக்கின்றன. ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், அந்தக் கல்லூரிகளிலே இருக்கிற காலி இடங்களிலே, மாணவர்களை நிரப்புவதற்கான ஏற்பாடுகளைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். வருகிற காலங்களில் நிதி நிலைமைக்கேற்ப பரிசீலிக்கப்படும். இப்போது, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் எல்லோருக்கும் செய்ய வேண்டுமென்று சொல்லியிருக்கிறார். அதற்கேற்ப ஏற்பாடு செய்யப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. இராம. கருமாணிக்கம் அவர்கள்.

திரு. இராம. கருமாணிக்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மகளிர் நலனுக்காகப் பல நல்ல திட்டங்களை அளித்துவரும் இந்த அரசு, தொண்டி பகுதிக்கு மகளிர் கல்லூரியை விரைந்து தரவேண்டும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்களை தங்கள் வாயிலாக மீண்டும் கேட்டு, அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு முனைவர் க. பொன்முடி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழக முதல்வர் அவர்கள் கொண்டு வந்திருக்கிற புதுமைப் பெண் திட்டத்தின் மூலமாக அரசுப் பள்ளிகளிலே படித்த மாணவிகள் பெரும்பாலும் கல்லூரிகளிலே சேருவதற்கு வாய்ப்பைத் தேடிக்கொண்டிருக்கிறார்கள் என்பது உண்மைதான். அவர்களுக்கான வாய்ப்புகளும் ஆங்காங்கே வழங்கப்பட்டிருக்கின்றன. ஆகவே, அவர்களுக்குத் தனியாகக் கல்லூரி அமைக்க வேண்டுமென்ற அவசியம் இல்லை. தற்போது இருக்கிற மாணவர்கள் அந்த இரண்டு கல்லூரிகளிலேயும் சேர்ந்து பயில்வதற்கான வாய்ப்புகள் இருக்கின்றன. ஆகவே, இந்த அரசு நிச்சயமாக வருங்காலங்களிலே அதற்கான ஏற்பாடுகளைச் செய்யும்.

2023 ஏப்ரல் 13]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 153, மாண்புமிகு உறுப்பினர் திரு. K.N. விஜயகுமார், மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.*

153—

உயர்மட்டப் பாலம்

***58010—திரு. K.N. விஜயகுமார்:**

மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருப்பூர் (வடக்கு) தொகுதி, மாநகராட்சிப் பகுதியில் உள்ள அனுப்பர்பாளையத்தில் இருந்து மின் மயானம் வழியாகச் செல்லும் தரைமட்டப் பாலத்தை உயர்மட்டப் பாலமாக மாற்றியமைக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. எ.வ. வேலு, பொதுப் பணித் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய உறுப்பினர் அவர்கள் தரைமட்டப் பாலம் உயர்மட்டப் பாலமாக உயர்த்தப்படுமா என்ற ஒரு வினாவை எழுப்பியிருக்கிறார்கள். பாலத்திலே, நான்கு வகைகள் உண்டு. ஒன்று, தரைமட்டப் பாலம், இன்னொன்று உயர்மட்டப் பாலம், இன்னொன்று மூழ்கு பாலம், இன்னொன்று சாலை மேல்மட்டப் பாலம் என்று நான்கு வகை பாலங்கள் உண்டு. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், கேட்டிருப்பது மூழ்கு பாலம். வெள்ளச் சமயங்களிலே மட்டும் மூழ்குமாறு அமையப்பெற்ற மூழ்கு பாலம் ஆகும். இந்தப் பாலம் கட்டி கிட்டத்தட்ட 50 ஆண்டுகள் ஆகின்றன. இந்த மூழ்கு பாலத்தை உயர்மட்டப் பாலமாக்க வேண்டுமென்று சொன்னால் அரசின் சார்பாக ரூ.50 கோடி செலவு செய்யப்பட வேண்டும். கடந்த 10 ஆண்டு காலத்திலே அந்தப் பாலம், எந்த வருடத்திலும் மூழ்கவில்லை. அந்த அளவிற்கு வெள்ளமே அங்கு வரவில்லை. ஆனாலும், நம்முடைய சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் கேட்டுக்கொண்டதற்கிணங்க, நிதிநிலை அடிப்படையிலே வருங்காலங்களிலே உயர்மட்டப் பாலமாக அமைக்க முடியுமா என்பது குறித்து அரசு பரிசீலிக்கும்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. K.N. விஜயகுமார் அவர்கள்.*

திரு. K.N. விஜயகுமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருப்பூர் வடக்கு தொகுதிக்குட்பட்ட மாநகராட்சிப் பகுதியில் உள்ள அனுப்பர்பாளையத்திலேயிருந்து மின் மயானம் செல்லும் வழியிலே நல்லாற்றின் குறுக்கே தரை மட்டப் பாலமானது கட்டப்பட்டு, கிட்டத்தட்ட 50 ஆண்டுகளுக்குமேல் ஆகிவிட்டது. அந்தப் பாலம் மோசமான நிலையில் உள்ளதாலும், அந்தப் பகுதியிலே போக்குவரத்து அதிகமாக உள்ள காரணத்தினாலும், அந்த தரைமட்டப் பாலத்தை, உயர்மட்டப் பாலமாக, இந்த ஆண்டே அமைத்துத்தர மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவாரா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.

முற்பகல் 10–10

மாண்புமிகு திரு. எ.வ. வேலு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டமன்ற உறுப்பினர் நான் சொன்னதைப் புரிந்துகொள்ளவில்லை என்று கருதுகிறேன். அது முதலில் தரைமட்டப் பாலமே அல்ல. அது மூழ்குபாலம். ஏற்கெனவே, கண்ணாறு எல்லாம் இருக்கிறது. தரைமட்டப் பாலம் என்று சொன்னால், தரை அளவிலே போகிற பாலம் தான் தரைமட்டப் பாலம். மூழ்கு பாலத்தில், குறிப்பிட்ட காலங்களில் தண்ணீர் போய்க்கொண்டேயிருக்கும். அந்தப் பாலம் எவ்வாறு அமைக்கப்படுகிறது என்று சொன்னால், பெருவெள்ளம் வருகிறபோது, தண்ணீர் தடையில்லாமல் செல்லும் வகையில் அந்த மூழ்கு பாலத்தின் அமைப்பு இருக்கும்.

(மூழ்கு பாலத்தின் அமைப்பை விளக்கும் புகைப்படத்தை மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் அவையில் காண்பித்தார்கள்.)

அப்படி ஒரு வகையான பாலம் உண்டு. 10 ஆண்டுக் காலமாக, அந்தப் பகுதியில் வெள்ளமே வராத ஒரு நிலை இருக்கும்போது, அங்கே உயர்மட்டப் பாலம் அமைக்க வேண்டிய அவசியம் ஏற்படவில்லை. இருப்பினும், மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் கேட்டுக்கொண்டதற்கிணங்க, இந்த ஆண்டு நிதி நிலைமை சரியாக இருக்கும்பட்சத்தில், அதற்கு முன்னுரிமை அளிக்கப்படும் என்று நான் ஏற்கெனவே பதில் சொல்லியிருக்கிறேன்.

2023 ஏப்ரல் 13]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. K.N. விஜயகுமார் அவர்கள்.*

திரு. K.N. விஜயகுமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருப்பூர் வடக்கு தொகுதியில் போக்குவரத்து நெரிசல் அதிகமாக உள்ளது. அங்குள்ள P.N. சாலையில் போக்குவரத்து நெரிசல் அதிகமாக உள்ளதால், அப்பகுதியில் வேலைக்குச் செல்லும் இலட்சக்கணக்கான தொழிலாளர்களும், பள்ளி, கல்லூரிகளுக்குச் செல்லும் மாணவ, மாணவிகளும் குறித்த நேரத்தில் செல்ல முடியாத காரணத்தினால், புஷ்பா தியேட்டர் முதல் பாண்டியன் நகர் வரை உயர்மட்டப் பாலம் அமைத்துத் தர வேண்டுமென 'உங்கள் தொகுதியில் முதலமைச்சர்' திட்டத்தின்கீழ், தொகுதியிலுள்ள முக்கியமான 10 கோரிக்கைகளில் ஒரு கோரிக்கையாகக் கொடுத்துள்ளேன். ஆகவே, அரசு, அந்தப் பாலத்தை, இந்த ஆண்டே அமைத்துத் தர ஆவன செய்யுமா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் கேட்டுக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எ.வ. வேலு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருப்பூர் நகரிலிருந்து, புஷ்பா திரையரங்கம் முதல் பாண்டியன் நகர் வரை உயர்மட்டப் பாலம் அமைக்கப்பட வேண்டுமென்ற கருத்தைத்தான் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் வலியுறுத்தியிருக்கிறார்கள். இதற்கிடையில் திருப்பூர் நகருக்குப் புறவழிச் சாலை அமைப்பதற்காக, தேசிய நெடுஞ்சாலை ஆணையத்தின்மூலமாக DPR தயார் செய்துகொண்டிருக்கிறார்கள். எனவே, அந்தப் பணி முழுமையடைந்த பிறகு, புறவழிச் சாலை அமைக்கப்படும் என்று சொன்னால், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்கிற சாலையில், போக்குவரத்து நெரிசல் குறைவாகத்தான் இருக்கும். இந்தப் புறவழிச் சாலை அமைந்த பின்பு, அச்சாலையில் போக்குவரத்து தொடங்கிய பிறகு, மீண்டும் அந்தப் பகுதியில் போக்குவரத்து நெரிசல் அதிகமாக இருக்குமானால், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட அந்தப் பாலத்தைக் கட்டுவதற்கு அரசு முயற்சி செய்யும்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 154, மாண்புமிகு உறுப்பினர் திரு. G.V. மார்க்கண்டேயன், மாண்புமிகு*

மீன்வளம்–மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.

154—

குடியிருப்புகள்

***3173—திரு. G.V. மார்க்கண்டேயன்:**

மாண்புமிகு மீன்வளம்–மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கீழவைப்பார் ஊராட்சியில் மீனவர்களுக்குக் குடியிருப்புகள் கட்ட அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. அனிதா R. ராதாகிருஷ்ணன், மீன்வளம்—மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்கள் அனுமதியோடு திருத்திய விடையை இப்பேரவைக்கு அளிக்கிறேன்.*

தூத்துக்குடி மாவட்டம், கீழவைப்பார் ஊராட்சிக்குட்பட்ட கீழவைப்பார் மற்றும் சிப்பிக்குளம் ஆகிய மீனவர் கிராமங்களில் மீனவர் குடியிருப்புகள் கட்டப்பட்டு வருகின்றன.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. G.V. மார்க்கண்டேயன் அவர்கள்.*

திரு. G.V. மார்க்கண்டேயன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடலோடி மக்களின் கலங்கரை விளக்கமாக விளங்குகிற மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் நல்லாட்சியில், விளாத்திகுளம் சட்டமன்றத் தொகுதி, விளாத்திகுளம் ஊராட்சி ஒன்றியம், கீழவைப்பார் ஊராட்சியில் ஏறக்குறைய 6,000 மக்கள் வசிக்கின்றார்கள். அந்த ஊராட்சியில் அகமதுபுரம், ஸ்ரீவைகுண்ட பெருமாள்புரம், கீழவைப்பார், சிப்பிக்குளம் ஆகிய நான்கு மீனவ குக்கிராமங்கள் இருக்கின்றன. அந்த மீனவக் கிராமங்களில், 100–க்கும் மேற்பட்ட மக்கள் வீடுகள் இல்லாத நிலையில் இருக்கிறார்கள். முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களுடைய முந்தைய ஆட்சிக்காலத்தில் கட்டப்பட்ட ஏறக்குறைய 62 வீடுகள் ஓட்டு வீடுகளாக இருக்கின்றன. அந்த வீடுகள் தற்போது பழுதடைந்த நிலையில் இருக்கின்றன. அந்தப் பகுதி மக்கள்*

2023 ஏப்ரல் 13]

அந்நியச் செலாவணியை அதிகமாக நம்முடைய நாட்டுக்கு ஈட்டிக் கொடுக்கிறார்கள். அந்த மக்கள் சிறப்பான நல்வாழ்வு வாழ்வதற்கு, தற்போது நீலப் புரட்சித் திட்டத்தின்படி, வீடு ஒன்றுக்கு ரூ.1,70,000/– மட்டுமே நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது. ஆனால், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுடைய சீரிய முயற்சியின் காரணமாக, ஊரக வளர்ச்சித் துறையின்மூலம் பயனாளிகளுக்கு வீடுகள் கட்டுவதற்கு ஏறக்குறைய ரூ.3 இலட்சம் அளவிற்கு நிதி ஒதுக்கீடு செய்யப்படுகிறது. MGNREG *திட்டம்,* sanitation *உள்ளிட்ட பல்வேறு திட்டங்களை* club *செய்து ரூ.3 இலட்சம் நிதி கொடுக்கப்படுகிறது. அதனால், மீனவ மக்களுக்கும் மீனவர் நலத் துறையின் மூலமாக அடுக்குமாடி குடியிருப்புத் திட்டத்தின்கீழ் வீடுகள் கட்டிக்கொடுக்கப்பட வேண்டும். அவ்வாறு இல்லையென்றால், வீடு ஒன்றிற்கு ரூ.3 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்தால், மீனவ மக்கள் அந்த வீடுகளைச் சிறப்பாகக் கட்டிக்கொள்வார்கள்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *சுருக்கமாகக் கேள்வியைக் கேளுங்கள்.*

திரு. G.V. மார்க்கண்டேயன்: *எனவே, அதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்பதைத் தங்கள்மூலம் கேட்டு அமர்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மீன்வளம்–மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.*

முற்பகல் 10–15

மாண்புமிகு திரு. அனிதா R. ராதாகிருஷ்ணன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு நீலப் புரட்சித் திட்டத்தின்கீழ் மீனவர்களுக்கு இந்திரா குடியிருப்புத் திட்ட வழிமுறைகளின் அடிப்படையில், 25 சதுர மீட்டர் பரப்பளவுள்ள ஒரு வீட்டிற்கு ரூ.1,70,000/– ஒதுக்கீட்டில், 5,000 வீடுகள், ரூ.85 கோடி மதிப்பீட்டில் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறைமூலம் கட்டுவதற்கு ஆணை பிறப்பிக்கப்பட்டது. அந்தவகையில், விளாத்திகுளம் தொகுதி மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர், சகோதரர் திரு. மார்க்கண்டேயன் அவர்கள், கீழவைப்பார், சிப்பிக்குளம் போன்ற பகுதிகளுக்கு அவர் எவ்வளவு வீடுகள்*

கேட்டுள்ளார்களோ அனைத்தும் வழங்கப்பட்டு, அவை முழுவதுமாக நிறைவடையாத நிலையில் இருக்கின்றன. காரணம், இன்றைக்கு வீடு கட்ட வேண்டுமானால், அத்திட்டத்திற்கு ரூ.1,70,000/– வழங்கப்படுகிறது. மீனவர்களால் அத்திட்டத்தின்மூலம் வீடுகளைக் கட்டுவதற்கு முடியாத நிலை ஏற்பட்டு, பல்வேறு கட்டங்களில் இருக்கின்றன. 5,000 வீடுகள் வழங்கப்பட்டவற்றில், ஏறக்குறைய 2,879 வீடுகள்தான் கட்டிமுடிக்கப்பட்டுள்ளன. மீதமுள்ள 2,121 வீடுகள் கட்ட முடியாமல் இருக்கும் நிலையில் உள்ளன. இந்தப் பிரச்சினைகளுக்குத் தீர்வுகாணும்வகையில், உள்ளாட்சித் துறையின்மூலம் கட்டப்படுகின்றவகையில், வீடுகள் கட்டுவதற்காக வகுக்கப்பட்டுள்ள வழிவகைகளின் அடிப்படையிலும், மீனவர்களுக்கும் அத்திட்டத்தினை நடைமுறைப்படுத்துகின்ற வகையிலும், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் மேலான கவனத்திற்குக் கொண்டு சென்று, அந்தத் துறையின் அமைச்சர் அவர்களையும் அணுகி, எங்கள் துறை அலுவலர்களையும் அணுகி, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரியுள்ள அளவிலான வீடுகளை, அவர்களுக்குக் கட்டித் தருவதற்கான நடவடிக்கைகளை எங்கள் துறை எடுக்கும் என்ற உறுதியை நான் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. G.V. மார்க்கண்டேயன்.

திரு. G.V. மார்க்கண்டேயன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ரூ.1,70,000/– திட்ட மதிப்பீட்டில் வீடுகள் கட்ட முடியாத சூழ்நிலையில்தான், அரசு ஒதுக்கீடு செய்துள்ள திட்டத்தில், சரிபாதி வீடுகள் கட்டப்படாமல் இருக்கின்றன என்பதை நன்கு ஆராய்ந்து, துறை சார்ந்த அமைச்சர் மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் மூலமாக, கூடுதலாக நிதியைப் பெற்று, 'அவர்களுக்கு வழங்கப்படும்' என்று உறுதியளித்ததற்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

கீழவைப்பார் ஊராட்சியின் ஒருபுறம் வங்காள விரிகுடா கடலும், மற்ற மூன்று திசைகளில் ஏறக்குறைய 5,000 ஏக்கர் உப்பளப் பகுதியாகவும் இருக்கின்றது. அந்தப் பகுதி மக்களுக்கு குடிநீர் பெறுவதில் மிகவும் கஷ்டமான சூழ்நிலை இருக்கிறது. அந்த வகையில். . .

2023 ஏப்ரல் 13]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர், கேள்வியைக் கேட்டால் கேளுங்கள், இல்லாவிட்டால் அமருங்கள்.*

திரு. G.V. மார்க்கண்டேயன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரே ஒரு நிமிடம் மட்டும். மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் அவர்கள், CSR திட்டத்தின்கீழ், அப்பகுதியில் வாழ்கின்ற மக்களுக்கு, சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அன்புடன் கேட்டு, அமர்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மீன்வளம்-மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. அனிதா R. ராதாகிருஷ்ணன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது மீனவ கிராமங்களுக்குக் குடிநீர் வழங்கும் திட்டம் மீன் வளத் துறைமூலம் நடைமுறைப்படுத்தப்படுவதில்லை. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் CSR fund அல்லது அப்பகுதி உள்ளாட்சி அமைப்புகளின் மூலமாகவாவது, அப்பகுதி மக்களுக்குக் குடிநீர் வழங்குவதற்கான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்று கோரியிருக்கிறார்கள். உள்ளாட்சி அமைப்புகளின் மூலமாகத்தான் குடிநீர் சம்பந்தப்பட்ட பிரச்சினைகளைத் தீர்க்க முடியும். அந்தவகையில், மாண்புமிகு உறுப்பினர் திரு. மார்க்கண்டேயன் அவர்களும், உள்ளாட்சி அமைப்புகளை அணுகுவார்களேயானால், எங்கெங்கெல்லாம் குடிநீர் இல்லையோ அவ்விடங்களிலெல்லாம் குடிநீர் வழங்குவதற்குண்டான அனுமதியும், மக்களின் குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கான நடவடிக்கைகளை அமைச்சர் பெருமக்களாகிய நாங்களும், உங்களுடன் இணைந்து எடுக்கிறோம் என்பதை உறுதியாக சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 155, மாண்புமிகு உறுப்பினர் திருமதி கு. சித்ரா, மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள்.*

155—

[2023 ஏப்ரல் 13

ஆகாயத் தாமரை

***12682—திருமதி கு. சித்ரா:**

மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஏற்காடு தொகுதி, ஏற்காடு ஏரியில் உள்ள ஆகாயத் தாமரைகளை அகற்ற அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. கா. ராமசந்திரன், சுற்றுலாத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) இக்கேள்வி 2021 ஆம் ஆண்டில் கேட்கப்பட்ட கேள்வி ஆகும். சேலம் மாவட்டம், ஏற்காடு பகுதியில் தமிழ்நாடு சுற்றுலா மேம்பாட்டுக் கழகத்தால் படகுக் குழாம் நடத்தப்படுகிறது. அங்கு இருந்த ஆகாயத்தாமரைகள் அனைத்தையும் அகற்றுவதற்காக, தமிழ்நாடு சுற்றுலா மேம்பாட்டுக் கழகத்தின் மூலமாக, 15.00 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்து, அவை முழுவதுமாக சுத்தம் செய்யப்பட்டு, தற்போது அந்த இடத்தில் ஆகாயத் தாமரைகள் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திருமதி கு. சித்ரா அவர்கள்.*

முற்பகல் 10–20

திருமதி கு. சித்ரா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். மற்றும் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன். மேலும், மக்களின் தலைவர், அண்ணன் திரு. எடப்பாடியார் அவர்களையும் வணங்குகிறேன். ஏற்காடு ஏரியிலுள்ள ஆகாயத் தாமரைகளை அகற்ற மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவாரா என்பதை அறிய விரும்புகிறேன். ஏற்கெனவே, ஏற்காடு ஏரியில் ஆகாயத் தாமரைகள் முழுவதுமாக அகற்றப்படாமல் பாதியளவு மட்டுமே அகற்றப்பட்டுள்ளன. தற்போது, மீதமுள்ள ஆகாயத் தாமரைகளை அகற்றி, ஏற்காடு ஏரியைத் தூர்வாரி, சுத்தப்படுத்தித்தர வேண்டும்*

சட்டமன்ற பேரவை TRUTH ALONE TRIUMPHS வாய்மையே வெல்லும்

2023 ஏப்ரல் 13]

என்று கேட்டுக்கொள்கிறேன். அதுமட்டுமல்லாமல், விடுமுறை நாட்களில் ஏற்காட்டில் கூட்ட நெரிசல் அதிகமாக உள்ளதால், ஒரு தொங்குபாலம் அமைத்துத்தர வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர் மூலமாக கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கா. ராமசந்திரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆகாயத் தாமரைகளை அகற்றி இரண்டு வருடங்கள் ஆகிவிட்டன. அவை வளர வளர, மீண்டும் மீண்டும் சுத்தம் செய்யப்பட்டுக் கொண்டு வருகின்றன. தற்போது, அவை வளர்ந்திருந்தால், அதிகாரிகளை அனுப்பி ஆய்வு செய்து, உடனடியாகச் சரிசெய்து கொடுத்துவிடுகிறோம். மக்களின் பிரச்சினைகளாக உள்ள மேம்பாட்டுப் பணிகளைச் செய்வதற்காக சேலம் மாவட்ட ஆட்சித் தலைவர் மூலமாக ஒரு* DPR*–ஐ தயார் செய்து, அங்கு என்னென்ன தேவை, என்னென்ன பணிகளைச் செய்ய வேண்டும் என்பதை ஊர்ஜிதம் செய்து, அதற்கு எவ்வளவு செலவாகும் என்ற திட்ட மதிப்பீடு அனுப்பப்பட்டால், நிச்சயமாக சுற்றுலாத்தல மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்கு எடுத்துச்சென்று நிதி நிலைமைக்கேற்ப செய்து தரப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திருமதி கு. சித்ரா அவர்கள்.*

திருமதி கு. சித்ரா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே, மாவட்ட ஆட்சித் தலைவரிடம் பல தடவை தொங்கு பாலம் அமைத்துத்தர கேட்டு* letter *கொடுத்திருக்கிறோம். மழைக்காலங்களில், ஏரியிலுள்ள நீரின்* colour *மாறிவிடுவதைக் குறிப்பிட்டு, கலெக்டரிடம் பல தடவை* letter *கொடுத்திருக்கிறோம். ஏரியைத் தூர்வாரினால் மட்டும்தான் அந்த நீர் நன்றாகயிருக்கும். சுற்றுலாப் பயணிகள் எவரும் அந்த ஏரியைப் பார்க்காமல் செல்ல மாட்டார்கள். ஏற்காட்டிற்கு சுற்றுலா வரும் மக்கள் அந்த ஏரியைப் பார்த்துவிட்டுத்தான் மற்ற இடங்களைப் பார்க்கச் செல்வார்கள். எனவே, அந்த ஏரியைத் தூர்வாரித் தருமாறு மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கா. ராமசந்திரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிச்சயமாக, எதிர்காலத்தில் பரிசீலனை செய்து அதைத் தூர் வாருவதற்கு என்ன செய்ய வேண்டுமோ, அதுகுறித்து நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 156, மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் வை. முத்துராஜா, மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

156—

துணை மின் நிலையம்

***1637—டாக்டர் வை. முத்துராஜா:**

மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதுக்கோட்டை மின்பகிர்மான வட்டம், கருக்காக்குறிச்சியில் 110 KV துணை மின் நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. V. செந்தில்பாலாஜி, மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) 6–4–2023 அன்று உச்சபட்ச மின்நுகர்வாக 12,252 MW–ஆக இருந்த நிலை, நேற்று 18,667 MW–ஆக உயர்ந்துள்ளது. அதேபோல, ஒருநாள் பயன்பாடு என்பது, 11–4–2023 அன்று 397 மில்லியன் யூனிட்டாக இருந்தது என்று நேற்று அவையிலே சொல்லியிருந்தேன். நேற்று, 12–4–2023 அன்று, ஒருநாள் பயன்பாடு 399 மில்லியன் யூனிட்டைக் கடந்து உச்சபட்ச ஒருநாள் பயன்பாட்டிற்கு மின்சார வாரியம் தடையில்லாமல் மின்விநியோகம் செய்திருக்கிறது.

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், புதுக்கோட்டை மாவட்ட மின்பகிர்மான வட்டத்தில், கருக்காக்குறிச்சியில் புதிய 110 KV

2023 ஏப்ரல் 13]

துணை மின் நிலையம் வேண்டுமென்று கேட்டிருக்கிறார். ஆய்வு செய்யப்பட்டதில், அந்த இடத்தில் தற்சமயம் துணை மின் நிலையம் தேவையில்லை என்று அறிக்கை வந்திருக்கிறது. ஆகையால், வருகின்ற ஆண்டுகளில் தேவைக்கேற்ப அரசு பரிசீலிக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் வை. முத்துராஜா.

டாக்டர் வை. முத்துராஜா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதுக்கோட்டை சட்டமன்றத் தொகுதி, கறம்பக்குடி ஒன்றியம், கருக்காக்குறிச்சி மற்றும் அதன் சுற்றுவட்டாரப் பகுதிகளில் விவசாயிகள் மற்றும் பொதுமக்களின் மின் பற்றாக்குறையைப் போக்கும் வகையில், கருக்காக்குறிச்சியில் புதிய 110 KV திறன் கொண்ட துணை மின் நிலையம் அமைத்துக் கொடுத்தால், அதனைச் சுற்றியுள்ள பகுதிகளில் மின்சாரம் தங்குதடையின்றி கிடைக்கும். தற்போது கறம்பக்குடி துணை மின் நிலையத்திலிருந்து கருக்காக்குறிச்சி, கருகீழ்த்தெரு, கருவடத்தெரு, குரும்பிவயல், முள்ளங்குறிச்சி, சூரக்காடு, கோட்டைக்காடு, வனக்கன்காடு, திருமணஞ்சேரி ஆகிய பகுதிகளுக்கு மின்சாரம் செல்கிறது. கருக்காக்குறிச்சியில் துணை மின் நிலையம் அமைப்பதற்குத் தேவையான அரசு இடமும் உள்ளது. அந்த இடத்தைத் தேர்வு செய்து, நடப்பு நிதியாண்டில் நிதி ஒதுக்கீடு செய்து அங்கு துணை மின் நிலையம் அமைத்துக் கொடுத்தால், அதன் சுற்றுவட்டாரப் பகுதியிலுள்ள விவசாயிகள் மற்றும் பொதுமக்களுக்கு தங்குதடையின்றி மின்சாரம் வழங்க வழிவகை செய்யலாம் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. V. செந்தில்பாலாஜி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே, புதுக்கோட்டை சட்டமன்றத் தொகுதியில், சின்னையாசத்திரம் பகுதியில் 110 KV துணை மின் நிலையம் அமைப்பதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஒப்புதல் வழங்கியிருக்கின்றார்கள். மாண்புமிகு உறுப்பினர் சுட்டிக்காட்டியிருக்கக்கூடிய கருக்காக்குறிச்சியில், துறையின்

சார்பாக ஆய்வு செய்யப்பட்டது. ஆய்வின் அடிப்படையில் அந்த இடத்தில் தற்சமயம் துணை மின் நிலையம் தேவையில்லை என்று குறிப்பிட்டிருக்கின்றார்கள். ஆகவே, வரக்கூடிய ஆண்டுகளில் மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கையை ஏற்று, முன்னுரிமை கொடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10–25

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் வை. முத்துராஜா அவர்கள்.

டாக்டர் வை. முத்துராஜா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதுக்கோட்டை சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட, புதுக்கோட்டை ஒன்றியம், திருமலைராய சமுத்திரம் ஊராட்சி மற்றும் நகராட்சிக்குட்பட்ட சேங்கைதோப்பு, புல்லுபண்ணை ஆகிய பகுதிகளுக்கு திருவரங்குளம் rural feeder–கிராம மின் பாதையிலிருந்து கடந்த கால ஆட்சியில் மின் இணைப்புகள் வழங்கப்பட்டு வந்தன. நமது கழக ஆட்சி அமைந்தவுடன், இப்பேரவையில் மக்களின் நீண்ட நாள் கோரிக்கையினை மாண்புமிகு முதல்வர் அவர்களின் கவனத்திற்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கவனத்திற்கும் கொண்டு சென்றேன். உடனடியாக பணிகள் தொடங்கப்பட்டு, திருவரங்குளம் கிராமிய மின் பாதையிலிருந்த மின் இணைப்புகளை மாற்றி, புதிதாக புதுக்கோட்டை நகர்ப்புரத்திற்கு 24 மணி நேர மும்முனை மின்சாரம் வழங்கியது நமது கழக அரசு. அதற்கு, மாண்புமிகு தமிழ்நாடு முதல்வர் அவர்களுக்கும், மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்களுக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன். தற்போது அப்பகுதியில் வசித்துவரும் சுமார் 500–க்கும் மேற்பட்ட குடும்பங்கள் மின்சாரக் கட்டணம் செலுத்த 10 கிலோ மீட்டருக்கு மேல் உள்ள திருவரங்குளம் செல்லும் நிலை உள்ளது. மேற்கண்ட, கிராம ஊராட்சி மற்றும் நகர்ப் பகுதியை, புதுக்கோட்டை நகராட்சி மின்வாரியத்தில் இணைத்துக் கொடுத்தால், மக்களுக்கு சிரமமின்றி இருக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

2023 ஏப்ரல் 13]

மாண்புமிகு திரு. V. செந்தில்பாலாஜி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கை இந்த ஆண்டே நிறைவேற்றப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 157, மாண்புமிகு உறுப்பினர் திரு. கடம்பூர் ராஜூ, மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.*

157—

போக்குவரத்துப் பணிமனை

***10251—திரு. கடம்பூர் ராஜூ:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கயத்தாறில் புதிய போக்குவரத்துப் பணிமனை அமைக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. எஸ்.எஸ். சிவசங்கர், போக்குவரத்துத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

மாண்புமிகு உறுப்பினருடைய தொகுதியான கோவில்பட்டியிலேயே ஒரு பணிமனை இருக்கிறது. அவருடைய கோவில்பட்டி தொகுதிக்கு அருகிலே பல பணிமனைகள் இருக்கின்ற காரணத்தினால், கயத்தாறில் புதிய பணிமனை அமைக்க வேண்டிய தேவையில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கடம்பூர் ராஜூ அவர்கள்.*

திரு. கடம்பூர் ராஜூ: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னதைப்போல, கோவில்பட்டியில் ஒரு பணிமனை இருக்கின்றது. அதற்கு அடுத்தபடியாக நான்குவழிச் சாலையிலே பிரதான நகரமாக கயத்தாறு இருக்கின்றது. அதற்கு 32 கிலோ மீட்டர் தொலைவில் திருநெல்வேலியிலே 4 போக்குவரத்துப் பணிமனைகள் இருப்பதாக சொல்லியிருக்கிறார்கள். ஆனால், அந்த 4 போக்குவரத்துப்*

பணிமனைகளும் திருநெல்வேலி மாவட்டத்திற்குண்டான தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கான பணிமனைகளே தவிர, தூத்துக்குடி மாவட்டத்திற்கோ, கோவில்பட்டி தொகுதிக்கோ அந்தப் பணிமனைகள் பயன்படாது.

கயத்தாறு புதியதாக உருவாக்கப்பட்ட வட்டம். ஒரு வட்டத்தின் தலைநகராக இருக்கின்றது. பல revenue கிராமங்களையும், ஒன்றரை ஒன்றியத்தையும் உள்ளடக்கிய கயத்தாறு பேரூராட்சி வளர்ந்து வருகிறது என்பதால், அவசியம் கருதி, புதிய போக்குவரத்துப் பணிமனை அமைக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்தில் கேட்டுக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எஸ்.எஸ். சிவசங்கர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அண்ணன் ராஜூ அவர்கள் குறிப்பிடுவதுபோல, அடுத்த மாவட்டத்திலே, பக்கத்திலே, திருநெல்வேலியிலே 3 பணிமனைகள் இருப்பதைக் குறிப்பிடுகிறார். அவருடைய, கோவில்பட்டி தொகுதி இருக்கின்ற தூத்துக்குடி மாவட்டத்திலே 7 பணிமனைகள் இருக்கின்றன. பக்கத்து மாவட்டமாக இருந்தாலும், திருநெல்வேலியிருந்து கயத்தாறு பகுதிகளுக்கு பல்வேறு பேருந்துகள் இயக்கப்படுகின்றன. அதேபோல, பொதுமக்களுடைய நீண்டநாள் கோரிக்கையை ஏற்று, கயத்தாறை கடந்து செல்கின்ற நீண்டதூர பயண பேருந்துகள் அங்கேயிருக்கின்ற tollgate-க்கு அருகே நிறுத்துவதற்கு ஒரு stopping ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. எனவே, அந்தப் பகுதி மக்கள் பயன்பெறுவதற்குப் போதுமான பேருந்து வசதி இருக்கிறது. எனவே, அங்கே பேருந்து பணிமனை அமைக்க வேண்டிய தேவை தற்போதைக்கு இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கடம்பூர் ராஜூ அவர்கள்.

திரு. கடம்பூர் ராஜூ: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் முதலிலேயே சொன்னதைப்போல கயத்தாறு புதிதாக உருவாக்கப்பட்ட வட்டம். அதுமட்டுமல்ல, கோவில்பட்டி தொகுதி, விளாத்திகுளம் தொகுதி ஆகிய இரண்டு தொகுதிகளுக்கும்

2023 ஏப்ரல் 13]

சேர்த்து இரண்டே பணிமனைகள், கோவில்பட்டியில் ஒன்றும், விளாத்திகுளம் தொகுதியில் ஒன்றும் இருக்கின்றன. கூடுதலாக ஒரு பணிமனை வந்தால்தான் அந்தப் பகுதியினுடைய போக்குவரத்து வசதிகளை நிறைவு செய்யும்வண்ணமாக இருக்கும் என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கருத்திலே கொள்ளவேண்டும்.

அடுத்தபடியாக, கோவில்பட்டி பணிமனையில் கிட்டத்தட்ட 64 பேருந்துகள் இருக்கின்றன. 64 பேருந்துகளில், கிட்டத்தட்ட 15-க்கும் மேற்பட்ட பேருந்துகள் பயன்படுத்த முடியாத நிலையிலே இருக்கின்றன. கடந்த 21-10-2022 அன்று பேருந்து நிலையத்திலிருந்து வெளிவருகின்ற bus-*ன்* gear box *மொத்தமாக கீழே விழுந்து,* bus stand-*ல் விபத்து ஏற்பட்ட நிலைமையெல்லாம் நடந்தது. அப்படிப்பட்ட பேருந்துகளை மாற்றி, புதிய பேருந்துகளில் மக்களை பயணிக்கச் செய்ய வேண்டும். ஏற்கெனவே, பயன்பாட்டில் இருந்த 503*F, N*10 போன்ற பேருந்துகள் நீண்டகாலமாக* service-*ல் பயன்பாட்டில் இருந்தன. அந்த 2 பேருந்துகளும், தற்பொழுது நிறுத்தப்பட்டிருக்கின்றன. அதேபோல, கயத்தாறிலிருந்து கோவில்பட்டிக்கு வருகின்ற நேரத்தில், நான்குவழிச் சாலையில் சர்வீஸ் சாலையில் ½ கிலோ மீட்டர் தாண்டி ஆசூர் என்ற ஊருக்குப் புதிதாக ஒரு பேருந்தினை இணைப்பாகக் கேட்டிருந்தேன். அதிகாரிகளெல்லாம் ஆய்வு செய்திருக்கிறோம் என்று சொன்னார்கள். பள்ளிக்குச் செல்கின்ற மாணவச் செல்வங்கள் நான்குவழிச் சாலையைக் கடந்து வருகின்ற நேரத்தில், விபத்துகள் ஏற்படுகின்றன. ½ கிலோ மீட்டர் தூரம் சாலை வசதி இருக்கின்றது. கயத்தாறிலிருந்து கோவில்பட்டி செல்கிறபோது, ஆசூர். . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *என்ன வேண்டும், திரு. ராஜு சொல்லுங்கள்.*

திரு. கடம்பூர் ராஜூ: *ஆசூர் என்ற அந்தக் கிராமத்திற்கு உள்ளே சென்று வருவதற்கு 86*B *பேருந்தை இயக்குவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வாரா என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்தில் அறிய விரும்புகிறேன்.*

முற்பகல் 10-30

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.*

[2023 ஏப்ரல் 13

மாண்புமிகு திரு. துரைமுருகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ** (குறுக்கீடு)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *கொரோனா.*

மாண்புமிகு திரு. துரைமுருகன்: **

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடு) இல்லை, இல்லை. அவர்கள் திராவிட மாடல் அடையாளத்தைக் காட்டியிருக்கிறார்கள், அவ்வளவுதான். திராவிட மாடல் அடையாளம். (சிரிப்பு) கொரோனா பாதுகாப்புக்காக வாயில் கட்டிய கருப்புத் துணி திராவிட மாடல் உடையது. மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எஸ்.எஸ். சிவசங்கர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அண்ணன் திரு. கடம்பூர் ராஜு அவர்கள் குறிப்பிட்ட, ஆரூர் வழித்தடம் குறித்து எழுத்துப்பூர்வமாகக் கொடுத்தால், அதிகாரிகளிடத்திலே அளித்து விரைவிலே நடவடிக்கை எடுப்போம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதேபோன்று, அவர் பேருந்துகள் பழுதடைந்த விஷயங்களை எல்லாம் சொன்னார். நான் ஏற்கெனவே என்னுடைய மானியக் கோரிக்கையிலே கூறியிருந்தேன். குற்றச்சாட்டு கூறியதாக ஆகிவிடும். கடந்த 10 ஆண்டுக் காலத்தில் 14,000 பேருந்துகள்தான் வாங்கியிருந்தீர்கள். திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் வாங்கியதுபோல், கூடுதல் பேருந்துகள் வாங்கி இருந்தால், இந்தப் பிரச்சினைகள் வந்திருக்காது. அதையெல்லாம், மாற்றுவதற்குத்தான் இப்போது 2,000 பேருந்துகள் வாங்குவதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அனுமதி அளித்திருக்கிறார்கள். அதேபோல், ஒன்றிய அரசு 15 ஆண்டுகள் ஓடிய பேருந்துகளை அகற்றச் சொல்லியிருக்கிறது. இதையெல்லாம் மாற்றும்பொழுது இந்தப் பிரச்சனைகள் தீரும் என்பதைத் தெரிவித்து, விரைவிலே அந்தப் பள்ளி மாணவர்களுக்கான பேருந்து குறித்து நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

** *மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.*

2023 ஏப்ரல் 13]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 158, மாண்புமிகு உறுப்பினர் திரு. சீ. கதிரவன், மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள்.*

158—

குடமுழுக்கு

***7524—திரு. சீ. கதிரவன்:**

மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) முசிறி வட்டம், துளையானத்தம் ஊராட்சி, ஜெம்புநாதபுரம் அருள்மிகு ஸ்ரீபாலதண்டாயுதபாணி திருக்கோயிலைப் புனரமைத்து குடமுழுக்கு நடத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. பி.கே. சேகர்பாபு, இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) ஜெம்புநாதபுரம், அருள்மிகு பாலதண்டாயுதபாணி திருக்கோயில் என்பது, சட்டப்பிரிவு 49 (1)-ன்கீழ் பட்டியலைச் சாராத திருக்கோயிலாகும். இந்தத் திருக்கோயிலுக்கு குடமுழுக்கு நடைபெற்று 20 ஆண்டுகள் ஆகியிருக்கின்ற நிலையில், தொல்லியல் வல்லுநர் குழு, மண்டல வல்லுநர் குழு மற்றும் மாநில வல்லுநர் குழு ஆகிய 3 குழுக்களினுடைய ஒப்புதல் பெற்று, ரூபாய் 10 இலட்சம் செலவில், உபயதாரர் நிதியோடு வெகுவிரைவில் குடமுழுக்குக்குண்டான திருப்பணிகள் தொடங்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. சீ. கதிரவன் அவர்கள் இருக்கையில் இல்லை. மாண்புமிகு உறுப்பினர் திரு. ந. தியாகராஜன் அவர்கள்.*

திரு. ந. தியாகராஜன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. . . (குறுக்கீடு)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *முடித்துவிடட்டும்.*

[2023 ஏப்ரல் 13

திரு. ந. தியாகராஜன்: தெய்வங்கள் போற்றும், தமிழ்நாட்டின் மாண்புமிகு முதலமைச்சரை வணங்கி, மண்ணச்சநல்லூர் தொகுதி, முசிறி வட்டம், துளையாநத்தம் ஊராட்சி, ஜெம்புநாதபுரம் அருள்மிகு பாலதண்டாயுதபாணி திருக்கோயிலைப் புனரமைத்து, குடமுழுக்கு நடத்த அரசு முன்வருமா?

அதைப்போல, திருச்சி இணை ஆணையர் மண்டலத்தில், 4–12–2022 மற்றும் 23–2–2023 ஆகிய தேதிகளில் 27 இளைஞர்களுக்கு, திருச்சி மாவட்டம், மண்ணச்சநல்லூர் வட்டம், சமயபுரம் அருள்மிகு மாரியம்மன் திருக்கோயிலுக்குச் சொந்தமான பெருந்திட்ட வளாக மாரியம்மன் திருமண மண்டபத்தில், நமது மாண்புமிகு நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் தலைமையில் கட்டணமில்லா திருமணங்கள் சிறப்பாக நடைபெற்றன. (மேசையைத் தட்டும் ஒலி) பொருளாதாரத்தில் பின்தங்கிய நிலையில் உள்ள பெரும்பாலான பக்தர்களின் வேண்டுகோளுக்கிணங்க, மீண்டும் திருக்கோயில்களில் திருமணம் நடத்துவதற்கு அரசு ஆவன செய்யுமா?

திருச்சி மாவட்டம், மண்ணச்சநல்லூர் வட்டம், பிச்சாண்டார் கோயில், அருள்மிகு உத்தமர்திருக்கோயிலில் பழுதடைந்த தேரினைச் சீரமைத்துத் தேரோட்டம் நடத்த அரசு ஆவன செய்யுமா?

திருச்சி மாவட்டம், மண்ணச்சநல்லூர் வட்டம், சுனைபுதுநல்லூர் அருள்மிகு மீனாட்சி உடனுறை சுந்தரேஸ்வரர் திருக்கோயிலைப் புனரமைத்து, குடமுழுக்கு நடத்த அரசு ஆவன செய்யுமா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் வாயிலாகக் கேட்டு அமர்கிறேன்.

முற்பகல் 10–35

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அமைச்சர் ஒரு நிமிடம் உட்காருங்கள். கொறடா அவர்கள், அவை முன்னவரிடம் ஏதோ கேட்கிறேன் என்கிறார்கள். (குறுக்கீடு) அவை முன்னவர் அவர்கள். (குறுக்கீடு) எதிர்க்கட்சிக் கொறடா அவர்கள்.

திரு. எஸ்.பி. வேலுமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ** (குறுக்கீடு)

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

TRUTH ALONE TRIUMPHS

2023 ஏப்ரல் 13]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *இப்போதும் நான்தான் வாய்ப்பு தந்திருக்கிறேன். (குறுக்கீடு) அமைச்சர் பதில் சொல்லட்டும். இது முடியட்டும். நாம் பேசிக்கொள்வோம். (குறுக்கீடு) அதை எடுத்து விடுகிறேன், எடுத்து விடுகிறேன். மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. பி.கே. சேகர்பாபு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. . . (குறுக்கீடு)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *இரண்டு பேர் சொன்னதையும் எடுத்து விடுகிறேன். (குறுக்கீடு) இல்லை, மாண்புமிகு முன்னவர், மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.பி. முனுசாமி அவர்களைப் பற்றிச் சொன்னதையும், நீங்கள் பேசியதையும் எல்லாவற்றையும் நீக்கி விடுகிறேன். இது கேள்வி நேரம். கேள்வி, பதில் மட்டும் இருக்கட்டும். மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. பி.கே. சேகர்பாபு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. தியாகராஜன் கேள்வியை கேட்பார் என்று பார்த்தால், மானியக்கோரிக்கைபோல், நீண்ட, நெடிய நான்கு கேள்விகளை கேட்டு அமர்ந்திருக்கிறார்கள். அருள்மிகு மீனாட்சி உடனுறை சுந்தரேஸ்வரர் சுவாமி திருக்கோயிலுக்கு தொல்லியல் குழு, மண்டலக் குழு மற்றும் மாநிலக் குழு ஆகிய மூன்று குழுக்களினுடைய அனுமதி பெற்று, ரூபாய் 10 இலட்சம் செலவில் உபயதாரர் நிதியில், வருகின்ற 23–4–2023 அன்று கும்பாபிஷேகம் செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

அடுத்ததாக, நம்முடைய சுந்தரேஸ்வரர் திருக்கோயிலுக்கு கும்பாபிஷேகமும், உத்தமர் கோயிலுக்கு திருத்தேரும் கேட்டார். தற்போது சைவம், வைணவம் இரண்டிற்கும் ஒன்றாக இருக்கும் ஒரு கோயில் உத்தமர்கோயில் ஆகும். சைவமும், வைணவமும் இரண்டு தெய்வங்களும் ஒன்றாக சாமி புறப்பாடு ஆகின்ற அந்தத் திருக்கோயிலினுடைய திருத்தேர் திருப்பணியானது ரூ.55.50 இலட்சம் செலவிலே மேற்கொள்ளப்பட்டு, 90 சதவீதப் பணிகள் தற்போது நிறைவடைந்திருக்கின்றன என்பதை மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மற்றொரு கேள்வியாக திருக்கோயிலிலே, மாவட்டத்தினுடைய அமைச்சர், உள்ளாட்சித் துறை அமைச்சர் அண்ணன்

[2023 ஏப்ரல் 13

திரு. நேரு அவர்கள், கட்டணமில்லா திருமணங்களை நடத்தி வைத்ததாகச் சொன்னார். இந்தத் திருமணங்கள் கடந்த ஆண்டு மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் 500 இணைகளுக்கு கட்டணமில்லா திருமணங்களை ஆண்டுதோறும் நடத்துவேன் என்று அறிவித்ததற்கிணங்க, நடைபெற்றன.

மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள், கடந்த ஆண்டு டிசம்பர் மாதம் 4 ஆம் தேதி, 31 திருமணங்களை திருவான்மியூர் அருள்மிகு மருந்தீஸ்வரர் திருக்கோயில் திருமண மண்டபத்தில் நடத்தித் தந்தார். அதோடு மட்டுமல்லாமல், அன்றைக்கு ஓர் இணைக்கு ஒரு திருமணத்திற்கு 20,000 ரூபாய் என்று ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது. அதை உயர்த்தி, ஓர் இணைக்கு திருக்கோயிலின் சார்பிலே நடைபெறுகின்ற திருமணங்களுக்கு 50,000 ரூபாய் என்று வாரி வழங்கிய முதல்வர் நம்முடைய தமிழகத்தினுடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் (மேசையைத் தட்டும் ஒலி) என்பதை மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்தத் திட்டத்தைத் தொடர, மாண்புமிகு முதல்வர் அவர்கள் உத்தரவிட்டிருக்கிறார்கள் என்பதையும் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக, மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. நல்லதம்பி.

திரு. அ. நல்லதம்பி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. . . (குறுக்கீடு) மாண்புமிகு முன்னாள் முதலமைச்சர், எதிர்க்கட்சித் தலைவர், கழகத்தின் நிரந்தரப் பொதுச் செயலாளர் . . . (குறுக்கீடு) ஐயா அவர்களை வணங்கி . . . (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இல்லை. நீங்கள் கேள்வியை மட்டும் சுருக்கமாகக் கேளுங்கள். (குறுக்கீடு) ஒரே கேள்வி, ஒரு நிமிடம், ஒரு second.

திரு. அ. நல்லதம்பி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேலம் மாவட்டம், கெங்கவல்லி தொகுதிக்குட்பட்ட தலைவாசலில் தமிழகத்திலே இரண்டாவது காய்கறி கொள்முதல் நிலையம் செயல்பட்டு வருகின்றது. இந்த இடம் அறநிலையத் துறைக்குச் சொந்தமான இடமாகும். எனவே, அந்த இடத்தில் மழைக்காலங்களிலும், வெயில் காலங்களிலும். . . (குறுக்கீடு)

2023 ஏப்ரல் 13]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *இது மூலக்கேள்விக்கு தொடர்புடைய கேள்வி இல்லை. இதைத் தனிக் கேள்வியாகக் கேளுங்கள்.*

வினா வரிசை எண் 159, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஈ. பாலசுப்ரமணியன், மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

43—

கூடுதல் வகுப்பறைகள்

***58090—திரு. ஈ. பாலசுப்ரமணியன்:**

மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாநகராட்சி, மூங்கபாடி மகளிர் மேல்நிலைப் பள்ளிக்குக் கூடுதல் வகுப்பறைகள் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

அ) மற்றும் (ஆ) சேலம் மாநகராட்சி, மூங்கபாடி, குகை பகுதியில் நகரவை மகளிர் மேல்நிலைப் பள்ளி இயங்கி வருகிறது. இப்பள்ளியில் 2,606 மாணவிகள் பயின்று வருகின்றனர். பள்ளியில் 53 வகுப்பறைகள் உள்ளன. கடந்த ஆண்டைவிட மாணவர்கள் சேர்க்கை அதிகரித்த காரணத்தினால், கூடுதலாக 12 வகுப்பறைகள் தேவைப்பட்டன. கூடுதல் வகுப்பறைகள் கட்ட இட வசதியும் பள்ளியில் உள்ளது. இதனைக் கருத்திற்கொண்டு, தற்போது சேலம் மாநகராட்சியுடன் இணைந்து முதற்கட்டமாக 6 வகுப்பறைகள் கொண்ட கட்டடம் கட்டப்பட்டு வருகிறது. இந்தக் கல்வியாண்டில் அப்பள்ளிக்கு மேலும் 6 வகுப்பறைகள் கட்டித் தரப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஈ. பாலசுப்ரமணியன்.*

[2023 ஏப்ரல் 13

முற்பகல் 10–40

திரு. ஈ. பாலசுப்ரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வங்கக் கடலோரம் துயில் கொண்டிருக்கும் தங்கத் தலைவர், புரட்சித் தலைவர் திரு. எம்.ஜி.ஆர்., புரட்சித் தலைவி அம்மா ஆகியோரை வணங்குகிறேன். எனக்கு இந்த வாய்ப்பை அளித்த மண்ணின் மைந்தர், கழகத்தின் நிரந்தர பொதுச் செயலாளர், அண்ணன் எடப்பாடியார் அவர்களின் பாதம் பணிந்து வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

சேலம் மாநகராட்சி, குகை பகுதியில் 46–வது கோட்டத்திலே மூங்கபாடி மகளிர் மேல்நிலைப் பள்ளி 1969 ஆம் ஆண்டு, அங்கிருந்த சமுதாயத்தின் பெரியோர்களாலும், அரசின் உதவியினாலும் துவங்கப்பட்டு, ஆல் போல் தழைத்தோங்கி, இன்று அமைச்சர் அவர்கள் கூறியதைப்போல 2,606 பெண் குழந்தைகளுடன் சிறப்பாக செயல்பட்டு வருகிறது. இந்தப் பள்ளியிலே கட்டடங்கள் குறைவாக இருக்கின்ற காரணத்தினால், 2006 ஆம் ஆண்டு, நான் முதன்முதலாக சேலம் மாநகராட்சிக்கு, மாமன்ற உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்டது முதல். . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், கேள்விக்கு வாருங்கள்.

திரு. ஈ. பாலசுப்ரமணியன்: அந்தப் பள்ளிக்கு அடிப்படை கட்டமைப்பு வசதிகள் அனைத்தும் செய்து கொடுத்த காரணத்தினால், இன்று இந்த நிலைமையில் அப்பள்ளி இருக்கின்றது. தற்போது பள்ளிக்கு கூடுதலாக 15 வகுப்பறைகள் தேவை. அதில் 12 வகுப்பறைகள் கட்டுவதற்கான திட்டம் தற்சமயம் இருப்பதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறியிருப்பதற்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். இனிவரும் ஆண்டுகளில், மீண்டும் அந்தப் பள்ளிக்கு தேவையானவற்றை செய்து தர வேண்டும். ஏனென்று சொன்னால். . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், 10–45 மணிக்கு முடிக்க வேண்டும். நீங்கள் கேள்விக்கு வாருங்கள்.

திரு. ஈ. பாலசுப்ரமணியன்: அங்கிருக்கும் மாநகராட்சி பள்ளிகளிலே சேலம் மாநகராட்சியில். . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், இரண்டு கேள்விகளை கேட்டுவிட்டீர்கள். மாண்புமிகு பள்ளிக்

2023 ஏப்ரல் 13]

கல்வித் துறை அமைச்சர் அவர்கள், இதற்கு நீங்கள் பதில் சொல்லுங்கள்.

மாண்புமிகு திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் சொன்னது உண்மைதான். சேலம் மாநகராட்சி, மூங்கபாடி, குகை பகுதியில் உள்ள நகரவை மகளிர் மேல்நிலைப் பள்ளியில் 2,606 மாணவிகள் பயின்று வருகின்றனர். 88 ஆசிரியர்கள் மற்றும் 4 பணியாளர்கள் பணிபுரிந்து வருகின்றனர். பள்ளியில் 53 வகுப்பறைகள், 9 ஆய்வகங்கள் மற்றும் 5* Smart class *வகுப்பறைகள் உள்ளன. மேலும், மாணவியருக்கு 38 எண்ணிக்கையில் கழிப்பறை வசதியும் உள்ளது. கூடுதல் செய்தியாக, கடந்த ஆண்டு நம்முடைய மாண்புமிகு தமிழ்நாட்டு முதலமைச்சர் அவர்கள் டெல்லி மாநகரத்திற்குச் சென்றபோது, அங்கிருக்கின்ற அந்த* Model Schools and Schools of Excellence-*ஐ பார்த்துவிட்டு வந்தவுடன், கிட்டத்தட்ட 6 மாதத்திற்குள் அதேபோன்று தமிழ்நாட்டில் நாமும் உடனடியாக தொடங்க வேண்டும் என்ற நோக்கத்தில், கிட்டத்தட்ட 28 தகை சால் பள்ளிகள் 171 கோடி ரூபாயிலும், 15 மாதிரிப் பள்ளிகள், கிட்டத்தட்ட 123 கோடி ரூபாயிலும் துவங்கப்படும் என்று சொன்னார்கள். டெல்லி முதலமைச்சர் அவர்கள் இங்கு வந்து பேசும்போது, 'பள்ளிகளைப் பார்த்துவிட்டு வந்த 6 மாத காலத்திற்குள், நீங்கள் இதனை ஆரம்பித்துள்ளதையும், உங்களுடைய செயல் திறனையும், வேகத்தையும் பார்க்கும்போது, எங்களுக்கு வியப்பாக இருக்கிறது' என்று தமிழ்நாட்டு முதலமைச்சர் அவர்களைப் பாராட்டிவிட்டுச் சென்றார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இதைச் சொல்வதற்குக் காரணம், அந்த 28 தகை சால் பள்ளிகளுள் நீங்கள் சொல்லும் பள்ளியும் ஒன்றாக வருகிறது. கிட்டத்தட்ட அதற்கென்று 6 கோடியே 38 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கின்றது. கண்டிப்பாக நீங்கள் சொல்வதைக் காட்டிலும், இன்னும் அதிகப்படியான* infrastructure *வரும். நன்றி.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஈ. பாலசுப்ரமணியன், சுருக்கமாக,* simple *ஆக ஒரு கேள்வியை மட்டும் கேட்டு, நன்றி சொல்லி முடியுங்கள்.*

திரு. ஈ. பாலசுப்ரமணியன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்கள் பகுதியில் உள்ள பள்ளி, தகை சால் பள்ளியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கின்றது என்பதைக் கேள்விப்படும்போது*

பெருமையாக இருக்கின்றது. இருந்தாலும்கூட இதய தெய்வம், புரட்சித் தலைவி அம்மா அவர்களால் தொடங்கப்பட்டு. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஈ. பாலசுப்ரமணியன், உங்களுக்கு என்ன வேண்டும் என சுருக்கமாகக் கேளுங்கள்; 10–45 மணிக்குள் முடிக்க வேண்டும். (குறுக்கீடு) அதற்காகத்தான் கேட்கிறேன்.*

திரு. ஈ. பாலசுப்ரமணியன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அண்ணன் எடப்பாடியாரால் தொடங்கப்பட்ட, மாணவர்களுக்கான மடிக்கணினிகள் வழங்கும் திட்டம் தற்போது நிறுத்தப்பட்டிருக்கிறது. அது எப்போது தொடங்கப்படும் என்பதை அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *சரி. மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் தெரிவித்த நன்றிக்கு முதலில் எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அவர் மற்ற திட்டங்கள் எல்லாம் எப்போது தொடங்கப்படும் என்று கேள்வியைக் கேட்டிருக்கின்றார். அதற்கு தனியாக ஒரு கேள்வியைக் கேளுங்கள். அதற்கு நான் பதில் சொல்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 160, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஐட்ரீம் இரா. மூர்த்தி, மாண்புமிகு தொழிலாளர் நலன்–திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள்.*

160—

மாணவர் விடுதி

***55854—திரு. ஐட்ரீம் இரா. மூர்த்தி:**

மாண்புமிகு தொழிலாளர் நலன்–திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

2023 ஏப்ரல் 13]

(அ) இராயபுரம் தொகுதி, 53-வது வார்டில் உள்ள தொழிற்பயிற்சி நிலையத்திற்கு நவீன வசதிகளுடன்கூடிய மாணவர் விடுதி கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. சி.வி. கணேசன், தொழிலாளர் நலன்—திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) இராயபுரம் சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் வட சென்னை அரசினர் தொழிற்பயிற்சி நிலையம் அமைந்துள்ள இடத்தில், மாணவர்களின் நலன் கருதி புதிய அரசினர் மாணவர் விடுதி கட்ட வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், இந்த இரண்டு ஆண்டுக்காலத்தில் மட்டும் 13 புதிய அரசினர் மாணவர் விடுதிகளைக் கட்டி, மாணவர்களின் பயன்பாட்டிற்குக் கொண்டு வந்திருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையை, மாண்புமிகு முதல்வர் அவர்களின் கவனத்திற்கு எடுத்துச்சென்று அரசு பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஐட்ரீம் இரா. மூர்த்தி அவர்கள்.*

திரு. ஐட்ரீம் இரா. மூர்த்தி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இராயபுரம் தொகுதி, 53-வது வார்டில் வட சென்னை அரசினர் தொழிற்பயிற்சி நிலையம் உள்ளது. 1966-ல் துவங்கப்பட்ட இந்தப் பயிற்சி நிலையம், 2022-2023 ஆம் கல்வியாண்டில். . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஐட்ரீம் இரா. மூர்த்தி, வரலாறு வேண்டாம். உங்களுக்கு என்ன வேண்டுமென்று கேளுங்கள். (குறுக்கீடு) மீண்டும் பரிசீலிப்பீர்களா எனக் கேளுங்கள். நான் இன்னும் ஒரு நிமிடத்தில் முடிக்கப் போகிறேன்.*

திரு. ஐட்ரீம் இரா. மூர்த்தி: *இந்த தொழிற்பயிற்சி நிலையத்தில் 720 மாணவர்கள் படிக்கின்றார்கள். (குறுக்கீடு) 35 அறைகள் உள்ளன. அந்த அறைகள் எல்லாம் 1966 ஆம் ஆண்டில் கட்டப்பட்ட நிலையிலேயே இருக்கின்றன. அவற்றையெல்லாம் கட்டித் தர வேண்டும். அதேபோல். . .*

[2023 ஏப்ரல் 13

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு தொழிலாளர் நலன்–திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்களிடம் கட்டடம் கட்டித் தர வேண்டும் என்று கேளுங்கள். மாண்புமிகு தொழிலாளர் நலன்–திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர், அதற்கு நீங்கள் பதில் சொல்லுங்கள். இன்னொரு கேள்வி இருக்கிறது.

மாண்புமிகு திரு. சி.வி. கணேசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் சொல்கின்ற வட சென்னை அரசினர் தொழிற்பயிற்சி நிலையம் 1966 ஆம் ஆண்டு கட்டப்பட்ட நிலையம். அந்தப் பயிற்சி நிலையத்திற்கு நானே நேரடியாகச் சென்று, ஆய்வு செய்தேன். சட்டமன்ற உறுப்பினர் அவர்களையும் அழைத்துச்சென்று பார்வையிட்டு, அங்கிருக்கின்ற மாணவர்களின் தேவைகளையெல்லாம் கேட்டறிந்து, அவற்றை உடனடியாக நிறைவேற்றுவதாக வாக்குறுதி கொடுத்திருக்கிறேன். சட்டமன்ற உறுப்பினரும் சின்ன சின்ன பணிகளை உடனிருந்து கவனித்து, விரைவாக நிறைவேற்றுவதாகச் சொல்லியிருக்கிறார்கள். மாண்புமிகு முதல்வர், அவர்கள் 1950, 1960, 1970 ஆம் ஆண்டுகளில் கட்டப்பட்ட, இதுபோன்ற பயிற்சி நிலையங்கள், விடுதிகள் எல்லாம் பராமரிக்கப்பட வேண்டுமென்று சொல்லியிருக்கிறார். இந்த ஆண்டு இதற்கென 18.71 கோடி ரூபாயை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஒதுக்கியிருக்கிறார்கள். நிச்சயமாக, விரைவில் ஆணைகள் பிறப்பிக்கப்பட்டு, திட்ட மதிப்பீடுகள் தயார் செய்யப்பட்டு, உரிய பணிகள் விரைவாக மேற்கொள்ளப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஐட்ரீம் இரா. மூர்த்தி அவர்கள். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர், நன்றி சொல்லுங்கள்.

திரு. ஐட்ரீம் இரா. மூர்த்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் இந்தத் தருணத்தில் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். பணிமனையில் உள்ள மேற்கூரைகள் ஆங்காங்கே உடைந்திருக்கின்றன. மாணவர்கள் உட்கார்ந்திருக்கின்ற அந்த Fitter, Turner பயிற்சி போன்றவற்றுக்கான Industrial shed எல்லாம் complete ஆக உடைந்திருக்கின்றன. அதுமாத்திரமல்ல; அந்த வகுப்பறைகளில் இருக்கக்கூடிய மேசைகள் எல்லாம் 1966 இல் செய்யப்பட்டவை. எனவே, அந்த மேசைகளையும் மாற்றித் தரவேண்டும்.

2023 ஏப்ரல் 13]

அதேபோன்று கழிப்பறை வசதிகள், அவையும் 1966 இல் கட்டப்பட்ட கட்டடங்கள்தான். எனவே, அவற்றையும் சீரமைத்துத் தர வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர் அவர்களை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு தொழிலாளர் நலன்-திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. சி.வி. கணேசன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சென்னவுடனேயே, உடனடியாக இந்த ஆண்டு அந்த அரசினர் தொழிற்பயிற்சி நிலையத்திற்கு ஒரு கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என்பதை மகிழ்ச்சியோடு இந்த நேரத்தில் நான் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் அரசினர் தொழிற்பயிற்சி நிலையங்களுக்கு இந்த ஆண்டு சுமார் மூன்று கோடி ரூபாய் மதிப்பீட்டில் புதிய கட்டடங்கள் கட்டுவதற்கு ஆணை பிறப்பிக்கப்பட்டு, பணிகள் நடைபெற்று வருகின்றன. அதுமட்டுமல்லாமல், அந்தத் தொழிற்பயிற்சி நிலையத்திற்கு 31 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு மாணவர்களுக்குக் கருவிகள், தளவாடங்கள், உபகரணங்கள் போன்ற நவீன தொழில்நுட்பக் கருவிகள் வாங்குவதற்கான பணிகள் நடைபெற்று வருகின்றன என்பதை மகிழ்ச்சியுடன் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினாக்கள்-விடைகள் நேரம் முடிவுற்றது.*

[**குறிப்பு:** *ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.*]

2. அறிவிப்புகள்

(அ) சமத்துவ நாள் உறுதிமொழி நிகழ்ச்சி, சட்டமன்ற உறுப்பினர்கள் பங்கேற்கும் வகையில் பேரவையை தற்காலிகமாக ஒத்திவைத்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பேரவைக்கு ஓர் அறிவிப்பு. சமத்துவ நாளை முன்னிட்டு, மாண்புமிகு முதலமைச்சர்*

[பேரவைத் தலைவர்] [2023 ஏப்ரல் 13

அவர்கள் இன்று 13–4–2023 காலை 11–00 மணிக்கு தலைமைச் செயலக பிரதானக் கட்டடத்திற்கு அருகில் உள்ள இராணுவ அணிவகுப்பு மைதானத்தில், சமத்துவ நாள் உறுதிமொழி செய்து வைக்க உள்ளார்கள். அந்நிகழ்ச்சியில் பேரவை உறுப்பினர்கள் அனைவரும் பங்கேற்கும் வகையில், பேரவை தற்போது ஒத்திவைக்கப்பட்டு, மீண்டும் 11–15 மணிக்குக் கூடும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பின்னர், பேரவை முற்பகல் 10–47 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் **திரு. மு. அப்பாவு** *அவர்கள் தலைமையில் முற்பகல் 11.15 மணியளவில் பேரவை மீண்டும் கூடியது.*

3. சிறப்புக் கவன ஈர்ப்பு

மிகவும் பிற்படுத்தப்பட்டோருக்கான இட ஒதுக்கீட்டில், வன்னியர்களுக்கு 10.5 சதவிகித உள் ஒதுக்கீடு, பிற்படுத்தப்பட்டோர் ஆணையத்திற்கான கால அவகாசம் நீட்டித்திருப்பது

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வு குறித்த கவன ஈர்ப்பு. மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி.கே. மணி அவர்கள், (குறுக்கீடு) என்ன? சொல்லுங்கள். திரு. செ. ராஜேஷ் குமார் அவர்களுக்குத்தான் கேள்வி கேட்க வாய்ப்பு தருகிறேன் என்று சொல்லியாகிவிட்டதே! நீங்கள் உட்காருங்கள்.

திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மிகவும் பிற்படுத்தப்பட்டோருக்கான 20 விழுக்காடு இட ஒதுக்கீட்டில் வன்னியர்களுக்கு 10.5 விழுக்காடு உள் ஒதுக்கீடு வழங்க வேண்டுமென்று, நம்முடைய தமிழக அரசின் சார்பில், குறிப்பாக, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் ஆணையிடப்பட்டு, பிற்படுத்தப்பட்டோர் ஆணையத்திற்கு மூன்று மாத காலம் அவகாசம் கொடுக்கப்பட்டது. அந்தக் காலக்கெடுவை மேலும் 6 மாத காலத்திற்கு நீட்டித்திருப்பது என்பதுதான் மிகப் பெரிய அதிர்ச்சியை கொடுத்திருக்கிறது. ஓர் ஆணையத்திற்கு. . . (குறுக்கீடு) இல்லை, இல்லை. (மணியடிக்கப்பெற்றது)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: போதும்.

2023 ஏப்ரல் 13]

திரு. ஜி.கே. மணி: *பேரவைத் தலைவர் அவர்களே, சுருக்கமாக சொல்கிறேன், ஒன்றும் அதிகமாக இல்லை.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *இல்லை. நேற்று இதே விஷயத்தைத்தான் பேசவேண்டுமென்று கேட்டீர்கள். இன்றைக்கு எடுத்துக்கொள்கிறேன் என்று சொன்னதால் உங்களுக்குப் பேசுவதற்கு வாய்ப்பு தந்திருக்கிறேன். போதும். (குறுக்கீடு) இல்லை, கவனத்தை ஈர்த்துவிடுங்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்வார்கள்.*

திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உண்மைத் தன்மையைப் புரிந்துகொண்டால்தான் சரியாக இருக்கும். இரண்டு நிமிடங்கள் கொடுங்கள். அதிகமாகப் பேசவில்லை.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *இல்லை, எல்லா பத்திரிகைகளிலும், டி.வி.-யிலும் உங்கள்* press release *வந்துவிட்டது. அதை எல்லோருமே பார்த்துவிட்டார்கள். யாருக்குமே அதில் சந்தேகம் இல்லை. மாண்புமிகு அமைச்சர், பதில் சொல்லுங்கள்.*

திரு. ஜி.கே. மணி: *இல்லை, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதிலே நிலைமையைப் புரிந்துகொள்ள வேண்டும். மூன்று மாதம் காலக்கெடு; மூன்று மாதங்களில்தான் முடிக்க வேண்டும் என்பது அரசின் நோக்கம், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய நோக்கம். ஆனால், மூன்று மாதங்களில் முடியவில்லை. ஆறு மாதங்கள் நீட்டிக்க வேண்டிய அவசியம் எதற்கு? ஒருமாதம் நீட்டித்தால்கூட போதுமானது. உதாரணத்திற்குச் சொல்கிறேன். 2020 இல்* DSP*-க்களை தேர்வு செய்திருக்கிறார்கள்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *இல்லை. மாண்புமிகு உறுப்பினர் நான் சொல்கிறேன். இன்றைக்கு* demand*-ல் இது உள்ளது என்றாலும், நேற்று உங்களிடம் ஒத்துக்கொண்டதற்காகச் சொல்கிறேன். நீங்கள் அரசின் கவனத்தை ஈர்த்து, அமருங்கள். உங்களை மாதிரி இன்னும் நிறைய உறுப்பினர்கள் கொடுத்திருக்கிறார்கள். (குறுக்கீடு) இல்லை.*

திரு. ஜி.கே. மணி: *இது ஒரு சமூகப் பிரச்சினை, விடுதலைப் பிரச்சினை. நீங்கள் பேசிக்கொண்டே இருந்தீர்கள் என்றால், நீங்கள் ***

** *மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *இல்லை, இல்லை.*

திரு. ஜி.கே. மணி: *** நேற்றைக்கு பெரிய பதற்றமே தமிழ்நாட்டில் உருவாகியிருக்கிறது.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *இதெல்லாம் நீங்கள் பேசக்கூடாது. அவைக் குறிப்பில் ஏறாது. (குறுக்கீடு) சபையில் என்ன பேசலாம். . . (குறுக்கீடு) அவை நாகரிகத்தோடு நீங்கள் பேசப் பழகுங்கள். யாரும் வந்து உங்கள் ** நேற்று கொடுத்திருக்கிறீர்கள். இன்றைக்கு எடுத்திருக்கிறேன். சிறப்புக் கவன ஈர்ப்பாக எடுக்கிறேன். அவையின் கவனத்தை ஈர்த்து அமருங்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்வார்கள். அவ்வளவுதான்.*

திரு. ஜி.கே. மணி: *பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பிரச்சினையை நீங்கள் உருவாக்க நினைக்கிறீர்கள்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *நாங்கள் எதற்கு பிரச்சினையை உருவாக்கப் போகிறோம். இந்த அவைக்கு நோக்கம். . . (குறுக்கீடு)*

திரு. ஜி.கே. மணி: ****

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *இல்லை, நீங்கள் பேசுவது எல்லாம் அவைக் குறிப்பில் ஏறாது. தெரிந்துகொள்ளுங்கள்.*

திரு. ஜி.கே. மணி: *இப்படி எல்லாம் பேசக்கூடாது. (குறுக்கீடு)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *நீங்கள்* subject-*ஐ பேசவேண்டுமே தவிர. . . (குறுக்கீடுகள்) எல்லாரும் உட்காருங்கள். நான் சொல்கிறேன். எல்லாரும் உட்காருங்கள் என்று சொன்னேன். நான் பேசிய பிறகு பேசினால் போதும். இதிலே வந்து பேரவைத் தலைவர் அவர்களை குறிவைத்து, ** என்பது அவைக் குறிப்பில் ஏறாது. அதை நீக்குகிறேன். (குறுக்கீடு) இந்த மாதிரி இல்லை, இல்லை. (குறுக்கீடு) இந்த மாதிரி நோக்கத்தோடு நீங்கள் பேசக்கூடாது. ஏதோ இங்கே வந்து இந்த அவையில் வந்து . . . (குறுக்கீடு) கலாட்டா பண்ணலாம், தகராறு பண்ணலாம் என்கிற நோக்கத்தோடு சபைக்கு வரக்கூடாது. ஒரு*

*** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது*

2023 ஏப்ரல் 13] [பேரவைத் தலைவர்]

பிரச்சினைக்கு கவன ஈர்ப்பு கொடுத்திருக்கிறீர்கள். அதை எப்படி எல்லோருக்கும் எடுப்போமோ, அதேமாதிரிதான் உங்களுக்கும் எடுப்போம். அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்ததனால்தான் நேற்றைக்குத் தந்ததை நான் இன்றைக்கு எடுக்கின்றேன். அதிலே யார் கொடுத்தது? (குறுக்கீடு) இல்லை, இல்லை. எல்லோருக்கும் ஒரே priority *தான். அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த. . . (குறுக்கீடு) ஒரு நிமிடத்தில் பேசி முடியுங்கள். ஒரு நிமிடம் பேசி முடியுங்கள்.*

திரு. ஜி.கே. மணி: **

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *ஒரு நிமிடம் பேசி முடியுங்கள்.*

திரு. ஜி.கே. மணி: **

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *இல்லை. இதெல்லாம் அவைக் குறிப்பில் ஏறாது. நீங்கள் வேண்டுமென்றே சொல்கிறீர்கள். (குறுக்கீடு) இல்லை, இல்லை. (குறுக்கீடு) மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.*

முற்பகல் 11–20

***மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் திரு. ஜி.கே. மணி அவர்கள், அவர் கட்சிக் கொள்கைபற்றி கேட்பதிலே ஒன்றும் தவறும் இல்லை. அது அவர் உரிமை. ஆனால், எந்தப் பிரச்சினை குறித்து அவர் மனதிலிருந்து கேள்விகளை எழுப்பிக் கொண்டிருக்கிறாரோ, அதே பிரச்சினை குறித்துத்தான் இன்றைக்கு மானியம் வருகிறது. எனவே, அந்த மானியத்தில் முழுக்க முழுக்க நீங்கள் என்ன கருத்தைத் தெரிவிக்க வேண்டுமோ அதை முழுவதுமாகப் பேசி, இந்த அவையில் கருத்துகளைப் பதிவு செய்யலாம். அவ்வளவுதானே தவிர, அதற்காக மாண்புமிகு உறுப்பினர் திரு. மணி அவர்கள் இவ்வளவு கோபமடைந்தார்கள் என்பதே எங்களுக்கு ஆச்சர்யமாக இருக்கிறது. அவர்களுக்கு இவ்வளவு கோபம் வரவே வராது. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுடன் சண்டை போடும் செயலைச் செய்ய மாட்டார்கள்.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது

[*திரு. துரைமுருகன்*] [*2023 ஏப்ரல் 13*]

ஆகையால், அமைதியாக இருந்து, உறுப்பினர் அவர்கள் எவ்வளவு நேரம் பேச வேண்டுமோ பேசுங்கள். அதைக் கேட்டு, நாங்கள் பதில் சொல்கிறோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *நான் வாய்ப்புத் தருகிறேன். (குறுக்கீடு) திரு. வேல்முருகன், உட்காருங்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி.கே. மணி அவர்கள் பேசி முடிக்கட்டும்.*

திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *2 நிமிடங்களில் சுருக்கமாகப் பேசி முடியுங்கள்.*

திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2 நிமிடங்களில் பேசி முடித்துவிடுகிறேன். தற்போது 6 மாத காலம் நீட்டிக்கப்பட்டுள்ளது என்று சொன்னால், மே மாதம் 5 ஆம் தேதி 12 ஆம் வகுப்புத் தேர்வுக்கான* result *வருகிறது. 6 ஆம் தேதி முதல் மாணவர் சேர்க்கை நடைபெறும். அப்போது மாணவர் சேர்க்கையில் வன்னியர்களுக்கு இட ஒதுக்கீடு இல்லாமல் போய்விடும். அதற்கடுத்து,* NEET *தேர்வு தொடங்குகிறது.* NEET *தேர்வு எழுதி மருத்துவப் படிப்பிற்கும், அண்ணா பல்கலைக்கழகத்தில் பொறியியல் படிப்பிற்கும் வாய்ப்பு இல்லாமல் போய்விடும். அதனால்தான், காலக்கெடுவை 6 மாத காலம் நீட்டிக்க வேண்டாம் என்று சொல்கிறோம். இன்னொன்று, இந்த நிலைமையை நீங்கள் நினைத்துப் பார்க்க வேண்டும். தமிழ்நாட்டில் குடிசை வீடுகளில் அதிகமாக வாழ்பவர்கள்; தனிநபர் வருமானம் மிகவும் குறைவாகப் பெறுபவர்கள், ஆடு, மாடுகளுடன் படுத்துக்கொண்டிருப்பவர்கள் ஆகியோர் முன்னேறாமல் தமிழ்நாடு எப்படி முன்னேறும்? தமிழ்நாட்டில் இதுவும் ஒரு பெரிய சமுதாயம். இன்னும் ஒரு புள்ளிவிவரத்தைச் சொல்கிறேன். 2020 ஆம் ஆண்டில்* DSP-*க்களை தேர்வு செய்திருக்கிறார்கள். அதில், மிகப் பிற்படுத்தப்பட்டோருக்கான இட ஒதுக்கீட்டில் வன்னியர் சமுதாயத்தைச் சேர்ந்த ஒருவர்கூட தேர்வாகவில்லை. அதேபோன்று, துணை ஆட்சியர்களாக தேர்வானவர்களில் ஒருவர்கூட வன்னியர் இல்லை. இது எவ்வளவு பெரிய அநீதி. இது சமூக நீதி காக்கப்படுகின்ற மண்; தந்தை பெரியார் பிறந்த மண்; இவர்களுக்கு இட ஒதுக்கீட்டைக்*

கொடுத்தவர், மதிப்பிற்கும் போற்றுதலுக்கும் உரிய, எங்கள் நெஞ்சமெல்லாம் நிறைந்திருக்கின்ற முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள். அதை நாங்கள் மறுக்கவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர், உட்காருங்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்றையதினம் இதே பிரச்சினையை நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி.கே. மணி அவர்கள் இங்கே பேசியபோது, "நாளை அந்தத் துறையின் மானியக் கோரிக்கை இருக்கிறது, அதிலே விளக்கமாகப் பேசுங்கள்; நாளையதினம் உங்களுக்கு அதற்கான வாய்ப்புத் தருகிறேன்" என்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் சொல்லியும், மீண்டும் அந்தப் பிரச்சினையை மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி.கே. மணி அவர்கள் இப்போது எழுப்பியிருக்கிறார்கள். அந்தத் துறையினுடைய மானியக் கோரிக்கை இன்று இருக்கிறது. இருந்தாலும் அந்தப் பிரச்சினை குறித்து 2 நிமிடங்களில் பேசி முடியுங்கள் என்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் உத்தரவிட்டும், தொடர்ந்து மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி.கே. மணி அவர்கள் அதையே பேசிக்கொண்டிருக்கிறார்கள். இது தொடர்பாக நான் ஒன்றை இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் அவர்களே சொன்னார்கள்; தலைவர் கலைஞர் அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது 69 சதவீத இட ஒதுக்கீட்டைக் கொண்டு வந்து தந்தார்கள் என்று அவரே பெருமையோடு தெரிவித்து, நன்றி சொன்னார்.

ஆகவே, திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி இருந்தபோது, தலைவர் கலைஞர் அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது, அதை முறையாகச் செய்து, அது வெற்றியடையக்கூடிய வகையில் அதை நிறைவேற்றித் தந்தார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) ஆனால், மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி.கே. மணி அவர்கள் கேட்கின்ற 10.5 சதவீத உள் ஒதுக்கீடு என்பது எந்த நிலையில் கொண்டுவரப்பட்டது; அது முறையாக நிறைவேறுமா? அது முறையாக வெற்றிபெறுமா என்றெல்லாம் ஆராயாமல், எந்தச் சூழ்நிலையில், எப்படிப்பட்ட நிலையில், அது கொண்டுவரப்பட்டது என்பது எல்லோருக்கும் தெரியும். தேர்தல் தேதி அறிவிக்கப்பட

[திரு. மு.க. ஸ்டாலின்] [2023 ஏப்ரல் 13

இருந்த அதே நாளில்தான் இந்த அவையில் அதைக் கொண்டு வந்து, அவசர கோலத்தில் அள்ளித் தெளித்த காரணத்தினால்தான், அது குறித்து நீதிமன்றத்தில் சிலரால் வழக்கு தொடர வேண்டிய ஒரு சூழ்நிலை ஏற்பட்டது. ஆனால், அந்தச் சூழ்நிலையிலும், எங்களது அரசு ஆட்சிக்கு வந்தவுடனேயே, அதனை அந்த ஆட்சி கொண்டுவந்தது, இந்த ஆட்சி கொண்டுவந்தது என்றெல்லாம் பார்க்காமல், (மேசையைத் தட்டும் ஒலி) 10.5 சதவீத உள் ஒதுக்கீடு என்பது மிகவும் பிற்படுத்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்த வன்னியர் இன மக்களுக்கு பயனுள்ளதாக இருக்கும் என்று கருதி, நாங்களும் அதை உடனடியாக அமல்படுத்துகிற முயற்சியில் ஈடுபட்டோம் என்பது மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கும் தெரியும், இந்த நாட்டுக்கும் தெரியும், அந்தச் சமுதாயத்தைச் சேர்ந்த அத்தனை பேருக்கும் தெரியும். ஆகவே, உயர் நீதிமன்ற வழக்கில் வந்த தீர்ப்பின் காரணமாக, மேல்முறையீட்டிற்கு உச்ச நீதிமன்றம் வரை சென்றோம். உறுப்பினர் அவர்களுக்கும் தெரியும். மாண்புமிகு உறுப்பினர் அவர்களே, பல முறை என்னை நேரில் சந்தித்து, மிகச் சிறப்பாக இந்த அரசு இதில் நடவடிக்கை எடுத்திருக்கிறது; இன்னோர் ஆட்சி இந்தச் சட்டத்தைக் கொண்டு வந்திருந்தாலும், நீங்கள் அதைப்பற்றிக் கவலைப்படாமல் அதை நிறைவேற்றியிருக்கிறீர்கள். கலைஞர் அவர்கள் எப்படியெல்லாம் எங்களுக்குத் துணையாக இருந்தார்களோ, அப்படி நீங்கள் இருந்து செய்திருக்கிறீர்கள் என்று உறுப்பினர் அவர்களே பாராட்டியிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இந்தச் சூழ்நிலையில் உச்ச நீதிமன்றமும் அதற்குத் தடை விதித்து, சில directions கொடுத்திருக்கிறது. அந்த அடிப்படையில்தான் ஆணையம் அமைக்கப்பட்டிருக்கிறது. அந்த ஆணையமும் அதற்கான பணிகளில் ஈடுபட்டிருக்கிறது. உறுப்பினர் அவர்கள் சொன்னதுபோன்று 3 மாதத்திற்குள் அந்த ஆணையம் தனது பணிகளை நிறைவேற்றவில்லை என்ற காரணத்தினால்தான், கால நீட்டிப்பு வழங்கியிருக்கிறோம். அதுவும், நாங்களாகவே காலத்தை நீட்டித்துத் தரவில்லை. அந்த ஆணையம் நீட்டிப்பு கேட்டு, அதனடிப்படையில்தான் கால நீட்டிப்பு வழங்கப்பட்டிருக்கிறது. எனவே, இந்த விளக்கமே போதுமானதாக இருக்கும் என்று நான் கருதுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: போதும். மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லோரும். . . (குறுக்கீடு) நான் சொல்லிவிடுகிறேன். இதே பொருள் குறித்து மாண்புமிகு உறுப்பினர்கள்

திரு. கு. செல்வபெருந்தகை, திரு. தி. வேல்முருகன் மற்றும் திரு. ஈ.ஆர். ஈஸ்வரன் ஆகியோர் அறிவிப்பு தந்திருக்கின்றீர்கள். எல்லோருக்கும் நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் அளித்த பதில் நிறைவாக இருக்கும் என்று கருதி, அடுத்த நிகழ்வுக்குச் செல்கிறேன். (குறுக்கீடு) ஒரு வார்த்தையில் அரசின் கவனத்தை ஈர்த்து அமருங்கள். (குறுக்கீடு) ஒரு வார்த்தையில் மட்டும் சொல்லுங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் பதிலுக்குப் பிறகு. . . (குறுக்கீடு) அதை நான் பதிவு செய்தாகிவிட்டது. போதும். (குறுக்கீடு) தயவுசெய்து எல்லோருமே உட்காருங்கள். நான் சொல்கிறேன். (குறுக்கீடு) திரு. வேல்முருகன், தயவுசெய்து உட்காருங்கள். (குறுக்கீடு) போதும். (குறுக்கீடு) சரி, ஒரு நிமிடத்தில் நன்றி சொல்லி முடியுங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திரு. வேல்முருகன். (குறுக்கீடு) திரு. ஜி.கே. மணி அவர்கள்.

முற்பகல் 11–25

திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் நடவடிக்கையை நாங்கள் வரவேற்கிறோம். இன்றுவரையில் 2 ஆண்டுகால ஆட்சியில் எங்கள் மருத்துவர் அய்யா அவர்கள் ஒருநாள்கூட மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைக் குறை சொன்னதேயில்லை. அறிக்கை வெளியிட்டதில்லை. பாராட்டிக்கொண்டுதான் இருக்கிறோம். இதில் மாற்றுக் கருத்தேயில்லை. நாங்கள் கேட்பதெல்லாம் கால அவகாசத்தை நீட்டித்துக்கொண்டே போனால், வாய்ப்பு இல்லாமல் போய்விடுமே! ஒரு மாதத்திற்குள் விரைந்து முடிக்கவேண்டுமென்றுதான் அன்போடு கேட்டுக்கொள்கிறோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இல்லை. (குறுக்கீடு) மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பதில் சொல்லிவிட்டார்கள். (குறுக்கீடு)

திரு. ஜி.கே. மணி: ஒரு மாத காலம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. தி. வேல்முருகன், ஒரேயொரு வார்த்தையில் பேசி முடியுங்கள். (குறுக்கீடு) நன்றி. (குறுக்கீடு) உங்களுக்கு நல்ல பதில் கிடைத்துள்ளது. (குறுக்கீடு) நன்றி.

திரு. தி. வேல்முருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு மறைந்த முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள்தான் அடித்தட்டு சாதி மக்களை அழைத்துப்பேசி

வன்னியர்களுக்கான 20% இடஒதுக்கீட்டு உரிமையை வழங்கினார். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இருங்கள், உட்காருங்கள், தருகிறேன். (குறுக்கீடு) இருங்கள், உட்காருங்கள், அவர் முடிக்கட்டும், தருகிறேன்.

திரு. தி. வேல்முருகன்: வன்னியர் சமூகம், கல்வி, வேலைவாய்ப்பில் தனக்குரிய பங்களிப்பை ஓரளவு பெற்று இன்றைக்கு பல்வேறு துறைகளில் கோலோச்சுவதற்கான வாய்ப்பைத் தந்தது திராவிட முன்னேற்றக் கழகம். அதற்காக இந்த நேரத்தில் நான் நன்றி கூறுகின்றேன். அதனடிப்படையில்தான், அதன் தொடர்ச்சியாகத்தான் மாண்புமிகு தளபதி அவர்கள் நம்முடைய சமூக நீதி அரசை வழிநடத்திக் கொண்டிருக்கிறார். உச்ச நீதிமன்றம் அளித்த தீர்ப்பில், 'நீங்கள் தரவுகள் மற்றும் புள்ளிவிவரங்களின் அடிப்படையில் இந்தச் சட்டத்தை மீண்டும் சட்டமன்றத்தில் நிறைவேற்றிக் கொண்டுவந்தால், பரிசீலிக்கிறோம்' என்கின்ற ஒரு வாசகம் இடம் பெற்றிருக்கிறது. அந்த அடிப்படையில்தான் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களிடத்தில் கடந்த கூட்டத்தொடரின்போது சொன்னோம். இந்த 10.5 சதவிகிதத்தை அந்த சமூகத்தில் பிறந்த மாணவர்கள், குறிப்பாக உயர் கல்வி, மருத்துவம், பொறியியல், அதுபோன்று பட்ட மேற்படிப்பு PG போன்ற படிப்புகளில் சேருவதற்கும், வேலைவாய்ப்புகளில் சேருவதற்கும் அளிக்க வேண்டும். கடந்த 3 ஆண்டுகளாக இதில் குழப்பங்கள் நிலவுகின்றன. அவர்களுக்குரிய பிரதிநிதித்துவத்தைப் பொறுத்தவரையில், ஒட்டுமொத்த 20 சதவிகித ஒதுக்கீட்டில் செல்வதா, 10.5 சதவிகித உள் ஒதுக்கீட்டில் செல்வதா என்கின்ற குழப்பங்கள் ஏற்பட்டு அந்த மக்களின் கல்வி, வேலைவாய்ப்புரிமை பறிக்கப்பட்ட காரணத்தினால்தான் மீண்டும் 6 மாத காலம் ஆணையத்திற்கு நீட்டிப்புத் தரப்பட்டுள்ளது. அந்த மாணவர்களின் எதிர்காலம் பாழாகிவிடக்கூடாது என்பதற்காக, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், போர்க்கால அடிப்படையில் நடவடிக்கை எடுத்துள்ளார்கள். அந்த மக்களுக்கான 10.5 சதவிகித உள் ஒதுக்கீட்டு உரிமையை நிலைநாட்டித் தந்து, தமிழ்நாட்டில் மீண்டும் முத்தமிழறிஞர் கலைஞரின் அரசுதான், சமூக நீதி அரசுதான் நடைபெறுகிறது என்பதை உறுதிசெய்துள்ளார்கள். (மணியடிக்கப்பெற்றது) ஒரு நிமிடம் போதும். ஆதலால், திராவிட முன்னேற்றக் கழகம்

2023 ஏப்ரல் 13] [திரு. தி. வேல்முருகன்]

என்கின்ற அசைக்க முடியாத மாபெரும் இயக்கம், மீண்டும் மீண்டும் ஆட்சி அமைப்பதற்கு வடதமிழ்நாட்டில் வன்னியர்கள் உங்களை நம்பியிருக்கிறார்கள். நான் இருந்த கட்சிகளும், இருக்கின்ற கட்சியையும் தொடங்குவதற்கு முன்பாக ஒட்டுமொத்த வன்னியர் பேரினம் திராவிட முன்னேற்றக் கழகத்தை ஆதரித்திருக்கிறது. அந்தச் சமூகம் கல்வி, வேலைவாய்ப்பு, இடஒதுக்கீட்டு உரிமையில் இன்றைக்கு தள்ளாடிக் கொண்டிருக்கிறது. அந்தச் சமூகத்தின் நியாயமான உரிமையை மாண்புமிகு தளபதி அவர்கள் மீண்டும் நிலைநிறுத்தித் தர வேண்டுமென்கின்ற வேண்டுகோளை வைத்து, அரசின் கவனத்தை ஈர்த்து அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஈ.ஆர். ஈஸ்வரன் அவர்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு உறுப்பினர் திரு. ஈ.ஆர். ஈஸ்வரன் அவர்கள்.*

திரு. ஈ.ஆர். ஈஸ்வரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தியாவிலேயே. . . (குறுக்கீடுகள்)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *திரு. வேல்முருகன், என்னைப் பார்த்து. . . (குறுக்கீடு) திரு. வேல்முருகன், உட்காருங்கள். (குறுக்கீடு) திரு. வேல்முருகன், உட்காருங்கள். திரு. ஈ.ஆர். ஈஸ்வரன் அவர்கள்.*

திரு. ஈ.ஆர். ஈஸ்வரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தியாவில் எங்குமேயில்லாத. . . (குறுக்கீடு)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *உட்காருங்கள், பேசட்டும். (குறுக்கீடு) மாண்புமிகு வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த இடஒதுக்கீட்டைப் பொறுத்தவரையில் அதன் உரிமைக்கு ** (மேசையைத் தட்டும் ஒலி) ஏனென்றால் போராட்டம் நடத்தியவர்கள் இவர்கள். போராட்டம் நடத்தியவர்கள் பாட்டாளி மக்கள் கட்சியினர். ஆனால், ***

** *மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது*

[திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்] [*2023 ஏப்ரல் 13*

*** மொழிப்போர் தியாகி என்ற அந்தஸ்தைக் கொடுத்தது டாக்டர் கலைஞர் அவர்கள். அவர்களுக்கு இடைக்கால நிவாரணம். . . (குறுக்கீடு)*

(அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்றனர்.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. துரைமுருகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சமூக நீதியைக் காப்பதில். . . (குறுக்கீடு)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *உட்காருங்கள். மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள் பேசியதற்குப் பிறகு வாய்ப்புத் தருகிறேன். (குறுக்கீடு) உங்களுக்குப் பேச வாய்ப்புத் தருகிறேன். உட்காருங்கள்.*

முற்பகல் 11–30

மாண்புமிகு திரு. துரைமுருகன்: *சமூக நீதியைக் காப்பதில் எல்லா கட்சிகளுக்கும் உணர்வு உண்டு என்பதை நான் மறுக்கவில்லை. சமூக நீதியைக் காப்பதில் எல்லா கட்சிகளுக்கும் ஓரளவுக்கு உணர்வு உண்டு. அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் 10.5 விழுக்காடு உள் ஒதுக்கீட்டை தேர்தல் காலத்தில் அவசரமாக வெளியிட்டுவிட்டுப் போய்விட்டது. அதற்காக நாங்கள் ஆட்சிக்கு வந்தபிறகு, இது அ.இ.அ.தி.மு.க. கொண்டு வந்தது, அவசரத்தில் அள்ளித் தெளித்தது என்று ஒதுக்கவில்லை. யார் செய்திருந்தாலும் அது மக்களுக்குப் போய் சேரவேண்டும் என்று மாண்புமிகு முதல்வர் அவர்கள் அதை implement செய்து, உடனடியாக அதை வைத்தே கல்லூரியில் இடங்களைக் கொடுத்தோம். ஆனால், அதற்குப்பின் அதைச் சரியாகச் செய்யவில்லை என்று வழக்குத் தொடுத்தார்கள். மாணவர்கள் பாதி பேர் மேற்படிப்புகளில் சேர்ந்தும், சேராமலும் பல வழிகளைத் தேடியும் சென்றுவிட்டார்கள். அதைத்தான் மாண்புமிகு உறுப்பினர் திரு. வேல்முருகன் அவர்கள், மாணவர் சேர்க்கை, இட ஒதுக்கீடு பிரச்சினை குறித்து சொன்னார்கள். அது, அ.இ.அ.தி.மு.க. அரசு கொண்டு வந்தது என்றும் பாராமல், அதனடிப்படையிலேயே, உடனேயே அந்த ஆண்டிலேயே மாணவர்*

*** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.*

2023 ஏப்ரல் 13] [திரு. துரைமுருகன்]

சேர்க்கையை நடத்தினோம். ஆனால், Court-க்குச் சென்று, அதற்கு எதிராக ஆணை வந்துவிட்டது. பின்னர், வழக்கு Supreme Court-க்குச் சென்றது. அங்கேயும் நாங்கள் பெரிய பெரிய வழக்கறிஞர்களை வைத்து வாதாடினோம். அங்கும் தடையாணை விதித்து, சில directions கொடுக்கப்பட்டிருக்கின்றன. தற்போது என்ன நிலைமை என்றால், அவர்கள் சில வழிமுறைகளைச் சொல்லியிருக்கிறார்கள். அதைச் செய்ய வேண்டுமென்பதற்காக ஓய்வுபெற்ற நீதியரசர் திரு. வி. பாரதிதாசன் அவர்கள் தலைமையில் ஓர் ஆணையம் அமைக்கப்பட்டிருக்கிறது. அவர் ஒரு நல்ல Judge. நாங்கள் ஆறு மாதங்கள் கால அவகாசம் கொடுத்திருக்கிறோம். ஏனென்றால், மறுபடியும் அவசர கதியில் எதையும் செய்துவிடாமல், தெளிவாகச் செய்ய வேண்டுமென்பதற்காகத்தான். அதற்கு நாங்கள் 6 மாதங்கள் அவகாசம் கொடுத்திருந்தாலும், 4 மாதங்களிலேயேகூட அவர்கள் முடித்துவிடலாம். 4, 5 மாதங்களிலேயே வந்துவிடலாம். ஆகவே, அப்படி வருமானால், உங்களைவிட அதிகமான மகிழ்ச்சியடைந்து அந்தத் திட்டத்தை நிறைவேற்றுகிறவர் மாண்புமிகு முதல்வராகத்தான் இருப்பார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) ஆகவே, இது அனைவருக்கும் சம்பந்தமான பிரச்சினை. ஒவ்வொருவருக்கும் உள்ள பிரச்சினை. இதில் இந்தக் கட்சி, அந்தக் கட்சி என்றெல்லாம் பாகுபடுத்திப் பார்க்கத் தேவையில்லை. ஆகவே, இதைச் சமுதாயப் பிரச்சினையாக எடுத்துக்கொண்டு, இத்துடன் இந்தப் பிரச்சினையை நிறைவு செய்து, அடுத்ததற்குச் செல்லலாம். (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த பொருள் குறித்த கவன ஈர்ப்பு. மாண்புமிகு உறுப்பினர்கள். . . (குறுக்கீடுகள்) எந்த வார்த்தை என்று சொல்லுங்கள். (குறுக்கீடு)

மாண்புமிகு திரு. துரைமுருகன்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் அவர்கள் தெரிவித்த அந்தக் கருத்தினை நீக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அது அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. (குறுக்கீடுகள்) போதும், போதும். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும், மாண்புமிகு அவை முன்னவர் அவர்களும், அதற்குரிய பதிலைச் சொல்லிவிட்டார்கள். உங்கள் பெயர்களையெல்லாம் பதிவு செய்துவிட்டேன். (குறுக்கீடுகள்) தயவுசெய்து உட்காருங்கள். மாண்புமிகு உறுப்பினர்

[பேரவைத் தலைவர்] [2023 ஏப்ரல் 13

திரு. செல்வபெருந்தகை, பதிவு செய்துவிட்டேன். (குறுக்கீடுகள்) உங்கள் பெயர்களையெல்லாம் பதிவு செய்துவிட்டேன். (குறுக்கீடுகள்) இத்துடன் இதை முடித்துவிடுங்கள் என்று சொல்லிவிட்டார்கள். (குறுக்கீடுகள்) முதலில் எல்லோரும் உட்காருங்கள். எல்லோருமே உட்காருங்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.பி. முனுசாமி, நீங்கள் உட்காருங்கள். நான் வாய்ப்புத் தருகிறேன். எல்லோரும் உட்காருங்கள் என்று சொல்கிறேன். (குறுக்கீடுகள்) மாண்புமிகு உறுப்பினர் திரு. கோவிந்தசாமி, நீங்கள் என்னைப் பார்த்துப் பேச வேண்டும். தேவையில்லாமல் பிரச்சினையை வளர்க்க வேண்டிய அவசியமில்லை. (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திரு. நயினார் நாகேந்திரன், உட்காருங்கள். நான் சொல்கிறேன். (குறுக்கீடுகள்) இது முடியட்டும். மாண்புமிகு உறுப்பினர் திரு. செல்வபெருந்தகை, இதை முடித்துவிட்டு, நான் உங்களுக்கு வாய்ப்புத் தருகிறேன். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.பி. முனுசாமி அவர்கள், நீங்கள் சொல்லுங்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.பி. முனுசாமி அவர்கள் சொல்லுங்கள். நீங்கள் notice தரவில்லை. மாண்புமிகு வேளாண்மை—உழவர் நலத் துறை அமைச்சர் அவர்கள் சொன்னதற்கு நீங்கள் ஒரு objection தெரிவித்தீர்கள். அது அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்பட்டுவிட்டது. நன்றி சொல்லிவிட்டு, நீங்கள் உட்கார வேண்டும்.

திரு. கே.பி. முனுசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது ஓர் உணர்வுபூர்வமான பிரச்சினை. இத்தகைய உணர்வுபூர்வமான பிரச்சினையை இந்த மாண்புமிகு அவையில் பொறுமையாகக் கையாள வேண்டும். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், தமது கருத்தை மிக அழகாக எடுத்து வைத்திருக்கிறார்கள். மாண்புமிகு அவை முன்னவர் அவர்களும் அதற்கேற்றாற்போல் கூறியிருக்கிறார். ஆனால், அதற்கு முன்பாக, நம்முடைய மாண்புமிகு வேளாண்மை—உழவர் நலத் துறை அமைச்சர் அவர்கள் சொன்ன கருத்து. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அதைத்தான் நீக்கிவிட்டோமே!

திரு. கே.பி. முனுசாமி: அதேபோல, மாண்புமிகு உறுப்பினர் திரு. வேல்முருகன் அவர்கள் சொன்ன கருத்து ஆகிய இரண்டையும் அவைக் குறிப்பிலிருந்து நீக்க வேண்டுமென்று நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வேளாண்மை—உழவர் நலத் துறை அமைச்சர் திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்

அவர்கள் சொன்ன கருத்தை நீக்கிவிட்டோம். (குறுக்கீடு) உட்காருங்கள் தம்பி. மாண்புமிகு உறுப்பினர் திரு. வேல்முருகன், உட்காருங்கள். உட்காருங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.பி. முனுசாமி அவர்கள் சொல்வதுபோல, இங்கே நம்முடைய மாண்புமிகு வேளாண்மை—உழவர் நலத் துறை அமைச்சர் திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் அவர்கள் சொன்ன கருத்தில், சில தகாத வார்த்தைகளை, தேவையில்லாத வார்த்தைகளைச் சொல்லியிருந்தார்கள். அதை நீக்கிவிடுங்கள் என்று மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள் கோரியிருந்தார்கள். அவை நீக்கப்பட்டுவிட்டன. ஆனால், மாண்புமிகு உறுப்பினர் திரு. வேல்முருகன் அவர்கள், யாரையும் குறிப்பிட்டோ, எந்தக் கட்சியையும் குறிப்பிட்டோ சொல்லவில்லை. (குறுக்கீடுகள்) அப்படிச் சொல்லியிருந்தால் அதைத் தாராளமாக நீக்கலாம். அப்படி எதுவும் சொன்னதாக எங்களுக்குத் தெரியவில்லை. (குறுக்கீடுகள்)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *போதும், போதும். எல்லோருக்குமே இந்தப் பதில் போதும். (குறுக்கீடுகள்) இதற்குமேல் இதை நான் அனுமதிக்க முடியாது. (குறுக்கீடு) மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எந்தக் கட்சியையும் குறிப்பிட்டுச் சொல்லவில்லை. நீங்கள் வேண்டுமானால் அவைக் குறிப்பினை வாங்கிப் பாருங்கள். (குறுக்கீடுகள்)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர், கையை நீட்டியெல்லாம் பேசக் கூடாது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நிற்கும்போது, நீங்கள் அனைவரும் உட்கார வேண்டும். உட்காருங்கள். (குறுக்கீடுகள்) முதலில் உட்காருங்கள். நீங்கள் முடித்துவிட்டீர்களா, இல்லையா? (குறுக்கீடுகள்) நீங்கள் கேட்டீர்கள். பதில் சொல்லிவிட்டார்கள். (குறுக்கீடு)*

திரு. கே.பி. முனுசாமி: *மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பதில் சொல்லிவிட்டார்கள். அதன் தொடர்ச்சிதான் இது. மாண்புமிகு வேளாண்மை—உழவர் நலத் துறை அமைச்சர் அவர்கள் சொன்ன கருத்துகள் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்பட்டுவிட்டன.*

[திரு. கே.பி. முனுசாமி] [2023 ஏப்ரல் 13

அதேபோல மாண்புமிகு உறுப்பினர் திரு. வேல்முருகன் அவர்கள், வன்னியர் சமூகம் முழுவதுமே ஒரு இயக்கத்தில்தான் இருந்து கொண்டிருக்கிறது என்று சொல்வது ஏற்றுக்கொள்ள முடியாத ஒரு கருத்து.

முற்பகல் 11–35

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அது அவருடைய கருத்து. (குறுக்கீடு)*

திரு. கே.பி. முனுசாமி: *அது அவருடைய கருத்து அல்ல. அது அவருடைய கருத்து அல்ல. (குறுக்கீடு)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *இல்லை. நீங்கள் உங்கள் கருத்தைச் சொல்லுங்கள். அதை நீக்க முடியாது. (குறுக்கீடு) நீங்கள், உங்களுக்கு இருக்கிறது என்று சொன்னாலும் அதில் மாறுபட்ட கருத்து இல்லை. நீங்கள் எழுந்து அந்தச் சமூகம் எங்கள் பின்னால் தான் நிற்கிறது என்று சொன்னாலும் நாங்கள் அதை அவைக் குறிப்பிலிருந்து நீக்க மாட்டோம். எல்லோருக்கும் அந்த உரிமை இருக்கிறது. (குறுக்கீடுகள்) எல்லோருமே உட்காருங்கள். இத்துடன் முடிந்துவிட்டது. அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த. . . (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. செல்வபெருந்தகை, ஒரு நிமிடத்தில் சொல்லுங்கள். (குறுக்கீடுகள்)*

திரு. கு. செல்வபெருந்தகை: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரே ஒரு பதிவுதான். 1989 ஆம் ஆண்டு பாட்டாளி மக்கள் கட்சியினுடைய நிறுவனர் மருத்துவர் அய்யா அவர்கள் முத்தமிழறிஞர் கலைஞரை வைத்து இட ஒதுக்கீட்டிற்காக. . . (குறுக்கீடுகள்)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *எல்லோரும் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) எல்லோரும் உட்காருங்கள்.*

திரு. கு. செல்வபெருந்தகை: *ஒரு மிகப் பெரிய மகாராஜா நாற்காலியைச் செய்து தமிழ்நாட்டிற்கு நிரந்தர முதலமைச்சர் நீங்கள்தான், முதலமைச்சர் இட ஒதுக்கீட்டின் கதாநாயகன் என்று பாட்டாளி மக்கள் கட்சியினுடைய நிறுவனர் சொன்னார். அது மட்டும் கிடையாது. அவர் பேசும்போது சொன்னார்; வன்னியர் இன மக்களை தூக்கிப் பிடித்து இட ஒதுக்கீடு கொடுத்தவர்*

2023 ஏப்ரல் 13] [திரு. கு. செல்வபெருந்தகை]

*நீங்கள். ஆனால், ** யாரென்று இந்த நாட்டு மக்களுக்குத் தெரியும் என்று சொன்னது மருத்துவர் அய்யா அவர்கள். (குறுக்கீடுகள்) இது மருத்துவர் அய்யா சொன்னது. (குறுக்கீடுகள்) மருத்துவர் அய்யா பல இடங்களில் இதைக் குறிப்பிட்டிருக்கிறார். ஆகவே. . . (குறுக்கீடுகள்)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஈ.ஆர். ஈஸ்வரன் அவர்கள்.*

திரு. ஈ.ஆர். ஈஸ்வரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்திய நாட்டிலே மிகவும் பிற்படுத்தப்பட்ட பட்டியல் என்ற ஒன்று எங்குமே கிடையாது. தமிழகத்திலே அதை உருவாக்கி 108 சாதிகளுக்கு 20 சதவிகித இட ஒதுக்கீட்டை. . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. செல்வபெருந்தகை, உட்காருங்கள். நீங்கள் பேசியாகிவிட்டது. உட்காருங்கள், போதும்.*

திரு. ஈ.ஆர். ஈஸ்வரன்: *முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் கொண்டு வந்த எந்த ஓர் இட ஒதுக்கீடும் நீதிமன்றத்திலே தோற்கவில்லை. கொங்கு வேளாளர் கவுண்டர்களை பிற்படுத்தப்பட்டோர் பட்டியலிலே சேர்த்தது முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அருந்ததியர்களுக்கு உள் ஒதுக்கீடு கொடுத்தவர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) சிறுபான்மையினருக்கு உள் ஒதுக்கீடு கொடுத்தவர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அத்தனை இட ஒதுக்கீடுகளும் நீதிமன்றத்திலே தோற்கவில்லை. ஆனால் இன்றைக்கு. . . (குறுக்கீடுகள்)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அ.இ.அ.தி.மு.க. உறுப்பினர்கள் அனைவரும் உட்காருங்கள். நீங்கள் யாரும் கவன ஈர்ப்பு கொடுக்கவில்லை. (குறுக்கீடுகள்) உட்காருங்கள். நீங்கள் சொன்னதற்காக உங்களுக்கு நான் வாய்ப்புத் தந்திருக்கிறேன். (குறுக்கீடுகள்) நீங்கள், முன் வரிசையில் யாராவது ஏதாவது கருத்தைச் சொல்ல வேண்டுமென்றால் சொல்லுங்கள். மற்றவர்களெல்லாம் உட்காருங்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. ஈஸ்வரன்,*

*** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது*

போதும். மாண்புமிகு உறுப்பினர் திரு. S.S. பாலாஜி அவர்கள். (குறுக்கீடு) நான் வாய்ப்புத் தருகிறேன். மாண்புமிகு உறுப்பினர் திரு. S.S. பாலாஜி அவர்கள்.

திரு. S.S. பாலாஜி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு மிகவும் பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் வன்னியர் சமூகத்திற்கு உள் ஒதுக்கீடு என்கின்ற ஒரு நிலை வந்திருக்கிறதென்று சொன்னால். . . (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: எல்லோரும் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உங்களுக்கு வாய்ப்புத் தருகிறேன்.

திரு. S.S. பாலாஜி: மிகவும் பிற்படுத்தப்பட்டோர் என்கின்ற அந்த நிலையை ஏற்படுத்திக் கொடுத்தவர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இந்த உள் ஒதுக்கீடு என்று சொல்லக்கூடிய Horizontal reservation என்பதைத் தமிழ்நாட்டில் பிற்படுத்தப்பட்டோரில் சிறுபான்மையினருக்கும், அதேபோன்று ஒடுக்கப்பட்டோரில் அருந்ததியர் சமூகத்திற்கும் ஏற்படுத்தித் தந்து, உரிய சட்டப் பாதுகாப்பையும் தரக்கூடிய வழிமுறைகளையும் அறிந்து, அதைச் செய்தவர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இன்றைக்கு, ஒட்டுமொத்தமாக 20 சதவிகிதம் மிகவும் பிற்படுத்தப்பட்டோருக்கு இருப்பது வன்னியர் சமூகத்திற்கு நல்லதா அல்லது 10.5 சதவிகிதம் இருப்பது நல்லதா என்கின்ற ஒரு விவாதமும் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது என்பதை உங்கள் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். ஒடுக்கப்பட்ட மக்களுக்கு, பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு காவல் அரணாக இருக்கக்கூடிய நம்முடைய மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் இதிலே நல்ல முடிவெடுப்பார் என்கின்ற நம்பிக்கையோடு அவருடைய கவனத்தை ஈர்த்து அமர்கிறேன். நன்றி.

4. இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் 11–4–2023 அன்று ஒன்றிய உள் துறை அமைச்சர் மகன் பெயரை குறிப்பிட்டது, நீக்கக் கோருதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. நயினார் நாகேந்திரன், நீங்கள் ஏதாவது பேசுகிறீர்களா?

திரு. நயினார் நாகேந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. . . (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: என்ன கருத்துக்கு, இதற்கு related ஆக ஏதாவது பேசப் போகிறீர்களா?

திரு. நயினார் நாகேந்திரன்: ஒரு கருத்து. மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள் நேற்று முன்தினம். . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இல்லை. (குறுக்கீடு) நீங்கள் என்னிடம் ஒரு தபால் தந்திருக்கிறீர்கள். அது என்னிடம் பரிசீலனையில் இருக்கிறது. (குறுக்கீடு) அவர்தான் அதை நடத்தினார். அவர் அதைக் குறிப்பிட்டதில் தவறு இல்லை. உட்காருங்கள். (குறுக்கீடு) நீங்கள் உட்காருங்கள். அது முடிந்துவிட்டது. மாண்புமிகு உறுப்பினர் திரு. நயினார் நாகேந்திரன், சொல்லுங்கள்.

திரு. நயினார் நாகேந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்று முன்தினம் மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள் பேசுகின்றபோது, அவருடைய உரையாடலிலே மத்திய உள் துறை அமைச்சர் அவர்களுடைய பெயரைச் சொல்லி IPL Cricket-க்கு ticket உள்ளதைப் பொறுத்தவரையில், அவர்களும், அவர்களுடைய மகனும் வைத்திருக்கிறார்கள் என்று சொன்னது அவைக் குறிப்பில் இருக்கிறது. (குறுக்கீடுகள்) இல்லை, இல்லை. நான் குற்றச்சாட்டாகச் சொல்லவில்லை. நாம் எல்லோரையும் மாண்புமிகு உறுப்பினர் அல்லது திரு. என்ற அடைமொழி வைத்து எல்லோரும் சொல்கிறோம். ஆனால், அவர் பேசுகின்ற போது அமித்ஷா மகன் என்று இருக்கிறது. அதை அவைக்குறிப்பிலிருந்து நீக்க வேண்டும். . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இல்லை. அதில் திரு. என்றுதான் இருக்கிறது.

முற்பகல் 11–40

திரு. நயினார் நாகேந்திரன்: நானும் அதைத் தவறாகச் சொல்லவில்லை; குறையாகவும், குற்றமாகவும் சொல்லவில்லை. அது அவைக் குறிப்பில் இருக்க வேண்டாம் என்பது எங்களுடைய கருத்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.*

***மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதிலே என்ன தவறு இருக்கிறது? (மேசையைத் தட்டும் ஒலி) 'திரு.' என்று சொல்லித்தான் பேசியிருக்கிறார். நீங்கள் அவைக் குறிப்பை எடுத்துத் தெளிவாகப் பாருங்கள். அதில் எதுவும் விமர்சனம் செய்தோ அல்லது கேலி செய்தோ அல்லது கிண்டல் செய்தோ எந்த வார்த்தையும் கிடையாது. அவருடைய மகன் என்று மரியாதை கொடுத்துதான் பேசியிருக்கிறார். (மேசையைத் தட்டும் ஒலி) அதில் ஏதாவது தவறு இருந்தால் சொல்லுங்கள்; நீங்கள் சொல்வதற்கு முன்பாக நானே அதை அவைக் குறிப்பிலிருந்து எடுப்பதற்குப் பரிந்துரை செய்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) தவறு இருந்தால் சொல்லுங்கள்.*

திரு. நயினார் நாகேந்திரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *போதுமே! (குறுக்கீடு)*

திரு. நயினார் நாகேந்திரன்: *நான் தவறாகவோ, குறையாகவோ சொல்லவில்லை. அது அவைக் குறிப்பில் இடம் பெற வேண்டாம் என்பதுதான் பாரதிய ஜனதா கட்சியினரின் கருத்து. (குறுக்கீடுகள்)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்: *அது என்ன தகாத வார்த்தையா? அவர் சொன்னது என்ன தகாத வார்த்தையா? (மேசையைத் தட்டும் ஒலி) தகாத வார்த்தையாக இருந்தால் அவைக் குறிப்பிலிருந்து எடுக்க வேண்டும். அவர் பெயரை, பெயர் என்று சொன்னது தவறா? அதாவது, 'திரு.' என்று சொல்லித்தான் அழைத்திருக்கிறார். அதில் என்ன தவறு இருக்கிறது? தவறு இருந்தால் சொல்லுங்கள், அதை எடுப்பதற்கு நானே தயாராக இருக்கிறேன். (குறுக்கீடு)*

திரு. நயினார் நாகேந்திரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. . .*

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அனுமதியில்லை. (குறுக்கீடு) போதும். அவர் உள் துறை அமைச்சராக இருக்கிறார்; அதைத்தான் சொல்லியிருக்கிறார். (குறுக்கீடு) அவருடைய மகன் என்று சொல்வதில் ஒன்றும் தவறில்லை. (குறுக்கீடு) தயவுசெய்து உட்காருங்கள், நிறைய அலுவல்கள் இருக்கின்றன. (குறுக்கீடு) திரு. செ. ராஜேஷ் குமார், நான் உங்களுக்கு பின்னர் வாய்ப்பு தருகிறேன், உட்காருங்கள். அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வுகள் குறித்து. . . (குறுக்கீடு) உட்காருங்கள். (குறுக்கீடு) திரு. கே.பி. முனுசாமி, ஒரு நிமிடத்தில் பேசி முடியுங்கள். (குறுக்கீடு) எல்லோரும் உட்காருங்கள். (குறுக்கீடு) உட்காருங்கள்.*

3. சிறப்புக் கவன ஈர்ப்பு—*தொடர்ச்சி*

மிகவும் பிற்படுத்தப்பட்டோருக்கான இடஒதுக்கீட்டில், வன்னியர்களுக்கு 10.5 சதவிகித உள் ஒதுக்கீடு, பிற்படுத்தப்பட்டோர் ஆணையத்திற்கான கால அவகாசம் நீட்டித்திருப்பது

திரு. கே.பி. முனுசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. . . (குறுக்கீடு)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *திரு. ஜி.கே. மணி, உட்காருங்கள். (குறுக்கீடு) உங்களுக்காகத்தானே எல்லோரும் பேசுகிறார்கள்.*

திரு. கே.பி. முனுசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இட ஒதுக்கீட்டுக் கொள்கையில். . . (குறுக்கீடு)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அனுமதியில்லை, திரு. ஜி.கே. மணி. (குறுக்கீடு) திரு. கே.பி. முனுசாமி அவர்கள் பேசி முடிக்கட்டும். (குறுக்கீடு) அவர் பேசட்டும். (குறுக்கீடு)*

திரு. கே.பி. முனுசாமி: *நான் பேசி விடுகிறேன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இட ஒதுக்கீட்டுக் கொள்கையில் திராவிட இயக்கங்கள் அவரவர் ஆட்சி இருக்கின்றபோது மிகப் பெரிய பங்களிப்பை அளித்திருக்கின்றன. இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சியில் இருந்தபோது, உச்ச நீதிமன்றமே 50 விழுக்காட்டிற்கு அதிகமாக வரக்கூடாது என்று சொன்ன போதும், 69 விழுக்காடு இட ஒதுக்கீட்டைப் பெற்றுக் கொடுத்தவர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்; (மேசையைத் தட்டும் ஒலி) எங்களுடைய பங்கு. அதைப்போல, திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் அவர்களும் அவருடைய பங்கில் நீண்டகாலமாக, பாரம்பரியமாக பிற்படுத்தப்பட்ட,*

[திரு. கே.பி. முனுசாமி] [2023 ஏப்ரல் 13

மிகவும் பிற்படுத்தப்பட்ட சமூகத்திற்காக, அவரும் கடுமையாக உழைத்திருக்கிறார். அதில் எந்தவித மாற்றுக் கருத்தும் கிடையாது. ஆனால், இந்த மாண்புமிகு அவையில், ஒரு கருத்து சொல்கின்றபோது, சமூக ரீதியாகவோ, கட்சி ரீதியாகவோ மற்றவர்களுடைய மனதைப் புண்படுத்தக் கூடாது. மாண்புமிகு உறுப்பினர் திரு. வேல்முருகன் அவர்கள், ** ஆனால், எல்லோரும் எல்லா கட்சிகளிலும் இருக்கின்றனர். தயவுசெய்து, அதை அவைக் குறிப்பிலிருந்து நீக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தேவையில்லை. (குறுக்கீடு) இந்த வார்த்தைகளெல்லாம் அவைக் குறிப்பில் ஏறாது. (குறுக்கீடு) உட்காருங்கள், சொல்கிறேன். (குறுக்கீடு) திரு. வேல்முருகன் அவர்களும் உட்காருங்கள், சொல்கிறேன். திரு. ஜி.கே. மணி அவர்கள், ஒரு வார்த்தையில் சொல்லி முடியுங்கள். (குறுக்கீடு) நான் சொல்கிறேன், உட்காருங்கள்.

திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே . . . (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. வேல்முருகன், உட்காருங்கள். (குறுக்கீடு) திரு. ஜி.கே. மணி அவர்கள்.

திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த 10.5 விழுக்காடு உள் ஒதுக்கீட்டை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நிச்சயம் கொடுப்பார்கள். அதற்குண்டான நடவடிக்கைகளை மேற்கொள்வார்கள் என்பதிலே மாற்றுக் கருத்தில்லை; மகிழ்ச்சியடைகிறோம்; வரவேற்கிறோம்; நம்பிக்கையோடு இருக்கிறோம். ஆனால், நான் வலியுறுத்திக் கேட்டுக்கொள்வதெல்லாம், ஒரு மாத காலத்திற்குள் ஆணையத்தின் அவகாச காலத்தை முடியுங்கள். புள்ளிவிவரங்களை 10 நாட்களுக்குள் சேகரித்துவிடலாம். தேர்வாணையத்திற்கோ, MRB–க்கோ, மற்றவர்களுக்கோ கொடுத்தால், ஒரு வாரத்திற்குள் விவரங்களை கொடுத்துவிடுவார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சரி, உட்காருங்கள். எல்லாம் பதிவாகிவிட்டன. உட்காருங்கள்.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது

5. கவன ஈர்ப்பு

(அ) செங்கல் தயாரிப்புக்குத் தேவையான மண் எடுக்க அனுமதி வேண்டியது குறித்து

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வு குறித்த கவன ஈர்ப்பு. மாண்புமிகு உறுப்பினர்கள், எதிர்க்கட்சித் தலைவர் திரு. எடப்பாடி* K. *பழனிசாமி, திரு. எஸ்.பி. வேலுமணி, திரு. ப. தனபால், திரு. அக்ரி. எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி, திரு. கே.ஏ. செங்கோட்டையன். திரு. கடம்பூர் ராஜூ, திரு. ந. தளவாய் சுந்தரம். திரு. உடுமலை* K. *ராதாகிருஷ்ணன், திரு. பி. தங்கமணி, திரு.* P.R.G. *அருண்குமார், டாக்டர் சி. விஜயபாஸ்கர், திரு. கி. அசோக்குமார், திரு. கே.பி. முனுசாமி, திரு.* A.K. *செல்வராஜ், திரு. எஸ். தங்கப்பாண்டியன், திரு. எம்.சி. சண்முகையா, திரு.* S. *சந்திரன், திரு. கோ. தளபதி, திரு. மு. பூமிநாதன் மற்றும் திரு. ரூபி ஆர். மனோகரன் ஆகியோரில் ஒருவர் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார். மாண்புமிகு உறுப்பினர் திரு. ந. தளவாய் சுந்தரம் அவர்கள்.*

திரு. ந. தளவாய் சுந்தரம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது ஒரு முக்கியமான பிரச்சினை. தமிழ்நாட்டில் இருக்கக்கூடிய அனைத்து சட்டமன்றத் தொகுதிகளிலும் ஏழையெளிய. . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: Agenda*-வில் என்ன இருக்கிறதோ, அதை மட்டும் படியுங்கள். பிறகு, கேள்வி கேட்கலாம்.*

திரு. ந. தளவாய் சுந்தரம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இரண்டே நிமிடங்களில் முடித்துவிடுகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *கேள்வி கேட்க நான் பிறகு வாய்ப்புத் தருகிறேன். (குறுக்கீடு)*

திரு. ந. தளவாய் சுந்தரம்: *கேள்வியைச் சொல்லிவிடுகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *இப்போது,* agenda*-வில் இருப்பதை படியுங்கள்.*

திரு. ந. தளவாய் சுந்தரம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடு) அதைத்தான்,* agenda*-வில் இருப்பதை*

[திரு. ந. தளவாய் சுந்தரம்] [2023 ஏப்ரல் 13

சொல்லிவிடுகிறேன். "செங்கல் தயாரிப்புக்குத் தேவையான மண் எடுக்க அனுமதி வேண்டியது" குறித்த அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடு)

***மாண்புமிகு திரு. துரைமுருகன்:** திரு. தளவாய் சுந்தரம், நான் சொல்ல வேண்டும். ஒரு விவர அறிக்கை அவைமுன் வைக்கப்பட்டுள்ளது. (குறுக்கீடு) அதன்பிறகு விவரமாகப் பேசுங்கள்.

அறிக்கை

1959 ஆம் வருடத்திய தமிழ்நாடு சிறு கனிம சலுகை விதிகளில், விதி எண் 19(2)-ன்படி செங்கல் சூளைகளைப் பதிவு செய்ய சேம்பர் சூளைக்கு ரூ.3,000/– மற்றும் நாட்டு செங்கல் சூளைக்கு ரூ.300/– விண்ணப்பக் கட்டணம் செலுத்தி மேற்கண்ட விதிகளில் உள்ள அட்டவணை IV-A-ல், படிவம் V-ல் பதிவு சான்றிதழ் துணை இயக்குநர்/உதவி இயக்குநர், புவியியல் மற்றும் சுரங்கத் துறையிடம் பெறவேண்டும். இந்தப் பதிவுச் சான்று மூன்று வருடக் காலத்திற்குச் செல்லத்தக்கதாகும். குறிப்பிட்ட காலம் முடிவுற்ற பின், மேற்கண்ட விண்ணப்பக் கட்டணங்களில் 50% செலுத்தி செங்கல் பதிவுச் சான்றைப் புதுப்பித்துக்கொள்ளலாம்.

2. மேற்கண்ட பதிவுச் சான்று மாவட்ட ஆட்சியரிடமிருந்து பெறப்பட்டபின் செங்கல் சூளை உரிமையாளர்களால் பட்டா நிலங்களில் மண் எடுப்பதற்கு ரூ.1,500/– கட்டணம் செலுத்தியும், பதிவுச் சான்று மற்றும் மண் எடுக்க உத்தேசித்துள்ள நிலங்களில் பட்டாதாரரின் ஒப்புதல் கடிதம் பெற்று, ஆண்டொன்றுக்கு கீழ்க்கண்ட வருடாந்திர கனிமக் கட்டணம் செலுத்தி, மாவட்ட ஆட்சியருக்கு விண்ணப்பிக்க வேண்டும். இதற்கு 19(2) விதியின்படி செங்கல் சூளைக்கு மண் எடுப்பதற்கு 'உரிமக் கட்டணம்' தனியே செலுத்திடத் தேவையில்லை. வருடாந்திர கனிமக் கட்டணம் மட்டும் செலுத்தினால் போதும்.

வ. எண்	செங்கல் சூளை வகைப்பாடு	கட்டணம் (ரூ.)
1	*16 அடுப்புகள் வரை உள்ள சேம்பர் செங்கல் சூளை*	*60,000/–*

2	17 அடுப்புகளுக்கு மேல் 26 அடுப்புகளுக்கு மிகாமல் உள்ள சேம்பர் செங்கல் சூளை	75,000/–
3	27 அடுப்புகளுக்கு மேல் உள்ள சேம்பர் செங்கல் சூளை	90,000/–
4	15 அடுப்புகள் வரை உள்ள நாட்டு செங்கல் சூளை	10,000/–
5	15 அடுப்புகளுக்கு மேல் உள்ள நாட்டு செங்கல் சூளை	12,000/–

3. செங்கல் சூளைப் பணிக்கு மண் எடுக்கப் பெறப்பட்ட விண்ணப்பத்தின் மீது துணை இயக்குநர்/உதவி இயக்குநர், புவியியல் மற்றும் சுரங்கத் துறை அவர்களால் சம்பந்தப்பட்ட துறைகளிலிருந்து அறிக்கை பெறப்படும். அதன் அடிப்படையில் செங்கல் சூளை உரிமையாளர் தமிழ்நாடு சிறுகனிம சலுகை விதிகள், 1959, விதி எண் 41–ல் குறிப்பிட்டுள்ளவாறு சுரங்கத் திட்டம் தயார் செய்து விதி எண் 42–ல் குறிப்பிட்டுள்ளவாறு, சுற்றுச்சூழல் தடையின்மை சான்றை (SEIAA) மாநில சுற்றுப்புறச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆணையத்திடம் சமர்ப்பித்து அனுமதி பெற்ற பின்பு, அதனைக் கூராய்வு செய்து பட்டா நிலங்களிலிருந்து நிபந்தனைகளுக்கு உட்பட்டு மண் எடுக்க மாவட்ட உதவி இயக்குநர் (கனிமம்) மூலம் அனுமதி வழங்கப்படும்.

4. மண் எடுக்க அனுமதி வழங்கப்பட்ட பின், மேற்படி விதிகளில் உள்ள படிவம் 3–ல் கண்டவாறு துணை இயக்குநர்/ உதவி இயக்குநர், புவியியல் மற்றும் சுரங்கத் துறை அவர்களிடம் 15 நாட்களுக்குள் குத்தகைதாரரால் குத்தகை ஒப்பந்தப் பத்திரம் நிறைவேற்றப்பட்டு, மண் எடுத்துக்கொள்ளலாம்.

5. மேலும் 1959–ம் வருடத்திய தமிழ்நாடு சிறுகனிம சலுகை விதிகளில், விதி எண் 44–ன்படி நிலப்பரப்பிற்குத் தகுந்தவாறு விவசாய நிலங்களின் மேம்பாட்டிற்காக 1.5 மீட்டர் ஆழத்திற்கு மிகாமல் சுற்றுச்சூழல் சான்றிதழ் இன்றி பட்டா நிலங்களில் சீர்த்திருத்தம் செய்யும்போது எஞ்சியுள்ள மண்ணை உரிய உரிமக் கட்டணம் செலுத்தி செங்கல் சூளைப் பணிக்கு பயன்படுத்திக்கொள்ள வழிவகை செய்யப்பட்டுள்ளது. மேற்கண்ட விதியின்கீழ் மூன்று மாதங்களுக்கு மிகாமல் அனுமதி வழங்க மாவட்ட ஆட்சியர்களுக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

[திரு. துரைமுருகன்] [2023 ஏப்ரல் 13

6. இது தவிர, நிலுவையில் உள்ள அனைத்து கனிமங்களுக்கான விண்ணப்பங்கள் மீது விரைந்து பரிசீலனை செய்திட அனைத்து மாவட்ட அலுவலர்களுக்கும் மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்களால் மாவட்ட அலுவலர்களின் திறனாய்வு கூட்டத்தில் அறிவுரைகள் வழங்கப்பட்டதுடன், புவியியல் மற்றும் சுரங்கத் துறை ஆணையர் அவர்களாலும் அனைத்து மாவட்ட அலுவலர்கள் இடையே ஆய்வுக் கூட்டம் நடத்தியும் மற்றும் நிலுவையில் உள்ள அனுமதி கோரி வரப்பெற்றுள்ள விண்ணப்பங்களின்மீது துரிதமாக நடவடிக்கை மேற்கொண்டு அறிக்கை அளிக்குமாறு வருவாய் கோட்டாட்சியர்களுக்கும், மாவட்ட கனிமவளத் துறை அலுவலர்களுக்கும், விரைவில் செங்கல் சூளைகளுக்கு மண் எடுத்திட தமிழ்நாடு சிறுகனிம சலுகை விதிகள், 1959, விதி எண் 19(2)-ன்படியும் பிரிவு 44-ன்படியும் உடனுக்குடன் அனுமதி வழங்கிட அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளன.

7. எனவே, மேற்கண்டவற்றின் அடிப்படையில் தமிழகத்தில் செங்கல் உற்பத்தியினை அதிகரிக்கவும், செங்கல் விலையைக் கட்டுப்படுத்திடவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

8. மேலும், கோயம்புத்தூர் மாவட்டம் தடாகம் பகுதியில் சென்னை உயர் நீதிமன்ற வழக்கு எண் 27356/2019-ன்படியும், தேசிய தென்மண்டல பசுமை தீப்பாயத்தில் O.A No.119/2019 வழக்கின்படியும், செங்கல் சூளைகள் 3 வருடங்களாக இயங்க தடை உள்ளதால் 2020-2023 வரை செங்கல் சூளைகள் இயங்கவில்லை. இதனால் அண்டை மாவட்டங்களான ஈரோடு, திருப்பூர், சேலம் ஆகிய பகுதிகளிலிருந்து கோவை மாவட்டத்திற்கு செங்கற்கள் கொண்டுவரப்படுகின்றன. எனவே, கோவை மாவட்டத்தில் செங்கல் விலையில் ரூ.6-இலிருந்து ரூ.13 வரை விலையேற்றம் ஏற்பட்டது. தற்போது தேசிய தென்மண்டல (NGT) பசுமை தீர்ப்பாயம் தற்போது தயாரான செங்கற்களை விற்க அனுமதி அளித்துள்ளதால் அப்பகுதியில் விலை குறைய வாய்ப்புள்ளது.

திரு. ந. தளவாய் சுந்தரம்: சொல்லிவிட்டேன்.

மாண்புமிகு திரு. துரைமுருகன்: அதற்குப் பிறகு, அதில் விவரமாக இருக்கிறதா, இல்லையா என்பதைப் பேசுங்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: விவர அறிக்கையைப் படித்தேன். அதில் என்னவிருக்கிறது என்பது குறித்து ஒரு கேள்வி கேட்கலாம்.

2023 ஏப்ரல் 13]

திரு. ந. தளவாய் சுந்தரம்: *நான் சொல்வதற்கு முன்பே நீங்கள் சொல்லிவிட்டீர்கள். கேள்வியும் நீங்கள்,* answer*-ம் நீங்கள்; எனக்கு வேலையே இல்லை!*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *நீங்கள் தேவையில்லாத கருத்தைச் சொல்லாதீர்கள். (குறுக்கீடு) நீங்கள்* Agenda*-ல் இருப்பதை. . . (குறுக்கீடு)*

திரு. ந. தளவாய் சுந்தரம்: *நான் சொல்ல வந்தேன். அதற்குள் மாண்புமிகு அமைச்சர் அவர்கள். . .*

முற்பகல் 11–45

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *நீங்கள்* Agenda*-வில் இருப்பதை கேளுங்கள் என்றுதான் சொல்கிறேன். (குறுக்கீடு) 'அதை நான் படித்துப் பார்த்தேன்' என்று சொல்லித்தான் நீங்கள் ஆரம்பிக்க வேண்டும்.*

திரு. ந. தளவாய் சுந்தரம்: *சரி. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெளிவான ஓர் அறிக்கையை விளக்கமாக நல்ல முறையில் கொடுத்திருக்கிறார்கள்; பாராட்ட வேண்டிய விஷயம். ஏனென்றால், இந்த அறிக்கையில் 3* part *ஆகப் பிரித்து விளக்கம் கொடுத்திருக்கிறார்கள். முதல்* part*-ல், 1959 ஆம் வருடத்திய தமிழ்நாடு சிறு கனிம சலுகை விதிகளில், விதி எண் 19(2)-ன்படி, மண்ணை எப்படி வாங்கலாம்? மண்ணை எப்படி எடுக்கலாம் என்பதைப் பற்றி சொல்லியிருக்கிறார்கள். இரண்டாவது* part*-ல், 1959 ஆம் வருடத்திய தமிழ்நாடு சிறு கனிம சலுகை விதிகளில், விதி எண் 44 பற்றி சொல்லியிருக்கிறார்கள்; அதிலும் மகிழ்ச்சி. கடைசியாக கோவை மாவட்டத்தில் நடந்த செங்கல் சூளை* incident *பற்றி கூறியிருக்கிறார்கள். அதற்கு நான் உங்களிடம் விளக்கம் கேட்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.*

முதல் part*-ல் கூறப்பட்டுள்ள 1959 ஆம் வருடத்திய தமிழ்நாடு சிறு கனிம சலுகை விதிகளில், விதி எண் 19(2) பிரகாரம் எளிதிலே மண்ணை எடுக்கலாம். அதற்கான வழிவகைகளையெல்லாம் நீங்கள் தெளிவாகக் கூறியிருக்கிறீர்கள். அதாவது, சட்டம் என்ன சொல்கிறதோ அதைத் தெளிவாக, விளக்கமாகக் கூறியிருக்கிறீர்கள்; மிக்க மகிழ்ச்சி.*

இரண்டாவது part*-ல், 1959 ஆம் வருடத்திய தமிழ்நாடு சிறு கனிம சலுகை விதிகளில், விதி எண் 44 பற்றியும் பேசியிருக்கிறீர்கள்.*

[திரு. ந. தளவாய் சுந்தரம்] [2023 ஏப்ரல் 13

இன்றைக்கு ஒரு செங்கல்லின் விலை 6 ரூபாய் ஆகும். அதற்கான மண்ணின் விலை 2½ ரூபாய்; அதற்கான விறகின் விலை 1½ ரூபாய்; அதை எரிப்பதற்கான தீ போடக்கூடிய கூலி 1¼ ரூபாய்; இதை மற்றும் இதர செலவுகளைக் கூட்டிக் கழித்துப் பார்த்தால், 6 ரூபாய் செங்கல்லுக்கு 5 ரூபாய் 95 பைசா உற்பத்தி செலவாகிறது; 5 பைசாதான் இலாபம் கிடைக்கும்; இது ஒருபுறம்; இன்னொரு பக்கம். கடைசி பத்தி பற்றி மட்டும் உங்களுடைய knowledge-க்கு கொண்டு வருகிறேன்.

கோவை மாவட்டம், தடாகம் பகுதியில், சென்னை உயர் நீதிமன்றம் மற்றும் Green Tribunal ஆகியவற்றில் தொடரப்பட்ட வழக்குகளின்படி, செங்கல் சூளைகள் 3 வருடங்களாக இயங்க தடை உள்ளதால், 2020-2023 வரை செங்கல் சூளைகள் இயங்கவில்லை. இதனால், கிட்டத்தட்ட 1 இலட்சம் employers பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். அங்கு 125 செங்கல் சூளைகள் உள்ளன. அண்டை மாவட்டங்களான ஈரோடு, திருப்பூர், சேலம் ஆகிய மாவட்டங்களில் இருந்து கோவை மாவட்டத்திற்கு செங்கற்கள் கொண்டு வரப்படுகின்றன. எனவே, கோவை மாவட்டத்தில் செங்கல் விலை ரூ.6/-லிருந்து ரூ.13/-க்கு உயர்ந்துவிட்டது. தேசிய தென்மண்டல (NGT) பசுமைத் தீர்ப்பாயம், தற்போது தயாரான செங்கற்களை விற்க அனுமதி அளித்துள்ளது என்று கூறியிருக்கிறீர்கள். நீங்கள் செங்கற்களை விற்க NGT அனுமதியளித்துள்ளது என்று கூறுகிறீர்கள். தற்போது, அங்குள்ள பிரச்சினை என்னவென்றால், AD (Mines) office-ல், 8 ரூபாய் deposit செய்ய வேண்டும். செங்கல் விலையே 6 ரூபாய்; ஆனால், 8 ரூபாய் deposit செய்தாக வேண்டும். மாண்புமிகு அமைச்சர் அவர்கள், இதே subject சம்பந்தமாக, உங்களுடைய முதல் மானியக் கோரிக்கையில், 29-4-2022 அன்று பதில் சொன்னீர்கள். அதேபோல, 5-5-2022 அன்று பதில் சொன்னீர்கள். உங்களுடைய பதிலில் எந்தக் குற்றமும் கிடையாது; குற்றச்சாட்டும் கிடையாது. ஆனால், இப்போது கோயம்புத்தூரில் நடக்கக்கூடிய incident-ல், நீங்கள், 'செங்கல் விலையை குறைத்துவிட்டோம்' என்கிறீர்கள். ஆனால், AD (Mines) office-க்குச் சென்றால், 8 ரூபாய் கொடுத்து வாங்க வேண்டும்; இது ஒருபுறம் இருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சரி. மாண்புமிகு உறுப்பினர் உங்களுடைய prayer என்ன என்பதைக் கேளுங்கள்.

2023 ஏப்ரல் 13]

திரு. ந. தளவாய் சுந்தரம்: *ஒரு நிமிடத்தில் முடித்துவிடுகிறேன். தமிழ்நாடு முழுவதும், மேற்குத் தொடர்ச்சி மலை, ஆரல்வாய்மொழி, பணகுடி, காவல்கிணறு, ஆவரைகுளம், தென்காசி, அதற்கு மேலாக கோயம்புத்தூர், தருமபுரி என எல்லா மாவட்டங்களிலும் செங்கல் தயாரிக்கப்படுகிறது. குறிப்பாக, தென்காசியிலுள்ள மக்கள், இங்கிருந்து மண் கடத்தி செல்லப்படுகிறது என்று சொல்கிறார்கள். அது ஒருபுறம் இருக்கட்டும். அதைத் தடுப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்கும் என்ற நம்பிக்கை இருக்கிறது. இப்போது, இந்த* rule *எல்லாம். . . (மணியடிக்கப்பெற்றது) ஒரு நிமிடத்தில் பேசிவிடுகிறேன்.* Rule*-ல் அழகாக இருக்கிறது.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர், உங்கள்* prayer *என்ன என்பதை அரசின் கவனத்திற்குக் கொண்டு வாருங்கள்.*

திரு. ந. தளவாய் சுந்தரம்: *இந்தச் சட்டப்படி, இந்த* rule*-படி, என்ன நடைமுறைகள் இருக்கின்றன என்பது பற்றி நீங்கள் ஏற்கெனவே அழகாகச் சொல்லிவிட்டீர்கள். நீங்கள், சட்டம் ஏழை மக்களுக்குப் பயன்படும் வகையில் இருக்கும் என்று ஏற்கெனவே சொல்லியிருக்கிறீர்கள். நீங்கள் சட்டத் துறை அமைச்சராக இருந்தவர். ஆகவே, சட்டம் ஏழை மக்களுக்கு பயன்படக்கூடிய வகையில் இருக்க வேண்டும். இந்தச் சட்டத்தால் மக்கள் பயனடைய வேண்டும். இந்தச் சட்டத்தால் செங்கல் சூளையில் பணிபுரியும் மக்கள், மண்பாண்டம் செய்யும் தொழிலில் ஈடுபடும் மக்கள் பயனடைய வேண்டும். ஆகவே,* Part *1,* Part *2 மற்றும்* Part *3 பற்றி வேண்டாம். அது கோயம்புத்தூர்* subject*; நீதிமன்றத்தில் இருக்கிறது. (மணியடிக்கப்பெற்றது)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர், போதும். செங்கல், ஓடு, மண்பாண்டம் செய்பவர்களுக்கு மண் எடுக்க அனுமதி வேண்டும், அதுதானே! 2011-க்கு முன்பு இருந்த மாதிரி, அப்படித்தானே! உட்காருங்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. ரூபி ஆர். மனோகரன் அவர்கள். (குறுக்கீடு) நான் பதில் சொல்லச் சொல்கிறேன். (குறுக்கீடு) சரி, நீங்கள் சொல்லுங்கள்.*

திரு. ந. தளவாய் சுந்தரம்: *நீங்களே* Act*-ஐ சொல்கிறீர்கள்; நீங்களே* rule*-ஐ சொல்கிறீர்கள்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *இந்த அலுவலை முடித்து அடுத்த அலுவலுக்குச் செல்ல வேண்டும். மாண்புமிகு உறுப்பினர்கள் உரையாற்றிய பிறகு, மாண்புமிகு அமைச்சர்கள் 5 பேர் பதிலுரையாற்ற வேண்டியுள்ளது.*

[*2023 ஏப்ரல் 13*

திரு. ந. தளவாய் சுந்தரம்: *மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்லட்டும்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பிற்பகல் 2–00 மணிக்குள் அவை நடவடிக்கைகளை முடிக்க வேண்டும்.*

திரு. ந. தளவாய் சுந்தரம்: *நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் பதிலை எதிர்பார்க்கிறேன். எடுத்தவுடனேயே, '2011–க்கு முன்பிருந்த மாதிரி கொடுங்கள்' என்று நீங்களே சொல்லிவிட்டீர்கள். என் வேலையையும் நீங்களே முடித்துவிட்டீர்கள்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *ஆமாம். அவ்வளவுதானே!*

முற்பகல் 11–50

திரு. ந. தளவாய் சுந்தரம்: *மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்கிறேன் என்று என்னிடம் சொல்லிவிட்டார்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள், அழகாக, விளக்கமாக அறிக்கையைக் கொடுத்திருக்கிறார்கள்.* Part *1 மற்றும்* Part *2 ஆகிய இரண்டிலும் சின்ன சின்ன சிக்கல்கள் இருக்கின்றன. இந்தச் சிக்கல்களையெல்லாம் நீக்கிவிட்டு, அழகாக 2002–ல் இருக்கக்கூடிய அரசாணை 105–ஐப் பயன்படுத்தி, எளிய வகையிலே ஏழையெளிய மக்களுக்கு மண் கிடைப்பதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும். செங்கல் சூளையில் மக்கள் பாதிக்கப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். தமிழ்நாடு முழுக்க, இங்கேயிருக்கக்கூடிய ஒட்டுமொத்த சட்டமன்ற உறுப்பினர்களுடைய ஒரே கோரிக்கை, 'எளிதில் மண் எடுக்க வேண்டும்' என்பதாகும். அதற்கு வழிவகை செய்ய வேண்டும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்களை கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *போதும். மாண்புமிகு உறுப்பினர் திரு. கோ. தளபதி அவர்கள்.*

திரு. கோ. தளபதி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த காலங்களில் மண் எடுப்பதற்கு மிகவும் சிரமமாக இருந்தது. தற்போது மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சருடைய அறிவிப்பு வரவேற்கத்தக்கது. இருந்தாலும்கூட, மண் எடுப்பதற்கு* permit *வாங்குவதற்கு, கீழேயிருந்து* RI, Tahsildar, RDO *என்று வரவேண்டியிருக்கிறது. அதனை சற்று எளிமைப்படுத்த வேண்டும் என்று சொல்லி, நன்றி கூறி விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.*

2023 ஏப்ரல் 13]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ரூபி ஆர். மனோகரன் அவர்கள். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திரு. ரூபி ஆர். மனோகரன் அவர்கள் பேசி முடித்தவுடன், உங்களுக்கு வாய்ப்புத் தருகிறேன்.

திரு. ரூபி ஆர். மனோகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் 2011 ஆம் ஆண்டுக்கு முன்பு முத்தமிழறிஞர் கலைஞர் ஆட்சியில், செங்கல், ஓடு, மண்பாண்டங்கள் தயாரிக்கும் தொழில் செய்து வருபவர்களுக்கு அரசுக்குச் சொந்தமான குளங்கள், ஏரிகள் மற்றும் தனியார் நிலங்களில் மண் எடுப்பதற்கு அரசு கட்டணம் வசூல் செய்து, மாவட்ட ஆட்சியர் மூலமாக அனுமதி வழங்கப்பட்டு வந்தது. கடந்த கால ஆட்சியில் இந்த அனுமதி வழங்கும் முறையில் பல்வேறு மாற்றங்கள் கொண்டுவரப்பட்டு, அதன் காரணமாக மேற்படி தொழில் செய்து வருபவர்கள் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளனர்.

2015 ஆம் ஆண்டு நமக்கு நாமே ஆய்வுக் கூட்டத்தின்போது, திருநெல்வேலி மாவட்டம் பணகுடியில், மேற்படி தொழில் செய்பவர்களின் கூட்டமைப்பின் சார்பில் ஓடு தொழிற்சாலையில் நடந்த வரவேற்புக் கூட்டத்தில், நமது மாண்புமிகு முதல்வர் அவர்கள் பங்கேற்றார். அப்போது, "நாம் ஆட்சிப் பொறுப்புக்கு வந்த பிறகு, 2011 ஆம் ஆண்டுக்கு முன்பு எவ்வாறு மாவட்ட ஆட்சித் தலைவர்மூலம் மண் எடுக்க அனுமதி வழங்கப்பட்டதோ, அதுபோன்ற நடைமுறையை மீண்டும் பின்பற்றி மண் எடுப்பதற்கு அனுமதி வழங்குவோம்" என அவர் உறுதி அளித்திருந்தார். ஆகவே, மேற்படி தொழில் செய்து வரும் பல்லாயிரம் பேர் மூலமாக பல இலட்சம் பேருக்கு வேலைவாய்ப்பு கிடைத்து வருவதை மனதில் வைத்து, நமக்கு நாமே பயணத்தில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அளித்த உறுதிமொழியின் அடிப்படையில் மேற்படி தொழில் செய்கிறவர்களுக்கு மண் எடுப்பதற்கு மாவட்ட ஆட்சியர்மூலம் அனுமதி வழங்குமாறு தங்கள் மூலமாக கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திரு. ந. தளவாய் சுந்தரம், சொல்லுங்கள்.

திரு. ந. தளவாய் சுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரே ஒரு கோரிக்கை. மாவட்ட ஆட்சித் தலைவர்

மூலமாக அனுமதி வழங்க வேண்டும் என்று உறுப்பினர் கேட்கிறார். தயவுசெய்து AD (Mines) மூலமாக அனுமதி வழங்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாவட்ட நிர்வாகம் என்று சொல்கிறீர்கள். மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. துரைமுருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுவொரு முக்கியமான பிரச்சினை. பல்லாயிரக்கணக்கானவர்களின் வாழ்க்கைத் தரத்தையொட்டியிருக்கிற ஒரு பிரச்சினை. மாண்புமிகு முதல்வர் அவர்கள் தேர்தல் பிரச்சாரத்தின்போது, நெல்லை மாவட்டத்தில் பழனி வட்டாரத்தில் தேர்தல் பிரச்சாரத்தில் ஈடுபட்டபோது, செங்கல் சூளைக்காரர்கள், மண்பாண்டம் தொழில் செய்கிறவர்கள், விவசாயிகள் எல்லோரும் மண் கிடைக்கவில்லை என்ற குறையை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடத்தில் சொன்னார்கள். அப்போது நீங்கள்தான் ஆட்சியில் இருந்தீர்கள். அந்த சமயத்தில் மாண்புமிகு முதல்வர் அவர்கள், 'நாங்கள் ஆட்சிக்கு வந்தால், உங்களுக்கு இருக்கிற கஷ்டங்களைப் போக்கி, எளிதாக உங்களுக்கு மண் கிடைப்பதற்கு வேண்டிய நடவடிக்கைகள் எடுக்கப்படும்' என்று அங்கேயே தெரிவித்தார்கள். அதனை நாம் மிக முக்கியமாக எடுத்துக்கொண்டு, இதுவரையில் நான் எந்த இலாகாவிலும் அத்தனை பேரை அழைத்துப் பேசியது கிடையாது; எத்தனை முறை செங்கல் சூளைக்காரர்களையும், மண்பாண்ட தொழிலாளர்களையும் அழைத்து பேசியிருப்பேன் என்று எனக்கே தெரியாது. அவர்களோடு பேசி, பேசி, பேசி, ஒரு வழியாக அவர்கள் சொன்னவற்றையெல்லாம் எடுத்து, அதற்குப் பிறகுதான் சில திட்டங்களை வகுத்திருக்கிறோம்.

அந்த அடிப்படையில்தான், செங்கல் சூளைக்கு மண் எடுப்பதற்கு என்ன செய்யலாம் என்று ஆராய்ந்தபோது, செங்கல் சூளைக்கு மண் மூன்று வகையில் எடுக்கலாம் என்று தெரிவித்தோம். தமிழ்நாடு சிறு கனிம சலுகை விதிகள், 1959, விதி எண் 19(2)-ன்கீழ் மண் எடுக்கலாம். விதி எண் 19(2)-ன்கீழ் எப்படி மண் எடுக்கலாம் என்றால், பட்டா நிலத்தில் எடுக்கலாம். பட்டா நிலங்களில் மண் எடுக்க வேண்டுமென்றால் அவர்கள் AD (Mines) இடம் விண்ணப்பிக்க வேண்டும்.

முற்பகல் 11–55

முதலாவதாக, Mines plan தயார் செய்ய வேண்டும். அடுத்து, அந்த மண்ணில் மணல் gravel இல்லை என்று ஆய்வுமூலம் நிரூபித்து certificate வாங்க வேண்டும். இதற்கு SEIAA அனுமதி தேவையில்லை. AD (Mines) அனுமதி வழங்குவார். ஒரு வருட காலத்திற்கு மண் எடுத்துக்கொள்ளலாம். இது ஒரு வகை.

இரண்டாவது, விதி 44. இந்த விதியை நீங்கள்தான் கொண்டு வந்தீர்கள். கொண்டு வந்துவிட்டு, அதை Gazette-ல் போடாமல் போய்விட்டீர்கள். இருந்தாலும் அதை எதற்குக் கொண்டு வந்தீர்கள் என்றுகூட எனக்குத் தெரியவில்லை. இப்போது நான் பார்த்து முடித்துவிட்டேன். அதுபோக எப்படி எடுக்கலாம் என்றால், பட்டா நிலங்களில் மண் எடுப்பதற்கு Collector–க்கு விண்ணப்பிக்க வேண்டும். AD (Mines), JD (Agriculture) இவர்கள் இருவரிடமும் NOC வாங்க வேண்டும். மணல், gravel இல்லை என்று நிரூபிக்க வேண்டும்; SEIAA அனுமதி தேவையில்லை; இதற்கு Collector அனுமதி வழங்குவார். ஒன்றரை மீட்டர் அளவிலே மண் எடுக்கலாம். இது இரண்டாவது வகை.

மூன்றாவது, 12 (2) (2–A) of TNMMCR 1959 பிரகாரம் மண் எடுக்கலாம். அது அரசாங்கத்திற்கு சொந்தமாக இருக்கின்ற ஏரி, குளங்களிலிருந்து எடுப்பது. Collector எந்தெந்த ஏரிகளிலிருந்து எடுக்கலாம் என்று declare செய்வார். Collectorதான் அனுமதி கொடுப்பார். SEIAA அனுமதி பெற வேண்டும். உரிமைக் கட்டணம், பதிவுக் கட்டணம் கட்ட வேண்டும். இந்தக் கட்டணங்களைக் கட்டினால் மூன்று வகைகளில் மண் எடுக்கலாம். ஆக, மண் எடுக்கும் பணி இவ்வளவு எளிமைப்படுத்தப்பட்டிருக்கிறது.

அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் கோயம்புத்தூர் பிரச்சினையைப் பற்றி பேசினார். கோயம்புத்தூர் மாவட்டம், தடாகம் பகுதி சம்பந்தப்பட்ட வழக்கு சென்னை உயர் நீதிமன்றத்திலும் தேசிய தென் மண்டல பசுமைத் தீர்ப்பாயத்திலும் இருந்தது. இதன் காரணமாக செங்கல் சூளைகள் 2020 முதல் 2023 வரை மூன்று வருட காலங்கள் அங்கே இயங்கவில்லை. அதனால், அண்டை மாவட்டங்களான ஈரோடு, திருப்பூர், சேலம் ஆகிய பகுதிகளிலிருந்து கோவை மாவட்டத்திற்கு செங்கற்கள் கொண்டுவரப்பட்டன. அதைத்தான் தளவாய் அவர்கள் சொன்னார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள்

[திரு. துரைமுருகன்] [2023 ஏப்ரல் 13

சொன்னதைப்போல், ரூ.6/-லிருந்து ரூ.13/- ஆக செங்கல்லின் விலை ஏறிவிட்டது. தற்போது, தேசிய பசுமைத் தீர்ப்பாயம் செங்கற்களை விற்பதற்கு அனுமதி அளித்திருக்கிறது. எனவே, இனிமேல் அங்கு செங்கல் விலை குறைந்துவிடும். ஆகையால், அந்தப் பிரச்சினையும் களையப்பட்டிருக்கிறது.

அடுத்ததாக மண்பாண்டம் செய்யும் தொழிலாளர்களுக்கும் வழிமுறை எளிமைப்படுத்தப்பட்டிருக்கிறது. விதி 6-ன்படி Collector இடத்திலே அனுமதி பெற்று, அரசு புறம்போக்கு நிலங்களிலிருந்து மண்பாண்டங்கள் செய்வோர் இலவசமாகவே மண் எடுத்துக்கொள்ளலாம். விதி 12-ன்கீழ் 800 மாட்டு வண்டிகள் வரையில் மண் எடுக்கலாம். அதேமாதிரி, அரசாங்கத்தின் குளங்களில் மண் எடுக்கலாம் என்று Collector இடம் permission வாங்க வேண்டும். 60 கன மீட்டருக்கு மிகாமல் எடுக்கலாம். அதுவும் இலவசமாக எடுத்துக்கொள்ளலாம். சீர்திருத்தங்கள் செய்யும்பொருட்டு, சில நிலங்களை சீர்திருத்தம் செய்வார்கள். அதில் உபரி மண் வரும். விதி 44-ன்படி Collector-ன் அனுமதி பெற்று, fees கட்டி அதையும் எடுத்துக்கொள்ளலாம். ஆக, எல்லா வழிமுறைகளும் எளிமைப்படுத்தப்பட்டிருக்கின்றன. எங்கே பிரச்சினை வருகிறது என்றால், மாவட்ட ஆட்சித் தலைவரிடத்திலே அனுமதி பெறுகின்றபோதுதான் இந்தப் பிரச்சினை வருகிறது. காரணம், அவர்களுக்கு ஆயிரம் வேலைகள். அதனால், AD (Mines) அனுமதி போட்டுக் கொடுத்தாலும், அது Collector இடம் செல்லும்போது அங்கே மாதக் கணக்கில் தங்கிவிடுகிறது. உதாரணத்திற்கு ஒன்று சொல்கிறேன். செங்கல்பட்டு, காஞ்சிபுரம், திருவள்ளூர் ஆகிய இந்த மூன்று மாவட்டங்களுக்கும் மண் எடுப்பது போன்ற சட்டங்கள் பொருந்தாமல் இருந்தது. அதையும் நிவர்த்தி செய்து, இந்த மூன்று மாவட்டங்களில் இருக்கின்ற தடையை எடுத்துவிட்டோம். இது குறித்து மூன்று மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கும் நான் தெரிவித்தேன். இந்த மூன்று மாவட்ட ஆட்சித் தலைவர்களும், AD (Mines) அவர்கள் கொடுக்கின்ற அந்த slip-ஐ உடனடியாக எடுத்துக்கொண்டு order போட்டால் குறைந்தது மூன்று மாவட்டங்களில் மட்டும் கிட்டத்தட்ட 25 கோடி ரூபாய் வரக்கூடிய வாய்ப்பு இருக்கிறது. அதிலே, செங்கல்பட்டு Collector கொஞ்சம் செய்திருக்கிறார்; மீதி இதிலே தெரிவிக்கப்பட்டிருக்கிறது. AD (Mines) அனுமதி கொடுத்திருந்தால் கூட கலெக்டரிடம் சென்று தேங்கிவிடுகிறது. ஆகையினால், AD (Mines) மட்டும் அனுமதி கொடுத்திருப்பது போதுமென்றிருந்தால்

இந்தப் பிரச்சினை வந்திருக்காது, பணமும் அரசாங்கத்திற்கு வந்திருக்கும். அதனால், வழிமுறைகளை எளிமைப்படுத்த வேண்டுமென்று உறுப்பினர் அவர்கள் சொன்னார்கள். அதுதான் எளிமையான நடைமுறை. ஆகையினால், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடத்திலே இதுகுறித்து தெரிவித்து, அதற்கு AD (Mines) அவர்களே permission கொடுக்கலாம், இது கலெக்டருக்கு செல்ல வேண்டிய தேவையில்லை என்ற முறையைக் கொண்டுவருவோம் என்று தெரிவித்து அமர்கிறேன்.

நண்பகல் 12–00

(ஆ) கன்னியாகுமரி மாவட்டம், நான்குவழித் தடச் சாலைப் பணிகளை விரைந்து முடித்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வு குறித்த கவன ஈர்ப்பு. மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ் அவர்கள் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார். மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ் அவர்கள்.

திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கன்னியாகுமரி மாவட்டத்தில் நான்குவழித் தடச் சாலைப் பணிகளை விரைந்து முடிக்க வேண்டியது" குறித்த அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எ.வ. வேலு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கை, உறுப்பினர்களின் மேசையின்மேல் உள்ள சிறிய கணினியில் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அறிக்கை

சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டுள்ள தே.நெ–47 (புதிய எண் 66) இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையத்தைச் சார்ந்ததாகும். 'இச்சாலையில் கி.மீ 43/00 முதல் கி.மீ. 96/714 வரை

[திரு. எ.வ. வேலு] [2023 ஏப்ரல் 13

நான்கு வழித் தடமாக்குவதில் மொத்தமுள்ள 53.714 கிலோ மீட்டரில் 30.274 கிலோ மீட்டருக்கு தொடர்ச்சியாக இல்லாமல் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. மீதமுள்ள பணியைத் தொடர்வதற்கான மண், கன்னியாகுமரி மாவட்டத்தில் இருந்து கிடைக்கப் பெறாத காரணத்தினால், அப்பணிக்கான ஒப்பந்த உடன்படிக்கையானது இரத்து செய்யப்பட்டு, அண்டை மாவட்டங்களிலிருந்து தேவையான மண் எடுக்கப்பட்டு, மீதமுள்ள பணிகளைத் தொடர விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டு, ஒப்பந்தம் கோரப்பட்டு பரிசீலனையில் உள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ் அவர்கள்.

திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கையை நான் படித்துப் பார்த்தேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மிகத் திறமையாக, கரிசனமாக எங்களுடைய மாவட்டத்தினுடைய நலன் கருதி, நான்கு வழிச் சாலைப் பணிகளை முடிப்பதற்குரிய ஏற்பாடுகளை துரிதமாகச் செய்வதாகச் சொல்லியிருக்கிறார்கள். எங்களுடைய மாவட்டத்தைப் பொறுத்தமட்டில், தற்போது, 1,550 கோடி ரூபாய் மதிப்பீட்டிலான பணிகளைத் துவக்குவதற்கு இப்போது டெண்டர் கோர ஏற்பாடு செய்வதாக அறிந்தேன். கேரளாவைச் சேர்ந்த ஒருவர் contract எடுத்ததாகவும் நான் அறிகிறேன். இதற்கு முன்னால், இரண்டு ஆண்டுகளாக நான்கு வழிச் சாலைப் பணி முடக்கப்பட்டிருந்தது. NHAI அதிகாரிகள் அதற்கான ஏற்பாடுகளைச் செய்யாமல், எங்களுடைய மாவட்டம் ஓர் ஓரங்கட்டப்பட்ட மாவட்டமாக, ஒதுக்கப்பட்ட மாவட்டமாக தள்ளப்பட்டிருக்கிறது, தள்ளப்பட வைத்திருக்கிறார்கள். ஏனென்றால், ஒன்றிய அரசு அதற்கு எந்தவித முக்கியத்துவமும் கொடுக்கவில்லை. எங்களுடைய மாவட்டத்துக்கு முக்கியத்துவம் கொடுக்கவில்லை. எங்களுடைய மாவட்டத்தினுடைய நலனைப் பேணவில்லை. எங்களுடைய மாவட்டம் சிறிய மாவட்டம், வளமான மாவட்டம்; கல்வியிலே, கலாச்சாரத்திலே வளர்ந்த மாவட்டம். ஆனால், மற்ற மாவட்டங்களிலுள்ள சாலைகளைப் பார்க்கிறபோது, எங்களுடைய மாவட்டத்தினுடைய நிலைமை மிகவும் பாதிக்கப்பட்டிருக்கிறது. அதனால், நாங்கள் மிகவும் குன்றியிருக்கிறோம். மாண்புமிகு அமைச்சர் அவர்கள்தானே இந்தப் பணியைச் செய்ய வேண்டும். தாங்கள்தான்

பொறுப்பேற்று, ஒதுக்கப்பட்டிருக்கக்கூடிய, மோசமான நிலையில் இருக்கக்கூடிய அந்தப் பணிகளை உடனடியாக ஆரம்பித்து, வெகு சீக்கிரத்திலே அந்தப் பணிகளை மேற்கொள்வதற்குரிய ஏற்பாடுகளை இந்த அரசுமூலம் செய்ய வேண்டும். இதில் ஏன் இந்த பின்தங்கல்?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், சுருக்கமாக உரையை முடியுங்கள்.

திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: இன்னும் கொஞ்ச நேரம் பேச எனக்கு வாய்ப்புக் கொடுங்கள். கன்னியாகுமரி World Tourism Centre ஆகும். இந்தமாதிரி வாய்ப்பு வேறு எங்குமே இல்லை. கன்னியாகுமரி-களியக்காவிளை சாலை முடக்கப்பட்டிருக்கிறது என்று சொன்னால், ஒரு வருடத்தில் மட்டும் 20 சதவிகிதம் அளவுக்கு நஷ்டம் வருகிறது. அதாவது, இந்த காலதாமதத்தால், டெண்டருக்கு அதிகமாகப் பணம் கொடுக்கக்கூடிய நிலைமை வருகிறது. முக்கியமாக, அங்குள்ள பிரச்சினைகளில் நான் சொல்லக்கூடியது என்னவென்றால். . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், இன்னொரு கேள்வி இருக்கிறது. (குறுக்கீடு) மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்லட்டும். (குறுக்கீடு)

திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: நான் பேசி முடித்த பின்னர் அவர் பேசட்டும். மண் பிரச்சினை அங்கே இருக்கிறது. மண் பிரச்சினை இருந்தால், பக்கத்து மாநிலத்தில் எடுத்துக்கொள்ளலாம். மாவட்ட நிருவாகத்தினர் ஏற்கெனவே NHAI அதிகாரிகளுடன் சேர்ந்து கேட்டிருக்கிறார்கள், பேசியிருக்கிறார்கள். அது போதாது. முக்கியமாக மண் கிடைக்க வேண்டுமென்றால்—இன்றைக்கு ஆயிரக்கணக்கான குளங்கள் தூர்வாரப்படாமல் இருக்கின்றன. அந்த மண்ணைக் கொடுப்பதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்களும், மாவட்ட நிருவாகமும் ஏற்பாடு செய்ய வேண்டும். ஏனென்றால், நிச்சயமாக மண்ணைக் கொடுத்துவிடலாம். அப்படியில்லை என்றால், பக்கத்து மாவட்டத்தில் திருநெல்வேலியில் இருந்து எடுத்துக்கொள்ளலாம். பக்கத்து மாநிலத்தில் இருந்து எடுப்பதற்கு என்ன வசதி இருக்கிறது? Transport வசதியா இருக்கிறது? போக்குவரத்து வசதி இல்லாததால் அங்கு ஏராளமான accidents மற்றும் பல்வேறு பிரச்சினைகள் ஏற்படுகின்றன. இதுமட்டுமல்ல, கேரளாவுக்கு முக்கிய பணிகளுக்காகச் செல்லும்போது விமானச் சேவை மற்றும் சரியான சாலை வசதிகள் இல்லை. மிகக் குறுகிய சாலைகளாகத்தான் இருக்கின்றன. அதுகுறித்து நம்முடைய

[திரு. ஜே.ஜி. பிரின்ஸ்] [2023 ஏப்ரல் 13

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கும் தெரியும். அங்குள்ள மக்கள் மிகவும் கஷ்டப்படுகிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், இன்னொரு கேள்வி இருக்கிறது.

திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: 12 வருவாய்க் கிராமங்களுக்கு சரியாக இழப்பீடு வழங்கவில்லை. அவர்கள் அழுது கொண்டிருக்கிறார்கள். நீதிமன்றத்திற்குச் சென்றிருக்கிறார்கள். நான் உங்களை வேண்டி கேட்டுக்கொள்வது என்னவென்றால், தயவுகூர்ந்து அவர்களுக்கு நீங்கள் settlement செய்யுங்கள். கலெக்டரிடம் சொல்லி ஒரு பிரயோஜனமும் இல்லை. நீங்கள்தான் involve ஆகி, நேரில் வந்து பார்த்து, எல்லாம் செய்கிறேன் என்று என்னிடம் சொன்னீர்கள். பேசிக் கொண்டிருப்பதில் எந்த அர்த்தமும் இல்லை. Basically, இந்த நாட்டினுடைய நலனைப் பேணுவதற்கு, இந்த அரசு என்ன செய்ய வேண்டுமென்று நான் சொல்கிறேன். ஏனென்றால், ** precious land, ஒரு சென்ட் பூமி. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ** பேசியதெல்லாம் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது.

திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கேரளாவில் ஒரு சென்ட் நிலம் ஒரு இலட்சம் ரூபாய் என்றால், ரூ.3 இலட்சம் கொடுக்கிறார்கள். அங்கு பப்பாளி மரத்திற்கு இழப்பீட்டுத் தொகையாக ரூ.50 ஆயிரம் கொடுக்கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், நீங்கள் debate-ல் பேசுவது போன்று பேசாதீர்கள். (குறுக்கீடு) ஒரு கேள்வி கேளுங்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்வார்கள். (குறுக்கீடு) நீங்கள் மானியக் கோரிக்கையில் பேசுவது மாதிரி பேசிக் கொண்டிருந்தால் எப்படி உங்களை allow செய்ய முடியும்? (குறுக்கீடு) இன்று, மாண்புமிகு அமைச்சர்கள் 5 பேர் பதில் சொல்ல வேண்டும். (குறுக்கீடு) நீங்கள் கேள்விக்கு வாருங்கள்.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

2023 ஏப்ரல் 13]

திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: Give me limited time. I don't want much more time, just let me submit this. கொஞ்சம் wait பண்ணுங்கள். அந்த நஷ்ட ஈடு கொடுக்காததால், இன்றைக்கு ** அந்த விவசாய மக்கள், யார் சொத்துக்களை இழந்தார்களோ, கொடுத்தார்களோ, அவர்களுக்கு நஷ்ட ஈடு கொடுக்காததால் Court-க்கு ** அவர்களிடம் நீங்கள் பேசி முடிக்க வேண்டும். அதற்குரிய நடவடிக்கையை எடுப்பீர்களா, சீக்கிரம் அந்தப் பணிகளைத் துவக்குவீர்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

பிற்பகல் 12–05

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எ.வ. வேலு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் சொன்ன அந்தச் சாலை, மாநில சாலை அல்ல. அது தேசிய நெடுஞ்சாலை எண் 47 (புதிய எண் 66) ஆகும். இது 53 கி.மீ. நீளம் உள்ள சாலை. உறுப்பினர் சொன்னதுபோல், வெகுகாலமாக கன்னியாகுமரி மாவட்டத்தில் அந்தச் சாலை போடப்படாமல் அப்படியே இருந்தது. தமிழ்நாட்டின் முதலமைச்சர் அவர்கள் பொறுப்பேற்ற பின்பு, மாநில நெடுஞ்சாலையில் எந்த அளவு முன்னேற்றம் இருக்கிறது, தேசிய நெடுஞ்சாலையை எந்த அளவுக்கு முன்னேற்ற வேண்டியுள்ளது, தேசிய நெடுஞ்சாலை ஆணையத்தின்கீழ் அமைக்கப்படும் சாலைகளை எந்த அளவு முன்னேற்ற வேண்டியுள்ளது என்று review செய்ததன் அடிப்படையில்தான், கன்னியாகுமரி மாவட்டத்தில் இவ்வளவுகாலமாக இந்தச் சாலை பணி நிலுவையில் இருக்கிறது என்று தெரிந்த காரணத்தினால், அரசின் சார்பாக அதற்கு நாங்கள் முயற்சி எடுத்தோம். அப்போது ஒப்பந்ததாரர்கள் என்ன சொன்னார்களென்றால், இங்கே கிராவல் எடுக்க முடியவில்லை. இங்கே மண் எடுக்க முடியவில்லை. அதற்குக் காரணம், கன்னியாகுமரி மாவட்டத்தில் மலைப் பகுதி மேம்பாட்டிற்கென ஓர் அமைப்பு இருக்கிறது. அதனால் கிராவல், மண் எடுக்க முடியாத காரணத்தால் எங்களால் சாலை அமைக்க முடியவில்லை என்று சொல்லிக்கொண்டிருந்தார்கள். மீண்டும்

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

ஒன்றிய அமைச்சர் திரு. நிதின் கட்கரி அவர்களைச் சந்தித்து சொன்னபோது, அந்த ஒப்பந்தத்தை இரத்து செய்துவிட்டார்கள். அந்தப் பணியைச் செய்வதற்கு லாயக்கு இல்லை என்று இரத்து செய்தார்கள், அவர்களும் போய்விட்டார்கள். அதற்குப் பின்னால், மீண்டும் ஒரு முயற்சி எடுத்ததன் அடிப்படையில்தான், நானே நேரடியாக இந்தத் துறையின் செயலாளர், மாவட்ட ஆட்சித் தலைவர், தேசிய நெடுஞ்சாலை ஆணையத்தின் அதிகாரிகளையெல்லாம் அழைத்துப் பேசி இதற்கு ஒரு முடிவு எடுக்க வேண்டுமென்று 16–12–2022 அன்று ஓர் ஆய்வுக் கூட்டத்தை நடத்தியதன் விளைவாகத்தான், இப்போது பக்கத்து மாவட்டத்தில் மண் எடுப்பது என்று முடிவு செய்யப்பட்டுள்ளது. இதுகுறித்து ஒன்றிய அரசாங்கத்திற்குத் தகவல் அனுப்பிய பின்புதான் 31–3–2023 இல் 1,041 கோடி ரூபாய்க்கு எஞ்சியிருக்கின்ற 23 கிலோ மீட்டர் சாலையைப் போடுவதற்கு டெண்டர் கோரப்பட்டு இருக்கிறது. மாநில அரசாங்கத்தைப் பொறுத்தவரையில், மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்டுள்ளதைப் போல, ஒன்று பக்கத்து மாவட்டத்திலிருந்து மண் எடுத்து கொடுப்பதற்கோ அல்லது மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சரிடத்தில் கலந்தாலோசித்து அந்த மாவட்டத்திலுள்ள குளங்களை தூர்வாருவதன்மூலமாக அந்த மண்ணை எடுப்பதற்கோ இந்த அரசு முயற்சிகளை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேநேரத்தில், நில எடுப்புப் பிரச்சினையைப் பொறுத்தளவிற்கு, பெரும்பான்மையான இடங்களில் நில எடுப்புப் பணி முடிந்துவிட்டது. சில இடங்களில் மட்டும் நிலம் எடுக்க வேண்டியுள்ளது. அவர்களை நேரடியாக அழைத்து அரசாங்கம் பேச முடியாது. காரணம் என்னவென்று சொன்னால், அதில் ஏற்கெனவே நான் குறிப்பிட்டதைப்போல, அது தேசிய நெடுஞ்சாலை ஆணையம் சம்பந்தப்பட்ட திட்ட மதிப்பீட்டிலே செய்யப்படுகிற பணிகள். ஆனாலும்கூட, அவர்கள் உயர் நீதிமன்றத்திற்குச் சென்றிருக்கிறார்கள். மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களிடத்தில், அவர்களை அழைத்துப் பேசி வழக்கை விரைவாக நடத்தி நிலங்கள் எடுக்கலாம், அந்தச் சாலைகளைப் போடலாம் என்று சொல்லியிருக்கிறேன். தொடர்ந்து இந்த அரசு அதற்கு வேண்டிய முயற்சியைச் செய்து, தேசிய நெடுஞ்சாலை ஆணையத்தின் பணிகளுக்கு மாநில அரசாங்கம் வேண்டிய உதவிகளைச் செய்து, அந்தச் சாலைகள் போடப்படும்.

2023 ஏப்ரல் 13]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ் அவர்கள்.

திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் சொன்ன கருத்துகளையும், அவர் சொன்ன வார்த்தைகளையும் நான் ஏற்கின்றேன். நன்றி சொல்கின்றேன். அதேவேளையில், மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது 12 கிராமங்களில், Revenue Village-களில் அந்தப் பாதிப்பு வந்திருக்கிறது. ஒரு village-இல், ஒரு survey number-ல் ஒரு இலட்சம் ரூபாய் நஷ்ட ஈடு கொடுக்கிறார் என்றால், அடுத்த survey number-ல் ரூ.20,000 கொடுக்கிறார்கள். ஏன் இந்த partiality? இந்த வகையில் அங்கு பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். அப்படிப்பட்ட partiality-ஐ எல்லாம் நீக்கி, சீக்கிரமாக ஒரு குழு அமைத்து, உடனடியாக பாதிக்கப்பட்ட மக்களை அழைத்து court case-களை எல்லம் withdraw செய்யச் சொல்ல வேண்டும். ஏனென்றால், 20 வருடங்கள் பின்தங்கியிருக்கின்றோம். Because of the 4-way lane, சாலை சரியில்லாமல் நாங்கள் 20 வருடங்கள் பின்தங்கியிருக்கிறோம். No.1-ஆக வளர்ந்துள்ள மாவட்டங்களோடு ஒப்பிடுகையில் நாங்கள் பின்தங்கியிருக்கிறோம் என்பதை வேதனையோடு சொல்கிறேன். உரிமையோடு கேட்கிறோம், மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் செய்வார்கள் என்ற நம்பிக்கையோடு, இந்த அரசு செய்யும் என்ற நம்பிக்கையோடு, மாண்புமிகு முதல்வர் அவர்கள் தக்க ஏற்பாடுகளை, ஒத்தாசைகளை தருவார்கள் என்ற நம்பிக்கையோடு நான் அரசின் கவனத்தை ஈர்க்கின்றேன். தயவுகூர்ந்து சீக்கிரம் செய்து தாருங்கள். நன்றி.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எ.வ. வேலு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்படி அந்தச் சாலையை விரைந்து போட வேண்டுமென்ற அடிப்படையில்தான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நெடுஞ்சாலைத் துறையில் பணியாற்றிக் கொண்டிருந்த திரு. ஸ்ரீதர், I.A.S., என்பவரை அங்கே மாவட்ட ஆட்சித் தலைவராக போட்டால் நிலங்களை கையகப்படுத்தி உடனடியாக சாலைகள் அமைக்கப்பட்டுவிடும் என்கின்ற அடிப்படையிலே, அவர் மாவட்ட ஆட்சித் தலைவராக பணியமர்த்தப்பட்டுள்ளார். அவரிடத்தில், நேரடியாகவும், தொலைபேசி மூலமாகவும்

தெரிவித்திருக்கின்றேன். 'இந்தப் பிரச்சினைக்கு உடனே தீர்வு காணுங்கள்' என்று சொல்லியிருக்கின்றேன். இதுகுறித்து ஏற்கெனவே, கேள்வி நேரத்தில் நான் பேசுகின்றபோது, இந்தக் கூட்டத் தொடர் முடிந்தவுடன், நானே நேரடியாக கன்னியாகுமரி மாவட்டத்திற்குச் சென்று, தொய்வு ஏற்பட்டுள்ள பணிகளையெல்லாம் விரைந்து செய்வதற்கு முடிவு செய்திருக்கின்றேன் என்று கூறியிருந்தேன். இந்தப் பணிகளையும் இணைத்து, மாவட்ட ஆட்சித் தலைவர் தலைமையில் உடனே அவர்களை அழைத்து settlement-*க்கு என்ன செய்ய முடியுமோ அதைச் செய்வோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

பிற்பகல் 12–10

6. அரசினர் சட்டமுன்வடிவு (அறிமுகம் செய்தல்)

தமிழ்நாடு கடைகள் மற்றும் நிறுவனங்கள் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2023

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அரசினர் சட்டமுன்வடிவு (அறிமுகம் செய்தல்). 2023 ஆம் ஆண்டு தமிழ்நாடு கடைகள் மற்றும் நிறுவனங்கள் (திருத்தச்) சட்டமுன்வடிவு. மாண்புமிகு தொழிலாளர் நலன்-திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. சி.வி. கணேசன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

"2023 ஆம் ஆண்டு தமிழ்நாடு கடைகள் மற்றும் நிறுவனங்கள் (திருத்தச்) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு தொழிலாளர் நலன்-திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.*

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

2023 ஏப்ரல் 13] [பேரவைத் தலைவர்]

மாண்புமிகு தொழிலாளர் நலன்-திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடு) இல்லை, இல்லை, இதை அறிமுகம்தானே செய்கிறோம். (குறுக்கீடு) பதிவு செய்யுங்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.பி. நாகைமாலி அவர்கள்.

திரு. வி.பி. நாகைமாலி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த சட்டமுன்வடிவு நல்ல சட்டமுன்வடிவு, அதை நான் ஆதரிக்கிறேன். அதிலே ஆண்களுக்கும், பெண்களுக்கும் தனித்தனியாக ஓய்வறை. . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *இது* debate *இல்லை, ஆய்வுக்கு வரும் நாளில் பேசலாம். இது அறிமுகம்தான். அறிமுக நிலையிலேயே எதிர்க்கிறேன் என ஒரே வார்த்தை சொல்லிவிட்டு உட்காருங்கள்.*

திரு. வி.பி. நாகைமாலி: *இந்தச் சட்டமுன்வடிவை நான் எதிர்க்கவில்லை.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *ஆதரிக்கிறேன் அல்லது எதிர்க்கிறேன் என்று கூறுங்கள்.*

திரு. வி.பி. நாகைமாலி: *நான் எதிர்க்கவில்லை. சட்டமுன்வடிவில் திருத்தம்தான் கேட்கிறேன், சட்டத்தை ஆதரிக்கிறேன். ஆண்களுக்கும் பெண்களுக்கும் தனியாக ஓய்வறை வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அதைச் சட்டமுன்வடிவை ஆய்வு செய்யும்போது சொல்லுங்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. ட்டி. இராமச்சந்திரன் அவர்கள்.*

திரு. ட்டி. இராமச்சந்திரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் திருத்தத்தை முன்மொழிகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு தொழிலாளர் நலன்-திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. சி.வி. கணேசன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.*

7. மானியக் கோரிக்கைகள், 2023–2024, விவாதமும் வாக்கெடுப்பும்—*தொடர்ச்சி*

(அ) கோரிக்கை எண் 9–பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை

(ஆ) கோரிக்கை எண் 18–கதர், கிராமத் தொழில்கள் மற்றும் கைவினைப் பொருட்கள் (கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை)

(இ) கோரிக்கை எண் 15–சுற்றுச் சூழல் மற்றும் காலநிலை மாற்றம் (சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத் துறை)

(ஈ) கோரிக்கை எண் 54–வனம் (சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத் துறை)

(அ) கோரிக்கை எண் 9–பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *2023–2024 ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கைகள்மீது விவாதமும் வாக்கெடுப்பும். மானியக் கோரிக்கை எண் 9–பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை, மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

****மாண்புமிகு திரு. R.S. ராஜகண்ணப்பன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

“பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை பற்றிய 9 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.1,224,78,08,000/–, மூலதனக் கணக்கில் ரூ.352,32,93,000/– மற்றும் கடன் கணக்கில் ரூ.1,000/– ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்”

எனக் கோருகிறேன்.

2023 ஏப்ரல் 13]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வெட்டுத் தீர்மானங்கள் முன்மொழிதல். வெட்டுத் தீர்மானம் எண் 174, மாண்புமிகு உறுப்பினர் திரு. தி. ராமச்சந்திரன்.*

***திரு. தி. ராமச்சந்திரன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:*

"பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை பற்றிய 9 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,224,78,08,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.352,32,93,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வெட்டுத் தீர்மானம் எண் 210, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆ.மு. முனிரத்தினம்.*

திரு. ஆ.மு. முனிரத்தினம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:*

"பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை பற்றிய 9 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,224,78,08,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.352,32,93,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வெட்டுத் தீர்மானம் எண் 268, மாண்புமிகு உறுப்பினர் திரு. JMH. அசன் மௌலானா.*

திரு. JMH. அசன் மௌலானா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:*

"பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை பற்றிய 9 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,224,78,08,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற

ரூ.352,32,93,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 307, மாண்புமிகு உறுப்பினர் திரு. R. ராதாகிருஷ்ணன்.

திரு. R. ராதாகிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை பற்றிய 9 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,224,78,08,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.352,32,93,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 1762, மாண்புமிகு உறுப்பினர் திரு. ரூபி ஆர். மனோகரன்.

திரு. ரூபி ஆர். மனோகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை பற்றிய 9 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,224,78,08,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.352,32,93,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 3384, மாண்புமிகு உறுப்பினர் திருமதி S. விஜயதரணி.

திருமதி S. விஜயதரணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை பற்றிய 9 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற

ரூ.1,224,78,08,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.352,32,93,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 3491, மாண்புமிகு உறுப்பினர் திரு. S. பழனி நாடார், இருக்கையில் இல்லை

வெட்டுத் தீர்மானம் எண் 4755, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். கணேஷ், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 6648, மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. ராஜேஷ் குமார்.

திரு. செ. ராஜேஷ் குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை பற்றிய 9 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,224,78,08,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.352,32,93,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 356, மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. அருள்.

திரு. இரா. அருள்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை பற்றிய 9 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,224,78,08,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.352,32,93,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 2453, மாண்புமிகு உறுப்பினர் திரு. ச. சிவகுமார்.

LEGISLATIVE ASSEMBLY TRUTH ALONE TRIUMPHS

திரு. ச. சிவகுமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை பற்றிய 9 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,224,78,08,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.352,32,93,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 2879, மாண்புமிகு உறுப்பினர் திரு. S. சதாசிவம்.

திரு. S. சதாசிவம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை பற்றிய 9 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,224,78,08,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.352,32,93,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 6211, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி.கே. மணி.

திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை பற்றிய 9 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,224,78,08,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.352,32,93,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 6942, மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.பி. வெங்கடேஷ்வரன்.

2023 ஏப்ரல் 13]

திரு. எஸ்.பி. வெங்கடேஷ்வரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:*

"பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை பற்றிய 9 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,224,78,08,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.352,32,93,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வெட்டுத் தீர்மானம் எண் 666, மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. பண்ணாரி.*

திரு. அ. பண்ணாரி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:*

"பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை பற்றிய 9 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,224,78,08,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.352,32,93,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வெட்டுத் தீர்மானம் எண் 914, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஈ. பாலசுப்ரமணியன்.*

திரு. ஈ. பாலசுப்ரமணியன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:*

"பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை பற்றிய 9 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,224,78,08,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.352,32,93,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 1387, மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.வி. ராஜன் செல்லப்பா.

திரு. வி.வி. ராஜன் செல்லப்பா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை பற்றிய 9 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,224,78,08,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.352,32,93,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 1806, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர்.பி. உதயகுமார்.

திரு. ஆர்.பி. உதயகுமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை பற்றிய 9 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,224,78,08,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.352,32,93,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 2364, மாண்புமிகு உறுப்பினர் திரு. T.K. அமுல் கந்தசாமி.

திரு. T.K. அமுல் கந்தசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை பற்றிய 9 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,224,78,08,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.352,32,93,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

2023 ஏப்ரல் 13]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 2597, மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. மகேந்திரன்.

திரு. சி. மகேந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை பற்றிய 9 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,224,78,08,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.352,32,93,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 2642, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஓ.எஸ். மணியன்.

திரு. ஓ.எஸ். மணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை பற்றிய 9 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,224,78,08,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.352,32,93,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 3247, மாண்புமிகு உறுப்பினர் திரு. P.R.G. அருண்குமார்.

திரு. P.R.G. அருண்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை பற்றிய 9 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,224,78,08,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.352,32,93,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 3296, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.ஆர். ஜெயராம்.

திரு. கே.ஆர். ஜெயராம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை பற்றிய 9 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,224,78,08,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.352,32,93,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 3342, மாண்புமிகு உறுப்பினர் திரு. அம்மன் K. அர்ச்சுணன்.

திரு. அம்மன் K. அர்ச்சுணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை பற்றிய 9 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,224,78,08,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.352,32,93,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 3531, மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. கிருஷ்ணமுரளி.

திரு. செ. கிருஷ்ணமுரளி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை பற்றிய 9 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,224,78,08,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.352,32,93,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

2023 ஏப்ரல் 13]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் *3644*, மாண்புமிகு உறுப்பினர் முனைவர் இசக்கி சுப்பையா.

முனைவர் இசக்கி சுப்பையா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை பற்றிய 9 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,224,78,08,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.352,32,93,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் *4219*, மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. சக்ரபாணி.

திரு. மு. சக்ரபாணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை பற்றிய 9 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,224,78,08,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.352,32,93,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் *4548*, மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. சுந்தரராஜன்.

திரு. செ. சுந்தரராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை பற்றிய 9 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,224,78,08,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.352,32,93,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 5986, மாண்புமிகு உறுப்பினர் திரு. இ.மா. மான்ராஜ்.

திரு. இ.மா. மான்ராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை பற்றிய 9 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,224,78,08,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.352,32,93,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 2276, மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் சி. சரஸ்வதி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 3194, மாண்புமிகு உறுப்பினர் திருமதி வானதி சீனிவாசன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 3432, மாண்புமிகு உறுப்பினர் திரு. நயினார் நாகேந்திரன் இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 3756, மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.பி. நாகைமாலி.

திரு. வி.பி. நாகைமாலி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை பற்றிய 9 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,224,78,08,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.352,32,93,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 3847, மாண்புமிகு உறுப்பினர் திரு. மா. சின்னதுரை.

2023 ஏப்ரல் 13]

திரு. மா. சின்னதுரை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, “கொள்கை பற்றி” விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

“பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை பற்றிய 9 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,224,78,08,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.352,32,93,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்.”

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 5378, மாண்புமிகு உறுப்பினர் திரு. ட்டி. இராமச்சந்திரன்.

திரு. ட்டி. இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, “கொள்கை பற்றி” விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

“பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை பற்றிய 9 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,224,78,08,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.352,32,93,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்.”

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 987, மாண்புமிகு உறுப்பினர் திரு. K.A. பாண்டியன்.

திரு. K.A. பாண்டியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, “சிதம்பரம் தொகுதி, சி. முட்லூர் ஊராட்சியில் உள்ள பிற்படுத்தப்பட்டோர் விடுதியைப் புதுப்பித்து கூடுதல் கட்டடம் கட்ட வேண்டியதன் அவசியம் குறித்து” விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

“பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை பற்றிய 9 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,224,78,08,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.352,32,93,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்.”

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 1057, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆ. அருண்மொழிதேவன்.

திரு. ஆ. அருண்மொழிதேவன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் துறையின்மூலம் புவனகிரி தொகுதியில் இயங்கிவரும் மாணவ, மாணவியர் விடுதிகளை நவீனப்படுத்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை பற்றிய 9 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,224,78,08,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.352,32,93,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 1608, மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. தாமோதரன்.

திரு. செ. தாமோதரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கிணத்துக்கடவு தொகுதியில் வீடில்லாத பிற்படுத்தப்பட்டோருக்கு அரசு நிலம் வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை பற்றிய 9 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,224,78,08,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.352,32,93,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 1880, மாண்புமிகு உறுப்பினர் திரு. K.C. கருப்பணன்.

திரு. K.C. கருப்பணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "அரசு நடத்தும் இலவச பிற்படுத்தப்பட்டோர் நல விடுதிகளில் பயிலும் மாணவர்களுக்கு வழங்கப்படும் அரசு நிதியை உயர்த்தி வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை பற்றிய 9 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,224,78,08,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.352,32,93,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 2098, மாண்புமிகு உறுப்பினர் திரு. பொ. அர்ஜுனன்.

திரு. பொ. அர்ஜுனன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திண்டிவனம் நகராட்சி 16–வது வார்டில் மிகவும் பிற்படுத்தப்பட்ட மக்கள் பயன்பாட்டிற்காக அனைத்து வசதிகளுடன் சமுதாய நலக்கூடம் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை பற்றிய 9 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,224,78,08,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.352,32,93,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 2133, மாண்புமிகு உறுப்பினர் திரு. எம்.எஸ்.எம். ஆனந்தன்.

திரு. எம்.எஸ்.எம். ஆனந்தன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "பல்லடம் தொகுதியில் இயங்கி வரும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் விடுதிகளுக்கு போதிய வசதிகளுடன்கூடிய நூலகம் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை பற்றிய 9 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,224,78,08,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.352,32,93,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 3692, மாண்புமிகு உறுப்பினர் திரு. K.N. விஜயகுமார்.

திரு. K.N. விஜயகுமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருப்பூர் வடக்கு தொகுதியில் உள்ள மாநகராட்சி பகுதியில் 33–வது வார்டில் பிற்படுத்தப்பட்டோர் நலத் துறைமூலம் நடக்கின்ற பள்ளிக்கு அடிப்படை வசதிகள் செய்து தர வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை பற்றிய 9 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,224,78,08,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.352,32,93,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 3982, மாண்புமிகு உறுப்பினர் திரு. பெரி. செந்தில்நாதன்.

திரு. பெரி. செந்தில்நாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சிவகங்கை தொகுதிக்குட்பட்ட சூசையப்பர்பட்டினம் பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை பள்ளி மாணவிகளுக்கான விடுதிக்குக் கூடுதல் கட்டடம் மற்றும் காளையார்கோவிலில் பள்ளி மாணவிகளுக்கு பிற்படுத்தப்பட்டோர் நல விடுதி கட்ட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை பற்றிய 9 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,224,78,08,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.352,32,93,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 4056, மாண்புமிகு உறுப்பினர் திரு. கி. அசோக்குமார்.

திரு. கி. அசோக்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தமிழகத்தில் உள்ள அனைத்து பிற்படுத்தப்பட்டோர்

மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை மாணவ/மாணவிகளின் விடுதிகளில் இரவுக் காவலர் பணியிடங்களை நிரப்பிடவும், உளவியல் சார்ந்த பயிற்சிகளையும் வழங்கிட நடவடிக்கை எடுக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை பற்றிய 9 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,224,78,08,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.352,32,93,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 4130, மாண்புமிகு உறுப்பினர் திரு. சேவூர் S. இராமச்சந்திரன்.

திரு. சேவூர் S. இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ஆரணி தொகுதியில் அரசுப் பள்ளியில் படிக்கும் பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மாணவ, மாணவியர்களுக்கு கூடுதல் விடுதிகள் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை பற்றிய 9 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,224,78,08,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.352,32,93,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 4621, மாண்புமிகு உறுப்பினர் திரு. துரை. சந்திரசேகர்.

திரு. துரை. சந்திரசேகர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருவள்ளூர் மாவட்டம், பொன்னேரி தொகுதி, மீஞ்சூர் பேரூராட்சியில் உள்ள வார்டு எண் 2–ல் வசிக்கும் சிறுபான்மை இஸ்லாமிய மக்களுக்கு சமுதாயக் கூடம் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை பற்றிய 9 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,224,78,08,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.352,32,93,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 4914, மாண்புமிகு உறுப்பினர் திரு. வே. சம்பத்குமார்.

திரு. வே. சம்பத்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "அரூர் தொகுதியில் அரசுக் கலைக் கல்லூரி மாணவர்களுக்கு பிற்படுத்தப்பட்டோர் நல விடுதி அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை பற்றிய 9 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,224,78,08,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.352,32,93,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 4957, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.பி. அன்பழகன்.

திரு. கே.பி. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "பாலக்கோட்டில் அரசு கலைக் கல்லூரியில் பிற்படுத்தப்பட்டோர் நல விடுதி துவங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை பற்றிய 9 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,224,78,08,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.352,32,93,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

2023 ஏப்ரல் 13]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வெட்டுத் தீர்மானம் எண் 4998, மாண்புமிகு உறுப்பினர் திரு. S. ஜெயக்குமார்.*

திரு. S. ஜெயக்குமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "பெருந்துறை தொகுதி, ஊத்துக்குளி, காஞ்சி கோயில் பகுதிகளில் பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் கல்வி விடுதிகள் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:*

"பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை பற்றிய 9 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,224,78,08,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.352,32,93,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வெட்டுத் தீர்மானம் எண் 5043, மாண்புமிகு உறுப்பினர் திரு. S.S. பாலாஜி.*

திரு. S.S. பாலாஜி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தலித், கிறிஸ்தவர்களை பட்டியல் இனத்தில் சேர்க்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:*

"பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை பற்றிய 9 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,224,78,08,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.352,32,93,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வெட்டுத் தீர்மானம் எண் 5502, மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. காமராஜ்.*

திரு. இரா. காமராஜ்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "நன்னிலம் தொகுதி குடவாசலில் பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை சார்பாக மாணவியர் விடுதி அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:*

"பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை பற்றிய 9 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,224,78,08,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.352,32,93,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 5600, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ்.

திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சிறுபான்மை கல்வி நிறுவனங்களில் காலிப் பணியிடங்களை நிரப்ப வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை பற்றிய 9 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,224,78,08,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.352,32,93,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 5875, மாண்புமிகு உறுப்பினர் திருமதி கு. மரகதம் குமரவேல்.

திருமதி கு. மரகதம் குமரவேல்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "புனிதப் பயணத்திற்காக வழங்கப்படும் உதவித் தொகை, அரிசி போன்றவற்றை உயர்த்தி வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை பற்றிய 9 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,224,78,08,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.352,32,93,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 5934, மாண்புமிகு உறுப்பினர் திரு. பெ. பெரியபுள்ளான் என்கிற செல்வம்.

2023 ஏப்ரல் 13]

திரு. பெ. பெரியபுள்ளான் என்கிற செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, “சீர்மரபினரை (DNC) சீர்மரபினர் பழங்குடியினர் (DNT) பட்டியலில் சேர்க்க வேண்டியதன் அவசியம் குறித்து” விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

“பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை பற்றிய 9 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,224,78,08,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.352,32,93,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்.”

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 6546, மாண்புமிகு உறுப்பினர் திரு. பி. அய்யப்பன். இருக்கையில் இல்லை. வெட்டுத் தீர்மானம் எண் 6821, மாண்புமிகு உறுப்பினர் திரு. AK. செல்வராஜ்.

திரு. A.K. செல்வராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, “மேட்டுப்பாளையம் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி மாணவர்கள், விடுதியில் தங்கிப் படிக்க பிற்படுத்தப்பட்டோர் நல விடுதி கட்ட வேண்டியதன் அவசியம் குறித்து” விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

“பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை பற்றிய 9 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,224,78,08,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.352,32,93,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்.”

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 7082, மாண்புமிகு உறுப்பினர் திரு. V.P. கந்தசாமி.

திரு. V.P. கந்தசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, “கோவை மாவட்டம், சூலூர் தொகுதிக்குட்பட்ட சூலூரில் வசிக்கும் முஸ்லிம்களுக்கு அரசு கொடுத்த பட்டா நிலங்களை அளவீடு செய்து கொடுக்க வேண்டியதன் அவசியம் குறித்து” விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை பற்றிய 9 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,224,78,08,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.352,32,93,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 7212, மாண்புமிகு உறுப்பினர் திரு. அக்ரி. எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி.

திரு. அக்ரி. எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "போளூர் பேரூராட்சி, அரசினர் பெண்கள் மேல்நிலைப் பள்ளி மாணவிகள் விடுதிக்கு கூடுதல் கட்டடம் கட்ட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை பற்றிய 9 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,224,78,08,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.352,32,93,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 7427, மாண்புமிகு உறுப்பினர் திரு. S. ராஜகுமார்.

திரு. S. ராஜகுமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மயிலாடுதுறை தொகுதியில் சிறுபான்மையினர் பள்ளி, கல்லூரி மாணவர் விடுதிக்கு கட்டடம் கட்ட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை பற்றிய 9 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,224,78,08,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.352,32,93,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

2023 ஏப்ரல் 13]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வெட்டுத் தீர்மானம் எண் 7477, மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.பி. வேலுமணி.*

திரு. எஸ்.பி. வேலுமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கோயம்புத்தூர் மாவட்டம், தொண்டாமுத்தூர் தொகுதி, ஆலந்துறை, தொண்டாமுத்தூர், பேரூர், பிற்படுத்தப்பட்டோர் மாணவர்கள் நல விடுதியில் கழிப்பிடம், கட்டடப் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:*

"பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை பற்றிய 9 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,224,78,08,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.352,32,93,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

(ஆ) கோரிக்கை எண் 18–கதர், கிராமத் தொழில்கள் மற்றும் கைவினைப் பொருட்கள் (கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மானியக் கோரிக்கை எண் 18–கதர், கிராமத் தொழில்கள் மற்றும் கைவினைப் பொருட்கள் (கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை), மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. R.S. ராஜகண்ணப்பன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

"கதர், கிராமத் தொழில்கள் மற்றும் கைவினைப் பொருட்கள் (கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை) பற்றிய 18 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.224,86,93,000/–க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வெட்டுத் தீர்மானங்கள் முன்மொழிதல். வெட்டுத் தீர்மானம் எண் 201, மாண்புமிகு உறுப்பினர் திரு. தி. ராமச்சந்திரன்.*

திரு. தி. ராமச்சந்திரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:*

"கதர், கிராமத் தொழில்கள் மற்றும் கைவினைப் பொருட்கள் (கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை) பற்றிய 18 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.224,86,93,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வெட்டுத் தீர்மானம் எண் 219, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆ.மு. முனிரத்தினம்.*

திரு. ஆ.மு. முனிரத்தினம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:*

"கதர், கிராமத் தொழில்கள் மற்றும் கைவினைப் பொருட்கள் (கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை) பற்றிய 18 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.224,86,93,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வெட்டுத் தீர்மானம் எண் 281, மாண்புமிகு உறுப்பினர் திரு. JMH. அசன் மௌலானா.*

திரு. JMH. அசன் மௌலானா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:*

"கதர், கிராமத் தொழில்கள் மற்றும் கைவினைப் பொருட்கள் (கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை) பற்றிய 18 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.224,86,93,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வெட்டுத் தீர்மானம் எண் 316, மாண்புமிகு உறுப்பினர் திரு. R. ராதாகிருஷ்ணன்.*

திரு. R. ராதாகிருஷ்ணன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:*

"கதர், கிராமத் தொழில்கள் மற்றும் கைவினைப் பொருட்கள் (கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை) பற்றிய 18 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.224,86,93,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 1765, மாண்புமிகு உறுப்பினர் திரு. ரூபி ஆர். மனோகரன்.

திரு. ரூபி ஆர். மனோகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கதர், கிராமத் தொழில்கள் மற்றும் கைவினைப் பொருட்கள் (கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை) பற்றிய 18 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.224,86,93,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 3391, மாண்புமிகு உறுப்பினர் திருமதி S. விஜயதரணி.

திருமதி S. விஜயதரணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கதர், கிராமத் தொழில்கள் மற்றும் கைவினைப் பொருட்கள் (கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை) பற்றிய 18 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.224,86,93,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 3499, மாண்புமிகு உறுப்பினர் திரு. S. பழனி நாடார், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 4779, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். கணேஷ், இருக்கையில் இல்லை

வெட்டுத் தீர்மானம் எண் 374, மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. அருள்.

திரு. இரா. அருள்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கதர், கிராமத் தொழில்கள் மற்றும் கைவினைப் பொருட்கள் (கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை) பற்றிய 18 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.224,86,93,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 2474, மாண்புமிகு உறுப்பினர் திரு. ச. சிவகுமார்.

திரு. ச. சிவகுமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கதர், கிராமத் தொழில்கள் மற்றும் கைவினைப் பொருட்கள் (கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை) பற்றிய 18 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.224,86,93,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 2894, மாண்புமிகு உறுப்பினர் திரு. S. சதாசிவம்.

திரு. S. சதாசிவம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கதர், கிராமத் தொழில்கள் மற்றும் கைவினைப் பொருட்கள் (கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை) பற்றிய 18 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.224,86,93,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 6285, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி.கே. மணி.

திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கதர், கிராமத் தொழில்கள் மற்றும் கைவினைப் பொருட்கள் (கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை) பற்றிய 18 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.224,86,93,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

2023 ஏப்ரல் 13]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 6970, மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.பி. வெங்கடேஷ்வரன்.

திரு. எஸ்.பி. வெங்கடேஷ்வரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கதர், கிராமத் தொழில்கள் மற்றும் கைவினைப் பொருட்கள் (கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை) பற்றிய 18 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.224,86,93,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 665, மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. பண்ணாரி.

திரு. அ. பண்ணாரி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கதர், கிராமத் தொழில்கள் மற்றும் கைவினைப் பொருட்கள் (கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை) பற்றிய 18 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.224,86,93,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 913, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஈ. பாலசுப்ரமணியன்.

திரு. ஈ. பாலசுப்ரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கதர், கிராமத் தொழில்கள் மற்றும் கைவினைப் பொருட்கள் (கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை) பற்றிய 18 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.224,86,93,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 1055, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆ. அருண்மொழிதேவன்.

திரு. ஆ. அருண்மொழிதேவன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கதர், கிராமத் தொழில்கள் மற்றும் கைவினைப் பொருட்கள் (கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை) பற்றிய 18 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.224,86,93,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 1386, மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.வி. ராஜன் செல்லப்பா, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 1803, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர்.பி. உதயகுமார்.

திரு. ஆர்.பி. உதயகுமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கதர், கிராமத் தொழில்கள் மற்றும் கைவினைப் பொருட்கள் (கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை) பற்றிய 18 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.224,86,93,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 2371, மாண்புமிகு உறுப்பினர் திரு. T.K. அமுல் கந்தசாமி.

திரு. T.K. அமுல் கந்தசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கதர், கிராமத் தொழில்கள் மற்றும் கைவினைப் பொருட்கள் (கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை) பற்றிய 18 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.224,86,93,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 2604, மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. மகேந்திரன்.

2023 ஏப்ரல் 13]

திரு. சி. மகேந்திரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:*

"கதர், கிராமத் தொழில்கள் மற்றும் கைவினைப் பொருட்கள் (கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை) பற்றிய 18 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.224,86,93,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வெட்டுத் தீர்மானம் எண் 2651, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஓ.எஸ். மணியன்.*

திரு. ஓ.எஸ். மணியன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:*

"கதர், கிராமத் தொழில்கள் மற்றும் கைவினைப் பொருட்கள் (கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை) பற்றிய 18 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.224,86,93,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வெட்டுத் தீர்மானம் எண் 3256, மாண்புமிகு உறுப்பினர் திரு.* P.R.G. *அருண்குமார்.*

திரு. P.R.G. அருண்குமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:*

"கதர், கிராமத் தொழில்கள் மற்றும் கைவினைப் பொருட்கள் (கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை) பற்றிய 18 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.224,86,93,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

பிற்பகல் 12–15

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வெட்டுத் தீர்மானம் எண் 3305, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.ஆர். ஜெயராம்.*

திரு. கே.ஆர். ஜெயராம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:*

"கதர், கிராமத் தொழில்கள் மற்றும் கைவினைப் பொருட்கள் (கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை) பற்றிய 18 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.224,86,93,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் *3351*, மாண்புமிகு உறுப்பினர் திரு. அம்மன் K. அர்ச்சுணன்.

திரு. அம்மன் K. அர்ச்சுணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கதர், கிராமத் தொழில்கள் மற்றும் கைவினைப் பொருட்கள் (கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை) பற்றிய 18 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.224,86,93,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் *3539*, மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. கிருஷ்ணமுரளி.

திரு. செ. கிருஷ்ணமுரளி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கதர், கிராமத் தொழில்கள் மற்றும் கைவினைப் பொருட்கள் (கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை) பற்றிய 18 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.224,86,93,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் *3653*, மாண்புமிகு உறுப்பினர் முனைவர் இசக்கி சுப்பையா.

முனைவர் இசக்கி சுப்பையா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கதர், கிராமத் தொழில்கள் மற்றும் கைவினைப் பொருட்கள் (கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை) பற்றிய 18 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.224,86,93,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

2023 ஏப்ரல் 13]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வெட்டுத் தீர்மானம் எண் 4226, மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. சக்ரபாணி.*

திரு. மு. சக்ரபாணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:*

"கதர், கிராமத் தொழில்கள் மற்றும் கைவினைப் பொருட்கள் (கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை) பற்றிய 18 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.224,86,93,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வெட்டுத் தீர்மானம் எண் 4557, மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. சுந்தரராஜன்.*

திரு. செ. சுந்தரராஜன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:*

"கதர், கிராமத் தொழில்கள் மற்றும் கைவினைப் பொருட்கள் (கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை) பற்றிய 18 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.224,86,93,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வெட்டுத் தீர்மானம் எண் 5993, மாண்புமிகு உறுப்பினர் திரு. இ.மா. மான்ராஜ்.*

திரு. இ.மா. மான்ராஜ்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:*

"கதர், கிராமத் தொழில்கள் மற்றும் கைவினைப் பொருட்கள் (கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை) பற்றிய 18 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.224,86,93,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வெட்டுத் தீர்மானம் எண் 7261, மாண்புமிகு உறுப்பினர் திரு. அக்ரி. எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி.*

திரு. அக்ரி. எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கதர், கிராமத் தொழில்கள் மற்றும் கைவினைப் பொருட்கள் (கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை) பற்றிய 18 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.224,86,93,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 2285, மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் சி. சரஸ்வதி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 3238, மாண்புமிகு உறுப்பினர் திருமதி வானதி சீனிவாசன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 3441, மாண்புமிகு உறுப்பினர் திரு. நயினார் நாகேந்திரன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 5387, மாண்புமிகு உறுப்பினர் திரு. ட்டி. இராமச்சந்திரன்.

திரு. ட்டி. இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கதர், கிராமத் தொழில்கள் மற்றும் கைவினைப் பொருட்கள் (கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை) பற்றிய 18 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.224,86,93,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 5462, மாண்புமிகு உறுப்பினர் திரு. K. மாரிமுத்து.

திரு. K. மாரிமுத்து: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கதர், கிராமத் தொழில்கள் மற்றும் கைவினைப் பொருட்கள் (கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை) பற்றிய 18 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.224,86,93,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

2023 ஏப்ரல் 13]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வெட்டுத் தீர்மானம் எண் 984, மாண்புமிகு உறுப்பினர் திரு.* K.A. *பாண்டியன்.*

திரு. K.A. பாண்டியன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சிதம்பரம் தொகுதி, சிதம்பரம் நகரில் கதர் மற்றும் கைவினைப் பொருட்கள் கூடத்தில் விற்பனையை அதிகரிக்க கூடுதல் கதர் பொருட்கள், கைவினைப் பொருட்களை விற்பனை செய்ய வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:*

"கதர், கிராமத் தொழில்கள் மற்றும் கைவினைப் பொருட்கள் (கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை) பற்றிய 18 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.224,86,93,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வெட்டுத் தீர்மானம் எண் 1320, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ்.*

திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "பனைத் தொழிலாளர்களின் நலன் கருதி சொத்துகள், பொருட்களை கதர் கிராமத் துறையில் இருந்து வேளாண்மைத் துறைக்கு மாற்ற வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:*

"கதர், கிராமத் தொழில்கள் மற்றும் கைவினைப் பொருட்கள் (கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை) பற்றிய 18 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.224,86,93,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வெட்டுத் தீர்மானம் எண் 2100, மாண்புமிகு உறுப்பினர் திரு. பொ. அர்ஜுனன்.*

திரு. பொ. அர்ஜூனன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திண்டிவனத்தில் கைவினைப் பொருட்கள் விற்பனை செய்ய நிரந்தர விற்பனையகம் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:*

"கதர், கிராமத் தொழில்கள் மற்றும் கைவினைப் பொருட்கள் (கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை) பற்றிய 18 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.224,86,93,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 3704, மாண்புமிகு உறுப்பினர் திரு. K.N. விஜயகுமார்.

திரு. K.N. விஜயகுமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருப்பூர் வடக்கு தொகுதி, மாநகராட்சிப் பகுதிகளில் நலிவடைந்துள்ள கிராமத் தொழில்களை மேம்படுத்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கதர், கிராமத் தொழில்கள் மற்றும் கைவினைப் பொருட்கள் (கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை) பற்றிய 18 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.224,86,93,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 3773, மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.பி. நாகைமாலி.

திரு. வி.பி. நாகைமாலி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கதர் மற்றும் கைத்தறி ஆடைகளை மக்கள் அதிகமாகப் பயன்படுத்தும் வகையில், அதனை ஊக்குவித்து மேம்படுத்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கதர், கிராமத் தொழில்கள் மற்றும் கைவினைப் பொருட்கள் (கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை) பற்றிய 18 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.224,86,93,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 3848, மாண்புமிகு உறுப்பினர் திரு. மா. சின்னதுரை.

திரு. மா. சின்னதுரை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கந்தர்வகோட்டை தொகுதி, கறம்பக்குடி ஒன்றியம், நரங்கியப்பட்டு, மைலன் கோன்பட்டி, கந்தர்வகோட்டை ஒன்றியம், வெள்ளாளவிடுதி, வேம்பன்பட்டி பகுதியில் மண்பாண்டத் தொழிலை மேம்படுத்திட வங்கிக் கடன் வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கதர், கிராமத் தொழில்கள் மற்றும் கைவினைப் பொருட்கள் (கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை) பற்றிய 18 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.224,86,93,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 3993, மாண்புமிகு உறுப்பினர் திரு. பெரி. செந்தில்நாதன்.

திரு. பெரி. செந்தில்நாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கிராமத் தொழில்கள்மூலம் தயாரிக்கப்படும் கைவினைப் பொருட்களைச் சந்தைப்படுத்தும் விதமாக அரசே அவற்றை கொள்முதல் செய்ய வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கதர், கிராமத் தொழில்கள் மற்றும் கைவினைப் பொருட்கள் (கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை) பற்றிய 18 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.224,86,93,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 4147, மாண்புமிகு உறுப்பினர் திரு. சேவூர் S. இராமச்சந்திரன்.

திரு. சேவூர் S. இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ஆரணி தொகுதியில் உள்ள மண்பாண்டத் தொழிலாளர்களுக்கு மோட்டார் பொருத்திய சக்கரம் வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கதர், கிராமத் தொழில்கள் மற்றும் கைவினைப் பொருட்கள் (கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை) பற்றிய 18 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.224,86,93,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 4214, மாண்புமிகு உறுப்பினர் திரு. எம்.எஸ்.எம். ஆனந்தன்.

திரு. எம்.எஸ்.எம். ஆனந்தன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "பல்லடம் தொகுதி, மாவட்ட ஆட்சியர் அலுவலகம் அருகே உள்ள வித்யாலயத்தில் கதர், கைவினைப் பொருட்களின் விற்பனைக் கூடம் (பூம்புகார்) அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கதர், கிராமத் தொழில்கள் மற்றும் கைவினைப் பொருட்கள் (கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை) பற்றிய 18 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.224,86,93,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வெட்டுத் தீர்மானம் எண் 4921, மாண்புமிகு உறுப்பினர் திரு. வே. சம்பத்குமார்.*

திரு. வே. சம்பத்குமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "அரூர் தொகுதியில் உள்ள மலை கிராமங்களில் தேன் வளர்க்கும் தொழிலுக்கு ஊக்கத் தொகை வழங்கி விரிவுபடுத்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:*

"கதர், கிராமத் தொழில்கள் மற்றும் கைவினைப் பொருட்கள் (கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை) பற்றிய 18 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.224,86,93,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வெட்டுத் தீர்மானம் எண் 4965, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.பி. அன்பழகன்.*

திரு. கே.பி. அன்பழகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கயிறு மற்றும் கைவினைப் பொருட்கள் தொழிலை மேம்படுத்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:*

"கதர், கிராமத் தொழில்கள் மற்றும் கைவினைப் பொருட்கள் (கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை) பற்றிய 18 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.224,86,93,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வெட்டுத் தீர்மானம் எண் 5007, மாண்புமிகு உறுப்பினர் திரு. S. ஜெயக்குமார், இருக்கையில் இல்லை.*

வெட்டுத் தீர்மானம் எண் 5514, மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. காமராஜ்.

2023 ஏப்ரல் 13]

திரு. இரா. காமராஜ்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கதர் மற்றும் கைவினைப் பொருட்கள் விற்பனை செய்வதற்கு வட்டம் (தாலுகா) வாரியாக கடைகள் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:*

"கதர், கிராமத் தொழில்கள் மற்றும் கைவினைப் பொருட்கள் (கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை) பற்றிய 18 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.224,86,93,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வெட்டுத் தீர்மானம் எண் 6114, மாண்புமிகு உறுப்பினர் திரு. துரை. சந்திரசேகர்.*

திரு. துரை. சந்திரசேகர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கதர் கிராமத் தொழில்களை மேம்படுத்த அரசு ஊழியர்கள் கட்டாயம் கதர் ஆடை அணிய வேண்டும் என்ற ஆணை பிறப்பிக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:*

"கதர், கிராமத் தொழில்கள் மற்றும் கைவினைப் பொருட்கள் (கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை) பற்றிய 18 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.224,86,93,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வெட்டுத் தீர்மானம் எண் 6484, மாண்புமிகு உறுப்பினர் திரு. சா. மாங்குடி.*

திரு. சா. மாங்குடி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "காரைக்குடி தொகுதி, காரைக்குடி தாலுகா, கண்டனூரில் இயங்கி வரும் காதி கிராப்ட் அங்காடியை விரிவுபடுத்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:*

"கதர், கிராமத் தொழில்கள் மற்றும் கைவினைப் பொருட்கள் (கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை) பற்றிய 18 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.224,86,93,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வெட்டுத் தீர்மானம் எண் 6555, மாண்புமிகு உறுப்பினர் திரு. பி. அய்யப்பன், இருக்கையில் இல்லை.*

வெட்டுத் தீர்மானம் எண் 7103, மாண்புமிகு உறுப்பினர் திரு. V.P. கந்தசாமி.

திரு. V.P. கந்தசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கதர் கிராமத் தொழில்களை மேம்படுத்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:*

"கதர், கிராமத் தொழில்கள் மற்றும் கைவினைப் பொருட்கள் (கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை) பற்றிய 18 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.224,86,93,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வெட்டுத் தீர்மானம் எண் 7435, மாண்புமிகு உறுப்பினர் திரு. S. ராஜகுமார்.*

திரு. S. ராஜகுமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மயிலாடுதுறை தொகுதியில் கதர் தொடர்பான தொழில் மையம் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:*

"கதர், கிராமத் தொழில்கள் மற்றும் கைவினைப் பொருட்கள் (கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை) பற்றிய 18 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.224,86,93,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வெட்டுத் தீர்மானம் எண் 7501, மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் சி. விஜயபாஸ்கர், இருக்கையில் இல்லை.*

(இ) கோரிக்கை எண் 15-சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றம் (சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத் துறை)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மானியக் கோரிக்கை எண் 15-சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றம் (சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத் துறை), மாண்புமிகு சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத் துறை அமைச்சர் அவர்கள்.*

2023 ஏப்ரல் 13]

மாண்புமிகு திரு. சிவ.வீ. மெய்யநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றம் (சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத் துறை) பற்றிய 15 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.128,76,73,000/–, மூலதனக் கணக்கில் ரூ.4,99,00,000/– மற்றும் கடன் கணக்கில் ரூ.3,63,86,000/– ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானங்கள் முன்மொழிதல். வெட்டுத் தீர்மானம் எண் 176, மாண்புமிகு உறுப்பினர் திரு. தி. ராமச்சந்திரன்.

திரு. தி. ராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றம் (சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத் துறை) பற்றிய 15 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.128,76,73,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4,99,00,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,63,86,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 216, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆ.மு. முனிரத்தினம்.

திரு. ஆ.மு. முனிரத்தினம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றம் (சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத் துறை) பற்றிய 15 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.128,76,73,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4,99,00,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,63,86,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 270, மாண்புமிகு உறுப்பினர் திரு. JMH. அசன் மௌலானா.

திரு. JMH. அசன் மௌலானா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றம் (சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத் துறை) பற்றிய 15 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.128,76,73,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4,99,00,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,63,86,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 313, மாண்புமிகு உறுப்பினர் திரு. R. ராதாகிருஷ்ணன்.

திரு. R. ராதாகிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றம் (சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத் துறை) பற்றிய 15 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.128,76,73,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4,99,00,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,63,86,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 1758, மாண்புமிகு உறுப்பினர் திரு. ரூபி ஆர். மனோகரன்.

திரு. ரூபி ஆர். மனோகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றம் (சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத் துறை) பற்றிய 15 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.128,76,73,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4,99,00,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,63,86,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

2023 ஏப்ரல் 13]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வெட்டுத் தீர்மானம் எண் 3388, மாண்புமிகு உறுப்பினர் திருமதி S. விஜயதரணி.*

திருமதி S. விஜயதரணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:*

"சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றம் (சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத் துறை) பற்றிய 15 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.128,76,73,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4,99,00,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,63,86,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வெட்டுத் தீர்மானம் எண் 3496, மாண்புமிகு உறுப்பினர் திரு. S. பழனி நாடார், இருக்கையில் இல்லை.*

வெட்டுத் தீர்மானம் எண் 4773, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். கணேஷ், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 385, மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. அருள்.

திரு. இரா. அருள்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:*

"சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றம் (சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத் துறை) பற்றிய 15 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.128,76,73,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4,99,00,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,63,86,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வெட்டுத் தீர்மானம் எண் 2466, மாண்புமிகு உறுப்பினர் திரு. ச. சிவகுமார்.*

திரு. ச. சிவகுமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:*

"சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றம் (சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத் துறை) பற்றிய 15 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.128,76,73,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4,99,00,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,63,86,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 2888, மாண்புமிகு உறுப்பினர் திரு. S. சதாசிவம்.

திரு. S. சதாசிவம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றம் (சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத் துறை) பற்றிய 15 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.128,76,73,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4,99,00,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,63,86,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 6265, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி.கே. மணி.

திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றம் (சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத் துறை) பற்றிய 15 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.128,76,73,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4,99,00,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,63,86,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 6961, மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.பி. வெங்கடேஷ்வரன்.

2023 ஏப்ரல் 13]

திரு. எஸ்.பி. வெங்கடேஷ்வரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:*

"சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றம் (சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத் துறை) பற்றிய 15 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.128,76,73,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4,99,00,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,63,86,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வெட்டுத் தீர்மானம் எண் 668, மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. பண்ணாரி.*

திரு. அ. பண்ணாரி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:*

"சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றம் (சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத் துறை) பற்றிய 15 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.128,76,73,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4,99,00,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,63,86,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வெட்டுத் தீர்மானம் எண் 916, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஈ. பாலசுப்ரமணியன்.*

திரு. ஈ. பாலசுப்ரமணியன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:*

"சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றம் (சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத் துறை) பற்றிய 15 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.128,76,73,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4,99,00,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,63,86,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 983, மாண்புமிகு உறுப்பினர் திரு. K.A. பாண்டியன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 1390, மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.வி. ராஜன் செல்லப்பா, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 1603, மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. தாமோதரன்.

திரு. செ. தாமோதரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றம் (சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத் துறை) பற்றிய 15 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.128,76,73,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4,99,00,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,63,86,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 1809, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர்.பி. உதயகுமார்.

திரு. ஆர்.பி. உதயகுமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றம் (சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத் துறை) பற்றிய 15 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.128,76,73,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4,99,00,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,63,86,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 2369, மாண்புமிகு உறுப்பினர் திரு. T.K. அமுல் கந்தசாமி.

2023 ஏப்ரல் 13]

திரு. T.K. அமுல் கந்தசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றம் (சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத் துறை) பற்றிய 15 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.128,76,73,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4,99,00,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,63,86,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 2602, மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. மகேந்திரன்.

திரு. சி. மகேந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றம் (சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத் துறை) பற்றிய 15 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.128,76,73,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4,99,00,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,63,86,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 2648, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஓ.எஸ். மணியன்.

திரு. ஓ.எஸ். மணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றம் (சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத் துறை) பற்றிய 15 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.128,76,73,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4,99,00,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,63,86,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 3253, மாண்புமிகு உறுப்பினர் திரு. P.R.G. அருண்குமார்.

திரு. P.R.G. அருண்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றம் (சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத் துறை) பற்றிய 15 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.128,76,73,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4,99,00,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,63,86,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 3302, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.ஆர். ஜெயராம்.

திரு. கே.ஆர். ஜெயராம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றம் (சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத் துறை) பற்றிய 15 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.128,76,73,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4,99,00,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,63,86,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 3348, மாண்புமிகு உறுப்பினர் திரு. அம்மன் K. அர்ச்சுணன்.

திரு. அம்மன் K. அர்ச்சுணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றம் (சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத் துறை) பற்றிய 15 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.128,76,73,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4,99,00,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,63,86,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

2023 ஏப்ரல் 13]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 3536, மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. கிருஷ்ணமுரளி.

திரு. செ. கிருஷ்ணமுரளி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றம் (சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத் துறை) பற்றிய 15 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.128,76,73,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4,99,00,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,63,86,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 3650, மாண்புமிகு உறுப்பினர் முனைவர் இசக்கி சுப்பையா.

முனைவர் இசக்கி சுப்பையா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றம் (சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத் துறை) பற்றிய 15 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.128,76,73,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4,99,00,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,63,86,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 4223, மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. சக்ரபாணி.

திரு. மு. சக்ரபாணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றம் (சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத் துறை) பற்றிய 15 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.128,76,73,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4,99,00,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,63,86,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 4554, மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. சுந்தரராஜன்.

திரு. செ. சுந்தரராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றம் (சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத் துறை) பற்றிய 15 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.128,76,73,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4,99,00,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,63,86,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 5943, மாண்புமிகு உறுப்பினர் திரு. பெ. பெரியபுள்ளான் என்கிற செல்வம்.

திரு. பெ. பெரியபுள்ளான் என்கிற செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றம் (சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத் துறை) பற்றிய 15 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.128,76,73,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4,99,00,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,63,86,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 5991, மாண்புமிகு உறுப்பினர் திரு. இ.மா. மான்ராஜ்.

திரு. இ.மா. மான்ராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றம் (சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத் துறை) பற்றிய 15 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.128,76,73,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற

2023 ஏப்ரல் 13] [திரு. இ.மா. மான்ராஜ்]

ரூ.4,99,00,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,63,86,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 7248, மாண்புமிகு உறுப்பினர் திரு. அக்ரி. எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி.

திரு. அக்ரி. எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றம் (சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத் துறை) பற்றிய 15 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.128,76,73,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4,99,00,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,63,86,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 2282, மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் சி. சரஸ்வதி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 3200, மாண்புமிகு உறுப்பினர் திருமதி வானதி சீனிவாசன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 3438, மாண்புமிகு உறுப்பினர் திரு. நயினார் நாகேந்திரன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 5383, மாண்புமிகு உறுப்பினர் திரு. ட்டி. இராமச்சந்திரன்.

திரு. ட்டி. இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றம் (சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத் துறை) பற்றிய 15 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.128,76,73,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4,99,00,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,63,86,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 5460, மாண்புமிகு உறுப்பினர் திரு. K. மாரிமுத்து.

திரு. K. மாரிமுத்து: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றம் (சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத் துறை) பற்றிய 15 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.128,76,73,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4,99,00,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,63,86,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 1052, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆ. அருண்மொழிதேவன்.

திரு. ஆ. அருண்மொழிதேவன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கடலூர் மாவட்டம், மணிமுத்தாறு, வெள்ளாறு உள்ளிட்ட ஆறுகளில் கழிவுநீர் கலப்பதைத் தடுக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றம் (சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத் துறை) பற்றிய 15 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.128,76,73,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4,99,00,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,63,86,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 1556, மாண்புமிகு உறுப்பினர் திரு. சேவூர் S. இராமச்சந்திரன்.

திரு. சேவூர் S. இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ஆரணி தொகுதி, மேற்கு ஆரணி ஊராட்சி ஒன்றியம், ஒண்ணுபுரம் ஊராட்சியில் சாயக் கழிவுநீர் செல்லும் கால்வாயைச் சீரமைத்து, சாயக் கழிவுநீரைச் சுத்திகரிப்பு செய்து ஏரியில் விட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

2023 ஏப்ரல் 13] [திரு. சேவூர் S. இராமச்சந்திரன்]

"சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றம் (சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத் துறை) பற்றிய 15 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.128,76,73,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4,99,00,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,63,86,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வெட்டுத் தீர்மானம் எண் 1579, மாண்புமிகு உறுப்பினர் திரு. A.P. ஜெயசங்கரன்.*

திரு. A.P. ஜெயசங்கரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ஆத்தூர், பழமை வாய்ந்த வசிஷ்ட நதி மாசடைந்து பல்வேறு நோய்கள் பரவுவதால் உடனடியாகத் தீர்வு காண வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:*

"சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றம் (சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத் துறை) பற்றிய 15 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.128,76,73,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4,99,00,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,63,86,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வெட்டுத் தீர்மானம் எண் 1884, மாண்புமிகு உறுப்பினர் திரு. K.C. கருப்பணன்.*

திரு. K.C. கருப்பணன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ஈரோடு மாவட்டம், ஈரோடு மற்றும் காடையாம்பட்டி பகுதிகளில் இயங்கும் சாய மற்றும் சலவைத் தொழிற்சாலைகளுக்கு பொது சுத்திகரிப்பு நிலையம் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:*

"சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றம் (சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத் துறை) பற்றிய 15 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.128,76,73,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4,99,00,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,63,86,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 2135, மாண்புமிகு உறுப்பினர் திரு. எம்.எஸ்.எம். ஆனந்தன்.

திரு. எம்.எஸ்.எம். ஆனந்தன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "பல்லடம் தொகுதி, அனுப்பட்டி கிராமத்தில் செயல்பட்டுவரும் இரும்பு உருக்கு ஆலையால் சுற்றுச்சூழல் பாதிக்கப்படுவது குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றம் (சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத் துறை) பற்றிய 15 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.128,76,73,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4,99,00,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,63,86,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 3700, மாண்புமிகு உறுப்பினர் திரு. K.N. விஜயகுமார்.

திரு. K.N. விஜயகுமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருப்பூர் வடக்கு தொகுதியில் உள்ள மாநகராட்சி மற்றும் ஊராட்சிப் பகுதியில் பிளாஸ்டிக் பைகள் பயன்படுத்துவதால் சுற்றுச்சூழல் பாதிப்பு அடைவதைத் தடுக்க வேண்டிய அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றம் (சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத் துறை) பற்றிய 15 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.128,76,73,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4,99,00,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,63,86,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 3770, மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.பி. நாகைமாலி.

திரு. வி.பி. நாகைமாலி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "நீர்நிலைகள் மாசுபடுவதால் ஏற்படும் பாதிப்புகள் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

2023 ஏப்ரல் 13] [திரு. வி.பி. நாகைமாலி]

"சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றம் (சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத் துறை) பற்றிய 15 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.128,76,73,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4,99,00,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,63,86,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 3873, மாண்புமிகு உறுப்பினர் திரு. மா. சின்னதுரை.

திரு. மா. சின்னதுரை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சுற்றுச்சூழல் இயக்கங்களின் செயல்பாடுகள் மற்றும் சுற்றுச்சூழலால் ஏற்படும் பாதிப்புகள் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றம் (சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத் துறை) பற்றிய 15 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.128,76,73,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4,99,00,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,63,86,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 4919, மாண்புமிகு உறுப்பினர் திரு. வே. சம்பத்குமார்.

திரு. வே. சம்பத்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "அரூர் தொகுதி, மஞ்சவாடி, பட்டுக்கோணப்பட்டி ஊராட்சியில் இருக்கின்ற ஆலைகளிலிருந்து வெளியேறும் புகை மற்றும் நச்சு கலந்த நீரால் சுற்றுச்சூழல் மாசடைவதைத் தடுக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றம் (சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத் துறை) பற்றிய 15 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.128,76,73,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4,99,00,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,63,86,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 4963, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.பி. அன்பழகன்.

திரு. கே.பி. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "பாலக்கோட்டில் இயங்கி வருகின்ற தனியார் பால் கம்பெனியிலிருந்து வெளியேறும் நச்சுக் கழிவுகளின் பாதிப்பு குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றம் (சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத் துறை) பற்றிய 15 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.128,76,73,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4,99,00,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,63,86,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 5004, மாண்புமிகு உறுப்பினர் திரு. S. ஜெயக்குமார், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 5049, மாண்புமிகு உறுப்பினர் திரு. S.S. பாலாஜி.

திரு. S.S. பாலாஜி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருப்போரூர் தொகுதி, பி-கெனால் (B-Canal) அமைந்துள்ள கானத்தூர் ரெட்டிக்குப்பம் உள்ளிட்ட நீர்நிலைகள் குப்பைகளால் மாசுபடுவதைத் தடுக்க வேண்டியது குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றம் (சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத் துறை) பற்றிய 15 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.128,76,73,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4,99,00,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,63,86,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 5087, மாண்புமிகு உறுப்பினர் திரு. பெரி. செந்தில்நாதன்.

2023 ஏப்ரல் 13]

திரு. பெரி. செந்தில்நாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சிவகங்கை மாவட்டத்தில் உள்ள நகராட்சிகள், பேரூராட்சிகள் மற்றும் ஊராட்சிகளில் தினசரி குப்பையால் சுற்றுச்சூழல் பாதிக்கப்படாமல் இருக்க, குப்பைகளிலிருந்து மின்சாரம் தயாரிப்பது குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றம் (சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத் துறை) பற்றிய 15 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.128,76,73,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4,99,00,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,63,86,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 5509, மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. காமராஜ்.

திரு. இரா. காமராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருவாரூர் மாவட்டத்தில் கடலோர சுற்றுச்சூழலைப் பாதுகாக்க கழிமுகங்களில் மாங்குரோவ் காடுகள் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றம் (சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத் துறை) பற்றிய 15 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.128,76,73,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4,99,00,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,63,86,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 5646, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ்.

திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சென்னையைச் சுற்றி அமைந்துள்ள கூவம் ஆற்றினைச் சுத்தப்படுத்தி, ஆக்கிரமிப்புகளை அகற்ற வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றம் (சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத் துறை) பற்றிய 15 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.128,76,73,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4,99,00,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,63,86,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 6552, மாண்புமிகு உறுப்பினர் திரு. பி. அய்யப்பன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 5004, மாண்புமிகு உறுப்பினர் திரு. S. ஜெயக்குமார்.

திரு. S. ஜெயக்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "பெருந்துறை சிப்காட் தொழிற்பேட்டையில் உள்ள தொழிற்சாலைகள்மூலம் சுற்றுச்சூழல் பாதிக்கப்படுவது குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றம் (சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத் துறை) பற்றிய 15 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.128,76,73,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4,99,00,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,63,86,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 6829, மாண்புமிகு உறுப்பினர் திரு. A.K. செல்வராஜ், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 7499, மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் சி. விஜயபாஸ்கர், இருக்கையில் இல்லை.

(ஈ) கோரிக்கை எண் 54–வனம் (சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத் துறை)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மானியக் கோரிக்கை எண் 54–வனம் (சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத் துறை), மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் மா. மதிவேந்தன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

2023 ஏப்ரல் 13] [டாக்டர் மா. மதிவேந்தன்]

"வனம் (சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத் துறை) பற்றிய 54 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.719,06,38,000/–, மூலதனக் கணக்கில் ரூ.391,66,51,000/– மற்றும் கடன் கணக்கில் ரூ.1,000/– ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானங்கள் முன்மொழிதல். வெட்டுத் தீர்மானம் எண் 175, மாண்புமிகு உறுப்பினர் திரு. தி. ராமச்சந்திரன்.

திரு. தி. ராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வனம் (சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத் துறை) பற்றிய 54 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.719,06,38,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.391,66,51,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 269, மாண்புமிகு உறுப்பினர் திரு. JMH. அசன் மௌலானா.

திரு. JMH. அசன் மௌலானா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வனம் (சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத் துறை) பற்றிய 54 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.719,06,38,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.391,66,51,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 1760, மாண்புமிகு உறுப்பினர் திரு. ரூபி ஆர். மனோகரன்.

திரு. ரூபி ஆர். மனோகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வனம் (சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத் துறை) பற்றிய 54 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.719,06,38,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.391,66,51,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 3006, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆ.மு. முனிரத்தினம்.

திரு. ஆ.மு. முனிரத்தினம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வனம் (சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத் துறை) பற்றிய 54 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.719,06,38,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.391,66,51,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 3414, மாண்புமிகு உறுப்பினர் திருமதி S. விஜயதரணி.

திருமதி S. விஜயதரணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வனம் (சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத் துறை) பற்றிய 54 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.719,06,38,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.391,66,51,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 3522, மாண்புமிகு உறுப்பினர் திரு. S. பழனி நாடார், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 4896, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். கணேஷ், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 366, மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. அருள்.

2023 ஏப்ரல் 13]

திரு. இரா. அருள்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வனம் (சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத் துறை) பற்றிய 54 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.719,06,38,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.391,66,51,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 2596, மாண்புமிகு உறுப்பினர் திரு. ச. சிவகுமார்.

திரு. ச. சிவகுமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வனம் (சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத் துறை) பற்றிய 54 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.719,06,38,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.391,66,51,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 2953, மாண்புமிகு உறுப்பினர் திரு. S. சதாசிவம்.

திரு. S. சதாசிவம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வனம் (சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத் துறை) பற்றிய 54 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.719,06,38,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.391,66,51,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 6468, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி.கே. மணி.

திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வனம் (சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத் துறை) பற்றிய 54 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.719,06,38,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.391,66,51,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 7071, மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.பி. வெங்கடேஷ்வரன்.

திரு. எஸ்.பி. வெங்கடேஷ்வரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வனம் (சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத் துறை) பற்றிய 54 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.719,06,38,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.391,66,51,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 667, மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. பண்ணாரி.

திரு. அ. பண்ணாரி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வனம் (சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத் துறை) பற்றிய 54 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.719,06,38,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.391,66,51,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 915, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஈ. பாலசுப்ரமணியன்.

திரு. ஈ. பாலசுப்ரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வனம் (சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத் துறை) பற்றிய 54 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க்

கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.719,06,38,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.391,66,51,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 1388, மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.வி. ராஜன் செல்லப்பா, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 1808, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர்.பி. உதயகுமார்.

திரு. ஆர்.பி. உதயகுமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வனம் (சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத் துறை) பற்றிய 54 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.719,06,38,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.391,66,51,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 2403, மாண்புமிகு உறுப்பினர் திரு. T.K. அமுல் கந்தசாமி.

திரு. T.K. அமுல் கந்தசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வனம் (சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத் துறை) பற்றிய 54 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.719,06,38,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.391,66,51,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 2678, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஓ.எஸ். மணியன்.

திரு. ஓ.எஸ். மணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வனம் (சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத் துறை) பற்றிய 54 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.719,06,38,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.391,66,51,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வெட்டுத் தீர்மானம் எண் 3287, மாண்புமிகு உறுப்பினர் திரு. P.R.G. அருண்குமார்.*

திரு. P.R.G. அருண்குமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:*

"வனம் (சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத் துறை) பற்றிய 54 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.719,06,38,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.391,66,51,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வெட்டுத் தீர்மானம் எண் 3333, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.ஆர். ஜெயராம்.*

திரு. கே.ஆர். ஜெயராம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:*

"வனம் (சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத் துறை) பற்றிய 54 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.719,06,38,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.391,66,51,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வெட்டுத் தீர்மானம் எண் 3379, மாண்புமிகு உறுப்பினர் திரு. அம்மன் K. அர்ச்சுணன்.*

திரு. அம்மன் K. அர்ச்சுணன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:*

"வனம் (சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத் துறை) பற்றிய 54 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க்

2023 ஏப்ரல் 13] [திரு. அம்மன் K. அர்ச்சுணன்]

கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.719,06,38,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.391,66,51,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 3563, மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. கிருஷ்ணமுரளி.

திரு. செ. கிருஷ்ணமுரளி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வனம் (சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத் துறை) பற்றிய 54 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.719,06,38,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.391,66,51,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 3681, மாண்புமிகு உறுப்பினர் முனைவர் இசக்கி சுப்பையா.

முனைவர் இசக்கி சுப்பையா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வனம் (சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத் துறை) பற்றிய 54 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.719,06,38,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.391,66,51,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 4249, மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. சக்ரபாணி.

திரு. மு. சக்ரபாணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வனம் (சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத் துறை) பற்றிய 54 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.719,06,38,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.391,66,51,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 4587, மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. சுந்தரராஜன்.

திரு. செ. சுந்தரராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வனம் (சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத் துறை) பற்றிய 54 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.719,06,38,00/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.391,66,51,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 6012, மாண்புமிகு உறுப்பினர் திரு. இ.மா. மான்ராஜ்.

திரு. இ.மா. மான்ராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வனம் (சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத் துறை) பற்றிய 54 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.719,06,38,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.391,66,51,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 2359, மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் சி. சரஸ்வதி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 3237, மாண்புமிகு உறுப்பினர் திருமதி வானதி சீனிவாசன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 3467, மாண்புமிகு உறுப்பினர் திரு. நயினார் நாகேந்திரன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 5429, மாண்புமிகு உறுப்பினர் திரு. ட்டி. இராமச்சந்திரன்.

திரு. ட்டி. இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வனம் (சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத் துறை) பற்றிய 54 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.719,06,38,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.391,66,51,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 5495, மாண்புமிகு உறுப்பினர் திரு. K. மாரிமுத்து.

திரு. K. மாரிமுத்து: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வனம் (சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத் துறை) பற்றிய 54 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.719,06,38,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.391,66,51,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 986, மாண்புமிகு உறுப்பினர் திரு. K.A. பாண்டியன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 1053, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆ. அருண்மொழிதேவன்.

திரு. ஆ. அருண்மொழிதேவன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வனப் பகுதிகளில் குறைந்துவரும் விலங்குகளைக் கண்டறிந்து அவற்றைப் பாதுகாக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வனம் (சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத் துறை) பற்றிய 54 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.719,06,38,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.391,66,51,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 1872, மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. மகேந்திரன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 3745, மாண்புமிகு உறுப்பினர் திரு. K.N. விஜயகுமார்.

திரு. K.N. விஜயகுமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வனப் பகுதிகளில் யானைகள் மின்சாரம் தாக்கி உயிரிழப்பதைத் தடுக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வனம் (சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத் துறை) பற்றிய 54 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.719,06,38,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.391,66,51,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 3808, மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.பி. நாகைமாலி.

திரு. வி.பி. நாகைமாலி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சுருங்கிவரும் வனப் பரப்பை அதிகரிக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வனம் (சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத் துறை) பற்றிய 54 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.719,06,38,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.391,66,51,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 4031, மாண்புமிகு உறுப்பினர் திரு. பெரி. செந்தில்நாதன்.

திரு. பெரி. செந்தில்நாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வனத் துறை இடத்திற்குள் செல்லும் தார்ச் சாலைகளை மீண்டும் புதுப்பிக்கும் நேர்வில் ஒவ்வொரு முறையும் வனத் துறை அனுமதி பெறுவதற்கு மாற்றாக, இன்று வரை தார்ச் சாலையாக போடப்பட்டுள்ள நெடுஞ்சாலைத் துறை, ஊரக வளர்ச்சித் துறை

சாலைகளுக்கு நிரந்தர அனுமதி வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வனம் (சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத் துறை) பற்றிய 54 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.719,06,38,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.391,66,51,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 4103, மாண்புமிகு உறுப்பினர் திரு. கி. அசோக்குமார்.

திரு. கி. அசோக்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வனத் துறைக்குச் சொந்தமான நிலங்களில் அரசாங்கத்தால் போடப்படும் சாலைகளுக்கு தடையில்லாச் சான்று வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வனம் (சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத் துறை) பற்றிய 54 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.719,06,38,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.391,66,51,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 4197, மாண்புமிகு உறுப்பினர் திரு. சேவூர் S. இராமச்சந்திரன்.

திரு. சேவூர் S. இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ஆரணி தொகுதியில் வனத் துறை சாலை மற்றும் கிராமப்புறச் சாலைகளை இணைக்க அனுமதி வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வனம் (சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத் துறை) பற்றிய 54 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.719,06,38,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.391,66,51,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 4299, மாண்புமிகு உறுப்பினர் திரு. V.P. கந்தசாமி.

திரு. V.P. கந்தசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "யானை தாக்குதல் மற்றும் பாம்பு கடித்தல் போன்றவற்றால் ஏற்படும் உயிர் இழப்புகளுக்கு இழப்பீட்டுத் தொகையை உயர்த்தி வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வனம் (சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத் துறை) பற்றிய 54 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.719,06,38,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.391,66,51,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 4545, மாண்புமிகு உறுப்பினர் திரு. கடம்பூர் ராஜூ.

திரு. கடம்பூர் ராஜூ: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கோவில்பட்டி தொகுதி, குறுமலை வனப் பகுதியில் மான்கள் மற்றும் காட்டுப்பன்றிகள் மலை மற்றும் வனப் பகுதியில் இருந்து வெளியேறி விளைநிலங்களை சேதப்படுத்துவதைத் தவிர்க்க தடுப்பு வேலி அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வனம் (சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத் துறை) பற்றிய 54 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.719,06,38,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.391,66,51,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 4700, மாண்புமிகு உறுப்பினர் திரு. துரை. சந்திரசேகர்.

திரு. துரை. சந்திரசேகர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருவள்ளூர் மாவட்டம், பொன்னேரி தொகுதி, வனங்களைப் பாதுகாக்க, போதிய வனக் காவலர்களை பழவேற்காடு பகுதிக்கு நியமிக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வனம் (சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத் துறை) பற்றிய 54 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.719,06,38,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.391,66,51,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 4943, மாண்புமிகு உறுப்பினர் திரு. வே. சம்பத்குமார்.

திரு. வே. சம்பத்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "அரூர் தொகுதி, கலசப்பாடி மலைக் கிராமத்திற்கு தார்ச் சாலை அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வனம் (சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத் துறை) பற்றிய 54 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.719,06,38,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.391,66,51,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 4989, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.பி. அன்பழகன்.

திரு. கே.பி. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வன விலங்குகள் விவசாய நிலங்களில் சேதம் ஏற்படுத்துவதைத் தடுக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வனம் (சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத் துறை) பற்றிய 54 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.719,06,38,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.391,66,51,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 5036, மாண்புமிகு உறுப்பினர் திரு. S. ஜெயக்குமார்.

திரு. S. ஜெயக்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ஈரோடு மாவட்டம், சென்னிமலை பகுதி, வனங்களில் உள்ள அரிய வகை மான்கள் உட்பட பல்வேறு உயிரினங்களைப்

பாதுகாக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வனம் (சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத் துறை) பற்றிய 54 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.719,06,38,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.391,66,51,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 5073, மாண்புமிகு உறுப்பினர் திரு. S.S. பாலாஜி.

திரு. S.S. பாலாஜி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருப்போரூர் தொகுதி, காட்டூர், காப்புக்காடு பகுதியில் பல்லுயிர் பூங்கா (Bio–Diversity Park) அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வனம் (சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத் துறை) பற்றிய 54 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.719,06,38,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.391,66,51,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 5540, மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. காமராஜ்.

திரு. இரா. காமராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மன்னார்குடி வட்டம், வடுவூர் ஏரியை ஆழப்படுத்தி, ஆக்கிரமிப்புகளை அகற்றி, பறவைகள் சரணாலயத்தை மேம்படுத்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வனம் (சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத் துறை) பற்றிய 54 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.719,06,38,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.391,66,51,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

2023 ஏப்ரல் 13]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வெட்டுத் தீர்மானம் எண் 5862, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ்.*

திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தனியார் காடுகள் சட்டத்தால் சொத்துகளை விற்கவோ, வாங்கவோ முடியாத நிலை உள்ளது. இதைக் கருத்திற்கொண்டு தனியார் காடுகள் சட்டத்தில் உரிய திருத்தம் கொண்டு வர வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:*

"வனம் (சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத் துறை) பற்றிய 54 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.719,06,38,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.391,66,51,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வெட்டுத் தீர்மானம் எண் 5981, மாண்புமிகு உறுப்பினர் திரு. பெ. பெரியபுள்ளான் என்கிற செல்வம்.*

திரு. பெ. பெரியபுள்ளான் என்கிற செல்வம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மேலூர் தொகுதி, அழகர்கோவில் நூபுரகங்கை ராக்காயி அம்மன் கோயிலுக்கு திண்டுக்கல் மாவட்டம், நத்தம் தொகுதி, பட்டணம்பட்டியிலிருந்து தார்ச்சாலை அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:*

"வனம் (சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத் துறை) பற்றிய 54 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.719,06,38,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.391,66,51,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வெட்டுத் தீர்மானம் எண் 6536, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.பி. முனுசாமி.*

திரு. கே.பி. முனுசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கிருஷ்ணகிரி மாவட்டத்தில் வன விலங்குகளால், விளைநிலங்களில் ஏற்படும் சேதத்திற்கு விவசாயிகளுக்கு இழப்பீடு வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:*

"வனம் (சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத் துறை) பற்றிய 54 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.719,06,38,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.391,66,51,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வெட்டுத் தீர்மானம் எண் 6606, மாண்புமிகு உறுப்பினர் திரு. பி. அய்யப்பன், இருக்கையில் இல்லை.*

வெட்டுத் தீர்மானம் எண் 6869, மாண்புமிகு உறுப்பினர் திரு. AK. *செல்வராஜ், இருக்கையில் இல்லை.*

வெட்டுத் தீர்மானம் எண் 7420, மாண்புமிகு உறுப்பினர் திரு. அக்ரி. எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி.

திரு. அக்ரி. எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "போளூர் தொகுதி, சந்தவாசல் பகுதியில் வனத் துறையின்மூலம் நடைபெற்று வரும் பணிகள் பற்றி விளக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:*

"வனம் (சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத் துறை) பற்றிய 54 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.719,06,38,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.391,66,51,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வெட்டுத் தீர்மானம் எண் 7488, மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.பி. வேலுமணி.*

திரு. எஸ்.பி. வேலுமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கோயம்புத்தூர் மாவட்டத்தில் கோடை காலத்தில் காடுகளில் வன விலங்குகள் மற்றும் பறவைகளுக்குத் தண்ணீர் தொட்டிகளை அமைக்கவும், காடுகள் தீப்பிடிக்காமல் இருக்கவும் முன்னெச்சரிக்கை நடவடிக்கை எடுக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:*

"வனம் (சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத் துறை) பற்றிய 54 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.719,06,38,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.391,66,51,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மானியக் கோரிக்கைகளும், வெட்டுத் தீர்மானங்களும் பேரவையின்முன் விவாதத்திற்கு வைக்கப்பட்டுள்ளன. மாண்புமிகு அமைச்சர்கள் முன்னுரையாக ஏதாவது கூற விரும்பினால் கூறலாம். மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

பிற்பகல் 12–20

மாண்புமிகு திரு. R.S. ராஜகண்ணப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை மற்றும் கதர் கிராமத் தொழில்கள் மற்றும் கைவினைப் பொருட்கள் ஆகியன பற்றிய கொள்கை விளக்கக் குறிப்புகள் அச்சடிக்கப்பட்டு மாமன்ற உறுப்பினர்களுக்கு, அவர்கள் படிப்பதற்கு வசதியாக ஏற்கெனவே கொடுக்கப்பட்டுள்ளன. மின்னஞ்சல் மூலமாகவும் அனுப்பப்பட்டுள்ளன. கொள்கை விளக்கக் குறிப்புகள் தமிழிலும், ஆங்கிலத்திலும் மாண்புமிகு உறுப்பினர்களுடைய மேசைகளிலுள்ள சிறு கணினியிலும் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளன. அவற்றில் தமிழிலே கொடுக்கப்பட்டிருக்கின்ற கொள்கை விளக்கக் குறிப்புகளை@ நான் இந்த மாமன்றத்திலே படித்ததாக ஏற்று, சட்டமன்றப் பதிவேட்டில் பதிவு செய்துகொள்ள வேண்டுமென்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர்கள் தங்களுடைய அரிய கருத்துகளைத் தெரிவித்த பின்னர், என்னுடைய பதிலுரையில் அவற்றிற்கு விளக்கங்களை அளிக்கின்றேன் என்பதையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

@ **543** முதல் **636** வரை மற்றும் **943** முதல் **990** வரையிலான பக்கங்களில் இணைப்புகளாக அச்சிடப்பட்டுள்ளன.

*__மாண்புமிகு திரு. செஞ்சி K.S. மஸ்தான்:__ *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை, சிறுபான்மையினர் நலன் பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு அச்சடிக்கப்பட்டு, மாமன்ற உறுப்பினர்களுக்கு, அவர்கள் படிப்பதற்கு வசதியாக ஏற்கெனவே கொடுக்கப்பட்டுள்ளது. மின்னஞ்சல் மூலமாகவும் அனுப்பப்பட்டுள்ளது. கொள்கை விளக்கக் குறிப்பு தமிழிலும், ஆங்கிலத்திலும் மாண்புமிகு உறுப்பினர்களுடைய மேசைகளிலுள்ள சிறு கணினியிலும் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளது. அவற்றில் தமிழிலே கொடுக்கப்பட்டிருக்கின்ற கொள்கை விளக்கக் குறிப்பினை@ நான் இந்த மாமன்றத்திலே படித்ததாக ஏற்று, சட்டமன்றப் பதிவேட்டில் பதிவு செய்துகொள்ள வேண்டுமென்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர்கள் தங்களுடைய அரிய கருத்துகளைத் தெரிவித்த பின்னர், என்னுடைய பதிலுரையில் அவற்றிற்கு விளக்கங்களை அளிக்கின்றேன் என்பதையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. சிவ.வீ. மெய்யநாதன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றம் (சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத் துறை) பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு அச்சடிக்கப்பட்டு, மாமன்ற உறுப்பினர்களுக்கு, அவர்கள் படிப்பதற்கு வசதியாக ஏற்கெனவே கொடுக்கப்பட்டுள்ளது. மின்னஞ்சல் மூலமாகவும் அனுப்பப்பட்டுள்ளது. கொள்கை விளக்கக் குறிப்பு தமிழிலும், ஆங்கிலத்திலும் மாண்புமிகு உறுப்பினர்களுடைய மேசைகளிலுள்ள சிறு கணினியிலும் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளது. அவற்றில் தமிழிலே கொடுக்கப்பட்டிருக்கின்ற கொள்கை விளக்கக் குறிப்பினை@@ நான் இந்த மாமன்றத்திலே படித்ததாக ஏற்று, சட்டமன்றப் பதிவேட்டில் பதிவு செய்துகொள்ள வேண்டுமென்று*

@ *497 முதல் 542 வரையிலான பக்கங்களில் இணைப்பு–I ஆக அச்சிடப்பட்டுள்ளது.*

@@ *637 முதல் 719 வரையிலான பக்கங்களில் இணைப்பு–III ஆக அச்சிடப்பட்டுள்ளது.*

பணிவோடு கேட்டுக்கொள்கின்றேன். மாண்புமிகு உறுப்பினர்கள் தங்களுடைய அரிய கருத்துகளைத் தெரிவித்த பின்னர், என்னுடைய பதிலுரையில் அவற்றிற்கு விளக்கங்களை அளிக்கின்றேன் என்பதையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் மா. மதிவேந்தன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வனத் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு அச்சடிக்கப்பட்டு மாமன்ற உறுப்பினர்களுக்கு, அவர்கள் படிப்பதற்கு வசதியாக ஏற்கெனவே கொடுக்கப்பட்டுள்ளது. மேலும், மின்னஞ்சல் மூலமாகவும் அனுப்பப்பட்டுள்ளது. கொள்கை விளக்கக் குறிப்பு தமிழிலும், ஆங்கிலத்திலும் மாண்புமிகு உறுப்பினர்களுடைய மேசைகளிலுள்ள சிறு கணினியிலும் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளது. அவற்றில் தமிழிலே கொடுக்கப்பட்டிருக்கின்ற கொள்கை விளக்கக் குறிப்பினை@ நான் இந்த மாமன்றத்திலே படித்ததாக ஏற்று, சட்டமன்றப் பதிவேட்டில் பதிவு செய்துகொள்ள வேண்டுமென்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களைப் பணிவோடு கேட்டுக்கொள்கின்றேன். மாண்புமிகு உறுப்பினர்கள் தங்களுடைய அரிய கருத்துகளைத் தெரிவித்த பின்னர், என்னுடைய பதிலுரையில் அவற்றிற்கு விளக்கங்களை அளிக்கின்றேன் என்பதையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மானியக் கோரிக்கைகள்மீது விவாதம். இன்று முற்பகல் நான்கு மானியக் கோரிக்கைகள் விவாதத்திற்கு வைக்கப்பெற்றுள்ளன. மாண்புமிகு உறுப்பினர்கள் நான்கு மானியக் கோரிக்கைகள்மீதும் சேர்த்தே பேசலாம். இன்று 5 மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் பதிலுரையாற்றவிருக்கின்றார்கள்; 2–00 மணிக்குள் பேரவையை முடிக்க வேண்டிய கட்டாயமும் இருக்கின்றது; மாலை 4–00 மணிக்கு இப்பேரவை மீண்டும் கூடவிருக்கின்றது. ஆகவே, இவற்றையெல்லாம் மனதில் வைத்துக்கொண்டு, பேசவருகின்ற மாமன்ற உறுப்பினர்கள் தயவுசெய்து குறித்த காலத்தில் தங்கள் உரையை முடிக்க வேண்டுமென்று அன்போடு

@ 720 முதல் 818 வரையிலான பக்கங்களில் இணைப்பு–IV ஆக அச்சிடப்பட்டுள்ளது.

கேட்டுக்கொள்கின்றேன். இன்று ஒரு நாள் யாருக்கும் அதிகமான கால நீட்டிப்பு வழங்குவதற்கு இயலாததையும் வருத்தத்தோடு தெரிவித்துக்கொள்கின்றேன். ஆகவே, முதலில் பேச வருகின்ற மாண்புமிகு உறுப்பினர் திரு. திண்டுக்கல் சி. சீனிவாசன் அவர்களுக்கு 15 நிமிடங்களும், எஞ்சிய உறுப்பினர்களுக்கு தலா 7 நிமிடங்களும் வழங்கப்படுகின்றன. ஒத்துழைப்பு தரும்படி அன்போடு கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு திரு. திண்டுக்கல் சி. சீனிவாசன் அவர்களை அன்போடு அழைக்கிறேன்.

பிற்பகல் 12–25

***திரு. திண்டுக்கல் சி. சீனிவாசன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் 5 மாண்புமிகு அமைச்சர்கள் பதிலுரையாற்றவிருக்கின்றார்கள் என்று கூறியிருக்கின்றீர்கள். அதற்குத் தகுந்தாற்போல் பேசுபவர்களுக்கு நேரம் ஒதுக்கி எங்களைப் பாதுகாக்க வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொண்டு, என் உரையைத் துவங்க விரும்புகிறேன்.*

'இருந்தாலும், மறைந்தாலும் பெயர் சொல்ல வேண்டும், இவர்போல யாரென்று ஊர் சொல்ல வேண்டும்' (மேசையைத் தட்டும் ஒலி) என மறைந்தாலும், மறையாமல் அனைவரது இதயத்தில் வாழ்ந்து வரும் எங்கள் இதய தெய்வம் பொன்மனச் செம்மல் புரட்சித் தலைவர் அவர்களைப் பணிந்து வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழக மக்களின் அன்பில் மூழ்கி, 6 முறை தமிழகத்தை அரசாண்டு, அரசுப் பெட்டகத்தை அலங்கரித்த அறிவுப் பெட்டகம் எம் அன்னை, இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களையும் வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தேங்கிய நீரோடையின் நடுவே, தெளிந்த நீரோடையாய் இருந்து, எங்களை வழிநடத்தும் இம்மாமன்றத்தின் எதிர்க்கட்சித் தலைவர், எளிமையின் சிகரம், ஏழைகளின் தோழன், விவசாயிகளின் பாதுகாவலன், தொண்டர்களின் தலைவன், மக்களின் முதல்வர், மாண்புமிகு எடப்பாடியார் அவர்களுக்கு எனது நன்றியைக் காணிக்கையாக்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) எதிர்க்கட்சிக் கொறடா, முன்னாள் அமைச்சர், அன்பிற்குரிய தம்பி, மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி அவர்களுக்கு எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

2023 ஏப்ரல் 13] [*திரு. திண்டுக்கல் சி. சீனிவாசன்*]

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நடுநிலை நாணாய் நிற்க வேண்டுமே என்ற கடமையால், தூண்டிலில் சிக்கிய மீனைப் போல, தராசின் துலாக்கோல் போல இருந்து, சபையை நடுநிலை தவறாமல் நடத்த, தொடர்ந்து முயற்சிக்கும் பேரவைத் தலைவர் அவர்களே, உங்கள் முயற்சி வெற்றியடைய வேண்டுமென்று வாழ்த்தி, தங்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. . . (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் வாங்கப்பா. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே உங்களைத்தான் பாராட்டி சொன்னேன். மறுபடியும் படிக்கிறேன் கேளுங்கள் பேரவைத் தலைவர் அவர்களே.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *இல்லை, போதும். பதிவாகிவிட்டது.*

திரு. திண்டுக்கல் சி. சீனிவாசன்: *எங்கே பதிவாகிவிட்டது.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *காதில் கேட்டுவிட்டேன்.*

திரு. திண்டுக்கல் சி. சீனிவாசன்: *மறுபடியும் கேட்டுக்கொள்ளுங்கள். (சிரிப்பு) மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நடுநிலை நாணாய் நிற்க வேண்டுமே என்ற கடமையால் தூண்டிலில் சிக்கிய மீனைப் போல, தராசின் துலாக்கோல் போல இருந்து, சபையை நடுநிலை தவறாமல் நடத்த தொடர்ந்து முயற்சிக்கும் பேரவைத் தலைவர் அவர்களே, உங்கள் முயற்சி வெற்றியடைய வேண்டும் என நல்மனதோடு வாழ்த்துகிறேன். (சிரிப்பு)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *நேற்றுதானே சொன்னீர்கள், நடுநிலை தவறாமல் நடத்துகின்ற சபாநாயகர் என்று சொன்னீர்கள். இன்றைக்கு முயற்சி செய்கிறீர்கள் என்று சொல்கிறீர்களே! முயற்சியா எடுத்திருக்கிறேன்?*

திரு. திண்டுக்கல் சி. சீனிவாசன்: *தயவுசெய்து வாபஸ் வாங்க வேண்டும். நான் சொல்லவில்லை. நீங்கள் குறிப்பை எடுத்துப் பாருங்கள். உங்கள்* Secretary-*ஐக்கூட கேட்டுப் பாருங்கள். பார்த்துக் கொள்ளுங்கள். இது உண்மை. நடத்த வேண்டுமென்று நினைக்கிறீர்கள், நன்றாக வெற்றியடைய வேண்டுமென்று வாழ்த்தினேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 3 நிமிடங்கள் ஆகிவிட்டன. இன்னும் 12 நிமிடங்கள்தான் உள்ளன.

திரு. திண்டுக்கல் சி. சீனிவாசன்: அதற்குத்தான் இதெல்லாம் பேசுவது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: Screen–ல் அழகாக இருக்கிறீர்கள். நேரில் பார்ப்பதைவிட screen–ல் மிகவும் top ஆக இருக்கிறீர்கள், cinema நடிகர் மாதிரி. (சிரிப்பு)

திரு. திண்டுக்கல் சி. சீனிவாசன்: அதெல்லாம் மிகவும் மகிழ்ச்சியாக இருந்தபோது எடுத்தது. இப்போதெல்லாம் எடுத்தீர்களென்றால் போர் அடிக்கும். (சிரிப்பு)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இயற்கையை மீறினால், இன்னல்கள் பிறக்கும், இயற்கையை நேசித்தால், இந்த வையகம் சிறக்கும் என்பதை அறிந்து மாண்புமிகு அம்மாவின் அரசு வனத் துறையில் பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்தியது. அதேபோல், தி.மு.க. அரசு எங்களிடம் 2011 ஆம் ஆண்டு ஆட்சியை விட்டுச் சென்றபோது, 28,343 சதுர கிலோ மீட்டருடன் 21.79 சதவிகிதமாக இருந்த வனம் மற்றும் மரப் பரப்பை மாண்புமிகு அம்மாவின் அரசு 23.71 சதவிகிதம் என்ற நிலைக்கு உயர்த்தி, தமிழகத்தின் பசுமைப்போர்வையை அதாவது, Green cover–ஐ விரிவுபடுத்தி, பலரின் பாராட்டையும் பெற்றது. ஆனால், தற்போதைய அரசு இரண்டரை கோடி மரங்களை நடப்போவதாகவும், Tamil Nadu Mission on Sustainable Green Cover in Farm Lands என்ற திட்டத்தின்மூலம் 8 இலட்சத்து 53 ஆயிரத்து 400 மரக் கன்றுகளை, 2023 மார்ச்சுக்கு முன்னர் நடப்போவதாகவும், 73 இலட்சம் மரக் கன்றுகள் வனத் துறையால் உற்பத்தி செய்யப்பட்டு, 2021–2022 ஆம் ஆண்டில் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டுள்ளதாகவும், இந்தியாவிலேயே வளர்ந்த மாநிலத்தில் 33 விழுக்காடு வனப் பரப்பைக் கொண்ட முதல் மாநிலம் தமிழ்நாடு என்ற சிறந்த பெருமையைப் பெறுவோம் என்றும் சென்ற 2022–2023 ஆம் ஆண்டு மானியக் கோரிக்கையில் பக்கங்கள் 154 மற்றும் 273–ல் மாண்புமிகு அமைச்சர் அவர்களால் தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே, தற்போது இந்த எண்ணிக்கையில் மரங்கள் நடப்பட்டுள்ளனவா? அப்படி மரக் கன்றுகள் நட்டு முடிக்கப்பட்டுவிட்டதென்றால், எத்தனை சதுர கிலோ மீட்டர் வனப் பரப்பு மற்றும் மரப் பரப்பானது அதிகரித்துள்ளது என்ற

2023 ஏப்ரல் 13] [திரு. திண்டுக்கல் சி. சீனிவாசன்]

விவரத்தினை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதிலுரையில் தெரிவிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 12–30

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, யானைகளின் எண்ணிக்கை அதிகமாகி, மக்கள் வாழும் பகுதிகளில் தினசரி யானைகள் நடமாடுகின்றன. பலர் இதனால் மடிகிறார்கள் என்ற செய்தி வந்துகொண்டே இருக்கிறது. ஆனால், வனத்தைப் பாதுகாக்கும் வேட்டை தடுப்புக் காவலர்கள் 40 பேர் இருக்க வேண்டிய இடத்தில் 10 பேர் மட்டுமே பணியில் உள்ளனர். எனவே, வன விலங்கு-மனித மோதலைத் தவிர்ப்பதில் தடையுள்ளதை இந்த அவையில் பதிவு செய்ய விரும்புகிறேன்.

கடந்த இரண்டரை ஆண்டுகளில், இந்தப் பேரவையில் பல்வேறு அறிவிப்புகளை அறிவித்து, அரசாணைகளையும் வெளியிட்டு வரும் வேளையில், அதற்கான அலுவலர்களை நியமனம் செய்திருக்க வேண்டும். ஆனால், வனத் துறையில் உதவி வனப் பாதுகாவலர், வனச் சரக அலுவலர், வனவர் நிலையில் 74 பணியிடங்கள், வனக் காப்பாளர்கள் நிலையில் 140 பணியிடங்கள், வனக் காப்பாளர்கள் நிலையில் (ஓட்டுநர் உரிமத்துடன்) 216 பணியிடங்கள், வனக் காவலர் நிலையில் 1,271 பணியிடங்கள் என்று பல்வேறு நிலைகளிலும் காலிப் பணியிடங்கள் நிரப்பப்படாமல் உள்ளன. வன உயிர்களையும், வனச் செல்வங்களையும் பாதுகாக்க முடியாத நிலை நிலவுவதை தாங்களும் அறிவீர்கள். எனவே, பல்வேறு நிலைகளிலுள்ள காலிப் பணியிடங்களை உடனடியாக நிரப்புவதற்கும், பதவி உயர்வுக்கான பட்டியலுக்கு உடனே ஒப்புதல் வழங்கவும் வேண்டுகிறேன்.

மாண்புமிகு எடப்பாடியார் அவர்கள் ஆணைப்படி, அவர் முதலமைச்சராக இருந்தபோது, தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம்மூலம் கடந்த 2016–2021 வரை 5 ஆண்டுகளில் மட்டும் 14 உதவி வனப் பாதுகாவலர்கள், 154 வனப் பயிற்றுநர்கள் நியமனம் செய்யப்பட்டுள்ளனர். மேலும், தமிழ்நாடு சீருடைப் பணியாளர் தேர்வாணையம்மூலம் 300 வனவர்கள், 726 வனக் காப்பாளர்கள், 61 ஓட்டுநர் உரிமத்துடன்கூடிய வனக் காப்பாளர்கள், 564 வனக் காவலர்கள் நேரடியாக நியமனம் செய்யப்பட்டுள்ளனர். மேலும் 196 மிகைப் பணியிட தோட்டக் காவலர்கள்/வேட்டைத் தடுப்புக் காவலர்கள், மாலி பதவிக்கான

ஊதிய விகிதத்தில் மிகைப் பணியிட வனக் காவலர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

மாண்புமிகு எடப்பாடியார் அவர்களின் அரசு, வேட்டைத் தடுப்புக் காவலர்களின் மாதாந்திர தொகுப்பூதியத்தினைக் கடந்த 5 ஆண்டுகளில் மட்டும் ரூ.6,750/-லிருந்து ரூ.10,000/–ஆக உயர்த்தி, அதன்பின் ரூ.10,000/– லிருந்து ரூ.12,500/– என உயர்த்தி அவர்களின் அத்தியாவசியப் பணியினை அங்கீகரித்திருக்கின்றது என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன். தற்போது வேட்டைத் தடுப்புக் காவலர்களின் தன்னலமற்ற பணியினை மேலும் அங்கீகரிக்கும் விதமாக, அவர்களின் தொகுப்பூதியத்தினை ரூ.12,500/– லிருந்து ரூ.20,000/– ஆக உயர்த்தித் தந்து அவர்களின் இடர்படும் வாழ்க்கையை சற்றே இன்பமுறும் வாழ்க்கையாக மாற்றும்படி மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு எடப்பாடியார் ஆட்சியில், தமிழ்நாடு வனத் துறை வரலாற்றில் முதன்முறையாக 190 பெண் வனக் காப்பாளர்கள் தேர்வு செய்யப்பட்டார்கள் என்பதைப் பெருமையுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த ஆண்டு 2022–2023 ஆம் வருடம் அறிவிப்பு எண் 11–ன்படி அந்நிய களைத் தாவரங்களான உண்ணி, சீமைக்கருவேல், நீலகிரி தைல மரம், சீகைசென்னா போன்ற இன மரங்களை அகற்றி, அப்பகுதிகளில் உள்ளூர் தாவர இனங்கள் நடப்படும் எனத் தெரிவித்திருந்தீர்கள். அந்நியத் தாவரங்கள் இதுவரை எவ்வளவு பரப்பில் அகற்றப்பட்டுள்ளன, எவ்வளவு உள்ளூர் தாவரங்கள் நடப்பட்டுள்ளன என்பதை தங்களுடைய பதிலுரையில் தெரிவிக்க வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். மேலும், இந்த அறிவிப்பு தமிழ்நாடு வனத் தோட்டக் கழகத்திற்கும் பொருந்துமா என்பதையும் அறிய விரும்புகிறேன்.

வனத் துறையின் கட்டுப்பாட்டின்கீழ் உள்ள மூன்று நிறுவனங்களில் தமிழ்நாடு வனத் தோட்டக் கழகம் என்ற நிறுவனம்தான் இலாபம் ஈட்டி மற்ற நிறுவனங்களுக்கும் அவ்வப்போது உதவி வருகின்றது. இந்தச் சூழ்நிலையில் அந்நிய களைத் தாவரங்களை முக்கியமாக, நீலகிரி தைல மரங்களை அகற்றும் இந்த அறிவிப்பு தமிழ்நாடு வனத்

தோட்டக் கழகத்திற்கும் பொருந்தும்பட்சத்தில்—கடந்த 2022–2023 ஆம் ஆண்டில் இந்த நிறுவனத்தின்மூலம்தான் 604.92 இலட்சம் ரூபாய் இலாபம் கிடைத்ததாக 2023–2024 ஆம் ஆண்டு கொள்கை விளக்கக் குறிப்பு புத்தகப் பக்கம் 199–ல் தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே, தைல மரங்களை அகற்றும்போது மிகப் பெரிய அளவில் இந்த நிறுவனத்தின் இலாபம் குறைவதற்கான வாய்ப்பு உள்ளது. இந்நிலையில், இதற்கான மாற்றுத் திட்டம் ஏதேனும் உள்ளதா? அவ்வாறு இருந்தால் அந்தத் திட்டத்தினையும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தனது பதிலுரையில் தெரிவிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 12–35

தமிழ்நாடு அரசு, தமிழ்நாடு வனத் தோட்டக் கழகம், தமிழ்நாடு தேயிலைத் தோட்டக் கழகம் மற்றும் அரசு ரப்பர் கழகம் ஆகிய மூன்று நிறுவனங்களுடன் இணைந்து சந்தைப்படுத்துதல் மற்றும் வணிக மேலாண்மை நடைமுறைகள், இலாபத்தை மேம்படுத்துதல் போன்றவற்றிற்கான வணிக ஆய்வு மேற்கொள்ளப்படும் என கொள்கை விளக்கக் குறிப்பு புத்தகம் 2021–2022 பக்கம் 102–103–ல் தெரிவிக்கப்பட்டிருந்த நிலையில், தமிழ்நாடு தேயிலைத் தோட்டக் கழக நிலம் வனத் துறைக்கு மாற்றப்பட்ட நிலையில், சந்தைப்படுத்துதலுக்கோ அல்லது வணிக மேலாண்மை நடைமுறைகள்மூலம் இலாபத்தை மேம்படுத்துதல் போன்றவற்றிற்கோ எந்த நடவடிக்கையையும் இந்த அரசு எடுக்கவில்லை. எனவே, இதன்மீது நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2023–2024 ஆம் வருட கொள்கை விளக்கக் குறிப்பு புத்தகம் பக்கம் 230–ல் தெப்பக்காடு யானைகள் முகாமில் ஆதரவற்ற யானைக் குட்டிகள் வளர்ப்பதை அடிப்படையாகக் கொண்ட "The Elephant Whisperers" என்ற ஆவணப்படம் ஆஸ்கர் விருதைப் பெற்றுள்ளதைக் குறிப்பிட்டிருக்கிறீர்கள். இது எல்லோருக்கும் மகிழ்ச்சி ஏற்படுத்தும் ஒரு செய்தி. இந்த ஆவணப் படம், 2017 ஆம் ஆண்டு வனச் சட்டத்தின் அடிப்படையில், மாண்புமிகு எடப்பாடியார் அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது, அனுமதி வழங்கப்பட்டு, 2018 ஆம் ஆண்டு எடுக்கப்பட்ட படம் என்பதைப் பெருமையோடு இந்த மாமன்றத்தில் தெரிவித்துக்கொள்கின்றேன்.

அதற்குரிய பரிசுகளையும் வனத் துறை அமைச்சர் என்கிற முறையில் நாங்களே அந்த நேரத்தில் கொடுத்திருக்கிறோம். அதைப்போல, தாங்கள் பொது நிவாரண நிதியிலிருந்து திரு. பொம்மன், திருமதி பெல்லி மற்றும் 91 யானைப் பாகன்கள், காவடிகளுக்கு தலா ஒரு இலட்சம் ரூபாய் வழங்கியுள்ளீர்கள். அவர்களது வாழ்வாதாரத்தை உயர்த்தும் வகையில் இன்றைய விலைவாசி உயர்வுக்கு ஏற்றவாறு தலா பத்து இலட்சம் ரூபாயை அவர்களுக்கு வழங்க வேண்டும். மேலும், அவர்களின் வேண்டுகோளின் அடிப்படையில், நீங்கள் அறிவித்தபடி அவர்களுக்கு வீடுகளை விரைவில் கட்டித்தர வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கின்றேன். இந்தியாவிற்கு பெருமைத் தேடித் தந்த திரு. பொம்மன், திருமதி பெல்லி ஆகிய இருவரையும் மாண்புமிகு பாரதப் பிரதமர் திரு. நரேந்திர மோடி ஜி அவர்கள் முதுமலைக்கு நேரில் சென்று பாராட்டியது வரலாற்றுச் சிறப்புமிக்க நிகழ்வாக அமைந்துள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டின் மேற்கு மற்றும் கிழக்குத் தொடர்ச்சி மலைகளில் புலிகள் வாழ்விடங்களைப் பாதுகாத்து மேலாண்மை செய்வதில் மாண்புமிகு அம்மாவின் அரசு சீரிய முயற்சிகளை மேற்கொண்டு வந்தது. இதனால் 2014 ஆம் ஆண்டு புலிகள் கணக்கெடுப்பின்படி 229 ஆக இருந்த புலிகளின் எண்ணிக்கை, 2018 ஆம் ஆண்டில் புலிகள் கணக்கெடுப்பின்படி 264 ஆக உயர்ந்தது. தற்போது வெளியிடப்பட்ட Status of Tigers 2022 அறிக்கையில் பக்கம் எண் 21-ல் கன்னியாகுமரி மற்றும் ஸ்ரீவில்லிபுத்தூர் வனப் பகுதிகளில் புலிகளின் எண்ணிக்கை குறைந்து வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே, மாண்புமிகு எடப்பாடியார் அவர்களின் சீரிய வழிகாட்டுதலால் மாண்புமிகு அம்மாவின் அரசு, புலிகளின் எண்ணிக்கையை 40 சதவிகித அளவில் உயர்த்திய நிலையில், தற்போது அந்த அறிக்கையில் புலிகளின் எண்ணிக்கை குறைந்து வருவதாகக் குறிப்பிடப்பட்டுள்ளதை தங்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருவதோடு, புலிகளின் எண்ணிக்கை குறைவதற்கான காரணத்தைக் கண்டறியவும், புலிகளின் எண்ணிக்கையை அதிகரிக்க நடவடிக்கை எடுக்கவும், மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். Because tigers are indicators of good forests; புலிகளின் எண்ணிக்கை அதிகமானால் வனத்தின் வளம் அதிகமாகும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது அனைத்து மாவட்டங்களிலும் விவசாயிகளின் முக்கிய

கோரிக்கையாக இருப்பது பன்றிகளால் பயிர்களுக்கு ஏற்படும் சேதத்தைத் தவிர்ப்பது பற்றிதான். ஒரு விவசாயியாக இதை உணர்ந்த மாண்புமிகு எடப்பாடியார், முதலமைச்சராக இருந்தபோது இக்கோரிக்கையினை ஆய்வுசெய்து, பன்றிகளைச் சுடுவதற்கு குறிப்பிட்ட 11 வனக் கோட்டங்களில் சிறப்பு அனுமதி வழங்கி, அதற்கான வழிகாட்டு நெறிமுறைகளையும் வழங்கி, அரசு ஆணையை வெளியிட்டார்கள். மேலும், பயிர் செய்யப்படும் வயல் வெளிகளுக்குள் பன்றிகள் நுழையாமல் இருக்க ஒரு சில wild boar repellent (பன்றி விரட்டிகள்) தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகத்தால் பரிசோதனை செய்யப்பட்டது. எனவே, பன்றிகளினால் ஏற்படும் இழப்பைத் தவிர்க்க உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுகிறேன்.

பிற்பகல் 12–40

Green Tamil Nadu Mission மூலம் சாலையோர மரக் கன்றுகள் நடப்பட்டுள்ள செய்தியை இங்கே சொல்லியிருக்கிறார்கள். மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் எல்லா சட்டமன்றத் தொகுதிகளையும், எதிர்க்கட்சிகள், ஆளுங்கட்சி என்று பாகுபாடு பார்க்காமல், 234 சட்டமன்றத் தொகுதிகளிலும் சாலையோர மரங்களை நடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். அப்பொழுதுதான் வனப் பரப்பு அதிகரிக்க வாய்ப்பாக இருக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், உங்களுக்குப் பக்கத்தில் இருக்கின்ற உங்களுடைய படத்திற்குப் பக்கத்திலுள்ள கடிகாரத்தில் . . . (குறுக்கீடு)

திரு. திண்டுக்கல் சி. சீனிவாசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 15–42 என்று காட்டுகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் 15 நிமிடம் 42 வினாடிகள் பேசிவிட்டீர்கள்.

திரு. திண்டுக்கல் சி. சீனிவாசன்: ஆமாம். 5 துறைகளில் பேச வேண்டுமல்லவா! கொஞ்சம் கருணை காட்டுங்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சரி, நீங்கள் கேட்டுக்கொண்டதற்காக இன்னும் ஒரு நிமிடம் பேசுங்கள்.

திரு. திண்டுக்கல் சி. சீனிவாசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு நிமிடத்தில் எப்படி பேசி முடிக்க முடியும்?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சரி, இரண்டு நிமிடங்கள் எடுத்துக்கொள்ளுங்கள், அவ்வளவுதான்.

திரு. திண்டுக்கல் சி. சீனிவாசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்னும் 10 நிமிடங்கள் பேச அவகாசம் கொடுங்கள். 5 துறைகளில் பேச வேண்டும். நீங்கள் எங்களுடைய இடத்திலிருந்து எண்ணிப் பாருங்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சரி, சரியாக இன்னும் 5 நிமிடங்கள் தருகிறேன். 12-45 மணிக்கு அடுத்த உறுப்பினரைப் பேச அழைத்துவிடுவேன்.

திரு. திண்டுக்கல் சி. சீனிவாசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ரொம்ப condition எல்லாம் போடாதீர்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உங்களுக்கு எந்தக் குறுக்கீடும் இல்லை.

திரு. திண்டுக்கல் சி. சீனிவாசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வன விலங்கு மோதலால் ஏற்படும் இழப்பிற்கு வழங்கப்படும் இழப்பீட்டுத் தொகையை ரூ.5 இலட்சத்திலிருந்து ரூ.10 இலட்சமாக உயர்த்தித் தர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். திண்டுக்கல், சிறுமலை பல்லுயிர்ப் பூங்காவை வளர்ப்பதற்காக எங்கள் ஆட்சியின்போது மாண்புமிகு எடப்பாடியார் அவர்கள் ரூ.5 கோடியை ஒதுக்கீடு செய்து கொடுத்தார்கள். அது தற்போது நடைபெற்று வருகிறது. ஆனாலும், அதனை மேம்படுத்துவதற்காக கூடுதல் நிதியாக இன்னும் ரூ.10 கோடியினை ஒதுக்கினால்தான் அது சிறப்பாக அமையும். மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் ஏற்கெனவே ஒட்டன்சத்திரம் பகுதிக்கு வருகை தந்தார்கள். அதேபோன்று, சிறுமலைப் பகுதிக்கும் வருகை தந்து, அதைப் பார்வையிட்டு, மேலும் 10 கோடி ரூபாயை ஒதுக்கிக் கொடுத்தால், அந்தப் பகுதி சிறப்பாக இருக்கும். எங்கள் மாவட்டத்தில் மாண்புமிகு அமைச்சர் திரு. இ. பெரியசாமி அவர்கள், மாண்புமிகு அமைச்சர் திரு. அர. சக்கரபாணி அவர்கள், முன்னாள் அமைச்சர் திரு. நத்தம் ஆர். விசுவநாதன் அவர்கள்,

2023 ஏப்ரல் 13] [திரு. திண்டுக்கல் சி. சீனிவாசன்]

தம்பி திரு. ஐ.பி. செந்தில்குமார், திரு. காந்திராஜன் உட்பட ஏழு சட்டமன்ற உறுப்பினர்கள் இருக்கின்ற அனைத்துப் பகுதிகளுக்கும் இது சிறப்பாக இருக்கும். எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சிறுமலை பகுதியைப் பார்வையிட்டு, மேலும் 10 கோடி ரூபாயை ஒதுக்கித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு முதல்வர் அவர்களால் அறிவிப்பு செய்யப்பட்ட, ஒட்டன்சத்திரம் தொகுதிக்குட்பட்ட பரப்பலாறு அணை தலக்குத்து நீர்வீழ்ச்சி சுற்றுச்சூழல் பூங்கா அமைக்கும் பணியினைத் தொடங்குவதற்கு இதுவரை நடவடிக்கை எடுக்கப்படவில்லை. உடனடியாக அந்தப் பணியினைத் தொடங்க வேண்டும் என்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன்.

TANTEA *தொழிலாளர்களுக்கு வன நிலங்களை குத்தகைக்குக் கொடுக்க வேண்டுமென்று இம்மாமன்ற கூடலூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் திரு. பொன். ஜெயசீலன் அவர்கள் இந்த அவையில் ஒரு கவன ஈர்ப்பு அறிவிப்பினைக் கொடுத்தார்கள். அந்தக் கவன ஈர்ப்பினை ஆதரித்து எதிர்க்கட்சித் தலைவர் மாண்புமிகு எடப்பாடியார் அவர்கள் பேசி, அரசின் கவனத்தை ஈர்த்தார்கள். அதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் கூறியபோது, அ.இ.அ.தி.மு.க. ஆட்சிக் காலத்தில் அந்த நிலங்கள் ஒதுக்கப்பட்டதாகச் சொன்னார்கள். அதில் மாற்றுக் கருத்து இல்லை. அ.இ.அ.தி.மு.க. ஆட்சிக் காலத்தில் பயன்படாத வன நிலங்களும், யானைகளால் அந்தப் பகுதி மக்கள் பாதிக்கப்படுவதாலும், அந்த இடங்கள் வனத் துறைக்கு ஒப்படைக்கப்பட்டன.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.*

***மாண்புமிகு திரு. துரைமுருகன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,* Senior Member *கேட்டதால் சொல்கிறேன். பரப்பலாறு அணை இன்னும் ஒரு வாரத்தில் தூர் வாரப்படும். (குறுக்கீடு) நீங்கள் கேட்டு நான் அதைச் செய்யாமல் இருக்கலாமா! ஒரு வாரத்தில் செய்து தருகிறோம்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. திண்டுக்கல் சி. சீனிவாசன் அவர்கள். (குறுக்கீடு) தண்ணீர் குடியுங்கள். இன்னும் ஒரு நிமிடம்தான் உங்களுக்கு இருக்கிறது.*

அதற்குள் தண்ணீரெல்லாம் குடிக்க வேண்டாம். பேசி முடித்துவிட்டு பிறகு தண்ணீர் குடித்துக்கொள்ளுங்கள்.

திரு. திண்டுக்கல் சி. சீனிவாசன்: மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள் கொஞ்சம் interval கொடுப்பார்கள் என்று நினைத்தேன். ஆனால், சட்டென்று அவர்கள் பேசி முடித்துவிட்டார்கள். அ.இ.அ.தி.மு.க. ஆட்சிக் காலத்தில், பயன்படாத வன நிலங்கள், யானைகளால் அந்தப் பகுதி மக்கள் பாதிக்கப்பட்டதால், அந்த இடங்கள் வனத் துறைக்கு ஒப்படைக்கப்பட்டன. ஆனால், ஊட்டி, நடுவட்டம் பகுதியிலுள்ள நன்றாக விளைச்சல் தரக்கூடிய நிலங்களைத் தற்போது வனத் துறைக்கு ஒப்படைக்கிறார்கள். இதை, இலங்கையிலிருந்து வந்த மக்களுக்கு lease-க்கு கொடுத்தால் வருமானம் வரும். தமிழ்நாடு அரசு தேயிலைத் தோட்டக் கழகம் சுமார் ரூ.280 கோடி இழப்பைச் சந்தித்துள்ளதாகக் கூறப்படுகிறது. அதனால்தான், அந்த நிலங்களை வனத் துறை வசம் ஒப்படைக்காமல் இருக்கக் கோருகிறேன். எனவே, மாண்புமிகு முன்னாள் வனத் துறை அமைச்சர், தற்போதைய சுற்றுலாத் துறை அமைச்சர் திரு. கா. ராமசந்திரன் அவர்களும் தற்போது இருக்கின்ற மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்களும், தாயகம் திரும்பிய தொழிலாளர்கள் பயன்பெறும் வகையில் குடும்பத்திற்கு தலா 2 ஏக்கர் TANTEA நிலத்தை குத்தகைக்கு விடவேண்டுமென்று அன்போடு நான் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உரையாற்றியது போதும். (குறுக்கீடு) சரி, பேசுங்கள்.

பிற்பகல் 12–45

திரு. திண்டுக்கல் சி. சீனிவாசன்: பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை, கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை போன்ற இன்னும் சில துறைகள் இருக்கின்றன. (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை சார்பில் சில கருத்துகளைக் கூற விரும்புகிறேன்.

சமூக நீதியினைப் பேண வேண்டும் என்பதனை தன் இதயத்தில் தோய்த்து வைத்திருந்த “நம்முடைய புரட்சித் தலைவி

2023 ஏப்ரல் 13] [திரு. திண்டுக்கல் சி. சீனிவாசன்]

அம்மா அவர்கள், தமிழகத்தில் 69 சதவிகித இடஒதுக்கீட்டிற்கு (மேசையைத் தட்டும் ஒலி) இந்திய அரசமைப்புச் சட்டம், பிரிவு 31B-ன்கீழ் பாதுகாப்பு பெறும்பொருட்டு, உச்ச நீதிமன்ற உத்தரவு பெற்று, தமிழ்நாடு சட்டம் 45/1994-ஐ இந்திய அரசமைப்புச் சட்டத்தின் 9-வது அட்டவணையில் சேர்த்து, 11-7-2011 அன்று அரசாணையை வெளியிட்டு, ஒடுக்கப்பட்ட மக்களுக்கான ஒதுக்கீடு பெற்று, சரித்திரத்தில் இடம் பிடித்து, தன்னை உண்மையான திராவிட இயக்க வழித்தோன்றல் என்பதை நிரூபித்து, சமூக நீதி காத்த வீராங்கனையாக எங்கள் அம்மா பாராட்டப்பட்டார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) பாராட்டியது யார் என்பது, அவையில் உள்ள அனைத்து உறுப்பினர்களுக்கும் நன்றாகத் தெரியும். இப்போதுகூட, எங்களது மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.பி. முனுசாமி அவர்கள் காலையில் இந்தப் பிரச்சினை குறித்து, இங்கே மிக அருமையாகப் பேசி பதிவு செய்திருக்கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காலம் என்ற சிற்பி நம் குழந்தைகளைச் செதுக்கும்போது, நாம் குழந்தைகளைச் சிற்பமாக மாற்றுகிறோமா அல்லது சிதறி விழும் கல்லாக மாற்றுகிறோமா என்பது நாம் அவர்கள்மீது செலுத்தும் கவனம், கனிவு மூலமே தெரிய வரும். கனிவும், கருணையும் கொண்ட மாண்புமிகு அம்மா அவர்கள், பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட, சீர்மரபினர் மற்றும் சிறுபான்மையின பிரிவைச் சார்ந்த மாணவ, மாணவியர்கள் உயர் கல்வி பயில ஊக்குவித்திடும் வகையில் பட்டயப் படிப்பு, தொழிற் பட்டயப் படிப்பு படிக்கும் காலம் வரை வருடத்திற்கு நபருக்கு ரூ.3,000/- வீதம் பரிசு வழங்கினார்கள். முதலமைச்சரின் தகுதி பரிசுத் திட்டம் என்ற திட்டத்தினை சீர்தூக்கிப் பார்த்து, இன்றைய நடைமுறைக்கு ஏற்றவாறு இந்தப் பரிசுத் தொகையினை ரூ.10,000/- ஆக உயர்த்தி வழங்க வேண்டுமென்றும், பின்தங்கிய மாணாக்கர்களை மணம் வீசும் மலர்களாக மாற்ற நடவடிக்கை எடுக்க வேண்டுமென்றும் மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர். . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: போதும், போதும், please.

திரு. திண்டுக்கல் சி. சீனிவாசன்: இன்னொரு. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. கார்த்திகேயன் அவர்கள். (குறுக்கீடு) சொல்லுங்கள், சொல்லுங்கள்.

திரு. திண்டுக்கல் சி. சீனிவாசன்: 4 துறைகளின் கோரிக்கைகளையும், விஷயங்களையும், தொகுதியின் விஷயங்களையும் வைத்திருக்கிறேன். அதைப் பதிவு செய்துகொள்ளும்படி உங்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மிக்க நன்றி, பதிவு செய்துவிடுகிறேன்.

திரு. திண்டுக்கல் சி. சீனிவாசன்: Time கொடுத்தீர்களென்றால் பேசுகிறேன். இல்லையென்றால், பதிவு செய்துகொள்ளுங்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் பேசினதாகப் பதிவு செய்து, தந்துவிடுகிறேன். நன்றி.

திரு. திண்டுக்கல் சி. சீனிவாசன்: ரொம்ப நன்றி.

தொகுதிக் கோரிக்கைகள்:

வாகன நெரிசலைக் குறைக்க நாகல்நகர் ரவுண்டானாவில் இருந்து நத்தம் ரோடு குடகனாறு இல்லம் வரை ஏற்கெனவே இருக்கும் பாலத்துடன், இரு புதிய மேம்பாலங்கள் அமைக்க வேண்டும்.

ஒய்.எம்.ஆர். பட்டி, சிலுவத்தூர் ரோட்டில் உள்ள தெப்பக்குளத்தைத் தூர்வாரி, கரையைப் பலப்படுத்த கருங்கல் கட்டடம் கட்டிக்கொடுத்து அருகிலேயே 40X50 அளவில் மண்டபம் அமைக்க வேண்டும்.

ஆர்த்தி தியேட்டர் ரோடு, இரண்டு பக்கமும் ஓடை அமைத்து புதிய தார்ச்சாலை அமைக்க வேண்டும்.

சிலுவத்தூர் ரோடு, ஒய்.எம்.ஆர். பட்டி நடைபயணம் செய்யும் இடத்தில் (Walking Place) மண்ணைத் தூர்வாரி அதனைச் சுற்றி கருங்கல் கட்டடம் கட்ட வேண்டும்.

நாகல்நகர் ரவுண்டானாவில் இருந்து திப்புசுல்தான் மணி மண்டபம் வரை LED விளக்கு அமைக்க வேண்டும்.

பழைய கோர்ட் சாலையில் இருந்து ரவுண்டு ரோடு வரை இரண்டு பக்கமும் புதிய தார்ச்சாலை மற்றும் ஓடை அமைக்க வேண்டும்.

2023 ஏப்ரல் 13] [திரு. திண்டுக்கல் சி. சீனிவாசன்]

திண்டுக்கல் பேருந்து நிலையத்தில் இருந்து வெள்ளை விநாயகர் கோயில் வரை இருபுறமும் தார்ச்சாலை மற்றும் ஓடை அமைக்க வேண்டும்.

பெரியார் சிலை அருகில் பேருந்து செல்லும் பாதையான பழனி ரோட்டில் இருந்து வாணிவிலாஸ் மேடு வரை மேம்பாலம் கட்ட வேண்டும்.

மேட்டுப்பட்டி வார்டு எண் 41 மற்றும் 45-ல், இறந்த உடல்களைப் புதைக்க மயானத்திற்கு இடம் ஒதுக்கித் தர வேண்டும்.

பேகம்பூர், மதுரை ரோடு வார்டு எண் 26, 39, 43-ல் நேருஜி நினைவு பள்ளியில் இருந்து போக்குவரத்து நெரிசலைக் குறைக்க சவேரியார்பாளையம் மேம்பாலம் கட்டப்பட வேண்டும்.

வார்டு எண் 24-ல் முத்தாலப்பட்டி தேர் ரோட்டில் தார்ச்சாலை அமைக்க வேண்டும்.

பேகம்பூர், வத்தலக்குண்டு ரோடு, பேகம்பூர் NSK சிலையில் இருந்து பாறைப்பட்டி வரை சாலையினை அகலப்படுத்தி இருபுறமும் ஓடை அமைக்க வேண்டும்.

பேகம்பூர், மதுரை ரோட்டில் பெரிய நூலகம் அமைக்க வேண்டும்.

இரயில்வே ஸ்டேஷன் எதிர்புறம் உள்ள சாலையை அகலப்படுத்தி கழிவுநீர் வாய்க்கால் அமைக்க வேண்டும்.

பேருந்து நிலையத்தில் இருந்து சென்னை சில்க்ஸ் (ஏ.எம்.சி. ரோடு) பாரதி ஹாஸ்டல் சாலை வழியாக இரயில் நிலையம் வரை சாலையை அகலப்படுத்தி LED விளக்கு அமைக்க வேண்டும்.

திண்டுக்கல் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட அனைத்து ஊராட்சிகளிலும் சமுதாயக்கூடம் அமைக்க வேண்டும்.

திண்டுக்கல் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட அனைத்து ஊராட்சிகளிலும் மேற்கூரையுடன்கூடிய சுடுகாடு அமைக்க வேண்டும்.

திண்டுக்கல் என்.ஜி.ஓ. காலனி உழவர் சந்தை அருகில் மழைக்காலங்களில் அங்கு மழைநீர் தேங்காத வண்ணம் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

பள்ளப்பட்டி ஊராட்சியில் உள்ள கொட்டப்பட்டி, புதுப்பட்டி கண்மாயில் இருந்து வரும் தோல்ஷாப் கழிவுநீரைச் சுத்தப்படுத்தி குடிநீராக மாற்றித் தர வேண்டும்.

பழனி ரோடு பைபாஸ் வாகன நெருக்கடியைக் குறைக்க நீளமான மேம்பாலம் அமைக்க வேண்டும்.

தோல் தொழிற்சாலை கழிவுநீர் கலக்காமல் இருக்க தனி வாய்க்கால் அமைக்க வேண்டும்.

நகர பகுதியில் இருந்து வரும் கழிவுநீர், கண்மாயில் கலக்காமல் இருக்க தடுப்பு வாய்க்கால் அமைக்க வேண்டும்.

திண்டுக்கல் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட பகுதியில் உள்ள ஊராட்சி ஆரம்பப் பள்ளிகளை உயர்நிலைப் பள்ளிகளாகவும், உயர்நிலைப் பள்ளிகளை மேல்நிலைப் பள்ளிகளாகவும் தரமுயர்த்த வேண்டும்.

தோல் தொழிற்சாலைகளில் இருந்து வரக்கூடிய முடி, சவ்வு ஆகியவற்றை உயிரி உரமாக மாற்றுவதற்கு மத்திய தோல் ஆராய்ச்சி நிறுவனத்துடன் ஒப்பந்தம் செய்து செயல்படுத்துவதற்கு உரிய நிதி வழங்க வேண்டும்.

திண்டுக்கல் தோல் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையத்திற்குச் சொந்தமான, தானமாக வழங்கியுள்ள 35 ஏக்கர் நிலப்பரப்பில் மரம் வளர்க்க உரிய முயற்சி மேற்கொள்ளப்பட வேண்டும்.

திண்டுக்கல் மாவட்டத்தில் Finished Leather செய்வதற்கு ஒரு தோல் பூங்கா (Leather Park) அமைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

திண்டுக்கல்லில் உள்ள தோல் பதனிடும் தொழிற்சாலைகள் 2 மெகா வாட் சூரிய ஒளி மின்சாரம் உற்பத்தி செய்யக்கூடிய நிலையத்தை அமைத்துள்ளார்கள். தோல் உற்பத்தி 50 சதவிகிதம் அளவில் உள்ளது. எனவே, முழு கொள்ளளவை எட்டும் வரை மீதமுள்ள மின்சாரத்திற்கு, மின் கட்டண அனுசரிப்பினை தோல் தொழிற்சாலைகளுக்கு செய்து கொடுக்க வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. கார்த்திகேயன் அவர்கள். (குறுக்கீடு) மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.

2023 ஏப்ரல் 13]

மாண்புமிகு டாக்டர் மா. மதிவேந்தன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் ஐயா திண்டுக்கல் சி. சீனிவாசன் அவர்கள், இதற்கு முன்பு வனத் துறை அமைச்சராக இருந்தார். அவர் நிறைய கேள்விகளை எழுப்பியுள்ளார். அவையனைத்திற்கும் என்னிடம் பதில் இருக்கிறது. நேரம், காலம் கருதி என்னுடைய பதிலுரையில் குறிப்பிடுகிறேன் என்பதைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. கார்த்திகேயன் அவர்கள்.*

திரு. ப. கார்த்திகேயன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அண்ணல் அம்பேத்கரின் பிறந்தநாளை சமத்துவ நாளாக அறிவித்து, உறுதிமொழியை எடுக்க வைத்த வரலாற்றுச் சிறப்புமிக்க நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு என்னுடைய மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)*

மானியக் கோரிக்கையில் பேச வைத்த மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களையும், பெரியார் அவர்களையும் வணங்குகிறேன். அறிஞர் அண்ணாவுக்கு தம்பியாக வாழ்ந்து, அண்ணாவிற்கு பக்கத்தில் உறங்கிக்கொண்டிருக்கிற என் தலைவரை வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர், எங்களுடைய கழகத் தலைவர் அவர்களை வணங்குகிறேன். எங்களுடைய கழகத்தின் பொதுச் செயலாளர், மாண்புமிகு நீர்வளத் துறை மற்றும் கனிமவளத் துறை அமைச்சர் அண்ணன் அவர்களை வணங்குகிறேன். மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சரும், மாநில இளைஞரணிச் செயலாளருமான அண்ணன் அவர்களை வணங்குகிறேன்.

திருவண்ணாமலை மாவட்ட கழகத்தின் செயலாளர், பொதுப் பணித் துறை அமைச்சர் அண்ணன் அவர்களையும் வணங்குகிறேன். ராணிப்பேட்டை மாவட்ட கழகத்தின் செயலாளர், கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அண்ணன் அவர்களையும், சட்டப் பேரவைத் துணைத் தலைவர் அவர்களையும், கொறடா அவர்களையும் வணங்குகிறேன். எங்களுடைய வேலூர் மாவட்ட கழகத்தின் செயலாளர், அணைக்கட்டு தொகுதியின் சட்டப்

பேரவை உறுப்பினர், சகோதரர் திரு. A.P. நந்தகுமார் அவர்களையும் வணங்குகிறேன். என்னுடைய மாவட்டத்தின் அவைத் தலைவரும், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான திரு. முகம்மது சகி அவர்களை வணங்கி, என்னுடைய வெற்றிக்காக பாடுபட்ட கழகத் தோழர்களுக்கும், கூட்டணி நண்பர்களுக்கும், என்னை 2-வது முறை சட்டமன்ற உறுப்பினராக்க, எனக்கு வாக்களித்த வாக்காளப் பெருமக்களுக்கும் என்னுடைய மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 12–50

நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், ஆட்சிப் பொறுப்பேற்ற இரண்டாண்டுகளில் எத்தனையோ சாதனைகளைப் படைத்திருக்கிறார்கள். நம்முடைய தலைவர் அவர்கள் செய்த சாதனைகளில் சிலவற்றை மட்டும் இங்கே எடுத்துச் சொல்கிறேன். மக்களுக்கான போக்குவரத்தைப் பொறுத்தவரையில், பணக்காரர்கள் car-ல் போவார்கள், two wheeler-ல் போவார்கள். ஆனால், ஏழையெளிய மக்கள் போக வேண்டும், தொழிலாளர்களெல்லாம் போக வேண்டும் என்பதற்காக, மகளிருக்கான கட்டணமில்லா பேருந்து வசதி திட்டத்திற்காக நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கடந்த ஆண்டில் 1,520 கோடி ரூபாயை ஒதுக்கித் தந்தார்கள். இந்த ஆண்டு, 2023–2024–ல் 2,800 கோடி ரூபாயை ஒதுக்கித் தந்து, ஏழையெளிய மக்கள் மீது அக்கறையுடன் தலைவர் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள். அதுமட்டுமல்ல, பெண்களுக்கு, இல்லத்தரசிகளுக்கு மாதந்தோறும் ஆயிரம் ரூபாய் உரிமைத் தொகை வழங்கும் திட்டத்தை ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காண்கிறேன் என்று சொன்ன பேரறிஞர் அண்ணா அவர்களின் பிறந்தநாளில் தொடங்கி வைக்கவிருக்கிறார்கள். சுமார் ஒரு கோடி மகளிருக்கு மாதம் ரூ.1,000/– வழங்குவதற்காக 7,000 கோடி ரூபாயை ஒதுக்கியிருக்கிறார்கள். அவர்தான் நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

பெண்களெல்லாம் உயர்ந்த நிலைக்குச் செல்ல வேண்டும். +2 முடித்துவிட்டால் போதும் என்று திருமணம் செய்து வைத்துவிடுகிறார்கள். அதையெல்லாம் மனதில் வைத்து, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மாதந்தோறும் ஆயிரம் ரூபாய் உதவித் தொகை வழங்கும் புதுமைப் பெண் திட்டத்தை அறிவித்தார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) பெண்கள் உயர் கல்வி

பயில வருடத்திற்கு 12,000/– ரூபாய் வீதம், மூன்றாண்டுகளுக்கு 36,000/– ரூபாயை வழங்குகிற முதலமைச்சர்தான் நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் என்பதை பெருமையாக எடுத்துச் சொல்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

நம்முடைய தலைவர் அவர்கள், துணை முதலமைச்சராக இருந்த காலத்தில் சுய உதவிக் குழுக்களுக்கு சுழல்நிதி வழங்கினார்கள். மணிக்கணக்கில் நின்று நம்முடைய குடும்பத்தைக் காப்பாற்றுகின்ற ஒரு தாய் சிறப்பாக இருந்தால், அந்த குடும்பமே சிறப்பாக இருக்கும் என்கின்ற காரணத்தினால்தான், நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சுழல்நிதியை வழங்கினார்கள். இதற்காக கடந்த 2021–2022–ல் 20,000 கோடி ரூபாயை ஒதுக்கித் தந்திருக்கிறார்கள். தாய்மார்கள்மீது அவர் வைத்திருக்கின்ற அந்த அன்பு மற்றும் பாசம் காரணமாகத்தான் 2023–2024–ல் 30,000 கோடி ரூபாயை ஒதுக்கித் தந்திருக்கிறார்கள்.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 2021–2022–ல் 6,000 கோடி ரூபாய் அளவில் 5 சவரன் அளவிலான நகைக் கடன்களை தள்ளுபடி செய்தார். 2023–2024–ல் 1,000 கோடி ரூபாயை மீண்டும் ஒதுக்கித் தந்திருக்கிறார்கள் என்றால், ஏழையெளிய மக்கள்மீது எந்தளவிற்கு நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அன்பை வைத்திருக்கிறார் என்பதை நீங்களெல்லாம் தெரிந்துகொள்ள வேண்டும். 'இல்லம் தேடி கல்வி', 'மக்களைத் தேடி மருத்துவம்', 'இன்னுயிர் காப்போம், நம்மைக் காக்கும் 48' போன்ற பல திட்டங்களைத் தந்திருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இவையெல்லாவற்றையும்விட 1 ஆம் வகுப்பு முதல் 5 ஆம் வகுப்பு வரை படிக்கின்ற மாணவச் செல்வங்களுக்கு காலை உணவுத் திட்டத்தை வழங்கிய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை என்னுடைய வாழ்நாளில் என்றுமே மறக்க முடியாது. ஏன் இதைச் சொல்கிறேன் என்றால், சாப்பாட்டிற்காக கஷ்டப்பட்ட என்னைப் போன்றவர்களுக்குத்தான் அதன் பயன் தெரியும். (மேசையைத் தட்டும் ஒலி) நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், மாணவச் செல்வங்கள் பசியோடு இருக்கக்கூடாது என்பதற்காக, 18 இலட்சம் மாணவர்கள் பயனடையும் வகையில் காலை உணவுத் திட்டத்திற்காக 500 கோடி ரூபாயை ஒதுக்கித் தந்திருக்கிறார் என்று சொன்னால், அவரை யாராலும் மறக்க முடியாது. (மேசையைத் தட்டும் ஒலி) ஏழையெளிய மக்கள் எவருமே அவரை மறக்க

மாட்டார்கள். அந்தளவிற்கு நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நிதியை ஒதுக்கித் தந்திருக்கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை குறித்த மானியக் கோரிக்கையின் மீதான விவாதத்தில் பேச எனக்கு வாய்ப்பளிக்கப்பட்டுள்ளது. 1971 ஆம் ஆண்டில் நம்முடைய தலைவர் கலைஞர் அவர்கள்தான் பிற்படுத்தப்பட்டோர் நலனுக்காக ஒருதுறையை உருவாக்கினார்கள். இந்திய வரலாற்றிலேயே அந்தத் துறையை முதலில் உருவாக்கியவர் தலைவர் கலைஞர் அவர்கள்தான் என்று சொல்வதிலே உள்ளபடியே மகிழ்ச்சியடைகின்றேன். நம்முடைய தலைவர் வழியிலே நடக்கின்ற நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்தான் 2021–2022–ல், இத்துறைக்கு 1,230 கோடி ரூபாயை ஒதுக்கித் தந்தார்கள். 2023–2024–ல் 1,580 கோடி ரூபாயை ஒதுக்கித் தந்திருக்கிறார்கள் என்று சொன்னால், பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட மக்கள் மீது எந்தளவிற்கு அவர் அன்பை வைத்திருக்கிறார் என்பதை அறியலாம்.

உயர் கல்வி பெறும் கல்லூரி மாணவர்களின் scholarship–க்காக 502 கோடி ரூபாயை ஒதுக்கித் தந்திருக்கிறார்கள். மாணவர்களுக்கு மிதிவண்டிகள் வழங்குவதற்காக 305 கோடி ரூபாயை ஒதுக்கித் தந்திருக்கிறார்கள். நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், சிறுபான்மையின மக்களின் மசூதியை, தர்காவைச் சீர் செய்வதற்காக கடந்த ஆண்டில் 6 கோடி ரூபாயை ஒதுக்கித் தந்தார்கள். 2023–2024 ஆம் ஆண்டில் 10 கோடி ரூபாயை ஒதுக்கித் தந்திருக்கிறார்கள். Churches–க்கு கடந்த ஆண்டில் 6 கோடி ரூபாயையும், இந்த ஆண்டு 10 கோடி ரூபாயையும் ஒதுக்கித் தந்திருக்கிறார்கள் நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

காதியில் பார்த்தால் TANSI–ஐ உருவாக்கினார் நம்முடைய தலைவர் கலைஞர் அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அந்த TANSI–யில் மாற்றுத் திறனாளிகளுக்குத்தான் முன்னுரிமை கொடுக்கப்பட வேண்டும் என்பதற்காக, நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், TANSI–யில் மாற்றுத் திறனாளிகளுக்கு என எத்தனையோ நல்ல காரியங்களைச் செய்து கொண்டிருக்கிறார்கள். தந்தை பெரியார் அவர்களுடைய பிறந்த நாளை சமூகநீதி நாளாக அறிவித்தவர் நம்முடைய தலைவர் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

2023 ஏப்ரல் 13] [திரு. ப. கார்த்திகேயன்]

பிற்பகல் 12–55

அனைத்து சாதியினரும் அர்ச்சகராகலாம் என்ற நிலையைக் கொண்டுவந்து அமல்படுத்த தந்தை பெரியார் அவர்கள் நினைத்தார், பேரறிஞர் அண்ணா அவர்கள் நினைத்தார், தலைவர் கலைஞர் அவர்கள் நினைத்தார். அதை நிறைவேற்றிக் காட்டிய நம்முடைய முதலமைச்சர் தலைவர் அவர்களை யாராலும் மறக்க முடியாது. (மேசையைத் தட்டும் ஒலி)

வேலூர் மாநகரத்தில் Pentland Hospital 5½ ஏக்கர் நிலத்தில் அமைந்துள்ளது. கடந்த 5 ஆண்டு காலம் நானும், எங்களுடைய அவை முன்னவர் அவர்களும் சட்டமன்ற உறுப்பினர்களாக இருந்தபோது, அதனை முழுமையான மருத்துவமனையாக அமைத்துத் தர வேண்டுமென்று கேட்டோம். நான் கேட்கும்போது மாண்புமிகு அவை முன்னவர் அவர்களும் கேட்டார்கள். காட்பாடி மக்கள்கூட வேலூருக்குச் சென்று அதைப் பயன்படுத்துவார்களென்று சொல்லி கேட்டார்கள். நம்முடைய ஆட்சி வந்தவுடனே மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடத்திலே இதனை எடுத்துச் சொல்லியவுடன், 198 கோடி ரூபாயை ஒதுக்கித் தந்தது மட்டுமல்லாமல், (மேசையைத் தட்டும் ஒலி) அந்தப் பணிக்கு சென்ற மாதம் 14 ஆம் தேதி tender வைக்கப்பட்டுள்ளது. இதற்காக பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களுக்கு என் வேலூர் தொகுதி மக்கள் சார்பிலும், என் சார்பிலும் நன்றியைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். அதேபோல, நம்முடைய சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர் அவர்களும் அந்த நிதியைப் பெற்றுத் தந்தார். அவருக்கும், மாண்புமிகு சுகாதாரத் துறை அமைச்சர் அவர்களுக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

எனது வேலூர் தொகுதியில் இருக்கின்ற நேதாஜி மார்க்கெட் ஒரு சிறப்பான மார்க்கெட். அந்த மார்க்கெட்டிற்கு கடந்த smart city திட்டத்திலே 60 கோடி ரூபாய் நிதி ஒதுக்கி tender வைத்தார்கள். அதைப் பார்த்தீர்களென்றால், குல்பர் ஆராய்ச்சி நிறுவனம் அங்கு 3 அடுக்கு கட்ட முடியாதென்று cancel செய்துவிட்டார்கள். Front-ல் 40 அடி உயரத்தில் சாரதி மாளிகை இருக்கிறது. இப்போது ஒரு அடுக்கு, அதாவது, 11 அடி அல்லது 12 அடி கட்டினால் கூடப்போதும். ஆகவே, அதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று நம்முடைய வீட்டு வசதி மற்றும் நகர்ப்புர வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கின்றேன்.

[திரு. ப. கார்த்திகேயன்] [2023 ஏப்ரல் 13

வேலூர் மாநகரத்தில் பாதாளச் சாக்கடைத் திட்டப் பணிகள் இன்னும் முடியவில்லை. சென்ற பத்தாண்டுகளிலும் முடியவில்லை. இப்போதும் முடியவில்லை. நம்முடைய சட்டமன்ற உறுப்பினர் ** இந்த ஆண்டிலே முடித்துத் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன்.

வேலூர் மாநகரத்தில் புதிய பேருந்து நிலையம் அருகில், பாலாறு போகிறது. பழைய பாலத்தின் அருகில் அதன் ஓரமாக ஒரு மேம்பாலம் கட்டிக் கொடுத்தால் சத்துவாச்சேரி, காட்பாடி Collector Office வழியாக மக்கள் சென்றுவிடுவார்கள். Green Circle–ல் traffic குறைந்துவிடும். அதைச் செய்து தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன்.

பெருமாள் கோயில் அருகில் வெங்கடேஸ்வரா பள்ளி இருக்கிறது. மாணவச் செல்வங்கள் சாலையின் குறுக்கே கடந்து போகிறார்கள். இங்கு ஒரு சுரங்கப் பாதை கட்டித் தர வேண்டுமென்று மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கின்றேன்.

என்னுடைய வேலூர் தொகுதியிலே, பாலாற்றுத் தண்ணீர் வீணாகக் கடலுக்குப் போய்விடுகிறது. பெருமுகையிலே ஒரு check dam கட்டிக் கொடுத்தால் வேலூர் மாநகர மக்களுக்குப் பயனுள்ளதாக இருக்குமென்று நம்முடைய மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்களிடம் மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கின்றேன். என்னுடைய சத்துவாச்சேரி பகுதியிலே இலட்சக்கணக்கான மக்கள் இருக்கிறார்கள். எனவே, அங்கு ஒரு தகன மேடை அமைத்துத் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

வேலூர் தொரைப்பாடி பகுதியிலே mini உயிரியல் பூங்கா அமைத்துத் தர வேண்டுமென்று மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கின்றேன்.

என்னுடைய வேலூர் தொகுதியிலே, வேலூர் நகரத்திலே இருக்கிற குப்பைகளையெல்லாம் சதுப்பேரியிலே கொட்டினோம். அதை மூடிவிட்டார்கள். வேலூர் பேருந்து நிலையத்திற்குப்

** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

பக்கத்தில் ஒரு ஏக்கர் 10 சென்ட் நிலம் இருந்தது. அதையும் மூடிவிட்டார்கள். சாத்துப்பாக்கத்திலே 9 ஏக்கர் நிலம் இருக்கிறது. அதிலே கால்வாய் மண்ணையெல்லாம் கொட்டுவதற்கு அனுமதி தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன்.

இறுதியாக, என்னுடைய முதலமைச்சர், என்னுடைய தலைவர், இந்தியாவிலேயே No.1 முதலமைச்சர் என்று சொன்னால், 'நான் ஏற்றுக்கொள்ள மாட்டேன்; என் தமிழ்நாடுதான் சிறந்த மாநிலம் என்ற நிலையை அடைந்தால்தான் நான் ஏற்றுக்கொள்வேன்' என்று கடந்த ஆண்டில் நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பேசினார்கள். இது எதைக் காட்டுகிறதென்று சொன்னால், தமிழ்நாட்டு மக்களுக்காகவும், ஏழை மக்களுக்காகவும் பாடுபடுகிற முதலமைச்சர்தான் நம்முடைய முதலமைச்சர் அவர்கள். நம்முடைய முதலமைச்சர், 'எனக்கு 2 கண்கள் அதில் ஒன்று சுகாதாரம், இன்னொன்று கல்வி' என்று சொன்னார். அந்தக் கல்விக்கு இந்த ஆண்டு 40 ஆயிரத்து 299 கோடி ரூபாயை ஒதுக்கித் தந்திருக்கிறார்கள். இந்திய வரலாற்றில் யாரும் செய்யாததைச் செய்து, தமிழ்நாடு சிறந்து வர வேண்டுமென்பதற்காக செய்திருக்கிறார்கள். அதுமட்டுமல்ல, மக்கள் நல்வாழ்வுத் துறைக்கு கடந்த ஆண்டு 18 கோடி ரூபாய் ஒதுக்கித் தந்தார். இந்த ஆண்டு 19 கோடி ரூபாயை அந்தத் துறைக்கு ஒதுக்கித் தந்திருக்கிறார் என்று சொன்னால், மாண்புமிகு முதலமைச்சர் எத்தனையோ நல்ல காரியங்களை இந்த நாட்டு மக்களுக்காக, ஏழை மக்களுக்காக பல்வேறு திட்டங்களைத் தீட்டி இந்தச் சட்டமன்றத்திலே நிறைவேற்றுகிற முதலமைச்சர் உள்ளார் என்று சொன்னால், இதுதான் திராவிட இயக்க வரலாறு, திராவிட மாடல் ஆட்சி என்பதைச் சொல்வதிலே மகிழ்ச்சியடைகிறேன். மீதமுள்ள எனது தொகுதிக் கோரிக்கைகளையெல்லாம் உங்களிடம் கொடுத்துவிடுகிறேன். அவற்றை நான் பேசியதாகக் கருதி அவைக் குறிப்பிலே பதிவு செய்ய வேண்டுமென்று மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களிடம் கேட்டு அமர்கிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. பொன்னுசாமி அவர்கள்.

திரு. கே. பொன்னுசாமி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 2023–2024 ஆம் ஆண்டிற்கான வனத் துறை மானியக் கோரிக்கையின்மீது இம்மாமன்றத்திலே பேசுவதற்கு வாய்ப்பளித்த மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்

அவர்களுக்கு முதலில் என்னுடைய நன்றி கலந்த வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசும்போது ** என்று சொன்னார். அது அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது.

பிற்பகல் 1-00

திரு. கே. பொன்னுசாமி: தமிழகத்திலே பிறந்து, தமிழகத்திலே வளர்ந்து, தமிழ் மொழிக்காக, தமிழ்நாட்டு மக்களுக்காக எங்கும் தமிழ், எதிலும் தமிழ்; என்று தமிழ் மொழிக்கு செம்மொழி அந்தஸ்தைப் பெற்றுத் தந்த டாக்டர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் இருக்கும் திசை நோக்கி வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

இந்தியாவே திரும்பிப் பார்க்கின்ற அளவிற்கு எந்த மாநிலத்திலும் இல்லாத அளவிற்கு சிறப்பான திராவிட மாடல் ஆட்சி நடத்திக் கொண்டிருக்கின்ற, குறிப்பாக, பெண் இனத்திற்காக மகத்தான சாதனைகளைச் செய்து கொண்டிருக்கின்ற மகளிர் சுய உதவிக்குழு கடன் தள்ளுபடி, பெண்களுக்கு சொத்தில் சம உரிமை, உள்ளாட்சி அமைப்புகளில் 33 சதவிகிதம் இட ஒதுக்கீடு, பெண்களுக்கு மகப்பேறு காலத்தில் ஊக்கத் தொகை, மகளிருக்கு சாதாரண பேருந்துகளில் இலவச பயணம், கல்லூரி மாணவியர்களுக்கு புதுமைப் பெண் திட்டம், குடும்பத் தலைவிக்கு மாதம் ரூ.1,000 போன்ற பல்வேறு நலத் திட்டங்களை வழங்கிக் கொண்டிருக்கிற (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களை நான் வணங்குகிறேன்.

ஓய்வறியாத உழைப்பாளி, உடன்பிறப்பே என்ற ஒற்றை மந்திரச் சொல்லால் மக்களை கட்டிப்போட்டவர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள். அதேபோல ஒற்றைச் செங்கல்லால் மக்களின் மனங்களை வென்ற, எதிர்காலத்தில் இந்த இயக்கத்தை வழிநடத்த இருப்பவர், இளைஞர்களின் வழிகாட்டி, (மேசையைத் தட்டும் ஒலி) நம்முடைய இளைஞரணிச் செயலாளர், மாண்புமிகு சின்னவர் அவர்களை நான் வணங்குகிறேன்.

** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

மாண்புமிகு மாநிலங்களவை உறுப்பினர், எங்களுடைய மாவட்ட கழகச் செயலாளர் திரு. ராஜேஷ் குமார் அவர்களை வணங்குகிறேன். மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்களை வணங்குகிறேன். எனது சேந்தமங்கலம் தொகுதியில் இரண்டாவது முறையாக எனது வெற்றிக்காக பாடுபட்ட ஒன்றிய கழக செயலாளர், பேரூர் கழகச் செயலாளர், கழக நிருவாகிகள் மற்றும் கூட்டணிக் கட்சி நிருவாகிகள் அனைவரையும் நான் வணங்குகிறேன்.

நாட்டின் நிலப்பரப்பில் 3-ல் 2 பங்கு, அதாவது 33 சதவிகிதம் வனப் பகுதியாக உள்ளது. அதனைப் பாதுகாப்பாக வைத்திருப்பதே பழங்குடியின மக்கள்தான். பழங்குடிகள் இல்லை என்றால் நமது காடுகளுக்கு பாதுகாப்பு இல்லை; சமதள மக்களால் காடுகளை பாதுகாக்கவோ, மீள் உருவாக்கம் செய்யவோ முடியாது; ஏன் பழங்குடிகள் துணையின்றி அடர்ந்த காடுகளுக்குள் வழியறிந்து செல்லக்கூட முடியாது. சமகாலத்தில் சுற்றுச்சூழல் சூழலியல் சார்ந்து இயங்கும் நண்பர்கள் மரங்கள் நடுதல், பறவைகள், வன விலங்கு, மலைகள் என கவனம் செலுத்தி நின்று விடுகிறார்கள். இதையெல்லாம் தாண்டி, அந்தக் காடுகளில் வசிக்கும் பழங்குடிகள் குறித்து அறிந்துகொண்டு, அவர்களை காடுகளோடு இணைந்து வாழ வழிவகை செய்பவர்கள் மிகவும் குறைவு. அறிந்தோ, அறியாமலோ பல தன்னார்வத் தொண்டு நிறுவனங்களும், ஆராய்ச்சியாளர்களும் பழங்குடி மக்களை காடுகளில் இருந்து அன்னியப்படுத்தும் வேலைகளைத் தொடர்ந்து செய்து வருகிறார்கள். இதைக் காடுகளை அழிக்கும் செயலுக்கு இணையானதாக நாம் கருத வேண்டும்.

பழங்குடிகள் காடுகளை அவர்களது தேவைக்குப் பயன்படுத்துகிறார்கள். ஆனால், பழங்குடிகளால்தான் காடுகள் அழிகின்றன, வன விலங்குகள் வேட்டையாடப்பட்டு முற்றிலும் அழிகின்றன, மரங்கள் வெட்டப்பட்டு காடுகள் அழிகின்றன, காட்டுத் தீ பரவுகிறது என்பதெல்லாம் ஏற்புடையதும் அல்ல, உண்மையும் அல்ல. சமதளத்தில் வாழும் நம் அனைவருக்கும் மலைகளும், காடுகளும் பாதுகாப்பாக இருக்க வேண்டியது அவசியம். அவையே நமக்கு உயிர் வாழ அடிப்படைத் தேவையான நீரை, ஆறுகள் வாயிலாக தருகின்றன. அந்த மலைகளையும், காடுகளையும் பாதுகாக்க பழங்குடிகளின் இருப்பும், பங்கும் சமரசமின்றி தேவைப்படுகிறது. தற்போது இந்தியாவில் உள்ள 50 சதவிகிதத்திற்கும் மேற்பட்ட பழங்குடிகள் தங்களுடைய

பாரம்பரியம், கலாச்சாரம் மற்றும் பண்பாட்டை விட்டு வெளியே வந்து விட்டார்கள். அதுமட்டுமின்றி 2001–2011 வரையில் நடந்த மக்கள்தொகைக் கணக்கெடுப்பின்படி, 10 சதவிகித பழங்குடிகள் சுயமாக காடுகளில் தங்களது இடத்தில் விவசாயம் செய்வதை விட்டுள்ளனர் அல்லது விட வைக்கப்பட்டுள்ளனர்; அதே காலகட்டத்தில்தான் விவசாயக் கூலிகளின் எண்ணிக்கை 9 சதவீதம் அதிகரித்துள்ளதாக தரவுகள் கூறுகின்றன. இவ்வாறு காடுகளிலிருந்து வெளியே விரட்டியடிக்கப்படும் பழங்குடிகள் பெருநகரங்களில் கட்டடத் தொழிலாளர்களாகவும், சாலையோரங்களில் வசிப்பவர்களாகவும், தங்களது வாழ்வை இழந்து, எதிர்காலத்தை இழந்து என்ன செய்வது என்று தெரியாமல் வாழும் ஓர் அவல நிலையில் இருக்கிறார்கள்.

உலக அளவில் காடுகளைப் பாதுகாக்க பழங்குடிகளின் உதவியை சில வல்லரசு நாடுகளின் அரசுகள் நாடி வருகின்றன. அமெரிக்க குடியரசுத் தலைவர் திரு. ஜோ பைடன் அவர்கள்கூட வனங்களின் பாதுகாப்பிற்கு பழங்குடிகளோடு இணைந்து இயங்க வேண்டும் என அறிவித்துள்ளார். ஆனால், இந்தியாவிலோ நிலைமை வேறுவிதமாக இருக்கிறது. தொடர்ந்து பழங்குடிகளை காடுகளை விட்டு வெளியேற்றும் முயற்சிகள் நடந்து வருகின்றன. நமது காடுகள் செழிப்பாக, பாதுகாப்பாக இருக்க பழங்குடிகள் காடுகளில் வசிப்பது அவசியம்; வன உரிமைச் சட்டம் 2006–ன்படி, மேய்ச்சல் நில உரிமை பழங்குடி மக்களுக்கு உள்ளது. எனவே, வனங்களில் ஆடு, மாடுகளை மேய்க்கக் கூடாது என்ற சென்னை உயர் நீதிமன்ற உத்தரவில் தமிழக அரசு தலையீடு செய்து மேய்ச்சல் உரிமையைப் பழங்குடி மக்களுக்குப் பெற்றுத் தரவேண்டும்.

பிற்பகல் 1–05

வனங்களை சார்ந்துள்ள அனைத்து கிராமங்களுக்கும் உடனடியாக சமூக வன வள உரிமையை வழங்க வேண்டும். வன உரிமைச் சட்டம் 2006–ன்படி பழங்குடியின மக்கள் வாழும் அனைத்து மலைகளிலும், மலை சார்ந்த பகுதிகளிலும் வன உரிமைக் குழுக்களை வெளிப்படைத் தன்மையோடு அனைத்து கிராமங்களிலும் ஏற்படுத்துதல் வேண்டும். தமிழ்நாட்டில் பத்து இலட்சத்திற்குமேல் பழங்குடி மக்கள், மலை மற்றும் தரைப் பகுதிகளில் வாழ்ந்து வருகின்றனர். அவர்கள் மலைப் பகுதிகளில் வாழ்வாதாரத்திற்காக வனம், தரிசு மற்றும் விவசாய பட்டா நிலங்களைச் சார்ந்து வாழ்கின்றனர். இவர்களில் வனம் சார்ந்து

வாழ்வோர் கடுமையான போராட்டத்திற்குப் பிறகு, வன உரிமைச் சட்டம் 2006-ஐ பெற்றனர். ஆனால், சட்டம் வந்து 16 ஆண்டுகள் முடிந்தும், தமிழகத்தில் வன நிலம் கேட்டு 33,000 மனுக்கள் கொடுக்கப்பட்டதில், இதுவரை வெறும் 8,000 மனுக்களுக்கு மட்டுமே வன நிலம் கொடுக்கப்பட்டுள்ளது. மீதமுள்ள 25,000 மனுக்கள் நிலுவையில் உள்ளன. அதிலும், சட்டப்படி பழங்குடி மக்கள் பயிர் செய்யும் நிலங்களில் 10 ஏக்கர் வரை பட்டா கொடுக்கலாம் என்று இருந்தும் பெரும்பாலான இடங்களில் ஒரு சென்ட், இரண்டு சென்ட் என்று நிலங்கள் வழங்கப்பட்டு, பழங்குடி மக்கள் ஏமாற்றப்பட்டுள்ளனர்.

வனப் பகுதிகளில் வாழும் மக்களுக்கு 70% வருமானம் சிறு வன மகசூல்மூலம் வருகிறது என்று தேசிய பழங்குடியினர் கொள்கை சொல்கிறது. ஆனால், சிறு வன மகசூல் எடுக்க உதவும் சமூக வன நில உரிமை பெரும்பாலும் வழங்கப்படவில்லை. வன உரிமைச் சட்டம் 2006, வன கிராமங்களை வருவாய் கிராமங்களாக மாற்ற அனுமதி அளிக்கிறது. ஆனால், இதுவரை ஒரு வன கிராமம்கூட வருவாய் கிராமமாக மாற்றப்படவில்லை. இதனால் 25,000 பழங்குடியின குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். (மணியடிக்கப்பெற்றது) மேலும், மலைப் பகுதிகளில் 50,000-க்கும் மேற்பட்ட பழங்குடியின மக்கள் அரசு தரிசு நிலங்களில் பயிர் செய்து வருகின்றனர். அவர்கள் பட்டா பெற முடியாமல், அரசாணை எண் 1168/வ.து./25-7-89 தடுக்கிறது. எனவே, இந்த அரசாணையை தமிழக அரசு திரும்பப் பெற வேண்டும்.

அடுத்து, பழங்குடி மக்களின் கோரிக்கைகள். மாண்புமிகு பேரவைத்துணைத் தலைவர் அவர்களே, சேந்தமங்கலம் சட்டமன்றத் தொகுதியில் பழங்குடியின மலைவாழ் மக்கள் அதிகளவில் வசித்து வருகிறார்கள். இவர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும்விதமாக மற்றும் கலாசாரத்தைப் பாதுகாக்க கொல்லிமலைப் பகுதியை மையமாகக் கொண்டு பழங்குடியினர் துணை ஆராய்ச்சி மையம் அமைக்க வேண்டும் என நான் அன்புடன் கேட்டுக்கொள்கிறேன். தமிழ்நாட்டிலுள்ள ஒருங்கிணைந்த பழங்குடியினர் மேம்பாட்டுப் பகுதியிலுள்ள பழங்குடியின மாணவ, மாணவிகளின் உயர் கல்வி வாய்ப்புகளை அதிகரிக்கவும், பழங்குடியினர் வசிக்கும் பகுதிகளில் நீடித்த மற்றும் நிலையான வளர்ச்சியை ஏற்படுத்தவும் புதியதாக அரசு பழங்குடியினர் கலை மற்றும் அறிவியல் கல்லூரியைத் தொடங்க வேண்டும். பழங்குடியின மக்களின் பொருளாதாரத்தை

மேம்படுத்த, பழங்குடியினர் வசிக்கும் பகுதியில் புதியதாக பழங்குடியின மகளிர் தொழிற்பூங்கா தொடங்குதல் வேண்டும்.

பழங்குடியின மக்களின் பொருளாதாரத்தை மேம்படுத்தவும், பழங்குடியினர் வசிக்கும் பகுதிகளில் விளையும் சிறு வன மகசூல் மற்றும் சிறுதானிய பொருட்களை விற்பனை செய்யும் வகையிலும், பழங்குடியினர் அதிகம் வசிக்கும் சுற்றுலா இடங்களில் சிறு வன மகசூல் மற்றும் சிறுதானிய பல்பொருள் அங்காடி தொடங்குதல் வேண்டும். பழங்குடியினப் பட்டியலில் பிற இனத்தவரைச் சேர்ப்பது தவிர்க்கப்பட வேண்டும். பழங்குடியின மக்களின் நிலங்களை பழங்குடி அல்லாதவர்களின் பெயரில் பட்டா மாற்றம், பத்திரப் பதிவு செய்து வருவதை தடை செய்ய வேண்டும். அரசு ஏற்கெனவே அமல்படுத்தியுள்ள வருவாய்த் துறையின் அரசு நிலை ஆணை எண் 15–40–ஐ அனைத்து சார்–பதிவாளர் அலுவலகங்களிலும் அறிவிப்பு பலகையாக வைத்து அமல்படுத்த வேண்டும்.

பழங்குடியின மக்கள் வாழ்வாதாரத்திற்காக அண்டை மாநிலங்களுக்கு இடம் பெயர்கிறார்கள். இதனால், அவர்களின் குடும்பத்தைச் சேர்ந்த பள்ளி மாணவர்களின் கல்வி பெரிதும் பாதிக்கப்படுகிறது. எனவே, மக்களின் வாழ்வாதாரத்தைக் கருதி, தாட்கோ வழங்கும் கடன் உதவி அல்லாமல், தனிநபர் கடன் உதவி வழங்கி, பழங்குடியின மக்களின் வாழ்வாதாரத்தைக் கண்காணிக்க குழு ஏற்படுத்தித் தர வேண்டும்.

பழங்குடியின மக்களுக்கு வேலைவாய்ப்பிலும், கல்வியிலும் 1% இட ஒதுக்கீட்டை மாண்புமிகு தமிழக முதல்வர் முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்கள்தான் வழங்கினார்கள். வேலைவாய்ப்பிலும் 50–க்கும் குறைவான பணியாளர்களை அறிவிக்கும்போது, பழங்குடியின மக்களுக்கு அப்பணிகளில் வாய்ப்பு கிடைக்காமல் போகின்றது. ஆதலால், 50–க்கும் குறைவான எண்ணிக்கையில் வேலைவாய்ப்புகளை வழங்கும்போதும், அந்த இட ஒதுக்கீட்டை கடைப்பிடிக்க வேண்டும் என்று மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன்.

மலைப் பகுதிகளில் தரிசு நிலங்களில் பயிர் செய்யும் பழங்குடியின மக்களுக்கு அரசாணை எண் 1168 இலிருந்து விலக்களித்து பட்டா வழங்க வேண்டும். பழங்குடியின மக்களுக்கான இட ஒதுக்கீடு அனைத்துத் துறைகளிலும் முறையாகப் பின்பற்றப்படாமல் உள்ளது.

பழங்குடியினர் நலத் துறையை, தனி முதன்மைச் செயலாளருடன் தனித்துறையாக செயல்படுத்தி நடைமுறைப்படுத்த ஆவன செய்ய வேண்டும்.

தமிழ்நாட்டில் உள்ள 23 Large Area Multipurpose Societies (LAMPS) கூட்டுறவுச் சங்கங்களை பழங்குடியினர் நலத் துறையின் கட்டுப்பாட்டில் கொண்டுவர வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. தி. ராமச்சந்திரன் அவர்கள். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர், நன்றி சொல்லி முடியுங்கள். நேரமில்லை. மாண்புமிகு உறுப்பினர்கள் பேசிய பிறகு, நான்கு அமைச்சர்கள் பதிலுரையாற்ற வேண்டும். சீக்கிரம் உரையை முடியுங்கள்.

திரு. கே. பொன்னுசாமி: ஒரே நிமிடத்தில் முடித்துவிடுகிறேன். இதனால் பழங்குடியின மக்கள் பெற்ற திட்டங்களின் மானியத் தொகையை அச்சங்கங்களுக்கு வழங்குவதில் காலதாமதம் ஏற்படுவது தவிர்க்கப்படும்.

பழங்குடியினர் வாழும் மலைப் பகுதிகளுக்கு மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் மாதந்தோறும் ஆய்வுக்குச் செல்ல வேண்டும். அவ்வாறு ஆய்வுக்குச் செல்கின்றபோது மாவட்ட வன அலுவலர் அவர்களையும் ஆய்வுக்கு அழைத்துச் செல்ல வேண்டும். இதனால் பழங்குடியின மக்களின் வாழ்வாதாரம் மேம்படும்; பிரச்சினைகளுக்குத் தீர்வு காணப்படும் மற்றும் திட்டங்கள் வகுக்க வழிவகை செய்யப்படும்.

பிற்பகல் 1–10

பழங்குடியின நலப் பள்ளிகளில் ஆசிரியர்களின் வருகைப் பதிவேடு உறுதி செய்யப்பட வேண்டும். பழங்குடியின இருளர் இன மக்களுக்கு வீடுகள் வழங்கப்பட வேண்டும். என்னுடைய தொகுதிக் கோரிக்கைகளை இந்த மாமன்றத்தில் படித்ததாகக் கருதி பதிவேட்டில் பதிவு செய்யுமாறு மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களை அன்போடு கேட்டுக்கொள்கிறேன். நன்றி, வணக்கம்.

தொகுதிக் கோரிக்கைகள்:

இராசிபுரம் புறவழிச் சாலை விரிவான திட்ட அறிக்கையின்படி இரண்டாம் கட்ட மீதமுள்ள காக்காவேரி முதல் மோகனூர்–

நாமக்கல்–சேந்தமங்கலம்–இராசிபுரம் இணைப்புச் சாலையை அமைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

எருமப்பட்டி பேரூராட்சியில் அமைந்துள்ள அருள்மிகு பாலதண்டாயுதபாணி திருக்கோயிலுக்கு குடமுழுக்கு விழா நடத்த வேண்டும்.

கொல்லிமலை பகுதியில் அரசு கலைக் கல்லூரி அமைக்க வேண்டும்.

சேந்தமங்கலம் அரசு கலைக் கல்லூரிக்கு முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களின் பெயரைச் சூட்ட வேண்டும்.

நாமக்கல் மாவட்டம், சேந்தமங்கலம் ஒன்றியத்தில், மாங்கூழ் தொழிற்சாலை அமைக்க வேண்டும்.

சேந்தமங்கலம் தொகுதியில் வீட்டுவசதி வாரியம் மூலமாக அடுக்குமாடி குடியிருப்பு கட்ட வேண்டும்.

சேந்தமங்கலம், நாமகிரிப்பேட்டை ஒன்றியத்தில் மலைவாழ் பழங்குடியின மக்கள் நலன் கருதி, நாமகிரிப்பேட்டையைத் தலைமையிடமாகக் கொண்டு புதிய வட்டாட்சியர் அலுவலகம் அமைக்க வேண்டும்.

எருமப்பட்டி ஒன்றியம், தலைமலைபெருமாள் கோயிலை ஆன்மிக சுற்றுலாத்தலமாக அறிவிக்க வேண்டும் மற்றும் இரு வழி கிரிவலச் சாலை அமைக்க வேண்டும்.

காரவள்ளி வனக்காப்புக் காட்டில் உள்ள மூங்கில் மரங்களை அகற்றி நீர்வளமுள்ள மரங்களை நட வேண்டும்.

கொல்லிமலைப் பகுதியில் மிளகு, காபி, மரவள்ளி போன்ற விளை பொருட்களுக்கான கொள்முதல் நிலையம் அமைக்க வேண்டும்.

சேந்தமங்கலம் ஒன்றியத்தில் உழவர் சந்தை அமைக்க வேண்டும்.

சேந்தமங்கலம் ஒன்றியத்தில் கலைக் கல்லூரி அருகில் அரசுக்குச் சொந்தமான இடத்தில் தோட்டக்கலைத் துறை மூலமாக பழப் பண்ணை அமைக்க வேண்டும்.

கொல்லிமலை பகுதியில் அரசு போக்குவரத்து வாகனங்களைப் பராமரிக்க பணிமனை அமைக்க வேண்டும்.

கொல்லிமலை பகுதியில் சித்தா மூலிகை ஆராய்ச்சி மையம் அமைக்க வேண்டும்.

எருமப்பட்டி ஒன்றியத்தில் உள்ள அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தைத் தரமுயர்த்த வேண்டும்.

கொல்லிமலை, செங்கரையில் உள்ள காவல் நிலையத்திற்குப் புதிதாகக் கட்டடம் கட்டித்தர வேண்டும்.

கொல்லிமலை ஒன்றியத்தில் புதிதாக ஆரம்பிக்கப்பட்டுள்ள தெம்பளம் லேம்ப் கூட்டுறவுச் சங்கத்திற்குப் புதிய கட்டடம் கட்டித் தர வேண்டும்.

சேந்தமங்கலம் தொகுதியில் நீதிமன்றத்திற்குப் புதிய கட்டடம் கட்டித் தர வேண்டும்.

கொல்லிமலை பகுதியிலேயே புதிய பத்திரப் பதிவு அலுவலகம் அமைத்துத் தர வேண்டும்.

சேந்தமங்கலம் ஒன்றியம், பேளுக்குறிச்சி அரசு மேல்நிலைப் பள்ளியைச் சீரமைத்து கூடுதல் வகுப்பறைகளைக் கட்டித்தர வேண்டும்.

சேந்தமங்கலம் ஒன்றியத்தில் தீயணைப்பு நிலையம் அமைக்க வேண்டும்.

சேந்தமங்கலம் ஒன்றியத்தில் புதியதாக கால்நடை மருந்தகம் அமைக்க வேண்டும்.

தொ.ஜேடர்பாளையத்தில் உள்ள அரசு மேல்நிலைப் பள்ளி மாணவ, மாணவியருக்கு கழிப்பிட வசதி மற்றும் அதிநவீன கணினி வசதி ஏற்படுத்தித் தர வேண்டும்.

தொ.ஜேடர்பாளையம் அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தை படுக்கை வசதிகளுடன் தரம் உயர்த்த வேண்டும்.

வெள்ளக்கால்பட்டி மற்றும் தொ.ஜேடர்பாளையம் பகுதியில் உள்ள கால்நடை மருந்தகத்தை விரிவாக்கம் செய்ய வேண்டும்.

நாமகிரிப்பேட்டை பச்சுடையாம்பாளையத்திற்கு புதியதாக கிராம நிர்வாக அலுவலகம் அமைக்க வேண்டும்.

நாமகிரிப்பேட்டையில் உள்ள அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தை ஸ்கேன் வசதியுடன் தரம் உயர்த்தி விரிவாக்கம் செய்ய வேண்டும்.

நாமகிரிப்பேட்டை அரியான்கவுண்டம்பட்டி பகுதியில் விளையாட்டு மைதானம் அமைக்க வேண்டும்.

சீராப்பள்ளி பேரூராட்சி, உடவன்குறிச்சி பகுதியில் உள்ள அருள்மிகு காசிவிஸ்வநாதர் ஆலயத்திற்கு குடமுழுக்கு விழா நடத்த வேண்டும்.

சீராப்பள்ளி பேரூராட்சி, அருள்மிகு செவ்வந்தீஸ்வரர் ஆலயத்திற்கு உட்பட்ட இடத்தில் குடியிருந்து வருகிறவர்களுக்கு பட்டா வழங்க வேண்டும்.

தமிழகம் முழுவதும் உள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி மின்விசை பம்புகள் இயக்கும் ஆப்பரேட்டர்களுக்கு பணிவரன்முறை மற்றும் உழைப்புக்கேற்ப ஊதியம் வழங்க வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் மா. மதிவேந்தன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எங்கள் மாவட்டத்தைச் சார்ந்தவர்; சேந்தமங்கலம் சட்டமன்றத் தொகுதி உறுப்பினர். அவரே ஒரு பழங்குடியின வகுப்பைச் சார்ந்தவர். ஆகையால், பழங்குடியினர் வாழ்வாதாரத்தைப் பற்றியும், பழங்குடியினர் வைத்திருக்கும் கால்நடை மேய்ச்சல் குறித்தும் பல விஷயங்களை இங்கே பேசினார். வனத் துறையைப் பொறுத்தவரை, பல்வேறு திட்டங்களை பழங்குடியினரின் உதவியுடன்தான் நாம் செய்துகொண்டிருக்கிறோம். இருப்பினும், அவர் வைக்கும் ஆலோசனைகளை தனியாகக் கேட்டறிந்து, பழங்குடியின மக்களுக்கு என்னென்ன உதவிகள் செய்ய முடியுமோ, அவை கண்டிப்பாகப் பரிசீலிக்கப்படும் என்பதைத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

2023 ஏப்ரல் 13]

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. தி. ராமச்சந்திரன் அவர்கள்.

திரு. தி. ராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இன்று நடைபெறும் மானியக் கோரிக்கைகளின் மீதான விவாதத்தில் எனது கருத்துகளை எடுத்துரைக்க வாய்ப்பு தந்தமைக்கு முதற்கண் என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அன்னை சோனியா காந்தி அம்மையார், பாரத் ஜோடோ யாத்ராவின் நாயகன், இளம் தலைவர் ராகுல் காந்தி அவர்கள், மாண்புமிகு முதலமைச்சர் அண்ணன் தளபதியார் ஆகியோருக்கும் என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். புதிதாக அமைச்சரவையில் பொறுப்பேற்றிருக்கும் மாண்புமிகு அமைச்சர் அருமை அண்ணன் திரு. உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கும் எனது வாழ்த்துகளையும், பாராட்டுகளையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

'முறைசெய்து காப்பாற்றும் மன்னவன் மக்கட்கு
இறையென்று வைக்கப் படும்'

என்றார் அய்யன் வள்ளுவன். நீதி நெறியோடு அரசை காத்து, மக்களைக் காக்கும் ஆட்சியாளன்தான், மக்களால் தலைவன் என போற்றப்படுவான் என்கிறார் முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அய்யா அவர்கள். அந்த வழியில், இரண்டு ஆண்டுகளிலே கடினமான சீர்திருத்தங்களைக் கொண்டு வந்து, நடப்பு நிதியாண்டில் திருத்த மதிப்பீடுகளில் (Revised Estimate) நமது வருவாய்ப் பற்றாக்குறையை தமிழக அரசுக்கு ரூபாய் 30 ஆயிரம் கோடியாகக் குறைத்திருப்பது பாராட்டுக்குரியது. இதற்காக நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர், ஒப்பற்ற முதலமைச்சர், பாசத்திற்கும் மரியாதைக்குமுரிய அருமை அண்ணன் தளபதியார் அவர்களுக்கு இந்நேரத்தில் என் சார்பிலும், காங்கிரஸ் கட்சியின் சார்பிலும் பாராட்டுகளையும் வாழ்த்துகளையும் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) அவருக்கு உறுதுணையாக இருக்கும் மாண்புமிகு அமைச்சர் பெருமக்களுக்கும், அரசு அதிகாரிகளுக்கும் எனது பாராட்டுகளைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, '100 இளைஞர்களை என்னிடம் தாருங்கள், தேசத்தை மாற்றிக் காட்டுவேன்' என்றார் சுவாமி விவேகானந்தர். மாண்புமிகு

முதலமைச்சரின் "திறனறி" திட்டம் வாயிலாக அரசு பள்ளியிலே படிக்கும், தேர்ந்தெடுக்கப்பட்ட 1,000 மாணவர்களுக்கு மாதந்தோறும் ரூ.1,000 தந்து, IIT போன்ற premier institutions-ல் பயில வாய்ப்பு ஏற்படுத்தியுள்ள திட்டத்திற்கு எனது மனமார்ந்த பாராட்டுகளைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

Civil Service Examinations (UPSC) தேர்வில் தமிழக மாணவர்களின் தேர்ச்சி விகிதம் குறைந்து வருவது கவலைக்குரியது. இந்தத் தேர்ச்சி விகிதத்தை அதிகரிக்கும் நோக்கத்தோடு, தேர்ந்தெடுக்கப்பட்ட 1,000 மாணவர்களுக்கு 10 மாதங்களுக்கு மாதந்தோறும் 7,500 ரூபாயும், முதற்கட்டத் தேர்வில் preliminary–ஐ clear செய்பவர்களுக்கு 25,000 ரூபாயும் ஊக்கத் தொகையாக அறிவித்ததற்கு மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கும், மாண்புமிகு நிதியமைச்சர் திரு. பி.டி.ஆர். பழனிவேல் தியாக ராஜன் அவர்களுக்கும் எனது பாராட்டுகளைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும், தமிழ்நாட்டிலிருந்து இந்தியாவின் புகழ்மிக்க நிறுவனங்களில் ஆராய்ச்சி செய்து முனைவர் பட்டம் பெறும் விஞ்ஞானிகள் எண்ணிக்கை குறைந்து வருவது வருத்தத்திற்குரியது. இந்தியாவின் புகழ்மிக்க ஆராய்ச்சி நிறுவனங்களில் ஆராய்ச்சிப் படிப்பினில் சேர Council of Scientific and Industrial Research நடத்தும் தேர்வில் வெற்றி பெற்று Junior Research Fellow ஆக இருக்க வேண்டும். எனவே, இந்திய ஆராய்ச்சித் துறை வளர்ச்சியில் தமிழக மாணவர்களின் பங்களிப்பை அதிகரிக்க, ஆண்டுக்கு 500 மாணவர்களுக்கு ஊக்கத் தொகை வழங்க வேண்டும். இத்திட்டத்தை விரைவில் தொடங்கினால் தமிழ்நாட்டின் வளர்ச்சிக்கும், இந்தியாவின் வளர்ச்சிக்கும் நமது மாணவர்கள் எதிர்காலத்தில் முக்கிய தூண்களாக விளங்குவார்கள்.

பிற்பகல் 1–15

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, "The greatest threat to our planet is the belief that someone else will save it" என்றார் North Pole, South Pole ஆகிய இரண்டு துருவத்திற்கும் நடந்தே சென்ற முதல் நபரான சுற்றுச்சூழல் ஆர்வலர், Robert Swan.

'நிலம், நீர், தீ, வளி, விசும்போடு ஐந்தும் கலந்த மயக்கம், உலகம்' என்றார் தொல்காப்பியர். நிலம், நீர், தீ, காற்று, ஆகாயம் ஆகிய ஐம்பூதங்களையும் மனிதன் மாசுபடுத்தி வருகிறான்.

2023 ஏப்ரல் 13] [திரு. தி. ராமச்சந்திரன்]

நேரத்தின் அருமை கருதி, தீயினால் ஏற்படும் மாசுபாட்டைப் பற்றி மட்டும் பேச விழைகிறேன். மனித இனம் எரிக்கின்ற படிம எரிபொருட்களிலிருந்து வெளியேறுகின்ற கரியமில வாயு–carbon dioxide (CO_2) அளவைக் குறைப்பதன் அவசியத்தை உலகம் அறிந்திருக்கிறது.

நான், இந்த அவையில் ஏற்கெனவே நிகழ்த்திய உரையில், மாற்று எரிசக்தி அவசியம் குறித்தும், குறிப்பாக hydrogen பயன்பாடு குறித்தும் எடுத்துரைத்தேன். மாண்புமிகு தமிழக முதல்வர் அண்ணன் தளபதியார் அவர்கள் இது தொடர்பாக எடுத்த நடவடிக்கையை வரவேற்கிறேன். உதாரணமாக, ACME நிறுவனம் 52,474 கோடி ரூபாய் மதிப்பிலான green hydrogen plant முதலீடுகளை தமிழகத்தில் செய்ய ஒப்பந்தம் செய்திருப்பது மகிழ்ச்சிக்குரியது, பாராட்டுக்குரியது.

பெட்ரோல் மற்றும் டீசலால் இயங்கும் வாகனங்களின் பயன்பாடு முற்றிலுமாக இல்லாமல் போகின்ற காலம் நெருங்கி வருகிறது. Hydrogen மற்றும் battery–யால் இயங்கும் வாகனங்களின் பயன்பாடு அதிகரித்து வருகிறது. தற்போது lithium battery–கள் electric vehicle–களில் பயன்படுத்தப்படுகின்றன. இந்தியாவின் மிகப் பெரிய நிறுவனங்கள் sodium மற்றும் lithium battery ஆராய்ச்சியில் ஈடுபட்டு வருகின்றன. பல நிறுவனங்கள் உற்பத்தியைத் தொடங்கியிருக்கின்றன. பேட்டரி உற்பத்தியில் polytechnic மற்றும் engineering படித்த மாணவர்கள் பணி செய்ய வாய்ப்பிருக்கிறது. எனவே, புதுக்கோட்டை மாவட்டத்தில், எனது அறந்தாங்கி தொகுதியில் பேட்டரி உற்பத்தி செய்யும் தொழிற்சாலை அமைக்க நடவடிக்கை எடுக்க வேண்டுகிறேன்.

குழந்தையின்மை குறைபாடு உள்ளவர்களுக்கு அரசு மருத்துவமனையில் சிகிச்சை அளிக்க வேண்டுமென்று அவையில் ஏற்கெனவே கோரிக்கை வைத்திருந்தேன். குழந்தையின்மை தொடர்பான ஆராய்ச்சியில் சுற்றுச்சூழல் மாசு முக்கியக் காரணம் என்று கண்டறிந்திருக்கிறார்கள். இது தொடர்பான ஆய்வில் ஈடுபட்ட பேராசிரியர் Levine, 'We are facing a public health crisis and we don't know if it is reversible' என்று குறிப்பிட்டிருக்கிறார்.

United Kingdom–ஐ சார்ந்த University of Nottingham பேராசிரியை Dr. Rebecca Blanchard அவர்கள் பிளாஸ்டிக் பொருட்களில் உள்ள வேதிப் பொருட்கள் குழந்தையின்மைக்கு

[திரு. தி. ராமச்சந்திரன்] [2023 ஏப்ரல் 13

காரணமாக இருக்கலாம் என கண்டறிந்துள்ளார். நமது வாழ்வில் பிளாஸ்டிக் தவிர்க்க முடியாத அங்கமாகிவிட்டது. காலை எழுந்தவுடன் nylon-னால் செய்யப்பட்ட toothbrush-ஐ பயன்படுத்துகிறோம். இதைத் தவிர்க்க முடியாது. ஆனால், நாம் பயன்படுத்தும் non-stick cookware Teflon என்ற polymer-ஐ பயன்படுத்துகிறோம். அதைத் தவிர்க்க வேண்டும். இந்த Teflon என்ற polymer 260 degree Celsius வரை நிலையாக இருக்கும். அதன் பின் சிதைய ஆரம்பிக்கிறது. Non-stick cookware அமெரிக்கா, ஐரோப்பிய நாடுகளில் குறைந்த வெப்பத்தில் electric stove-ல் சமைக்கும்போது உடல் நலக் குறைவை ஏற்படுத்தாமல் இருக்கலாம். ஆனால், நாம் பயன்படுத்தும் Gas அடுப்பின் தீயின் வெப்பம், எண்ணெய் பயன்படுத்தி சமைக்கும் முறையால் non-stick cookware பயன்படுத்தினால் உடல்நலக் குறைவை தவிர்க்க முடியாது. நாம் non-stick cookware-ல் முதல் முறை சமைக்கும்போதே அதில் உள்ள Teflon சிதைய ஆரம்பிக்கிறது. (மணியடிக்கப்பெற்றது) உணவில் விஷமாக கலக்க ஆரம்பிக்கிறது. அந்தப் பாத்திரத்தை நாம் உபயோகிக்கும் வரை இந்தப் பிரச்சினை தொடர்கிறது. எனவே, recycle செய்ய முடியாத Non-stick cookware உபயோகத்தை தமிழக அரசு தடை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

A journey of a thousand miles begins with one step என்றார் Chinese philosopher Lao Tzu. இவரது கூற்றிற்கேற்ப, பிளாஸ்டிக் பைகளை குறைக்க மஞ்சப்பை இயக்கத்தை மாண்புமிகு முதல்வர் அவர்கள் தொடங்கியதுபோல், Non-stick cookware பயன்பாட்டை நிறுத்தும் இயக்கத்தையும் மாண்புமிகு முதல்வர் அவர்களே தொடங்கி வைத்து மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தி, சுற்றுச்சூழல் பாதிப்பு மற்றும் மாசுபாட்டிலிருந்து மக்களைக் காக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

வனத்தை உருவாக்குவது என்பது எளிதல்ல. இயற்கையான வனம் உருவாக 600 ஆண்டுகள்கூட ஆகலாம் என்று சொல்லப்படுகிறது. ஆனால், தொழில்நுட்ப வளர்ச்சி காரணமாக செயற்கை வனத்தை உருவாக்குவதில் முன்னேற்றம் ஏற்பட்டிருக்கிறது. குறிப்பாக, Japanese botanist Akira Miyawaki கண்டுபிடித்த முறையில் வனங்களை சில வருடங்களிலேயே உருவாக்க முடியும். இந்த வகையில் தமிழகத்தில் மேலும் சில வனங்கள் உருவாக்கப்பட வேண்டும்.

2023 ஏப்ரல் 13] [திரு. தி. ராமச்சந்திரன்]

இந்தியாவின் கடலோரப் பகுதிகளில் 15 சதவிகிதம் தமிழக கடற்கரைப் பகுதியாகும். 2021–2022 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில், எனது அறந்தாங்கி தொகுதியில் உள்ள மணமேல்குடி கடற்கரை மற்றும் கோட்டைப்பட்டிணம் கடற்கரை உட்பட 10 கடற்கரைகளுக்கு நீலக் கொடி Blue Flag Beach programme சான்றிதழ் பெறுவதற்கான திட்டத்தை நமது அரசு அறிவித்தது. இந்தத் திட்டத்தை விரிவாக்கம் செய்து, மேலும் பல கடற்கரைகளை நீலக் கொடி நிலைக்கு தரம் உயர்த்த அரசு முன் வர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 1–20

புதுக்கோட்டை மாவட்ட கதர் வாரிய உதவி இயக்குநர் அலுவலகம் திருச்சிக்கு மாற்றப்பட்டதாக அறியப்படுகிறது. அறந்தாங்கி பகுதியைச் சேர்ந்த 5000 பனைவெல்ல கூட்டுறவுச் சங்க உறுப்பினர்கள் பதநீர் இறக்க licence வாங்க திருச்சி செல்ல வேண்டியிருக்கிறது. 50 ஆண்டுக் காலமாக நல்ல முறையில் செயல்பட்டுவந்த காதி உதவி இயக்குநர் அலுவலகம் புதுக்கோட்டையிலேயே தொடர்ந்து செயல்பட வேண்டுமென மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

Democracy is not the law of the majority but the protection of the minority என்றார் French philosopher Robert Camus. எனவே, இன்றைய பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை மானியக் கோரிக்கையில் இவர்களின் நலன் காக்க கூடுதல் நிதி ஒதுக்கி, இவர்களது வாழ்வு மேம்பட மேலும் சில திட்டங்களை அறிவித்திட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அறந்தாங்கி நகரில் புதிய பேருந்து நிலையம் அமைக்க வேண்டுமென்ற எனது கோரிக்கையை ஏற்று, புதிய பேருந்து நிலையம் அறிவித்த மாண்புமிகு தமிழக முதல்வர் அண்ணன் தளபதியார் அவர்களுக்கும், மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அருமை அண்ணன் திரு. கே.என். நேரு அவர்களுக்கும் என் சார்பிலும், என்னுடைய தொகுதி மக்களின் சார்பிலும் கோடானுகோடி நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஆனால், தற்போது பேருந்து நிலையம் இயங்கிவரும் இடம் போதுமானதாக இல்லை. வெறும் 1.6 ஏக்கர் பரப்பளவு கொண்ட இடம்தான்

இருக்கிறது. கடந்த சட்டமன்றக் கூட்டத் தொடரின்போதும் இதுபற்றி நான் பேசினேன். அதற்கு அருகில் 400 மீட்டர் தூரத்தில் சத்திரத்திற்குச் சொந்தமான 9 ஏக்கர் பரப்பளவு கொண்ட இடம் இருக்கிறது. அந்த இடத்தில் இப்போது சந்தை நடைபெற்று வருகிறது. அந்த இடத்தை இரண்டாகப் பிரித்து, முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் ஐயா அவர்களுடைய பெயரில் விசாலமான புதிய பேருந்து நிலையமும், மீதமுள்ள இடத்தில் எல்லா வசதிகளுடன்கூடிய சந்தை ஒன்றையும் ஏற்படுத்தித் தர வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர் அவர்களை நான் பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

அறந்தாங்கி தொகுதியில் உள்ள பெரும்பான்மையான கிராமங்களில் குடிநீர்ப் பிரச்சினைதான் பிரதான பிரச்சினையாக இருக்கிறது. ‘நீரின்றி அமையாது உலகு’ என்றார் வள்ளுவன். அறந்தாங்கி தொகுதியில் ஏற்படும் குடிநீர்ப் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வாக காவிரி நீரை ஆதாரமாகக் கொண்டு, காவிரி கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின் வாயிலாக அனைவருக்கும் குடிநீர் கிடைக்கும் வகையில், விரைவில் திட்ட மதிப்பீடு செய்து, நிதியொதுக்கி, மக்களின் பிரதான வாழ்வாதாரப் பிரச்சினையான குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்க்க வேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை நான் பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

தேர்தல் வாக்குறுதிகளை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஒன்றன்பின் ஒன்றாக நிறைவேற்றி வருகிறார்கள். அதேபோல, புதுக்கோட்டை மாவட்டம், அறந்தாங்கி தொகுதியின் பிரதான கோரிக்கைகளில் ஒன்றான கடல்சார் படிப்புடன்கூடிய ஒரு பொறியியல் கல்லூரியை மணமேல்குடி பகுதியிலே ஏற்படுத்தித் தர வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

சுமார் 5,000-க்கும் மேற்பட்ட மக்கள்தொகையைக் கொண்ட கோபாலபட்டினம் எனும் ஊரைத் தலைமையிடமாகக் கொண்டு கோபாலபட்டினம் ஊராட்சி என்றும், மீதமுள்ள கிராமங்களைச் சேர்த்து, ஏற்கெனவே உள்ளபடி நாட்டாணி-புரசக்குடி ஊராட்சி என்றும் இரண்டு ஊராட்சிகளாகச் செயல்பட அரசு அனுமதித்து, அதற்கான ஆணை வழங்கிட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது)

ஒரேயொரு நிமிடம் மட்டும் தாருங்கள். நன்றி சொல்லி முடித்துவிடுகிறேன். இரண்டே இரண்டு கோரிக்கைகள்தான்.

வருடத்திற்கு ஒரு முறைதான் பேசுவதற்கு வாய்ப்பு கிடைக்கிறது. மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, Middle bench students*-க்கும் கொஞ்சம் வாய்ப்புக் கொடுங்கள்.*

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *சரி, பேசுங்கள். (குறுக்கீடு) ஒரே நிமிடத்தில் நன்றி சொல்லி, உரையை முடியுங்கள்.*

திரு. தி. ராமச்சந்திரன்: *அறந்தாங்கி ஊராட்சி ஒன்றியத்தில் 52 பஞ்சாயத்துகள் இருக்கின்றன. என்னுடைய கன்னிப் பேச்சின்போது மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்திலும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடத்திலும் கோரிக்கை வைத்தேன். 32 பஞ்சாயத்துகள் ஆலங்குடி தொகுதியிலும், 20 ஊராட்சிகள் அறந்தாங்கி தொகுதியிலும் வருகின்றன. அதனால், நாகுடியைத் தலைமையிடமாகக் கொண்டு, 20 ஊராட்சிகளையும் உள்ளடக்கி புதிய ஊராட்சி ஒன்றியம் அமைத்துத் தர வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இதேபோல நிறைய கோரிக்கைகள் என்னிடம் இருக்கின்றன. அவற்றில் ஒரேயொரு கோரிக்கையை மட்டும் சொல்லி, என்னுடைய உரையை நிறைவு செய்கிறேன்.

மணமேல்குடி தாலுகா, அம்மாபட்டினத்தை தனி வருவாய் கிராமமாக உருவாக்க வேண்டும்.

'திருவாசகத்திற்கு உருகார் ஒரு வாசத்திற்கும் உருகார்' என்பர். திருவாசகத்தை எழுதிய மாணிக்கவாசகர் அவர்களால் கட்டப்பட்ட திருப்பெருந்துறை என்கிற ஆவுடையார்கோயிலில் சிவன் கோயில் உள்ளது. இத்திருத்தலத்தை ஆன்மிக சுற்றுலாத்தலமாக அறிவித்து, அங்கு வருபவர்களுக்கு தங்கும் விடுதி, மற்றும் இதர வசதிகளைச் செய்து தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மணமேல்குடி தாலுகா, பெருமருதூரைச் சுற்றியுள்ள விவசாயப் பெருமக்கள் பயனடையும் விதத்தில், பெருமருதூரைத் தலைமையிடமாகக் கொண்டு புதிய வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கம் ஒன்றை அமைத்துத் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதேபோல, அறந்தாங்கியிலே. . .

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர், மீதியுள்ள தொகுதிக் கோரிக்கைகளை என்னிடம்*

கொடுத்துவிடுங்கள். அவற்றை நீங்கள் இந்த அவையில் படித்ததாகக் கருதி, அவைக் குறிப்பில் பதிவு செய்துகொள்கிறேன். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர், நிறைய கோரிக்கைகளைச் சொல்லிவிட்டார். (குறுக்கீடு) நேரமில்லை. (குறுக்கீடு) மாண்புமிகு அமைச்சர்கள் 4 பேர் பதில் சொல்ல வேண்டும். இன்னும் 5 உறுப்பினர்கள் பேச வேண்டும். (குறுக்கீடு) நேரமில்லை. (குறுக்கீடு) பேசும் உறுப்பினர்கள் சுருக்கமாகப் பேச வேண்டும். உங்களுடைய தொகுதி சம்பந்தமான கோரிக்கைகளை கொடுத்துவிடுங்கள். அவற்றை நான் அவைக் குறிப்பில் பதிவு செய்துகொள்கிறேன்.

திரு. தி. ராமச்சந்திரன்: நன்றி மட்டும் சொல்லிவிடுகிறேன். நேரமில்லாத காரணத்தால், எனது தொகுதியில் நிறைவேற்றப்பட வேண்டிய மற்ற கோரிக்கைகளை நான் தங்களிடம் கொடுத்துவிடுகிறேன். அவற்றை நான் இந்த அவையில் பேசியதாகக் கருதி, அவைக் குறிப்பில் ஏற்றி, மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள்மூலம் பரிவோடு நிறைவேற்றித் தர வேண்டுமென பணிவன்புடன் கேட்டுக்கொள்கிறேன். பேச வாய்ப்பு தந்தமைக்கு நன்றி நல்கி அமர்கிறேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

தொகுதிக் கோரிக்கைகள்:

அறந்தாங்கி தொகுதியில் பொதுப் பணித் துறையின்கீழ் வரும் 317 ஏரிகளையும், ஆர்.ஆர்.ஆர். திட்டத்தில் புனரமைத்துத் தர வேண்டும்.

ஆவுடையார்கோயில் ஒன்றியத்தில் 46, மணமேல்குடி ஒன்றியத்தில் 34, அறந்தாங்கி ஒன்றியத்தில் 23 ஏரிகள் உள்ளன. இவற்றில் பல ஏரிகள் பல ஆண்டுகளாகத் தூர் வாரப்படாமல், ஏரிகளின் கொள்ளளவு குறைந்து கொண்டே இருக்கிறது. எனவே, அனைத்து ஏரிகளையும் தூர்வாரி கலிங்குகளை பலப்படுத்தி, மராமத்துப் பணிகளை மேற்கொள்ள வேண்டும்.

அறந்தாங்கி நகரில் உள்ள காவல் நிலையத்தை பெரிய இரக காவல் நிலையமாகத் தரமுயர்த்த வேண்டும். மேலும், ஒரு கூடுதல் காவல் நிலையம் அமைக்க வேண்டும். ஆவுடையார்கோயில் தாலுகா, கரூரில் உள்ள காவல் நிலையத்திற்கு சொந்தக் கட்டடம் கட்டித் தர வேண்டும்.

2023 ஏப்ரல் 13] [திரு. தி. ராமச்சந்திரன்]

ஆவுடையார்கோயில், மணமேல்குடி, நாகுடி ஆகிய அனைத்து வட்டார மருத்துவமனைகளிலும் Ultrasound scan, CT scan, MRI scan போன்ற வசதிகளை ஏற்படுத்தித் தர வேண்டும்.

அரிமளம் ஒன்றியம், ஏம்பலில் புதிய தொழிற்பயிற்சி நிலையம் துவக்க வேண்டும்.

ஆவுடையார்கோயில் வட்டார மருத்துவமனைக்கு கழிப்பறைகளுடன்கூடிய புதிய கட்டடம் அமைத்துத் தர வேண்டும்.

அறந்தாங்கியில் உள்ள அண்ணா மணிமண்டபம் பயன்படுத்த இயலாமல் உள்ளது. எனவே, அங்கு புதிய அண்ணா மணிமண்டபம் கட்டித் தர வேண்டும்.

மணமேல்குடியில் அரசு போக்குவரத்துக் கழகத்தின் பணிமனையை புதிதாக நிறுவ வேண்டும்.

அறந்தாங்கி தொகுதி, மணமேல்குடி தாலுகா, ஆவுடையார்கோயில் தாலுகா, அறந்தாங்கி தாலுகா, அரிமளம் ஒன்றியத்தில் உள்ள 5 ஊராட்சிகளுக்கு வருவாய்த் துறை மற்றும் வேளாண் துறை சார்பில் ஆய்வு செய்து, அறிக்கை அரசுக்கு வழங்கப்பட்டுள்ளது. எனவே, பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு இழப்பீட்டுத் தொகை வழங்க வேண்டும்.

மணமேல்குடி-கோடியக்கரையை சுற்றுலாத்தலமாக அறிவிக்க வேண்டும்.

அறந்தாங்கி நகரில் பாதாள சாக்கடைத் திட்டம் கொண்டுவர வேண்டும்.

அறந்தாங்கி ஒன்றியம், கோங்குடி ஊராட்சி, யோகாம்பாள்புரத்தில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க வேண்டும்.

ஆவுடையார்கோயில் தாலுகா, ஒக்கூரில் உள்ள சிவன் கோயிலில் திருப்பணி செய்ய அனுமதி வழங்க வேண்டும்.

அறந்தாங்கி நகரில் ஒருங்கிணைந்த விளையாட்டுத் திடலும், விளையாட்டுப் போட்டிகள் நடத்த உள் விளையாட்டு அரங்கமும் புதிதாக அமைக்க வேண்டும்.

ஆவுடையார்கோயில் தாலுகா, மீமிசலில் தற்போது இயங்கிவரும் ஆரம்ப சுகாதார நிலையத்தை எலும்பு முறிவு சிகிச்சை மருத்துவருடன்கூடிய அவசர கால சிகிச்சைப் பிரிவு மருத்துவமனையாக மேம்படுத்திட வேண்டும்.

அறந்தாங்கி தாலுகா, பெருநாவலூரில் உள்ள அரசு கலைக் கல்லூரிக்கு சுற்றுச் சுவர், கழிப்பறை வசதி, laboratory மற்றும் வகுப்பறைகள் கட்டித் தரவும், புதிய பாடப் பிரிவுகள் தொடங்கவும் வேண்டும்.

ஆவுடையார்கோயில் ஒன்றியம், குன்னூரில் உள்ள ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளியை நடுநிலைப் பள்ளியாகவும், ஒக்கூரில் உள்ள அரசு உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகவும், அறந்தாங்கி ஒன்றியம், பெருங்காடு உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகவும் நடப்பு கல்வி ஆண்டில் தரமுயர்த்தித் தர வேண்டும்.

ஆவுடையார்கோயிலில் உள்ள அரசு மேல்நிலைப் பள்ளிக்கு புதிய கட்டடம் மற்றும் இதுபோன்று பழுதடைந்துள்ள பள்ளிகளுக்கு புதிய கட்டடங்களும், அறந்தாங்கி நகரில் உள்ள பெண்கள் மேல்நிலைப் பள்ளிக்கு கூடுதல் வகுப்பறை மற்றும் சுற்றுச் சுவரும் கட்டித் தர வேண்டும்.

அறந்தாங்கி தாலுகா, பெருநாவலூரில் உள்ள அரசு கலைக் கல்லூரிக்கு சுற்றுச் சுவர் மற்றும் கழிப்பறை வசதிகள், புதிய வகுப்பறைகள், புதிய பாடப் பிரிவுகள் தொடங்க வேண்டும்.

தமிழகத்தில் இரண்டு, மூன்று தொகுதிகளைக் கொண்ட மாவட்டங்கள் பல உள்ளன. வருங்காலத்தில் மாவட்டங்கள் இரண்டாகப் பிரிக்கப்படும்போது 6 சட்டமன்றத் தொகுதிகள் கொண்ட புதுக்கோட்டை மாவட்டத்தை இரண்டாகப் பிரித்து, அறந்தாங்கியை மாவட்டத் தலைநகராகக் கொண்டு புதிய மாவட்டம் உருவாக்கிட வேண்டும்.

ஆவுடையார்கோயில் வட்டத்தில் பிரதான கடற்கரை சாலையில் அமைந்துள்ள முக்கிய ஊரான மீமிசல் ஊராட்சியில் நிறைய கடைகளும் மற்றும் அதை சுற்றி பல கிராமங்களும் உள்ளன. அங்கே குறைந்த மின் அழுத்தம் நிலவுகிறது. இப்பகுதியில் சீரான மின்சாரம் வழங்க அங்கு ஒரு புதிய 33/11 கே.வி. துணை மின் நிலையம் அமைக்க வேண்டும்.

2023 ஏப்ரல் 13] [திரு. தி. ராமச்சந்திரன்]

கொரோனா தொற்று பரவல் இருந்த காலகட்டத்தில் நிறுத்தப்பட்ட பேருந்துகள் அனைத்தும் மீண்டும் இயக்கப்பட வேண்டும்.

ஆவுடையார்கோயில் தாலுகா, கரூர்-ஓரியூர் செங்கானம், பேயாடிக்கோட்டை வழியாக புதிய வழித் தடத்தில் பேருந்து ஒன்று இயக்கப்பட வேண்டும். தடம் எண் 28 அறந்தாங்கி-திருவாக்குடி ஊராட்சி, வெள்ளாளவயல் வரை செல்லும் பேருந்தை சித்தரம்பூர் வரை இயக்கப்பட வேண்டும்.

தடம் எண் 14 மீமிசலிலிருந்து நாட்டானிபுரசக்குடி ஊராட்சி, கோபாலபட்டினம் வரை சென்று கொண்டிருந்த பேருந்தை மீண்டும் இயக்க வேண்டும்.

தேவக்கோட்டை-கண்ணங்குடி-கரூர்-ஆவணம்-பெருங்குடி-காணூர்-முக்கம் வழியாக மீமிசல் வரை பேருந்து இயக்கப்பட வேண்டும்.

அரசு விரைவு போக்குவரத்துக் கழகம்மூலம் ஏற்கெனவே இயக்கப்பட்டு வந்த மீமிசல்-சென்னை, ஆவுடையார்கோயில்-சென்னை, நாகுடி-சென்னை, மணமேல்குடி-சென்னை வழித்தடங்களிலும், மீமிசல்-திருப்பதி, மணமேல்குடி-திருப்பதி, நாகுடி-திருப்பதி வழித்தடங்களில் சென்று கொண்டிருந்த அனைத்துப் பேருந்துகளையும் மீண்டும் இயக்க வேண்டும்.

கட்டுமாவடி-மணமேல்குடி, மீமிசல் வழியாக எஸ்.பி. பட்டினம் வரை நகரப் பேருந்து ஒன்று இயக்கப்பட வேண்டும்.

அறந்தாங்கி-துரையரசபுரம்-கீழச்சேரி-நெட்டியேந்தல்-ஆவுடையார்கோயில் வரை ஏற்கெனவே இயங்கிவந்த பேருந்து வழித்தடத்தில் மீண்டும் பேருந்து இயக்கப்பட வேண்டும்.

ஆவுடையார்கோயில் ஒன்றியம், மீமிசல் ஊராட்சி, மீமிசலில் புதிய தீயணைப்பு நிலையம் ஒன்று ஏற்படுத்தித் தர வேண்டும்.

ஆவுடையார்கோயில் தாலுகா, கரூர்-அடம்பூர்-தியத்தூர்-திருப்புனவாசல் வரை உள்ள நெடுஞ்சாலைத் துறைக்குச் சொந்தமான சாலையை அகலப்படுத்த வேண்டும்.

ஆவுடையார்கோயில் தாலுகா, தொண்டைமானேந்தல் ஊராட்சி, காரணியேந்தல் சாலையில் மேம்பாலம் அமைத்திட

வேண்டும். மணமேல்குடி தாலுகா, கோட்டைப்பட்டினத்தில் பேருந்து நிலையம் அமைத்துத் தர வேண்டும்.

ஆவுடையார்கோயில் ஒன்றியம், தீயத்தூரிலும், மணமேல்குடி ஒன்றியம், கரகத்திக்கோட்டையிலும் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆ. வெங்கடேசன் அவர்கள்.

திரு. ஆ. வெங்கடேசன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மக்கள் சாமி கும்பிடும் வழக்கத்தை மாற்ற விரும்பியவர் அல்லர். தன் பகுத்தறிவால் மக்களிடம் 'கும்பிடுகிறேன் சாமி' என்ற வழக்கத்தை மாற்ற விரும்பியவர் நம் திராவிடத் தந்தை, அனைத்து இன மக்களும் மேன்மையுற அனைவருக்கும் சம உரிமை வழங்கி, சமூக நீதி வழங்கி, சமூக நீதியைக் காத்த சமத்துவத்தைப் பேணிய பகுத்தறிவுப் பகலவன் தந்தை பெரியாரை நினைவு கூர்கிறேன்.

பிற்பகல் 1–25

தமிழினம் தழைத்தோங்க "ஒன்றே குலம் ஒருவனே தேவன்" என்றுரைத்த பேரறிஞர் பெருந்தகை அண்ணா அவர்கள் நமக்கு அளித்த "கடமை, கண்ணியம், கட்டுப்பாடு" என்ற வேத சொல்லினை எந்நாளும் நம் நெஞ்சில் நிலைநிறுத்தியும், ஊனில், உதிரத்தில், உயிரில் தமிழினம் காக்க தன் இறுதி மூச்சுவரை போராடி, தான் இறந்தபிறகும் போராடி மெரினாவில் தனக்கென ஓர் இடத்தை தமிழினம் உள்ள வரை வரலாற்றுச் சின்னமாக உருவாக காரணமாக இருந்தவர்; அவர் எழுப்பிய, அண்ணா வழியில் அயராது உழைப்போம், ஆதிக்கமற்ற சமுதாயத்தை அமைத்தே தீருவோம். வன்முறை தவிர்த்து வறுமையை வெல்வோம். இந்தித் திணிப்பை என்றும் எதிர்ப்போம். மத்தியில் கூட்டாட்சி, மாநிலத்தில் சுயாட்சி என்ற ஐம்பெரும் முழக்கங்களை நம் நெஞ்சில் நிறுத்தி என்றென்றும் ஒலித்துக் கொண்டிருக்கும், ஐந்து முறை அரியணையை அலங்கரித்த, தமிழினத் தலைவர் முன்னாள் முதல்வர் தலைவர் கலைஞர் அவர்கள் புகழ் இந்திய அரசியல் காலச் சக்கரத்தில் தவிர்க்க முடியாத ஒரு நிரந்தர முள், (மேசையைத் தட்டும் ஒலி) கடைசி தமிழன் உயிர் வாழும் வரை, மண்ணை விட்டு மறைந்தாலும் மனதைவிட்டு மறையாத அவரது

2023 ஏப்ரல் 13] [திரு. ஆ. வெங்கடேசன்]

பேச்சு என்றும் நெஞ்சில் ஒலித்துக்கொண்டே இருக்கும் என்பதை கூறிக்கொள்கிறேன்.

'முடியுமா நம்மால் என்பது தோல்விக்கு முன்பு வரும் தயக்கம். முடித்தே தீருவோம் என்பது வெற்றிக்கு முன்வரும் தொடக்கம்'. 'துணிவிருந்தால் துக்கமில்லை. துணிவில்லாதவனுக்கு தூக்கமில்லை' என்ற கலைஞர் அவர்களின் பொன்மொழிகளுக்கு ஏற்ப 'தடைகள் பல வரலாம், தட்டிப் பறிக்க கூட்டமும் வரலாம், எதைக் கண்டும் அஞ்சாதே' என்ற வைர வரிகளை தன் நெஞ்சில் ஏற்றி, ஏழை எளிய பிற்பட்ட மக்களுக்கும், தாழ்த்தப்பட்ட மக்களின் வளர்ச்சிக்காகவும் நல்லாட்சி நடத்திக்கொண்டிருக்கும் நமது தலைவர், கழகத் தலைவர் மாண்புமிகு முதல்வர் அவர்களை வணங்குகிறேன்.

கதாநாயகனாக இருந்து ஆட்டநாயகன் ஆனவர். அனைத்து ஆடுகளத்திலும் சேம்பியன். எங்கள் இளைஞரணியின் கேப்டன். எல்லா ஓட்டப்பந்தயங்களிலும் ரன்னர் அல்ல, வின்னர். (மேசையைத் தட்டும் ஒலி) அனைத்துக் களங்களிலும் வெற்றிக் கோப்பையைக் கைப்பற்றும் வீரர். நெருப்பாட்டம் ஆடும் இளையசூரியன். திராவிடக் கோட்டையின் கோல் கீப்பர், மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்களை வணங்குகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களையும், பேரவைத் துணைத் தலைவர் அவர்களையும் வணங்குகிறேன். அவை முன்னவர் உள்ளிட்ட மூத்த அமைச்சர்களையும், எனக்கு வழிவிட்டு, வழிகாட்டி, வழிநடத்திக்கொண்டிருக்கும் மாண்புமிகு வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்களையும், மற்ற மூத்த அமைச்சர் பெருமக்கள் அனைவரையும் வணங்குகிறேன்.

சங்கம் வைத்து தமிழ் வளர்த்த மாமதுரைக்கு மீண்டும் ஒரு மணிமகுடமாக முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்கள் பெயரால் ஆசியாவிலேயே மிகப் பெரிய நூலகம் அமைத்துத் தந்த, மூவேந்தர்களை ஒருங்கேபெற்ற நமது மக்களின் முதல்வர் அவர்களுக்கு மாமதுரை மக்களின் சார்பாக நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

சோழவந்தான் சட்டமன்றத் தொகுதிக்கு விளையாட்டு அரங்கம் ஒதுக்கீடு செய்த மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்களுக்கு

இளைஞர்கள் மற்றும் தொகுதி மக்களின் சார்பாக நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

சோழவந்தான் தொகுதியில் பயிரிடப்படும் வெற்றிலைக்கு புவிசார் குறியீடு கிடைப்பதற்கு பரிந்துரைத்த மாண்புமிகு மக்களின் முதல்வர் அவர்களுக்கும், மாண்புமிகு வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்களுக்கும், இந்த பகுதி வெற்றிலை விவசாயிகளின் சார்பாக நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். வெற்றிலை ஆராய்ச்சி மையம் நிறுவி, வெற்றிலை விவசாயிகள் வாழ்வாதாரத்தையும், பொருளாதாரத்தையும் மேம்படுத்தி காத்திட வேண்டுமென எனது தொகுதி மக்களின் சார்பாக கேட்டுக்கொள்கிறேன்.

சோழவந்தான் நகரில் கடந்த 10 ஆண்டுகளுக்கும் மேலாக இரயில்வே மேம்பாலப் பணி நடைபெற்று வந்த சூழ்நிலையில், நமது அரசு பதவியேற்றவுடன் தடைகளாக இருந்த அனைத்து இடர்பாடுகளையும் நீக்கி, பணியை துரிதப்படுத்தி இன்று மேம்பாலத்தைத் திறக்கும் சூழ்நிலைக்கு கொண்டு வந்துள்ள மாண்புமிகு மக்களின் முதல்வர் அவர்களுக்கும், மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மதுரை மாவட்டத்தில் அமைந்துள்ள ஒரே நீர்த்தேக்கம் சாத்தையாறு அணை நீர்த்தேக்கம் ஆகும். அந்த அணையைத் தூர்வாரி, அந்தப் பகுதியில் விவசாயம் செய்யும் சுமார் 30 கிராமங்களில் உள்ள 30,000 ஹெக்டேர் பரப்பளவுள்ள விவசாய நிலங்களில் பயிர் செய்து, பசுமைப் போர்வையின் பரப்பளவை அதிகரிக்கச் செய்வதுடன், இப்பகுதி விவசாயத்தின்மூலம் உணவுப் பொருட்களின் உற்பத்தியையும் அதிகரிக்கலாம். இதனால் இப்பகுதியில் உள்ள விவசாயிகள் பொருளாதார வளர்ச்சி அடைவதுடன் அவர்களின் வாழ்வாதாரத்தை உயர்த்திட முடியும். மேலும், அணையைச் சீரமைத்து படகுப் போக்குவரத்து துவங்குவதன்மூலம் சிறந்த சுற்றுலாத் தலமாகவும் அமையும்.

அலங்காநல்லூர் தேசிய கூட்டுறவுச் சர்க்கரை ஆலை கடந்த பத்து ஆண்டுகளாக மூடப்பட்டுள்ளது. அதைத் திறக்க

வேண்டும். இதனால், அப்பகுதியில் உள்ள விவசாயிகள் கரும்பு பயிரிடுவதற்கு தேவையான நடவடிக்கையை மேற்கொள்வார்கள். மாண்புமிகு வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர் அவர்கள், துறை ரீதியாக அதிகாரிகளைக் கொண்டு ஆய்வு செய்து, கூடியவிரைவில் சர்க்கரை ஆலையைத் திறந்து, கரும்பு விவசாயிகளின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த வேண்டுமென்று தொகுதி மக்களின் சார்பாகக் கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 1–30

தமிழக வனத் துறையில் வேட்டைத் தடுப்பு காவலர்களாக கடந்த 10 ஆண்டுகளுக்கும் மேலாக தினக்கூலி அடிப்படையில் பணிபுரிகின்ற வேட்டைத் தடுப்பு காவலர்களை காலமுறை ஊதிய அடிப்படையில் பணிவரன்முறைப்படுத்தி, அவர்களின் வாழ்வாதாரம் மேம்பட ஆவன செய்ய வேண்டுமாய் மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்களை வேண்டி விரும்பிக் கேட்டுக்கொள்கிறேன்.

மாசு கட்டுப்பாடு வாரியத்தால் தொடங்கப்பட்ட நெகிழிக்கு மாற்றாக 'மீண்டும் மஞ்சப்பை' திட்டம் பொதுமக்களிடையே நல்ல வரவேற்பைப் பெற்றுள்ளது. மக்கள் அனைவரும் மஞ்சப்பையைப் பயன்படுத்தி அரசின் நலத் திட்டத்தில் வழங்கப்பெறும் பொருட்கள் அனைத்தையும் மஞ்சள் பையில் வழங்கி மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தி, சுற்றுச்சூழல் மாசுபடாமல் எதிர்கால சந்ததியினர் பயன்பெறும் வகையில் இத்திட்டத்தைச் செயல்படுத்திட வேண்டுகிறேன்.

தொழிற்சாலைகளிலிருந்து வரும் கழிவுகள் Central Evaluation Systemமூலம் மொத்தமாக ஆற்றில் கலந்து மாசுபடுவதைக் கருத்தில்கொண்டு, ஆறு மாசுபடுவதைத் தடுத்து outlet systemமூலம் அனைத்தையும் மொத்தமாக centralize செய்து, அதை ஒட்டுமொத்தமாக தன் கண்காணிப்பில் கொண்டுவர வேண்டுமாய் மாண்புமிகு சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத் துறை அமைச்சர் அவர்களை வேண்டி விரும்பி கேட்டுக்கொள்கிறேன்.

முதுமலை யானைகள் பாதுகாப்பு முகாமில் பொம்மன்–பெல்லி தம்பதியினர் வளர்த்த யானை நமது வனத்தில் இயற்கைச் சூழலில் வளர்க்கப்பட்டது. இந்த குறும்படம் Oscar தேர்வில் வெற்றி பெற்று, நமது வனத்தின் சூழல் சர்வதேச பார்வையாளர்களின்

கவனத்தை ஈர்த்துள்ளது. பசுமை தமிழகம் திட்டத்தின்கீழ் தமிழக அரசின் புறம்போக்கு நிலங்கள் மற்றும் பூங்காக்களில், குறுங்காடுகள் வளர்ப்புத் திட்டம் செயல்படுத்தப்படுவது பொதுமக்களிடம் நல்ல வரவேற்பைப் பெற்றுள்ளது. அதை மேம்படுத்த மாண்புமிகு அமைச்சர் அவர்கள் துறை அதிகாரிகளுக்கு உத்தரவிட்டு, அந்தப் பகுதி மக்களுக்கு அதனுடைய பயனை எடுத்துக் கூறவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது)

நமது யானை பாகன்களுக்கு, Thailand யானை பயிற்சியாளர்களால் யானைகள் வளர்ப்பில் பயிற்சி அளிக்கும் திட்டம் வழங்கயிருப்பது மேலும் வரவேற்பைப் பெற்றுள்ளது.

காட்டில் எதிர்பாராத தீ விபத்தினால் ஏற்படும் உயிர் இழப்பிற்கு ரூ.25 இலட்சம் இழப்பீடாக வழங்கும் திட்டத்தை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தற்போது அறிமுகப்படுத்தியதற்கு நன்றி.

வெளிநாட்டுத் தாவரங்களால் ஏற்படும் சுற்றுச்சூழல் மாசுபாட்டிற்கும் காலநிலை மாற்றத்திற்கும் காரணமான அனைத்து வனம் மற்றும் தரிசு நிலங்களில் உள்ள தாவரங்கள் ஒழிப்புத் திட்டம் சிறப்பானதாகும்.

மனிதன் மற்றும் வனவிலங்குகளிடையே ஏற்படும் மோதலைத் தடுப்பதற்கு, fencing மற்றும் அகழி அமைத்து, நிரந்தரமாக வன விலங்குகளிடம் இருந்து மனிதர்களுக்கு பாதுகாப்பு தரும் திட்டம் நல்ல வரவேற்பைப் பெற்றுள்ளது.

சதுப்புநிலப் பாதுகாப்பு மற்றும் கடற்கரையோரத்தில் அலையாத்தி காடுகள் புதிதாக உருவாக்கும் திட்டம் கடல் அரிப்பைத் தடுப்பதற்கும், கடல் உயிரியல் பாதுகாப்புக்கும் ஒரு நல்ல திட்டமாகும்.

வனத் துறையால் புலிகள் பாதுகாப்புத் திட்டம் தொடங்கப்பட்டு, தற்போது 50-வது பொன்விழா கொண்டாடப்பட்டு வருகிறது. ஏரி மற்றும் சதுப்பு நிலங்களில் அமைந்துள்ள பறவைகள் சரணாலயங்களுக்கு தற்போது அரசால் இயற்றப்பட்டுள்ள பாதுகாப்புச் சட்டங்களால், சரணாலயங்கள் பாதுகாப்பு பெற்றுள்ளன. எனது தொகுதி கோரிக்கை இரண்டை மட்டும் சொல்லிவிடுகிறேன்.

கடந்த 22-3-2023 அன்று எனது தொகுதியில் நாச்சிகுளம், இருப்பாடி, பாலகிருஷ்ணாபுரம், கணேசபுரம், பொம்மம்பட்டி,

கருப்பட்டி, அமச்சியாபுரம், போடிநாயக்கம்பட்டி, நீரேத்தான் ஆகிய பகுதிகளில் பெய்த ஆலங்கட்டி மழையால் விவசாய நிலங்களில் அறுவடைக்குத் தயாராக இருந்த நெல்மணிகள் அனைத்தும் வயல்வெளியில் சிதறி விவசாயிகளுக்குப் பெரும் சேதத்தை விளைவித்தது. மாவட்ட நிர்வாகம் உடனடியாகத் தலையிட்டு, துறைரீதியான அதிகாரிகளை அந்தப் பகுதிக்கு அனுப்பி, சேதத்தை அளவிட்டு, அவர்களின் சேதாரங்களுக்கு உடனடியாக நிவாரணம் வழங்கிடுமாறு மாண்புமிகு துறை அமைச்சர் அவர்களையும், மாண்புமிகு முதல்வர் அவர்களையும் கேட்டுக்கொள்கிறேன்.

சிறுமலைப் பகுதியில் அமைந்துள்ள மீனாட்சிபுரம் பகுதி மக்கள் சென்று வருவதற்கு சாலை அமைத்துத் தரும்படி, மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்களை கேட்டுக்கொள்கிறேன்.

எனது தொகுதிக்குட்பட்ட சரந்தாங்கி, பாலமேடு, வடகாடுப்பட்டி, ஆகிய பகுதிகளில் வனத் துறையின் கட்டுப்பாட்டில் இருக்கும் சாலைகள் போன்று போக்குவரத்திற்குச் செப்பனிடமுடியாதபடி இருக்கும் அனைத்து சாலைப் பணிகளையும், துறைரீதியான அதிகாரிகள் joint inspection செய்து முடித்து மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்களிடத்தில் கொடுத்துவிட்டார்கள். அந்தப் பகுதி மக்கள் அவசர காலத்தில் சென்று வருவதற்கும், அவர்களின் விளைபொருட்களைச் சந்தைப்படுத்துவதற்கும், மருத்துவமனைகளுக்குச் செல்வதற்கும், கல்வி நிலையங்கள் செல்வதற்கும் போதிய சாலை வசதி இல்லாததால் அப்பகுதிகளில் முன்னுரிமை அடிப்படையில், அனைத்து சாலை வசதிகளையும் ஏற்படுத்தித் தருமாறு மாண்புமிகு துறை அமைச்சர் அவர்களையும், மாண்புமிகு முதல்வர் அவர்களையும் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: ஒரு நிமிடத்தில் முடித்துவிடுங்கள்.

திரு. ஆ. வெங்கடேசன்: சாத்தையாறு மற்றும் முல்லைப்பெரியாறு பகுதியைச் சுற்றியுள்ள கிராமங்களில் உள்ள மக்கள் சென்று வருவதற்கு ஒரு பாதை இல்லை. இதை நான் கடந்த கூட்டத் தொடரில் இரண்டு, மூன்று முறை கோரிக்கையாகக் கொடுத்திருக்கிறேன். துறைரீதியான அதிகாரிகளை அனுப்பி ஆய்வு செய்தார்கள். இப்போது சுமார் 3,000 குடும்பங்கள் அங்கே

வசித்து வருகின்றன. அந்த முல்லைப் பெரியாறு பாலத்தை cross செய்து போவதற்கு வழியில்லாமல் இருக்கிறது. அந்த வழியாக பாலத்தைக் கடந்து பள்ளி, கல்லூரிகளுக்கும், அவசரகாலங்களில் மருத்துவமனைக்குச் செல்வதற்கும் மாண்புமிகு துறை அமைச்சர் அவர்கள் வசதி ஏற்படுத்தித் தர வேண்டுமென்று அன்புடன் கேட்டு, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கும், மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களுக்கும் வாய்ப்புக்கு நன்றிகூறி அமர்கிறேன். (மேசையைத்தட்டும் ஒலி)

பிற்பகல் 1–35

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜெ. முகம்மது ஷாநவாஸ் அவர்கள்.

***திரு. ஜெ. முகம்மது ஷாநவாஸ்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எங்கள் தலைவர், எழுச்சித் தமிழர், முனைவர் தொல். திருமாவளவன் அவர்களுடைய வழிகாட்டுதலில், பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர், சிறுபான்மையினர் நலன் குறித்த மானியக் கோரிக்கைகள்மீதான விவாதத்தில் பங்கேற்றுப் பேசுவதற்கான வாய்ப்பைப் பெற்றமைக்காக மகிழ்ச்சியடைகிறேன். அதற்காக என்னுடைய நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

புரட்சியாளர் அம்பேத்கர் பிறந்த நாளான சமத்துவ நாளில், சாதி ஒழிப்பு, சமூக நீதி பாதுகாப்பு குறித்து, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தலைமையில் இன்றைக்கு நாம் உறுதிமொழியை எடுத்துக் கொண்டிருக்கிறோம். இந்தியாவில் சமூக நீதிக்காக முதன்முதலில் அரசமைப்புச் சட்டத்தைத் திருத்திய மாநிலம், தமிழ்நாடு. தந்தை பெரியார் அவர்கள் தமிழ்நாட்டில் அதற்கான களத்தைக் கூர் தீட்டினார். புரட்சியாளர் அம்பேத்கர் அவர்கள், சட்ட அமைச்சராக இருந்து அதற்கு வலுவூட்டினார். (மேசையைத் தட்டும் ஒலி) புரட்சியாளர் அம்பேத்கரும், தந்தை பெரியாரும், சமூக நீதிக்காகப் போராடிய தலைவர் பெருமக்களும் ஒரு சில தனி நபர்களுக்குப் பதவியை வழங்குவதற்காகப் போராட்டத்தை நடத்தவில்லை. எளிய மக்களை, வாய்ப்பு மறுக்கப்பட்ட சமூகங்களை அதிகாரப்படுத்துவதற்காக போராட்டத்தை நடத்தினார்கள்.

2023 ஏப்ரல் 13] [திரு. ஜெ. முகம்மது ஷாநவாஸ்]

ஆனால், இன்றைக்கு ஒன்றிய அரசும் சரி, ஒன்றிய அரசை வழிநடத்தக்கூடிய கட்சியும் சரி, சமூக நீதிக்கு வேறு ஒரு பரிமாணத்தைக் கொடுக்கிறார்கள். 'பிற்படுத்தப்பட்ட சமூகத்தைச் சார்ந்த ஒருவரை நாங்கள் பிரதமராக்கியிருக்கிறோம். பழங்குடியினத்தவரை நாங்கள் குடியரசுத் தலைவராக ஆக்கியிருக்கிறோம். அருந்ததியர் சமூகத்தைச் சார்ந்தவரை நாங்கள் ஒன்றிய அமைச்சராக்கியிருக்கிறோம், பார்த்தீர்களா? நாங்கள் பின்பற்றக்கூடிய சமூக நீதியை! சமூக நீதியைப் பேசக்கூடிய கட்சிகளில் இது சாத்தியமா?' என்றெல்லாம் சமூக நீதிக்காகவே போராடிக் கொண்டிருக்கிற நம்மைப் பார்த்து அந்தக் கேள்வியை எழுப்பியிருக்கிறார்கள்.

பிற்படுத்தப்பட்ட சமூகத்தைச் சார்ந்தவர் ஒருவர், அவர்களால் பதவியில் அமர்த்தப்பட்டிருக்கிறார். ஆனால், தமிழ்நாட்டில் முத்தமிழறிஞர் கலைஞர் பிற்படுத்தப்பட்ட சமூகங்களுக்கு இட ஒதுக்கீடு வழங்கினார். (மேசையைத் தட்டும் ஒலி) பழங்குடியினத்தைச் சார்ந்த ஒருவர் பதவியில் அமர்த்தப்பட்டிருக்கிறார். ஆனால், தமிழ்நாட்டில் முத்தமிழறிஞர் கலைஞர், பழங்குடியின மக்களுக்குத் தனியே 1 விழுக்காடு இட ஒதுக்கீட்டை வழங்கினார். அருந்ததியர் சமூகத்தைச் சார்ந்த ஒருவர், ஒன்றிய அமைச்சராக்கப்பட்டிருக்கிறார். முத்தமிழறிஞர் கலைஞர் தமிழ்நாட்டில் அருந்ததியர் சமூகத்திற்கே மூன்று விழுக்காடு இட ஒதுக்கீட்டைக் கொடுத்தார். (மேசையைத் தட்டும் ஒலி) அதுபோல, 'சிறுபான்மை சமூகத்தைச் சார்ந்தவரை ஏற்கெனவே நாங்கள் குடியரசுத் தலைவராக்கினோம்' என்று சொன்னார்கள். ஆனால், தமிழ்நாட்டில் கலைஞர் 3.5 விழுக்காடு இட ஒதுக்கீட்டை சிறுபான்மை சமூகத்திற்குக் கொடுத்தார். (மேசையைத் தட்டும் ஒலி) இதுதான் நாம் கவனிக்க வேண்டிய ஒன்று.

சிறுபான்மை மக்களுக்கும் சரி, ஒட்டுமொத்த மக்களுக்கும் சரி, இட ஒதுக்கீட்டைக் கொண்டுவந்து, மிகவும் பிற்படுத்தப்பட்டோர் என்கிற ஒரு பிரிவையே உருவாக்கி, பிற்படுத்தப்பட்டோருக்கான இட ஒதுக்கீடு விழுக்காட்டை அதிகரித்து, பட்டியலின மக்களுக்கான இட ஒதுக்கீடு விழுக்காட்டை அதிகரித்து, பழங்குடியினருக்கென தனியே 1 விழுக்காடு இட ஒதுக்கீடு கொடுத்து, எந்தச் சட்ட சிக்கலும் இல்லாமல் செயல்படுத்தினார். நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அண்ணன் திரு. ஈ.ஆர். ஈஸ்வரன் அவர்கள் குறிப்பிட்டதைப்போல, இந்தியாவில் கொடுக்கப்பட்ட எல்லா இட ஒதுக்கீடுகளும்

[திரு. ஜெ. முகம்மது ஷாநவாஸ்] [2023 ஏப்ரல் 13

ஏதோ ஒரு வகையில் சட்ட சிக்கலை சந்தித்திருக்கின்றன. அது நீதிமன்றத்தால் முறியடிக்கப்பட்டிருக்கிறது. ஆனால், தமிழ்நாட்டில் முத்தமிழறிஞர் கலைஞர் கொடுத்த எந்த இட ஒதுக்கீடும், எந்தச் சட்ட சிக்கலையும் சந்திக்கவில்லை. (மேசையைத் தட்டும் ஒலி)

கேரளாவிலும் சரி, கர்நாடகத்திலும் சரி, குறிப்பாக, ஆந்திராவில், இஸ்லாமியர்களுக்கு இட ஒதுக்கீடு உண்டு. ஆந்திராவில் திரு. ராஜசேகர் ரெட்டி அவர்கள் இஸ்லாமியர்களுக்கு இட ஒதுக்கீடு கொடுத்தபோது, நீதிமன்றம் அதனை ஏற்றுக்கொள்ளவில்லை. ஆனால், கலைஞர் இட ஒதுக்கீட்டைக் கொடுக்கும்போது, உரிய பரிந்துரைகளைப் பெற்று, உரிய ஆணைகளைப் பெற்று, இட ஒதுக்கீட்டை எப்படிக் கொடுத்தால், சட்ட ரீதியாக எந்தவொரு சட்ட சவாலையும் சந்திக்காதோ, அப்படிப் பார்த்துக் கொடுத்தார். அப்படித்தான் பிற்படுத்தப்பட்ட மக்களுக்கும் இட ஒதுக்கீட்டைக் கொடுத்தார். அந்த வரிசையில்தான் இப்போது, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் சமூக நீதித் தளத்தில் பயணித்துக் கொண்டிருக்கிறார்கள். பிற்படுத்தப்பட்ட ஒருவர் பிரதமராக இருக்கக்கூடிய நாட்டில்தான் பிற்படுத்தப்பட்ட சமூகத்திற்காக மருத்துவப் படிப்பில் இட ஒதுக்கீடு கேட்டு, நாம் போராட வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டோம்.

பிற்பகல் 1–40

ஆனால், அவர்களுடைய ஆட்சிக் காலத்தில், பொருளாதாரத்தில் பின்தங்கியுள்ளவர்களுக்கு EWS இட ஒதுக்கீடு கொடுத்திருக்கிறார்கள். யாரும் கேட்கவில்லை; எந்தப் போராட்டமும் நடக்கவில்லை. யாரும் கேட்காமல், போராடாமல், நீதிமன்றத்தில் வழக்காடாமலேயே எடுத்த எடுப்பிலேயே சட்டத்திற்கு முரணாக 10 விழுக்காடு EWS இட ஒதுக்கீடு வழங்கப்பட்டது. அரசமைப்புச் சட்டத்தில் பொருளாதார அடிப்படையில் இட ஒதுக்கீடு கொடுக்க முடியாது. சமூக ரீதியில்தான் கொடுக்க முடியும். அப்படியிருந்தும், பொருளாதார ரீதியாக இட ஒதுக்கீட்டைக் கொடுத்தார்கள். அதே பிற்படுத்தப்பட்டவர் பிரதமராக இருக்கிற நிலையில், OBC மாணவர்களுக்கான அந்த மத்தியத் தொகுப்பு இடங்களில் நாம் சென்று கேட்கும் நிலை இருந்தது. எங்கள் கட்சியின் தலைவர் அவர்கள்தான் முதலில் நாடாளுமன்றத்திற்குச் சென்று ஒன்றிய அரசின் அமைச்சர் அவர்களைப் பார்த்து, 'இப்படி ஓர் அநீதி இருக்கிறது, இதைச் சரி செய்யுங்கள், இட ஒதுக்கீட்டை உறுதிப்படுத்துங்கள்' என்று சொன்னார்கள். அதன்பிறகு, உச்ச

2023 ஏப்ரல் 13] [திரு. ஜெ. முகம்மது ஷாநவாஸ்]

நீதிமன்றத்தில் விடுதலை சிறுத்தைகள் கட்சியினர் சார்பாக வழக்கு போட்டோம். திராவிட முன்னேற்றக் கழகம் வழக்கு போட்டது. உச்ச நீதிமன்றத்தில் வாதாடினோம். நம்முடைய மாநிலங்களவை உறுப்பினர் Thiru. P. Wilson அவர்கள் மிகப் பெரிய வாதங்களை முன்வைத்தார்கள். 'உயர் நீதிமன்றத்தில் பார்த்துக்கொள்ளுங்கள்' என்று உச்ச நீதிமன்றம் சொன்னது. உயர் நீதிமன்றத்திற்குச் சென்றோம். உயர் நீதிமன்றத்தில் ஒன்றிய அரசு, 'கொடுக்க முடியாது' என்று சொன்னது. நீதிமன்றம், 'கொடுங்கள்' என்று சொன்னது, இந்த வகையில் நீதிமன்றத்திற்குச் சென்று வாதாடி, போராடி, வெளியே களத்திலும் போராடித்தான் இவர்களுடைய ஆட்சிக் காலத்தில் நாம் இட ஒதுக்கீட்டினைப் பெற்றிருக்கிறோம். எனவே, சமூக நீதியைப் பற்றி யாரும் நமக்குப் பாடம் எடுக்க வேண்டிய அவசியமில்லை. நாம்தான் இந்தியாவிற்கே சமூக நீதி குறித்த பாடத்தை எடுத்துக்கொண்டிருக்கிறோம். (மேசையைத் தட்டும் ஒலி)

அந்தவகையில், தற்போதைய இட ஒதுக்கீட்டிற்கு சிக்கல் வந்திருக்கின்றது. ஏற்கெனவே 69 விழுக்காடு இட ஒதுக்கீட்டை நாம் நடைமுறைப்படுத்திவிட்டோம். 50 விழுக்காடுதான் இட ஒதுக்கீடு இருக்க வேண்டுமென்று உச்ச நீதிமன்றமே வரம்பு விதித்தபிறகும்கூட, அந்த வரம்பை உடைத்து 69 விழுக்காடு இட ஒதுக்கீட்டைச் சட்டமாக்கிய ஒரே மாநிலம், தமிழ்நாடுதான். அதற்கு இரண்டு கட்சிகளுக்கும் மிகப் பெரிய பங்கு உள்ளது. கலைஞர் 69 விழுக்காடு வரை இட ஒதுக்கீட்டினைக் கொண்டுவந்தார்கள். அம்மையார் அவர்கள் காலத்தில் அதற்கு உரிய சட்டப் பாதுகாப்பினை வழங்கினார்கள். இப்போது 10 விழுக்காடு EWS வரப்பெற்றதன் அடிப்படையில், அந்த 50 விழுக்காடு என்கிற வரம்பே உடைந்துவிட்டது. வரம்பு இருக்கும்போதே 69 விழுக்காட்டினைக் கொண்டுவந்தவர்கள் நாம். இப்போது அந்த வரம்பு இல்லை. எனவே, சாதி வாரிக் கணக்கெடுப்பை நடத்தி, 100 விழுக்காடு இட ஒதுக்கீட்டினை நடைமுறைப்படுத்தி, அதையும் தமிழ்நாட்டிலிருந்து நாம் தொடங்கிக்காட்ட வேண்டும். தமிழ்நாட்டிலிருந்து அதனை நடைமுறைப்படுத்த வேண்டும்.

அதேபோன்று, இன்றைக்கு அனைத்து நிறுவனங்களும் தனியார்மயமாகிக்கொண்டிருக்கின்றன. பொதுத் துறை நிறுவனங்கள் முற்றிலும் ஒழிக்கப்பட்டுக்கொண்டிருக்கிற காலமாக உள்ளது. எனவே, இட ஒதுக்கீடு காகிதத்திலிருக்கும். நடைமுறையில்

இருக்குமா என்று பார்த்தால், நாளுக்குநாள் அது கேள்விக்குறியாகிக் கொண்டிருக்கிறது. காகிதத்தில் இட ஒதுக்கீட்டை வைத்து என்ன செய்வது? நடைமுறைப்படுத்தப்பட வேண்டுமென்றால், அரசுத் துறை நிறுவனங்கள் இருக்க வேண்டும், பொதுத் துறை நிறுவனங்கள் இருக்க வேண்டும். ஆனால், இன்றைக்கு பொதுத் துறை ஒட்டுமொத்தமாக அழிக்கப்பட்டு, முழுவதும் தனியார்மயமாக்கப்படுகிற காலம். எனவே, அடுத்த கட்டமாக நம்முடைய சமூக நீதிப் போராட்டம் என்பது தனியார் துறையிலும் இட ஒதுக்கீடு என்பதை நோக்கி நகர வேண்டும். அதேபோன்று, இன்னும் நாம், பிற்படுத்தப்பட்ட மக்கள், மிகவும் பிற்படுத்தப்பட்ட மக்கள், சிறுபான்மையின மக்கள், பட்டியலின பழங்குடி இன மக்கள், உயர் நீதிமன்றம் மற்றும் உச்ச நீதிமன்றங்களில் பதவி உயர்வுகளில், குறிப்பாக உயர் பதவிகளில் எட்ட இயலவில்லை. மிகப் பெரிய அதிகாரப் பொறுப்புகளில், துணை வேந்தர்களில் இன்னும் எட்ட இயலாமல்தான் இருக்கிறார்கள். இன்னும் 1 விழுக்காடு, 2 விழுக்காடு என்கிற அளவில்தான் இருக்கின்றன. எனவே, உயர் பதவிகளில் இட ஒதுக்கீடு அளிப்பதற்கும் நாம் தமிழ்நாட்டிலிருந்து அதற்கான ஒரு தீர்மானத்தைக் கொண்டுவந்து, அதையும் முன்மொழியச் செய்ய வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோன்று, நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இந்த 100 விழுக்காடு இட ஒதுக்கீட்டை இங்கு சாத்தியப்படுத்திக் காட்டிட வேண்டும். குறிப்பாக, EWS 10 விழுக்காடு இட ஒதுக்கீட்டை நிராகரிக்கிறோம் என்று துணிவோடு அறிவித்த நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களது நடவடிக்கையினை நாம் பாராட்டுகிறோம். அதேபோன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்றவுடன் “வாக்களித்த மக்கள் மகிழ்ச்சியடைய வேண்டும், வாக்களிக்காத மக்கள் இந்த ஆட்சிக்கு வாக்களிக்காமல் போய்விட்டோமென்று வருத்தப்பட வேண்டும்” என்று சொன்னார்கள். இந்த ஆட்சிக்கு யார் வாக்களித்தார்களோ இல்லையோ, ஆனால், சிறுபான்மையின மக்கள் 100 விழுக்காடு சிந்தாமல், சிதறாமல் வாக்களித்திருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அந்த மக்கள், குறிப்பாக, இஸ்லாமியர்கள் இன்றைக்கு ஆயுள் சிறைவாசிகளின் விடுதலை தொடர்பாக ஏக்கத்துடனும், எதிர்பார்ப்புடனும் இருக்கிறார்கள். எனவே, இதற்கான ஒரு தீர்மானத்தை அமைச்சரவை இயற்றி, அந்த மக்களின் எதிர்பார்ப்பை, ஏக்கத்தைத் தீர்க்க வேண்டும். 10 ஆண்டுகளைக்

2023 ஏப்ரல் 13] [திரு. ஜெ. முகம்மது ஷாநவாஸ்]

கடந்து, சிறையில் வாடுகிறவர்களை விடுதலை செய்ய வேண்டும். அந்த மக்கள் சட்டத்தை மீறியோ, சட்டத்திற்கு முரணாகவோ, சட்டத்தை வளைத்தோ இதனை செய்ய வேண்டுமென்று கேட்கவில்லை. ஏற்கெனவே, எந்தவகையில் அதிக அளவிலான சிறைவாசிகள் வெளியே வந்திருக்கிறார்களோ, பொது மன்னிப்பின் அடிப்படையில் விடுதலை செய்யப்பட்டிருக்கிறார்களோ, அந்த வழியைப் பின்பற்றி, சட்டப்படி சிறையில் வாடக்கூடிய இந்த மக்களை விடுதலை செய்ய வேண்டும்.

குறிப்பாக, ஐக்கிய முற்போக்குக் கூட்டணி ஆட்சிக் காலத்தில், சிறுபான்மையின சமூக, பொருளாதார நிலைகளை அறிவதற்காக, நீதிபதி Sachar Committee அமைக்கப்பட்டது. அது பரிந்துரைகளை வழங்கியது. அந்தப் பரிந்துரைகள் இக்காலங்களில் பின்பற்றப்படவில்லை. ஒன்றிய அரசு அதைக் கிடப்பில் போட்டுவிட்டது. தமிழ்நாட்டில் சிறுபான்மையினருடைய வாழ்நிலை, கல்வி நிலை, பொருளாதார நிலை எப்படி இருக்கின்றன என்பதைப் பற்றிய ஒரு விரிவான ஆய்வு செய்யப்பட வேண்டும். ஏற்கெனவே, சமூக நீதி கண்காணிப்புக் குழுவை நமது அரசு அமைத்திருக்கிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஒரு கனவுத் திட்டமாக அதனை அறிவித்திருக்கிறார்கள். அந்தச் சமூக நீதி கண்காணிப்புக் குழுவிற்கு முழு அதிகாரத்தைக் கொடுக்கவேண்டும். அவர்கள் ஐந்து இடங்களில்தான் சென்று ஆய்வு மேற்கொள்ள வேண்டுமென்றும், ஆய்வு செய்வதற்கு முன்பு அங்கு சொல்ல வேண்டும், இங்கு சொல்ல வேண்டும் என்றெல்லாம் G.O. இருப்பதாக அறிகிறேன். அப்படிப்பட்ட விதிகளையெல்லாம் தளர்த்தி, அந்தக் கண்காணிப்புக் குழுவிற்கு முழு அதிகாரத்தைக் கொடுத்து, குறிப்பாக சிறுபான்மையினருடைய நிலை எப்படி இருக்கிறது என்பதைப் பற்றி ஆய்வு நடத்தி, அந்த ஆய்வு முடிவின் அடிப்படையில், பல்வேறு பொருளாதார மேம்பாட்டுத் திட்டங்கள், கல்வி மேம்பாட்டுத் திட்டங்கள் மற்றும் சிறப்புத் திட்டங்களை அறிவிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 1–45

வக்ஃப் வாரியத்தினுடைய உறுப்பினராக பங்காற்றக்கூடிய வாய்ப்பினைப் பெற்றிருக்கிறேன். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அந்த வாய்ப்பை வழங்கியிருக்கிறார்கள். கடந்த இரண்டு ஆண்டுகளாக வக்ஃப் வாரிய உறுப்பினராகச் செயலாற்றிய அனுபவத்தில் சொல்கிறேன். வக்ஃப் வாரியம் பல்லாயிரம் கோடி

ரூபாய் சொத்துகளை நிர்வகிக்கக்கூடிய ஓர் அமைப்பு, ஓர் அரசு நிறுவனம். ஆனால், பல்லாயிரம் கோடி ரூபாய் சொத்துகளை நிர்வகிக்கக்கூடிய அளவிற்கு கட்டமைப்பு இல்லை, பணியாளர்கள் இல்லை, அதிகாரிகள் இல்லை, உரிய நிதி ஆதாரங்கள் இல்லை. மிகப் பெரிய நெருக்கடியில் சிக்கித் தவிக்கிறது. எனவே, இந்த வக்ஃப் வாரியத்தின் கட்டமைப்பை வலுப்படுத்த வேண்டும், போதுமான அதிகாரிகள் மற்றும் பணியாளர்கள் நியமனம் செய்யப்பட வேண்டும். அந்தப் பணியாளர்களைக்கூட வக்ஃப் வாரியமே நியமிக்கக்கூடிய வகையில் இருக்க வேண்டும். கேரளாவில் எல்லாம் அப்படித்தான் இருக்கிறது. எனவே, அந்த ஓர் ஏற்பாட்டைச் செய்ய வேண்டும். (மணியடிக்கப்பெற்றது) அண்டை மாநிலங்களில் 100 கோடி அளவிற்கு. . .

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் உரையை முடியுங்கள்.

திரு. ஜெ. முகம்மது ஷாநவாஸ்: வக்ஃப் வாரிய சொத்துகளைப் பாதுகாப்பதற்காக நிதியைக் கொடுக்கிறார்கள். தமிழ்நாட்டில் ஏற்கெனவே, புனரமைப்பு நிதி ரூ.5 கோடி இருந்தது. அதை நம்முடைய அரசு ரூ.10 கோடியாக உயர்த்தியிருக்கிறது. அதற்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதேநேரத்தில், அந்தத் தொகை போதுமானதல்ல. ஏனென்றால், வக்ஃப் சொத்துகள் உரிய பாதுகாப்பு இல்லாததனால், பெரும்பாலும் ஆக்கிரமிக்கப்படுகின்றன. எனவே, அனைத்து வக்ஃப் நிலங்களையும் கண்டறிந்து அவற்றைப் பாதுகாப்பதற்காக சுற்றுசுவர் எழுப்புதல் உள்ளிட்ட நடவடிக்கைகளைச் செய்வதற்கு மிகப் பெரிய நிதி ஆதாரம் தேவைப்படுகிறது. எனவே, மற்ற மாநிலங்களில் இருப்பதுபோல, 100 கோடி ரூபாய் அளவிற்கு அந்த நிதியை உயர்த்தி வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதுபோல, பள்ளிவாசல்கள், தேவாலயங்கள் கட்டுவதிலும் மிகப் பெரிய நெருக்கடி இருக்கிறது. அதற்கு அனுமதி வாங்குவதில் மிகப் பெரிய சிக்கல் இருக்கிறது. எனவே, அந்த அனுமதி பெறுகின்ற முறை எளிமைப்படுத்தப்பட வேண்டும். அதுபோல, கிறித்துவத்தைத் தழுவிய ஆதி திராவிட மக்களை SC பட்டியலில் இணைக்க வேண்டும்.

நாகப்பட்டினம் தொகுதி சார்ந்த பல கோரிக்கைகளை முன் வைத்திருக்கிறேன். அதை நான் எழுத்துபூர்வமாகக்

2023 ஏப்ரல் 13] [திரு. ஜெ. முகம்மது ஷாநவாஸ்]

கொடுத்துவிடுகிறேன். அதை இந்த அவையில் நான் படித்ததாகப் பதிவேற்றிக் கொள்ளவேண்டும். குறிப்பாக, நான் நாகப்பட்டினம் தொகுதியை அடையாளப்படுத்தக்கூடியவன். அந்தத் தொகுதியினுடைய உறுப்பினர் என்ற முறையில் நாகூர் இசைமுரசு நாகூர் ஹனிபாவினுடைய நூற்றாண்டு அடுத்த ஆண்டு தொடங்குகிறது. அவர் நாகூரைச் சார்ந்தவர். அவருடைய நூற்றாண்டை அரசு விழாவாகக் கொண்டாட வேண்டும். நாகூரிலே அவருக்கு நூற்றாண்டு நினைவு வளைவு அமைக்க வேண்டும். நாகூரில் இருக்கக்கூடிய சாலைக்கு அவருடைய பெயரைச் சூட்ட வேண்டும். திராவிட இயக்கத்திற்காகவும், சமய நல்லிணக்கத்திற்காகவும், தன்னுடைய வாழ்நாளெல்லாம், தன்னுடைய குரலால் அரும்பணியாற்றிய அந்தப் பெருந்தகைக்குச் சிறப்பு சேர்க்க வேண்டுமென்று சொல்லி, வாய்ப்புக்கு நன்றி கூறி, விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

தொகுதிக் கோரிக்கைகள்:

நாகப்பட்டினம், காடம்பாடி நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாக நிலை உயர்த்த வேண்டும். திருமருகல் ஊராட்சி ஒன்றியத்தை தனி வட்டமாக அறிவிக்க வேண்டும். நாகப்பட்டினத்தில் அரசு சட்டக் கல்லூரி அமைக்க வேண்டும். நாகப்பட்டினம் நகராட்சி நாகூர் பேருந்து நிலையம் மேம்படுத்தப்பட வேண்டும்.

நாகப்பட்டினத்தில் சிப்காட் தொழிற்பூங்கா அமைக்க வேண்டும். நாகப்பட்டினம் அரசு பொது மருத்துவமனையை மகப்பேறு மற்றும் குழந்தைகள் நல சிறப்பு மருத்துவமனையாக மாற்ற வேண்டும். நாகூர் ஆண்டவர் அரசு மருத்துவமனையை மேம்படுத்த வேண்டும்.

நாகப்பட்டினம் மாவட்ட மைய நூலகம் புனரமைத்தல் மற்றும் நாகூர், திட்டச்சேரி, திருமருகல் நூலகங்களுக்கு புதிய கட்டடம் வேண்டும். நாகூர் சில்லடி கடற்கரை உட்கட்டமைப்பை மேம்படுத்த வேண்டும்.

நாகப்பட்டினம் நகரத்தில் அரசு நிகழ்ச்சிகள் நடத்துவதற்கும், பொது மக்களின் பயன்பாட்டிற்கும் நவீன வசதிகளுடன் கூடிய கலையரங்கம் கட்ட வேண்டும். நாகப்பட்டினம் மாவட்டம் பாலையூர் ஊராட்சி அழிஞ்சமங்கலம் கிராமத்தில் உள்ள, ஆதி திராவிடர் நல உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக நிலை உயர்த்த வேண்டும். நாகப்பட்டினம் மாவட்டம் திட்டச்சேரி அரசு உயர்நிலைப் பள்ளியை பெண்கள் மட்டும் படிக்கும் மகளிர்

உயர்நிலைப் பள்ளியாக மாற்றம் செய்ய வேண்டும். நாகப்பட்டினம் மாவட்டத்தில் ஆதி திராவிடர் நல தனி வட்டாட்சியர் அலுவலகமும் மற்றும் தனி வட்டாட்சியர் அலுவலகமும் அமைக்க வேண்டும்.

நாகப்பட்டினம் மாவட்டம் திருமருகல், திருக்கண்ணபுரம் திருப்பயத்தங்குடி, கணபதிபுரம், ஏனங்குடி, தேமங்கலம் ஆகிய இடங்களில் உள்ள ஆரம்ப சுகாதார நிலையங்களின் உட்கட்டமைப்பை மேம்படுத்த வேண்டும். நாகப்பட்டினத்தில் பீச் வாலிபால் அகாடமி அமைக்க வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி.கே. மணி அவர்கள். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.பி. நாகைமாலி அவர்கள்.

திரு. வி.பி. நாகைமாலி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சமூக நீதியை தமிழகத்திலே நிலைநாட்டியதில் திராவிட இயக்கத்தினுடைய பங்கை, பங்களிப்பை இமயமலையில் ஏறி நின்று நாம் சொல்லலாம். இந்தியாவிற்கே வழிகாட்டிய திராவிட இயக்கம். நம்முடைய அரசு, திராவிட அரசு. அதில் எந்தவிதமான மாற்றுக் கருத்தும் இல்லை. அதில் நாம் பெருமைப்படுகிறோம். ஆனால், அப்படி நம்முடைய திராவிட இயக்கத்தினுடைய செயல்பாடுகளை நாம் பெருமைப்படுத்துகிறபொழுது, மற்ற மாநிலங்களை ஒப்பிட்டுப் பேசுவது மாநிலங்களுக்கிடையில் இருக்கிற அந்த அணுகுமுறையில் சில சிக்கல்களை ஏற்படுத்தும். ஆகவே, நம்முடைய மரியாதைக்குரிய நாகப்பட்டினம் சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் கேரளா, மஹாராஷ்டிரா போன்ற மாநிலங்களையெல்லாம் இணைத்துப் பேசுவது என்பது நமது மாநில உறவுகளுக்குச் சரியாக இருக்காது என்பதை இந்த நேரத்திலே நான் பதிவு செய்து, அது அவைக் குறிப்பில் இருக்கலாமா என்பதை நீங்கள் பரிசீலிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி.கே. மணி அவர்கள்.

திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே. . .

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்கள்.

2023 ஏப்ரல் 13]

மாண்புமிகு திரு. எஸ். ரகுபதி: *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. முகம்மது ஷாநவாஸ் அவர்கள் பேசுகின்றபொழுது, சிறையில் இருக்கக்கூடிய இஸ்லாமிய சிறைவாசிகளைப் பற்றி இங்கே குறிப்பிட்டார்கள். நான் ஏற்கெனவே இதற்கு பதில் சொல்லியிருக்கிறேன். இருந்தாலும், 10 ஆண்டுகள், 15 ஆண்டுகளாக சிறையிலே இருக்கின்றவர்கள் மேல்முறையீடு செய்து உச்ச நீதிமன்றத்திலே அந்த வழக்குகள் இன்னும் நிலுவையிலே இருக்கின்றன. எனவே, நாங்கள் முன்விடுதலைக்கு பரிசீலனைக்கு எடுக்க முடியாத சூழ்நிலைகள் சில வழக்குகளிலே, சில நபர்களைப் பொறுத்தவரை இருக்கின்றன என்பதை இன்றைக்கு கூடுதலான பதிலாகக் கூறிக்கொள்கிறேன். அதைப்போல அவர்களுக்கு நாம்* parole *கூட கொடுக்க முடியாது. அவர்கள் ஜாமீன்தான் வாங்க முடியும். ஏனென்றால், உச்ச நீதிமன்றத்திலே வழக்கு நிலுவையில் இருக்கின்றபோது, நாங்கள் அவர்களுக்கு* parole *கூட கொடுக்க முடியாத சூழ்நிலை இருக்கின்றது. எங்களுக்கு எல்லோரும் வேண்டியவர்கள். எல்லோரையும் விடுதலை செய்ய வேண்டும் என்பதிலே மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு வேறுபட்ட கருத்துகள் கிடையாது. அதிகமான அக்கறை எடுத்துக்கொண்டுதான் நாங்கள் இன்றைக்குப் பணியாற்றிக் கொண்டிருக்கிறோம். ஆனால், இந்தச் சட்ட சிக்கல்கள் இருக்கின்ற காரணத்தினால்தான் சிலரை நாம் முன்விடுதலை செய்வதைத் தவிர்க்க வேண்டிய சூழ்நிலை அமைந்திருக்கிறது என்பதை நான் இங்கே தெரிவித்துக்கொள்கிறேன்.*

பிற்பகல் 1–50

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி.கே. மணி.*

திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர், சிறுபான்மையினர் நலன், வனத் துறை, சுற்றுச்சூழல் ஆகிய மானியக் கோரிக்கைகளின்மீது, பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பிலே சில கருத்துகளைச் சொல்ல விரும்புகிறேன். பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இன்று சமத்துவ நாளை முன்னிட்டு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தலைமையில் உறுதிமொழி எடுத்திருக்கிறோம். இது வரவேற்கத்தக்கது. குறிப்பாக, நம்முடைய நாடு சாதியின் பெயராலும், மதத்தின் பெயராலும்*

கட்டமைக்கப்பட்டிருக்கிறது. இதை மாற்றுவது என்பது இயலாத ஒன்று. சாதிகள் களையப்பட வேண்டுமென்பதிலோ, சாதிகள் இல்லாத சமுதாயத்தை உருவாக்க வேண்டுமென்பதிலோ மாற்றுக்கருத்து இல்லை. ஆனால், இன்றைய காலகட்டத்தில் இயலுமா என்றால், இயலாத நிலையில், அடித்தட்டில் இருக்கின்ற மக்களுக்கெல்லாம், உரிய சமூக நீதி வழங்கப்பட வேண்டும் என்பதுதான் தந்தை பெரியார், அண்ணல் அம்பேத்கர், முத்தமிழறிஞர் கலைஞர் போன்ற தலைவர்களின் முக்கியமான கோரிக்கையாக இருந்திருக்கின்றது. அந்த அடிப்படையிலேதான் பாட்டாளி மக்கள் கட்சியும், எங்கள் மருத்துவர் ஐயா அவர்களும் செயல்பட்டு வருகிறார்கள். பாட்டாளி மக்கள் கட்சியின் உயிர்மூச்சு கொள்கை சமூகநீதிக் கொள்கை. அந்தக் கொள்கையை நிலைநாட்ட வேண்டுமென்பதிலே பாட்டாளி மக்கள் கட்சி உறுதியாக இருக்கிறது.

குறிப்பாக, இங்கே பேசிய நண்பர்களெல்லாம்கூட சொன்னார்கள். இஸ்லாமியர் இடஒதுக்கீடு, அருந்ததியர் இடஒதுக்கீடு என்பதைப்பற்றியெல்லாம் குறிப்பிட்டார்கள். அதை வழங்கியவர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள். மாற்றுக்கருத்தே இல்லை, வரவேற்கிறோம். முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களைப் பாராட்டுகிறோம். அதற்காகக் குரல் கொடுத்தவர் மருத்துவர் ஐயாவும், பாட்டாளி மக்கள் கட்சியும் என்பதை நான் பெருமையோடு சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். காரணம், இஸ்லாமியர் இடஒதுக்கீட்டுக்கு இந்த மாமன்றத்தில் பலமுறை வாதாடியவன் ஜி.கே. மணி. அவர்களுக்காக மாநாடு நடத்தியவர் எங்கள் மருத்துவர் ஐயா அவர்கள். ஒரு மாநாடு அல்ல, இரண்டு மாநாடு அல்ல, இது இஸ்லாமியத் தலைவர்களுக்குத் தெரியும். அதைப்போல, அருந்ததியர்களின் இடஒதுக்கீட்டுக்காக மருத்துவர் ஐயா அவர்களுடைய பெயரில், என்னுடைய பெயரில், பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பில் நீதிமன்றத்திலே வழக்குகள் தொடுக்கப்பட்டன. இதே சட்டமன்றத்தில் பலமுறை வாதாடி பேசியுள்ளேன். முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் அன்றைக்கு என்னை அழைத்துப் பேசினார். அருந்ததிய சமுதாயத் தலைவர்களையும், என்னையும் அழைத்துப் பேசி, 3 விழுக்காடு இட ஒதுக்கீட்டுக்கு வழிவகை செய்து கொடுத்தார்கள். இதையெல்லாம் குறிப்பிடுவதற்குக் காரணம், பாட்டாளி மக்கள் கட்சி எல்லா சமுதாய மக்களுக்கும் உரிய சமூக நீதி வழங்க வேண்டுமென்பதில் உறுதியாக இருக்கின்ற கட்சி என்பதை நான் தெளிவுபட கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

குறிப்பாக இன்னொன்று, பிற்படுத்தப்பட்டவர்களுக்கான இடஒதுக்கீடு. அந்த இடஒதுக்கீட்டை பிற்படுத்தப்பட்டவர், மிகப் பிற்படுத்தப்பட்டவர் என்று இரண்டாகப் பிரித்தவர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள். அதை நாங்கள் பாராட்டுகிறோம். அதேவேளையில், இந்த இடஒதுக்கீட்டுக் கொள்கையை ஒரே தொகுப்பாக, மேலும் விரிவுபடுத்த வேண்டும். உதாரணத்திற்குச் சொன்னால், இப்போது பிற்படுத்தப்பட்டவர்களுக்கு 30 விழுக்காடு இட ஒதுக்கீடு இருக்கிறது. அதிலே முதலியார், செட்டியார், நாடார், நாயுடு, ரெட்டியார், பிள்ளைமார், யாதவர், முத்தரையர், கொங்கு வேளாள கவுண்டர், முக்குலத்தோர் என இப்படி எல்லா சமுதாயங்களும் இருக்கின்றன. அந்தச் சமுதாயங்களுக்கும் உரிய வகையில் தொகுப்பு இட ஒதுக்கீட்டு முறையாகப் பிரித்துக் கொடுக்க வேண்டும் என்பதிலே பாட்டாளி மக்கள் கட்சி உறுதியாக இருக்கின்றது. மிகப் பிற்படுத்தப்பட்டவர்களுக்கான இடஒதுக்கீடு 20 விழுக்காட்டைப் பகிர்ந்து கொடுக்க வேண்டும் என்பதைத்தான் பாட்டாளி மக்கள் கட்சியினுடைய கொள்கையாக வைத்துப் போராடிக் கொண்டிருக்கிறோம். இன்னும் சொல்லப்போனால், சமூகநீதிக்கு வித்திட்ட மாநிலம் தமிழ்நாடு. தந்தை பெரியார், பெருந்தலைவர் காமராஜர், ஆகியோருக்கும் இதில் பங்குண்டு. அரசமைப்புச் சட்டத்தை முதன்முதலாகத் திருத்திய பெருமை தமிழ்நாட்டிற்கு உண்டு. அதைத் தொடர்ந்து நிறைவேற்றியவர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள். அதற்குப் பிறகு, அ.இ.அ.தி.மு.க. ஆட்சிக்காலத்திலேயும் அது நிறைவேற்றப்பட்டிருக்கின்றது. ஆகவே, தி.மு.க–வும், அ.இ.அ.தி.மு.க.–வும் சமூகநீதியிலே அக்கறையுள்ள கட்சிகள் என்பதை இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இப்படி மிகப் பிற்படுத்தப்பட்டவர்களுக்கான 20 விழுக்காடு இடஒதுக்கீடு பாட்டாளி மக்கள் கட்சியின், மருத்துவர் ஐயா அவர்களின் போராட்டம், 21 பேர் உயிர்த் தியாகம், 1.5 இலட்சம் பேர் சிறைக்குச் சென்றதால்தான் பெறப்பட்டது. அந்த இடஒதுக்கீட்டில் மீண்டும் உள்ஒதுக்கீடு வேண்டுமென்று வாதாடினோம். அதன்விளைவாக, முன்னாள் முதலமைச்சராக இருந்த மரியாதைக்குரிய, மாண்புமிகு திரு. எடப்பாடி K. பழனிசாமி அவர்கள் தலைமையிலான ஆட்சிக் காலத்தில் வன்னியர்களுக்கு 10.5 விழுக்காடு இடஒதுக்கீடு சட்டமாக்கப்பட்டது. அது இப்போது கேள்விக்குறியாகி இருக்கிறது. அதை நிறைவேற்ற வேண்டுமென்று, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடத்திலே கோரிக்கை வைத்த நேரத்தில், அதை முறையாக அணுகி அவர் நிறைவேற்றிக் கொண்டிருக்கிறார் என்பதில் எங்களுக்கு மாற்றுக்கருத்து இல்லை. ஆகவே, அதை நிறைவேற்ற

தொடர்ந்து முயற்சி எடுத்து வருகின்ற மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும், அரசிற்கும் எனது நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். இதில் இருக்கின்ற பிரச்சினை, நீதிமன்றத்தில் இருக்கின்ற பிரச்சினையைத் தீர்ப்பதற்காக. . . (மணியடிக்கப்பெற்றது) (குறுக்கீடு)

பிற்பகல் 1–55

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: 5 நிமிடங்கள்.

திரு. ஜி.கே. மணி: நீதிமன்றப் பிரச்சினையைத் தீர்ப்பதற்காக ஓர் ஆணையம் அமைக்கப்பட்டது. அந்த ஆணையத்திற்குக் கொடுக்கப்பட்ட காலக்கெடு மூன்று மாதங்கள். மூன்று மாதக் காலக்கெடு கொடுத்த பிறகு, அதை 6 மாதங்கள் நீட்டிப்பது தேவையற்றது. புள்ளிவிவரங்கள் வேண்டுமென்று சொன்னால், பத்து நாட்களுக்குள்ளேயே புள்ளிவிவரத்தை எடுத்துவிட முடியும். (குறுக்கீடு) மாண்புமிகு அமைச்சர் அவர்களே, நான் பேசி முடித்துவிடுகிறேன். பிறகு நீங்கள் சொல்லுங்கள். மாண்புமிகு துணை சபாநாயகர் மணியை அடித்துவிடுவார்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. R.S. ராஜகண்ணப்பன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அண்ணன் மணி அவர்கள், ஏதோ அரசு தாமதம் செய்வதுபோல் சொன்னார். அப்படி அல்ல. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 10.5 சதவிகிதம் என்று தெளிவாகச் சொல்லிவிட்டார். அது delay ஆனதற்குக் காரணம், மதுரை உயர் நீதிமன்றத்தில் case போட்டுவிட்டார்கள். ஆணையம் அமைத்தவுடன், அதன் தலைவராக திரு. பாரதிதாசனை நியமித்தவுடன் case போட்டு, 2023 ஆம் ஆண்டு 3–வது மாதம்தான் அந்த case disposal ஆனது. Supreme Court என்ன சொன்னது என்றால், "தரவுகள்" என்று சொல்லியிருக்கிறது. தரவுகள் means பொருளாதார நிலை, வேலைவாய்ப்பு, அவர்களின் சமூக நிலை, அவர்களுடைய படிப்பு இவையெல்லாவற்றையும் கணக்கெடுக்க வேண்டும். எப்படி விவரங்களை மூன்று மாதத்திலிருந்து நான்கு மாதத்திற்குள் எடுக்க முடியும்? அதனால்தான் 6 மாதங்கள் தள்ளி வைத்திருக்கிறோமே தவிர, திரு. பாரதிதாசன் அவர்கள் எழுதிக் கேட்டார். அதில் internal arrangement செய்யக்கூடாது என்று

Stay கொடுத்த காரணத்தினால், எங்களால் ஒன்றும் செய்ய முடியவில்லை. 2023 ஆம் ஆண்டு மூன்றாம் மாதத்தில்தான் அந்த case disposal ஆனது. அதன் பிறகு எடுப்பதற்கு time இல்லை. அதற்குத்தான் time கேட்டிருக்கிறோம். வேறு ஒன்றும் இதில் உள்நோக்கம் ஏதும் கிடையாது. Supreme Court-லிருந்து தீர்ப்பு வந்தவுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தெளிவாக case போட பெரிய பெரிய வக்கீல்களை வைத்தார்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி.கே. மணி அவர்கள்.

திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களின் விளக்கத்திற்கு நன்றி. நான் அதற்குள் ஆழமாகப் போக விரும்பவில்லை, நேரமும் இல்லை. நீதிமன்றத்தில் வழங்குவதற்கான புள்ளிவிவரங்களை ஆணையம் ஒரு வாரக் காலத்திற்குள் பெற்றுவிடலாம். இப்போது அவைக்கு நான் தெரிவித்துக்கொள்ள விரும்புவது, தமிழ்நாட்டில் மக்கள் தொகையில் பெரும்பான்மை சமுதாயம் வன்னியர்கள்; அவர்கள் கல்வியிலேயே, வேலைவாய்ப்பிலேயே மிகமிக பின் தங்கியிருக்கிறார்கள். சமூகப் பொருளாதார நிலையை சொன்னார்கள். தமிழ்நாட்டில் இருக்கிற குடிசை வீடுகளில், குடிசை வீடுகள் அதிகம் உள்ள சமுதாயம் வன்னியர் சமுதாயம். இன்றைக்கு 18 மாவட்டங்களில் வன்னியர்களது குடிசை வீடுகள் இருக்கின்றன. நான் இன்னொன்றையும் சொல்ல விரும்புகிறேன். தமிழ்நாட்டை குடிசைகள் இல்லாத மாநிலமாக மாற்ற வேண்டுமென்று சட்டமன்றத்தில் அன்று பேசி, முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் வீட்டு வசதி வாரியத்தைக் கொண்டு வந்தார்கள். அண்ணன் மாண்புமிகு அமைச்சர் நேரு அவர்களுக்குத் தெரியும். அவருடைய மாவட்டத்தில்தான் கலைஞர் அவர்கள் குடிசை மாற்று வாரியத்தைத் தொடங்கி வைத்தார்கள். அது நான் கோரிய கோரிக்கை. அப்படி கணக்கெடுப்பு எடுத்த நேரத்தில், குடிசைகளில் அதிகமாக வாழக்கூடியவர்கள் வன்னியர்கள் என்றிருந்தது. இது சமூக நிலை, பொருளாதார நிலை. கல்வியை எடுத்துக்கொண்டால், ஆண்டுதோறும் 10 ஆம் வகுப்பு, 12 ஆம் வகுப்பு தேர்ச்சி வருகிறது. தேர்ச்சி விகிதத்தைப் பார்த்தால், கடைசியில் இருக்கிற மாவட்டங்கள், பின்தங்கிய மாவட்டங்கள், வன்னியர்கள் வாழக்கூடிய 18 மாவட்டங்கள். நீங்கள் எண்ணிப் பார்க்க வேண்டும். இது கல்வி நிலை. இன்னும் சொல்லப்

போனால், வேலைவாய்ப்பைப் பற்றிப் பார்த்தால் இன்றும் ஒட்டுமொத்தமாக பணி நிலை 1, அதாவது, Group–I, இதில் ஒட்டுமொத்தமாக மிகப் பிற்படுத்தப்பட்டவர்களில் வன்னியர்கள் இரண்டே விழுக்காடுதான் உள்ளனர். புள்ளிவிவரங்கள் எங்களிடம் இருக்கின்றன. அரசு அதனை எடுத்துப் பார்க்க வேண்டும். Group–II–ல் மூன்றே விழுக்காடுதான். எப்படி சமுதாயம் முன்னேறும்? இங்கே I.A.S., I.P.S. தேர்வுகளை மத்திய அரசு நடத்துகிறது என்று சொல்கிறீர்கள். இங்கே Group–I–ல் தேர்வு அடைந்தால்தான் அவர் Conferred I.A.S., I.P.S. ஆக போக முடியும். வருவதில்லையே! கல்வி நிலையில் எவ்வளவு பின்தங்கியிருக்கிறார்கள்? இது மிக, மிக பின்தங்கிய நிலை.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் இன்னும் இரண்டு உறுப்பினர்கள் பேசிய பிறகு, நான்கு அமைச்சர்கள் பதிலுரையாற்ற வேண்டும். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர், நீங்கள் 8 நிமிடங்கள் கேட்டீர்கள். 8 நிமிடங்கள் ஆகிவிட்டன.

திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு முதல் மாநிலமாக வரவேண்டுமென்று சொல்வதில் மாற்றுக் கருத்தில்லை, வரவேற்கிறோம். ஒரு பெரிய சமுதாயம், இப்படி ஏழ்மை நிலையில், அடித்தட்டில் இருந்தால், தமிழ்நாடு எப்படி முன்னேறிய மாநிலமாக வரமுடியும்? ஆகவேதான், இந்த 10.5 விழுக்காடு என்பதைக் காலம் தாழ்த்தாமல் வழங்க வேண்டும். 6 மாத காலம் தேவையில்லை. உதாரணத்திற்கு, தேர்வு ஆணையத்திற்கு நீங்கள் கடிதம் எழுதினீர்கள் என்றால், அவர்கள் பத்து நாட்களுக்குள் பதிலைக் கொடுத்துவிடுவார்கள். மருத்துவ தேர்வு ஆணையத்திற்குக் கடிதம் எழுதினால், அவர்கள் பத்து நாட்களுக்குள் பதிலைக் கொடுத்துவிடுவார்கள். ஆசிரியர் தேர்வு ஆணையத்திற்குக் கடிதம் எழுதினால், அவர்கள் பத்து நாட்களுக்குள் பதிலைக் கொடுத்துவிடுவார்கள். இதனை வற்புறுத்துவதற்குக் காரணம், மே மாதம் 5 ஆம் தேதி, 12 ஆம் வகுப்பு தேர்வு முடிவுகள் வெளியிடப் போகிறார்கள். 6 ஆம் தேதி மாணவர் சேர்க்கை தொடங்கும். ஆக, இந்த ஆண்டில் நடக்கவில்லை என்றால், தள்ளிப் போய்விடும். ஆகவேதான், நான் முதலைமைச்சர் அவர்களை, தமிழக அரசை வற்புறுத்திக் கேட்பது, வலியுறுத்திக் கேட்பது காலம் தாழ்த்தாமல் உடனடியாக கணக்கெடுத்து, இந்த ஆண்டே நடைமுறைப்படுத்துங்கள்

என்பதுதான். (குறுக்கீடு) மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே. . .

பிற்பகல் 2-00

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவையின் முன்னனுமதியுடன் அவையின் அலுவல் நேரம் நீட்டிக்கப்படுகிறது. மாண்புமிகு உறுப்பினர் திரு. மொ. பழனியாண்டி அவர்கள். (குறுக்கீடு) time இல்லை. (குறுக்கீடு) 5 நிமிடங்கள் பேச வாய்ப்புக் கொடுத்தேன். (குறுக்கீடு) சரி, ஒன்றை மட்டும் சொல்லுங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. கே.என். நேரு:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர், பாட்டாளி மக்கள் கட்சியின் தலைவர் அவர்கள் இன்று காலை அவையில் தன்னுடைய கருத்தைப் பதிவு செய்ய வேண்டுமென்று சொன்னார்கள். மற்ற உறுப்பினர்கள் பேசும்போது அவர்களுக்கு வாய்ப்பு இல்லாமல் இருந்தது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தெளிவாக உங்களுக்குப் பதில் சொல்லியிருக்கிறார்கள். உங்களுடைய முன்னெடுப்புகள் அனைத்திற்கும் இந்த அரசு உங்களோடு இருப்பதாகச் சொல்லியிருக்கிறார்கள். அதை ஏற்றுக்கொண்டு உங்களுடைய கருத்தையும் பதிவு செய்துவிட்டீர்கள். இதனை சீக்கிரம் பேசி முடித்துவிட்டால், இந்த அவைக்கு நன்மையாக இருக்கும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், ஒரு நிமிடத்தில் உரையை முடியுங்கள்.

திரு. ஜி.கே. மணி: வனத் துறையைப் பொறுத்தவரையில், எங்கள் தொகுதியில் 3 யானைகள் மின்சாரம் தாக்கி இறந்துவிட்டன. தொடர்ந்து இப்படி நிகழ்வது எங்களுக்கு மிகவும் அதிர்ச்சியாக இருக்கிறது. காடுகளிலுள்ள யானைகள் காடுகளைத் தாண்டி, வீடுகளுக்கு வந்துவிடுகின்றன. கிராமங்களில் யானைகளின் நடமாட்டம் அதிகரித்துக்கொண்டே இருக்கிறது. அங்குள்ள மக்களைத் தாக்குகின்றன. ஆகவே, நான் தமிழக அரசையும், மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்களையும் கேட்டுக்கொள்வதெல்லாம், காடுகளை ஒட்டியுள்ள பகுதிகளில் சூரியஒளி மின் வேலிகளை இந்த அரசு அமைக்க வேண்டும்.

அப்போதுதான் யானைகளுக்கும் பாதுகாப்பு; மக்களுக்கும் பாதுகாப்பு. ஏனென்றால், அவை மக்களைத் தாக்கிக் கொண்டிருக்கின்றன. இதை உடனடியாகச் செய்ய வேண்டும்.

அடுத்து, வனப் பகுதிகளில் 100 வருடங்களாக மக்கள் விவசாயம் செய்துகொண்டிருக்கிறார்கள். அந்த மக்களையெல்லாம் இப்போது அப்புறப்படுத்தி வருகிறார்கள். மேட்டூர் அணை கட்டும்போது அங்கிருந்த மக்கள் புலம்பெயர்ந்து சென்றார்கள். அங்கு மக்கள் வாழ்ந்து வந்த பகுதி வனத் துறைக்குச் சொந்தமானது. ஆனால், பட்டா இல்லை. இது வனத் துறைக்குச் சொந்தம் என்று நீதிமன்றத்தில் குறிப்பிடுகிறார்கள். அப்படியானால், ஆட்சியை நீதிமன்றம் நடத்துகிறதா அல்லது நம்முடைய மக்களாட்சியில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நடத்துகிறார்களா? ஆகவே, இது மக்களாட்சி என்பதாலே மக்களுக்குப் பாதுகாப்பு வேண்டுமென்று இங்கே வலியுறுத்திக் கேட்டுக்கொண்டு அமர்கிறேன். இதுபோன்று இன்னும் நிறைய பிரச்சினைகள் இருக்கின்றன. தாங்கள் நேரமில்லை என்று சொல்லி மணியடித்துக்கொண்டே இருக்கிறீர்கள்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சுற்றுச்சூழல் என்பது மிகப் பெரிய பிரச்சினையாக இருக்கிறது. காலநிலை மாற்றத்தால் வெயில் கடுமையாக இருக்கும், மழையும் பொழியும். ஆகவே, இதுகுறித்து மக்களிடத்தில் விழிப்புணர்வு ஏற்படுத்தி சுற்றுச்சூழலைப் பாதுகாப்பதற்கு அரசு விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று வலியுறுத்தி, அமர்கின்றேன். வாய்ப்புக்கு நன்றி.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. மொ. பழனியாண்டி அவர்கள்.*

திரு. மொ. பழனியாண்டி: *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வணக்கம். தமிழ்கூறும் நல்லுலகில் தன்னிகரில்லா தலைவர், எங்கள் கழகத் தலைவர், இந்தியாவின் தலைசிறந்த முதலமைச்சர், ஆருயிர் அண்ணன் மாண்புமிகு முதலமைச்சர் தளபதியார் அவர்களே, தமிழ்நாட்டில் 100 ஆண்டு காலம் திராவிட மாடல் ஆட்சியை நடத்தத் தயாராக இருக்கும் எங்கள் இளைஞரணிச் செயலாளர், இளைஞரணியின் எழுச்சி நாயகன், வருங்கால முதல்வர், மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர், ஆருயிர் சகோதரர் திரு. உதயநிதி ஸ்டாலின் அவர்களே, (மேசையைத்*

தட்டும் ஒலி) முறுக்கு மீசையும், செருக்கு நடையும், நேர்கொண்ட பார்வையும், திருச்சியின் திமிர், சோழ மண்டலத்தின் தளகர்த்தர், ஆருயிர் அண்ணன் மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்களே, மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்களே, என்னை ஈன்ற தந்தையார் தெய்வத்திரு சோமரசம்பேட்டை பெரும் நிலக்கிழார் திரு. மொட்டையாண்டி முத்துராஜா அவர்களுக்கும், என்னுடைய முதல் தாயார் தெய்வத்திரு அகிலாண்டத்தம்மாள் அவர்களுக்கும், என்னை ஈன்ற தாயார் திருமதி காமாட்சியம்மாள் அவர்களுக்கும், எனது மனைவி மறைந்த திருமதி உமாமகேஸ்வரி அவர்களுக்கும், என்னுடைய அரசியல் ஆசான் திரு. அ.த. தங்கமுத்து அவர்களுக்கும், என்னை ஸ்ரீரங்கம் தொகுதியில் தேர்ந்தெடுத்த வாக்காளப் பெருமக்களுக்கும் நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை மானியக் கோரிக்கையில் எனக்குப் பேச வாய்ப்பளித்த மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் அவர்களுக்கும், அரசுக் கொறடா அண்ணன் அவர்களுக்கும் நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பிற்படுத்தப்பட்டோர் நலத் துறையில் சட்டநாதன் கமிஷனின் அறிக்கையின்படி, 1971-ல் 20 சதவீத இட ஒதுக்கீடு வழங்கி தலைவர் கலைஞர் அவர்கள் ஆணையிட்டார்கள். அன்றைய சாதிக் கணக்கெடுப்பின்படிதான் அந்த 20 சதவீத இட ஒதுக்கீட்டை வழங்கினார்கள். ஆனால், இன்றைய மக்கள்தொகைக் கணக்கெடுப்பின்படி பார்த்தால் எண்ணிக்கை அதிகரித்துக்கொண்டே இருக்கிறது. அந்த 20 சதவீத இட ஒதுக்கீட்டில் 10.5 சதவீதம் வன்னியர்களுக்கு ஒதுக்கீடு செய்து கொடுத்தீர்களென்றால், 1 கோடிக்கு மேல் முத்தரையர்கள் இருக்கிறார்கள். 1½ கோடிக்குமேல் தேவர். . . (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் வேறு சப்ஜெக்ட்டில் பேசுங்கள். (குறுக்கீடு) வேறு சப்ஜெக்ட்டில் பேசுங்கள். (குறுக்கீடுகள்)*

திரு. மொ. பழனியாண்டி: *கொடுங்கள். அவர்களுக்குக் கொடுக்க வேண்டாமென்று சொல்லவில்லை. (குறுக்கீடுகள்)*

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர், உட்காருங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர், மானியக் கோரிக்கையின்மீது பேசுங்கள். (குறுக்கீடு) வேறு சப்ஜெக்ட்டில் பேசுங்கள். (குறுக்கீடுகள்)*

திரு. மொ. பழனியாண்டி: *முத்தரையர் 1 கோடி பேருக்குமேல் இருக்கிறார்கள். முக்குலத்தோர் 1½ கோடி பேருக்குமேல் இருக்கிறார்கள். (குறுக்கீடுகள்)*

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் வேறு சப்ஜெக்ட்டில் பேசுங்கள். அந்த சப்ஜெக்ட் தேவையில்லை. அது வேண்டாம். (குறுக்கீடுகள்)*

திரு. மொ. பழனியாண்டி: *இல்லை. (குறுக்கீடு) சாதி வாரி கணக்கெடுப்பு வேண்டும். பொறுமையாக சாதி வாரி கணக்கெடுத்து—ஏனென்றால் கலைஞர் அவர்களுடைய மகன், மாண்புமிகு இன்றைய முதலமைச்சர் அவர்கள் கலைஞர் அவர்களுடைய மகன். . .*

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *அது* policy matter. *வேறு சப்ஜெக்ட்டில் பேசுங்கள்.*

திரு. மொ. பழனியாண்டி: *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சாதி வாரி கணக்கெடுப்பு எடுத்து,* ratio*-ன்படி வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஏனெனில்,*

> *"சாதி இரண்டொழிய வேறில்லை; சாற்றுங்கால்*
> *நீதி வழுவா நெறிமுறையின்-மேதினியில்*
> *இட்டார் பெரியோர்; இடாதார் இழிகுலத்தோர்*
> *பட்டாங்கில் உள்ள படி",*

என்பதற்கேற்ப சாதியே இல்லை என்று சொல்லுங்கள். (மேசையைத் தட்டும் ஒலி) சாதியே இல்லை என்று சொல்லிவிட்டு பிறகு பேசுங்கள். (குறுக்கீடுகள்)

பிற்பகல் 2–05

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: Subject*-ஐ மாற்றிப் பேசுங்கள். (குறுக்கீடு)*

2023 ஏப்ரல் 13]

திரு. மொ. பழனியாண்டி: *சாதிவாரி கணக்கெடுப்பு அவசியம் எடுத்தாக வேண்டும். சாதிவாரி கணக்கெடுப்பு எடுத்து,. . . (குறுக்கீடு) ஓராண்டு காலமானாலும் சரி, 6 மாதங்களானாலும் சரி, சாதிவாரி கணக்கெடுப்பு அவசியம் எடுக்கப்பட வேண்டும். ஏனென்றால், நீங்கள் இங்கே சொல்கிறீர்கள். தேவர், கள்ளர், மறவர், அகமுடையர் என்று அவர்கள் ஒரு பிரிவில், பெரிய* level*-ல் இருக்கிறார்கள், நாடாரில் இருக்கிறார்கள் சாணார் இருக்கிறார்கள். (குறுக்கீடு)*

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: Subject*-ஐ மாற்றிப் பேசுங்கள்.*

திரு. மொ. பழனியாண்டி: *உடையார் இருக்கிறார்கள். ஆகையால், சாதிவாரி கணக்கெடுப்பு எடுக்கும்படி கேட்டுக்கொள்கின்றேன். (குறுக்கீடுகள்)*

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஒரு கோடி பேருக்குமேல் இருக்கும் முத்தரையர் இனத்தில், கல்வி அறிவோ. . . (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *பேசுங்கள்.*

திரு. மொ. பழனியாண்டி: *பொருளாதார வளர்ச்சியில் பின்தங்கியிருக்கிறார்கள். ஆகவே, இந்த சாதிவாரி கணக்கெடுப்பை அவசியம் எடுக்க வேண்டும். நீங்கள் சாதிவாரி கணக்கெடுப்புப்படி* ratio *கொடுங்கள். (குறுக்கீடுகள்)*

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *அடுத்த* subject*-ல் பேசுங்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு உறுப்பினர், அடுத்த* subject*-க்குப் போங்கள்.*

திரு. மொ. பழனியாண்டி: *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, என்னுடைய ஸ்ரீரங்கம் தொகுதியின் நீண்டநாள் பிரச்சினையான அடிமனை பிரச்சினை பூதாகரமாக வெடித்துக்கொண்டிருக்கின்றது. ஆங்காங்கே போராட்டங்கள் வெடித்துக்கொண்டிருக்கின்றன. ஆகையால், நல்ல சட்ட வல்லுநர்களைக் கலந்தாலோசித்து அடிமனைப் பிரச்சினைகள் தீர்க்கப்பட வேண்டும்.*

ஸ்ரீரங்கத்தில் 320 ஏக்கர் நிலம் இருக்கின்றது. இந்த 320 ஏக்கரில் வெள்ளிமுற்றம் என்ற இடத்தில் 18½ ஏக்கர் மட்டும்தான்

கோயிலின் இடம். மீதியுள்ள 300 ஏக்கர் நிலம் தனியாரின் இடம். அவர்களிடம் 100 ஆண்டுகாலங்களுக்கும்மேல் உள்ள பத்திரம், செப்புப் பட்டயம் இருக்கின்றது. அவர்களால் வீடு அடமானம் வைக்க முடியவில்லை, வீட்டை விற்க முடியவில்லை. பிள்ளைகளைப் படிக்க வைக்க முடியவில்லை. பிள்ளைகளுக்குத் திருமணம் செய்து வைக்க முடியவில்லை. இதுபோல் ஸ்ரீரங்கத்தில் கிட்டத்தட்ட 300 ஏக்கர் பரப்பில் அமைந்துள்ள வீட்டுமனைகளில் உள்ளவர்கள் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். சட்ட வல்லுநர்களைக் கலந்தாலோசித்து இதிலுள்ள அடிமனைப் பிரச்சினையைத் தீர்த்துத் தரும்படி தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ரங்கம் தொகுதியில் உள்ள அதவத்தூர் கிராமத்தில் கால்நடை மருத்துவமனை உள்ளது. 50 ஆண்டுகாலமாக உள்ள அந்த மருத்துவமனை சீரழியும் நிலையில் இருக்கின்றது. நல்ல மருத்துவர் இல்லை; உதவியாளர் யாரும் இல்லை. ஆகையால், நல்ல மருத்துவர்களை நியமித்து, அதவத்தூர் கால்நடை மருத்துவமனையை மாவட்ட மருத்துவமனையாகத் தரமுயர்த்தித் தரும்படி கேட்டுக்கொள்கிறேன்.

ஸ்ரீரங்கம் தொகுதி, மணப்பாறை ஒன்றியத்தில் கண்ணுடையான்பட்டி, பெரியபட்டி, சமுத்திரம் ஆகிய கிராமங்களில் உள்ள 3 பாலங்களையும், அம்மையார் அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது விதி 110-ன்கீழ் அறிவித்தார்கள். இன்னும் அந்தத் தரைப் பாலம், தரைப் பாலமாகவே இருக்கிறது. தரைப் பாலம், மேம்பாலமாக தரமுயர்த்தப்படவில்லை. தரைப் பாலத்தை மேம்பாலமாகத் தரமுயர்த்தித் தரும்படி கேட்டுக்கொள்கிறேன்.

ஸ்ரீரங்கம் தொகுதி, சோமரசம்பேட்டையில் ஒரு ஏக்கரில் 50 ஆண்டு காலமாக அமைந்துள்ள சித்த மருத்துவமனை இடிந்த நிலையில் உள்ளது. சித்த மருத்துவமனைக்கு புதிய கட்டடம் கட்டி, 25 படுக்கைகள் கொண்டதாக அமைத்துத் தரும்படி தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன்.

ஸ்ரீரங்கம் தொகுதியிலுள்ள இனாம்குளத்தூர், சோமரசம்பேட்டை, பெட்டவாய்த்தலை, குழுமணி, மரவனூர் ஆகிய அரசு ஆரம்ப சுகாதார நிலையங்களைத் தரமுயர்த்தித் தரும்படி கேட்டுக்கொள்கிறேன்.

2023 ஏப்ரல் 13] [திரு. மொ. பழனியாண்டி]

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

திருச்சி மாவட்டத்தில் 13 ஆண்டுகாலமாக நிலுவையில் உள்ள அரைவட்டச் சாலை, திருச்சி–மதுரை, பஞ்சப்பூர், திருச்சி–கரூர், ஜீயர்புரம் இடையேயுள்ள by–pass வட்டச் சாலையை சீரமைத்துத் தரும்படி கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நவலூர் குட்டப்பட்டில் ஸ்ரீரங்கம் அரசு கலைக் கல்லூரி உள்ளது. அதில் கல்லூரி மாணவர்கள் மரத்தடியிலிருந்து படிக்கின்ற சூழ்நிலை இருக்கின்றது. 50 வகுப்பறைகள் கொண்ட கட்டடம் மற்றும் உள் கலையரங்கம் கட்டித் தரும்படி கேட்டுக்கொள்கிறேன்.

நீண்ட நாட்களாக அந்தக் கல்லூரியில் பேராசிரியர்களாக இருக்கிறவர்களை, 40, 45 வயதாகியும் அவர்களை இன்னும் பணி நிரந்தரம் செய்யவில்லை. அவர்களை பணி நிரந்தரம் செய்து தரும்படி கேட்டுக்கொள்கிறேன்.

ஸ்ரீரங்கம் நகர்ப் பகுதியில் அரசுப் பள்ளிக்கூடமே இல்லாத நிலை இருக்கிறது. எனவே, அரசு மேல்நிலைப் பள்ளியை உருவாக்கித் தரும்படி கேட்டுக்கொள்கிறேன்.

ஸ்ரீரங்கம் தொகுதியில் உள்ள அரசு ஆரம்ப சுகாதார நிலையம் மற்றும் அரசு மருத்துவமனையை திருச்சி கி.ஆ.பெ. விசுவநாதன் மருத்துவமனைக்குச் சமமாக தரமுயர்த்தித் தரும்படி கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 2–10

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஸ்ரீரங்கம் தொகுதி, வடக்குசேர்பட்டி, தொப்பம்பட்டி, கரும்புலிப்பட்டி, கீழ ஆரியம்பட்டி, மேலூர் ஆகிய பகுதிகளிலுள்ள உயர்நிலைப் பள்ளிகளை மேல்நிலைப் பள்ளிகளாகத் தரமுயர்த்தித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மறவனூர், முத்தப்புடையான்பட்டி, பெரியப்பட்டி, நவலூர் குட்டப்பட்டு ஆகிய பகுதிகளிலுள்ள நடுநிலைப் பள்ளிகளை உயர்நிலைப் பள்ளிகளாகத் தரமுயர்த்தித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

[திரு. மொ. பழனியாண்டி] [2023 ஏப்ரல் 13

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதவத்தூர், கொய்யாத்தோப்பு, தொடக்கப் பள்ளிகளை நடுநிலைப் பள்ளிகளாகத் தரமுயர்த்தித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பூங்குடி, சோமரசம்பேட்டை, இனாம்குளத்தூர், மாத்தூர், திருச்செந்துறை, எட்டரை, அயிலாப்பேட்டை, பெட்டவாய்த்தலை, திருவளர்சோலை ஆகிய இடங்களிலுள்ள மேல்நிலைப் பள்ளிகளுக்குக் கூடுதல் வகுப்பறைகளைக் கட்டி, கழிவறை, குடிநீர் போன்ற வசதிகளைச் செய்து தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஸ்ரீரங்கம் தொகுதியில் மழைக் காலங்களில் அரியாற்றில், வெள்ளப் பெருக்கெடுத்து புங்கனூர், இனியானூர், நாச்சிக்குறிச்சி, தீரன் நகர், அல்லித்துறை, அதவத்தூர் ஆகிய பகுதிகளில் நெற்பயிர்கள் சேதமடைகின்றன. ஆகவே, அரியாற்றின் இரு கரைகளையும் பலப்படுத்தி, தடுப்புச் சுவர்களை அமைத்துத் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தநல்லூர் ஒன்றியம், முக்கொம்பு அருகில் உள்ள 4,000 ஏக்கருக்கான புதுவாத்தலை பாசன வாய்க்கால் இரண்டாண்டுகளாக பாசனமின்றி உள்ளது. எனவே, தலைமடை தடுப்புச் சுவர்களை சீரமைத்துத் தர வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஸ்ரீரங்கம் தொகுதி, பெருகமணியில் உள்ள மிகப் பழமையான பாலங்களான பள்ளவாய்க்கால் பாலம் மற்றும் உய்யகொண்டான் ஆற்றுப்பாலம் ஆகியவற்றை புதிய பாலங்களாக கட்டித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஸ்ரீரங்கம் தொகுதியில் உள்ள TNPL காகித ஆலையின் தலைமையிடத்தை திருச்சிக்கு மாற்றித் தர வேண்டும். ஏனெனில், அந்தக் காகித ஆலை, கரூர் No. 2 என்றுதான் குறிப்பிடப்படுகிறது. திருச்சி மாவட்டம், ஸ்ரீரங்கம் தொகுதி, மொண்டிப்பட்டியில் அந்தக் காகித ஆலை உள்ளது. எனவே, தலைமையிடம் திருச்சி என மாற்றித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மொண்டிப்பட்டி காகித ஆலைக்கு இடம் கொடுத்தவர்களுக்கு வேலை வழங்கிட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

2023 ஏப்ரல் 13]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர், தொகுதிக் கோரிக்கைகளைக் கொடுத்துவிடுங்கள். நீங்கள் பேசியதாகப் பதிவு செய்துகொள்ளலாம்.*

திரு. மொ. பழனியாண்டி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஸ்ரீரங்கம் தொகுதி, அந்தநல்லூர் ஒன்றியம், பூக்கள் அதிகம் விளைகின்ற பகுதி.* Scent factory *அமைப்பது குறித்து விதி 110-ன்கீழ் அறிவிக்கப்பட்டு, பத்தாண்டுக்காலமாக கிடப்பிலேயே கிடக்கிறது. எட்டரை, கோப்பு, சூரியனூர், சுப்பராயன்பட்டி, சேப்பலாப்பட்டி போன்ற பகுதிகளில் பூக்கள் அதிகம் விளைகின்றன. அப்பகுதியில்* Scent factory *ஒன்றினை அமைத்துத் தரும்படி கேட்டுக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது ஸ்ரீரங்கம் தொகுதி, பெரிய தொகுதி. 150 கி.மீ. அளவிற்கு சுற்றளவு கொண்டது. கிளிக்கூடு, உத்தமர்சீலி, பனையபுரம், திருவளர்சோலை, ஸ்ரீரங்கம், மேலூர் ஆகிய பகுதிகளிலுள்ள நாட்டு வாய்க்கால்கள் தூர்வாரப்பட வேண்டும். பல ஆண்டுகளாக அவை தூர்வாரப்படாமல் இருக்கின்றன. மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்களுடன் முக்கொம்பு சென்றபோது, எல்லோரும் TV, WhatsApp-*ல் பார்த்தார்கள். (மணியடிக்கப்பெற்றது) அங்கெல்லாம் தண்ணீர் பாய்ந்து, மணல் எக்கல் அடித்து மண் சேர்ந்து விவசாயம் செய்ய முடியாத நிலையில் உள்ளது. எனவே, நாட்டு வாய்க்காலைத் தூர்வாரும்படி கேட்டுக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது தாழ்மையான கருத்து, ஸ்ரீரங்கம் தொகுதியிலிருந்து சட்டமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளேன். 2011-ல், அம்மையார் அவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு சட்டமன்றத்திற்கு வந்தார்கள். . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர், உங்கள் தொகுதிக் கோரிக்கைகள் அனைத்தையும் கொடுத்துவிடுங்கள். உரையை முடித்துவிடலாம். (குறுக்கீடு)*

திரு. மொ. பழனியாண்டி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது முக்கியமான கோரிக்கை.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *முக்கியமான கோரிக்கைதான், கொடுத்துவிடுங்கள். (குறுக்கீடு) போதும், நன்றி. மாண்புமிகு உறுப்பினர் திரு.* K.C. *கருப்பணன் அவர்கள். (குறுக்கீடு) போதும்.*

நன்றி சொல்லி முடியுங்கள். நன்றியைச் சொல்லுங்கள். (குறுக்கீடு) சரி, நன்றி.

திரு. K.C. கருப்பணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

'உழைத்து வாழ வேண்டும்
பிறர் உழைப்பில் வாழ்ந்திடாதே
சிரித்து வாழ வேண்டும்
பிறர் சிரிக்க வாழ்ந்திடாதே' (மேசையைத் தட்டும் ஒலி)

உழைப்புதான் உயர்வு தரும் எனும் சிந்தனையை மக்கள் மனங்களில் விதைத்தவர். தமிழ்நாட்டை முதல் நிலைக்கு உருவாக்கிய தலைவர், எங்கள் கழக நிறுவனத் தலைவர், புரட்சித் தலைவர் அவர்களை வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

தமிழகத்தில் எல்லோரும் எல்லாமும் பெற வேண்டும், இங்கு இல்லாமை, கல்லாமை இல்லை என்ற நிலை வேண்டும் என்று ஆட்சி நடத்தி, மக்கள் மனதிலும், தொண்டர்கள் மனதிலும் நிறைந்து வாழ்ந்து 18 இலட்சமாக இருந்த கழக உறுப்பினர்களை ஒன்றரை கோடி உறுப்பினர்களாக உயர்த்தி, ஆயிரமாயிரம் சட்டமன்ற உறுப்பினர்களையும், நாடாளுமன்ற உறுப்பினர்களையும், உள்ளாட்சிப் பிரதிநிதிகளையும் உருவாக்கி, (மேசையைத் தட்டும் ஒலி) என்னைப் போன்ற எளியவர்களையும் அமைச்சர்களாக்கி, 'மக்களால் நான் மக்களுக்காகவே நான்' என சிறந்த முறையில் ஆட்சி நடத்தி, தமிழக மக்களின் மனங்களில் நிறைந்து வாழ்ந்த மாண்புமிகு அம்மா அவர்களை வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 2–15

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பார் புகழும் பாரதத்தில் பண்புமிக்க தமிழகத்தை சீரோடும், சிறப்போடும் செறிவுமிகுந்த வளத்தோடும், ஊராரும், உலகத்தாரும் உளமாற பாராட்டும் வண்ணம், நல்லாட்சி தந்திட்ட ஏற்றமிகு எங்கள் தலைவர்; மாபெரும் இயக்கத்தின் போற்றுதலுக்குரிய எங்கள் கழகத்தின் பொதுச்செயலாளர்; ஆற்றல்மிகு மாமனிதர்; அத்திக்கடவு–அவினாசித் திட்டம் தந்த மாமனிதர்; எங்கள் தொகுதியிலே 1,200 அடி வரை தண்ணீர் இல்லாத பகுதிகளுக்கெல்லாம் scheme water கொடுத்து இன்றைக்கு 5 அடியிலே தண்ணீர் கிடைக்கச்

2023 ஏப்ரல் 13] [திரு. K.C. கருப்பணன்]

செய்து, எங்கள் தொகுதி மக்களின் மனதிலே நிறைந்து வாழ்ந்து கொண்டிருக்கின்ற எங்கள் தலைவர், எதிர்க்கட்சித் தலைவர், வருங்கால முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்களை வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

கோவை மாவட்டத்தை கோட்டையாக்கிய இன்றைய தலைமை நிலையச் செயலாளரும், எதிர்க்கட்சிக் கொறடாவுமான எங்கள் அண்ணன் திரு. எஸ்.பி. வேலுமணி அவர்களை வணங்குகிறேன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கும் வணக்கம். சக சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் வணக்கம். 4 முறை எனக்கு வாக்களித்து, என்னை அமைச்சராக்கி அழகு பார்த்த என் அன்பிற்கும், வணக்கத்திற்கும் உரிய என் தொகுதி வாக்காளப் பெருமக்களுக்கும் என்னுடைய பணிவான வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புரட்சித் தலைவர் ஆண்ட காலம் ஒரு பொற்காலம். அவர் ஆண்ட காலத்தில்தான் 27–2–1982 அன்று இந்த மாசு கட்டுப்பாடு வாரியத்தை உருவாக்கிக் கொடுத்தார்கள். அதேபோல, புரட்சித் தலைவி அம்மா அவர்கள் வாழ்ந்த காலம் தாழ்த்தப்பட்ட, நடுத்தரப்பட்ட மக்களுக்கு உயர்வு கிடைத்த காலம். அவர் ஆண்ட காலத்தில்தான் 1995–லே சுற்றுச்சூழல் துறையை உருவாக்கிக் கொடுத்தார்கள். இந்த இரண்டு பெரும் தலைவர்களும் கடந்த 30, 40 ஆண்டுகளுக்கு முன்னால் வருங்காலம் எப்படி இருக்க வேண்டும் என்பதற்காக சுற்றுச்சூழல் மற்றும் மாசு கட்டுப்பாடு வாரியங்களை உருவாக்கி, நாட்டுக்கு நன்மை சேர்த்தவர்கள்; நீர், நிலம், காற்றைக் காப்பாற்றியவர்கள். எங்கள் மனதில் நின்றவர்கள் இரு பெரும் மாண்புமிகு தலைவர்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

அதேபோல, இன்றைக்கு மரம் வளர்ப்பை எடுத்துக் கொண்டால் எத்தனையோ தலைவர்கள் தங்களுடைய பிறந்த நாளை ஆடம்பரமாகக் கொண்டாடுகிறார்கள். மிகவும் அழகாகவும் கொண்டாடுகிறார்கள். மாண்புமிகு அம்மா அவர்களோ, அவருடைய ஒவ்வொரு பிறந்த நாளுக்கும் 65 இலட்சம் மரக் கன்றுகள் நட வேண்டும், 66 இலட்சம் மரக் கன்றுகள் நட வேண்டும்; 70 இலட்சம் மரக் கன்றுகள் நட வேண்டுமென்று உத்தரவு போட்டது மட்டுமல்லாமல், 'நீங்கள் யாரும் என்னை பார்க்க வரக்கூடாது. ஒரு வாழ்த்துக் கடிதம் மட்டும் அனுப்புங்கள். ஏழை மக்களுக்கு உதவுங்கள்; அதேபோல, கல்வி உபகரணங்கள்

வாங்கிக் கொடுங்கள்' என்று சொல்லி, மரக் கன்றுகளை நட வைத்தார்கள். கடந்த 10 ஆண்டு காலத்திலே அம்மா அவர்களின் ஆட்சியில், அண்ணன் எடப்பாடியாருடைய ஆட்சிக் காலத்தில் குறைந்தபட்சம் 4½ கோடி மரக் கன்றுகளை வனத் துறைமூலம் அரசு உற்பத்தி செய்து, அதை மாநகராட்சி, நகராட்சி, பேரூராட்சி, ஊராட்சிப் பகுதிகளிலெல்லாம் நட வைத்தார். அதேபோல, சென்னை, திருவள்ளூர், காஞ்சிபுரம் மற்றும் தமிழகமெங்கும் உள்ள தனியார் தொழிற்கூடங்கள், corporate கம்பெனிகள் என அனைத்து இடங்களிலும் மரக் கன்றுகள் நடப்பட்டு இன்றைக்கு அந்த மரங்கள் செழிப்பாக வளர்ந்து கொண்டிருக்கின்றன. அதேபோல, இந்த அரசும் அதைக் கடைப்பிடிக்க வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கின்றேன்.

கடந்த இரண்டு ஆண்டுகளாக எங்கும் மரக் கன்றுகள் நடப்பட்டதாகத் தெரியவில்லை. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அப்படி ஏதாவது மரக் கன்றுகளை நட்டிருந்தால் அதைக் கூற வேண்டுமென்று உங்கள் வாயிலாக அன்போடு கேட்டுக்கொள்கின்றேன். அதுமட்டுமல்ல. . . (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. பி.கே. சேகர்பாபு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் மரக் கன்றுகள் ஏதாவது நட்டிருந்தால் சொல்லுங்கள் என்று கேட்டார்கள். (குறுக்கீடு) மரக் கன்றுகள் நட்டதாகத் தெரியவில்லையென்று சொல்கிறார். அதற்குக்கூடவா நான் பதில் சொல்லக்கூடாது? (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு அமைச்சர், நீங்கள் பதில் சொல்லுங்கள்.

மாண்புமிகு திரு. பி.கே. சேகர்பாபு: அவர் கேட்டதனால் நான் பதில் சொல்கின்றேன். மரங்கள் நடுவதைப்பற்றி மாண்புமிகு உறுப்பினர் பேசிக் கொண்டிருந்தார். 4½ கோடி மரக் கன்றுகள் நட்டதாகக் குறிப்பிட்டிருந்தார். நம்முடைய மாண்புமிகு அமைச்சர், அருமை அண்ணன் திரு. சக்கரபாணி அவர்கள் இந்து சமய திருக்கோயிலுக்குச் சொந்தமான நிலத்தை எங்களிடம் முன் அனுமதி கேட்டு விண்ணப்பித்திருந்தார். ஒரே மனிதர், தனி

ஒரு மனிதராக 65 இலட்சம் மரக்கன்றுகளை நட்ட பெருமை நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்களைச் சாரும். இந்து சமய அறநிலையத் துறையின் சார்பில் ஒரு இலட்சம் தல மரக் கன்றுகளை ஒரே மாதத்தில் நட்ட பெருமை இந்து சமய அறநிலையத் துறையைச் சாரும். முன்னாள் முதல்வருடைய பிறந்த நாளை குறிப்பிட்டு 'ஆடம்பரங்கள் வேண்டாம்' என்று சொன்னதாகச் சொன்னார். நம்முடைய தமிழ்நாட்டு முதலமைச்சர் மாண்புமிகு தளபதி அவர்கள் தன்னுடைய பிறந்த நாளிலே ஆதரவற்றவர்களுக்கு, ஏழையெளியவர்களுக்கு, கர்ப்பிணித் தாய்மார்களுக்கு, பார்வையிழந்தவர்களுக்கு, மாற்றுத் திறனாளிகளுக்கு, பள்ளியிலே படிக்கின்ற மாணவச் செல்வங்களுக்கு நலத் திட்ட உதவிகளை வழங்க வேண்டுமென்று உத்தரவு பிறப்பித்து தன்னுடைய பிறந்த நாளை எளிமையாகக் கொண்டாடிய ஒரு முதலமைச்சர் இருப்பாரென்றால், அவர் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள்தான் என்பதை மாண்புமிகு உறுப்பினருக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 2–20

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. K.C. கருப்பணன் அவர்கள்.

திரு. K.C. கருப்பணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தத் திட்டத்தை உருவாக்கியவர் மாண்புமிகு அம்மா அவர்கள். அதற்குப் பிறகு எவ்வளவோ நடப்பட்டிருக்கலாம், இல்லை என்று சொல்லவில்லை. அதை உருவாக்கியவர் மாண்புமிகு அம்மா அவர்கள். மிக்க நன்றி. அப்படி நடப்பட்டிருந்தால் மிகுந்த சந்தோஷம். ஆனால், எங்கள் மாவட்டத்திலோ அல்லது வேறு எங்கேயுமோ நான் அதுபோலப் பார்க்கவில்லை. மாண்புமிகு திரு. சக்கரபாணி அண்ணா, அவர்கள் தொகுதியில் 65 இலட்சம் மரக்கன்றுகள் நடப்பட்டிருக்கின்றன என்கிறார்கள். ஒரு தொகுதிக்கு 65 இலட்சம் மரக் கன்றுகள் நட்டால், எவ்வளவு மரக்கன்று நடப்பட்டிருக்க வேண்டும்?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இனிமேல் அவரை அழைத்துக்கொள்ளுங்கள்.

திரு. K.C. கருப்பணன்: *அதை அவர்களே சிந்திக்க வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *நீங்கள் இனிமேல் அவரை அழைத்துக்கொள்ளுங்கள்.*

திரு. K.C. கருப்பணன்: *அதேபோல, அம்மா அவர்கள் ஆரம்பித்த திட்டம்தான் இன்றைக்கு ஒவ்வொரு கல்யாண வீட்டிலும், திருமண இல்லங்களிலும், அதேபோல, விழாக் காலங்களில் வருகின்ற நண்பர்களுக்கும், உறவினர்களுக்கும் இன்றைக்கு மரக்கன்றுகள் கொடுக்கப்படுகின்றன. அந்தத் திட்டம் சிறப்பாகச் செயல்படுத்தப்பட்டுக் கொண்டிருக்கிறது என்று சொன்னால், அந்தப் பெருமை மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களையே சேரும் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கின்றேன்.*

அதைப்போல, பிளாஸ்டிக் ஒழிப்பு. உங்களுக்கெல்லாம் நன்றாகத் தெரியும். இங்கேயிருக்கின்ற மாண்புமிகு உறுப்பினர்களுக்கு நன்றாகத் தெரியும். பிளாஸ்டிக்கினால் எவ்வளவு இடையூறுகள் இருந்தன என்பதெல்லாம் உங்களுக்கு நன்றாகத் தெரியும். குளம், குட்டைகளெல்லாம் எவ்வளவு பாழாகிப் போயின; அதனால் மக்களுக்கு எவ்வளவு இடையூறுகள் ஏற்பட்டன; ஆடு, மாடுகள் எல்லாம் எவ்வளவு இறந்திருக்கின்றன; drainage*–ல் அடைப்பு இருந்ததனால் எவ்வளவு கொசுத் தொல்லைகள் இருந்தன போன்றவற்றையெல்லாம் உணர்ந்துதான், அண்ணன் எடப்பாடியார் அவர்கள், பிளாஸ்டிக் ஒழிப்பு என்ற திட்டத்தைக் கொண்டு வந்தார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அந்தத் திட்டம் அண்ணன் அவர்களால் ஆரம்பிக்கப்பட்டதோடு, அந்தத் திட்டத்தினால் யாரும் பாதிக்கக்கூடாது என்பதற்காக* I.A.S. *அதிகாரிகள் தலைமையில் குழுக்கள் அமைக்கப்பட்டன, விளக்கக் கூட்டங்கள், விழிப்புணர்வுப் பேரணிகள், கருத்தரங்குகள், ஊடகம் வாயிலாக விழிப்புணர்வுப் பிரச்சாரங்களையெல்லாம் நடத்தி, 1–1–2019 அன்று பிளாஸ்டிக் தடை திட்டத்தை அறிவித்தார்கள். அதற்குப் பிறகு 5 மாதங்கள் காலஅவகாசம் கொடுக்கப்பட்டது. ஏனென்றால், மற்ற தொழில் செய்பவர்களெல்லாம் பாதிக்கப்படக்கூடாது என்பதற்காக, அவர்கள் தொழிலை மாற்றிக்கொள்வதற்கு அவகாசம் கொடுக்கப்பட்டு, 5–6–2019, சுற்றுச்சூழல் தினத்தன்று அது முழுமையாக தடை செய்யப்பட்டது. சிறந்த முறையில் இன்றைக்கு பிளாஸ்டிக் உற்பத்தி செய்வதும்,*

விற்பனை செய்வதும் 90 சதவிகிதம் நிறுத்தப்பட்டுள்ளது. ஆக, தமிழகம் நல்லமுறையில் 90 சதவிகிதம் பிளாஸ்டிக் இல்லாத மாநிலமாக உருவானது. ஆனால், இன்றைக்கு எல்லோருக்கும் தெரியும். இன்றைக்கு எங்கு சென்றாலும் carry bag, பிளாஸ்டிக் தான் இருக்கிறது. அனைத்து வணிக வளாகங்கள், அதேபோல, மளிகைக் கடைகள், பூக்கடைகளை எடுத்துக்கொள்ளுங்கள், எந்தக் கடைக்குப் போனாலும் இன்றைக்கு பிளாஸ்டிக் carry bag மிக அதிகமாகக் கிடைத்துக்கொண்டிருக்கிறது. என்னவோ தெரியவில்லை, மாண்புமிகு அம்மா அவர்கள் கொண்டு வந்த திட்டம் என்பதற்காகவோ, அண்ணன் எடப்பாடியார் கொண்டு வந்ததிட்டம்என்பதற்காகவோ,இதனைக்கைவிட்டு விட்டார்களோ என்று நான் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

மஞ்சப்பை திட்டம் கொண்டு வந்தீர்கள். ஓராண்டிற்கு முன்னால். . . (குறுக்கீடு) ஒரு வருடத்திற்கு பின்னால், இன்றைக்குத்தான் பார்க்கிறோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடு) உட்காருங்கள். (குறுக்கீடு) உட்காருங்கள், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்லிவிடட்டும்.

மாண்புமிகு திரு. சிவ.வீ. மெய்யநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் பிளாஸ்டிக் ஒழிப்பைப் பற்றி ஒரு சில கருத்துகளைப் பதிவு செய்திருக்கிறார். 1–1–2019 அன்று, அன்றைக்கு இருந்த ஆட்சியாளர்களால் 14 வகையான பிளாஸ்டிக்குகள் தடை செய்யப்பட்டன. அதன் பின்பு, சுமார் 6 மாத காலம், பிளாஸ்டிக் தடை மிகக் கண்டிப்பாக ஓரளவிற்குக் கடைப்பிடிக்கப்பட்டு வந்தது. அதற்கடுத்து, கொரோனா பெருந்தொற்று வந்ததற்குப் பிறகு, முழுமையாக அது கட்டுப்பாடு இல்லாமல், தொடர்ந்து பிளாஸ்டிக் பயன்பாடு மீண்டும் எல்லா இடங்களிலும் இருந்தது. ஆனால் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள், முதலமைச்சராகப் பொறுப்பேற்றவுடன் பிளாஸ்டிக் தடையை மேலும் தீவிரமாகச் செயல்படுத்தினார். ஒரு பொருளைத் தடை செய்கிறோம் என்றால், அதற்கு மாற்றுவழி என்ன என்பதற்கு நாம் விளக்கம் சொல்லியாக வேண்டும். அதை, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் செய்தார். 23–12–2021 அன்று சென்னை கலைவாணர் அரங்கில், உங்கள் table–களிலெல்லாம் வைக்கப்பட்டிருக்கிறதல்லவா,

'மீண்டும் மஞ்சப்பை' என்கின்ற மாபெரும் திட்டத்தை (மேசையைத் தட்டும் ஒலி) கொண்டு வந்தவர் நமது மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள். அப்படி கொண்டுவந்து, இன்றைக்கு அதன்மூலமாக பல்வேறு நடவடிக்கைகளை இந்த அரசாங்கம் தொடர்ந்து எடுத்து வந்திருக்கிறது. இந்த மஞ்சப்பை பயன்பாடு, அதைப்போன்று துணிப் பை பயன்பாடு குறித்து மக்கள் மத்தியில் மிகப் பெரிய விழிப்புணர்வை ஏற்படுத்தி இன்றைக்கு 20 சதவிகிதம் வரைக்கும் அதன் பயன்பாடு உயர்ந்திருக்கிறது. நீங்கள் கொண்டுவந்ததற்காக இந்தத் திட்டம் நிறுத்தப்படவில்லை. 1862-இல் Alexander Parkes என்பவர் பிளாஸ்டிக்கை கண்டுபிடித்தபோது வியந்து பார்த்தார்கள். ஆனால், இன்றைக்கு பிளாஸ்டிக் மனித இனத்திற்கு மிகப் பெரிய கேடு விளைவிக்கக் கூடியதாக இருக்கிறது. மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள், எதிர்காலத்தில் கண்டிப்பாக இந்த பிளாஸ்டிக் தடைக்கான பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொள்வார்கள்; தமிழ்நாடுதான் இந்தியாவிலேயே பிளாஸ்டிக் இல்லாத மாநிலம் என்கின்ற பெயரைப் பெறுவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வோம் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 2-25

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. K.C. கருப்பணன் அவர்கள்.

திரு. K.C. கருப்பணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ரொம்ப நன்றி. இங்கு இருக்கின்ற சட்டமன்ற உறுப்பினர்கள் அனைவருக்கும் தெரியும். ஒரு நாளைக்கு அவர்கள் வீட்டுக்கு வாங்கி வருகிற பொருட்கள், மளிகைக் கடைகளிலிருந்து, பூக்கடைகளிலிருந்து, கசாப்புக்கடைகள் வரைக்கும் எந்தப் பைகளில் அந்தப் பொருட்கள் வருகின்றன என்பது எல்லோருக்கும் தெரியும் என்பதை இந்த நேரத்தில் அன்போடு தெரிவித்துக்கொள்கின்றேன். பிளாஸ்டிக் பையைத் தடைசெய்தால் 100 percent நல்லது. அண்ணன் எடப்பாடியார் அவர்கள், இந்தியாவில் முதன்முறையாக பிளாஸ்டிக் ஒழிப்புத் திட்டத்தை கொண்டு வந்தார்கள். அந்தத் திட்டம் நல்ல முறையில் செயல்பட்டால் எல்லோருக்கும் நல்லது. நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அண்ணன் எடப்பாடியார் அவர்களுடைய ஆட்சிக் காலத்தில், உச்ச நீதிமன்றமும், உயர் நீதிமன்றமும் மணல் எடுக்கக் கூடாது என்று தடையை விதித்தார்கள். அந்தத் தடையினால் எங்கும் மணல் எடுக்க முடியவில்லை. அண்ணன் எடப்பாடியார் அவர்கள் ஆட்சியில் M-sand, P-sand-ஐ மணலுக்குப் பதிலாகப் பயன்படுத்துவது தொடங்கப்பட்டது. அன்றைய crusher முதலாளிகளை எல்லாம் அழைத்து, 'இன்றைக்கு மணல் ஒரு load ரூ.10 ஆயிரம், ரூ.15 ஆயிரம் ஆகிவிட்டது. உடனடியாக நீங்கள் M-sand, P-sand-ஐ போடுங்கள்' என்று சொன்னார். அன்றைக்கு M-sand, P-sand-இன் விலை ரூ.5 ஆயிரம், ரூ.6 ஆயிரமாக இருந்தது. அதற்குப்பிறகு அவர்கள் எல்லாம் M-sand unit எல்லாம் போட்டு மிகச் சிறப்பாகப் பயன்படுத்தினார்கள். அண்ணன் அவர்கள் அதை வழிநடத்தினார்கள். அன்றைக்கு ஒரு unit M-sand 3,500 ரூபாய்க்கும், P-sand 4,500 ரூபாய்க்கும் விற்கப்பட்டது. ஆனால், இப்பொழுது என்ன நிலைமை என்பது எல்லோருக்கும் தெரியும். அதேபோல், அது என்ன விலைக்கு விற்கப்படுகிறது என்பதும் தெரியும். அதைப்போல இன்றைக்கு சல்லிக்கிரசர், அதேபோல் M-sand unit-கள் பல இந்த ஆட்சியிலே, மூடப்பட்டிருக்கின்றன. எங்களைப் போன்ற எதிர்க்கட்சியைச் சேர்ந்த சட்டமன்ற உறுப்பினர்களுடைய unit-களை எல்லாம் கூட மூடியிருக்கிறார்கள். அதற்கு என்ன காரணம் என்று எங்களுக்குத் தெரியவில்லை. அதனால் M-sand unit-கள் அதிகப்படுத்தப்பட வேண்டுமே தவிர, இருப்பதை குறைக்கக்கூடாது. இன்றைக்கு சென்னையை எடுத்துக்கொண்டால் 1 unit M-sand ரூ.5 ஆயிரத்திற்கு விற்கப்படுகிறது. ரூ.6 ஆயிரத்திற்கு விற்கப்படுகிறது. அதன் நிலைமை என்ன? இன்றைக்கு contractor-கள் எல்லாம் மிகவும் வேதனைப்படுகிறார்கள். 5 இலட்சம் ரூபாய்க்கு, 10 இலட்சம் ரூபாய்க்கு வீடு கட்டுபவர்கள் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். இதனால் மூடியுள்ள unit-களையெல்லாம் கண்டிப்பாக நீங்கள் திறக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன்.

அதேபோல, கல் உடைக்கின்ற ஒரு தொழிற்சாலைக்கு அதனுடைய permit காலம் முடிவதற்கு முன்னால் permit கொடுத்தால், அவர்கள் கல்லை தொடர்ந்து உடைப்பார்கள். தொடர்ந்து M-sand வரும். ஆனால், இன்றைக்கு நிலைமை என்னவென்று சொன்னால், அதனுடைய permit காலம் முடிந்த பிறகு application கொடுக்கச் சொல்கிறார்கள். Application

கொடுத்த பிறகு, 3 மாதங்கள், 4 மாதங்கள் ஆகின்றன. 3 மாதங்கள், 4 மாதங்களுக்கு அந்த factories எல்லாம் ஓடாமல் இருக்கின்றன. அதனால், இன்றைக்கு மக்கள் மிகவும் பாதிக்கப்படுகிறார்கள். எனவே, permit முடிவதற்கு ஓரிரு நாட்களுக்கு முன்பாக permit கொடுத்தால் எல்லோருக்கும் பயனுள்ளதாக இருக்கும் என்பதை இந்த நல்ல நேரத்திலே நான் தெரிவித்துக்கொள்கின்றேன். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: போதுமே. 10 நிமிடங்கள், 48 விநாடிகள் ஆகியுள்ளன. (குறுக்கீடு)

திரு. K.C. கருப்பணன்: அதேபோல், மாண்புமிகு மூத்த உறுப்பினர், அண்ணன், பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் பேசினார்கள். இங்கு சவுடு மண் என்று சொல்கிறார்கள். எங்கள் ஊரில் மேடைமண் என்று சொல்கிறார்கள். அண்ணன் எடப்பாடியார் அவர்களுடைய ஆட்சியிலே, குடிமராமத்துப் பணிகள் நடக்கின்ற காலத்தில் ஒரு load, 4 unit மண் ரூபாய் 1,500–லிருந்து 2,500 ரூபாயாக இருந்தது. எங்கு வேண்டுமென்றாலும் கொண்டு செல்லலாம். யாருக்கும் தடையில்லை. ஆனால், இன்றைக்கு அதன் நிலைமை என்னவென்றால் இரவு 12 மணிக்கு மேல் மண் கொண்டு வந்து கொட்டுகிறார்கள். என்ன விலையென்றால் ரூபாய் 9 ஆயிரம், ரூபாய் 10 ஆயிரம். இன்றைக்கு அந்த அளவுக்கு எங்கள் மாவட்டத்தில் நிலைமை இருக்கிறது. எல்லா மாவட்டங்களிலும் இதைத்தான் சொல்கிறார்கள். இன்றைக்கு அந்த மேடை மண்ணே கிடைப்பதில்லை. இரவில் யாருக்கும் தெரியாமல் கொண்டு வந்து கொட்டிக்கொண்டிருக்கிறார்கள். ரூ.9 ஆயிரம், ரூ.10 ஆயிரம், என்ற விலையில் கிடைக்கிறது. ரூபாய் 2 இலட்சம், 3 இலட்சம், 5 இலட்சத்திற்கு வீடு கட்டுபவர்களுக்குக் குறைந்தது 5 load மண் வேண்டும். ரூ.2,500/-லிருந்து ரூ.12,500/– என்ற விலையில் இன்றைக்கு 5 load மண் வாங்குவதற்கு ரூ.50,000 இருக்க வேண்டும். அவர்கள் இரவில் விடிய விடிய தூக்கம் இல்லாமல் இருக்க வேண்டும். அப்போதுதான் அந்த மண் வாங்க முடிகிறது. கடந்த இரண்டாண்டு காலமாக எல்லோருமே சட்டமன்றத்திலே பேசிக்கொண்டே இருக்கிறார்கள். அதனால் இன்றைக்கு. . . (மணியடிக்கப்பெற்றது) ஒரு நிமிடம்.

நல்ல கோரிக்கை, தவறான கோரிக்கை ஒன்றும் இல்லை, சொல்லிவிடுகிறேன். அதனால், இன்றைக்கு பழையபடி private–ல் போட்டு இருக்கிறார்கள். State Environment Impact Assessment Authority (SEIAA) என்பது நமது அமைச்சருக்குத் தெரியும். SEIAA–ல் அதற்கு அனுமதியே கொடுக்கவில்லை. மாண்புமிகு அமைச்சர் அவர்கள், இரண்டு வருட காலங்களில் எத்தனை யூனிட் கொடுத்துள்ளீர்கள் என்பதை உங்களுடைய பதிலுரையில் சொல்லுங்கள்; நான் சந்தோஷப்படுவேன். தற்போது அங்கு கஷ்டமான நிலைமை இருக்கின்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், உரையை முடியுங்கள். போதும்.

திரு. K.C. கருப்பணன்: ஏனெனில், contract–ல் road வேலை செய்பவர்கள் அனைவரும் எவ்வளவு சிரமப்படுவார்கள் என்பது உங்களுக்கும் தெரியும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், இன்னும் 5 அமைச்சர்கள் பதிலுரையாற்ற வேண்டும்.

திரு. K.C. கருப்பணன்: இரண்டு நிமிடங்கள் தாருங்கள். தமிழகத்திலேயே ஈரோட்டில்தான் அதிமான Contractors இருக்கிறார்கள். அவர்கள் இரத்தக் கண்ணீர் வடித்துக்கொண்டிருக்கிறார்கள். அந்தளவிற்கு தற்போது ரோடு வேலை செய்ய முடியவில்லை. அண்ணன் எடப்பாடியார் அவர்கள், ஈரோட்டிலிருந்து சத்தியமங்கலம் வரையிலும் ரூ.500 கோடி மதிப்பீட்டில் நான்குவழிச் சாலை அமைக்க ஆணை கொடுத்தார்கள். இந்தக் காலகட்டத்தில் அந்தப் பணிகள் முடிந்திருக்க வேண்டும். அது இன்னும் முடியவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், இன்று 5 மானியக் கோரிக்கைகள் எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளன. நீங்கள், அதைத் தாண்டி, 6–வது, 7–வது மானியக் கோரிக்கைகள் குறித்தும் பேசுகிறீர்கள். சீக்கிரம் உரையை முடியுங்கள்.

திரு. K.C. கருப்பணன்: இன்னும் இரண்டே இரண்டு விஷயங்களைச் சொல்லி, உரையை முடித்துவிடுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், உரையை முடித்துவிடுங்கள்.

திரு. K.C. கருப்பணன்: அதேபோன்று ** இதற்கு ஒரு சின்ன உதாரணத்தைக் கூறுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், நீங்கள் அமைச்சராக இருந்தவர். பொத்தாம்பொதுவாக ** என்று கூறியதையெல்லாம் அவைக் குறிப்பிலிருந்து நீக்கிவிடுகிறேன். நீங்கள் விஷயத்திற்கு வாருங்கள்.

திரு. K.C. கருப்பணன்: என்னுடைய தொகுதியிலேயே **

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ** என்பதை நீங்கள் சொல்ல வேண்டும். ** என்று கூறியது வேண்டாம்.

திரு. K.C. கருப்பணன்: அந்தச் சாலையை சமன் செய்வதற்கு மண் கிடைக்காத காரணத்தினால் ** வேறு எதனாலும் அல்ல. அது ஈரோடு-சத்தியமங்கலம் பைபாஸ் சாலையாகும். மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் தெரியும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இன்று காலையிலேயே மாண்புமிகு உறுப்பினர் திரு. தளவாய் சுந்தரம் அவர்கள் மண் குறித்து பேசிவிட்டார்கள். அந்த subject முடிந்துவிட்டது. அடுத்த subject-க்கு வாருங்கள்.

திரு. K.C. கருப்பணன்: அதை சரி செய்து தர வேண்டும் என்றுதான் கேட்கிறோம். வேறு ஒன்றும் இல்லை. அதை சரி செய்து கொடுத்தால் நன்றாக இருக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு அமைச்சர் அவர்கள், அதை சரி செய்து தருகிறோம் என்று சொல்லிவிட்டார்களே! அந்த subject முடிந்துவிட்டதே!

திரு. K.C. கருப்பணன்: என்னுடைய தொகுதிக் கோரிக்கையை கூற விரும்புகிறேன். என்னுடைய தொகுதியிலுள்ள லட்சுமி

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது

நகரிலிருந்து தொப்பூர் வரையிலும், NH 47-லிருந்து NH-7 வரையிலும் 65 கிலோ மீட்டர் ரோடு உள்ளது. அதை நான்கு வழிச் சாலையாக்க அண்ணன் அவர்கள் ஆணை கொடுத்துவிட்டார்கள். அந்தப் பணி டெண்டர் விடும் தருவாயில் இருந்தது. மாண்புமிகு அமைச்சர் அண்ணன் அவர்களுக்குத் தெரியும் என்று நினைக்கிறேன். உலக வங்கியின் நிதியுதவியுடன் ரூ.1,200 கோடியில் பணிகள் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டது. ஆனால், தற்போது அந்த டெண்டர் விடும் பணி நிறுத்தப்பட்டுவிட்டது. அந்த சாலையின் side-ஐ ஒரு மீட்டர் அகலப்படுத்த வேண்டும் என்று சொல்லி, தற்போது பணிகள் நடைபெற்று வருகின்றன. அங்கு நீங்கள் ஓர் ஆய்வினைச் செய்தீர்களென்றால், பைக், கார், லாரி உட்பட ஒரு நிமிடத்திற்குக் குறைந்தபட்சம் 120 வண்டிகள் வரை செல்லும். அதுமட்டுமல்ல, 15 wheelers வண்டிகளெல்லாம் அதில்தான் செல்கின்றன. ஏனென்றால், அவர்கள் சேலம் சுற்றி வந்தார்களென்றால், அங்கு இரண்டு check posts கடந்து வர வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சரி, சரி. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதைக் கவனித்திருப்பார்கள்.

திரு. K.C. கருப்பணன்: நிறைய வாகனங்கள் அதில் செல்வதால், அந்தச் சாலையை கண்டிப்பாக நான்கு வழிச் சாலையாக நீங்கள் அமைத்துக் கொடுக்க வேண்டும் என்று இந்த நேரத்தில் அன்போடு நான் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், உங்கள் தொகுதிக் கோரிக்கைகளையெல்லாம் தாருங்கள். அவற்றை நீங்கள் பேசியதாக நான் பதிவு செய்து கொள்கிறேன்.

திரு. K.C. கருப்பணன்: என்னுடைய தொகுதியில் ஒரேயொரு பிரச்சினைதான் உள்ளது. ஒரேயொரு கோரிக்கை, இந்தச் சாலையை அவர்கள் நான்கு வழிச் சாலையாக அமைத்துக் கொடுத்தால் போதுமானது. ஏனெனில், என் தொகுதிக்கும், மேட்டூர் தொகுதிக்கும் ரூ.1,200 கோடி இழப்பு ஏற்படுகின்றது. அந்த இழப்பை நீங்கள் சரி செய்து, அந்தச் சாலையை அமைத்துக் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், நன்றி சொல்லி உரையை முடியுங்கள்.

திரு. K.C. கருப்பணன்: *ஒரேயொரு கோரிக்கையை வைத்துவிடுகிறேன். தற்போது நீலகிரி மாவட்டத்தில் தோட்டத் தொழிலாளர்கள் உள்ளிருப்புப் போராட்டம் நடத்திக் கொண்டு வருகிறார்கள்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர், போதும்.*

திரு. K.C. கருப்பணன்: *அவர்களின் தினக்கூலி ரூ.425/–.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர், உரையை முடியுங்கள். மாண்புமிகு உறுப்பினர், ஒரு நிமிடத்தில் உரையை முடியுங்கள்.*

திரு. K.C. கருப்பணன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இரண்டு நிமிடங்கள் தாருங்கள்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர், ஒரு நிமிடத்தில் உரையை முடியுங்கள்.*

திரு. K.C. கருப்பணன்: *மிகவும் தாழ்த்தப்பட்ட, கஷ்டப்படுகிற மக்களுடைய கோரிக்கை இது. அவர்களுக்கு தினக்கூலியாக ரூ.425/– கொடுக்கிறார்கள். அவர்கள், அதை ரூ.625/– ஆக உயர்த்திக் கொடுக்க வேண்டும் என்று கேட்கிறார்கள். அதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உயர்த்திக் கொடுக்க வேண்டும் என்று இந்த நல்ல நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர், போதும்.*

திரு. K.C. கருப்பணன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு நிமிடத்தில் உரையை முடித்துவிடுகிறேன். ஒரேயொரு கோரிக்கை.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர், போதும்.*

திரு. K.C. கருப்பணன்: *சுத்திகரிப்பு நிலையம் குறித்தது; எனது மாவட்டம் மட்டுமல்ல, அனைத்து தொகுதிகளுக்கும் சம்பந்தப்பட்டது. 2011 ஆம் ஆண்டு, திருப்பூர் மாவட்டம் படுபாதாளத்திற்குச் சென்றுவிட்டது. மாண்புமிகு அம்மா*

அவர்களுடைய ஆட்சிக் காலத்தில், 200 கோடி ரூபாய் வட்டியில்லா கடன் கொடுத்து, 18 சுத்திகரிப்பு நிலையங்களை அமைத்து, அந்தத் தொழிலை ஊக்குவித்தார்கள். (மணியடிக்கப்பெற்றது) இது என் மாவட்டம் குறித்த பிரச்சினை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், இன்னும் 5 அமைச்சர்கள் பதிலுரையாற்ற வேண்டும், போதும். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர், போதும். நீங்கள் கேட்ட நேரமெல்லாம் கொடுத்தாகிவிட்டது; போதும். (குறுக்கீடு) இல்லை, 20 நிமிடங்கள் பேசிவிட்டீர்கள், போதும். பதிலுரை. மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர், ஒரே நிமிடத்தில் உரையை முடியுங்கள்.

திரு. K.C. கருப்பணன்: என் தொகுதியிலும், அண்ணன் திரு. தங்கமணி அவர்களுடைய தொகுதியிலும், ஈரோடு பகுதிகளிலும் 9 சுத்திகரிப்பு நிலையங்கள் அமைப்பதற்காக முதலீட்டாளர்கள் பல கோடி ரூபாய் போட்டு நிலங்களையெல்லாம் வாங்கிக் கொடுத்துவிட்டார்கள். அதில், ரூ.1,374 கோடி மதிப்பீட்டில் சுத்திகரிப்பு நிலையம் அமைப்பதற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டு, மத்திய அரசுக்கு அனுப்பப்பட்டுள்ளது. அதற்குக் கூடிய விரைவில் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. தங்கமணி அவர்கள் இதுகுறித்து பேசிவிட்டார்கள். மாண்புமிகு உறுப்பினர், போதும். பதிலுரை. மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.

பிற்பகல் 2–35

மாண்புமிகு டாக்டர் மா. மதிவேந்தன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஈராயிரம் ஆண்டு வர்ண பாகுபாடு களைய, தீண்டாமை ஒழிய, அதிகாரக் குவியலை பரவலாக்க, வெகுஜன மக்களின் உரிமையை நிலைநாட்ட, வேற்றுமையில் ஒற்றுமை காண, சட்டப் புத்தகத்தை வகுத்துத் தந்த, இந்தியாவின் இறையாண்மையை, பன்முகத் தன்மையை இன்றளவும் சிதையாமல் காத்த, சட்ட மாமேதை, இந்தியாவின் பெரியார், அண்ணல் அம்பேத்கர் அவர்களை முதற்கண் வணங்குகிறேன்.

சாதிய ஏற்றத்தாழ்வு, மதமென்னும் சூழ்ச்சி, பெண்ணடிமைத் தனம், அதற்கு வித்திட்ட சடங்கு சம்பிரதாயம், சாஸ்திரம் போன்ற

மூட நம்பிக்கைகள் ஒழிய, தனது இறுதிநாள் வரை நமக்கான வாழ்வியலை, சிந்தனைப் போக்கை, திராவிடம் என்னும் கோட்பாடு கண்ட, பகுத்தறிவுக் கண் திறந்த தமிழ்நாட்டின் அம்பேத்கர், தந்தை பெரியார் அவர்களையும் வணங்குகிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

தந்தை பெரியார் அவர்களின் அறிவகத்தில் முதன்மை மாணவனாக, படைத் தளபதியாக, எழுத்து, பேச்சு, நாடகம் என அனைத்திலும் பேராற்றல் கொண்டு, இம்மாமன்றத்தில் மூன்று முறை தமிழ் வாழ்க! தமிழ் வாழ்க! தமிழ் வாழ்க! என்று கர்ஜித்தும், அவை உறுப்பினர்களை முழங்கச் செய்தும், நம் தாய் நிலத்திற்கு தமிழ்நாடு என பெயர் சூட்டியும், தமிழ் உணர்வை விதைத்தும் சென்ற தென்னாட்டு பெர்னாட்ஷா, பேரறிஞர் அண்ணா அவர்களையும் வணங்குகிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

மண்ணில் மிதிபடும் விதை விருட்சமாகும். அதுபோன்று, சாதிய ஒடுக்குமுறைக்கு ஆட்பட்டு, அதற்கு எதிராக வெகுண்டெழுந்து, குழந்தைப் பருவம் முதலே போராட்ட குணம் கொண்டு, மறைந்த பின்பும் போராடி வெற்றி கண்ட, இன்றைய நவீன தமிழ்நாட்டின் சிற்பி முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களை வணங்குகிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

கொள்கைப் பிடிப்பில் தீவிரமானவர், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நட்பிற்கும், நம்பிக்கைக்கும் பாத்திரமானவர். மேடையெங்கும் திராவிடக் கொள்கைகளைப் பேசி, இனமானம் மொழிப்பற்றை ஊட்டிச் சென்ற பேராசிரியர் பெருந்தகை அவர்களை வணங்குகிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

தாழ்ந்த தமிழகம் என்றிருந்த தமிழ்நாட்டை, இன்று ஏற்றமிகு தமிழ்நாடு என்னும் பாதையில், தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் வழியில் நின்று, எல்லோருக்கும் எல்லாம், எளியோருக்கும் எல்லாம் என்ற சமத்துவம், சமூக நீதி என்று நாடு போற்றும் திராவிட மாடல் ஆட்சியை நடத்தி வரும் நம்மில் ஒருவர், நமக்கான தலைவர், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களைப் பணிந்து வணங்குகிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

ஆழ்ந்த அரசியல் ஞானமும், தெளிந்த நீரோடைபோல் கழக சித்தாந்த சிந்தனையும் கொண்ட அவையின் முன்னவர்

அய்யா துரைமுருகன் அவர்களை வணங்குகிறேன். கனிவானவர், கண்டிப்பானவர், ஆசானாக அனைவரையும் அரவணைத்துச் செல்லும் அவையின் பேரவைத் தலைவர் அய்யா அவர்களுக்கு என் வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

தமிழ்நாட்டு இளைஞர்களின் இதயத்தில், திராவிடக் கொள்கைகளை உதயமாக்க, பட்டிதொட்டி எங்கும் ஆறுபோல் பாய்ந்து, ஏறுபோல் நடந்து, ஓய்வறியாமல் உழைத்துக் கொண்டிருக்கும் கழகத்தின் இதய நாயகன், இளைஞர்களின் எழுச்சி நாயகன், மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர், எங்கள் அன்பு உதய் அண்ணன் அவர்களை வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

கழகத்தின் முதன்மைச் செயலாளர் மற்றும் அனைத்துத் தலைமைக் கழக நிர்வாகிகளுக்கும், மாண்புமிகு சட்டமன்றப் பேரவைத் துணைத் தலைவர், மாண்புமிகு அரசு தலைமைக் கொறடா அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் பெருமக்களுக்கும், எதிர்க்கட்சித் தலைவர், துணைத் தலைவர் உட்பட அனைத்து மாமன்ற உறுப்பினர்களுக்கும் என் வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

கழகத்தின் வெற்றி, கழகத்தின் வளர்ச்சி இவற்றை மட்டுமே இரு கண்களாகப் பாவித்து, கண்களை இமை காப்பதுபோல், நாமக்கல் கிழக்கு மாவட்ட கழகத்தினரை காத்துவரும் மாநிலங்களவை உறுப்பினரும், நாமக்கல் கிழக்கு மாவட்டச் செயலாளருமான அன்பிற்கினிய அண்ணன் திரு. K.R.N. ராஜேஸ்குமார் அவர்களை வணங்குகிறேன்.

என்னை ஈன்றெடுத்த தாய், தந்தையரை பணிந்து, வணங்குகிறேன். என்னோடு எப்போதும் உறுதுணையாக இருக்கும் என் அன்பு மனைவி, என் ஆசை தம்பி, என் அருமை நண்பர்கள், உற்றார் உறவினர்கள் அனைவருக்கும் நன்றிகள். நாமக்கல் மாவட்டத்தின் அனைத்துக் கழக நிர்வாகிகளுக்கும், தொண்டர்களுக்கும், மாவட்ட மக்களுக்கும், எனக்கு என்றும் ஊக்கமாக இருக்கும் என் தொகுதியான ராசிபுரத்தைச் சார்ந்த அனைத்துக் கழக நிர்வாகிகளுக்கும், தொண்டர்களுக்கும், ராசிபுரத்தின் பேரன்பு கொண்ட பெருமக்கள் அனைவருக்கும் நன்றி கலந்த வணக்கங்களைத் தெரிவிப்பதில் மகிழ்ச்சியடைகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஐந்திணைகளில் ஒன்றான காடும், காடு சார்ந்த முல்லை நிலத்தைப் பாதுகாக்கும் தமிழ்நாடு அரசின் வனத் துறை மானியக் கோரிக்கையில் எனது பதிலுரையை ஆற்றுவதில் பெருமையடைகிறேன்.

'காவிரி தென்பெண்ணை பாலாறு–தமிழ்
கண்டதோர் வையை பொருநை நதி–
என மேவிய யாறுபல வோடத்–
திருமேனி செழித்த தமிழ்நாடு!'

என்று பாரதி போற்றிப் பாடிய தமிழ்நாட்டில் உற்பத்தியாகும் எல்லா நதிகளுக்கும் ஊற்றுக் கண்ணாய் விளங்குவது வனங்களேயாகும். ஆறுகளின் நீரோட்டம் சுனைகளில் தொடங்கி, சிற்றாறாகி, காட்டாறாகி, அகண்ட ஆறாகி, பின் குறுகி ஓடையாகி, சிற்றோடையாகி, மண்ணுக்குள் நீர் வளத்தைப் பெருக்கி கடலில் கலக்கும். ஆறுகள் ஓடிய வழியெல்லாம் நீர்வளம் செழித்திருக்கும்; கிணறுகள் வற்றாதிருக்கும்; பாசனங்கள் பழுதுபடாது; வேளாண்மை நல்ல மகசூல் தரும். வனங்களே நீர் வளத்தின் ஆதாரம். வனங்களை வளமாய் பாதுகாத்தால், நமது நீர்வளம் செழிப்படையும்; வேளாண்மை வளமடையும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஒரே ஒரு நிமிடம். மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு. 5 அமைச்சர்கள் பதில் சொல்ல வேண்டும். மாலை 4 மணிக்கு மீண்டும் பேரவையைக் கூட்ட வேண்டும். ஆகவே, மாண்புமிகு அமைச்சர் பெருமக்களை அன்போடு கேட்டுக்கொள்கிறேன். முடிந்தளவுக்கு தலைப்புச் செய்தியாக பேசவும். ஒருவர் அதிகபட்சமாக 10, 15 நிமிடங்களுக்குள் முடிக்க வேண்டும் என்று உங்களை அன்போடு கேட்டுக்கொள்கின்றேன். எல்லோருக்கும் அதேதான். ஏதேனும் அறிவிப்புகள் புதிதாக இருந்தாலும்கூட, படித்ததாகக் கருதி பதிவு செய்யவும் தயாராக இருக்கிறோம். இன்று ஒரு நாள் மட்டும் ஒத்துழைப்பு தரும்படி அன்போடு கேட்டுக்கொள்கின்றேன். நன்றி. மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் தொடரலாம்.

பிற்பகல் 2–40

மாண்புமிகு டாக்டர் மா. மதிவேந்தன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு நாடு வளமாக இருக்க வேண்டுமென்றால், அங்கு வளமான காடுகள் இருக்க வேண்டும். அந்தக் காடுகளையும்,

அதைச் சார்ந்து இருக்கும் பல்லுயிர்களையும் காப்பதே அந்த நாட்டு மக்களின் தலையாய கடமை ஆகும்.

இந்திய அரசியலைத் தீர்மானித்த முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்கள் வாழ்ந்த நம் கோபாலபுரம் இல்லத்தில் பல்வேறு பொன்மொழிகள் இடம் பெற்றிருக்கும். அவ்வகையில், வீட்டின் நுழைவு வாயிலிலேயே இடம் பெற்றிருக்கும் பொன்மொழிதான் 'மரத்தை நாம் வளர்த்தால், மரம், நம்மை வளர்க்கும்' என்னும் பொன்மொழி. இதிலிருந்தே முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்கள் மரம் மற்றும் காடுகளுக்குக் கொடுத்த முக்கியத்துவத்தைப் பற்றி நாம் அனைவரும் அறிய முடியும்.

அதேபோல், நம் கழகத் தலைவரும், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களும், ஒவ்வொரு துறையிலும் தொலைநோக்குப் பார்வையோடு பல முன்னுதாரணமான திட்டங்களைக் கொண்டு வந்ததுபோல், நம் வனத் துறையிலும் பல முன்மாதிரி திட்டங்களைக் கொண்டு வந்துள்ளார். அந்தத் திட்டங்களில், அடுத்த தலைமுறைக்கான மிக உன்னதத் திட்டம்தான் 'பசுமை தமிழ்நாடு இயக்கம்' (Green Tamil Nadu Mission).

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் தற்போதைய அறிவிக்கப்பட்ட வனப் பகுதி 22,418 சதுர கிலோ மீட்டர். இது தமிழ்நாட்டின் நிலப்பரப்பில் 17.24 சதவிகிதம் ஆகும். வனப் பகுதி மற்றும் வனப் பகுதிக்கு வெளியே உள்ள பசுமைப் பரப்பை உள்ளடக்கிய தமிழ்நாட்டின் மொத்த பசுமைப் போர்வை 30,843 சதுர கிலோ மீட்டர் ஆகும். இது தமிழ்நாட்டின் நிலப்பரப்பில் 23.71 சதவிகிதம் ஆகும். இதனை, 33 சதவிகிதமாக உயர்த்துவதற்காக கூடுதலாக 12,076 சதுர கிலோ மீட்டர் பரப்பளவில், பத்து வருடங்களில் 260 கோடி மரங்கள் நட்டு வளர்ப்பதற்கு நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் 'பசுமை தமிழ்நாடு இயக்கம்' எனும் மாபெரும் திட்டம் 24–9–2022 அன்று தொடங்கப்பட்டது.

இந்தத் திட்டத்தைத் துவக்கி வைக்கும்போதே மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கூறியதாவது, "கடைசி மரமும் வெட்டப்பட்ட பின்னர்தான், கடைசி ஆறும் நஞ்சுகளால் நிரப்பப்பட்ட பின்னர்தான், கடைசி மீனும் பிடிக்கப்பட்ட பின்னர்தான், பணத்தை சாப்பிட முடியாது என்பதை

நீங்கள் உணர்வீர்கள்" என்ற அமெரிக்க செவ்விந்தியர்களின் பொன்மொழியைச் சுட்டிக்காட்டி, அந்த நிலைமை ஒருபோதும் நமக்கு வரக்கூடாது என்று வலியுறுத்தி, வனத்தின் முக்கியத்துவத்தை எடுத்துரைத்தார்.

மேலும், நமது மாண்புமிகு முதல்வர் அவர்கள், தனது 70-வது பிறந்தநாள் விழாவில்கூட தனக்கு வாழ்த்துத் தெரிவிக்க வந்த அனைவருக்கும் மரக் கன்றுகளைப் பரிசாக வழங்கி, மரம் வளர்க்கும் விழிப்புணர்வை ஏற்படுத்தினார்.

இந்தத் திட்டத்திற்கு மேலும் சிறப்பு சேர்க்கும்விதமாக, திண்டுக்கல் மாவட்டத்தில் மாண்புமிகு அமைச்சர் அண்ணன் திரு. அர. சக்கரபாணி அவர்களின் ஏற்பாட்டில், மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அண்ணன் திரு. ஐ. பெரியசாமி அவர்களின் முன்னிலையில், இடையன்கோட்டையில் வெறும் நான்கு மணி நேரத்தில் 6 இலட்சத்து 40 ஆயிரம் மரக்கன்றுகள் நடவு செய்து, உலக சாதனை நிகழ்த்தப்பட்டது.

இந்தச் சாதனை நிகழ்ச்சியில் நமது மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அண்ணன் திரு. உதயநிதி அவர்களும் மரக் கன்றை நட்டு, தன்னை இந்தப் பசுமை தமிழ்நாடு இயக்கத்தில் இணைத்துக்கொண்டு, அனைவருக்கும் ஒரு முன்னுதாரணமாக திகழ்ந்தார்.

இந்தத் திட்டத்தின்கீழ் மரங்கள் நடுவதற்கு பொதுமக்கள், தன்னார்வ நிறுவனங்கள் மற்றும் அரசுத் துறைகளிடமிருந்து சுமார் 5,000 கோரிக்கைகள், 15.16 இலட்சம் மரக் கன்றுகள் தேவை என்று பசுமை தமிழ்நாடு இயக்கம் இணையதளத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது. இந்த இயக்கத்தின்கீழ் வழங்கப்படும் மரக் கன்றுகள் அனைத்தும் இலவசமாக வழங்கப்படும்.

இந்த இயக்கத்தின்மூலம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நம் அனைவரிடமும் எதிர்பார்ப்பது, எல்லா காலியிடங்களிலும் மரங்கள் வளர்க்க வேண்டும் என்பதும், ஒவ்வொருவரும் எத்தனை மரங்கள் வளர்க்க இயலுமோ, அத்தனை மரங்களை வளர்க்க முன்வரவேண்டும் என்பதுமே ஆகும். இந்தத் தருணத்தில் அனைத்து மாண்புமிகு அமைச்சர் பெருமக்களுக்கும் மற்றும் சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் ஓர் அன்பான வேண்டுகோள். அனைவரும் அவரவர்களின் மாவட்டத்தில் பல மரக் கன்றுகளை நட்டு, அனைவரும் இந்த இயக்கத்தில் தங்களை இணைத்துக் கொண்டு,

2023 ஏப்ரல் 13] [டாக்டர் மா. மதிவேந்தன்]

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் பசுமை தமிழ்நாடு இயக்கத்தை வெற்றியடையச் செய்ய வேண்டும் என்று வேண்டி விரும்பி கேட்டுக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கொண்டு வந்த மற்றும் ஒரு முக்கியமான திட்டம்தான் தமிழ்நாடு ஈர நிலங்கள் இயக்கம் (Tamil Nadu Wetland Mission). ஈர நிலம் என்பது ஆண்டு முழுவதும் நீர் நிற்கும் அல்லது ஆறு மாதங்கள் தாழ்ந்த நிலங்களில் இயற்கையாகவே நீர் நிற்கும் நீர் சார்ந்த நிலப்பகுதி ஆகும். ஈர நிலங்கள் உயிரினங்களின் பல்லுயிர் பெருக்கம் அதிகம் கொண்ட பகுதி என்பதால், இந்நிலங்கள் பூமியின் பச்சை சிறுநீரகம் (Green Kidney) எனப்படும். அத்தகைய ஈர நிலங்களை உலகளவில் பாதுகாக்க 1971 ஆம் ஆண்டு, பிப்ரவரி 2 ஆம் நாளன்று, ஈரான் நாட்டில் உள்ள ராம்சார் நகரில் ஒரு ஒப்பந்தம் கையெழுத்தானது. அந்த ஒப்பந்தத்தின்படி உலகெங்கும் உள்ள ஈர நிலங்களில் சிறந்தவற்றைத் தேர்ந்தெடுத்து, ராம்சார் நிலங்கள் என அடையாளப்படுத்தி, சர்வதேச முக்கியத்துவம் அளிக்கப்படுகிறது.

பிற்பகல் 2–45

தமிழ்நாட்டில் 2021 வரை ஒரே ஒரு ராம்சார் தளமாக நாகப்பட்டினம் மாவட்டத்தில், கோடியக்கரை மட்டுமே இருந்தது. தற்போது, நமது கழக ஆட்சி அமைந்த பிறகு 13 ராம்சார் தளங்கள் கூடுதலாக அறிவிக்கப்பட்டுள்ளன. இந்தியாவில் உள்ள 75 ராம்சார் தளங்களில், அதிகமாக 14 ராம்சார் தளங்கள் கொண்ட முதன்மை மாநிலமாகத் தமிழ்நாடு விளங்க வழிநடத்தியவர் நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள். இத்துடன், அரியலூரில் உள்ள கரைவெட்டி மற்றும் நீலகிரியில் உள்ள லாங் வுட் சோலை ஆகிய இரண்டு இடங்களையும் ராம்சார் தளமாக்க ஒன்றிய அரசுக்குப் பரிந்துரைக்கப்பட்டுள்ளது என்பதையும் பெருமிதத்துடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேற்கண்ட மகத்தான இரண்டு திட்டங்களை வழங்கிய நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், மக்களுக்காக எண்ணற்ற நலத் திட்டங்களை அறிவித்து, செயல்படுத்திக் கொண்டிருப்பதுபோல், வன விலங்குகளுக்கும், பறவைகளுக்கும், பல்லுயிர்களுக்கும், கடல் சார்ந்த உயிரினங்களுக்கும் இதுவரை எந்த மாநிலத்திலும்

அறிவிக்காத பல சிறப்பான திட்டங்களை அறிவித்துள்ளார். அந்த வகையில், உலகளவில் பெருமைபெற்ற ஆசிய யானைகளை தமிழ்நாட்டில் பாதுகாக்க, வனத் துறை பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது.

யானைகள் காட்டின் ஆதாரம். அவை அழிந்தால் இயற்கைக்கே சேதாரம். ஆதிவிதைகள் யானையின் வயிற்றில் நொதித்த பிறகுதான் மரமாகும். தமிழ்நாட்டில் யானைகளுக்கும் மனிதர்களுக்கும் இடையிலான உறவு மிக ஆழமானதாகும். யானைகள் நமது கலை, இலக்கியம் மற்றும் கலாச்சாரம் ஆகிய அனைத்திலும் ஒரு முக்கிய அங்கமாக விளங்குகின்றன. தமிழ்நாட்டில் தோராயமாக 2,800 யானைகள் இருப்பதாக கணக்கிடப்பட்டுள்ளது. யானைகள் பாதுகாப்பிற்காக நமது கழக அரசு பல்வேறு நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளது. தமிழ்நாட்டில் ஏற்கெனவே நான்கு இடங்களில் யானைகள் காப்பகங்கள் உள்ளன. அத்துடன், புதியதாக 5-வது யானைகள் காப்பகமாக 1,200 சதுர கிலோ மீட்டர் பரப்பளவில் அகஸ்தியமலை யானைகள் காப்பகம் நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் அறிவிக்கப்பட்டுள்ளது. அத்துடன், யானைகள் பாதுகாப்பிற்காக, முதுமலை தெப்பக்காடு யானைகள் முகாமினைச் சீரமைக்க ரூபாய் 7 கோடியும், ஆனைமலையில் உள்ள கோழிகமுத்தி யானைகள் முகாமை மறுசீரமைக்க ரூபாய் 5 கோடியும், கோவை மாவட்டத்தில் சாடிவயல் யானைகள் முகாம் அமைக்க ரூபாய் 8 கோடியும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. பாரத நாட்டிலேயே முதன்முறையாக 7 யானைப் பாகன்கள், 6 காவடிகள் என மொத்தம் 13 பேருக்கு தாய்லாந்து நாட்டில் உள்ள யானைகள் காப்பகத்தில் ரூபாய் 50 இலட்சம் செலவில் ஒருவார காலம் பயிற்சி அளிக்கப்பட்டது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உலகப் புகழ்பெற்ற ஆஸ்கர் விருதினை முதுமலை யானைகள் முகாமில் எடுக்கப்பட்ட "The Elephant Whisperers" என்ற ஆவணப்படம் பெற்றுள்ளது. அப்படத்தில் நடித்த பொம்மன், பெல்லி தம்பதியர் உட்பட 91 யானைப் பாகன்கள் மற்றும் உதவி யானைப் பாகன்களைக் கௌரவிக்கும் வகையில், தலா ரூபாய் ஒரு இலட்சம் வீதம் 91 இலட்சம் ரூபாய் அரசின்மூலம் வழங்கப்பட்டது. அத்துடன், அவர்கள் வசிக்கத் தேவையான சுற்றுச்சூழலுக்கு உகந்த வீடுகள் கட்டுவதற்கு ரூபாய் 9 கோடியே 10 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இந்த ஆவணப் படத்தை இயக்கிய இயக்குநர்

2023 ஏப்ரல் 13] [டாக்டர் மா. மதிவேந்தன்]

Kartiki Gonsalves *அவர்களுக்கு ஒரு கோடி ரூபாய் வழங்கி, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் கௌரவிக்கப்பட்டது. இவ்விருதின்மூலம் தமிழ்நாடு வனத் துறைக்கு உலகளவில் புகழ் சேர்ந்துள்ளது என்பதை இந்த நேரத்தில் பெருமையோடு தெரிவித்துக்கொள்கிறேன்.*

யானைகள் காலங்காலமாகப் பயன்படுத்திய வலசைப் பாதைகளில் ஏற்பட்ட ஆக்கிரமிப்புகள் மற்றும் தடைகளினாலே யானைகள் தடம் மாறி விவசாய நிலங்களுக்கு வரும் நிலை தற்போது இருந்து வருகிறது. சமீபத்திய நிகழ்வுகளில், அவ்வாறு வனப் பகுதிகளிலிருந்து வெளியே வந்தபோது, மின்சாரம் தாக்கி சில யானைகள் உயிரிழந்தன. இந்த நிகழ்வுக்கு பின்பு வனத் துறையும், மின்சாரத் துறையும் இணைந்து "கூட்டு களத் தணிக்கை" மேற்கொண்டு வருகின்றன. இதன்மூலம் இனிவருங்காலங்களில், மின்சாரம் தாக்கி யானைகள் இறக்கும் நிகழ்வுகள் நடைபெறாமல் இருக்க, நமது கழக அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது.

வனத் துறையின் புதிய முயற்சிகளான யானைகளின் நகர்வினைக் கண்காணிப்பதற்கான செயற்கை நுண்ணறிவு அடிப்படையிலான யானை வருகையினை அறிவிக்கும் முன்னெச்சரிக்கை அமைப்பு ரூ.7.10 கோடியிலும், ரேடியோ காலரிங் கருவிகள் பொருத்துதல், மின்னோட்டத்தினைத் தடுக்கும் அபாய ஒலி அமைப்பு மற்றும் புவி இடக் குறியீடு முறையிலான முன்னெச்சரிக்கை அமைப்பு ஏற்படுத்துதல் போன்ற திட்டங்கள் யானைகள் பாதுகாப்புக்காகச் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

தமிழ்நாடு வனப் பகுதிகளில் யானைகளின் இறப்பு குறித்து விரிவான பகுப்பாய்வு செய்வதற்கும், இந்தியாவிலேயே முதன்முறையாக யானைகள் இறப்பு தணிக்கை கட்டமைப்பு அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தியாவில், குறிப்பாக, தமிழ்நாட்டில் மட்டுமே காணப்படும் வரையாடுகள், நம் தமிழ்நாட்டின் மாநில விலங்காகும். வரை என்றால் மலை, உயர்ந்த மலைகளில் வாழும் ஆடுகள் என்பதால் இவை வரையாடுகள் என்று அழைக்கப்படுகின்றன. இதைத்தான் திருத்தக்கத்தேவர் இயற்றிய சீவகசிந்தாமணியில் "ஓங்கு மால்வரை வரையாடு" என்று குறிப்பிட்டுள்ளார். இப்பெருமைமிக்க நமது மாநில விலங்கின் பாதுகாப்பினை உறுதி செய்ய நமது

[டாக்டர் மா. மதிவேந்தன்] [2023 ஏப்ரல் 13

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் நீலகிரி வரையாடு திட்டம் ரூபாய் 25.14 கோடி மதிப்பீட்டில் தொடங்கப்பட்டுள்ளது. ஒவ்வோர் ஆண்டும் அக்டோபர் 7 ஆம் தேதியை “வரையாடு தினம்” என அனுசரித்து, பொதுமக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தி, நீலகிரி வரையாடுகளை அழிவிலிருந்து பாதுகாக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

பிற்பகல் 2–50

தமிழ்நாட்டில் 15 வன உயிரின சரணாலயங்கள் இருக்கின்றன. இந்நிலையில், இந்தியாவில் முதல் தேவாங்கு சரணாலயமாக திண்டுக்கல் மாவட்டத்தில், கடவூர் தேவாங்கு சரணாலயம் நமது கழக ஆட்சியில் அறிவிக்கப்பட்டுள்ளது. அத்துடன் கழக ஆட்சியில், கிருஷ்ணகிரி மற்றும் தருமபுரி மாவட்டத்தை உள்ளடக்கிய காவேரி தெற்கு சரணாலயமும், ஈரோடு மாவட்டத்தில் தந்தை பெரியார் சரணாலயமும் அறிவிக்கப்பட்டுள்ளன. பறவையியல் ஆய்வை மேற்கொள்ள விழுப்புரம் மாவட்டம், மரக்காணத்தில் ரூபாய் 25 கோடி மதிப்பீட்டில் புதிய பன்னாட்டு பறவைகள் மையம் அமைக்கப்பட உள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நமது மாநிலத்தில் 15 பறவைகள் சரணாலயங்கள் இருந்தன. தற்போது விழுப்புரம் மாவட்டத்தில் கழுவேலி சரணாலயமும், திருப்பூர் மாவட்டத்தில் நஞ்சராயன்குளம் சரணாலயமும் கூடுதலாக நமது கழக ஆட்சியில் அறிவிக்கப்பட்டுள்ளன.

தமிழ்நாட்டில் தற்போது அமராவதி அணை, சாத்தனூர் அணை மற்றும் ஒகேனக்கல் ஆகிய 3 இடங்களில் முதலைப் பண்ணைகள் செயல்பட்டு வருகின்றன. முதலைகள், மக்கள் நடமாட்டம் உள்ள பகுதிகளுக்கு வரும்போது அவை அப்புறப்படுத்தப்பட்டு முதலைப் பண்ணைகளில் பராமரிக்கப்படுகின்றன.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடல் சூழலின் துப்புரவாளன் என்று அழைக்கப்படும் ஆமைகளைப் பாதுகாப்பது கடல் சூழலைப் பாதுகாக்க நாம் மேற்கொள்ள வேண்டிய முக்கியப் பணியாகும். தமிழ்நாட்டில் சித்தாமை, பச்சை ஆமை, தோணியாமை, அலுங்காமை மற்றும் பெருந்தலை ஆமை போன்ற ஐந்து வகையான கடல் ஆமைகள் உள்ளன. இவற்றில் சித்தாமைகள் தமிழ்நாட்டின் கடலோரப் பகுதிகளில் முட்டையிட்டு குஞ்சு பொறிக்கின்றன. இந்த அரியவகை

ஆமைகளைப் பாதுகாப்பதற்காக சென்னை, கிண்டியில் சர்வதேச ஆமைகள் பாதுகாப்பு மற்றும் மறுவாழ்வு மையம் அமைக்க ரூபாய் 6.3 கோடி நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

இந்தியாவில் முதல்முறையாக, நமது மாநிலத்தில் கடல்பசு என்று சொல்லப்படுகின்ற ஆவுலியாவைப் பாதுகாக்க, அதன் கடலோர வாழ்விடமான பாக் ஜலசந்தி பகுதியில் "கடற் பசு பாதுகாப்பகம்" அறிவிக்கை செய்யப்பட்டுள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடலோர மக்களின் வாழ்வாதாரத்தைப் பாதுகாக்கவும், கடல் அரிப்பைத் தடுக்கவும், கடல் மாசுபாட்டைக் குறைக்கவும், கடல் வாழ் உயிரின பல்லுயிர் பெருக்கத்தைப் பாதுகாக்கவும், தமிழ்நாடு நெய்தல் மீட்சி இயக்கம் என்ற திட்டம் ரூபாய் இரண்டாயிரம் கோடியில் உலக வங்கியின் நிதியுதவியுடன் அடுத்த ஐந்தாண்டுகளுக்குள் செயல்படுத்தப்படும். மதுரை மாவட்டத்தில் உள்ள அரிட்டாப்பட்டியில் 193 எக்டேர் பரப்பில் 250-க்கும் மேற்பட்ட அரிய வகை பறவையினங்களும், பல்லுயிர்களும் பாதுகாக்கப்படும்வகையில் தமிழ்நாட்டின் முதல் பாரம்பரிய பல்லுயிர் தளம் என அறிவிக்கப்பட்டுள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடல்வாழ் உயிரினங்களான பவளப்பாறை, கடல் அட்டை, கடல் குதிரை போன்றவற்றின் கடத்தல் உள்ளிட்ட கடல்வாழ் வன உயிரினக் குற்றங்களைத் தடுப்பதற்கென சிறப்பு கடல்சார் உயர் இலக்குப் படை உருவாக்கப்பட்டு, 10 வேட்டைத் தடுப்புக் காவலர்கள் மற்றும் 2 படகோட்டிகள் பணியமர்த்தப்பட்டுள்ளார்கள். தற்போதைய நவீனகால, கள சவால்களைக் கையாள்வதற்கு, நவீன தொழில்நுட்பங்களைக் கொண்டு வனத் துறையின் வன மேலாண்மை மற்றும் வன உயிரின மேலாண்மையை நவீனப்படுத்துவதற்கு ரூபாய் 53 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டில் முதன்முறையாக வனம் மற்றும் வன உயிரினக் குற்றங்களைத் தடுப்பதற்காக சென்னை, கோயம்புத்தூர், மதுரை மற்றும் இராமநாதபுரம் ஆகிய நான்கு இடங்களில் 85 பணியாளர்கள் அடங்கிய தமிழ்நாடு வன உயிரினக் குற்றத் தடுப்புப் பிரிவு (Tamil Nadu Forest Wildlife Crime Control Bureau) உருவாக்கப்பட்டுள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வன விலங்குகளைப் பாதுகாப்பதற்காக எண்ணற்ற திட்டங்களை மாண்புமிகு முதல்வர் அவர்கள் அறிவித்துள்ளார்கள். அத்துடன், வன விலங்குகளால் அவ்வப்போது விவசாயிகளுக்கும், விவசாயப் பயிர்களுக்கும் மற்றும் பொதுமக்களுக்கும் பாதிப்பு ஏற்படும்பட்சத்தில் அவற்றைத் தடுக்கவும் பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ள ஆணையிட்டுள்ளார்.

காட்டுப் பன்றிகளால் விவசாய நிலங்களுக்கு ஏற்படும் பாதிப்பைக் கட்டுப்படுத்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. NEELBO (Repellent) என்ற வேதிப்பொருளை பயன்படுத்தி வன விலங்குகள் விவசாய நிலங்களில் நுழைவதைத் தடுக்க திட்டமிடப்பட்டுள்ளது. தமிழ்நாட்டில் இதுவரை இல்லாத நடைமுறையாக மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஒவ்வொரு வருடமும் 10 கோடி ரூபாய் சிறப்பு நிதி (corpus fund) வழங்கி, வன விலங்குகளால் ஏற்படும் பாதிப்புகளுக்கு உடனடி நிவாரணம் வழங்க நடவடிக்கை எடுத்துள்ளார்கள். அத்துடன், இந்தத் தொகையினை சம்பந்தப்பட்ட மாவட்ட வன அலுவலரின் சிறப்பு வங்கிக் கணக்கிற்கே செலுத்தி, தாமதமின்றி நிவாரணம் கிடைக்க வழிவகை செய்துள்ளார்கள். வன விலங்குகளால் தாக்கப்பட்டு உயிரிழந்தவரின் குடும்பத்தாருக்கும் மற்றும் நிரந்தர ஊனமடைந்தவர்களுக்கும் நிவாரணத் தொகை ரூபாய் 4 இலட்சமாக இருந்ததை, தற்போது மாண்புமிகு முதல்வர் அவர்கள் ரூபாய் 5 இலட்சமாக உயர்த்தி ஆணையிட்டுள்ளார்கள்.

வனத் தீயினைக் கட்டுப்படுத்தும் பணியின்போது எதிர்பாராத விதமாக உயிரிழக்க நேரும் வனத் துறை பணியாளர்களுக்கு முதன்முறையாக மாண்புமிகு முதலமைச்சர் பொது நிவாரண நிதியில் இருந்து ரூ.25 இலட்சம் வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. வன உயிரினங்களால் தாக்கப்பட்டவர்களுக்கு 2021–2022 ஆம் ஆண்டில் ரூபாய் 3 கோடியே 35 இலட்சமும், 2022–2023 ஆம் ஆண்டில் ரூபாய் 4 கோடியே, 25 இலட்சமும் இழப்பீட்டுத் தொகையாக வழங்கப்பட்டுள்ளது. மேலும், கடந்த 2021–2022 ஆம் ஆண்டில் வன உயிரினங்களால் ஏற்பட்ட வேளாண் பயிர், கால்நடை, உடைமை சேதங்களுக்கு ரூபாய் 5 கோடியே, 91 இலட்சம் இழப்பீட்டுத் தொகையாக வழங்கப்பட்டுள்ளது. ஆகமொத்தம், கடந்த இரண்டு ஆண்டுகளில் வன விலங்குகளால் ஏற்பட்ட பாதிப்பிற்கான இழப்பீடாக ரூபாய் 20 கோடியே, 69 இலட்சத்து, 66 ஆயிரம் வழங்கப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

2023 ஏப்ரல் 13] [டாக்டர் மா. மதிவேந்தன்]

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிராம அளவில் ஒரு எக்டேர் பரப்பளவில், வனம் சார்ந்த பலன்கள் கிடைக்கும் வகையில் அமைக்கப்படும் சிறு வனமே மரகதப் பூஞ்சோலை எனப்படும். இந்தத் திட்டத்தின்கீழ் 100 கிராமங்களில் மரகதப் பூஞ்சோலைகள் அமைக்கப்படும். இந்தத் திட்டமானது ரூபாய் 25 கோடி மதிப்பில் செயல்படுத்தப்படும்.

பிற்பகல் 2–55

ஆங்கிலேயர் ஆட்சியில் அவர்களின் தேவைகளுக்காக அந்நியத் தாவரங்கள் தமிழ்நாட்டின் பல்வேறு வனப் பகுதிகளில் நடவு செய்யப்பட்டன. இந்தத் தாவரங்கள் உள்ளூர் தாவரங்களின் வளர்ச்சிக்கும், பல்லுயிர் பாதுகாப்பிற்கும் இடையூறாக இருக்கின்றன. அத்தகைய அந்நியத் தாவரங்களை அகற்றும் பணி வனத் துறையால் தீவிரமாக மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அந்த அந்நியத் தாவரங்களில் விரைவில் பரவும் தன்மை கொண்ட நான்கு தாவரங்களான சீமைக்கருவேல், உண்ணிச்செடி, சீமைக் கொன்னை மற்றும் சீமை மரம் ஆகியவற்றை வனங்களில் இருந்து முற்றிலும் அகற்றுவதற்கும் அப்பகுதிகளில் உள்ளூர் வன வளத்தை மீட்பதற்கும் இந்தியாவிலேயே முதன்முதலில் தமிழ்நாட்டில் புதிய கொள்கை வகுக்கப்பட்டுள்ளது.

கடந்த 2021–2022 ஆம் ஆண்டில், பல்வேறு திட்டங்களின்மூலம் ரூபாய் 21 கோடியே 87 இலட்சம் செலவில் 3,428 எக்டேர் பரப்பில் அந்நியத் தாவரங்கள் அகற்றப்பட்டுள்ளன. உலகப்புகழ் பெற்ற தாவரவியல் பூங்காவான இங்கிலாந்தில் உள்ள Kew Garden-ன் ஒத்துழைப்போடு உலகத்தரம்வாய்ந்த தாவரவியல் பூங்கா ரூபாய் 300 கோடி மதிப்பீட்டில் 350 ஏக்கர் பரப்பளவில், செங்கல்பட்டு மாவட்டத்தில் உள்ள கடம்பூரில் நிறுவப்பட உள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வனத் துறையின் கட்டுப்பாட்டில் 3 கழகங்கள் செயல்பட்டு வருகின்றன. 3,700 எக்டேர் நிலப் பரப்பில் ரப்பர் மரங்களைக் கொண்டு இயங்கி வருவது அரசு ரப்பர் கழகம் ஆகும். இங்கு உற்பத்தி செய்யப்படும் ரப்பர் பால் Liquid Rubber மிகவும் தரம் வாய்ந்ததாகும். இருப்பினும் ரப்பர் விலையில் கடும் வீழ்ச்சி ஏற்பட்டபோதும், இந்நிறுவனம் கடந்த 2022–2023 ஆம் ஆண்டில் ரூபாய் 32.67 இலட்சம் இலாபம் ஈட்டியுள்ளது.

அரசு ரப்பர் கழகத் தொழிலாளர்களுக்கு, 2019 ஆம் ஆண்டு முதல் நிலுவையில் இருந்த ஊதிய உயர்வு, நமது கழக ஆட்சி பொறுப்பேற்ற பின்பு, 2022–2023 ஆம் ஆண்டில் ரூபாய் 2 கோடியே 40 இலட்சம் ஒதுக்கீடு செய்து வழங்கப்பட்டது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

தமிழ்நாடு வனத் தோட்டக் கழகமானது மாண்புமிகு டாக்டர் கலைஞர் அவர்களால் 1974 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. இதனுடைய முக்கியப் பணியானது காகிதம் தயாரிக்கும் நிறுவனங்களுக்கு காகிதக்கூழ் மரமான யூகலிப்டஸ் மரங்களை வளர்த்து வழங்குவதும் மற்றும் முந்திரி தோட்டங்களைப் பராமரிப்பதும் ஆகும். இந்நிறுவனம் கடந்த 2021–2022 ஆம் ஆண்டு ரூபாய் 28.5 கோடி இலாபம் ஈட்டிய நிலையில், நடப்பாண்டு ரூபாய் 47.80 கோடி இலாபம் ஈட்டியுள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1976 ஆம் ஆண்டு இலங்கையிலிருந்து தாயகம் திரும்பிய தமிழர்களுக்கு மறுவாழ்வு அளிக்கும் நோக்கத்துடன் தொடங்கப்பட்டது தமிழ்நாடு தேயிலை தோட்டக் கழகம் ஆகும். இக்கழகத்தில், தற்போது 3,700 தொழிலாளர்கள் பணிபுரிகின்றனர். TANTEA–யின் வசம் தற்போது 3,990 எக்டேர் தேயிலைத் தோட்டங்கள் உள்ளன. TANTEA–யினை நிரந்தர இலாபம் ஈட்டக்கூடிய நிறுவனமாக மேம்படுத்துவதற்கு Ernst and Young என்ற ஆலோசனை நிறுவனம் ஆய்வு மேற்கொண்டு அறிக்கை தாக்கல் செய்துள்ளது.

நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தலைமையிலான நமது கழக அரசு பொறுப்பேற்ற பின்பு TANTEA–லிருந்து ஓய்வுபெற்ற தொழிலாளர்களுக்குப் பணிக்கொடை வழங்குவதற்கும், விடுப்புச் சம்பளம், மருத்துவ விடுப்புச் சம்பளம் வழங்குவதற்கும் என மொத்தம் ரூபாய் 29.38 கோடி வழங்கப்பட்டுள்ளது. நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியம்மூலம், வீடு கட்டும் திட்டத்தின்கீழ் 677 ஓய்வுபெற்ற தொழிலாளர்களுக்கு ரூபாய் 13.46 கோடியில் வீடு கட்டும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

பழங்குடியினர் வாழும் கிராமப் பகுதிகளில் அடிப்படை உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்த, பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் கச்சா வீடுகள், பள்ளி மேம்பாடு, சாலை மேம்பாடு போன்ற திட்டங்கள் செயல்படுத்தப்படுகின்றன. அத்துடன், வனத் துறையில் பழங்குடியின வகுப்பைச் சார்ந்த தொகுப்பூதிய அடிப்படையில் பணிபுரியும் வேட்டைத் தடுப்பு

2023 ஏப்ரல் 13] [டாக்டர் மா. மதிவேந்தன்]

காவலர்களுக்கு வனக் காவலர் பதவி உயர்வில் 15 சதவீதம் இட ஒதுக்கீடு வழங்கப்படுகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு உயிர்ப்பன்மை பாதுகாப்பு மற்றும் பசுமையாக்குதல் திட்டத்தின்கீழ், 2022–2023 ஆம் ஆண்டிற்கு ரூபாய் 104.10 கோடிக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. அதன்படி மனித-யானை முரண்பாடுகளைத் தடுக்க 25 கிலோ மீட்டர் தூரத்திற்கு யானை புகா அகழிகள் அமைக்கப்பட்டுள்ளன. அத்துடன் சூழல் பாதுகாப்பு பசுமைப் பணிக்கென 68.40 இலட்சம் மரக்கன்றுகள் நடப்பட்டுள்ளன.

வனப் பாதுகாப்புச் சட்டம் 1980–க்கு முன்னர் வனப் பகுதியில் சாலை போடப்பட்டிருந்தால், அதனை சாலையின் அனுமதிக்கப்பட்ட அளவுகள் மற்றும் தன்மை மாறாமல் பராமரிக்கலாம். புதியதாக வனப் பகுதிகளில் சாலைகள் அமைக்கவோ அல்லது வேறு வனம் சாராத தேவைகளுக்காகப் பயன்படுத்த வேண்டிய தேவையிருப்பின், ஒன்றிய அரசின் பரிவேஷ் போர்ட்டல் மூலம் User Agency வாயிலாக விண்ணப்பித்து அனுமதி பெறலாம்.

வனத் துறையின் வரலாற்றிலேயே முதன்முறையாக வனப் பாதுகாப்பு, பசுமைப் பரப்பை அதிகரித்தல், வன மேலாண்மையில் பழங்குடியினரின் பங்கு, மனித-விலங்கு மோதல்களைத் தடுப்பது போன்றவற்றிற்காக தேவையான கொள்கை மாற்றங்களைப் பரிந்துரைப்பதற்கு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள், ஓய்வு பெற்ற இந்திய ஆட்சிப் பணி அலுவலர் தலைமையில் வன ஆணையத்தை அமைத்துள்ளார்கள்.

வனத் துறையில் பதவி உயர்வு. தமிழ்நாடு வனத் துறையில் பணிபுரியும் பல்வேறு நிலைகளில் உள்ள பணியாளர்களின் பதவி உயர்வுகள் 2018 ஆம் ஆண்டு முதல் நிலுவையில் இருந்த நிலையில், நம் கழக அரசு ஆட்சி பொறுப்பேற்ற பிறகு, 858 வனத் துறை பணியாளர்களுக்கு, 26 நிலைகளில் பதவி உயர்வுகள் வழங்கப்பட்டுள்ளன என்பதை இப்பேரவையில் தெரிவிப்பதில் மகிழ்ச்சியடைகிறேன்.

பிற்பகல் 3-00

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

“செயற்கை அறிந்தக் கடைத்து முலகத்
தியற்கை அறிந்து செயல்”

நாம் செய்யும் அனைத்து செயல்களையும், அறிவைப் பயன்படுத்தி மட்டுமல்ல, இயற்கை கண்கொண்டு செய்ய

வேண்டும் என்பது இக்குறளின் பொருளாகும். நமது திராவிட மாடலான 'எல்லோருக்கும் எல்லாம்', 'அனைவருக்கும் அனைத்தும்' என்பது மக்களுக்கானது மட்டுமல்ல; இங்கு வாழும் பறவைகள், தாவரங்கள், வன விலங்குகள் என அனைத்து உயிரினங்களுக்கும் பொதுவானது. நாம் வாழும் பூமியின் இயற்கை வளமானது, நமக்கானது மட்டுமல்ல; நமது சந்ததிகளும் தலைமுறை தலைமுறையாக அனுபவிக்க உண்டானது. எனவே, வன வளத்தைப் பாதுகாப்போம். வளமான எதிர்காலத்தை உறுதி செய்வோம். நன்றி, வணக்கம். *(மேசையைத் தட்டும் ஒலி)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அறிவிப்புகள். *(குறுக்கீடு)*

மாண்புமிகு டாக்டர். மா. மதிவேந்தன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது அறிவிப்புகளை வெளியிடுகிறேன். புலிகளின் பாதுகாப்பைக் கருத்தில்கொண்டு, Project Tiger என்ற திட்டம் தொடங்கப்பட்டு, இந்த ஆண்டு பொன் விழா காணுவதைக் குறிக்கும் வகையில், இந்த அறிவிப்புப் புத்தகம் புலி வடிவில் அமைக்கப்பட்டுள்ளது. *(குறுக்கீடு)*

அறிவிப்புகள்

1. திண்டுக்கல் வனக் கோட்டம் அய்யலூரில் தேவாங்கு பாதுகாப்பு மையம் 20.00 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்படும்

Slender Loris Conservation Centre will be set up at Ayyalur in Dindigul Forest Division at a total cost of Rs.20.00 crore

அழிவின் விளிம்பில் உள்ள அரிய வகை "தேவாங்கு" இனம் தமிழ்நாட்டின் திண்டுக்கல் மற்றும் கரூர் மாவட்டங்களை உள்ளடக்கிய வனப் பகுதியில் வாழ்கின்றன. இவை கிழக்கு மற்றும் மேற்குத் தொடர்ச்சி மலைகளின் சில பகுதிகளில் பரவியுள்ளன.

தமிழ்நாடு அரசு, இந்தியாவின் முதல் "தேவாங்கு" வன உயிரின சரணாலயத்தை திண்டுக்கல் மற்றும் கரூர் மாவட்டங்களில் 11,806.56 ஹெக்டேர் நிலப்பரப்பில் ஏற்கெனவே அறிவித்துள்ளது. இது தேவாங்கு இனத்தின் பாதுகாப்பு மற்றும் அறிவியல் ஆய்வுகளுக்கு உதவியாக இருக்கும்.

அழிவின் விளம்பில் உள்ள இந்தத் தேவாங்கு இனத்தின் பாதுகாப்பை மேலும் வலுப்படுத்த திண்டுக்கல் மாவட்டம், அய்யலூரில் தேவாங்கு பாதுகாப்பு மையம் ஒன்று 20.00 கோடி ரூபாய் செலவில் அமைக்கப்படும்.

2. தஞ்சாவூர் மாவட்டம் மனோராவில் சர்வதேச கடற்பசு பாதுகாப்பு மையம் 15.00 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்படும்

'International Dugong Conservation Centre' at Manora in Thanjavur District will be established at a cost of Rs.15.00 Crore

அரிய வகை கடல் உயிரினம் மற்றும் கடலின் மிகப் பெரிய தாவர உண்ணியான கடற் பசுக்களைப் பாதுகாக்கவும், அவற்றின் வாழிடத்தை மேம்படுத்தவும், இந்தியாவின் முதல் கடற்பசு (Dugong) பாதுகாப்பகம் அமைக்கப்படும் என்று தமிழ்நாடு அரசு ஏற்கெனவே அறிவித்துள்ளது. இந்த கடற்பசு பாதுகாப்பகம் தஞ்சாவூர் மற்றும் புதுக்கோட்டை மாவட்டங்களை உள்ளடக்கிய 448 சதுர கிலோ மீட்டர் கடற்பரப்பை கொண்டுள்ளது.

இதன் அடுத்த கட்டமாக, சர்வதேச கடற்பசு பாதுகாப்பு மையம், தஞ்சாவூர் மாவட்டம், மனோராவில் 15.00 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்படும். இது அப்பகுதியில் கடற்பசுக்களின் பாதுகாப்பு மற்றும் சூழல் சுற்றுலாவை மேம்படுத்துவதாக அமையும். (குறுக்கீடு)

அதனை நாம் அறிவிப்பே இல்லாமல் செய்துகொள்ளலாம்.

3. பள்ளிக்கரணை பாதுகாப்பு மையம் 20.00 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்படும்

Pallikaranai Conservation Centre will be established at a cost of Rs.20.00 crore

தமிழ்நாட்டின் இயற்கையான ஈர நிலங்களில் பள்ளிக்கரணை சதுப்பு நிலமும் ஒன்றாகும். இந்த ஈரநிலம் நீர்வாழ்வன, ஊர்வன, வண்ணத்துப் பூச்சிகள் மற்றும் தாவரங்கள் ஆகியவற்றிற்கு வாழ்விடமாக அமைந்துள்ளது. தற்போது பள்ளிக்கரணை சதுப்பு நிலம் பன்னாட்டு முக்கியத்துவம் வாய்ந்த ஈரநிலமாக ராம்சார் மாநாட்டின்படி அறிவிக்கப்பட்டுள்ளது. இந்த ஈரநிலத்தைப் பாதுகாப்பது சென்னை நகருக்கு மிக முக்கியமானதாகும். இந்த

சதுப்பு நிலத்தைப் பாதுகாப்பது தொடர்பான விழிப்புணர்வை மக்களுக்கு ஏற்படுத்துவது மிக அவசியமானதாகும்.

இந்த முக்கியத்துவம் வாய்ந்த இடத்தைப் பாதுகாக்கவும், சுற்றுச்சூழல் மதிப்பைப் பாதுகாக்கவும், சூழல் சேவைகளுக்காகவும், பள்ளிக்கரணை பாதுகாப்பு மையம் 20.00 கோடி ரூபாய் மதிப்பீட்டில் ஏற்படுத்தப்படும். இம்மையம் மாணவர்கள், ஆராய்ச்சியாளர்கள், சுற்றுலா பயணிகள், பறவை காப்பாளர்கள் மற்றும் பொதுமக்களுக்குக் கல்வி தொடர்பான தகவல்கள் மற்றும் ஆராய்ச்சி வசதிகளை வழங்கும்.

4. ராம்சார் தளம்—வேடந்தாங்கல் பறவைகள் சரணாலயத்தின் ஒருங்கிணைந்த வளர்ச்சிப் பணிகள் 9.30 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும்

Integrated development of Vedanthangal Birds Sanctuary – a RAMSAR site will be done at a total cost of Rs.9.30 Crore

தமிழ்நாடு மாநிலத்தில் அமைந்துள்ள வேடந்தாங்கல் பறவைகள் சரணாலயம், இந்தியாவிலேயே பழமையான பறவைகள் சரணாலயங்களில் ஒன்றாகும். புலம்பெயரும் காலங்களில் இந்த வேடந்தாங்கல் பறவைகள் சரணாலயத்தில் சுமார் 30,000 முதல் 40,000 வரை பறவைகள் காணப்படும்.

இந்தப் பறவைகள் சரணாலயத்தின் முக்கியத்துவம் காரணமாக, வேடந்தாங்கல் ஏரியில் சூழல் மறுசீரமைப்பு பணிகள், சூழல் சுற்றுலா உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தும் பணிகள் மற்றும் வேடந்தாங்கல் கிராமத்தைச் சுற்றியுள்ள கிராம மக்களின் வாழ்வாதாரத்தைப் பெருக்குவது போன்ற ஒருங்கிணைந்த வளர்ச்சிப் பணிகள் 9.30 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும்.

5. ராம்சார் தளம்—கூந்தன்குளம் பறவைகள் சரணாலயத்தின் ஒருங்கிணைந்த வளர்ச்சிப் பணிகள் 6.00 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும்

Integrated Development of Koonthankulam Birds Sanctuary–a RAMSAR site will be done at a cost of Rs.6.00 Crore

திருநெல்வேலி மாவட்டம், நாங்குநேரி தாலுகாவில் உள்ள கூந்தன்குளம் கிராமத்தில் 129.33 ஹெக்டேர் பரப்பளவில் பறவைகள் சரணாலயம் அமைந்துள்ளது. இது “2022-ல் ராம்சார் தளமாக” அறிவிக்கப்பட்டுள்ளது. இச்சரணாலயம் கூந்தன்குளம் மற்றும் காடன்குளம் ஆகிய 2 குளங்களைக் கொண்டுள்ளது. கூந்தன்குளம் புலம்பெயர்ந்த மற்றும் உள்ளூர் நீர்ப்பறவைகளின் மிகப்பெரிய இனப்பெருக்க ஈரநிலப் பகுதியாகும்.

கூந்தன்குளம் பறவைகள் சரணாலயத்தில் பாதுகாப்பு மற்றும் சூழல் சுற்றுலா வசதிகளை மேம்படுத்துதல் போன்ற ஒருங்கிணைந்த வளர்ச்சிப் பணிகள் 6.00 கோடி ரூபாய் மதிப்பீட்டில் சூழல் மறுசீரமைப்பு மற்றும் சூழல் சுற்றுலாப் பணிகள் மூலமாக மேற்கொள்ளப்படும்.

6. பழவேற்காடு பறவைகள் சரணாலயத்தின் ஒருங்கிணைந்த வளர்ச்சிப் பணிகள் 3.70 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும்

Integrated development of Pulicat Bird Sanctuary will be done at a total cost of Rs.3.70 Crore

பழவேற்காடு பறவைகள் சரணாலயம் அடர் உப்புநீரைக் கொண்ட இரண்டாவது பெரிய ஏரி ஆகும். இந்த ஏரி தமிழ்நாடு மற்றும் ஆந்திரப்பிரதேச எல்லையை ஒட்டி அமைந்துள்ளது. இந்த பழவேற்காடு ஏரியின் பரப்பளவு சுமார் 15,367 ஹெக்டேர் ஆகும். இந்த ஏரி சுமார் 52 கிராமங்களில் வசிக்கும் பெரும் பகுதி மக்களுக்கு மீன்பிடித் தொழில்மூலம் முதன்மை வாழ்வாதாரமாக இருந்து வருகிறது.

இந்தப் பகுதியின் சுற்றுலாத் திறனை மேம்படுத்துதல் மற்றும் இப்பகுதியைச் சுற்றியுள்ள உள்ளூர் மக்களின் சமூக பொருளாதார நிலையினை மேம்படுத்துதல் போன்ற ஒருங்கிணைந்த வளர்ச்சிப் பணிகள் 3.70 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும்.

7. அரியலூர் கரைவெட்டி பறவைகள் சரணாலயத்தின் ஒருங்கிணைந்த வளர்ச்சிப் பணிகள் 1.00 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மேம்படுத்தப்படும்

Integrated Development of Karaivetti Birds sanctuary at Ariyalur will be done at a cost of Rs.1.00 Crore

[டாக்டர் மா. மதிவேந்தன்] [2023 ஏப்ரல் 13

கரைவெட்டி பறவைகள் சரணாலயம் 453.715 ஹெக்டேர் பரப்பளவில் அமைந்துள்ள தமிழ்நாட்டின் மிகப் பெரிய சதுப்பு நிலமாகும். கரைவெட்டி பறவைகள் சரணாலயம் உள்ளூர் மற்றும் புலம்பெயர் பறவைகளைப் பெரிதும் ஈர்க்கிறது.

இது 82 நீர்ப் பறவைகள் உட்பட 203 பறவை இனங்கள் கொண்ட மாநிலத்தின் பெரிய சரணாலயம் ஆகும். இச்சரணாலயத்தில் டிசம்பர் முதல் பிப்ரவரி வரை, 80–க்கும் மேற்பட்ட நீர்ப்பறவை இனங்கள் வந்து செல்கின்றன. இங்கு தெற்கிலிருந்து வடக்கு நோக்கிச் செல்லும் பறவைகள் உணவிற்காகவும், இனப்பெருக்கத்திற்காகவும் வருகின்றன. மக்கள் இச்சரணாலயத்திற்கு வந்து பறவைகளைக் காண சிறந்த காலம் நவம்பர் முதல் டிசம்பர் வரை ஆகும்.

பறவைகளின் பாதுகாப்பை உயர்த்துவதற்காகவும், பார்வையாளர்கள் சிறந்த சூழல் சுற்றுலா அனுபவத்தைப் பெறுவதற்காகவும், அரியலூர் மாவட்டத்தில் உள்ள இந்த கரைவெட்டி பறவைகள் சரணாலயத்தின் ஒருங்கிணைந்த வளர்ச்சிப் பணிகள் 1.00 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வனத் துறை தொடர்பான மானியக் கோரிக்கையை நிறைவேற்ற பேருதவியாக இருந்த தமிழ்நாடு அரசு தலைமைச் செயலாளர் முனைவர் வெ. இறையன்பு, இ.ஆ.ப. அவர்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் செயலாளர்கள் திரு. டி. உதயச்சந்திரன், இ.ஆ.ப. அவர்களுக்கும், டாக்டர் பி. உமாநாத், இ.ஆ.ப. அவர்களுக்கும், திரு. எம்.எஸ். சண்முகம், இ.ஆ.ப. அவர்களுக்கும், திருமதி அனு ஜார்ஜ், இ.ஆ.ப. அவர்களுக்கும், நிதித் துறை அரசு கூடுதல் தலைமைச் செயலாளர், திரு. என். முருகானந்தம், இ.ஆ.ப. அவர்களுக்கும் மற்றும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் முதன்மை தனிச் செயலாளர் திரு. ஆர். தினேஷ்குமார் அவர்களுக்கும் என்னுடைய மனமார்ந்த நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

வனத் துறை மானியக் கோரிக்கை மற்றும் அறிவிப்புகளை வெற்றிகரமாகத் தயாரிக்க பேருதவியாக இருந்த சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத் துறையின் அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் திருமதி சுப்ரியா சாஹு, இ.ஆ.ப. அவர்களுக்கும், வனத் துறை முதன்மைத் தலைமைப் பாதுகாவலர்,

திரு. சுப்ரத் மஹோபத்ரா அவர்களுக்கும், முதன்மை தலைமை வனப் பாதுகாவலர் மற்றும் தலைமை வன உயிரினக் காப்பாளர், திரு. சீனிவாசலு ரெட்டி, இ.வ.ப. அவர்களுக்கும், கூடுதல் தலைமை வனப் பாதுகாவலர், முனைவர் வி. நாகநாதன் இ.வ.ப. அவர்களுக்கும், சிறப்புச் செயலாளர் திரு. ரிட்டோ சிரியாக், இ.வ.ப. அவர்களுக்கும், வனத் துறையின் முதன்மை தலைமை வனப் பாதுகாவலர் மற்றும் அனைத்து உயர் அலுவலர்களுக்கும் மற்றும் பணியாளர்களுக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே: *வெட்டுத் தீர்மானம்.*

மாண்புமிகு டாக்டர் மா. மதிவேந்தன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மானியக் கோரிக்கையின்மீது 57 சட்டமன்ற உறுப்பினர்கள் 125 வெட்டுத் தீர்மானங்களை வழங்கியுள்ளார்கள். இவற்றில் பெரும்பாலான உறுப்பினர்கள், வனப் பகுதிகளில் சாலை வசதி வேண்டியும், வன விலங்குகளைப் பாதுகாப்பது தொடர்பாகவும், வன விலங்குகள் விளைநிலங்களில் வராமல் தடுப்பது, சூரிய மின் வேலி அமைப்பது தொடர்பாகவும், வனத் தீயைக் கட்டுப்படுத்துதல், சீமைக் கருவேல மரங்களை அகற்றுதல் தொடர்பான வெட்டுத் தீர்மானங்களைத் தந்துள்ளார்கள். என்னுடைய பதிலுரையில் அவற்றிற்கு விளக்கம் தந்துள்ளேன் என்று நம்புகிறேன்.*

மேலும், அலுவலகக் குடியிருப்புகள், காலிப் பணியிடங்களை நிரப்புதல் போன்ற பல்வேறு கோரிக்கைகளையும் தந்துள்ளார்கள். இவற்றின்மீதும் தனிக் கவனம் செலுத்தி, நிதிநிலைமைக்கேற்ப நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர்களுக்கு தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன். எனவே, மாண்புமிகு உறுப்பினர்கள் தாங்கள் கொடுத்துள்ள வெட்டுத் தீர்மானங்களைத் திரும்பப் பெற்றுக்கொண்டு, மானியக் கோரிக்கையினை நிறைவேற்றித் தருமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பதிலுரை. மாண்புமிகு சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. சிவ.வீ. மெய்யநாதன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத் துறை*

மானியக் கோரிக்கையை தாக்கல் செய்வதற்கான வாய்ப்பினைத் தந்த மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு என்னுடைய வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அறியாமை இருளகற்ற வந்த பகுத்தறிவுச் சூரியன் தந்தை பெரியார்; 'ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காண்போம்', 'மக்கள் தொண்டே மகேசன் தொண்டு' என்ற அறிஞர் அண்ணா; அரை நூற்றாண்டு தமிழ்நாட்டு அரசியலில் தலைப்புச் செய்தி, ஐந்து முறை தமிழ்நாட்டின் முதலமைச்சர், நின்ற தேர்தல்களிலெல்லாம் வென்ற தலைவர், தோல்வியே கண்டிராத நூற்றாண்டு விழா நாயகர், முத்தமிழறிஞர் தலைவர் ஐயா கலைஞர் அவர்களை வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

பிற்பகல் 3-05

அலெக்சாண்டரின் பெருமை வீரம்; மாவீரன் நெப்போலியனின் பெருமை நெஞ்சுரம்; ஜூலியஸ் சீசரின் பெருமை வாள்வீச்சு; புரட்சியாளர் Lenin-ன் பெருமை, பொதுவுடைமை. Edison-ன் பெருமை, அறிவியல். மாமன்னன் ராஜராஜசோழனின் பெருமை, தஞ்சை பெரிய கோயில். கம்பனின் பெருமை, காப்பியம். திருவள்ளுவரின் பெருமை திருக்குறள், இந்தியத் திருநாட்டிற்கே வழிகாட்டிய சமூக நீதியின் பெருமை, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களை வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

"சொலல்வல்லன் சோர்விலன் அஞ்சா னவனை
இகல்வெல்லல் யார்க்கும் அரிது."

என்பதன் பொருளாய்த் திகழ்கின்றவர், அய்யாவின் பகுத்தறிவு, அண்ணாவின் மாநில உரிமை, கலைஞரின் மொழி உணர்வு, தலைவரின் கடின உழைப்பு, அனைத்தும் நிறைந்த இளந்தலைவர், மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர், மாண்புமிகு திரு. உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கும் வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள், மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்கள் ஆகிய அனைவருக்கும் எனது வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கின்றேன். தொடர்ந்து இரண்டாவது

முறையாக என்னை வெற்றிபெறச் செய்த ஆலங்குடி வாக்காளப் பெருமக்களுக்கும் எனது நன்றியை இந்த நேரத்தில் நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள், இந்தியத் திருநாட்டில், தமிழ்நாட்டு மக்களின் பொருளாதார வளர்ச்சிக்காக பல்வேறு தொழிற்சாலைகளை தமிழ்நாட்டில் கொண்டு வந்துள்ளார். இந்தியாவின் இரண்டாவது தொழில் நகரமான தமிழ்நாட்டிற்கு தொழில் முனைவோர்கள் எடுக்கின்ற முயற்சிகளுக்கு அரசு உறுதுணையாக இருக்க வேண்டும் என்கின்ற அடிப்படையில், கடந்த இரண்டாண்டுகளில் புதிய தொழிற்சாலைகளை நிறுவுவதற்கு விண்ணப்பித்த 2,864 தொழில் நிறுவனங்களுக்கு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் இசைவாணை வழங்கப்பட்டுள்ளது. அதேபோன்று தொழிற்சாலைகள் துவங்கப்பட்டு, 7,522 தொழிற்சாலைகளுக்கு அவற்றை இயக்குவதற்கான இசைவாணைகள் வழங்கப்பட்டிருக்கின்றன. தமிழ்நாட்டில், கிட்டத்தட்ட 53,000 தொழிற்சாலைகள் இருக்கின்றன. கடந்த ஆட்சிக்காலங்களில், இந்த 53,000 தொழிற்சாலைகளும் தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியத்தில் ஆண்டுதோறும் புதுப்பிக்கப்பட வேண்டிய நிலை இருந்தது. கொரோனா பெருந்தொற்றில் பாதிக்கப்பட்ட தொழில்களை மீட்டெடுப்பதற்காக, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் ஓர் அற்புதமான திட்டத்தைத் தந்திருக்கிறார். தமிழ்நாட்டிலிருக்கின்ற சிவப்பு வகை தொழிற்சாலைகள் 5 ஆண்டுகளுக்கொருமுறை புதுப்பித்தால் போதும் என்றும், ஆரஞ்சு வகை தொழிற்சாலைகள் 10 ஆண்டுகளுக்கொருமுறை புதுப்பித்தால் போதும் என்றும், பச்சை வகை தொழிற்சாலைகள் 14 ஆண்டுகளுக்கொருமுறை புதுப்பித்தால் போதும் என்றும் ஓர் அரசாணையை பிறப்பித்ததன் அடிப்படையில், இந்த இரண்டாண்டு காலத்தில் கிட்டத்தட்ட 18,252 தொழிற்சாலைகளை புதுப்பிப்பதற்கான இசைவாணை வழங்கப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் எந்தவகையில் ‘மக்களைத் தேடி மருத்துவம்’, ‘இல்லந்தேடி கல்வி’ போன்ற திட்டங்களைத் தந்தார்களோ, அதேபோன்று இன்றைக்கு தொழிற்சாலைகள் நடத்துபவர்களுக்கு அவர்கள் இயங்குவதற்கான ஆணையினை கிட்டத்தட்ட 25,724 தொழிற்சாலைகளுக்கு அவர்கள் இல்லங்களுக்கே சென்று இசைவாணைகளை கொண்டு சென்று வழங்கி, தொழிலாளர்களை வாழவைத்த தலைவர், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

இந்த அவையில் அதிக அளவிலான உறுப்பினர்கள் பொதுக் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையத்தைப் பற்றிக் கேட்டார்கள். மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் பொறுப்பேற்றவுடனேயே தமிழ்நாட்டினுடைய ஆறுகள் மற்றும் நதிகளைப் பாதுகாக்க வேண்டுமென்ற உன்னத நோக்கத்தின் அடிப்படையில், தமிழ்நாட்டிலிருக்கின்ற காவிரி, தென்பெண்ணை, பாலாறு, காளிங்கராயன், தாமிரபரணி போன்ற நதிகளைத் தூய்மைப்படுத்த வேண்டும் என்கின்ற அடிப்படையில் பல்வேறு திட்டங்களை செயல்படுத்தியிருக்கிறார்கள். ஏன்? சென்னையிலும்கூட, நீண்டநாட்களாக அடையாறு, கூவம் நதிகளைப் பார்த்துக்கொண்டிருக்கிறோம். மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் 1,500 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்து, மோசமான நிலையில் இருந்த ஆறுகளைப் புதுப்பிப்பதற்கான அனுமதியைத் தந்திருக்கிறார்கள். அதனடிப்படையில், தமிழ்நாட்டு மக்களின் வாழ்வாதாரமாக விளங்கிக்கொண்டிருக்கின்ற காவிரி நதியைப் புதுப்பிக்க வேண்டும், நன்னீராக மாற்ற வேண்டும், சுற்றுச்சூழல் பாதிக்கப்படாத வண்ணம் பாதுகாக்க வேண்டும் என்ற அடிப்படையில் நடவடிக்கைகள் எடுத்துள்ளார்கள். கடந்த ஆட்சிக் காலத்தில் 'நடந்தாய் வாழி காவேரி' என்று இரண்டு பக்கத்தில் ஒரு அரசாணையைப் பிறப்பித்துவிட்டுச் சென்றுவிட்டார்கள். அதன்பிறகு எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

பிற்பகல் 3–10

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் பொறுப்பேற்றதற்குப் பின்பு, இன்றைக்கு, காவிரியைப் பாதுகாப்பதற்காக, 'நடந்தாய் வாழி காவேரி' திட்டத்திற்காக மாண்புமிகு ஐயா, நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள் ஒரு திட்டத்தை இயற்றி ஒன்றிய அரசிற்கு அனுப்பியிருக்கிறார். அந்த அடிப்படையிலே ஈரோடு, நாமக்கல் மாவட்டங்களில் இருக்கின்ற சாய மற்றும் சலவைத் தொழிற்சாலைகளின் கழிவுநீர் ஆற்றிலே கலப்பதால் மாசடைவதைக் கருத்தில்கொண்டு, மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புர வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள், நாங்கள் ஈரோடு தேர்தல் களத்திலே இருந்தபொழுது, எங்களை எல்லா இடங்களுக்கும் அழைத்துச் சென்று காண்பித்தார். அந்த அடிப்படையிலே கிட்டத்தட்ட 10 சுத்திகரிப்பு நிலையங்களுக்கான அனுமதியைப் பெறுவதற்கு, அதற்கான மதிப்பீடுகள் இன்றைக்கு தயார் செய்யப்பட்டிருக்கின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

2023 ஏப்ரல் 13] [திரு. சிவ.வீ. மெய்யநாதன்]

ஈரோடு மாவட்டத்தைப் பொறுத்தவரையிலும், சூரியம்பாளையம், வில்லரசம்பட்டி, கங்காபுரம், ஈரோடு, கிரீன் காளிங்கராயன், காடையம்பட்டி–1, காடையம்பட்டி–2, ஸ்ரீபவானி, அதேபோல, நாமக்கல் மாவட்டத்தில் Green Environmental Association குமாரபாளையம், Green Kavery Dyeing Cluster ஆகிய இந்த 10 பொது சுத்திகரிப்பு நிலையங்களுக்கு, ஒன்றிய அரசின் Jal Shakti திட்டம் மூலமாக நிதியினைப் பெறுவதற்காக, 1,885 கோடி ரூபாய் அளவில் மதிப்பீடு செய்து, 13–3–2023 அன்று ஒன்றிய Jal Shakti – துறைக்கு அனுப்பியிருக்கிறோம். விரைவில் அந்த நிதியினைப் பெற்று, தமிழ்நாட்டில் ஈரோடு, நாமக்கல் மாவட்டங்களில் பொது சுத்திகரிப்பு நிலையங்கள் அமைப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

கழிவுநீர் ஏற்றிச் செல்கின்ற tanker lorry-கள்—மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள் செங்கல்பட்டு, காஞ்சிபுரம் மாவட்டங்களில் உள்ள அதிகாரிகளையெல்லாம் அழைத்து, tanker lorry-யிலிருந்து வெளியேற்றப்படுகின்ற கழிவு நீரானது ஆறுகளில், நீர்நிலைகளில், புறம்போக்குகளில், ஏன் வீடுகளுக்கு அருகிலேகூட கழிவுநீரை விட்டுவிட்டு செல்கிறார்கள்; இவற்றையெல்லாம் ஒழுங்குபடுத்த வேண்டுமென்ற கருத்தினை எடுத்துவைத்தார்கள். அந்த அடிப்படையிலே, தமிழ்நாட்டில் முதற்கட்டமாக, சென்னை, செங்கல்பட்டு, திருவள்ளூர், காஞ்சிபுரம் ஆகிய 4 மாவட்டங்களில் Wireless Digitallock முறையை அந்த டேங்கர் லாரிகளுக்கு கொண்டுவர இருக்கிறோம். அப்படி கொண்டுவருகிறபொழுது, GPS மூலமாக கண்காணிக்கப்பட்டு, எந்த சுத்திகரிப்பு நிலையத்தில் கழிவுநீரை வெளியேற்ற முடியுமோ, அங்கேதான் அதை விட முடியும் என்கின்ற அடிப்படையில் அந்தப் புதிய திட்டத்தை உருவாக்குவதற்காக மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் 5 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்திருக்கிறார்கள் என்ற மகிழ்ச்சியான செய்தியை நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

அதேமாதிரி, காற்று தரக் கண்காணிப்பு நிலையங்கள். தமிழ்நாட்டின் பல மாவட்டங்களில் இன்றைக்கு இருக்கின்ற சூழ்நிலையை நாம் பார்த்திருக்கிறோம். காற்றினுடைய தரம் கடந்த காலங்களில் எப்படி இருந்தது? இன்றைக்கு எப்படி அதை மீட்டெடுத்திருக்கிறோம் என்பது நாம் அறிந்ததுதான். அந்த அடிப்படையிலே தமிழ்நாட்டில் 25 இடங்களில் காற்று

தரக் கண்காணிப்பு நிலையங்களை அமைக்கவிருக்கிறோம். தருமபுரி, கள்ளக்குறிச்சி, மயிலாடுதுறை, நாகர்கோவில், பெரம்பலூர், சிவகங்கை, தென்காசி, தேனி, திருவாரூர், திருப்பத்தூர், திருவண்ணாமலை, விழுப்புரம், ஆவடி, தாம்பரம், கும்பகோணம், ஈரோடு, காஞ்சிபுரம், செங்கல்பட்டு, திருவள்ளூர், கிருஷ்ணகிரி, ஆம்பூர், நெய்வேலி, பல்லாவரம், காரைக்குடி மற்றும் இராஜபாளையம் உட்பட 25 இடங்களில் காற்று தரக் கண்காணிப்பு நிலையங்கள் அமைப்பதற்காக 49 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்து விரைவில் இவற்றை அமைக்க இருக்கிறோம் என்பதை நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

கடந்த காலங்களில் குப்பைக் கிடங்குகள் மோசமாக இருந்த நிலையைப் பார்த்தோம். அது நிலத்திற்கு மட்டுமல்ல, காற்றையும் அதிகமாக மாசுபடுத்தக்கூடிய அந்த நிலை அறிந்து மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், மாண்புமிகு நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் மூலமாக, தமிழ்நாட்டில் தேங்கியிருக்கின்ற, கிட்டத்தட்ட 269 குப்பைக் கிடங்குகள் கண்டறியப்பட்டு, இன்றைக்கு 180 இடங்களில் biomining முறையில் குப்பைக் கிடங்குகளை அகற்றுகின்ற முறையை மேற்கொண்டு வருகிறார்கள். கிட்டத்தட்ட 69 இடங்களில் பணிகள் மேற்கொள்ளப்பட்டு, 132 ஏக்கர் உயிர் நிலங்கள் மீட்கப்பட்டு, 51,600 மரக்கன்றுகள் நடவு செய்யப்பட்டிருக்கின்றன என்பதை நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு கைத்தறி மற்றும் துணி நூல் துறை அமைச்சர் அவர்கள், ராணிப்பேட்டை மாவட்டத்திற்கு அழைத்துச் சென்றிருந்தார்கள். ராணிப்பேட்டை SIPCOT தொழிற்சாலை வளாகத்தில் Tamil Nadu Chromates and Chemicals Limited–க்கு சொந்தமான ஒரு நிறுவனம் இயங்கியது. அந்தப் பகுதியில் Chromium கலவைகள் தேங்கியிருந்தன. அவை மிக, மிக ஆபத்தானவை. அதனை நேரடியாக பார்வையிட்டு, Chromium கழிவுகளை மக்கள் பாதிக்கப்படாத அளவில், நீர்நிலைகள் பாதிக்கப்படாத அளவில் மீட்டெடுப்பதற்காக 15 கோடி ரூபாயில் புதிய திட்டத்தை உருவாக்கி நிறைவேற்ற இருக்கிறோம் என்பதை நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

பிற்பகல் 3–15

இன்றைக்கு தமிழ்நாட்டில் இயற்கை சுற்றுச்சூழலைப் பாதுகாக்கின்ற பல்வேறு ஆர்வலர்களுக்கு மாண்புமிகு

தமிழக முதலமைச்சர் அவர்களின் Green Champion Award கொடுக்கப்படுகிறது. கடந்த ஆண்டு 100 பேருக்குக் கொடுத்திருக்கிறோம். இந்த ஆண்டும், வருகின்ற காலங்களிலும் அது நிறைவேற்றப்படும் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

இன்றைக்கு இருக்கின்ற காலகட்டத்தில் உலக வெப்பமயமாதல் நம்மை அச்சுறுத்திக் கொண்டிருக்கிறது. உலகம் வெப்பமயமானால் பாதிக்கப்படக்கூடிய நிகழ்வுகளை, இன்றைக்கு வெப்ப அலைகள் என்கின்ற அந்தப் பேரிடரை நாம் சந்தித்துக்கொண்டிருக்கின்றோம். காடுகள், ஏரிகள், ஆறுகள், காட்டுயிரிகள் உள்ளிட்ட இயற்கைச் சூழ்நிலை அழியாது காத்து வளர்த்தல், உயிர்கள் மீது இரக்கம் காட்டுதல் என்பது இந்தியக் குடிமக்கள் ஒவ்வொருவரின் கடமை. தமிழ் நிலத்தின் வரலாறும் அது. 'பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல்' என்பது நம் முன்னோர் ஏற்ற உறுதி; ஆரோக்கியமான சுற்றுச்சூழல் நிலவுவது வளர்ந்த மாநிலம் என்பதற்கான எடுத்துக்காட்டு. அந்த வகையில் சுற்றுச்சூழலை பாதுகாக்க நீர் வளம், நில வளம், கடல் வளம் உள்ளிட்ட சூழல் அமைவுகளைப் பாதுகாப்பது நம்முடைய மிக முக்கியமான கடமை என்கின்ற அடிப்படையில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், M.S. Swaminathan Research Foundation (MSSRF) என்கின்ற நிறுவனம் நடத்திய ஒரு விழாவில் பங்கேற்றபொழுது, உலக வெப்பமயமாதலைத் தடுப்பதற்கான நடவடிக்கைகளாக யார், எந்தக் கருத்துகளைச் சொன்னாலும், அதனை ஏற்று நடத்த இந்த அரசு தயாராக இருக்கிறது என்கின்ற அறிவிப்பை அன்றைக்குத் தந்தார். அது அறிவிப்போடு நின்றுவிடாமல், அந்த அறிவிப்பின்மூலமாக இந்தியாவில் வேறு எந்த மாநிலத்திலும் இல்லாத வகையில் தமிழ்நாட்டில், தமிழ்நாடு காலநிலை மாற்ற இயக்கம் என்ற ஒரு இயக்கத்தைத் தொடங்கினார். குறிப்பாக உலக வெப்பமயமாதலின் காரணமாக கடல்மட்டம் உயர்வதால், கடலரிப்பு போன்ற பாதிப்புகள் ஏற்படுகின்றன. 1,076 கிலோமீட்டர் நீண்ட கடற்கரை கொண்ட மாநிலம் தமிழ்நாடு. அந்த அடிப்படையில், கடலோரத்திலுள்ள 14 மாவட்டங்களைப் பாதுகாக்கின்ற நோக்கோடு, 500 கோடி ரூபாயை அதற்காக ஒதுக்கீடு செய்தார். முதற்கட்டமாக, கடற்பாசிகளை, அதேபோல அங்கிருக்கக்கூடிய கடற்கரைப் பகுதிகளில் பனை மரங்கள், புங்கன் மரங்கள், நாட்டு மரங்களை நடவு செய்து Bio shield என்கின்ற முறையில் கடல் அரிப்பினைத் தடுப்பதற்கான நடவடிக்கைகளை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் மேற்கொண்டுள்ளார்.

[திரு. சிவ.வீ. மெய்யநாதன்] [2023 ஏப்ரல் 13

அதோடுமட்டுமல்ல, காலநிலை மாற்றத்திற்காக ஒரு நிர்வாகக் குழு அமைத்த மாநிலம் இந்தியாவிலே தமிழ்நாடு மட்டும்தான். காலநிலை மாற்றத்தினால் என்னென்ன பாதிப்புகளைச் சந்திக்கவிருக்கிறோம் என்பதற்காக, ஒரு நிர்வாகக் குழுவை அமைத்தவர் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள்தான் என்பதை இந்த நேரத்தில் நான் தெரிவித்துக்கொள்கிறேன். அப்படி அமைக்கப்பட்ட குழு, 3–3–2023 அன்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் தலைவர் தளபதி அவர்கள் தலைமையில் கூடியது. அக்கூட்டத்தில் எதிர்காலத்தில் உலக வெப்பமயமாதலால் ஏற்படக்கூடிய பாதிப்புகளைத் தடுப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டவர் தமிழக முதல்வர் அவர்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறோம். இப்படிப்பட்ட சூழலில்தான், இன்றைக்கு The Intergovernmental Panel on Climate Change (IPCC) என்ன சொல்கின்றது என்றால், வெப்பமடைதலைத் தடுத்து, பூமியை மீட்டெடுப்பதற்கான கால அவகாசம் குறைந்து கொண்டே வருகிறது என எச்சரித்துள்ளது. அப்படி புவி வெப்பமயமாதலைத் தடுக்க, பசுமை இல்ல வாயுவான carbondioxide-ஐ கட்டுப்படுத்த வேண்டிய இலக்கை 2070-ல் அடைவோம் என்று இந்திய அரசு அறிவித்திருக்கிறது. அதே கூட்டத்தில் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள், Carbon neutral என்கின்ற நிலையை தமிழகம் 2070-க்கு முன்பாகவே எட்டும் என்கின்ற ஒரு மிகப் பெரிய, முக்கியமான, உன்னத அறிவிப்பை தந்திருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அந்த அடிப்படையில், டிசம்பர் மாதம் 9 ஆம் தேதி, மாண்டஸ் புயல் கரையை கடக்கின்ற சூழ்நிலையையெல்லாம் கருத்தில்கொள்ளாமல், காலநிலை மாற்ற இயக்கத்தை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் சென்னையிலே தொடங்கி வைத்தார் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன். அப்படித் தொடங்கி வைக்கப்பட்ட அந்தத் திட்டத்திலே, காலநிலை மாற்ற திறன்மிகு கிராமங்களை உருவாக்குவதென்ற ஒரு முக்கியமான முடிவு எடுக்கப்பட்டது. அதாவது, Climate resilient villages என்கின்ற ஒரு அருமையான திட்டம். அது என்னவென்றால், தமிழ்நாட்டில் முக்கியமான சுற்றுலாத் தலங்களை நாம் அதிகமாகக் கொண்டுள்ளோம். இதனால், அங்கே அதிகமான மாசு ஏற்படுகிறது. அப்படி மாசு ஏற்படுகின்ற போது, மீண்டும், மீண்டும் சுற்றுச்சூழல் பாதிக்கப்பட்டு, அதிகமாக நிலம், நீர், காற்று பாதிக்கக்கூடிய சூழ்நிலையில், Climate resilient villages என்கின்ற

2023 ஏப்ரல் 13] [திரு. சிவ.வீ. மெய்யநாதன்]

அந்தத் திட்டத்தின்கீழ் தமிழ்நாட்டில் 11 கிராமங்களை நாம் தேர்வு செய்திருக்கிறோம்.

பிற்பகல் 3–20

நாகப்பட்டினம் மாவட்டம், கோடியக்கரை, திருவாரூர் மாவட்டம், முத்துப்பேட்டை, திண்டுக்கல் மாவட்டம், கொடைக்கானல், தென்காசி மாவட்டம், குற்றாலம், கடலூர் மாவட்டம், பிச்சாவரம், இராமநாதபுரம் மாவட்டம், இராமேஸ்வரம், சேலம் மாவட்டம், ஏற்காடு, நீலகிரி மாவட்டம், ஊட்டி, தருமபுரி மாவட்டம், ஒகேனக்கல், திருவள்ளூர் மாவட்டம், பழவேற்காடு, தூத்துக்குடி மாவட்டம், திருச்செந்தூர் ஆகிய 11 இடங்களில் இந்த மகத்தான திட்டத்தின்கீழ், 'இந்த இடங்களில் யாரும் Plastic பயன்படுத்தக் கூடாது. அங்கே இருக்கின்ற பெரும்பாலான அரசு நிறுவனங்களாக இருக்கட்டும், தனியார் நிறுவனங்களாக இருக்கட்டும், அங்கே Solar மின்சாரத்தைத்தான் பயன்படுத்த வேண்டும்' என்று சொல்லப்பட்டிருக்கிறது. அதோடுமட்டுமல்ல, அங்கே இருக்கின்ற பகுதிகள் முழுவதும் வனம் நிறைந்த பகுதியாக மாற்றப்படும். அதிகம் பேர் வருவதால், அங்கே கட்டப்பட்டிருக்கின்ற பல்வேறு கட்டடங்களிலிருந்து வெளியேறும் கழிவுநீர் கலக்கின்றபோது அங்கே மாசு ஏற்படுகின்றது. அங்கே கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் அமைப்பதற்காக, இந்த முன்மாதிரித் திட்டத்திற்கு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் பத்து கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்து இந்த மகத்தான திட்டத்தைத் தொடங்க இருக்கிறார் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள், கண்ணை இமை காப்பதுபோல் தமிழகத்தை பாதுகாத்து வருகிறார். அந்த அடிப்படையில், கடந்த இரண்டு ஆண்டுகாலத்தில் தமிழ்நாட்டில் உள்ள எந்தப் பகுதியிலேயும், எந்த இடத்திலும் மண்ணை மலடாக்கக்கூடிய அபாயகரமான திட்டங்கள் அனைத்தையும் தடுத்து நிறுத்தி தமிழகத்தைப் பாதுகாக்கிறார், நமது தமிழக முதலமைச்சர் அவர்கள். அதன் அடிப்படையில்தான், டெல்டா மாவட்டத்தில் உள்ள மூன்று இடங்களில் நிலக்கரி எடுக்கிறோம் என்கின்ற ஒன்றிய அரசினுடைய 7 அறிவிப்புகள் வந்தவுடன், தமிழ்நாட்டில் இருக்கின்ற அனைத்து இயற்கை ஆர்வலர்கள், குறிப்பாக டெல்டா மாவட்டத்தின் விவசாயிகள் மிகப் பெரிய அச்சுறுத்தல்களுக்கு உள்ளானார்கள். அத்தனை பேர்

பார்வையும் ஒருவரை நோக்கி இருந்தது. அது யாருமல்ல. நம்மைக் காப்பாற்றக்கூடிய தமிழ்நாடு முதலமைச்சர் என்ன சொல்கிறார் என்று எதிர்பார்த்தார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) சட்டமன்றக் கூட்டத் தொடர் கூடியது. நானும் இந்த டெல்டா மாவட்டக்காரன். எனவே, கண்டிப்பாக இந்த நிலக்கரிச் சுரங்கத்தை அமைக்கவிட மாட்டேன் என்று உறுதி அளித்தார். இன்று வரைக்கும், யாரும், எந்த இடத்திலேயும் இதுபோன்ற திட்டங்களை கொண்டு வராமல் தடுத்து நிறுத்தியிருக்கிறார் என்று ஒற்றை வார்த்தையில் சொல்ல முடியாது. பல ஆயிரம் பேர் போராடக்கூடிய, அத்தனைப் போராட்ட களத்தினுடைய தலைமை வீரனாக நமது மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் செயல்பட்டு வருகிறார் என்பதை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன்.

இப்படி எண்ணற்ற திட்டங்கள். அப்படிப்பட்ட திட்டங்கள் எல்லாம் இன்றைக்கு இருக்கின்ற சூழ்நிலையில், பசுமைத் தமிழகம் என்கின்ற திட்டத்தைப் பற்றி மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பேசினார். தமிழ்நாட்டினுடைய மொத்தப் பரப்பு 1,30,000 சதுர கிலோ மீட்டர். தற்போதைய வனப் பரப்பு 31,000 சதுர கிலோ மீட்டர். இதனை 33 சதவிகிதமாக உயர்த்த வேண்டுமென்றால் வனப் பரப்பு 42,919 சதுர கிலோ மீட்டராக இருக்க வேண்டும். அப்போதுதான் தமிழ்நாட்டில் உள்ள அனைத்து வனங்களும் பாதுகாக்கப்படும். அப்படி பாதுகாக்கப்படும் அந்த இலக்கை எட்டுவதற்கு 13,500 சதுர கிலோ மீட்டர் வரையில் நாம் மரக்கன்றுகளை நட வேண்டும். இன்றைக்கு தானங்களைப் பற்றி நாம் அதிகம் கேள்விப்பட்டிருக்கிறோம். பல்வேறு தானங்களை நாம் வழங்கினாலும், இங்கிருக்கின்ற, நமது தமிழக முதலமைச்சர் அவர்கள் கடந்த ஓர் ஆண்டுக் காலத்தில் 2 கோடியே 82 இலட்சம் மரக்கன்றுகளை நடவு செய்திருக்கிறார்.

மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் 'பசுமை செயலி' என்கின்ற திட்டத்தின் மூலமாக அந்தச் செயலி பகுதி முழுவதையும் பசுமையாக மாற்றியிருக்கிறார். மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் பசுமைப் பள்ளிகளை உருவாக்கித் தந்திருக்கிறார். இதற்கெல்லாம் கூடுதலாக நமது ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அய்யா திரு. இ. பெரியசாமி அவர்கள், அவருடைய அறிவிப்பில் 70 இலட்சம் மரக்கன்றுகளுக்கு 275 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்து, Geo-tag மூலமாக அந்த மரக்கன்றுகளை வளர்ப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டிருக்கிறார். மாண்புமிகு பொதுப்

2023 ஏப்ரல் 13] [திரு. சிவ.வீ. மெய்யநாதன்]

பணித் துறை அமைச்சர் அவர்களும் நெடுஞ்சாலைகளில், ஆந்திராவில் வளர்க்கப்பட்ட 4 இலட்சம் மரக்கன்றுகளை நடவு செய்துள்ளார். இந்த ஆண்டு 5 இலட்சம் மரக்கன்றுகள் நடவு செய்யப்படும் என்ற அறிவிப்பைத் தந்திருக்கிறார். மாண்புமிகு குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறையின் அமைச்சர் அண்ணன் திரு. தா.மோ. அன்பரசன் அவர்கள் செங்கல்பட்டு மாவட்டத்தில் 50 ஏக்கர் பரப்பில், கிட்டத்தட்ட 7,500 மரக்கன்றுகளை ஒரே நாளில் நடவு செய்துள்ளார்கள். இதற்கெல்லாம் முத்தாய்ப்பாக உணவுத் துறை அமைச்சர் அவர்கள் இதுவரைக்கும் 15 இலட்சம் மரக்கன்றுகளை நடவு செய்திருக்கிறார். 6 இலட்சத்து 40 ஆயிரம் மரக்கன்றுகளை ஒரே நாளில் நடவு செய்து இன்றைக்கு அந்தப் பகுதி முழுவதையும் பசுமையாக மாற்றியிருக்கிறார்கள். இன்னும் 35 இலட்சம் மரக்கன்றுகளை அவர்கள் நடவு செய்வதற்காக நர்சரி ஒன்றை அங்கே ஏற்பாடு செய்திருக்கிறார்கள் (மேசையைத் தட்டும் ஒலி) என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 3–25

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களும் கடந்த இரண்டு ஆண்டுகளாக 2 இலட்சம் பனை விதைகளை வழங்கியிருக்கின்றார்கள். நிறைய பேர் இன்றைக்கு மரம் வளர்ப்பதில் முன்னோடிகளாக இருக்கிறோம். மரங்கள் மட்டும்தான் நம்மைக் காப்பாற்றும் என்பதை நான் தெரிவித்துக்கொள்கின்றேன். தயவுசெய்து பூமிக்கு மனதார மரக்கன்றுகளைத் தானமாகத் தாருங்கள். அதேபோன்று, மரங்கள்மீது ஆணி அடிப்பதைத் தவிர்த்துவிடுங்கள். நாம் விளம்பரம் செய்வதற்காக ஓர் உயிரை எந்தவிதத்திலும் காயப்படுத்திவிடக் கூடாது என்பதையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

நம் போற்றுதலுக்குரிய திராவிட நாயகர் அவர்களுடைய திராவிட மாடல் ஆட்சியில் சமத்துவம், சமதர்மம், சமூக நீதி, சுயமரியாதை, மொழி உணர்வு, இன உணர்வு, மாநில சுயாட்சிக் கோட்பாடுகள் என இன்று இந்திய அளவில் எழுச்சியை ஏற்படுத்தியிருக்கின்றது. இந்நிலையில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தந்தை பெரியார் அவர்களின் வைக்கம் போராட்ட நூற்றாண்டு விழா, ஓராண்டு காலம் கொண்டாடப்படும் என அறிவித்துள்ளார்கள். மாண்புமிகு கேரள முதலமைச்சர் அவர்களோடு இணைந்து கேரள மாநிலத்தில் வைக்கம்

போராட்ட நூற்றாண்டு விழாவை 1–4–2023 அன்று மிகச் சிறப்பாகத் தொடங்கி வைத்தார்கள். அடுத்த சில நாட்களில், அதாவது, 3–4–2023 அன்று அகில இந்திய அளவில் பல்வேறு கட்சிகளின் தலைவர்கள் பங்குபெற்ற சமூக நீதி மாநாட்டைக் காணொளி வாயிலாகத் தொடங்கி வைத்தார்கள். வைக்கம் போராட்டத்தின் அடிப்படையில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நாடு முழுவதும் ஏற்படுத்தியுள்ள எழுச்சி, சமூகநீதி உணர்ச்சி ஒரு புதிய எழுச்சியை இன்று உருவாக்கியுள்ளது.

இந்த வைக்கம் போராட்டத்தில் பல முக்கிய வரலாறுகள் அடங்கியுள்ளன. வைக்கத்தில், கோயில்கள் உள்ள தெருவில் தாழ்த்தப்பட்டவர்கள் நடக்கக் கூடாது என்ற தீண்டாமைக் கொடுமையை போராட்டத்தின்மூலம் ஒழித்தார் தந்தை பெரியார் அவர்கள். இந்த வைக்கம் போராட்டம்தான் அண்ணல் காந்தியடிகள் அவர்கள் தீண்டாமை ஒழிப்பில் தீவிர கவனம் செலுத்தக் காரணமாயிற்று. இந்த வைக்கம் போராட்டம்தான் அண்ணல் அம்பேத்கர் அவர்கள் மராட்டிய மாநிலம் மகத் என்னும் நகரில் தீண்டாமையை ஒழித்திட போராடுவதற்குத் தூண்டுகோலாயிற்று. இந்த வைக்கம் போராட்டத்திற்குப் பின்னர்தான் தந்தை பெரியார் அவர்கள் சாதி ஒழிப்பில் தீவிர கவனம் செலுத்தத் தொடங்கி, இறுதி காலம் வரை சாதி ஒழிப்பிற்காகப் போராடினார்கள். எனவே, எல்லா வகையிலும் முக்கியத்துவம் பெறும் வைக்கம் போராட்ட நூற்றாண்டு நினைவுகள் நாடு முழுவதும் சமத்துவம் உருவாகவும், சமூக நீதி உருவாகவும் வழிவகுக்கும். அதற்காக பெருமைக்குரிய மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு எனது நன்றியையும், வணக்கத்தையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நமக்கெல்லாம் மூத்த மொழியான தமிழ் மொழியை சிறப்பிக்கின்ற வகையில், இதற்கு முத்தாய்ப்பாக, நிலவிலிருந்து பார்த்தாலும் தெரியும் வண்ணம் தமிழ் என்ற வார்த்தை தெரிகின்ற வகையில் சுமார் 100 ஏக்கர் பரப்பளவில் ஒரு மாதிரி காடு உருவாகின்றபோது, நிலத்தை satellite-லிருந்து பார்த்தால், தமிழ்நாட்டில் இந்த இடத்தில் தமிழ் என்கின்ற வார்த்தை தெரிகின்ற வகையில் (மேசையைத் தட்டும் ஒலி) உலகத் தரத்தில் ஒரு திட்டம் மேற்கொள்ளப்படும் என்பதை நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு அமைச்சர், நீங்கள் பேசி முடிப்பதற்கு இன்னும் எவ்வளவு நேரம் ஆகும்?

2023 ஏப்ரல் 13]

மாண்புமிகு திரு. சிவ.வீ. மெய்யநாதன்: *இன்னும் ஒரு நிமிடத்தில் உரையை முடித்துவிடுகிறேன். வெட்டுத் தீர்மானத்தைத் திரும்பப் பெறுவது பற்றிச் சொல்லி முடித்துவிடுகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *நான் உங்கள் உரையில் குறுக்கிடவும் இல்லை; உங்கள் உரையைக் குறைக்கவும் சொல்லவில்லை. எவ்வளவு நேரம் ஆகும் என்றுதான் கேட்டேன். ஏனென்றால், அவை நடவடிக்கைகளை 3–30 மணிக்கு ஒத்திவைத்துவிட்டு, பின்னர் மாலைக் கூட்டத்தைத் தொடரலாம் என்பதால்தான் கேட்கிறேன்.*

மாண்புமிகு திரு. சிவ.வீ. மெய்யநாதன்: *அவ்வளவுதான். இதோ முடித்துவிடுகிறேன். மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்கள் அதிக அளவில் 96 வெட்டுத் தீர்மானங்களைத் தந்திருக்கிறீர்கள். அவையனைத்தையும் படித்துப் பார்த்தேன். என்னுடைய பதிலுரையில் அவற்றுக்கான விளக்கங்களையும், பதிலையும் அளித்திருக்கின்றேன். மேலும், எதிர்காலத்தில் ஏற்படும் தேவைக்கேற்ப, சூழ்நிலையைக் கருத்தில்கொண்டு, அவையும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு செல்லப்பட்டு, அவற்றையும் நிறைவேற்றித் தருவதற்கு முயற்சிகளை மேற்கொள்வேன் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன். எனவே, வெட்டுத் தீர்மானங்களைத் திரும்பப் பெற்று மானியக் கோரிக்கையை நிறைவேற்றித் தருமாறு உங்கள் அத்தனை பேரையும் அன்போடு கேட்டுக்கொள்கின்றேன்.*

இந்த மானியக் கோரிக்கையைத் தயாரிப்பதற்கு உறுதுணையாக இருந்த அரசு தலைமைச் செயலாளர் முனைவர் வெ. இறையன்பு, இ.ஆ.ப. அவர்களுக்கும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தனிச் செயலாளர்களான திரு. உதயச்சந்திரன், இ.ஆ.ப. அவர்களுக்கும், திரு. உமாநாத், இ.ஆ.ப. அவர்களுக்கும், திரு. சண்முகம், இ.ஆ.ப. அவர்களுக்கும், திருமதி அனு ஜார்ஜ், இ.ஆ.ப. அவர்களுக்கும், திருமதி சுப்ரியா சாஹு, இ.ஆ.ப. அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் அவர்களுக்கும், திருமதி ஜெயந்தி, இ.வ.ப. தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியத் தலைவர் அவர்களுக்கும் மற்றும் அனைத்து அதிகாரிகளுக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு நிமிடத்தில் அறிவிப்புகளின் தலைப்புகளை மட்டும் பதிவு செய்கிறேன்.

அறிவிப்புகள்

1. காலநிலை மன்றங்கள் (Climate Clubs)

தமிழ்நாடு அரசு 11,000 சூழல் மன்றங்களை பல்வேறு பள்ளிகளில் 1998 முதல் சுற்றுச்சூழல் விழிப்புணர்வுப் பணிகளுக்காக உருவாக்கியுள்ளது. மேற்கண்ட சுற்றுச்சூழல் மன்றங்களில் காலநிலை மாற்றத்தால் ஏற்படும் பாதிப்புகளை எதிர்கொள்ள அம்மன்றங்களைப் புதுப்பிப்பதும், அவற்றின் பணிகளில் மாற்றம் செய்ய வேண்டியதும் அவசியமாகிறது.

தமிழ்நாட்டை, காலநிலை மாற்றத்தைச் சிறப்பாக எதிர்கொள்ளும் மாநிலமாக உருவாக்குவதற்காகவும், இளைய தலைமுறையினர் மத்தியில் காலநிலை மாற்றம் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காகவும், தற்போது உள்ள சூழல் மன்றங்கள், காலநிலை மன்றங்களாக மாற்றி அமைக்கப்படும். இம்மன்றங்களில் வழக்கமான மன்ற செயல்பாடுகள் மேற்கொள்ளப்படுவதுடன், கலந்துரையாடல் அமர்வு, பரிசோதனை அடிப்படையில் கற்றுணர்தல், வினாடி வினா போட்டிகள் ஆகியவை நிகழ்த்தப்படும்.

2. பசுமை நகரக் குறியீடு (Green Indexing of Cities)

தமிழ்நாட்டில் நகர்மயமாதல் பல ஆண்டுகளாக சீராக அதிகரித்துக்கொண்டே வருகிறது. 2001 மற்றும் 2011 ஆம் ஆண்டுகளில் நகர்ப்புற மக்கள்தொகை 30 சதவீதம் அதிகரித்துள்ளது. இதனால் சுற்றுச்சூழல் பாதிப்பு உள்ளிட்ட பல்வேறு பிரச்சினைகள் ஏற்படுகின்றன.

இந்தப் பிரச்சினைகளை நன்கு புரிந்து கொள்வதற்கும், காலநிலை மாற்றத்திற்கு எதிராக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகளுக்கு உதவுவதற்கும், தமிழ்நாட்டில் உள்ள நகரங்களின் சுற்றுச்சூழல் செயல்திறனை மதிப்பிடுவதற்கும், இந்நகரங்களுக்குள் நேர்மறையான போட்டியை ஊக்குவிக்கவும், அந்நகரங்களின் பசுமைக் குறியீட்டின் (Green Index) அடிப்படையிலும், தேர்ந்தெடுக்கப்பட்ட தர அளவீடுகளின் அடிப்படையிலும் இந்த நகரங்கள் தர வரிசைப்படுத்தப்படும். இத்திட்டம் ரூபாய் 3 கோடி மதிப்பீட்டில் செயல்படுத்தப்படும். இந்த தரவரிசைப்படுத்துதலில் உயர் குறியீடு பெறும் நகரம் அங்கீகரிக்கப்பட்டு, அந்த ஆண்டுக்கான காலநிலை தூதராக (Ambassador) அறிவிக்கப்படும்.

2023 ஏப்ரல் 13] [திரு. சிவ.வீ. மெய்யநாதன்]

3. காலநிலை மாற்றத்தை எதிர்கொள்வதற்கான திட்டங்கள் மற்றும் தீர்வுகளுக்கு நிதியுதவி

காலநிலை மாற்றத்திற்கு எதிரான நடவடிக்கைகளில் உள்ளாட்சி அமைப்புகளுக்கு ஆர்வத்தை ஏற்படுத்துவதற்கும், காலநிலை மாற்றத்தால் ஏற்படும் பாதிப்புகளுக்குத் தீர்வு காண்பதற்கும், மாநகராட்சிகள், நகராட்சிகள் மற்றும் உள்ளாட்சி அமைப்புகளின் பணிகளில் காலநிலை மாற்றத்தை எதிர்கொள்வதற்கேற்ற புதுமைகளைப் புகுத்துவதற்கும் 10 கோடி ரூபாய் மதிப்பீட்டில் ஒரு பசுமை நிதி உருவாக்கப்படும். இந்த நிதிமூலம் காலநிலை மாற்றத்தை எதிர்கொள்வதற்காக உள்ளாட்சி அமைப்புகளிடமிருந்து சிறந்த திட்டங்கள் மற்றும் தீர்வுகளைப் பெற்று அப்பணிகளுக்கான நிதியுதவி அளிக்கப்படும். இதனால் வரும் ஆண்டுகளில் தமிழ்நாடு குறைவான கார்பன் உமிழ்வை அடையும்.

4. காலநிலைக்கேற்ற வாழ்வியல் முறை

நமது வாழ்க்கையில் சுற்றுச்சூழலுக்கு உகந்த சிறந்த வாழ்வியல் நடைமுறைகளைப் பின்பற்றவும் மற்றும் காலநிலை மாற்றத்தை எதிர்கொள்வதற்கான திறன்மிகு மாநிலமாக தமிழ்நாட்டை உருவாக்கும் நோக்கத்தின் அடிப்படையிலும், ஒன்றிய அரசின் சூழலுக்கு உகந்த வாழ்வியல் முறை (Mission LIFE) என்ற கருத்தாக்கத்தின்கீழ் "காலநிலைக்கேற்ற வாழ்வியல் முறை" என்ற திட்டம் ரூ.50 இலட்சம் செலவில் தமிழ்நாடு அரசால் நடைமுறைப்படுத்தப்படும்.

இத்திட்டத்தின்கீழ், பொதுமக்கள் பெருமளவில் திரளும் இடங்களான விழாக் கூடங்கள், திருமண மண்டபங்கள் மற்றும் சமுதாயக் கூடங்களுக்கு "சூழலுக்கு உகந்த வாழ்வியல் சான்றிதழ்" வழங்கப்படும். மேற்கூறிய மையங்களின் கழிவு மேலாண்மைத் திறன், ஆற்றல் சேமிப்பு, கழிவுநீர் மறுசுழற்சி, சுகாதாரம் மற்றும் தூய்மை போன்றவற்றை சிறப்பாகக் கையாளும் திறன் மற்றும் தகுதியின் அடிப்படையில் தேர்வு செய்யப்பட்டு இச்சான்றிதழ் வழங்கப்படும்.

பிற்பகல் 3–30

5. இராஜபாளையம் மற்றும் இராமேஸ்வரம் நகராட்சிகளை கரிம மாசு இல்லாத நகராட்சிகளாக உருவாக்குதல்

காலநிலை மாற்றத்தை எதிர்கொள்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வதில் தமிழ்நாடு தொடர்ந்து முன்னோடி மாநிலமாக விளங்கி வருகிறது. இதன் தொடர்ச்சியாக இராஜபாளையம் மற்றும் இராமேஸ்வரம் நகராட்சிகளை கரிம மாசு இல்லாத நகராட்சிகளாக உருவாக்குவதற்காக தமிழ்நாடு அரசு ஒரு சிறப்புத் திட்டத்தைச் செயல்படுத்த உள்ளது.

எரிசக்தி பயன்பாட்டில் புதுமையான நடவடிக்கைகள், குறைந்த கார்பன் உமிழ்வை ஏற்படுத்தும் வாழ்க்கை முறை குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துதல், மின் வாகனங்கள் மின்னூட்டம் (சார்ஜ்) ஏற்றிக்கொள்வதற்கான நிலையங்கள் அமைத்தல், உயிரி தொழில்நுட்பம் மூலமாக கழிவுப் பொருட்களை அகற்றுதல் போன்ற பல்வேறு நடவடிக்கைகள் மூலமாக இராஜபாளையம் மற்றும் இராமேஸ்வரம் நகராட்சிகள் கரிம மாசு இல்லாத நகராட்சிகளாக உருவாக்கப்படும்.

6. பசுமைப் பள்ளிக்கூடத் திட்டம் (Green School Programme)

காலநிலை மாற்றம் என்பது தற்போது ஒரு தவிர்க்க இயலாத பிரச்சினை என்பதால் இளைய தலைமுறையினர் இதுகுறித்து அறிந்துகொள்வதும், அதன் விளைவுகளை ஏற்பதற்கும், அதனால் ஏற்படும் பாதிப்புகளை எதிர்கொள்வதற்கும் இளைய தலைமுறையினரை தயார் செய்வது அவசியமான ஒன்றாகும். இதனைக் கருத்தில்கொண்டும், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சரின் பசுமை தமிழ்நாடு திட்டத்தின் குறிக்கோளை நடைமுறைப்படுத்துவதற்கு தேவையான சூழல் மேம்பாட்டுப் பணிகளை மேற்கொள்வதற்காகவும் 2022–2023 ஆம் ஆண்டில் 25 பள்ளிகள் பசுமை பள்ளிக்கூடங்களாகத் தேர்வு செய்யப்பட்டு, அப்பள்ளிகளில் தலா 20 இலட்சம் ரூபாய் வீதம் மொத்தம் 5 கோடி ரூபாய் மதிப்பீட்டில் இத்திட்டப் பணிகளை மேற்கொள்வதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

இதன் தொடர்ச்சியாக, 2023–2024 ஆம் ஆண்டிலும் தமிழ்நாட்டில் 10 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மேலும் 50 பள்ளிகளில் தலா 20 இலட்சம் ரூபாய் செலவில் இத்திட்டம் செயல்படுத்தப்படும்.

7. மாண்புமிகு முதலமைச்சரின் நீர்நிலை பாதுகாவலர் விருது (Hon'ble Chief Minister's Waterbody Conservator Award)

தமிழ்நாட்டின் சுற்றுச்சூழலைச் சிறப்பான முறையில் பாதுகாக்க தமிழ்நாட்டின் நீர்நிலைகளை முறையாகப் பாதுகாக்க வேண்டியது மிகவும் அவசியமான ஒன்றாகும். பல தனியார் தொண்டு அமைப்புகளும், தனிநபர்களும் உள்ளூர் அளவில் நீர்நிலைகளைப் பாதுகாப்பதில் சிறப்பான பணிகளை மேற்கொண்டு வருகிறார்கள். இவர்களின் பணிகளை அரசளவில் அங்கீகரிக்கும்பொருட்டு, தமிழ்நாட்டிலுள்ள 38 மாவட்டங்களில் நீர்நிலைகளைச் சிறப்பாகப் பாதுகாக்கின்ற மற்றும் மேம்படுத்துகின்ற 100 நபர்களுக்கு "மாண்புமிகு முதலமைச்சரின் நீர்நிலை பாதுகாவலர் விருது" வழங்கப்படும். அதன்படி ஒரு நபருக்கு ரூபாய் ஒரு இலட்சம் வீதம் ரூபாய் ஒரு கோடி செலவில் இத்திட்டம் செயல்படுத்தப்படும்.

8. தமிழ்நாடு குறுங்காடுகள் திட்டம்—காலநிலை மாற்றத்தை எதிர்கொள்வதற்காக நாட்டு மரங்கள் கொண்ட 1,000 குறுங்காடுகள் உருவாக்குதல்

குறுங்காடுகள் இயற்கையாகவே காலநிலை மாற்ற பாதிப்புகளை எதிர்கொள்வதிலும், காலநிலை மாற்ற மேலாண்மை செயல் திட்டங்களிலும் முக்கியப் பங்கு வகிக்கின்றன.

இந்த குறுங்காடுகள் திட்டத்தின்கீழ் நாட்டு மரங்கள் கொண்ட 1,000 குறுங்காடுகள் தொழிற்சாலைகளால் உருவாக்கப்படும். இது மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் பசுமை தமிழ்நாடு திட்டத்தின் இலக்கு மற்றும் நோக்கங்களை அடைய உதவும் விதமாகச் செயல்படுத்தப்படும்.

9. சுற்றுச்சூழல் ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி மையம் அமைத்தல்

தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரிய தலைமை அலுவலகக் கட்டடத்தின் அருகில் சுற்றுச்சூழல் பாதுகாப்பு, ஒற்றை பயன்பாடு பிளாஸ்டிக் பொருட்களுக்கு மாற்றான சுற்றுச்சூழலுக்கு உகந்த பொருட்கள் போன்ற பசுமை திட்டங்களுக்கான ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி மையம் மற்றும் மேம்பட்ட சுற்றுச்சூழல் ஆய்வகம், திடக்கழிவுகள், மருத்துவக் கழிவுகள் மற்றும் தீங்கு விளைவிக்கும் கழிவுகளின் மேலாண்மையை நிகழ்நேர அடிப்படையில் தொடர்ந்து கண்காணிக்க ஒருங்கிணைந்த சுற்றுச்சூழல் கண்காணிப்பு காணொளி அரங்கம் ஆகியவை சூரிய ஆற்றல்

பயன்பாடு, மழைநீர் சேகரிப்பு அமைப்பு, இயற்கை வனப்பு, திடக்கழிவு மேலாண்மை மற்றும் உரமாக்கல், கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம், எரிசக்தி சேமிப்பு விளக்குகள் போன்ற வசதிகளுடன் தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியத்தால் அமைக்கப்படும்.

10. கழிவு உற்பத்தியாளர்கள் மற்றும் பயனர்களுக்கு இடையே கழிவுகளை பரிமாறிக்கொள்வதற்கு இணையவழி கழிவு பரிமாற்ற தளம் (Waste Exchange Bureau) அமைத்தல்

தொழிற்சாலைகளிலிருந்து வெளியேற்றப்படும் தீங்கு விளைவிக்கும் கழிவுகள், நெகிழி கழிவுகள், மின்னணுக் கழிவுகள், எரிகலன் கழிவுகள் மற்றும் டயர் கழிவுகளின் அளவைக் காட்சிப்படுத்தவும், சந்தைப்படுத்தவும், கழிவு மேலாண்மை அமைப்பிற்கு உதவும் ஒரு இணையவழி பரிமாற்ற தளம் (Waste Exchange Bureau) தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியத்தால் அமைக்கப்படும்.

இத்தளம் கழிவுகளை ஆதாரத்திலேயே பிரிப்பதை ஊக்குவிப்பதோடு, நீட்டிக்கப்பட்ட உற்பத்தியாளர் பொறுப்பை (Extended Producer Responsibility) நிறைவேற்ற தொழிற்சாலைகளுக்கு உதவும். மேலும், இது கழிவு மேலாண்மைத் துறையில் புதிய வணிகங்களுக்கும் (Startups) வழிவகுக்கும்.

11. சுழற்சி பொருளாதாரத்தில் (Circular Economy) குப்பை சேகரிப்பவர்களின் பங்களிப்பினை முதன்மைப்படுத்துவதற்கான திறன் மேம்பாட்டுப் பயிற்சி அளித்தல்

சென்னை மாநகரத்தில் உள்ள குப்பை சேகரிப்பவர்களை (Rag Pickers) கணக்கெடுத்து, அவர்களின் திறனை மேம்படுத்த பயிற்சி வழங்கப்படும். குப்பை சேகரிப்பவர்களுக்கு கழிவு மேலாண்மை, உடல் நலம், சமூகப் பாதுகாப்பு, சமூக பொறுப்புணர்வு, நிதிக் கல்வி முதலியவற்றை உள்ளடக்கிய முழுமையான பயிற்சியாக இது அமையும்.

இப்பயிற்சிகளின்மூலம் குப்பை சேகரிப்பு அதிகப்படுத்தப்பட்டு சுழற்சி பொருளாதாரம் (Circular Economy) மேம்படுத்தப்படும். மேலும், அவர்களின் சமுதாய பொருளாதார நிலையும் மேம்படும். குப்பை சேகரிப்பவர்களின் வாழ்வில் மறுமலர்ச்சியை ஏற்படுத்தும் இத்திட்டம் ரூபாய் 1 கோடி செலவில் நிறைவேற்றப்படும்.

2023 ஏப்ரல் 13] *[திரு. சிவ.வீ. மெய்யநாதன்]*

12. கடல்வாழ் பல்லுயிரினங்களைப் பாதுகாக்கும்பொருட்டு பயன்படுத்தி, தூக்கி எறியப்படும் மீன்பிடி வலைகளைச் சேகரித்து மறுசுழற்சிக்கு அனுப்புவதற்கான திட்டம் (TN Fishnet Initiatives)

பயன்படுத்தி தூக்கி எறியப்படும் மீன்பிடி வலைகளால், கடல் மாசுபடுவதோடு மட்டுமல்லாமல், கடல்வாழ் உயிரினங்களுக்கும் பாதிப்பு ஏற்படுகிறது.

*இதனைத் தவிர்ப்பதற்கு மீன்பிடி வலைகளை மீட்டெடுத்து மறுசுழற்சிக்கு அனுப்புவதற்கான சேகரிப்பு மையங்கள் (*Collection centres*) ஏற்படுத்தப்படும். மீன்பிடி வலைகளை நிலையான முறையில் அப்புறப்படுத்தும் மையங்களாக இவை செயல்படும். மீன்பிடி வலைகளைத் தயாரிக்கும் உற்பத்தியாளர்களின் நீட்டிக்கப்பட்ட பொறுப்பிற்கு (*Extended Producer Responsibility*) உதவும் இத்திட்டம், ரூபாய் 1 கோடி செலவில் நிறைவேற்றப்படும்.*

13. மேம்படுத்தப்பட்ட சுற்றுச்சூழல் ஆய்வகங்களுக்கு, ஆய்வகங்களுக்கான தேசிய அங்கீகார வாரியம் (NABL) மற்றும் சுற்றுச்சூழல் பாதுகாப்புச் சட்டத்தின்கீழ் அங்கீகாரம் பெறுதல்

*சர்வதேச அங்கீகாரம் பெறுவதற்காகவும், ஆய்வறிக்கையின் மீதான நம்பகத்தன்மையை அதிகரிப்பதற்காகவும், மறுசோதனை செய்வதற்கான தேவையைக் குறைப்பதற்காகவும், நேரம் மற்றும் செலவினங்களைக் குறைப்பதற்காகவும், திருச்சி, வேலூர் மற்றும் திருநெல்வேலியில் உள்ள மூன்று மேம்படுத்தப்பட்ட சுற்றுச்சூழல் ஆய்வகங்களுக்கு, ஆய்வகங்களுக்கான தேசிய அங்கீகார வாரியத்தின் (*National Accreditation Board for Laboratories*) அங்கீகாரம் மற்றும் சேலத்தில் உள்ள மேம்படுத்தப்பட்ட சுற்றுச்சூழல் ஆய்வகத்திற்கு சுற்றுச்சூழல் பாதுகாப்புச் சட்டம் 1986-ன்கீழ் அங்கீகாரம் ரூபாய் மூன்று கோடி செலவில் பெறப்படும்.*

14. தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியத்தின் எட்டு மேம்படுத்தப்பட்ட சுற்றுச்சூழல் ஆய்வகங்களில் நுண்ணுயிரியல் பகுப்பாய்வு பிரிவு (Microbiological Analysis Wing) ஏற்படுத்துதல்

ஆறுகள், நீர்நிலைகள் மற்றும் அன்றாட கழிவுநீரில் உள்ள நுண்ணுயிர் காரணிகளைப் பகுப்பாய்வு செய்யவும், கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களின் செயல்திறனை மதிப்பீடு செய்யவும், நீர்நிலைகளின் தன்மை மற்றும் சுற்றுச்சூழலில் ஏற்படும்

மாற்றங்களைக் கண்டறியவும், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியத்தின் எட்டு மேம்படுத்தப்பட்ட சுற்றுச்சூழல் ஆய்வகங்களில் நுண்ணுயிரியல் பகுப்பாய்வு பிரிவு (Microbiological Analysis Wing) ரூபாய் நான்கு கோடி செலவில் ஏற்படுத்தப்படும்.

15. தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்துடன் இணைந்து மாசினால் பாதிக்கப்பட்ட பகுதிகளின் மண் தர வரைபடம் (Soil Quality Mapping) தயாரித்தல்

தமிழ்நாட்டில் மாசினால் பாதிக்கப்பட்ட பகுதிகளைக் கண்டறியவும், அப்பகுதிகளில் பாதிக்கப்பட்ட மண் தரத்தினை தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தி அறிந்து, மரங்களை நட்டு மறுசீரமைப்பு செய்வதற்காக, இப்பகுதிகளில் மண்மாதிரிகள் சேகரிக்கப்பட்டு இயற்பியல், இரசாயன மற்றும் உயிரியல் மாசு அளவுகளை ஆய்வு செய்து, மாசுபடுத்தும் காரணிகள் பற்றிய தரவுத்தளத்தை உருவாக்கி, உயர் தெளிவுத்திறன் கொண்ட செயற்கைக்கோள் தரவைப் பயன்படுத்தி பாதிக்கப்பட்ட பகுதிகளின் மண் தர வரைபடம் (Soil Quality Mapping) தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்துடன் இணைந்து ரூபாய் மூன்று கோடி செலவில் தயாரிக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இவ்வளவு நேரம் இந்த வாய்ப்பினைத் தந்தமைக்கு நன்றிகூறி, விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் அவர்கள், மாண்புமிகு சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத் துறை அமைச்சர் அவர்கள், மாண்புமிகு குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் அவர்கள் ஆகியோர் தங்களது பதிலுரையை மாலை 4.00 மணிக்கு வழங்குவார்கள்.

பேரவையின் இன்றைய காலை நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் மாலை 4–00 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 3–31 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

மாலைக் கூட்டம்

மாண்புமிகு பேரவைத் தலைவர் **திரு. மு. அப்பாவு** *அவர்கள் தலைமையில் மாலை 4–00 மணியளவில் பேரவை மீண்டும் கூடியது.*

7. மானியக் கோரிக்கைகள், 2023–2024, விவாதமும் வாக்கெடுப்பும்—*தொடர்ச்சி*

(அ) கோரிக்கை எண் 9–பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை

(ஆ) கோரிக்கை எண் 18–கதர், கிராமத் தொழில்கள் மற்றும் கைவினைப் பொருட்கள் (கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை)

(இ) கோரிக்கை எண் 15–சுற்றுச் சூழல் மற்றும் காலநிலை மாற்றம் (சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத் துறை)

(ஈ) கோரிக்கை எண் 54–வனம் (சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத் துறை)

} *தொடர்ச்சி*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பதிலுரை. மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. R.S. ராஜகண்ணப்பன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கொட்டுகின்ற மழை; கொளுத்துகின்ற வெயில்; ஆர்ப்பரிக்கும் அலைகடல்; இவையனைத்தும் ஒன்றாக*

வந்தாலும், மலை குலைந்தாலும் நிலைகுலையா மாணிக்கத் தலைவராய் திராவிட இயக்கத்தை வழிநடத்துகின்ற ஒப்பற்றத் தலைவர், நம்முடைய கழகத் தலைவர் தமிழ்நாட்டினுடைய மாண்புமிகு முதலமைச்சர் தளபதியார் அவர்களை வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

தொண்டு செய்து பழுத்த பழம்;
தூய தாடி மார்பில் விழும்;
மண்டைச் சுரப்பை உலகு தொழும்;
மனக் குகையில் சிறுத்தை எழும்;
அவர்தாம் தந்தை பெரியார்!

தமிழுக்குத் தொண்டு செய்தோன் தமிழ் வீரன்; காஞ்சி தந்த கரிபால்டி; இந்நாட்டு இங்கர்சால்; தென்னாட்டு பெர்னாட்ஷா பேரறிஞர் அண்ணா.

“ஓடி வந்த இந்திப் பெண்ணே கேள். நீ தேடி வந்த கோழையுள்ள நாடு இதல்லவே” என்று 14 வயதில் திராவிட இயக்க உணர்வுகளை மனதிலே தாங்கி, கொடிபிடித்து கொள்கை முழக்கமிட்ட முத்தமிழறிஞர், ஓய்வறியா உழைப்பாளி நம்முடைய தலைவர் கலைஞர் அவர்களையும் வணங்குகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சமூக நீதி என்பது ஓர் ஆழமான துறை. நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இந்தியாவிற்கே வழிகாட்டியாக சமூக நீதியை முன்னெடுத்து ஒரு மிகப் பெரிய நிகழ்ச்சியை நடத்தியிருக்கிறார். ஆகவே, பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர், சிறுபான்மையினர், பட்டியலின மக்கள், ஆதி திராவிடர், அருந்ததியர் உள்ளிட்ட பல்வேறு சமுதாய மக்கள், இந்துக்கள், கிறிஸ்தவர்கள் என்று 88 சதவிகித மக்கள் இந்தத் திராவிட இயக்க உணர்விலே கலந்தவர்கள். சுமார் 10 சதவிகித மக்கள்தான் பல்வேறு சமுதாய அடிப்படையில் உள்ளவர்கள். அந்த அடிப்படையில், பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறையை தன்னுடைய நெஞ்சத்திலே தாங்கி, இந்தத் துறை சிறப்பாக விளங்க வேண்டுமென்பதற்காக நம்முடைய தலைவர், தளபதியார், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பல்வேறு முயற்சிகளை எடுத்துக் கொண்டிருக்கிறார்கள்.

2023 ஏப்ரல் 13] [திரு. R.S. ராஜகண்ணப்பன்]

பிற்பகல் 4-05

மகன் தந்தைக்காற்றும் உதவி இவன்தந்தை
என்நோற்றான் கொல்லெனும் சொல்

நம்முடைய இளைய தளபதி, இளையவர், சின்னவர் என்று நம்மால் அன்போடு அழைக்கப்படுகின்ற மாண்புமிகு திரு. உதயநிதி ஸ்டாலின் அவர்கள் ஒற்றைச் செங்கல்லை கையிலே எடுத்து, தமிழ்நாடு முழுவதும் வலம் வந்து, திராவிட இயக்க உணர்வுகளை கையிலே ஏந்தினார். இந்த ஆட்சியைக் கொண்டு வருவதற்குக் காரணமாக இருந்தவரில் அவரும் ஒருவர் என்பதை இந்த நாடு மறக்க முடியாது. அப்படிப்பட்ட ஒருவரை நம்முடைய இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சராக நாம் அனைவரும் பார்த்துக் கொண்டிருக்கிறோம். தமிழகம் முழுவதும் மிகப் பெரிய வரவேற்பை அவர் பெற்றிருக்கிறார். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கும், மாண்புமிகு அவை முன்னவர் அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் பெருமக்களுக்கும், அனைத்து மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் என்னுடைய நல்வாழ்த்துகளை, அன்பான ஒரு வாழ்த்துச் செய்தியினை நான் அன்போடு தெரிவித்துக்கொள்கின்றேன். எனக்கு பெருவாரியான வாக்களித்து, பல்லாயிரக்கணக்கான வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றிபெறச் செய்த முதுகுளத்தூர் தொகுதி மக்களுக்கு நான் என்றென்றைக்கும் கடமைப்பட்டவன் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

தமிழ்நாடு என்பது சமூக நீதியை முன்னிறுத்துவதிலும், சமூக நீதியை வெற்றிபெறச் செய்வதிலும் முன்னிலை வகிக்கின்ற ஒரு மாநிலம். அந்தத் தமிழ்நாட்டு உணர்வுகளை அடிப்படையாக வைத்துத்தான் நம்முடைய மற்ற மாநிலங்களெல்லாம் நமக்குப் பின்னே வருகின்றன. இந்தச் சமூக நீதி வரலாற்றில் தந்தை பெரியாருக்குப் பிறகு, பேரறிஞர் அண்ணாவிற்குப் பிறகு, தலைவர் கலைஞருக்குப் பிறகு, இன்றைக்கு சமூக நீதி தமிழ்நாட்டிலே இருக்கிறதென்று சொன்னால், நம்முடைய தளபதியார் அவர்கள் திராவிட மாடல் ஆட்சியை நடத்திக் கொண்டிருக்கின்ற காரணத்தினால்தான் இன்றைக்கு திராவிட இயக்கத்தினுடைய உணர்வுகளை நாம் அனைவரும் பிரதிபலித்துக் கொண்டிருக்கிறோம். கல்வி உதவித் தொகை வழங்குதல், தொழிற்கல்வி, பாலிடெக்னிக், பட்டப்படிப்பு ஆகியவற்றில் இலவசக் கல்வி அறிவித்தல், இலவச மிதிவண்டிகள் வழங்குதல், இலவசச் சீருடை வழங்குதல்,

இலவசமாகத் தங்கிப் பயில விடுதிகள் ஏற்படுத்தித் தருதல், கிராமப்புற பிற்படுத்தப்பட்ட மற்றும் சீர்மரபின இன மாணவியர்களுக்கு ஊக்கத் தொகை வழங்குதல் போன்ற பல திட்டங்கள் இந்தத் துறைமூலம் செயல்படுத்தப்படுகின்றன. தமிழ்நாட்டில் 1921 ஆம் ஆண்டு இடஒதுக்கீடு நல்ல முறையில் இருந்து வந்தது. ஆனால், இந்திய அரசமைப்புச் சட்டம் 1950 நடைமுறைக்கு வந்தபோது இந்த இடஒதுக்கீடு முறை ஒழிக்கப்பட்டது. அதை எதிர்த்துத்தான் தந்தை பெரியார் அவர்களும், அண்ணல் அம்பேத்கர் அவர்களும் மிகப் பெரிய போராட்டத்தை நடத்தினார்கள். தந்தை பெரியார் அவர்கள் நடத்திய போராட்டத்தின் விளைவாகத்தான், அண்ணல் அம்பேத்கர் அவர்கள் நடத்திய அந்த முன்னுரிமை அடிப்படையில்தான், நம்முடைய மக்களுக்கு சமூக நீதி கிடைத்தது. அந்தச் சமூக நீதியில் பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் மற்றும் பட்டியல் இனத்தவர் என அனைத்து மக்களுக்கும், திராவிட இயக்க உணர்வுள்ள அனைத்து மக்களுக்கும் இடஒதுக்கீடு கிடைப்பதற்குக் காரணமாக இருந்தவர்கள் தந்தை பெரியார் அவர்களும், அண்ணல் அம்பேத்கர் அவர்களும்தான். 1951 ஆம் ஆண்டு அவர்களுடைய போராட்டம் நடந்தது. அதற்குப் பிறகுதான் அரசமைப்புச் சட்டத்திலே 15(4) என்று சேர்க்கப்பட்டு, முதல் அரசமைப்புச் சட்டத் திருத்தத்திற்கு வழி வகுத்தது, நம்முடைய தந்தை பெரியார் அவர்களும், அண்ணல் அம்பேத்கர் அவர்களும்தான். ஆக, அப்படிப்பட்ட ஒரு சூழ்நிலையை உருவாக்கியவர்கள், தமிழ்நாட்டிற்கு அரசமைப்புச் சட்டம்மூலம் நீதி மறுக்கப்பட்டபோது, சமூக நீதியைக் கொண்டு வந்த மாபெரும் தலைவர்கள் நம்முடைய தந்தை பெரியார் அவர்களும், அண்ணல் அம்பேத்கர் அவர்களும்தான்.

பிற்பகல் 4–10

சமீபத்தில் நடந்த ஈரோடு இடைத் தேர்தலிலே நான் ஒரு வேடிக்கையைப் பார்த்தேன். தந்தை பெரியார் அவர்கள் வீட்டிற்கு நான் அதுவரை சென்றதில்லை. அன்றைக்கு நான் சென்றேன். அப்போது தலைவர் கலைஞர் அவர்களும், பேரறிஞர் அண்ணா அவர்களும்,—குடியரசு பத்திரிகையிலே அண்ணா அவர்கள் ஆசிரியராக இருந்திருக்கிறார். கலைஞர் அவர்கள் துணை ஆசிரியராக இருந்திருக்கிறார். இரண்டு பேரும் சேர்ந்து,— அவர் ஓர் அறையிலே இருந்திருக்கிறார். இவர் ஓர் அறையிலே இருந்திருக்கிறார். அந்த அறைகளைக் காண்பித்தார்கள். ஓர்

2023 ஏப்ரல் 13] [திரு. R.S. ராஜகண்ணப்பன்]

அடுப்புதான் வைத்திருக்கிறார்கள். அதில் ஒரு விறகு தான் போகும். குடியரசு பத்திரிகையை பெரியார் நடத்தியிருக்கிறார். ஆசிரியராக அண்ணா இருந்திருக்கிறார். துணை ஆசிரியராக நம்முடைய அருமைத் தலைவர் கலைஞர் இருந்திருக்கிறார். ஆக, எப்படிப்பட்டவர்கள் திராவிட இயக்கத்தை வளர்த்தார்கள், நாமெல்லாம் இந்த இடத்திலே எப்படி நின்று கொண்டிருக்கிறோம் என்பதை எண்ணிப் பார்க்கின்றபோது, அந்தத் திராவிட இயக்க உணர்வு என்பது அவர்கள் பட்ட கஷ்டத்தின் விளைவுதான் என்பதை அன்றைக்கு என்னால் உணர முடிந்தது. அதற்குப் பிறகுதான் இந்த இயக்கம் மாபெரும் வெற்றிபெற்றது. திராவிட இயக்கம் மேற்கு மாவட்டங்களில் வெற்றிபெற முடியாது என்று நினைத்தவர்களெல்லாம், மூக்கிலே விரல் வைக்கின்ற அளவிற்கு காங்கிரஸ் கட்சியை வெற்றிபெற வைத்த பெருமை நம்முடைய தலைவர் தளபதி அவர்களுக்கு உண்டு. (மேசையைத் தட்டும் ஒலி) நம்முடைய கூட்டணிக் கட்சிக்கு விட்டுக்கொடுக்கின்ற மனப்பான்மையும், அந்த வெற்றியைக் காணுகின்ற முகமும், அன்றைக்கு அவர் அந்தத் தொகுதியிலே காலையிலிருந்து மாலை வரை சுற்றுப்பயணம்செய்து ஆற்றிய பணிகளும் இன்றைக்கும் எங்கள் மனதில் நினைவிலே இருக்கின்றன. அனைத்து அமைச்சர்களும் அந்தப் பகுதியில் இருந்து பணியாற்ற வேண்டுமென்று உத்தரவிட்டதன் காரணமாக, 25 நாட்கள் உட்கார்ந்து, ஒரு தோழமைக் கட்சிக்குப் பணியாற்றினோம். ஆகவே, தோழமை உணர்வு என்பதை எவ்வாறு அவர் செயல்படுத்துகிறார் என்பதை அன்றைக்குத்தான் பார்க்க முடிந்தது. ஆகவே, அப்படிப்பட்ட திராவிட இயக்கத்தை வளர்த்ததன் காரணமாகத்தான் இன்றைக்கு பிற்படுத்தப்பட்ட, ஒடுக்கப்பட்ட மக்களுக்கு சமூக நீதி, நியாயம் கிடைத்திருக்கிறது என்பதை நீங்கள் எண்ணிப் பார்க்க வேண்டும். அந்த அடிப்படையில்தான், நம்முடைய தலைவர் கலைஞர் அவர்களையும், பேரறிஞர் அண்ணா அவர்களையும், தந்தை பெரியார் அவர்களையும் நாம் நினைத்துப் பார்க்காமல் இருக்க முடியாது.

திரு. வி.பி. சிங் காலத்தில், கொண்டுவரப்பட்ட 27 சதவிகித இட ஒதுக்கீட்டுக்கு, அது கொண்டு வரப்படுவதற்கு நம்முடைய தலைவர் கலைஞர் அவர்கள் ஒரு காரணமாக இருந்தார். 27 சதவிகித இட ஒதுக்கீடு என்பது ஒடுக்கப்பட்ட, பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு, OBC (Other Backward Classes) என்று சொல்லப்படுகின்ற மக்களுக்குக் கிடைக்க வேண்டும் என்பதற்காக நம்முடைய கலைஞர் அவர்கள்

மிகவும் அரும்பாடுபட்டார். அந்த அடிப்படையில்தான், திரு. வி.பி. சிங் அவர்களும் அந்தத் திட்டத்தைக் கொண்டு வந்தார்கள்.

நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இந்த 27 சதவிகித இட ஒதுக்கீடு மருத்துவத் துறையில் கிடைக்க வேண்டுமென்று போராடி, மிகப் பெரிய ஒரு வெற்றி வாய்ப்பை உருவாக்கி, OBC (Other Backward Classes) மாணவ, மாணவியருக்கு மருத்துவக் கல்லூரிகளில் 27 சதவிகிதம் இடம் கிடைக்கின்ற ஒரு மிகப் பெரிய வரலாற்று சிறப்புமிக்க சாதனையை நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் செய்தார்கள். அதை நாம் பாராட்டாமல் இருக்க முடியாது. ஆகவே, இப்படிப்பட்ட திராவிட இயக்கத்தினுடைய தலைவர்களெல்லாம் இருக்கிற காரணத்தினால்தான், இன்றைக்கு நாம் பாதுகாப்பாக, பத்திரமாக தொடர்ந்து பீடுநடை போட்டுக்கொண்டிருக்கிறோம். அடுத்து, ஒன்றை நான் குற்றச்சாட்டாகச் சொல்லவில்லை. இன்று காலையில் நம்முடைய பாட்டாளி மக்கள் கட்சியைச் சேர்ந்த நண்பர்கள் இட ஒதுக்கீடு வேண்டுமென்று சொன்னார்கள். அதற்கு, நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தெளிவாக விளக்கம் சொன்னார்கள். அதற்குப் பிறகு, அவர்கள் அதை ஒப்புக்கொண்டு விட்டார்கள். அதைப்பற்றி, நான் அதிகமாக உள்ளே போக விரும்பவில்லை. ஓர் உதாரணத்திற்குச் சொல்கிறேன். ஒன்றிய அரசு தேசிய அளவில் இந்தக் கணக்கெடுப்பை நடத்த வேண்டும். முதலில், திரு. அம்பா சங்கர் நடத்தினார்; அதற்கு முன்னால் திரு. ஜனார்த்தனம் அவர்கள் ஓர் அறிக்கையைக் கொடுத்தார். இதெல்லாம் 40 வருடங்களுக்கு முன்பு நடந்தது. அப்போது நடந்தது எல்லாம் பிரயோஜனப்படாது. அப்படிப்பட்ட கணக்கெடுப்புகளெல்லாம் சரியாக வராது. மாநில அரசோடு சேர்ந்து ஒன்றிய அரசு நடவடிக்கைகளை மேற்கொண்டால்தான், யார் யார், எந்தெந்த சமூகம், எவ்வளவு தூரம் இருக்கின்றனர், யார், யார் எத்தனை சதவிகிதம் உள்ளனர் என்பதை அறிய முடியும். இன்று காலையில் பேசிய திரு. பழனியாண்டி அவர்களும், திரு. மணி அவர்களும், திரு. அருள் அவர்களும் objection தெரிவித்தார்கள். அவர்கள் சொல்வதில் நியாயம் இருக்கிறது. யார், யார் எவ்வளவு சதவிகிதம் இருக்கிறார்கள்; எந்தெந்த சமூகத்தின் அடிப்படையில் எவ்வளவு பேர் இருக்கின்றனர் என்பதை அறிய முடியும். சமூகத்திற்கு இட ஒதுக்கீடு கொடுப்பது என்பது ஒரு நியாயமான காரியம். —அந்த அளவிலேதான் நம்முடைய Backward Classes Commission தலைவர் அவர்கள்—2021 ஆம்

2023 ஏப்ரல் 13] [திரு. R.S. ராஜகண்ணப்பன்]

ஆண்டு 8-வது சட்டமாக சென்ற அரசு கொண்டுவந்தது. அதை எதற்காகக் கொண்டுவந்தார்கள் என்பது உங்களுக்குத் தெரியும்.

தமிழ்நாட்டில் கன்னியாகுமரியிலிருந்து கிருஷ்ணகிரி வரையில் பல்வேறு சமுதாய மக்கள் இருக்கின்றனர். ஆகவே, நாம் எடுத்தோம், கவிழ்த்தோம் என்று ஓர் ஆட்சியைச் செய்ய முடியாது. Supreme Court 31-3-2022-ல் வழங்கிய judgement-ல் என்ன சொல்லியிருக்கிறது என்றால் 'தரவுகள்' என்று சொல்லியிருக்கிறது. 'தரவுகள்' என்றால் என்ன? சமூக, பொருளாதார நிலை, கல்வி, வேலைவாய்ப்பு, அவர்களுடைய எண்ணிக்கை போன்றவற்றையெல்லாம் அடிப்படையாக வைத்துக்கொண்டுதான் இட ஒதுக்கீடு கொடுக்க வேண்டும்; தனிப்பட்ட ஓர் இட ஒதுக்கீட்டை எண்ணிக்கையின் அடிப்படையில் கொடுக்கக்கூடாது என்பதுதான் அவர்களுடைய கொள்கை. அந்த அடிப்படையிலேதான் மரியாதைக்குரிய நீதியரசர்கள் திரு. நாகேஸ்வர ராவ் அவர்களும், திரு. ஹவாய் அவர்களும் உச்ச நீதிமன்றத்தில் இந்தத் தீர்ப்பை வழங்கினார்கள். மதுரை உயர் நீதிமன்றத்திலிருந்து பெறப்பட்ட judgement-ம் அந்தத் தீர்ப்பின் அடிப்படையிலேதான். அதற்குமேல் நாம் appeal-க்குச் சென்றோம். Appeal-க்குப் போகும்போது, நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஒரு பெரிய meeting-ஐ கூட்டினார்கள். இந்த அரசு யாருக்கும், எந்தச் சமுதாயத்திற்கும் விரோதமான அரசு இல்லை. ஒடுக்கப்பட்ட மக்களுக்கு சமூக நீதி கிடைக்க வேண்டுமென்பதில் தெளிவாக இருக்கிறார் நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள். எனவே, அவர் ஒரு கூட்டத்தைக்கூட்டி, 'யார் யார் appeal செய்ய வேண்டும்; யார் யாரை வைத்து வழக்கை நடத்தலாம்' என்று கேட்டார். முக்கியமான, பிரபலமான வக்கீல்கள், திரு. ராகேஷ் திரிவேதி, திரு. முகில் ரோத்தகி, திரு. அபிஷேக் சிங்வி, திரு. வில்சன் போன்றவர்களையெல்லாம் வைத்து Supreme Court-ல் case நடத்தினார்கள். சென்ற ஆட்சியில் கொண்டு வந்த சட்டத்தை மதித்து, அவர்களுக்காக case நடத்தினார்கள். நம்முடைய உரிமைக்காகப் போராடினோம். நம்முடைய Advocate General எல்லாம் வந்திருந்தார்கள். எல்லோரும் உட்கார்ந்து, சம்பந்தப்பட்ட அரசு அதிகாரிகளுடன் சேர்ந்து கூட்டம் நடத்தி, பேசி, வழக்கை நடத்தினார்கள். உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்பில் 7 points சொன்னார்கள். அதில் 6 points-ஐ இந்த அரசுக்குச் சாதகமாகக் கூறி தீர்ப்பை வழங்கினார்கள். அந்த 6 points என்னவென்றால், ஒன்று, உள் ஒதுக்கீடு வழங்குவதற்கு மாநில அரசுக்கு அதிகாரம் உள்ளது என்பதாகும். இதை

சுப்ரீம் கோர்ட்தான் சொல்லியிருக்கிறதே தவிர, ஒன்றிய அரசு சொல்லவில்லை. அந்தந்த உள் ஒதுக்கீட்டை மாநில அரசே வழங்குவதற்கு அதிகாரம் அளிக்க வேண்டும் என்று நாம் ஒன்றிய அரசை வலியுறுத்திக் கொண்டேயிருக்கிறோம்.

பிற்பகல் 4–15

இஸ்லாமியர்களுக்கு இட ஒதுக்கீட்டினை முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்கள் வழங்கினார்கள். அதேபோன்று, அருந்ததியர்களுக்கு உள் ஒதுக்கீட்டினை வழங்கினார்கள். இவற்றையெல்லாம் நாம் வழங்கியபோது, இது மாநிலத்தினுடைய அதிகாரத்திற்குட்பட்டது என்பதை ஒன்றிய அரசுக்கு அடிக்கடி நினைவுபடுத்துகிறோம், வலியுறுத்துகிறோம். அதை ஒன்றிய அரசு கொண்டு வந்தால்தான், அதை நாம் நடைமுறைப்படுத்த முடியும் என்பது ஒரு நியதி. அந்த அடிப்படையில் நாம் கேட்கிறோம். ஆனால், சுப்ரீம் கோர்ட், மாநில அரசினுடைய வாதம் மிகத் தெளிவானது என்று சொல்கிறது. 6 points–ல் இதுவொரு point ஆகும். வழக்குரைஞர்கள் திறமையான வாதங்களை எடுத்து வைத்தார்கள் என்று மாநில அரசைப் பாராட்டியிருக்கிறது. ஆகவே, வன்னியர் இன மக்களுக்கு இட ஒதுக்கீடு கொடுப்பதிலே நமக்கு எந்தவிதமான கருத்து வேறுபாடும் கிடையாது. நாம் தெளிவாக வழக்கை நடத்தினோம். ஆனால், தரவுகள் இல்லாமல், 40 வருடங்களுக்கு முன்பு எடுத்த கணக்கை வைத்துக்கொண்டு, நீங்கள் இட ஒதுக்கீடு கொடுக்கக்கூடாது, இந்த இட ஒதுக்கீட்டினை, அவர்களுடைய வேலைவாய்ப்பு, பொருளாதார நிலை, படிப்பு, எண்ணிக்கை போன்றவற்றின் அடிப்படையில்தான் வழங்க வேண்டும் என்று கூறி, வழக்கை உச்ச நீதிமன்றம் dismiss செய்துவிட்டது. அதற்குப் பிறகு தணிகாசலம் Commission வேண்டாம் என்று சொல்லி, திரு. பாரதிதாசன் என்ற நேர்மையான நீதிபதியை வைத்து ஒரு Commission அமைத்தோம். அவரிடம் 3 மாதத்திற்குள் அறிக்கை அளிக்க வேண்டும் என்று கேட்டோம். அதற்கிடையே, ஒருவர் உயர் நீதிமன்றம் சென்று stay வாங்கிவிட்டார். உயர் நீதிமன்றம், internal arrangements எதுவும் செய்யக் கூடாது என்று சொல்லிவிட்டது. 3–வது மாதத்தில் உயர் நீதிமன்றம், 'State Government எந்த internal arrangements–ம் செய்யக்கூடாது' என்று உத்தரவு போட்டது. அதற்குப் பிறகு, 3 மாதத்தில் நாம் ஒன்றும் செய்ய முடியவில்லை. 3 மாதங்களில் எப்படி தரவுகள் எடுக்க முடியும்? நம்முடைய மரியாதைக்குரிய சட்டமன்ற உறுப்பினர் அண்ணன் மணி

2023 ஏப்ரல் 13] [திரு. R.S. ராஜகண்ணப்பன்]

அவர்கள், 1 மாதத்தில், 1 வாரத்தில் தரவுகளை எடுக்கலாம் என்று சொல்கிறார். எப்படி எடுக்க முடியும்? எத்தனை சமுதாயத்தினர் உள்ளனர்? கன்னியாகுமரி முதல் கிருஷ்ணகிரி வரை எடுக்க வேண்டும் என்றாலும், எத்தனை சமுதாயத்தினர் இருக்கிறார்கள்? ஒவ்வொருவருடைய படிப்பு, ஒவ்வொருவருடைய பொருளாதார நிலை, ஒவ்வொருவருடைய உத்தியோகம் என எல்லாத்தரப்பு மக்களைப் பற்றியும் தரவுகள் எடுக்க வேண்டும். ஓர் அரசு என்பது, எடுத்தேன் கவிழ்த்தேன் என்று எந்த முடிவையும் எடுக்க முடியாது. ஆகவேதான், நம்முடைய முதலமைச்சர் அவர்கள் நிதானமாகச் செல்கிறார். அவருடைய வழியில்தான் இந்த அரசு செல்கிறது. அப்படிப்பட்ட நல்ல காரியங்களை நம்முடைய முதலமைச்சர் அவர்கள் செய்து கொண்டிருக்கிறார்கள். 'பொறுத்தார் பூமி ஆள்வார்' என்று சொல்வார்கள். கொஞ்சம் பொறுக்க வேண்டும் என்று அவர்களை நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

விடுதி மாணவர்களுக்கு உணவுக் கட்டணம் வழங்குவதைப் பொறுத்தவரையில், பள்ளி விடுதிகளில் தங்கிப் பயிலும் பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட மாணவ, மாணவியர் ஒருவருக்கு உணவுக் கட்டணம் மாதமொன்றுக்கு ரூ.1,000 ஆகவும், கல்லூரி விடுதிகளில் தங்கிப் பயிலும் மாணவ, மாணவியர் ஒருவருக்கு மாதமொன்றுக்கு ரூ.1,100 ஆகவும் வழங்கப்படுகிறது. விடுதி மாணவர்களுக்கு திருத்தப்பட்ட உணவுப் பட்டியலின்படி புதிய உணவு வகைகள் வழங்கும் திட்டத்தை தலைவர் கலைஞர் அவர்களுடைய பிறந்த நாள் விழாவில் 3-6-2022 அன்று நம்முடைய மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் திரு. உதயநிதி அவர்கள் துவக்கி வைத்தார்கள். திருத்திய புதிய உணவுப் பட்டியல் அன்று முதல் நடைமுறைக்குக் கொண்டுவரப்பட்டது.

பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் இன மாணவ/மாணவியர்களுக்காக தமிழ்நாட்டில் 1,332 விடுதிகள் செயல்பட்டு வருகின்றன. இதில் 1,254 விடுதிகள் அரசுக் கட்டடங்களில் இயங்கி வருகின்றன. 30 விடுதிகளில் maintenance work நடைபெற்று வருகிறது. 50 விடுதிகளுக்குச் சொந்தக் கட்டடங்கள் கட்ட வேண்டும். 28 விடுதிகளை பொதுப் பணித் துறைமூலம் கட்டுவதற்கு உத்தரவு கொடுக்கப்பட்டுள்ளது. அத்துறை அதற்கு நடவடிக்கை மேற்கொண்டு வருகிறது. இதுதான் நம்முடைய பிற்படுத்தப்பட்டோர்,

மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மாணவர்களுடைய நிலைமையாகும். இதில், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஓர் உத்தரவு போட்டார்கள். மாணவர்களுக்கு கல்வித் தொகையை நேரடியாகவே அவர்களுடைய வங்கிக் கணக்கில் வழங்கிவிட வேண்டும் என்று கூறினார்கள். அந்த அடிப்படையில்தான், தற்போது உதவித் தொகைகள் மாணவர்களுடைய வங்கிக் கணக்கில் நேரடியாகவே செலுத்தப்படுகின்றன. மாணவர்கள் நேரடியாக பணத்தைப் பெற்றுக்கொள்கிறார்கள். அதிலே எந்தவிதமான தவறும் நடக்கவில்லை.

இரண்டாவதாக, நாம் மிதிவண்டிகள் வழங்குகிறோம். கடந்த வருடம் ரூ.221 கோடியில் மிதிவண்டிகள் வழங்கினோம். அப்போது, வழங்கப்பட்ட மிதிவண்டிகள், குறிப்பிட்ட காலத்தில் வாங்கப்பட்டு, தரமான வண்டிகளாக இருந்ததை நீங்கள் பார்த்திருப்பீர்கள். 11 ஆம் வகுப்பு பயிலும் அனைத்து சமுதாய மக்களுக்கும் சமூக வேறுபாடின்றி வழங்கிக் கொண்டிருக்கிறோம். இன்னொரு விஷயம், Creamy Layer என்ற ஒன்று இருக்கிறது. Creamy Layer-ல் வசதி இல்லாதவர்கள், எளியோர்கள் ஒருபுறம், வசதி படைத்தவர்கள் ஒருபுறம் என இருப்பார்கள். இதை நாம் ஏற்றுக்கொள்ளவில்லை. creamy layer-ல் நாம் என்ன சொல்கிறோம் என்றால், எல்லோருக்கும் சமூக நீதி கிடைக்க வேண்டும். பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர், சிறுபான்மையினர் ஆகிய எல்லோருக்கும் பள்ளிக் கூடங்களில் இடம் கிடைக்க வேண்டும் என்று நாம் சொல்கிறோம். ஆகவே, இந்த creamy layer வேண்டாம் என்பதுதான் நம்முடைய வாதம். இதைத்தான் நாம் எடுத்து வைக்கிறோம்.

பிற்பகல் 4–20

நம்முடைய பிள்ளைகளெல்லாம் AIIMS-ல் படிக்கிறார்கள்; IIT-ல் படிக்கிறார்கள்; IIM-ல் படிக்கிறார்கள்; பல்வேறு உயர்கல்வி நிறுவனங்களில் படிக்கிறார்கள். அவர்களுக்கெல்லாம் இரண்டு இலட்சம் ரூபாய் கொடுக்கிறோம். எப்படி இரண்டு இலட்சம் ரூபாய் கொடுக்கிறோம் என்றால்—ஒவ்வொரு மாணவருக்கும் அவர்கள் உயர்கல்வி படிப்பதற்கு பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட, DNC, சிறுபான்மையின மாணவர்களுக்கு தலா இரண்டு இலட்சம் ரூபாய் கொடுக்கிறோம். அதனை அவர்களுடைய வங்கிக் கணக்கிலேயே போட்டுவிடுகிறோம். (குறுக்கீடு) சீக்கிரம் உரையை முடித்துவிடுகிறேன். ஒன்றும் கவலைப்படாதீர்கள்.

2023 ஏப்ரல் 13] [திரு. R.S. ராஜகண்ணப்பன்]

பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர், சிறுபான்மையின மாணவர்களுக்கு இரண்டு இலட்சம் ரூபாய் அரசாங்கம் கொடுக்கிறது. அதில் அவர்கள் படிக்கிறார்கள். கள்ளர் சீரமைப்பு பள்ளிகள் என 298 பள்ளிகள் இருக்கின்றன. அதில் 3 உண்டு உறைவிடப் பள்ளிகளை சென்ற ஆண்டு நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் துவக்கி வைத்தார்கள். மதுரை, தேனி, திண்டுக்கல் ஆகிய 3 மாவட்டங்களில் 298 உண்டு உறைவிடப் பள்ளிகள் இருக்கின்றன. கள்ளர் சீரமைப்புப் பள்ளிகளை பள்ளிக் கல்வித் துறையோடு சேர்க்க வேண்டும்; இதுகுறித்து நானும், மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சரிடம் பேசினேன். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடமும் சொன்னேன். 1919–லிருந்து போராடி 19 பேர் உயிர் தியாகம் செய்து கொண்டு வந்தது. ஆகையால், நாம் அவர்களுடைய opinion–ஐ கேட்டு செய்யலாம் என்று தெரிவித்தேன். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் அதன்படி செய்யலாம் என்று சொல்லிவிட்டார். நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் நாங்கள் சொல்வதைக் கேட்கிறார். 'நீ என்ன சொல்வது, நான் என்ன கேட்பது?' என்றெல்லாம் கிடையாது. மற்றவர்கள் என்ன சொல்கிறார்கள்; அதில் என்ன நியாயம் இருக்கிறது என்பதை ஆராய்ந்து, அதன்படி நடந்துகொள்வார்கள். அவரைப் பார்த்த வரையில், அவரிடம் எடுத்துச்சொன்னால், சில விஷயங்களை கேட்பார்; சரியாக இருந்தால், சரி என்று சொல்லிவிடுவார். அந்தளவுக்கு நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இருக்கிறார்.

அதுபோல, உண்டு உறைவிடப் பள்ளிகளில் மாணவ, மாணவியர்களெல்லாம் சேர்க்கப்பட்டு, மதுரை, திண்டுக்கல், தேனி மாவட்டங்களிலுள்ள மாணவர்களெல்லாம் அங்கே பயிற்சி எடுக்கிறார்கள். அவர்களைக் கல்வி சுற்றுலாவிற்கு அழைத்து செல்கிறோம். அதற்கென்று தனியாக நிதி செலவழிக்கப்படுகிறது. அதேபோல் LKG, UKG போன்ற வகுப்புகளோடு, ஆங்கிலப் பள்ளியிலேயே 5 ஆம் வகுப்பு வரை படிக்க வைக்கிறோம். அதற்கு ஒவ்வொரு பள்ளியிலும் ஆங்கிலக் கல்வி வகுப்புகளுக்கும், கல்விச் சுற்றுலாவுக்கும் ஏற்பாடு செய்து கொண்டிருக்கிறோம்.

அதற்கடுத்ததாக, கள்ளர் சீரமைப்புப் பள்ளிகள் முழுவதிலும் Smart Classrooms தயார் செய்திருக்கிறோம். நானும்கூட மதுரை மாவட்டத்தில் பல்வேறு பள்ளிகளுக்கு inspection சென்றிருந்தேன். மிகவும் அருமையாகவும், நன்றாகவும் பாடம் சொல்லிக்கொடுக்கிறார்கள்.

கள்ளர் சீரமைப்புப் பள்ளிகளில் J.D. பதவி பள்ளிக் கல்வித் துறையின் மூலமாகத்தான் நியமிக்கப்படுகிறது. எனவே, நிர்வாகம் ஒழுங்காக நடைபெறுகிறது. அதில் ஏதாவது குறைபாடு இருந்தால், அதனை நாம் எடுத்துச் சொன்னால், அவர்கள் சீரமைத்துக் கொள்வார்கள். சாதிவாரி கணக்கெடுப்பு எடுக்கும்போது, மாநில அரசுகளையும் சேர்த்து, ஒன்றிய அரசும் ஒரு கணக்கெடுப்பை எடுக்க வேண்டும் என்று நாம் ஒன்றிய அரசிடம் கேட்கிறோம்.

Bihar, Orissa போன்ற மாநிலங்களில் கணக்கெடுப்பு எடுத்தார்கள். அங்கிருக்கும் ஒரு பிரிவினர், உயர் நீதிமன்றத்திற்குச் சென்றுவிட்டார்கள். எப்படியும் ஒரு பிரிவுக்கு எதிராக இன்னொரு பிரிவு இருக்குமல்லவா! அவர்கள் உயர் நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்து, தற்போது அது நிலுவையில் இருக்கிறது. கணக்கெடுப்பு எடுக்க முடியாமல் அப்படியே இருக்கிறது. ஒன்றிய அரசு என்ன சொல்கிறதென்றால், 'அதெல்லாம் நாங்கள் ஒன்றும் செய்ய முடியாது; நீங்களாக கணக்கெடுப்பு எடுத்துக்கொள்ளுங்கள்' என்று சொல்லி, நம்முடைய தலையில் அதனை கட்டிவிடுகிறது. யாராவது court–க்கு சென்றால், Supreme Court Judgement–ஐ quote செய்கிறார்கள். இப்படிப் பிரச்சினைகள் இருப்பதால்தான், கொஞ்சம் நிதானமாக எப்படி அணுகுவது என்பதை நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கலந்தாலோசித்து வருகிறார்கள். இதில் நாம் எப்படியும் வெற்றி பெற வேண்டும். ஒரு விஷயத்தை எடுப்பது பெரிதல்ல; அந்த முயற்சியில் வெற்றி பெற வேண்டும் என்ற எண்ணத்தோடுதான் நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் செயல்படுகிறாரேயொழிய, யாருக்கும் இட ஒதுக்கீடு கொடுக்கக் கூடாது என்பதற்காக அல்ல என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அவர் தெளிவாகக் காலையிலேயே பேசினார். ஆகையால், அதற்குமேல் நான் செல்ல விரும்பவில்லை. இப்படிப்பட்ட சூழ்நிலை இருக்கிறது.

பிற்பகல் 4–25

கள்ளர் சீரமைப்புப் பள்ளியில் ஆய்வுக் கட்டடங்கள், கூடுதல் வகுப்பறைகள், கூடுதல் கழிவறைகள், ஆழ்துளைக் கிணறு மற்றும் சுற்றுச்சுவர் அமைத்தல் போன்ற பணிகளுக்கு கிட்டத்தட்ட 50 கோடி ரூபாய்க்கு மேல் ஒதுக்கீடு செய்திருக்கிறோம். அந்தப் பணிகளெல்லாம் தற்போது நடைபெற்று வருகின்றன. அதுபோக, நம்முடைய பொதுப் பணித் துறையின் மூலமாகவும் பல்வேறு பணிகள் நடைபெறுகின்றன.

2023 ஏப்ரல் 13] [திரு. R.S. ராஜகண்ணப்பன்]

கள்ளர் சீரமைப்புப் பள்ளி ஆசிரியர்களுக்கெல்லாம் கற்பித்தலுக்கு ரூ.10,000, ரூ.5,000 என பரிசுகள் வழங்குகிறோம். கல்வி உதவித் தொகை கொடுப்பதில் கிட்டத்தட்ட 89,000 மாணவ, மாணவியர்கள் நம்முடைய பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட, சிறுபான்மையினர் வகுப்பில் இருக்கிறார்கள். அவர்கள் அனைவருக்கும் நாம்தான் உணவு கொடுத்து, படிக்க வைக்கின்றோம். ஓரளவிற்கு மாணவர்கள் வருகிறார்கள். சில பள்ளிகளில் மாணவர்களின் எண்ணிக்கை அதிகமாகவும், சில பள்ளிகளில் மாணவர்களின் எண்ணிக்கை குறைவாகவும் இருக்கிறது. இதற்கு என்ன செய்வது என்று யோசனை செய்தோம். மாணவர்களின் எண்ணிக்கை குறைவாக இருக்கின்ற பள்ளி விடுதிகளை மூடிவிட்டு, அதில் கல்லூரி விடுதிகளை அமைத்தபோது அதில் அதிகமான மாணவ, மாணவிகள் வந்தார்கள். அந்த விடுதிகளை மோசமாக்கி, dormant *ஆகப் போட்டுவிடுவார்கள். அப்படி ஒதுக்கிவிடாமல், அனைத்து பள்ளி, கல்லூரி விடுதிகளிலும் மாணவர்கள் படிப்பதற்கு ஏற்ற வகையில் ஏற்பாடுகள் செய்யப்பட்டு, நடைபெற்று வருகின்றன. (குறுக்கீடு) அவ்வளவுதான், உரையை முடிக்கப் போகிறேன்.*

அடுத்து, கதர் தான்; பல் மருத்துவத்தில் 7.5 சதவிகித இட ஒதுக்கீடு பற்றி சொன்னார்கள். அதில் எவ்வளவு தொகை கொடுத்திருக்கிறோம் என்றால், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் எவ்வளவு தொகை கொடுத்திருக்கிறார்கள் என்றால், 2022–2023 ஆம் ஆண்டு வரை 23 கோடியே 47 இலட்சம் ரூபாய் கொடுத்திருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) பிறகு, அவர் கொண்டு வந்த Engineering *பிரிவெல்லாம் தனி. மருத்துவம் மற்றும் பல் மருத்துவத்தில் இடஒதுக்கீடு பற்றி சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். அதற்கு நாங்கள்தான் போராட்டம் நடத்தினோம். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தலைமையில்தான் போராட்டம் நடைபெற்றது. அதன் பிறகு* Governor *அவர்கள் கையெழுத்து போட்டார்கள். 7.5 சதவிகித ஒதுக்கீடு வந்தது. அதற்குள் நான் போக விரும்பவில்லை. ஆனால், அதற்கு 23 கோடியே 47 இலட்சம் ரூபாய் நாம் கொடுத்திருக்கிறோம். இப்படியாக மாணவ, மாணவிகளுக்கு மொத்தம் எவ்வளவு தொகை கொடுத்திருக்கிறோம் என்றால், 223 கோடியே 81 இலட்சம் ரூபாய் கல்வி உதவித் தொகை 7 இலட்சத்து 49 ஆயிரம் மாணவர்களுக்கு கொடுத்திருக்கிறோம். ஆகவே, பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட மாணவ, மாணவியர்களைப்*

பொறுத்தவரையில், எந்தவிதமான குறைபாடுகளும் இல்லாமல் சௌகரியமாக இருக்கிறார்கள். (குறுக்கீடு)

மிதிவண்டிகள் வழங்கயிருக்கிறோம். அதற்கான tender, call for செய்திருக்கிறோம். இரண்டு வருடத்திற்கு ரூ.535 கோடிக்கு டெண்டர் decide செய்வதற்காக கொண்டு வந்து கொடுத்திருக்கிறார்கள். நான், வருடா வருடம் போடுவதாகச் சொல்லியிருக்கிறேன். இந்த ஆண்டு பாதி போடுங்கள், அடுத்த ஆண்டிற்கு மீதியைப் போடலாம் என்று சொல்லியிருக்கிறேன். அது, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைக் கேட்டு, அவருடைய ஆலோசனையின்பேரில் முடிவு செய்யப்படும்.

அடுத்து, விடுதியில் தங்கிப் பயிலும் மாணவர்களுக்கு உதவித் தொகை கொடுக்கின்றோம். அது முடிந்துவிட்டது. (குறுக்கீடு) TABCEDCO என்று ஒன்று வைத்திருக்கிறோம். (குறுக்கீடு) அது அடுத்தது. TABCEDCO-விற்கு வந்துவிட்டேன். அதிலிருந்து கடன் வழங்கப்படுகிறது. இந்த வருடம் 99.62 கோடி ரூபாய் கடன் வழங்கியிருக்கிறோம். 1,050 இஸ்திரி பெட்டிகள் கொடுக்கின்றோம், 3,000 தையல் மெஷின்கள் கொடுக்கின்றோம். பல்வேறுவிதமான ஏழையெளிய மக்கள், அடித்தட்டு மக்கள் யார் யார் இருக்கிறார்களோ அவர்களுக்கெல்லாம் இந்த அரசு உதவி செய்கிறது. இதில் எந்தவிதமான தவறுகளும் நடைபெறுவதற்கு வாய்ப்பு கிடையாது. ஏனென்றால், நேரடியாக அவர்களுக்குச் சென்று சேர்கிறது. அதன் பிறகு புத்தாக்கப் பயிற்சி கொடுக்கின்றோம். நவீன சலவையகம்—ஒவ்வொரு Hostel-க்கும் தண்ணீர் கொண்டு வரும்போது சுத்தமான தண்ணீர் வர வேண்டுமென்பதற்காக Reverse osmosis plant போடச் சொல்லியிருக்கிறோம். முதலில் இருந்த அரசாங்கம் என்ன செய்திருந்தார்களென்றால், direct ஆக தண்ணீர் கொடுப்பதுபோல் செய்துவிட்டார்கள். அதில் பிரயோஜனமே இல்லை. அந்தத் தண்ணீரைக் குடித்தால் தொற்று நோய்தான் வரும். Reverse osmosis plant போட்டு, தண்ணீர் சுத்தப்படுத்தப்பட்டு, சுத்தமான தண்ணீராக கிடைக்க வேண்டுமென்பதற்காக அதற்குரிய ஏற்பாடுகளும் நடைபெற்று வருகிறது. நவீன சலவை பித்தளை தேய்ப்புப் பெட்டிகள் வழங்குதல் உள்ளிட்ட பலவிதமான நன்மைகள் நடைபெறுகின்றன.

பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர், சிறுபான்மையினர்களுக்கெல்லாம் பட்டா கொடுக்கின்றோம். இடங்களைக் கையகப்படுத்த வேண்டுமென்றால் அரசுக்கு

2023 ஏப்ரல் 13] [திரு. R.S. ராஜகண்ணப்பன்]

பணம் செலுத்த வேண்டியிருக்கிறது. இதற்கு யார் யார் apply செய்கிறார்களோ அவர்களுக்கு இலவச வீட்டுமனைப் பட்டா கொடுக்கின்றோம். அது ஒரு திட்டம்.

சீர்மரபினர் நல வாரியம். சீர்மரபினர் மூன்று மாவட்டங்களில் இருக்கிறார்கள். விபத்து நிவாரணம், கல்வி உதவித் தொகை, திருமண உதவித் தொகை, மகப்பேறு உதவித் தொகை மற்றும் முதியோர் ஓய்வூதியம் ஆகிய உதவிகள் சீர்மரபினருக்கு வழங்கப்படுகின்றன. இதுவரை 5,821 சிறு, குறு விவசாயிகளுக்கு மானியமாக 27 கோடியே 60 இலட்சம் ரூபாய் வழங்கப்பட்டுள்ளது. சிறு விவசாயிகளுக்கு மானியம் கொடுக்கின்றோம். நீர்ப்பாசனத் திட்டத்திற்கு மானியம் கொடுக்கின்றோம். இப்படி பலவிதமான அமைப்புகள் இருக்கின்றன. சீர் மரபினர் மாணவ, மாணவியர்களுக்கு உடல்நிலையை test செய்வதற்கு முதலில் ரூ.1,000/– கொடுக்கப்பட்டது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய உத்தரவின்படி இப்போது ரூ.3,000/– கொடுக்கின்றோம். நல வாரியத்தைப் பொறுத்தவரை, தலைவர் பார்த்து முடிவு செய்து போடுவார். நரிக்குறவர் நல வாரியம் இருக்கிறது. வன்னியர் அறக்கட்டளை இருக்கிறது. அதில் வன்னியர்களுக்காக 17 தரவுகளைக் கண்டறிந்திருக்கிறார்கள்.

பிற்பகல் 4–30

வன்னியகுல சத்திரிய பொது அறநிலைப் பொறுப்பாட்சிகள் மற்றும் நிலைக்கொடைகள் வாரியம். வன்னிய சமுதாயத்தினரின் முன்னேற்றத்திற்காக, பல வன்னியர் வள்ளல்களால் உயிலாக எழுதி வைக்கப்பட்ட அறக்கட்டளைகளை அடையாளம் கண்டு, அவற்றை ஒருங்கிணைத்து, அவை உருவாக்கப்பட்ட நோக்கத்தினை நிறைவேற்றுவதற்கான வழிவகைகளைக் கண்டறிவதற்காக, 2009 ஆம் ஆண்டு வன்னியர் பொதுச் சொத்து நல வாரியத்தை அரசு உருவாக்கியது. 2021–2022 ஆம் ஆண்டுவரை 119 வன்னியர்களுடைய அறக்கட்டளைகள் கண்டறியப்பட்டுள்ளன. ஒன்றுமே செய்யவில்லை என்று மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. அருள் அவர்கள் இன்று காலையில் சொன்னார்கள். நாங்கள் நிறைய செய்து கொண்டிருக்கிறோம். இந்த அறக்கட்டளைகள் 25 மாவட்டங்களில் அமைந்துள்ளன. பதிவு செய்யப்பட்ட அறக்கட்டளைகளுள், இதுவரை 17 வன்னியகுல சத்திரிய பொது அறநிலைப் பொறுப்பாட்சிகள் மற்றும் நிலைக்கொடைகளின் பட்டியல் தமிழ்நாடு அரசிதழில் அறிவிக்கையாக வெளியிடப்பட்டுள்ளது. Gazette–ல் Notify

செய்திருக்கிறோம். ஆகவே, வன்னியர்களுக்கு எந்தவிதமான தீங்கையும் இந்த அரசு செய்யவில்லை. தலைவர் கலைஞர் அவர்கள்தான் Most Backward classes-க்கு 20 சதவிகித இட ஒதுக்கீடு கொடுத்தவர். (குறுக்கீடு) ரெட்டியாரை Backward classes-ல் சேர்க்க வேண்டுமா? (குறுக்கீடு) ராஜகுல கம்பளத்தாரை Backward classes-ல் சேர்க்க வேண்டுமென்று சொல்லி ஒரு பெரிய பட்டியலே வந்திருக்கிறது. (குறுக்கீடு) ராஜகுல கம்பளத்தாரை Backward classes-ல் சேர்க்க வேண்டுமென்று வந்திருக்கிறது.

சமூக நீதிக்கான தந்தை பெரியார் விருதினை அரசு வழங்கி வருகிறது. அதனடிப்படையில், கடந்த வருடம் திரு. கலி. பூங்குன்றன் அவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. முன்பு இவ்விருதுக்கான தொகை ரூ.1 இலட்சம்தான் இருந்தது. தற்போது, அந்தத் தொகை ரூ.5 இலட்சமாக உயர்த்தி கொடுக்கப்படுகிறது. ஆகவே, இந்த மண் என்பது சமூக நீதி மண். இதில் 88 சதவிகித மக்கள் சமூக நீதிக்காக வாழுகின்ற, ஒடுக்கப்பட்ட, பிற்படுத்தப்பட்ட, சிறுபான்மையினர், பட்டியலினத்தவர், ஆதி திராவிடர் மற்றும் அருந்ததியர், கிறித்தவர்கள், இஸ்லாமியர்கள் மற்றும் பல்வேறு சமுதாய மக்கள் இந்த அமைப்பில் இருக்கிறார்கள். ஆகவே, திராவிட இயக்கம்தான் தமிழ்நாட்டை ஆள முடியும். (மேசையைத் தட்டும் ஒலி) அதிலே எந்தவிதமான மாறுபாடும் கிடையாது. இப்போது யாருக்கு திராவிட இயக்கம்? தலைவர்களெல்லாம் போய்விட்டார்கள். ஒரு காலத்தில் திராவிட இயக்கத்திற்காக பாடுபட்ட தலைவர்களெல்லாம் இருந்தார்கள். இப்போது ஒரேயொரு தலைவர்தான் இருக்கிறார். நம்முடைய தலைவர் தளபதியார் அவர்கள் மட்டும்தான் முதலமைச்சர். (மேசையைத் தட்டும் ஒலி) அதற்குப் பிறகு ஐந்தாம் தலைமுறை. மூன்றாம் தலைமுறை, நான்காம் தலைமுறை கலைஞரோடு முடிந்துவிட்டது. கலைஞரெல்லாம் எவ்வளவு கஷ்டப்பட்டிருக்கிறார் என்று பெரியாருடைய வீட்டிற்குச் சென்ற பிறகுதான் நான் புரிந்துகொண்டேன். இந்தத் திராவிட இயக்கம் வளர்ந்து, நாமெல்லாம் Minister என்று சொல்லிக்கொள்ளக்கூடிய அளவிற்கு வந்திருக்கிறோம் என்று சொன்னால், அதாவது, சட்டமன்ற உறுப்பினர்களாக, அமைச்சர்களாக நாமெல்லாம் இந்தளவிற்கு வந்திருக்கிறோம் என்று சொன்னால், அவர்கள் போட்ட அந்த அடித்தளம்தான். அப்படிப்பட்டவர்கள் வாழ்ந்த வாழ்க்கை என்பது போராட்டம்தான். அவர்களெல்லாம் போராடித்தான் வெற்றி பெற்றிருக்கிறார்கள். அவர்களெல்லாம் எளிதாக வெற்றி பெறவில்லை. தந்தை பெரியாராக இருக்கட்டும், பேரறிஞர் அண்ணாவாக இருக்கட்டும், தலைவர் கலைஞராக

2023 ஏப்ரல் 13] [திரு. R.S. ராஜகண்ணப்பன்]

இருக்கட்டும், மற்ற திராவிட இயக்கத் தலைவர்களாக இருக்கட்டும். எல்லோரும் எளிதாக வெற்றி பெறவில்லை. இந்தத் திராவிட இயக்கம் இந்த தமிழ் மண்ணிலே நிலைப்பதற்கு அவர்களெல்லாம் போராடித்தான் வெற்றி பெற்றிருக்கிறார்கள். அப்படிப்பட்ட திராவிட இயக்கம்தான் தமிழ்நாட்டிலே வெற்றி பெறும். நம்முடைய தலைவர், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்தான் திராவிட இயக்கத்தினுடைய தலைவராக இருக்கிறார் என்பதை நான் இந்த நேரத்திலே சொல்லிக்கொள்கிறேன். அவருக்குப் பிறகு 100 ஆண்டுகளானாலும் திராவிட இயக்கம்தான் வெற்றி பெற முடியும் என்பதை இந்த மண்ணுக்குச் சொல்லி, விடைபெறுகிறேன்.

மாண்புமிகு உறுப்பினர்கள் நிறைய வெட்டுத் தீர்மானங்களைக் கொடுத்திருக்கிறார்கள். எனவே, தாங்கள் கொடுத்துள்ள அனைத்து வெட்டுத் தீர்மானங்களையும் திரும்பப் பெற்றுக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர்கள் கொடுத்துள்ள வெட்டுத் தீர்மானங்களை நான் படித்துப் பார்த்தேன். அவற்றில் என்னென்ன செய்யலாம், செய்ய முடியாது என்பதையெல்லாம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களோடு கலந்துபேசி, நடவடிக்கை எடுக்கப்படும். (குறுக்கீடு) அடுத்து, கதர்த் துறை. 10 நிமிடங்களில் முடித்துவிடுவேன். (குறுக்கீடு)

"உடுக்கை இழந்தவன் கைபோல ஆங்கே
இடுக்கண் களைவதாம் நட்பு"

என்று சொல்லியிருக்கிறார் வள்ளுவர். அப்போது கதர் வாரியத்தை மூடி வைத்துவிட்டார்கள். அதை மீண்டும் கொண்டுவந்தவர் கலைஞர் அவர்கள்தான். ஏழை, எளிய மக்களுக்கு நன்மை செய்ய வேண்டுமென்றால் நீங்கள் கதர் வாரியத்தில் இருக்க வேண்டும். கதர் கிராமத் தொழிலில் அவ்வளவு நன்மைகள் இருக்கின்றன. கதர் வாரியத்திற்கு நிறைய, ஏகப்பட்ட சொத்துகள் இருக்கின்றன. 47 கதர் அங்காடிகள் இருக்கின்றன. காதி கிராஃப்டில் கருப்பட்டி, தேன் போன்ற பொருட்கள் இருக்கின்றன.

நாம் purchase செய்கின்ற சேலைகள், பட்டுப்புடவைகள், மஸ்லின் காட்டன் புடவைகள், புதிய டிசைன்களில் மெத்தை விரிப்புகள் என அறிமுகம் செய்யப்பட்டிருக்கிறது. ஆதிரை கலெக்சன்ஸ் எனும் பெயரில் ஒரு கலெக்சன்ஸ் வந்திருக்கிறது. இதற்கு கதர் வாரியத்தில் மானியம் கொடுக்கப்படுகிறது.

சோப்பைப் பொறுத்தவரையில், நமக்கு பெரிய இலாபம் கிடைக்கிறது. சோப்பு என்றால் சாதாரண சோப்பு அல்ல, Fragrance. ஆக, பொதுமக்களுக்கு வழங்கி வருகின்ற சோப்புகளைப் பார்த்தீர்களென்றால்— நீங்கள் காதியில் வாங்கிப் பாருங்கள்— ஒரு காலத்தில் அரசு ஊழியர்கள் எல்லாம் காதியில் துணிகளை வாங்க வேண்டுமென்று ஓர் உத்தரவு போட்டிருந்தார்கள். அப்போது காதி நன்றாகச் செயல்பட்டுக் கொண்டிருந்தது. (குறுக்கீடு) அப்போது அவர் காதி அமைச்சராக இருந்தார். அது தனித் துறை. (குறுக்கீடு) காதியில் நான் வாங்கினேன். தலைவர் சொன்னார் என்றால், நாமும் வாங்குகிறோம். சந்தனம், லாவெண்டர் மற்றும் செஞ்சந்தனம் போன்ற நறுமணங்களில் புதிய வகை குளியல் சோப்புகள் அறிமுகப்படுத்தப்பட்டன.

பிற்பகல் 4–35

அடுத்து தேன். கன்னியாகுமரி மாவட்டம், மார்த்தாண்டத்தில் மிகவும் அருமையான தேன் கிடைக்கிறது. காதி கிராஃப்ட் தேன் என்றால் சுத்தமான தேன் என்று அர்த்தம். குறளகத்தை இடித்துவிட்டு ரூபாய் 100 கோடியில் ஒரு பெரிய கட்டடம் கட்டவிருக்கின்றோம். அது அறிவிப்பில் வர இருக்கிறது. அதில் இரண்டு மாடிகளை நாம் பயன்படுத்திக்கொண்டு, 7 மாடிகளை வாடகைக்கு விடப்போகின்றோம். அதில் வருவாய் வரும். நாங்கள் எங்கும் Financier-டம் பணம் கேட்கவில்லை. காதிக்கு நிறைய இடத்தில் சொத்துகள் இருக்கின்றன. நம்முடைய அந்தியூர் செல்வராஜ் அவர்கள் முன்னாள் அமைச்சராக இருந்தார். அந்த ஆட்சியில் திரு. பூனாட்சி, திரு. பாஸ்கரன் போன்றவர்கள் இந்தத் துறைக்கு அமைச்சர்களாக இருந்தார்கள். அவர்களெல்லாம் இதுபோன்ற முயற்சி எடுக்கவில்லை. நம்முடைய மாண்புமிகு முதல்வர் ஆட்சிப் பொறுப்புக்கு வந்தபிறகுதான் இதெல்லாம் நடக்கின்றன.

தற்போதைய விற்பனையை நான் சொல்லும்போது உங்களுக்கு இது தெரியவரும். மார்த்தாண்டம் தேனுக்கும், மானாமதுரை மண்பாண்டப் பொருட்கள் உள்ளிட்ட இரண்டுக்கும் புவிசார் குறியீடு கொடுத்திருக்கிறார்கள். இந்த இரண்டுக்கு மட்டும்தான் புவிசார் குறியீடுகள் வாங்கியிருக்கிறோம்.

அடுத்து, அரிசி வகைகள், மரச்செக்கு எண்ணெய் போன்றவற்றைப் பொறுத்தவரையில், மாப்பிள்ளை சம்பா,

2023 ஏப்ரல் 13] [திரு. R.S. ராஜகண்ணப்பன்]

இரத்தசாலி, தூயமல்லி, சீரக சம்பா, கருப்பு கவுனி மற்றும் பூங்கார் போன்ற அரிசி வகைகள் "காதி பாரம்பரியம்" எனும் பெயரிலும், மரச்செக்கு கடலெண்ணெய், நல்லெண்ணெய் ஆகியவை கதர் வாரியத்தில் இப்போது நன்றாக விற்பனையாகின்றன. குடிக்கின்ற பதநீர் மட்டும் கடந்த ஆண்டில் 104.80 இலட்சம் ரூபாய் அளவிற்கு விற்பனையாகியுள்ளது. நம்முடைய தலைவர் ஆட்சிப் பொறுப்பேற்றபிறகு, காதி நிறுவனத்திற்கு ரூபாய் 20 கோடி அளவில் விற்பனை மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதுபோன்று, தரமான காதி பட்டுப் புடவைகள் கிடைக்கின்றன. நீங்களும் அவற்றையெல்லாம் வாங்க வேண்டும். அனைவரும் ஒரு நாள் காதி shop-க்கு சென்று visit செய்ய வேண்டும். நான் ஒரு முறை குறளகத்திற்குச் சென்றிருந்தேன். அங்கு நிறைய பொருட்களை வாங்கினேன். இன்றைக்குக்கூட நட்ஸ் உள்ளிட்ட பொருட்களை வாங்கினேன். சுகர் இருப்பவர்கள் கொஞ்சம் எச்சரிக்கையாக இருக்க வேண்டும். (சிரிப்பு) அண்ணன் பார்க்கின்றார். 47 காதி கிராப்ட்கள் உள்ளன. மாண்புமிகு அமைச்சர் திரு. சாமிநாதன் அவர்களின் திருப்பூர் மாவட்டத்தில் முக்கியமான இடத்தில் காதி கிராப்டுக்கு இடம் இருக்கிறது. அவரிடம் கேட்டால், யோசிப்போம் என்பார். காலியாக இருக்கும் இடத்தில் கட்டடம் கட்டி வாடகைக்கு விட்டால் ஏகப்பட்ட ரூபாய் வருமானம் வரும். அதேபோன்று ஆவடியிலும் உள்ளது. அதற்கு மாண்புமிகு அமைச்சர் திரு. நாசர் அவர்கள்தான் பதில் சொல்ல வேண்டும். (குறுக்கீடு) உங்கள் ஊரிலும் இருக்கின்றதா? இதுபோன்று எல்லா இடங்களிலும் இருக்கிறது. எனவே, கைத்தறிக்கும், கதர்க்கும் நாம் கை கொடுக்க வேண்டும். அதை மறந்துவிடாதீர்கள். நாமே அதற்கு முன்மாதிரியாக இருக்க வேண்டும். ஆகவே, அனைவரும் கதர்க்கு கை கொடுக்க வேண்டும்.

அதேபோன்று, கொலு பொம்மை கண்காட்சி நடத்துகின்றோம். அதில் வைக்கப்படும் பொம்மைகள் எவ்வளவு ரூபாய்க்கு விற்பனையாகியிருக்கிறது என்று பார்த்தால், ஒரு கோடியே 4 இலட்சம் ரூபாய் அளவிற்கு விற்பனையாகியுள்ளது. அதேபோன்று, திரு. ராமச்சந்திரன் அவர்கள் நடத்தும் அமெட் பல்கலைக்கழக நிர்வாகத்துடன் இணைந்து 44 இலட்சம் ரூபாய் அளவிற்கு விற்பனை நடந்துள்ளது. கதர் பொருட்களை இப்போது ஆன்லைனிலும் purchase செய்யலாம். அந்தளவுக்கு சிறப்பாக இயங்கிக்கொண்டிருக்கிறது.

இறுதியாக ஒன்றைச் சொல்லிக்கொள்கிறேன். நம்முடைய தலைவர் ஆட்சிப் பொறுப்புக்கு வந்தபிறகு எப்படி செயல்படுகிறது என்றால், நெசவுப் பயிற்சி, பனை வெல்லம், கருப்பட்டி போன்றவற்றை எல்லா கடைகளிலும் விற்க வேண்டுமென்று தலைவர் அறிவுறுத்தியிருக்கின்றார். அதைப் பயன்படுத்தினால் சுகர் முழுவதும் இருக்காது. சீனி போட்டு காபி குடிக்க முடியாமல் இருக்கும் பிரச்சினை இருக்காது.

நம்முடைய தலைவர் ஆட்சிப் பொறுப்புக்கு வந்தபிறகு, கடந்த இரண்டு ஆண்டுகளில் விற்பனை எப்படி கூடியிருக்கிறதென்பதை மட்டும் சொல்லிவிட்டு நான் முடித்துக்கொள்கிறேன். பனைப் பொருட்கள் விற்பனை 2019–2020-ல் ரூ.18.92 கோடி. 2020–2021-ல் அவர்கள் ஆட்சியில் ரூ.16.23 கோடி. 2022–2023-ல் ரூ.20 கோடியே 84 இலட்சம். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தனிப்பட்ட அக்கறையினால், விற்பனை கூடிக்கொண்டே போகிறது. என்னிடம் சொல்லும்போது; எப்படியாவது காதியை கை தூக்கிவிட வேண்டும் என்றார். கதர் கிராமப் பொருட்கள் விற்பனையைப் பொறுத்தவரையில், 2019–2020-ல் ரூ.35.45 கோடி. 2020–2021-ல் ரூ.46.65 கோடி. நாம் ஆட்சிக்கு வந்த பிறகு 2021–2022–ல் ரூ.67.90 கோடி. 2022–2023–ல் ரூ.78.58 கோடி. ஆக, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் சீரிய முயற்சியினால்தான் கதர் பொருட்களின் விற்பனை தமிழ்நாட்டில் அதிகமாகி இருக்கிறது. சிறந்த ஒரு துறையாக கதர் துறையை மாற்றி, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம் ஒப்படைக்க வேண்டியது நம்முடைய கடமை.

பிற்பகல் 4–40

நல்லாரைக் காண்பதும் நன்று. நல்லாருடன் சேர்ந்து இருப்பதும் நன்று. நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நல்லவர். (மேசையைத் தட்டும் ஒலி) அவரோடு சேர்ந்து இருக்கின்றோம். அவர் சொல்கின்ற வேலைகளை நாம் செய்கின்றோம். அப்படிப்பட்ட மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய அணியில் நாமமெல்லாம் இருந்து, அவருக்கு உறுதுணையாக இருந்து தமிழ்நாட்டை மென்மேலும் சிறப்பிக்க வேண்டுமென்று உங்களையெல்லம் அன்போடு கேட்டு, என்னுடைய மானியக் கோரிக்கையை நிறைவேற்றித் தரும்படி கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானங்களைத் திரும்பப் பெறுங்கள்.

2023 ஏப்ரல் 13]

மாண்புமிகு திரு. R.S. ராஜகண்ணப்பன்: *வெட்டுத் தீர்மானங்களை காதித் துறையில் நிறைபேர் கொடுத்துள்ளீர்கள். பாருங்கள், அருள் கும்பிடுகிறார். காலையில் பயங்கரமாக சண்டை போட்டார். (சிரிப்பு) முத்தரையருக்கு அவர் கேட்கிறார். அவர்களும் 42 தொகுதிகளை* decide *செய்கிறார்கள். அது தவறு இல்லை. யார் யார் பேசவேண்டும் என்றாலும் பேசலாம். சட்டமன்றம் என்பது எல்லோருக்கும் பொதுவானது. அனைத்து சமுதாய மக்களுக்கும் பொதுவானது. நீங்கள் கேட்பது உங்களுடைய கடமை. அப்படிப்பட்ட நம்முடைய தலைவர், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய காலத்தில் நல்ல காரியங்கள் நடக்கும் என்பதை மட்டும் இந்த நேரத்தில் சொல்லி, உங்களுடைய கோரிக்கைகளையெல்லாம் படித்துப் பார்த்து இருக்கிறேன். நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களோடு கலந்துபேசி, எல்லா முயற்சிகளும் எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அறிவிப்புகள்.*

மாண்புமிகு திரு. R.S. ராஜகண்ணப்பன்: *அப்புறம் நம்முடைய தலைமைச் செயலாளர் திரு. இறையன்பு* I.A.S., *அவர்கள்* simple *ஆனவர், இரண்டே இரண்டு சப்பாத்திதான் கொண்டு வருவார், ஒரு டப்பாவில் கொண்டுவந்து மதியம் சாப்பிட்டுவிடுவார். அவ்வளவு* simple *ஆனவர். அவருக்கும் நம்முடைய* Finance Department, Additional Chief Secretary to Government *திரு. முருகானந்தம்* I.A.S., *அவர்களுக்கும், மாண்புமிகு முதலமைச்சருடைய செயலாளர்கள் திரு. உதயச்சந்திரன்,* I.A.S. *அவர்கள், திரு. உமாநாத்,* I.A.S. *அவர்கள், திரு. சண்முகம்,* I.A.S. *அவர்கள், திருமதி அனு ஜார்ஜ்,* I.A.S. *அவர்களுக்கும் இத்துறையின் கூடுதல் தலைமைச் செயலாளர் திரு. மங்கத் ராம் ஷர்மா,* I.A.S., *அவர்களுக்கும். இத்துறையின் சிறப்புச் செயலாளர் திரு. ஹனிஸ் சோப்ரா,* I.A.S., *அவர்களுக்கும். தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் நல ஆணையர் திரு. நந்தகோபால்,* I.A.S., *அவர்களுக்கும், தமிழ்நாடு மிகப்பிற்படுத்தப்பட்டோர் நல ஆணையர் திரு. சம்பத்.* I.A.S., *அவர்களுக்கும், தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் மேம்பாட்டு கழக நிர்வாக இயக்குநர் திரு. அனில் மிஸ்ராம்,* I.A.S., *அவர்களுக்கும், கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர் துறை முதன்மைச் செயலாளர் திரு. தர்மேந்திர பிரதாப் யாதவ்,* I.A.S., *அவர்களுக்கும், கதர் மற்றும் கிராமத் தொழில் வாரிய முதன்மை*

செயல் அலுவலர் திரு. சங்கர், I.A.S., அவர்களுக்கும், தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் மேம்பாட்டுக் கழகத் தலைவர் அருமை சகோதரர் திரு. காஜா முகைதீன் அவர்களுக்கும் எனது நன்றியை தெரிவித்துக்கொள்கிறேன். மேலும், துறையின் அனைத்து அரசு அலுவலர்களுக்கும் எனது நன்றியை தெரிவித்துக்கொள்கிறேன். ஒன்பது I.A.S., அதிகாரிகள் இருக்கிறார்கள். அனைத்து காரியங்களும் நடக்க வேண்டும். நம்முடைய ஆட்சியிலே, நாம் அனைத்து I.A.S., அதிகாரிகளையும் மதிக்கின்றோம், அவர்களும் நமக்கு நல்ல ஒத்துழைப்பை தருகிறார்கள் என்பதை மட்டும் இந்த நேரத்தில் சொல்லிக்கொள்கிறேன்.

எனவே, உறுப்பினர்கள் கொடுத்துள்ள வெட்டுத்தீர்மானங்களை திரும்பப் பெற்றுக்கொண்டு, இந்த மானியக்கோரிக்கையை நிறைவேற்றித் தருமாறு அன்போடு கேட்டுக்கொள்கிறேன். இரண்டு துறை அறிவிப்புகளை கொடுக்கின்றோம். ஒன்று பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை, இன்னொன்று கதர் மற்றும் கிராமத் தொழில்கள் வாரியம் என 20+20=40 அறிவிப்புகள் கொடுக்கின்றோம். இது மிகவும் simple *தான்; அறிவிப்பின் தலைப்பை மட்டும் படிக்கிறேன்.*

அறிவிப்புகள்

பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை

1. பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் மற்றும் சிறுபான்மையினர் விடுதிகளில் தங்கிப் பயிலும் 10 மற்றும் 12 ஆம் வகுப்பு மாணவ/மாணவியருக்கு 25 இலட்சம் ரூபாய் செலவில் வினா வங்கி வழங்கப்படும்

பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் மற்றும் சிறுபான்மையினர் விடுதிகளில் தங்கிப் பயிலும் 10 மற்றும் 12 ஆம் வகுப்பு பொதுத் தேர்வு எழுதவுள்ள 26,433 மாணவ/ மாணவியருக்கு தமிழ்நாடு பெற்றோர் ஆசிரியர் கழகம்மூலம் வினா வங்கி 25 இலட்சம் ரூபாய் செலவில் வழங்கப்படும்;கேள்வித்தாள் வழங்கப்படும்.

2. 290 பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் மற்றும் சிறுபான்மையினர் கல்லூரி விடுதிகளுக்கு 1 கோடியே 88 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய் செலவில் இடியாப்ப அச்சு இயந்திரம் வழங்கப்படும்

2023 ஏப்ரல் 13] [திரு. R.S. ராஜகண்ணப்பன்]

தமிழ்நாடு முழுவதும் செயல்பட்டு வரும் பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர்/சீர்மரபினர் மற்றும் சிறுபான்மையினர் விடுதிகளுக்கு தலா ரூ.65,000 மதிப்பில் இடியாப்ப அச்சு இயந்திரம் 1 கோடியே 88 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய் செலவில் வழங்கப்படும்.

அங்கு இருக்கும் மாணவர்கள் இடியாப்பம் கேட்கலாம். என்ன கேட்கிறார்களோ அதையெல்லாம் தலைவர் கொடுக்கச் சொல்லிவிட்டார்.

3. 368 பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் மற்றும் சிறுபான்மையினர் பள்ளி மாணவியர் விடுதிகளுக்கு விளையாட்டு உபகரணங்கள் 75 இலட்சம் ரூபாய் செலவில் வழங்கப்படும்

பள்ளி விடுதிகளில் தங்கிப் பயின்றுவரும் மாணவ, மாணவியரின் உடல் மற்றும் மன ஆரோக்கியத்தை மேம்படுத்தும் பொருட்டு 368 பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர்/சீர்மரபினர் மற்றும் சிறுபான்மையினர் பள்ளி மாணவியர் விடுதிகளுக்கு தலா ரூ.20,000 மதிப்பிலான விளையாட்டு உபகரணங்கள் 75 இலட்சம் ரூபாய் செலவில் வழங்கப்படும்.

4. பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் மற்றும் சிறுபான்மையினர் மாணவ, மாணவியர் விடுதிகளில் தூய்மைப் பணிகளுக்காகவும், சுகாதாரத்தை மேம்படுத்துவதற்காகவும் 5 கோடி ரூபாய் வழங்கப்படும்

தொழில் அனுபவம் மிக்க, வெளிமுகமை (Professional Outsourcing Agency) மூலம் பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் மற்றும் சிறுபான்மையினர் மாணவ, மாணவியர் பள்ளி மற்றும் கல்லூரி விடுதிகளில் தூய்மைப் பணிகளுக்காகவும், சுகாதாரத்தை மேம்படுத்துவதற்காகவும் 5 கோடி ரூபாய் வழங்கப்படும்.

5. 385 பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் மற்றும் சிறுபான்மையினர் பள்ளி மாணவியர் விடுதிகளுக்கு 1 கோடியே 56 இலட்சத்து 44 ஆயிரம் ரூபாய் செலவில் LED தொலைக்காட்சி DTH இணைப்புடன் வழங்கப்படும்

385 பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் மற்றும் சிறுபான்மையினர் பள்ளி மாணவியர் விடுதி ஒன்றுக்கு 43" LED தொலைக்காட்சி ஒன்றுக்கு ரூ.40,000 மற்றும் 1 DTH இணைப்பு ஆண்டொன்றுக்கு ரூ.2,400 என 1 கோடியே 56 இலட்சத்து 44 ஆயிரம் ரூபாய் செலவில் வழங்கப்படும்.

TV இல்லாமல் இருக்கமாட்டார்கள் இல்லையா! எல்லா இடத்திலேயும் வைக்கச்சொல்லியிருக்கிறார்கள்.

6. 290 பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் மற்றும் சிறுபான்மையினர் கல்லூரி விடுதிகளில் தங்கிப் பயிலும் மாணவ, மாணவியருக்கு ஆங்கில வழி பேச்சாற்றல் மற்றும் தனித்திறன் வளர்க்கும் பயிற்சி தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகம் மூலம் வழங்கப்படும்

கல்லூரி விடுதிகளில் தங்கிப் பயிலும் மாணவ/ மாணவியர் பல்வேறு நிறுவனங்களால் நடத்தப்படும் தேர்வுகளில் கலந்துகொண்டு வெற்றி பெறுவதற்கு ஏதுவாக 290 பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் மற்றும் சிறுபான்மையினர் விடுதிகளில் முதலாமாண்டு பயிலும் 9,000 மாணவ/மாணவியருக்கு ஆங்கில வழி பேச்சாற்றல் மற்றும் தனித்திறன் வளர்க்கும் பயிற்சி தமிழ்நாடு திறன் மேம்பாட்டு கழகம்மூலம் வழங்கப்படும்.

நம்முடைய தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்களும் பார்த்துக்கொள்வார், மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்களும் பார்த்துக்கொள்வார்.

7. மலைப் பிரதேசங்களில் செயல்பட்டு வரும் 20 பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மிகப் பிற்படுத்தப்பட்டோர் விடுதிகளுக்கு நீர் கொதிகலன் (Geyser) 10 இலட்சம் ரூபாய் செலவில் வழங்கப்படும்

மலைப் பிரதேசத்தில் உள்ள நீலகிரி மற்றும் திண்டுக்கல் மாவட்டங்களில் இயங்கும் 20 பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மிகப் பிற்படுத்தப்பட்டோர் விடுதிகளில் தங்கிப் பயிலும் மாணவ/ மாணவியர் நலனுக்காக, வெந்நீரில் குளிக்கும் பொருட்டு, ஒரு

2023 ஏப்ரல் 13] [திரு. R.S. ராஜகண்ணப்பன்]

விடுதிக்கு 2 கொதிகலன் வீதம் 25 லிட்டர் நீர் கொதிகலன் ஒன்றின் விலை ரூ.25,000 என்ற மதிப்பில் நீர் கொதிகலன் (Geyser) 10 இலட்சம் ரூபாய் செலவில் வழங்கப்படும்; hilly area-க்களில் கொடுக்க வேண்டும்.

8. 12 பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் மற்றும் சிறுபான்மையினர் மாணவியரின் விடுதிகளில் மாணவியர் பாதுகாப்பிற்காக சிசிடிவி கேமரா 12 இலட்சம் ரூபாய் செலவில் பொருத்தப்படும்

12 பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் மற்றும் சிறுபான்மையினர் விடுதிகளில் தங்கிப் பயிலும் மாணவியரின் பாதுகாப்பினை உறுதிசெய்யும்பொருட்டு 1 விடுதிக்கு 1 கண்காணிப்பு கேமரா ரூ.1 இலட்சம் வீதம் 12 விடுதிகளில் சிசிடிவி கேமரா 12 இலட்சம் ரூபாய் செலவில் பொருத்தப்படும்.

9. 141 பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் மற்றும் சிறுபான்மையினர் கல்லூரி மாணவியர் விடுதிகளில் தங்கிப் பயிலும் மாணவியருக்கு 45 இலட்சம் ரூபாய் செலவில் சுகாதார குட்டை தகளிகள் (Napkin incinerator) வழங்கப்படும்

141 பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் மற்றும் சிறுபான்மையினர் கல்லூரி மாணவியர் விடுதிகளில் தங்கிக் கல்வி பயின்று வரும் மாணவியரின் உடல் நலத்தைப் பேணவும், விடுதியின் சுற்றுப்புறம் சுத்தமாகவும், சுகாதாரமாகவும் இருக்கவும் மாணவியர் விடுதிகளுக்கு சுகாதார குட்டை தகளிகள் (Napkin incinerators) 45 இலட்சம் ரூபாய் செலவில் வழங்கப்படும்.

10. பிற்படுத்தப்பட்டோர் நல இயக்ககம் மற்றும் மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நல இயக்ககங்களுக்கு ஒரு சட்ட அலுவலர் பணியிடம் ஒப்பந்த அடிப்படையில் 6 இலட்சம் ரூபாய் செலவில் தோற்றுவிக்கப்படும்

பிற்படுத்தப்பட்டோர் நல இயக்ககம் மற்றும் மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நல இயக்ககங்களில்

நிலுவையில் உள்ள நீதிமன்ற வழக்கு மற்றும் பல்வேறு வழக்குகளுக்கு எதிர்வாதுரை தாக்கல் செய்வதற்கும், வழக்குகள் குறித்து ஆலோசனை பெறவும், ஒரு சட்ட அலுவலர் பணியிடம் ஒப்பந்த அடிப்படையில் 6 இலட்சம் ரூபாய் செலவில் தோற்றுவிக்கப்படும்.

11. பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் நல இயக்ககம் மற்றும் சிறுபான்மையினர் நல இயக்ககங்களில் இதுவரை CUG connection வழங்கப்படாத அலுவலர்களுக்கு 17 தொலைபேசி இணைப்புகள் (CUG Connections) 1 இலட்சத்து 30 ஆயிரம் ரூபாய் செலவில் BSNLமூலம் வழங்கப்படும்

பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர் / சீர்மரபினர் நல இயக்ககம் மற்றும் சிறுபான்மையினர் நல இயக்ககங்களில் இதுவரை CUG connection வழங்கப்படாத அலுவலர்களுக்கு 17 தொலைபேசி இணைப்புகள் (CUG Connections) 1 இலட்சத்து 30 ஆயிரம் ரூபாய் செலவில் BSNLமூலம் வழங்கப்படும்.

பிற்பகல் 4–45

12.3 பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் விடுதிகளுக்கு 16 கோடியே 13 இலட்சத்து 70 ஆயிரம் ரூபாய் செலவில் சொந்தக் கட்டடம் கட்டப்படும்

விடுதிகளில் தங்கிப் பயிலும் மாணவ, மாணவியரின் நலன் கருதி பின்வரும் 3 பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் விடுதிகளுக்கு சொந்தக் கட்டடங்கள் 16 கோடியே 13 இலட்சத்து 70 ஆயிரம் ரூபாய் செலவில் கட்டடப்படும்:

1. பிற்படுத்தப்பட்டோர் நலக் கல்லூரி–100 மாணவியர் எண்ணிக்கை கொண்ட விடுதி, வேப்பூர், பெரம்பலூர் மாவட்டம்
2. மிகப் பிற்படுத்தப்பட்டோர் நலப் பள்ளி–50 மாணவர் எண்ணிக்கை கொண்ட விடுதி, மீன்சுருட்டி, அரியலூர் மாவட்டம்
3. சீர்மரபினர் நலக் கல்லூரி–100 மாணவியர் எண்ணிக்கை கொண்ட விடுதி, கமுதி, இராமநாதபுரம் மாவட்டம்

2023 ஏப்ரல் 13] [திரு. R.S. ராஜகண்ணப்பன்]

13.பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் விடுதிகளுக்கு சிறப்பு பராமரிப்பு மற்றும் பழுதுபார்ப்புப் பணிகள் மேற்கொள்ள 20 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்

விடுதிகளில் தங்கிப் பயிலும் மாணவ, மாணவியரின் நலன் கருதி பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் நல விடுதிகளுக்கு சிறப்பு பராமரிப்பு மற்றும் பழுதுபார்ப்புப் பணிகள் மேற்கொள்ள 20 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

14.10 பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் விடுதிகளுக்கு பாதுகாப்பிற்காக சுற்றுச்சுவர் 2 கோடி ரூபாய் செலவில் கட்டப்படும்

விடுதிகளில் தங்கிப் பயிலும் மாணவ மாணவியர் பாதுகாப்பினை உறுதி செய்யவும், விடுதிக்கான அரசு நிலத்தினை தனியார் ஆக்கிரமிப்பு செய்வதைத் தவிர்த்திடவும் 10 பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் நல விடுதிகளுக்கு பாதுகாப்பிற்காக சுற்றுச்சுவர் 2 கோடி ரூபாய் செலவில் கட்டப்படும்.

முதலில் 10 கட்டடங்கள் கட்டவிருக்கிறோம்; பிறகு, வரிசையாகத் தொடர்ந்து கட்டப்படும்.

15.பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் வகுப்புகளைச் சார்ந்த மாணவியரின் நலனுக்காக, புதிதாக 3 கல்லூரி விடுதிகள் 1 கோடியே 30 இலட்சத்து 22 ஆயிரம் ரூபாய் செலவில் தொடங்கப்படும்

பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் இனத்தை சார்ந்த மாணவ/மாணவியர் விடுதிகளில் தங்கி கல்வி பயில ஏதுவாக புதிதாக பின்வரும் 3 விடுதிகள், 1 கோடியே 30 இலட்சத்து 22 ஆயிரம் ரூபாய் செலவில் தொடங்கப்படும்:

1. *தருமபுரி மாவட்டத்தில் உள்ள எரியூரில் 100 மாணவர் கொண்ட மிகப் பிற்படுத்தப்பட்டோர் கல்லூரி விடுதி*
2. *ஈரோடு மாவட்டத்தில் உள்ள தேவர் மலையில் 50 மாணவர் கொண்ட பிற்படுத்தப்பட்டோர் பள்ளி விடுதி*

3. தேனி மாவட்டத்தில் உள்ள லோயர்கேம்ப் சீர்மரபினர் நலப் பள்ளியில் 50 மாணவியர் கொண்ட கள்ளர் சீரமைப்பு விடுதி

16. நாமக்கல், மிகப் பிற்படுத்தப்பட்டோர் கல்லூரி மாணவியர் விடுதியில் 30 இலட்சம் ரூபாய் செலவில் மாணவியர் எண்ணிக்கை 100–லிருந்து 150 ஆக உயர்த்தப்படும்

நாமக்கல் மாவட்டம், நாமக்கல்லில் செயல்பட்டு வரும் மிகப் பிற்படுத்தப்பட்டோர் கல்லூரி மாணவியர் விடுதியில் தேவையினைக் கருத்தில்கொண்டு, கூடுதலாக மாணவியர் தங்கிப் பயில ஏதுவாக 30 இலட்சம் ரூபாய் செலவில் மாணவியர் எண்ணிக்கை 100–லிருந்து 150 ஆக உயர்த்தப்படும்.

17. மதுரை மாவட்டம், செக்கானூரணி அரசு கள்ளர் தொழிற்பயிற்சி மாணவர் விடுதி கல்லூரி மாணவர் விடுதியாக மாற்றம் செய்யப்படும்

மதுரை மாவட்டம், செக்கானூரணி அரசு கள்ளர் தொழிற்பயிற்சி மாணவர் விடுதியில் இதர கல்லூரி மாணவர்களும் தங்கி பயன்பெற ஏதுவாக கல்லூரி மாணவர் விடுதியாக மாற்றம் செய்யப்படும்.

18. திண்டுக்கல் மாவட்டம், கொண்டமநாயக்கன்பட்டியில் ஓர் உண்டி உறைவிடப்பள்ளி (Residential School) 50 இலட்சம் ரூபாய் செலவில் தொடங்கப்படும்

கள்ளர் சீரமைப்புப் பள்ளிகளில் பயிலும் மாணவ/மாணவியரில் பெரும்பாலானோர் வறுமைக்கோட்டிற்குக்கீழ், மிகவும் பின்தங்கிய நிலையில் உள்ளதால் அவர்களது கல்வித் தரத்தை தனியார் பள்ளிக்கு நிகராக உயர்த்தும்பொருட்டு, மாணவர்களின் நலனைக் கருத்தில்கொண்டு 80 மாணவர்களுக்கு திண்டுக்கல் மாவட்டம், கொண்டமநாயக்கன்பட்டியில் ஓர் உண்டி உறைவிடப்பள்ளி (Residential School) 50 இலட்சம் ரூபாய் செலவில் தொடங்கப்படும்.

சேலம், கோயம்புத்தூர், திண்டுக்கல் மாவட்டங்களில் கதர்த் துறையில் ஒரு பெரிய scheme போடப்பட்டிருக்கிறது. அதுபற்றி நான் பிறகு சொல்கிறேன்.

2023 ஏப்ரல் 13] [திரு. R.S. *ராஜகண்ணப்பன்]*

19. மதுரை, தேனி மற்றும் திண்டுக்கல் மாவட்டங்களில் உள்ள 295 அரசு கள்ளர் சீரமைப்புப் பள்ளிகளில் உள்ள நூலகங்களுக்கு புத்தகங்கள் மற்றும் புத்தக அலமாரிகள் 75 இலட்சம் ரூபாய் செலவில் வழங்கப்படும்

மதுரை, தேனி மற்றும் திண்டுக்கல் மாவட்டங்களில் உள்ள 295 அரசு கள்ளர் சீரமைப்புப் பள்ளிகளில் பயிலும் மாணவ, மாணவியர் புத்தகங்களை வாசிப்பதன்மூலம் பொது அறிவுத் திறன்களை மேம்படுத்திக் கொள்வதற்காக அப்பள்ளிகளில் உள்ள நூலகங்களுக்கு புதிய புத்தகங்கள் மற்றும் புத்தக அலமாரிகள் 75 இலட்சம் ரூபாய் செலவில் வழங்கப்படும்.

20. அரசு கள்ளர் சீரமைப்புப் பள்ளி வகுப்பறைகளில், டைல்ஸ் பொருத்தும் பணி மற்றும் பள்ளிக் கட்டடங்கள், சுற்றுச்சுவருக்கு வெள்ளை அடித்தல், வர்ணம் பூசுதல் ஆகிய பணிகள் 5 கோடி ரூபாய் செலவில் மேற்கொள்ளப்படும்

அரசு கள்ளர் சீரமைப்புப் பள்ளிகளில் உள்ள வகுப்பறைகளை மேம்படுத்துவதற்காக தரை தளங்களில் டைல்ஸ் பொருத்தும் பணிகள் மற்றும் பள்ளிக் கட்டடங்களின் சுவர்களுக்கு வெள்ளையடித்து வர்ணம் பூசும் பணிகள் 5 கோடி ரூபாய் செலவில் மேற்கொள்ளப்படும்.

அடுத்ததாக, கதர் மற்றும் கிராமத் தொழில்கள் தொடர்பான அறிவிப்புகளை வெளியிடுகிறேன்.

கதர் மற்றும் கிராமத் தொழில்கள்

1. சென்னை எஸ்பிளனேடு பகுதியில் 44,640 சதுர அடி நிலப்பரப்பில் அமைந்துள்ள குறளகக் கட்டடத்தினை இடித்து விட்டு, நவீன வசதிகளுடன், போதுமான வாகன நிறுத்துமிட வசதிகளுடன் புதிய கட்டடம் ரூ.100 கோடி செலவில் கட்டப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

1968 முதல் 1970 வரையில் கட்டி முடிக்கப்பட்ட தற்போதைய குறளக கட்டடங்கள், நவீன வசதிகள் ஏதுமின்றி, போதுமான வாகன நிறுத்துமிட வசதியில்லாமல் மிகவும் பழையதாக உள்ளன. தற்போது இவ்விரு கட்டடங்களும் பயன்பாட்டு முதிர்வின் காரணமாக மிகவும் பழுதடைந்த நிலையில் உள்ளன.

எனவே, இக்கட்டடங்களை இடித்து, தேவையான தளபரப்பளவு குறியீட்டின்படியும், அதிகபட்ச பொருளாதார மதிப்பை அடையும் வகையிலும் தோராயமாக ரூ.100 கோடி செலவில் புதிய கட்டடம் கட்டத் திட்டமிடப்பட்டுள்ளது. இக்கட்டடம், அனைத்து நவீன வசதிகளுடன், போதுமான வாகன நிறுத்துமிடத்தையும் கொண்டதாக இருக்கும். இந்தக் கட்டடத்தின் வடிவம் மற்றும் முகப்பு, அதிகளவில் மக்களைக் கவரும் வண்ணம், இந்தப் பகுதிக்கே சிறப்பு சேர்க்கும் எழில்மிகு கட்டடமாக அமையும்.

2. 8,720 சதுர அடி பரப்பில் அமைந்துள்ள திருச்சிராப்பள்ளி உதவி இயக்குநர் மற்றும் மண்டல துணை இயக்குநர் அலுவலகக் கட்டடத்தை இடித்து, புதிய கட்டடம் ரூ.5.60 கோடி மதிப்பீட்டில் கட்டப்படும்

தற்போது திருச்சிராப்பள்ளி இரயில்வே சந்திப்புக்கு எதிரில், கதர் வாரியத்தின் உதவி இயக்குநர் மற்றும் மண்டல துணை இயக்குநர் அலுவலகங்கள் இயங்கி வருகின்றன. இவ்விடம், வர்த்தக செயல்பாட்டு மையமாகவும், சிறந்த வியாபாரம் நிறைந்த பொருளாதார மதிப்பு கொண்ட இடமாகவும் உள்ளது. மேலும், இந்தக் கட்டடம் 1966-ல் கட்டப்பட்டு மிகவும் முதிர்வு பெற்று நவீன வசதிகளின்றி பழுதடைந்த நிலையில் உள்ளது. எனவே, இக்கட்டடத்தை இடித்து, இந்த இடத்தின் பொருளாதார மதிப்பை மேம்படுத்தும் வகையில் முழுமையான தளப்பரப்பளவு குறியீட்டின்படி, அனைத்து நவீன வசதிகளுடன்கூடிய ஓர் எழில்மிகு வர்த்தகக் கட்டடம் ரூ.5.60 கோடி மதிப்பில் கட்ட திட்டமிடப்பட்டுள்ளது.

இப்புதிய கட்டடம், திருச்சிராப்பள்ளி மாநகராட்சியின் பொருளாதார வளர்ச்சிக்கு உதவுவதோடு கிராமப்புற நிறுவனங்களின் தொழில் முனைவோருக்கு நல்ல சந்தை வாய்ப்பை வழங்குவதாகவும் இருக்கும்.

3. கன்னியாகுமரி மாவட்டம், மார்த்தாண்டம் பகுதியில் கொள்முதல் செய்யப்படும் பச்சைத் தேனின் விலை கிலோ ஒன்றுக்கு ரூ.140/–லிருந்து ரூ.155/– ஆக உயர்த்தி வழங்கப்படும்.

கதர் வாரியமும், மார்த்தாண்டம் தேனீ வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கமும், கன்னியாகுமரி மாவட்டம், மார்த்தாண்டம் மற்றும் அதைச் சுற்றியுள்ள தேனீ விவசாயிகளிடமிருந்து பச்சைத்

தேனை கொள்முதல் செய்து வருகிறது. தற்போதைய பச்சைத்தேன் கொள்முதல் விலையான கிலோ ஒன்றுக்கு ரூ.140/– என்பது 2020 ஆம் ஆண்டில் நிர்ணயிக்கப்பட்டதாகும்.

தேனீ விவசாயிகள் மற்றும் மார்த்தாண்டம் தேனீ வளர்ப்போர் கூட்டுறவுச் சங்க உறுப்பினர்களிடமிருந்து தேன் விலையை உயர்த்துவது தொடர்பான கோரிக்கைகள் தொடர்ந்து பெறப்படுவதால், பச்சைத் தேன் கொள்முதல் விலை கிலோ ஒன்றுக்கு ரூ.140/–லிருந்து ரூ.155/–ஆக 1–4–2023 முதல் உயர்த்தி வழங்கப்படவுள்ளது.

இதன்மூலம் சுமார் 10,000 தேனீ விவசாயிகள் பயனடைவர்.

அதனால் சுத்தமான தேனாக அருந்துகிறீர்கள்.

4. நீலகிரி மாவட்ட தேன் விவசாயிகளிடமிருந்து மலைத் தேனை கொள்முதல் செய்து, பகுப்பாய்வு செய்து, பாட்டில்களில் நிரப்பிட ஏதுவாக திருப்பூர் கதர் வளாகத்தில் ரூ.15 இலட்சம் செலவில் புதிய தேன் பதப்படுத்தும் நிலையம் ஒன்று நிறுவப்படும்

மார்த்தாண்டம் பகுதியில் உள்ள இரப்பர் மரங்களிலிருந்து கிடைக்கும் பச்சைத் தேனை கொள்முதல் செய்து, பதப்படுத்தி, இருப்பு வைத்து, ஆண்டு முழுவதும் தமிழ்நாட்டிலுள்ள கதரங்காடிகள்மூலம் "காதி தேன்" எனும் பெயரில் விற்பனை செய்யப்படுகிறது.

சமீப காலமாக, வாடிக்கையாளர்கள் இதர வகை தேனை வாங்குவதற்கு விருப்பம் தெரிவிப்பதால், நீலகிரி மலைப் பகுதியில் வசிக்கும் மலைவாழ் மக்களால் சேகரிக்கப்படும் மலைத் தேனை கொள்முதல் செய்து, பதப்படுத்தி, பகுப்பாய்வு மேற்கொண்டு, கண்ணாடி பாட்டில்களில் நிரப்பி "காதி மலைத் தேன்" என பெயரிட்டு விற்பனை செய்யும் பொருட்டு திருப்பூர் கதர் வளாகத்தில் புதிய தேன் பதப்படுத்தும் நிலையம் ரூ.15 இலட்சம் செலவில் நிறுவப்படும்.

5. நீலகிரி மாவட்டம் கோக்கால், திருச்சிக்கடி, கீழ்கோத்தகிரி, புதுக்கோத்தகிரி மற்றும் கொல்லிமலை ஆகிய பகுதிகளில்

மண்பாண்டங்களை செய்யும் கோத்தாஸ் பழங்குடி மக்களின் உற்பத்தித் திறனை அதிகரித்திட, இலவசமாக 100 நவீன மின்விசை சக்கரங்கள் ரூ.25 இலட்சம் செலவில் வழங்கப்படும்

நீலகிரி மாவட்டம், கோக்கால், திருச்சிக்கடி, கீழ்கோத்தகிரி, புதுக்கோத்தகிரி, கொல்லிமலை ஆகிய பகுதிகளில் உள்ள கோத்தாஸ் பழங்குடியினர் கையால் இயங்கும் சக்கரங்களைப் பயன்படுத்தி மண்பாண்டங்களைத் தயாரிக்கின்றனர். இதனில், மனித உழைப்பைக் குறைக்கவும், மண்பாண்டங்களின் உற்பத்தித் தரம் மற்றும் அளவை அதிகரிக்கவும் தலா ரூ.25,000/– மதிப்புள்ள 100 நவீன மின்விசை சக்கரங்கள் இலவசமாக வழங்கப்படும்.

6. நீலகிரி மாவட்டம், கோக்கால் மற்றும் திருச்சிக்கடி ஆகிய பகுதிகளிலுள்ள மண்பாண்டங்களை செய்யும் கோத்தாஸ் பழங்குடி மக்களுக்கு ரூ.25 இலட்சம் செலவில் 600 சதுர அடி மற்றும் 300 சதுர அடி அளவுகளில் இரண்டு மண்பாண்டத் தொழிற்கூடங்கள் கட்டித் தரப்படும்

நீலகிரி மாவட்டம், கோக்கால், திருச்சிக்கடி பகுதியில் உள்ள கோத்தாஸ் பழங்குடியினருக்கு, மூலப்பொருட்களைச் சேமிக்கவும், மண்பாண்டங்களை உற்பத்தி செய்யவும், உலர்த்தவும், உற்பத்தி செய்யப்பட்ட பொருட்களைப் பாதுகாக்கவும், போதுமான வசதிகள் இல்லாததால், கோக்கால் மற்றும் திருச்சிக்கடி ஆகிய இடங்களில் முறையே 600 சதுர அடி மற்றும் 300 சதுர அடி அளவுகளில் ரூ.25 இலட்சம் செலவில் இரண்டு மண்பாண்டத் தொழிற்கூடங்கள் கட்டித் தரப்படும்.

7. நீலகிரி மாவட்டம், கோக்கால் மற்றும் திருச்சிக்கடி ஆகிய பகுதிகளிலுள்ள மண்பாண்டங்களைச் செய்யும் கோத்தாஸ் இன மக்களுக்கு ரூ.3 இலட்சம் செலவில் 4 மண் அரைக்கும் இயந்திரங்கள் வழங்கப்படும்

நீலகிரி மாவட்டம், கோக்கால் மற்றும் திருச்சிக்கடி ஆகிய பகுதிகளில் உள்ள கோத்தாஸ் பழங்குடியினர் இரண்டு வகையான களிமண்ணை கால்களால் மிதித்து மண்பாண்டங்களை உற்பத்தி செய்து வருகின்றனர். அவர்களின் உழைப்பை எளிதாக்கவும், உற்பத்தித் திறனை அதிகரிக்கவும், மொத்தம் ரூ.3 இலட்சம் செலவில் 4 மண் அரைக்கும் இயந்திரங்கள் இலவசமாக அந்தக் கிராம மக்களுக்கு வழங்கப்படும்.

2023 ஏப்ரல் 13] [திரு. R.S. ராஜகண்ணப்பன்]

8. செங்கோட்டை மண்பாண்ட தொழில் கூட்டுறவு சங்க உறுப்பினர்கள் பயன்பெறும் வகையில் தென்காசி மாவட்டம், செங்கோட்டையில் ரூ.14 இலட்சம் மதிப்பீட்டில் 600 சதுர அடி அளவில் புதிய தொழிற்கூடம் கட்டித் தரப்படும்

தென்காசி மாவட்டம், செங்கோட்டையில் IND–327 செங்கோட்டை மண்பாண்ட தொழிற் கூட்டுறவுச் சங்கத்தின் உறுப்பினர்களால் உற்பத்தி செய்யப்படும் மண் பானைகள், பூந்தொட்டிகள் மற்றும் இதர அலங்கார மண்பாண்டப் பொருட்களை, மழைக்காலத்தில் பாதுகாக்க ரூ.14 இலட்சம் மதிப்பீட்டில் 600 சதுர அடி பரப்பளவில் ஒரு தொழிற்கூடம் கட்டித் தரப்படும்.

9. வாடிக்கையாளர்களைக் கவரும்வண்ணம் மூன்று கதரங்காடிகள் ரூ.23 இலட்சம் செலவில் புதுப்பிக்கப்படும்

“கதர் அங்காடிகள் கதர் வாரியத்தின் முகம்” என்பதால், வாடிக்கையாளரை அதிகளவில் கவரவும், அதன்மூலம் கதர் கிராமப் பொருட்கள் மற்றும் பனைப் பொருட்களின் விற்பனையை அதிகரிக்கச் செய்யும்பொருட்டும், கதர் விற்பனை நிலையங்களை நவீனப்படுத்துவது அவசியமாகும். அதன்படி, கோவை பிரதானம், கோவை–ஆர்.எஸ்.புரம் மற்றும் திண்டுக்கல் ஆகிய இடங்களில் உள்ள 3 கதரங்காடிகள் ரூ.23 இலட்சம் செலவில் புதுப்பிக்கப்படும்.

10. பட்டு நெசவுத் தொழிலில் ஈடுபட்டுள்ள 40 பட்டு நெசவாளர்களுக்கு ரூ.10 இலட்சம் செலவில் புதிய தறிகள் வழங்கப்படும்

பட்டு நெசவில், பட்டுத் தறிகள் முக்கியப் பங்கு வகிக்கின்றன. பொருளாதார ரீதியில் பின் தங்கி இருக்கும் பட்டு நெசவாளர்களுக்கு உதவிடும் நோக்கிலும், பட்டு நெசவுத் தொழிலை காத்திடும் வகையிலும் சேலம், கோயம்புத்தூர், திண்டுக்கல் மற்றும் தஞ்சாவூர் மாவட்டங்களிலுள்ள 40 பட்டு நெசவாளர்களுக்கு ரூ.10 இலட்சம் செலவில் 40 புதிய தறிகள் வழங்கப்படும்.

11. பட்டு நெசவுப் பணி மேற்கொள்ளும் 100 பட்டு நெசவாளர்களுக்கு ரூ.8 இலட்சம் செலவில் தறி உபகரணங்கள் வழங்கப்படும்

பாரம்பரியமிக்க நெசவுத் தொழிலில் ஈடுபட்டுள்ள நெசவாளர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் நோக்கிலும்,

தரமான பட்டுப் புடவைகளை நெசவு செய்திடும் பொருட்டும், சேலம் மற்றும் கும்பகோணம் பகுதியிலுள்ள 100 பட்டு நெசவாளர்களுக்கு ரூ.8 இலட்சம் செலவில் அச்சுப் பண்ணை, விழுதுகள், ஜக்கார்டு பெட்டிகள், நாடா உள்ளிட்ட அத்தியாவசிய தறி உபகரணங்கள் வழங்கப்படும்.

12. கதர் உற்பத்தியில் ஈடுபட்டுள்ள 100 நெசவாளர்களுக்கு ரூ.7 இலட்சம் செலவில் தறி உபகரணங்கள் வழங்கப்படும்

கதர் மற்றும் பாலியஸ்டர் துணி நெசவுப் பணியில் உற்பத்தித் திறனை அதிகரித்திடவும், தரமான கதர் இரகங்களை நெசவு செய்திடவும் திருப்பூர், திருச்சி மற்றும் மதுரை மண்டலத்திலுள்ள 100 கதர் நெசவாளர்களுக்கு ரூ.7 இலட்சம் செலவில் அச்சுப் பண்ணை, விழுதுகள், நாடா உள்ளிட்ட அத்தியாவசிய தறி உபகரணங்கள் வழங்கப்படும்.

13. சிவகங்கை மாவட்டம், கண்டனூர் சோப்பு அலகில் தானியங்கி சோப்பு தயாரிக்கும் இயந்திரம் ஒன்று ரூ.15 இலட்சம் செலவில் நிறுவப்படும்

முன்னாள் மத்திய நிதி அமைச்சர், திரு. ப. சிதம்பரம், M.P. அவர்களுடைய ஊர் சிவகங்கை.

தற்பொழுது சிவகங்கை மாவட்டம், கண்டனூர் சோப்பு அலகில், பகுதிப் பணிகள் இயந்திரங்களை கொண்டும், பகுதிப் பணிகள் கைகளாலும் மேற்கொள்ளப்படுகின்றன. ஆதலால், அச்சோப்புகளின் வடிவம் மற்றும் அளவு ஒரே சீராக இருப்பதில்லை. எனவே, நேர்த்தியான வடிவத்துடன் அதிகளவில் சோப்புகளை உற்பத்தி செய்திட ஏதுவாக ரூ.15 இலட்சம் செலவில் சிறிய தானியங்கி சோப்பு தயாரிக்கும் இயந்திரம் ஒன்று நிறுவப்படும்.

இதனை சட்டமன்ற உறுப்பினர் திரு. சா. மாங்குடி அவர்கள் கேட்டுக்கொண்டேயிருந்தார்கள்.

14. சிறந்த கதர் நூற்பாளர், சிறந்த கதர் நெசவாளர் மற்றும் சிறந்த பட்டு நெசவாளர் ஆகியோருக்கு தற்போது வழங்கப்படும் ரொக்கப் பரிசுத் தொகை ரூ.10,000/–லிருந்து ரூ.25,000/– என உயர்த்தி வழங்கப்படும்

தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியத்தில் நூல் சிட்டங்களை உருவாக்குதல், கதர் துணிகள் மற்றும் பட்டுப்

புடவைகளை நெசவு செய்தல் போன்ற பணிகளில் 1,617 நபர்கள் ஈடுபட்டுள்ளனர். இவ்வகை கைவினைஞர்களை ஊக்குவிக்கும் வகையில், ஒவ்வோர் ஆண்டும் ஒரு சிறந்த கதர் நூற்பாளர், ஒரு சிறந்த கதர் நெசவாளர் மற்றும் ஒரு சிறந்த பட்டு நெசவாளருக்கு தலா ரூ.10,000/– வீதம் ரொக்கப் பரிசு வழங்கப்பட்டு வருகிறது. இந்த பரிசு தொகை, 2023–2024 ஆம் நிதியாண்டிலிருந்து ரூ.25,000/– என உயர்த்தி வழங்கப்படும்.

தமிழ்நாடு பனை பொருள் வளர்ச்சி வாரியம்

இந்த வாரியத்திற்கு திரு. எர்ணாவூர் நாராயணன் அவர்கள் தலைவராக இருக்கிறார்.

15. இராமநாதபுரம்–தூத்துக்குடி தேசிய நெடுஞ்சாலையை ஒட்டியுள்ள பகுதியில் பனை பொருள் வர்த்தக மையம் ரூ.5 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்படும்

இது நம்முடைய இராமநாதபுரம் தொகுதி. நான் அதிகமாக எடுத்துக்கொள்ளவில்லை. எல்லா தொகுதிகளுக்கும் வேண்டுமல்லவா! ஒரேயொரு காரியம்தான் செய்திருக்கிறேன். மானாமதுரையில் வருகிறது.

பொது மக்களிடையே, மருத்துவக் குணம் நிறைந்த பனை வெல்லம் சார்ந்த பொருட்களும் கலைநயமிக்க பனை ஓலைப் பொருட்களும் பிரபலமாகி வருகின்றன. எனினும், உண்மைத் தன்மையுள்ள பனை வெல்லம் சார்ந்த பொருட்களை பொது மக்களுக்குக் கிடைக்கச் செய்வது பெரும் சவாலாக உள்ளது. மேலும், பனை பொருட்களைச் சந்தைப்படுத்த ஒருங்கிணைந்த சந்தை ஏதும் இல்லை.

எனவே, சுத்தமான, உண்மைத் தன்மையுள்ள அனைத்து பனை பொருட்களையும் ஒரே இடத்தில் வைத்து, மக்களின் கவனத்தை ஈர்க்கும் வகையில் இராமநாதபுரம்–தூத்துக்குடி தேசிய நெடுஞ்சாலையை ஒட்டியுள்ள நரிப்பையூர் பகுதியில் ரூ.5 கோடி செலவில் ஒரு பனை பொருட்கள் வர்த்தக மையம் அமைக்கப்படவுள்ளது. இம்மையம், சாலையோர வணிக வளாகம் போன்று, பனை பொருள் விற்பனை கூடம், உணவகம், பரிசுப் பொருட்கள் அங்காடி, சிறுவர் விளையாட்டுப் பூங்கா போன்றவற்றுடன் இரண்டு/நான்கு சக்கர வாகனங்கள் மற்றும் பேருந்து நிறுத்தும் வசதிகளை கொண்டதாக இருக்கும்.

16. தூத்துக்குடி மாவட்டம், காயல்பட்டிணம் பகுதியில் பனை வெல்லக் கிடங்கு மற்றும் பனை ஓலைத் தொழிற்கூடம் ரூ.35 இலட்சம் செலவில் அமைக்கப்படும்

தூத்துக்குடி மாவட்டம், காயல்பட்டிணத்தில் மாநில இணையத்திற்குச் சொந்தமான இடத்தில் நவீன முறையில் பனை வெல்லம் தயாரிக்கும் "பொது சேவை மையம்" அமைக்கப்பட்டுள்ளது. இம்மையத்தின்மூலம் உற்பத்தி செய்யப்படும் பனை வெல்லத்தை, சரியான வெப்பநிலையில், நீண்ட நாட்களுக்குப் பாதுகாப்பாக இருப்பு வைத்திட பிரத்யேகக் கிடங்கும் (25' x 20'), பனை ஓலைப் பொருட்களை உற்பத்தி செய்யவும், அதனை இருப்பு வைத்திட ஒரு தொழிற்கூடமும் (30' x 20') ரூ.35 இலட்சம் செலவில் நிறுவப்படும்.

இது மாண்புமிகு அமைச்சர் திரு. அனிதா R. ராதாகிருஷ்ணன் அவர்கள் முன்வைத்த கோரிக்கை. காயல்பட்டிணம் நகரத்தில் கருப்பட்டி தயாரிக்க அருமையாக அமைக்கிறோம்.

17. கடலூர் நகரத்தில் 4 விற்பனை அங்காடிகள் ரூ.30 இலட்சம் செலவில் அமைக்கப்படும்

பனை பொருட்களுக்கு சிறப்பு முக்கியத்துவம் அளித்து, கதர் கிராமப் பொருட்களை விற்பனை செய்யும் வகையில், தமிழ்நாடு மாநில பனை வெல்லம் மற்றும் தும்பு விற்பனை கூட்டுறவு இணையத்தின் கடலூர் கிளை வளாகத்தில் 4 விற்பனை அங்காடிகள் ரூ.30 இலட்சம் மதிப்பீட்டில் நிறுவப்படும். இந்த அங்காடிகள், சுற்றுலாப் பயணிகள் அதிகளவில் வந்து செல்லும் ஒரு முக்கிய இடத்தில் அமைக்கப்பட உள்ளதால், கதர் கிராமப் பொருட்கள் மற்றும் பனை பொருட்களை மக்களிடையே பிரபலப்படுத்தி அதிகளவில் விற்பனை செய்ய இயலும்.

மாண்புமிகு அமைச்சர் திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் அவர்களைக் காணவில்லையே!

18. இராமநாதபுரம் மாவட்டம் சாயல்குடியில் உள்ள தொழிற்கூடத்திற்குத் தேவைப்படும் உபகரணங்கள் ரூ.20 இலட்சம் மதிப்பீட்டில் கொள்முதல் செய்து நிறுவப்படும்

பனை வெல்லம் மற்றும் அதனைச் சார்ந்த பொருட்கள் உடல்நலனுக்கு நன்மை பயக்கும் என்பதால் அப்பொருட்கள், பொதுமக்களிடையே நல்ல வரவேற்பைப் பெற்றுள்ளன.

2023 ஏப்ரல் 13] [திரு. R.S. ராஜகண்ணப்பன்]

எனவே, இராமநாதபுரம்–சிவகங்கை மாவட்ட பனை வெல்ல கூட்டுறவு சம்மேளனத்தின்கீழ் செயல்படும் சாயல்குடி தொழிற்கூடத்தில் பனை சார்ந்த மதிப்பு கூட்டுப் பொருட்களான பனங்கேக், பனை வெல்ல அல்வா, ரொட்டி வகைகள், பனங்கற்கண்டு மிட்டாய் மற்றும் பனங்கிழங்கு மாவு போன்றவற்றைத் தயாரிப்பதற்குத் தேவைப்படும் உபகரணங்கள், பாத்திரங்கள், அரவை இயந்திரம், பேக்கிங் மெஷின், அச்சுகள் மற்றும் உலை அடுப்பு ஆகியவை ரூ.20 இலட்சம் மதிப்பீட்டில் கொள்முதல் செய்து நிறுவப்படும்.

19. மதுரை–விருதுநகர்–திண்டுக்கல் மாவட்ட பனை வெல்ல கூட்டுறவு சம்மேளனத்திற்கு குளிர்சாதன வசதிகளைக் கொண்ட 10 தள்ளுவண்டிகள் மற்றும் 5 குளிர்பதனப் பெட்டிகள் ரூ.15 இலட்சம் மதிப்பீட்டில் கொள்முதல் செய்யப்படும்

மதுரை–விருதுநகர்–திண்டுக்கல் மாவட்ட பனை வெல்ல கூட்டுறவு சம்மேளனத்தின் மூலமாக தேனி, மதுரை நகரம் மற்றும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளில் பதநீர் விற்பனை செய்யப்பட்டு வருகிறது.

இம்மாவட்ட சம்மேளனத்தில், பதநீரை அதிகளவில் சேமிக்கவும், கட்டுப்படுத்தப்பட்ட வெப்பநிலையில் விற்பனைக்கு எடுத்து செல்லவும், போதிய வசதிகள் இல்லாததால், பதநீரை பனைத் தொழிலாளர்களிடமிருந்து அதிகளவில் கொள்முதல் செய்து விற்பனை செய்வதில் சிரமம் உள்ளது. இச்சிரமங்களை போக்கிடும் வகையில், 5 குளிர்பதனப் பெட்டிகள் மற்றும் பதநீரை விற்பனைக்குக் கொண்டு செல்வதற்கான குளிர்சாதன வசதிகளைக் கொண்ட 10 தள்ளுவண்டிகள், ரூ.15 இலட்சம் மதிப்பீட்டில் கொள்முதல் செய்து பயன்பாட்டிற்குக் கொண்டு வரப்படும்.

20. தமிழ்நாடு மாநில இணையத்தின் மானாமதுரை கிளை வளாகத்தில் விற்பனை அங்காடி ரூ.5 இலட்சம் செலவில் அமைக்கப்படும்

தமிழ்நாடு மாநில பனை வெல்லம் மற்றும் தும்பு விற்பனை கூட்டுறவு இணையத்தின் மானாமதுரை கிளை வளாகம், மானாமதுரை நகரின் முக்கிய வணிகப் பகுதியில் அமைந்துள்ளது.

எனவே, இந்த இடத்தின் பொருளாதார மதிப்பை மேம்படுத்தும் நோக்கிலும், கதர் கிராமப் பொருட்கள் மற்றும் பனை பொருட்களின் விற்பனையை அதிகரிக்கச் செய்யும் பொருட்டும், மானாமதுரை கிளை வளாகத்தில் ஒரு விற்பனை அங்காடி ரூ.5 இலட்சம் மதிப்பீட்டில் நிறுவப்படும். அதற்கு புவிசார் குறியீடும் வழங்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர்கள் தாங்கள் கொடுத்துள்ள வெட்டுத் தீர்மானங்களைத் திரும்பப் பெற்றுக்கொண்டு, மானியக் கோரிக்கையினை நிறைவேற்றித் தரும்படி கேட்டுக்கொண்டு, விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

பிற்பகல் 4–50

மாண்புமிகு திரு. செஞ்சி K.S. மஸ்தான்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிறுபான்மையினர் நலத் துறையின் சார்பாக இந்த மாமன்றத்தில் 3-வது முறையாக மானியக் கோரிக்கைக்கு பதிலளிக்கின்ற வாய்ப்பினை உருவாக்கிக் கொடுத்திருக்கின்ற 'திராவிட மாடல்' ஆட்சியின் திராவிட நாயகர் மாண்புமிகு தளபதியார் அவர்களை முதலில் வணங்கக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெரியார், அண்ணா, கலைஞர் இவர்கள் இன்றைக்கு இல்லையென்றாலும், ஒட்டுமொத்தமாக இவர்கள் மூவரையும் உள்ளடக்கி, நம்மிடத்தில் இருக்கின்ற மாண்புமிகு தலைவர் தளபதி அவர்களை மீண்டும் ஒரு முறை வணங்கக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) இந்த மாமன்றத்தில் பேசுகின்ற வாய்ப்பினை உருவாக்கிக் கொடுத்திருக்கின்ற எல்லாம் வல்ல இறைவனுக்கும், என்னை ஈன்றெடுத்த தாய், தந்தையருக்கும், தொடர்ந்து இரண்டாவது முறையாக சட்டமன்ற உறுப்பினராக என்னைத் தேர்ந்தெடுத்த என் தொகுதி மக்களுக்கும், கழக நிர்வாகிகளுக்கும், கூட்டணிக் கட்சி நண்பர்களுக்கும், ஆன்றோருக்கும், சான்றோருக்கும் அனைவருக்கும் இந்த நேரத்தில் நன்றியைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

2023 ஏப்ரல் 13] [திரு. செஞ்சி K.S. மஸ்தான்]

இந்த அவையில் இருக்கின்ற மூத்த அமைச்சர்களான அருமை அண்ணன் மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் மற்றும் கழக பொதுச் செயலாளர் அவர்களுக்கும், மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அண்ணன் மற்றும் முதன்மைச் செயலாளர் அவர்களுக்கும், நம்முடைய ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர், கழகத்தின் துணைப் பொதுச் செயலாளர் அண்ணன், மாண்புமிகு திரு. இ. பெரியசாமி அவர்களுக்கும், உயர் கல்வித் துறை அமைச்சர், எங்கள் விழுப்புரம் மாவட்டத்தைச் சார்ந்த பேராசிரியர், எங்கள் செஞ்சி தொகுதிக்கு கல்லூரியினை வழங்கிய அண்ணன் மாண்புமிகு முனைவர் க. பொன்முடி அவர்களுக்கும், என்னை எப்போதும் அன்போடும், ஆதரவோடும் அரவணைத்து வழிநடத்துகின்ற பொதுப் பணி மற்றும் நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் அண்ணன் மாண்புமிகு திரு. எ.வ. வேலு அவர்களுக்கும் இந்த நேரத்தில் என் நன்றியைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒட்டுமொத்த தமிழ்ச் சமுதாயத்தின் செல்லப் பிள்ளையும், கலைஞரின் பேரப் பிள்ளையும், மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சருமான, எதிர்கால இளைஞர்களின் நம்பிக்கை நட்சத்திரமான, இளைய சூரியன் மாண்புமிகு திரு. உதயநிதி ஸ்டாலின் அவர்களை வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மேலும், இந்த அவையில் இருக்கின்ற மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களையும், பேரவைத் துணைத் தலைவர் அவர்களையும், மாண்புமிகு அரசு கொறடா அவர்களையும், அனைத்து மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் மற்றும் சட்டமன்ற உறுப்பினர்கள் உள்ளிட்ட அனைவரையும் வணங்குகிறேன்.

இன்றைக்கு சிறுபான்மையினர் நலத் துறை சார்பாக, இந்த மானியத்தின்மீது பேசுகின்ற வாய்ப்பினை உருவாக்கிக் கொடுத்திருக்கின்ற காலகட்டத்தில், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் தமிழ்நாட்டில் ஆளுகின்ற நேரத்தில், சிறுபான்மை இன மக்களுக்கு அவர் அளித்த பாதுகாப்பு மற்றும் செய்திருக்கின்ற நன்மைகளைப் பட்டியலிட்டு இங்கு பதிவு செய்தால், நேரம் காலம் போதாது, நாட்கள் பல தேவை என்பதை நாம் அனைவரும் அறிவோம். வாழும் காலமெல்லாம், இந்த மக்களுக்காகவே வாழ்ந்தார் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள். தாழ்ந்து கிடந்த தமிழகத்தை தலை நிமிர வைப்பதற்கான அவருடைய உழைப்பை

நாம் அனைவரும் அறிவோம். நம்முடைய தளபதியைப் பார்த்து, உழைப்பு, உழைப்பு, உழைப்பு என்று சொல்லி, பெருமை சேர்க்கின்ற அந்த நிலைதான் இன்றைக்கு மாண்புமிகு தமிழகத்தின் முதலமைச்சராக அவர் பொறுப்பேற்றிருக்கின்ற காலகட்டம்; நமக்கு பெரிய பொற்காலம். நமக்கு பெரியார், அண்ணா, கலைஞர் இல்லாத நேரத்தில் கிடைத்திருக்கின்ற பொக்கிஷமாகக் கருதி, முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களுடைய ஆட்சிக் காலத்தில் சிறுபான்மை இன மக்களுக்கு செய்த நன்மைகளை தலைப்புச் செய்திகளாக இந்த அவையில் சொல்ல கடமைப்பட்டிருக்கிறேன்.

பிற்பகல் 4–55

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நபிகள் நாயகம் அவர்களின் பிறந்த நாளை அரசு விடுமுறை நாளாக அறிவித்து பெருமை சேர்த்தார்கள். உருது மொழி பேசும் லெப்பை, தக்கினி முஸ்லிம்களை பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் சேர்த்து பெருமை சேர்த்தார்கள். சிறுபான்மையின மக்களின் கல்வி, சமூக பொருளாதார மேம்பாட்டிற்கென சிறுபான்மையினர் நல இயக்குநரகத்தை உருவாக்கி பெருமை சேர்த்தார்கள். கண்ணியத் தென்றல் காயிதே மில்லத், சீறாப்புராணம் இயற்றிய உமறுப்புலவர் ஆகியோருக்கு மணிமண்டபங்களைக் கட்டி பெருமை சேர்த்தார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கண்ணியத் தென்றல் காயிதே மில்லத் அவர்களின் பெயரில் அரசு மகளிர் கலைக் கல்லூரியை நிறுவி பெருமை சேர்த்தார்கள். வறுமையில் உள்ள குடும்பங்களைச் சார்ந்த சிறுபான்மை மாணவ, மாணவியர் தொடர்ந்து கல்வி கற்க, கல்வி உதவித் தொகை வழங்கும் திட்டத்தைத் துவக்கி வைத்தார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிராமப்புறங்களைச் சேர்ந்த சிறுபான்மையின மாணவ, மாணவியர் நகரங்களில் உள்ள பள்ளி, கல்லூரிகளில் தங்கி கல்வி பயில்வதற்காக, சிறுபான்மையின மாணவ, மாணவியருக்கு விடுதிகளை உருவாக்கிக் கொடுத்தார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிறுபான்மையின முஸ்லிம்களுக்கும், கிறிஸ்துவர்களுக்கும் தலா 3.5 விழுக்காடு இட ஒதுக்கீட்டினை கல்வி மற்றும் வேலைவாய்ப்புகளில் வழங்கி பெருமைப்படுத்தினார்கள். ஆதரவற்ற சிறுபான்மையின பெண்கள்,

2023 ஏப்ரல் 13] [திரு. செஞ்சி K.S. மஸ்தான்]

சிறுதொழில்கள் துவக்க நிதி வழங்கும் வகையில், கிறிஸ்துவ மற்றும் முஸ்லிம் மகளிர் உதவும் சங்கங்களை மாவட்டந்தோறும் துவக்கி, பொதுமக்களின் பங்களிப்புத் தொகைக்கு ஈடாக இருமடங்கு இணை மானிய தொகையை வழங்கி, சிறுதொழில் துவக்கி வாழ்வாதாரம் மேம்பட வழிவகை செய்தார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிறுபான்மையின மக்களுக்கு வேலைவாய்ப்பு மற்றும் தொழில் பயிற்சி வழங்க, திறன் வளர்ப்புப் பயிற்சி ஏற்பாடுகளை செய்து கொடுத்தார்கள். உலமாக்கள் மற்றும் பணியாளர்கள் நல வாரியத்தை உருவாக்கினார்கள். உலமா ஓய்வூதியத்தை உயர்த்தி வழங்கினார்கள். தமிழ்நாடு சிறுபான்மையினர் ஆணையத்திற்கு சட்டப்படியான அங்கீகாரத்தை வழங்கினார்கள். TAMCO என்று அழைக்கப்படுகின்ற சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டுக் கழகத்தைத் துவக்கி, மிகக் குறைந்த வட்டியில் தொழில் தொடங்க, வங்கிமூலம் கடன் பெற வழி வகை செய்து கொடுத்தார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் முழு உருவாய் திகழும் திராவிட நாயகன் மாண்புமிகு தளபதி அவர்களுடைய இந்த இரண்டாண்டு அரசு பொறுப்பேற்ற காலகட்டத்தில் முஸ்லிம்களுக்கான உலமாக்கள் மற்றும் பணியாளர் நல வாரியத்தைப் போலவே, கிறிஸ்துவ தேவாலயங்களில் பணிபுரியும் ஊழியர்கள் பயன்பெறும் வகையில், கிறிஸ்துவ பணியாளர்களின் நல வாரியத்தை உருவாக்கி, அவ்வாரியம் திறம்பட செயல்பட நிதியினையும் ஒதுக்கிக் கொடுத்துள்ளார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிறுபான்மையின மக்களின் குறைகளைக் கேட்டறிந்து, உடனடியாக நடவடிக்கை எடுத்து, அவர்களது நலன் காக்கும் வகையில், மாவட்ட சிறுபான்மையின நல அலுவலர் பணியிடங்கள் உருவாக்கப்பட்டு, அதன் முதல் கட்டமாக, சென்னை, விழுப்புரம், வேலூர், கோயம்புத்தூர் மற்றும் திருநெல்வேலி ஆகிய மாவட்டங்களில் மாவட்ட சிறுபான்மையினர் நல அலுவலர் பணியிடங்கள் உருவாக்கப்பட்டுள்ளன. மாநிலம் முழுவதும், மற்ற மாவட்டங்களிலும் சிறுபான்மையினர் நல அலுவலர் பணியிடங்கள் படிப்படியாக விரிவுபடுத்தப்படும் என்ற மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய அறிவுரையினை இங்கே பதிவு செய்யக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வக்ஃப் வாரியத்தில் பதிவு செய்யப்பட்ட பள்ளிவாசல்களில் பணிபுரிந்து ஓய்வு பெற்ற 1,399 உலமாக்கள் ஓய்வூதியமாக மாதம் ஒன்றுக்கு ரூபாய் 3 ஆயிரம் பெற்று வருகிறார்கள். ஓய்வூதியம் பெற்று வரும் உலமா காலமானால், அவரது மனைவிக்கு குடும்ப ஓய்வூதியமாக ரூபாய் 1,500/– வழங்க மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள். உலமா குடும்ப ஓய்வூதியம் 3 நபர்களுக்கு தற்போது வழங்கப்பட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) எனவே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு நன்றி சொல்ல கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உலமா குடும்ப ஓய்வூதியம் வழங்க வேண்டி விண்ணப்பங்கள் வரப்பெறுகின்றன. தகுதிவாய்ந்த உலமா ஓய்வூதியர்கள் மற்றும் குடும்ப ஓய்வூதியதாரர்களுக்கு தாமதமின்றி உடனடியாக வழங்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. உலமா ஓய்வூதியதாரர் காலமாகியிருந்து அவரது மனைவி தற்போது ஓய்வூதியம் பெறாமல் இருந்தால், உடனடியாக தமிழ்நாடு வக்ஃப் வாரியத்தில் விண்ணப்பித்து குடும்ப ஓய்வூதியம் பெற்றுக்கொள்ள மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 5–00

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாற்றுத் திறனாளி உலமாக்கள் ஓய்வூதியம் பெறுவதற்காக நிர்ணயிக்கப்பட்ட 50 வயது என்பதைத் தளர்த்தி, 40 வயதாக நிர்ணயித்து 10 ஆண்டுகள் பணிபுரிந்தாலே, ஓய்வூதியம் பெறத் தகுதி பெற்றவர்கள் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உத்தரவு வழங்கியுள்ளார்கள். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உலமாக்கள் நல வாரியத்தில் உறுப்பினர்களாக உள்ள 8,383 ஆண்கள் மற்றும் 2,200 பெண்கள் ஆகமொத்தம் 10,583 உலமாக்களுக்கு ரூ.5,43,64,425 செலவில் விலையில்லா மிதிவண்டிகள் இவ்வரசால் வழங்கப்பட்டுள்ளன.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உலமாக்கள் நல வாரியத்தில் பதிவு செய்யப்பட்ட உறுப்பினர் அடையாள அட்டை இல்லாத உலமாக்கள், தங்கள் பதிவைப் புதுப்பிக்காத உலமாக்கள், அடையாள அட்டையைப் பெற்று விண்ணப்பித்தால்,

2023 ஏப்ரல் 13] [திரு. செஞ்சி K.S. மஸ்தான்]

அவர்களுக்கும் விலையில்லா மிதிவண்டிகளை வழங்க மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் தளபதியார் அவர்கள் உத்தரவு வழங்கியுள்ளார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மகளிர் உதவும் சங்கம். மாவட்டத்திற்கு ஒரு முஸ்லிம் மற்றும் ஒரு கிறிஸ்துவ மகளிர் உதவும் சங்கம்வீதம் மாநிலம் முழுவதும் செயல்பட்டு வருகின்ற நிலையில் ஒரு மாவட்டத்திற்கு தேவையின் அடிப்படையில் ஒன்றுக்கு மேற்பட்ட சங்கங்களைத் துவக்க மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஒப்புதல் அளித்துள்ளார்கள். தேனி, கிருஷ்ணகிரி, விழுப்புரம் ஆகிய மாவட்டங்களில், இரண்டாவது முஸ்லிம் மகளிர் உதவும் சங்கங்களையும், அதேபோல, தேனி, மதுரை, கரூர் ஆகிய மாவட்டங்களில் இரண்டாவது கிறிஸ்துவ மகளிர் உதவும் சங்கங்களையும் துவக்க அரசு அனுமதியளித்துள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு மகளிர் உதவும் சங்கத்திற்கு நன்கொடையாளர்களிடமிருந்து பெறப்படுகின்ற தொகைக்கு ஈடாக இருமடங்கு தொகையை அரசு இணை மானியமாக வழங்குகிறது. இணை மானியமாக அதிகபட்சமாக மாநில அரசால் ரூ. 20 இலட்சம் ஒரு சங்கத்திற்கு வழங்கப்படுகிறது. இவ்வாறு பெறப்படுகின்ற நன்கொடையையும், மானியத்தையும் சேர்த்து, அந்தந்த மாவட்டங்களிலுள்ள ஆதரவற்ற, கைவிடப்பட்ட, சிறுதொழில் துவங்க நிதி தேவைப்படுகின்ற மகளிருக்கு நிதியுதவி வழங்கப்பட்டு வருகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2022–2023 ஆம் ஆண்டில் ரூ.6,22,07,165 மதிப்பீட்டில் 6,443 முஸ்லிம் மகளிரும், ரூ.4,64,71,500 மதிப்பீட்டில் 3,395 கிறிஸ்துவ மகளிரும் இந்தச் சங்கத்தின்மூலமாக பயனடைந்துள்ளார்கள் என்கின்ற மகிழ்ச்சியான செய்தியைத் தெரிவித்துக்கொள்கிறேன். 2023–2024 ஆம் நிதியாண்டிற்கு இணை மானியம் வழங்க ரூபாய் 2,97,54,000 ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என்பதை இந்த மன்றத்தில் பெருமையோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னையில் பணிபுரியும் மகளிருக்கு, தங்கும் விடுதிகள் கட்ட இந்த அரசு தக்க நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது என்பதையும் மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு பெண்ணின் வருவாய் உயர்ந்தால், அவரைச் சார்ந்த குடும்ப உறுப்பினர்களும்

பயன்பெறுவர் என்பதை உணர்ந்தவர் தலைவர் கலைஞர் அவர்கள். பெண் கல்வி, பெண் விடுதலை, சமத்துவம் ஆகியவை திராவிட மாடல் சமூகத்தின் அடிப்படையாகும். பெண் கல்விக்கு தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர், இனமான பேராசிரியர் பெருந்தகை, முரசொலி மாறன் ஆகியோர் இடைவிடாது குரல் கொடுத்து, இன்று பெண்களுக்கு கல்வி வழங்குவதில் ஒரு முன்னோடி மாநிலமாக தமிழ்நாடு திகழ்வதை நாம் பெருமையோடு காண முடிகிறது. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மகளிர் வருவாய் உயர்த்தப்பட வேண்டும் என்ற கண்ணோட்டத்தில் கழக அரசு சிறுபான்மையின மகளிருக்கு மின் மோட்டாருடன்கூடிய 1,000 தையல் இயந்திரங்களை தலா ரூபாய் 6,160 வீதம் ரூபாய் 61,60,000 மதிப்பீட்டில் வழங்கியுள்ளது.

பிற்பகல் 5–05

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிராமப்புறங்களைச் சேர்ந்த சிறுபான்மையின ஏழை மாணவ, மாணவியர்கள் நகர்ப்புறங்களில் உள்ள பள்ளி மற்றும் கல்லூரிகளில் கல்வி பயிலும்போது அவர்கள் தங்குவதற்காக சிறுபான்மையினர் பள்ளி மற்றும் கல்லூரி மாணவியருக்கு 17 விடுதிகளும், கல்லூரி மாணவர்களுக்கு ஒரு விடுதியும் தற்போது செயல்பட்டு வருகின்றன.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இவ்விடுதிகளில் 1,098 மாணவ, மாணவியர் தங்கி பயன்பெற்று வருகின்றனர். இவ்விடுதிகளின் உணவுக் கட்டணம், நிர்வாகம், பராமரிப்பு மற்றும் பிற பணிகளுக்காக நடப்பு நிதி ஆண்டிற்கு ரூபாய் 4 கோடியே, 59 இலட்சத்து, 46 ஆயிரம் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிராமப்புற சிறுபான்மையினர் மாணவியர் கல்வி இடைநிற்றலைத் தவிர்த்து, தொடர்ந்து கல்வி கற்பதை ஊக்குவிக்கும் விதமாக, 3 முதல் 5 ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவியருக்கு ஆண்டுக்கு 500 ரூபாயும், 6 ஆம் வகுப்பு மாணவியருக்கு ஆண்டுக்கு 1,000 ரூபாயும் ஊக்கத் தொகையாக வழங்கப்பட்டு வருகிறது என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறோம்.

2023 ஏப்ரல் 13] [திரு. செஞ்சி K.S. மஸ்தான்]

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விடுதி மாணவர்களின் நலன் காக்கும் பொருட்டு, கடந்த நிதியாண்டை விடவும் நடப்பு நிதியாண்டிற்கு 50 இலட்சத்து, 6 ஆயிரம் ரூபாய் கூடுதலாக வழங்கிய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு எனது நெஞ்சார்ந்த நன்றியினை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திராவிட இயக்கங்களின் கொள்கை மற்றும் கோட்பாடுகளை வரும் தலைமுறையினருக்கு எடுத்துச் செல்வதற்காக கல்லூரி மாணவ, மாணவியருக்கு மாநில சிறுபான்மையினர் ஆணையத்தின் மூலமாக பேச்சுப் போட்டிகள் நடத்தப்பட்டு வருகின்றன. தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய இரு மொழிகளிலும் சமூகம், அரசியல், பண்பாடு, மொழி உள்ளிட்ட பல தலைப்புகளில் மாவட்டந்தோறும் போட்டிகள் நடத்தப்பட்டு சென்னையில் நடக்கும் இறுதிப் போட்டியில் மாணவ, மாணவியர்கள் கலந்து கொள்கின்றார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாணவ, மாணவியரின் பேச்சுத் திறன் வளர்க்கப்படுவதுடன் பரிசுகள் வழங்கி மாணவ, மாணவியர் பாராட்டப்படுகின்றனர். மார்ச் 1 அன்று துவக்கப்படும் இப்போட்டிகள் ஜூன் 3 அன்று நிறைவு பெறுகின்றன. கடந்த ஆண்டு நடைபெற்ற பேச்சுப் போட்டியில் வெற்றி பெற்ற மாணவ, மாணவியருக்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் தளபதியார் அவர்கள் சென்னை, குருநானக் கல்லூரியில் பரிசுகளை வழங்கி பாராட்டியதற்கு எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். திராவிட இயக்கத்தின் தேவை இந்தக் காலகட்டத்திற்கு எவ்வளவு கட்டாயம் என்பதை அறிந்து ஆர்வமுடன் மாணவ, மாணவியர் ஆயிரக்கணக்கானோர் ஒவ்வொரு நிகழ்ச்சியிலும் கலந்து கொள்கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிறுபான்மையினரால் நடத்தப்படுகின்ற கல்வி நிறுவனங்களுக்கு சிறுபான்மையினர் அந்தஸ்து வழங்குவதில் உள்ள சிக்கல்களைக் களைந்து காலதாமதத்தைத் தவிர்த்து, உரிய காலத்தில் சிறுபான்மையினர் கல்வி நிறுவனம் என்ற அங்கீகாரத்தை வழங்கும் பொறுப்பினை சிறுபான்மையினர் நலத் துறைக்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் வழங்கியுள்ளார்கள் என்ற மகிழ்ச்சியான செய்தியையும் இங்கே பதிவு செய்ய கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிறுபான்மையினர் அந்தஸ்து கோரும் கல்வி நிறுவனங்கள் இணையதளம் வாயிலாக விண்ணப்பிக்க மின் ஆளுமை முகமைமூலம் மென்பொருள் ஒன்றை உருவாக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் 2021–2022 ஆம் ஆண்டில் பள்ளிவாசல்கள், தர்காக்கள் மற்றும் தேவாலயங்களில் மராமத்துப் பணிகள் மேற்கொள்வதற்காக தலா ரூபாய் 6 கோடி வீதம் வழங்கப்பட்டு, மராமத்துப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இத்திட்டத்தின்கீழ் 28 மாவட்டங்களில் ரூபாய் 6 கோடியே 5 இலட்சம் மதிப்பீட்டில் 77 வக்ஃப் நிறுவனங்களும், 19 மாவட்டங்களில் ரூபாய் 77 இலட்சத்து 90 ஆயிரம் மதிப்பீட்டில் 30 தேவாலயங்களும் பயனடைந்துள்ளன என்பதை இந்த நேரத்தில் மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கின்றேன்.

பிற்பகல் 5–10

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2022–2023 ஆம் ஆண்டில், 100 ஆண்டுகளுக்கும் பழமையான தர்காக்கள் மற்றும் தேவாலயங்களில் மராமத்துப் பணிகள் மேற்கொள்வதற்காக தலா ரூபாய் 6 கோடி வீதம் வழங்கப்பட்டு, நாகூர் தர்காவிற்கு மராமத்துப் பணிகளுக்காக ரூபாய் 2 கோடி வழங்கப்பட்டுள்ளது. அத்துடன் கீழ்க்காணும் 6 தர்காக்களுக்கு ரூபாய் 4 கோடி செலவில் மராமத்துப் பணிகளுக்கு நிதி வழங்க துறைமூலம் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன;

செங்கல்பட்டு மாவட்டம், கோவளம், ஹஜ்ரத் தமீம் அன்சாரி தர்கா,

திருவாரூர் மாவட்டம், முத்துப்பேட்டை, ஹஜ்ரத் ஷேக் தாவூத் ஆண்டவர் அவுலியா தர்கா,

கடலூர் மாவட்டம், பரங்கிப்பேட்டை, ஹஜ்ரத் உக்காஷா தர்கா,

கடலூர் மாவட்டம், பண்ருட்டி, ஹஜ்ரத் நூர் முகமதுஷா அவுலியா தர்கா,

2023 ஏப்ரல் 13] [திரு. செஞ்சி K.S. மஸ்தான்]

திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம், ஆத்தங்கரை பள்ளிவாசலுக்கு பாத்தியப்பட்ட ஹஜ்ரத் சையத் அலி பாத்திமா (ரலி) தர்கா மற்றும்

திருச்சி மாவட்டம், ஹஜ்ரத் தப்லே ஆலம் பாதுஷா நத்ஹர்வலி தர்கா.

அதேபோல, 2022–2023 ஆம் ஆண்டில் 100 ஆண்டுகளுக்கும் பழமையான தேவாலயங்களுக்கு வழங்கப்பட்ட நிதியைக் கொண்டு கீழ்க்காணும் நான்கு தேவாலயங்களை மராமத்து செய்ய 6 கோடியே 71 இலட்சத்து 46 ஆயிரத்து 984 ரூபாய் வழங்கப்பட்டுள்ளது;

1) சென்னை, வெஸ்லி தேவாலயம்,

2) திருநெல்வேலி மாவட்டம், கால்டுவெல் தேவாலயம்,

3) நாகர்கோவிலில் உள்ள புனித சேவியர் தேவாலயம் மற்றும்

4) சென்னை, புனித தோமையர் மலை தேசிய திருத்தல தேவாலயம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புனித தோமையர் மலை தேசிய திருத்தலம் தனது 500–வது ஆண்டு விழாவை விரைவில் கொண்டாட உள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2023–2024 ஆம் நிதியாண்டில் பள்ளிவாசல்கள், தர்காக்கள் மற்றும் கிறிஸ்துவ தேவாலயங்களைப் பராமரித்து மராமத்து செய்ய தலா 10 கோடி ரூபாய் வழங்க 13–1–2023 அன்று அறிவித்துள்ள மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு எனது நன்றியை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் 3,181 பதிவு செய்யப்பட்ட வக்ஃபுகளும், 3,445 பதிவு செய்யப்படாத வக்ஃபுகளும் உள்ளன. இந்த வக்ஃபு நிறுவனங்களில் 63,332 வக்ஃபு சொத்துகள் உள்ளன. ஆக்கிரமிப்பில் உள்ள வக்ஃபு சொத்துகளை மீட்க வக்ஃபு வாரியம் தொடர் நடவடிக்கை எடுத்து வருகிறது. இதன் பயனாக ரூபாய் 650 கோடி மதிப்பிலான வக்ஃபு சொத்துகள் ஆக்கிரமிப்பாளர்களிடமிருந்து மீட்கப்பட்டுள்ள செய்தியை இங்கே குறிப்பிட்டு, பதிவு செய்ய விரும்புகிறேன்.

1. சென்னை, நந்தனம், பசிலத்துன்னிசா பேகம் சாஹிபா எண்டோவ்மென்ட் வக்ஃபீப்.

2. சென்னை, மீர் முஹம்மது அலி எண்டோவ்மென்ட் வக்ஃபீப்.

3. சென்னை, அமீருன்னிசா பேகம், சாஹிபா எண்டோவ்மைன்ட் வக்ஃபீப்.

4. திருச்சி, ஹசரத் நபி ஸல்லல்லாஹீ அலைஹி வஸல்லம் வக்ஃபீப்.

5. மதுரை, சமயநல்லூர் ஜும்மா தொழுகை பள்ளிவாசல்.

6. இராமநாதபுரம், கீழக்கரை முஸ்லீம் ஜமாத் கமிட்டி வக்ஃபீப்.

7. விழுப்புரம், மெஹ்ராஜ் நாச்சியார் வக்ஃபீப்.

8. திண்டுக்கல், பேகம்பூர் பள்ளிவாசல் வக்ஃபீப்.

9. கோயம்புத்தூர், சூலூர் சுன்னத் ஜமாத் பள்ளிவாசல்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இஸ்லாமிய மக்களின் 5 புனித கடமைகளில் ஹஜ் பயணம் மேற்கொள்வது ஒரு கடமையாகும். ஹஜ் பயணியர் எந்த சிரமமும் இல்லாமல் பயணம் மேற்கொள்ள தமிழ்நாடு ஹஜ் குழு திறம்படப் பணியாற்றி வருகிறது.

கடந்த ஆண்டு தமிழ்நாட்டைச் சேர்ந்த ஹஜ் புனிதப் பயணிகள் தங்கள் பயணத்தை கேரள மாநிலம் கொச்சி நகரிலிருந்து மேற்கொண்டனர். மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் விடுத்த கோரிக்கையை ஏற்று, இந்த ஆண்டு சென்னை நகரை ஹஜ் பயணிகளுக்கான புறப்பாட்டுத் தலமாக மத்திய ஹஜ் குழு அறிவித்துள்ளது. ஹஜ் பயணியருக்கு ஹஜ் பயணத்தை எளிமையாக்கும் பணியுடன், அவர்களுக்கு மாநில அரசின் மானியம் வழங்கும் திட்டமும் தொடர்ந்து செயல்படுத்தப்பட்டு வருகிறது. கடந்த ஆண்டு தமிழ்நாட்டிலிருந்து புனித ஹஜ் பயணம் மேற்கொண்ட 1,672 நபர்களில் முதல் முறை புனித ஹஜ் பயணம் மேற்கொண்ட 1,649 பயனாளிகளுக்கு மாநில அரசின் மானியத் தொகையாக தலா ரூபாய் 27 ஆயிரத்து 628 வீதம் வழங்கப்பட்டுள்ளது. நடப்பு நிதி ஆண்டில் புனித ஹஜ் பயணிகளுக்கு மானியம் வழங்க ரூபாய் 10 கோடியை விடுவிக்க உத்தரவிட்டுள்ளதற்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு இந்த நேரத்தில் நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

2023 ஏப்ரல் 13] [*திரு. செஞ்சி* K.S. *மஸ்தான்*]

பிற்பகல் 5–15

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிறிஸ்தவர்கள் ஜெருசலேம் புனிதப் பயணம் மேற்கொள்ள தகுதிவாய்ந்த நபர்களுக்கு ரூபாய் 37,000 வீதமும், கன்னியாஸ்திரிகளுக்கு ரூபாய் 60,000 வீதமும் மானியம் வழங்கப்பட்டு வருகிறது. நடப்பு ஆண்டில் புனித ஹஜ் பயணம் மேற்கொள்ள 4,552 பேர் பதிவு செய்துள்ள நிலையில் 4,286 பேர் பயணம் செய்ய தமிழ்நாட்டிற்கு மத்திய ஹஜ் குழுவால் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

புனித இரமலான் மாதத்தில் நோன்பு நோற்போருக்கு நோன்பு திறக்க ரூபாய் 25 கோடியே 63 இலட்சத்து 60 ஆயிரம் செலவில் 6,500 மெட்ரிக் டன் அரிசியை பதிவு செய்யப்பட்டுள்ள பள்ளிவாசல்களுக்கு விடுவிக்க ஆணையிட்ட மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு இந்த நேரத்தில் நன்றி சொல்ல கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிறுபான்மையினர் நலத் துறை சிறப்பாக செயல்பட உறுதுணையாக இருக்கின்ற நம்முடைய அரசு தலைமைச் செயலாளர் முனைவர் வெ. இறையன்பு I.A.S., *அவர்களுக்கும், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் செயலாளர்கள் திரு. உதயச்சந்திரன்* I.A.S., *அவர்களுக்கும், டாக்டர் உமாநாத்* I.A.S., *அவர்களுக்கும், திரு. சண்முகம்* I.A.S., *அவர்களுக்கும், திருமதி அனு ஜார்ஜ்* I.A.S., *அவர்களுக்கும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் முதன்மை தனிச் செயலாளர் திரு. தினேஷ் அவர்களுக்கும், நிதித் துறையின் அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் திரு. முருகானந்தம்* I.A.S., *அவர்களுக்கும், பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறையின் அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் திரு. மங்கத் ராம் ஷர்மா* I.A.S., *அவர்களுக்கும், சிறப்புச் செயலாளர் திரு. ஹனீஷ் சாப்ரா* I.A.S., *மற்றும் துறையின் அனைத்து அலுவலர்களுக்கும், சிறுபான்மையினர் நலத் துறையின் இயக்குநர் டாக்டர்* C. *சுரேஷ்குமார்* I.A.S., *மற்றும் துறை அலுவலர்களுக்கும், என்னுடைய அலுவலக அலுவலர்கள் திரு. அன்பழகன், திரு. வடிவேல் முருகன், திரு. அசோக்குமார் ஆகியோருக்கும் மற்றும் தமிழ்நாடு மாநில சிறுபான்மையினர் ஆணையத்தின் உறுப்பினர் செயலர் டாக்டர் பிங்க்கி ஜோயல்* I.A.S., *ஆகியோருக்கும் எனது மனமார்ந்த நன்றியினை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டிருக்கின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிறிய துறையாக இருந்தாலும், அதிக அளவில் மக்களைச் சந்திக்கின்ற வாய்ப்பைப் பெற்ற துறை இத்துறை. எனவே, சிறுபான்மையினர் நலத் துறை சார்பாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய வழிகாட்டுதலோடு இந்த அறிவிப்புகளை அறிவிக்கக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

அறிவிப்புகள்

1. ஏழ்மை நிலையிலுள்ள சிறுபான்மையினருக்கு 2,500 விலையில்லா மின்மோட்டாருடன்கூடிய தையல் இயந்திரங்கள் 1 கோடியே 60 இலட்சம் ரூபாய் செலவில் வழங்கப்படும்

ஏழ்மை நிலையிலுள்ள சிறுபான்மை இனத்தைச் சார்ந்த மக்களின் பொருளாதார நிலையை மேம்படுத்த ஏதுவாக ஒரு தையல் இயந்திரம் ரூ.6,400 மதிப்பில் 2500 மின்மோட்டாருடன்கூடிய தையல் இயந்திரங்கள் 1 கோடியே 60 இலட்சம் ரூபாய் செலவில் வழங்கப்படும்.

2. உலமாக்கள் மற்றும் பணியாளர்கள் நல வாரியத்தில் பதிவு பெற்ற உறுப்பினர்களுக்கு இயற்கை மரணத்திற்கான உதவித் தொகை ரூ.20,000—லிருந்து ரூ.30,000 ஆக உயர்த்தி வழங்கப்படும்

சிறுபான்மையினர் நலத்துறையின்கீழ் செயல்படும் உலமாக்கள் மற்றும் இதர பணியாளர்கள் நல வாரியத்தில் பதிவு பெற்ற உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டு வந்த இயற்கை மரணத்திற்கான உதவித் தொகை ரூ.20,000/–லிருந்து ரூ.30,000/– ஆக உயர்த்தப்படும்.

3. உலமாக்கள் மற்றும் பணியாளர்கள் நல வாரிய உறுப்பினர்களின் 6 ஆம் வகுப்பு முதல் 9 ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவ மாணவியருக்கு 1,000/– ரூபாய் கல்வி உதவித் தொகை வழங்கப்படும்

சிறுபான்மையினர் நலத்துறையின்கீழ் செயல்படும் உலமாக்கள் மற்றும் இதர பணியாளர்கள் நல வாரிய உறுப்பினர்களின் 6 ஆம் வகுப்பு முதல் 9 ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவ மாணவியருக்கு 1,000/– ரூபாய் கல்வி உதவித் தொகை வழங்கப்படும்.

2023 ஏப்ரல் 13] [*திரு. செஞ்சி* K.S. *மஸ்தான்*]

4. உலமாக்கள் மற்றும் பணியாளர்கள் நல வாரியத்தில் பதிவு பெற்ற உறுப்பினர்களுக்கு விபத்து மரணத்திற்கான உதவித் தொகை ரூ.1,00,000/–லிருந்து ரூ.1,25,000/– ஆக உயர்த்தி வழங்கப்படும்

சிறுபான்மையினர் நலத் துறையின்கீழ் செயல்படும் உலமாக்கள் மற்றும் இதர பணியாளர்கள் நல வாரியத்தில் பதிவு பெற்ற உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டு வந்த விபத்து மரணத்திற்கான உதவித் தொகை ரூ.1,00,000/–லிருந்து ரூ.1,25,000/– ஆக உயர்த்தப்படும்.

5. சென்னை மற்றும் கோயம்புத்தூர் ஆகிய மாவட்டங்களில் 81 இலட்சத்து 68 ஆயிரம் ரூபாய் செலவில் 2 புதிய சிறுபான்மையினர் கல்லூரி மாணவர் விடுதிகள் துவங்கப்படும்

சிறுபான்மையின மாணவர்களின் நலன் கருதி, சென்னை மற்றும் கோயம்புத்தூர் ஆகிய மாவட்டங்களில் 2 புதிய சிறுபான்மையினர் கல்லூரி மாணவர் விடுதிகள் 81 இலட்சத்து 68 ஆயிரம் ரூபாய் செலவில் துவங்கப்படும்.

6. கபர்ஸ்தான் மற்றும் அடக்கஸ்தலங்களுக்கு 1 கோடி ரூபாய் செலவில் புதிதாக சுற்றுச்சுவர் அமைக்கப்படும் மற்றும் புனரமைக்கப்படும்

தமிழகத்தில் உள்ள கிறிஸ்தவர் மற்றும் இஸ்லாமியர் சமுதாயத்தினர், இறந்தவர்களை அடக்கம் செய்யும் இடமான கல்லறைத் தோட்டம் மற்றும் கபர்ஸ்தான்களுக்கு 1 கோடி ரூபாய் செலவில் புதிதாக சுற்றுச்சுவர், பாதை மற்றும் புனரமைப்பு செய்யப்படும்.

7. சொந்தக் கட்டடத்தில் இயங்கும் சிறுபான்மையினர் விடுதிகளுக்கு சிறப்புப் பராமரிப்பு மற்றும் பழுதுபார்ப்புப் பணிகள் மேற்கொள்ள 1 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்

சொந்தக் கட்டடத்தில் இயங்கும் சிறுபான்மையினர் விடுதிகளுக்கு 1 கோடி ரூபாய் செலவில் சிறப்புப் பராமரிப்பு மற்றும் பழுதுபார்ப்புப் பணிகள் மேற்கொள்ளப்படும்.

8. சென்னை மாவட்டம், இராயப்பேட்டையில் ஒரு சிறுபான்மையினர் கல்லூரி மாணவியர் விடுதிக்கு 6 கோடியே 7 இலட்சத்து 75 ஆயிரம் ரூபாய் செலவில் சொந்தக் கட்டடம் கட்டப்படும்

TRUTH ALONE TRIUMPHS

விடுதிகளில் தங்கிப் பயிலும் மாணவ, மாணவியரின் நலன் கருதி, சென்னை மாவட்டத்தில் உள்ள இராயப்பேட்டை சிறுபான்மையினர் நல கல்லூரி மாணவியர் விடுதிக்கு 6 கோடியே 7 இலட்சத்து 75 ஆயிரம் ரூபாய் செலவில் சொந்தக் கட்டடம் கட்டப்படும்.

பிற்பகல் 5–20

9. கோயம்புத்தூர் மற்றும் திருச்சி மாவட்டங்களில் கூடுதலாக தலா ஒரு முஸ்லிம் மகளிர் உதவி சங்கம் 2 இலட்சம் ரூபாய் செலவில் புதிதாகத் துவங்கப்படும்

கோயம்புத்தூர் மற்றும் திருச்சி மாவட்டங்களில் கூடுதலாக தலா ஒரு முஸ்லிம் மகளிர் உதவி சங்கம் 2 இலட்சம் ரூபாய் செலவில் புதிதாகத் துவங்கப்படும்.

10. கல்லூரி மாணவர்களுக்கான பேச்சுப் போட்டிகள், தமிழ்நாடு மாநில சிறுபான்மையினர் ஆணையம்மூலம் 1 கோடி ரூபாய் செலவில் நடத்தப்படும்

கல்லூரி மாணவர்கள் மொழி, பண்பாடு, இலக்கியம், கலைகள், வரலாறு ஆகியவற்றின் புரிதல்களை பெற்றிடும் வகையில் கல்லூரி மாணவர்களுக்கு பேச்சுப் போட்டிகள், தமிழ்நாடு மாநில சிறுபான்மையினர் ஆணையம்மூலம் 1 கோடி ரூபாய் செலவில் நடத்தப்படும்.

கல்லூரி மாணவர்களுக்கான பேச்சுப் போட்டிகள் தமிழ்நாடு முழுவதும் மாநில சிறுபான்மையினர் ஆணையத்தால் நடத்தப்படுவதற்கு மூலத் தொகையாக 1 கோடி ரூபாய் செலவில் நடத்தப்படும்.

11. அனைத்து மாவட்டங்களிலும் கொண்டாடப்படும் சிறுபான்மையினர் உரிமைகள் தினத்திற்கு வழங்கப்பட்டு வரும் தொகை ரூ.2,000/–லிருந்து ரூ.10,000/– ஆக 3 இலட்சத்து 4 ஆயிரம் ரூபாய் செலவில் உயர்த்தப்படும்

அனைத்து மாவட்டங்களிலும் கொண்டாடப்படும் சிறுபான்மையினர் உரிமைகள் தினத்திற்கான தொகை ஒவ்வொரு மாவட்டத்திற்கும் ரூ.2,000/–லிருந்து ரூ.10,000/– ஆக உயர்த்தப்படும். இதற்கென 3 இலட்சத்து 4 ஆயிரம் ரூபாய் வழங்கப்படும்.

2023 ஏப்ரல் 13] [*திரு. செஞ்சி* K.S. *மஸ்தான்*]

12. தமிழ்நாடு வக்ஃப் வாரியத்திற்கு வக்ஃப் சொத்துகளை அளவை செய்வதற்காகவும் (Survey) 11 மண்டல அலுவலகங்களில் 11 கணினிகள் மற்றும் 11 ஸ்கேனர்களுடன் கூடிய நகல் எடுக்கும் இயந்திரங்கள் வாங்குவதற்கும் 2 கோடி ரூபாய் வழங்கப்படும்

தமிழ்நாடு வக்ஃப் வாரியத்திற்கு வக்ஃப் சொத்துகளை அளவை செய்வதற்காகவும் (Survey) மற்றும் 11 மண்டல அலுவலகங்களில் 11 கணினிகள் மற்றும் 11 ஸ்கேனர்களுடன் கூடிய நகல் எடுக்கும் இயந்திரங்கள் வாங்கவும் 2 கோடி ரூபாய் வழங்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்கள் கொடுத்துள்ள வெட்டுத் தீர்மானங்களைப் பொறுத்தளவில், நான் அளித்துள்ள பதிலுரையில் அவர்களுடைய கோரிக்கைகள் ஓரளவிற்கு நிறைவேறியிருக்கும் என்ற நம்பிக்கையோடு, சில விடுபட்டிருந்தாலும், அறிவிப்புகளில் விடுபட்டிருந்தாலும், அவையெல்லாம் கூடுதலாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு, உங்களுடைய கோரிக்கைகள் எல்லாம் நிறைவேற்றித் தரப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர்கள் தெரிவித்துள்ள கருத்துகளுக்கு இப்போது நான் தெரிவித்துள்ள விளக்கங்கள் திருப்தி அளிக்கும் என்று நம்புகிறேன். எனவே, மாண்புமிகு உறுப்பினர்கள் கொடுத்துள்ள வெட்டுத் தீர்மானங்களை திரும்பப்பெற்றுக் கொண்டு மானியக் கோரிக்கையை நிறைவேற்றித் தர வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன். மேலும், என்னுடைய மானியக் கோரிக்கையின் மீதான விவாதத்திற்கு பதிலளிக்கும் நேரத்தில் அனைவரும் இந்த அவையில் இருந்து, ஒத்துழைப்பு தந்ததற்காக அனைவருக்கும் மேலும் ஒருமுறை நன்றி சொல்லிக்கொள்கிறேன்.

இங்குள்ள மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்களின் கவனத்திற்கு, கேட்பதெல்லாம் கொடுக்கக்கூடிய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், சொன்னதைச் செய்வார், செய்வதைச் சொல்வார், சொல்லாததையும் செய்கிறார். எங்களது சிறுபான்மையினர் நலத் துறை சார்பாக அனைத்து சட்டமன்ற உறுப்பினர்களுக்கும், அனைத்துத் தொகுதிகளிலும் பள்ளிவாசல்கள், தேவாலயங்கள், அடக்கஸ்தலங்கள், கபர்ஸ்தான் போன்ற எல்லா பணிகளும் ஆங்காங்கே நடைபெற்று வருகின்றன.

எனவே, தேவையான கோரிக்கைகளை நீங்கள் முன்வைத்தால், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு எடுத்துச் சென்று, அந்தப் பணிகள் சிறப்பாக நடைபெறுவதற்காக உங்களில் ஒருவனாக இருந்து ஒத்துழைப்பேன். எனவே, 'கேளுங்கள், கொடுக்கப்படும்' முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் ஆட்சியில் என்று சொல்லி, பதிலுரையை நிறைவு செய்கிறேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பதிலுரை. மாண்புமிகு குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. தா.மோ. அன்பரசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களை வணங்குகிறேன். பட்டு வளர்ச்சியில் கடந்த இரண்டாண்டுகளில் கழக ஆட்சியில் பல்வேறு பணிகளை மிகச் சிறப்பாக நடத்தி, தற்போது பட்டு நூலை அதிகளவில் உற்பத்தி செய்கிற மாநிலமாக நம்முடைய மாநிலம் திகழ்ந்து கொண்டிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி)

பட்டு உற்பத்தியானது, முதன்முதலில் கிருஷ்ணகிரி மாவட்டம், ஓசூரில் துவங்கி, தற்பொழுது சென்னையை தவிர்த்து தமிழகத்தில் உள்ள அனைத்து மாவட்டங்களிலும் உற்பத்தி செய்யப்படுகிறது. கடந்த அ.இ.அ.தி.மு.க. ஆட்சியில் மல்பெரி நடவு செய்யும் பட்டு விவசாயிகளுக்கு 3,500 ஏக்கருக்கு மட்டுமே வழங்கப்பட்டு வந்த ஊக்கத் தொகையை நம்முடைய கழக ஆட்சியில் 5,000 ஏக்கராக உயர்த்தி, கடந்த 2 ஆண்டுக் காலத்தில் 6 ஆயிரத்து 361 பட்டு விவசாயிகளுக்கு ரூ.10 கோடியே 50 இலட்சம் ஊக்கத் தொகை வழங்கப்பட்டிருக்கிறது. "பட்டுப் புழு வளர்ப்பு மனைக்கான" மானியம் கடந்த அ.இ.அ.தி.மு.க. ஆட்சியில், ரூ.87,500/– ஆக இருந்தது. அதை நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், ரூ.1 இலட்சத்து 20 ஆயிரமாக உயர்த்தி, (மேசையைத் தட்டும் ஒலி) இந்த இரண்டாண்டுகளில் 800 விவசாயிகளுக்கு ரூ.9 கோடியே 60 இலட்சம் மானியம் வழங்கப்பட்டுள்ளது என்பதை நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன். இதன் விளைவாக, கடந்த 2 ஆண்டுகளில் மட்டும் மல்பெரி நடவு பரப்பு 11 ஆயிரத்து 583 ஏக்கர் அதிகரித்து, தற்போது தமிழ்நாடு முழுவதும் 56 ஆயிரம் ஏக்கராக பயிரிடப்பட்டு வருகிறது என்பது மிகப் பெரிய சாதனையாகும்.

2023 ஏப்ரல் 13] [திரு. தா.மோ. அன்பரசன்]

பிற்பகல் 5–25

பட்டுத் தொழிலில் நீண்ட காலம் ஈடுபட்டு வரும் முன்னோடி பட்டு விவசாயிகளுக்கு Power tiller இயந்திரம் வழங்க வேண்டும் என்ற தொடர் கோரிக்கையினை ஏற்று, நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் வழங்கலாமென்று உத்தரவிட்டு, இந்த இரண்டு வருடங்களில் மட்டும் 500 முன்னோடி பட்டு விவசாயிகளுக்கு ரூ.1 கோடியே 75 இலட்சம் செலவில் அந்த Power tiller இயந்திரங்கள் வழங்கப்பட்டிருக்கின்றன. கடந்த ஆட்சியில் எல்லாம் அந்த நிலை இல்லை. கழக அரசு பொறுப்பேற்றது முதல், ஒன்றிய மற்றும் மாநில அரசுகள்மூலம், 10 ஆயிரத்து 216 பயனாளிகளுக்கு இதுவரை ரூ.39 கோடியே 55 இலட்சம் மதிப்பில் நலத் திட்ட உதவிகள் வழங்கப்பட்டிருக்கின்றன. கழக அரசு செயல்படுத்திய இந்த சிறப்பான திட்டங்களினால் 1,834 மெட்ரிக் டன்னாக இருந்த மாநிலத்தின் பட்டு உற்பத்தி, இந்த 2 ஆண்டுகளில் 2 ஆயிரத்து 589 மெட்ரிக் டன் ஆக உயர்ந்திருக்கிறது என்பதை நான் பெருமையோடு சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோன்று, பூம்புகார் நிறுவனம் தமிழ்நாடு கைவினைஞர்களின் வாழ்வாதாரத்தைப் பாதுகாத்திடவும், வாழ்க்கைத் தரத்தை உயர்த்திடவும், கலைபொருட்களுக்கு நல்ல விலை கிடைத்திட வேண்டுமென்ற நல்ல நோக்கிலும், மறைந்தாலும் நம்முடைய இதயங்களில் இன்றைக்கும் வாழ்ந்து கொண்டிருக்கிற, தலைவர் கலைஞர் அவர்களால் 1973 ஆம் ஆண்டு கைத்திறத் தொழில்கள் வளர்ச்சிக் கழகம், ஒரு பொதுத் துறை நிறுவனமாக “பூம்புகார்” என்ற பெயரில் துவக்கப்பட்டது. தற்போது, 7 உற்பத்தி நிலையங்கள் மற்றும் 22 விற்பனை நிலையங்களுடன் தனது 50 ஆம் ஆண்டு பொன் விழாவை கொண்டாடிக் கொண்டிருக்கிறது.

கடந்த அ.இ.அ.தி.மு.க. ஆட்சியில் ரூ.23 கோடியாக இருந்த பூம்புகார் நிறுவனத்தின் விற்பனை, கழக அரசு பொறுப்பேற்ற பின் ரூ.47 கோடியாக உயர்ந்திருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) ஆக, கடந்த 2 ஆண்டுகளில் மட்டும் ரூ.70 கோடி மதிப்பிலான கலைபொருட்கள் விற்பனை செய்யப்பட்டிருக்கின்றன என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். அதைப்போல, கைவினைஞர்களை ஊக்கப்படுத்த, இந்தியாவிலேயே கைவினைஞர்களுக்கு அதிகமாக விருதுகள் வழங்குகிற ஒரே மாநிலம் நம்முடைய தமிழ்நாடுதான். இதிலே 263 விருதுகளை கலைஞர்களுக்கு வழங்கி கௌரவித்துக் கொண்டிருக்கிறோம்.

நலிந்த கைவினைத் தொழில்களுக்கு உதவிடும் விதமாக, காஞ்சிபுரம் மாவட்டம்–கலியனூர், விழுப்புரம் மாவட்டம்–விக்கிரவாண்டி, திருநெல்வேலி மாவட்டம்–அம்பாசமுத்திரம், பத்தமடை, சேலம் மாவட்டம்–தம்மம்பட்டி, பெரம்பலூர் மாவட்டம்–அரும்பாவூர், ஈரோடு மாவட்டம்–ஆசனூர் ஆகிய 7 இடங்களில் ரூ.3 கோடியே 94 இலட்சம் மதிப்பீட்டில் பொது வசதி மையங்கள் மாண்புமிகு முதல்வர் அவர்களால் கடந்த 13–4–2022 அன்று துவக்கி வைக்கப்பட்டன. ஆக, கடந்த 2 ஆண்டுகளில் மட்டும் கள்ளக்குறிச்சி–மரச்சிற்பம், கருப்பூர்–கலம்காரி ஓவியம், தஞ்சாவூர்–நெட்டி வேலை, அரும்பாவூர்–மரச்சிற்பம், கன்னியாகுமரி–மயிலாடி கற்சிற்பங்களுக்கு புவிசார் குறியீடு பெற்றிருக்கிறோம் என்பதை இந்த நேரத்திலே மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன். ஆக, நம்முடைய இந்த 2 துறைகளும் நம்முடைய கதர் மற்றும் கிராமத் தொழில்களில் வருகிற துறை, சிறிய துறை. இன்றைக்கு காலையில் ஒரு உறுப்பினர்கூட இந்தத் துறை குறித்து பேசவில்லை. ஆக, இன்றைக்கு இந்தத் துறையின் மூலமாக சில அறிவிப்புகளை நான் வெளியிடுகிறேன்.

அறிவிப்புகள்

பட்டு வளர்ச்சித் துறை

1. தரமான பட்டுக்கூடு உற்பத்தியினை ஊக்குவிக்க, 1,500 பட்டு விவசாயிகளுக்கு தனி பட்டுப்புழு வளர்ப்பு மனை அமைக்க ரூபாய் 15 கோடியே 68 இலட்சத்து 75 ஆயிரம் உதவித் தொகை வழங்கப்படும்

பட்டுப்புழு வளர்ப்பிற்கு உகந்த தட்பவெப்ப சூழ்நிலைகளைப் பராமரித்து, சுகாதாரமான முறையில் பட்டுப்புழு வளர்ப்பு மேற்கொண்டு, தரமான பட்டுக்கூடுகள் அறுவடை செய்திடும் வகையில், 2023–2024 ஆம் ஆண்டில் 1,500 விவசாயிகள் பட்டுப் புழு வளர்ப்பு மனை அமைத்து பயன்பெறும் வகையில், 1,500 பட்டுப்புழு வளர்ப்பு மனைகளுக்கு மொத்தம் ரூபாய் 15 கோடியே 68 இலட்சத்து 75 ஆயிரம் நிதி உதவி வழங்கப்படும்.

2. 6,500 ஏக்கரில் அதிக மகசூல் தரும் மல்பெரி இரகங்கள் நடவு செய்யும் விவசாயிகளுக்கு ரூபாய் 7 கோடியே 50 இலட்சம் ஊக்கத் தொகை வழங்கப்படும்

அதிக மகசூல் தரும் மல்பெரி இரகங்கள் நடவு செய்யும் விவசாயிகளுக்கு 2023–2024 ஆம் ஆண்டில், 6,500 ஏக்கருக்கு

ஊக்கத்தொகை வழங்கிட மொத்தம் ரூபாய் 7 கோடியே 50 இலட்சம் நிதி உதவி வழங்கப்படும்.

3. பட்டுக் கூடுகளின் தரத்தை அதிகரிக்க 2,000 பட்டு விவசாயிகளுக்கு ரூபாய் 6 கோடியே 81 இலட்சத்து 25 ஆயிரம் மதிப்பீட்டில் நவீன பட்டுப்புழு வளர்ப்புத் தளவாடங்கள் மற்றும் பண்ணை உபகரணங்கள் வழங்கப்படும்

பட்டுப்புழு வளர்ப்பில் பட்டுக்கூடுகளின் தரம் மற்றும் உற்பத்தித் திறனை அதிகரித்திட 2023–2024 ஆம் ஆண்டில், 2,000 பட்டு விவசாயிகளுக்கு நவீன பட்டுப்புழு வளர்ப்புத் தளவாடங்கள் மற்றும் பண்ணை உபகரணங்கள் ரூபாய் 6 கோடியே 81 இலட்சத்து 25 ஆயிரம் மதிப்பீட்டில் கொள்முதல் செய்து வழங்கப்படும்.

4. மாநிலத்தில் பட்டு நூற்புத்தொழிலை விரிவுபடுத்தி தரமான பட்டுநூல் உற்பத்தியை ஊக்குவித்திட, 2000 முனைகள் கொண்ட ஒரு தானியங்கி பட்டு நூற்பாலை ரூபாய் 5 கோடியே 98 இலட்சம் மதிப்பீட்டில் நிறுவப்படும்

மாநிலத்தின் பட்டுநூற்புப் பிரிவினை விரிவுபடுத்தி தரமான பட்டுநூல் உற்பத்தியை ஊக்குவித்திடவும், நமது மாநில பட்டு விவசாயிகளால் உற்பத்தி செய்யப்படும் பட்டுக்கூடுகளை மாநிலத்திற்குள்ளாகவே கொள்முதல் செய்து பட்டு விவசாயிகளுக்கு கூடுதல் விலை கிடைக்கச் செய்திடும் நோக்கத்திலும், ரூபாய் 5 கோடியே 98 இலட்சம் மதிப்பீட்டில் 2,000 முனைகள் கொண்ட ஒரு தானியங்கி பட்டு நூற்பாலை நிறுவப்படும்.

5. 300 முன்னோடி பட்டு விவசாயிகளுக்கு ரூபாய் ஒரு கோடியே 5 இலட்சம் மதிப்பீட்டில் பவர் டில்லர் கொள்முதல் செய்து வழங்கப்படும்

முன்னோடி பட்டு விவசாயிகளை ஊக்குவிக்கும் வகையில், 2023–2024 ஆம் ஆண்டில், 300 முன்னோடி பட்டு விவசாயிகள் பயன்பெறும் வகையில், பவர் டில்லருக்கு தலா ரூபாய் 35,000/– வீதம், 300 பவர் டில்லர்கள் ரூபாய் ஒரு கோடியே 5 இலட்சம் மதிப்பீட்டில் கொள்முதல் செய்து வழங்கப்படும்.

6. நீலகிரி மாவட்டம் குன்னூர் அரசு பட்டுப் பண்ணையில் ரூபாய் 75 இலட்சம் மதிப்பீட்டில் ஒருங்கிணைந்த பட்டு வளர்ச்சி பயிற்சி மற்றும் சுற்றுலா வளாகம் அமைக்கப்படும்

அனைத்து பட்டுவளர்ச்சி செயல்பாடுகளையும், பட்டு விவசாயிகள் பட்டு தொழில்முனைவோர் மற்றும் சுற்றுலாப்

பயணிகள் என அனைவரும் ஒரே இடத்தில் அறிந்து கொண்டு பயன்பெறும் நோக்கில், நீலகிரி மாவட்டம் குன்னூர் அரசு பட்டுப் பண்ணையில் ரூபாய் 75 இலட்சம் மதிப்பீட்டில் "ஒருங்கிணைந்த பட்டுவளர்ச்சி பயிற்சி மற்றும் சுற்றுலா வளாகம்" அமைக்கப்படும்.

7. 1000 பட்டு விவசாயிகளுக்கு ரூபாய் 70 இலட்சம் மதிப்பீட்டில் பட்டுவளர்ப்பு குறித்த தொழில்நுட்பப் பயிற்சி வழங்கப்படும்

புதிதாக பட்டுத் தொழிலில் ஈடுபடும் பட்டு விவசாயிகளுக்கு மல்பெரி தோட்டப் பராமரிப்பு மற்றும் பட்டுப்புழு வளர்ப்பு தொழில்நுட்பங்கள் குறித்து பயிற்சி வழங்கிட ஏதுவாக, 2023–2024 ஆம் ஆண்டில், ரூபாய் 70 இலட்சம் மதிப்பீட்டில் 1000 பட்டு விவசாயிகளுக்கு பட்டுத்தொழில் குறித்த தொழில்நுட்பப் பயிற்சி வழங்கப்படும்.

8. நோயற்ற பட்டு முட்டைகள் உற்பத்தி செய்து பட்டு விவசாயிகளுக்கு வழங்கிட ரூபாய் 2 கோடியே 16 இலட்சம் மதிப்பீட்டில் ஒரு பட்டுப்புழு விதை உற்பத்தி மையம் (வித்தகம்) நிறுவப்படும்

நோயற்ற பட்டு முட்டைகளை உற்பத்தி செய்து, பட்டுப்புழு வளர்ப்பில் ஈடுபட்டு வரும் விவசாயிகளுக்கு விநியோகம் செய்திடும் வகையில், ரூபாய் 2 கோடியே 16 இலட்சம் மதிப்பீட்டில் ஒரு பட்டுப்புழு விதை உற்பத்தி மையம் (வித்தகம்) தனியார் தொழில்முனைவோர்மூலம் நிறுவப்படும்.

9. சேலம் மாவட்டம் ஏற்காட்டில் அமைந்துள்ள பட்டு சுற்றுலா மையத்தில், பட்டு வளர்ச்சித் துறை மற்றும் அறிவியல் சார்ந்த பொழுதுபோக்கு செயல்பாடுகளை விரிவுபடுத்துதல், பட்டுத் துணிகள் மற்றும் கைவினைப் பொருட்கள் சார்ந்த விற்பனை மையங்கள் அமைத்தல் உள்ளிட்ட பணிகள் ரூபாய் 40 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும்

2023–2024 ஆம் ஆண்டில், சேலம் மாவட்டம், ஏற்காட்டில் அமைந்துள்ள 'பட்டு உலகம்' என்ற பட்டு சுற்றுலா மையத்திற்கு, வருகை தரும் சுற்றுலாப் பயணிகள், பள்ளி மற்றும் கல்லூரி மாணவ, மாணவிகள் அனைத்து பட்டு வளர்ச்சி செயல்பாடுகளையும் அறிந்துகொள்வதோடு, அறிவியல் சார்ந்த பொழுதுபோக்கு செயல்பாடுகளிலும் ஈடுபடச் செய்யும் நோக்கில், மையத்தில் அறிவியல் சார்ந்த பணிகளை

விரிவுபடுத்துதல், சுற்றுலாப் பயணிகளைக் கவரும் வகையிலும், பார்வையாளர்களுக்கு பயன்படும் வகையிலும் பட்டுத் துணிகள் மற்றும் கைவினைப்பொருட்கள் சார்ந்த விற்பனை மையங்கள் அமைத்தல் உள்ளிட்ட பணிகள் ரூபாய் 40 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும்.

பிற்பகல் 5–30

10. 30 விதைக்கூடு உற்பத்தி செய்யும் பட்டு விவசாயிகளுக்கு ரூபாய் 37 இலட்சத்து 50 ஆயிரம் மதிப்பீட்டில் பட்டுப்புழு வளர்ப்பு மனைக்கான உதவித்தொகை மற்றும் பட்டுப்புழு வளர்ப்பு தளவாடங்கள் கொள்முதல் செய்து வழங்கப்படும்

தரமான, நோயற்ற பட்டு முட்டைத் தொகுதிகள் உற்பத்திக்கு தேவையான விதைக்கூடுகளை அதிக அளவில் உற்பத்தி செய்து அரசு வித்தகங்களுக்கு வழங்கிடும் நோக்கில், 2023–2024 ஆம் ஆண்டில் 30 விதைக்கூடு உற்பத்தி செய்யும் பட்டு விவசாயிகளுக்கு, ரூபாய் 37 இலட்சத்து 50 ஆயிரம் மதிப்பீட்டில் விதை பட்டுப்புழு வளர்ப்பு மனைகளை அமைக்க உதவித் தொகையும், பட்டுப்புழு வளர்ப்புத் தளவாடங்கள் கொள்முதல் செய்தும் வழங்கப்படும்.

11. சேலம் மாவட்டத்தில் இயங்கிவரும் சேலம் அரசு பட்டு நூற்பு அலகில், கூடுதலாக 2 பலமுனை பட்டு நூற்பு அலகுகளும், ஒரு பட்டு முறுக்கேற்றும் அலகும் நிறுவிட ரூபாய் 26 இலட்சத்து 26 ஆயிரம் நிதி உதவி வழங்கப்படும்

அரசு பட்டுநூற்பு அலகுகளை வலுப்படுத்தி, தரமான கச்சாப்பட்டு/முறுக்கேற்றிய பட்டுநூல் உற்பத்தியை அதிகரித்திடும் நோக்கத்தில், 2023–2024 ஆம் ஆண்டில், சேலம் மாவட்டத்தில் இயங்கி வரும் சேலம் அரசு பட்டு நூற்பு அலகில் கூடுதலாக 2 பலமுனை பட்டுநூற்பு அலகுகளும், ஒரு பட்டு முறுக்கேற்றும் அலகும் நிறுவிட ரூபாய் 26 இலட்சத்து 26 ஆயிரம் நிதி உதவி வழங்கப்படும்.

12. கிருஷ்ணகிரி மாவட்டம் ஒசூரில், தமிழ்நாடு பட்டு வளர்ச்சி பயிற்சி மைய வளாகத்தில் உள்ள அரசு பட்டுக்கூடு அங்காடி ரூபாய் 25 இலட்சம் மதிப்பீட்டில் மேம்படுத்தப்படும்

பட்டு விவசாயிகள் தங்களது பட்டுக்கூடுகளை விற்பனை செய்வதற்காக வெளிமாநில பட்டுக்கூடு அங்காடிக்கு எடுத்துச்

செல்வதைத் தவிர்த்திட, வெளிமாநிலங்களில் பட்டுநூற்பு உரிமம் பெற்றுள்ள பட்டு நூற்பாளர்களை, ஓசூர் அரசு பட்டுக்கூடு அங்காடியில் ஏல முறையில் பட்டுக்கூடுகளைக் கொள்முதல் செய்ய அனுமதிப்பதன்மூலம் விவசாயிகளுக்கு பட்டுக்கூடுகளின் தரத்திற்கேற்ப கூடுதல் விலை கிடைப்பதோடு, அவர்களது போக்குவரத்து நேரமும் குறையும். எனவே, கிருஷ்ணகிரி மாவட்டம், ஓசூரில் தமிழ்நாடு பட்டு வளர்ச்சி பயிற்சி மைய வளாகத்தில் உள்ள அரசு பட்டுக்கூடு அங்காடியில் பட்டுக்கூடு பரிவர்த்தனையை அதிகரித்திட, பட்டுக்கூடு அங்காடி ரூபாய் 25 இலட்சம் மதிப்பீட்டில் மேம்படுத்தப்படும்.

13. 1,000 பட்டு விவசாயிகளுக்கு, ரூபாய் 12 இலட்சத்து 50 ஆயிரம் மதிப்பீட்டில் பட்டுப் புழு வளர்ப்பு நோய்த்தடுப்பு மருந்துப் பொருட்கள் கொள்முதல் செய்து வழங்கப்படும்

பட்டுப்புழு வளர்ப்பில் சீரான நோய்த்தடுப்பு முறைகளைப் பின்பற்றி, தரமான பட்டுக்கூடு அறுவடையை உறுதி செய்திட, 2023–2024 ஆம் ஆண்டில், 1,000 பட்டு விவசாயிகளுக்கு பட்டுப்புழு வளர்ப்பு நோய்த்தடுப்பு மருந்துப் பொருட்கள் ரூபாய் 12 இலட்சத்து 50 ஆயிரம் மதிப்பீட்டில் கொள்முதல் செய்து வழங்கப்படும்.

14. பட்டு விவசாயிகளுக்கு சேவைகளை விரைந்து வழங்கிட ஏதுவாக தமிழ்நாட்டில் உள்ள 14 அரசு பட்டுக்கூடு அங்காடிகளுக்குத் தேவையான வசதிகள் ரூபாய் 12 இலட்சம் மதிப்பீட்டில் செய்து தரப்படும்

பட்டு வளர்ச்சித் துறையின் கட்டுப்பாட்டில், தருமபுரி, சேலம், கோயம்புத்தூர், உடுமலை, தாளவாடி, திருவண்ணாமலை, திருச்சிராப்பள்ளி, புதுக்கோட்டை, இராசிபுரம், சிவகங்கை, தேனி, நன்னகரம், நாகர்கோவில் மற்றும் திருவில்லிப்புத்தூர் ஆகிய இடங்களில் இயங்கிவரும் அரசு பட்டுக்கூடு அங்காடிகளில், பட்டு விவசாயிகளுக்குரிய சேவைகளை விரைந்து வழங்கிட ஏதுவாக, தேவையான வசதிகள் ரூபாய் 12 இலட்சம் மதிப்பீட்டில் செய்து தரப்படும்.

15. பட்டு விவசாயிகளுக்கு தரமான இளம் பட்டுப் புழுக்கள் வளர்ப்பு செய்து விநியோகம் செய்திட ரூபாய் 26 இலட்சம் மதிப்பீட்டில் 2 பெரிய அளவிலான இளம் புழு வளர்ப்பு மையங்கள் அமைக்கப்படும்

பட்டு முட்டை பொரித்தது முதல், இரண்டாம் தோலுரிப்பு வரையிலான 7 நாட்கள் புழு வளர்ப்பில், தரமான மல்பெரி

இலைகளை உணவளிப்பதிலும், சுகாதாரம் பேணுவதிலும், தேவையான தட்பவெப்ப நிலைகளைப் பராமரிப்பதிலும், சிறப்பான கவனிப்பு தேவைப்படுகிறது. இளம் பட்டுப் புழுக்களைப் பெற்று வளர்ப்பதன்மூலம், விவசாயிகள் தரமான பட்டுக்கூடுகளை உற்பத்தி செய்து அதிக வருமானம் பெற முடிகிறது. எனவே பட்டு விவசாயிகளுக்கு தரமான இளம் பட்டுப் புழுக்கள் வளர்ப்பு செய்து விநியோகம் செய்திட ரூபாய் 26 இலட்சம் மதிப்பீட்டில் 2 பெரிய அளவிலான இளம்புழு வளர்ப்பு மையங்கள் அமைக்கப்படும்.

16. மாநில அளவில் சிறந்த மூன்று பட்டு விவசாயிகளுக்கு ரூபாய் 2 இலட்சத்து 25 ஆயிரம் ரொக்கப் பரிசுகள் வழங்கப்படும்

வெண்பட்டுக்கூடு உற்பத்தி மற்றும் உற்பத்தித் திறனை ஊக்குவிக்கும் வகையில் 2023–2024 ஆம் ஆண்டில், மாநில அளவில் மூன்று சிறந்த பட்டு விவசாயிகளுக்கு முறையே, ரூபாய் 1,00,000/–, ரூபாய் 75,000/– மற்றும் ரூபாய் 50,000/– என முதல், இரண்டாம் மற்றும் மூன்றாம் ரொக்கப் பரிசுகள் வழங்கிட ரூபாய் 2 இலட்சத்து 25 ஆயிரம் நிதியுதவி வழங்கப்படும்.

17. மாநில அளவில் சிறந்த மூன்று விதைக்கூடு உற்பத்தியாளர்களுக்கு ரூபாய் 2 இலட்சத்து 25 ஆயிரம் ரொக்கப் பரிசுகள் வழங்கப்படும்

2023–2024 ஆம் ஆண்டில் தரமான, நோயற்ற பட்டு முட்டைத் தொகுதிகள் உற்பத்திக்குத் தேவையான விதைக் கூடுகளை உற்பத்தி செய்து அரசு வித்தகங்களுக்கு வழங்கிடும் நோக்கில், அதிகளவில் தரமான விதைக்கூடுகள் உற்பத்தி செய்யும் விதைக்கூடு உற்பத்தியாளர்களை ஊக்குவிக்கும் வகையில், முதல் முறையாக மாநில அளவில் முறையே ரூபாய் 1,00,000/–, ரூபாய் 75,000/– மற்றும் ரூபாய் 50,000/–என முதல், இரண்டாம் மற்றும் மூன்றாம் ரொக்கப் பரிசுகள் வழங்கிட ரூபாய் 2 இலட்சத்து 25 ஆயிரம் நிதியுதவி வழங்கப்படும்.

18. மாநில அளவில் சிறந்த மூன்று தானியங்கி பட்டு நூற்பாளர்கள் மற்றும் சிறந்த மூன்று பலமுனை பட்டு நூற்பாளர்களுக்கு ரூபாய் 4 இலட்சத்து 50 ஆயிரம் ரொக்கப் பரிசுகள் வழங்கப்படும்

2023–2024 ஆம் ஆண்டில் தரமான பட்டு நூல் உற்பத்தியினை ஊக்குவிக்கும் வகையில், அரசு அண்ணா பட்டு பரிமாற்றகத்தில்

அதிகளவு பட்டு வர்த்தகம் செய்யும் சிறந்த மூன்று தானியங்கி பட்டு நூற்பாளர்கள் மற்றும் சிறந்த மூன்று பலமுனை பட்டு நூற்பாளர்களுக்கு மாநில அளவில் முறையே ரூபாய் 1,00,000/–, ரூபாய் 75,000/– மற்றும் ரூபாய் 50,000/– என முதல், இரண்டாம் மற்றும் மூன்றாம் ரொக்கப் பரிசுகள் வழங்கிட ரூபாய் 4 இலட்சத்து 50 ஆயிரம் நிதியுதவி வழங்கப்படும்.

தமிழ்நாடு கைத்திறத் தொழில்கள் வளர்ச்சிக் கழகம்

1. ரூபாய் 15 இலட்சம் மதிப்பீட்டில் பெண்களுக்கு தஞ்சாவூர் ஓவியக் கைத்திறத் தொழிலில் பயிற்சி அளிக்கப்படும்

பாரம்பரியமிக்க தஞ்சாவூர் ஓவியங்கள் அதிக அளவில் மக்களால் விரும்பப்படுவதாலும், அக்கலையை விரிவுபடுத்த வேண்டியுள்ளதாலும், புதிய வடிவமைப்புகளை உருவாக்க பயிற்சி அளிக்கப்பட வேண்டியது அவசியமாகிறது. குறிப்பாக, பெண்களின் முன்னேற்றத்தைக் கருத்திற்கொண்டு, அவர்களுக்கு வேலைவாய்ப்பினை ஏற்படுத்தும் நோக்கோடு, திருவாரூரில், பெண்களுக்கு ரூபாய் 15 இலட்சம் மதிப்பீட்டில் தஞ்சாவூர் ஓவியக் கைத்திறத் தொழிலில் மூன்று மாதகாலப் பயிற்சி அளிக்கப்படும்.

2. ரூபாய் 15 இலட்சம் மதிப்பீட்டில் 10 தமிழ்நாடு கைவினைப் பொருட்களுக்கு புவிசார் குறியீடு பெற நடவடிக்கை மேற்கொள்ளப்படும்

பாரம்பரியமிக்க கைவினைப்பொருட்களின் தயாரிப்பினைப் பாதுகாக்கவும், அப்பொருட்களுக்கு அங்கீகாரம் அளிக்கும் நோக்கிலும், தமிழ்நாடு கைத்திறத் தொழில்கள் வளர்ச்சிக் கழகத்தால், கீழ்க்கண்ட 10 தமிழ்நாடு கைவினைப் பொருட்களுக்கு ரூபாய் 15 இலட்சம் மதிப்பீட்டில் புவிசார் குறியீடு பெற நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

1. கடலூர் (வண்டிபாளையம்)	*– களிமண் பொம்மைகள்.*
2. ராணிப்பேட்டை (வாலாஜாபேட்டை)	*– மூங்கில் மற்றும் பிரம்பு கைவினைப் பொருட்கள்.*
3. சென்னை (கொசப்பேட்டை)	*– களிமண் பொம்மைகள்.*
4. காஞ்சிபுரம் –	*– காகிதக்கூழ் களிமண் பொம்மைகள்.*

5. மதுரை (கே. புதூர்) – உலோக கைவினைப் பொருட்கள்.
6. தென்காசி (காருகுறிச்சி) – களிமண் பொம்மைகள்
7. திருவள்ளூர் (பழவேற்காடு) – பனை ஓலை கைவினைப் பொருட்கள்.
8. தென்காசி (அம்பாசமுத்திரம்) – மரவர்ண கடைசல் பொம்மைகள்.
9. திருவண்ணாமலை (முடையூர்) – நுண்ணிய கற்சிற்ப கைவினைப் பொருட்கள்.
10. ஈரோடு (ஆசனூர்) – ஒன்னிக்குச்சி கைவினைப் பொருட்கள்.

3. ரூபாய் 25 இலட்சம் மதிப்பீட்டில் அரசு கவின் கலைக் கல்லூரிகளில் புதிய வடிவமைப்புகளுக்கான போட்டிகள் நடத்தப்படும்

பழமையான கைத்திறத் தொழிலில் புதுமையை புகுத்தும் நோக்கோடு, கல்லூரி மாணவர்களின் புதிய வடிவமைப்பை உருவாக்கும் திறனை வெளிக்கொணரவும், போட்டிகள் நிறைந்த உலகில் அவர்களுக்கான சந்தை வாய்ப்பினை ஏற்படுத்தும் முயற்சியாகவும், தமிழ்நாடு கைத்திறத் தொழில்கள் வளர்ச்சிக் கழகம் ரூபாய் 25 இலட்சம் மதிப்பீட்டில், மின்னிலக்கத் தொழில்நுட்பங்களை பயன்படுத்தி, மாணவர்களின் செயல்திறன்மூலம் புதிய வடிவமைப்புகளை உருவாக்க அரசு கவின் கலைக் கல்லூரிகளில் வடிவமைப்பு போட்டிகள் நடத்தப்படும்.

4. ரூபாய் ஒரு கோடியே 50 இலட்சம் மதிப்பீட்டில் இந்தியாவின் முக்கிய நகரங்களில் கண்காட்சிகள் நடத்தப்படும்

கைவினைஞர்கள் தயாரிக்கும் கைவினைப் பொருட்களைச் சந்தைப்படுத்தவும், அவர்களின் வாழ்வாதாரத்தை உயர்த்தவும், பொதுமக்கள் கைவினைப் பொருட்களை ஒரே இடத்தில் வாங்குவதற்கு வசதியாகவும், இந்தியாவின் 10 முக்கிய நகரங்களில் கைவினைப் பொருட்களின் விற்பனைக் கண்காட்சிகள் தலா ரூபாய் 15 இலட்சம் மதிப்பீட்டில் மொத்தம் ரூபாய் ஒரு கோடியே 50 இலட்சம் மதிப்பீட்டில் நடத்தப்படும்.

5. ரூபாய் 50 இலட்சம் மதிப்பீட்டில் அடுத்த தலைமுறை கைவினைக் கலைஞர்களுக்கு பயிற்சி அளிக்கப்படும்

தமிழ்நாட்டின் பழமையான பாரம்பரியமிக்க கைத்திறத் தொழிலைப் பேணிப் பாதுகாத்து, அடுத்த தலைமுறைக்குக் கொண்டு செல்லும் நோக்கில், 18 முதல் 35 வயதுக்குட்பட்ட இளம் கைவினைக் கலைஞர்களுக்கு பித்தளை விளக்குகள், பஞ்சலோக சிற்பங்கள், மரச்சிற்பங்கள், தஞ்சாவூர் கலைத்தட்டுகள் மற்றும் காகிதக்கூழ் பொம்மைகள் ஆகிய கைத்திறத் தொழில்களில் ரூபாய் 50 இலட்சம் மதிப்பீட்டில் 5 பயிற்சி முகாம்கள் நடத்தப்படும்.

6. ரூபாய் 25 இலட்சம் மதிப்பீட்டில் திறன் மேம்பாட்டுப் பயிற்சிப் பட்டறைகள் நடத்தப்படும்

கைத்திறத் தொழிலைப் பாதுகாக்கவும், அக்கலையை அடுத்த தலைமுறைக்கு கொண்டு செல்லவும், சந்தையின் தற்போதைய வடிவமைப்புத் தேவைகளுக்கு ஏற்ப, புதிய வடிவமைப்புகள்/ முன்மாதிரிகளை உருவாக்குவதற்கும், பயிற்சி அளிப்பது அவசியமாகிறது. எனவே, கருப்பூர் கலம்காரி ஓவியங்கள், களிமண் & சுடுகளிமண் பொம்மைகள், பிரம்பு கைவினைப் பொருட்கள், மரச்சிற்பங்கள், சித்திரத்தையல் மற்றும் மரவர்ண கடைசல் பொம்மைகள் ஆகிய 6 கைத்திறப் பொருட்களுக்கு ரூபாய் 25 இலட்சம் மதிப்பீட்டில் திறன் மேம்பாட்டுப் பயிற்சிப் பட்டறைகள் நடத்தப்படும்.

7. ரூபாய் 50 இலட்சம் மதிப்பீட்டில் கைவினைக் கலைஞர்களுக்கு நவீன தொழில்நுட்ப உபகரணப் பொருட்கள் விநியோகம் செய்யப்படும்

கைவினைஞர்களின் திறமையை உயர்த்தவும், அவர்களின் உற்பத்தித் திறனை அதிகரிக்கவும், 500 கைவினைஞர்களுக்கு, ரூபாய் 10,000/– மதிப்பிலான நவீன தொழில்நுட்ப உபகரணப் பொருட்கள் ரூபாய் 50 இலட்சம் மதிப்பீட்டில் வழங்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் அவர்கள் ஏற்கெனவே வெட்டுத் தீர்மானங்களைத் திரும்பப்பெற வேண்டுமென்று கேட்டுக்கொண்டுள்ளார். இதைப் பொறுத்தவரையில், 13 வெட்டுத் தீர்மானங்கள்தான் வந்திருக்கின்றன. அவற்றை திரும்பப்

பெற்றுக்கொண்டு, இந்த மானியக் கோரிக்கையை நிறைவேற்றித் தருமாறு அன்போடு கேட்டு, விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *விவாதம் முடிவுற்றது. இப்போது வாக்கெடுப்பு.*

(அ) கோரிக்கை எண் 9-பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மானியக் கோரிக்கை எண் 9-பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை. வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன்.*

(வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்பெறவில்லை.)

வெட்டுத் தீர்மானங்கள் அனைத்தும் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகின்றன.

"பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை பற்றிய 9 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.1,224,78,08,000/–, மூலதனக் கணக்கில் ரூ.352,32,93,000/– மற்றும் கடன் கணக்கில் ரூ.1,000/– ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)
மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)
ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.
ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகைகள் வழங்கப்பெறுகின்றன. (மேசையைத் தட்டும் ஒலி)

(ஆ) கோரிக்கை எண் 18–கதர், கிராமத் தொழில்கள் மற்றும் கைவினைப் பொருட்கள் (கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மானியக் கோரிக்கை எண் 18–கதர், கிராமத் தொழில்கள் மற்றும் கைவினைப் பொருட்கள் (கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை). வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகின்றேன்.*

(வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்பெறவில்லை.)

வெட்டுத் தீர்மானங்கள் அனைத்தும் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகின்றன.

"கதர், கிராமத் தொழில்கள் மற்றும் கைவினைப் பொருட்கள் (கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை) பற்றிய 18 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.224,86,93,000/–க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)
மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)
ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.
ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகை வழங்கப்பெறுகிறது. (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 5–35

(இ) கோரிக்கை எண் 15–சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றம் (சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத் துறை)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மானியக் கோரிக்கை எண் 15–சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றம் (சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத் துறை). வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன்.*

2023 ஏப்ரல் 13] [பேரவைத் தலைவர்]

(வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்பெறவில்லை)

வெட்டுத் தீர்மானங்கள் அனைத்தும் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகின்றன.

"சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றம் (சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத் துறை) பற்றிய 15 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.128,76,73,000/–, மூலதனக் கணக்கில் ரூ.4,99,00,000/– மற்றும் கடன் கணக்கில் ரூ.3,63,86,000/– ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)
மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)
ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.
ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகைகள் வழங்கப் பெறுகின்றன.

(ஈ) கோரிக்கை எண் 54-வனம் (சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத் துறை)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மானியக் கோரிக்கை எண் 54–வனம் (சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத் துறை). வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன்.*

(வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்பெறவில்லை.)

வெட்டுத் தீர்மானங்கள் அனைத்தும் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகின்றன.

"வனம் (சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத் துறை) பற்றிய 54 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.719,06,38,000/–, மூலதனக் கணக்கில் ரூ.391,66,51,000/– மற்றும் கடன் கணக்கில் ரூ.1,000/– ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகைகள் வழங்கப் பெறுகின்றன. (மேசையைத் தட்டும் ஒலி)

2. அறிவிப்புகள்—தொடர்ச்சி

(ஆ) 13-4-2023 அன்று காலை திருமதி ஆ. தமிழரசி அவர்கள் கேள்வி கேட்ட சமயம்-பேரவைத் தலைவர் குறிப்பிட்ட சில வார்த்தைகள் நீக்கம்-சில ஊடகங்கள் தவறாக செய்தி வெளியிடுவதை நிறுத்த ஆணை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. இன்று காலையில் வினாக்கள்-விடைகள் நேரத்தின்போது மாண்புமிகு உறுப்பினர் திருமதி ஆ. தமிழரசி அவர்களை கேள்வி கேட்க நான், 'மாண்புமிகு உறுப்பினர் திருமதி ஆ. தமிழரசி' என்று அழைத்தேன். அப்போது அவர் கேள்வி கேட்க எழுந்து நின்றார். அப்போது, அவையில் சற்று அமைதி இல்லாமல், சப்தங்கள் அதிகமாகக் கேட்டுக் கொண்டிருந்ததால், நான், அப்போது, 'மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் அமைதியாக இருங்கள்' என்றும், ** என்றும் சொன்னேன். நான் சொன்ன அந்த வார்த்தைகளை அவைக் குறிப்பிலிருந்து நீக்கிவிடுகிறேன். அத்துடன், அவ்வாறு நான் கண்டித்தது, மாண்புமிகு உறுப்பினர் திருமதி தமிழரசி அவர்களை, என்று தவறாக இன்று சில பத்திரிகைகள், ஊடகங்கள் மற்றும் தொலைக்காட்சிகளில் வருவதாக, மாண்புமிகு தமிழரசி அவர்கள் என்னிடம் கூறியிருக்கின்றார்கள். அவர்கள் பேசுவது சபையில் கேட்கவில்லை; மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்குக் கேட்கவில்லை; அவர் பதில் சொல்ல வேண்டுமே! எனவேதான், அவையில் அமைதி காக்கின்றவண்ணம், 'எல்லோரும் அமைதியாக இருங்கள்' என்று அமைதி காக்கும் நோக்கத்தில்

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

2023 ஏப்ரல் 13] [பேரவைத் தலைவர்]

கூறியதை, 'மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் திருமதி தமிழரசி அவர்களை சபாநாயகர் கண்டித்தார்' என்ற அடிப்படையில் தவறாக செய்திகள் ஒளிபரப்பு செய்து கொண்டிருந்தால், அதை நிறுத்தும்படியும், இனி ஒளிபரப்பு செய்யப்படுகின்ற செய்திகளில் அப்படிப்பட்ட செய்திகள் வராமல் இருக்க வேண்டும் என்றும் பேரவையின் சார்பாகக் கேட்டுக்கொள்கின்றேன்.

7. மானியக் கோரிக்கைகள், 2023–2024, விவாதமும் வாக்கெடுப்பும்—*தொடர்ச்சி*

(உ) கோரிக்கை எண் 26-வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *2023–2024 ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கைகள்மீது விவாதமும் வாக்கெடுப்பும். மானியக் கோரிக்கை எண் 26-வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை, மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புர வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

"வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை பற்றிய 26 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.3,742,29,20,000/–, மூலதனக் கணக்கில் ரூ.2,000,00,08,000/– மற்றும் கடன் கணக்கில் ரூ.8,226,50,03,000/– ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வெட்டுத் தீர்மானங்கள் முன்மொழிதல். வெட்டுத் தீர்மானம் எண் 170, மாண்புமிகு உறுப்பினர் திரு. தி. ராமச்சந்திரன், இருக்கையில் இல்லை.*

வெட்டுத் தீர்மானம் எண் 227, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆ.மு. முனிரத்தினம், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 264, மாண்புமிகு உறுப்பினர் திரு. JMH. அசன் மௌலானா, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 324, மாண்புமிகு உறுப்பினர் திரு. R. ராதாகிருஷ்ணன்.

திரு. R. ராதாகிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை பற்றிய 26 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,742,29,20,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,000,00,08,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.8,226,50,03,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 1755, மாண்புமிகு உறுப்பினர் திரு. ரூபி ஆர். மனோகரன்.

திரு. ரூபி ஆர். மனோகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை பற்றிய 26 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,742,29,20,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,000,00,08,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.8,226,50,03,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 3396, மாண்புமிகு உறுப்பினர் திருமதி S. விஜயதரணி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 3503, மாண்புமிகு உறுப்பினர் திரு. S. பழனி நாடார், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 4807, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். கணேஷ், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 354, மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. அருள்.

2023 ஏப்ரல் 13]

திரு. இரா. அருள்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:*

"வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை பற்றிய 26 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,742,29,20,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,000,00,08,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.8,226,50,03,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வெட்டுத் தீர்மானம் எண் 2513, மாண்புமிகு உறுப்பினர் திரு. ச. சிவகுமார்.*

திரு. ச. சிவகுமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:*

"வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை பற்றிய 26 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,742,29,20,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,000,00,08,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.8,226,50,03,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வெட்டுத் தீர்மானம் எண் 2908, மாண்புமிகு உறுப்பினர் திரு. S. சதாசிவம், இருக்கையில் இல்லை.*

வெட்டுத் தீர்மானம் எண் 6337, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி.கே. மணி.

திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:*

"வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை பற்றிய 26 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,742,29,20,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,000,00,08,000/– மற்றும்

TRUTH ALONE TRIUMPHS

கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.8,226,50,03,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 6996, மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.பி. வெங்கடேஷ்வரன்.

திரு. எஸ்.பி. வெங்கடேஷ்வரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை பற்றிய 26 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,742,29,20,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,000,00,08,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.8,226,50,03,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 669, மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. பண்ணாரி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 917, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஈ. பாலசுப்ரமணியன்.

திரு. ஈ. பாலசுப்ரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்::

"வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை பற்றிய 26 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,742,29,20,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,000,00,08,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.8,226,50,03,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 1391, மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.வி. ராஜன் செல்லப்பா, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 1811, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர்.பி. உதயகுமார்.

2023 ஏப்ரல் 13]

திரு. ஆர்.பி. உதயகுமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை பற்றிய 26 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,742,29,20,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,000,00,08,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.8,226,50,03,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 2379, மாண்புமிகு உறுப்பினர் திரு. T.K. அமுல் கந்தசாமி.

திரு. T.K. அமுல் கந்தசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை பற்றிய 26 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,742,29,20,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,000,00,08,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.8,226,50,03,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 2605, மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. மகேந்திரன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 2657, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஓ.எஸ். மணியன்.

திரு. ஓ.எஸ். மணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை பற்றிய 26 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,742,29,20,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,000,00,08,000/– மற்றும்

கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.8,226,50,03,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 3262, மாண்புமிகு உறுப்பினர் திரு. P.R.G. அருண்குமார்.

திரு. P.R.G. அருண்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை பற்றிய 26 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,742,29,20,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,000,00,08,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.8,226,50,03,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 3311, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.ஆர். ஜெயராம்.

திரு. கே.ஆர். ஜெயராம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை பற்றிய 26 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,742,29,20,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,000,00,08,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.8,226,50,03,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 3357, மாண்புமிகு உறுப்பினர் திரு. அம்மன் K. அர்ச்சுணன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 3542, மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. கிருஷ்ணமுரளி.

திரு. செ. கிருஷ்ணமுரளி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

2023 ஏப்ரல் 13] [திரு. செ. கிருஷ்ணமுரளி]

“வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை பற்றிய 26 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,742,29,20,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,000,00,08,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.8,226,50,03,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்.”

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 3659, மாண்புமிகு உறுப்பினர் முனைவர் இசக்கி சுப்பையா, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 4231, மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. சக்ரபாணி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 4564, மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. சுந்தரராஜன்.

திரு. செ. சுந்தரராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, “கொள்கை பற்றி” விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

“வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை பற்றிய 26 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,742,29,20,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,000,00,08,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.8,226,50,03,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்.”

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 5997, மாண்புமிகு உறுப்பினர் திரு. இ.மா. மான்ராஜ், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 2296, மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் சி. சரஸ்வதி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 3209, மாண்புமிகு உறுப்பினர் திருமதி வானதி சீனிவாசன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 3445, மாண்புமிகு உறுப்பினர் திரு. நயினார் நாகேந்திரன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 5403, மாண்புமிகு உறுப்பினர் திரு. ட்டி. இராமச்சந்திரன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 982, மாண்புமிகு உறுப்பினர் திரு. K.A. பாண்டியன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 1051, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆ. அருண்மொழிதேவன், இருக்கையில் இல்லை.

பிற்பகல் 5–40

வெட்டுத் தீர்மானம் எண் 1890, மாண்புமிகு உறுப்பினர் திரு. K.C. கருப்பணன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 2106, மாண்புமிகு உறுப்பினர் திரு. பொ. அர்ஜுனன்.

திரு. பொ. அர்ஜுனன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திண்டிவனம் நகராட்சிப் பகுதிகளில் புதிய திட்டத்தின்மூலம் வீட்டுமனைகள் ஏற்படுத்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை பற்றிய 26 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,742,29,20,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,000,00,08,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.8,226,50,03,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 2138, மாண்புமிகு உறுப்பினர் திரு. எம்.எஸ்.எம். ஆனந்தன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 3417, மாண்புமிகு உறுப்பினர் திரு. எம்.ஆர். காந்தி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 3476, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆ. கோவிந்தசாமி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 3715, மாண்புமிகு உறுப்பினர் திரு. K.N. விஜயகுமார், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 3781, மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.பி. நாகைமாலி.

திரு. வி.பி. நாகைமாலி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறையில் வீடு கேட்டு விண்ணப்பித்துள்ள அனைவருக்கும் வீடுகள் வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை பற்றிய 26 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,742,29,20,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,000,00,08,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.8,226,50,03,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 3908, மாண்புமிகு உறுப்பினர் திரு. மா. சின்னதுரை.

திரு. மா. சின்னதுரை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கூட்டுறவு வீட்டு வசதி வாரிய அலுவலகத்தை கந்தர்வகோட்டையில் இயக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை பற்றிய 26 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,742,29,20,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,000,00,08,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.8,226,50,03,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 4001, மாண்புமிகு உறுப்பினர் திரு. பெரி. செந்தில்நாதன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 4160, மாண்புமிகு உறுப்பினர் திரு. சேவூர் S. இராமச்சந்திரன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 4664, மாண்புமிகு உறுப்பினர் திரு. துரை. சந்திரசேகர், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 4929, மாண்புமிகு உறுப்பினர் திரு. வே. சம்பத்குமார்.

திரு. வே. சம்பத்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "அரூர் தொகுதியில் உள்ள மக்களுக்கு அடுக்குமாடிக் குடியிருப்பு கட்ட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை பற்றிய 26 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,742,29,20,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,000,00,08,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.8,226,50,03,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 4971, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.பி. அன்பழகன்.

திரு. கே.பி. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "பாலக்கோடில் புதிய அடுக்குமாடி குடியிருப்புகள் கட்ட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை பற்றிய 26 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,742,29,20,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,000,00,08,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.8,226,50,03,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 5013, மாண்புமிகு உறுப்பினர் திரு. S. ஜெயக்குமார்.

திரு. S. ஜெயக்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "பெருந்துறை தொகுதியில் உள்ள எட்டு பேரூராட்சிப் பகுதிகளில் அடுக்குமாடிக் குடியிருப்பு கட்ட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை பற்றிய 26 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ்

2023 ஏப்ரல் 13] [திரு. S. ஜெயக்குமார்]

வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,742,29,20,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,000,00,08,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.8,226,50,03,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 5060, மாண்புமிகு உறுப்பினர் திரு. S.S. பாலாஜி.

திரு. S.S. பாலாஜி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மாமல்லபுரத்தில் CMDA பேருந்து நிலையம் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை பற்றிய 26 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,742,29,20,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,000,00,08,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.8,226,50,03,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 5468, மாண்புமிகு உறுப்பினர் திரு. K. மாரிமுத்து.

திரு. K. மாரிமுத்து: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருத்துறைப்பூண்டி நகரில் வீட்டு வசதி வாரியம் மூலம் துப்புரவுப் பணியாளர்களுக்கு வீடுகள் கட்ட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை பற்றிய 26 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,742,29,20,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,000,00,08,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.8,226,50,03,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 5522, மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. காமராஜ், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 5711, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ்.

திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "அங்கீகரிக்கப்படாத வீட்டுமனைகளை ஆய்வுக்குட்படுத்தி அங்கீகரிக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை பற்றிய 26 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,742,29,20,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,000,00,08,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.8,226,50,03,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 5886, மாண்புமிகு உறுப்பினர் திருமதி கு. மரகதம் குமரவேல், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 5950, மாண்புமிகு உறுப்பினர் திரு. பெ. பெரியபுள்ளான் என்கிற செல்வம், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 6571, மாண்புமிகு உறுப்பினர் திரு. பி. அய்யப்பன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 6845, மாண்புமிகு உறுப்பினர் திரு. AK. செல்வராஜ்.

திரு. A.K. செல்வராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மலைகளை ஒட்டியுள்ள கிராமங்களில் பொதுமக்கள் வீடுகள் கட்ட சிரமப்படுவதால், மலையை ஒட்டி 100 மீட்டர் தூரம் மட்டும் HACA–ல் சேர்த்து மற்ற பகுதிகளுக்கு விலக்களிக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை பற்றிய 26 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,742,29,20,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,000,00,08,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.8,226,50,03,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 7119, மாண்புமிகு உறுப்பினர் திரு. V.P. கந்தசாமி.

2023 ஏப்ரல் 13]

திரு. V.P. கந்தசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தமிழ்நாட்டிலுள்ள விவசாயிகள் தங்களுக்குச் சொந்தமான விவசாய பூமியில் வீடுகட்ட நகர்ப்புற வளர்ச்சித் துறையின் அனுமதி பெறுவதற்கு தேவையான வழிகாட்டு நெறிமுறைகள் வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை பற்றிய 26 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,742,29,20,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,000,00,08,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.8,226,50,03,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 7298, மாண்புமிகு உறுப்பினர் திரு. அக்ரி. எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 7444, மாண்புமிகு உறுப்பினர் திரு. S. ராஜகுமார், இருக்கையில் இல்லை.

மானியக் கோரிக்கையும் வெட்டுத் தீர்மானங்களும் பேரவைமுன் விவாதத்திற்கு வைக்கப்பட்டுள்ளன. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்னுரையாக ஏதாவது கூற விரும்பினால் கூறலாம். மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புர வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு அச்சடிக்கப்பட்டு, மாமன்ற உறுப்பினர்களுக்கு, அவர்கள் படிப்பதற்கு வசதியாக ஏற்கெனவே கொடுக்கப்பட்டுள்ளது. மின்னஞ்சல் மூலமாகவும் அனுப்பப்பட்டுள்ளது. கொள்கை விளக்கக் குறிப்பு தமிழிலும், ஆங்கிலத்திலும் மாமன்ற உறுப்பினர்களுடைய மேசையில் இருக்கிற சிறு கணினியில் பதிவேற்றம் செய்யப்பட்டிருக்கிறது. அவற்றில் தமிழிலே கொடுக்கப்பட்டிருக்கின்ற கொள்கை விளக்கக் குறிப்பை @ இப்பேரவையிலே நான் படித்ததாக ஏற்று, சட்டமன்றப் பதிவேட்டில் பதிவு செய்துகொள்ள வேண்டுமென்று

@ 819 முதல் 878 வரையிலான பக்கங்களில் இணைப்பு V ஆக அச்சிடப்பட்டுள்ளது.

கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர்கள் தங்கள் அரிய கருத்துகளைத் தெரிவித்த பின்னர், என்னுடைய பதிலுரையில் அவற்றிற்கான விளக்கங்களை அளிக்கிறேன் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன். நன்றி.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.என். நேரு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எதிர்க்கட்சி உறுப்பினர்கள் பேசுகிறபோது, அவர்கள் சொல்கிற குற்றச்சாட்டுகளுக்கு உடனடியாக பதில் சொல்லத் தேவையில்லை. நீங்கள் அவர் பேசி முடித்தவுடன் அந்தக் குற்றச்சாட்டுகளுக்கு பதில் சொன்னால் போதும் என்று தாங்கள் அறிவுரை சொன்னீர்கள். அதையேற்று மாண்புமிகு அமைச்சர் பெருமக்களும் இறுதியாக, நாம் அதற்குப் பதில் சொல்லலாம் என்று கருதுகிறபோது, எதை வேண்டுமானாலும் அவர்களது குற்றச்சாட்டாகப் பதிவு செய்துகொள்கிறார்களே தவிர, மாண்புமிகு அமைச்சர்கள் பதில் சொல்கிறபோது அனைவருமே வெளியே சென்றுவிடுகிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) எனவே, அவர்கள் சொல்கிற குற்றச்சாட்டுக்கு உடனடியாக மாண்புமிகு அமைச்சர்கள் பதில் சொல்ல நீங்கள் அனுமதி அளிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. தா.மோ. அன்பரசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை, தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாடு வாரியம் பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு அச்சடிக்கப்பட்டு, மாமன்ற உறுப்பினர்களுக்கு, அவர்கள் படிப்பதற்கு வசதியாக ஏற்கெனவே கொடுக்கப்பட்டுள்ளது. மின்னஞ்சல் மூலமாகவும் அனுப்பப்பட்டுள்ளது. கொள்கை விளக்கக் குறிப்பு தமிழிலும், ஆங்கிலத்திலும் மாமன்ற உறுப்பினர்களுடைய மேசையில் இருக்கிற சிறு கணினியில் பதிவேற்றம் செய்யப்பட்டிருக்கிறது. அவற்றில் தமிழிலே கொடுக்கப்பட்டிருக்கின்ற கொள்கை விளக்கக் குறிப்பை @ நான் இந்த மாமன்றத்தில் படித்ததாக ஏற்று, சட்டமன்றப்

@ 879 முதல் 910 வரையிலான பக்கங்களில் இணைப்பு VI ஆக அச்சிடப்பட்டுள்ளது.

2023 ஏப்ரல் 13] [திரு. தா.மோ. அன்பரசன்]

பதிவேட்டில் பதிவு செய்துகொள்ள வேண்டுமென்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர்கள் தங்கள் அரிய கருத்துகளைத் தெரிவித்த பின்னர், என்னுடைய பதிலுரையில் அவற்றிற்கான விளக்கங்களை அளிக்கிறேன் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. பி.கே. சேகர்பாபு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை, சென்னை பெருநகர வளர்ச்சிக் குழுமம் பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு அச்சடிக்கப்பட்டு, மாமன்ற உறுப்பினர்களுக்கு, அவர்கள் படிப்பதற்கு வசதியாக ஏற்கெனவே கொடுக்கப்பட்டுள்ளது. மின்னஞ்சல் மூலமாகவும் அனுப்பப்பட்டுள்ளது. கொள்கை விளக்கக் குறிப்பு தமிழிலும், ஆங்கிலத்திலும் மாண்புமிகு உறுப்பினர்களுடைய மேசையில் இருக்கிற சிறு கணினியில் பதிவேற்றம் செய்யப்பட்டிருக்கிறது. அவற்றில் தமிழிலே கொடுக்கப்பட்டிருக்கின்ற கொள்கை விளக்கக் குறிப்பை@ நான் இந்த மாமன்றத்தில் படித்ததாக ஏற்று, சட்டமன்றப் பதிவேட்டில் பதிவு செய்துகொள்ள வேண்டுமென்று பணிவோடு கேட்டுக்கொள்கின்றேன். மாண்புமிகு உறுப்பினர்கள் தங்கள் அரிய கருத்துகளைத் தெரிவித்த பின்னர், என்னுடைய பதிலுரையில் அவற்றிற்கான விளக்கங்களை அளிக்கிறேன் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மானியக் கோரிக்கைகள்மீது விவாதம். இன்று 7 மாமன்ற உறுப்பினர்கள் பேசவிருக்கின்றீர்கள். தொடர்ந்து நாளை முதல் மூன்று நாட்களுக்கு விடுமுறை வருகின்ற காரணத்தினால், பல சட்டமன்ற உறுப்பினர்கள் ஊர்களுக்குச் செல்ல வேண்டிய கட்டாயத்தில் இருப்பதாலும், இன்று பேச வருகின்ற மாமன்ற உறுப்பினர்களுக்கு குறித்த நேரத்திற்கு அதிகமாக ஒரு நிமிடம்கூட யாருக்கும் வழங்குவதற்கு வாய்ப்பில்லை. விவாதத்தைத் தொடங்கி வைக்கின்ற மாண்புமிகு உறுப்பினருக்கு 15 நிமிடங்களும், ஏனைய உறுப்பினர்களுக்கு தலா 7 நிமிடங்களும் வழங்கப்படும். விவாதம் முடிந்த பின்பு, 3

@ 911 முதல் 942 வரையிலான பக்கங்களில் இணைப்பு VII ஆக அச்சிடப்பட்டுள்ளது.

மாண்புமிகு அமைச்சர்கள் பதில் சொல்ல வேண்டியிருப்பதால், இன்று காலத்தினுடைய அருமையைக் கருதி பேச வருகின்றவர்கள் தயவுசெய்து குறித்த நேரத்தில் பேச்சை முடிக்க வேண்டுமென்றும், மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் சொன்னதையும் கருத்தில் வைத்து, பேச வருகின்ற மாமன்ற உறுப்பினர்கள், அப்படி வாய்ப்பைக் கொடுக்காமல் அதற்குத் தகுந்தபடி பேசி முடிக்க வேண்டுமென்று உங்களை அன்போடு கேட்டு, மாண்புமிகு உறுப்பினர் திரு. A.K. செல்வராஜ் அவர்களை அழைக்கிறேன்.

பிற்பகல் 5–45

திரு. A.K. செல்வராஜ்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வணக்கம்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *5–45 மணிக்கு பேச ஆரம்பித்திருக்கிறீர்கள். சரியாக 6–00 மணிக்கு உரையை முடித்துவிடுங்கள்.*

***திரு. A.K. செல்வராஜ்:** பரவாயில்லை, முடித்துவிடுகிறேன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்களுக்கு என் வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன். அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய நிறுவனத் தலைவர் பொன்மனச் செம்மல், சத்துணவு தந்த சரித்திர நாயகன் (மேசையைத் தட்டும் ஒலி) இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களை வணங்குகிறேன்.

'மக்களால் நான், மக்களுக்காகவே நான்' என்று தமிழ்நாட்டு மக்களுக்காக தன்னுடைய உயிர் மூச்சு இருக்கும் வரை பாடுபட்டு, ஏழையெளிய மக்களுடைய இதயங்களில் நீங்காமல் இடம் பெற்றிருக்கின்ற சமூக நீதி காத்த வீராங்கனை, தங்கத் தாரகை மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அஞ்சுவது ஒன்றுமில்லை, அஞ்ச வருவது யாதொன்றுமில்லை, யார் எந்த இடையூறுகளைக் கொடுத்தாலும் தைரியமாக ஒன்றரை கோடி தொண்டர்களை காத்து வருகின்ற அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய பொதுச் செயலாளர், தமிழகத்தினுடைய முன்னாள் முதலமைச்சர், எதிர்க்கட்சித் தலைவர், வருங்கால முதலமைச்சர் மாண்புமிகு

2023 ஏப்ரல் 13] [திரு. A.K. செல்வராஜ்]

அண்ணன் எடப்பாடி பழனிசாமி அவர்களை வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

இச்சட்டமன்றப் பேரவையில் வீட்டு வசதி மற்றும் நகர்ப்புர வளர்ச்சித் துறை மானியக் கோரிக்கையின்மீது எனக்குப் பேசுவதற்கு வாய்ப்பளித்திருக்கின்ற கோவை மாவட்டத்தில் இருக்கின்ற பத்து தொகுதிகளையும் வென்றெடுத்து, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் கோட்டையாக்கி, சட்டப் பேரவையில் எதிர்க்கட்சியினுடைய கொறடாவாக வீற்றிருக்கின்ற கொங்கு மண்டலத்தினுடைய தங்கம், என்னுடைய அன்பிற்குரிய சகோதரர் மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி அவர்களுக்கு என்னுடைய நெஞ்சார்ந்த நன்றியினை நான் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மேட்டுப்பாளையம் சட்டமன்றத் தொகுதியிலே இரண்டாவது முறையாக போட்டியிடுவதற்கு வாய்ப்பைத் தந்த மாண்புமிகு அண்ணன் திரு. எடப்பாடி பழனிசாமி அவர்களை வணங்கி, மேட்டுப்பாளையம் தொகுதியிலே என்னை வெற்றி பெற செய்திருக்கின்ற வாக்காளப் பெருங்குடி மக்களுக்கும், எனக்காக உழைத்திருக்கின்ற அனைத்துக் கழக முன்னோடிகளுக்கும் என்னுடைய நெஞ்சம் நிறைந்த நன்றியினை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

மானியக் கோரிக்கை மீதான விவாதத்தில் பேசத் தொடங்குவதற்கு முன்பாக தொகுதியிலுள்ள முக்கியப் பிரச்சினைகளைப் பற்றி நான் இங்கே பேச முற்படுகிறேன். மேட்டுப்பாளையம் நகரத்திற்கு புறவழிச் சாலை அமைப்பதற்காக மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 100 கோடி ரூபாய் நிதியை ஒதுக்கித் தந்தார்கள். நில ஆர்ஜிதப் பணிகள் நடைபெற்று வந்தன. வழிகாட்டி மதிப்பு—அதாவது guideline value கூடுதலாக இருக்கிறது என்று கூறி இன்றைக்கு அரசு, அந்தத் திட்டத்தைக் கைவிட்டிருக்கிறது. அதற்குப் பதிலாக, தேசிய நெடுஞ்சாலைத் துறையின் மூலமாக காரமடை மற்றும் மேட்டுப்பாளையம் ஆகிய இரு நகரங்களையும் இணைத்து புறவழிச் சாலை அமைப்பதற்கான திட்டம் மத்திய அரசாங்கத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டிருக்கிறது. தமிழ்நாட்டில் இருக்கின்ற மக்கள் மட்டுமல்ல, இந்தியாவில் இருக்கின்ற அனைத்து சுற்றுலாப் பயணிகளும் ஊட்டி, நீலகிரிக்கு செல்ல வேண்டுமென்று சொன்னால் மேட்டுப்பாளையத்தைக் கடந்துதான் செல்ல வேண்டும். போக்குவரத்து நெரிசல் அதிகமாக

இருக்கின்ற காரணத்தினாலே, விரைந்து மத்திய அரசாங்கத்தை அணுகி, இந்தத் திட்டத்தை நிறைவேற்றித் தர வேண்டுமென்று மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் அவர்களிடத்திலே நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, சிறுமுகை பேரூராட்சியிலே காந்தப்பள்ளம் என்ற ஒரு பள்ளத்திலே ஆதிவாசி மக்கள் வசிக்கின்ற அந்தப் பகுதியில் ஒரு பாலம் கட்டுவதற்காக நம்முடைய முன்னாள் முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்கள் 14 கோடி ரூபாய் நிதியை ஒதுக்கித் தந்தார்கள். இப்போதுதான் tender விடப்பட்டிருக்கிறது. பவானிசாகரினுடைய backwater அந்தப் பள்ளத்தில் நிற்பதால் அந்தப் பணியைத் தொடங்குவதிலே காலதாமதம் ஏற்பட்டிருக்கிறது. இப்போது பவானிசாகருடைய backwater குறைந்துகொண்டே வருகிறது. எனவே, மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் அவர்கள் உடனடியாக அந்தத் திட்டத்தைத் தொடங்க வேண்டுமென்று நான் அன்போடு கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பிற்பகல் 5–50

மேட்டுப்பாளையம் தொகுதி மலைகள் சூழ்ந்திருக்கக்கூடிய தொகுதி. சுற்றிலும் மலைகள் இருக்கின்றன. மலையினுடைய அடிவாரத்தில் விவசாய நிலங்கள் அதிகளவில் இருக்கின்றன. வன விலங்குகளின் தொல்லை மிக அதிகமான அளவிலே இருந்து கொண்டிருக்கிறது. யானைகளினுடைய தொந்தரவு, காட்டுப் பன்றிகளினுடைய தொந்தரவு, மயில்கள் மற்றும் மான்களின் தொந்தரவுகள் அதிகமாக இருக்கின்ற காரணத்தினாலே, அங்கு விவசாயம் செய்ய முடியாத சூழல் இருந்து கொண்டிருக்கிறது. இன்றைக்கு காட்டுப் பன்றிகளினுடைய தொந்தரவு மலைகளில் மட்டுமல்ல, விவசாய நிலங்களுக்கு அருகிலே இருக்கக்கூடிய பள்ளங்களிலும், குன்றுகளிலும் மிகவும் அதிகமாக இருக்கிறது. ஏற்கெனவே, அம்மா அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது, அண்ணன் திண்டுக்கல் சீனிவாசன் அவர்கள் வனத் துறை அமைச்சராக இருந்தார். அப்போது பன்றிகளைச் சுடுவதற்காக ஒரு G.O. வெளியிடப்பட்டது. இன்றைக்கு ஒடிசா, சட்டீஸ்கர் போன்ற மாநிலங்களில் பன்றியைச் சுடுவதற்கு அனுமதியை அளித்துக் கொண்டிருக்கிறார்கள். காட்டுப் பன்றிகளினுடைய தொந்தரவு அதிகமாக இருக்கிற காரணத்தினாலே, கடந்த கூட்டத் தொடரில்

இதுகுறித்து நான் பேசுகிறபோது, அப்போதைய மாண்புமிகு வனத் துறை அமைச்சர் திரு. கா. ராமசந்திரன் அவர்கள், நாங்கள் மத்திய அரசாங்கத்திற்கு அனுப்பி வைத்திருக்கிறோம். அதற்கு அனுமதி கிடைத்தவுடனே நடவடிக்கை எடுக்கப்படும் என்று சொன்னார்கள். ஆனால், நடவடிக்கை எடுக்காத காரணத்தினால், என்னுடைய தொகுதி மக்கள் மட்டுமல்ல தமிழ்நாட்டிலே இருக்கின்ற அனைத்து சட்டமன்ற உறுப்பினர்களின் தொகுதிகளிலும் இந்தப் பாதிப்பு இருக்கிறது. ஆகவே, தமிழக அரசு இதிலே உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். வன விலங்குகளின் தொல்லைகளிலிருந்து காப்பாற்றுவதற்காக Solar Power fencing, அகழிகள் அமைத்து விவசாயிகளினுடைய விளைநிலங்களைக் காப்பாற்றி, உயிர்ச் சேதத்தையும், பயிர்ச் சேதத்தையும் தடுக்க வேண்டும்.

அதுபோல், சிறுத்தைகளினுடைய தொந்தரவு மிக அதிகமாக இருந்து கொண்டிருக்கிறது. சிறுத்தைகள் வந்து ஆடுகளையும், மாடுகளையும் கொன்று தூக்கிக் கொண்டு செல்கின்ற நிலை இருக்கிறது. ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதற்காக சிறப்புப் படையை அமைத்து, இப்படி விலங்குகளால் தொந்தரவு இருக்கிற பகுதிகளில் உள்ள மக்களைக் காப்பாற்றும் விதமாக, ஆடு, மாடுகளைக் காப்பாற்றும் விதமாக உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அத்திக்கடவு–அவினாசித் திட்டம் மாண்புமிகு அண்ணன் திரு. எடப்பாடியார் அவர்களாலே நிறைவேற்றப்பட்டு, இன்றைக்கு முடிகிற தருவாயில் இருந்து கொண்டிருக்கிறது. இதிலே ஒருசில பகுதிகள் விடுபட்டுவிட்டன. விடுபட்ட பகுதிகளுக்கு திட்டம்–II வேண்டுமென்று ஏற்கெனவே, முன்னாள் முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்களிடத்திலே கேட்டு, திட்டத்திற்கான DPR–ஐ தயாரிக்கின்றபோது தேர்தல் அறிவிக்கப்பட்டுவிட்டது. மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள் இங்கே இருக்கிறார். கண்டிப்பாக, விடுபட்ட அந்தப் பகுதிகளுக்கு ஒரு திட்டத்தைத் தாருங்கள். அப்படி தற்சமயம் தர முடியாமல் போனால், பரவாயில்லை. உதாரணமாக, என்னுடைய தொகுதியில் உள்ள காரமடை பெள்ளாதி குளத்திற்கு தண்ணீர் வருகிறது. அந்தத் தண்ணீரை பக்கத்திலுள்ள குளங்களில் கொண்டு செல்வதற்கு சிறிய அளவிலேதான் அரசாங்கத்திற்கு நிதி செலவாகும்.

அதுபோல், ஈரோடு மாவட்டம், மாதம்பாளையம் குளத்திற்கு வருகின்ற தண்ணீரை, கிழக்குப் பகுதியில் உள்ள குளங்களுக்கு திருப்பி விட்டால் விவசாயிகள் பயனடைவார்கள். எனவே, மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள் இதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மேட்டுப்பாளையத்தில் ஒருசில பகுதிகளில் பாதாளச் சாக்கடைத் திட்டம் விடுபட்டிருக்கின்றது. அவற்றை சேர்த்து நீங்கள் நிறைவேற்றித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கூடலூர் நகராட்சி புதிதாக உருவாக்கப்பட்டிருக்கிற நகராட்சி. அங்கு குடிதண்ணீர் பிரச்சினை இருக்கிறது. கூடலூர் நகராட்சி, வீரபாண்டி பேரூராட்சி, பெரியநாயக்கன்பாளையம் பேரூராட்சி, விளிச்சி ஊராட்சி மற்றும் நாயக்கன்பாளையம் ஊராட்சி ஆகிய பகுதிகளையெல்லாம் இணைத்து, ஒரு புதிய கூட்டுக் குடிநீர்த் திட்டத்தைக் கொடுத்தால் சிறப்பாக இருக்கும். எனவே, அதையும் நீங்கள் செய்து தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

நான், கடந்த மாதம் 22 ஆம் தேதி மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களைச் சந்தித்து ஒரு கவன ஈர்ப்பு அறிவிப்பைக் கொடுத்தேன். இன்றைக்கு என்ன தேதி என்று பாருங்கள். அது என்ன பிரச்சினை என்று சொன்னால், EB Minister அவர்கள் சம்பந்தப்பட்டது. சின்னகள்ளிப்பட்டி கிராமம், சண்முகாபுரத்தில். . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வதைக் கவனியுங்கள்.

திரு. A.K. செல்வராஜ்: சின்னகள்ளிப்பட்டி கிராமம், சண்முகாபுரத்தில் உயர் மின்னழுத்த கம்பி தாழ்வான மின்னழுத்தக் கம்பியின்மீது விழுந்ததால் மின்சாரம் அதிகமாக பாய்ந்து, வீட்டில் இருந்த ஒருவர் மின் switch-ஐ on செய்கிறபோது, தூக்கி வீசி எறியப்பட்டதில் அவருடைய கையில் உள்ள இரண்டு விரல்கள் cut ஆகிவிட்டன, எலும்பு முறிந்துவிட்டது. வீடுகளில் இருந்த மிக்ஸி, கிரைண்டர், ஃபேன், Washing Machine போன்ற பொருட்கள் அனைத்தும் சேதமடைந்துவிட்டன. இதுவொரு முக்கியமான பிரச்சினை.

2023 ஏப்ரல் 13]

பிற்பகல் 5–55

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *இதுசம்பந்தமாக என்னிடம் விதி எண் 55–ன்கீழ் கொடுத்திருக்கிறீர்கள். பதில் வந்தபிறகு உங்களுக்குப் பேச வாய்ப்புத் தருகிறேன். அடுத்ததற்கு வாருங்கள்.*

திரு. A.K. செல்வராஜ்: *இதுபோன்று, பல கவன ஈர்ப்பு அறிவிப்புகளைக் கொடுத்திருக்கின்றோம். ஏற்கெனவே நீலகிரி மாவட்டம், ஊட்டியில் உள்ள தாவரவியல் பூங்காவின் தினக்கூலி தொழிலாளர்கள் தொடர்ந்து போராட்டங்கள் நடத்திக்கொண்டிருக்கிறார்கள். காலமுறை ஊதியத்தில் தங்களைக் கொண்டுவர வேண்டுமென்று 20 நாட்களுக்கும் மேலாக உண்ணாவிரதம் இருந்து வருகின்றார்கள். அதுகுறித்தும் ஒரு கவன ஈர்ப்பு அறிவிப்பு கொடுத்துள்ளேன். இப்படிப்பட்ட முக்கியமான பிரச்சினைகள் குறித்து கவன ஈர்ப்பு அறிவிப்புகளைக் கொடுக்கின்றபோது மாண்புமிகு சபாநாயகர் அவர்கள் எங்களைப் போன்றவர்களுக்கு நிச்சயமாக வாய்ப்பு வழங்க வேண்டுமென்ற கோரிக்கையைத்தான் வைக்கின்றேனே தவிர, நான் எதையும் குற்றச்சாட்டாக சொல்லவில்லை.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *நீங்கள் கேட்டதனால் நான் ஒன்றைச் சொல்ல விரும்புகின்றேன். நேற்றுவரை 531 கவன ஈர்ப்பு அறிவிப்புகள் வந்திருக்கின்றன. 123 கவன ஈர்ப்புகள் தகுதியானது என்கிற அடிப்படையில் பதிலுக்காக துறைகளுக்கு அனுப்பப்பட்டிருக்கின்றன. அதில் 7 கவன ஈர்ப்புகள் இதுவரை* Agenda *மூலம் எடுத்துக்கொள்ளப்பட்டன. 18 கவன ஈர்ப்புகள், சிறப்புக் கவன ஈர்ப்பு என்ற அடிப்படையில் எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளன. ஒரு நாளைக்கு முழுமையாக—531 அறிவிப்புகளை எழுதிக் கொடுத்துவிட்டால்—அதை முழுமையாக எடுத்துக்கொண்டு விவாதிக்க முடியாது. தேவையான அளவுக்கு பதில் வர, வர நிச்சயமாக அவற்றை எடுத்துக் கொள்வோம். அடுத்த சப்ஜெக்ட்டுக்கு வாருங்கள். (குறுக்கீடு) பதில்கள் வந்தது என்றால், பதிலையே தந்துவிடுகிறேன். கூட்டத் தொடர் நிறைவு நாளைக்கு முதல் நாளே எல்லோருக்கும் பதிலே* print *செய்து வந்துவிடும்.*

திரு. A.K. செல்வராஜ்: *துறை குறித்து சில முக்கியமான பிரச்சினைகளை மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகின்றேன். இப்போது நகர, ஊரகப் பகுதிகளில்,* DTCP *மூலமாக மனைகளுக்கு அனுமதி*

வழங்கப்படுகிறது. HACA village. அதாவது மலையையொட்டியுள்ள கிராமங்கள் முழுவதுமே அந்த HACA–ல் சேர்க்கப்படுவதால் அந்தப் பகுதியிலே இருக்கின்ற நகராட்சியாக இருந்தாலும், பேரூராட்சியாக இருந்தாலும் — இந்த மாதிரி சுமார் 588 கிராமங்கள் என்று நினைக்கின்றேன், மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புர வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்களுக்குத் தெளிவாகத் தெரியும். ஏற்கெனவே, இதுசம்பந்தமாக நான் பேசியிருக்கின்றேன். அந்தப் பகுதியில் எந்தவிதமான அடிப்படை வசதிகளும் மக்களுக்கு செய்ய முடிவதில்லை. குடிநீர் வசதி, மின்சார இணைப்பு போன்ற எந்த இணைப்புகளும் கொடுக்க முடிவதில்லை. புதியதாக வீடு கட்ட முடிவதில்லை. வீடுகளை விற்க முடியாத ஒரு சூழல் இருந்துகொண்டிருக்கிறது. இதற்கு தற்சமயம் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுத்துக்கொண்டிருக்கிறார்கள். நான் அவரிடத்தில் கேட்டுக்கொள்வதெல்லாம், கேரள மாநிலத்தில் மலைகளை ஒட்டியிருக்கின்ற பகுதியில், 50 மீட்டரை மட்டும் HACA–ல் சேர்த்துவிட்டு, மற்றவற்றையெல்லாம் release செய்துவிடுகிறார்கள். ஆகவே, அந்த மாதிரியான ஒரு திட்டத்தை நம்முடைய மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புர வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் செய்து கொடுக்க வேண்டுமென்று நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

அதற்கடுத்தபடியாக, அங்கீகரிக்கப்படாத மனைப் பிரிவுகள், அதிலே HACA–ல் இருக்கும் மனைப் பிரிவுகளுக்கு அங்கீகாரம் செய்ய வேண்டுமென்பதற்காக ஏற்கெனவே மாண்புமிகு அண்ணன் எடப்பாடியார் அவர்கள் ஓர் அரசாணையை பிறப்பித்தார். அந்த அரசாணைப்படி, HACA–ல் யார், யாரிடத்தில் அனுமதி பெறவேண்டுமோ, வேளாண்மை–உழவர் நலத் துறை, கனிம வளத் துறை, வருவாய்த் துறை, வனத் துறை ஆகியவற்றிடம் அனுமதியைப் பெற்று மாவட்ட ஆட்சித் தலைவருக்கு நாம் அனுப்பி வைத்திருக்கின்றோம். என்னுடைய தொகுதியில் மட்டுமல்ல, எல்லா பகுதிகளிலிருந்தும் அனுப்பி வைக்கப்பட்டிருக்கிறது. மாவட்ட ஆட்சித் தலைவர் அதன் மீது எந்த முடிவும் எடுக்க முடியாத காரணத்தினாலே இதுவரை அந்த G.O.–வை நிறைவேற்ற முடியாத ஒரு சூழல் இருக்கிறது. ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதிலே கவனம் செலுத்த வேண்டுமென்று நான் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

2023 ஏப்ரல் 13] [திரு. A.K. செல்வராஜ்]

அதற்கு அடுத்தபடியாக, வீட்டு வசதி வாரியம். ஏற்கெனவே வீடுகள் கட்டுவதற்காக வீட்டு வசதி வாரியத்திற்கு நிலங்கள் எடுக்கும் திட்டத்திற்காக தமிழ்நாடு முழுவதற்குமே அரசாணை பிறப்பித்துவிட்டு, பல ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலங்களை அரசாங்க ஆணையின்படி 4(1) notice*–உடன் நிறுத்திவிடுகிறீர்கள். அந்த நிலத்தின் உரிமையாளர்கள் யாராலும் நிலத்தை விற்க முடிவதில்லை. அதற்குமேல் வேறு எந்த* development work*–ம் செய்ய முடியாத சூழல் இருக்கின்றது. இத்தகைய சூழ்நிலையில் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் புதியதாக வீடுகள் கட்டுகின்ற திட்டத்தை எடுப்பதாக இல்லை. ஆகவே, பல இலட்சக்கணக்கான ஏக்கர், பல ஆயிரக்கணக்கான விவசாயிகள் தங்கள் வாழ்வாதாரத்திற்கு வழியில்லாமல் இன்றைய சூழ்நிலையில் இருந்துகொண்டிருக்கிறார்கள். ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அந்த 4(1)* notice*–படி, வீட்டு வசதி வாரியத்திற்கு எவ்வளவு நிலம் வேண்டுமோ அதை மட்டும் எடுத்துக்கொண்டு தேவையில்லாத நிலங்களை நீங்கள் விடுவித்துக் கொடுத்தால் பல ஆயிரக்கணக்கான விவசாயிகளுக்கு உபயோகமாக இருக்கும். அதை நீங்கள் செய்ய வேண்டுமென்பதை நான் இந்த நேரத்தில் பணிவோடு கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.*

பிற்பகல் 6–00

இன்னொரு பிரச்சினை இருக்கின்றது. வீட்டு வசதி வாரியத்தின்மூலமாக ஒரு திட்டத்தை நிறைவேற்றுவதற்காக பல SF Nos.*–களில் பலருடைய நிலங்கள் கையகப்படுத்தப்படுகின்றன. அவற்றிலே வீடுகளும் கட்டப்பட்டு, விற்கப்படுகின்றன. (குறுக்கீடு)* Time *ஆகிவிட்டதா,* sorry. *இரண்டு நிமிடங்கள் கூடுதலாகப் பேசுவதற்குக் கொடுங்கள். முக்கியமான பிரச்சினை. ஒருசில நில உரிமையாளர்கள் நீதிமன்றத்திற்குச் சென்று* enhanced compensation *கொடுக்கச்சொல்லி சொல்கிறார்கள். ஒருசில* land owner*–க்கு* enhanced compensation *வழங்கப்படுவதில்லை. வீட்டு உரிமையாளர்கள் வீட்டைக் கட்டி, கடனைக் கட்டி முடித்துவிட்டார்கள். இந்தத் திட்டத்தில் நீங்கள், எல்லோருக்கும் வட்டி, அபராத வட்டி போடுகிறபோது, அதனால் ஒரு சிலர் பாதிக்கப்படுகிறார்கள். ஒருசிலர் உச்ச நீதிமன்றத்தில் வழக்கு தொடுத்திருக்கிறார்கள். உச்ச நீதிமன்றமும், வட்டி, அபராத வட்டியை நீங்கள் குறைத்து கட்டவேண்டுமென்று உத்தரவு பிறப்பித்தும், வீட்டு வசதி துறையினுடைய அலுவலர்கள்*

சரியாக அதை நடைமுறைப்படுத்தாமல் Contempt of Court-க்குப்போய், அதில் நம்முடைய வாரியத்தினுடைய அதிகாரிகள், உச்ச நீதிமன்றத்தினுடைய ஓய்வுபெற்ற தலைமை நீதிபதியின் தலைமையிலே ஒரு குழுவை அமைத்து, பரிசீலனை செய்கிறோம் என்று சொல்லி, உச்ச நீதிமன்றத்தினுடைய ஓய்வுபெற்ற தலைமை நீதிபதியும், 'Court-னுடைய உத்தரவு சரி' என்று சொன்னதற்குப் பின்னால், ஒன்றரை வருட காலமாகிறது. தமிழ்நாடு முழுவதுமே கிட்டத்தட்ட 24 ஆயிரம் பேர் இருக்கிறார்கள். கோவை மாவட்டத்தில் மட்டும் 4 ஆயிரம் பேர் இருக்கிறார்கள். ஆக இன்னும் அவர்களுக்கு Sale deed வழங்கப்படவில்லை. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கொள்கை விளக்கக் குறிப்பில் சொல்லியிருக்கிறீர்கள். நிறையபேருக்கு Sale deed வழங்கப்பட்டிருக்கிறது என்று சொல்லப்பட்டிருக்கிறது. இதில் கவனம் செலுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது.) இரண்டு நிமிடங்களில் முடித்துவிடுகிறேன்.

நம்முடைய கன்னியாகுமரி தொகுதி, சட்டமன்ற உறுப்பினர் மரியாதைக்குரிய அண்ணன் திரு. ந. தளவாய் சுந்தரம் அவர்கள், மாண்புமிகு வீட்டு வசதித் துறை அமைச்சர் அவர்களிடத்தில் ஒரு கேள்வியைக் கேட்டார்கள். அதாவது Combined building area மற்றும் EWS அந்தப் பகுதியில் ஒரு சென்டுக்கு கீழே இருந்தால், 3 அடி தெரு இருந்தால், அதற்கு approval கிடைப்பதில்லை. இதற்கு ஏற்கெனவே, நம்முடைய மரியாதைக்குரிய முன்னாள் முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்கள், 2019-ல் ஓர் அரசாணையை பிறப்பித்திருக்கிறார். அந்த அரசாணையை நீங்கள் ஏற்றுக்கொண்டு, கண்டிப்பாக அதன்மீது நடவடிக்கை எடுக்க வேண்டும். எற்கெனவே, நான் இந்தத் துறையினுடைய அமைச்சராக இருந்தவன். ஏற்கெனவே ஒரு சென்ட்க்கு கீழே இருந்தால், முதலில் DTCP-க்கு அனுப்பி வைத்து, அந்த பிரச்சினைகள் தீர்க்கப்பட்டது. (குறுக்கீடு) ஒரே ஒரு நிமிடம். கஜா புயலால் பாதிக்கப்பட்டிருக்கிறவர்களுக்கு, நம்முடைய மரியாதைக்குரிய அண்ணன் எடப்பாடி பழனிசாமி அவர்கள் நாகப்பட்டினம் மாவட்டத்தில் குடிசை மாற்று வாரியத்தின்மூலம் 6,000 வீடுகளை கட்டுவதற்கு, அனுமதி அளித்து, 1,350 வீடுகள் கட்டுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டது. மற்ற பயனாளிகளுக்கு வீடுகள் கட்டுவதற்கு அரசு இன்னும் எந்தவித நடவடிக்கையும் எடுக்கவில்லை. தனிநபர் வீடு கட்டியவர்களுக்கு, பணம் 3 இலட்சம் ரூபாய் வழங்குவதாக உத்தரவு போட்டும், அவர்களுக்கும் பணம்

கிடைக்கவில்லை. அதையும் நீங்கள் செய்து கொடுக்க வேண்டும். ஒன்றே ஒன்று. குடிசை மாற்று வாரியம். ஒரு நிமிடம். . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு அமைச்சர் அவர்கள், பதில் சொல்கிறார், கேளுங்கள்.

திரு. A.K. செல்வராஜ்: ஒரே நிமிடம்.

மாண்புமிகு திரு. தா.மோ. அன்பரசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. . . (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஒரு நிமிடத்தில் பேசி முடித்து, உட்கார வைத்துவிட்டு தருகிறேன். (குறுக்கீடு) பேசுங்கள்.

மாண்புமிகு திரு. தா.மோ. அன்பரசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய சட்டமன்ற உறுப்பினர் அவர்களுடைய தொகுதியில் Affordable Housing in Partnership (AHP) திட்டத்தின்கீழ், மேட்டுப்பாளையம், சிக்காதாசம்பாளையம் திட்டப் பகுதியில், 30 கோடியே 62 இலட்சம் ரூபாய் திட்ட மதிப்பீட்டில், 11 Blocks–ல் G+3 352 அடுக்குமாடி குடியிருப்புகள் கட்டும் திட்டம் நடைபெற்று வருகிறது. இப்பணிக்காக 29 கோடியே 8 இலட்சம் ரூபாய் செலவிடப்பட்டுள்ளது. ஆகஸ்ட், 2020–ல் தொடங்கப்பட்ட இப்பணி, ஜூன் 2023–ல் முடிக்கப்பட்டு, பயனாளிகளுக்கு வீடுகள் வழங்கப்படும் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். அதுமட்டுமல்லாமல் பயனாளிகள் தாமாகவே வீடு கட்டும் திட்டத்தின்கீழ் Beneficiary Led Construction (BLC) திட்டத்தில் 853 வீடுகளுக்கான பணிகள் முடிவுற்றுள்ளன. 192 வீடுகள் கட்டும் பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன. 85 வீடுகளுக்கான பணிகள் விரைவில் தொடங்கப்படவிருக்கின்றன. ஆக, 19 கோடியே 13 இலட்சம் ரூபாய் மானியம் வழங்கப்பட்டிருக்கிறது என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். அதேபோல, பேரூராட்சி இயக்குநரகத்தால் செயல்படுத்தப்படும் பயனாளிகள் தாமாக வீடுகட்டும் திட்டத்தில், 397 தனி வீடுகள் கட்டும் பணிகள் முடிவுற்றுள்ளன. 46 வீடுகளுக்கான பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன. 2 வீடுகளுக்கான பணிகள் விரைவில் தொடங்கப்படவுள்ளன.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உறுப்பினர் உட்காருங்கள்.

மாண்புமிகு திரு. தா.மோ. அன்பரசன்: இதற்கு மட்டும் 8 கோடியே 76 இலட்சம் ரூபாய் மானியம் வழங்கப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், பேசுங்கள்.

திரு. A.K. செல்வராஜ்: அடுத்த கட்டமாக நான் பேசவேண்டியதை, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதிலாக சொல்லிவிட்டார். நான் கேட்டது, கஜா புயல். . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: போதும், நல்ல விஷயம்.

திரு. A.K. செல்வராஜ்: ஒரே நிமிடம். அதிலே மேட்டுப்பாளையம் சிக்காதாசம்பாளையத்தில் கட்டியிருக்கின்ற வீடுகள் பவானி ஆற்றோரம் ஆக்கிரமித்தவர்களுக்குக் கட்டப்பட்ட வீடுகள் ஆகும். இன்றைக்கு அவர்களிடம் ரூ.1 இலட்சம் பணம் கேட்கிறார்கள். ஆனால், அந்தத் தொகையை கட்ட முடியாத சூழ்நிலையில் அவர்கள் இருந்து கொண்டிருக்கிறார்கள். மாண்புமிகு வீட்டு வசதித் துறை அமைச்சர் அவர்களுக்கும், சம்பந்தப்பட்ட துறை அமைச்சர் அவர்களுக்கும் நான் பணிவோடு தெரிவித்துக்கொள்வதெல்லாம் வீட்டு வசதிச் சங்கம் மூலமாக அவர்களுக்கு ரூ.1 இலட்சம் கடன் வழங்கலாம். அவ்வாறு ரூ.1 இலட்சம் கடன் வழங்கப்பட்டால், அதன்மூலமாக அவர்கள் வீடுகளை. . .

பிற்பகல் 6–05

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அதற்கு விண்ணப்பதாரர்கள் தயாராக இருக்கிறார்கள் என்று சொன்னால், செய்வோம். போதும்.

திரு. A.K. செல்வராஜ்: நான் அவர்களைக் கேட்டுவிட்டுத்தான் சொல்கிறேன். அவர்கள் தயாராக இருக்கிறார்கள். (குறுக்கீடு) ஒரே நிமிடத்தில் முடித்துவிடுகிறேன். இரண்டு நிமிடங்கள்தான் ஆகியிருக்கின்றன. ஆகவே, அதனைச் செய்து கொடுக்க வேண்டும். இதுசம்பந்தமாக மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களிடத்திலும் பேசியிருக்கிறேன். சுய உதவிக் குழுக்கள் மூலமாக அவர்களுக்கு ரூ.50,000/– வரையில் கடன் வழங்கலாம் என்று சொல்லியிருக்கிறார்கள். இதைக் கொடுத்தாலே, ஏழையெளிய மக்கள் பயனடைவார்கள். (மணியடிக்கப்பெற்றது) இன்னும் நிறைய பிரச்சினைகள் இருக்கின்றன. . .

2023 ஏப்ரல் 13]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவைகளை தனியாக எழுதிக் கொடுக்கச் சொல்லுங்கள். போதும், போதும். நன்றி. (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர், போதும். மாண்புமிகு உறுப்பினர் திரு. கோ. ஐயப்பன் அவர்கள். (குறுக்கீடு) போதும். திரு. ஐயப்பன், பேசுங்கள். (குறுக்கீடு) போதும், நீங்கள் நிறைய பேசிவிட்டீர்கள்.

திரு. A.K. செல்வராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதிக் கோரிக்கைகளைத் தங்களிடம் கொடுத்துவிடுகிறேன். அவற்றை அவைக்குறிப்பில் பதிவு செய்துகொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தொகுதிக் கோரிக்கைகள்:

மேட்டுப்பாளையம் நகரத்திற்கு புறவழிச் சாலை அமைக்கும் பணி நெடுஞ்சாலைத் துறையால் கைவிடப்பட்டு, காரமடை மற்றும் மேட்டுப்பாளையம் ஆகிய இருநகரங்களுக்கு புறவழிச் சாலை அமைக்கும் திட்டத்திற்கு நிதி கேட்டு தேசிய நெடுஞ்சாலை துறைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. ஆகவே, மத்திய அரசை அணுகி விரைவில் மேற்படி, புறவழிச் சாலை அமைய உரிய நடவடிக்கையை தமிழக அரசு மேற்கொள்ள வேண்டும்.

மேட்டுப்பாளையம் சட்டமன்றத் தொகுதியில் குறிப்பாக காரமடை மேற்கு பகுதியில், புற்றுநோயின் பரவல் மிக அதிகமாகியுள்ளது. இந்த நோய் எதனால், ஏன் பரவுகிறது என்பதைக் கண்டறிய ஒரு சிறப்பு மருத்துவக் குழுவை அமைக்க வேண்டும்.

கூடலூர் நகராட்சி, வீரபாண்டி பேரூராட்சி, நாயக்கன்பாளையம் ஊராட்சி, விளிச்சி ஊராட்சி மற்றும் பெரிய நாயக்கன்பாளையம் பேரூராட்சி பகுதிகளுக்கு புதிய கூட்டுக் குடிநீர் திட்டம் பவானி ஆற்றிலிருந்து தண்ணீர் எடுத்து நிறைவேற்றித் தர வேண்டும். அல்லது கோயம்புத்தூருக்கு மூன்றாம் திட்டம் நிறைவேற்றும் பட்சத்தில் பில்லூர் அத்திக்கடவு குடிநீர்–II திட்டத்தில் மேற்கண்ட பகுதிக்கு கூடுதல் குடிநீர் வழங்க வேண்டும்.

கூடலூர் நகராட்சியில் ஒரு புதிய நகர ஆரம்ப சுகாதார நிலையம் ஏற்படுத்தித்தர வேண்டும்.

காரமடை ஒன்றியம் – சீனியூர் ஆரம்ப சுகாதார நிலையத்தை 30 படுக்கைகள் கொண்ட மேம்படுத்தப்பட்ட மருத்துவமனையாகத் தரம் உயர்த்தித் தர வேண்டும்.

மேட்டுப்பாளையம் நகராட்சி மற்றும் சிக்காதாசம்பாளையம் ஊராட்சி ஆகியவற்றிற்கு சேர்த்து ஒரு கிராம நிர்வாக அலுவலகம் உள்ளது. ஆகவே, சிக்காதாசம்பாளையத்தைத் தனியாகவும், மேட்டுப்பாளையத்தைத் தனியாகவும் பிரித்து 2 வருவாய் கிராமங்களாக ஏற்படுத்தித் தர வேண்டும்.

காரமடை ஒன்றியம், தேக்கம்பட்டி கிராமத்தில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைத்துத் தர வேண்டும்.

மேட்டுப்பாளையம் சட்டமன்றத் தொகுதியில் குறிப்பாக, மலைவாழ் மக்கள் பயன்படுத்தும் ஆதிமாதையனூர், தோலாம்பாளையம், காலனிப்புத்தூர் ஆகிய துணை சுகாதார நிலையக் கட்டடங்கள் கட்ட உடனடியாக நிதி வழங்க வேண்டும்.

மேட்டுப்பாளையம் வட்டம், சிறுமுகை பகுதியை மேட்டுப்பாளையம் பிர்காவிலிருந்து பிரித்து, தனியாக ஒரு புதிய பிர்காவை ஏற்படுத்தித் தர வேண்டும்.

கோயம்புத்தூர் வடக்கு வட்டத்தை இரண்டாகப் பிரித்து பெரியநாயக்கன்பாளையத்தைத் தலைமையிடமாகக்கொண்டு ஒரு புதிய வருவாய் வட்டம் ஏற்படுத்தித் தர வேண்டும்.

மேட்டுப்பாளையம் வட்டம், தோலம்பாளையம் கிராமம், மாவட்ட பஞ்சாயத்து மூலம் வழங்கப்பட்ட இடங்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்க வேண்டும்.

தோலம்பாளையம் கிராமம், அடுக்கல்மடுவு பள்ளத்திலும் தென்னங்கொம்பு பள்ளத்திலும் வெள்ளியங்காடு கிராமம், ஆதிமாதையனூர் அருகிலுள்ள காளியூர் பள்ளத்திலும் கெம்மாரம்பாளையம் கிராமம், பாரப்பன் பள்ளத்திலும் தாசில்தார் பள்ளம் சென்னம்பாளையத்திலும், வெள்ளியங்காடு கிராமம், சுண்டக்கொரைப்புதூருக்கு மேற்கு ஆகிய பகுதிகளிலும் நீர்வளத் துறைமூலம் தடுப்பணைகளை கட்டித்தர வேண்டும்.

கூடலூர் நகராட்சியில் பாதாளச் சாக்கடைத் திட்டம் செயல்படுத்த வேண்டும்.

காரமடை ஒன்றியம், தோலம்பாளையம் கோபனாரி சாலையில் வனப் பகுதியிலுள்ள 4 கி.மீ. தூரமுள்ள சாலையை தரமான சாலையாக மாற்றித் தர வேண்டும்.

காரமடை ஒன்றியம், தோலம்பாளையம், வெள்ளியங்காடு, கெம்மாரம்பாளையம், ஓடந்துறை, நெல்லித்துறை ஆகிய ஊராட்சிகளில் மலைவாழ் மக்களுக்கு கட்டப்பட்டுள்ள பழைய தொகுப்பு வீடுகளை இடித்துவிட்டு புதிய வீடுகளைக் கட்டித்தர வேண்டும்.

மேட்டுப்பாளையம் தொகுதி, காரமடை பகுதி வடவள்ளி மற்றும் வெள்ளியங்காடு (தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய நிலம்) ஆகிய பகுதிகளில் துணை மின் நிலையங்கள் அமைத்துத்தர வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கோ. ஐயப்பன் அவர்கள்.

திரு. கோ. ஐயப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா. . .(குறுக்கீடுகள்)

(அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்களும், திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்களும் எழுந்து நின்றனர்.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அனைவரும் உட்காருங்கள். உட்கார்ந்துகொண்டு பேச வேண்டாம். என்னுடைய அனுமதியில்லாமல் யாரும் பேசக்கூடாது. மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.

(அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்களும், திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்களும் தொடர்ந்து நின்று கொண்டிருந்தனர்.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: எல்லோரும் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) தயவுசெய்து அனைவரும் உட்காருங்கள். மாண்புமிகு அமைச்சர், உட்காருங்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள், பதில் சொல்லுங்கள். (குறுக்கீடுகள்)

மாண்புமிகு திரு. எ.வ. வேலு: *அனைவரும் உட்காருங்கள். மாண்புமிகு உறுப்பினர், உட்காருங்கள்.*

(அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்களும், திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்களும் தொடர்ந்து நின்று கொண்டிருந்தனர்.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அனைவரும் உட்காருங்கள். மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் மட்டும் பதில் சொல்லுங்கள்.*

மாண்புமிகு திரு. எ.வ. வேலு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆரம்பத்திலேயே நீங்கள் ஒரு* ruling *கொடுத்திருக்கிறீர்கள். ஒவ்வொரு சட்டமன்ற உறுப்பினருக்கும் குறிப்பிட்ட நேரம் ஒதுக்கப்படுகிறது என்றும், அந்த நேரத்திற்குள் உரையை முடியுங்கள் என்றும் குறிப்பிட்டு,* ruling *கொடுக்கிறீர்கள். மாண்புமிகு உறுப்பினர்கள் இன்றைக்கு வெளியூர் செல்ல வேண்டிய நிலையிலிருப்பதால், அடுத்த மூன்று நாட்கள் விடுமுறை என்ற அடிப்படையில்தான் நீங்கள்* ruling *கொடுத்திருக்கிறீர்கள். (குறுக்கீடு) சற்றுப் பொறுங்கள்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *தயவுசெய்து யாரும் உட்கார்ந்துகொண்டு பேச வேண்டாம். தயவுசெய்து அமைதியாக உட்காருங்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு அமைச்சர் பேசிக்கொண்டிருக்கிறார்கள். (குறுக்கீடுகள்) அவர் பதில் சொல்லிக்கொண்டிருக்கிறார், நீங்கள் உட்காருங்கள்.*

மாண்புமிகு திரு. எ.வ. வேலு: *பொதுவாக, நீங்கள் சொல்கிற சொல்லுக்குக் கட்டுப்பட்டு, எங்களுடைய சட்டமன்ற உறுப்பினர்கள் அனைவரும் எப்பொழுதும் அமைதி காத்துக் கொண்டிருக்கிறோம். ஒரு பிரச்சினை குறித்து மாண்புமிகு உறுப்பினர் சொல்கிறார். 15 நிமிடங்கள் என்று நேரத்தைக் குறிப்பிட்டும், 20 நிமிடங்கள் ஆகிவிட்டன. தொடர்ந்து நீங்கள்* bell *அடித்துக்கொண்டிருக்கிறீர்கள். தொடர்ந்து எதிர்க்கட்சித் துணைக் கொறடா அவர்கள் உறுப்பினருக்கு பேச வாய்ப்பு கொடுக்க வேண்டுமென்று கேட்கிறார். அவர் கேட்பதற்கு முன்பாகவே, மொத்த உறுப்பினர்களும் எழுந்து நிற்பதை இப்பொழுது ஒரு வாடிக்கையாகவே வைத்திருக்கிறார்கள். இதை நான்* open *ஆகவே சொல்கிறேன். (குறுக்கீடுகள்) சற்றுப் பொறுங்கள்.*

2023 ஏப்ரல் 13]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *உட்கார்ந்துகொண்டு பேசாதீர்கள்.*

மாண்புமிகு திரு. எ.வ. வேலு: *சற்றுப் பொறுங்கள். (குறுக்கீடுகள்) சற்றுப் பொறுங்கள்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பேசுகிறார்கள். மாண்புமிகு உறுப்பினர்கள், தயவுசெய்து உட்காருங்கள். உட்கார்ந்துகொண்டு பேசவேண்டாம்.*

மாண்புமிகு திரு. எ.வ. வேலு: *நான் சொல்வதைக் கேளுங்கள். நான் house–ல் நடப்பதைத்தான் சொல்கிறேன். நாம் பேசுவது அனைத்தும் பதிவாகிக்கொண்டிருக்கின்றது. இப்பொழுதெல்லாம் பேரவை நடவடிக்கைகள் தொலைக்காட்சியில் நேரலையாக ஒளிபரப்பு செய்யப்படுகின்றன. எதிர்க்கட்சித் துணைக் கொறடா இருக்கும்பொழுதோ அல்லது மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.பி. வேலுமணி அவர்கள் இருக்கும்பொழுதோ, அவர்களுடைய உறுப்பினருக்காக ஒரு நிமிடம் கூடுதலாகப் பேச வாய்ப்பளிக்க வேண்டுமென்று கேட்பது வாடிக்கைதான். அதனை நான் மறுக்கவில்லை. அவ்வாறு கேட்கும்பொழுதே, மொத்த உறுப்பினர்களும் எழுந்து நின்று, சத்தம் போட்டுக் கொண்டிருந்தால், எப்படி சரியாக இருக்கும்? அவருக்கு நேரம் வாங்கிக் கொடுக்க இந்தப் பக்கத்திலுள்ள உறுப்பினர்கள் எழுந்து நின்றால், சபையை எப்படி நடத்துவது? இதை ஒரு வாடிக்கையாக வைத்துக்கொண்டிருக்கிறீர்கள் என்றுதான் நான் சொல்கிறேன். இதுபோன்று நடப்பதைத் தொடர்ந்து நான்தான் பார்க்கின்றேனே! (மேசையைத் தட்டும் ஒலி)*

(திரு. A.K. செல்வராஜ் அவர்கள் நின்று ஏதோ பேசிக்கொண்டிருந்தார்.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கோ. ஐயப்பன் அவர்கள். (குறுக்கீடுகள்) போதும், உட்காருங்கள். இன்றைக்கு நேரமில்லை. (குறுக்கீடுகள்) திரு. ஐயப்பன், நீங்கள் பேசுங்கள்.*

திரு. கோ. ஐயப்பன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கு வணக்கம். தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் ஆகியோரை வணங்குகிறேன்.*

(மேசையைத் தட்டும் ஒலி) முப்பெரும் தலைவர்களின் கொள்கை வழியில் தமிழர்களையும், தமிழ் இனத்தையும், தமிழ்நாட்டையும் பாதுகாத்துவரும் கழகத் தலைவர் மாண்புமிகு தமிழ்நாடு முதல்வர் தளபதியார் அவர்களை வணங்குகின்றேன். கழகத்தின் மூத்தவர்களை அனுசரித்து, இளைஞர்களை உற்சாகப்படுத்திவரும், கழக இளைஞரணிச் செயலாளர் மரியாதைக்குரிய மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர், சின்னவர் அவர்களுக்கு எனது பணிவான வணக்கங்களைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

வேளாண்மைத் துறையின் நிதிநிலை அறிக்கையைத் தாக்கல் செய்த கடலூர் மாவட்டக் கழகச் செயலாளர் மரியாதைக்குரிய வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர் அவர்களுக்கும், அனைத்துத் துறைகளின் மாண்புமிகு அமைச்சர்களுக்கும், மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கும், மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களுக்கும், மாண்புமிகு அரசுத் தலைமைக் கொறடா அவர்களுக்கும், சக சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் என் வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 6–10

இப்பேரவையில் உரையாற்றும் வாய்ப்பை வழங்கிய கடலூர் தொகுதி பொதுமக்களுக்கும், என் வெற்றிக்காக உழைத்த கழக முன்னோடிகளுக்கும், கழக நிர்வாகிகளுக்கும், கூட்டணிக் கட்சித் தலைவர்களுக்கும், கூட்டணிக் கட்சிகளைச் சார்ந்த நண்பர்களுக்கும், எனக்காக உழைத்த எனது அன்பிற்குரிய நண்பர்களுக்கும், உறவினர்களுக்கும், என்னுடைய வெற்றிக்காக இரவு பகல் பாராமல் ஒரு மாதம் கடுமையாக உழைத்த எனது மனைவிக்கும், எனது இரண்டு மகன்களுக்கும் இந்த நேரத்திலே என்னுடைய நெஞ்சார்ந்த நன்றிகளையும், வணக்கங்களையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

2023–2024 ஆம் ஆண்டுக்கான தமிழ்நாடு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புர வளர்ச்சித் துறையின் மானியக் கோரிக்கையின் மீதான விவாதத்தில் உரையாற்ற வாய்ப்பளித்த மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கு மீண்டும் எனது நன்றிகளையும், வணக்கங்களையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

2023 ஏப்ரல் 13] [திரு. கோ. ஐயப்பன்]

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 2011 ஆம் ஆண்டு மக்கள்தொகைக் கணக்கெடுப்பின் அடிப்படையில், உலக மக்கள்தொகையில் 55 சதவிகித மக்கள், அதாவது 420 கோடி மக்கள் நகர்ப்புரங்களில் வாழ்கின்றனர். தமிழ்நாட்டில் 1991 ஆம் ஆண்டில், 190.77 இலட்சமாக இருந்த நகர மக்கள்தொகை, 2011 ஆம் ஆண்டில் 349 இலட்சமாக அதிகரித்துள்ளது. இந்த உயர்வு மேலும், 2031 ஆம் ஆண்டில் 534 இலட்சமாக உயரும் என்று புள்ளிவிவரங்கள் தெரிவிக்கின்றன. 2011 ஆம் ஆண்டு மக்கள்தொகைக் கணக்கெடுப்பின் அடிப்படையில், தமிழ்நாட்டில் 832 நகரங்கள் உள்ளன. தமிழ்நாட்டில் 48.45 சதவிகிதம் மக்கள் நகர்ப்புரங்களில் வாழ்கின்றனர் என்று புள்ளிவிவரங்கள் தெரிவிக்கின்றன.

வீட்டு வசதி மற்றும் நகர்ப்புர வளர்ச்சித் துறையின் செயல்பாடுகள் மற்றும் திட்டங்கள் ஐக்கிய நாடுகள் சபையால் ஏற்றுக்கொள்ளப்பட்ட நீடித்த வளர்ச்சி இலக்குடன் ஒத்துப்போகின்றன. ஐக்கிய நாடுகள் சபையின் அங்கீகாரம் கிடைத்ததன் காரணத்தினாலேயே, ஆசிய வங்கி மற்றும் உலக வங்கிகளில் குறைந்த வட்டியில் மானியத்துடன் கடன் பெறுகின்ற தமிழக வீட்டு வசதி வாரியத் துறையினை மெருகேற்றுகின்ற, வளமேற்றுகின்ற வகையில், ஏழைகளுக்கு வீடுகள் வழங்குகின்ற மகத்தான பணியினை தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் செவ்வனே செய்துகொண்டிருப்பது, உண்மையிலேயே நமக்கெல்லாம் பெருமை சேர்ப்பதாக அமைந்துள்ளது என்பதை நினைவு கூர்கின்றேன். மதுரை, திருப்பூர், கோவை மற்றும் ஒசூர் நகர்ப்புர வாழ் மக்களுக்கு புதிய நகர வளர்ச்சிக் குழுமம் உருவாக்க வழிவகைகள் செய்திருப்பதை இந்த நேரத்தில் வரவேற்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத் துறையில், வணிகக் கட்டடங்கள், வாடகைக் குடியிருப்பு, மனைகள், குடியிருப்புகள் மற்றும் வீடுகள் ஆகியவற்றின் விற்பனையின்மூலம் வருவாய் ஈட்டப்படுகின்றது. கடந்த 2020–2021 ஆம் ஆண்டில், ரூ.1,237.36 கோடியாகவும், 2021–2022 ஆம் ஆண்டில், ரூ.1,269.85 கோடியாகவும், 2022–2023 ஆம் ஆண்டில், ரூ.1,362.13 கோடியாகவும், மாண்புமிகு தளபதியார் அவர்களுடைய முயற்சியில் அதிகப்படியான வருவாயினை இத்துறை ஈட்டியுள்ளது என்பதனைப் பெருமையுடன் குறிப்பிட விரும்புகிறேன்.

[திரு. கோ. ஐயப்பன்] [2023 ஏப்ரல் 13

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 97 ஆவது ஆண்டு பிறந்தநாளை முன்னிட்டு தேசிய விருதுகளான ஞான பீடம், சாகித்ய அகாடமி, இலக்கிய விருது மற்றும் பிரசித்தி பெற்ற உலக நிறுவனங்கள் வழங்கும் விருதுகளைப் பெற்ற தமிழ்நாட்டைச் சேர்ந்த 20 எழுத்தாளர்களுக்குக் கடந்த 2021–2022 மற்றும் 2022–2023 ஆம் ஆண்டுகளில் ரூ.26.32 கோடி மதிப்பிலான குடியிருப்புகள் வழங்க மாண்புமிகு தளபதியார் அவர்கள் தலைமையிலான கழக அரசு ஆணையிட்டுள்ளது என்பதைப் பெருமையுடனும், மகிழ்ச்சியுடனும் தெரிவிக்கக் கடமைப்பட்டுள்ளேன்.

2023–2024 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையில் வீடு கட்ட முன்பணம் அளிப்பதற்கு ரூ.210 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இது தவிர, தலைமைச் செயலகப் பணியாளர்கள் மற்றும் அனைத்திந்தியப் பணி அலுவலர்களுக்கும் வீடு கட்ட முன்பணம் வழங்குவதற்கு ஏதுவாக, தலைமைச் செயலகத்தின் அனைத்துத் துறைகளுக்கும் தனித் தனியே நிதி ஒதுக்கீட்டை மாண்புமிகு தளபதியார் அவர்களது அரசு செய்துள்ளது என்பதை இம்மாமன்றத்தில் பெருமையுடன் தெரிவிக்கக் கடமைப்பட்டுள்ளேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு மாநிலத்தின் நகர்ப்புர மக்கள்தொகை, 2030 ஆம் ஆண்டில் 57 சதவிகிதமாக இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. வீட்டு வசதி மற்றும் நகர்ப்புர வளர்ச்சித் துறை, நகர்ப்புர வளர்ச்சிக்கான கொள்கைகளை வகுத்துவருவதுடன் பல்வேறு வீட்டு வசதித் திட்டங்களைச் செயல்படுத்தும் துறையாகவும் விளங்கி வருகிறது. 2030 ஆம் ஆண்டில் அனைவருக்கும் போதுமான அளவில் பாதுகாப்பான வாங்கும் திறனுக்கேற்ற வீடுகளையும், அவற்றுக்கான அடிப்படை வசதிகளையும் அளித்தல், குடிசைப் பகுதியினை மேம்படுத்துதல் ஆகியன இத்துறையின் முதன்மை நோக்கங்களாக விளங்குகின்றன.

பிற்பகல் 6–15

அனைத்துத் தரப்பு மக்களுக்கும் அவர்களது வாங்கும் திறனுக்கேற்ப, அவர்களுடைய நிலைமைக்கேற்றவாறு, ஏழ்மைக்கேற்றவாறு, வசதிக்கேற்றவாறு வீடுகளைக் கட்டி விற்பனை செய்வது தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தின் முக்கிய பணியாகும். இவ்வாரியம், குடியிருப்பு மனைகள், தனி வீடுகள், குடியிருப்புகள்,

வணிக வளாகங்கள் போன்ற திட்டங்களைச் செயல்படுத்தி வருகின்றன. தூய்மையான, வெளிப்படையான நிர்வாகம் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தின் மூலமாக நடைபெறுகிறது என்பதற்கு ஆதாரம், கட்டடங்கள் கட்டுவதற்கு மனைப் பிரிவு மற்றும் மனைகளுக்கு ஒப்புதல் வழங்குவதைத் துரிதப்படுத்தும்விதமாக, 60 நாட்களுக்குள் திட்ட அனுமதி வழங்க, ஒற்றை சாளர முறை, single window system இயங்கி வருகிறது என்ற நல்ல செய்தியை இந்த நேரத்திலே நினைவுபடுத்த விரும்புகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வீட்டு வசதி வாரியத் துறையின்மூலம் சமூகத்தில் பல்வேறு பிரிவினர்களுக்கு வீடுகள் ஒதுக்கீடு வழங்குவதைப்போல, பாரா விளையாட்டு வீரர்கள், வீராங்கனைகளுக்கும், திருநங்கை, திருநம்பிகளுக்கும் வீடுகள் ஒதுக்கீடு ஆணை வழங்க ஆவன செய்து உதவிடுமாறு இந்த நேரத்திலே மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புர வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கின்றேன்.

தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தின்மூலம் கட்டப்பட்டு வருகின்ற A, B, C, D பிரிவு வீடுகளில் C மற்றும் D பிரிவுகளில் குறைந்த வருவாய் பெறுகின்ற அரசு ஊழியர்களுக்கு தரமான குடிநீர், கழிவுநீர் செல்லும் குழாய்கள், சாலை வசதி, மின்விளக்கு வசதி, தெருவிளக்கு வசதிகள் கொண்ட அதிகப்படியான, தரமான வீடுகளை தமிழகம் முழுவதும் கட்டிக் கொடுத்தால், வாங்கும் திறனுள்ள ஊழியர்கள் வாங்கிப் பயன்பெறுவார்கள். அவ்வாறு வாங்க முடியாத அரசு ஊழியர்கள் குறைந்த வாடகையிலாவது அரசாங்கத்தின்மூலம் தமிழகத்திலே பல்வேறு பகுதிகளிலே குடியேறவும், வீட்டுச் சொந்தக்காரர்களாகவும், அனைவருக்கும் வாழ்வாதாரம் நிலைத்து நிற்கவும் உதவி செய்ய வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கின்றேன். ஏழை மக்களுக்கு வீடு கட்டும் திட்டத்தில் 2 இடங்களில் 8,677 வீடுகளும், 9 இடங்களில் அரசு அலுவலர் குடியிருப்புகளில் 3,113 வீடுகளும் கட்டும் பணிகள் நடைபெற்று வருகின்றன என்பதை மகிழ்வோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நம்முடைய வீட்டு வசதி வாரியம்மூலம் விற்பனைப் பத்திரங்கள் கொடுக்கப்படவில்லை என்று தெரிந்தவுடன், மாண்புமிகு முதல்வர் தளபதியார் அவர்கள் துறையின் வாயிலாக சிறப்பு

முகாம் நடத்த உத்தரவிட்டார்கள். மாண்புமிகு முதல்வர் அவர்கள் கூறியவாறு, 6 மாதத்தில் 6,323 பேருக்கு விற்பனைப் பத்திரங்கள் இந்தத் துறையின் மூலமாக வழங்கப்பட்டுள்ளன என்பதை ஏழைகள் அனைவரும் நினைத்துப் பார்த்து, சொந்த வீட்டிற்கான பத்திரத்தை வாங்கிக் கொடுத்து சிறப்பு செய்த மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு நன்றி தெரிவித்துக்கொண்டிருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன். (மணியடிக்கப்பெற்றது)

ஒன்றிய அரசின் திட்டமான அம்ரூத் திட்டத்தின்கீழ் புவியியல் தகவல்களின் அடிப்படையில் 10 நகரங்களுக்கான முழு திட்டங்கள் கடலூர் மாவட்டத்திற்கும் மறு ஆய்வு செய்யப்பட இருக்கின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன். கூட்டு உள்ளூர் திட்டக் குழுமம் மற்றும் புதுநகர் வளர்ச்சிக் குழுமங்களில் கடலூர் மாவட்டத்தையும் இணைத்ததற்கு நன்றி தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கடலூரிலே மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் உத்தரவிற்கேற்ப, மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் நாளை மறுநாள் அடிக்கல் நாட்ட இருக்கின்ற 100 படுக்கை வசதிகள் கொண்ட ஓர் அவசர சிகிச்சைப் பிரிவிற்கு ரூ.34 கோடி ரூபாயிலே அனுமதி வழங்கியிருக்கின்றார்கள். அதற்கு மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கும், எங்களுடைய மாவட்ட அமைச்சர் அவர்களுக்கும் நன்றி தெரிவித்துக்கொள்கின்றேன்.

அதுபோன்று எங்களுக்கு பல்வேறு வகையிலேயும் உதவுகிற, 68 இலட்சம் ரூபாய் நன்கொடை கொடுத்து, அரசு மருத்துவமனைக்கு சிறந்த ஒரு ambulance-ஐயும், எலும்பு சம்பந்தமான நோய்களை x-ray எடுப்பதற்கு digital x-ray கருவியும் வாங்கிக் கொடுத்ததற்கும் பெரம்பலூர் அரும்பாவூர் ராமசாமி ரெட்டியார் அவர்களுக்கு இந்த நேரத்திலே நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கடலூரிலே மாண்புமிகு தமிழக முதல்வருடைய திட்டத்தைச் செயல்படுத்துவதற்காக நான் கேட்டுக்கொண்டதற்கிணங்க, ரோட்டரி கிளப் சார்பாக 1 கோடி ரூபாய் செலவிலே எரிவாயு தகன மேடையை உருவாக்கித் தந்திருக்கிறார்கள். இந்த நேரத்திலே அவர்களுக்கும் என்னுடைய நெஞ்சார்ந்த நன்றியையும், வணக்கங்களையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

2023 ஏப்ரல் 13] [திரு. கோ. ஐயப்பன்]

குளித்தலையிலே மாண்புமிகு முன்னாள் முதல்வர் கலைஞர் அவர்கள் 1957–ல் உதயசூரியன் சின்னத்தில் சுயேட்சையாக நின்று வெற்றிபெற்றார்கள். 1958–லிருந்து இன்று வரை. . .(குறுக்கீடு)

பிற்பகல் 6–20

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. A.J. மணிக்கண்ணன். (குறுக்கீடு) திரு. ஐயப்பன், நன்றி சொல்லி உரையை முடியுங்கள்.*

திரு. கோ. ஐயப்பன்: *1958–லிருந்து இன்று வரை 64 ஆண்டுகளாக ஒரே சின்னமாக, இந்தியாவில் அல்ல, தமிழகத்தில் அல்ல, உலகிலேயே உள்ள ஒரே சின்னம் உதயசூரியன் சின்னம். (மேசையைத் தட்டும் ஒலி) உதயசூரியன் சின்னத்திலே போட்டி போட்டு வென்ற ஒரே கட்சி, நம்முடைய கட்சி என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எப்பொழுதெல்லாம் தமிழகத்திலே நம்முடைய கழக ஆட்சி ஏற்படுகின்றதோ, அப்பொழுதெல்லாம் பெண்களுக்குப் பெருமை சேர்க்கின்ற ஆட்சியாக இருக்கின்றது. முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் ஆட்சியாக இருந்தாலும் சரி, பேரறிஞர் அண்ணா அவர்கள் ஆட்சியாக இருந்தாலும் சரி, நம்முடைய தளபதியார் அவர்கள் ஆட்சியாக இருந்தாலும் சரி, பெண்களுக்கு உரிமை வழங்குகின்ற திட்டங்களையெல்லாம் நிறைவேற்றுகின்ற, அந்தச் சட்டங்களைத் தொடர்ந்து செயல்படுத்துகின்ற ஆட்சியாக நம்முடைய ஆட்சி இருந்துகொண்டிருக்கின்றது. நான் முதல்வன் திட்டம் மூலமாக உயர்கல்வி படிக்கின்ற மகளிருக்கு ஆயிரம் ரூபாய். . . (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. A.J. மணிக்கண்ணன் (குறுக்கீடு)*

திரு. A.J. மணிக்கண்ணன்: *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே. . . (குறுக்கீடு)*

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *நன்றி சொல்லி முடிப்பதாக இருந்தால் முடியுங்கள். வேறு எதுவும் பேசக்கூடாது.*

திரு. கோ. ஐயப்பன்: *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் 5 நிமிடம் பேசலாம் என்றிருந்தேன். இருந்தாலும்,*

உங்களுடைய கோரிக்கையை ஏற்று, என்னுடைய கடலூர் தொகுதிக் கோரிக்கைகளை இந்த அவையிலே படித்ததாகக் கருதி, அந்தக் கோரிக்கைகளை, சம்பந்தப்பட்ட துறை அமைச்சர்களுக்கு அனுப்பி, அவற்றை நிறைவேற்றித் தருமாறு தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன். எனக்கு வாய்ப்பளித்த மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுக்கும், மற்றும் முன்வரிசையிலுள்ள அமைச்சர்கள் மற்றும் ஏனைய அமைச்சர் பெருமக்களுக்கும், சக சட்டமன்ற உறுப்பினர்களுக்கும், எங்கள் கட்சிக் கொறடா அவர்களுக்கும், துணைத் தலைவர் அவர்களுக்கும், நன்றி கூறி அமர்கின்றேன். நன்றி.

தொகுதிக் கோரிக்கைகள்:

1. கடலூரில் ஒரு தொழில்நுட்பப் பூங்கா உருவாக்க வேண்டும்.
2. கப்பல் போக்குவரத்து மீண்டும் தொடர்ந்து நடைபெற ஆவன செய்ய வேண்டும்.
3. சென்னை–கடலூர் இரயில் போக்குவரத்தை ஏற்படுத்தித் தர வேண்டும்.
4. கங்கணாங்குப்பம், உச்சிமேடு முதல் குண்டு உப்பலவாடி இடையே பெண்ணையாற்றின் குறுக்கே தடுப்பணையுடன்கூடிய ஒரு மேம்பாலம் அமைத்திட வேண்டும்.
5. புதுப்பாளையம்–ஓட்டல்தேவி வரை போக்குவரத்து கழகத்தை இணைக்கும் விதமாக கெடிலம் ஆற்றின் குறுக்கே தடுப்பணையுடன் கூடிய மேம்பாலம் அமைக்க வேண்டும்.
6. பெண்ணையாறு – கெடிலம் – மலட்டாறு போன்ற ஆறுகளின் கரைகளைப் பலப்படுத்தி, தேவைப்படும் இடங்களில் சிமெண்ட் சுவர் அமைக்க வேண்டும்.
7. கெடிலம் ஆற்றில் கடலூர் நகரப் பகுதி – கம்மியம்பேட்டை முதல் சாவடி வரை, இரண்டு கரைகளையும் பலப்படுத்தி, சுமார் 2 கி.மீ. வரை சாலை அமைத்து, பேருந்துப் போக்குவரத்தைத் தொடர வேண்டும்.
8. கடலூர் “சில்வர் பீச்”–ஐ சுற்றுலாத் தலமாக்கிட வேண்டும்.
9. கொள்ளிடம் கூட்டுக் குடிநீர்த் திட்டப் பணிகளை விரைந்து நிறைவேற்ற வேண்டும்.

10. செம்மண்டலம், மாதா கோயில் அருகே சுற்றுவட்ட மேம்பாலம் அமைக்க வேண்டும்.

11. திருப்பாதிரிப்புலியூர், பாண்பரி மார்க்கெட் பகுதியில் நவீன வசதிகளுடன்கூடிய வணிக வளாகம் அமைக்க வேண்டும்.

12. பெண்ணையாற்றின் குறுக்கே தடுப்பணை அமைக்க வேண்டும்.

13. கடலூர் அரசு பெரியார் கல்லூரியில், M.Sc (Micro Biology), B.Sc., (Bio-Technology), B.Sc., (Bio-Chemistry) போன்ற புதிய பாடப்பிரிவுகள் தொடங்கப்பட வேண்டும்.

14. சிதிலமடைந்துள்ள தேவனாம்பட்டினம் மாளிகை கட்டடங்களை அகழ்வாராய்ச்சிக்கு உட்படுத்தி, புதுப்பித்துச் சீரமைத்து, அழகுபடுத்தி, சுற்றுலாத் தலமாக்க வேண்டும்.

15. தேவனாம்பட்டினம், சோனாங்குப்பம், சிங்காரத்தோப்பு, அக்கரைக்கோரி ஆகிய பகுதிகளில் தூண்டில் வளைவு ஏற்படுத்தி, மீனவப் பெருமக்களைப் பாதுகாத்திட வேண்டும்.

16. அதிக விளைச்சலின்போது, உற்பத்தியாகும் காய்கறிகளைப் பதனிட உச்சிமேடு-நாணமேடு பகுதியில் குளிர்ப்பதனக் கிடங்கு அமைக்க வேண்டும்.

17. 2009 ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட பாதாளச் சாக்கடைத் திட்டத்தை முடிக்க வேண்டும்.

18. புதைவட மின்சாரப் பணிகளை விரைந்து மேற்கொள்ள வேண்டும்.

19. மழைநீர் வடிகால் அமைக்கின்றப் பணிகள் முற்றுப் பெறாமல் உள்ளதால், அதை முழுமையாக செய்து முடிக்க வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. A.J. மணிக்கண்ணன்.

***திரு. A.J. மணிக்கண்ணன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வெண்தாடி வேந்தர், சமூகநீதிக் காவலர் தந்தை பெரியார் அவர்களை வணங்கி, நமது மாநிலம் தனித்துவத்துடன் நிலைத்து நிற்க தமிழ்நாடு என்று பெயர் சூட்டிய பேரறிஞர் அண்ணா அவர்களையும் வணங்குகிறேன். வையகமே

வியந்து பார்க்கக்கூடிய அளவிற்கு பல்வேறு நலத் திட்டங்களை உருவாக்கி, அதற்கு உயிரூட்டி, தமிழ்நாட்டின் உலகளாவிய வளர்ச்சிக்கு வித்திட்ட டாக்டர் கலைஞர் அவர்களையும் வணங்குகிறேன். மூவரின் ஓர் உருவமாய் இருந்து, தமிழ்நாட்டில் தமிழனை தலைநிமிரச் செய்து, இருளை நீக்கி, விடியலைத் தந்த தமிழினத்தின் தன்னிகரற்ற தலைவர் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் தளபதியார் அவர்களையும் வணங்குகிறேன். நாளைய தமிழகம், நமது இளைஞரணிச் செயலாளர், இளைஞர்களின் வழிகாட்டி, மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை, சிறப்புத் திட்ட செயலாக்கத் துறை, மகளிர் நலன் மற்றும் மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்களுக்கு எனது வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அவை முன்னவர், நீர்ப்பாசனத் துறை அமைச்சர் அவர்களுக்கு என் பணிவான வணக்கத்தை நான் தெரிவித்துக்கொள்கிறேன். எங்கள் கள்ளக்குறிச்சி மாவட்டத்தின் பொறுப்பு அமைச்சர், மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களை வணங்குகிறேன். மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்களை வணங்குகிறேன். மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்களை வணங்குகிறேன். மாண்புமிகு அமைச்சர் பெருமக்களுக்கும், மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கும், மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களுக்கும், அரசு தலைமைக் கொறடா அவர்களுக்கும், எனது மாவட்டத்தைச் சேர்ந்த சட்டமன்ற உறுப்பினர் நண்பர் தா. உதயசூரியன் அவர்களுக்கும், சட்டமன்ற உறுப்பினர் அன்பிற்குரிய நண்பர் வசந்தம் கார்த்திகேயன் அவர்களுக்கும் மற்றும் அனைத்து சட்டமன்ற உறுப்பினர்களுக்கும், எனது தொகுதி மக்களுக்கும், கழக நிர்வாகிகளுக்கும், தோழமைக் கட்சி நண்பர்களுக்கும் அனைவருக்கும் எனது நன்றி கலந்த வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் நகர்ப்புர வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்களுக்கும் எனது வணக்கத்தை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 6–25

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, குருவிக்கு கூடுண்டு, காக்கைக்கு கூடுண்டு, கருநாகப் பாம்புக்குக்கூட புற்றுண்டு, மனிதன் வாழ்வதற்கு வீடு அவசியம்

2023 ஏப்ரல் 13] [திரு. A.J. மணிக்கண்ணன்]

வேண்டும். இந்த வீட்டு வசதித் துறை மானியத்தில் பேசுவதில் நான் மகிழ்ச்சியடைகின்றேன். 2011 ஆம் ஆண்டின் மக்கள்தொகைக் கணக்கெடுப்பின்படி, தமிழ்நாட்டில் 832 நகரங்கள் உள்ளன. தமிழ்நாட்டில் 48.45 சதவீதம் மக்கள் நகர்ப்புரங்களில் வாழ்கின்றனர். வீட்டு வசதி மற்றும் நகர்ப்புர வளர்ச்சித் துறை, நகர்ப்புர வளர்ச்சிக்காக கொள்கைகளை வகுத்துக் கூறுவதுடன், பல்வேறு வீட்டு வசதித் திட்டங்களைச் செயல்படுத்தும் துறையாக இருக்கின்றது.

2030 ஆம் ஆண்டிற்குள் அனைவருக்கும் போதுமான, பாதுகாப்பான, வாங்கும் திறனுக்கேற்ற வீடுகளையும், அடிப்படை வசதிகள் அளித்தல் மற்றும் குடிசைப் பகுதிகளை மேம்படுத்துதல் ஆகியன இத்துறையின் முதன்மையான பணிகளாகும். இவ்வாரியம் 9 வாரிய அரசுத் திட்டங்களையும், பிரதமரின் அனைவருக்கும் வீடு கட்டும் திட்டத்தின்கீழ் ஒன்றிய அரசின் மூன்று திட்டங்களையும் செயல்படுத்தி வருகிறது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இத்துறையில் நகர்ப்புரம், மாநகராட்சி, நகராட்சி, பேரூராட்சிப் பகுதிகளில் சாலையோரத்தில் குடியிருந்தவர்கள் மற்றும் குடிசைவாழ் மக்களுக்கும் மற்றும் நடுத்தர வருவாய்ப் பிரிவினர்களுக்கும், காவல் துறை பணியாளர்களுக்கும், தொழில் துறை ஊழியர்களுக்கும் மற்றும் அரசு ஊழியர்களுக்கும், வீட்டு வசதி வாரியம் மற்றும் தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியம் ஆகியவற்றை உருவாக்கி, தமிழின மக்களை வாழ வைத்தது தமிழினத் தலைவர் டாக்டர் கலைஞர் அவர்கள்தான். கிராமப்புறங்களிலும் கான்கிரீட் வீடுகளைக் கட்டித் தந்த தலைவர் கலைஞர் அவர்களை வணங்குகிறேன். வீட்டு வசதி வாரியம்மூலம் அரசு குடியிருப்பு, காவலர் குடியிருப்பு தந்தவர் தலைவர் கலைஞர் அவர்கள்தான்.

உளுந்தூர்பேட்டை நகராட்சி, வீட்டு வசதி வாரிய குடியிருப்பு. உளுந்தூர்பேட்டை நகராட்சியில் வீட்டு வசதி மற்றும் நகர்ப்புர வளர்ச்சித் துறையின் தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியத்தின்மூலம் 776 வீடுகள் கட்டப்பட்டு வருகின்றன. நகரத்தில் உள்ள வீடு இல்லாத மக்கள், நீர்நிலைகள் ஓரம் வீடு கட்டியுள்ள மக்கள், ஏழையெளிய மக்களும் பயன்பெறக்கூடிய வகையில் வீடு வழங்க வேண்டுமாய் கேட்டுக்கொள்கிறேன். மேலும், உளுந்தூர்பேட்டை நகராட்சியில் உள்ள விளிம்புநிலை

மக்களுக்கு வாழ்விட வசதி ஏற்படுத்தித் தந்தமைக்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புர வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்களுக்கும் நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

எனது தொகுதியில் நமது கழக ஆட்சி பொறுப்பேற்றவுடன், விவசாயப் பெருமக்களுக்கு இலவச மின்சாரம் வழங்கி, நெல் கொள்முதல் நிலையங்களைத் திறந்தவுடன், சரியான விலை கிடைக்கப்பெற்று விவசாயிகள் பெருமகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

எங்கள் தொகுதியில் உள்ள பெரியசெவலை செங்கல்வராயன் கூட்டுறவுச் சர்க்கரை ஆலை பழுது நீக்கம் செய்யப்பட்டு, சிறப்பாக இயங்கி வருகின்றது. பழைய பாக்கி 24 கோடி ரூபாய் இருந்ததை வழங்கி, மேலும், ஆண்டுதோறும் கரும்பு அரவை நடைபெறுகின்ற ஆண்டிலேயே உரிய தொகைகள் வழங்கப்படுகின்றன. இதனால், விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். இதற்கு முந்தைய ஆட்சியில் விவசாயிகள் அடைந்த வேதனைகளைத் தீர்த்து வைத்த நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

உளுந்தூர்பேட்டை தொகுதியில் தோல் இல்லாத காலணி உற்பத்தி செய்யும் தொழிற்சாலை வழங்கியமைக்கு நன்றியினையும், வணக்கத்தையும் தொகுதி மக்களின் சார்பாக மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்களுக்கும் தெரிவித்துக்கொள்கிறேன். உளுந்தூர்பேட்டை நகராட்சிக்கு புதிய பேருந்து நிலையம் வழங்கிய மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்களுக்கும் மற்றும் மாண்புமிகு மாவட்ட பொறுப்பு அமைச்சர் அவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

உளுந்தூர்பேட்டை தொகுதி, உளுந்தூர்பேட்டை நகராட்சிக்கு புறவழிச் சாலை அமைக்கப்படும் என்று அறிவித்தமைக்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும் மற்றும் மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களுக்கும் நான் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும், தேர்தல் காலத்தில் மகளிர் உரிமைத் தொகை ஆயிரம் ரூபாய் வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டதை, நிறைவேற்றித் தந்த மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதேபோன்று, புதுமைப் பெண் திட்டம், மிகச் சிறந்த திட்டம்,

அது மக்கள் மத்தியில் சிறப்பான வரவேற்பைப் பெற்றிருக்கின்றது. அதற்கும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

உங்கள் தொகுதியில் முதல்வர் திட்டத்தில் உளுந்தூர்பேட்டை தொகுதியில் பல ஆண்டுகளாக தொகுதி மக்களின் எதிர்பார்ப்பில் உள்ள அதிமுக்கியத்துவம் வாய்ந்த 10 கோரிக்கைகளை ஏற்று, நிறைவேற்றித் தந்துகொண்டிருக்கும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு மன மகிழ்வோடு, தொகுதி மக்களின் சார்பில் பணிவான வணக்கத்தினையும், நன்றியையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

உளுந்தூர்பேட்டை தொகுதி மக்களின் 20 ஆண்டுக்கால கோரிக்கையும், உங்கள் தொகுதியில் முதலமைச்சர் திட்டத்தின் முதன்மையான கோரிக்கையுமான உளுந்தூர்பேட்டையில் அரசு கலைக் கல்லூரி அமைத்துத்தர வேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களையும், மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்களையும் கேட்டுக்கொள்கின்றேன்.

பிற்பகல் 6–30

தமிழினத் தலைவர் டாக்டர் கலைஞர் அவர்களின் 48 ஆம் ஆண்டு பிறந்த நாளுக்கு பொது மக்கள் மனமுவந்து வழங்கிய அன்பளிப்பின்மூலம் உளுந்தூர்பேட்டையை அடுத்த வெள்ளையூர் கிராமத்தில் அமைக்கப்பெற்ற அரசு மறுவாழ்வு இல்லம் அமைக்கப்பட்டு நீண்ட காலம் ஆகிவிட்டமையால் முழுமையாகப் பழுதடைந்துள்ளது. தலைவர் கலைஞர் அவர்களால் ஆரம்பிக்கப்பட்ட அரசு மறுவாழ்வு இல்லம் தொடர்ந்து செயல்பட, ஆண்கள் மற்றும் பெண்களுக்கு தனித் தனியாக புதிய கட்டடம் ஒன்று அமைத்துத் தர வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கின்றேன்.

விழுப்புரம் மாவட்டம், உளுந்தூர்பேட்டை தொகுதிக்குட்பட்ட திருவெண்ணெய்நல்லூர் ஒன்றியம், மலட்டாறு செல்லும் அரசூர் பகுதியில் காரப்பட்டு ஆனத்தூர் பகுதிக்கு நீர் செல்லும் பிரிவிலும், ஆனத்தூர் நத்தம் பகுதிக்கு நீர் செல்லும் பிரிவிலும் check dam–உடன்கூடிய இரண்டு shutter–களை அமைத்துத் தர வேண்டுமென்று அன்போடு நான் கேட்டுக்கொள்கின்றேன்.

கெடிலம் ஆற்றில் பிள்ளையார்குப்பம் மற்றும் கிழக்கு மருதூர் ஆகிய இரண்டு இடங்களிலும் check dam அமைத்துத் தர வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கின்றேன்.

பெண் குழந்தைகளின் கல்வி நலன் கருதி கள்ளக்குறிச்சி மாவட்டம், திருநாவலூர் அரசு மேல்நிலைப் பள்ளி மற்றும் களமருதூர் அரசு மேல்நிலைப் பள்ளி ஆகிய இரண்டு பள்ளிகளையும் இரண்டாகப் பிரித்து மகளிர் மேல்நிலைப் பள்ளி உருவாக்கிட வேண்டும். அதற்கான தொகையை பொதுமக்களே செலுத்தியுள்ளனர். மேலும், மகளிர் மேல்நிலைப் பள்ளி அமைப்பது தொடர்பாக அரசுக்கு முன்மொழிவுகளும் அனுப்பப்பட்டுள்ளன. எனவே, இதைப் பிரித்துத் தர வேண்டுமென்று நான் அன்போடு கேட்டுக்கொள்கின்றேன்.

உளுந்தூர்பேட்டை அரசு பொது மருத்துவமனையில் மருத்துவர்கள் மற்றும் செவிலியர்கள் கூடுதலாகத் தேவைப்படுகிறார்கள். புறநோயாளிகள் கூடுதலாக வருவதால் அவர்கள் மிகவும் சிரமப்பட்டு வருகிறார்கள். குறிப்பாக, உளுந்தூர்பேட்டை நகரப் பகுதியில், சென்னை-சேலம்-திருச்சி இணைப்புச் சாலை உள்ளதால், அடிக்கடி விபத்துகள் ஏற்படுகின்ற பகுதியாக இருக்கின்றது. விபத்துக்குள்ளான நூற்றுக்கணக்கானவர்கள் ஒரே நேரத்தில் சிகிச்சை பெறுவதற்கு அனுமதிக்கப்படுகிறார்கள். அந்த சமயங்களில், மருத்துவர்கள் மற்றும் செவிலியர்கள் கூடுதலாகத் தேவைப்படுவதால், மருத்துவர்கள் மற்றும் செவிலியர்களை கூடுதலாக நியமிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மேலும், உளுந்தூர்பேட்டை மற்றும் அதன் சுற்றுவட்டாரப் பகுதிகளில் 40 கி.மீ. சுற்றளவில் தகுதியான மருத்துவமனை இல்லாததால், இம்மருத்துவமனையை மாவட்ட மருத்துவமனையாகத் தரம் உயர்த்தித் தர வேண்டுமென்று அன்போடு நான் கேட்டுக்கொள்கின்றேன்.

மேலும், திருநாவலூர் ஒன்றியம், கூவாகம் மற்றும் அதன் சுற்றுவட்டார கிராம மக்கள் மருத்துவ சிகிச்சை பெறுவதற்கு ஆரம்ப சுகாதார நிலையம் ஒன்று அமைத்துத் தர வேண்டுமென்ற கோரிக்கையை பொது மக்கள் வைத்திருக்கிறார்கள். அதையும் வழங்குமாறு நான் அன்போடு கேட்டுக்கொள்கின்றேன்.

உளுந்தூர்பேட்டையை அடுத்து, காட்டு எடையார் மற்றும் சோழவாண்டிபுரம் கிராமங்களுக்கிடையே செல்லும் கெடிலம்

ஆற்றின் குறுக்கே மேம்பாலம் அமைத்துத் தர வேண்டுமாய் கேட்டுக்கொள்கின்றேன். திருநாவலூர்-ஒடையானந்தல் கிராமங்களுக்கிடையே செல்லும் கெடிலம் ஆற்றின் குறுக்கே மேம்பாலம் அமைத்தால் நெய்வேலி மற்றும் பண்ருட்டி சாலை இணைப்பு பெறும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், மீதி தொகுதிக் கோரிக்கைகள் நீங்கள் படித்ததாக அவைக்குறிப்பில் பதிவு செய்துகொள்ளப்படும். உங்கள் கோரிக்கைகளை என்னிடம் கொடுத்துவிடுங்கள்.

திரு. A.J. மணிக்கண்ணன்: திருக்கோயிலூர் அணையிலிருந்து சித்திலிங்கமடம் பகுதியில் பிரியும் ராகவன் வாய்க்கால் மற்றும் ஆமூரான் வாய்க்கால், சேஷாயினி வாய்க்கால் மற்றும் புத்தனந்தல் அணைக்கட்டு ஆகியவற்றை கெடிலம் ஆற்றுடன் இணைக்க வேண்டும். அவ்வாறு இணைப்பதன்மூலம் கள்ளக்குறிச்சி மாவட்டத்திலேயே மிகப் பெரிய ஏரியான பாதூர் ஏரி மற்றும் களவனூர் ஏரி போன்ற பல ஏரிகள் பயன்பெறக்கூடிய ஒரு சூழ்நிலை ஏற்படும். சுற்றுவட்டாரத்தில் உள்ள 20-க்கும் மேற்பட்ட ஏரிகள் பாசன வசதி பெறும். 30-க்கும் மேற்பட்ட கிராம விவசாயிகளின் நீர்த் தேவையினைப் பூர்த்தி செய்ய முடியும். மேலும், அதிக அளவில் திறந்தவெளிக் கிணற்று நீரின் மூலமே குடிநீர் விநியோகம் செய்யும் சூழல் உள்ளது. ஆகவே, மேற்படி வாய்க்கால்கள் இணைப்பினால் முழுமையாக குடிநீர்த் தேவையைப் பூர்த்தி செய்ய முடியும். எதிர்காலத்தில் உளுந்தூர்பேட்டை நகராட்சி பொதுமக்களின் குடிநீர் தேவைக்குப் பயனுள்ளதாக இது அமையும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ் அவர்கள். (குறுக்கீடு)

திரு. A.J. மணிக்கண்ணன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஒரு நிமிடம், நன்றி மட்டும் சொல்லிக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், நன்றி சொல்லி உரையை முடியுங்கள்.

திரு. A.J. மணிக்கண்ணன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, உளுந்தூர்பேட்டை தொகுதியில் பல ஆண்டு

காலமாக எந்தவொரு திட்டப் பணிகளும், வளர்ச்சிப் பணிகளும் இல்லாத நிலையில், தொடர்ந்து இந்த ஆட்சிப் பொறுப்பேற்ற பிறகு, தொகுதிக்குப் பத்து திட்டங்கள் என்று அறிவித்து, பல்வேறு நலத் திட்டங்கள் தற்போது இந்தத் தொகுதி மக்களுக்கு கிடைத்துக்கொண்டிருக்கின்றன. விவசாயப் பெருமக்களும், அனைத்துத் தரப்பு மக்களும் நமது மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களை வாழ்த்திக்கொண்டிருக்கிறார்கள். அதேபோல, அவர்கள் நூறாண்டு காலம் வாழ்ந்து தமிழ் மக்களையும், தமிழ்ச் சமுதாயத்தையும் வாழவைக்க வேண்டும் என்று வாழ்த்தி, என்னுடைய உரையை நிறைவு செய்கிறேன்.

நான் என்னுடைய தொகுதிக் கோரிக்கைகளை தங்களிடம் கொடுக்கிறேன். அவற்றை நான் படித்ததாக ஏற்றுக்கொண்டு, சம்பந்தப்பட்ட துறைகளுக்கு அனுப்பி நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அன்போடு கேட்டுக்கொள்கின்றேன்.

தொகுதிக் கோரிக்கைகள்:

பரிக்கல் கிராமத்தில் அமையப்பெற்றுள்ள அருள்மிகு ஸ்ரீலட்சுமி நரசிம்மர் சுவாமி திருக்கோயிலில் நடைபெற்றுவரும் திருப்பணிகளை விரைவாக முடித்துத் தர வேண்டும்.

கூவாகம், அருள்மிகு கூத்தாண்டவர் திருக்கோயிலில் ஆண்டுதோறும் திருநங்கைகள் மற்றும் வேண்டுதல் செய்வோரின்மூலம் நேர்த்திக்கடன் செலுத்தப்படும் தங்கத் தாலிகளை வைத்து திருக்கோயிலுக்கு தங்கக் கிரீடம் மற்றும் தங்கத்தால் காப்பு செய்து தர வேண்டும்.

எலவனாசூர்கோட்டை பகுதியிலுள்ள அர்த்தநாரீஸ்வரர் திருக்கோயிலை திருப்பணிக்கு எடுத்துக் கொள்ள வேண்டும்.

நெய்வனை பகுதியிலுள்ள அருள்மிகு சொர்ணகடேஸ்வரர் திருக்கோயிலுக்கு நடப்பாண்டிலேயே திருப்பணி செய்து தர வேண்டும்.

உளுந்தூர்பேட்டை நகராட்சி, அருள்மிகு கைலாசநாதர் கோயில் மற்றும் உளுந்தாண்டார்கோயில் ஸ்ரீமாஷபுரீஸ்வரர் லோகாம்பிகை அம்மையார் திருக்கோயில்களை திருப்பணிக்கு எடுத்துக்கொள்ள வேண்டும்.

2023 ஏப்ரல் 13] [திரு. A.J. மணிக்கண்ணன்]

உளுந்தூர்பேட்டை நகராட்சி, அருள்மிகு முருகன் கோயில் புனரமைப்புப் பணிகளுக்கு நிதி ஒதுக்கப்பட்டும் பணி நடைபெறாமல் உள்ளதால், கோயிலுக்குச் சொந்தமான நிலத்தை வரையறை செய்து திருப்பணியை விரைவுபடுத்த வேண்டும்.

உளுந்தூர்பேட்டை நகராட்சி, அருள்மிகு ஆதிகேசவ பெருமாள் திருக்கோயிலை பழுதுநீக்கி, புனரமைப்பு செய்திடவும், கோயிலின் முன்பு metal sheet அமைத்திடவும் வேண்டும்.

எ.மழவராயனூர் கிராமத்திலுள்ள அருள்மிகு ஆட்கொண்டேஸ்வரர் திருக்கோயிலை நடப்பாண்டிலேயே திருப்பணிக்கு எடுத்துக்கொள்ள வேண்டும்.

எறையூர் கிராமத்தில் உள்ள புனித ஜெபமாலை மாதா ஆலயத்தில் புனரமைப்புப் பணி செய்து தர வேண்டும்.

நெய்வேலி அனல் மின் நிலைய சுரங்க செயல்பாடுகளால் பாதிக்கப்பட்டுள்ள பகுதிகளில் குடிநீர், மருத்துவம், சாலை பராமரிப்பு உள்ளிட்ட அடிப்படை வசதிகளைச் செய்வதற்கு ஆண்டுக்கு ரூ.10 கோடி நெய்வேலி சுரங்க நிதியிலிருந்து நிதி ஒதுக்கீடு செய்ய வேண்டும்.

எ. குமாரமங்கலம் பகுதியில் துணை மின் நிலையம் அமைக்க நடப்பாண்டிலேயே அனுமதி வழங்கி, பொதுமக்களுக்கு மின் விநியோகம் செய்ய வழிவகை செய்ய வேண்டும்.

செங்குறிச்சி பகுதியில் துணை மின் நிலையம் அமைப்பதற்கு நடப்பாண்டிலேயே அனுமதி வழங்க வேண்டும்.

உளுந்தூர்பேட்டை நகராட்சி, ஆதி திராவிடர் பகுதி மக்களுக்கு தனிநபர் வீடு கட்டுவதற்கு நிதி ஒதுக்கீடு செய்து தர வேண்டும்.

உளுந்தூர்பேட்டை நகராட்சி, 36 குடும்பங்களைச் சேர்ந்த குறவர் இன மக்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட பட்டா இடத்தில் தற்காலிக கூடாரத்தை அகற்றிவிட்டு கான்கிரீட் வீடுகள் கட்டித் தர வேண்டும்.

திருவெண்ணெய்நல்லூர் ஊராட்சி ஒன்றியம், ஆனத்தூர் பகுதியில் கொய்யா ஜூஸ் தொழிற்சாலை அமைத்துத் தர வேண்டும்.

திருநாவலூர், உளுந்தூர்பேட்டை ஊராட்சி ஒன்றியங்கள் கலந்து நிர்வாக வசதிக்காக மூன்று ஊராட்சி ஒன்றியங்களாகப் பிரித்துத் தர வேண்டும்.

உளுந்தூர்பேட்டை நகராட்சிப் பகுதியில் உள்ள குளத்தைச் சுற்றியுள்ள நிலத்தை உட்பிரிவு செய்து அரசுக் கட்டடங்கள் அமைத்துத் தர வேண்டும்.

உளுந்தூர்பேட்டை நகராட்சியில் சர்கார் ஜாகா நிலத்தில் வீடுகட்டி வசிப்பவர்களுக்குப் பட்டா வழங்க வேண்டும்.

உளுந்தூர்பேட்டை நகராட்சிப் பகுதியிலுள்ள 108 குளங்களைத் தூர் வாரி, ஆழப்படுத்த வேண்டும்.

உளுந்தூர்பேட்டையில் பால் குளிரூட்டு நிலையம், மீன் மார்க்கெட் அமைக்க வேண்டும். உளுந்தூர்பேட்டை உழவர் சந்தையை விரிவுபடுத்த வேண்டும்.

எலவனாசூர்கோட்டை, பிடாகம் பஞ்சாயத்தை பேரூராட்சியாகவும், எறையூர் பஞ்சாயத்தை பேரூராட்சியாகவும் தரம் உயர்த்தித் தர வேண்டும்.

திருநாவலூர் ஊராட்சி ஒன்றியம், திருநாவலூரில் அமைந்துள்ள தீயணைப்பு நிலையத்திற்குக் கட்டடம் அமைத்துத் தர வேண்டும்.

கள்ளக்குறிச்சி மாவட்டம், உளுந்தூர்பேட்டை வட்டம், எ.சாத்தனூர் மதுரா எடைக்கல் புனர்வாழ்வு மையம் எனப்படும் அஜீஸ் நகர் குடியிருப்புப் பகுதியில் வசிக்கும் மக்களுக்கு பட்டா மாற்றம் செய்து, பத்திரப் பதிவு செய்து தர வேண்டும்.

எனது தொகுதிக்குட்பட்ட கீழ்க்காணும் பகுதிகளில் 1,000 கார்டுகளுக்கு மேல் உள்ளதாலும், ஒரு சில பகுதிகளில் நீண்ட தூரம் நடந்து செல்ல வேண்டியுள்ளதாலும் பொது மக்களின் நலன் கருதி பகுதி நேர மற்றும் முழு நேர நியாய விலைக் கடை அமைத்து தருமாறு கேட்டுக்கொள்கிறேன்:—

வ. எண்	தற்போது கடை செயல்படும் இடம்	ஊராட்சி	பிரித்து தரக் கோரும் இடம்	PCAB
1	அயன்வேலூர்	வேலூர்	பூங்காப்பாளையம்	கூவாகம்
2	மேட்டாத்தூர்	ஆத்தூர்	ஆத்தூர்	களமருதூர்
3	பிள்ளையார்குப்பம்	ஆத்தூர்	பரமநத்தம்	களமருதூர்

வ. எண்	தற்போது கடை செயல்படும் இடம்	ஊராட்சி	பிரித்து தரக் கோரும் இடம்	PCAB
4	புது நன்னாரம்	நன்னாரம்	ப.நன்னாரம்	களமருதூர்
5	பெரும்பாக்கம்	பெரும்பாக்கம்	வடபெரும்பாக்கம்	திருநாவலூர்
6	கீழகுப்பம்	வேலூர்	வாணியங்குப்பம்	கூவாகம்
7	வடமாம்பாக்கம் கிராமப் பகுதி	வடமாம்பாக்கம்	ஆதி திராவிடர் பகுதி	திருநாவலூர்
8	எடையாளம்	பரிக்கல்	பரிக்கல் கிராமப் பகுதி	திருநாவலூர்
9	கூவாகம்	கூவாகம்	சிவிலியாங்குளம்	கூவாகம்
10	விழுப்புரம் மாவட்ட கூட்டுறவு மொத்த விற்பனை பண்டக சாலை கடை–1	உளுந்தூர்பேட்டை நகராட்சி	உளுந்தூர்பேட்டை நகராட்சி	உளுந்தூர்பேட்டை
11	விழுப்புரம் மாவட்ட கூட்டுறவு மொத்த விற்பனை பண்டக சாலை கடை–2	உளுந்தூர்பேட்டை நகராட்சி	உளுந்தூர்பேட்டை நகராட்சி	உளுந்தூர்பேட்டை
12	பெரியகுறுக்கை	பெரியகுறுக்கை	வடுகப்பாளையம்	எலவனாசூர் கோட்டை
13	ஆசனூர் கிராமப் பகுதி	ஆசனூர்	ஆசனூர் ஆதி திராவிடர் பகுதி	ஆசனூர்
14	குணமங்கலம்	குணமங்கலம்	முஸ்லீம் பகுதி	உளுந்தூர்பேட்டை
15	சீதேவி	சீதேவி	இராமநாதபுரம்	அதையூர்
16	ஏமம்	ஏமம்	நத்தகாளி	எ.குமாரமங்கலம்
17	கிளியூர்	கிளியூர்	கிளியூர் ஆதி திராவிடர் பகுதி	கிளியூர்
18	வெள்ளையூர்	வெள்ளையூர்	வெள்ளையூர் ஆதி திராவிடர் பகுதி	வெள்ளையூர்

வ. எண்	தற்போது கடை செயல்படும் இடம்	ஊராட்சி	பிரித்து தரக் கோரும் இடம்	PCAB
19	ம.குன்னத்தூர்	ம.குன்னத்தூர்	ம.குன்னத்தூர் ஆதி திராவிடர் பகுதி	ம.குன்னத்தூர்
20	காட்டு எடையார்	காட்டுஎடையார்	காட்டு எடையார் கிராமம் மேற்குப் பகுதி	G. அரியூர்

எனது தொகுதியில் தனியார் கட்டடத்தில் இயங்கிவரும் நியாய விலைக் கடைகளுக்கு நிரந்தர அரசு கட்டடம் அமைத்து தர வேண்டும்.

விழுப்புரம் மாவட்டம் திருவெண்ணெய்நல்லூர் ஊராட்சி ஒன்றியம் உளுந்தூர்பேட்டை தொகுதிக்குட்பட்ட ஊராட்சிகளில் செல்லக்கூடிய மலட்டாறு வாய்க்கால் தூர் வாருதல் பணிக்கு அனுமதி வழங்க வேண்டும்.

கள்ளக்குறிச்சி கோட்டம், உளுந்தூர்பேட்டை உட்கோட்டத்தில் வனத் துறைக்குச் சொந்தமான பகுதியில் சீரமைப்புப் பணிகள் மேற்கொள்ள அனுமதி வழங்க வேண்டும்.

காட்டுஎடையார்பாளையம்–சீதேவி இராமநாதபுரம் செல்லும் ஒன்றியச் சாலை, பின்னல்வாடி–கல்சிறுநாகலூர் செல்லும் சாலை மொத்தமுள்ள 5.3 கி.மீ. சாலையில் சேதமடைந்துள்ள 800 மீ. சாலை, கன்னாரம்பட்டு–சாராயமேடு செல்லும் ஊரக சாலை (560 மீ.), இருவேல்பட்டு–காரப்பட்டு செல்லும் ஊரக சாலை (2 கி.மீ.) ஆகிய சாலைகளைப் புதுப்பித்தல் பணிக்கு அனுமதி தர வேண்டும்.

மாவட்ட இதர சாலையாகப் பராமரிக்கப்படும் எ.குமாரமங்கலம்–நெய்வனை செல்லும் சாலையில் வனத் துறைக்குச் சொந்தமான பகுதியில் சீரமைப்புப் பணிகள் மேற்கொள்ள அனுமதி வழங்க வேண்டும்.

மாவட்ட இதர சாலையாகப் பராமரிக்கப்படும் அதையூர்–தானம் செல்லும் சாலையில் வனத் துறைக்குச் சொந்தமான பகுதியில் சீரமைப்புப் பணிகள் மேற்கொள்ள அனுமதி வழங்க வேண்டும்.

2023 ஏப்ரல் 13] [திரு. A.J. மணிக்கண்ணன்]

மாவட்ட முக்கிய சாலையாகப் பராமரிக்கப்படும் எம்.குன்னத்தார்–நரிப்பாளையம் செல்லும் வனத் துறைக்குச் சொந்தமான பகுதியில் சீரமைப்புப் பணிகள் மேற்கொள்ள அனுமதி வழங்க வேண்டும்.

மாவட்ட இதர சாலையாகப் பராமரிக்கப்படும் சாலையான காரப்பட்டு சாலையில் வனத் துறைக்குச் சொந்தமான பகுதியில் சீரமைப்புப் பணிகள் மேற்கொள்ள அனுமதி வழங்க வேண்டும்.

மாவட்ட இதர சாலையாகப் பராமரிக்கப்படும் சாலையான எ.குமாரமங்கலம்–கணையார் செல்லும் சாலையில் வனத் துறைக்குச் சொந்தமான பகுதியில் சீரமைப்புப் பணிகள் மேற்கொள்ள அனுமதி வழங்க வேண்டும்.

மாவட்ட இதர சாலையாகப் பராமரிக்கப்படும் சாலையான சாத்தனூர்–புதுக்கழனி செல்லும் சாலையில் வனத் துறைக்குச் சொந்தமான பகுதியில் சீரமைப்புப் பணிகள் மேற்கொள்ள அனுமதி வழங்க வேண்டும்.

மாவட்ட முக்கிய சாலையாகப் பராமரிக்கப்படும் ரிஷிவந்தியம், நெமிலி செல்லும் சாலையில் வனத் துறைக்குச் சொந்தமான பகுதியில் சீரமைப்பு பணிகள் மேற்கொள்ள அனுமதி வழங்க வேண்டும்.

மாநில நெடுஞ்சாலையாகப் பராமரிக்கப்படும் சாலையான திருக்கோவிலூர்–ஆசனூர் செல்லும் சாலையில் வனத் துறைக்குச் சொந்தமான பகுதியில் சீரமைப்பு பணிகள் மேற்கொள்ள அனுமதி வழங்க வேண்டும்.

மாவட்ட இதர சாலையாகப் பராமரிக்கப்படும் சாலையான சேலம்–உளுந்தூர்பேட்டை சாலை, பொறையூர் சாலை (வழி) சிறுநாகலூர் வரையுள்ள சாலையில் வனத் துறைக்குச் சொந்தமான பகுதியில் சீரமைப்புப் பணிகள் மேற்கொள்ள அனுமதி வழங்க வேண்டும்.

மாவட்ட இதர சாலையாகப் பராமரிக்கப்படும் சாலையான மங்கலம்பேட்டை– எலவனாசூர்கோட்டை செல்லும் சாலையில் வனத் துறைக்குச் சொந்தமான பகுதியில் சீரமைப்புப் பணிகள் மேற்கொள்ள அனுமதி வழங்க வேண்டும்.

மாவட்ட இதர சாலையாகப் பராமரிக்கப்படும் சாலையான கூரானூர் சாலையில் வனத் துறைக்குச் சொந்தமான பகுதியில் சீரமைப்புப் பணிகள் மேற்கொள்ள அனுமதி வழங்க வேண்டும்.

மாவட்ட இதர சாலையாகப் பராமரிக்கப்படும் சாலையான ஆனத்தூர்–குச்சிப்பாளையம்–மேல்தணியாலம்பட்டு சாலையில் வனத் துறைக்குச் சொந்தமான பகுதியில் சீரமைப்பு பணிகள் மேற்கொள்ள அனுமதி வழங்க வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ் அவர்கள்.

திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தங்களுக்கு என்னுடைய வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு அமைச்சர் பெருமக்களுக்கும் என்னுடைய வணக்கத்தையும், வாழ்த்துகளையும் தெரிவித்துக்கொள்கிறேன். நலிவடைந்த கூட்டுறவு வீட்டு வசதிச் சங்கங்களுக்கு புதிய கடன்கள் வழங்கி, நிதி ஆதாரத்தை ஏற்படுத்தி, வீட்டு வசதிச் சங்கங்களைப் புனரமைக்க வேண்டுகிறேன். தங்களுடைய சொத்து ஆதாரங்களை வைத்து கடன் பெற்றிருக்கிற ஏராளமான சங்கத்தினர் அந்தக் கடனைத் திருப்பிச் செலுத்த முடியாத நிலையைப் பார்க்கிறேன். அவர்களுக்கு வட்டியைத் தள்ளுபடி செய்து, அவர்களுடைய அசல் தொகையைப் பெற்று அவர்களுடைய சொத்து ஆதாரங்களைக் கொடுக்க தாழ்மையாகக் கேட்கிறேன். 60 மாதங்களுக்கும் மேலாக சம்பளமின்றி பணியாற்றும் வீட்டு வசதிச் சங்கப் பணியாளர்களுக்கு மாற்றுப் பணி வழங்கி, பணிப் பாதுகாப்பு வழங்க வேண்டுகின்றேன். சம்பளமின்றி பணியாற்றிவரும் வீட்டு வசதிச் சங்கப் பணியாளர்களுக்கு நிலுவைச் சம்பளம் வழங்க வேண்டுகின்றேன்.

பிற்பகல் 6–35

மிக முக்கியமாக, என்னுடைய குளச்சல் சட்டப்பேரவைத் தொகுதிக்குட்பட்ட ஆளூர் பேரூராட்சியில் 3 வார்டுகள் இருக்கின்றன. சென்ற மாநகராட்சி தேர்தலில், மாநகராட்சிக்குட்பட்ட, 1, 2, 3 வார்டுகளில், 3–வது வார்டில் முழுவதும் அனுமதிக்கப்படாத வீட்டு மனைகள் உள்ளன. அதனால், அதில் அரசு எந்தவிதமான fund–ம் போடவில்லை. MLA fund–ம் ஏற்றுக்கொள்ளப்படவில்லை. அப்படிப்பட்ட மோசமான சூழ்நிலை இருக்கின்றது. அந்த மக்கள் வரி கட்டுகிறார்கள். அதனைச் சரிசெய்ய வேண்டுகிறேன்.

மிக முக்கியமாக, ஒருவருக்கு 25 சென்ட் இருக்கிறது. தனது பிள்ளைக்கு கல்யாணம் செய்வதற்காக 5 சென்ட்டை விற்றுவிட்டார். இன்னொரு 5 சென்ட்டை விற்க வேண்டும். ஆனால், Registrar அவர்கள், Register செய்ய மாட்டேன் என்று சொல்கிறார்; ஏன் இப்படிப்பட்ட நிலைமை இருக்கிறது, இப்படி மக்கள் கஷ்டப்படுவதிலிருந்து ஒரு மாற்றம் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

Apartments-ல் 20% Economically weaker section-க்கு ஒதுக்க வேண்டுமென்று இருக்கிறது, கொடுக்கிறீர்கள். அதேநேரத்தில், they have failed to get their benefits. அவர்களுக்கு library, நீச்சல்குளத்தில் பங்குகொள்வது, விளையாட்டுத்தளத்தில் விளையாடுவது, ஆக இப்படிப்பட்ட காரியங்களில் அவர்களை பங்குகொள்ள வைக்கவில்லை. அவர்களுக்கு ஒரு setback உருவாக்குவது போன்ற நிலையை மாற்றி நீதியை அவர்களுக்கும் வழங்க வேண்டுகிறேன்.

மிக முக்கியமாக உங்களுடைய கவனத்திற்கு நான் கொண்டுவருவது, இந்த அரசு, மாண்புமிகு அரசு, மதிப்பிற்குரிய அரசு, மக்களால் ஏற்றுக்கொள்ளக்கூடிய அரசு, நாங்களும் உங்களோடு இருக்கக்கூடிய அரசு, பள்ளிக் கல்வித் துறையில் என்ன ஏற்படவேண்டுமென்றால்—ஏற்கெனவே தனியார் பள்ளிகள், கிறிஸ்தவ பள்ளிகள் minority institutions, அரசு உதவிபெறும் பள்ளிகள் இவையெல்லாம் செயல்படுகின்றன. இது கன்னியாகுமரி மாவட்டத்தைப் பொறுத்தது மட்டுமல்ல, தமிழ்நாட்டில் சிறுபான்மை மக்களுடைய ஆட்சிமை, பணிகள் சிறந்திருப்பதை யாரும் மாற்ற முடியாது. அவர்களுக்கெல்லாம் benefits கொடுக்கவில்லை. நம்முடைய தமிழ் வழி பள்ளிக்கூடத்தில், அரசு பள்ளிக்கூடத்தில் அத்தனை benefits கொடுக்கிறோம். அவர்களுக்கு அப்படிப்பட்ட ஒரு குறை இருக்கிறது. அத்தனை மக்களும் திராவிட முன்னேற்றக் கழக அரசுக் கூட்டணிக்குத்தான் ஆதரவு கொடுக்கின்ற மக்கள் என்பதை நான் பதிவு செய்கின்றேன்.

இன்றைக்கு அவர்களுடைய அதிகாரங்கள் பறிக்கப்பட்டிருக்கக்கூடிய சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. அதை உங்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். சம்பந்தப்பட்ட மக்கள், அதிகாரிகள், school வைத்திருக்கிறவர்கள், Bishops அத்தனை பேரும் குறை சொல்கிறார்கள். அதனால், அதைச் சரி

செய்ய வேண்டுமென்று உங்களுடைய கவனத்திற்கு கொண்டு வருகிறேன். மிக முக்கியமாக. . .

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திராவிட முன்னேற்றக் கழகம் எப்போதெல்லாம் ஆட்சிக்கு வருகின்றதோ, அப்போதெல்லாம் சிறுபான்மையினரின் அரணாக விளங்கியது என்பதை (மேசையைத் தட்டும் ஒலி) பல்வேறு காலகட்டங்களில் நான் சொல்ல முடியும். இங்கே நம்முடைய மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் சொன்னதுபோல, யார்யாரெல்லாம் சொன்னார்களோ—நாங்கள் கிட்டத்தட்ட 3 level of meeting முடித்துவிட்டோம். இந்த மாதம் கடைசியில் CEOs meeting-ஐ வைத்திருக்கிறோம்—அதில் இவர்கள் அனைவரையும் represent செய்து, இவர்களையும் உட்கார வைத்துத்தான் instructions-ஐக் கொடுக்கப்போகிறோம். அதனால், கவலைப்பட வேண்டாம். தொடர்ந்து நம்முடைய மாண்புமிகு தமிழ்நாட்டின் முதலமைச்சர் அவர்கள் இதில் அதிகம் கவனம் செலுத்த வேண்டும் என்ற அறிவுரையையும் எங்களுக்குக் கொடுத்திருக்கிறார்கள். இந்த மாதத்தில் அதற்கான ஒரு நல்ல solution கண்டிப்பாகக் கிடைக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ் அவர்கள்.

திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: நன்றி. அந்தப் பிரச்சினைக்கு ஒரு முடிவுகட்டினால் நல்லது என்பதால் நான் வரவேற்கிறேன். மிக முக்கியமாக, இந்த சமத்துவ, மதிப்பிற்குரிய அவையில் நான் பேசுவது, எங்கள் மாவட்டத்தில் தனியார் காடு என்று Rubber estates இருக்கின்றன. More than 1 இலட்சம் ஏக்கர் இருக்கும். தனியார் காடு என்ற ஒரு புதிய சட்டத்தை மத்திய அரசு கொண்டு வரவேண்டும். மத்திய அரசு கேரளாவிற்கும் கொடுக்கிறது, எல்லா State-க்கும் கொடுக்கிறது, அந்த வனப் பகுதிகளை விரிவுபடுத்தவேண்டுமென்று. ஆனால், கேரளாவில் அந்த இடத்தில் Rubber, வாழை பயிர் செய்கிறார்கள், நல்லமிளகு பயிர் செய்கிறார்கள், ஜாதிக்காய் பயிர் செய்கிறார்கள். பல்வேறு வகையான பயிர்கள் இருக்கின்றன. 100 ஆண்டுகளுக்குமேல்

2023 ஏப்ரல் 13] [திரு. ஜே.ஜி. பிரின்ஸ்]

அந்த சொத்தை வைத்திருக்கின்றவர்கள் விற்கலாம், வாங்கலாம். அந்த சொத்தை அனுபவிக்கலாம். புதிய planting செய்யலாம். சமீபத்தில் 10 ஆண்டுகளுக்கு முன்பாக தனியார் காடுகளில் இந்தப் பிரச்சினை ஏற்பட்டபோது, கேரளாவில் அந்தச் சட்டத்தை நீக்கிவிட்டார்கள். Yes, we will let you enjoy. 'நீங்கள் பயிரிடுங்கள்' என்று சொல்கிறார்கள். ஆனால், தமிழகத்தில் இந்தப் பிரச்சினை இருக்கிறது. குறிப்பாக தனியார் காடு பகுதிகள் பல்வேறு இடங்களில், ஊட்டியில், கன்னியாகுமரி மாவட்டத்தில் இருக்கின்றன.

பிற்பகல் 6–40

கடந்த முறை நான் இதுகுறித்துப் பேசினேன். அரசு அதற்காக Committee அமைத்தது. அந்த கமிட்டி எப்போதாவதுதான் கூடுகிறது. விவசாயிகள் சொத்தை விற்க முடியாத நிலை இருக்கிறது. அவர்களின் பிள்ளைகளுக்குத் திருமணம் செய்ய முடியவில்லை; நோய் வாய்ப்பட்டால், சொத்தை விற்று உயிரைக் காப்பாற்ற முடியவில்லை. இப்படிப்பட்ட ஒரு மோசமான நிலை ஏற்பட்டிருக்கிறது. இந்த நிலையிலிருந்து அவர்களைப் பாதுகாப்பதற்கு என்ன செய்யப் போகிறீர்கள் என்பதை மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்களிடம் கேட்கிறேன். இதை ஏன் சொல்கிறேன் என்றால், ஏழையெளிய மக்கள் கஷ்டப்படுகிறார்கள். அவர்கள் அனுபவித்து வரும் சொத்து, பட்டா சொத்து. சுமார் 75 ஆயிரம் விவசாயிகள் இருக்கிறார்கள். எனவே, அந்த மக்களை, அவர்களுடைய விவசாயப் பயிர்களை பாதுகாக்க வேண்டும். அதில் பணக்காரர்களும் இருக்கிறார்கள், பாவப்பட்டவர்களும் இருக்கிறார்கள், 5 சென்ட் நிலம் மட்டுமே உள்ளவர்களும் இருக்கிறார்கள். பணக்காரர்கள் Court-க்குச் சென்று stay order வாங்கிவிடுவதால், அவர்கள் பிரச்சினையில்லாமல் இருக்கிறார்கள். 5 ஏக்கர், 10 ஏக்கர் நிலத்தை வைத்திருக்கும் ஏழையெளிய மக்கள் கஷ்டப்படுகிறார்கள். அந்தச் சொத்தை விற்கவும் முடிவதில்லை, வாங்கவும் முடிவதில்லை. ஆட்சியர் தலைமையிலான 5 பேர் கொண்ட குழு கூடுகிறது. ஆனால், எப்போது குழு கூடும், அதில் சரியான தீர்ப்பு கொடுப்பார்களா என்று தெரிவதில்லை. இது மிகவும் கஷ்டமாக இருக்கிறது. எனவே, இதனை நீங்கள் கவனத்தில்கொண்டு, விவசாயப் பெருங்குடி மக்களைப் பாதுகாக்கின்ற வகையில் நடவடிக்கைகள் எடுக்க வேண்டும். அந்த 75 ஆயிரம் பேரில், 50 ஆயிரத்திற்கும் மேற்பட்டவர்கள் பால் வெட்டும் தொழில் செய்பவர்கள். அதுசம்பந்தமான பணிகளைச்

செய்யக்கூடிய தொழிலாளர்கள் 10 ஆயிரம் பேர் இருக்கிறார்கள். தொழிலாளிகளும் பாதிக்கப்படுகிறார்கள். ஆகவே, அவர்களைப் பாதுகாப்பதற்கு நீங்கள் முன்வர வேண்டும்; நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மீண்டும் Eco-Sensitive Zone சம்பந்தப்பட்ட Act கொண்டு வந்திருக்கிறார்கள். Town-ல் பெரிய பெரிய Hotels இருக்கின்றன, பெரிய பெரிய Lodges இருக்கின்றன, பெரிய பெரிய buildings இருக்கின்றன. இப்படிப்பட்ட இடங்களையெல்லாம் Eco-Sensitive Zone என்று சொன்னால், அங்கு வாழவே முடியாது. எங்கள் மாவட்டம் ஒரு சிறிய மாவட்டம். எங்கள் மாவட்டத்தின் பிரச்சினைகளை எடுத்து வைக்கிறோம். அங்கே ஆட்சியரிடம் சென்று பேசினால் இதற்கு தீர்வு வராது. இந்த அரசு, இந்தப் பிரச்சினையைத் தீர்ப்பதற்குரிய அரசு. மாண்புமிகு அமைச்சர் அவர்கள், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், இதற்கென்று ஒரு குழுவை அமைத்து கலந்தாலோசித்து, இந்தப் பிரச்சினைக்கு நிச்சயமாக ஒரு தீர்வு காண வேண்டும். Estate மக்களைப் பாதுகாக்க வேண்டும். விவசாய மக்களைப் பாதுகாக்க வேண்டும் என்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்கிறேன்.

எங்களுடைய மாவட்டத்தில் 42 மீனவ கிராமங்கள் இருக்கின்றன. அந்த 42 மீனவக் கிராமங்களிலிருந்து ஒருவர் கடலுக்குச் சென்றுவிட்ட பின்னர் ஒரு tempest வந்துவிட்டது, ஒரு பெரிய புயல் காற்று வந்து விட்டது என்றால், அவர் திரும்பி வருவாரா என்றால், அதற்கு வழியில்லை. அவர்களைப் பாதுகாப்பதற்கு ஹெலிகாப்டர் தளம் தாருங்கள் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்கிறேன். இதுகுறித்து பலமுறை நான் பேசியிருக்கிறேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தற்போது இங்கு இல்லை. ஆனால், 'மத்திய அரசுக்குக் கடிதம் எழுதியிருக்கிறோம், permission கிடைத்த பிறகு செய்கிறோம்' என்று சொல்வார்கள். அந்த மீனவ மக்களுடைய உயிர்களைப் பாதுகாப்பதற்கு, இக்கட்டான நிலையில் இருக்கக்கூடிய அந்த மக்களைப் பாதுகாப்பதற்கு நீங்கள் உடனடியாக ஹெலிகாப்டர் தளம் அமைத்துத் தர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மூத்த அமைச்சரான மாண்புமிகு அவை முன்னவரிடம் இதைக் கேட்கிறேன். இது சம்பந்தமாக கவன ஈர்ப்புத் தீர்மானத்திலும் நான் பேசியிருக்கிறேன். என்னுடைய குளச்சல் தொகுதி, குறுந்தங்கோடு ஒன்றியத்தில் இரட்டைகரை Channel,

2023 ஏப்ரல் 13] [திரு. ஜே.ஜி. பிரின்ஸ்]

திக்கனங்கோடு Channel, சேரமங்கலம் Channel, நெய்யூர் Channel, இலட்சுமிபுரம் Channel, இரணியல் Channel என்று பல Channels இருக்கின்றன. பேச்சிப்பாறை அணையில் ஏராளமாக தண்ணீர் இருக்கிறது, பெருஞ்சாணி அணையிலும் தண்ணீர் இருக்கிறது. ஆனால், 4 மாதங்களாக தண்ணீர் திறந்து விடவேயில்லை. இதனால், விவசாயத்தை நம்பியிருக்கக்கூடிய இலட்சக்கணக்கான மக்கள், தங்களது பயிர்களைச் சரியாகப் பாதுகாக்க முடியவில்லை. எனவே, மாவட்ட ஆட்சியரை உத்தரவிடச் செய்து தண்ணீரைத் திறந்துவிட வழி செய்வீர்களா என்று தங்களைக் கேட்டுக்கொள்கிறேன். ஏற்கெனவே இதுகுறித்து கவன ஈர்ப்புத் தீர்மானத்திலும் பேசியிருக்கிறேன்.

மேலும், அன்பாக நான் ஒன்றைக் கேட்கிறேன். MLAs–க்கு வீடு கட்டுவதற்கு 1 ground இடம் தருவீர்களா என்று கேட்கிறேன். ஐயா தலைவர் கலைஞர் அவர்கள் சொன்னார்கள், அம்மையார் அவர்களும் சொன்னார்கள், திரு. ஓ.பி.எஸ். அவர்களும் சொன்னார்கள். எனவே, MLAs–க்கு 1 ground இடம் கொடுப்பீர்களா, அதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று தங்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மிக முக்கியமாக, நான் ஏற்கெனவே சொன்ன விஷயம்தான். பட்டா நிலங்களில் ஆலயம் கட்டுவதற்கு உள்ள தடைகளை நீங்கள் நீக்கித் தர வேண்டுமென்று மீண்டும் கேட்கிறேன். இந்தப் பிரச்சினைக்கு நல்ல முடிவு தர வேண்டுமென்று மீண்டும் கேட்கிறேன்.

ஒரேயொரு point உடன் முடித்துவிடுகிறேன். என்னுடைய தொகுதியில் திங்கள் நகர் பேருராட்சி, 6–வது வார்டு, ஆரோக்கியபுரத்தில் 45 பேர் இருக்கிறார்கள். 25 families இருக்கின்றன. அவர்களுக்கு சரியான வீடு இல்லை, ஓரமாக வசிக்கிறார்கள். அரசு புறம்போக்கு நிலம் இருக்கிறது. அவர்களுக்கு ஏதேனும் ஒரு திட்டத்தின்கீழ் அங்கு வீடு கட்டிக் கொடுப்பதற்கு முன்வர வேண்டும் என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். (மணியடிக்கப்பெற்றது) ஐயா, நான் பேசிக்கொண்டிருக்கும்போதே இவ்வாறு செய்கிறீர்களே ! மிக முக்கியமான பல்வேறு பிரச்சினைகளை நான் சொல்ல வேண்டும். ஆகவே. . .

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. ஸ்டாலின் குமார் அவர்கள். (குறுக்கீடு) அடுத்த வாய்ப்பில் பேசிக்கொள்ளலாம். (குறுக்கீடு) சொல்லுங்கள். ஒரேயொரு நிமிடத்தில் சொல்லுங்கள். (குறுக்கீடு) கோரிக்கைகளைப் பதிவு செய்துவிடுகிறேன்.

பிற்பகல் 6–45

திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: மிகவும் சந்தோஷம். நன்றி. இரணியல்–காட்டாத்துறை கூட்டுக் குடிநீர்த் திட்டம் ஐந்தாண்டுகளுக்கு முன்னால், முன்னாள் முதல்வர் அவர்களால் கொண்டுவரப்பட்டது. திட்ட மதிப்பீடு 200 கோடி ரூபாய்க்கு அதிகமாக வருகிறது. பணிகள் முடிந்துவிட்டன. ஆனால், சாலைகளெல்லாம் damage ஆகியிருக்கின்றன, pipe எல்லாம் மாற்ற வேண்டுமென்று சத்தம் போட்டு கேட்கிறோம். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அந்தத் திட்டப் பணிகளெல்லாம் முடிந்தபிறகு தண்ணீரையாவது திறந்துவிட வேண்டுமென்று அன்பாகக் கேட்கிறேன். 15 பஞ்சாயத்துகளுக்கு மிச்சப்பட்டு போகட்டும். இரணியல்–காட்டாத்துறை கூட்டுக் குடிநீர்த் திட்டத்தைச் செயல்படுத்துவதற்குரிய வழியைச் செய்வீர்களா என கேட்க விரும்புகிறேன். உடனடியாக அந்தப் பணிகளைச் செய்திட அன்பாக வேண்டுகிறேன்.

தற்போது தமிழ்நாடு முழுவதும், கால்நடை பராமரிப்புத் துறையில் 10A(1) முறையில் கால்நடை உதவி மருத்துவர்களாக 12 ஆண்டுகளாகப் பணிபுரிகிறார்கள். நான் சட்டம் படித்தவன். நான் சொல்கிறேன். ஒரு உத்தியோகத்திற்குப் போக வேண்டுமென்று சொன்னால், 'இன்னும் நீ training போய்விட்டு வா' என்று சொல்வதுபோன்று இருக்கிறது. அவர்களை, 'இன்னும் நீங்கள் examination எழுதுங்கள்' என்று சொல்வதுபோன்று இருக்கிறது. இதுபோன்று, Teachers Eligibility Test (TET). Once they pass the examination, அவர்கள் பணிக்குப் போனபிறகு அவர்களை தொந்தரவு செய்யக்கூடாது. இதை மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்களிடம் கொடுக்கிறேன். அதேபோல, Nature of Justice-க்கு எதிராகச் செயல்படுகிறபோது, அந்தக் கஷ்டத்தை எல்லாம் நாம் அனுபவிக்க வேண்டியிருக்கும். அதற்கு நீங்கள் தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று உங்களைக் கேட்கிறேன். (மணியடிக்கப்பெற்றது)

2023 ஏப்ரல் 13] [திரு. ஜே.ஜி. பிரின்ஸ்]

முக்கியமாக ஒரேயொரு point. *குளச்சல் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட கடியப்பட்டணம் கிராமத்தைச் சார்ந்த 2 குடும்பங்களைச் சேர்ந்த சகாயசெல்சோ மற்றும் அந்தோணி ஜார்ஜ் ஆகிய இருவரும் பக்ரைன் நாட்டிற்கு மீன்பிடிக்கச் சென்றார்கள். கடந்த 2022 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 17 ஆம் தேதி போனார்கள்; திரும்ப வரவில்லை. அவர்களுடைய உறவினர்கள் என்னிடம் வந்து, அவர்கள் எப்போது திரும்ப வருவார்களென்று கேட்டார்கள்.* I feel that, they are no more. We have to give compensation and save the family. *அவர்கள் குடும்பத்தைப் பாதுகாக்க வேண்டிய பொறுப்பு அரசுக்கு இருக்கிறது. அதை நான் அரசின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். இன்னும் கன்னியாகுமரி மாவட்டத்தில் பல்வேறு பிரச்சினைகள் இருக்கின்றன. அவற்றையெல்லாம் சொல்வதற்கு இன்னும் நிறைய நேரம் ஆகும்; தவறாக நினைக்காதீர்கள். ஆகவே, உங்களுக்கு என் அன்பான வணக்கத்தையும், வாய்ப்புக்கு நன்றியையும் சொல்லி, அமைகிறேன். நன்றி, வணக்கம்.*

தொகுதிக் கோரிக்கைகள்:

ரீத்தாபுரம் மற்றும் வாழவச்சகோஷ்டம் பேரூராட்சிகளில் வணிக வளாகம் அமைக்க வேண்டும்.

குளச்சல் மீன்பிடி துறைமுகத்திற்கு இந்த ஆண்டே நிதி ஒதுக்கி பணிகளைத் துவக்க வேண்டும்.

குளச்சல் தொகுதிக்குட்பட்ட வாணியக்குடியில் புதிய மீன்பிடி துறைமுகம் அமைக்கும் பணிகளை இந்த ஆண்டே நிதி ஒதுக்கித் தொடங்க வேண்டும்.

குளச்சல் நகராட்சிக்குட்பட்ட வெள்ளியாக்குளத்தைத் தூர்வாரி குடிநீர் விநியோகம் செய்ய வேண்டும்.

திங்கள் நகர் பேரூராட்சி அடைவியார்குளம் மற்றும் தேவியான்குளம், கல்லுக்கட்டி குளங்களைத் தூர்வாரி, குடிநீர்த் திட்டம் ஏற்படுத்தி, பக்கச் சுவர் அமைக்க நிதியொதுக்க வேண்டும்.

திங்கள் நகர் பேரூராட்சிக்குட்பட்ட மார்ஷல் நேசமணி பூங்காவில் குழந்தைகளுக்கான விளையாட்டு உபகரணங்கள் வழங்கி, பொதுமக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வந்து, அங்குள்ள நூலகத்திற்கு இணைப்புக் கட்டடம் அமைக்க நிதி ஒதுக்க வேண்டும்.

குளச்சல் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட காட்டாத்துறையில் ஒரு புதிய காவல் நிலையம் அமைக்க நிதி ஒதுக்க வேண்டும்.

திங்கள் நகர் பேரூராட்சிக்குட்பட்ட பறையம்விளை ஆர்ச் முதல் பட்டரிவிளை மிக்கேல் அத்தூதர் குருசடி வரை உள்ள சானல் கரையின் இரு பக்கமும் பக்கச் சுவர் அமைத்து, சானலின் அடிப்பகுதியில் கான்கிரீட் தரை அமைக்க வேண்டும்.

திங்கள் நகர் பேரூராட்சிக்குட்பட்ட ஏமான்குளத்தை தூர் வாரி அடி மடையைச் சரி செய்து பக்கச் சுவர் அமைக்கவும், பட்டரிவிளை நாவல்குளம் முதல் பூத்திரகுளம் வரை மண் சாலையைச் சரி செய்து கான்கிரீட் சாலை அமைக்கவும் நிதி ஒதுக்க வேண்டும்.

அம்மாண்டிவிளை Johns College சாலையைச் செப்பனிடவும் நிதியொதுக்க வேண்டும்.

வெள்ளிமலை பேரூராட்சி, வள்ளியாறு பாலாற்றின் கரையில் தடுப்பணை கட்டி கூட்டுக் குடிநீர்த் திட்டம் ஏற்படுத்தவும், பாலாற்றங்கரையில் பாலம் அமைக்கவும் நிதி ஒதுக்க வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. ஸ்டாலின் குமார் அவர்கள்.

திரு. செ. ஸ்டாலின் குமார்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அம்பேத்கர், பெரியார் ஆகியோரின் கருத்துகள் அதிகாரம் பெற, இயக்கம் கண்ட பேரறிஞர் அண்ணா அவர்களுக்கும், பேரறிஞர் அண்ணாவின் கொள்கை வீரியம் பன்மடங்கு அதிகம் பெற்ற முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களுக்கும், பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞரின் சரிவிகித கலவை, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும், பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர், மாண்புமிகு முதலமைச்சர் ஆகியோர் முன்னெடுக்கும் சமூக நீதி, சமத்துவ அரசியலை சாதுர்யமாக முன்னெடுத்து, வருங்காலத்தை 'Safe' ஆக்கும் சேப்பாக்கம் நாயகர் மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்களுக்கும், (மேசையைத் தட்டும் ஒலி) திருச்சி மாவட்ட மக்களின் அன்பைப் பெற்றிருக்கும் மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்களுக்கும், ஏனைய மாண்புமிகு அமைச்சர் பெருமக்களுக்கும், மாண்புமிகு சட்டமன்ற

2023 ஏப்ரல் 13] [திரு. செ. ஸ்டாலின் குமார்]

உறுப்பினர்கள் அனைவருக்கும், துறையூர் தொகுதி மக்களுக்கும் எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

2023–2024 ஆம் ஆண்டு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புர வளர்ச்சித் துறை மானியக் கோரிக்கையில் பேசும் வாய்ப்பை வழங்கிய மாண்புமிகு அரசுக் கொறடா அவர்களுக்கும் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

துறையூர் நகர மக்களின் நீண்டகாலக் கோரிக்கையான குடிநீர்த் தேவையைத் தீர்ப்பதற்கு துறையூர் நகராட்சிக்கு என தனியே காவிரி கூட்டுக் குடிநீர்த் திட்டத்திற்கு ரூ.108.90 கோடி நிதி ஒதுக்கியதற்கும், புதுப்பட்டி தடுப்பணை, தாழையாத்து ஓடை, துறையூர்–பெரம்பலூர் புறவழிச் சாலையிலிருந்து ஆத்தூர்–துறையூர் இணைக்கும் புறவழிச் சாலையை அறிவித்ததற்கும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு நகர்ப்புர வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் அவர்களுக்கும் துறையூர் தொகுதி மக்களின் சார்பாக மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாவீரன் வெண்ணி காலாடி அவர்களுக்கு ரூ.50 இலட்சம் மதிப்பில் திருவுருவச் சிலை அமைக்கப்படும் என்று அறிவித்தமைக்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். சமூக நீதி போராளி, அய்யா இமானுவேல் சேகரன் அவர்களுக்கு மணிமண்டபம் அமைத்துக் கொடுத்து, அவரது நினைவு நாளான செப்டம்பர் 11–ஐ அரசு விழாவாக அறிவிக்க வேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

'ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காண்போம்' என்ற குறிக்கோளுடன் தமிழ்நாட்டில் வாழும் நகர்ப்புர ஏழைக் குடும்பங்களுக்கு அனைத்து வசதிகளுடன்கூடிய வாழ்விட மேம்பாட்டினை ஏற்படுத்த மாண்புமிகு முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களால் தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியம் தொடங்கப்பட்டது. தற்போது தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியம் என அரசால் பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளது. நிலையான மேம்பாடு இலக்கு–II Sustainable Development Goals–ன்கீழ் 2030 ஆம் ஆண்டிற்குள் அனைவரும் போதுமான, பாதுகாப்பான, திறனுக்கேற்ற வீட்டு வசதி மற்றும்

அடிப்படை வசதிகள் பெறுவதை உறுதி செய்தல், நகர்ப்புர குடிசைப் பகுதிகள் மேம்படுத்துதலை இலக்காகக் கொண்டு, இந்த இலக்கை அடைய தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியம் செயல்பட்டு வருகிறது. நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியத்தால் செயல்படுத்தப்பட்டு வரும் வீட்டு வசதித் திட்டத்தில் பட்டியலின, பழங்குடியினத்தை சார்ந்த நகர்ப்புர ஏழைக் குடும்பங்கள் பயனடைய *2022–2023* ஆம் ஆண்டிற்கான SCSP சிறப்புத் திட்டத்தில் ரூ.*887.60* கோடியும், TSP திட்டத்தில் ரூ.*77.49* கோடியும் முழுவதுமாகச் செலவு செய்யப்பட்டுள்ளது சிறப்பான செய்தியாக இருக்கின்றது.

பிற்பகல் *6–50*

நகர்ப்புர, புறநகர் பகுதிகளில் தகுதியான நிலங்களைக் கண்டறிந்து, அவற்றை மேம்படுத்தி, அனைத்துப் பிரிவினருக்கும், குடிசைவாழ் மக்கள் மறுவாழ்விற்கும், அரசு ஊழியர்களுக்கும் வீடுகள் வழங்குவதே வீட்டு வசதி வாரியத்தின் நோக்கமாகும். அதன்படி, வீட்டு வசதித் திட்டம், சுயநிதித் திட்டம், மறுவாழ்வுத் திட்டம் போன்ற எண்ணற்ற திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது. *2023–2024* ஆம் ஆண்டு தமிழ்நாடு அரசுப் பணியாளர்களுக்கு வழங்கப்படும் வீடுகட்டும் முன்பணம் ரூ.*40* இலட்சத்திலிருந்து ரூ.*50* இலட்சமாக உயர்த்தி வழங்கப்பட்டுள்ளது. இதற்கென இந்த நிதியாண்டில் ரூ.*210* கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, துறையூர், குட்டக்கரையில் உள்ள தமிழ்நாடு அரசு ஊழியர் வாடகைக் குடியிருப்பு *60* வீடுகள் கொண்ட குடியிருப்பு பகுதியாக உள்ளது. இந்தக் குடியிருப்பு மிகவும் பழமையான, குடியிருக்க முடியாத நிலையில் இருப்பதால், இந்தக் குடியிருப்புக்குப் பதிலாக புதிய அடுக்குமாடி குடியிருப்பு அமைத்துத் தருமாறு மாண்புமிகு அமைச்சர் அவர்களை மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன்.

தமிழகத்திலுள்ள பழைய குடியிருப்புகளில் மராமத்துப் பணிகள் செய்யவும், பாதிக்கப்பட்ட குடியிருப்புகளை அகற்றிவிட்டு புதிய குடியிருப்புகளை அமைத்துத் தருமாறு மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

கிராமங்களிலிருந்து வேலை தேடி நகர்ப்புரம் வரும் இளைஞர்களுக்கு வாடகை அடிப்படையில் குடியிருப்புகளை அமைத்துத் தருமாறு அரசைக் கேட்டுக்கொள்கிறேன்.

2023 ஏப்ரல் 13] *[திரு. செ. ஸ்டாலின் குமார்]*

தமிழ்நாட்டில் 18 இலட்சம் ஹெக்டேர் நிலம் தரிசாக உள்ள நிலையில், அவற்றில் சில இடங்களில் தொழில் நிறுவனம் நிறுவும் இடத்தின் அருகில் கிராமப்புற மக்களுக்கு குடியிருப்பு வசதி செய்து தருமாறு மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

நகர்ப்புரத்தில் அடுக்குமாடி குடியிருப்புகள் தனியார்மூலம் கட்டப்பட்டு வரும் நிலையில், அவற்றில் 10 சதவிகிதம் நடுத்தர, குறைந்த வருமானம் கொண்ட குழுக்களுக்கு ஒதுக்கீடு செய்ய நடவடிக்கை எடுக்குமாறு மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

20–10–2016–க்கு முன்பு அமைக்கப்பட்ட, அனுமதியற்ற மனைப் பிரிவுகளை வரன்முறைப்படுத்த உதவியாக ஆன்லைன் விண்ணப்ப இணையதளத்தை தினசரி உபயோகப்படுத்துவதற்கு ஏற்றவாறு வசதிகள் செய்து தர வேண்டுமாய் மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

கிராமப் பகுதிகளிலுள்ள நிலங்களுக்கு தொழில்நுட்ப அனுமதி பெறுவதற்கு, நகர்ப்புர பகுதி நிலங்களுக்கு உள்ள விதிகளே பின்பற்றப்பட்டு வருகின்றன. எனவே, கிராமப்புற பகுதிகளுக்கு விதிகளைத் தளர்த்தி ஒப்புதல் வழங்கினால், கிராமங்களும் விரைவில் வளர்ச்சி பெறும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, துறையூர் நகரின் மையப் பகுதியில் உள்ள சின்ன ஏரியில் கழிவுநீர் கலப்பதைத் தடுக்க, கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்கள் (STPS) அமைத்து, ஏரியைத் தூய்மைப்படுத்தி பசுமை நடைபாதை, படகு சவாரி அமைத்துத் தருமாறு மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் மற்றும் மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் ஆகியோரைக் கேட்டுக்கொள்கிறேன்.

துறையூர் நகர், பவுன்டுபெட்டியில் உள்ள துப்புரவுப் பணியாளர்கள் குடியிருப்புகள் பழமையான ஓட்டுக் கட்டடத்தில் இருப்பதால், அந்த ஓட்டுக் கட்டடத்தை அகற்றிவிட்டு புதிய கட்டடம் கட்டித் தருமாறு மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

துறையூர் தாலுகா அலுவலகத்திற்கு புதிய கட்டடம் கட்டித் தருமாறு மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

உப்பிலியாபுரம் ஒன்றியம், உப்பிலியாபுரம் பேரூராட்சி, பாலகிருஷ்ணம்பட்டி பேரூராட்சி ஆகிய பகுதிகளை இணைத்து, உப்பிலியாபுரத்தை தலைமையிடமாகக் கொண்டு புதிய தாலுகா அலுவலகத்தை அமைத்துத் தருமாறு மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

துறையூர் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்திற்குப் புதிய கட்டடம் கட்டித் தருமாறு மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

உப்பிலியாபுரம் ஒன்றியம், தளுகை பகுதியில் சமத்துவபுரம் இல்லாமல் இருப்பதால் அந்தப் பகுதிக்கு சமத்துவபுரம் அமைத்துத் தருவதற்காக, ஏற்கெனவே மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள்மூலம் கருத்துரு அனுப்பப்பட்டுள்ளது. எனவே, மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்களை உப்பிலியாபுரம் பகுதியில் சமத்துவபுரம் அமைத்துத் தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

என்னுடைய துறையூர் தொகுதி மக்களின் நீண்டநாள் கோரிக்கையான துறையூர் தொகுதியில் இருபாலர் பயிலும் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி அமைத்துத் தருமாறு மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். *(மணியடிக்கப்பெற்றது)*

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, துறையூர் நகரில் மாண்புமிகு முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களால் உருவாக்கப்பட்ட அரசு மகளிர் மேல்நிலைப் பள்ளியில் 1,200 மாணவிகள் பயின்று வருகின்றனர். மாணவிகள் பழமையான கட்டடத்தில் பயின்று வருவதால் இந்தப் பள்ளிக்கு புதிய கட்டடம் கட்டித் தருமாறு கேட்டுக்கொள்கிறேன். இந்தப் பள்ளி முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்கள் பெயரில் இயங்கி வந்தது. தற்போது ‘அரசு மகளிர் மேல்நிலைப் பள்ளி’ என்று பெயர் மாற்றம் செய்யப்பட்டிருக்கிறது. எனவே, உடனடியாக இந்தப் பள்ளிக்கு மீண்டும் ‘முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அரசு மகளிர் மேல்நிலைப் பள்ளி’ என்று பெயர் மாற்றம்

2023 ஏப்ரல் 13] [திரு. செ. ஸ்டாலின் குமார்]

செய்து தருமாறும் மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

உப்பிலியாபுரம் ஒன்றியம், எரகுடியில் இயங்காமல் உள்ள புறக்காவல் நிலையத்தை, காவல் நிலையமாக மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். பச்சமலை, கோம்பை, வண்ணாடு ஊராட்சிகளில் 35 கிராமங்களில் வாழும் மக்கள் 35 முதல் 45 கி.மீ. தொலைவிலுள்ள உப்பிலியாபுரம் ஒன்றியம், டாப்செங்காட்டுப்பட்டியிலுள்ள பச்சமலை பெரும் பல்நோக்கு கூட்டுறவுக் கடன் சங்கத்திற்கு பேருந்து வசதி இல்லாத நிலையில், தங்களது இரண்டு சக்கர வாகனங்களின்மூலம் மலையின் குறுக்குப் பகுதியில் நடந்து சென்றுதான் கடனைப் பெறக்கூடிய சூழல் இருப்பதால் மிகவும் சிரமப்படுகிறார்கள். எனவே, கோம்பை, வண்ணாடு ஊராட்சியின் மையப் பகுதியான மணலோடை கிராமத்தில் கூட்டுறவுக் கடன் சங்கம் அமைத்துத் தருமாறு மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 6–55

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

துறையூர் அரசு மருத்துவமனை புறநோயாளிகள் பிரிவு பழமையான கட்டடத்தில் இயங்கி வருகிறது. எனவே, புறநோயாளிகள் பிரிவிற்கு புதிய கட்டடம் அமைத்துக் கொடுக்குமாறு மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

உப்பிலியாபுரம் ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு புறநோயாளிகள் பிரிவு அமைத்துத் தருமாறு கேட்டுக்கொள்கிறேன். மேலும், தளுகை ஊராட்சி, முருங்கப்பட்டியில் துணை சுகாதார நிலையம் அமைத்துத் தருமாறும், பச்சபெருமாள்பட்டி, துறையூர் ஒன்றியம், மணலோடையில் 24 மணி நேரமும் இயங்கக்கூடிய அரசு ஆரம்ப சுகாதார நிலையம் அமைத்துத் தருமாறும் கேட்டுக்கொள்கிறேன்.

துறையூர் தொகுதியிலுள்ள பச்சமலை இயற்கை எழில் சூழ்ந்த சுற்றுலாவுக்கு உகந்த இடமாக உள்ளது. இங்கு கோரையாறு, மங்களம் நீர்வீழ்ச்சிகள் அமைந்துள்ளன. எனவே, சுற்றுலாவை மேம்படுத்தினால், மலைவாழ் மக்களின் பொருளாதாரம் மேம்படும். இந்தப் பகுதிகளை பாதுகாப்பாகப் பயன்படுத்த

நிதி ஒதுக்கித் தருமாறு மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

மேலும், எனது தொகுதிக் கோரிக்கையை இந்த அவையில் படித்ததாகப் பதிவு செய்து கொள்ளுமாறு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். நன்றி, வணக்கம்.

தொகுதிக் கோரிக்கை:

கீரம்பூர்–கோம்பைபுதூர் கிராமத்தை இணைக்கும் பாலத்தையும், V.A. சமுத்திரம்–கருப்பம்பட்டி பகுதியை இணைக்கும் பாலத்தையும், கோட்டாத்தூர்–களத்தூர் பகுதியை இணைக்கும் பாலத்தையும் கட்டித் தர வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. முருகேசன் அவர்கள்.

திரு. செ. முருகேசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வணக்கம். முதல்வர்களுக்கெல்லாம் முதல்வராய், இந்தியாவிற்கே முன்மாதிரி முதல்வராய் இருந்த முத்தமிழறிஞர் தலைவர் கலைஞரின் நல்வழியில், தமிழ்நாட்டை வளர்ச்சிப் பாதையில் வழி நடத்திச் செல்லும் திராவிட மாடல் அரசின் தலைவர் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் தளபதி அவர்களுக்கு எனது பணிவான வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி) வருங்கால தமிழகத்தை வழி நடத்தவிருக்கும் எங்கள் தலைவர், மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்களுக்கும் எனது பணிவான வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி) மேலும், எங்கள் மாவட்டத்தைச் சேர்ந்த மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் அவர்களுக்கும், எங்கள் மாவட்ட பொறுப்பு அமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் அனைவருக்கும், இராமநாதபுரம் மாவட்ட கழகச் செயலாளர் அண்ணன் காதர்பாட்சா முத்துராமலிங்கம், எம்.எல்.ஏ., அவர்களுக்கும் மற்றும் சக சட்டமன்ற உறுப்பினர்கள் அனைவருக்கும் எனது வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மாமன்றத்தில் இரண்டாவது முறையாக 2023–2024 ஆம்

2023 ஏப்ரல் 13] [திரு. செ. முருகேசன்]

ஆண்டிற்கான வீட்டு வசதி மற்றும் நகரப்புர வளர்ச்சித் துறை பற்றிய மானியக் கோரிக்கையின்மீது பேச வாய்ப்பளித்த மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கும், மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களுக்கும், மாண்புமிகு அரசுக் கொறடா அவர்களுக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடும் நிதி நெருக்கடி மற்றும் கொரோனா பெருந்தொற்று கடுமையாக இருந்த காலத்தில் ஆட்சிக்கு வந்த நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், 'மாற்றம் தந்த மக்களுக்கு ஏற்றம் தர வேண்டும்' என்ற உயரிய நோக்கத்தில், பள்ளி, கல்லூரி, மாணவ, மாணவிகள், ஏழைப் பெண்கள், பொதுமக்கள் என கருவறை முதல் கல்லறை வரை அனைவரும் பயன்பெறும் வகையில் எண்ணற்ற மக்கள் நலத் திட்டங்களை தந்து, முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்களின் நல்லாசியுடன் அனைவரும் போற்றும் வகையில் நல்லாட்சி நடத்தி வருகின்றார்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது பரமக்குடி தொகுதிக்குத் தேவையான சில கோரிக்கைகளை நிறைவேற்றித் தர மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

இரவு 7-00

தென் மாவட்டங்களில் மிகவும் புகழ்பெற்ற சித்திரைத் திருவிழா மதுரைக்கு அடுத்தபடியாக பரமக்குடியில் உள்ள வைகை ஆற்றில் ஆண்டுதோறும் 10 நாட்கள் தொடர்ந்து மிகவும் சிறப்பாக நடைபெறும். இந்த ஆண்டு பல இலட்சக்கணக்கான மக்கள் கலந்துகொள்வார்கள். ஆனால், தற்போது பரமக்குடி வைகை ஆற்றில் கருவேல மரங்களும், முட்புதர்களும் அதிகமாக வளர்ந்து, இந்த மாதம் சித்திரைத் திருவிழா நடத்துவதற்கு மிகவும் சிரமமாக உள்ளது. எனவே, பொது மக்களின் நலன் கருதி பரமக்குடி வைகை ஆற்றை சுத்தம் செய்து தருமாறு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

எனது பரமக்குடி சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட செவ்வூர் மற்றும் அதைச் சுற்றியுள்ள இருபதுக்கும் மேற்பட்ட கிராம பொது மக்கள் வைகை ஆற்றில் தண்ணீர் வரும் காலங்களில், வைகை ஆற்றை கடக்க முயலும்போது, தண்ணீரில் அடித்து சென்று, பலர் பலியாகி உள்ளனர். அப்பகுதியிலிருந்து பள்ளி, கல்லூரிகளுக்குச்

செல்லும் மாணவ, மாணவிகளும் மற்றும் பொது மக்களும் சிரமப்படுகின்றனர். அதேபோல், அங்கு விளையும் நெல், வேளாண் பொருட்களை விற்பனைக்கு எடுத்துச் செல்வதற்கு விவசாயிகளும் சிரமப்படுகின்றனர். இதனால் சுமார் 30 கிலோ மீட்டர் தூரத்தில் உள்ள இராமநாதபுரம் வரை சென்று, சுற்றி வர வேண்டியுள்ளது. எனவே, அப்பகுதி பொது மக்களின் நலன் கருதி, செவ்வூர் கிராமத்தில் வைகை ஆற்றின் குறுக்கே உயர்மட்ட மேம்பாலம் அமைத்துத் தர மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கின்றேன்.

எனது பரமக்குடி சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட காட்டுப் பரமக்குடியில் இராமநாதபுரம் மாவட்டம் மற்றும் சிவகங்கை மாவட்டத்தை இணைக்கும் வகையில் பொது மக்களின் நலன் கருதி, காட்டுப் பரமக்குடி முத்தையா கோயில் அருகில் உயர்மட்ட மேம்பாலம் அமைத்துத் தருமாறு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கின்றேன்.

பரமக்குடி சட்டமன்றத் தொகுதி, பரமக்குடி நகரில் வசிக்கும் பொது மக்கள் குடிநீருக்காக சிரமப்படுகின்றனர். எனவே, பரமக்குடி நகரில் வசிக்கும் பொது மக்களின் குடிநீர் தட்டுப்பாட்டைப் போக்குவதற்கு, நகரின் மையப் பகுதியில் வைகை ஆற்றில் தண்ணீர் தேங்குவதற்கு தடுப்பணை ஒன்றை அமைத்துத் தருமாறு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கின்றேன்,

2022 ஆம் ஆண்டு வடகிழக்குப் பருவ மழை பற்றாக்குறையால் ஏற்பட்ட கடும் வறட்சியின் காரணமாக இராமநாதபுரம் மாவட்டத்தில் நெற்பயிர்கள் மற்றும் மக்காச்சோளம் பயிரிடப்பட்ட 98,354.7 ஹெக்டேர் நிலங்கள் கடுமையாகப் பாதிக்கப்பட்டன. இதனால் இப்பகுதி விவசாயிகளுக்கு பெரும் இழப்பு ஏற்பட்டுள்ளது. இதை அறிந்த மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், நில நிர்வாக ஆணையர் அவர்களையும், வேளாண் உற்பத்தி ஆணையர் மற்றும் வேளாண்மை-உழவர் நலத் துறை அரசு முதன்மைச் செயலாளர் அவர்களையும் இராமநாதபுரம் மாவட்டத்துக்கு அனுப்பி கள ஆய்வு செய்திட ஆணையிட்டார்கள். அரசு அதிகாரிகளும், பாதிக்கப்பட்ட நிலங்களை ஆய்வு செய்து, ஏழை விவசாயிகளுக்கு நிவாரணம் கிடைக்க உதவுவதாக உறுதி அளித்தனர். எனவே, பாதிக்கப்பட்ட ஏழை விவசாயிகளின் நலன் கருதி பேரிடர் மேலாண்மைத் துறைமூலம் ஒரு ஹெக்டேருக்கு வழங்கப்படும் நிவாரண தொகை ரூ.13,500/- போதுமானதாக

இல்லாததால், பாதிக்கப்பட்ட ஏழை விவசாயிகளைப் பாதுகாக்க, டெல்டா மாவட்டங்களில் வழங்கியதுபோல் இராமநாதபுரம் மாவட்டத்திலும் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு ஹெக்டேர் ஒன்றுக்கு ரூ.20,000 நிவாரணமாக வழங்கி உதவுமாறு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை கேட்டுக்கொள்கிறேன்.

இரவு 7-05

மாண்புமிகு பேரவைத் தலைவர்: போதுமே, மீதி இருப்பவற்றை என்னிடம் தாருங்கள். நீங்கள் அவையில் பேசியதாகப் பதிவு செய்து தருகிறேன். நன்றி சொல்லி, உரையை முடியுங்கள்.

திரு. செ. முருகேசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மீதியுள்ள கோரிக்கைகளை நான் உங்களிடம் கொடுத்துவிடுகிறேன். அவற்றை நான் அவையில் படித்ததாகக் கருதி, அவைக் குறிப்பில் பதிவு செய்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன். நன்றி, வணக்கம்.

தொகுதிக் கோரிக்கைகள்:

பரமக்குடியில் அரசு தொழில்நுட்பக் கல்லூரி அமைத்துத் தர வேண்டும்.

பரமக்குடியில் சுத்திகரிப்பு நிலையத்துடன்கூடிய சாயச் சாலை அமைத்துத் தர வேண்டும்.

இராமநாதபுரம் மாவட்டத்தில் ஒன்றிய அரசின் கட்டுப்பாட்டில் வரும் தேசிய கைத்தறி வளர்ச்சிக் கழகத்தின்மூலம் நெசவாளர்களுக்கு தமிழ்நாடு அரசே நேரடியாக நூல் கொள்முதல் செய்திட வேண்டும்.

பரமக்குடி தொகுதியில் அனைத்து வசதிகளுடன்கூடிய முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்களின் பெயரில் புதிய பேருந்து நிலையம் அமைத்துத் தர வேண்டும்.

பரமக்குடி நகராட்சியில் உள்ள தெளிச்சாத்தநல்லூர், S.அண்டக்குடி மற்றும் வேந்தோணி பரமக்குடி நகராட்சியுடன் இணைத்து பரமக்குடி நகராட்சியை விரிவுபடுத்தி, தரமுயர்த்தித் தர வேண்டும்.

[திரு. செ. முருகேசன்] [*2023 ஏப்ரல் 13*

பரமக்குடி நகராட்சி, 27-வது வார்டு, கருணாநிதிபுரத்தில் வசிக்கும் பொதுமக்களுக்கு பட்டா வழங்கிட வேண்டும்.

பரமக்குடி நகரில் வீட்டு வசதி வாரியம் சார்பில் அரசு அலுவலர் குடியிருப்புகளும், பொதுமக்கள் பயன்பெறும் வகையில் வீட்டு வசதி வாரியக் குடியிருப்புகளும் கட்டித் தர வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. S. ஜெயக்குமார் அவர்கள்.

திரு. S. ஜெயக்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'ஒன்றே குலம், ஒருவனே தேவன்' என்பது அண்ணாயிசம்; 'பசிப்பிணி போக்கி வறுமையை ஒழித்து, சமதர்ம சமுதாயம் உருவாக்குவோம்' என்பது எம்.ஜி.ஆர்.-யிசம்; *(மேசையைத் தட்டும் ஒலி)* 'மக்களால் நான், மக்களுக்காகவே நான்' என்பது அம்மாயிசம்; *(மேசையைத் தட்டும் ஒலி)* 'ஒளிரட்டும் தமிழகம், வளரட்டும் தமிழகம், வெற்றிநடை போடும் தமிழகமே!' என்பது எடப்பாடியாரிசம். *(மேசையைத் தட்டும் ஒலி)*

பொன்மனச் செம்மல், புரட்சித் தலைவர், பாரத ரத்னா டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்கள் துயில் கொள்ளும் திசை நோக்கி வணங்கி, இந்திய அரசியல் வரலாற்றிலே 234 தொகுதிகளிலும் இரட்டை இலை சின்னத்தில் போட்டியிட்டு, கூட்டணியில்லாமல் ஆட்சி அமைத்த பேராற்றல் மிக்க பெருந்தலைவி மாண்புமிகு இதய தெய்வம், புரட்சித் தலைவி அம்மா அவர்கள் துயில் கொள்ளும் திசை நோக்கி வணங்குகிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

குடிமராமத்து நாயகர், காவேரி காப்பாளர், விவசாயிகளின் வேந்தர், அத்திக்கடவு-அவினாசி திட்டம் தந்த நாயகன், மாணவர் சமுதாயத்தின் கனவு நாயகர், பசுமைப் புரட்சி நாயகர், புரட்சித் தலைமகன், கழகத்தின் நிரந்தரப் பொதுச் செயலாளர், தமிழ்நாடு சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர், மாண்புமிகு முன்னாள் முதல்வர் அண்ணன் திரு. எடப்பாடியார் அவர்களையும் வணங்குகிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

சாதனைச் செம்மல், மாண்புமிகு முன்னாள் அமைச்சர், கோபி சட்டமன்ற உறுப்பினர் மாண்புமிகு அண்ணன் திரு. கே.ஏ. செங்கோட்டையன் அவர்களையும், மாவட்ட கழகச் செயலாளர் மாண்புமிகு முன்னாள் அமைச்சர், குமாரபாளையம் சட்டமன்ற உறுப்பினர் அண்ணன் திரு. பி. தங்கமணி

2023 ஏப்ரல் 13] [திரு. S. ஜெயக்குமார்]

அவர்களையும், மாவட்ட கழகச் செயலாளர் மாண்புமிகு முன்னாள் அமைச்சர், சட்டப் பேரவை உறுப்பினர் அண்ணன் திரு. K.C. கருப்பணன் அவர்களையும், சட்டமன்ற எதிர்க்கட்சிக் கொறடா மாண்புமிகு முன்னாள் அமைச்சர், அண்ணன் திரு. எஸ்.பி. வேலுமணி அவர்களையும், சட்டமன்ற எதிர்க்கட்சித் துணைத் தலைவர் முன்னாள் அமைச்சர் அண்ணன் திரு. ஆர்.பி. உதயகுமார் அவர்களையும், மாண்புமிகு முன்னாள் அமைச்சர் பெருமக்களையும், (மேசையைத் தட்டும் ஒலி) இந்நாள் சட்டமன்ற உறுப்பினர்களையும், அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய கூட்டணி கட்சியினுடைய சட்டப் பேரவை உறுப்பினர்களையும், இந்த அவையிலே இருக்கின்ற மாண்புமிகு அமைச்சர் பெருமக்களையும், சட்டமன்ற உறுப்பினர்களையும், மாண்புமிகு முதல்வர், மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர், சட்டப் பேரவை அலுவலர்கள் அனைவரையும் வணங்கி, என்னை பெருந்துறை தொகுதியின் சட்டமன்ற உறுப்பினராகத் தேர்வு செய்த மதிப்புமிகு, மானமிகு பெருந்துறை தொகுதியினுடைய அன்பு வாக்காளப் பெருமக்கள் அனைவருக்கும் எனது கோடானு கோடி நன்றிகளை தெரிவித்துக்கொள்கிறேன்.

வீட்டு வசதி மற்றும் நகர்ப்புர வளர்ச்சித் துறை மானியக் கோரிக்கை விவாதத்தில் பங்கெடுத்து எனது உரையைத் தொடங்குகின்றேன். வீட்டின் வளர்ச்சியே, நாட்டின் வளர்ச்சி. வீட்டு வசதித் துறை மற்றும் நகர்ப்புர வளர்ச்சித் துறை மானியக் கோரிக்கையில் பங்கெடுத்து, எனது தொகுதியின் சார்பில் கருத்துகளை பதிவிடுவதில் மகிழ்ச்சியடைகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மனிதகுல வாழ்விற்கு உணவு, உடை, உறைவிடம் இவை மூன்றும் இன்றியமையாதவை. பண்டைக் காலங்களில் ஆதி மனிதர்கள் மரப் பொந்துகளிலும், பூமிக்கடியில் குழிதோண்டி குகை அமைத்தும், மலைக் குகைகளில் வாழ்ந்ததாகவும் சரித்திரச் சான்றுகள் கூறுகின்றன. ஆனால், மனிதகுலத்தின் நாகரிகம் வளர, வளர மனிதகுலத்தின் தேவைகள் வேறுபடுகின்றன, மாறுபடுகின்றன. சுதந்திரத்திற்கு முன்பு ஓலை குடிசைகள், ஓட்டு வீடுகள், காரை வீடுகளில் மக்கள் வசித்து வந்தனர். சுதந்திரத்திற்குப் பிறகு, மக்களாட்சி உருவானதற்குப் பிறகு, அரசு கவனம் செலுத்தியதன் காரணமாக ஏழையெளிய மக்களுக்கு பல்வேறு சலுகைகளை வழங்கி, இலவச பட்டாக்களையும் வழங்கி

வறுமைக் கோட்டிற்குக் கீழேயிருக்கின்ற மக்களை இனம் கண்டறிந்து, இட ஒதுக்கீடு அடிப்படையில் குடிசைவாழ் மக்களின் வாழ்வு சிறக்க தொகுப்பு வீடுகள், கான்கிரீட் வீடுகள் அமைத்துக் கொடுத்ததில் இந்தியாவிலேயே தமிழக அரசின் சாதனை மகத்தானது. இதய தெய்வம், புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் ஆட்சி செய்த 11 ஆண்டு காலத்திலும் சரி, இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சி செய்த 16 ஆண்டு காலத்திலும் சரி, புரட்சி நாயகன், புரட்சித் தலைமகன், கழகப் பொதுச் செயலாளர் டாக்டர் எடப்பாடியார் அவர்கள் ஆட்சி செய்த 4¾ ஆண்டுகளிலும் சரி, (மேசையைத் தட்டும் ஒலி) கிராமப்புற மக்களுக்கு பசுமை வீடுகளும், நகர்ப்புர மக்களுக்கு அடுக்குமாடிக் குடியிருப்புகளும் என மக்களின் தேவைகளையறிந்து, ஒவ்வொரு காலகட்டத்திலும் பல இலட்சம் தொகுப்பு வீடுகளையும், பல இலட்சம் பசுமை வீடுகளையும், பல்லாயிரக்கணக்கான அடுக்குமாடி குடியிருப்புகளையும் கட்டிக் கொடுத்து, அழகுபார்த்த அரசு அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு என்பதை எண்ணிப் பார்க்கின்றபோது மிகவும் மகிழ்ச்சியாக இருக்கின்றது. (மேசையைத் தட்டும் ஒலி) அரசு நிலத்திற்கு இலவச பட்டாக்களையும் வழங்கி, நிதியொதுக்கீடு செய்து, வீடுகளை கட்டிக் கொடுத்து பல்வேறு அடிப்படை கட்டமைப்பு வசதிகளான குடிதண்ணீர் வசதி, சாலை வசதி, மின் விளக்கு வசதி, கழிவுநீர் வசதி, கால்வாய் வசதி, போக்குவரத்து வசதிகளை உள்ளடக்கிய பல்வேறு வசதிகளைச் செம்மைப்படுத்தி, செயல்படுத்திக் காட்டிய அரசு, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு என்பதை நான் நினைவுகூரக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

இரவு 7–10

அம்மா ஆட்சியில், குடிசைகள் இல்லா தமிழகம் என்ற இலக்கை நோக்கித்தான் அம்மாவின் அரசு பயணித்தது என்பதை மீண்டும் ஒருமுறை நான் எடுத்துரைக்க விரும்புகிறேன். வளர்ந்து வரும் மக்கள் தொகைக்கேற்ப ஏழை, எளிய, நடுத்தர மக்களின், தொழிலாளர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்யும் விதமாக வீட்டு வசதி வாரியங்களை அமைத்து, ஒற்றைச்சாளர முறையில் வீட்டு வசதித் துறை மற்றும் வீட்டு வசதி வாரியத்தின் மூலமாக அடுக்குமாடி குடியிருப்புகளை அரசு ஊழியர்களுக்கும், பொதுமக்களுக்கும் வங்கிக் கடன் மூலமாக எளிய முறையில்

தவணைத் தொகையை செலுத்தும் விதமாக, பல்வேறு சலுகைகளோடு மானியமும் வழங்கி, கட்டமைப்பை உருவாக்கித் தந்த அரசு அம்மாவின் அரசு.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்களின் கடந்த ஆட்சியில் வீட்டு வசதித் துறையின் சார்பில் செய்த சில சாதனைகளை பட்டியலிட விழைகிறேன். தமிழகத்தில், வீட்டு உரிமைதாரர்களிடம் வாடகைதாரர்கள் படும்பாட்டைக் களைய 30 ஆண்டுக் கால அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் வீட்டு வசதி வாரியம்மூலம் பல்வேறு திட்டங்கள் நிறைவேற்றப்பட்டதை இந்த நாடும், நாட்டு மக்களும் நன்கு அறிவார்கள். அம்மா அரசின் வளர்ச்சித் திட்டங்களை தொடர்ந்து இந்த அரசும் செயல்படுத்த வேண்டுமென மக்களும் விரும்புகிறார்கள். அம்மாவின் அரசால் கடந்த 2017–2021 ஆம் ஆண்டு காலகட்டத்தில், 3,123.44 கோடி ரூபாய் செலவில் 18,541 புதிய வீடுகள், வீட்டு வசதிக் குடியிருப்புகள் கட்டப்பட்டன. 13,284 குடியிருப்பு அலகுகள் மற்றும் 258 வணிக அலகுகள் உட்பட 13,542 ஒதுக்கீடுதாரர்களுக்கும் விற்பனை பத்திரங்கள் வழங்கப்பட்டுள்ளன. இதில், 7,317 விற்பனைப் பத்திரங்கள் வட்டித் தள்ளுபடி திட்டத்தின்கீழ் வழங்கப்பட்டுள்ளன. 53 அலகுகள் மாற்றுத் திறனாளிகளுக்கு வழங்கப்பட்டுள்ளன. 2018–2019 ஆம் ஆண்டில், 1,114 பணியாளர்களுக்கு 26 இலட்சத்து 93 ஆயிரத்து 90 ரூபாயும், 2019–2020 ஆம் ஆண்டில், 927 பணியாளர்களுக்கு 22 இலட்சத்து 34 ஆயிரத்து 209 ரூபாயும் பிரீமியத் தொகையாகச் செலுத்தப்பட்டது. இந்த சிறப்புமிகு திட்டங்களைத் தற்போதைய அரசும் தொடர்ந்து, செயல்படுத்த வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

கோயம்பேட்டிலுள்ள புறநகர்ப் பேருந்து நிலையத்தின் நெரிசலைப் போக்க மாதவரத்தில் 8 ஏக்கர் நிலப்பரப்பில் 95 கோடி ரூபாய் மதிப்பீட்டில் பேருந்து நிலையம் மற்றும் சரக்கு வளாகம் கட்டி முடிக்கப்பட்டு, 18–10–2018 அன்று மாண்புமிகு முன்னாள் முதல்வர் அண்ணன் திரு. எடப்பாடியார் அவர்களால் மக்கள் பயன்பாட்டிற்கு அர்ப்பணிக்கப்பட்டது. மறைந்த முதல்வர் மாண்புமிகு அம்மா அவர்கள் 2014 ஆம் ஆண்டு கோயம்பேட்டில் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்திற்கு பன்னடுக்கு அலுவலகக் கட்டடம் கட்டப்படும் என்று அறிவித்திருந்தார்கள். அந்த அறிவிப்பை அண்ணன் எடப்பாடியார் அவர்கள் செயல்படுத்தினார்கள். 1 இலட்சத்து 88 ஆயிரம் சதுரடியில், 105 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டடம் கட்டி முடிக்கப்பட்டு, செயல்பாட்டில் உள்ளது. இதுபோல்

சிறப்புவாய்ந்த பல திட்டங்கள் செயல்படுத்தப்பட்டன. இந்தத் திட்டங்களையெல்லாம் நிறுத்தாமல் தொடர்ந்து செயல்படுத்த வேண்டுமென இந்தச் சபையின் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு மனிதனுக்கு உண்ண உணவும், உடுக்க உடையும், இருக்க இருப்பிடமும் அத்தியாவசியமான தேவைகளாகும். அதிலும் இந்திய சமூகத்தில் குறிப்பாக, நமது நாட்டில் மனித வளர்ச்சி என்பது பல ஏற்றத்தாழ்வுகளை உள்ளடக்கியதாக இருக்கிறது. சமூகத்தில் மிகப் பெரிய வசதி படைத்தவர்கள், நடுத்தர மக்கள், ஒன்றும் அறியாத ஏழையெளிய மக்கள், அன்றாடம் உழைப்பால் தங்களுடைய வாழ்க்கையை நகர்த்திக் கொண்டிருப்பவர்கள் என பல நிலைகள் இருக்கின்ற நேரத்தில், அடித்தளத்தில், கடைக்கோடியில் இருக்கக்கூடிய மக்களுக்குத் தேவையான உதவிகளையும், திட்டங்களையும், கூடுதலான நிதி ஒதுக்கீடுகளையும் செய்வதுதான் ஒரு நல்ல ஜனநாயக அரசினுடைய கடமையாகும். இந்த நிலையில், இருப்பிடம் என்பது அவன் வாழ்வதற்கு மட்டுமல்ல; தான் அந்த நாட்டினுடைய அல்லது அந்த ஊரினுடைய குடிமகன் என்ற உரிமையைப் பெறுவதற்கான அத்தாட்சியாக அது இருக்கிறது. அந்த அடிப்படையில்தான் ஒரு வீடு என்பது, அவன் இந்தப் பகுதியைச் சார்ந்தவன், இந்த இனத்தைச் சார்ந்தவன், இந்தப் பகுதியினுடைய மக்கள் என்பதன் அடையாளமாகும். முகவரி என்பது அவன் வசிக்கிற வீடாகும். அப்படிப்பட்ட உரிமையை துப்புரவுப் பணியாளர்களுக்கும், தூய்மைப் பணியாளர்களுக்கும் நிபந்தனையின்றி இந்த அரசு முதலில் வழங்க வேண்டும். அவர்களுக்கென்று தனியாக அடுக்குமாடி குடியிருப்புகளை அரசு உருவாக்கித் தர வேண்டும். இந்திய அளவில் தமிழ்நாடும் வேகமாக நகரமயமாகிக் கொண்டுவரும் மாநிலம். அந்த வரிசையில் நமது மக்கள்தொகையில் கிட்டத்தட்ட 48 சதவிகித மக்கள் நகரத்தில் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். நகரமயமாக்கல் என்பது இன்னும் கூடுதலாக வளர்ச்சியடைந்து கொண்டிருக்கிற இந்த நேரத்தில், நகரத்தின் வளர்ச்சிக்கேற்ற அடிப்படை வசதிகளான, குடிநீர் வசதிகள், சாலை வசதிகள், தெருவிளக்கு வசதிகள், கழிவுநீரை மேம்படுத்துதல், திடக்கழிவுகளை மேம்படுத்துதல் போன்ற பல்வேறு திட்டங்களில் கவனம் எடுத்து, இந்த அரசு தேவையான வசதிகளைச் செய்து தர வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

2023 ஏப்ரல் 13] [திரு. S. ஜெயக்குமார்]

மாண்புமிகு எடப்பாடியார் அவர்கள் ஆட்சிக் காலத்தில் அனுமதியற்ற பல்லாயிரக்கணக்கான ஏழை, எளிய மக்களுடைய காலி வீட்டு மனைகளை வரன்முறைப்படுத்த வீட்டு வசதி மற்றும் நகர்ப்புர வளர்ச்சித் துறை சார்பாக அரசாணை எண் 78, நாள் 4–5–2017 என்ற அரசாணை வெளியிடப்பட்டு, வரன்முறைப்படுத்தியதால் பொதுமக்கள் பயனடைந்துள்ளனர். தமிழகம் முழுவதும் பல்லாயிரக்கணக்கான மக்களின் மனைகளை வரன்முறைப்படுத்த ஏதுவாக, நிறுத்திவைக்கப்பட்டுள்ள அரசாணை எண் 78–ஐ மீண்டும் கால நீட்டிப்புச் செய்து, நடைமுறைப்படுத்த வேண்டுகிறேன்.

இரவு 7–15

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், நன்றி சொல்லி முடியுங்கள். (குறுக்கீடு) 7 நிமிடங்களுக்குப் பதிலாக 10 நிமிடங்கள் ஆகிவிட்டன. (குறுக்கீடு) ஒரே நிமிடம். 7–15–க்கு முடித்துவிடுங்கள்.

திரு. S. ஜெயக்குமார்: தமிழ்நாடு அரசு அலுவலர்களுக்காக 9 இடங்களில் 3,113 வாடகைக் குடியிருப்புகள் கட்டப்பட்டு வருகின்றன. வீட்டு வசதி வாரியத்தின் சார்பில் ஏழை எளிய மக்களுக்கு வீடு கட்டித் தருகின்ற முறையில் இரண்டு இடங்களில் 8,667 வீடுகள் கட்டப்பட்டு வருகின்றன. இவற்றை விரைவாக முடித்து மக்கள் பயன்பாட்டுக்கு அரசு வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

வீட்டு வசதி வாரியத்தால் கட்டப்பட்டு, விற்பனையாகாமல் இருக்கின்ற குடியிருப்புகள் 3,505, வணிக அலகுகள் 1,082, விற்பனையாகாத மனைகள் 5,074 என்று சென்ற ஆண்டின் மானியக் கோரிக்கை விவாதத்தில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதிலுரையில் கூறியுள்ளார்கள். அந்த விற்பனையாகாத மனைப் பிரிவுகள், குடியிருப்புகள், வணிக அலகுகள் ஆகியவற்றை சிறப்பு சலுகை அடிப்படையிலும், குறைந்த விலையை நிர்ணயம் செய்து விற்பனை செய்தும், அரசுக்கு வருவாய் ஈட்டி மக்கள் பயன்பாட்டுக்கு வழங்க இந்த அரசு ஆவன செய்ய வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வசதி படைத்தவர்கள் நகரப் பகுதிகளில் குடியிருப்பவர்கள் தனியார் துறையின்மூலம் கட்டப்படும் பல்வேறு அடுக்குமாடிக்

குடியிருப்புகளில் வசித்து வருகின்றார்கள் என்பது நாம் அறிந்ததே! ஆனால், இன்றைய சூழ்நிலையில் உயர்த்தப்பட்டிருக்கும் நில வரி, நீர் வரி, சொத்து வரி, மின் கட்டண உயர்வால் நகரப் பகுதிகளில் பணி செய்கின்ற தொழிலாளர்கள், சந்தை மதிப்பு. . .

தொகுதிக் கோரிக்கைகள்:

ஈரோடு மாவட்டம் பெருந்துறையில் உள்ள ஈரோடு அரசு மருத்துவக் கல்லூரி மற்றும் மருத்துவமனையில் 8 மாடிகொண்ட பல்நோக்கு உயர் சிறப்பு மருத்துவமனை கட்டடம் அமைக்க வேண்டும்.

ஈரோடு மாவட்டம் பெருந்துறை பேரூராட்சி பெரிய மடத்துப்பாளையம் பகுதியில் இருந்து கருமாண்டி செல்லிபாளையம் பேரூராட்சி மாயா அவன்யூ வரை வடிகால் வசதியுடன் கூடிய புதிய தார்ச் சாலை அமைக்க வேண்டும்.

ஈரோடு மவாட்டம் சென்னிமலையிலிருந்து ஊத்துக்குளி செல்லும் சாலையில் தோப்புபாளையத்திலிருந்து காட்டுப்பாளையம், அக்கரையம்பாளையம், கொளத்துப்பாளையம், சின்னக்காட்டுபாளையம் வழியாக எல்லைக்காடு, ஊந்துக்குளி செல்லும் போக்குவரத்து சாலையை அகலப்படுத்த வேண்டும்.

ஈரோடு மாவட்டம், பெருந்துறை நகரில் பழைய பஸ் நிலைய ரவுண்டானா மற்றும் ஈரோடு சாலை பவானி சாலை குன்னத்தூர் சாலை, சென்னிமலை சாலை ஆகியவற்றை இணைக்கும் குன்னத்தூர் நால்ரோடு சந்திப்பு ரவுண்டானா இரண்டும் அருகருகே உள்ளது. திருமணம் உள்ளிட்ட இதர விசேஷ நாட்களில் அதிசு போக்குவரத்து நெரிசல் ஏற்படுகின்றது. இதற்காக பழைய பஸ் நிலைய ரவுண்டானாவில் புதிய சிக்னல் அமைத்து, அதை குன்னத்தூர் நால்ரோடு ரவுண்டானா சிக்னலோடு இணைத்து போக்குவரத்து முறைப்படுத்த வேண்டும்.

ஈரோடு மாவட்டம் பெருந்துறை நகரப் பகுதியில் அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளி, அரசு பெண்கள் மேல்நிலைப் பள்ளி மற்றும் தனியார் மேல்நிலைப் பள்ளிகள் உள்ளதால் காலை, மாலை நேரங்களில் மாணவ மாணவிகள் சாலையோரம் நடந்து செல்லும் போது கவனக்குறைவாக விபத்து ஏற்படுகிறது. எனவே பெருந்துறை நகரில் பிரதான சாலைகளில் சாலையோரம் நடைபாதை அமைத்து பள்ளி மாணவ மாணவிகள் பாதுகாப்பை உறுதி செய்ய வேண்டும்.

திருப்பூர் மாவட்டம், குன்னத்தூர் பேருந்து நிலையம் மிகவும் பழுதடைந்து உள்ளது. எனவே அதனை விரிவாக்கம் செய்து புதிய பேருந்து நிலையம் அமைக்க வேண்டும்.

திருப்பூர் மாவட்டம், ஊத்துக்குளியில் அரசு சார்நிலைக் கருவூலம் அமைக்க வேண்டும்.

திருப்பூர் மாவட்டம் குன்னத்தூரில் இருந்து செங்கப்பள்ளி தேசிய நெடுஞ்சாலை வரை உள்ள போக்குவரத்து சாலையை நான்கு வழிச் சாலையாக அமைக்க வேண்டும்.

குன்னத்தூரில் இருந்து பெருமாநல்லூர் வரையில் உள்ள போக்குவரத்து சாலையை நான்கு வழிச் சாலையாக விரிவுபடுத்த வேண்டும்.

திருப்பூர் மாவட்டம், குண்ணத்தூரில் இருந்து கோபி வரையிலும் உள்ள போக்குவரத்து சாலையை நான்கு வழிச்சாலையாக மாற்ற வேண்டும்.

ஈரோடு மாவட்டம், சென்னிமலை ஒன்றியம் சிறுகளஞ்சி அரசு நடுநிலைப் பள்ளியில் தற்போது 270 மாணவ மாணவிகள் படித்து வருகின்றனர். எனவே, இதனை உயர்நிலைப் பள்ளியாக தரம் உயர்த்த வேண்டும்.

அத்திக்கடவு—அவினாசி திட்டம் முழுமையாக நிறைவேற்றப்பட்டு, தற்போது சோதனை ஓட்டமாக அனைத்து குளம் குட்டைகளில் நீர் நிரப்பப்பட்டு வருகிறது. மேற்படி குளங்களில் சீமைக்கருவேல மரங்கள் மற்றும் முட்புதர்கள் நிறைந்துள்ளது. எனவே, போர்க்கால அடிப்படையில் முட்புதர்களை அகற்றி குளம் குட்டைகளில் நீர் நிரப்ப வேண்டும்

ஈரோடு மாவட்டம் பெருந்துறை பேரூராட்சி சின்ன மடத்துப்பாளையம் முதல் கள்ளியம்புதூர் வரை உள்ள மணற் சாலையை புதிய தார் சாலையாக மாற்ற வேண்டும்.

ஈரோடு மாவட்டம் திங்களூர் அப்பச்சிமார் மடம் முதல் தாண்டக்கவுண்டம்பாளையம் வரையுள்ள சேதமடைந்த தார்ச் சாலையை புதுப்பிக்க வேண்டும்.

ஈரோடு மாவட்டம் நல்லாம்பட்டி பேரூராட்சியில் பழைய காலனி பகுதியில் பட்டத்தரசி அம்மன் கோயில் வீதியில்

சேதமடைந்த தார்ச் சாலையை புதிய தார் சாலையாக அமைக்க வேண்டும்.

ஈரோடு மாவட்டம், நல்லாம்பட்டியில் இருந்து குஞ்சரமடை செல்லும் சாலை முதல் கிழங்கு காடு வரை உள்ள மணற்சாலையை தார்ச்சாலையாக அமைக்க வேண்டும்.

ஈரோடு மாவட்டம், பெருந்துறை பேரூராட்சி, பெரிய வேட்டுவபாளையம் குட்டையக்காடு பகுதியில் பத்தாயிரம் லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்க வேண்டும்.

ஈரோடு மாவட்டம், பெருந்துறை பேரூராட்சி, சென்னிமலை பிரதான சாலையிலிருந்து காந்திநகர் செல்லும் மணற்சாலையை தார்ச் சாலையாக மாற்றி அமைக்க வேண்டும்.

ஈரோடு மாவட்டம், பெருந்துறை பேரூராட்சி, சென்னிமலை பிரதான சாலையில் இருந்து மடம் அருகில் உள்ள ராஜ் நகர் செல்லும் மண்சாலையை தார்ச் சாலையாக அமைக்க வேண்டும்.

ஈரோடு மாவட்டம், பெருந்துறை பேரூராட்சி, சென்னிமலை பிரதான சாலையில் இருந்து கணபதி நகர் செல்லும் மண் சாலையை தார்ச் சாலையாக அமைக்க வேண்டும்.

ஈரோடு மாவட்டம் பெருந்துறை பேரூராட்சி சென்னிமலை பிரதான சாலையில் இருந்து அன்பு நகர் செல்லும் மண் சாலையை தார்ச் சாலையாக மாற்ற வேண்டும். மேலும் இந்த சாலையில் தேங்கி நிற்கும் கழிவுநீரை முறையான வடிகால் அமைத்து வெளியேற்ற வேண்டும்.

ஈரோடு மாவட்டம், பெருந்துறை பேரூராட்சி, சென்னிமலை பிரதான சாலையிலிருந்து ஜி வி டி எல் நகர், 2வது வீதி, மூன்றாவது விதி மற்றும் குறுக்குத் தெருவில் தார்ச் சாலை அமைக்க வேண்டும்.

ஈரோடு மாவட்டம், கருமாண்டிசெல்லிபாளையம் பேரூராட்சி குன்னத்தூர் ரோடு பெத்தாம்பாளையம் பிரிவு முதல் தேசிய நெடுஞ்சாலை வரை உள்ள இணைப்பு தார் சாலையை அகலப்படுத்த வேண்டும்.

ஈரோடு மாவட்டம், பெருந்துறை நகரப் பகுதியில் அதிக அளவு போக்குவரத்து உள்ளதால் சாலைகளில் இருபுறமும் வாகனங்கள் நிறுத்தப்பட்டு போக்குவரத்துக்கு மிகுந்த இடையூறாக

2023 ஏப்ரல் 13] [திரு. S. ஜெயக்குமார்]

உள்ளது. இதனை முறைப்படுத்தி தேவையான இடங்களில் ஒரு வழி பாதையாகவும், பிரதான சாலை ஓரங்களில் கார், இருசக்கர வாகனம் நிறுத்தும் வசதியும் செய்து தர வேண்டும்.

ஈரோடு மாவட்டம், பெருந்துறை நகர் பகுதியில் பழைய பஸ் நிலைய ரவுண்டானா (1), மற்றும் ஈரோடு சாலை, பவானி சாலை, குண்ணத்தூர் சாலை, சென்னிமலை சாலை ஆகியவை இணைக்கும் குன்னத்தூர் நால்ரோடு சந்திப்பு ரவுண்டானா (2) என அருகருகே இரண்டு ரவுண்டானாக்கள் உள்ளன. இதில் குன்னத்தூர் நால்ரோடு ரவுண்டானாவில் மட்டுமே சிக்னல் உள்ளது.

எனவே பழைய பஸ் நிலைய ரவுண்டானாவில் புதிய சிக்னல் அமைத்து, மேற்கூறிய இரண்டு சிக்னலையும் ஒரே கட்டுப்பாட்டோடு இணைத்து போக்குவரத்தை முறைப்படுத்த வேண்டும்.

ஈரோடு மாவட்டம் கருமாண்டி செல்லிபாளையம் பேரூராட்சி குன்னத்தூர் சாலையில் செல்லியம்மன் எலக்ட்ரிக் கடை முன்புறத்தில் இருந்து கிழக்கே குமரன் மெடிக்கல் வரை வடிகால் வசதி இல்லாததால், பிரதான சாலையில் உள்ள வடிகால்கள் நிரம்பி சாலை வழியாக கழிவுநீர் வெளியேறுகிறது. எனவே மேற்சொன்ன பகுதியில் புதிய வடிகால் அமைக்க வேண்டும்.

ஈரோடு மாவட்டம் பெருந்துறை நகரப் பகுதியில் அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளி அரசு பெண்கள் மேல்நிலை பள்ளி மற்றும் தனியார் மேல்நிலைப் பள்ளிகள் உள்ளதால் காலையும் மாலையும் பள்ளி நேரங்களில் மணல் மாணவிகள் சாலையோரம் நடந்து செல்லும்போது கவனக்குறைவாக விபத்து ஏற்படுகிறது. எனவே, பெருந்துறை நகரின் பிரதான சாலைகளில் சாலையோரங்களில் நடைபாதை அமைத்து பள்ளி மாணவ மாணவிகளின் பாதுக்காப்பை உறுதிப்படுத்த வேண்டும்.

ஈரோடு மாவட்டம் விஜயமங்கலம் பகுதியில் இருந்து ஊத்துக்குளி செல்லும் சாலையில் குமார் மஹால் முதல் சேரன் பெட்ரோல் பங்க் வரை சாலையின் இரு புறமும் வடிகால் அமைக்கப்பட வேண்டும் இப்பகுதியில் தொடர்ந்து வடிகால் நீர் சாலையோரம் தேங்கி கற்றுக்குழல் பாதிப்பு ஏற்படுத்துவதால் மேற்சொன்ன பகுதியில் வடிகால் அமைத்துத் தர வேண்டும்.

[திரு. S. ஜெயக்குமார்] [2023 ஏப்ரல் 13

ஈரோடு மாவட்டம் விஜயமங்கலம் ஆரம்ப சுகாதார நிலையத்தை தரம் உயர்த்த வேண்டும். ஈரோடு மாவட்ட சுற்றுப்பகுதிகள் மட்டுமல்லாது. திருப்பூர் மாவட்டததில் ஏராளமான கிராமங்களில் இருந்து பொதுமக்கள் வெளிநோயாளிகளாக சிகிச்சை பெறுவதால் இந்த மருத்துவமனையை தரம் உயர்ந்த வேண்டும்.

திருப்பூர் மாவட்டம் குன்னத்தூர் பேரூராட்சியில் அரசு பெண்கள் மேல்நிலைப் பள்ளி உள்ளது ஆனால், இதுவரை ஆண்கள் மேல்நிலைப் பள்ளி இல்லை. எனவே இப்பகுதியில் உள்ள கருப்பண நாடார் உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த வேண்டும்.

திருப்பூர் மாவட்டம் குன்னத்தூர் பேரூராட்சிக்குட்பட்ட குன்னத்தூர் நால்ரோடு மற்றும் மூலக்கடை ஆகிய இடங்களில் ரவுண்டானா அமைக்க வேண்டும்.

திருப்பூர் மாவட்டம் குன்னத்தார் பேரூராட்சி அலுவலக கட்டடம் பழுதடைந்து உள்ளதால் புதிய பேரூராட்சி அலுவலகம் கட்டித்தர வேண்டும்.

திருப்பூர் மாவட்டம் குன்னத்தூர் பேரூராட்சியில் 11-வது வார்டில் சமுதாய நலக்கூடம் அமைக்க வேண்டும்.

திருப்பூர் மாவட்டம் குன்னத்தூர் பேரூராட்சி 13-வது வார்டில் புதிய அங்கன்வாடி கட்டடம் அமைக்க வேண்டும்.

திருப்பூர் மாவட்டம் குன்னத்தூர் பேரூராட்டு எட்டாவது வார்டு, காந்திநகர் பகுதியில் பெருந்துறை சாலை வரை வடிகால் வசதி ஏற்படுத்தித் தர வேண்டும்.

திருப்பூர் மாவட்டம், குன்னத்தூர் அரசு ஆரம்ப சுகாதார நிலையம் முன்பு ஐமாஸ் விளக்கு பொருத்த வேண்டும்.

திருப்பூர் மாவட்டம், ஊத்துக்குளி அரசு மருத்துவமனை மலைப்பகுதியை ஒட்டி அமைந்துள்ளது. இதனால் வளவிலங்குகள் மருத்துவமனைக்குள் அடிக்கடி நுழைந்து விடுவதால் இதற்கு சுற்றுச்சுவர் அமைக்க வேண்டும்.

திருப்பூர் மாவட்டம், ஊத்துக்குளி கொடியம்பாளையம் நால் ரோட்டிலும் கவுண்டம்பாளையம் நால்ரோட்டிலும் புதிதாக ரவுண்டானா அமைக்கப்பட வேண்டும்.

திருப்பூர் மாவட்டம் ஊத்துக்குளி ரயில் நிலையம் அருகே உள்ள பிரதான திருப்பத்தை அகலப்படுத்தி விரிவுபடுத்த வேண்டும்.

திருப்பூர் மாவட்டம், ஊத்துக்குளியிலிருந்து விஜயமங்கலம் தேசிய நெடுஞ்சாலை வரை உள்ள போக்குவரத்து சாலையை நான்கு வழிச்சாலையாக அமைக்க வேண்டும்.

திருப்பூர் மாவட்டம் ஊத்துக்குளியில் இருந்து தாராபுரம் செல்லும் சாலையில் உள்ள மேம்பாலத்தில் இருபுறமும் மின்விளக்கு அமைக்க வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *போதும். மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புர வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்களின் பதிலுரை. (குறுக்கீடு) போதும், போதும். (குறுக்கீடு) நன்றி பதிவாகிவிட்டது. போதும். (குறுக்கீடு) போதும், போதும். (குறுக்கீடு) நீங்கள் அனைவரும் கிளம்பத்தானே போகிறீர்கள்? மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புர வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,. . . (குறுக்கீடு)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *உட்காருங்கள். (குறுக்கீடு) போதும், போதும், தாராளமாகப் போதும். மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புர வளர்ச்சித் துறை அமைச்சர், நீங்கள் பதில் சொல்லுங்கள். (குறுக்கீடுகள்)*

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர், இனமானப் பேராசிரியர் அவர்களுக்கு என்னுடைய வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அனைத்து மாநிலங்களுக்கும் முன்னோடியாக பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்துகிறார்கள். அத்துணையையும் சொல்வதென்றால் போதிய அவகாசம் இருக்காது. இரண்டொன்றை மட்டும் நான் சொல்கிறேன்.*

மகளிருக்குக் கட்டணமில்லா பேருந்து வசதி; பேரறிஞர் அண்ணா அவர்களின் பிறந்த நாளன்று குடும்பத் தலைவிகளுக்கு மாதம் ஆயிரம் ரூபாய் உரிமைத் தொகை கொடுக்கின்ற அந்தத் திட்டம் துவங்கப்பட இருக்கிறது. அதேபோல், பள்ளியில் படிக்கின்ற மாணவிகள் கல்லூரிக்குச் சென்று தொடர்ச்சியாக படிக்க வேண்டும்; நிறைய drop-outs *இருக்கின்றன, அதைத் தவிர்க்க வேண்டுமென்பதற்காக, தொடர்ந்து அவர்கள் படிக்க வேண்டுமென்பதற்காக பெண்கள் கல்லூரியில் போய் சேர்ந்தால்,*

அவர்களுக்கு மாதம் ஆயிரம் ரூபாய் உதவித் தொகை. அதேபோல், முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம்; இது மாணவர்கள் அதிகமாக பள்ளிக்கு வருவதற்கான வாய்ப்பை ஏற்படுத்தியிருக்கிறது.

இன்னொன்றை முக்கியமாகச் சொல்ல வேண்டுமென்று சொன்னால், சிவில் சர்வீஸஸ் தேர்வில் தமிழகத்திலிருந்து தேர்ச்சி பெற்றவர்களின் எண்ணிக்கை குறைந்துகொண்டே வந்தது. அதை ஆய்விலே தெரிந்துகொண்ட மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், சிவில் சர்வீஸஸ் தேர்வுக்காக தயார் செய்யும்போது முதல் தேர்வில் தேர்ச்சி பெற்றால், ஆயிரம் நபர்களுக்கு மாதம் 7,500 ரூபாய், இரண்டாவது தேர்வில் தேர்ச்சி பெற்றால் மாதம் 25,000 ரூபாய் என அறிவித்திருக்கிறார்கள். இது நம் மாணவர்களுக்கு பெரிய ஊக்கத்தை ஏற்படுத்துவதாக அமைந்திருக்கிறது என்பதை நான் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். இளைஞர்கள் தொழில் ஆரம்பித்து சுயமாக தன்னுடைய காலில் நிற்க வேண்டுமென்பதற்காக 'நான் முதல்வன்' என்கிற திட்டத்தை கொண்டு வந்திருக்கிறார்கள். அதேபோல் மக்களுக்குப் பல கோரிக்கைகள் இருக்கின்றன. அவை 'முதல்வரின் முகவரி' என்கிற திட்டத்தின் வாயிலாகப் பெறப்பட்ட பெரும்பகுதியான மனுக்களுக்கு தீர்வு காணப்பட்டிருக்கின்றன என்பதை இந்த நேரத்தில் நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

மிக முக்கியமான ஒன்று. நாங்கள் நேரடியாகப் பார்த்தது, கள ஆய்வில் முதலமைச்சர் என்கிற அந்தத் திட்டம். ஒவ்வொரு மாவட்டத்திற்கும் ஆய்வுக்காக செல்கின்றார். நாங்கள் ஆரம்பத்தில் சாதாரணமாக நினைத்தோம். ஏதோ ஒரு மாவட்டத்திற்குப் போனால் பத்து திட்டங்களை எடுத்து ஆய்வு செய்வார் என்று கருதினோம். ஆனால், அதனுடைய விளைவு என்ன ஆயிற்று என்றால், அவர் முதல் மாவட்டத்திற்குப் போகின்றபோதே மற்ற மாவட்டங்களில் இருக்கின்ற அதிகாரிகள் குறிப்பாக, மாவட்ட ஆட்சித் தலைவர்கள் அத்துணைத் திட்டங்களையும் list out செய்து எல்லாவற்றையும் வேகப்படுத்தி நடவடிக்கை எடுத்து முடிப்பதற்காக தயார் செய்கிறார்கள் என்பதைப் பார்க்கின்றபோது ஓர் இடத்தில் செய்வது மாநிலம் முழுவதும் ஒரு பெரிய தாக்கத்தை ஏற்படுத்தியிருக்கிறது, முன்னேற்றத்தை ஏற்படுத்தியிருக்கிறது.

இரவு 7–20

அதேபோல், ஈரோடு மாவட்டம் வந்திருந்தார்கள். வந்திருந்தபோது, அவர் சொன்னதால், ஓர் அடுக்குமாடி

2023 ஏப்ரல் 13] [திரு. சு. முத்துசாமி]

குடியிருப்புக்கு உள்ளே சென்று நாங்கள் பார்த்தோம். அவர்கள் இருப்பது ஒரே ஒரு சின்ன அறைதான், அதுதான் அவர்களுடைய வீடு. அது அடுக்குமாடி குடியிருப்பு என்கிற பெயரிலே இருக்கிறது. இதையெல்லாம் மாற்றி வசதியான வகையிலே கட்டிக்கொடுப்பதற்கான நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று அப்போதே முதலமைச்சர் அவர்கள் சொன்னார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) எனவே, அதுகுறித்தெல்லாம் பின்பு சொல்ல இருக்கிறேன். எங்களுக்கு, ஈரோடு மாவட்டத்தில், ஏற்கெனவே ஒரு பெரிய பேருந்து நிலையம் இருக்கிறது. நெருக்கடி ஏற்பட்ட காரணத்தால் புறநகர் பேருந்து நிலையம் இரண்டைக் கொடுத்திருக்கிறார்கள். எனவே, இந்த நேரத்திலே மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு, நன்றியைத் தெரிவித்துக்கொள்வது என்னுடைய கடமை என்று நான் கருதுகிறேன்; என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோல, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் சென்னையிலே அதிநவீன விளையாட்டு நகரம் ஒன்றை அமைக்கவிருக்கிறார்கள். அவர் முதல்முறையாகத்தான் பதிலுரையாற்றினார். அவருடைய மானியக் கோரிக்கையிலே பல திட்டங்களை அவர் அறிவித்திருந்தார். நான் அவரிடத்தில் கேட்டேன். ஈரோட்டிலே சிக்கய்யா நாயக்கர் கல்லூரி ஒன்று இருக்கிறது. அதை அரசாங்கம் எடுத்துக்கொள்கிற ஒரு கருத்துரு, ஒன்றிய அரசினுடைய அனுமதிக்காகப் போயிருக்கிறது. அங்கே பெரிய இடம் இருக்கிறது. ஓர் உள் விளையாட்டு அரங்கம் கட்ட வேண்டுமென்று கேட்டேன். 'கண்டிப்பாகச் செய்யலாம்' என்று சொல்லிவிட்டு, அடுத்து ஒரு வார்த்தை சொன்னார். அதுதான் எனக்கு மிகப் பெரிய மகிழ்ச்சி. 'ஈரோட்டிற்கு என்று எதைக் கேட்டாலும் செய்து கொடுப்பேன்' என்று மாண்புமிகு திரு. உதயநிதி ஸ்டாலின் அவர்கள் சொன்னார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அதற்காக அவருக்கு இந்த நேரத்தில் நான் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அவர் பேசுகிறபோதுகூட, 'தளபதி அவர்கள் sixer அடித்து இருக்கிறார்' என்று கூறி, இரண்டு திட்டங்களை நிறைவேற்ற, அனுமதியை தந்ததற்காகச் சொன்னார். சட்டமன்றத்தில் மானியக் கோரிக்கையிலே பேசி, அவர் sixer அடித்துவிட்டுப் போயிருக்கிறார் (மேசையைத் தட்டும் ஒலி) என்பதுதான் எங்களுக்கு ஏற்பட்ட ஓர் உணர்வு என்பதை இந்த நேரத்தில் நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

மேலும், இங்கே அண்ணன் மாண்புமிகு அமைச்சர் துரைமுருகன் அவர்கள் முதற்கொண்டு, இங்கிருக்கின்ற அமைச்சர்கள் அத்தனைபேரும் எங்களுடைய மாவட்டத்திற்காக ஏதாவது ஒரு பணியைச் செய்துகொடுத்திருக்கிறார்கள். எனவே, அவர்களுக்கு இந்த நேரத்திலே நன்றியைச் சொல்வதும், தொடர்ந்து செய்துகொடுங்கள் என்று கோரிக்கை வைப்பதும், என்னுடைய கடமை என்று நான் கருதுகிறேன்.

நேரமில்லாத காரணத்தால் சுருக்கமாக பதிலுரையை முடிக்க விரும்புகிறேன். வீட்டு வசதி வாரியத்தின் சார்பாக சட்டமன்ற விடுதியிலே இருக்கின்ற, 16 பிரச்சினைகள் குறித்து எங்களிடத்தில் சொல்லப்பட்டது. அவற்றில், 9 நிறைவேற்றப்பட்டிருக்கின்றன. மிச்சம் இருக்கின்ற 7-ஐயும் மற்ற துறைகளோடு இணைந்து செய்வதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன.

சட்டமன்றத்திலே கடந்த நிதியாண்டிலே நாங்கள் அறிவித்த அறிவிப்புகள், மொத்தம் 47. அவற்றில், 36 முடிக்கப்பட்டிருக்கின்றன. 6 consultants மூலம் ஆய்வு செய்து, செயல்படுத்துவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன; அது positive ஆக இருக்கும். அதேபோல அரசிடம் இருந்து, 4 திட்டங்களுக்கான உத்தரவு வருவதற்காக இப்போது நாம் காத்துக்கொண்டிருக்கிறோம். மிச்சம் இருப்பது ஒரு திட்டம். அந்தத் திட்டம் கொஞ்சம் சரியில்லாமல் இருக்கின்ற காரணத்தால் கைவிடப்பட்டிருக்கிறது.

அதேபோல, கொள்கை விளக்கக் குறிப்பிலே பல திட்டங்கள் சொல்லப்பட்டிருக்கின்றன. அவற்றை நீங்களே படித்திருப்பீர்கள். எனவே, நான் அதை மீண்டும் சொல்ல வேண்டிய அவசியம் இல்லை என்று கருதுகிறேன். இன்னொன்று முக்கியமானது, கடந்த இரண்டு நாட்களாக அந்தக் கேள்விதான் வந்துகொண்டே இருக்கிறது. ஏற்கெனவே, வீட்டு வசதி வாரியத்தால் கட்டப்பட்டு விற்கப்பட்ட வீடுகள் பழுதடைந்து விட்டன. அவற்றை மறுகட்டுமானம் செய்ய வேண்டும். அரசாங்கத்திற்கோ அல்லது Housing Board-க்கோ நேரடியாக இதில் சம்பந்தம் இல்லை என்றாலும் ஒரு பொறுப்பு இருக்கிறது என்பதால் அவர்கள் வந்து கேட்கிறார்கள். அதனால், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆய்வின்போது 'யார், யார் வந்து கேட்கிறார்களோ, அவற்றையெல்லாம் எப்படி முயற்சி எடுத்து செய்ய முடியுமோ அதைச் செய்யுங்கள்' என்று எங்களுக்கு சொன்னார்கள் அந்த அடிப்படையிலே இப்போது 10 இடங்களிலிருந்து அதற்கான

கோரிக்கைகள் வந்திருக்கின்றன. ஏறத்தாழ 5 இடங்களில் இப்போது அவர்களுக்குள்ளே ஓர் ஒப்பந்தம் போட்டுக்கொள்வதற்கான, MoU போட்டுக்கொள்வதற்கான ஒரு நடவடிக்கை அளவிற்கு வந்திருக்கிறது. இதிலே என்ன நிலைமை என்று சொன்னால், 15 வருடகாலமாக இதைக் கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். இங்கே பேசுகிறபோது நிறைய வீடுகள் கட்டியிருக்கிறோம் என்று சொன்னார்கள். கட்டுவது முக்கியமல்ல, தரமாக இருக்கவேண்டும் என்பதுதான் மிக முக்கியம். (மேசையைத் தட்டும் ஒலி) இந்த வீடுகளை எல்லாம் 20 ஆண்டுக் காலத்திலே பணம் போட்டு வாங்கியிருக்கிறார்கள். ஆனால், தரம் இல்லாத காரணத்தால்தான், 20 ஆண்டு காலத்திலேயே இடிந்து விழுகின்றன. அங்கேயிருந்து வெளியிலே வருகிறார்கள். இப்படிப்பட்ட தரமற்ற வீடுகள் கட்டவேண்டிய அவசியம் இல்லை. கட்டினால் தரமாக கட்டிக்கொடுக்க வேண்டும், இல்லையென்றால் பேசாமல் இருக்கலாம். எனவே, கட்டியது பெருமையல்ல! எத்தனை வீடுகள் விற்காமல் இருக்கின்றன. ஏன் விற்கவில்லை என்று அவரே சொன்னார். பக்கத்தில் இருக்கின்ற தனியார் வீடுகள் விற்பனையாகின்றன. இவை தரமாக இல்லை என்ற காரணத்தால் விற்பனையாகவில்லை.

இரவு 7–25

அடுத்து, எந்த இடத்தில் தேவையென்பதை ஆய்வு செய்யாமல் கட்டப்பட்டதும் ஒரு காரணம். ஓர் இடத்தை தேர்ந்தெடுத்து கட்டுகிறோம் என்று சொன்னால், இங்கே இத்தனை வீடுகள் தேவையென்பதை முன்கூட்டியே ஆய்வு செய்து, கட்டியிருக்க வேண்டும். எனவே, அப்படியெல்லாம் செய்யாமல் இருந்ததால்தான், வீட்டு வசதி வாரியம் மிகச் சிரமத்திலே செயல்பட்டுக்கொண்டிருக்கிறது. பணம் வருகிறது, அது வேறு விஷயம். ஆனால், வீடுகளைத் தரமாகக் கட்டிக்கொடுத்து, மக்களிடத்திலே நல்ல பெயரை வாங்குவதிலிருந்து வாரியம் முன்பு தவறியிருக்கிறது என்பதுதான் எங்களுடைய கருத்து. அதற்காக என்ன திட்டம் வைத்திருக்கிறோம் என்பதை நான் பிறகு சொல்கிறேன். இந்தக் கட்டடம் கட்டுவதற்கும், மறு கட்டுமானம் செய்வதற்கும், redevelopment செய்வதற்கும், தனியாக ஒரு சட்டத்தை இயற்ற வேண்டிய நிலைமை ஏற்பட்டது. அதற்காக சட்டம் இயற்றப்பட்டு, மசோதா நிறைவேற்றப்பட்டு, கவர்னருக்கு அனுப்பப்பட்டு, ஒன்றிய அரசுக்கும் அனுப்பப்பட்டு, President அவர்களுக்கும் அனுப்பப்பட்டு, கையெழுத்தாகி, இப்பொழுது

வந்திருக்கிறது. அதற்கு எவ்வளவு கால அவகாசம் தேவைப்படுகிறது என்பது உங்களுக்குத் தெரியும். அதுமட்டுமல்ல, இங்கே அது வந்ததற்குப் பின்னாலே, அதற்கான policy *மற்றும்* rules frame *செய்யப்பட்ட பிறகுதான், பணிகளை நாம் துவக்க முடியும். அந்தப் பணிகளெல்லாம் முடிவடைகிற நிலையில் இருக்கின்றன. அந்தப் பணிகள் முடிக்கப்பெற்றால்,* redevelopment *பணியை மிகச் சிறப்பாக நம்மால் செய்ய முடியும்.*

*இதில், இன்னொரு விஷயம் என்னவென்றால், அந்தக் குடியிருப்புகளில் இருக்கும், சங்கங்கள்–*associations *ஒன்றாக இணைந்து செயல்பட வேண்டும். ஏனென்றால், அங்கு நிறைய சங்கங்கள் இருக்கின்றன. இதில் இருக்கிற பிரச்சினையே அதுதான். ஒவ்வொரு குடியிருப்பிலும் ஏறத்தாழ நான்கு சங்கங்கள் இருக்கின்றன. அவர்களை ஒன்றாக இணைக்க வேண்டும். அவர்களை ஒன்றாக இணைத்து, கட்டுமான நிறுவனம் யார் என்பதை அவர்களே முடிவெடுத்துக்கொள்ள வேண்டும். கட்டுமான நிறுவனத்தை அவர்களே தேர்ந்தெடுக்க வேண்டும். இதில், அரசோ, வாரியமோ தலையிடாது. ஆனால், வாரியத்தின் சார்பாக, கட்டப்படும் கட்டடங்கள் தரமானதாக இருக்க வேண்டும் என்றும், குறைந்தபட்சம் 80–லிருந்து 100 ஆண்டுகள் அந்தக் கட்டடங்கள் இருக்கிற அளவில் உத்தரவாதத்தை அந்தக் கட்டுமான நிறுவனம் கொடுக்க வேண்டுமென்றும், நாங்கள் அவர்களுக்கு* instructions *கொடுக்கிறோம். (மேசையைத் தட்டும் ஒலி)*

அதுமட்டுமல்ல, அங்கிருப்பவர்களை காலி செய்து மாற்று இடங்களுக்கு அனுப்புகிறபோது, வாடகையாக இருந்தாலும் சரி, அல்லது அதற்குப் பின்னாலே மீண்டும் அங்கு வருகிறபொழுது அவர்களுக்கு ஆகும் registration fees *ஆக இருந்தாலும் சரி, அவர்கள் கட்ட வேண்டிய* GST *வரியாக இருந்தாலும் சரி, அதற்காக என்ன செலவாகிறதோ அந்தச் செலவினங்களையும் கட்டுமான நிறுவனம்தான் ஏற்றுக்கொள்ள வேண்டும். எனவே, இவர்கள் வெளியே போய்விட்டு, மீண்டும் வருகிறபோது, எந்தக் கூடுதல் செலவும் இருக்கக்கூடாது என்பதிலே திட்டவட்டமாக இருக்க வேண்டும் என்று நாங்கள் சொல்லியிருக்கிறோம். காரணம், எல்லா குடும்பங்களும் ஒரேமாதிரி அல்ல. ஒருவர் வசதியாக இருக்கலாம். ஒருவரால் கட்டணத்தைச் செலுத்த முடியாமல் இருக்கலாம். எனவே, எல்லோருக்கும் அந்த வாய்ப்பு கொடுக்கப்பட வேண்டும்.*

2023 ஏப்ரல் 13] [திரு. சு. முத்துசாமி]

அதுபோல, தற்போது எந்தக் கட்டடங்களைக் கட்டியிருக்கிறார்களோ, எவ்வளவு பரப்பளவு இருக்கிறதோ, அதைவிடக் கூடுதலாகக் கொடுப்பதற்கு முயற்சி எடுக்கவேண்டுமேயொழிய, கட்டடத்தின் பரப்பளவைக் குறைக்கக்கூடாது என்பதையும் சொல்லியிருக்கிறோம்.

இங்கே பேசும்போது, மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லா அடிப்படை வசதிகளும் வேண்டுமென்று சொன்னார்கள். எல்லா வசதிகளையும் அந்தக் கட்டடத்தில் கொண்டு வரவேண்டுமென்று நாங்கள் சொல்லியிருக்கிறோம். மிகப்பெரிய கட்டுமான நிறுவனம் எவ்வளவு வசதிகளைக் கொடுத்திருக்கிறதோ, அத்தனை வசதிகளையும் கொண்டு வரவேண்டுமென்று நாங்கள் முடிவு எடுத்திருக்கிறோம். அவற்றையெல்லாம் விவரித்தால் நீண்ட நேரம் ஆகும் என்கிற காரணத்தினால், இதற்கு மேலே என்னால் சொல்ல முடியவில்லை. எனவே, அதனை ஒரு model ஆகக்கொண்டு, நாம் சென்று பார்க்க வேண்டுமென்று சொல்கிற கட்டடமாக அந்தக் கட்டடம் வரும் என்கிற உத்தரவாதத்தை மட்டும் இந்த நேரத்தில் நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அதுபோல 138 இடங்களில் வாடகைக் குடியிருப்புகள் இருக்கின்றன. அவற்றில் 60 இடங்களில் இருக்கின்ற 10,000 வீடுகள் இடிந்து விழுந்துகொண்டிருந்தன. இவையெல்லாம் கடந்த இரண்டு ஆண்டுகளில் நடந்ததா? ஏறத்தாழ 10, 15 ஆண்டுக் காலமாக இது நடந்துகொண்டிருக்கிறது. படிப்படியாக ஆண்டுதோறும் 2, 3 கட்டடங்களைக் கட்டியிருக்க வேண்டும். தற்போது மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆய்வில், 'இதில் இவ்வளவு பிரச்சினைகள் ஏன் இருக்கின்றன? உடனடியாக நடவடிக்கை எடுங்கள்' என்று சொன்னார்கள். தற்பொழுது 60 இடங்களில் இருக்கும் கட்டடங்களை இடிப்பதற்கான அனுமதியைப் பெற்று, மூன்று இடங்களிலுள்ள கட்டடங்கள் இடிக்கப்பட்டிருக்கின்றன. மீதமுள்ளவற்றை இடிப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இவற்றைக் கட்டுகிறபொழுதுகூட, தரம் முழுமையாகக் கண்காணிக்கப்பட வேண்டும் என்கிற ஏற்பாட்டை நாங்கள் செய்திருக்கிறோம். அதுமட்டுமல்ல, இந்த 60 இடங்களிலுள்ள கட்டடங்களையும் கட்டுவதற்கு சிறிது, சிறிதாக நடவடிக்கை எடுத்தால், நீண்ட காலம் ஆகும். எனவே, அதற்காக, இக்கட்டடங்களை joint venture முறையில் கட்டுவதற்கு ஏற்பாடு செய்யலாம் என்று நாங்கள் நடவடிக்கை எடுத்துக்கொண்டிருக்கிறோம். எனவே,

அந்த வகையில் அந்தப் பணிகளைச் செய்து முடிக்கிறபொழுது, பெரியளவில் தரமான கட்டடங்களாக நம்முடைய கைகளுக்குக் கிடைக்கும் என்று நாங்கள் எதிர்பார்க்கிறோம்.

இரவு 7-30

அடுத்ததாக, NOC. அதாவது, வீட்டு வசதி வாரியத்தால் இடங்கள் கையகப்படுத்தப்பட்டு வைக்கப்பட்டுள்ளன. தற்போது, முன்னாள் அமைச்சர் அவர்கள்கூட அதைப்பற்றிப் பேசினார்கள். இடம் கையகப்படுத்தும் பணி ஒரு நாள், இரண்டு நாட்களில் முடிவடையும் பணி அல்ல. 30, 40 ஆண்டுக் காலமாக 4(1) notice கொடுத்துவிட்டு, அப்படியே கிடப்பிலிருக்கிறது. அதற்குப் பிறகு, ஓரிடத்தில் 10,000 வீடுகள் கட்டப்பட்டிருக்கின்றன. அந்த வீடுகளை இடித்து, புதிதாகக் கட்டுகிறோம் என்று சொல்கிறபொழுதுதான், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய ஆய்வின்போது, 'இருக்கிற வீட்டை இடித்து, மீண்டும் வீடுகள் கட்டுவதற்கு நீங்கள் யார்? எனவே, அதற்கெல்லாம் ஏதாவது ஒரு தனித் திட்டத்தைக் கொண்டு வாருங்கள்' என்று சொன்னார்கள். அதற்காகத்தான் ஒரு குழு தற்போது ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. இப்பொழுது வீட்டு வசதி வாரியத்தில் என்னென்ன மாதிரியான நிலங்கள் இருக்கின்றன? நிலச் சொந்தக்காரர்களுக்கும், வீட்டு வசதி வாரியத்திற்கும், பலவிதமான பிரச்சினைகள் இருப்பதை எப்படித் தீர்க்கலாம் என ஆராய்ந்து வருகிறோம். 4, 5 Head-ல் வரும். அவற்றைப் பிரித்தெடுப்பதற்கான ஏற்பாடுகளை அரசு செய்துள்ளது. நீதிமன்றத்திற்குச் சென்று பாதியிலேயே வழக்கு இருக்கிறது. அவற்றையெல்லாம் பிரித்தெடுத்து அவர்களுக்கு நிரந்தரமான தீர்வுகளை வழங்குவதற்கான நடவடிக்கைகளை அரசு மேற்கொண்டு வருகிறது. விரைவில் அவை செய்து முடிக்கப்படும் என்பதையும் நான் தெரிவித்துக்கொள்கிறேன். ஏற்கெனவே இருக்கின்ற இடங்களில் நாம் கட்டடம் கட்டினாலே போதுமானதாக இருக்கும். புதிதாக யாரையும் தொல்லை செய்கின்ற எண்ணம் அரசிற்கு இல்லை. இனிவரும்காலங்களில் அவ்வாறு செய்ய வேண்டுமானால், நிலச் சேர்ம திட்டத்தில், அவர்களையும் இணைத்துக்கொண்டு செய்வதற்கான ஏற்பாடுகளை அரசு மேற்கொண்டு வருகிறது. 4 (1) Notice கொடுத்து, 100 ஆண்டு காலம் வைத்திருப்பவர்களைத் தொல்லைப்படுத்துவதற்கு நாங்கள் தயாராக இல்லை. அத்திட்டத்தினை முழுமையாகவும், இதைவிட அதிக கட்டுமானத்துடனும் மாற்றிச் செய்வதற்கான

2023 ஏப்ரல் 13] [திரு. சு. முத்துசாமி]

ஏற்பாடுகளை நாங்கள் செய்திருக்கிறோம். ஆனால், இவை அனைத்திற்கும் சில சட்டத் திருத்தங்களைச் செய்ய வேண்டியிருப்பதன் காரணமாக, துறைக்கு சிறிது கால அவகாசம் தேவைப்பட்டதென்பதையும் சொல்லிக்கொள்கிறேன். வீட்டு வசதி வாரியம் குறித்து அதிகமாக சொல்ல வேண்டுமானால், வீட்டு வசதி வாரியம் அந்தளவு தொல்லைகளை அந்த மக்களுக்குக் கொடுத்துக்கொண்டிருந்திருக்கிறது. இன்றைக்குப் பேசுகிறவர்கள், சென்ற 10 ஆண்டுகாலங்களில் செய்திருக்கலாம், விட்டுவிட்டார்கள். நான் குற்றச்சாட்டாகச் சொல்லவில்லை. எனவே, அந்தக் குழு அமைக்கப்பட்ட பிறகு, இந்த அரசு இன்னும் 6 மாதகாலத்தில் இப்பிரச்சினைகளுக்கு ஒரு முற்றுப்புள்ளியை வைக்கும் என்பதை மட்டும் இந்த நேரத்தில் நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அடுத்ததாக, இங்கு பல வீடுகள் விற்காமல் இருக்கின்றன என்று சொன்னார்கள். அது உண்மை. ப்ளாட்டுகள் விற்காமல் இருக்கின்றன என்று சொன்னார்கள். அதுவும் உண்மை. இதற்கெல்லாம் என்ன காரணம்? நான் ஏற்கெனவே சொன்னதுபோன்று தரமில்லாமல், தேவையற்ற இடங்களில் வீடுகள் கட்டப்பட்டவைதான் காரணம். மேலும், மக்கள் எதிர்பார்க்கின்ற அளவிற்கு அந்தக் கட்டடங்கள் அதற்கேற்ற வசதிகளோடு இல்லை. இனிமேல் அப்படி வரக் கூடாதென்ற காரணத்தினால்தான், அரசால் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு, அவற்றில் lowest bidder-ரிடம் வழங்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதன்மீது அவ்வாறுதான் நடவடிக்கைகள் தொடரப்பட முடியும். வேறு எந்த வகையிலும் எந்த அரசாங்கத்தாலும் இதனைக் கட்டுப்படுத்த முடியாது என்பது என்னுடைய தனிப்பட்ட எண்ணம். எனவே, அதன் காரணமாக, Joint Venture மூலம் அதைக் கொண்டுவர வேண்டும். Joint Venture மூலம் அதைக் கொண்டு வருவதால் நமக்கு எந்தவகையில் பிரச்சினைகள் தீருகிறதென்றால், வாரியம் அதற்கு தொகை வழங்க வேண்டிய அவசியம் இல்லை. அவர் கட்டுகின்ற கட்டடத்தில் ஒரு பகுதியை எடுத்துக்கொண்டு, மீதி இடத்தை அரசிடம் ஒப்படைத்துவிடுவார்கள். எனவே, இதனால் அரசிற்கு நிதி செலவில்லை. அடுத்ததாக, 500 வீடுகள் அரசால் கட்டப்படும்போது, அந்த 500 வீடுகளையும் அரசு விற்றாக வேண்டும். ஆனால், அவர்களாகவே கட்டுகின்றபோது, 200 அல்லது 250 வீடுகளை அவர்கள் எடுத்துக்கொள்வார்கள். எனவே இதில் பாதி விற்கப்பட்டுவிட்டதாக எடுத்துக்கொள்ளப்படும்.

எஞ்சியுள்ள வீடுகளை நாம் விற்றால் போதுமானது. இந்தவகையில் Joint Venture மூலமாக கட்டப்படும்போது, தரத்தையும் நாம் பார்க்க வேண்டிய அவசியமில்லை. ஏனென்றால், அவர்களது கட்டடத்தை விற்க வேண்டிய அவசியம் அவர்களுக்கு இருக்கிறது. எனவே, அந்தக் கட்டுமான நிறுவனம் தரமான கட்டடங்களைக் கட்டிக் கொடுக்கும். எனவே Joint Venture மூலம் பணிகளை மேற்கொள்வதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படுகின்றன. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களது ஆய்வின்போது இதை எங்களுக்குச் சொல்லியிருக்கிறார்கள். ஆனால், அதற்குச் சில சட்டத் திருத்தங்கள் தேவைப்படுகின்றன. அந்தப் பணிகள் தற்போது நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. இதுபோன்று பல திட்டங்களைச் செயல்படுத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. குறிப்பாகச் சொல்ல வேண்டுமானால், பட்டினப்பாக்கத்தில், 25.16 ஏக்கர் நிலம் இருக்கிறது. அதில் மிகப் பெரிய வணிக வளாகம் கட்டுவதற்கு ஏற்பாடுகள் செய்யப்படுகின்றன. நான் ஏற்கெனவே அறிவித்திருக்கிறேன். அதற்கு ஆலோசகர் நியமிக்கப்பட்டு, அவர்கள் பெரும்பகுதியான பணிகளை முடித்திருக்கிறார்கள். அப்பணிகள் முடிக்கப்பட்டவுடன் வேலைகள் துவங்கப்படும். அப்பணிகளை மேற்கொள்ளும்போது, அரசாங்கத்திற்கோ அல்லது வாரியத்திற்கோ எந்தவித செலவும் இருக்காது. ஆனால், அந்த இடத்தில் மிகப் பெரிய திட்டம் நிறைவேற்றப்படும் என்பதை மட்டும் இந்த நேரத்தில் உத்தரவாதமாகத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்ததாக, நான் ஏற்கெனவே கூறியதுபோன்று, 138 வாடகைக் கட்டடங்கள் இருந்தன. அவற்றில் 60–ஐ இடிப்பதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன. எஞ்சியிருக்கின்ற 78–ல், 13,958 வீடுகள் இருக்கின்றன. அவற்றில் தற்போது காலியாகவுள்ள வாடகை வீடுகள் 3,606. ஏனென்றால் அவை தரமானவையாக இல்லாததுதான் காரணம். இவற்றையெல்லாம் மாற்றுவதற்கான நடவடிக்கைகளை நாங்கள் எடுத்திருக்கிறோம்.

அதேபோன்று, நிலுவைப் பத்திரத்தை பற்றிச் சொன்னார்கள். நிலுவைப் பத்திரம் என்பது அப்படியே இருந்திருக்கிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு ஒரு மனு வந்தது. அதை வைத்து, எங்களை அழைத்துப் பேசினார்கள். 'அதற்கான ஒரு முகாமை நடத்தி, அதை வழங்குவதற்கான ஏற்பாடுகளைச் செய்யுங்கள்'

என்று சொன்னார்கள். இந்த அரசு பொறுப்பேற்ற பிறகு, முகாம் நடத்தப்பட்டு 11,137 நபர்களுக்கு documents வழங்கப்பட்டன. அதற்கு மேல் யாரும் மனு அளிக்கவில்லை. அவர்கள் அதற்கான தொகையைக் கட்டி, மனு அளித்தால் கண்டிப்பாக அந்த document-ஐ அவர்களுக்கு வழங்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதேபோன்று, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அந்த document தமிழில் வழங்கப்பட வேண்டுமென்றும், அதன் ஒதுக்கீட்டு ஆணையையும் தமிழில் வழங்கலாமென்றும் ஆலோசனை வழங்கினார்கள். இதன்காரணமாக தற்போது, ஏறத்தாழ 1,500 பத்திரங்களுக்குமேல் தமிழில் வழங்கப்பட்டுள்ளன. ஒதுக்கீட்டு ஆணையும் ஏறத்தாழ 5,400-க்கு மேல் தமிழில் வழங்கப்பட்டுள்ளன. இதுவெல்லாம் இப்பொழுது புதிதாக நாங்கள் செய்திருக்கிற பணி என்பதை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

இரவு 7-35

அதேபோல, நிறைய பேர் வீடுகளுக்கு பணம் கட்டவில்லை, அவர்களுக்கு சலுகை கொடுக்கலாமே என்றெல்லாம் சொல்லிக்கொண்டிருந்தார்கள். ஏறத்தாழ அவர்களுக்கு 53 கோடி ரூபாய் வட்டி தள்ளுபடி செய்வதற்காக உத்தரவு போடப்பட்டிருக்கிறது. அதில் பயனடைந்தவர்கள் 454 பேர். அதிலே, அரசுக்குச் செலவான தொகை 10 கோடியே 45 இலட்சம் ரூபாய் ஆகும். எனவே, மற்றவர்களும் அதைப் பயன்படுத்திக்கொள்வது அவர்களுடைய கையிலே இருக்கிறது. அதைப் பயன்படுத்திக் கொண்டால் இன்னும் அதிகமாக அவர்களுக்கு வாய்ப்புகள் கிடைக்கும். அதேபோல, வீட்டு வசதி வாரியத்திலே கருணை அடிப்படையிலே 63 பேர் வேலையில் அமர்த்தப்பட்டிருக்கிறார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பணி ஆணைகளை அவர்களுக்கு வழங்கினார்கள். வீட்டு வசதி வாரியத்திலே ஏறத்தாழ 50 சதவிகிதம் காலியிடங்கள் இருக்கின்றன. ஏன் வேலை delay ஆகிறது? அதற்குக் காரணமே அந்தப் பணியிடங்களை ஒழுங்காக, முறையாக காலத்திலே நிரப்பாததுதான். இப்போது, அதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன. ஏறத்தாழ 240 பேரை TNPSC மூலமாகத் தேர்ந்தெடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு, இப்போது அது முடிகிற தருவாயிலே இருக்கிறது. இரண்டாவது கட்டமாக 204 பேரை TNPSC மூலமாகத் தேர்ந்தெடுப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

அதேபோன்று இன்னொன்றையும் சொன்னார்கள்; கூட்டுறவு வீட்டுவசதி சங்கங்களின் மூலமாக வாங்கிய கடன்களைத் திருப்பிக் கட்ட முடியாமல் இருக்கிறார்கள் என்று. அதற்கு, ஏற்கெனவே ஒரு திட்டம் இருக்கிறது. அதைச் செய்வதற்கு முன்வந்தால் பிரச்சினையில்லை. ஆனால், அதிலே ஒரு குறைபாடு என்னவென்றால், அந்தத் திட்டம் எந்தக் காலத்தோடு முடியும் என்ற உத்தரவு இல்லாத காரணத்தால், எப்போது வேண்டுமானாலும் use செய்துகொள்ளலாம் என்றிருக்கிறார்கள். எனவே, அதற்கு ஒரு காலகட்டத்தை நிர்ணயிக்க வேண்டுமென்று நாங்கள் இருக்கிறோம். இப்போது ஏறத்தாழ 4,908 பிரச்சினைகள் முடிக்கப்பட்டு, பத்திரங்கள் அவர்களுக்கு வழங்கப்பட்டிருக்கின்றன என்பதை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து, நகர ஊரமைப்புத் துறையின் சார்பாக, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆலோசனையின்படி ஒற்றைச் சாளர முறையானது வேகப்படுத்தப்பட்டு, அது நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கிறது. நிறைய dispose செய்திருக்கிறார்கள். வந்திருக்கின்ற மனுக்களில் பெரும்பகுதியை தீர்த்துக் கொடுத்திருக்கிறார்கள். ஆனால், அதிலே கொஞ்சம் technical பிரச்சினைகள் இருக்கின்றன. எனவே, இப்போது 80 சதவிகிதம் அதிலே செய்ய முடிகிறது. இன்னும் மீதியையும் செய்து, 100 சதவிகிதத்திற்குக் கொண்டு வருவதற்கான ஏற்பாட்டை நாங்கள் செய்திருக்கிறோம். அது மிக விரைவிலேயே முடிக்கப்பட்டால், ஒற்றைச்சாளர முறையிலே எல்லா அனுமதிகளையும் சுலபமாகப் பெறுவதற்கான வாய்ப்புகள் இருக்கும்.

அதேபோல, விற்பனை ஒழுங்குமுறை குழுமம் என்ற ஒன்று இருக்கிறது. அது என்னவென்றால், ஒரு layout ஆக இருக்கட்டும் அல்லது வீடாக இருக்கட்டும் அதை அங்கு பதிவு செய்துவிட்டால் அதிலே எந்த தவறும் பிற்காலத்தில் இருக்காது. அதிலே தவறு இருந்தால், complaint செய்தால் அவர்கள் நடவடிக்கை எடுப்பதற்கு வசதியாக இருக்கும். எனவே, அந்த clearance இருந்தால்தான் Registration Department-ல் register செய்வார்கள். அதிலே தி.மு.க. ஆட்சி வருவதற்கு முன்னாலே, 2,421 மனுக்களுக்குத்தான் பதிவு செய்யப்பட்டு அனுமதி கிடைத்தது. இந்த இரண்டு ஆண்டு காலத்திலே 12,990 மனுக்கள் பெறப்பட்டு, அவை dispose செய்யப்பட்டிருக்கின்றன என்பதை இந்த நேரத்திலே நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

2023 ஏப்ரல் 13] [திரு. சு. முத்துசாமி]

அடுத்தது, layout regularization-ஐ பற்றி பேசினார்கள். அது பெரிய அளவிலே செய்யப்பட்டிருக்கிறது. அது நிறுத்தப்பட்டு விட்டது என்ற ஒரு கருத்தை இங்கே சொன்னார்கள். அப்படி அல்ல. அதற்கு ஒரு காலகட்டம் கொடுக்கப்பட்டிருந்தது. அந்த காலகட்டம் முடிந்தவுடனேயே மேலும் ஒரு 6 மாத கால நீட்டிப்பு கொடுக்கப்பட்டிருக்கிறது. அதை முறையாக பயன்படுத்திக்கொள்ள வேண்டுமென்பதைத்தான் எங்களுடைய வேண்டுகோளாக நாங்கள் வைக்கிறோம். நிச்சயமாக அதன்மீது சரியான நடவடிக்கை எடுப்போம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோல, கல்வி நிறுவனங்களுடைய கட்டடங்கள். அனுமதியில்லாமல் கட்டப்பட்டிருந்த அந்தக் கட்டடங்களையும் வரன்முறைப்படுத்துவதற்காக, மேலும் 6 மாத காலம் அவகாசம் கொடுத்திருக்கிறோம். இதுவரை இல்லாத அளவிற்கு அந்தக் கட்டடங்களுக்கான வரன்முறையை இந்த அரசாங்கம் செய்து கொடுத்திருக்கிறது என்பதை இந்த நேரத்திலே நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து, கட்டுமான நிறுவனத்திலே இருக்கிற Developers, Builders, அதேபோல, அதிலே பணியாற்றுகிற தொழிலாளர் சங்கங்கள், இந்தச் சங்கங்கள் எங்களிடத்திலே நிறைய கோரிக்கைகளைக் கொடுத்தார்கள். நாங்கள் ஒரு கலந்தாலோசனைக் கூட்டத்தை நடத்தினோம். 41 சங்கங்கள் அதிலே வந்து கலந்து கொண்டன. 120 பேர் அந்த கலந்துரையாடலில் கலந்துகொண்டார்கள். ஏறத்தாழ 5 மணி நேரம் நாங்கள் அதை நடத்தினோம். அவர்கள் எங்களிடத்திலே கொடுத்த கோரிக்கைகள் 44. அதில் 11 கோரிக்கைகள் on the spot முடித்துக் கொடுப்பதாக நாங்கள் உத்தரவாதம் கொடுத்திருக்கிறோம். அதேபோல 6 கோரிக்கைகளுக்கு மற்ற துறைகளோடு பேசி முடிவெடுக்க வேண்டும். அதில் positive ஆக முடிவெடுக்க முடியும் என்ற நம்பிக்கை எங்களுக்கு இருக்கிறது. மிச்சம் 9 கோரிக்கைகளுக்கு Consultant மூலம் கலந்தாலோசித்து முடிவெடுக்க வேண்டும். அதுவும் positive ஆகத்தான் இருக்கும். எனவே 26 கோரிக்கைகள் நிறைவேற்றுகின்ற வகையில் இருக்கின்றன. 18 கோரிக்கைகளை நிறைவேற்ற முடியாது. அதை அவர்களிடத்திலே நாங்கள் சொல்லியிருக்கிறோம். இன்னொன்றையும் சொல்ல வேண்டுமென்றால், மாண்புமிகு உறுப்பினர் திரு. ரூபி. ஆர். மனோகரன் அவர்கள் பேசுகின்றபோது இந்த கோரிக்கைகளில் 10 கோரிக்கைகளை சொல்லிப் பேசினார்கள். அதிலே 6 கோரிக்கைகளைச் செய்ய முடியும்.

மீதமுள்ள 4 கோரிக்கைகளை மட்டும் செய்ய முடியாது என்பதை இந்த நேரத்திலே நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

இரவு 7–40

அதேபோல, அரசுப் பணியாளர் தேர்வாணையம் மூலமாக தொழில்நுட்ப அலுவலர்கள் 96 பேரை நியமிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. தொழில்நுட்ப அலுவலர் பணியிடங்கள் காலியாக இருந்தால் வேலைகள் எப்படி நடக்கும்? அதனால் delay ஆகின்றது. Delay ஆகின்றது என்ற குற்றச்சாட்டு மட்டும் சரியல்ல. ஏனென்றால் இப்பணியிடங்களை நிரப்புகின்ற பணியை, TNPSC வாயிலாகச் செய்யும்போது கொஞ்சம் காலதாமதமாகிறது. அந்த process-ஐ நான் குறை சொல்லவில்லை. எனவே, அப்படிப் பார்க்கின்றபோது, எங்களுக்கு அதற்கு அவகாசம் தேவைப்பட்டது. இப்போது நாங்கள் அப்பணியிடங்களை நிரப்புகிறோம். இப்போதுதான் எல்லா மாவட்டங்களிலும் தொழில்நுட்ப அதிகாரிகள் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். இனிமேல் அந்தப் பணிகள் மிக வேகமாக நடக்கும் என்கிற உத்தரவாதத்தை மட்டும் இந்த நேரத்தில் நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதற்கடுத்து, புதியதாக மண்டல திட்டங்கள் (Regional Plans) 11 இடங்களில், CMDA-யையும் சேர்த்தால் 12 இடங்களில் செயல்படுத்தப்படுகின்றன. இவையெல்லாம் இந்த Plan-ஐ ஒழுங்குபடுத்துவதற்காகச் செய்யப்படுகிறது. என்னென்ன, எங்கெங்கு வர வேண்டும். எங்கு வரக்கூடாது என்பதை நமக்கு வரன்முறைப்படுத்திக் கொடுப்பதற்கு அது பயன்படும். எனவே, அதை இந்த அரசாங்கம் செய்திருக்கிறது.

அதேபோல, Master Plan-ஐ பொறுத்தவரை, உங்களுக்கு ஒன்றைச் சொல்ல வேண்டும். மொத்தமாக தமிழகத்திலே 1,30,060 சதுர கிலோமீட்டர் பரப்பளவு உள்ளது. இதிலே 9,611 சதுர கிலோமீட்டர் மட்டும்தான் அந்த முழுமைத் திட்டத்திலே இடம் பெற்றிருக்கிறது; அது 7 சதவிகிதம். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆய்வு செய்கிறபோது, அதை முதற்கட்டமாக 22 சதவிகிதமாக உயர்த்துங்கள் என்று உத்தரவிட்டார்கள். அதன்பிறகு, மறுபடியும் உயர்த்த வேண்டும். அதன்படி இந்த 2 ஆண்டுக்காலத்தில் அந்த 9,611 சதுர கிலோமீட்டர் என்பதை 23,130 சதுர கிலோமீட்டர் ஆக நாங்கள் உயர்த்தியிருக்கிறோம்.

7 சதவிகிதம் என்பது இன்றைக்கு 18 சதவிகிதமாக உயர்ந்திருக்கிறது. இன்னும் குறுகிய காலத்திலேயே மீதமிருப்பதையும் நாங்கள் செய்து காட்டுவோம் என்பதை இந்த நேரத்திலே நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். இது எதற்காக என்று சொன்னால், ஒரு uniform–ஆன வளர்ச்சியை மாநிலம் முழுவதும் ஏற்படுத்துவதற்கான திட்டம் இது. எனவே, இதைப் படிப்படியாகச் செய்து முடிக்கிறபொழுது—நகரமயமாதல் அதிகமாக ஆகிறதென்று மிகச்சிறப்பாக இங்கே சொன்னார்கள். இதையெல்லாம் ஒழுங்குபடுத்துவதற்காகத்தான் இந்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

அதேபோல, நகர்ப்புற வளர்ச்சிக் குழுமங்கள். இப்போது இங்கே CMDA–க்கள் இருப்பது போல Urban Development Authority, இதுவரை ஏற்படுத்தப்படவில்லை. நம்முடைய அரசு வந்த பின்னாலேதான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய முயற்சியின் காரணமாக, கோவை, திருப்பூர், மதுரை, சேலம், திருச்சி உள்ளிட்ட 6 இடங்களிலே இப்போது துவக்கப்பட்டிருக்கின்றன. அப்படிச் செய்கிறபொழுது, CMDA-வைப் போல, அந்தப் பணிகள் துரிதமாகவும், மிகத் துல்லியமாகவும், கவனித்துச் செய்வதற்கான வாய்ப்பு ஏற்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

26 உள்ளூர் திட்டக் குழுமங்கள் இருக்கின்றன. எனவே, அந்தப் பணிகளை அவர்கள் செய்து கொண்டிருக்கிறார்கள். அதுபோக, New Town Development Authority. மாமல்லபுரம் போன்ற 8 இடங்கள் தனியாக கவனிக்கப்படுவதற்காக அவை செய்யப்பட்டிருக்கின்றன என்பதை நான் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அதேபோல, தனித்த உள்ளூர் திட்டக் குழுமங்கள். இவை 89 இடங்களிலே இருக்கின்றன. இதையெல்லாம் எதற்காகச் சொல்கிறேன் என்று சொன்னால்,வளர்ச்சியை ஒழுங்குபடுத்துவதற்கு இவையெல்லாம் பயன்படும். அந்தந்த இடத்திலே கட்டுப்பாடாகச் செய்வதற்குப் பயன்படும், திட்டமிடுவதற்கு வசதியாக இருக்கும். Non–Planning area என்றிருக்கிறது. அது கவனிக்கப்படாமல் இருந்தது. அதையெல்லாம் இப்பொழுது முறையாகப் பார்த்து, அங்கேயும் முறையான வளர்ச்சி வருவதற்கான ஏற்பாடுகளைச் செய்ய வேண்டுமென்று நாங்கள் செய்திருக்கிறோம்.

அதேபோல, நாங்கள் PWD–ல் போய் NOC வாங்க வேண்டியிருக்கிறது. சிரமமாக இருக்கிறதென்றெல்லாம் கோரிக்கை வைக்கிறபொழுது சொன்னார்கள். ஆனால், சின்ன வாய்க்காலாக

இருந்தால், உங்கள் கட்டடம் கட்டுவதற்கு வாய்க்காலிலிருந்து ஒரு மீட்டர் இடைவெளி விட்டுவிட்டால் permission-க்கு NOC-க்குப் போக வேண்டாம். அதேபோல, குளம், ஏரியாக இருந்தால், 3 மீட்டர் இடைவெளி விட வேண்டும். அதேபோல, ஆறாக இருந்தால், 15 மீட்டர் இடைவெளி விட வேண்டும். எனவே, இந்த இடைவெளியை விட்டுவிட்டால், NOC-க்குப் போக வேண்டிய அவசியம் இல்லை. எனவே, அந்தக் கோரிக்கை அவருடைய கைகளிலேதான் இருக்கிறதேயொழிய, அந்த இடைவெளி விடாமல் கட்டினால், அது மிகப்பெரிய தவறு என்பதை இந்த நேரத்திலே நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். இன்னொரு கோரிக்கையைச் சொல்லியிருக்கிறார்கள். இந்த carpet area என்பது என்ன கணக்கு? அது ஒவ்வொரு துறையிலும் ஒரு மாதிரி இருக்கிறது என்று சொல்லியிருக்கிறார்கள். அதை uniform ஆகக் கொண்டுவருவதற்கான நடவடிக்கையை நாங்கள் வாய்க்காலிலிருந்து எடுத்திருக்கிறோம் என்பதை மட்டும் நான் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். இதற்கு முன்னாலே layouts-ஐ பார்த்தோமென்றால் 30 அடி, 40 அடி, 60 அடி, 80 அடி என இந்தக் கணக்கிலேதான் இருக்கும்.

இரவு 7-45

அடிக் கணக்கிலேதான் இருக்கும். இப்போது அது metric முறையில் கொண்டு வர வேண்டிய அவசியம் ஏற்பட்டுவிட்டது. எல்லா இடத்திலேயும் அப்படி கொண்டு வர வேண்டுமென்ற காரணத்தினால், metric முறையில் வருகிறபோது, 9 மீட்டர், 12 மீட்டர், 18 மீட்டர், 24 மீட்டர் இந்த கணக்கில் வருகிறது. ஆனால், இந்த 9 மீட்டரும், 30 மீட்டரும் tally ஆக வேண்டும். ஆனால், அது ஆவதில்லை. 30 அடி என்பது 9 மீட்டருக்கு கணக்கை போடுகிறபோது குறைகிறது. அதிலே அவர்களுக்கு சில சிக்கல்கள் இருக்கின்றன. இப்போது நாங்கள் என்ன சொல்லியிருக்கிறோம் என்றால், அந்த 30 அடியைச் சமப்படுத்துகிற அளவிற்கு அந்த metric முறையிலே மீட்டர் அதிகப்படுத்தப்படும். அது tally செய்யப்படும் என்று நாங்கள் இப்போது சொல்லியிருக்கிறோம், அதைச் செய்கிறபோது, அந்தக் குறைபாடுகள் நீக்கப்படும். இதுவெல்லாம் இன்றைக்கு மட்டும் இல்லை, நீண்டகாலமாக இருக்கிறது. எனவே, அதைச் செய்வதற்கான நடவடிக்கைகளை எடுத்துக் கொண்டிருக்கிறோம்.

2023 ஏப்ரல் 13] [திரு. சு. முத்துசாமி]

மாண்புமிகு உறுப்பினர் திரு. செல்வராஜ் அவர்கள்கூட பேசும்போது சொன்னார். HACA பகுதியில், மலைப் பகுதியிலே ஒரு village என்று அவர்கள் வைத்திருக்கிறார்கள். எனவே, அது பாதிப்பை ஏற்படுத்துகிறது என்பது உண்மை. ஒரு village-ல் குறைவான இடம், இன்னொரு village-ல் அதிகமாக இடம் பாதிக்கப்படுகிறது. எனவே, அதை ஒழுங்குப்படுத்துவதற்காக அந்த forest boundary-லிருந்து ஒரு குறிப்பிட்ட எல்லையை நிர்ணயிக்கலாம் என்று நாங்கள் கருதினோம். அதற்கான ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களிடம் அதற்கான பரிந்துரைகள் கேட்கப்பட்டிருக்கின்றன. ஆனால், அதில் இன்னொரு பிரச்சினையும் இருக்கிறது. மத்திய அரசாங்கம் சில வரைமுறைகளை, யானை வழித்தடம் உள்ளிட்டு இப்படியெல்லாம் identify செய்திருக்கிறபோது, அவர்கள் அதையும் village ஆக போட்டிருக்கிறார்கள். எனவே, அதைப் பற்றியும் ஆய்வு செய்ய வேண்டிய ஓர் அவசியம் இருக்கிறது. அதையும் நாங்கள் விரைவாகச் செய்து முடிப்போம் என்பதை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அதைப்போல, கடலோரப் பகுதிகள்-CRZ. இதில் பல பிரச்சினைகள் இருக்கின்றன. 2011-ல் ஒரு சட்டம் இருந்தது. அந்தச் சட்டத்தின்படி முதலில் permission கொடுத்துக் கொண்டிருந்தார்கள். 2019-ல் சட்டம் திருத்தப்பட்டிருக்கிறது. அதைக் கொஞ்சம் relax செய்து கொஞ்சம் better ஆக கொண்டு வந்திருக்கிறார்கள். ஆனால், அந்த அறிக்கை வெளியிடுவதற்கு முன்னாலேயே இந்த CRZ குறித்து ஒன்றிய அரசால் அறிக்கை வெளியிடப்பட்டு விட்டது. 17 நாட்கள் வித்தியாசம். அதனால் நாம் இப்போது 2011-ல் இயற்றிய சட்டத்தைத்தான் follow செய்ய வேண்டியிருக்கிறது. 2019-ல் இயற்றிய சட்டத்தை follow செய்ய முடியவில்லை. மத்திய அரசாங்கத்திற்கு இப்போது அதுகுறித்து எழுதியிருக்கிறோம். அவர்களிடத்திலிருந்து இன்னும் அனுமதி வரவில்லை. கண்டிப்பாக அந்த அனுமதியை அவர்கள் கொடுத்துதான் ஆக வேண்டுமென்று நாங்கள் கருதுகிறோம். அதற்கான ஏற்பாட்டை நாங்கள் செய்திருக்கிறோம் என்பதை இந்த நேரத்தில் நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அறிவிப்புகள்

வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை

1. அங்கீகாரமற்ற கட்டுமானங்கள் மற்றும் விதிமீறல் கட்டடங்கள் பெருகுவதைத் தடுக்கவும், ஒழுங்குபடுத்தவும் நகர் ஊரமைப்பு இயக்ககத்தின் தலைமை அலுவலகத்தில் அதற்கென்று தனி அமலாக்கப் பிரிவு (Enforcement Cell) ஒன்று உருவாக்கப்படும்

மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலர்கள் தங்கள் பகுதியில் உருவாகும் அங்கீகாரமற்ற கட்டுமானங்களைக் கண்டறிந்து அவற்றின்மீது ஆரம்ப நிலையிலேயே உரிய தடுப்பு நடவடிக்கை எடுக்க வேண்டும். ஆனால், பல கட்டுமானங்கள்மீது உரிய நேரத்தில் நடவடிக்கை மேற்கொள்ளப்படாததால் அனுமதியற்ற கட்டுமானங்கள் கட்டிமுடிக்கப்பட்டு மேல்முறையீட்டு மனுக்கள் அதிகமாக பெறப்படும் நிலை உள்ளது. மேலும், இது சம்பந்தமாக நீதிமன்ற வழக்குகளும் தொடுக்கப்படுகின்றன. இந்நிலையைத் தவிர்க்கும் விதமாக மாவட்டங்களில் திடீர் இடநேராய்வு செய்து விதிமீறல் கட்டடங்களை/மனைப்பிரிவுகளைத் கண்டறிந்து நடவடிக்கை எடுக்க தலைமை அலுவலகத்தில் பிரத்யேக அமலாக்கப் பிரிவு ஒன்று உருவாக்கி செயல்படுத்தப்படும்.

அங்கீகாரமற்ற கட்டடங்கள், அதைப்போன்று மனைகளை முறையாகக் கண்காணிப்பதற்கு ஒரு Enforcement Cell–அமலாக்கப் பிரிவு ஏற்படுத்தப்படும் என்று நாங்கள் சொல்லியிருக்கிறோம். அது கவனமாகச் செயல்படும்.

2. தகவல் தொழில்நுட்ப [செயற்கைகோள் படங்கள் (Satellite Imagery) மற்றும் புவியியல் தகவல் தொகுப்பு (Geographical Information System–GIS)] வசதிகளைப் பயன்படுத்தி பிரத்யேக மென்பொருள் (Software) தயாரித்து அதன்மூலம் அங்கீகாரமற்ற மற்றும் விதிமீறல் கட்டடங்களை ஆரம்ப நிலையிலேயே கண்டறிந்து நடவடிக்கை எடுக்க, முதல் கட்டமாக கோயம்புத்தூர் மாவட்டத்தில் சோதனை அடிப்படையில் இத்திட்டம் செயல்படுத்தப்படும்

மாவட்ட அலுவலகங்களால் அங்கீகாரமற்ற கட்டுமானங்களைக் கண்டறிந்து அமலாக்க நடவடிக்கை (Enforcement Action) எடுப்பது மிகவும் சவாலாக உள்ளதால், செயற்கைக்கோள் படங்கள் மற்றும் புவியியல் தகவல் தொகுப்பு (GIS) போன்ற தகவல் தொழில்நுட்ப வசதிகளை பயன்படுத்தி

2023 ஏப்ரல் 13] [திரு. சு. முத்துசாமி]

அங்கீகாரமற்ற கட்டுமானங்களைக் கண்டறிய மென்பொருள் (Software) தயாரித்து தானியங்கி முறையில் செயல்படுத்த நடவடிக்கை எடுக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது, இதன்பொருட்டு ரூ.3.51 கோடி செலவில் மென்பொருள் தயாரித்து சோதனை முறையில் முதலில் கோயம்புத்தூர் மாவட்டத்தில் இத்திட்டம் செயல்படுத்தப்படும்.

அங்கீகாரமற்ற மற்றும் விதிமீறல் கட்டடங்கள் கட்டப்பட்டிருக்கின்றனவா என்பதை நாம் நேரடியாக போய் பார்த்துக் கொண்டிருப்பதற்குப் பதிலாக, இன்றைக்கு இருக்கிற தொழில்நுட்ப வசதிகளைப் பயன்படுத்தி, மென்பொருள் (Software) தயாரித்து அதன் மூலமாக அதைச் செய்யலாம் என்று சோதனை அடிப்படையில் கோயம்புத்தூர் மாவட்டத்தில் முதலில் அதை அமலாக்கலாம் என்று நாங்கள் ஏற்பாட்டைச் செய்திருக்கிறோம்.

3. மாண்புமிகு முதல்வர் அவர்களின் ஆய்வின்போது அறிவுறுத்தியதன்படி மாநிலத்தின் திட்டப் பகுதியை (Planning Area) தற்போது உள்ள 7 சதவீத நிலப்பரப்பிலிலிருந்து 22 சதவீதமாக அதிகரிக்க புதிதாக 135 இடங்களில் மொத்தம் 23,129.98 சதுர கி.மீ. நிலப்பரப்பு முழுமைத் திட்டம் (Master Plan)—ன்கீழ் கொண்டு வரப்பட்டு முழுமை திட்டங்கள், புது நகர் வளர்ச்சித் திட்டங்கள் (New Town Development Plan) தயாரிக்கப்படுகிறது

தமிழ்நாட்டின் மொத்தப் பரப்பளவு 1,30,060 சதுர கி.மீ. அதில் 2021 கணக்கின்படி, முழுமைத் திட்டத்தில் (Master Plan) 9,611 சதுர கி.மீ. (7 சதவீதம்) சேர்க்கப்பட்டுள்ளது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆய்வின்போது, முழுமைத் திட்டப் பகுதி 22 சதவீதமாக (28,353 சதுர கி.மீ.) உயர்த்தப்பட வேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டது. அதன் அடிப்படையில் 23 நகரங்களில் முழுமைத் திட்டம் மூன்று மாத காலத்திற்குள் முடிக்கப்படும். மேலும், 112 முழுமைத் திட்டப் பகுதிகள் அறிவிக்கப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன. படிப்படியாக பணிகள் முடிக்கப்படும். இவ்வனைத்து பணிகளும் முழுமை பெறுகிறபோது முழுமைத் திட்டப் பகுதி 24,319 சதுர கி.மீ. (19 சதவீதமாக) இருக்கும். மேலும் முழுமைத் திட்டப் பகுதிகளைக் கூடுதலாக கொண்டு வர தொடர் நடவடிக்கை எடுக்கப்படும்.

நான் முதலிலே சொன்னேன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய ஆலோசனைப்படி planning area, Master Plan

7 சதவீத நிலப்பரப்பிலிருந்து 22 சதவீதமாக அதிகப்படுத்தலாம் என்பதும் ஓர் அறிவிப்பாக இருக்கும்.

4. புராதனக் (Heritage) கட்டடங்கள் மற்றும் பழங்கால கட்டடங்கள் அமைந்துள்ள பகுதிகளைக் கண்டறிந்து அவை தொடர் கட்டடப் பகுதிகளாக (Continuous Built–up Area–CBA) முழுமைத் திட்டத்தில் (Master Plan) சேர்க்கப்படும்

*நகர் ஊரமைப்பு இயக்ககப் பகுதியில் அமையும் முழுமைத் திட்டங்களுக்கான (*Master Plan*) திட்டப் பகுதிகள் (*Planning Areas*) உறுதி செய்யப்பட்டு, இறுதி வரைவு முழுமைத் திட்டம் முடியும் தருவாயில் உள்ள 23 திட்டப் பகுதிகள் மற்றும் உறுதி செய்யும் பொருட்டு பல்வேறு நிலைகளில் உள்ள இதர 112 திட்டப் பகுதிகள் ஆக மொத்தம், 135 முழுமைத் திட்டங்களில் அமையும் புராதனக் கட்டடங்கள், பழங்காலம் தொட்டு வளர்ச்சி அடைந்து வரும் பகுதிகள் போன்றவற்றைக் கண்டறிந்து அவற்றை தொடர் கட்டடப் பகுதிகளாக (*Continuous Built-up Area-CBA*) அந்தந்த நகருக்கான முழுமைத் திட்டத்தில் சேர்த்து நடைமுறைப்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.*

அடுத்து, Continuous Built-up Area *பற்றித்தான் இங்கே பேசினார்கள். இந்த* Continuous Built-up Area *பற்றி ஏற்கெனவே நாங்கள் ஒரு முடிவு எடுத்து, பழங்கால நகரங்கள்,* old towns, *அவற்றில் பழங்காலக் கட்டடங்களை* Master Plan *மூலம் கண்டுபிடித்து, ஒரு* Continuous Built-up Area *ஆக அந்த இடங்களை அறிவிக்க வேண்டுமென்று முடிவு செய்திருக்கிறோம். அப்படி செய்கிறபோது அந்தப் பிரச்சினை தீரும்.*

5. மலையிடப் பகுதிகளில் (Hill Areas) வளர்ச்சியை ஒழுங்குப்படுத்துவதற்கு தற்பொழுது பயன்பாட்டில் உள்ள பல்வேறு விதிகளை மறு ஆய்வு செய்து மலைப் பகுதிகளுக்கென ஒருங்கிணைந்த விதிகள் உருவாக்கப்படும்

*21 மாவட்டங்களில் அமையும் அறிவிப்பு செய்யப்பட்ட மலையிட கிராமங்களில் (*Hill Villages*) ஏற்படும் வளர்ச்சியை ஒழுங்குபடுத்துவதற்கு நீலகிரி மாவட்டம், கொடைக்கானல் வட்டம் மற்றும் ஏற்காடு ஊராட்சி ஒன்றியம் போன்ற மலை வாசஸ்தலங்களுக்கு (*Hill Stations*) மாவட்ட நகராட்சிகள் (மலை வாசஸ்தலங்கள்) கட்டட விதிகள், 1993 என்றும் பிற மாவட்டங்களில் அமையும் மலைப் பகுதிகளைப் பொறுத்தமட்டில் தமிழ்நாடு*

2023 ஏப்ரல் 13] [*திரு. சு. முத்துசாமி*]

*ஒருங்கிணைந்த வளர்ச்சி மற்றும் கட்டட விதிகள் (*Tamil Nadu Combined Development and Building Rules*), 2019 எனவும் மலைப் பகுதிகளுக்கு வெவ்வேறான விதிகள் உள்ளதை மறு ஆய்வு செய்து, மலைப்பகுதிகளுக்கென ஒருங்கிணைந்த வளர்ச்சி மற்றும் கட்டட விதிகள் உருவாக்கப்படும்.*

மலையிடப் பகுதிகளில் இருக்கிற விதிகள், ஒவ்வொரு area*-விற்கும் ஊட்டியில் ஒரு விதி இருக்கிறது. கொடைக்கானலில் ஒரு விதி இருக்கிறது. எனவே, இதை ஒழுங்கு செய்து, ஒரே மாதிரியான விதிகளைக் கொண்டு வருவதற்காக ஒரு குழு அமைக்கப்பட்டிருக்கிறது. அது வருகிறபோது மலையிடத்தில் ஒரே மாதிரியான வளர்ச்சி நடவடிக்கைகள் வரும் என்பதை நான் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.*

6. நகர் ஊரமைப்பு இயக்ககத்தில் உள்ள வரைபடம் மற்றும் ஆவணங்களை கணினிவழி பிரதியெடுத்தல் (Computerised Scanning)

*மின் ஆளுமை முறையை (*E-Governance*) துறையின் அனைத்துப் பணிகளிலும் புகுத்தி செயல்படுத்த முனைந்துள்ள இக்காலகட்டத்தில், நகர் ஊரமைப்புத் துறையில் உள்ள, ஏற்கெனவே திட்ட அனுமதி வழங்கப்பட்ட வரைபடங்கள் மற்றும் சம்பந்தப்பட்ட ஆவணங்களைப் பதிவறையில் நீண்ட காலம் பாதுகாத்து வைப்பது சிரமம் என்பதால், எதிர்காலத் தேவையினைக் கருத்தில்கொண்டு அவற்றை கணினிவழி பிரதியெடுத்து (*Computerised Scanning*) பாதுகாக்கப்படும்.*

நகர ஊரமைப்பு இயக்ககத்தில் இருக்கிற வரைபடம் மற்றும் ஆவணங்களை எல்லாம் கணினி வழியில் கொண்டு வருவதற்கு நாங்கள் நடவடிக்கை எடுத்திருக்கிறோம். Record *எதையாவது நாம் கேட்டோம் என்றால், அந்த* record*-ஐ எடுப்பது என்றால் கஷ்டம். ஒன்று* record *இருக்காது அல்லது* record*-ஐ எடுக்க அதிக நாட்கள் ஆகும். கணினி வழியில் கொண்டு வந்துவிட்டால், அது சுலபமாக இருக்கும் என்கிற காரணத்தினால் அதற்கான ஏற்பாட்டைச் செய்திருக்கிறோம்.*

7. கூட்டு உள்ளூர் திட்டப் பகுதியாக (Composite Local Planning Area) இதுவரை அறிவிப்பு செய்யப்படாத நகராட்சி மற்றும் அவற்றைச் சுற்றியுள்ள பகுதிகளை உள்ளடக்கி கூட்டு உள்ளூர் திட்டப் பகுதிகளாக அறிவிப்பு செய்யப்படும்

மாநகராட்சிகள் மற்றும் சில நகராட்சிகளை மையப் பகுதியாகக் கொண்டு அவற்றை சுற்றியுள்ள வளர்ச்சியடையக்கூடிய பகுதிகளைச் சேர்த்து, கூட்டு உள்ளூர் திட்டப் பகுதிகள் (Composite Local Planning Area) அறிவிப்பு செய்யப்பட்டு அவற்றிற்கு முழுமைத் திட்டங்கள் (Master Plans) தயாரிக்கப்படுகின்றன. எனவே, இதுவரையிலும் கூட்டு உள்ளூர் திட்டப் பகுதியாக அறிவிப்பு செய்யப்படாத நகராட்சிகளை அவற்றைச் சுற்றியுள்ள பகுதிகளை உள்ளடக்கி கூட்டு உள்ளூர் திட்டப் பகுதிகளாக அறிவிப்பு செய்யப்படும்.

8. கட்டட முடிவு சான்று (Completion Certificate) விரைந்து வழங்கவும் பிணையத் தொகையை (Security Deposit) முடிவு சான்று வழங்கும்போதே திருப்பிக் கொடுக்கவும் நடவடிக்கை எடுக்கப்படும்

கட்டட முடிவு சான்று (Completion Certificate) வழங்கக் கோரும் விண்ணப்பங்களில் மாவட்ட அலுவலர் விரைந்து இட நேராய்வு செய்து முடிவுச் சான்று வழங்கவும், செலுத்தப்பட்ட பிணையத் தொகையை (Security Deposit) முடிவுச் சான்று கொடுக்கும்போது விண்ணப்பதாரருக்கு திருப்பி வழங்கும் வகையிலும் நடைமுறைப்படுத்தப்படும்.

அடுத்து, கட்டடம் கட்டி CC கொடுப்பது. CC கொடுப்பதில் காலதாமதம் ஏற்படுகிறது. அதோடு அந்த security deposit–ஐ அவர்கள் கொடுப்பதற்கு late ஆகிறது என்று சொன்னார்கள். அது துறை அதிகாரிகளிடம் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. அவர்கள் application கொடுத்த உடனேயே, Completion Certificate நடவடிக்கைகளையும், அந்த Certificate கொடுக்கும்போதே security deposit–ஐ திருப்பிக் கொடுக்க வேண்டுமென்பதையும் நாங்கள் அவர்களுக்கு சொல்லியிருக்கிறோம் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

இரவு 7–50

9. தமிழ்நாடு விரைவாக நகர்மயமாகும் மாநிலமாகத் திகழ்வதால், நகர்ப்புரப் பகுதிகளில் வளர்ச்சியை ஊக்குவிப்பதற்காக, தமிழ்நாடு ஒருங்கிணைந்த வளர்ச்சி மற்றும் கட்டட விதிகள் (Tamil Nadu Combined Development and Building Rules), 2019–ன்படி நடைமுறையில் உள்ள விதிகளில்:

2023 ஏப்ரல் 13] [*திரு. சு. முத்துசாமி*]

*புதிய மனைப் பிரிவு (*Layout*) அமைப்பதற்குத் தேவையான அணுகு சாலை அகலம் நிர்ணயிக்க,*

*திறவிட ஒதுக்கீடு (*Open Space Reservation–OSR*) எவ்வளவு தேவைப்படுகிறதோ அதற்கு மட்டும் வழிகாட்டு மதிப்பீட்டின்படி தொகை வசூலிக்க,*

*9.0 மீட்டருக்குக் குறைவான அகலம் கொண்ட சாலையில் அமைக்கப்படும் கட்டடங்களுக்கு உயர் தளப் பரப்புக் குறியீடு (*Premium FSI*) வழங்க,*

*அதிக உயரம் இல்லாத கட்டட (*Non–High Rise Building*) வகையைச் சார்ந்த கட்டடங்களுக்கு தற்போதுள்ள உயரத்தை கூடுதலாகக் கொடுக்க,*

*கட்டட முடிவுச் சான்று (*Completion Certificate*) பெற விலக்கு பெறுவதற்கு குடியிருப்புகள் எண்ணிக்கை, அதிகபட்ச பரப்பளவு நிர்ணயிக்க,*

பிற இடங்களில் பொதுப் பட்டா உள்ளவற்றிற்கு அனுமதிப்பது போன்று நத்தம் பகுதியில் தோராயப் பட்டா, நிரந்தர பட்டாவிற்கும் வளர்ச்சித் திட்டங்களுக்கு அனுமதி வழங்க,

*கலந்தாய்வர் (*Consultant*) மூலம் ஆய்வறிக்கை தயார் செய்து, துறை பரிசீலித்து உரியவாறு செயல்படுத்தும்.*

9–வது அறிவிப்பில் பலவற்றை நாங்கள் சொல்லியிருக்கிறோம். இதெல்லாம் ஆய்வு செய்து செய்யப்பட வேண்டியவை. ஆனால், அறிவிப்பில் வந்திருக்கிறது. ஆய்வு செய்து, அதற்குப் பின்னர்தான் அதை அமலாக்க முடியும். அதை positive *ஆகச் செய்வதற்காகத்தான் நாங்கள் நடவடிக்கை எடுத்துக்கொண்டிருக்கிறோம். இப்போது வரன்முறை செய்யப்பட்ட ஒரு மனை, ஏற்கெனவே* unauthorised *ஆக இருந்திருக்கும். இப்போது, வரன்முறைத் திட்டத்தின்கீழ், நாங்கள் அதை* regularize *செய்து கொடுத்திருப்போம். அதற்குப் பின்னர், புதிதாக இப்போது ஒரு மனைப் பிரிவு வருகிறது என்று சொன்னால், அதற்கு 7 மீட்டர் அகலம்* approach road *இருக்க வேண்டும். ஆனால், ஏற்கெனவே அரசாங்கம்* approve *செய்ததில் குறைவாக இருக்கிறது. எனவே, அதை ஒப்புக்கொள்ள வேண்டும் என்று கேட்டிருக்கிறார்கள். அதை ஆய்வு செய்து, அந்த ஆய்வின் அடிப்படையில் அதற்கு ஒரு தீர்வு காணப்படும் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.*

அதேபோல, OSR land விடுவதில், 3,000 சதுர மீட்டர் வரை OSR land கிடையாது. 3,000 சதுர மீட்டரிலிருந்து 10,000 சதுர மீட்டர் வரை, அந்த 7,000 சதுர மீட்டருக்கு 10% OSR land விட வேண்டும். அதற்கு minimum 100 சதுர மீட்டருக்குப் பணம் கட்ட வேண்டும் என்று இருக்கிறது. 10 சதுர மீட்டர், 50 சதுர மீட்டர்தான் விட வேண்டும் என்றாலும், 100 sq. metre-க்கு minimum amount கட்ட வேண்டும் என்றிருக்கிறது. அதை relax செய்து தர வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். கண்டிப்பாக அந்தக் கோரிக்கை நியாயமானது. அதைச் செய்து தருவதற்கான ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது என்பதை நான் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அதேபோல, 12 மீட்டருக்கு மேல் இருக்கிற சாலைகளில் கட்டப்படுகின்ற அனைத்துக் கட்டடங்களுக்கும் சாதாரணமாக normal ஆகக் கிடைக்கின்ற FSI-க்குமேல் premium FSI என்றிருக்கிறது. 30%, 40%, 50% என்று அந்த அகலத்திற்குத் தகுந்தாற்போல் இருக்கிறது. 12 மீட்டருக்குக்கீழ் இல்லை. அதற்கும் கொடுக்க வேண்டுமென்று ஒரு கோரிக்கை வைத்திருக்கிறார்கள். அதுவும் நியாயமாக இருக்கிறது. ஆனால், ஆய்வு செய்துதான் அதை நாங்கள் ஒப்புக்கொள்ள முடியும். அதை ஆய்வுக்குக் கொண்டு செல்வதற்காக நாங்கள் ஏற்பாடுகளைச் செய்திருக்கிறோம்.

அடுத்தது, non-high rise building-அதிக உயரமல்லாத கட்டடங்கள். இதில் 12 மீட்டர் உயரம் வரை கட்டலாம் என்று இப்போது விதி இருக்கிறது. ஆனால், கட்டுமான நிறுவனத்தில் இருக்கக்கூடியவர்கள் அல்லது தனியாக வீடு கட்டக்கூடியவர்கள் 12 மீட்டர் உயரத்தில் கட்டுகிறபோது, சில நேரங்களில் beam அதிக உயரத்திற்குப் போட வேண்டியிருந்தால் குறிப்பிட்ட அந்த 12 மீட்டருக்குள் எங்களால் கட்ட முடியவில்லை, எனவே, அதை அதிகப்படுத்த வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். எனவே, குடியிருப்புக் கட்டடங்களுக்கு மட்டும் 12 மீட்டரிலிருந்து 13 மீட்டராகவும், வணிகக் கட்டடங்களுக்கு 12 மீட்டரிலிருந்து 14 மீட்டராகவும் உயர்த்தலாமா என்பதற்கும் ஆய்வு செய்யப்படுகிறது. ஆனால், அதில் ஒரே ஒரு condition; உயரம் எவ்வளவு அதிகமானாலும் FSI மாறக் கூடாது. Side setback மாறக் கூடாது. இவையெல்லாம் முறைப்படி, சட்டப்படி இருக்க வேண்டும். இல்லையென்றால் நடவடிக்கை எடுக்கப்படும்.

2023 ஏப்ரல் 13] [திரு. சு. முத்துசாமி]

ஏற்கெனவே, CC *வாங்குவதில் இருக்கின்ற பிரச்சினைகளைப் பற்றி நான் சொன்னேன். அதைத் தொடர்ந்து நான் உங்களுக்கு ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். கட்டட முடிவுச் சான்று வாங்குவதற்கு, இப்பொழுது 750* sq. metre*-க்குக்கீழ் இருந்தால் முடிவுச் சான்றிதழ் தேவையில்லை என்றிருக்கிறது. ஆனால், அதற்குள்ளே 3 குடியிருப்புகள் மட்டும்தான் இருக்க வேண்டும். அப்படி இருந்தால்தான் நீங்கள் முடிவுச் சான்றிதழ் வாங்க வேண்டியதில்லை. இல்லையென்றால் வாங்க வேண்டும். 4-வது குடியிருப்பு இருந்தால்கூட வாங்க வேண்டும் என்றிருக்கிறது. அதில் அவர்கள் என்ன கேட்கிறார்கள் என்று சொன்னால், 750* sq. metre*-ல் நாங்கள் 8 வீடுகள் வரை கட்டுகின்ற வாய்ப்பு இருந்தால்கூட அதை நீங்கள்* CC *இல்லாமல் அனுமதிக்க வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். அது நியாயமாக இருக்கிறது. அதை ஒப்புக்கொள்ளவிருக்கிறோம். ஆனால், அதிலேயும் ஒரு* condition. CC *கிடைக்கவில்லை என்றாலும், அவர்கள் அனுபவித்துக் கொண்டிருந்தால்கூட, விதியை மீறியிருப்பது தெரியவந்தால், நடவடிக்கை எடுப்பதற்கு அதில் உரிமை இருக்கிறது என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.*

அடுத்து, நத்தம் பட்டா. நத்தம் பட்டா கொடுக்கின்றபோது தோராயப் பட்டா, நிரந்தரப் பட்டா என்று கொடுக்கிறார்கள். சாதாரணப் பட்டா வெளியிலே இருக்கிறது. அதற்குச் சமமாக அதை பாவிப்பதில்லை. கட்டடத்திற்கான permission *கொடுக்கிறபோது, அதிலே மாறுபட்ட சூழ்நிலைகள் இருக்கின்றன. எங்களுக்கும் அதே மாதிரி வழங்க வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். அதையும் ஆய்வு செய்யச் சொல்லியிருக்கிறோம். அந்த ஆய்விலே கண்டிப்பாக அதற்கான நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

10. அடுக்குமாடிக் குடியிருப்புகள் கட்டுதல்

சுயநிதித் திட்டத்தின்கீழ் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தால், காஞ்சிபுரம் மாவட்டம், காஞ்சிபுரம் பல்லவன் நகரில் 1.00 ஏக்கர் நிலப்பரப்பில் joint venture *மூலம் அடுக்குமாடிக் குடியிருப்புகள் கட்டப்படும்.*

11. அடுக்குமாடிக் குடியிருப்புகள் கட்டுதல்

சுயநிதித் திட்டத்தின்கீழ் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தால், சென்னை மாவட்டம் முகப்பேர் திட்டப் பகுதியில் 1.00 ஏக்கர் நிலப்பரப்பில் joint venture *மூலம் அடுக்குமாடிக் குடியிருப்புகள் கட்டப்படும்.*

12. முதலில் வருவோருக்கு முன்னுரிமை அடிப்படையில் ஒதுக்கீடு செய்தல்

தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தால் மனைகள், அடுக்குமாடிக் குடியிருப்புகள் மற்றும் வீடுகள் முதலில் வருவோருக்கு முன்னுரிமை அடிப்படையில் ஒதுக்கீடு செய்யப்படும்.

அடுத்து, Housing Board-ல் மனைகளையோ, வீடுகளையோ book செய்ய வேண்டுமென்றால், என்றைக்கு நாம் விளம்பரப்படுத்துகிறோமா அன்றிலிருந்து book செய்ய ஆரம்பிக்கிறார்கள். கடைசி வரை book செய்கிறார்கள். Book செய்துவிட்டுச் சென்ற பிறகு எல்லோருக்கும் சேர்த்து சீட்டு குலுக்கிப் போட்டு, யாருடைய பெயர் வருகிறதோ அவர்களுக்குத்தான் வழங்கப்படுகிறது. முதலில் book செய்தவர்களையும், கடைசியாக book செய்தவர்களையும் ஒன்றாகத்தான் பார்க்கிறோம். எனவே, அந்த முறையை மாற்றி, யார் முதலில் வருகிறார்களோ அவர்களுக்கு முன்னுரிமை; அவர்கள் அங்கு இருக்கின்ற கட்டடங்களில், 'இந்த வீடு எனக்கு வேண்டும்; இதில் இன்னின்ன மாற்றங்களையெல்லாம் செய்து கொடுங்கள்' என்று சொன்னால், தனியாரில் எப்படிச் செய்கிறார்களோ அதேபோன்று வீட்டு வசதி வாரியத்திலும் செய்ய வேண்டுமென்று நாங்கள் முடிவெடுத்திருக்கிறோம். இதில் ஒரு நன்மை என்னவென்றால், முன்கூட்டியே வீட்டு வசதி வாரியத்திற்கு அவர்கள் பணத்தை செலுத்திவிடுவார்கள். நாங்கள் அந்த structure முடிந்தவுடன் அறிவிப்போம். Structure முடிந்தவுடன், அறிவித்த பின்னரும், அந்தக் கட்டடத்தை முடிப்பதற்கு ஏறத்தாழ மேலும் 15 மாத காலம் ஆகலாம். எனவே, அந்த 15 மாத காலத்திற்குள்ளேயே அதை book செய்ததற்கான பணம் வீட்டு வசதி வாரியத்திற்கு வந்துவிடும். அதுமட்டுமல்ல, அவர்களுக்கு ஏற்றாற்போல் நாம் அதில் மாற்றம் செய்து கொடுத்துவிட முடியும். ஆனால், சட்டப்படி யார்யாருக்கு கொடுக்க வேண்டுமோ, அந்த முறை கடைப்பிடிக்கப்படும் என்பதை இந்த நேரத்தில் நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

இரவு 7–55

13. வேலூர் மாவட்டம், காட்பாடி கூட்டுறவு நகரமைப்புச் சங்கத்திற்கு சொந்தமான 1,964 சதுர அடி உள்ள நிலத்தில் வணிக வளாகம் கட்டப்படும்

அடுத்து, கூட்டுறவு வீட்டு வசதித் துறையின் சார்பாக, காட்பாடி கூட்டுறவு நகர வங்கியின் சார்பாக ஒரு வணிக வளாகம் கட்டுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

2023 ஏப்ரல் 13] [திரு. சு. முத்துசாமி]

14. கோயம்புத்தூர் மாவட்டம், பி.எஸ்.ஜி (PSG) கூட்டுறவு வீடு கட்டும் சங்கத்திற்கு சொந்தமான 6,400 சதுர அடி உள்ள நிலத்தில் வணிக வளாகம் கட்டப்படும்

கோயம்புத்தூரில் P.S.G. கூட்டுறவுச் சங்கத்தின் மூலமாக 6,400 ச.அடியில் ஒரு வணிக வளாகம்.

15. தமிழ்நாடு மின் ஆளுமை முகமைமூலம் 58 தொடக்க கூட்டுறவு சங்கங்களில் இ-சேவை மையங்கள் தொடங்கப்படும்

58 தொடக்கக் கூட்டுறவுச் சங்கங்களில் e-sevai மையம் ஆரம்பிப்பதற்காக ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

16. சென்னை ஆதம்பாக்கம் கூட்டுறவு வீடு கட்டும் சங்கத்தின் 15,796 சதுர அடி பரப்பளவு உள்ள இடத்தில் இந்தியன் ஆயில் கார்ப்பரேசன்மூலம் எரிபொருள் நிரப்பும் மையம் அமைக்கப்படும்

சென்னை ஆதம்பாக்கத்தில் 15,796 ச.அடி நிலம் அவர்களுக்கு இருக்கிறது. அந்தச் சங்கத்தின் சார்பாக இந்தியன் ஆயில் கார்ப்பரேஷன் மூலமாக எரிபொருள் நிரப்பும் மையம், petrol bunk அமைப்பதற்கான ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது என்பதை நான் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

17. ஒருங்கிணைந்த QR பயணச்சீட்டு மற்றும் பயணத் திட்டமிடலுக்கான செயலி சென்னைப் பெருநகரப் பகுதியில் ரூபாய் 15 கோடி மதிப்பீட்டில் செயல்படுத்தப்படும்

சென்னைப் பெருநகரப் பகுதியில் இயங்கும் மாநகரப் பேருந்துகள், மெட்ரோ இரயில் மற்றும் புறநகர் இரயில் போன்ற பொதுப் போக்குவரத்து சேவைகளில் இடையூறு இல்லாத பயணத்தினை உறுதிசெய்ய சம்பந்தப்பட்ட துறைகளுடன் கலந்தாலோசித்து, ஒருங்கிணைந்த QR (Quick Response) பயணச்சீட்டு முறை மற்றும் பயணத் திட்டமிடலுக்கான செயலி (Journey Planner) ரூபாய் 15 கோடி மதிப்பீட்டில் உருவாக்கப்பட்டு அறிமுகப்படுத்தப்படும்.

சென்னை ஒருங்கிணைந்த பெருநகர போக்குவரத்துக் குழுமம். இது மாண்புமிகு நம்முடைய முன்னாள் முதல்வர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் 2010-ல் துவக்கப்பட்டிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) அதற்குப் பிறகு, நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர்

தளபதி அவர்கள் முதலமைச்சரானதற்குப் பிறகுதான், அந்தக் குழுமத்திற்கு ஒரு கூட்டம் நடத்தி, அந்தக் கூட்டத்திற்கு வந்து அவரே தலைமையேற்று, அதில் பல முன்னேற்றங்களுக்கான ஏற்பாட்டைச் செய்திருக்கிறார். (மேசையைத் தட்டும் ஒலி) எனவே, அது கொஞ்சம் வேகமாக நடப்பதற்கு முதல்முறையாக முதலமைச்சர் என்ற முறையில், மாண்புமிகு தளபதி அவர்கள்தான் அந்தக் கூட்டத்தில் கலந்துகொண்டு அதன் செயல்பாடுகளை வேகப்படுத்தியிருக்கிறார் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதன் சார்பாக 2 அறிவிப்புகள். ஒன்று, QR-Quick Response. இது என்னவென்றால், சென்னை மாநகரப் பேருந்து metro rail, புறநகர இரயில். இவற்றில் பயணம் செய்வதற்கு ஒரே ticket போதும். அதை நம்முடைய mobile phone app-ல் இருந்த இடத்திலிருந்தே செய்துகொள்ளலாம். ஒரேயொரு ticket. ஆனால், குறிப்பிட்ட நேரத்திற்குள் அதைப் பயன்படுத்த வேண்டும். ஒரு ticket வாங்கிவிட்டால் போதும். அந்த route-ல், எதில் வேண்டுமென்றாலும் பயன்படுத்திக்கொள்ளலாம். எந்த route-ல் வேண்டுமென்றாலும் பயன்படுத்திக்கொள்ளலாம் என்பதற்கு மறுபடியும் அவர்கள் கூடுதலாக நடவடிக்கை எடுக்கவிருக்கிறார்கள்.

18. டிஜிட்டல் சென்னை திட்டத்தின்கீழ் ஒருங்கிணைந்த நகர்ப்புற தரவு மையம் (IUDP) மற்றும் நகர்ப்புற திட்டப் பணியின் திட்டமிடுதல் மற்றும் மேலாண்மை தொகுதி (UPPM) ஆகியவற்றை உருவாக்க விரிவான திட்ட அறிக்கை ரூபாய் 5 கோடி மதிப்பீட்டில் தயாரிக்கப்படும்

சென்னைப் பெருநகரப் பகுதியில், நகர்ப்புற சேவையில் ஈடுபட்டுள்ள நிறுவனங்கள்/ துறைகளால் உருவாக்கப்பட்ட அனைத்து தரவுகளையும் ஒரே தளத்தில் மேலாண்மை செய்யவும், இத்தரவுகளைப் பயன்படுத்தி பொதுமக்களுக்கு சிறந்த சேவையை வழங்குவதை உறுதி செய்யவும், டிஜிட்டல் சென்னை திட்டத்தின்கீழ் ஒருங்கிணைந்த நகர்ப்புற தரவு மையம் (IUDP) மற்றும் நகர்ப்புற திட்டப் பணியின் திட்டமிடுதல் மற்றும் மேலாண்மை தொகுதி (UPPM) ஆகியவற்றை உருவாக்க, சென்னை ஒருங்கிணைந்த பெருநகர போக்குவரத்துக் குழுமத்தினால் விரிவான திட்ட அறிக்கை ரூபாய் 5 கோடி மதிப்பீட்டில் தயாரிக்கப்படும்.

அதேபோல, Digital Chennai திட்டத்தின்கீழ் 12 துறைகளை ஒன்றாக இணைக்கும் ஒருங்கிணைந்த தரவு மையம், நடைமுறையில்

2023 ஏப்ரல் 13] [திரு. சு. முத்துசாமி]

இப்போது பார்க்கிறோம். நமக்கு road-ஐ போட வருவார்கள். அதற்குப்பிறகு சாக்கடை அமைப்பதற்காக வருவார்கள். எனவே, இப்படி பல பிரச்சினைகள் அந்த development-ல் ஏற்படுகிறது. எனவே, இவற்றையெல்லாம் ஒருங்கிணைப்பதற்காக ஒரு வேலை செய்கிறோமென்று சொன்னால், அந்த 12 துறைகளுக்கும் அது குறித்து தகவல் சென்றுவிடும். எனவே, அந்த இடத்தில் வேலை செய்ய வேண்டுமென்றால், அவர்களும் வந்து சேர்ந்து வேலையைச் செய்துவிடுவார்கள். அவர்களுக்கு ஏதாவது தடையிருக்கிறது என்றால் அவர்கள் வந்து பேசுவார்கள். எனவே அதற்காக ஒரு ஏற்பாட்டைச் செய்திருக்கிறார்கள். 12 துறைகளையும் அது இணைக்கிறது. சென்னை கார்ப்பரேஷன், போக்குவரத்துக் கழகம், CMDA, Police Department, Highways இப்படி 12 துறைகளை இணைப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது என்பதை நான் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். எனவே, இந்த அறிவிப்புகளை மிக விரைவாகச் செயல்படுத்துவதற்கான நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன்.

மாண்புமிகு உறுப்பினர்கள் 99 வெட்டுத் தீர்மானங்களைக் கொடுத்திருக்கிறார்கள். இந்த 99 வெட்டுத் தீர்மானங்களையும் தனித்தனியாக சொல்ல முடியாது. இதைத் துறைக்கு அனுப்பி, ஒவ்வொரு வெட்டுத் தீர்மானத்திற்கும் நாங்கள் பதிலை வாங்கி வைத்திருக்கிறோம். அதன்மீது சரியான நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை நான் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

எனவே, மாண்புமிகு உறுப்பினர்கள் அந்த வெட்டுத் தீர்மானங்களை திரும்பப் பெற்று, எங்களுடைய மானியக் கோரிக்கையை நிறைவேற்றித் தர வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கின்றேன். (மேசையைத்தட்டும் ஒலி)

அதற்கடுத்து, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடத்தில்போய் நாங்கள் ஒவ்வொரு முறையும் பேசுகிறபோது, ஏதாவது ஒரு திட்டத்தைப் பற்றி அவர்கள் பேசுவார்கள் அல்லது இங்கேயிருக்கிற குறைபாட்டைப் பற்றி விசாரிப்பார்கள். இப்படி செய்ததுதான் எங்களுக்கு கொள்கை விளக்கக் குறிப்பு சிறப்பாக அமைவதற்கு, தயார் செய்வதற்கு பயனுடையதாக இருந்தது என்பதை இந்த நேரத்தில் தெரிவித்து, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு அதற்காக நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

தலைமைச் செயலாளர், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் தனிச் செயலாளர்கள், மற்ற துறையின் செயலாளர்கள், வீட்டுவசதித் துறையின் செயலாளர், வீட்டுவசதி வாரியத்தின் தலைவர், மேலாண்மை இயக்குநர், நகர் ஊரமைப்பு இயக்குநர், கூட்டுறவு வீட்டு வசதிச் சங்கத்தின் பதிவாளர், துறையின் மற்ற அதிகாரிகள், அலுவலர்கள் அனைவருக்கும் நன்றி. அதேபோல, பேரவையின் தலைவர், துணைத் தலைவர், அரசு கொறடா மற்றும் இங்கேயிருக்கிற மாண்புமிகு கட்சித் தலைவர்கள் அத்தனை பேருக்கும், இங்கேயிருக்கிற மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்கள் அத்தனை பேருக்கும் இந்த நேரத்தில் நான் நன்றியைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அதேபோல, இங்கே நம்முடைய சட்டமன்றத்தில் பணியாற்றுகின்ற பணியாளர்கள், அதிகாரிகள் மற்றும் எங்களுடைய அலுவலகத்தில் இருக்கிற அலுவலர்கள் அத்தனை பேருக்கும் இந்த நேரத்தில் என்னுடைய நன்றியைத் தெரிவித்து, உங்களுடைய வெட்டுத் தீர்மானங்களைத் திரும்பப்பெற்று, இந்த மானியக் கோரிக்கையை நிறைவேற்றித் தரவேண்டுமென்று மீண்டும் ஒரு முறை கேட்டு விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

இரவு 8-00

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பதிலுரை. மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. பி.கே. சேகர்பாபு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கட்டளையிட்டால் கட்டுப்பட்டு கடமைகளை ஆற்றுவோம் என்ற நம்பிக்கையில், இராமருக்குச் சேவை செய்கின்ற அணிலாக நினைத்து, கூடுதல் பொறுப்பை வழங்கிய என் உயிரினும் மேலான அன்புத் தலைவர் தளபதி அவர்களை முதற்கண் வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அன்று மாணவர்களுக்கு ஆசிரியராகப் பணியாற்றி, இன்று இம்மாமன்ற உறுப்பினர்களையும் வழிநடத்தும் பிரம்பில்லா ஆசிரியரே! வரம்பு மீறும் வார்த்தைகளைக்கூட கரும்பின் இனிப்பூறும் சொற்களால் கட்டுப்படுத்தும் சட்டமன்ற நீதிபதியே! உங்களுக்கு என் வணக்கம்.

2023 ஏப்ரல் 13] [திரு. பி.கே. சேகர்பாபு]

எங்கள் ஆருயிர் முதல்வர் அவர்களே, தெற்கிலிருந்து வடக்கையும் வளமாக்கப் பாயும் திராவிட சித்தாந்தத்தின் தீரா நதியே! தன் ஆட்சிக் காலத்தை பொற்காலமாய் மாற்றிவரும் தற்காலச் சோழனே! சென்ற ஆண்டு சட்டமன்ற நூற்றாண்டு, அதையடுத்து பேராசிரியர் பெருந்தகை நூற்றாண்டு, இந்த ஆண்டு பெரியாரின் வைக்கம் நூற்றாண்டு, அருட்பெருஞ்ஜோதி வள்ளலாரின் இருநூற்றாண்டு, வரும் ஜூன் மாதம் ஒப்பாரும் மிக்காருமில்லா முத்தமிழறிஞர் கலைஞரின் நூற்றாண்டு. (மேசையைத் தட்டும் ஒலி) இவ்வாறு நூற்றாண்டுகளைக் கடந்த தலைவர்களின் நூற்றாண்டைக் கொண்டாடும் பெருமை பெற்று, பல நூற்றாண்டு சாதனைகளைப் படைத்துக்கொண்டிருக்கும் எங்கள் முதல்வர் அவர்களே, தாங்கள் பல நூறாண்டு இறை ஆசியோடும், இயற்கையின் அருளோடும் நீடூழி வாழவேண்டி இறைவனையும், இயற்கையையும் பிரார்த்திக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர், உழைப்பின் போராளி தளபதி என்பவை திராவிடத்தின் நான்கு திசைகள். இதில் ஐந்தாம் திசையாம் ஆழ்கடல்மேல் எழுந்து வரும் அழகிய உதயமே! இளைஞர் நல இதயமே! எதிர்காலத் தலைமுறையை தாங்க வந்த எங்கள் சேப்பாக்கத்து சின்னவரே! இருவண்ண இயக்கத்தை வழிநடத்தவிருக்கும் மன்னவரே! மாண்புமிகு என்ற சொல்லுக்கு மேன்மை சேர்க்கும் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சரே! முதியவர்கள் முத்தமிட, அன்னையர்கள் திலகமிட, மாணவர்கள் ஆர்ப்பரிக்க, மழலையர்கள் வாய் சிரிக்க, நிலமெங்கும் வலம்வரும் தென்னகத்தின் செல்லச் சூரியனே! உங்களுக்கும் என் உளங்கனிந்த வணக்கங்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மானியக் கோரிக்கை மீதான என் உரையைத் துவக்குகிறேன். உலகின் மிகப் பெரிய மாநகரம் சீனாவின் ஷாங்காய். உலகின் மிகப் பெரிய மெட்ரோபாலிடனான அழகிய மாநகரம் டோக்கியோ என்பார்கள். இவை இரண்டும் சேர்ந்த வசதியும், பேரழகின் வடிவமும் கொண்ட மாநகரை உருவாக்கும் திராவிட மாடல்தான் நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) ஓடும் காவிரியில் கால்வைத்து, நீரின் வேகத்திற்கேற்ப மணலில் கால் பதியும் அளவை உணர்ந்து, யானைகளையும், சேனைகளையும் கொண்டு கல் பதியவைத்து கல்லணை கட்டினான் கரிகால்

சோழன். அந்த வரலாற்றை நினைவூட்டும் வண்ணம், கீழே பாசனத்திற்கு நீர்வழித் தடமும், மேலே பயணத்திற்கு ஊர் வழித் தடமும் அமைக்க கற்றுத்தரும் அறிவின் கருவூலம் எங்களுடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள். நீங்கள் அமைத்த பாலங்கள் மாநகரின் இரத்த நாளங்கள். சென்ற ஆட்சியில் அறிவிப்போடு புதைந்துவிட்ட திட்டங்களைத் தூசிதட்டி, எங்களின் தோள்களைத் தட்டி துரிதப்படுத்தி, மேலும் விரிவுபடுத்தி, வரலாற்று மாநகராய் சென்னையை மாற்றிவரும் இந்தியத் திருநாட்டின் திசைகாட்டி நீங்கள்.

இரவு 8-05

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் பராசக்தி படத்தின் முடிவில் ஒரு வசனத்தில் 'குடிசைவாசிகள் ஏன் குடிசைவாசிகளாகவே இருக்க வேண்டும், அவர்களை பங்களாவாசிகளாக மாற்றுவோமே' என எழுதியிருப்பார். அவ்வாறு ஏழை எளியவர்களுக்காகச் சிந்தித்த மாமேதை டாக்டர் கலைஞர் அவர்கள், 1972 ஆம் ஆண்டு உருவாக்கியதுதான் மெட்ராஸ் பெருநகர வளர்ச்சிக் குழுமம். (மேசையைத் தட்டும் ஒலி) அந்த வளர்ச்சிக் குழுமத்தை 1975 ஆம் ஆண்டு 1,189 சதுர கிலோ மீட்டர் பரப்பளவிற்கு உருவாக்கி, 1976 ஆம் ஆண்டு, முதலாம் முழுமைத் திட்டத்தை அறிவித்த பெருமை முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களையே சாரும். தலைவர் கலைஞர் அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது, 2008 ஆம் ஆண்டு இரண்டாம் முழுமைத் திட்டத்தை அறிவித்த பெருமையும் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களையே சாரும். மூன்றாம் முழுமைத் திட்டத்திற்கு 2018 ஆம் ஆண்டு சுமார் 8,889 சதுர கிலோ மீட்டர் என்று அறிவித்துவிட்டு, அறிவித்த வேகத்திலேயே அந்தத் திட்டத்திற்கு மூடுவிழா கண்ட ஆட்சி கடந்த ஆட்சி. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆட்சி அமைத்தவுடன், 2022 ஆம் ஆண்டு அதிகாரிகளை அழைத்து இத்திட்டத்தை சீராய்வு செய்தார். சென்னைப் பெருநகர்ப் பகுதி விரிவாக்கத்தை 5904 சதுர கிலோ மீட்டராக செயலாக்கம் செய்து உத்தரவிட்டார். மேலும், சென்னைப் பெருநகரப் பகுதியான 1189 சதுர கிலோ மீட்டருக்கு மூன்றாம் முழுமைத் திட்டத்தினை 2025 ஆம் ஆண்டுக்குள் முடிக்க உத்தரவிட்டுள்ளார். இவ்வாறு திட்டங்களைச் செயல்படுத்தும் தலைவர் தளபதி என்பதை இங்கே தெரிவித்துக்கொள்ள நான் கடமைப்பட்டிருக்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

2023 ஏப்ரல் 13] [திரு. பி.கே. சேகர்பாபு]

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 10 ஆண்டு கால ஆட்சியில் சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழுமத்தில் மருந்திற்குக்கூட ஒரு பணியாளர்கூட, நியமனம் செய்யப்படவில்லை. 6 மக்கள் பிரதிநிதிகளோடு மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் ஏழாவதாக வணிக நோக்கத்தோடு இருக்கின்ற ஒருவரையும் நியமித்து, 7 நபர்களோடு உள்ளாட்சி மக்களுக்கு, உள்ளாட்சிப் பிரதிநிதிகளுக்கு முக்கியத்துவம் கொடுத்து நம்முடைய சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழுமத்தினுடைய குழுமக் கூட்டத்தை மக்கள் பிரதிநிதிகளுக்கு முக்கியத்துவம் கொடுத்து நடத்திய பெருமை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களைச் சாரும். 8 திசைகளிலும் வளர்ச்சியை நோக்கி CMDA. CMDA-வைப் பிரித்துப் பார்த்தால், CM அதனுள்ளே இருப்பார்; DA என்பது Development Authority. CM உடன் DA இருக்கின்றது. நிச்சயம் சென்னை மாநகரம், இந்தியாவிலே இருக்கின்ற மாநகரங்களில் முதன்மை மாநகரமாக ஆகும் என்பதில் எந்தவித ஐயமும் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'மக்கள் தீர்ப்பே மகேசன் தீர்ப்பு' என்பார்கள். அந்த வகையில் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் சீராய்வுக் கூட்டத்திற்கு அழைத்தார். சென்னை மாநகரம் வளர்ச்சி பெற்று, வளர்ந்த மாநகரங்களோடு போட்டி போடுகின்ற அளவிற்கு இருக்க வேண்டுமென்று உத்தரவிட்டார். 26 சட்டமன்ற உறுப்பினர்களை அழைத்து கூட்டத்தை நடத்தச் சொன்னார். அந்த மக்கள் பிரதிநிதிகளுடைய கோரிக்கைகளைப் பெறச் சொன்னார். அந்தக் கோரிக்கைகளை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு எடுத்துச் சென்றவுடன் படிப்படியாக அந்தக் கோரிக்கைகளை நிறைவேற்றுவோம் என்று இந்த ஆண்டு 26 மக்கள் பிரதிநிதிகளுடைய, சட்டப்பேரவை உறுப்பினர்களுடைய 34 கோரிக்கைகளை நிறைவேற்ற உத்தரவிட்டிருக்கின்ற முதல்வர் நம்முடைய மாண்புமிகு முதல்வர். (மேசையைத் தட்டும் ஒலி) ஆகவே, இம்மாமன்றத்தில் பல்வேறு புதிய அறிவிப்புகளை அறிவிப்பில் வெளியிட இருக்கின்றோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மொத்தம் 40 பணியாளர்களை இந்த ஆட்சி நியமித்திருக்கின்றது. துறையின் வளர்ச்சி என்பது பணியாளர்களைப் பொறுத்ததே. பெருநகர வளர்ச்சிக் குழும திட்டத்தில் 15 உதவி திட்ட அமைப்பாளர்கள், 15 திட்ட உதவியாளர்கள், 10 ஓட்டுநர்கள் இதில் ஒரு பெண்

உட்பட நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். கடந்த 10 ஆண்டுகளாக ஒருவரைக்கூட நியமிக்காத சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழுமத்தில் 40 பேர்களுக்குப் பணியினை வழங்கிய பெருமை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களைச் சாரும் என்பதை இந்த நேரத்தில் குறிப்பிட்டுக் கூறுகிறேன்.

முதலாம் முழுமைத் திட்டம். அதேபோல முழுமைத் திட்டத்தினுடைய அனைத்து வசதிகளையும் இன்றைக்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஏற்பாடு செய்து வருகிறார்கள். இந்த இரண்டு முழுமைத் திட்டங்களையும் பார்த்தால், அரங்கத்திற்குள்தான் மக்களுடைய தேவைகள், கோரிக்கைகள் கேட்டுப் பெறப்பட்டன. இன்றைக்கு நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள், மாண்புமிகு மக்கள் முதல்வர் என்பதை நிரூபிக்கின்ற வகையில் பொது வெளிக்கு இந்தத் திட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறார். QR code வாயிலாக என்ன மாதிரியாக இந்தச் சென்னை உருவாக வேண்டுமென்று அவர்களுடைய கோரிக்கையை QR code மூலமாகப் பதிவிடச் சொல்லியிருக்கின்றார். இதுவரையில் QR code வாயிலாக கிட்டத்தட்ட 27,000 பேர் சென்னையில் மாத்திரம் அவர்களுடைய ஆலோசனையைப் பதிவிட்டிருக்கிறார்கள். இந்தத் திட்டம் என்பது நிச்சயம் திட்டமிடல், திட்டமிட்ட பணிகளை விரைவாக முடித்தல் என்ற வார்த்தைக்கு உதாரணமாக இருக்கின்ற நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் நிச்சயமாக 2025 ஆம் ஆண்டு, இதே மாமன்றத்தில் கம்பீரமாக இந்தத் திட்டத்தை அறிவிப்பார்கள் (மேசையைத் தட்டும் ஒலி) என்பதை இந்தப் பேரவைக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இரவு 8–10

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, துணை நகரங்கள் மற்றும் புது நகரங்கள். ஒரு மாநகரத்தினுடைய வளர்ச்சி என்பது துணை நகரங்கள், புதுநகரங்களின் வளர்ச்சியையொட்டித்தான் இருக்கின்றது. அதைத்தான் மாண்புமிகு முதல்வர் அவர்கள் கருத்திற்கொண்டு, 6 நகரங்களைத் துணை நகரங்களாகவும், 48 நகரங்களாகவும் அறிவிக்க உத்தரவிட்டிருக்கின்றார்கள். அந்த வகையில், காஞ்சிபுரம், செங்கல்பட்டு, திருவள்ளூர், திருமழிசை, மீஞ்சூர் மற்றும் மகாபலிபுரம் ஆகிய 6 நகரங்களை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் புது நகரங்கள் மற்றும் துணை நகரங்களாக

அறிவிக்க உத்தரவிட்டிருக்கின்றார்கள். பாவேந்தர் பாரதிதாசன் அவர்களின் கூற்றினைப்போல், "புதியதோர் உலகம் செய்வோம்" என்ற வார்த்தைகளுக்கு முழு உதாரணமாக நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்களின் பணி இருக்கும் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு நாட்டினுடைய வளர்ச்சி போக்குவரத்தைப் பொறுத்து அமைகிறது. இது ஒரு நீண்ட பயணத்திற்கான அரசு என்பதால்தான் செங்கல்பட்டில் சுமார் 6.7 ஏக்கர் தனியார் பங்களிப்புடன் மாமல்லபுரத்திலும், 18 ஏக்கரில் ரூ.50 கோடி செலவில் செங்கல்பட்டு அரசு மருத்துவக் கல்லூரி அருகிலும், புதிய பேருந்து நிலையங்கள் அமைக்கும் பணிகள் திட்டமிடப்பட்டுள்ளன. இந்த இரண்டு பேருந்து நிலையங்கள் வருகின்றபோது, பொது போக்குவரத்திற்கு, பொது மக்களுக்கு மேலும் பயனுள்ளதாக இருக்கும் என்பதால் இந்த இரண்டு திட்டங்களுக்கு மாண்புமிகு முதல்வர் அவர்கள் உத்தரவிட்டிருக்கிறார்கள். எங்களுடைய மாண்புமிகு முதல்வர் அவர்களைப் பார்த்தால் தெரியும், அவர்மீது தூக்கி எறிகின்ற கற்களையே அவர் படிக்கல்லாக மாற்றுகின்ற திறமை படைத்த முதல்வர் (மேசையைத் தட்டும் ஒலி) என்பதால்தான் இப்படிப்பட்ட திட்டங்களைக் கொண்டுவர முடிகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சாத்தாங்காடு, இரும்பு மற்றும் எஃகு அங்காடி. இது 1991 ஆம் ஆண்டு 850 மனைகளுடன் தொடங்கப்பட்டது. இதில் மொத்தம் 719 மனைகள் ஒதுக்கீடு செய்யப்பட்டன. இந்த 719 மனைகளில், 535 மனைகள்தான் ஒதுக்கீடுதாரர்கள் பயன்பாட்டிற்கு எடுத்திருக்கின்றார்கள். மீதம் 184 மனைகளை ஒதுக்கீடு செய்தும், ஒதுக்கீடுதாரர்கள் அவற்றைப் பயன்படுத்தவில்லை. இன்னும் அதில் 131 மனைகள் காலியாகவே இருக்கின்றன. இதை மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஆய்வு செய்தபோது, உடனடியாக இந்த இடத்தை மேம்படுத்த வேண்டுமென்று உத்தரவிட்டு, முதற்கட்டமாக 5 கோடி ரூபாய் அளவிற்கு சாத்தாங்காடு இரும்பு மற்றும் எஃகு அங்காடியை மேம்படுத்துவதற்கு கடந்த 10–4–2023 அன்று அந்தப் பணிகளைத் துவக்கி வைத்திருக்கின்றார்கள். மகாகவி பாரதியார் வரிகளில் சொல்வதென்றால்

"இரும்பைக் காய்ச்சி உருக்கிடுவீரே,
எந்திரங்கள் செய்திடுவீரே"

என்ற வரிகளுக்கு உயிர் தந்து கொண்டிருக்கின்ற மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இதற்குக் கூடுதல் நிதியை ஒதுக்கி, அறிவிப்பிலே அறிவிக்கச் செய்திருக்கின்றார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொல்பொருள் விளக்க மையம் மற்றும் காலநிலை பூங்கா–கிளாம்பாக்கம். வெகுவிரைவில் மிக பிரம்மாண்டமாக தொடங்கப்படவிருக்கும் கிளாம்பாக்கம் பேருந்து முனையம். பல்லாயிரக்கணக்கான மக்கள் பயன்பெறுகின்ற வகையில், பொழுதுபோக்கு அம்சம், கலாச்சாரம், தொல்பொருள் விளக்கம் போன்றவற்றை உள்ளடக்கிய பைந்தமிழ் பெருமை பேசும் இப்பூங்கா 16.97 ஏக்கர் நிலப்பரப்பில் அமையவுள்ளது. மாண்புமிகு தமிழ்நாடு முதல்வர் அவர்கள் தன் திருக்கரங்களால் 10–4–2023 அன்று ரூபாய் 15 கோடி மதிப்பீட்டில் இதற்கான பணிகளைத் துவக்கி வைத்தார்கள் என்பதை இம்மாமன்றத்திற்கு பெருமையுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

எல்லோரும் சொல்லுவார்கள்; வரைபடத்தில், தமிழ்நாடு, இந்தியாவின் காலடியில் இருக்கிறது என்று. ஆனால், உலக நாகரிகத்தின் தொடக்கமே தமிழ்நாட்டின் கீழடியில்தான் இருக்கிறது என்ற வரலாற்றை நிரூபித்துக் கொண்டிருப்பவர் (மேசையைத் தட்டும் ஒலி) நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள்.

பெரிய வளர்ச்சித் திட்டங்களில் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தின் பங்களிப்பு. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தைப் பொறுத்தளவில், அந்தக் குழுமத்திற்கு ஒதுக்கப்பட்ட பணிகளோடு மட்டுமல்லாமல், மாநகரத்தின் வளர்ச்சிக்குக் கணிசமான அளவிற்குப் பொருளாதார ரீதியாக உதவிட வேண்டுமென்ற மாண்புமிகு முதல்வர் அவர்களின் உத்தரவிற்கேற்ப, சென்னையில் அமைந்திருக்கின்ற சென்னை சென்ட்ரல் ஸ்கொயர் என்றாலும் சரி, அதோடு அமைந்திருக்கின்ற மெட்ரோ ரயில் திட்டப் பணிகள் என்றாலும் சரி, கிட்டத்தட்ட ரூபாய் 389 கோடியை சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் ஒதுக்கியிருக்கின்றது. அதேபோல், கடந்த காலங்களில் ஏரிகளில் இருக்க வேண்டிய நீர், ஏரியாவுக்குள் நுழைந்த வரலாற்றை நாம் யாரும் மறுக்க முடியாது.

"வானம் தரும் தண்ணீரைத் தேக்கு!
தேக்கினால்தான் நாளை நனையும் நம் நாக்கு!"

என்ற சொல்லுக்கேற்ப, மாண்புமிகு முதல்வர் அவர்கள் சென்னையில் கொளத்தூர் ஏரி, இரட்டை ஏரி, வேளச்சேரி ஏரி உட்பட 10 ஏரிகளை மேம்படுத்தி நீராதாரத்தைப் பாதுகாக்க ரூபாய் 100 கோடி நிதியை ஒதுக்கிக் கொடுத்து, இந்த மாநிலத்தினுடைய ஏரிகளைக் காத்தவர் என்பதால், அவரை ஏரி காத்த இராமர் என்று அழைப்பதில் மாற்றுக் கருத்து இருக்க முடியாது என்று, ஏரி காத்த எங்கள் இராமரை வணங்குகின்றோம்.

இரவு 8–15

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வெளிவட்டச் சாலையை ஒட்டியுள்ள பகுதிக்கான வளர்ச்சித் திட்டம். சென்னையில் பெருகிவரும் வாகனப் போக்குவரத்தை எளிதாக்க, நான்கு தேசிய நெடுஞ்சாலைகளின் இணைப்பாக வண்டலூரிலிருந்து மீஞ்சூர் வரை 63 கிலோ மீட்டர் நீளத்திற்கு வெளிவட்டச் சாலையை அமைத்த பெருமை திராவிட முன்னேற்றக் கழக அரசைச் சேரும். மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் தொலைநோக்குப் பார்வையோடு, இந்த வெளிவட்டச் சாலையின் இருபுறமும் ஒரு கிலோ மீட்டர் அகலமுள்ள பகுதியில் வளர்ச்சித் திட்டங்களைச் செயல்படுத்த உத்தரவிட்டிருக்கிறார்கள். மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய ஆணைக்கேற்ப, ஆலோசனைக்கேற்ப அவை மேற்கொள்ளப்படும். வருங்காலத் தேவைகளையும், வளர்ச்சிகளையும் ஞானத்தோடு கணித்து, அத்தேவைகளை இக்காலத்திலேயே உருவாக்குகின்ற உன்னதமான கணிப்பாளராக விளங்குகிறார் நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள். சாலையில் எங்கு பார்த்தாலும் மைல்கற்கள் இருக்கும். ஆனால், இந்தச் சாலை திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக்கு ஒரு மைல் கல்லாக இருக்கும் என்பதில் மாற்றுக் கருத்து இருக்க முடியாது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னையைப் பொறுத்த அளவில் இந்த மாமன்றத்தில், சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் சார்பில், 50 அறிவிப்புகளை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவிக்கச் சொல்லியிருக்கின்றார்கள். நான் அறிவிப்புக்கு வந்தவுடன், மாண்புமிகு உறுப்பினர் அண்ணன் பன்னீர்செல்வம் அவர்கள் சிரிக்கின்றார்கள். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அறிவிப்புப் புத்தகத்தை கொடுத்துவிடலாமே!

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *கொடுத்துவிடலாமா?* Good. *அறிவிப்புப் புத்தகத்தைக் கொடுத்துவிடுங்கள்.*

மாண்புமிகு திரு. பி.கே. சேகர்பாபு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒட்டுமொத்தமாக சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் சார்பில், மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுடைய ஆலோசனைக்கேற்ப வெளியிடப்படும் 50 அறிவிப்புகளில், நேரத்தின் அருமை கருதி, 16 அறிவிப்புகளை மட்டும் வாசித்துவிடுகிறேன். மீதமுள்ள 34 அறிவிப்புகளை நான் வாசித்ததாக அவைக் குறிப்பில் பதிவு செய்து கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.*

மாண்புமிகு முதல்வர் அவர்கள் எந்தெந்த அறிவிப்புக்கு உத்தரவிட்டிருக்கிறார்கள் என்பதை 234 சட்டமன்ற உறுப்பினர்களும் தேடிக் கொண்டிருப்பார்கள் என்பதை நான் நன்றாக அறிவேன். ஆகவே, முதலில் 16 அறிவிப்புகளை வாசித்துவிடுகிறேன்.

அறிவிப்புகள்

1. தற்போது கட்டப்பட்டு வரும் குத்தம்பாக்கம் புதிய பேருந்து முனையம் சர்வதேச தரத்திற்கு ரூபாய் 60 கோடி மதிப்பீட்டில் விரிவாக்கம் செய்யப்படும்

திருமழிசை அருகில் குத்தம்பாக்கத்தில் மேற்கு நோக்கிச் செல்லும் கர்நாடகா மற்றும் ஆந்திரப் பேருந்துகளுக்காகக் கட்டப்பட்டு வரும் புதிய பேருந்து முனையம் சர்வதேச தரத்தில், கூடுதல் தளப்பரப்பு மற்றும் குளிரூட்டும் வசதியுடன் பிரதான முனையக் கட்டடம் ரூபாய் 60 கோடி கூடுதல் மதிப்பீட்டில் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தால் அமைக்கப்படும்.

2. திருவொற்றியூரில் ரூபாய் 30 கோடி மதிப்பீட்டில் வடசென்னை மக்களுக்குப் பயன்படும் வகையில் சுமார் 5 கிலோ மீட்டர் நீளமுள்ள கடற்கரை மேம்படுத்தப்படும்

சென்னை எண்ணூர் நெடுஞ்சாலையை ஒட்டி, திருவொற்றியூர் முதல் பாரதியார் நகர் வரை சுமார் 5 கிலோ மீட்டர் நீளமுள்ள கடற்கரை ரூபாய் 30 கோடி மதிப்பீட்டில் தரமுயர்த்தப்பட்டு, வடசென்னை மக்களுக்குப் பயன்படுகின்ற வகையில், சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தால் மேம்படுத்தப்படும்.

2023 ஏப்ரல் 13] [திரு. பி.கே. சேகர்பாபு]

3. சாத்தாங்காடு இரும்பு மற்றும் எஃகு அங்காடி வளாகம் ரூபாய் 33.35 கோடி மதிப்பீட்டில் நவீனமயமாக்கப்படும்

எண்ணூர் விரைவுச் சாலை அருகில் சாத்தாங்காடு பகுதியில் 203 ஏக்கர் பரப்பளவில் அமைக்கப்பட்டுள்ள இரும்பு மற்றும் எஃகு அங்காடி வளாகம் ரூபாய் 33.35 கோடி மதிப்பீட்டில் நவீனமயமாக்கப்படும்.

இதில் மழைநீர் கால்வாய் அமைப்பைப் புதுப்பித்தல், 150 டன் திறன் கொண்ட மின்னணு எடை மேடை, நவீன கண்காணிப்புக் கருவிகளுடன்கூடிய கட்டுப்பாட்டு அறை, அங்காடி நிர்வாகக் குழுவிற்கான தனி வலைதளம், பொது வசதியுடன்கூடிய புதிய உணவகம், பொதுப் பயன்பாட்டிற்காக ஒதுக்கப்பட்ட அனைத்துப் பகுதிகளிலும் மற்றும் அங்காடி வளாகத்தின் எல்லையைச் சுற்றிலும் பூங்காக்கள் மற்றும் பசுமைப்பட்டை, மின்னணுக் காட்சிப் பலகை, புதிய பேருந்து நிழற்குடை மற்றும் முதலுதவி மையம் அமைத்தல் ஆகிய பணிகள் அடங்கும்.

4. சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம், மாதவரம் சரக்குந்து முனையத்தில் உட்கட்டமைப்பை மேம்படுத்த ரூபாய் 30.30 கோடி நிதியை பெருநகர சென்னை மாநகராட்சிக்கு வழங்கும்

சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தால் மாதவரத்தில் 80 ஏக்கர் நிலப்பரப்பில் பேருந்து மற்றும் சரக்குந்து முனையம் அமைக்கப்பட்டது. இம்முனையத்தில் பெருநகர சென்னை மாநகராட்சியின் கட்டுப்பாட்டில் உள்ள பொது வசதிகளான சாலைகள், மழைநீர் கால்வாய், கழிப்பிட வசதி மற்றும் குடிநீர் வசதி போன்றவற்றை மேம்படுத்த, பெருநகர சென்னை மாநகராட்சிக்கு ரூபாய் 30.30 கோடி நிதியுதவி சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தால் வழங்கப்படும்.

5. சென்னை வெளிவட்டச் சாலையை ஒட்டி, வரதராஜபுரத்தில் ஒப்பந்தப் பேருந்துகள் நிறுத்துமிடம் ரூபாய் 29 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்படும்

கிளாம்பாக்கத்தில் அமைக்கப்பட்டு வரும் புதிய பேருந்து முனையத்திலிருந்து ஒப்பந்தப் பேருந்துகள் இயக்குவதற்கு வசதியாக, வெளிவட்டச் சாலையை ஒட்டி, வரதராஜபுரத்தில்

ஒப்பந்தப் பேருந்துகள் நிறுத்துமிடம் ரூபாய் 29 கோடி மதிப்பீட்டில் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தால் அமைக்கப்படும்.

6. கிழக்குக் கடற்கரையில் நீலாங்கரை முதல் அக்கரை வரை, முதற்கட்டமாக சுமார் 5 கி.மீ. நீளத்திற்கு மிதிவண்டிப்பாதை மற்றும் நடைபாதை, ரூபாய் 20 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்படும்

சென்னைப் பெருநகரப் பகுதியில், கிழக்குக் கடற்கரையில் நீலாங்கரை முதல் அக்கரை வரை, முதற்கட்டமாக சுமார் 5 கி.மீ. நீளத்திற்கு பொதுமக்கள் பயன்படுத்தும்வண்ணம் மிதிவண்டிப் பாதை மற்றும் நடைபாதை, ரூபாய் 20 கோடி மதிப்பீட்டில் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தால் அமைக்கப்படும்.

7. கிளாம்பாக்கம் பேருந்து முனையத்திலிருந்து ஊரப்பாக்கம் ஏரி வரை, ரூபாய் 17 கோடி மதிப்பீட்டில் புதிய மழைநீர் வடிகால் அமைக்கப்படும்

கிளாம்பாக்கம் புதிய பேருந்து முனையத்தின் வசதியை மேம்படுத்தும்பொருட்டு, இப்பேருந்து முனையத்திலிருந்து ஊரப்பாக்கம் ஏரி வரை, ரூபாய் 17 கோடி மதிப்பீட்டில் புதிய மழைநீர் வடிகால் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தால் அமைக்கப்படும்.

8. கோயம்பேடு மொத்த விற்பனை அங்காடி வளாகம் மருத்துவ சிகிச்சை மையத்துடன் ரூபாய் 10 கோடி மதிப்பீட்டில் மேம்படுத்தப்படும்

கோயம்பேடு மொத்த விற்பனை அங்காடி வளாகத்தில், 7 ஏக்கரில் பொதுமக்களின் பயன்பாட்டிற்கான பூங்கா, 24 மணி நேர ஒருங்கிணைந்த கட்டுப்பாட்டு அறை, சூரிய ஒளி மின்சாரக் கட்டமைப்பு, அங்காடி நிர்வாகக் குழுவிற்கான தனி வலைதளம், அங்காடி வளாகத்திற்கு வரும் மக்கள் பயன்பாட்டிற்கு மருத்துவ சிகிச்சை மையம் ஆகிய வசதிகள் ரூபாய் 10 கோடி மதிப்பீட்டில் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தால் அமைக்கப்படும்.

9. கிளாம்பாக்கம் பேருந்து முனையத்தினுள் 6 ஏக்கரில், ரூபாய் 8 கோடி மதிப்பீட்டில் பூங்கா அமைக்கப்படும்

கிளாம்பாக்கத்தில் அமைக்கப்பட்டு வரும் புதிய பேருந்து முனையத்தில் 6 ஏக்கரில், ரூபாய் 8 கோடி மதிப்பீட்டில், சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தால் பூங்கா ஒன்று அமைக்கப்படும்.

10. கிளாம்பாக்கம் பேருந்து முனையத்தை ஒட்டியுள்ள அயனஞ்சேரி—மீனாட்சிபுரம் சாலையினை ரூபாய் 7.5 கோடி மதிப்பீட்டில் மேம்படுத்துதல்

கிளாம்பாக்கம் புதிய பேருந்து முனையத்திற்கான போக்குவரத்து வசதியை மேம்படுத்தும்பொருட்டு, இப்பேருந்து முனையத்தை ஒட்டியுள்ள அயனஞ்சேரி-மீனாட்சிபுரம் சாலை, ரூபாய் 7.5 கோடி மதிப்பீட்டில், 60 அடி சாலையாக அகலப்படுத்தப்பட்டு சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தால் மேம்படுத்தப்படும்.

11. சென்னையிலுள்ள நான்கு மேம்பாலங்களின்கீழ் உள்ள இடங்கள் ரூபாய் 6 கோடி மதிப்பீட்டில் அழகுபடுத்தப்படும்

சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தால், பெருநகர சென்னை மாநகராட்சியுடன் இணைந்து, வில்லிவாக்கம், இரட்டை ஏரி, பாடி, மற்றும் வடபழனி மேம்பாலங்களுக்குக்கீழ் உள்ள இடங்கள் ரூபாய் 6 கோடி மதிப்பீட்டில் அழகுபடுத்தப்படும்.

12. சிறுசேரியில் அமைந்துள்ள 50 ஏக்கர் வன நிலத்தில், ரூபாய் 5 கோடி மதிப்பீட்டில் நகர்ப்புற வனம் ஏற்படுத்தப்படும்

சிறுசேரியில் அமைந்துள்ள 50 ஏக்கர் வன நிலத்தில், சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தால், தமிழ்நாடு பசுமை காலநிலை நிறுவனத்துடன் (TNGCC) இணைந்து, ரூபாய் 5 கோடி மதிப்பீட்டில் நகர்ப்புற வனம் ஏற்படுத்தப்படும்.

13. சென்னை வெளிவட்டச் சாலையில் 4 உடற்பயிற்சிப் பூங்காக்கள் ரூபாய் 4 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்பட்டு பராமரிக்கப்படும்

சென்னை வெளிவட்டச் சாலையின் கிழக்குப் பகுதியில், சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தின் வசமுள்ள 50 மீட்டர் அகலமுள்ள நிலப்பரப்பில், மீஞ்சூர், வெள்ளனூர், திருநாகேஸ்வரம் மற்றும் முடிச்சூர் ஆகிய இடங்களின் அருகாமையில் வசிக்கும் மக்களின் நலனுக்காக 4 உடற்பயிற்சிப் பூங்காக்கள் ரூபாய் 4 கோடி மதிப்பீட்டில் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தால் அமைக்கப்பட்டு பராமரிக்கப்படும்.

இரவு 8–20

13 அறிவிப்புகளை படித்ததுபோல், இந்த அறிவிப்பையும் வேகமாகப் படித்துவிட முடியாது. ஒப்பாரும் மிக்காரும் இல்லா தலைவர், கலைஞர். ஒட்டுமொத்தத் தமிழகத்தின் அடையாளமாக அவர் ஆட்சிக் காலத்திலே கொண்டுவரப்பட்ட திட்டங்களின்

அடையாளங்கள் தமிழகமெங்கும் பரவிக் கிடப்பதை யாராலும் மறுக்க முடியாது. அந்த வகையிலே நூற்றாண்டு காணவிருக்கின்ற தலைவர் கலைஞர் அவர்களுடைய திருப்பெயரில் 'கலைஞர் நூற்றாண்டு பேருந்து முனையம்' என்று கிளாம்பாக்கத்தில் நிறுவப்படவிருக்கின்ற, 393.74 கோடி ரூபாயில் அமையவிருக்கின்ற இந்தக் கிளாம்பாக்கம் கலைஞர் நூற்றாண்டு பேருந்து முனையத்தை ஜூன் மாதம் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் மக்கள் பயன்பாட்டிற்கு அர்ப்பணிப்பார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

14. கிளாம்பாக்கத்தில் ரூபாய் 393.74 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்பட்டு வரும் புதிய பேருந்து முனையம், ஜூன் மாதத்தில் 'கலைஞர் நூற்றாண்டு பேருந்து முனையம்' எனும் பெயரில் மக்கள் பயன்பாட்டிற்காக, மாண்புமிகு தமிழ்நாடு முதல்வர் அவர்களால் தொடங்கி வைக்கப்படும்

கோயம்பேடு புறநகர் பேருந்து நிலையத்தில் நிலவும் போக்குவரத்து நெரிசலைச் சீரமைக்கும் பொருட்டு, கிளாம்பாக்கத்தில் 88.52 ஏக்கர் நிலத்தில் ரூபாய் 393.74 கோடி மதிப்பீட்டில் நவீன தொழில்நுட்ப வசதிகளுடன் அமைக்கப்பட்டு வரும் புதிய பேருந்து முனையம், ஜூன் மாதத்தில் 'கலைஞர் நூற்றாண்டு பேருந்து முனையம்' எனும் பெயரில் மக்கள் பயன்பாட்டிற்காக, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் தொடங்கி வைக்கப்படும்.

15. சென்னைப் பெருநகரப் பகுதியில், மனைப்பிரிவுகளுக்கான திட்ட அனுமதி, இணைய வழியாக வழங்கப்படும்

சென்னைப் பெருநகரப் பகுதியில் கட்டப்படும் கட்டடங்களுக்கு, 2022 ஆம் ஆண்டு மே மாதம் முதல் திட்ட அனுமதி, சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தால் இணைய வழியாக வழங்கப்பட்டு வருகிறது. மேலும், இவ்வசதி, மனைப்பிரிவுகளுக்கான திட்ட அனுமதி வழங்குவதற்கும் இவ்வாண்டில் விரிவுபடுத்தப்படும்.

16. சென்னைப் பெருநகரப் பகுதியிலுள்ள பாரம்பரியக் கட்டடங்களைப் (Heritage Buildings) பாதுகாப்பதற்காக மாற்றத்தக்க வளர்ச்சி உரிமைச் சான்றிதழ் வழங்கப்படும்

சென்னைப் பெருநகரப் பகுதியில் அமைந்துள்ள பாரம்பரிய கட்டடங்களைப் பாதுகாக்கும்பொருட்டு, அக்கட்டடங்கள்

2023 ஏப்ரல் 13] [திரு. பி.கே. சேகர்பாபு]

அமையப்பெற்றுள்ள நிலங்களில் அபிவிருத்தி செய்தல் கட்டுப்படுத்தப்பட்டுள்ளது. இதனை ஈடுசெய்யும் பொருட்டு, சம்பந்தப்பட்ட நில உரிமையாளர்களுக்கு மாற்றத்தக்க வளர்ச்சி உரிமைச் சான்றிதழ்கள் வழங்கப்படும்.

17. சென்னை சேத்துப்பட்டில் உள்ள சலவைக்கூடத்தில், ரூபாய் 10 கோடி மதிப்பீட்டில் மறுவளர்ச்சி மேற்கொள்ளப்படும்

சென்னை சேத்துப்பட்டில் 1.76 ஏக்கர் பரப்பளவில் 103 குடியிருப்புகளுடன் அமைந்துள்ள சலவைக்கூடத்தில், புதிய கட்டடங்கள் அமைத்தல், கழிப்பறைகள் அமைத்தல் உள்ளிட்ட அம்சங்களுடன் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தால் ரூபாய் 10 கோடி மதிப்பீட்டில் மறுவளர்ச்சி மேற்கொள்ளப்படும்.

18. இராயபுரம் மூலகொத்தளத்தில் ரூபாய் 6 கோடி மதிப்பீட்டில் சமுதாயக்கூடம் அமைத்தல்

இராயபுரத்தில் மூலகொத்தளம் பேருந்து நிறுத்தம் அருகே உள்ள சுமார் 15 கிரவுண்ட் பொது இடத்தில் சமுதாயக்கூடம் ரூபாய் 6 கோடி மதிப்பீட்டில் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தால் அமைக்கப்படும்.

19. கோடம்பாக்கத்தில் உள்ள 1.5 கி.மீ. நீளமுள்ள புலியூர் கால்வாய் கரைகள், ரூபாய் 5 கோடி மதிப்பீட்டில் அழகுபடுத்தப்படும்

கோடம்பாக்கத்தில் உள்ள 1.5 கி.மீ. நீளமுள்ள புலியூர் கால்வாய் கரைகளில் நடைபாதைகள், பூங்கா மற்றும் நீரூற்றுகளுடன் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தால் ரூபாய் 5 கோடி மதிப்பீட்டில் அழகுபடுத்தப்படும்.

20. சென்னையில் கொண்டித்தோப்பு பகுதியில் ரூபாய் 10 கோடி மதிப்பீட்டில் மாற்றுத் திறனாளிகளுக்கான மறுவாழ்வு மையம் மற்றும் இரத்த சுத்திகரிப்பு மையம் (dialysis centre) அமைக்கப்படும்

சென்னையில் கொண்டித்தோப்பு பகுதியில் ரூபாய் 10 கோடி மதிப்பீட்டில் மாற்றுத் திறனாளிகளுக்கான மறுவாழ்வு மையம் அமைக்கப்படும். இதில், மாற்றுத் திறனாளிகளுக்கான சிகிச்சை, இயன்முறை சிகிச்சை (physiotherapy) மற்றும் அவர்களுக்குத் தேவைப்படும் உபகரணங்கள் ஆகியவை ஏற்படுத்தித் தரப்படும்.

மேலும், இரத்த சுத்திகரிப்பு மையம் (dialysis centre) அமைக்கப்பட்டு மக்களுக்கு கட்டணமில்லா சிகிச்சை அளிக்கப்படும்.

21. சிந்தாதிரிப்பேட்டை மே தினப் பூங்காவை ரூபாய் 5 கோடி மதிப்பீட்டில் மேம்படுத்துதல்

சிந்தாதிரிப்பேட்டை மே தினப் பூங்கா, சுற்றுச்சுவர், பார்வையாளர் மாடம், பயிற்சி ஆடுகளம் மற்றும் விளையாட்டு அரங்கம் போன்ற வசதிகளுடன் ரூபாய் 5 கோடி மதிப்பீட்டில் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தால் மேம்படுத்தப்படும்.

22. அண்ணா சாலை—டேம்ஸ் சாலை—ஜெனரல் பேட்டர்ஸ் சாலை சந்திப்பில் நடைமேம்பாலம் ரூபாய் 15 கோடி மதிப்பீட்டில் அமைத்தல்

அண்ணா சாலை-டேம்ஸ் சாலை-ஜெனரல் பேட்டர்ஸ் சாலை சந்திப்பில் அண்ணா சாலையைப் பொதுமக்கள் எளிதாகக் கடக்கும் வண்ணம் ஒரு நடைமேம்பாலம் ரூபாய் 15 கோடி மதிப்பீட்டில் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தால் அமைக்கப்படும்.

23. சென்னை மயிலாப்பூர் முண்டகக்கண்ணி அம்மன் கோயில் அருகிலுள்ள மாநகராட்சி விளையாட்டு மைதானத்தில், ரூபாய் 2.5 கோடி மதிப்பீட்டில் உள் விளையாட்டு அரங்கம் அமைக்கப்படும்

சென்னை மயிலாப்பூரில் முண்டகக்கண்ணி அம்மன் கோயில் அருகிலுள்ள சுமார் 0.50 ஏக்கரில் உள்ள மாநகராட்சி விளையாட்டு மைதானத்தில் பல்வேறு விளையாட்டுகளுக்கான உட்புற பயிற்சி அளிக்கும் வகையில் உட்புற பூப்பந்து மற்றும் கூடைப்பந்து விளையாட்டு வசதியுடன் பொது மக்கள் மற்றும் பள்ளிக் குழந்தைகள் பயன்படுத்தும் வகையில் உள் விளையாட்டு அரங்கம் ரூபாய் 2.5 கோடி மதிப்பீட்டில் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தால் அமைக்கப்படும்.

24. சென்னை கோட்டூரில் அமைந்துள்ள மாநகராட்சி விளையாட்டுத்திடல் ரூபாய் 5 கோடி மதிப்பீட்டில் மேம்படுத்தப்படும்

சென்னை கோட்டூர் ஏரிக்கரை சாலையில் 1 ஏக்கரிலுள்ள விளையாட்டு மைதானம் நடைபயிற்சிப் பாதை, உடற்பயிற்சி உபகரணங்கள் மற்றும் ஓடுதளத்துடன் ரூபாய் 5 கோடி மதிப்பீட்டில் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தால் மேம்படுத்தப்படும்.

2023 ஏப்ரல் 13] [திரு. பி.கே. சேகர்பாபு]

25. சென்னை, தியாகராய நகர், சோமசுந்தரம் விளையாட்டு மைதானத்தை ரூபாய் 10 கோடி மதிப்பீட்டில் மேம்படுத்துதல்

சென்னை, தியாகராய நகரில் சுமார் 4.6 ஏக்கரில் உள்ள மாநகராட்சி விளையாட்டு மைதானம் ஓடுதளம், திறந்தவெளி உடற்பயிற்சி வளாகம், யோகா பயிற்சி வளாகம், கிரிக்கெட் பயிற்சி தளம் போன்ற வசதிகளுடன் ரூபாய் 10 கோடி மதிப்பீட்டில் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தால் மேம்படுத்தப்படும்.

26. சென்னை, ஷெனாய் நகரில் 4.5 ஏக்கரில் உள்ள மாநகராட்சி விளையாட்டு மைதானம் ரூபாய் 5 கோடி மதிப்பீட்டில் மேம்படுத்தப்படும்

சென்னை, ஷெனாய் நகரில் 4.5 ஏக்கரில் உள்ள மாநகராட்சி விளையாட்டு மைதானம் (திரு.வி.க. மேல்நிலைப் பள்ளி அருகில்), திறந்தவெளி விளையாட்டு அரங்கம் மற்றும் உள்விளையாட்டு அரங்கத்துடன் ரூபாய் 5 கோடி மதிப்பீட்டில் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தால் மேம்படுத்தப்படும்.

27. சென்னை கோயம்பேட்டில் உள்ள சாலை சந்திப்பில் ரூபாய் 10 கோடி மதிப்பீட்டில் இயற்கை வனப்புடன் பூங்கா அமைக்கப்படும்

சென்னை, கோயம்பேட்டில் உள்வட்டச் சாலை மற்றும் சென்னை-பூவிருந்தவல்லி சாலையின் சந்திப்பை அழகுபடுத்தும் பொருட்டு, ரூபாய் 10 கோடி மதிப்பீட்டில் இயற்கை வனப்புடன்கூடிய பூங்கா, சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தால் அமைக்கப்படும்.

28. வடசென்னை, காசிமேட்டில் உள்ள கடற்கரைப் பகுதி, ரூபாய் 6 கோடி மதிப்பீட்டில் மேம்படுத்தப்படும்

வடசென்னை, காசிமேட்டில் உள்ள கடற்கரைப் பகுதி, ரூபாய் 6 கோடி மதிப்பீட்டில் சுற்றுச்சூழலுக்கேற்ப, வடசென்னை மக்கள் பயன்பெறும் வகையில் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தால் மேம்படுத்தப்படும்.

29. தண்டையார்பேட்டை பேருந்துப் பணிமனை ரூபாய் 25 கோடி மதிப்பீட்டில் நவீனமயமாக்கப்படும்

தண்டையார்பேட்டையில் 6.67 ஏக்கரில் உள்ள பேருந்துப் பணிமனை, நவீன வசதிகளுடன் பல மாநகரப் பேருந்து வழித்தடங்களும் அடங்கிய பேருந்து நிலையமாகவும் மற்றும்

பணிமனையாகவும் ரூபாய் 25 கோடி மதிப்பீட்டில் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தால் நவீனமயமாக்கப்படும்.

30. கவியரசு கண்ணதாசன் நகர் பேருந்து நிலையம், ரூபாய் 5 கோடி மதிப்பீட்டில் மேம்படுத்தப்படும்

கவியரசு கண்ணதாசன் நகரில் 1.40 ஏக்கரில் உள்ள பேருந்து நிலையம் நவீன வசதிகள் கொண்ட பேருந்து நிலையமாக ரூபாய் 5 கோடி மதிப்பீட்டில் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தால் மேம்படுத்தப்படும்.

31. பெரம்பூர்—முல்லைநகர் பேருந்து நிலையம், ரூபாய் 5 கோடி மதிப்பீட்டில் மேம்படுத்தப்படும்

பெரம்பூர் முல்லை நகரில் 1.60 ஏக்கரில் உள்ள பேருந்து நிலையம் நவீன வசதிகள் கொண்ட பேருந்து நிலையமாக ரூபாய் 5 கோடி மதிப்பீட்டில் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தால் மேம்படுத்தப்படும்.

32. வியாசர்பாடி கன்னிகாபுரம் விளையாட்டுத்திடல் ரூபாய் 20 கோடி மதிப்பீட்டில் மேம்படுத்தப்படும்

வியாசர்பாடி கன்னிகாபுரம் பகுதியில் தற்போதுள்ள விளையாட்டுத்திடல், ரூபாய் 20 கோடி மதிப்பீட்டில் பார்வையாளர்கள் அரங்கம் உள்ளிட்ட நவீன வசதிகளுடன்கூடிய விளையாட்டு மைதானமாக சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தால் மேம்படுத்தப்படும்.

33. அண்ணாநகர் மேற்குப் பகுதியில், 100 அடி பிரதான சாலையில், நகரும் மின்படிக்கட்டுகளுடன் நடைமேம்பாலம் ரூபாய் 15 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்படும்

சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தால் அண்ணாநகர் மேற்குப்பகுதியில், 100 அடிசாலையில் உள்ள கேந்திரிய வித்யாலயா பள்ளிக்கு அருகில் பொதுமக்கள் மற்றும் பள்ளிக் குழந்தைகள் சாலையை எளிதாகக் கடக்கும் வண்ணம் ரூபாய் 15 கோடி மதிப்பீட்டில் நகரும் மின்படிக்கட்டுகளுடன் நடைமேம்பாலம் அமைக்கப்படும்.

34. கொளத்தூர் பேப்பர் மில்ஸ் சாலையில் நவீன சந்தை ரூபாய் 10 கோடி மதிப்பீட்டில் அமைத்தல்

சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தால் கொளத்தூரில் பேப்பர் மில்ஸ் சாலைப் பகுதியில் உள்ள 1 ஏக்கர் நிலத்தில், ரூபாய் 10 கோடி மதிப்பீட்டில் அனைத்து வசதிகளுடன்கூடிய நவீன சந்தை ஒன்று அமைக்கப்படும்.

35. திரு.வி.க. நகர் பேருந்து நிலையம், ரூபாய் 5 கோடி மதிப்பீட்டில் நவீனமயமாக்கப்படும்

திரு.வி.க. நகர் பேருந்து நிலையம், பேருந்து நிலையக் கட்டடத்தைப் புதுப்பித்தல், பொதுக் கழிப்பிட வசதி, காத்திருப்புக் கூடம், கம்பியில்லா இணைய வசதி (Wi-Fi), சூரிய மின்சக்தித் தகடுகள், தண்ணீர் சுத்திகரிப்பு அமைப்புகள், பயணியருக்கான இருக்கை, ஓட்டுநர் மற்றும் நடத்துனர்களுக்கான ஓய்வறை உள்ளிட்ட நவீன வசதிகள் கொண்ட பேருந்து நிலையமாக ரூபாய் 5 கோடி மதிப்பீட்டில் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தால் நவீனமயமாக்கப்படும்.

36. பெரியார் நகர் பேருந்து நிலையம், ரூபாய் 5 கோடி மதிப்பீட்டில் நவீனமயமாக்கப்படும்

பெரியார் நகர் பேருந்து நிலையம், பேருந்து நிலையக் கட்டடத்தைப் புதுப்பித்தல், பொதுக் கழிப்பிட வசதி, காத்திருப்புக் கூடம், கம்பியில்லா இணைய வசதி (Wi-Fi), சூரிய மின்சக்தி தகடுகள், தண்ணீர் சுத்திகரிப்பு அமைப்புகள், பயணியருக்கான இருக்கை, ஓட்டுநர் மற்றும் நடத்துனர்களுக்கான ஓய்வறை உள்ளிட்ட நவீன வசதிகள் கொண்ட பேருந்து நிலையமாக ரூபாய் 5 கோடி மதிப்பீட்டில் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தால் நவீனமயமாக்கப்படும்.

37. இராமாபுரத்தில் 1.4 ஏக்கர் திறந்தவெளி நிலத்தில், ரூபாய் 5 கோடி மதிப்பீட்டில் பூங்கா அமைக்கப்படும்

இராமாபுரம் டி.எல்.எப்.-ற்கு எதிரே 1.4 ஏக்கரில் உள்ள திறந்தவெளி நிலப்பரப்பில் சுற்றுச்சுவர் அமைத்து, நடைபாதை, புல்தரை, நீரூற்று மற்றும் குழந்தைகள் விளையாட்டுச் சாதனங்கள் உள்ளிட்ட வசதிகளுடன் ரூபாய் 5 கோடி மதிப்பீட்டில் பூங்கா அமைக்கப்படும்.

38. எண்ணூரில் அமைந்துள்ள தினசரி காய்கறி சந்தை மற்றும் சமுதாயக்கூடம் ரூபாய் 5 கோடி மதிப்பீட்டில் புதுப்பிக்கப்படும்

எண்ணூர் பேருந்து நிலையத்திற்கு அருகில் 1 ஏக்கரில் அமைந்துள்ள தினசரி காய்கறி சந்தை மற்றும் சமுதாயக்கூடம் ரூபாய் 5 கோடி மதிப்பீட்டில் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தால் புதுப்பிக்கப்படும்.

39. ஆவடி, அன்னனூர் கோணம்பேடு பகுதியிலுள்ள அரசு உயர்நிலைப் பள்ளியில் புதிய பள்ளிக் கட்டடம் ரூபாய் 4 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்படும்

ஆவடி, அன்னனூர் கோணம்பேடு பகுதியிலுள்ள அரசு உயர்நிலைப் பள்ளியில் 1.25 ஏக்கர் பரப்பளவில் உள்ள பயன்பாட்டில் இல்லாத கட்டடத்தை அகற்றிவிட்டு, உயர் வசதிகளுடன் வகுப்பறை, நூலகம் மற்றும் கழிப்பறை வசதியுடன்கூடிய புதிய பள்ளிக் கட்டடம் ரூபாய் 4 கோடி மதிப்பீட்டில் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தால் அமைக்கப்படும்.

40. அம்பத்தூர் பேருந்து நிலையம் ரூபாய் 5 கோடி மதிப்பீட்டில் மேம்படுத்தப்படும்

3.5 ஏக்கரில் உள்ள அம்பத்தூர் பேருந்து நிலையம் மற்றும் பணிமனையில், போக்குவரத்து ஊழியர்களுக்கான ஓய்வறை, கழிப்பறை, கண்காணிப்பு கேமரா, மற்றும் இருசக்கர வாகன நிறுத்தம் உள்ளிட்ட வசதிகளுடன்கூடிய பேருந்து நிலையம், ரூபாய் 5 கோடி மதிப்பீட்டில் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தால் மேம்படுத்தப்படும்.

41. பூவிருந்தவல்லி—ஆவடி நெடுஞ்சாலையில், ஒருங்கிணைந்த விளையாட்டு அரங்கம் ரூபாய் 4 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்படும்

பூவிருந்தவல்லி–ஆவடி நெடுஞ்சாலையில், கரையான்சாவடி அறிஞர் அண்ணா மேல்நிலைப்பள்ளிக்கு அருகிலுள்ள 2.5 ஏக்கர் பரப்பளவு கொண்ட மைதானத்தில், பல்வேறு விளையாட்டுகளுக்குப் பயிற்சி அளிக்கும் வகையில் தடகள ஓடுபாதை மற்றும் கால்பந்து மைதானம் ரூபாய் 4 கோடி மதிப்பீட்டில் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தால் அமைக்கப்படும்.

42. புழல் மகாலட்சுமி நகர் மாநகராட்சி நடுநிலைப் பள்ளியில் புதிய பள்ளி வளாகம் ரூபாய் 4 கோடி மதிப்பீட்டில் அமைத்தல்

புழல் மகாலட்சுமி நகர் மாநகராட்சி நடுநிலைப் பள்ளி வளாகத்தினுள் 1 ஏக்கர் பரப்பளவில் உள்ள பழைய கட்டடத்தை அகற்றிவிட்டு, புதிய வகுப்பறைகள், சமையல் கூடம் மற்றும் கழிப்பறை வசதிகளுடன்கூடிய புதிய பள்ளி வளாகம் ரூபாய் 4 கோடி மதிப்பீட்டில் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தால் அமைக்கப்படும்.

43. புழல் மேட்டுப்பாளையம், சீனிவாசன் தெருவில் அமைந்துள்ள கால்பந்து மைதானத்தை ரூபாய் 1.5 கோடி மதிப்பீட்டில் புனரமைத்தல்

புழல் மேட்டுப்பாளையம், சீனிவாசன் தெருவில் அமைந்துள்ள கால்பந்து மைதானத்தில், மேற்கூரையைச் சீரமைத்து உடற்பயிற்சிக் கூடம் மற்றும் மின்விளக்கு வசதிகள் ரூபாய் 1.5 கோடி மதிப்பீட்டில் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தால் புனரமைக்கப்படும்.

44. முடிச்சூர் ஊராட்சியில் அமைந்துள்ள இரங்கா நகர் குளம், ரூபாய் 1.50 கோடி மதிப்பீட்டில் மேம்படுத்தப்படும்

சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தால், பரங்கிமலை ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட முடிச்சூர் ஊராட்சியில் அமைந்துள்ள இரங்கா நகர் குளத்தினை ரூபாய் 1.50 கோடி மதிப்பீட்டில் ஆழப்படுத்தி, கரையினை உயர்த்தி, நடைபாதை அமைக்கப்படும்.

45. முடிச்சூர் ஊராட்சியில் அமைந்துள்ள சீக்கனான் ஏரி, ரூபாய் 2 கோடி மதிப்பீட்டில் மேம்படுத்தப்படும்

சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தால், பரங்கிமலை ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட முடிச்சூர் ஊராட்சியில் அமைந்துள்ள சீக்கனான் ஏரியை ரூபாய் 2 கோடி மதிப்பீட்டில் ஆழப்படுத்தி, கரையினை உயர்த்தி, நடைபாதை அமைக்கப்படும்.

46. பம்மல் கிராமம், ஈஸ்வரி நகரில் விளையாட்டுத் திடல் மற்றும் பூங்கா ரூபாய் 2 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்படும்

தாம்பரம் நகராட்சி, பல்லாவரம் வட்டம், பம்மல் கிராமம் ஈஸ்வரி நகரில் சுற்றுச்சுவர் அமைத்து பூப்பந்தாட்டத் திடல்,

விளையாட்டு மைதானம் மற்றும் பூங்கா ரூபாய் 2 கோடி மதிப்பீட்டில் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தால் அமைக்கப்படும்.

47. ஆலந்தூர் புது தெருவில் சமுதாய நலக் கூடம் ரூபாய் 10 கோடி மதிப்பீட்டில் ஏற்படுத்தப்படும்

ஆலந்தூர் கோட்டம் 160, மண்டலம் 12-ல் உள்ள புதுத் தெருவில் குளிரூட்டு வசதியுடன்கூடிய நிகழ்ச்சி அரங்கம், உணவுக் கூடம் போன்றவற்றைக் கொண்ட சமுதாய நலக் கூடம் ரூபாய் 10 கோடி மதிப்பீட்டில் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தால் ஏற்படுத்தப்படும்.

48. வேளச்சேரியில் அமைந்துள்ள மேம்பாலத்தின்கீழ் உள்ள பகுதி ரூபாய் 2 கோடி மதிப்பீட்டில் அழகுபடுத்தப்படும்

வேளச்சேரியில் 100 அடி புறவழிச் சாலையில் அமைந்துள்ள மேம்பாலத்தின்கீழ் உள்ள பகுதி, ரூபாய் 2 கோடி மதிப்பீட்டில் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தால் அழகுபடுத்தப்படும்.

49. பெரும்பாக்கத்தில் ரூபாய் 3.25 கோடி மதிப்பீட்டில் புதிய பூங்கா அமைக்கப்படும்

பெரும்பாக்கம், சேரன் நகர், சரஸ்வதி ராஜசேகரன் சாலையில் உள்ள 2.20 ஏக்கரில் சுற்றுச்சுவர், நடைபாதை, உடற்பயிற்சி மற்றும் குழந்தைகள் விளையாட்டு சாதனங்கள் ஆகிய வசதிகளுடன் ரூபாய் 3.25 கோடியில் ஒரு புதிய பூங்கா சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தால் அமைக்கப்படும்.

50. சென்னை புரசைவாக்கத்தில் (கான்ரான் ஸ்மித் சாலையில்) உள்ள சலவைக்கூடத்தில், ரூபாய் 10 கோடி மதிப்பீட்டில் மறுவளர்ச்சி மேற்கொள்ளப்படும்

சென்னை புரசைவாக்கத்தில் (கான்ரான் ஸ்மித் சாலையில்) அமைந்துள்ள சலவைக்கூடத்தில் பழைய கட்டடங்களைப் புதுப்பித்தல், ஓய்வறை, கழிப்பறைகள் அமைத்தல் உள்ளிட்ட அம்சங்களுடன் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தால் ரூபாய் 10 கோடி மதிப்பீட்டில் மறுவளர்ச்சி மேற்கொள்ளப்படும்.

2023 ஏப்ரல் 13] [திரு. பி.கே. சேகர்பாபு]

ஒட்டுமொத்தமாக அறிவித்திருக்கின்ற அறிவிப்புகளில் 34 அறிவிப்புகளுக்கு ரூ.233 கோடியே 75 இலட்சத்திற்கு திட்டங்கள் தீட்டப்பட்டிருக்கின்றன. இதில் குழுமத்தின் 16 அறிவிப்புகள் ரூ.260 கோடியே 16 இலட்சம் மதிப்பீட்டில் செயல்படுத்தப்படும். ஒட்டுமொத்தமாக இந்த அறிவிப்பில் அறிவிக்கப்பட்ட திட்டங்கள் ரூ.493 கோடியே 91 இலட்சம் மதிப்பீட்டில் செயல்படுத்தப்படும் என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த ஐந்தாண்டு கால ஆட்சியில், 2016 ஆம் ஆண்டு தொடங்கி 2021 ஆம் ஆண்டு வரை, அறிவிக்கப்பட்ட சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழுமத்தின் அறிவிப்புகள் ஒட்டுமொத்தமாக 35. அவற்றில் கைவிடப்பட்டவை, 14; ஏற்கெனவே தொடர்ந்து செய்துகொண்டிருக்கிற பணிகள் 7; நிறைவேறியது 14. இதனை குற்றச்சாட்டுக்காகச் சொல்லவில்லை. ஒட்டுமொத்தமாக 35 அறிவிப்புகள் 5 ஆண்டு கால ஆட்சியில். திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி ஏற்பட்ட பிறகு, 2021–2022–ல் 7 அறிவிப்புகள்; 2022–2023–ல் 12 அறிவிப்புகள்; மொத்தமாக 19 அறிவிப்புகள். தற்போது கழகத் தலைவர், மாண்புமிகு தமிழ்நாட்டு முதலமைச்சர் அன்பிற்கினிய தளபதி அவர்கள் வழிகாட்டுதலோடு, 50 அறிவிப்புகளை இன்றைக்கு சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் அறிவித்திருக்கின்றது. இந்த 50 அறிவிப்புகளும் அடுத்த ஆண்டு இதே மாமன்றத்தில் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தின் மானியக் கோரிக்கை வருகின்றபோது, ஒன்று பணிகள் நிறைவு பெற்றிருக்கும் அல்லது அந்தப் பணிகள் நடந்து கொண்டிருக்க வேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டிருக்கின்றார். அந்த வகையில் அடுத்த ஆண்டு மானியக் கோரிக்கையின்போது நிச்சயம் இந்த 50 பணிகளும் நடந்து கொண்டிருக்கும் அல்லது முடிவுற்றிருக்கும் என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிறைவு உரையாக 'காலத்திற்கேற்ற மாற்றம், வளர்ச்சிக்கு பின் மகிழ்ச்சி'. இதுதான் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தின் இலக்கு.

பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தின் தந்தை முத்தமிழறிஞர் கலைஞர் என்றால், விஞ்ஞான யுகத்தின் விவேகி, எங்கள் முதல்வர். எங்கள் முதல்வர் publicity விரும்பாத simplicity. அனைவரும் அரசியல் பாடம் படிக்கும் university. அதனால் அவருக்கு உண்டு இந்தியாவை ஆளுகின்ற capacity. இனி நாட்டிலே

top city எங்கள் Chennai city. இயல் என்றால் முத்தமிழறிஞர் கலைஞர்; செயல் என்றால் நம் முதல்வர்; புயல் என்றால் நம் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர். திரையுலகில் எங்கள் இளைஞரணி செயலாளருக்கு விசிறிகளே இரசிகர்கள்; திரையுலகில் எங்கள் இளைஞர் அணிச் செயலாளருக்கு விசிறிகளே இரசிகர்கள். அரசியல் உலகில் எங்கள் இளைஞரணி செயலாளருக்கு எதிரிகளே இரசிகர்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்கள் முதல்வர் தீர்க்கதரிசனத்தின் தேடல். வசை பாடியவர்களெல்லாம் இப்போது அவரை திசை காட்டியாக எண்ணுகிறார்கள். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எத்தனையோ நெடுஞ்சாலைகளை அமைத்து, சாதிக்கும் நம் முதல்வரிடம் ஆலோசனை கேட்க தேசிய நெடுஞ்சாலைகளெல்லாம் நம் சித்தரஞ்சன் சாலையை வந்தடையும் காலம் வெகுதூரம் இல்லை. இவருக்கு சென்னையில் செஸ் ஒலிம்பியாட் போட்டியை உலகம் வியக்கும்வண்ணம் நடத்தவும் தெரியும்; அரசியல் சதுரங்கக் களத்தில் சாதுரியமாக காய்களை நகர்த்தவும் தெரியும். அவர் எந்தக் காயை நகர்த்துவார் எனத் தெரியாமல் எதிரிகள் தலை காய்ந்து போகக் கூடும்.

இரவு 8–25

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்கள் முதல்வர் அதிகம் பேசமாட்டார். ஆனால், அவர் பேசுவதைத்தான் இந்த நாடு பேசும். எங்கள் முதல்வர் அதிகம் பேசமாட்டார்; ஆனால் அவர் பேசுவதைத்தான் இந்த நாடு பேசும். அவர் பரிசளிக்கும் புத்தகம்கூட ஊடகங்களில் பேசுப் பொருளாகும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆணவத்தால் அதிகம் பேசுபவர்களை வழிக்குக் கொண்டுவரும் வழியையும் அவர் அறிவார். பெண்களுக்கு சொத்துரிமை தந்தது கலைஞர் ஆட்சி. அவர்களுக்கு ஆயிரம் ரூபாய் உரிமைத் தொகை தருவது தளபதி ஆட்சி. அதனால்தான் தமிழ்நாட்டு அன்னையர், முதல்வரை ஆயிரத்தில் ஒருவர் அல்ல, பல கோடிகளில் ஒருவர் என்று கொண்டாடிக் கொண்டிருக்கின்றார்கள். இவர் நமக்காக விழித்திருக்கிறார் என்ற நம்பிக்கையில்தான் தமிழ்நாட்டு மக்கள் நிம்மதியாக உறங்குகிறார்கள். இவர் நமக்காக விழித்திருக்கிறார் என்ற நம்பிக்கையில்தான் தமிழ்நாட்டு மக்கள் நிம்மதியாக உறங்கிக் கொண்டிருக்கின்றார்கள். தமிழ்நாட்டை தோண்டி

2023 ஏப்ரல் 13] [திரு. பி.கே. சேகர்பாபு]

வரலாற்றை எடுக்கும் இந்த டெல்டாக்காரரர், நிலம் தோண்டி நிலக்கரி எடுப்பதைத் தடுத்த பெருமைக்காரரர்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிலருக்கு சொந்தக் கட்சியின் சின்னமே தவணை முறையில்தான் கிடைக்கிறது. ஆனால், நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தமிழ்நாட்டின் சின்னமாக மக்கள் மனங்களில் நிலைக்கின்றார். இவர், நின்றதும், வென்றதும் சென்னையில்தான். இவர் சிங்காரச் சென்னையின் செல்லப் பிள்ளை. எங்கள் தளபதியை யாரும் நெருங்க முடியாது. ஏனென்றால், அவரை சூழ்ந்திருப்பவர்கள் வெறும் சிப்பாய்கள் அல்ல; உயிரையும் தரத் துணிந்த உடன்பிறப்புகள் என்பதால் எங்கள் தளபதியை யாரும் நெருங்க முடியாது. (மேசையைத் தட்டும் ஒலி) உயிரையும் கொடுக்கத் துணிந்த உடன்பிறப்புகள் என்பதால் எங்கள் தளபதியை யாரும் நெருங்க முடியாது. ஒரு ஜோடி கால்களை நம்பி முதல்வரானவர் அல்ல எங்கள் தளபதி. ஒரு ஜோடி கால்களை நம்பி முதல்வரானவர் அல்ல எங்கள் தளபதி. பல கோடி, பல கோடி கைகளை நம்பி முதல்வரானவர் எங்கள் தலைவர் தளபதி என்பதைக் கூறிக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழ்நாட்டு முதலமைச்சர் அவர்களுடைய அரசியல் பணியும், மக்கள் பணியும் எப்படி போற்றப்படும் என்றால், பார் உள்ளளவும், கடல் நீர் உள்ளளவும், சரித்திரத்தில் மங்காப் புகழோடு ஒளி வீசுவார், ஒளி வீசுவார், ஒளி வீசுவார் என்று கூறி, என்னுடைய உரையை நிறைவு செய்து, இந்தத் துறையின் சார்பில் வெட்டுத் தீர்மானங்கள் எவ்வளவுதான் வந்தது என்று தேடித் தேடிப் பார்த்தேன். ஒரே ஒரு வெட்டுத் தீர்மானம்தான் வந்தது. அந்த வெட்டுத் தீர்மானத்திற்கும் என்னுடைய பதிலுரையில் பதிலளித்துவிட்டேன். ஆகவே, அந்த வெட்டுத் தீர்மானத்தைக் கொடுத்தவரும் மனமகிழ்ச்சியோடு இருப்பார் என்பதைக் கருத்திலே கொண்டு என் உரையை நிறைவு செய்கிறேன். எனக்கு இங்கு பேசுகின்ற இந்த வாய்ப்பை அளித்தமைக்கும், நான் பேசுவதைக் கேட்டதற்காக தோழமைக் கட்சியினரும், அதேபோல எங்கள் சட்டமன்ற உறுப்பினர்களும், எங்கள் அமைச்சர் பெருமக்களும், குறிப்பாக என் உயிரினும் மேலான தலைவர் தளபதி அவர்களும் இந்த அவையிலே இருந்ததைப் பெருமையாகக் கருதுகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

இந்தத் தயாரிப்பிலே எங்களுக்கு உடனிருந்து ஒத்துழைப்பு நல்கிய எங்கள் துறையின் செயலாளர் அன்பிற்கினிய செல்வி அபூர்வா, இ.ஆ.ப., அவர்களுக்கும், துறையின் Member Secretary திரு. அன்சுல் மிஸ்ரா, இ.ஆ.ப., அவர்களுக்கும், தலைமைச் செயலாளர் அன்பிற்கினிய திரு. வெ. இறையன்பு, இ.ஆ.ப., அவர்களுக்கும், மாண்புமிகு முதல்வர் அவர்களின் தனிச் செயலாளர்கள் அன்பிற்கினிய திரு. உதயசந்திரன், இ.ஆ.ப., அவர்களுக்கும், அன்பிற்கினிய திரு. உமாநாத், இ.ஆ.ப., அவர்களுக்கும், திருமதி அனு ஜார்ஜ், இ.ஆ.ப., அவர்களுக்கும், திரு. சண்முகம், இ.ஆ.ப., அவர்களுக்கும், எங்களுக்கு உறுதுணையாக இருக்கின்ற அன்பிற்கினிய முதல்வர் அவர்களுடைய உதவியாளர் திரு. தினேஷ் அவர்களுக்கும் மற்றும் உள்ள அனைவருக்கும் என்னுடைய நன்றி, நன்றி, நன்றி எனக் கூறி, சென்னை பெருநகர வளர்ச்சிக் குழுமத்தினுடைய இந்த மானியக் கோரிக்கையினை நிறைவேற்றித் தருமாறு கேட்டு, அமர்கிறேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பதிலுரை, மாண்புமிகு குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. தா.மோ. அன்பரசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வணக்கம். பகுத்தறிவுப் பகலவன், ஈரோட்டுச் சிங்கம் பெரியாரை வணங்குகிறேன். காஞ்சித் தலைவன், கழகத்தின் மூலவர், துள்ளு தமிழாடும் வெள்ளி நாக்கு வேந்தர் அறிஞர் அண்ணாவை வணங்குகிறேன். கோடிக்கணக்கான தொண்டர்களின் கொள்கைத் தாய், மொத்தத் தமிழினத்தின் மூச்சுக் காற்று, முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களை வணங்குகிறேன்.

இரவு 8–30

இந்தியாவே வியந்து பார்க்கும் முதல்வரே, எங்கள் தலைவரே, Raj Bhavan–ஐ வழிக்குக் கொண்டு வந்த ராஜ ராஜ சோழனே, MISA தழும்புகளை படிக்கற்களாக்கி மேலேறி வந்தவர் நீங்கள். உங்களை உரசிப் பார்க்க நினைத்தவர்கள் ஒருபோதும் தப்பியதில்லை. சட்டமன்றத்தில் நீங்கள் சாட்டை சுழற்றியதைப் பார்த்து அகில இந்தியாவும் ஆரவாரம் செய்கிறது. ரம்மி தடைக்கு தமிழகமே உங்களை வணங்குகிறது. சுய மரியாதைச் சூரியனே, உங்களை வணங்குகிறேன்.

2023 ஏப்ரல் 13] [திரு. தா.மோ. அன்பரசன்]

வருங்கால தலைமையே, வரலாற்றை வடிவமைக்கும் பேரியக்கத்தின் எதிர்காலமே, எங்கள் இளைய சூரியனே, மாண்புமிகு உதயா அவர்களுக்கும் என் வணக்கம். மாண்புமிகு அமைச்சர் பெருமக்களுக்கும், மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் என்னுடைய வணக்கத்தைப் பணிவோடு நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2023–2024 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியத்தினுடைய மானியக் கோரிக்கையில் உரையாற்றுகிற நல் வாய்ப்பை வழங்கிய, நாங்களெல்லாம் உயிராகப் போற்றுகிற எங்களுடைய ஒப்பற்ற தலைவர் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுக்கும், மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கும் எனது நன்றியைத் தெரிவித்து, எனது உரையை தொடங்குகிறேன்.

பேரறிஞர் அண்ணா அவர்களுடைய மறைவிற்குப் பிறகு, நம்முடைய முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்கள் முதல்வராகப் பொறுப்பேற்று, தமிழகத்தில் இருக்கிற ஏழையெளிய, தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட மக்களுடைய வாழ்க்கைத் தரத்தை உயர்த்திட வேண்டுமென்பதற்காக, பல்வேறு முன்னணித் திட்டங்களைக் கொண்டுவந்து, அதைச் செயல்படுத்தி இலட்சக்கணக்கான குடும்பங்களை வாழ வைத்த ஒரே தலைவர் கலைஞர் அவர்கள். அவர் நூற்றுக்கும் மேற்பட்ட திட்டங்களைக் கொண்டு வந்திருக்கிறார். அவற்றில் முக்கியமான திட்டங்கள் எதுவென்று சொன்னால், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம், ஆதி திராவிடர்களுக்கு இலவச கான்கிரீட் வீடுகள், மீனவர்களுக்கு இலவச வீடு வழங்கும் திட்டம், இந்தியாவிலேயே விவசாயிகளுக்கு முதன்முறையாக இலவச மின்சாரம், அனைத்து கிராமங்களுக்கும் மின்னிணைப்பு மற்றும் சாலை வசதிகள், சிட்கோ தொழிற்பேட்டை, சிப்காட் தொழிற்பேட்டை, பேருந்துகளை நாட்டுடைமையாக்குவது போன்ற எண்ணற்ற திட்டங்களைக் கொண்டுவந்து, மிகப் பெரிய வளர்ச்சிப் பாதைக்கு தமிழகத்தைக் கொண்டு சென்ற தலைவர் கலைஞர் அவர்கள். இன்றைக்கு அவருடைய மறுஉருவமாய் இருக்கிற நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், அதாவது எதிர்கால தேர்தலைப் பற்றிச் சிந்திக்காமல், எதிர்கால தலைமுறையைப் பற்றிச் சிந்தித்து, திட்டம் போடுகிற தலைவராக கலைஞருக்குப் பிறகு நம்முடைய தலைவர் தளபதி அவர்கள் திகழ்ந்து கொண்டிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

இன்னும் பார்த்தோம் என்றால், புதுமைப் பெண் திட்டம். இந்தியாவில் வேறு எங்குமே கிடையாது. தமிழ்நாட்டில்தான் கொண்டு வந்திருக்கிறார். தொடக்கப் பள்ளிகளில் இருக்கிற மாணவர்களுக்கு காலை சிற்றுண்டித் திட்டம், மகளிர் உரிமைத் தொகை ரூ.1,000/– வழங்குகிற திட்டம், பேராசிரியர் அன்பழகனார் பள்ளி மேம்பாட்டுத் திட்டத்திற்கு ரூ.7 ஆயிரம் கோடி ஒதுக்கீடு, மகளிருக்கு நகரப் பேருந்துகளில் கட்டணமில்லா இலவசப் பேருந்து பயணம் போன்ற நிறைய திட்டங்கள் இருக்கின்றன. நேரமில்லாத காரணத்தினால்தான் குறைவாகச் சொல்கிறேன். ஆக, தலைவர் கலைஞர் அவர்கள் என்ன நினைக்கிறாரோ அவருடைய மறுஉருவமாய் இருந்து இன்றைக்கு தமிழகத்தை மிகப் பெரிய வளர்ச்சிப் பாதைக்குக் கொண்டு செல்கிற ஓர் ஆற்றல் பெற்ற முதல்வரை நாம் தலைவராகப் பெற்றிருக்கிறோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தலைவர் அவர்கள் கொண்டு வந்த அற்புதமான திட்டங்களில் ஒன்றுதான் குடிசை மாற்று வாரியம். சென்னையில் இருக்கிற அடையாறு, கூவம் போன்ற நதிக்கரை ஓரங்களில் எந்தவித அடிப்படை வசதிகளும் இல்லாமல் வாழ்ந்த மக்களினுடைய வாழ்க்கைத் தரத்தை உயர்த்திட வேண்டும், அவர்களும் கான்கிரீட் வீடுகளில் வாழ்ந்திட வேண்டுமென்பதற்காக தலைவர் கலைஞர் அவர்கள், 1970 ஆம் ஆண்டு முதன்முதலாகக் கொண்டுவந்த இந்தத் திட்டம்தான் 'தமிழ்நாடு குடிசை மாற்று வாரியம்'.

இன்றைக்கு, சென்னை மாவட்டத்தில், 203 திட்டப் பகுதிகளில் 1 இலட்சத்து 14 ஆயிரத்து 158 அடுக்குமாடி குடியிருப்புகளும், இதர மாவட்டங்களில், 190 திட்டப் பகுதிகளில் 64 ஆயிரத்து 556 அடுக்குமாடி குடியிருப்புகளும், ஆக மொத்தம் 1 இலட்சத்து 78 ஆயிரத்து 714 அடுக்குமாடி குடியிருப்புகள் இந்த வாரியத்தால் பராமரிக்கப்பட்டு வருகின்றன என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

இன்றைக்கு பேரூராட்சிகளில், நகராட்சிகளில் 80 சதவிகித குடிசைப் பகுதிகளை அகற்றி, கட்டடங்களாகக் கட்டப்படுகின்ற நிலைமை நாட்டில் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. அதனை உணர்ந்த நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், தமிழ்நாடு குடிசை மாற்று வாரியத்தினுடைய பெயரை 'தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியம்' என மாற்றி அறிவித்திருக்கிறார். அதற்காக

நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதுமட்டுமல்ல, 2030 ஆம் ஆண்டுக்குள் குடிசைகளே இல்லாத தமிழகத்தை உருவாக்க வேண்டுமென்பதற்காக ஒரு கணக்கெடுத்துள்ளோம். அதன்படி, 9 இலட்சத்து 53 ஆயிரம் வீடுகள் இப்போது தேவை. அதை நிறைவேற்றிவிட்டோம் என்று சொன்னால், தமிழ்நாட்டில், நகரங்களில், பேரூராட்சிகளில் குடிசைகள் இல்லாத தமிழ்நாட்டை நாம் உருவாக்கிவிட முடியும். இதுதான் நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய கனவுத் திட்டம். அதை நிறைவேற்றக்கூடிய அளவுக்கு இப்போது 40,259 குடியிருப்புகள் கட்டி முடிக்கப்பட்டிருக்கின்றன. 85,184 குடியிருப்புகள் கட்டப்பட்டு வருகின்றன. 25,455 குடியிருப்புகள் கட்டுகின்ற பணிகள் துவங்கப்படவுள்ளன. ஆக, கழக அரசு பொறுப்பேற்ற இந்த இரண்டு வருடங்களில் மட்டும் 42 திட்டப் பகுதிகளில் 16,173 அடுக்குமாடி குடியிருப்புகள் கட்ட இப்போது ஒப்புதல் தந்திருக்கின்றோம்.

இரவு 8–35

ஆக, பயனாளிகள் தாமாக வீடு கட்டுகின்ற திட்டத்தில், BLC திட்டத்தில் 2,78,400 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டிருக்கின்றன. இதில் கழக அரசு பொறுப்பேற்ற இரண்டு ஆண்டுகளில் 78,476 தனி வீடுகள் கட்ட ஒப்புதல் வழங்கப்பட்டு தற்போது பணிகள் நடைபெற்று வருகின்றன என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு நமது அரசு பொறுப்பேற்ற இந்த இரண்டு வருடங்களில் மட்டும் இதுவரை எந்தக் காலத்திலும் இல்லாத அளவிற்கு 1,225 கோடியே 26 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 12,495 அடுக்குமாடி குடியிருப்புகளை நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் திறந்து வைத்திருக்கின்றார்கள். இந்தத் திட்டம் 2015–ல்தான் வந்தது. அனைவருக்கும் வீடு கட்டும் திட்டத்தில் கடந்த அ.தி.மு.க. ஆட்சியில் 2015–2021 வரை 6,417 நபர்களுக்குத்தான் வீடு கட்டிக் கொடுத்திருக்கிறார்கள். ஆனால், நம்முடைய கழக அரசு பொறுப்பேற்ற இந்த இரண்டு வருடங்களில் 22,089 ஏழையெளிய குடும்பங்களுக்கு வீடுகள் வழங்கியிருக்கின்ற பெருமை நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு உண்டு என்பதை நான் பெருமையோடு சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

அதுமட்டுமல்ல, இன்று அடையாறு, பக்கிங்காம், கூவம் நதிக்கரையோரம் வாழ்கின்ற ஏழை மக்களை பாதுகாப்பான இடங்களில் வாழ வைக்க வேண்டுமென்பதற்காக, கணக்கெடுத்து, 23,796 ஏழைக் குடும்பங்கள் மறுகுடியமர்வு செய்யப்பட்டு, இதில் 17,933 குடும்பங்கள் பெரும்பாக்கம், கண்ணகிநகர், கூடப்பாக்கம் போன்ற பல்வேறு பகுதிகளிலே மறுகுடியமர்வு செய்யப்பட்டிருக்கிறார்கள். மீதம் இருக்கின்ற 5,863 குடும்பங்கள் விரைவில் தகுதியாக இருக்கின்ற அருகிலுள்ள குடியிருப்புகளிலே குடியமர்த்தப்படுவார்கள் என்பதையும் நான் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கழக ஆட்சி பொறுப்பேற்றவுடன் சென்னையில் 30, 40 வருடங்களுக்கு முன்பு தலைவர் கலைஞர் ஆட்சியில் கட்டப்பட்ட கட்டடங்கள், நீண்ட நாள் பயன்பாடு, தட்பவெப்ப சூழ்நிலை காரணமாக சிதிலமடைந்திருக்கின்றன. மக்கள் வாழ முடியாத நிலைமை உள்ளது. இதை மாண்புமிகு முதல்வர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு சென்றோம். ஆய்வு நடத்தச் சொல்லி உத்தரவிட்டார்கள். உறுதித் தன்மை வல்லுநர் குழு கொண்டு ஆய்வு செய்ததில் மட்டும், 73 திட்டப் பகுதிகளில், சென்னையில் மட்டும் 27,038 குடியிருப்புகள் இருப்பதாகவும், இதர நகரப் பகுதிகளிலே 9 திட்டப் பகுதிகளில் 3,354 குடியிருப்புகள் உள்ளன என்றும், ஆகமொத்தம் 30,392 குடியிருப்புகள் மக்கள் வாழமுடியாத சிதிலமடைந்த நிலையில் இருக்கின்றன.

2021–2022, 2022–2023 ஆம் ஆண்டு நிதியாண்டுகளில், அதாவது 15 ஆயிரம் வீடுகள் கட்டுவதற்கு 2,400 கோடி ரூபாயை தாயுள்ளத்தோடு ஒதுக்கித் தந்தார்கள். இதன்மூலம் 10 திட்டப் பகுதிகளில், 3,788 வீடுகள் இடிக்கப்பட்டுவிட்டன. 6 திட்டப் பகுதிகளில் 1,732 வீடுகளை இடிக்கின்ற பணிகள் இப்போது நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. 10 திட்டப் பகுதிகளிலே 2,968 வீடுகளைக் காலி செய்கின்ற பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. 16 திட்டப் பகுதிகளில் 4,987 வீடுகளைக் காலி செய்ய கருணைத் தொகை வழங்கப்பட இருக்கிறது என்பதை இந்த நேரத்தில் நான் தெரிவித்துக்கொள்கிறேன். மறுகட்டுமானம் செய்யும் திட்டப் பகுதிகளில் உள்ள குடியிருப்புதாரர்களுக்கு வீடுகளைக் காலி செய்யும்போது, இதற்கு முன்பு, கடந்த ஆட்சியில் 8,000 ரூபாய்தான் கொடுத்தார்கள். அது போதாது என்று

2023 ஏப்ரல் 13] [திரு. தா.மோ. அன்பரசன்]

நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் அதனை ரூபாய் 24 ஆயிரமாக உயர்த்தித் தந்து, இதுவரை 33 கோடியே 29 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கி 19 கோடியே 19 இலட்சத்து 48 ஆயிரம் ரூபாய் அளவிற்கு கருணைத் தொகை வழங்கப்பட்டிருக்கிறது என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

இரவு 8–40

அதோடுமட்டுமல்லாமல், 15 வருடங்களுக்கு முன்பிருந்த கட்டடங்கள் எல்லாம் சிதிலமடைந்திருக்கின்றன. படி, லாப்ட், குடிநீர் பைப்புகள் போன்றவை உடைந்து போய் இருக்கும். அதைப் புனரமைக்க வேண்டுமென்பதற்காக நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் போன வருடமும், இந்த வருடமும் சேர்த்து 170 கோடி ரூபாய் கொடுத்தார்கள். இந்த இரண்டு ஆண்டுகளில் இந்தத் திட்டத்தின்கீழ் 13,984 குடியிருப்புகள் புனரமைக்கப்பட்டிருக்கின்றன. 36,045 குடியிருப்புப் பகுதிகளில் இப்போது புனரமைப்புப் பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன என்பதை இந்த நேரத்தில் நான் தெரிவித்துக்கொள்கிறேன். அதுமட்டுமல்ல, சென்னையில் பார்த்தீர்களென்றால் நகர்ப்புர வாழ்விடத்தில் அப்போதெல்லாம் உள்ளே போனால், கழிவுநீர் ரோட்டிலேயே போய்க் கொண்டிருக்கும். இதையெல்லாம் சரி செய்திடவேண்டும் என்பதற்காக, ‘நம் குடியிருப்பு, நம் பொறுப்பு’ என்ற ஒரு திட்டத்தைத் தொடங்கி, இந்தத் திட்டத்தில் 694 குடியிருப்பு நலச் சங்கங்கள் உருவாக்கப்பட வேண்டும் என்று திட்டமிட்டு, 634 நலச் சங்கங்கள் உருவாக்கப்பட்டு, அதில் 453 நலச் சங்கங்கள் பதிவு செய்யப்பட்டு, அதற்கான பதிவுக் கட்டணமாக 16 இலட்சத்து 9 ஆயிரம் ரூபாயை நம்முடைய அரசே வழங்கியிருக்கிறது என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதுமட்டுமல்ல, இன்றைக்கு வாரியத்தால் கட்டப்படும் மறுகட்டுமான திட்டப் பகுதிகளிலே பயனாளிகள் பங்கு அதிகமாக இருந்தது. யாரும் கட்டுவதற்கு முன்வரவில்லை. ஏற்கெனவே ஏழ்மை நிலைமையில் இருக்கிறார்கள். ரூ.4 இலட்சம், ரூ.5 இலட்சம் கட்டுவதற்கு முடியாது. இதை நம்முடைய தலைவர் முதல்வரிடத்தில் சொன்னோம். அதற்கு முன்பு பயனாளிகளின் பங்கு எப்படி அதிகமாகிறது என்று சொன்னால், சாலை போடுவது, குடிநீர்த் திட்டம், கழிவுநீர்த் திட்டம். இவற்றையெல்லாம் பயனாளிகள் தலையில் வைத்து, பயனாளிகள் பங்கு அதிகமாகிவிடும். இதை அரசே ஏற்றுக்கொள்ளும் என்று அறிவித்து, பயனாளிகளின்

பங்குத் தொகையைக் குறையுங்கள் என்று சொல்லி, நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் தாயுள்ளத்தோடு உத்தரவு போட்ட பிறகு, இன்றைக்கு ஒன்றரை இலட்சம் ரூபாய் அதில் குறைந்திருக்கிறது. ஆக, இதில் மட்டும் இரண்டு ஆண்டுகளில் 19 ஆயிரத்து 260 குடும்பங்கள் செலுத்த வேண்டிய பயனாளிகள் பங்களிப்புத் தொகை ரூ.322 கோடியே 53 இலட்சத்தை நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் வழங்கி, (மேசையைத் தட்டும் ஒலி) பயனாளிகளின் பங்கைக் குறைத்த தலைவர், நம்முடைய முதல்வர் அவர்கள். அதுமட்டுமல்ல, ஏழையெளிய மக்களுக்காகக் கட்டப்பட்ட வீடுகள் K.P. Park மாதிரி ஆகிவிடக்கூடாது. K.P. Park கதையெல்லாம் உங்களுக்குத் தெரியும் இல்லையா? TV-ல் எல்லாம் பார்த்திருப்பீர்கள். அதுமாதிரி நம் பகுதியில் நம்முடைய காலத்தில் வரக்கூடாது. ஏழைக்குக் கொடுக்கின்ற வீடு, ஐம்பது ஆண்டுகளுக்கு நீடித்து நிலைத்திருக்க வேண்டும். (மேசையைத் தட்டும் ஒலி) ஏழைகள் இல்லையா, அதனால். அதனால் நாங்கள் என்ன செய்தோம் என்றால், கட்டடப் பணிகள் நடைபெறும் ஒவ்வொரு நிலையிலும் I.I.T, CUBE, அண்ணா பல்கலைக்கழகம் ஆகியவற்றினுடைய வல்லுநர்கள் குழுவைக் கொண்டு, ஆய்வு செய்து, தரத்தினை உறுதி செய்ய நடவடிக்கையினை மேற்கொண்டிருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதுமட்டுமல்ல, எங்களிடத்தில் உள்ள பொறியாளர்கள் திறமையானவர்களாக உருவாக்கப்பட வேண்டும் என்பதற்காக வாரியத்தில் பணிபுரியும் 176 பொறியாளர்களுக்கு, சென்னை, மதுரை, கோவை மண்டலங்களில் I.I.T.-யினுடைய இணை நிறுவனமான CUBE மூலம் பயிற்சிகள் வழங்கப்பட்டு, இந்தப் பயிற்சியில் திட்ட அறிக்கை தயாரித்தல், கட்டுமானத்திற்கான தரமான பொருட்களைப் பயன்படுத்திடும் வகையில், பொருட்களின் தரத்தினைப் பரிசோதித்தல், பரிசோதனை குறிப்புகளைப் பதிவு செய்தல் மற்றும் பழுதுபார்க்கும் பணிகளை, தரத்துடன் மேற்கொள்ள பயிற்சிகள் வழங்கப்பட்டிருக்கின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஆக, வாரியப் பகுதிகளில் அடிப்படை வசதிகளை தொடர்ந்து மேற்கொள்ள, சென்னை உள்ளிட்ட அனைத்து மாவட்டங்களிலும், மாவட்ட ஆட்சித் தலைவர் தலைமையில் குழு அமைக்கப்பட்டிருக்கிறது. அதிகாரிகள், உள்ளாட்சி மக்கள் பிரதிநிதிகள் அடங்கிய மாவட்ட ஆட்சித் தலைவர் தலைமையிலான குழுவை அமைத்திருக்கிறோம். அது மூன்று மாதத்திற்கு ஒரு முறை கூடி, அவர்கள் அதில் புகார்

2023 ஏப்ரல் 13] [திரு. தா.மோ. அன்பரசன்]

செய்தார்கள் என்றால், அதை சரிசெய்வதற்கு வேண்டிய பணியை இப்போது நாங்கள் மேற்கொண்டிருக்கிறோம்.

அதுமட்டுமல்ல, TReDS திட்டம். ஏற்கெனவே MSME கொண்டு வந்தோம். இப்போது கட்டடங்கள் கட்டுகிறார்கள். அவர்களுக்கு bill பாக்கியிருக்கும், time ஆகும். வங்கியில் போய் M.Book record செய்திருப்பார்கள், வங்கியில் காட்டி கடன் வாங்கிவிடலாம். TReDS திட்டத்தில் ஒப்பந்ததாரர்கள் பயன்பெறலாம் என்ற உத்தரவை போட்டிருக்கிறோம் என்பதை இந்த நேரத்தில் நான் தெரிவித்துக்கொள்கிறேன். அதுமட்டுமல்ல, சென்னை நகர்ப்புற மேம்பாட்டுத் திட்டம், தமிழ்நாடு நகர்ப்புற மேம்பாட்டுத் திட்டப் பகுதிகளில் 150 திட்டப் பகுதிகளுக்கான நிலங்களை வாரியத்தின் பெயரால், நில உடமை மாற்றம் செய்வதில், நிர்வாகச் சிக்கல் இருந்தது. 8,040–நிறைய பேருக்கு தெரியும். பட்டா, நிலக் கிரையம் கொடுக்கவில்லை. 29,415 மனை ஒதுக்கீடுதாரர்களுக்கு கிரையப்பத்திரம் வழங்குவது நீண்டகாலமாக நிலுவையில் இருந்தது. இந்த நிர்வாகச் சிக்கலைச் சரி செய்வதற்காக நம்முடைய தலைமைச் செயலாளர் தலைமையில் Empowered Committee அமைத்து, இப்போது அந்தக் குழு 46 திட்டப் பகுதிகளுக்கு, வாரியத்தின் பெயரில் நிலமாற்றம் செய்ய பரிந்துரை செய்து, ஆணை வெளியிடப்பட்டிருக்கிறது. இது நீண்ட நாள் பிரச்சினை. 30 வருடங்கள், 40 வருடங்கள் பத்திரப்பதிவு செய்து வாங்காமல் இருக்கிறார்கள். ஆக 10,486 குடும்பங்களுக்கு கிரையப்பத்திரம் வழங்கப்படும். எஞ்சியுள்ள 104 திட்டப் பகுதிகளில் வாரியத்தின் பெயரில் விரைவில் நிலமாற்றம் செய்து, மீதம் உள்ளவர்களுக்கும் பட்டா வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதை இந்தநேரத்தில் நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

விற்பனைப் பத்திரத்திற்கான அபராதத் தொகை. ஏற்கெனவே, வீடு ஒருத்தருக்குக் கொடுத்திருப்போம் மூன்றாவது ஆளாக ஒருவர் வாங்கியிருப்பார், இப்போது சரியான ஆதாரங்களைக் கொடுத்தார்கள் என்றால், அவர்களுக்கே நாங்கள் வீடு கொடுத்துவிடுகிறோம். முகாம்கள் எல்லாம் நடத்தி இப்போது ஆயிரக்கணக்கான குடும்பங்களுக்கு , இப்போது இருக்கின்றவர்களுக்கு நாங்கள் கிரையப்பத்திரத்தை கொடுக்கிறோம். இதற்கு 25 ஆயிரம் ரூபாய் அபராதத் தொகை இருந்தது, அதை இப்போது ரூபாய் 5 ஆயிரமாகக் குறைத்திருக்கிறோம். அதுமட்டுமல்ல, குடியமர்த்துகிறோம் இல்லையா? ஆற்றங்கரையில்

இருந்து பாதுகாப்பாக குடியமர்த்துகிறோம். அவர்களைப் பாதுகாப்பாக குடியமர்த்தி, ஆதார் அட்டை, வாக்காளர் அடையாள அட்டை, அரசின் உதவித் தொகைகள், மருத்துவக் காப்பீடு அட்டை, பள்ளிகளில் மாணவர்களைச் சேர்க்கும் பணி ஆகிய பணிகளை அவர்களோடிருந்து, அவர்களுக்கு எந்தப் பிரச்சினையும் இல்லாத வகையில் நாங்கள் செய்து தருகிறோம்.

இரவு 8–45

அதுமட்டுமல்லாமல், அங்கே குடியிருக்கும் 6,125 நபர்களுக்கு மகளிர் நலன், வாழ்வாதார மேம்பாடு, சுகாதாரம், போதைத் தடுப்பு போன்ற விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டு வருகிறது. மறு குடியமர்வு திட்டப் பகுதிகளிலுள்ள 2,223 இளைஞர்களுக்கு தொழில்முனைவோர் பயிற்சி கொடுத்துக் கொண்டிருக்கிறோம். 261 மாணவ, மாணவிகளுக்கு பல்வேறு நிறுவனங்களிடமிருந்து CSR நிதியைப் பெற்று, உயர் கல்வி பயில உதவித் தொகையாக ரூ.81,50,000/–, ஏழை மாணவர்களுக்கு வழங்கியிருக்கிறோம்.

ஆக, வாரியத்தால் கட்டப்படும் அடுக்குமாடி குடியிருப்புகளில் புதிய தொழில்நுட்பங்களைச் செயல்படுத்துவதில், இந்திய அளவில் சிறந்த மாநிலமாக தமிழ்நாடு தேர்வு செய்யப்பட்டிருக்கிறது. நாடு முழுவதும் செயல்படுத்தப்படும் அனைவருக்கும் வீடு கட்டும் திட்டத்தின்கீழ் 150 நாட்கள் சவால் என்ற அடிப்படையில் சிறப்பாகச் செயல்பட்டு, தமிழ்நாடு மூன்றாம் இடத்தைப் பெற்றிருக்கிறது என்பதற்காகவும், மாநகராட்சிப் பகுதிகளில் மதுரை மூன்றாம் இடத்தைப் பெற்றதற்காகவும், பேரூராட்சிகள் பிரிவில் கோவை மாவட்டம் பெரியநெகமம் பேரூராட்சி ஐந்தாவது இடத்தைப் பெற்றதற்காகவும் பரிசுகளைப் பெற்றிருக்கிறோம் என்பதை இந்த நேரத்தில் பெருமையோடு நான் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இங்கே உரையாற்றிய மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்கள் திரு. பிரின்ஸ், திரு. மணிகண்டன், திரு. ஸ்டாலின் குமார் ஆகியோர் ‘எங்களுடைய பகுதிகளில் ஏழ்மை நிலையில் மக்கள் இருக்கிறார்கள், அவர்களுக்கும் வீடுகள் கட்டித் தரப்பட வேண்டும்’ என்று சொல்லியிருக்கிறார்கள். தகுதியான அரசு நிலம் தரப்பட்டால், ஏழைகள் இருந்தால், அவர்கள் தங்களுடைய பங்களிப்பைத் தர முன்வந்தால், நிச்சயமாக நம்முடைய அரசு அவர்களுக்கு வீடுகளைக் கட்டித் தரும் என்பதை இந்த நேரத்திலே

பெருமையோடு சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

நான் ஏற்கெனவே கடந்த ஆண்டும் இந்தக் குறையைச் சொன்னேன். அ.இ.அ.தி.மு.க. ஆட்சியில் வீடுகளை தூரத்தில் கட்டிவிட்டார்கள் என்று சொன்னேன். அதனால், இன்னும் அந்த வீடுகளில் ஆட்களே போகமுடியவில்லை. இதைவிட இன்னொரு கேவலம் என்னவென்றால், 48 திட்டப் பகுதிகளில் 31,197 குடியிருப்புகளுக்கு . . . (குறுக்கீடு) இதனைக் கேட்டுக்கொள்ளுங்கள், திட்ட அனுமதி, வரைபட அனுமதி, CMDA, DTCP, RERA, சுற்றுச்சூழல் அனுமதி ஆகிய எந்தவிதமான அனுமதியையும் பெறாமல், சுமார் 4,000 வீடுகளைக் கட்டி முடித்துவிட்டார்கள். கட்டடங்கள் கட்டப்பட்டு நான்கு வருடங்கள் ஆகின்றன. எங்களால் வீடுகளை விற்க முடியவில்லை. ஏன் ஆட்களைப் போட முடியவில்லை என்று தெரியுமா? அந்த வீடுகளுக்குக் குடிநீர் இணைப்பு வாங்க முடியவில்லை; கழிவுநீர் இணைப்பு வாங்க முடியவில்லை; மின்சார இணைப்பு வாங்க முடியவில்லை. மாண்புமிகு தலைவர் அவர்களிடத்தில் எடுத்துச் சொல்லி, மாண்புமிகு முதல்வர் அவர்கள், அதிகாரிகளிடம் சொல்லி, தற்போது அவற்றிற்கு கஷ்டப்பட்டு அனுமதிகளை வாங்கியிருக்கிறோம். (மேசையைத் தட்டும் ஒலி) அந்த 4,000 வீடுகளையும் இன்னும் ஒன்றரை மாதங்களில் ஏழைகளுக்கு வழங்கவிருக்கிறோம் என்பதை இந்த நேரத்தில் நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதுமட்டுமல்ல, சுமார் 52 திட்டப் பகுதிகளில் யானை வழித்தடம், நீதிமன்ற வழக்கு, நீர்நிலைகளில் இருப்பது, அதுமாதிரி இடங்களை select செய்து, ஒன்றிய அரசு அனுமதி, நம்முடைய அரசு அனுமதி உள்ளிட்ட அனுமதிகளை வாங்கி, திட்டங்களைச் செயல்படுத்த—ஒப்பந்தப்புள்ளிகள், tender-ஐயே விட்டுவிட்டார்கள். நாங்கள் அந்தப் பணிகளை எடுத்தால், நாளைக்குப் பிரச்சினை வரும். பூந்தமல்லி பக்கத்தில் நூம்பல் என்ற இடத்தில் வீடுகளையே கட்டிவிட்டார்கள். ஒருவர் case போட்டு பணியை நிறுத்திவிட்டார். அது அப்படியே கிடப்பிலிருக்கிறது. ஆகவே, இப்படிப்பட்ட சிக்கலில் விட்டுவிட்டு, ஆயிரக்கணக்கான வீடுகள் பாதியிலேயே கட்ட முடியாமல் இருக்கின்றன. நிர்வாகச் சீர்கேடு ஏற்படுத்தி, இந்த வாரியத்தையே சீரழித்தவர்கள் கடந்த ஆட்சியாளர்கள் என்பதை நீங்கள் மறந்துவிடக் கூடாது.

மாண்புமிகு உறுப்பினர்களுக்குத் தெரியும் என்று நினைக்கிறேன். திருச்சி மாவட்டம், மண்ணச்சநல்லூரில், 228 வீடுகளை 5 கிலோ மீட்டர் தொலைவில் கட்டிவிட்டார்கள். ஒரு வீட்டைக்கூட விற்க முடியவில்லை. நாங்களும் கெஞ்சிப் பார்க்கிறோம். பயனாளிகளின் பங்கையும் குறைத்துப் பார்க்கிறோம். ஆனால், ஆட்களை எங்களால் போட முடியவில்லை.

சிவகங்கையிலிருந்து 5 கிலோ மீட்டர் தொலைவில் பையூர்பிள்ளைவயல் என்ற ஓர் ஊர் இருக்கிறது. அங்கு 128 வீடுகள் கட்டப்பட்டுள்ளன. மிகவும் கஷ்டப்பட்டு, அவற்றில் 8 வீடுகளைத்தான் விற்க முடிந்தது. அதுபோல, 56 திட்டப் பணிகளில் யானை வழித்தடம், வனத் துறை நிலங்கள், அணுகு பாதைகள், நீர்ப்பிடிப்புப் பகுதிகள், நீதிமன்ற வழக்குகளின் காரணமாக அந்த வீடுகளைக் கட்ட முடியவில்லை.

அதுமட்டுமல்ல, இன்னொரு கதையைக் கேட்டுக்கொள்ளுங்கள். சென்னையில், இரண்டு ஆண்டுகளுக்கு முன்பே tender விடப்பட்டுவிட்டது. ஆனால், இன்னும் அந்த வீடுகளை காலியும் செய்யவில்லை, இடிக்கவுமில்லை. ஆனால், இரண்டு ஆண்டுகளுக்கு முன்பே tender-ஐ வைத்துவிட்டுப் போய்விட்டார்கள். கருணைத் தொகையினையும் வழங்கவில்லை, வீடுகளையும் காலி செய்யவில்லை. கட்டடங்களையும் இடிக்கவில்லை.

அவற்றில், ஒன்றிய மற்றும் மாநில அரசுகளின் ஒப்புதல் பெறப்பட்ட 19 திட்டப் பகுதிகளில் 7,598 குடியிருப்புகள் கட்ட ஒப்பந்தப்புள்ளி இறுதி செய்யப்பட்டுள்ளன. எந்தப் பணியாவது தொடங்க முடியுமா? வீடுகளைக் காலி செய்யாமல் பணிகளைத் தொடங்க முடியுமா? அதற்காகத்தான் நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் சென்னையில் 27,000 வீடுகளை இடித்துவிட்டுக் கட்டுவதற்கு அனுமதியளித்திருக்கிறார்கள். குடியிருப்பவர்களைக் காலி செய்வது மிகவும் கடினமான பணி. நாங்கள் எவ்வளவு கஷ்டப்படுகிறோம் என்று யாருக்கும் தெரியாது. அது மிகவும் சிரமப்பட்டு செய்ய வேண்டிய பணி. ஏனென்றால் சென்னையில் வேறொரு வீட்டிற்குச் சென்றால் வாடகை தர வேண்டிய நிலை உருவாகும். குழந்தைகளை அழைத்துக்கொண்டு வேறு பள்ளியில் சேர்க்கும் நிலை உருவாகும். இது போன்று பல பிரச்சினைகள் உள்ளன. எனவே, சட்டமன்ற உறுப்பினர்களின் ஆதரவுடன் கூட்டங்கள் கூட்டப்பட்டு, பக்குவமாக படிப்படியாக காலி செய்வதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

2023 ஏப்ரல் 13] [திரு. தா.மோ. அன்பரசன்]

எனவே, இனிவரும்காலங்களில், குறிப்பாக சென்னையில் 27,000 வீடுகளும் மாண்புமிகு முதல்வர் அவர்களின் ஆணையின்படி, படிப்படியாக இடிக்கப்பட்டு, புதிய வீடுகள் கட்டப்பட்டு, யார் குடியிருக்கிறார்களோ, அவர்களுக்கே நிச்சயமாக அந்த வீடுகள் வழங்கப்படும் என்பதை இந்த நேரத்தில் பெருமையுடன் சொல்லிக்கொள்கிறேன்.

இரவு 8–50

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த வாரியத்தை, 10 வருடங்களாகக் கெடுத்துவிட்டார்கள். மாண்புமிகு முதல்வர் அவர்களின் வழிகாட்டுதலோடு, பல்வேறு பணிகளுக்கிடையே மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆலோசனையின்படி, மிகுந்த சிரமப்பட்டு, இன்றைக்கு இந்த வாரியத்தை ஓரளவிற்கு நிமிர்த்தியிருக்கிறோம். வருகின்ற காலங்களில், ஏழை எளிய மக்களுக்கும், தகுதியான பயனாளிகளுக்கும் வீடுகளை வழங்கும் பணியினைச் சிறப்பாகச் செய்து இந்த அரசிற்கு சிறப்பான பெயரைப் பெற்றுத் தருகின்ற அளவில் துறையின் பணிகள் அமையும் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். துறையின் சார்பில் 11 அறிவிப்புகள் அறிவிக்கப்பட இருக்கின்றன.

அறிவிப்புகள்

1. நடப்பு நிதியாண்டில் நில உரிமையுள்ள, பொருளாதாரத்தில் நலிவுற்ற பயனாளிகளுக்கு தாமாகவே வீடு கட்டும் திட்டத்தின்கீழ் 1,10,000 தனி வீடுகள் கட்டப்படும்

நில உரிமையுள்ள, பொருளாதாரத்தில் நலிவுற்ற குடும்பங்களுக்கு தாமாக வீடு கட்டிக்கொள்ள ரூ.2.10 இலட்சம் மானியம் வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின்கீழ் மாநகரங்கள், நகரங்கள் மற்றும் பேரூராட்சிகளில் தனி வீடுகள் கட்டும் பணிகள் பல்வேறு நிலைகளில் முன்னேற்றத்தில் உள்ளன. 2023–2024 ஆம் ஆண்டு இத்திட்டத்தின்படி 1,10,000 தனி வீடுகள் புதிதாகக் கட்டப்படும்.

2. நகர்ப்புரங்களில் வாழும் பொருளாதாரத்தில் பின் தங்கிய ஏழைக் குடும்பங்கள் பயன்பெறும் வகையில் இந்த நிதியாண்டில் 30,000 அடுக்குமாடிக் குடியிருப்புகள் ஒதுக்கீடு செய்யப்படும்

தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியத்தால் நகர்ப்புர ஏழை மக்களுக்காக அடுக்குமாடிக் குடியிருப்புகள் கட்டப்பட்டு, தகுதியான நபர்களுக்கு ஒதுக்கீடு செய்யப்படுகின்றன.

2023–2024 ஆம் ஆண்டில் இத்திட்டங்களின்கீழ் 30,000 அடுக்குமாடிக் குடியிருப்புகள் ஒதுக்கீடு செய்யப்படும்.

3. பெரும்பாக்கம் அடுக்குமாடிக் குடியிருப்புத் திட்டப் பகுதியில் ரூ.7.00 கோடி திட்ட மதிப்பீட்டில் சமுதாய நலக்கூடம் கட்டப்படும்

தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியத்தால் சென்னை பெரும்பாக்கம் திட்டப்பகுதியில் 21,528 அடுக்குமாடி குடியிருப்புகள் (G+7) கட்டப்பட்டு குடிசைப்பகுதிவாழ் குடும்பங்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டு வாழ்ந்து வருகின்றன. மேலும், கூடுதலாக 3,132 அடுக்குமாடி குடியிருப்புகள் கட்டுவதற்கான பணிகள் பல்வேறு நிலைகளில் முன்னேற்றத்தில் உள்ளன.

இப்பகுதிவாழ் குடும்பங்களின் நலனைக் கருத்திற்கொண்டு, அவர்களது குடும்ப விழாக்களை அவர்கள் வாழும் திட்டப் பகுதியிலேயே சிரமமின்றி நடத்துவதற்கு ஏதுவாக தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியத்தால் தரை மற்றும் முதல் தளத்துடன் (G+1) ரூ.7.00 கோடி திட்ட மதிப்பீட்டில் சமுதாய நலக்கூடம் கட்டப்படும்.

4. பெரும்பாக்கம் அடுக்குமாடிக் குடியிருப்பு திட்டப் பகுதியில் மறு குடியமர்வு செய்யப்பட்டுள்ள குடும்பங்கள் பயன்பெறும் வகையில் ரூ.9.00 கோடி மதிப்பீட்டில் 30 இலட்சம் லிட்டர் கொள்ளளவு கொண்ட கூடுதல் குடிநீர்த் தொட்டி அமைக்கப்படும்

பெரும்பாக்கம் திட்டப் பகுதியில் மறுகுடியமர்வு செய்யப்பட்ட குடும்பங்கள் பயன்பெறும் வகையில், ரூ.9.00 கோடி மதிப்பீட்டில் 30 இலட்சம் லிட்டர் கொள்ளளவு கொண்ட கூடுதல் குடிநீர்த் தொட்டி அமைக்கப்படும்.

5. பெரும்பாக்கம் அடுக்குமாடிக் குடியிருப்புத் திட்டப் பகுதியில் மறுகுடியமர்வு செய்யப்பட்டுள்ள குடும்பங்களின் வாழ்க்கைத் தரத்தினை உயர்த்தும் பொருட்டு ரூ.4.00 கோடி மதிப்பீட்டில் சுற்றுச்சுவருடன் கூடிய விளையாட்டு மைதானம் கட்டப்படும்

பெரும்பாக்கம் திட்டப் பகுதியில் மறுகுடியமர்வு செய்யப்பட்டுள்ள குடும்பங்களின் வாழ்க்கைத் தரத்தினை உயர்த்தும் பொருட்டு, ரூ.4.00 கோடி மதிப்பீட்டில் சுற்றுச்சுவருடன் கூடிய விளையாட்டு மைதானம் கட்டப்படும்.

6. மறுகுடியமர்வு செய்யப்பட்ட கண்ணகி நகர் திட்டப் பகுதியில் ரூ.4.00 கோடி திட்ட மதிப்பீட்டில் நவீன நூலகம் கட்டப்படும்

மறுகுடியமர்வு செய்யப்பட்ட குடும்பங்களுக்கு பயனுள்ள வகையில் கண்ணகி நகர் திட்டப் பகுதியில் ரூ.4.00 கோடி மதிப்பீட்டில் நவீன நூலகம் கட்டப்படும்.

7. மறுகுடியமர்வு செய்யப்பட்ட நாவலூர் திட்டப் பகுதியிலுள்ள குடும்பங்கள் பயன்பெறும் வகையில் ரூ.2.80 கோடி மதிப்பீட்டில் சமுதாய நலக்கூடம் மற்றும் அப்பகுதியில் இயங்கி வரும் ஆரம்பப் பள்ளியில் கூடுதல் தளம் கட்டப்படும்

மறுகுடியமர்வு செய்யப்பட்ட நாவலூர் திட்டப் பகுதியிலுள்ள குடும்பங்கள் பயன்பெறும் வகையில் ரூ.1.80 கோடி மதிப்பீட்டில் சமுதாய நலக்கூடம் மற்றும் அப்பகுதியில் இயங்கி வரும் ஆரம்பப் பள்ளியில் கூடுதல் தளம் ரூ.1.00 கோடி மதிப்பீட்டில் கட்டப்படும்.

8. சென்னைப் பெருநகர வளர்ச்சித் திட்டம் மற்றும் தமிழ்நாடு நகர்ப்புர வளர்ச்சித் திட்டம் போன்ற திட்டப் பகுதிகளில் உள்ள மனைகளில் வசித்து வரும் குடும்பங்களுக்கு விற்பனைப் பத்திரம் வழங்கப்படும்

தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியத்தால் செயல்படுத்தப்பட்ட சென்னைப் பெருநகர வளர்ச்சித் திட்டம் மற்றும் தமிழ்நாடு நகர்ப்புர வளர்ச்சித் திட்டம் போன்ற திட்டங்களின்கீழ் மேம்படுத்தப்பட்ட பகுதிகளிலுள்ள மனைகளில் வசித்து வரும் குடும்பங்களுக்கு விற்பனைப் பத்திரம் பெறுவதில் உள்ள சிரமங்களைக் களையும் விதமாக அப்பகுதிகளில் தொடர்ந்து 10 ஆண்டுகள் வசித்து வரும் குடும்பங்களுக்கு விற்பனைப் பத்திரம் வழங்கப்படும்.

9. தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியத்தில் 4 மண்டலங்களில் ஒவ்வொரு மண்டலத்திலும் திட்டப்பகுதிகளின் பராமரிப்புப் பணிகளை நல்லமுறையில் மேற்கொண்டு திட்டப் பகுதிகளில் குடியிருக்கும் மக்களின் அடிப்படைத் தேவைகளை நிறைவேற்றி, சிறப்பாகச் செயல்படும் முதல் மூன்று குடியிருப்போர் நலச் சங்கங்களுக்கு முறையே ரூ.1,00,000, ரூ.50,000 மற்றும் ரூ.25,000 ஊக்கத் தொகை வழங்கப்படும்

சென்னை மற்றும் இதர நகரங்களில் கட்டப்பட்ட 1.78 இலட்சம் அடுக்குமாடிக் குடியிருப்புகள் தமிழ்நாடு நகர்ப்புர

வாழ்விட மேம்பாட்டு வாரியத்தால் "நம் குடியிருப்பு நம் பொறுப்பு" திட்டத்தின்கீழ் பராமரிக்கப்படுகின்றன.

குடியிருப்போர் நலச் சங்கங்களால் வசூலிக்கப்படும் உரிய பராமரிப்புத் தொகைக்கு இணையான மானியம், அரசால் தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியத்திற்கு வழங்கப்படுகிறது. குடியிருப்போர் நலச் சங்கங்கள் பதிவு செய்வதற்கு செலுத்த வேண்டிய பதிவு கட்டணத்தை அரசே ஏற்றுக் கொண்டு பதிவு செய்த கட்டணம் திருப்பி அளிக்கப்பட்டு வருகிறது.

தற்போது தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியத்தில் 4 மண்டலங்களில், ஒவ்வொரு மண்டலத்திலும் திட்டப் பகுதிகளின் பராமரிப்புப் பணிகளை நல்லமுறையில் மேற்கொண்டு திட்டப் பகுதிகளில் குடியிருக்கும் மக்களின் அடிப்படை தேவைகளை நிறைவேற்றி சிறப்பாகச் செயல்படும் முதல் மூன்று குடியிருப்போர் நலச் சங்கங்களுக்கு முறையே ரூ.1,00,000, ரூ.50,000 மற்றும் ரூ.25,000 ஊக்கத் தொகை வழங்கப்படும்.

10. வாரியக் குடியிருப்புகளில் வாழும் இளைஞர்களின் திறன்களை ஊக்குவித்து, அவர்களின் வாழ்க்கை நிலையினை மேம்படுத்தும் பொருட்டு திட்டப் பகுதிகளில் இளைஞர் மன்றங்கள் அமைக்கப்படும்

இளைஞர்களின் சமுதாயப் பங்களிப்பு மற்றும் ஆளுமைத் திறனை அதிகரிக்கவும், இளைஞர்களின் முன்னேற்றத்திற்காகவும் தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியத்தின்மூலம் 2023–2024 ஆம் ஆண்டு வாரியத் திட்டப் பகுதிகளில் இளைஞர் மன்றங்கள் அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. அதன்படி ஒரு குடியிருப்புப் பகுதிக்கு ஓர் இளைஞர் மன்றம் வீதம் 393 இளைஞர் மன்றங்கள் அமைக்கப்படும்.

மேலும், வாரியக் குடியிருப்புகளில் வாழும் இளைஞர்களின் திறன்களை ஊக்குவித்து, அவர்களின் வாழ்க்கை நிலையினை மேம்படுத்தும் பொருட்டு வேலைவாய்ப்புக்கான பயிற்சிகள் உரிய பயிற்சியாளர்களைக் கொண்டு ஒவ்வொரு திட்டப் பகுதியிலும் சுழற்சி முறையில் அளிக்கப்படும்.

11. வாரியத் திட்டப் பகுதிகளில் வாழும் 12,000 இளைஞர்களுக்கு திறன் மேம்பாட்டுப் பயிற்சிகள் வழங்கி வேலைவாய்ப்புகள் பெற ஊக்குவிக்கப்படும்

தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியக் குடியிருப்புகளில் வசிக்கும் இளைஞர்களின் கல்வி தகுதிக்கேற்ப திறன் மேம்பாட்டுப் பயிற்சிகள், தமிழ்நாடு நகர்ப்புர வாழ்வாதார இயக்கம், தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகம், தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் ஆகியவற்றின் மூலமாக 12,000 இளைஞர்கள் பயன்பெறும் வகையில் திறன் மேம்பாட்டுப் பயிற்சி வழங்கப்பட்டு வேலைவாய்ப்புகள் பெற ஊக்குவிக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 18 வெட்டுத் தீர்மானங்கள் வரப்பெற்றுள்ளன. அனைவரும் வீடு வேண்டுமென்றுதான் கேட்டிருக்கிறார்கள். எனவே, தகுதியான இடங்கள் அனைத்தும் தேர்வு செய்யப்பட்டு, அப்பகுதிகளில் உண்மையான பயனாளிகள் இருப்பின், பயனாளிகள் பங்களிப்புத் தொகை செலுத்தும் நேர்வில், நிச்சயமாக வீடுகள் கட்டித் தரப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்த மானியக் கோரிக்கையில் எங்களுக்கு உறுதுணையாக இருந்த அரசுச் செயலாளர் செல்வி அபூர்வா, I.A.S., அவர்களுக்கும், அரசு கூடுதல் செயலாளர் திருமதி எம். விஜயலஷ்மி, I.A.S., அவர்களுக்கும், அரசு இணைச் செயலாளர் திருமதி ஆனி மேரி சுவர்ணா, I.A.S., அவர்களுக்கும், நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரிய மேலாண்மை இயக்குநர் திரு. சி. கோவிந்த், I.A.S., அவர்களுக்கும், இணை மேலாண்மை இயக்குநர் திரு. எம். தங்கவேல் I.A.S., அவர்களுக்கும், வாரியத்தின் பொறியாளர்கள், உயர் அலுவலர்கள் அனைவருக்கும் என் நன்றியை தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு முதல்வர் அவர்களின் வழிகாட்டுதலின்படி, இந்த வாரியம், இந்தத் துறை மேலும் சிறப்பாகச் செயல்பட்டு, ஏழை, எளிய மக்களுக்கு என்றைக்கும் துணையாக இருக்கும் என்பதை மட்டும் சொல்லிக்கொண்டு, உறுப்பினர்கள் தந்திருக்கின்ற வெட்டுத் தீர்மானங்களைத் திரும்பப் பெற்றுக்கொண்டு, மானியக் கோரிக்கையினை நிறைவேற்றித் தரும்படிக் கேட்டுக்கொண்டு விடைபெறுகிறேன், நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: விவாதம் முடிவுற்றது. இப்போது வாக்கெடுப்பு.

இரவு 8–55

கோரிக்கை எண் 26-வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மானியக் கோரிக்கை எண் 26–வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை. வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன்.

(வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்பெறவில்லை.)

வெட்டுத் தீர்மானங்கள் அனைத்தும் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகின்றன.

"வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை பற்றிய 26 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.3,742,29,20,000/–, மூலதனக் கணக்கில் ரூ.2,000,00,08,000/– மற்றும் கடன் கணக்கில் ரூ.8,226,50,03,000/– ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)
மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)
ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.
ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகைகள் வழங்கப் பெறுகின்றன. (மேசையைத் தட்டும் ஒலி)

(இ) செவித்திறன் மாற்றுத் திறனாளிகள், சைகை மொழியில் பேரவை நடவடிக்கைகளின் தொகுப்பு ஒளிப்பதிவை வெளியிடுதல்-தொடக்க விழா

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 2016 ஆம் ஆண்டு மாற்றுத் திறனாளிகள் உரிமைகள் சட்ட விதிகளின்படி செவித்திறன் பாதிக்கப்பட்ட மாற்றுத் திறனாளிகள் மின்னணு ஊடக நிகழ்ச்சிகளைப் புரிந்துகொள்ளும் வகையில், சைகை மொழியில் பேரவை நடவடிக்கைகளின் தொகுப்பு, ஒளிப்பதிவு செய்யப்பட்டு* YouTube *மூலமாக ஊடகங்களில் ஒளிபரப்பு செய்வதற்கு ஏற்ற வகையில் (மேசையைத் தட்டும் ஒலி) வழங்க நடவடிக்கை எடுக்கப்பட உள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். இதன் தொடக்க நிகழ்வினை வருகிற 17–4–2023 ஆம் நாள் திங்கட்கிழமை காலை 9–45 மணிக்கு பேரவைத் தலைவர் அவர்களுடைய அறையில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தொடங்கி வைப்பார்கள் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு அமைச்சர்கள் மற்றும் மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் வருகை தந்து, சிறப்பிக்க வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கின்றேன்.*

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் 17–4–2023 (திங்கட்கிழமை) காலை 10–00 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை இரவு 8–56 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

8. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

(அ) சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

89. தமிழ்நாடு தேயிலைத் தோட்டக் கழகத்தின் நாற்பத்து ஏழாவது ஆண்டறிக்கை மற்றும் 2021–2022 ஆம் ஆண்டிற்கான கணக்குகள். [*2013 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 18/2013) 395(1)(b) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.)*] *(தமிழ்–ஆங்கிலம்)*

90. 2020–2021 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டுக் கழகத்தின் இருபத்து இரண்டாவது

ஆண்டறிக்கை. 2013 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் [(மத்தியச் சட்டம் 18/2013) 395(1)(b) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது)]. (தமிழ்–ஆங்கிலம்)

ஆ. அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

190. மானியக் கோரிக்கை எண் 9–பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை (பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மிகப்பிற்படுத்தப்பட்டோர் நலன்) பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2023–2024. (தமிழ் மற்றும் ஆங்கிலம்)

191. மானியக் கோரிக்கை எண் 9–பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை (சிறுபான்மையினர் நலன்) பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2023–2024. (தமிழ் மற்றும் ஆங்கிலம்)

192. பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை பற்றிய செயல்முறை திட்டம், 2023–2024. (தமிழ் மற்றும் ஆங்கிலம்)

193. பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை பற்றிய மக்கள் சாசனம், 2023–2024. (தமிழ் மற்றும் ஆங்கிலம்)

194. மானியக் கோரிக்கை எண் 18–கதர், கிராமத் தொழில்கள் மற்றும் கைவினைப் பொருட்கள் (கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை) பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2023–2024. (தமிழ் மற்றும் ஆங்கிலம்)

195. பட்டுவளர்ச்சித் துறை பற்றிய செயல்முறைத் திட்டம், 2022–2023. (தமிழ் மற்றும் ஆங்கிலம்)

196. மானியக் கோரிக்கை எண் 15–சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றம் (சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத் துறை) பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2023–2024. (தமிழ் மற்றும் ஆங்கிலம்)

2023 ஏப்ரல் 13]

197. மானியக் கோரிக்கை எண் 54–வனம் (சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத் துறை) பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2023–2024. (தமிழ் மற்றும் ஆங்கிலம்)

198. மானியக் கோரிக்கை எண் 26–வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2023–2024. (தமிழ் மற்றும் ஆங்கிலம்)

199. மானியக் கோரிக்கை எண் 26–வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை (தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியம்) பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2023–2024. (தமிழ் மற்றும் ஆங்கிலம்)

200. மானியக் கோரிக்கை எண் 26–வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை (சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம்) பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2023–2024. (தமிழ் மற்றும் ஆங்கிலம்)

201. 'மிளிரும் மின்சாரத் துறை–சாதனைகள்' என்கிற சிறுநூல். (தமிழ்)

202. வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை மற்றும் இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு ஆகிய மானியக் கோரிக்கைகளின் மீதான விவாதத்திற்கான பதிலுரையின்போது மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்களால் பேரவையில் அறிவிக்கப்பட்ட அறிவிப்புகள், 2023–2024. (தமிழ்)

203. எரிசக்தித் துறை மானியக் கோரிக்கையின் மீதான விவாதத்திற்கான பதிலுரையின்போது மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்களால் பேரவையில் அறிவிக்கப்பட்ட அறிவிப்புகள், 2023–2024. (தமிழ்)

204. மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை (உள்துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) மானியக் கோரிக்கையின் மீதான விவாதத்திற்கான பதிலுரையின்போது மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்களால் பேரவையில் அறிவிக்கப்பட்ட அறிவிப்புகள், 2023–2024. (தமிழ்)

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

இணைப்பு- I

(147 ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.)

மானியக் கோரிக்கை எண் 9-சிறுபான்மையினர் நலன் (பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை)

கொள்கை விளக்கக் குறிப்பு, 2023-2024

முன்னுரை

தமிழ்நாடு அரசு, இம்மாநிலத்தில் வாழும் சிறுபான்மையினரின் நலனை பாதுகாப்பதிலும், மேம்படுத்துவதிலும் முன்னோடியாக உள்ளது. சமமான வாய்ப்பை வழங்குவதன் மூலமும், அவர்களின் சட்டப்பூர்வ உரிமைகளை உறுதி செய்து, அனைவரையும் உள்ளடக்கிய வளர்ச்சியைக் ஏற்படுத்துவதன் மூலமும் சிறுபான்மையினரின் சமூக—பொருளாதார மேம்பாட்டிற்கு இந்த அரசு தொடர்ந்து ஆதரவு வழங்கி வருகிறது.

பல்வேறு பிரிவினரிடையே மதநல்லிணக்கத்தை பேணுவதற்கு இவ்வரசு உறுதி பூண்டுள்ளது. சிறுபான்மையினர் நலனுக்காக பல்வேறு நடவடிக்கைகள் இவ்வரசால் மேற்கொள்ளப்பட்டுள்ளன. மாநில சிறுபான்மையினர் ஆணையம் 1989 ஆம் ஆண்டு அமைக்கப்பட்டது. 1999 ஆம் ஆண்டு "பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை" "பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை" என மாற்றப்பட்டது. “தமிழ்நாடு சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம்” 1999 ஆம் ஆண்டு ஏற்படுத்தப்பட்டது. மேலும், அதே ஆண்டில், வக்ஃப் நிறுவனங்களை பழுதுபார்ப்பதற்கும் புதுப்பிப்பதற்கும் ஆண்டு மானியம் வழங்கும் திட்டம் புதிதாக தொடங்கப்பட்டது. 2007—ல் பிற்படுத்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்த முஸ்லிம்களுக்கு தனியாக 3.5% இடஒதுக்கீடு வழங்க வழிவகை செய்யப்பட்டது. மேலும் இதே ஆண்டில் "சிறுபான்மையினர் நல இயக்குநரகம்" உருவாக்கப்பட்டது மற்றும் அனைத்து மாவட்டங்களிலும் முஸ்லிம் மகளிர் உதவிச் சங்கங்கள் உருவாக்கப்பட்டன. "உலமாக்கள் மற்றும் பணியாளர்கள் நல வாரியம்" 2009 ஆம் ஆண்டில் அமைக்கப்பட்டது. மேலும்,

[*2023 ஏப்ரல் 13*

இதே ஆண்டில் பள்ளி மற்றும் கல்லூரிகளில் படிக்கும் முஸ்லிம் பெண்களுக்கான விடுதிகள் முதல் முறையாக துவங்கப்பட்டது. இவ்வரசால் மாநில சிறுபான்மையினர் ஆணையத்திற்கு சட்டப்பூர்வ அங்கீகாரம் வழங்கும் சட்டம் 2010-ல் இயற்றப்பட்டது.

இம்மக்களின் முன்னேற்றத்திற்காக, இவ்வரசு பல்வேறு நலத் திட்டங்களை வகுத்து செயல்படுத்தி வருகிறது. மேலும், இந்திய அரசின் திட்டங்களையும் செயல்படுத்தி வருகிறது. பிரதமரின் புதிய 15 அம்சத் திட்டத்தினை நடைமுறைப்படுத்தும் பொருட்டு 2007 ஆம் ஆண்டில் சிறுபான்மையினர் இயக்ககம் தொடங்கப்பட்டது. சிறுபான்மையினருக்கு அதிகாரமளிக்கும் வகையில் நீதிபதி ராஜிந்தர் சச்சார் குழுவின் பரிந்துரைகள் பின்பற்றப்படுகின்றன. சிறுபான்மையினருக்கு அடிப்படை வசதிகளை வழங்குவதற்காக பிரதான் மந்திரி ஜன் விகாஸ் காரியக்ரம் (பிஎம்ஜேவிகே) திட்டம் செயல்படுத்தப்படுகிறது.

சிறுபான்மையின மாணவர்களின் கல்வி மேம்பாட்டிற்காக இந்திய அரசின் கல்வி உதவித் தொகைகள் வழங்குதல், விடுதிகள் நடத்துதல் போன்ற திட்டங்கள் செயல்படுத்தப்படுகின்றன.

உலமா மற்றும் பணியாளர்கள் நல வாரியம் 2009-ஆம் ஆண்டு ஏற்படுத்தப்பட்டு இவ்வாரிய உறுப்பினர்களுக்கு பல்வேறு நலத்திட்ட உதவிகள் வழங்கப்படுகின்றன. இதே போன்று 2022-ல் கிறித்துவ உபதேசியார்கள் மற்றும் பணியாளர்கள் நலனுக்காக "கிறித்துவ உபதேசியார்கள் மற்றும் பணியாளர்கள் நல வாரியம்" அமைத்திட ஆணையிடப்பட்டுள்ளது.

முஸ்லிம் மற்றும் கிறிஸ்தவ மகளிர் உதவி சங்கங்கள்மூலம் ஆதரவற்ற, விதவைகள் மற்றும் வயதான முஸ்லிம்/கிறிஸ்தவ பெண்களுக்கு நிதி உதவி வழங்கப்படுகிறது. கிறித்துவர்களுக்கு ஜெருசலேம் புனிதப் பயணம் செல்லவும் மற்றும் முஸ்லிம்கள் ஹஜ் புனித பயணம் செல்லவும் நிதி உதவி அளிக்கப்படுகிறது. மசூதிகள் மற்றும் தேவாலயங்களை பழுதுபார்ப்பதற்கும், புதுப்பிப்பதற்கும் நிதி உதவி வழங்கப்படுகிறது மற்றும் தமிழ்நாடு வக்ஃப் நிறுவனங்களில் பணியாற்றி ஓய்வு பெற்ற பேஷ் இமாம், மோதினார்கள், அரபு ஆசிரியர்கள் மற்றும் முஜாவர்களுக்கு ஓய்வூதியம் வழங்கப்படுகிறது.

*நீடித்த வளர்ச்சி இலக்குகள் (*Sustainable Development Goals*) 2015 ஆம் ஆண்டில் ஐக்கிய நாடுகளின் பொதுச்*

2023 ஏப்ரல் 13]

சபையால் உருவாக்கப்பட்டது. இவற்றில், இலக்கு—1 (வறுமையை ஒழித்தல்), இலக்கு - 4 (தரமான கல்வி) மற்றும் இலக்கு—10 (ஏற்றத்தாழ்வுகளை குறைத்தல்) ஆகியவை இத்துறையுடன் நேரடியாக தொடர்புடையதாகும். இந்த நீடித்த வளர்ச்சி இலக்குகளை அடைவதற்கு இத்துறை தொடர்ந்து முயற்சிகளை மேற்கொள்ளும்.

2. பிற்படுத்தப்பட்ட வகுப்பு இஸ்லாமியர்களுக்கு தனி இடஒதுக்கீடு

தனி இட ஒதுக்கீடு வழங்கக்கோரி சிறுபான்மையின சமுதாயத்தினரிடமிருந்து பெறப்பட்ட பல்வேறு மனுக்களை அரசு பரிசீலித்து பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு வழங்கப்பட்டு வந்த 30 விழுக்காடு இடஒதுக்கீட்டிலிருந்து பிற்படுத்தப்பட்ட வகுப்பு முஸ்லிம்களுக்கு 3.5 விழுக்காடு இட ஒதுக்கீடு வழங்கும் சட்டத்தினை 2007 ஆம் ஆண்டு நிறைவேற்றி தனி இடஒதுக்கீடு வழங்கப்பட்டு வருகிறது. மேலும், அரசுப் பணிகளில் நேரடி நியமனங்களில் பிற்படுத்தப்பட்ட வகுப்பு முஸ்லிம்களுக்கு முன்கொணர்வு முறையினை (Carry forward procedure) பின்பற்றிட வேண்டும் என அரசு ஆணையிட்டுள்ளது.

3. கல்வி உதவித் தொகை

எண்ணென்ப ஏனை எழுத்தென்ப இவ்விரண்டும்

கண்ணென்ப வாழும் உயிர்க்கு — குறள் 392

பள்ளி முதல் தொழிற்கல்வி, ஆராய்ச்சிப் படிப்பு வரை அரசு, அரசு உதவி பெறும் மற்றும் அரசால் அங்கீகரிக்கப்பட்ட தனியார் கல்வி நிறுவனங்களில் பயிலும் கிறித்தவர், இஸ்லாமியர், சீக்கியர், புத்த மதத்தினர், பார்சி மற்றும் சமண மதங்களைச் சார்ந்த சிறுபான்மையின மாணவ, மாணவியர் கல்வியினை இடைவிடாது தொடர்ந்து பயிலும் வகையில் ஒன்றிய அரசின்கீழ்க்காணும் கல்வி உதவித் தொகை திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

1. *பள்ளிப்படிப்பு கல்வி உதவித் தொகைத் திட்டம்*
2. *பள்ளி மேற்படிப்பு கல்வி உதவித் தொகைத் திட்டம் மற்றும்*
3. *தகுதி மற்றும் வருவாய் அடிப்படையிலான கல்வி உதவித் தொகைத்திட்டம்*

[2023 ஏப்ரல் 13

*இக்கல்வி உதவித் தொகை திட்டங்கள் 100% ஒன்றிய அரசின் நிதிப் பங்களிப்புடன் செயல்படுத்தப்படுகின்றன. மாநிலங்களின் சிறுபான்மையினர் மக்கள் தொகையின் (2011) அடிப்படையில் நிதி ஒன்றிய அரசால் பகிர்ந்தளிக்கப்படுகிறது. மேற்கண்ட திட்டங்களின்கீழ், கல்வி உதவித் தொகை நேரடி பயன்மாற்று முறையில் (*Direct Benefit Transfer*) மாணவ, மாணவியரின் வங்கி கணக்கில் நேரடியாக செலுத்தப்படுகிறது. மொத்த கல்வி உதவித் தொகையில், ஒவ்வொரு சிறுபான்மையின உட்பிரிவில் குறைந்தபட்சம் 30 விழுக்காடு மாணவிகளுக்கு ஒதுக்கப்படும். ஒரு குறிப்பிட்ட மாநிலத்தில் வசிக்கும் ஒரு மாணவர், அவர் படிக்கும் இடத்தின் அடிப்படையில் அல்லாமல் அவரின் சொந்த மாநிலத்திற்கான ஒதுக்கீட்டின்கீழ் மட்டும் உதவித் தொகை பெற தகுதியுடையவராவார்.*

கல்வி உதவித் தொகைகளின் விவரம் பின்வருமாறு

கல்வி உதவித் தொகை விவரம்	**பயிலும் வகுப்புகள்**	**பெற்றோர் / பாதுகாவலரின் ஆண்டு வருமான வரம்பு**	**கல்வி உதவித் தொகை பெறுவதற்கான தகுதி**
பள்ளிப் படிப்பு	*9 முதல் 10 ஆம் வகுப்பு வரை*	*ரூ.1 இலட்சம்*	*முந்தைய ஆண்டின் இறுதி தேர்வில் 50 விழுக்காட்டிற்கு குறையாமல் மதிப்பெண்கள் பெற்றிருக்க வேண்டும்.*
பள்ளி மேற் படிப்பு	*11 முதல் ஆராய்ச்சி படிப்பு வரை*	*ரூ.2 இலட்சம்*	
தகுதி (ம) வருவாய் அடிப்படை	*தொழிற்கல்வி மற்றும் தொழில்நுட்பக் கல்வி*	*ரூ.2.5 இலட்சம்*	

3.1 பள்ளிப்படிப்பு கல்வி உதவித் தொகை

பள்ளி படிப்பு கல்வி உதவித் தொகை திட்டம் ஒன்றிய அரசால் 2008-2009 ஆம் ஆண்டு முதல் அறிமுகப்படுத்தப்பட்டு, 2021-2022 ஆம் ஆண்டு வரை ஒன்றாம் வகுப்பு முதல் 10 ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவ மாணவியருக்கு செயல்படுத்தப்பட்டு வந்தது. ஒன்றிய அரசு, கல்வி உரிமைச் சட்டம் 2009—ன்படி தொடக்கக்

2023 ஏப்ரல் 13]

கல்வி (1 முதல் 8 ஆம் வகுப்பு வரை) அனைத்து குழந்தைகளுக்கும் அரசாங்கம் இலவச மற்றும் கட்டாயக் கல்வி அளிப்பதை கட்டாயமாக்கியுள்ளது என்று தெரிவித்து 2022—2023 ஆம் ஆண்டு முதல் 1 முதல் 8 ஆம் வகுப்பு பயிலும் சிறுபான்மையின மாணவ, மாணவியருக்கு கல்வி உதவித் தொகை வழங்குவதை நிறுத்தி, 9 மற்றும் 10 ஆம் வகுப்பு பயிலும் சிறுபான்மையின மாணவ, மாணவியருக்கு மட்டுமே கல்வி உதவித் தொகை வழங்குகிறது. இவ்வரசு, மேற்கண்ட ஒன்றிய அரசின் முடிவை நிறுத்தி வைக்க வேண்டும் என்றும், 1 ஆம் வகுப்பு முதல் 8 ஆம் வகுப்பு வரை பயிலும் சிறுபான்மையின மாணவ, மாணவியருக்கும் கல்வி உதவித் தொகை வழங்கப்பட வேண்டும் என்றும் ஒன்றிய அரசை வலியுறுத்தி வருகிறது.

ஒரு வருடத்தில் வழங்கப்படும் சிறுபான்மையினருக்கான புதிய கல்வி உதவித் தொகைகளின் எண்ணிக்கை நிலையானது மற்றும் வரையறுக்கப்பட்டுள்ளது. மதிப்பெண்களை விட வறுமைக்கு முன்னுரிமை வழங்கி தயாரிக்கப்பட்ட தகுதி பட்டியலின் அடிப்படையில் ஒப்பளிக்கப்படுகிறது. சமமான வருமானம் இருப்பின், விண்ணப்பதாரரின் 'பிறந்ததேதி' அடிப்படையில் தகுதி பட்டியல் தயாரிக்கப்படுகிறது.

புதுப்பித்தல் விண்ணப்பங்களுக்கு தகுதி பட்டியல் தயாரிக்கும் நடைமுறை இல்லை. புதுப்பித்தல் விண்ணப்பதாரர் தனது முந்தைய வருட தேர்வுகளில் 50% பெற்றிருப்பின் (அதே கல்வி நிலையத்தில் அதே பாட நெறியில் பயிலும் நிலையில்) சேர்க்கை/கற்பிப்பு கட்டணம் மற்றும் பராமரிப்பு கட்டணம் ஆகியவற்றிற்கான நிதி உதவி அதிகபட்ச வரம்புக்கு உட்பட்டு கீழ்க்கண்டவாறு வழங்கப்படும்:

விவரம்	**விடுதியில் தங்கிப் பயிலும் மாணவ/ மாணவியர்**	**விடுதியில் தங்காமல் பயிலும் மாணவ/ மாணவியர்**
ஒன்பதாம் வகுப்பு முதல் பத்தாம் வகுப்பு வரை சேர்க்கைக் கட்டணம்	*மாணவ, மாணவியரால் செலுத்தப்பட்ட கட்டணம் அல்லது ஆண்டொன்றுக்கு அதிகபட்சமாக ரூ.500 (இவற்றில் எது குறைவோ)*	

விவரம்	விடுதியில் தங்கிப் பயிலும் மாணவ/ மாணவியர்	விடுதியில் தங்காமல் பயிலும் மாணவ/ மாணவியர்
ஒன்பதாம் வகுப்பு முதல் பத்தாம் வகுப்பு வரை கற்பிப்பு கட்டணம்.	மாணவ, மாணவியரால் செலுத்தப்பட்ட கட்டணம் அல்லது ஆண்டொன்றுக்கு அதிகபட்சமாக ரூ.3,500 (இவற்றில் எது குறைவோ)	
ஒரு கல்வியாண்டில் 10 மாதங்களுக்கான பராமரிப்பு கட்டணத் தொகை ஒன்பதாம் வகுப்பு முதல் பத்தாம் வகுப்பு வரை	ரூ.6,000	ரூ. 1,000

இத்திட்டத்தின்கீழ் 2022—2023 ஆம் ஆண்டில் 1,07,247 விண்ணப்பங்கள் மாணவ, மாணவியரிடமிருந்து பெறப்பட்டு ஒன்றிய அரசிற்கு அனுப்பப்பட்டுள்ளது.

3.2 பள்ளி மேற்படிப்பு கல்வி உதவித் தொகை

இக்கல்வி உதவித் தொகை திட்டம் ஒன்றிய அரசால் 2007—2008 ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்டது. மேல்நிலைப் பள்ளிக் கல்வி, தொழில்நுட்பப் பட்டயப் படிப்பு, தொழிற்பயிற்சி, ஆசிரியர் பயிற்சி, இளங்கலை, முதுகலை பட்டப்படிப்பு, ஆராய்ச்சிப் படிப்பு, ஆகியவற்றைப் பயிலும் சிறுபான்மையினத்தைச் சார்ந்த மாணவ, மாணவியருக்கு பள்ளி மேற்படிப்புக் கல்வி உதவித் தொகை வழங்கப்படுகிறது.

ஒரு வருடத்தில் இத்திட்டத்தின்கீழ் சிறுபான்மையினருக்கான புதிய கல்வி உதவித் தொகை பெறுபவர்களின் எண்ணிக்கை நிலையானது மற்றும் வரையறுக்கப்பட்டுள்ளது. மதிப்பெண்களை விட வறுமைக்கு முன்னுரிமை வழங்கி தயாரிக்கப்பட்ட தகுதி பட்டியல் அடிப்படையில் கல்வி உதவித் தொகை ஒப்பளிக்கப்படுகிறது. சமமான வருமானம் இருப்பின், விண்ணப்பதாரரின் 'பிறந்ததேதி' அடிப்படையில் தகுதி பட்டியல் தயாரிக்கப்படுகிறது.

2023 ஏப்ரல் 13]

புதுப்பித்தல் விண்ணப்பங்களுக்கு தகுதி பட்டியல் தயாரிக்கும் நடைமுறை இல்லை. புதுப்பித்தல் விண்ணப்பதாரர் தனது முந்தைய வருட தேர்வுகளில் 50% பெற்றிருப்பின் (அதே கல்வி நிலையத்தில் அதே பாட நெறியில் பயிலும் நிலையில்) சேர்க்கை/கற்பிப்பு கட்டணம் மற்றும் பராமரிப்பு கட்டணம் ஆகியவற்றிற்கான நிதி உதவி அதிகபட்ச வரம்புக்கு உட்பட்டு கீழ்க்கண்டவாறு வழங்கப்படும்:

விவரம்	**கற்பிப்பு மற்றும் சேர்க்கை கட்டணம் ரூ.**	**பராமரிப்புக் கட்டணம் (10 மாதங்களுக்கு)**	
		விடுதியில் தங்கிப் பயிலும் மாணவ/ மாணவியர் ரூ.	**விடுதியில் தங்காமல் பயிலும் மாணவ/ மாணவியர் ரூ.**
11 ஆம் வகுப்பு மற்றும் 12 ஆம் வகுப்பு	*மாணவ, மாணவியரால் செலுத்தப்பட்ட கட்டணம் அல்லது அதிகபட்சம் ஒரு ஆண்டிற்கு ரூ.7,000 (இவற்றில் எது குறைவோ)*	*3,800*	*2,300*
11 ஆம் வகுப்பு மற்றும் 12 ஆம் வகுப்பு, தொழில்நுட்ப / தொழிற் கல்வி படிப்புகள், ஐடிஐ, ஐசிடி (என்சிவிடி) பாலிடெக்னிக், செவிலியர் டிப்ளமோ, ஆசிரியர் பயிற்சி போன்றவை.	*மாணவ, மாணவியரால் செலுத்தப்பட்ட கட்டணம் அல்லது அதிகபட்சம் ஆண்டிற்கு ரூ.10,000 (இவற்றில் எது குறைவோ)*	*3,800*	*2,300*

விவரம்	கற்பிப்பு மற்றும் சேர்க்கை கட்டணம் ரூ.	பராமரிப்புக் கட்டணம் (10 மாதங்களுக்கு)	
		விடுதியில் தங்கிப் பயிலும் மாணவ/ மாணவியர் ரூ.	விடுதியில் தங்காமல் பயிலும் மாணவ/ மாணவியர் ரூ.
இளநிலை / முதுகலை பட்டப் படிப்புகள் (தொழில்நுட்பம் /தொழிற்கல்வி தவிர)	*மாணவ, மாணவியரால் செலுத்தப்பட்ட கட்டணம் அல்லது அதிகபட்சம் ஆண்டிற்கு ரூ.3,000 (இவற்றில் எது குறைவோ)*	*5,700*	*3,000*
எம்.பில் மற்றும் பி.எச்.டி	—	*12,000*	*5,500*

இத்திட்டத்தின்கீழ் 2022-2023 ஆம் ஆண்டில் 99,008 விண்ணப்பங்கள் மாணவ, மாணவியரிடமிருந்து பெறப்பட்டு ஒன்றிய அரசிற்கு அனுப்பப்பட்டுள்ளது.

3.3 தகுதி மற்றும் வருவாய் அடிப்படையிலான கல்வி உதவித் தொகைத் திட்டம்

தகுதி மற்றும் வருவாய் அடிப்படையிலான கல்வி உதவித் தொகைத் திட்டம் உயர் மதிப்பெண்கள் பெற்று தொழிற்கல்வி மற்றும் தொழில்நுட்ப கல்வி பயிலும் மாணவ, மாணவியரை ஊக்குவிக்கும் வகையில் செயல்படுத்தப்படுகிறது.

அரசால் அங்கீகரிக்கப்பட்ட கல்வி நிறுவனங்களில் தொழில்நுட்பம் / தொழிற் கல்வி பயிலும் தமிழகத்தை சார்ந்த ஒன்றிய அரசால் அறிவிக்கப்பட்ட மதவழி சிறுபான்மையினராக கருதப்படும் இஸ்லாமியர், கிறித்தவர், சீக்கியர், புத்த மதத்தினர், பார்சி மற்றும் சமண மதங்களைச் சார்ந்த மாணவ, மாணவியருக்கு ஒன்றிய அரசு நிதி உதவியுடன் தகுதி மற்றும் வருவாய் அடிப்படையிலான கல்வி உதவித் தொகை வழங்கும் திட்டம்

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

2023 ஏப்ரல் 13]

2007—2008 ஆம் ஆண்டு முதல் செயல்படுத்தப்படுகிறது.

ஒரு வருடத்தில் வழங்கப்படும் சிறுபான்மையினருக்கான புதிய கல்வித் தொகைகளின் எண்ணிக்கை நிலையானது மற்றும் வரையறுக்கப்பட்டுள்ளது. பட்டியலிடப் பட்ட கல்வி நிலையங்களுக்கு (ஐஐடி, ஐஐஎம் போன்றன) கல்வி உதவித் தொகைகள் முதலில் ஒப்பளிக்கப்படும். பிற மாணவர்களுக்கு தகுதி அடிப்படையில் அதாவது முந்தைய படிப்பு தேர்வில் (மேல்நிலை / பட்டப்படிப்பு) அவர்கள் பெற்ற மதிப்பெண்களின் அடிப்படையில் தயாரிக்கப்பட்ட தகுதி பட்டியல் அடிப்படையில் ஒப்பளிக்கப்படுகிறது. மதிப்பெண்கள் சமமாக இருப்பின், பெற்றோர் / பாதுகாவலரின் ஆண்டு வருமானத்தின் அடிப்படையில் தகுதி பட்டியல் தயாரிக்கப்படுகிறது.

புதுப்பித்தல் விண்ணப்பங்களுக்கு தகுதி பட்டியல் தயாரிக்கும் நடைமுறை இல்லை. புதுப்பித்தல் விண்ணப்பதாரர் தனது முந்தைய வருட தேர்வுகளில் 50% பெற்றிருப்பின் (அதே கல்வி நிலையத்தில் அதே பாட நெறியில் பயிலும் நிலையில்) கல்வி உதவித் தொகை வழங்கப்படும். இக்கல்வி உதவித் தொகை திட்டத்தின்கீழ் ஒன்றிய அரசால் பட்டியலிடப்பட்ட

1. *இந்தியன் இன்ஸ்டிடியூட் ஆஃப் டெக்னாலஜி (ஐஐடி) — சென்னை*
2. *நேஷனல் இன்ஸ்டிடியூட் ஆஃப் டெக்னாலஜி (என்.ஐ.டி) திருச்சி*
3. *இந்தியன் இன்ஸ்டிடியூட் ஆஃப் இன்ஃபர்மேஷன் டெக்னாலஜி, டிசைன் & மேனுஃபேக்சரிங் (ஐஐஐடிடி & எம்) — காஞ்சிபுரம்*
4. *நேஷனல் இன்ஸ்டிடியூட் ஆஃப் பேஷன் டெக்னாலஜி (என்.ஐ.எஃப்.டி) — சென்னை*
5. *இந்தியன் இன்ஸ்டிடியூட் ஆஃப் மேனேஜ்மென்ட் (ஐஐஎம்) திருச்சி*

*உள்ளிட்ட 85 கல்வி நிறுவனங்களில் (*Listed Institutions*) பயிலும் சிறுபான்மையின மாணவ, மாணவியருக்கான கல்விக் கட்டணங்கள் முழுவதுமாக வழங்கப்படுகிறது.*

[2023 ஏப்ரல் 13

ஏனைய அரசு/அரசால் அங்கீகரிக்கப்பட்ட கல்வி நிறுவனங்களில் கல்விக் கட்டணம் மற்றும் பராமரிப்புக் கட்டணம் ஆகியவற்றிற்கான நிதி உதவி அதிகபட்ச வரம்புக்கு உட்பட்டு கீழ்க்கண்டவாறு வழங்கப்படும்:

விவரம்	**விடுதியில் தங்கி பயிலும் மாணவ / மாணவியர்**	**விடுதியில் தங்காமல் பயிலும் மாணவ / மாணவியர்**
கல்வி கட்டணம்	*மாணவ, மாணவியரால் செலுத்தப்பட்ட கட்டணம் அல்லது அதிகபட்சம் ஆண்டிற்கு ரூ.20,000 இவற்றில் எது குறைவோ*	
பராமரிப்பு கட்டணம் (10 மாதங்களுக்கு மட்டும்)	*ஆண்டுக்கு ரூ. 10,000*	*ஆண்டுக்கு ரூ. 5,000*
பட்டியலிடப்பட்ட கல்வி நிறுவனங்கள் (ஐஐடி, ஐஐம், முதலான)	*செலுத்தப்பட்ட கல்வி கட்டணம் முழுவதும் மாணவ, மாணவியருக்கு திருப்பி செலுத்தப்படும் (உச்சவரம்பின்றி)*	

இத்திட்டத்தின்கீழ் 2022-2023 ஆம் ஆண்டில் 10,154 விண்ணப்பங்கள் மாணவ, மாணவியரிடமிருந்து பெறப்பட்டு ஒன்றிய அரசிற்கு அனுப்பப்பட்டுள்ளது.

3.4 பேகம் ஹஸ்ரத் மஹால் தேசிய கல்வி உதவித் தொகை

பேகம் ஹஸ்ரத் மஹால் தேசிய கல்வி உதவித் தொகை திட்டம் ஒன்றிய அரசால் அறிமுகப்படுத்தப்பட்டு சிறுபான்மையின விவகார அமைச்சகத்தின் மௌலானா ஆசாத் கல்வி அறக்கட்டளைமூலம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின்கீழ் சிறுபான்மையின சமூகத்தைச் சார்ந்த கல்வியில் சிறந்து விளங்கும் மாணவியரை அங்கீகரித்து அவர்கள் உயர் கல்வியினை தொடர்ந்து பயில ஊக்கம் அளிக்கப்படுகிறது.

சிறுபான்மையினருக்கான பிற கல்வி உதவித் தொகை திட்டங்களுடன் இணைந்து விரைவாக செயல்படுத்தும் நோக்கில் இத்திட்டம் 2021-2022 ஆம் ஆண்டு முதல் தேசிய கல்வி

2023 ஏப்ரல் 13]

உதவித் தொகை இணையத்தில் (National Scholarship Portal) இணைக்கப்பட்டு ஒன்றிய அரசின் 100% நிதி பங்களிப்புடன் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

9 ஆம் வகுப்பு முதல் 10 ஆம் வகுப்பு வரை வருடத்திற்கு ரூ.5,000-மும், 11 ஆம் வகுப்பு முதல் 12 ஆம் வகுப்பு வரை வருடத்திற்கு ரூ.6,000-மும் மாணவிகளின் வங்கி கணக்கில் நேரடி பயன் மாற்று முறையில் வழங்கப்படும். இந்தக் கல்வி உதவித் தொகையில் சேர்க்கை கட்டணம், கற்பிக்கும் கட்டணம், புத்தகங்கள், எழுது பொருள் மற்றும் உண்டி உறைவிட செலவினங்கள் அடங்கும்.

இத்திட்டத்தின்கீழ் 2022-2023 ஆம் ஆண்டில் 12,119 விண்ணப்பங்கள் மாணவியரிடமிருந்து பெறப்பட்டு ஒன்றிய அரசுக்கு அனுப்பப்பட்டுள்ளது.

4. சிறுபான்மையினர் விடுதிகள்

சிறுபான்மையின வகுப்பைச் சார்ந்த ஏழ்மை நிலையிலுள்ள மாணவ, மாணவியர் தங்களது கல்வியினை தொடர்ந்து பயில ஏதுவாக, இலவச உண்டி உறைவிட வசதியுடன் 18 சிறுபான்மையின விடுதிகளை இவ்வரசு நடத்தி வருகிறது. விடுதிகளின் விவரம் பின்வருமாறு:

விடுதி	விடுதிகளின் எண்ணிக்கை	ஒப்பளிக்கப்பட்ட மாணவ/ மாணவியரின் எண்ணிக்கை	அனுமதிக்கப்பட்ட மாணவ/ மாணவியரின் எண்ணிக்கை
கல்லூரி	9	900	688
பள்ளி மற்றும் கல்லூரி	5	250	207
பள்ளி	4	350	203
மொத்தம்	18	1,500	1,098

மொத்தமுள்ள 18 விடுதிகளில் 1 விடுதி மாணவர் விடுதி, 17 விடுதிகள் மாணவியர் விடுதிகள் ஆகும். இவ்விடுதிகளில் சேருவதற்கான பெற்றோரது ஆண்டு வருமான வரம்பு

ரூ.1 இலட்சத்திலிருந்து ரூ.2 இலட்சமாக 2021-2022 ஆம் ஆண்டில் உயர்த்தப்பட்டுள்ளது.

இவ்விடுதிகளில் ஒப்பளிக்கப்பட்ட எண்ணிக்கைக்கு கூடுதலாக 10 விழுக்காடு இடங்களில் மாணவ, மாணவியரைச் சேர்க்க மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது. மேலும், முகாம் வாழ் இலங்கை தமிழர்களின் குழந்தைகளுக்காக ஒவ்வொரு விடுதியிலும் 5 இடங்கள் கூடுதலாக ஒதுக்கப்பட்டுள்ளது.

ஒவ்வொரு விடுதியிலும் 4 சதவீத இடங்கள் மாற்றுத்திறனாளி மாணவ, மாணவியருக்காக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன. மேலும், மீட்கப்படும் குழந்தை தொழிலாளர்கள் விடுதிகளில் கல்வி ஆண்டின் இடையிலும் எவ்வித நிபந்தனைகளும் இல்லாமல் சேர்த்துக் கொள்ளவும், படிப்பு முடியும் வரை தங்கி பயிலவும் அனுமதிக்கப்படுவர்.

தமிழ்நாட்டை பிறப்பிடமாக கொண்டு கேரளா எல்லையோரப் பகுதியில் உள்ள மலைத் தோட்டங்களில் பணிபுரியும் தோட்டத் தொழிலாளர்களின் குழந்தைகளை தேனி மாவட்டத்தில் உள்ள விடுதிகளில் சேர்ப்பதற்கு ஏதுவாக, சாதி மற்றும் வருமானச் சான்றிதழ் அளிப்பதிலிருந்து விலக்கு அளிக்கப்பட்டு அவர்களின் பெற்றோர் அளிக்கும் சுய உறுதிமொழியின் அடிப்படையில் விடுதியில் அனுமதிக்கப்படுவர்.

2021-2022 ஆம் ஆண்டில், 14 கல்லூரி விடுதிகளில் தங்கி பயின்ற மாணவ, மாணவியருக்கு தமிழ்நாடு திறன் வளர்ச்சி மேம்பாட்டுக் கழகம்மூலம் தனித்திறன் மற்றும் ஆங்கில பேச்சாற்றல் பயிற்சிகள் வழங்கப்பட்டன.

4.1 உணவுக் கட்டணம்

அரசால் உணவுக் கட்டணமாக விடுதிகளில் தங்கி பயிலும் மாணவ, மாணவியர் ஒருவருக்கு மாதம் ஒன்றுக்கு ரூ.1,000 ஆகவும், கல்லூரி விடுதிகளில் தங்கி பயிலும் மாணவ, மாணவியர் ஒருவருக்கு மாதம் ஒன்றுக்கு ரூ.1,100 ஆகவும் ஓராண்டில் 10 மாதங்களுக்கு வழங்கப்பட்டு வருகிறது. பள்ளி மற்றும் கல்லூரி விடுதிகளில், விடுதி மாணவ, மாணவியருக்கான உணவுப் பட்டியலில் மாற்றம் செய்யப்பட்டு, மாற்றம் செய்யப்பட்ட திருத்திய உணவுப் பட்டியல் 03.06.2022 முதல் நடைமுறைக்கு கொண்டுவரப்பட்டது.

2023 ஏப்ரல் 13]

பண்டிகை நாட்களில் (கிறிஸ்துமஸ், ரம்ஜான், பக்ரித், மஹாவீர் ஜெயந்தி மற்றும் புத்த பூர்ணிமா) சிறப்பு உணவு கட்டணமாக, ஒரு பண்டிகைக்கு பள்ளி மாணவ, மாணவியருக்கு ரூ.40—ம், கல்லூரி மாணவ, மாணவியருக்கு ரூ.80—ம் அனுமதிக்கப்பட்டுள்ளது.

சோப்பு மற்றும் பற்பசை போன்றவற்றிற்காக மாதாந்திர பல்வகை செலவினம் பள்ளி விடுதி மாணவ, மாணவியருக்கு ரூ.100 ஆகவும், கல்லூரி விடுதி மாணவ, மாணவியருக்கு ரூ.150 ஆகவும் மின்னணு பரிமாற்றம்மூலம் நேரடியாக மாணவ, மாணவியரின் வங்கி கணக்கில் வரவு வைக்கப்பட்டு வழங்கப்பட்டு வருகிறது.

2022-2023 ஆம் ஆண்டில், மேற்கண்ட விடுதிகளின் உணவு கட்டணம், நிர்வாகம், பராமரிப்பு மற்றும் பிற பணிகளுக்காக ரூ.409.40 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது.

2023-2024 ஆம் ஆண்டிற்கான வரவு செலவு திட்டத்தில் சிறுபான்மையினர் நலத் துறைக்கு ரூ.459.46 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

4.2 விடுதி மாணவ, மாணவியர் பெறும் இதர பயன்கள்

1. *4 ஆம் வகுப்பு முதல் 10 ஆம் வகுப்பு வரை விடுதியில் தங்கிப் பயிலும் மாணவ, மாணவியருக்கு மதிய உணவு திட்ட பயனாளிகளுக்கு வழங்கப்படுவதைப் போன்று வண்ணம் மற்றும் வடிவமைப்பில் நான்கு இணை சீருடைகள் வழங்கப்படுகின்றன.*

2. *விடுதியில் தங்கி பயிலும் மாணவ/மாணவியருக்கு 12 ஆம் வகுப்பு வரை அனைத்து பாடப் புத்தகங்களும் இலவசமாக பள்ளிக் கல்வித் துறைமூலம் வழங்கப்படுகின்றன.*

3. *விடுதிகளில் தங்கிப்பயிலும் 10 மற்றும் 12 ஆம் வகுப்பு மாணவ, மாணவியர் பொதுத் தேர்வில் சிறந்த மதிப்பெண்கள் பெற்றிட, அவர்களுக்கு இலவச சிறப்பு வழிகாட்டி நூல்கள் வழங்கப்படுகின்றன.*

4. *ஒவ்வொரு விடுதிக்கும் ஒரு ஆங்கிலம் இரண்டு தமிழ் நாளிதழ்கள் வழங்கப்படுகின்றன.*

5. *14 கல்லூரி விடுதிகளில் ரூ.14 இலட்சம் செலவில் "செம்மொழி நூலகங்கள்" ஏற்படுத்தப்பட்டுள்ளன.*

[2023 ஏப்ரல் 13

6. 14 கல்லூரி விடுதிகளில் ரூ.10.85 இலட்சம் செலவில் E—Library அமைக்கப்பட்டன.

7. 10 மற்றும் 12 ஆம் வகுப்பு மற்றும் கல்லூரி விடுதி மாணவ, மாணவியருக்கு வேலைவாய்ப்புகள் பெறுவதற்காக நடத்தப்படும் பல்வேறு போட்டித் தேர்வுகள் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்த வாழ்க்கை வழிகாட்டி நிகழ்ச்சிகள் நடத்தப்படுகின்றன.

8. அனைத்து விடுதி மாணவ, மாணவியருக்கு ஆண்டுதோறும் மூன்று முறை மருத்துவ பரிசோதனைகள் நடத்தப்படுகின்றன.

9. விடுதி மாணவ, மாணவியருக்கு பாய்கள், ஜமக்காளங்கள், போர்வைகள், எவர்சில்வர் தட்டுகள் மற்றும் தண்ணீர் குவளைகள்(tumbler) வழங்கப்படுகின்றன

10. மலைப் பிரதேசங்களில் உள்ள விடுதி மாணவ, மாணவியருக்கு கம்பளி ஆடைகள் வழங்கப்படுகிறது.

11. விடுதிகளில் அவசர பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள விடுதி ஒன்றுக்கு ஓராண்டிற்கு ரூ.50,000 வழங்கப்படுகிறது.

12. பள்ளி மற்றும் கல்லூரி விடுதிகளில் நூலகப் புத்தகங்கள், புத்தக அலமாரிகள், விளையாட்டு பொருட்கள், வண்ணத் தொலைகாட்சிப் பெட்டி, மாவரைக்கும் இயந்திரம், மின் அரைப்பான், நீர் சுத்திகரிப்பு கருவி, சுகாதார குட்டைத்தகளி, தீயணைப்பான் கருவிகள், இட்லி வேகவைப்பான்கள் மற்றும் பூச்சி அழிப்பான் மின் கருவி ஆகியன வழங்கப்படுகின்றன. இவற்றுடன் கல்லூரி விடுதிகளுக்கு இரண்டடுக்கு கட்டில்கள், இன்வர்ட்டர் கருவி, பார்வை குறிப்பு புத்தகங்கள் உடனடி மாவரைக்கும் இயந்திரம் மற்றும் நீராவி கொதிகலன் வழங்கப்படுகின்றன.

13. மாலை நேர சிற்றுண்டியாக தினந்தோறும் சுண்டல் மற்றும் சுக்குமல்லி காபி/ தேனீர் வழங்கப்படுகின்றன.

14. விடுதி மாணவ, மாணவியருக்கு ஒருவருக்கு ஒரு மாதத்திற்கு 20 முட்டைகள் வழங்கப்படுகின்றன. முட்டை சாப்பிடாதவர்களுக்கு வாழைப்பழங்கள் வழங்கப்படுகின்றன.

2023 ஏப்ரல் 13]

15. ஒவ்வொரு மாதத்தின் முதல் மற்றும் மூன்றாம் புதன் கிழமைகளில் ஆட்டிறைச்சியும், இரண்டாம் மற்றும் நான்காம் புதன்கிழமைகளில் கோழி இறைச்சியும் வழங்கப்படுகின்றன.

4.3 விடுதிகளுக்கு சொந்தக் கட்டடங்கள் கட்டுதல்

இத்துறையின்கீழ் இயங்கி வரும் 18 சிறுபான்மையினர் விடுதிகளில் 11 விடுதிகள் சொந்தக் கட்டடங்களில் செயல்பட்டு வருகின்றன. 2 விடுதிகளுக்கு சொந்தக் கட்டடங்கள் கட்டுவதற்கு ஏற்கெனவே ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன. மீதமுள்ள 5 விடுதிகளுக்கு மாணவ, மாணவியரின் எண்ணிக்கையின் அடிப்படையில் சொந்தக் கட்டடம் கட்டப்படும்.

4.4 விடுதி கட்டடங்கள் பராமரிப்புப் பணிகள்

அரசு சொந்தக் கட்டடங்களில் இயங்கி வரும் விடுதிகளின் பராமரிப்பு பணிகள் பொதுப் பணித் துறைமூலம் மேற்கொள்ளப் படுகின்றன. 2022-2023 ஆம் ஆண்டில் விடுதிகளுக்கு பராமரிப்பு மற்றும் பழுதுபார்த்தல் பணிகளுக்காக ரூ.8 இலட்சம் செலவில் 5 விடுதிகளில் பராமரிப்பு மற்றும் பழுதுபார்த்தல் பணிகள் பொதுப் பணித் துறைமூலம் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

5. முஸ்லிம் மகளிர் உதவும் சங்கம்

ஆதரவற்ற முஸ்லிம் விதவைகளுக்கு மாதந்தோறும் உதவித் தொகை வழங்கி அவர்களுக்கு உதவும்பொருட்டு கர்நாடக நவாப் அவர்களால் “முகமதியன் கோஷா விதவை சாரிட்டி” என்ற பெயரில் 1.10.1892ல் ஒரு சங்கம் துவங்கப்பட்டது. பின்னர் இதன் பெயர் “முஸ்லிம் மகளிர் உதவும் சங்கம்” என்று மாற்றியமைக்கப்பட்டது. இச்சங்கம் 12.08.1976-இல் சங்கங்கள் பதிவுச் சட்டத்தின்கீழ் பதிவு செய்யப்பட்டது. சென்னை மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களை தலைவராகக் கொண்டு செயல்படுகிறது.

2007 ஆம் ஆண்டில் முஸ்லிம் மகளிர் உதவும் சங்கங்கள் மாநிலத்தில் உள்ள அனைத்து மாவட்டங்களிலும் தொடங்கப்பட்டன. தற்போது அனைத்து 38 மாவட்டங்களிலும் தலா ஒரு முஸ்லிம் மகளிர் உதவும் சங்கங்கள் உள்ளன. இத்துடன் மேலும் கூடுதலாக 3 முஸ்லிம் மகளிர் உதவும் சங்கங்கள் தேனி, கிருஷ்ணகிரி மற்றும் விழுப்புரம் ஆகிய மாவட்டங்களில்

[*2023 ஏப்ரல் 13*

2022-2023 ஆம் ஆண்டில் ஏற்படுத்தப்பட்டன. தற்போது 41 முஸ்லிம் மகளிர் உதவும் சங்கங்கள் மாநிலத்தில் செயல்பட்டு வருகின்றன. இச்சங்கங்களுக்கு விதைத் தொகையாக தலா ரூ.1 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.

தையல், பூ வேலைப்பாடுகள், காலணிகள், கைவினைப் பொருள்கள் செய்வதற்கான பயிற்சிகள் மற்றும் தேவைக்கேற்ப இதர பயிற்சிகளும் கட்டணமின்றி வழங்கப்படுகிறது. இச்சங்கங்களின் நிதி ஆதாரங்களின்மூலம் ஆதரவற்ற, வயதான முஸ்லிம் விதவைகள் மற்றும் மிகவும் ஏழ்மை நிலையில் வாழும் முஸ்லிம் மகளிர் ஆகியோர்களுக்கு உதவிடும் வகையில் நிதி உதவிகள் வழங்கப்பட்டு வருகின்றன. இச்சங்கங்கள் நன்கொடைமூலம் திரட்டும் நிதி ஆதாரத்திற்கேற்ப இணை மானியம் இரு மடங்காக 1 : 2 என்ற விகிதாச்சாரத்தில் ஒரு வருடத்திற்கு, ஒரு சங்கத்திற்கு அதிகபட்சமாக ரூ.20 இலட்சம் வரை வழங்கப்பட்டு வருகின்றது.

2022-2023 ஆம் ஆண்டு முதல் சென்னை முஸ்லிம் மகளிர் உதவும் சங்கம் சிறுபான்மையினர் நல இயக்கக கட்டுப்பாட்டின்கீழ் கொண்டு வரப்பட்டுள்ளது.

இச்சங்கங்களுக்கு 2022-2023 ஆம் ஆண்டில் அரசின் இணைமானியமாக ரூ. 249.13 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.

2023-2024 ஆம் ஆண்டிற்கு ரூ.433.11 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

6. கிறித்துவ மகளிர் உதவும் சங்கம்

அனைத்து 38 மாவட்டங்களிலும் தலா ஒரு கிறித்துவ மகளிர் உதவும் சங்கங்கள் உருவாக்கப்பட்டுள்ளன. இதனுடன் கூடுதலாக 3 கிறித்துவ மகளிர் உதவும் சங்கங்கள் கரூர், மதுரை மற்றும் தேனி ஆகிய மாவட்டங்களில் 2022—2023 ஆம் ஆண்டில் ஏற்படுத்தப்பட்டன. தற்போது 41 கிறித்துவ மகளிர் உதவும் சங்கங்கள் மாநிலத்தில் செயல்பட்டு வருகின்றன. இச்சங்கங்களுக்கு விதைத் தொகையாக தலா ரூ.1 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.

தையல், பூ வேலைப்பாடுகள், காலணிகள், கைவினைப் பொருள்கள் செய்வதற்கான பயிற்சிகள் மற்றும் தேவைக்கேற்ப இதர பயிற்சிகளும் கட்டணமின்றி வழங்கப்படுகிறது. இச்சங்கங்களின் நிதி ஆதாரங்களின்மூலம் ஆதரவற்ற, வயதான

2023 ஏப்ரல் 13]

கிறித்துவ விதவைகள், மற்றும் மிகவும் ஏழ்மை நிலையில் வாழும் கிறித்துவ மகளிர் ஆகியோருக்கு உதவிடும் வகையில் நிதி உதவிகள் வழங்கப்பட்டு வருகிறது. இச்சங்கங்கள் நன்கொடைமூலம் திரட்டும் நிதி ஆதாரத்திற்கேற்ப இணை மானியம் இரு மடங்காக 1 : 2 என்ற விகிதாச்சாரத்தில் ஒரு வருடத்திற்கு, ஒரு சங்கத்திற்கு அதிகபட்சமாக ரூ.20 இலட்சம் வரை வழங்கப்பட்டு வருகின்றது. இச்சங்கங்கள், சங்கங்கள் பதிவு சட்டத்தின்கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளன.

இச்சங்கங்களுக்கு 2022-2023 ஆம் ஆண்டில் அரசின் இணைமானியமாக ரூ.162.57 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.

2023-2024 ஆம் ஆண்டிற்கு ரூ.297.54 இலட்சம் இத்திட்டத்திற்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

7. உலமாக்கள் மற்றும் பணியாளர்கள் நல வாரியம்

உலமாக்கள் மற்றும் பணியாளர்கள் நல வாரியம் 2009-ஆம் ஆண்டில் இஸ்லாமியர்களின் பள்ளிவாசல்கள் மற்றும் மதரசாக்களில் பணிபுரியும் ஆலிம்கள், பேஷ் இமாம்கள், அரபி ஆசிரியர்கள்/ஆசிரியைகள், மோதினார்கள், பிலால்கள் மற்றும் இதர பணியாளர்கள் தர்காக்கள், அடக்கஸ்த்தலங்கள், தைக்காக்கள், ஆஷுர்கானாக்கள் மற்றும் முஸ்லீம் அனாதை இல்லங்கள் ஆகிய நிறுவனங்களில் பணிபுரியும் முஜாவர் உள்ளிட்ட பணியாளர்களை பொருளாதாரம் மற்றும் கல்வி நிலைகளில் முன்னேற்றம் அடைவதை நோக்கமாகக் கொண்டு அமைக்கப்பட்டது. இவ்வாரியத்தில் உறுப்பினராக பதிவு செய்ய 18 வயது நிறைவு செய்தும் 60 வயதுக்கு மேற்படாதவர்களாகவும் இருத்தல் வேண்டும். இவ்வாரியத்தில் பதிவு செய்துள்ள உறுப்பினர்களுக்கு அமைப்பு சாரா தொழிலாளர்களுக்கு, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு துறையின் கட்டுப்பாட்டின்கீழ் இயங்கி வரும் நல வாரியங்கள்மூலம் வழங்கப்பட்டு வரும் நல உதவித் திட்டங்கள் போன்று விபத்து நிவாரணம், கல்வி உதவித் தொகை, திருமண உதவித் தொகை, மகப்பேறு உதவித் தொகை மற்றும் முதியோர் ஓய்வூதியம் ஆகிய உதவிகள் வழங்கப்படுகின்றன.

2022-2023 ஆம் ஆண்டில் 1,364 நபர்கள் புதிய உறுப்பினர்களாக பதிவு செய்யப்பட்டு, இவ்வாரியத்தில் இதுவரை மொத்தம் 15,327 நபர்கள் உறுப்பினர்களாக உள்ளனர். இவ்வாரியத்தின்மூலம் 2022-2023 ஆம் ஆண்டில் 153 பயனாளிகளுக்கு ரூ.14.84 இலட்சம் செலவில் நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டுள்ளன.

[2023 ஏப்ரல் 13

இவ்வாரியத்தில் பதிவு செய்துள்ள உறுப்பினர்களுக்கு வழங்கப்படும் நல உதவிகள் விவரம்

வ. எண்	நிதி உதவிகள் விவரம்	உதவித் தொகை
1	விபத்து ஈட்டுறுதித் திட்டத்தின்கீழ் அ. விபத்தினால் மரணம் ஏற்பட்டால் உதவித் தொகை ஆ. விபத்தினால் ஊனம் ஏற்பட்டால் ஊனத்தின் தன்மைக்கேற்ப	ரூ. 1,00,000 ரூ.10,000 முதல் ரூ.1,00,000 வரை
2	இயற்கை மரணத்திற்கான உதவித் தொகை	ரூ.20,000
3	ஈமச்சடங்கு செலவிற்கான உதவித் தொகை	ரூ.5,000
4	கல்வி உதவித் தொகை அ) 10 ஆம் வகுப்பு படித்து வரும் பெண் குழந்தைக்கு	ரூ.1,000
	ஆ) 10 ஆம் வகுப்பு தேர்ச்சி பெற்றவர்களுக்கு	ரூ.1,000
	இ) 11 ஆம் வகுப்பு படித்து வரும் பெண் குழந்தைக்கு	ரூ.1,000
	ஈ) 12 ஆம் வகுப்பு படித்து வரும் பெண் குழந்தைக்கு	ரூ.1,500
	உ) 12 ஆம் வகுப்பு தேர்ச்சி பெற்றவருக்கு	ரூ.1,500
	ஊ) முறையான பட்டப்படிப்பு	ரூ.1,500
	மாணவர் இல்ல விடுதி வசதியுடன் முறையான பட்டப்படிப்பிற்கு	ரூ.1,750
	எ) முறையான பட்ட மேற்படிப்புக்கு	ரூ.4,000

வ. எண்	நிதி உதவிகள் விவரம்	உதவித் தொகை
	மாணவர் இல்ல வசதியுடன் முறையான பட்ட மேற்படிப்புக்கு	*ரூ.5,000*
	ஏ) தொழிற்கல்வி பட்ட படிப்பிற்கு	*ரூ.4,000*
	மாணவர் இல்ல வசதியுடன் தொழிற்கல்வி பட்ட படிப்பிற்கு	*ரூ.6,000*
	ஐ) தொழிற்கல்வி பட்ட மேற்படிப்பிற்கு	*ரூ.6,000*
	மாணவர் இல்ல வசதியுடன் தொழிற்கல்வி பட்ட மேற்படிப்பிற்கு	*ரூ.8,000*
	ஓ) ஐ.டி.ஐ அல்லது தொழிற் பயிற்சி படிப்பிற்கு	*ரூ.1,000*
	மாணவர் இல்ல வசதியுடன் ஐடிஐ அல்லது தொழிற் பயிற்சி படிப்பிற்கு	*ரூ.1,200*
5	*திருமண உதவித் தொகை* *ஆண்கள்* *பெண்கள்*	 *ரூ.3,000* *ரூ.5,000*
6	*மகப்பேறு உதவித் தொகை* *அ) மகப்பேறு மாதம் ஒன்றுக்கு ரூ.1000 வீதம் (6 மாதங்களுக்கு)*	*ரூ.6,000*
	ஆ) கருச்சிதைவு / கருக் கலைப்பு	*ரூ.3,000*

வ. எண்	நிதி உதவிகள் விவரம்	உதவித் தொகை
7	மூக்கு கண்ணாடி செலவுத்தொகையை ஈடு செய்தல்	ரூ.500 (அதிகபட்சம்)
8	முதியோர் ஓய்வூதியம் மாதந்தோறும்	ரூ.1,000

இவ்வாரியத்தில் இதுவரையில் 4,632 பயனாளிகளுக்கு ரூ.195.76 இலட்சம் செலவில் பல்வேறு நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டுள்ளது.

2023-2024 ஆம் ஆண்டிற்கு ரூ.51.54 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

7.1 உலமாக்கள் மற்றும் பணியாளர்கள் நல வாரிய உறுப்பினர்களுக்கு மிதிவண்டிகள் வழங்குதல்

2022-2023 ஆம் ஆண்டில் உலமாக்கள் மற்றும் பணியாளர்கள் நல வாரியத்தில் உறுப்பினராக உள்ள 10,583 நபர்களுக்கு ரூ.543.64 இலட்சம் செலவில் மிதிவண்டிகள் வழங்கப்பட்டுள்ளன.

7.2 பதிவுபெற்ற வக்ஃப் நிறுவனங்களில் பணியாற்றும் உலமாக்களுக்கு இருசக்கர வாகனம் வாங்க மானியம்

வக்ஃப் வாரியத்தில் பதிவு செய்யப்பட்ட வக்ஃப் நிறுவனங்களில் பணியாற்றும் உலமாக்களுக்கு இரு சக்கர வாகனம் வாங்க வாகனத்தின் விலையில் 50 விழுக்காடு அல்லது ரூ.25,000 இதில் எது குறைவோ, அத்தொகை மானியமாக வழங்கிட உத்தரவிடப்பட்டுள்ளது.

இத்திட்டத்திற்காக ரூ.703.50 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது. இதுவரை 66 நபர்கள் பயனடைந்துள்ளனர்.

8. கிராமப்புற சிறுபான்மை மாணவியர்களுக்கான ஊக்கத் தொகை வழங்குதல்

கிராமப்புற பெண் குழந்தைகளின் கல்வியை ஊக்குவிப்பதற்காகவும், தொடக்கக் கல்வி அளவில் சிறுபான்மைப்

2023 ஏப்ரல் 13]

பெண் குழந்தைகளின் இடைநிற்றலைக் குறைக்கவும், சிறுபான்மையின பெண் குழந்தைகளுக்கான கிராமப்புற பெண் ஊக்கத் தொகை வழங்கும் திட்டம் 2022-2023 ஆம் ஆண்டில் புதிதாக துவங்கப்பட்டுள்ளது. கிராமப்புறங்களில் 3 ஆம் வகுப்பு முதல் 5 ஆம் வகுப்பு வரை படிக்கும் சிறுபான்மையினர் மாணவிகளுக்கு ஆண்டொன்றிற்கு ரூ.500-ம் மற்றும் 6 ஆம் வகுப்பு படிக்கும் மாணவியர்களுக்கு ரூ.1,000-ம் ஊக்கத் தொகையாக வழங்கப்படுகிறது.

2023-2024 ஆம் ஆண்டிற்கு ரூ.275.60 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

9. சிறுபான்மையினருக்கு மின்மோட்டாருடன் கூடிய தையல் இயந்திரங்கள் வழங்குதல்

பொருளாதாரத்தில் பின்தங்கிய சிறுபான்மையினர் வகுப்பைச் சார்ந்தவர்கள் பயனடையும் வகையில் 1,000 மின்மோட்டாருடன் கூடிய தையல் இயந்திரங்கள் ரூ.61.60 இலட்சம் செலவில் வாங்கி வழங்க ஆணையிடப்பட்டு, முதன்முறையாக மின்மோட்டாருடன் கூடிய தையல் இயந்திரங்கள் சிறுபான்மையினருக்கு வழங்கப்பட்டுள்ளன.

10. 5 புதிய மாவட்ட சிறுபான்மையினர் அலுவலகங்கள் துவங்குதல்

சிறுபான்மையினர் அதிகமாக வசிக்கும் சென்னை, வேலூர், விழுப்புரம், திருநெல்வேலி மற்றும் கோயம்புத்தூர் ஆகிய 5 மாவட்டங்களில், ரூ.175.05 இலட்சம் செலவில் மாவட்ட சிறுபான்மையினர் நல அலுவலகங்கள் புதிதாக தோற்றுவிக்கப்பட்டு செயல்பட்டு வருகின்றன.

11. ஜெருசலேம் புனித பயணத்திற்கான நிதியுதவி

இத்திட்டத்தின்கீழ், தமிழ்நாட்டிலுள்ள அனைத்து கிறித்துவ பிரிவினரும் இஸ்ரேலில் உள்ள ஜெருசலேமிற்கு புனித பயணம் செல்வதற்கு அரசால் நிதியுதவி வழங்கப்பட்டு வருகிறது. ஆண்டொன்றுக்கு இத்திட்டத்தின்கீழ் பயன்பெறும் பயனாளிகளின் எண்ணிக்கை 600 ஆகும். இவற்றில் 50 இடங்கள் கன்னியாஸ்திரிகள் / அருட்சகோதரிகளுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன. தற்போது கன்னியாஸ்திரிகள் / அருட்சகோதரிகளுக்கு ரூ.60,000/-ம் இதர நபர்களுக்கு ரூ.37,000/-ம் வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின்கீழ்

இதுவரையில் ரூ.825.60 இலட்சம் செலவில் 4,128 கிறித்துவர்கள் ஜெருசலேம் புனித பயணம் மேற்கொண்டுள்ளனர்.

2023-2024 ஆம் ஆண்டிற்கு ரூ.233.50 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

12. கிறித்துவ தேவாலயங்கள் புனரமைத்தல் மற்றும் பழுது நீக்குதலுக்கான மானிய உதவி அளிக்கும் திட்டம்

இத்திட்டத்தின்கீழ், தமிழகத்தில் உள்ள கிறித்துவ தேவாலயங்கள் புனரமைத்தல் மற்றும் பழுது நீக்குதலுக்கு மானிய உதவி அளிக்கும் திட்டம் செயல்படுத்தப்படுகிறது. தேவாலயங்கள் புனரமைப்பதற்கும் பழுது பார்ப்பதற்கும், வழங்கப்படும் மானியம் ரூ.6 கோடியிலிருந்து ரூ.10 கோடியாக உயர்த்தப்பட்டுள்ளது. தொன்மையான மதுரை புனித ஜார்ஜ் தேவாலயம், தஞ்சாவூர் ஸ்வார்ட்ஸ் தேவாலயம், சேலம் கிறிஸ்து தேவாலயம் உள்ளிட்டவை புதுப்பிக்கப்படும்.

இத்திட்டத்தின்கீழ் இதுவரை 19 மாவட்டங்களில் உள்ள 30 கிறித்துவ தேவாலயங்களுக்கு புனரமைப்புப் பணிகளுக்காக ரூ.77.90 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.

2023-2024 ஆம் ஆண்டிற்கு இத்திட்டத்திற்காக ரூ.1,000 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

13. கபர்ஸ்தான் மற்றும் அடக்கஸ்தலங்கள் அமைத்தல்

இஸ்லாமியர்கள் மற்றும் கிறித்தவர்கள் கோரிக்கையின் அடிப்படையில், கபர்ஸ்தான் மற்றும் அடக்கஸ்தலங்கள் அமைக்க நிலம் கையகப்படுத்தும் திட்டம் அறிமுகப்படுத்தப்படுகிறது. இத்திட்டத்திற்கு அரசால் ரூ.100 இலட்சம் நிர்வாக ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

14. கிறித்துவ உபதேசியார்கள் மற்றும் பணியாளர்கள் நல வாரியம்

கிறித்துவ உபதேசியார்கள் மற்றும் பணியாளர்கள் நல வாரியம் அமைத்திட ஆணையிடப்பட்டது. மேலும் உறுப்பினர்களை பதிவு செய்வது மற்றும் பல்வேறு நலத்திட்ட உதவிகள் வழங்குவது குறித்து 18.01.2023-ல் விரிவான வழிகாட்டி நெறிமுறைகள் வெளியிடப்பட்டுள்ளன.

2023 ஏப்ரல் 13]

15. மறுவாழ்வு நிதியுதவி வழங்குதல்

மறுவாழ்வு நிதியுதவி வழங்கும் திட்டம், இனக்கலவரங்களால் பொருளாதார மற்றும் உடல் ரீதியாக பாதிக்கப்பட்டு வாழ்வாதாரத்தை இழந்து நிற்கும் சிறுபான்மையின சமுதாயத்தைச் சார்ந்தவர்கள் மற்றும் சிறு குற்றங்களுக்காக சிறைதண்டனை பெற்றவர்கள் உள்ளிட்டோர், சமுதாயத்தில் கண்ணியமான வாழ்க்கை நடத்திட உதவும் வகையில் செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டத்தின்கீழ், சிறுவணிகம் தொடங்குவதற்கு நபர் ஒருவருக்கு ரூ.10 ஆயிரம் வரை நிதியுதவி வழங்கப்பட்டு வருகிறது. இதுவரை சிறு குற்றங்களுக்காக சிறை சென்று வெளிவந்த 14 நபர்களுக்கு ரூ.1.40 இலட்சம் நிதி உதவி வழங்கப்பட்டுள்ளது.

16. பாரதப் பிரதமரின் புதிய 15 அம்ச திட்டம்

மாநிலத்தில் செயல்படுத்தப்படும் பல்வேறு திட்டங்களின்கீழ், நிர்ணயிக்கும் இலக்குகளில், சிறுபான்மையினரின் மக்கள் தொகைக்கு ஏற்ப, உரிய பங்கு சிறுபான்மையின மக்களுக்கு சென்றடைவதை உறுதி செய்திடும் வகையில், பாரதப் பிரதமரின் புதிய 15 அம்ச திட்டம் தமிழ்நாட்டில் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

கல்வி கற்பதற்கான வசதிகளை வழங்குதல், கடனுதவி வழங்குதல், வீடுகளுக்கான வசதிகளை உருவாக்குதல், வேலை வாய்ப்புகளை உருவாக்குதல் மற்றும் மதநல்லிணக்கத்தை பேணுதல் ஆகியன இத்திட்டத்தின் முதன்மை குறிக்கோள்கள் ஆகும்.

வெவ்வேறு துறைகள்மூலம் செயல்படுத்தப்படும் பாரதப் பிரதமரின் புதிய 15 அம்ச திட்டத்தை கண்காணிக்கவும் மற்றும் மதிப்பாய்வு செய்யவும் மாநில அளவில் தலைமைச் செயலர் அவர்கள் தலைமையில் ஓர் உயர்நிலைக் குழுவும், மாவட்ட அளவில் மாவட்ட ஆட்சித்தலைவர் தலைமையில் ஒரு குழுவும் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

16.1 பாரதப் பிரதமரின் புதிய 15 அம்ச திட்டங்கள்

1. ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்டம்;
2. பள்ளிகல்வியை பெறுவதற்கான வாய்ப்பு;
3. உருது மொழியை கற்பிப்பதற்கான வசதி ஏற்படுத்தல்;

[2023 ஏப்ரல் 13

4. மதரஸா கல்வி முறையை நவீனப்படுத்துதல்;

5. சிறுபான்மையின சமுதாயத்தைச் சார்ந்த கல்வியில் சிறந்த மாணவ/ மாணவியருக்கு கல்வி உதவித் தொகை;

6. மௌலானா ஆசாத் கல்வி அமைப்பின் மூலம் கல்விக் கூடங்களின் கட்டமைப்புகளை மேம்படுத்துவது;

7. சுய வேலைவாய்ப்பு மற்றும் எளியவர்களுக்கான கூலியுடன் வேலைத்திட்டம்;

8. தொழில் நுட்ப பயிற்சியின்மூலம் திறனை மேம்படுத்துதல்;

9. பொருளாதார நடவடிக்கைகளுக்கான கடன் உதவி;

10. மாநில மற்றும் மத்திய அரசுப் பணிகளில் வேலைவாய்ப்பு;

11. ஊரக வீடு வசதி திட்டத்தில் சம அளவு பங்கு;

12. சிறுபான்மையினத்தவர் வாழும் குடிசைப் பகுதிகளின் நிலையை மேம்படுத்தல்;

13. இனக்கலவரங்களைத் தடுத்தல்;

14. இனக்கலவரத்தினை தூண்டுவோர் மீது குற்ற விசாரணை நடத்துதல் மற்றும்

15. இனக்கலவரத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு மறுவாழ்வு வழங்குதல்.

17. பிரதம மந்திரியின் சிறுபான்மையினருக்கான மக்கள் மேம்பாட்டு திட்டம் (பிரதம மந்திரி ஜன் விகாஸ் கார்யக்ரம்)

பிரதம மந்திரியின் சிறுபான்மையினருக்கான மக்கள் மேம்பாட்டுத் திட்டம் (பிரதம மந்திரியின் ஜன் விகாஸ் கார்யக்ரம்), சிறுபான்மையினர் அதிகம் வாழும் பகுதிகளில் உள்ள சிறுபான்மையினரின் சமூக மற்றும் பொருளாதார நிலையை உயர்த்துவதையும், அவர்களது வாழ்க்கை தரத்தை மேம்படுத்தும் வகையில் அடிப்படை வசதிகளை வழங்குவதையும், ஏற்ற தாழ்வினை குறைப்பதையும் நோக்கமாக கொண்டதாகும்.

இத்திட்டத்தின்கீழ் கல்வி, சுகாதாரம் மற்றும் திறன்மேம்பாட்டுத் துறைகளில் உள்கட்டமைப்பு வசதிகளை உருவாக்கும் வகையில்

2023 ஏப்ரல் 13]

திட்டங்கள் செயல்படுத்தப்படுகின்றன. ஒன்றிய அரசின் சிறுபான்மையின நல அமைச்சகத்தால், 2011 ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி சிறுபான்மையினர் அதிகமாக வாழும் பகுதிகள் (25% சிறுபான்மையினர் மக்கள் தொகை உள்ள பகுதிகள்) என கண்டறியப்பட்டுள்ள பகுதிகளில் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டது.

இத்திட்டத்திற்கான திருத்தப்பட்ட வழிகாட்டி நெறிமுறைகளின்படி தமிழ்நாட்டில் உள்ள அனைத்து மாவட்டங்களிலும் இத்திட்டம் செயல்படுத்தப்படும். இத்திட்டமானது 15 கிலோமீட்டர் சுற்றளவில் 25% அதிகமாக சிறுபான்மையினர் அதிகம் வாழும் செறிவூட்டப்பட்ட பகுதிகளில் முன்மொழியப்படும்.

*இத்திட்டம், ஒன்றிய மற்றும் மாநில அரசுகளின் 60:40 என்ற நிதி பங்களிப்புடன் செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டத்தின்கீழ் ஒதுக்கீடு செய்யப்படும் மொத்த நிதியில் 80 சதவீதம் கல்வி, சுகாதாரம் மற்றும் திறன் வளர்ப்பு திட்டங்களுக்கும், அவற்றில் 33—40 சதவீதம் பெண்கள்/பெண் குழந்தைகளுக்கான கட்டமைப்புகள்/வசதிகள் ஏற்படுத்துவதற்காகவும் செலவிடப்படுகிறது. இத்திட்டத்தின்கீழ் சமுதாய கூடம் அமைத்தல், உண்டு உறைவிடப்பள்ளி, திறன்மிகு வகுப்பறை (*Smart Class*), அரசு தொழிற்பயிற்சி நிலையம்/ தொழில்நுட்ப கூடங்களில் கூடுதல் வகுப்பறைகள் அமைத்தல், சுகாதார வசதிகள் ஏற்படுத்துதல், அரசு பள்ளிகளுக்கு கட்டடங்கள் கட்டுதல், பல்வகை தொழில்நுட்ப கல்லூரிகள், வேலைக்கு செல்லும் பெண்களுக்கு விடுதிகள் அமைத்தல், ஒன்றிய மற்றும் மாநில அரசுகளின் பல்கலைக்கழகங்களில் மாணவர் விடுதிகள் மற்றும் சிறப்பு வகுப்புகள் உருவாக்குதல், அரசு அங்கீகரித்துள்ள மதராசா பள்ளிகளுக்கு இணைய வசதியுடன் கூடிய கணினிகள் வழங்குதல் மற்றும் சிறுபான்மையினர் அதிகம் வாழும் பகுதிகளில் பல்வேறு அடிப்படை வசதிகளை ஏற்படுத்தி தருதல் ஆகிய பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன.*

2021-2022 ஆம் ஆண்டில் இத்திட்டத்தின்கீழ் பத்து மாவட்டங்களில் ரூ.61,575.41 இலட்சம் மதிப்பீட்டில் 62 திட்டங்களை செயல்படுத்த அனுமதி வழங்கப்பட்டது. முதல் கட்ட தவணையாக ஒன்றிய அரசு பங்களிப்பாக ரூ.18,422.22 இலட்சமும் மற்றும் மாநில அரசின் பங்களிப்பாக ரூ.12,281.48 இலட்சமும் ஆக மொத்தம் ரூ.30,703.70 இலட்சம் நிதி 2022-2023 ஆண்டில் விடுவிக்கப்பட்டுள்ளது.

2023-2024 ஆம் ஆண்டிற்கு ரூ.30,703.72 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

18. சிறுபான்மையினர் கல்விநிறுவனங்களுக்கான சிறுபான்மையினர் அந்தஸ்து

*கல்வி நிறுவனங்களுக்கு சிறுபான்மையினர் அந்தஸ்து வழங்கும் பொருண்மை இத்துறையின்மூலம் செயல்படுத்த ஆணையிடப்பட்டுள்ளது. இணையவழிமூலம் இத்திட்டத்தினை செயல்படுத்த தனி இணையதளம் உருவாக்குவதற்கான பணிகள் நடைபெற்று வருகிறது. சிறுபான்மையினர் அந்தஸ்து கோரும் விண்ணப்பங்களை சமர்ப்பிப்பதற்கு சிறுபான்மையினர் நல இயக்குநரகம் முனையக துறையாகும் (*Nodal Department*).*

19. தமிழ்நாடு மாநில சிறுபான்மையினர் ஆணையம்

தமிழ்நாடு மாநில சிறுபான்மையினர் ஆணையம், மதவழி மற்றும் மொழிவழி சிறுபான்மையினரின் உரிமைகளையும், நலன்களையும் பாதுகாக்கும் பொருட்டு அமைக்கப்பட்ட சட்டபூர்வமான அமைப்பாகும்.

இந்த ஆணையம் சிறுபான்மையினத்தவரை பாதுகாத்திட இந்திய அரசியலமைப்புச் சட்டம் மற்றும் மாநில அரசால் நிறைவேற்றப்பட்டுள்ள சட்டங்களின்மூலம் அளிக்கப்பட்டுள்ள பாதுகாப்புகள் செயல்படும் விதத்தை ஆய்வு செய்தல், கண்காணித்தல், சிறுபான்மையினர் தொடர்பாக அரசு மேற்கொள்ள உத்தேசிக்கும் சட்டம் மற்றும் நலத்திட்டங்கள் குறித்து உரிய கருத்துக்களைத் தெரிவித்தல், மாநிலத்தில் மதநல்லிணக்கத்தை உறுதிப்படுத்தல், பராமரித்தல் மற்றும் மேம்படுத்துதலுக்கான வழிவகைகளை அரசுக்குப் பரிந்துரைத்தல் போன்ற செயல்பாடுகளை மேற்கொள்கிறது.

தற்போதைய ஆணையம் 28.06.2021 முதல் 3 ஆண்டு காலத்திற்கு திருத்தி அமைக்கப்பட்டுள்ளது. இவ்வாணையம் திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ் அவர்களை தலைவராகவும், திரு. எம்.எம். அப்துல் குத்தூஸ் அவர்களை துணைத் தலைவராகவும் மற்றும் 8 உறுப்பினர்களுடனும் செயல்பட்டு வருகிறது.

சிறுபான்மையினரின் பிரச்சனைகளை கண்டறியும் பொருட்டு மாநிலத்தின் வெவ்வேறு பகுதிகளை பார்வையிட்டு

2023 ஏப்ரல் 13]

நலத் திட்டங்களை திறம்பட செயல்படுத்திட அரசுக்கு தக்க பரிந்துரைகளை தமிழ்நாடு மாநில சிறுபான்மையினர் ஆணையம் செய்து வருகிறது. சிறுபான்மையின மக்கள் மற்றும் சிறுபான்மையின நிறுவனங்களிடமிருந்து பெறப்படும் கோரிக்கைகள் தொடர்பாக சம்பந்தப்பட்டவர்களை, தேவைப்படின் அழைத்து நேரடி விசாரணை செய்து அவர்கள் அளிக்கும் கோரிக்கைகள்மீது தொடர்புடைய அரசுத் துறைகளிடமிருந்து அறிக்கைகளை இந்த ஆணையம் பெறுகிறது.

2022 ஆம் ஆண்டில், "சிறுபான்மையினர் உரிமைகள் தின விழா" மாநில அளவில் டிசம்பர் 18-ம் தேதி மதுரையில் கொண்டாடப்பட்டது.

20. தமிழ்நாடு சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம்

தமிழ்நாடு சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம் 1999 ஆம் ஆண்டு இந்திய கம்பெனிகள் சட்டம் 1956-ன் கீழ் அமைக்கப்பட்டது. இந்நிறுவனம் சிறுபான்மையினர்களான இஸ்லாமியர்கள், கிறித்தவர்கள், சீக்கியர்கள், புத்த மதத்தவர்கள், பார்சிகள் மற்றும் சமணர்கள் ஆகியோர் நலனுக்காக அவர்கள் சிறு வணிகம்/ வியாபாரம் மேற்கொள்ள குறைந்த வட்டி விகிதத்தில் கடன் வழங்கி வருகிறது. இந்நிறுவனம், தேசிய சிறுபான்மையின வளர்ச்சி மற்றும் நிதிக் கழகத்தின் மாநில முகமையாக செயல்பட்டு வருகிறது. சிறுபான்மையின மக்களின் பொருளாதார முன்னேற்றத்திற்காக இந்நிறுவனம் காலக்கடன், சிறுகடன் மற்றும் கல்விக் கடன் ஆகிய கடன் உதவிகளை வழங்கி வருகிறது. இந்நிறுவனத்தின் அங்கீகரிக்கப்பட்ட பங்கு மூலதனம் ரூ.5 கோடியாகும். இதில் செலுத்தப்பட்ட பங்கு மூலதனம் ரூ.2.05 கோடியாகும். இக்கழகம் வழங்கும் பல்வேறு கடன் திட்டங்களுக்கான நிதியை, மாநில அரசின் பொறுப்புறுதியின்மீது தேசிய சிறுபான்மையினர் வளர்ச்சி மற்றும் நிதிக்கழகத்திடமிருந்து கடனாகப் பெற்று வழங்குகிறது. தமிழ்நாடு அரசின் பொறுப்புறுதி ஓராண்டு காலத்திற்கு வழங்கப்பட்டது. தற்போது 2022-2023 ஆம் ஆண்டில், தமிழ்நாடு அரசின் பொறுப்புறுதி 3 ஆண்டு காலத்திற்கு (2022-2023-லிருந்து 2024-2025 வரை) வழங்கி உத்தரவிடப்பட்டுள்ளது. இதன்மூலம் தேசிய சிறுபான்மையினர் வளர்ச்சி மற்றும் நிதிக் கழகத்திடமிருந்து கடன்களை உரிய நேரத்தில் பெற இயலும். பல்வேறு திட்டங்களின்கீழ் நல்ல முன்னேற்றம் ஏற்பட இதன்மூலம் வழிவகை ஏற்படும்.

தமிழ்நாடு சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி/கூட்டுறவு நகர வங்கி/ தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்கள்மூலம் பயனாளிகளுக்கு கடன் வழங்கி வருகிறது.

தனிநபர் காலக் கடன், விரசாத் கடன் (கைவினை கலைஞர் கடன்), சுய உதவி குழுக்களுக்கு வழங்கும் சிறுகடன் மற்றும் கல்விக் கடன் ஆகிய கடன்களில் பங்குத் தொகை விவரம் பின்வருமாறு:

தேசிய கழகத்தின் பங்கு — 90 %

டாம்கோவின் பங்கு — 5 %

பயனடைவோரின் பங்கு — 5 %

20.1 தனிநபர் காலக்கடன் திட்டம்

சுயவேலை வாய்ப்புகள் உருவாக்குவதை ஊக்கப்படுத்தும் நோக்கில், தமிழ்நாடு சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம்மூலம் பொருளாதாரத்தில் பின்தங்கியுள்ள சிறுபான்மையின மக்கள் சுயமாக தொழில் / வியாபாரம் செய்ய தனிநபர் காலக் கடன்கள் பின்வருமாறு வழங்கப்படுகிறது.

வ. எண்	கடன் தொகை	வட்டி விகிதம் (ஆண்டிற்கு)	ஆண்டு வருமானம் உச்சவரம்பு
1	திட்டம் I ரூ.20 இலட்சம் வரையிலான கடன்களுக்கு	6%	கிராமப்புறங்களுக்கு ரூ.98,000 நகர்ப்புறங்களுக்கு ரூ.1.20 இலட்சம்
2	திட்டம் II ரூ.30 இலட்சம் வரையிலான கடன்களுக்கு	ஆண்— 8% பெண்— 6%	திட்டம்-I இன்கீழ் நன்மைகளைப் பெற முடியாத நபர்கள் மற்றும் ரூ.8 இலட்சம் வரை ஆண்டு வருமானம் கொண்டவர்கள் (கிராமப்புற மற்றும் நகர்ப்புற பகுதிகளுக்கு)

2023 ஏப்ரல் 13]

இத்திட்டத்தின்கீழ் 2022-2023 ஆம் ஆண்டில் 3,413 பயனாளிகள் பயனடையும் வகையில் ரூ.2,455.50 இலட்சம் கடனாக வழங்கப்பட்டுள்ளது.

20.2 விராசாத் -கைவினை கலைஞர் கடன் திட்டம்

விராசாத் - கைவினை கலைஞர் கடன் திட்டம், தனிநபர் காலக் கடன் திட்டத்தின் ஓர் உட்பிரிவாகும். இத்திட்டத்தின்கீழ், கைவினை கலைஞர்களுக்கு மூலதன பொருட்களான உபகரணங்கள்/ கருவிகள்/ இயந்திரங்கள் வாங்குவதற்கு, குறைந்த வட்டி விகிதத்தில் கடன் வழங்கப்படுகிறது. இத்திட்டம் குறித்த விவரங்கள் பின்வருமாறு:

வ. எண்	கடன் தொகை	வட்டி விகிதம் (ஆண்டிற்கு)	ஆண்டு வருமானம் உச்சவரம்பு
1	திட்டம் I *ரூ.10 இலட்சம் வரையிலான கடன்களுக்கு*	*ஆண்— 5%* *பெண்— 4%*	கிராமப்புறங்களுக்கு *ரூ.98,000* நகர்ப்புறங்களுக்கு *ரூ.1.20 இலட்சம்*
2	திட்டம் II *ரூ.10 இலட்சம் வரையிலான கடன்களுக்கு*	*ஆண்— 6%* *பெண்— 5%*	திட்டம் —I இன்கீழ் நன்மைகளைப் பெற முடியாத நபர்கள் மற்றும் ரூ.8 இலட்சம் வரை ஆண்டு வருமானம் கொண்டவர்கள் (கிராமப்புற மற்றும் நகர்ப்புற பகுதிகளுக்கு)

20.3 சுய உதவிக் குழுக்களுக்கான சிறுகடன் திட்டம்

தமிழ்நாடு சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டுக் கழகத்தின்மூலம், சுய உதவிக் குழு உறுப்பினர்கள் ஆண் மற்றும் பெண் சுய உதவிக்குழு உறுப்பினர்கள் பலகாரக்கடை, காலணி விற்பனை செய்தல், சிற்றுண்டி, ஜவுளி வியாபாரம், ஊறுகாய் மற்றும் அப்பளம் தயாரித்து விற்பனை செய்தல், கூடை பின்னுதல்

போன்ற சிறு வியாபாரம் செய்து தங்களின் பொருளாதாரத்தினை உயர்த்திட சிறுகடன் வழங்கும் திட்டம்மூலம் பின்வருமாறு கடன் வழங்கப்படுகிறது.

வ. எண்	கடன் தொகை	வட்டி விகிதம் (ஆண்டிற்கு)	ஆண்டு வருமானம் உச்சவரம்பு
1	திட்டம் I ரூ.1 இலட்சம் வரை (சுய உதவிக்குழு உறுப்பினர் ஒருவருக்கு)	7%	கிராமப்புறங்களுக்கு ரூ.98,000 நகர்ப்புறங்களுக்கு ரூ.1.20 இலட்சம்
2	திட்டம் II ரூ.1.50 இலட்சம் வரை (சுய உதவிக்குழு உறுப்பினர் ஒருவருக்கு)	ஆண்— 10% பெண்— 8%	திட்டம்—I இன்கீழ் நன்மைகளைப் பெற முடியாத நபர்கள் மற்றும் ரூ.8 இலட்சம் வரை ஆண்டு வருமானம் கொண்டவர்கள் (கிராமப்புற மற்றும் நகர்ப்புற பகுதிகளுக்கு)

இத்திட்டத்தின்கீழ் 2022-2023 ஆம் ஆண்டில் சுய உதவிக் குழுக்கள்மூலம் 5,358 பயனாளிகள் பயனடையும் வகையில் ரூ.3,057.35 இலட்சம் கடனாக வழங்கப்பட்டுள்ளது.

20.4. கல்விக் கடன்

அரசு /அரசால் அங்கீகரிக்கப்பட்ட தனியார் கல்வி நிறுவனங்களில் தொழிற் கல்வி மற்றும் வேலை வாய்ப்பு பட்டப்படிப்புகள் பயிலும் சிறுபான்மையின மாணவ / மாணவியருக்கு பின்வருமாறு கல்விக் கடன்கள் வழங்கப்படுகின்றன:

2023 ஏப்ரல் 13]

வ. எண்	கல்விக் கடன் தொகை	வட்டி விகிதம் (ஆண்டிற்கு)	பெற்றோரது ஆண்டு வருமானம் உச்சவரம்பு
1	*திட்டம் I இந்தியாவில் கல்வி பயில கல்விக் கடன் ஆண்டுதோறும் ரூ.4 இலட்சம் வீதம் அதிக பட்சமாக 5 ஆண்டுகளுக்கு ரூ.20 இலட்சம் வரை வழங்கப்படுகிறது. மேலும், வெளிநாடுகளில் தொழிற்கல்வி பயில ஆண்டிற்கு ரூ.6 இலட்சம் வீதம் அதிக பட்சமாக 5 ஆண்டுகளுக்கு ரூ.30 இலட்சம் வரை வழங்கப்படுகிறது.*	*3%*	*கிராமப்புறங்களுக்கு ரூ98,000 நகர்ப்புறங்களுக்கு ரூ.1.20 இலட்சம்*
2	*திட்டம் – II இந்தியாவில் கல்வி பயில ஆண்டுதோறும் ரூ.4 இலட்சம் வீதம் அதிகபட்சமாக 5 ஆண்டுகளுக்கு ரூ.20 இலட்சம் வரை வழங்கப்படுகிறது. மேலும், வெளிநாடுகளில் கல்வி பயில்பவர்களுக்கு ஒரு கல்வி ஆண்டிற்கு ரூ.6 இலட்சம் வீதம் அதிகபட்சமாக 5 ஆண்டுகளுக்கு ரூ.30 இலட்சம் வரை வழங்கப்படுகிறது.*	*மாணவர்களுக்கு - 8% மாணவியர்களுக்கு -5%*	*திட்டம் I இன்கீழ் நன்மைகளைப் பெற முடியாத நபர்கள் மற்றும் ரூ.8 இலட்சம் வரை ஆண்டு வருமானம் கொண்டவர்கள் (கிராமப்புற மற்றும் நகர்ப்புற பகுதிகளுக்கு)*

இத்திட்டத்தின்கீழ் 2022-2023 ஆம் ஆண்டில் 14 மாணவ, மாணவியருக்கு ரூ.15.21 இலட்சம் கடனாக வழங்கப்பட்டுள்ளது.

2022-2023 ஆம் ஆண்டில் இக்கழகத்தின்மூலம் அனைத்து திட்டங்களிலும் மொத்தம் 8,785 பயனாளிகளுக்கு ரூ.5,528.06 இலட்சம் கடனாக வழங்கப்பட்டுள்ளது.

21. தமிழ்நாடு மொழிவழி சிறுபான்மையினர் சமூக மற்றும் பொருளாதார மேம்பாட்டுக் கழகம் (டால்மெட்கோ)

மொழிவழி சிறுபான்மையினர் பல்வேறு திட்டங்களில் பயனடையவும் தங்கள் நலனை வளர்த்தெடுத்து சமூக மற்றும் பொருளாதார முன்னேற்றம் அடையவும் ஏதுவாக தமிழ்நாடு மொழிவழி சிறுபான்மையினர் சமூக மற்றும் பொருளாதார மேம்பாட்டுக் கழகம் (டால்மெட்கோ) அரசால் நிறுவப்பட்டது. இந்நிறுவனத்தின் அங்கீகரிக்கப்பட்ட பங்குதொகை (Authorised Capital) ரூ.900 இலட்சம் ஆகும்.

தமிழ்நாடு மாநில சிறுபான்மையினர் ஆணைய சட்டம் 2010, பிரிவு-2 (d)-ன்கீழ் தமிழ்நாட்டை பூர்வீகமாகக் கொண்டு தெலுங்கு, உருது, கன்னடம், மலையாளம், சௌராஸ்டிரம் மற்றும் மராத்திய ஆகிய மொழிகளை தாய்மொழியாகக் கொண்டவர்களை மொழிவழி சிறுபான்மையினர் என தமிழ்நாடு அரசால் அறிவிக்கை செய்யப்பட்டுள்ளது.

இக்கழகத்திற்கு செலுத்தப்பட்ட பங்கு மூலதனமாக ரூ.500 இலட்சமும், விதைத் தொகையாக ரூ.1,000 இலட்சமும் சம்பளம் மற்றும் இதர நிர்வாகச் செலவுகளுக்காக ரூ.109.20 இலட்சமும் ஆக மொத்தம் ரூ.1,609.20 இலட்சம் நிதியினை அனுமதித்து அரசாணை வெளியிடப்பட்டுள்ளது.

22. தமிழ்நாடு வக்ஃப் வாரியம்

வக்ஃப் சொத்துக்களை சரியான முறையில் பராமரிப்பதற்காகவும், வக்ஃப் தொடர்பான அலுவல்களை நிருவகிப்பதற்காகவும் வக்ஃப் சட்டம் 1954-ன்படி, தமிழ்நாடு வக்ஃப் வாரியம் 18-1-1958 இல் அமைக்கப்பட்டது. 1995 ஆம் ஆண்டு வக்ஃப் சட்டத்தின்படி (மைய அரசு சட்டம் 43/1995), 5 ஆண்டுகளுக்கு ஒருமுறை வாரியம் திருத்தியமைக்கப்படுகிறது. தற்போது வாரியம் 9 உறுப்பினர்களுடன் செயல்பட்டு வருகிறது. திரு எம். அப்துல் ரஹ்மான் அவர்கள் இவ்வாரியத்தின் தலைவராக, வாரிய உறுப்பினர்களால் 22-7-2021 அன்று தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார். தமிழ்நாடு வக்ஃப் வாரியம் சென்னையைத் தலைமை

2023 ஏப்ரல் 13]

அலுவலகமாகக் கொண்டு 11 மண்டல அலுவலகங்களுடன் செயல்பட்டு வருகிறது.

22.1 குறிக்கோள் மற்றும் பணிகள்

வக்ஃப் சட்டம் 1995 இன்படி வக்ஃப் சொத்துக்களை பாதுகாத்து அபிவிருத்தி செய்வதில் பங்காற்றுதல் மற்றும் வக்ஃப் நிறுவனங்களுடன் நெருக்கமாக செயல்பட்டு அவைகளின் செயல்பாட்டினை மேம்படுத்துதல் ஆகியன வாரியத்தின் முக்கிய செயல்பாடுகளாகும்.

1. ஒவ்வொரு வக்ஃபின் தோற்றம், வருவாய், நோக்கம் பயனாளிகள் சம்பந்தப்பட்ட தகவல்கள் அடங்கிய பதிவு (ஆவணங்கள்) பேணுதல்.
2. வக்ஃப் சொத்துக்களும் அதன் வருமானமும் எந்த நோக்கத்திற்காக வக்ஃப் உருவாக்கப்பட்டதோ அந்த நோக்கத்திற்காக செயல்படுத்தப்படுகிறதா என்று உறுதி செய்தல்.
3. வக்ஃப் நிர்வாகத்திற்காக அவ்வப்பொழுது அரசு வழங்கும் ஆணைகளை பின்பற்றுதல் மற்றும் கட்டளையிடுதல்.
4. வக்ஃப்களின் நிர்வாகத்திற்காக புதிய திட்டம் தீட்டிக்கொடுத்தல்.
5. வக்ஃப்களின் கணக்கை தணிக்கை செய்வதற்கு ஏற்பாடு செய்தல் மற்றும் முத்தவல்லிகள் சமர்ப்பிக்கும் பட்ஜெட்டை ஆய்வு செய்தல்.
6. வக்ஃப் சட்டப்படி முத்தவல்லிகளை நியமனம் செய்தல் மற்றும் நீக்குதல்.
7. இழந்த வக்ஃப் சொத்துக்களை மீட்க நடவடிக்கை எடுத்தல்.
8. வக்ஃப் மற்றும் வக்ஃப் சொத்துக்கள் சம்பந்தப்பட்ட வழக்குகளை நடத்துதல்.
9. வக்ஃப் நிதியை நிர்மானித்தல்.
10. வக்ஃப் சொத்துக்கள் சம்பந்தமாக வாரியத்திற்கு அவ்வப்போது தேவைப்படும் தகவல்களை முத்தவல்லிகளிடம் கேட்டல்.

[2023 ஏப்ரல் 13

11. வக்ஃப் சொத்துக்கள், கணக்குகள் ரிகார்டுகள், வக்ஃப் நாமாக்கள் மற்றும் பத்திரங்களை ஆய்வு செய்தல்.

12. வக்ஃப் சொத்தின் தன்மை பரப்பளவு ஆகியவற்றை ஆராய்ந்து முடிவு செய்தல் மற்றும் தேவைப்படும் போது வக்ஃப் சொத்துக்களை அளவை செய்தல்.

13. வக்ஃப்களைக் கட்டுப்படுத்துதல், பராமரித்தல் மற்றும் நிர்வாகம் செய்தல் போன்றவற்றிற்கு தேவைப்படும் எல்லா நடவடிக்கைகளிலும் ஈடுபடுதல்.

இவை நீங்கலாக, அரசு வழங்கும் மானியத் தொகைமூலம் நலிவுற்ற வக்ஃப் நிறுவனங்களை பெரிய அளவிலான பழுதுபார்த்தல் மற்றும் புதுப்பித்தல் பணிகளை மேற்கொள்ள பள்ளிவாசல் மற்றும் தர்காக்களுக்கு நிதி வழங்குதல், உலமாக்கள் ஓய்வூதியம் வழங்குதல் மற்றும் விவாகரத்தான முஸ்லிம் பெண்களுக்கு நீதிமன்ற உத்தரவுகளின்படி வாழ்க்கைச் செலவுத் தொகை வழங்குதல் போன்ற பணிகளில் வாரியம் ஈடுபட்டு வருகிறது. வாரியத்தின் மேற்பார்வையில் மதுரையில் எம்.எஸ்.எஸ்.வக்ஃப் வாரிய கல்லூரி இயங்கி வருகிறது.

22.2 வக்ஃப் பதிவு

தமிழ்நாடு வக்ஃப் வாரிய ஆளுகையின்கீழ் 6,628 வக்ஃப்கள் உள்ளன. அதில் வக்ஃப் வாரியத்தில் பதிவு செய்யப்பட்டவை 3,215 வக்ஃப்கள் ஆகும். இவற்றில், 2022-2023-ஆம் ஆண்டில் 213 வக்ஃப்கள் பதிவு செய்யப்பட்டன. 3,413 வக்ஃப்கள் பதிவு செய்யப்படாதவை ஆகும்.

22.3 வக்ஃப் சொத்துக்களை நில அளவை செய்தல்

வக்ஃப் சட்டம் 1995, பிரிவு 4-ன்படி வக்ஃப் சொத்துக்களை அளவை செய்வதற்காக நில அளவை ஆணையரை வக்ஃப் நில அளவை ஆணையராக அரசு நியமனம் செய்தது. மாவட்ட வருவாய் அதிகாரிகள் கூடுதல் வக்ஃப் நில அளவை ஆணையராக நியமனம் செய்யப்பட்டனர். வட்டாட்சியர்கள் உதவி வக்ஃப் ஆணையராக நியமனம் செய்யப்பட்டார்கள்.

அரசு உத்தரவுப்படி மாவட்ட வாரியாக வக்ஃப் சொத்துக்களின் விவரங்கள், 1954 ஆம் ஆண்டு வக்ஃப் சட்டப்படி தயாரிக்கப்பட்ட வாரிய பதிவேடுகளில் இருந்து எடுக்கப்பட்டு

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

2023 ஏப்ரல் 13]

தமிழ்நாட்டின் அனைத்து மாவட்ட வருவாய் அலுவலர்களுக்கும், சென்னை மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளருக்கும் ஏற்கனவே ஆய்வு அறிக்கை வழங்கப்பட்டுள்ளது. வாரியம் அளித்த வக்ஃபு சொத்துக்களின் விவரங்களின்படி அளவை பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

22.4 வக்ஃப் சொத்துக்களின் பாதுகாப்பு

தமிழ்நாட்டில் 6,628 வக்ஃபு நிறுவனங்கள் உள்ளன. இவ்வக்ஃபு நிறுவனங்களுக்கு 63,322 சொத்துக்கள் உள்ளன. இவற்றில் சில சொத்துக்கள் ஆக்கிரமிப்பிலும் சட்ட விரோதமாக பரிவர்த்தனைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன. மேலும் சில வக்ஃபு சொத்துக்கள் வக்ஃபு நிறுவனங்களின்கீழ் இருந்தாலும் அத்தகைய சொத்துக்களுக்கான பட்டா மூன்றாம் தரப்பினரின் பெயரிலும் உள்ளது.

வக்ஃபு சொத்துக்களை சட்ட விரோதமாக பரிவர்த்தனை மேற்கொள்ளப்படாமல் பாதுகாக்கவும், இவற்றையெல்லாம் சம்பந்தப்பட்ட வக்ஃபு நிறுவனங்களின் பெயரில் சட்டபூர்வமாக மீட்டெடுக்கவும், தமிழ்நாடு வக்ஃபு வாரியம், வக்ஃபு வாரிய தரவுத்தளத்தை தமிழ் நிலம் மென்பொருளில் பதிவேற்றம் செய்து தற்போதைய வருவாய் பதிவேடுகளுடன் பொருத்தவும் மற்றும் அதனை சரி செய்யவும் நடவடிக்கை மேற்கொண்டு வருகிறது. இவ்வரசு தேவையான உதவிகளை அளித்து வக்ஃபு சொத்துக்களை பாதுகாப்பதற்கு உறுதுணையாக உள்ளது.

22.5 வக்ஃப் தீர்ப்பாயம் அமைத்தல்

வக்ஃபு சட்டம் 1995 இன் பிரிவு 83 இன் படி, வக்ஃபு அல்லது வக்ஃபு சொத்துக்கள் தொடர்பாக எழும் பிரச்சனைகளுக்கு தீர்வு காண்பதற்காக, தமிழ்நாடு அரசு 2018 ஆம் ஆண்டு சென்னையில் தமிழ்நாடு வக்ஃபு தீர்ப்பாயத்தை அமைத்தது. இத்தீர்ப்பாயம், மாவட்ட நீதிபதியை தலைவராகவும், கூடுதல் மாவட்ட குற்றவியல் நடுவருக்கு இணையான மாநில குடிமை பணி அலுவலர் நிலையில் ஓர் உறுப்பினரையும், முஸ்லீம் சட்டம் மற்றும் நீதித்துறை பற்றிய அறிவைக் கொண்ட ஒருவரை மற்றொரு உறுப்பினராகவும் கொண்டு செயல்பட்டு வருகிறது. தமிழ்நாடு வக்ஃபு தீர்ப்பாயத்தின் வழக்குகள் விவரம்:—

31.03.2022 வரை நிலுவையில் இருந்த வழக்குகள்	2022-2023 ஆம் ஆண்டில் பதிவு செய்யப்பட்ட வழக்குகள்	மொத்தம்	2022-2023ல் தீர்ப்பளிக்கப் பட்டவை	தற்போது நிலுவையிலுள்ள வழக்குகள்
2,300	260	2,560	428	2,132

22.6 தமிழ்நாடு வக்ஃப் வாரியத்தின் நேரடி நிர்வாகத்தின்கீழ் இயங்கும் வக்ஃப்கள்

வக்ஃப் சட்டம், 1995 இன் பிரிவு 65 இன் படி நிர்வாக காரணங்களுக்காக, சில வக்ஃப்கள் தமிழ்நாடு வக்ஃப் வாரியத்தின் நேரடி நிர்வாகத்தின்கீழ் எடுக்கப்பட்டு, நேரடி நிர்வாகத்தின்கீழ் வக்ஃப்களை நிர்வகிக்க நிர்வாக அலுவலர்கள் நியமிக்கப்படுகிறார்கள். 2022-2023 ஆம் ஆண்டு துவக்கத்தில் 55 வக்ஃப் நிறுவனங்கள் தமிழ்நாடு வக்ஃப் வாரியத்தின் நேரடி நிர்வாகத்தின்கீழ் இருந்தன. இவற்றில் வாரிய உத்தரவின்படி 2022-2023 ஆம் ஆண்டில் 14 வக்ஃப் நிறுவனங்களின் நேரடி நிர்வாகத்தினை விலக்கி தேர்வுற்ற மற்றும் நியமிக்கப்பட்ட நிர்வாகிகளுக்கு நிர்வாகம் ஒப்படைக்கப்பட்டது. மேலும், 15 வக்ஃப் நிறுவனங்கள் வாரியத்தின் கட்டுப்பாட்டில் கொண்டு வரப்பட்டுள்ளன. தற்போது 56 வக்ஃப் நிறுவனங்கள் தமிழ்நாடு வக்ஃப் வாரியத்தின் நேரடி நிர்வாகத்தின்கீழ் உள்ளன.

22.7 தமிழ்நாடு வக்ஃப் வாரியத்தின் வக்ஃப் சொத்துக்களை ஆக்கிரமிப்பிலிருந்து மீட்டெடுக்கும் நடவடிக்கைகள்

வக்ஃப் சட்டம், 1995 பிரிவு 54 மற்றும் தமிழ்நாடு பொது சொத்துக்கள் (அங்கீகரிக்கப்படாத ஆக்கிரமிப்பாளர்களை வெளியேற்றுதல்) சட்டம், 1975 ஆகியவற்றின்கீழ் வக்ஃப் சொத்துக்களை மீட்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. கடந்த ஆண்டில் ரூ.52 கோடி மதிப்பிலான வக்ஃப் சொத்துக்கள் ஆக்கிரமிப்பாளர்களிடம் இருந்து மீட்கப்பட்டு சம்பந்தப்பட்ட வக்ஃப் நிறுவனங்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

2023 ஏப்ரல் 13]

22.8 தமிழ்நாடு வக்ஃப் வாரியத்திற்கு அளிக்கப்படும் நிர்வாக மானியம்

தமிழ்நாடு வக்ஃப் வாரியத்திற்கு ஒவ்வொரு ஆண்டும் ரூ.2.5 கோடி மாநில அரசு நிர்வாக மானியமாக வழங்குகிறது. தமிழ்நாடு வக்ஃப் வாரியம் 2022-2023 ஆம் ஆண்டு முதல், வசூலித்த சகாயத் தொகை அடிப்படையில் 5% ஊக்கத் தொகையை கூடுதல் மானியமாக வழங்குவதற்கான ஆணைகள் வெளியிடப்பட்டன.

22.9 தமிழ்நாடு வக்ஃப் வாரிய சரக அலுவலங்கள் கட்ட மானியம்

தமிழ்நாடு வக்ஃப் வாரியத்தின் பூந்தமல்லி, வேலூர், கடலூர், திருச்சி, தஞ்சாவூர், மதுரை, இராமநாதபுரம் மற்றும் சேலம் ஆகிய 8 சரக அலுவலகங்களுக்கு தலா ரூ.16 இலட்சம் மதிப்பீட்டில் சொந்த கட்டடம் கட்டுமானம் மேற்கொள்ளப்படும் என அறிவிப்பு வெளியிடப்பட்டது. இதன்படி, முதற்கட்டமாக பூந்தமல்லி, வேலூர், இராமநாதபுரம் மற்றும் கடலூர் ஆகிய நான்கு சரக அலுவலகங்களின் கட்டுமான பணிகள் மேற்கொள்ள ரூ.64 இலட்சம் வழங்கப்பட்டது. இவற்றில் கடலூர் சரக அலுவலக கட்டுமானப் பணிகள் முடிக்கப்பட்டுள்ளது, இதர பணிகள் நடைபெற்று வருகின்றன.

22.10 மணவிலக்கு பெற்ற முஸ்லிம் பெண்களுக்கு பராமரிப்பு தொகை வழங்குதல்

வக்ஃப் சட்டம் 1995 பிரிவு 77(4)(g)-ன்படியும் மற்றும் முஸ்லிம் பெண்கள் (மணவிலக்கில் உரிமை பாதுகாப்பு) சட்டம் 1986 பிரிவு 4 (2)ன்படியும், நீதிமன்ற தீர்ப்பின் அடிப்படையில் மணவிலக்கு பெற்ற முஸ்லிம் பெண்களுக்கு தமிழ்நாடு வக்ஃப் வாரியத்தால் பராமரிப்பு செலவுத் தொகை வழங்கப்பட்டு வருகிறது.

22.11 தமிழ்நாடு வக்ஃப் வாரியத்தால் அரசின் உதவியுடன் மேற்கொள்ளப்படும் திட்டங்கள்

22.11.1 பெரிய அளவிலான சீரமைப்பு மற்றும் பழுதுபார்ப்பு மானியம்

மசூதிகள், தர்காக்கள் மற்றும் இதர வக்ஃப் நிறுவனங்களில் பெரிய அளவிலான பழுதுபார்ப்பதற்கும் மற்றும்

புனரமைப்பதற்கும் அரசு மானியம் வழங்குகிறது. இத்திட்டம் 1999-ல் அறிமுகப்படுத்தப்பட்டது. இம்மானியம் 2021-2022 ஆம் ஆண்டில் ரூ.6 கோடியாக உயர்த்தி வழங்கப்பட்டு 77 வக்ஃப் நிறுவனங்கள் பயனடைந்துள்ளன. மேலும், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அறிவிப்பின்படி, 2023—2024 ஆம் ஆண்டில் பெரும் பழுதுபார்ப்பு மற்றும் புனரமைப்பு மானியம் குறிப்பிடத்தக்க அளவில் ரூ.10 கோடியாக உயர்த்தப்பட்டுள்ளது.

22.11.2 தொகுப்பு நிதி – வக்ஃப் நிறுவனங்களில் பழுதுபார்ப்பு மற்றும் சீரமைப்பதற்கு

மசூதிகள் மற்றும் தர்காக்கள் போன்ற வக்ஃப் நிறுவனங்களில் பெரிய பழுது மற்றும் சீரமைப்பு பணிகளை மேற்கொள்வதற்காக ரூ.3 கோடியில் தொகுப்பு நிதி (Corpus Fund) உருவாக்கப்பட்டுள்ளது. இந்த நிதியில் திரட்டப்படும் வட்டியானது தேவைப்படும் மற்றும் தகுதியான வக்ஃப் நிறுவனங்களுக்கு தமிழ்நாடு வக்ஃப் வாரியத்தால் வழங்கப்படும்.

22.11.3 உலமா ஓய்வூதியத் திட்டம்

உலமா ஓய்வூதியத் திட்டம் 1981 ஆம் ஆண்டு முதல் சிறப்பாகச் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின்கீழ் ஏழை பேஷ் இமாம்கள், மோதினார்கள், அரபு ஆசிரியர்கள், தமிழ்நாடு வக்ஃப் நிறுவனங்களில் பணியாற்றி ஓய்வு பெற்ற முஜாவர்களுக்கு ஓய்வூதியம் வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின்கீழ் ஓய்வூதியம் பெற, 60 வயது நிரம்பிய மற்றும் 20 ஆண்டுகள் பணி முடித்தவர்களுக்கும், மாற்றுத் திறனாளியாக இருப்பின் 50 வயது நிரம்பிய மற்றும் 10 ஆண்டுகள் பணி முடித்தவர்களும் தகுதியுடையவர்கள் ஆவர். மாற்றுத் திறனாளி உலமாக்களுக்கான வயதினை 50-லிருந்து 40 ஆக 15.06.2022 முதல் தளர்த்தி ஆணையிடப்பட்டுள்ளது. உலமா ஓய்வூதியம் அவ்வப்போது உயர்த்தப்பட்டு தற்போது உலமா ஓய்வூதியம் மாதம் ரூ.3,000 வீதம் வழங்கப்படுகிறது. மாண்புமிகு சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சரின் தலைமையில் உள்ள உலமா அனுமதிக் குழு உலமா ஓய்வூதியம் வழங்குவதற்கான அனுமதி வழங்கும் அதிகார அமைப்பாகும். தற்போது, 1,399 உலமாக்களுக்கு ஓய்வூதியம் வழங்கப்பட்டு வருகிறது. இதில், கடந்த இரண்டாண்டுகளில் மட்டும் இவ்வனுமதிக் குழுவால் 153 உலமாக்களுக்கு புதிதாக ஓய்வூதியங்கள் ஒப்பளிக்கப்பட்டுள்ளது.

2023 ஏப்ரல் 13]

2023-2024 ஆம் ஆண்டிற்கு இத்திட்டத்திற்காக ரூ.540 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

22.11.4 உலமா குடும்ப ஓய்வூதியத் திட்டம்

உலமா ஓய்வூதியதாரர் இறப்பின், அவரது வாரிசுதாருக்கு உலமா ஓய்வூதியதாரர் கடைசியாக பெற்ற ஓய்வூதியத்தில் 50% தொகையினை உலமா குடும்ப ஓய்வூதியமாக அளிக்கும் வகையில் புதிய திட்டம் செயல்படுத்தப்படுகிறது. தற்போது வரை 11 உலமா குடும்ப ஓய்வூதிய விண்ணப்பங்கள் பெறப்பட்டதில் 3 நபர்களுக்கு உலமா குடும்ப ஓய்வூதியம் வழங்கிட ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

22.11.5 காஜிகளுக்கு மதிப்பூதியம் வழங்குதல்

தமிழ்நாட்டில் பணிபுரியும் மாவட்ட காஜிகளுக்கு மாதம் ரூ.20,000 மதிப்பூதியம் வழங்க தமிழ்நாடு அரசு ஆணையிடப்பட்டுள்ளது. 2022-2023 ஆம் ஆண்டிற்கு 32 காஜிகளுக்கு அரசால் ரூ.76.80 இலட்சம் வழங்கப்பட்டது.

2023-2024 ஆம் ஆண்டிற்கு இத்திட்டத்திற்காக ரூ.76.80 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

22.12 தமிழ்நாடு வக்ஃப் வாரியத்தால் மத்திய வக்ஃப் கழக உதவியுடன் மேற்கொள்ளப்படும் திட்டங்கள்

22.12.1 கௌமி வக்ஃப் போர்டு தரக்கியத்தி திட்டம்

மாநில வக்ஃப் வாரியங்களின் செயல்பாடுகளை வலிமைப்படுத்தும் விதமாக வக்ஃப் வாரிய பணிகளில் திறன் மேம்பாட்டினை கொண்டு வர புதுடெல்லி, மத்திய வக்ஃப் கழகத்தால் “கௌமி வக்ஃப் போர்டு தரக்கியத்தி திட்டம்” தமிழ்நாடு வக்ஃப் வாரியத்தின் வாயிலாக செயல்படுத்தப்பட்டு வருகிறது, இத்திட்டத்தின்கீழ் கணினி உதவி புரோகிராமர், சட்ட அலுவலர்கள், கணக்காளர், நில அளவையாளர்கள், சரக வக்ஃப் அலுவலர் ஆகியோர்களை நியமிக்க வேண்டியும், வக்ஃப் சொத்துக்களை GIS *முறையில் கண்டறியும் பணிகளை மேற்கொள்ளவும், மையப்படுத்தப்பட்ட கணினி வசதிகளை ஏற்படுத்தவும், வக்ஃப் முத்தவல்லிகளின் பணிகள் மற்றும் மத்திய அரசால் வழங்கப்படும்*

திட்டங்களின் வாயிலாக வக்ஃப் சொத்துக்களில் அபிவிருத்தி மேற்கொண்டு வக்ஃபின் வருவாய் பெருக்கும் வழிவகைகளுக்குண்டான பயிற்சி முகாம்களை முத்தவல்லிகளுக்கு நடத்திடவும் மத்திய வக்ஃப் கழகம் உதவி வருகிறது. இதன்படி, மத்திய வக்ஃப் கழகம் 2019-2020 ஆம் ஆண்டிற்கு ரூ.1.02 கோடி மற்றும் 2020-2021 ஆம் ஆண்டிற்கு ரூ.86 இலட்சம் மற்றும் 2021-2022 ஆண்டிற்கு ரூ.83.81 இலட்சம் மானியமாக வழங்கி இத்திட்டம் தொடர்ந்து செயல்பட்டு வருகிறது. இத்திட்டத்தின்கீழ் பணியாளர்கள் நியமனம் செய்யப்பட்டுள்ளனர் மற்றும் வக்ஃப் சொத்துக்களின் ஆவணங்களை 100% கணினிமயமாக்கும் பணி பூர்த்தியடைந்துள்ளது. மேலும் 15,794 வக்ஃப் சொத்துக்கள் GPS/GIS Mapping செய்யப்பட்டு 15,794 வக்ஃப் சொத்துக்களும் தற்பொழுது மத்திய வக்ஃப் கழக இணையதளம் www.wamsi.nic.in—இல் பார்வையிட வழிவகை செய்யப்பட்டுள்ளது.

22.12.2 வக்ஃப் சொத்துக்களை ட்ரோன்களை (Drone) பயன்படுத்தி மேப்பிங் செய்தல்

தமிழ்நாட்டில் ட்ரோனைப் பயன்படுத்தி வக்ஃப் சொத்துக்களை ஜி.பி.எஸ்/ஜி.ஐ.எஸ். மேப்பிங் செய்யும் பணி துவங்கப்பட்டுள்ளது.

மத்திய வக்ஃப் கழகம், புதுடெல்லி, தமிழ்நாடு வக்ஃப் வாரியம் மற்றும் இன்ஸ்டிடியூட் ஆஃப் ரிமோட் சென்சிங், அண்ணா பல்கலைக்கழகம், சென்னை ஆகியவை 20,000 வக்ஃப் சொத்துக்களின் GPS/GIS mapping பணிகளை ரூ.44 இலட்சம் செலவில் மேற்கொள்ள மும்முனை புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் 05.01.2022-ல் கையெழுத்திடப்பட்டுள்ளன. மேலும், மத்திய வக்ஃப் கழகம், புதுடெல்லி, தமிழ்நாடு வக்ஃப் வாரியம் மற்றும் சென்னைப் பல்கலைக் கழகம் புவியியல் துறை ஆகியவற்றுடன், 25,000 வக்ஃப் சொத்துக்களின் GPS/GIS Mapping பணிகளுக்காக புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் 04.03.2022—ல் செய்யப்பட்டுள்ளன.

22.12.3 சஹாரி வக்ஃப் சம்பத்தி விகாஸ் யோஜனா

வக்ஃப் சொத்துக்களை அபிவிருத்தி செய்வதற்காக மத்திய வக்ஃப் கழகத்தால் கடன் வழங்கப்படுகிறது.

- அபிவிருத்தி மேற்கொள்ளும் இடமானது எவ்வித வில்லங்கமும் இல்லாதிருத்தல் வேண்டும்.

2023 ஏப்ரல் 13]

- *இத்திட்டத்தின்கீழ் அதிகபட்சமாக ரூ.2 கோடி அல்லது திட்ட மதிப்பீட்டில் 75% எது குறைவானதோ அத்தொகை கடனாக வழங்கப்படுகிறது.*

- *இத்திட்டத்திற்காக வழங்கப்படும் கடன் தொகையில் 8% நிர்வாக செயலாக்க கட்டணமாக மத்திய வக்ஃப் கழகத்தால் வசூலிக்கப்படும்.*

மத்திய வக்ஃப் கழகத்தின் இணைய தளம் www.centralwaqfcouncil.gov.in-*ல் விவரங்களை அறிந்து கொள்ள தமிழ்நாட்டிலுள்ள அனைத்து முத்தவல்லிகளுக்கும் வக்ஃப் சரக அலுவலர்கள் மூலமாக அறிவுறுத்தப்பட்டுள்ளது.*

இத்திட்டத்தின்கீழ், தமிழ்நாட்டில் உள்ள 21 வக்ஃப் நிறுவனங்களுக்கு ரூ.3.06 கோடி கடனுதவி வழங்கப்பட்டுள்ளது.

22.12.4 தேசிய வக்ஃப் மேம்பாட்டு நிறுவனம் (NAWADCO)

*வக்ஃப் சொத்துக்களை அபிவிருத்தி செய்ய தேசிய சிறுபான்மை நல அமைச்சகத்தால் மத்திய வக்ஃப் கழகத்துடன் இணைந்து தேசிய வக்ஃப் மேம்பாட்டு கழகம் அமைக்கப்பட்டுள்ளது. அதன்படி, தகுதியான வக்ஃப் சொத்துக்களை வணிக ரீதியாக மேம்படுத்துவதற்கு தேசிய வக்ஃப் மேம்பாட்டு கழகம் (*NAWADCO*) நிதி உதவி வழங்கி வருகிறது. இதன்மூலம் பெறப்படும் வருவாயினை வக்ஃப் நிறுவனத்துடன் மேற்கொள்ளப்படும் புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் விகித்தாச்சார அடிப்படையில் தேசிய வக்ஃப் மேம்பாட்டு கழகம் மற்றும் தொடர்புடைய வக்ஃப் நிறுவனம் ஆகியன குறிப்பிட்ட கால அளவு வரை பிரித்து கொள்ள வழிவகை செய்யப்பட்டுள்ளது.*

23. தமிழ்நாடு மாநில ஹஜ் குழு

சவூதி அரேபியாவிலுள்ள புனித மக்கா நகருக்கு ஹஜ் பயணம் மேற்கொள்பவரின் பயண ஏற்பாடுகள் மற்றும் தங்குமிட ஏற்பாடுகளை நல்லமுறையில் மேற்கொள்ள 2002 ஆம் ஆண்டு ஒன்றிய அரசால் ஹஜ் குழு சட்டம் (மைய அரசு சட்டம் 35/2002) இயற்றப்பட்டது. இச்சட்டத்தின்படி, தமிழ்நாடு மாநில ஹஜ் குழு, அரசால், மூன்று ஆண்டுகளுக்கு ஒருமுறை மறுசீரமைக்கப்பட்டு வருகிறது. தற்போதுள்ள குழு, 2020 ஆம் ஆண்டு 12 உறுப்பினர்களை கொண்டு அரசால் திருத்தியமைக்கப்பட்டது.

[*2023 ஏப்ரல் 13*

23.1 மாநில ஹஜ் குழுவின் பணிகள்

1. *தற்போதுள்ள ஒன்றிய சிறுபான்மை விவகாரத் துறை அமைச்சகத்தின் அறிவுறுத்தலின்படி, இந்திய ஹஜ் குழுவானது 100% நிகழ்நிலை (online)மூலம் ஹஜ் விண்ணப்பங்களை விருப்பமுள்ள பயணிகளிடமிருந்து பெறுதல்.*

2. *ஒதுக்கீட்டிற்கு மேல் விண்ணப்பங்களின் எண்ணிக்கை அதிகமாக பெறப்பட்டால், மனுதாரர்களை கணினி மென்பொருளைப் பயன்படுத்தி குலுக்கல் முறையில் தேர்வு செய்தல்.*

3. *இந்திய ஹஜ் குழு, மும்பைக்கு செலுத்தவேண்டிய பயணக் கட்டணங்கள் மற்றும் இதர கட்டணங்கள் குறித்து உரிய அறிவுரைகளை விண்ணப்பதாரர்களுக்கு அளித்தல்.*

4. *சிறந்த தங்குமிடங்களை தேர்ந்தெடுப்பதற்காக இந்திய உதவித் தூதரகத்திற்கு உதவிடும் பொருட்டு, பிரதிநிதிகளை கட்டடத் தேர்வுக் குழுவில் அனுப்புதல்.*

5. *தமிழ்நாட்டைச் சேர்ந்த ஹஜ் பயணிகளின் நலன்களைக் கவனிக்கும் பொருட்டு, ஒவ்வொரு வருடமும் ஹஜ் தொண்டர்களை சவூதி அரேபியாவிற்கு அனுப்புதல்.*

6. *ஹஜ் பயணத்தை மேற்கொள்ளவிருக்கும் புனிதப் பயணிகளுக்கு தேவைப்பட்டால் (ஹஜ்) கடவுச்சீட்டை பெறுவதற்கு மண்டல கடவுச் சீட்டு அலுவலகங்களுடன் ஒன்றிணைந்து பணிபுரிதல்.*

7. *தமிழ் மொழியில் ஹஜ்ஜும் உம்ராவும் என்ற கையேட்டியினை அச்சிட்டு ஹஜ் பயணிகளுக்கு இலவசமாக வழங்குதல்.*

8. *ஒன்றிய அரசு, மாநில அரசு, இந்திய ஹஜ் குழு, மும்பை முதலான பல்வேறு நிறுவனங்களுடனும் மற்றும் பிற நிறுவனங்களான சவூதி அரேபியன் ஏர்லைன்ஸ், ஏர் இந்தியா, இந்திய விமானங்களின் ஆணைக்குழு, சுங்கம், குடியேற்றம், விமான போக்குவரத்து பாதுகாப்பு நிறுவனம் ஆகியவற்றுடனும் மற்றும் இதர தொண்டு நிறுவனங்களின் பணிகளை ஒருங்கிணைத்து ஹஜ் விமான ஏற்பாடுகளை சீரிய முறையில், சிக்கலின்றி வெற்றிகரமாக நடைபெறுவதற்கு வேண்டிய ஏற்பாடுகளை செய்தல்.*

2023 ஏப்ரல் 13]

9. சென்னை—ஜித்தா—சென்னை நேரடி ஹஜ் விமானங்களை இயக்குவதற்குத் தேவைப்படும் உதவி ஏற்பாடுகளான தங்கும் வசதி மற்றும் தங்குமிடத்திலிருந்து விமான நிலையம் மற்றும் திரும்பி வருவதற்கு போக்குவரத்து வசதி முதலியவற்றை அளித்தல்.

10. புனிதப் பயணிகள் பயனடையும் பொருட்டு, தடுப்பூசி மற்றும் புத்தறிவுப் பயிற்சி முகாம்கள் பல்வேறு மாவட்ட/ வட்ட தலைமை இடங்களில் நடத்துதல்.

11. ஹஜ் புனிதப் பயணம் தொடர்பான இதர இடைநிகழ்வு பணிகள்.

23.2 ஹஜ் புனிதப் பயணத்திற்கான ஏற்பாடுகள்

ஒன்றிய அரசின் சிறுபான்மையினர் விவகாரத் துறை அமைச்சகம் / இந்திய ஹஜ் குழுவின் வழிமுறைகளின்படி, விண்ணப்பங்களுக்கான அழைப்பு, இந்திய ஹஜ் குழுவிற்கு செலுத்தவேண்டிய கட்டணங்கள் குறித்து அறிவுரைகள் அளித்தல், பயண ஆவணங்களை வழங்குதல், சென்னையில் தற்காலிக தங்குமிட வசதி அளித்தல் முதலிய பல்வேறு பணிகளை தமிழ்நாடு ஹஜ் சர்வீஸ் சொசைட்டி மற்றும் இதர தொண்டு நிறுவனங்களின் உதவியுடன் இக்குழு மேற்கொள்கிறது.

மேலும் விமான இயக்கம், தங்குமிடங்களில் சோதனைக் கூடங்கள், குடியேற்றம் மற்றும் சுங்கத் தீர்வு, தங்குமிடங்கள் மற்றும் விமான தளம் ஆகியவற்றில் பாதுகாப்பு, விமான தளத்திற்குச் செல்ல பயணிகளுக்கு போக்குவரத்து வசதி முதலான இதர பணிகளையும் இக்குழு ஒருங்கிணைத்து செயலாற்றுகிறது.

இந்திய ஹஜ் குழுவின் முழுமையான அறிவுரைகளின்படி, மாநில ஹஜ் குழு செயல்படுகிறது. பயணிகளைத் தேர்ந்தெடுத்தல், பயணிகளுக்கான பயண அட்டவணையை இறுதி செய்தல், தங்குமிடங்கள் ஒதுக்குதல் முதலிய நேர்வுகளில் வெளிப்படைத் தன்மையுடன் இக்குழு செயல்படுகிறது.

23.3 மீண்டும் சென்னையை புறப்பாட்டுத் தளமாக அறிவித்தல்

ஹஜ் 2022 ஆம் ஆண்டு கொரோனா பெருந்தொற்று காரணமாக, ஒன்றிய அரசு இந்தியாவிலுள்ள ஹஜ் விமான புறப்பாட்டு தளங்களை 20-லிருந்து 10 ஆக குறைத்தது. அதன்

விளைவாக, தமிழ்நாடு ஹஜ் பயணிகளுக்கு “கொச்சி” புறப்பாட்டுத் தளமாக நியமிக்கப்பட்டது. 2022 ஆம் ஆண்டில், 1,672 ஹஜ் பயணிகள் கொச்சி பன்னாட்டு விமான நிலையத்திலிருந்து ஹஜ் பயணம் மேற்கொண்டார்கள். கொச்சி செல்வதால் ஏற்படும் பயண சிரமத்தை கருத்திற்கொண்டு, சென்னையை மீண்டும் புறப்பாட்டுத் தளமாக அறிவிக்குமாறு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், மாண்புமிகு பாரதப் பிரதமர் மற்றும் மாண்புமிகு ஒன்றிய சிறுபான்மை விவகாரத் துறை அமைச்சர் ஆகியோரை கேட்டுக் கொண்டார்கள். இதன் பயனாக, தற்போது தமிழ்நாடு ஹஜ் பயணிகளுக்கு சென்னையை ஒரு புறப்பாட்டுத் தளமாக ஒன்றிய சிறுபான்மை விவகாரத் துறை அறிவித்துள்ளது.

23.4 அரசால் வழங்கப்படும் மானியங்கள்/உதவிகள்

23.4.1 மாநில அரசின் ஹஜ் மானியம்

தமிழ்நாடு மாநில ஹஜ் குழுவின்மூலம் முதல்முறையாக ஹஜ் பயணம் மேற்கொள்ளும் தமிழ்நாடு ஹஜ் பயணிகளுக்கு ஹஜ் மானியம் வழங்கும் திட்டத்தை தமிழ்நாடு அரசு செயல்படுத்தி வருகிறது. 2022 ஆம் ஆண்டில், ஒரு நபருக்கு ரூ.27,628 வீதம் தகுதியுள்ள 1,649 ஹஜ் பயணிகளுக்கு பகிர்ந்தளிப்பதற்காக தமிழ்நாடு மாநில ஹஜ் குழுவிற்கு தமிழ்நாடு அரசு ஹஜ் மானியத் தொகையாக ரூ.4.56 கோடி வழங்கியுள்ளது. இத்தொகையானது ஹஜ் புனித பயணிகளின் வங்கிக் கணக்கில் நேரடியாக செலுத்தப்பட்டது.

2023-2024 ஆம் ஆண்டில் ஹஜ் புனித பயணிகளுக்கு மானியம் வழங்கும் திட்டத்திற்காக ரூ.1,000 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

23.4.2 நிர்வாக மானியம்

தமிழக அரசால் அளிக்கப்படும் நிதி உதவிகளைக் கொண்டு தமிழ்நாடு மாநில ஹஜ் குழு, பணியாளர்களுக்கான நிருவாக செலவினத்தை மேற்கொள்கிறது. பணியாளர்களுக்கு ஊதியம் அளித்தல், சொத்து வரி, மின்சார செலவினம், குடிநீர் மற்றும் வடிகால் வரி முதலிய செலவினங்களை மேற்கொள்ள, தமிழ்நாடு மாநில ஹஜ் குழுவிற்கு, ஒவ்வோர் ஆண்டும் ரூ.50 இலட்சத்தை நிர்வாக மானியமாக தமிழக அரசு வழங்குகிறது. அதன்படி, 2022-2023 ஆம் ஆண்டிற்கு நிர்வாக மானியமாக ரூ.50 இலட்சம்

2023 ஏப்ரல் 13]

ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது. 2023–2024 ஆம் ஆண்டிற்கும், நிர்வாக மானியமாக ரூ.50 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

23.4.3 ஹஜ் தொண்டர்கள் மற்றும் கட்டடத் தேர்வு குழுவில் உறுப்பினர்களை அனுப்புவதற்கு மானியம்

பயணிகளுக்கு சேவையாற்ற ஹஜ் தொண்டர்களை சவூதி அரேபியாவிற்கு அனுப்புவதற்கும், ஹஜ் பயணிகளை தங்க வைக்க கட்டடங்களைத் தேர்வு செய்வதற்கான கட்டடத்தேர்வுக் குழுவில் பிரதிநிதிகளை சவூதி அரேபியாவிற்கு அனுப்புவதற்கான செலவினத்திற்காகவும், அரசு, தமிழ்நாடு மாநில ஹஜ் குழுவிற்கு மானியங்களை அளிக்கிறது. 2022 ஆம் ஆண்டில், 11 ஹஜ் தொண்டர்கள் சவூதி அரேபியாவிற்கு அனுப்பப்பட்டார்கள். 2022–2023 ஆம் ஆண்டிற்கு இத்திட்டத்தின்கீழ் ரூ.21.93 இலட்சம் தமிழ்நாடு மாநில ஹஜ் குழுவிற்கு மானியமாக ஒப்பளிப்பு செய்யப்பட்டது. 2023–2024 ஆம் ஆண்டிற்கு இத்திட்டத்திற்காக ரூ.10.29 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

23.4.4 இதர மானியங்கள்

தமிழ்நாடு மாநில ஹஜ் குழு சீரிய முறையில் செயல்பட தொடரா செலவினங்களில் சில உபகரணங்களை வாங்க, ஒவ்வோர் ஆண்டும் தமிழக அரசு மானியங்களை அளிக்கிறது. அதன்படி, 2022-2023 ஆம் ஆண்டில், ஒரு மடிக்கணினி வாங்குவதற்கு ரூ.90,000 தமிழ்நாடு மாநில ஹஜ் குழுவிற்கு அரசால் ஒப்பளிப்பு செய்யப்பட்டது. மேலும், தமிழ்நாடு மாநில ஹஜ் குழு உறுப்பினர்கள் குழுவின் கூட்டங்களில் கலந்து கொள்ள வருகை புரிவதற்கான பயணப்படி மற்றும் தினப்படிக்கான செலவினத்தையும் தமிழக அரசு ஈடு செய்கிறது.

முடிவுரை

சிறுபான்மையினரை கல்வி, வேலைவாய்ப்பு, மற்றும் பொருளாதார நிலைகளில் மேம்படுத்திட இவ்வரசு உறுதிபூண்டுள்ளது. பல்வேறு நலத்திட்டங்களை அறிமுகப்படுத்துவதன் மூலமும், அதற்கான ஒதுக்கீட்டை உயர்த்துவதன் மூலமும், சிறுபான்மையினருக்கான வளர்ச்சியை இந்த அரசு விரிவுபடுத்தி வருகிறது. அனைவரையும் உள்ளடக்கிய வளர்ச்சியை தொடரும் வகையிலும், சிறுபான்மையினரின் சட்ட மற்றும் அரசியலமைப்பு உரிமைகளைப் பாதுகாக்கும் வகையிலும், இவ்வரசு தொடர்ந்து செயலாற்றும்.

[2023 ஏப்ரல் 13

இணைப்பு

2023 – 2024 ஆம் ஆண்டிற்கான ஒதுக்கீடு

(ரூபாய் இலட்சத்தில்)

துறை	வருவாய்	மூலதனம்	கடன்	மொத்தம்
தமிழ்நாடு வக்ஃபீப் வாரியம் மற்றும் ஹஜ் குழு	3250.90	—	—	3250.90
மாநில சிறுபான்மையினர் ஆணையம்	88.35	—	—	88.35
சிறுபான்மையினர் நல இயக்ககம்	3612.72	31403.73	—	35016.45
தமிழ்நாடு வக்ஃபீப் தீர்ப்பாயம்	108.60	—	—	108.60
மொத்தம்	7060.57	31403.73	—	38464.30

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

இணைப்பு-II

(148 ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.)

மானியக் கோரிக்கை எண் 18-பட்டு வளர்ச்சித் துறை

கொள்கை விளக்கக் குறிப்பு, 2023-2024

1. அறிமுகம்

இயற்கையின் கருவூலம் எண்ணற்ற அதிசயங்களை கொண்டது. அந்த எண்ணற்ற அதிசயங்களில், பட்டுப் புழுவிலிருந்து வெளிவரும் பட்டு நூலால் நெய்யப்படும் பளபளப்பான தூய்மையான பிரகாசம் கொண்ட ஆடையும் ஒன்றாகும். மனிதகுலத்தின் முன்னேற்றத்திற்கான தேடலில், பட்டு விவசாயம் அல்லது பட்டு வளர்ப்பு ஒரு முக்கிய கண்டுபிடிப்பாகும்.

பட்டு வளர்ப்பு என்பது மல்பெரி சாகுபடி, பட்டுப் புழு வளர்ப்பு மற்றும் தொழிலக பட்டு உற்பத்தி ஆகிய செயல்பாடுகளை உள்ளடக்கிய வேளாண் தொழில். வேளாண்மையை அடிப்படையாக கொண்ட கிராமப்புற குடிசைத் தொழிலான பட்டுத் தொழிலானது, குறுகிய அறுவடைக் காலத்தைக் கொண்டிருப்பதால், ஆண்டு முழுவதும் பட்டுப் புழு வளர்ப்பு மேற்கொள்வது சாத்தியமாகிறது. குறைந்த முதலீட்டில், அதிக இலாபம் தரும் தொழிலாக பட்டுத் தொழில் விளங்குகிறது. மேலும், இது கிராமப்புற மற்றும் புறநகர் பகுதிகளில் உள்ள பெண்கள் உட்பட சமூக மற்றும் பொருளாதார ரீதியாக பின்தங்கிய சமூகத்தின் ஒரு பகுதியினருக்கு வேலைவாய்ப்புகளை வழங்குகிறது. ஆகவே, பட்டுப் புழு வளர்ப்பு கிராமப்புற சமூகப் பொருளாதாரக் கட்டமைப்பிற்கு ஒரு நம்பத்தகுந்த ஆற்றல்மிகு தொழிலாக விளங்குகிறது.

கிராமப்புறத்தை அடிப்படையாகக் கொண்ட பண்ணை—சார் மற்றும் பண்ணை—சாரா செயல்பாடுகளினால் அதிக அளவிலான வேலைவாய்ப்புகளை உருவாக்க இயலும் என்பதால், பட்டுத் தொழில் நாட்டின் சமூக—பொருளாதார வளர்ச்சிக்கு மிகவும் பொருத்தமான தொழில்களில் ஒன்றாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

பாரம்பரிய வாழ்வாதாரங்களில் ஒரு மாற்றாக, பட்டு வளர்ப்பு அதன் தடத்தை வரலாறு முழுவதும் பதித்துள்ளது. கலாச்சார

ரீதியாக வளமான நமது நாட்டில், ஆடம்பர விழாக்களில் மகத்துவம் மிக்க பட்டின் பங்கு பின்னிப் பிணைந்துள்ளது. ஆயிரக்கணக்கான பட்டு விவசாயிகளுக்கு வாழ்வாதாரத்தை வழங்குவதுடன், ஏராளமான நெசவாளர்களுக்கு பழமைமிகு பட்டுத் தொழில் நடைமுறை ஓர் அடித்தளமாக செயல்படுகிறது.

2.இந்தியாவில் பட்டுத் தொழில்

இந்திய பட்டாடைகளின் மென்மை, கலைநயமிக்க வேலைப்பாடு, பிரத்யேக வண்ணங்கள் ஆகியவை பெயர்பெற்ற ஒன்றாகும். இன்றைய தேதியில் கச்சாப்பட்டு உற்பத்தியில் இந்தியா உலகளவில் இரண்டாமிடத்தை பெற்றுள்ளதுடன் அதிகளவில் பட்டினை பயன்படுத்தும் நாடு எனும் சிறப்பையும் பெற்றுள்ளது.

உலகளவில் மல்பெரி, ஈரி, டசார் மற்றும் மூகா எனப்படும் நான்கு வகையான பட்டுகளையும் உற்பத்தி செய்யும் ஒரே நாடாக இந்தியா திகழ்கிறது. அசாமைச் சுற்றியுள்ள வடகிழக்கு மாநிலங்களில் இருந்து 'மூகா பட்டு' எனப்படும் விலையுயர்ந்த, பளபளப்பான தங்க—மஞ்சள் நிற பட்டு நூலினை உற்பத்தி செய்யும் உலகின் ஒரே நாடு இந்தியாவே ஆகும்.


மத்திய பட்டு வாரிய அறிக்கைப்படி, 2022-2023 ஆம் ஆண்டில் (டிசம்பர் 2022 வரை) 27,744 மெட்ரிக் டன்க ச்சாப்பட்டு உற்பத்தி செய்யப்பட்டுள்ளது.

இந்தியாவின் கச்சாப்பட்டு உற்பத்தி (மெட்ரிக் டன்களில்)
(டிசம்பர் 2022 வரை)

வ. எண்	பட்டின் வகை	கச்சாப்பட்டு உற்பத்தி (மெட்ரிக் டன்களில்)
1.	மல்பெரி	20118
2.	ஈரி	6329
3.	டசார்	1070
4.	மூகா	227
மொத்தம்		**27744**

மொத்த பட்டு உற்பத்தியில் 73 சதவீதம் அளவிற்கு மல்பெரி பட்டு உற்பத்தி செய்யப்படுகிறது.

2023 ஏப்ரல் 13]



மல்பெரி கச்சாப்பட்டு உற்பத்தி (மெட்ரிக் டன்களில்)
(பிப்ரவரி 2023 வரை)

இந்தியாவின் கச்சாப்பட்டுத் தேவை ஆண்டொன்றிற்கு 40,000 மெட்ரிக் டன்னிற்கும் அதிகமாக உள்ளதாக கணக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதில், கடந்த ஆண்டில் (டிசம்பர் 2022 வரை) 27,744 மெட்ரிக் டன் கச்சாப் பட்டு உற்பத்தி செய்யப்பட்டுள்ளது. மீதமுள்ள தேவையினை பூர்த்தி செய்ய பிற நாடுகளிலிருந்து கச்சாப்பட்டு இறக்குமதி செய்யப்படுகிறது.

ஏப்ரல் 2022 முதல் டிசம்பர் 2022 வரையில், 1,378.32 கோடி ரூபாய் மதிப்பிலான பட்டு மற்றும் பட்டு ஜவுளிகளை பிற நாடுகளுக்கு இந்தியா ஏற்றுமதி செய்துள்ளது.

நாட்டில் தொடர்ந்து அதிகரித்துவரும் பட்டு நூல் தேவையைப் பூர்த்தி செய்து, பட்டு நூல் உற்பத்தியில் தன்னிறைவு பெறுவதற்கு ஜவுளித் துறை அமைச்சகத்தின் மத்திய பட்டு வாரியம் மற்றும் தமிழ்நாடு அரசின் பட்டு வளர்ச்சித் துறை ஆகியன பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றன.

3.தமிழ்நாட்டில் பட்டுத் தொழில்

பட்டுத் தொழிலில் பாரம்பரியம் மிக்க மாநிலமாக அறியப்படும் தமிழ்நாடு, பட்டு உற்பத்தியில் நெடும் வரலாற்றைக் கொண்டிருப்பதோடு, பல நூற்றாண்டுகளாக இந்தியாவின் பட்டுத் தொழிலுக்கு முக்கிய பங்களிப்பாளராக திகழ்ந்து வருகிறது.

[2023 ஏப்ரல் 13

காஞ்சிபுரம் பட்டு, ஆரணி பட்டு, திருபுவனம் பட்டு மற்றும் சேலம் வெண்பட்டு வேட்டிகள் போன்ற உலகப் புகழ் பெற்ற பட்டுத் துணிகளின் தாயகமாக, தனித்துவமான பாரம்பரியத்தை தமிழ்நாடு கொண்டுள்ளது. தனித்துவத் தன்மையுடன் விளங்கும் இப்பட்டுத் துணிகள் புவிசார்க் குறியீடுகளைப் பெற்றுள்ளன.

இந்தியாவில் பட்டு உற்பத்தியில் முன்னணி மாநிலங்களில் ஒன்றாகத் திகழும் தமிழ்நாடு, பட்டுப் புழு வளர்ப்புக்கு மிகவும் சாதகமான வேளாண்—பருவநிலையைக் கொண்டுள்ளது.

மாநிலத்தில் தரமான வெண்பட்டு உற்பத்தியை அதிகரித்திட தமிழ்நாடு அரசு அளித்து வரும் தொடர்ச்சியான ஊக்கத்தின் காரணமாக, மல்பெரி சாகுபடி மற்றும் பட்டுப் புழு வளர்ப்பில் நவீன தொழில்நுட்பங்களை பின்பற்றுவதில் தமிழ்நாடு பட்டு விவசாயிகள் முன்னணியில் உள்ளனர்.

கிருஷ்ணகிரி, தருமபுரி, சேலம், ஈரோடு, திருப்பூர், வேலூர், நாமக்கல், திண்டுக்கல், தென்காசி மற்றும் தேனி ஆகிய மாவட்டங்களில் பட்டு வளர்ப்புத் தொழில் தீவிரமாக மேற்கொள்ளப்பட்டு வருகிறது. சென்னை நீங்கலாக பிற மாவட்டங்களில் பட்டு வளர்ப்புத் தொழில் மிதமான அளவில் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.


2022-2023 ஆம் ஆண்டில், 3200 விவசாயிகளால், 6,314 ஏக்கர் பரப்பில் மல்பெரி புதிதாக நடவு செய்யப்பட்டுள்ளது. தமிழ்நாட்டில் 01.04.2023 தேதியில், 56,013.74 ஏக்கர் பரப்பளவில் 28,283 விவசாயிகளால் மல்பெரி சாகுபடி செய்யப்பட்டு பட்டுப் புழு வளர்ப்புத் தொழில் மேற்கொள்ளப்படுகிறது.

மாவட்ட வாரியான மல்பெரி பரப்பு

வ. எண்	மாவட்டம்	01.04.2023-இல் மல்பெரி பரப்பு			
		ஏக்கர்			விவசாயிகள்
		இறவை	மானாவாரி	மொத்தம்	
1	கிருஷ்ணகிரி	8241.25		8241.25	4133
2	தருமபுரி	4864.05		4864.05	2992
3	சேலம்	4121.69		4121.69	2537
4	ஈரோடு	4077.71		4077.71	1794
5	கோயம்புத்தூர்	3356.75		3356.75	1524
6	திருப்பூர்	7047.64		7047.64	3347

வ. எண்	மாவட்டம்	01.04.2023-இல் மல்பெரி பரப்பு			
		ஏக்கர்			விவசாயிகள்
		இறவை	மானா வாரி	மொத்தம்	
7	நீலகிரி	92.00		92.00	63
8	வேலூர்	824.25		824.25	356
9	திருப்பத்தூர்	1958.25	170.85	2129.10	1249
10	இராணிப்பேட்டை	655.35		655.35	323
11	காஞ்சிபுரம்	22.40		22.40	18
12	செங்கல்பட்டு	46.00		46.00	19
13	திருவள்ளூர்	33.00		33.00	19
14	திருவண்ணாமலை	1388.55	128.00	1516.55	812
15	நாமக்கல்	2877.00	66.65	2943.65	1558
16	கரூர்	472.50		472.50	262
17	திருச்சிராப்பள்ளி	1133.05		1133.05	590
18	பெரம்பலூர்	256.90		256.90	125
19	அரியலூர்	185.00		185.00	91
20	புதுக்கோட்டை	595.50		595.50	314
21	திருவாரூர்	208.25		208.25	93
22	தஞ்சாவூர்	414.60		414.60	201
23	நாகப்பட்டினம்	20.50		20.50	13
24	மயிலாடுதுறை	50.00		50.00	19
25	விழுப்புரம்	847.50		847.50	439
26	கள்ளக்குறிச்சி	491.00		491.00	278
27	கடலூர்	640.25		640.25	303
28	மதுரை	678.00		678.00	299
29	தேனி	2419.50		2419.50	1184
30	விருதுநகர்	648.00		648.00	259
31	இராமநாதபுரம்	182.50		182.50	90
32	சிவகங்கை	450.20		450.20	203
33	திண்டுக்கல்	3632.50		3632.50	1572
34	திருநெல்வேலி	252.30		252.30	118
35	தென்காசி	1881.25		1881.25	813
36	தூத்துக்குடி	278.85		278.85	116
37	கன்னியாகுமரி	304.20		304.20	157
	மொத்தம்	**55648.24**	**365.50**	**56013.74**	**28283**

[2023 ஏப்ரல் 13



கடந்த மூன்று ஆண்டுகளில் மல்பெரி விரிவாக்கம்

2023-2024 ஆம் ஆண்டில் கூடுதலாக 6,500 ஏக்கரில் தொகுப்பு முறையில் மல்பெரி நடவு செய்யவும் 625 ஏக்கரில் மர மல்பெரி நடவு செய்யவும் திட்டமிடப்பட்டுள்ளது.

மல்பெரி இரகங்கள்



எம்5 / கன்வா–2 (1950)
மானாவரி
14000 கிலோ இலைகள்
ஓர் ஏக்கருக்கு ஓர் ஆண்டில்



எம்ஆர்2 (1970)
இறவை
14000 கிலோ இலைகள்
ஓர் ஏக்கருக்கு ஓர் ஆண்டில்



எஸ்–36 (1986)
இறவை
16000 கிலோ இலைகள்
ஓர் ஏக்கருக்கு ஓர் ஆண்டில்



வி1 (1997)
இறவை
24000 கிலோ இலைகள்
ஓர் ஏக்கருக்கு ஓர் ஆண்டில்



ஜி4 (2003)
இறவை
24000 கிலோ இலைகள்
ஓர் ஏக்கருக்கு ஓர் ஆண்டில்



ஜி 2 (2004)
இறவை (இளம் பட்டுப் புழு)
15000 கிலோ இலைகள்
ஓர் ஏக்கருக்கு ஓர் ஆண்டில்

[2023 ஏப்ரல் 13

தரமான பட்டுக்கு பெயர்பெற்ற தமிழ்நாடு, 2022–2023 ஆம் நிதி ஆண்டில் 2,589 மெட்ரிக் டன் கச்சாப்பட்டு உற்பத்தி செய்துள்ளது. இறக்குமதி செய்யப்படும் வெண்பட்டுக்கு மாற்றாக, தமிழ்நாடு 2,525 மெட்ரிக் டன் வெண்பட்டினை உற்பத்தி செய்து, மல்பெரி வெண்பட்டு உற்பத்தி செய்யும் மாநிலங்களில் தேசிய அளவில் இரண்டாம் இடம் வகிக்கிறது.

கச்சாப்பட்டு உற்பத்தி மட்டுமல்லாது, நெசவு, சாயமிடுதல் மற்றும் எம்பிராய்டரி போன்ற பல்வேறு செயல்பாடுகளை செவ்வனே உள்ளடக்கிய தொடர்நிலை தொழில்களையும் தமிழ்நாடு கொண்டுள்ளது. காஞ்சிபுரம் புடவை போன்ற தமிழ்நாட்டின் பட்டுப் புடவைகள், அவற்றின் தரம் மற்றும் கைவினைத் திறனுக்காக பெரிதும் அறியப்படுகின்றன. மேலும் அவற்றின் தேவை, இந்தியாவிலும் சர்வதேச அளவிலும் அதிகளவில் உள்ளது.

ஒட்டுமொத்தமாக, தமிழ்நாட்டில் முக்கியமான தொழிலாக விளங்கும் பட்டு வளர்ப்பு, ஆயிரக்கணக்கான விவசாயிகளுக்கு வாழ்வாதாரத்தை அளிப்பதோடு, நெசவு மற்றும் சாயமிடுதல் போன்ற தொடர்நிலை செயல்பாடுகளின் வளர்ச்சியையும் ஆதரிக்கிறது. அரசின் தொடர் ஆதரவு மற்றும் முதலீட்டுடன், பட்டுத் தொழில் தொடர்ந்து வளர்ச்சியடைந்து மாநிலத்தின் ஒட்டுமொத்தப் பொருளாதார வளர்ச்சிக்கு பங்களிக்கிறது.

4.பட்டு வளர்ச்சித் துறை

தமிழ்நாட்டில், பட்டுத் தொழிலில் ஈடுபட்டுள்ள பட்டு விவசாயிகள் மற்றும் பட்டு தொழில்முனைவோர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக, தொழில் மற்றும் வணிகத் துறையின்கீழ் செயல்பட்டு வந்த 'பட்டு வளர்ச்சிப் பிரிவு', 1979 ஆம் ஆண்டு முதல் சேலத்தை தலைமையிடமாகக் கொண்டு தனி இயக்குநரகமாக செயல்படும் வகையில் மேம்படுத்தப்பட்டு, மாண்புமிகு குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் அவர்களது சீரிய வழிகாட்டுதலின்படி, கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை கட்டுப்பாட்டின்கீழ் இயங்கி வருகிறது. அரசின் கொள்கைகளையும், நிதி உதவிகளையும் பயனாளிகளுக்கு கொண்டு சேர்ப்பதில் இத்துறை முக்கிய பங்கு வகிக்கிறது.

4.1.பட்டு வளர்ச்சித் துறையின் நோக்கங்கள்

- தமிழ்நாட்டை வெண்பட்டு உற்பத்தியில் முன்னோடி மாநிலமாக உருவாக்குதல்

2023 ஏப்ரல் 13]

- மல்பெரி சாகுபடி செய்யப்படும் பரப்பினை அதிகரித்தல்
- கூடுதலான விவசாயிகள் மற்றும் தொழில்முனைவோர்களை பட்டுத் தொழிலில் ஈடுபடச் செய்து அதன்மூலம் அவர்களது பொருளாதார வளர்ச்சியை உயர்த்துதல்
- சிறந்த சமூகப்—பொருளாதார நிலையை அடைவதற்கு வேலையில்லா இளைஞர்களை பட்டுப் புழு வளர்ப்பு / பட்டுநூற்பு தொழிலில் ஈடுபட ஊக்குவித்து உதவுவதன்மூலம் வேலைவாய்ப்பினை உருவாக்குதல்

தமிழ்நாட்டில் பட்டுத் தொழில் மேம்பாட்டிற்காக பின்வரும் செயல்பாடுகளை பட்டு வளர்ச்சித் துறை மேற்கொண்டு வருகிறது:

- தரமான பட்டுக் கூடு உற்பத்தியை அதிகரிக்க உயர் விளைச்சல் தரும் மல்பெரி இரகங்களை பயிர் செய்ய விவசாயிகளுக்கு ஊக்கமளித்தல்.
- மேம்படுத்தப்பட்ட தொழில்நுட்பங்கள் மற்றும் நடைமுறைகளை கடைப்பிடிப்பதன்மூலம் உற்பத்தி செலவினங்களைக் குறைத்து தரமான பட்டுக் கூடுகள் மற்றும் கச்சாப் பட்டுநூலின் உற்பத்தித் திறனை அதிகரிக்க பங்குதாரர்களை ஊக்குவித்தல்.
- மல்பெரி சாகுபடி, பட்டுப் புழு வளர்ப்பு மற்றும் பட்டுநூற்பு போன்ற செயல்பாடுகளில் திறன் பயிற்சி மற்றும் தொழில்நுட்ப வழிகாட்டுதல் வழங்குதல்.
- மாநிலத்தில் பட்டுத் தொழிலின் வளர்ச்சிக்குத் தேவையான உட்கட்டமைப்பு வசதிகளை உருவாக்குதல்.
- தரமான மற்றும் நோயற்ற பட்டு முட்டைத் தொகுதிகளை உற்பத்தி செய்து வழங்குதல்.
- பட்டுக் கூடு மற்றும் கச்சாப்பட்டு நூலுக்கான ஒழுங்கு முறை சந்தை வசதிகளை ஏற்படுத்துதல்.
- பட்டுக் கூட்டிற்கு முந்தைய மற்றும் பிந்தைய நிலைகளில் ஈடுபடும் பட்டு விவசாயிகள் மற்றும் தொழில்முனைவோர்களுக்கு பல்வேறு திட்டங்களின்கீழ் மானிய உதவி வழங்குதல்.
- பல்வேறு முதன்மைத் திட்டங்களின்கீழ் திட்ட உதவிகள் வழங்கிட பிற தொடர்புடைய துறைகளுடன் ஒருங்கிணைந்து செயல்படுதல்.


[2023 ஏப்ரல் 13

❖ பட்டு விவசாயிகளுக்கு பயிர்க்காப்பீடு வழங்குதல்.

❖ அதிக தானியங்கி பட்டு நூற்பு அலகுகள் நிறுவுவதன்மூலம் இறக்குமதி செய்யப்படும் பட்டுக்கு நிகரான தரமான வெண்பட்டு நூல் உற்பத்தியினை அதிகரித்தல்.

❖ அதிக அளவில் பட்டு நூற்பு அலகுகள் மற்றும் பட்டு முறுக்கேற்றும் அலகுகள் நிறுவுவதன்மூலம் பட்டுக் கூட்டிற்கு பிந்தைய நிலையினை வலுப்படுத்துதல்.

பட்டு வளர்ச்சி செயல்வழி வரைபடம்



2023 ஏப்ரல் 13]

5. 2022-2023 ஆம் ஆண்டு செயல்படுத்தப்பட்ட திட்டங்கள்

மாநிலத்தின் பட்டுத் தொழில் வளர்ச்சிக்காகவும், பட்டு விவசாயிகள் மற்றும் தொழில்முனைவோர்களுக்கு ஆதரவளிக்கும் நோக்கத்திலும், நிலையான பட்டு வளர்ச்சி நடைமுறைகளை ஊக்குவிக்கும் வகையிலும், பல்வேறு திட்டங்கள் மற்றும் முயற்சிகளை இத்துறை செயல்படுத்தி வருகிறது. இவற்றுள் மல்பெரி நாற்றுகள், தோட்டம் மற்றும் பட்டுப் புழு வளர்ப்பு உபகரணங்கள், புழு வளர்ப்பு மனைகள் மற்றும் பட்டு நூல் உற்பத்தி அலகுகள் போன்ற பட்டு வளர்ப்பு சார்ந்த உட்கட்டமைப்புகளுக்கு மானிய உதவிகள் வழங்குதல் ஆகியனவும் அடங்கும்.

பட்டு வளர்ச்சித் துறை இயக்ககம் தமிழ்நாட்டில் பட்டுத் தொழில் மேம்பாட்டிற்காக பல்வேறு திட்டங்களை வகுத்து செயல்படுத்தி வருகிறது.

5.1.மாநிலத் திட்டம்

பட்டு விவசாயிகளுக்கு ஆதரவளித்து மாநிலத்தில் பட்டுத் தொழிலின் வளர்ச்சியை மேம்படுத்திடவும், பட்டு விவசாயிகளின் நலனை உறுதி செய்திடவும், மாநில அரசு பல்வேறு பயனாளிகள் சார்ந்த திட்டங்களை செயல்படுத்திட 2022-2023 ஆம் ஆண்டு மாநிலத் திட்டத்தின்கீழ் ரூ.1,813.55 இலட்சம் நிதி பின்வருமாறு ஒப்பளிப்பு செய்துள்ளது.

மாநிலத் திட்டம் 2022-2023

வ. எண்	திட்டத்தின் பெயர்	இயல்பு (ஏக்கர்/ எண்ணிக்கை)	அலகு மதிப்பீடு (ரூபாய்)	நிதி பங்கீடு (ரூபாய் இலட்சத்தில்)		
				மாநில பங்கு	பயனாளி பங்கு	மொத்த தொகை
1	உயர் விளைச்சல் தரும் மல்பெரி இரகங்கள் நடவு செய்ய ஊக்கத் தொகை வழங்குதல்	5000	14000.00	525.00	175.00	700.00

வ. எண்	திட்டத்தின் பெயர்	இயல்பு (ஏக்கர்/ எண்ணிக்கை)	அலகு மதிப்பீடு (ரூபாய்)	நிதி பங்கீடு (ரூபாய் இலட்சத்தில்)		
				மாநில பங்கு	பயனாளி பங்கு	மொத்த தொகை
2	தனி பட்டுப் புழு வளர்ப்புக் குடில் கட்ட உதவியளித்தல்	500	400000.00	600.00	1400.00	2000.00
3	நவீன புழுவளர்ப்புத் தளவாடங்கள்/ பண்ணை உபகரணங்கள் கொள்முதல் செய்து பட்டு விவசாயிகளுக்கு வழங்குதல்	1000	70000.00	525.00	175.00	700.00
4	முன்னோடி பட்டு விவசாயிகளுக்கு பவர் டில்லர் கொள்முதல் செய்து வழங்குதல்	300	35000.00	105.00	–	105.00
5	எட்டு அரசு அலகுகளில் உட்கட்டமைப்பு வசதிகள் மேம்படுத்துதல்.	8		29.60	–	29.60
6	மாநில மற்றும் மாவட்ட அளவில் சிறந்த பட்டு விவசாயிகளுக்கு பரிசுத் தொகை வழங்குதல்	111	—	24.45	–	24.45

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

2023 ஏப்ரல் 13]

வ. எண்	திட்டத்தின் பெயர்	இயல்பு (ஏக்கர்/ எண்ணிக்கை)	அலகு மதிப்பீடு (ரூபாய்)	நிதி பங்கீடு (ரூபாய் இலட்சத்தில்)		
				மாநில பங்கு	பயனாளி பங்கு	மொத்த தொகை
7	மாநில அளவில் சிறந்த பட்டு நூற்பாளர்களுக்கு பரிசு வழங்குதல்	6	—	4.50	–	4.50
மொத்தம்				1813.55	1750.00	3563.55

5.1.1.பரிசுகளும் வெகுமதிகளும்

தரமான பட்டுக் கூடு மற்றும் கச்சாப் பட்டு நூலினை அதிக அளவில் உற்பத்தியை செய்ய பட்டு விவசாயிகள் மற்றும் பட்டு நூற்பாளர்களை ஊக்குவிக்கும் நோக்கில், 2022-2023 ஆம் ஆண்டில், சிறந்த பட்டு விவசாயிகளுக்கு மாநில மற்றும் மாவட்ட அளவிலும், சிறந்த பட்டுநூற்பாளர்களுக்கு மாநில அளவிலும் ரொக்கப்பரிசுகள் வழங்கிட ரூ.28.95 இலட்சம் நிதியினை அரசு ஒப்பளிப்பு செய்துள்ளது.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் மார்ச் 09, 2023 அன்று மாநில அளவில் சிறந்து விளங்கிய மூன்று பட்டு விவசாயிகள், மூன்று தானியங்கி பட்டு நூற்பாளர்கள் மற்றும் மூன்று பலமுனை பட்டு நூற்பாளர்களுக்கு முதலாவது, இரண்டாவது மற்றும் மூன்றாவது ரொக்கப் பரிசுகளாக முறையே ரூ.1,00,000/-, ரூ.75,000/- மற்றும் ரூ.50,000/- வழங்கப்பட்டது.

மாண்புமிகு அமைச்சர்கள் மற்றும் சம்மந்தப்பட்ட மாவட்ட ஆட்சியர்களால் 36 மாவட்டங்களில் (சென்னை மற்றும் செங்கல்பட்டு தவிர) மாவட்ட அளவில் சிறந்து விளங்கிய, 106 பட்டு விவசாயிகளுக்கு முதலாவது, இரண்டாவது மற்றும் மூன்றாவது ரொக்கப் பரிசுகளாக முறையே ரூ.25,000/-ரூ.20,000/- மற்றும் ரூ.15,000/- வழங்கப்பட்டது.

5.2.மத்திய பகுதித் திட்டம், 'சில்க் சமக்ரா-2'

பட்டுத் தொழில் வளர்ச்சிக்கான ஒருங்கிணைந்த திட்டமான "சில்க் சமக்ரா—2" திட்டம், நாட்டில் பட்டு வளர்ச்சி நடவடிக்கைகளை நிலைப்படுத்துவதையும் வலுப்படுத்துவதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது. இத்திட்டம், பின்வரும் இலக்குகளை

அடைவதன்மூலம் இந்தியாவில் பட்டுத் தொழில் வளர்ச்சி மற்றும் மேம்பாட்டை உயர்த்திடுவதை நோக்கமாகக் கொண்டுள்ளது:

- பட்டு நூல் உற்பத்தி மற்றும் தரத்தை அதிகரித்தல்
- பட்டு உற்பத்தியில் நவீன தொழில்நுட்பங்கள் மற்றும் இயந்திரங்கள் பயன்பாட்டை ஊக்குவித்தல்
- பட்டு விவசாயிகள் மற்றும் தொழில்முனைவோர்களுக்கு நிதி உதவி அளித்தல்
- பட்டு உற்பத்தி மற்றும் சந்தைப்படுத்துதலுக்கான உட்கட்டமைப்புகளை மேம்படுத்துதல்.
- பட்டுத் தயாரிப்புகளின் ஏற்றுமதியை ஊக்குவித்தல்.

2022-2023 ஆம் ஆண்டில் மத்திய பகுதித் திட்டமான சில்க் சமக்ரா-2-ன்கீழ் பல்வேறு திட்ட இனங்களை செயல்படுத்துவதற்காக மத்திய பட்டு வாரியத்தால் ரூ.3,335.463 இலட்சம் நிதி பின்வருமாறு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

வ. எண்	பிரிவு	நிதி ஒதுக்கீடு(ரூ. இலட்சத்தில்)		
		மத்திய பட்டு வாரியம்	மாநில அரசு*	மொத்தம்
1.	விதைப் பிரிவு	183.000	91.500	274.500
2.	பட்டுக் கூட்டிற்கு முந்தைய நிலை			
அ.	பொது	2794.642	1325.250	4119.892
ஆ.	தாழ்த்தப்பட்டோருக்கான துணைத் திட்டம்	122.129	44.750	166.879
இ.	பழங்குடியினருக்கான துணைத் திட்டம்	30.032	11.000	41.032
துணைக் கூடுதல் (2)		2946.803	1381.000	4327.803
3.	பட்டுக் கூட்டிற்கு பிந்தைய நிலை (பொது)	205.660	145.860	351.520
மொத்தம்		**3335.463**	**1618.360**	**4953.823**

*நிதி பெறப்படவுள்ளது

2023 ஏப்ரல் 13]

சில்க் சமக்ரா-2 திட்டத்தின் உட்கூறுகள் & மானிய நிதி பங்கீடு

வ. எண்	திட்டத்தின் பெயர் / உட்கூறு	அலகு	அலகு மதிப்பீடு (ரூ. இலட்சத்தில்)	மானிய உதவி (மத்திய பட்டு வாரியம் : மாநில அரசு) (ரூ.இலட்சத்தில்)	
				பொது (50:25)	எஸ்சி / எஸ்டி (65:25)
அ	விதை				
1.	*விதைக் கூடு உற்பத்தியாளர்களுக்கான உதவி*		*5.000*	*3.750*	—
	புழு வளர்ப்பு மனை அமைக்க உதவித் தொகை வழங்குதல்	*எண்ணிக்கை*	*3.500*	*2.625*	—
	புழு வளர்ப்புத் தளவாடங்கள் வழங்குதல்	*எண்ணிக்கை*	*1.500*	*1.125*	—
2.	*பட்டுப் புழு விதை உற்பத்தி அலகு நிறுவிட உதவியளித்தல் (தனியார்)*	*எண்ணிக்கை*	*216.00*	*162.00*	—
ஆ	பட்டுக் கூட்டிற்கு முந்தைய நிலை				
1.	*கிசான் மல்பெரி நாற்றாங்கால் அமைக்க உதவியளித்தல்*	*ஏக்கர்*	*1.500*	*1.125*	*1.350*

வ. எண்	திட்டத்தின் பெயர் / உட்கூறு	அலகு	அலகு மதிப்பீடு (ரூ. இலட்சத்தில்)	மானிய உதவி (மத்திய பட்டு வாரியம் : மாநில அரசு) (ரூ.இலட்சத்தில்)	
				பொது (50:25)	எஸ்சி / எஸ்டி (65:25)
2.	250 முட்டைத் தொகுதிகள் புழு வளர்ப்பு மேற்கொள்ள உதவிகள் வழங்குதல் (2.00 ஏக்கர் மல்பெரி நடவு)		6.500	4.875	5.850
	மல்பெரி நடவு செய்ய ஊக்கத் தொகை வழங்குதல்	ஏக்கர்	1.200	0.900	1.080
	தரமான பட்டுக் கூடு உற்பத்தி செய்திட பட்டுப் புழு வளர்ப்பு குடில் கட்ட உதவியளித்தல்	எண்ணிக்கை	4.500	3.375	4.050
	நவீன புழு வளர்ப்பு தளவாடங்கள்/ பண்ணை உபகரணங்கள் வழங்குதல்	எண்ணிக்கை	0.750	0.563	0.675
	புழு வளர்ப்பு கிருமி நாசினிகள் / இடுபொருட்கள் வழங்குதல்	எண்ணிக்கை	0.050	0.038	0.045

2023 ஏப்ரல் 13]

வ. எண்	திட்டத்தின் பெயர் / உட்கூறு	அலகு	அலகு மதிப்பீடு (ரூ. இலட்சத்தில்)	மானிய உதவி (மத்திய பட்டு வாரியம் : மாநில அரசு) (ரூ.இலட்சத்தில்)	
				பொது (50:25)	எஸ்சி / எஸ்டி (65:25)
3.	*150 முட்டைத் தொகுதிகள் புழு வளர்ப்பு மேற்கொள்ள உதவிகள் வழங்குதல் (1.00 ஏக்கர் மல்பெரி நடவு)*		*4.400*	*3.300*	*3.960*
	மல்பெரி நடவு செய்ய ஊக்கத் தொகை வழங்குதல்	ஏக்கர்	*0.600*	*0.450*	*0.540*
	தரமான பட்டுக் கூடு உற்பத்தி செய்திட பட்டுப் புழு வளர்ப்பு குடில் கட்ட உதவியளித்தல்	எண்ணிக்கை	*3.250*	*2.438*	*2.925*
	நவீன புழு வளர்ப்பு தளவாடங்கள்/ பண்ணை உபகரணங்கள் வழங்குதல்	எண்ணிக்கை	*0.500*	*0.375*	*0.450*
	புழு வளர்ப்பு கிருமி நாசினிகள் / இடுபொருட்கள் வழங்குதல்	எண்ணிக்கை	*0.050*	*0.038*	*0.045*

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

வ. எண்	திட்டத்தின் பெயர் / உட்கூறு	அலகு	அலகு மதிப்பீடு (ரூ. இலட்சத்தில்)	மானிய உதவி (மத்திய பட்டு வாரியம் : மாநில அரசு) (ரூ.இலட்சத்தில்)	
				பொது (50:25)	எஸ்சி / எஸ்டி (65:25)
4.	*இளம் புழு வளர்ப்பு மையம் அமைக்க உதவியளித்தல்*	*எண்ணிக்கை*	*13.000*	*9.750*	*11.700*
இ	**பயிற்சி மற்றும் சேவைகள் (100% மத்திய பட்டு வாரியம்)**				
1.	*பட்டு விவசாயிகளுக்கு பயிற்சி வழங்குதல்*	*எண்ணிக்கை*	*0.070*	*0.070*	*0.070*
ஈ	**பட்டுக் கூட்டிற்கு பிந்தைய நிலை**				
1.	*தானியங்கி பட்டு நூற்பு அலகு நிறுவுதல் – 2000 முனைகள் (30:20)*	*எண்ணிக்கை*	*598.000*	*299.00*	—

5.3.இராஷ்ட்ரிய க்ரிஷி விகாஸ் யோஜனா (RKVY) (தேசிய வேளாண்மை வளர்ச்சித் திட்டம்)– மானாவாரி பகுதி மேம்பாட்டுத் திட்டம்

இராஷ்ட்ரிய க்ரிஷி விகாஸ் யோஜனா (தேசிய வேளாண்மை வளர்ச்சித் திட்டம்) என்ற மத்திய பங்களிப்பு திட்டமானது, உற்பத்தியை அதிகரித்தல், மதிப்புக் கூட்டலை ஊக்குவித்தல் மற்றும் உட்கட்டமைப்புகளை மேம்படுத்துதல் உள்ளிட்ட வேளாண்மை மற்றும் அதுசார்ந்த துறைகளின் வளர்ச்சிக்கான முழுமையான அணுகுமுறையை மேற்கொள்ள மாநிலங்களை ஊக்குவிக்கிறது.

பட்டு விவசாயிகளிடையே, பட்டுப் புழு வளர்ப்பிற்கு மர மல்பெரி பயிரிட மற்றும் இயற்கை விவசாயத்தை ஊக்குவிக்க, இத்துறையானது, வேளாண்மை மற்றும் உழவர்நலத் துறையுடன்

2023 ஏப்ரல் 13]

ஒருங்கிணைந்து தேசிய வேளாண்மை வளர்ச்சித் திட்டத்தின் ஓர் அங்கமான மானாவாரி பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் மர மல்பெரி சாகுபடி மற்றும் மண்புழு உரக்குழிகள் அமைக்க உதவித் தொகை வழங்கி வருகிறது.

2022-2023 ஆம் ஆண்டு தேசிய வேளாண்மை வளர்ச்சித் திட்டம் (RKVY) — மானாவாரி பகுதி மேம்பாட்டு திட்டத்தின்கீழ் 625.00 ஏக்கரில் மர மல்பெரி நடவு செய்வதற்கும், 500 மண்புழு உரக்குழிகள் கட்டுவதற்கும் ரூ.100.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

2023-2024 ஆம் ஆண்டில் தேசிய வேளாண்மை வளர்ச்சித் திட்டம் (RKVY) — மானாவாரி பகுதி மேம்பாட்டு திட்டத்தின்கீழ் 250.00 எக்டரில் மர மல்பெரி நடவு செய்வதற்கும், 100 மண் புழு உரக் குழிகள் கட்டுவதற்கும் ரூ.50.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

5.4.பட்டுப் புழு வளர்ப்பிற்கான காப்பீட்டுத் திட்டம்

பட்டுக் கூடு உற்பத்தியில் ஏற்படும் இழப்பினை ஈடுகட்ட பயிர்காப்பீட்டுத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. 2022-2023 ஆம் ஆண்டில், ரூ.39.861 இலட்சம்தொகை காப்பீட்டு சந்தாவிற்காக அரசால் வழங்கப்பட்டுள்ளது. பட்டு விவசாயிகளுக்கு, பட்டுப் புழு பாதிக்கப்பட்ட புழுப் பருவத்தின் அடிப்படையில் காப்பீட்டு நிறுவனம்மூலம், நியாயமான இழப்பீட்டுத் தொகை வழங்கப்படுகிறது. தனிநபர் விபத்து மற்றும் விவசாயிகளின் புழுவளர்ப்பு குடில் சேதத்துக்கான காப்பீடும் இத்திட்டத்தில் அடங்கும். மாநிலம் முழுவதிலும் 420 பட்டு விவசாயிகளுக்கு ரூ.35.187 இலட்சம் காப்பீட்டுத் தொகை வழங்கப்பட்டுள்ளது.

6.பட்டு வளர்ச்சித் துறையின் உட்கட்டமைப்பு வசதிகள்

மாநிலத்தில் பட்டுத் தொழிலை ஊக்குவிக்கவும், மேம்படுத்திடவும் பட்டு வளர்ச்சித் துறையானது பின்வரும் உட்கட்டமைப்பு வசதிகளுடன் வலுப்படுத்தப்பட்டுள்ளது.

அரசு உட்கட்டமைப்பு	வ. எண்	பெயர்	எண்ணிக்கை	மொத்தம்
ஆதார விதைப் பண்ணைகள்	*1*	பி3 விதைப் பண்ணைகள்	*5*	*19*
	2	பி2 விதைப் பண்ணைகள்	*8*	
	3	பி1 விதைப் பண்ணைகள்	*6*	
வித்தகங்கள்	*1*	மாநில அரசு வித்தகங்கள்	*10*	*12*
	2	மத்திய பட்டு வாரிய வித்தகங்கள்	*2*	
குளிர்பதன அலகுகள்	*1*	பல்நிலை குளிர்பதன அலகுகள்	*3*	*3*
அரசு பட்டுப் பண்ணைகள்	*1*	செயல்விளக்கம் மற்றும் பயிற்சி மையங்கள்	*6*	*32*
	2	கலப்பின பட்டுப் பண்ணைகள்	*6*	
	3	விவசாயிகள் பயிற்சி மையங்கள்	*10*	
	4	இளம்புழுவளர்ப்புப் பண்ணைகள்	*5*	
	5	மாதிரி மல்பெரி பட்டுப் பண்ணைகள்	*4*	
	6	பட்டு உலகம் – பட்டுச் சுற்றுலா மையம்	*1*	
தொழில்நுட்ப சேவை மையங்கள்	*1*	விதை	*3*	*105*
	2	விரிவாக்கம்	*102*	
அரசு பட்டுக் கூடு அங்காடிகள்	*1*	விதைக் கூடு அங்காடி	*1*	*22*
	2	பட்டுக் கூடு அங்காடிகள்	*21*	

2023 ஏப்ரல் 13]

அரசு உட்கட்டமைப்பு	வ. எண்	பெயர்	எண்ணிக்கை	மொத்தம்
அரசு பட்டு நூற்பு / முறுக்கேற்றும் அலகுகள்	1	பட்டு முறுக்கேற்றும் அலகுகளுடன் கூடிய பட்டு நூற்பகங்கள்	4	8
	2	பட்டு முறுக்கேற்றும் அலகுகள் இல்லாது தனித்து இயங்கும் பட்டு நூற்பகங்கள்	4	
பயிற்சி நிலையம்	1	தமிழ்நாடு பட்டு வளர்ச்சி பயிற்சி நிலையம்	1	1
பட்டு பரிமாற்றகம்	1	அரசு அண்ணா பட்டு பரிமாற்றகம், காஞ்சிபுரம் மற்றும் சேலம் கிளை	2	2
கூட்டுறவுச் சங்கங்கள்	1	பட்டுத் தொழிற் கூட்டுறவுச் சங்கங்கள்	25	26
	2	தமிழ்நாடு கூட்டுறவு பட்டு உற்பத்தியாளர் இணையம்	1	

6.1.ஆதார பட்டுப் புழு விதை உற்பத்திப் பண்ணைகள்

வர்த்தக ரீதியிலான பட்டு முட்டைத் தொகுதிகளை அரசு வித்தகங்களில் உற்பத்தி செய்யத் தேவையான விதைக் கூடுகள் (பெற்றோர்) ஆதார விதைப் பண்ணைகளில் உற்பத்தி செய்யப்படுகிறது.

பட்டுப் புழு விதை உற்பத்தியில் மூன்றடுக்கு முறையில் (பி3 —› பி2—› பி1) பட்டுப் புழுக்களின் இனப் பண்புகளை பராமரிப்பதற்கென துறையின்கீழ் 19 விதைப் பண்ணைகள் செயல்பட்டு வருகின்றன.

பி1 அளவில் தொடர்ந்து அதிகரித்துவரும் பட்டு முட்டைகளின் தேவையை பூர்த்தி செய்திட, விதைக் கூடு உற்பத்தி செய்யும் விவசாயிகள் தேர்ந்தெடுக்கப்பட்டு ஆதார விதைக் கூடு உற்பத்தியில் ஈடுபடுத்தப்படுகின்றனர். பட்டுப் புழுக்களின் இனப் பண்புகளையும் கலப்பின வீரியத்தையும் பராமரிப்பதில் விதைப் பண்ணைகள் மற்றும் வித்தகங்கள் முக்கிய பங்கு வகிக்கின்றன.

[2023 ஏப்ரல் 13

2022-2023 ஆம் ஆண்டில் அரசு விதைப் பண்ணைகளில் விதைக் கூடு உற்பத்தி, வர்த்தக ரீதியிலான பட்டுக் கூடு உற்பத்தி மற்றும் வருவாய்

மாவட்டம்	வ. எண்	விதைப் பண்ணையின் பெயர்	பணி	விதைக் கூடு உற்பத்தி (இலட்சம் எண்களில்)	வர்த்தக ரீதியிலான பட்டுக் கூடு உற்பத்தி (கி.கி.)	வருவாய் (ரூ. இலட்சத்தில்)
கிருஷ்ணகிரி	1	பேரிகை	பி3	0.941	0	1.701
	2	ஆவலப்பள்ளி	பி3	1.062	0	3.647
	3	ஓசூர்	பி2	1.526	0	3.887
	4	கலுக்கொண்டப்பள்ளி	பி3	1.098	0	1.654
	5	தளி	பி3	0.864	0	2.122
	6	உத்தனப்பள்ளி	பி2	2.154	0	6.056
	7	உளிமங்கலம்	பி2	0	428.000	2.698
	8	மேலகிரி	பி2	1.639	0	3.136
	9	கோலட்டி	பி1	0.986	926.600	12.184
தருமபுரி	10	சித்தேரி	பி1	1.314	66.400	3.615
ஈரோடு	11	ஆசனூர்	பி2	0	197.500	1.446
	12	மாதஹள்ளி	பி1	0	806.050	5.172
நீலகிரி	13	குன்னூர்	பி3	0	53.500	0.365
	14	மசினகுடி	பி2	2.715	145.760	3.127
	15	மசக்கல்	பி2	1.436	61.900	2.394
திருப்பத்தூர்	16	அத்தனாவூர்	பி1	0	192.700	1.049
நாமக்கல்	17	கொல்லிமலை	பி1	0.718	0	2.181
தேனி	18	மயிலாடும்பாறை	பி2	1.193	0	3.490
தென்காசி	19	செங்கோட்டை	பி1	2.032	48.000	5.198
		மொத்தம்		19.678	2926.41	65.122

2023 ஏப்ரல் 13]

6.2. வித்தகங்கள்

ஆதார விதைப் பண்ணைகள் மற்றும் விதை உற்பத்தி விவசாயிகளிடமிருந்து பெறப்படும் விதைக் கூடுகளைக் கொண்டு வர்த்தக ரீதியிலான நோயற்ற பட்டு முட்டைத் தொகுதிகளை உற்பத்தி செய்யும் மையங்கள், 'வித்தகங்கள்' என அழைக்கப்படுகிறது.

*நோயற்ற பட்டு முட்டைகள் உற்பத்தி செய்யப்பட்டு, பட்டு விவசாயிகளுக்கு விநியோகம் செய்யப்படுவதற்கென 10 மாநில அரசு வித்தகங்கள் மாநிலத்தில் செயல்பட்டு வருகின்றன. இது தவிர, மத்திய பட்டு வாரியத்தின்கீழ் இயங்கும் தேசிய பட்டுப் புழு விதைக் கழகத்தின் (*National Silkworm Seed Organisation*) 2 வித்தகங்களும் மாநிலத்தில் செயல்பட்டு வருகின்றன.*

2022-2023 ஆம் ஆண்டில், இந்த 10 அரசு வித்தகங்களில் 48.093 இலட்சம் பட்டு முட்டைகள் உற்பத்தி செய்யப்பட்டுள்ளன.

2022-2023 ஆம் ஆண்டில் அரசு வித்தகங்களில் பட்டு முட்டை உற்பத்தி

மாவட்டம்	**வ. எண்.**	**வித்தகத்தின் பெயர்**	**உற்பத்தி (முட்டைத் தொகுதிகள் இலட்சத்தில்)**
கிருஷ்ணகிரி	1	ஓசூர் (இருசுழற்சி)	8.230
	2	கிருஷ்ணகிரி (இருசுழற்சி)	16.969
தருமபுரி	3	சோகத்தூர் (இருசுழற்சி)	2.847
	4	பெண்ணாகரம் (இருசுழற்சி)	1.975
கோயம்புத்தூர்	5	கோயம்புத்தூர் (இருசுழற்சி)	3.693
ஈரோடு	6	ஈரோடு (இருசுழற்சி)	4.650
	7	தாளவாடி (இருசுழற்சி)	2.094
திருப்பத்தூர்	8	வாணியம்பாடி (இருசுழற்சி)	4.690
திருச்சிராப்பள்ளி	9	திருச்சிராப்பள்ளி (இருசுழற்சி)	0.049
தென்காசி	10	குற்றாலம் (இருசுழற்சி)	2.896
மொத்தம்			48.093

[2023 ஏப்ரல் 13

இந்த கலப்பின வித்தகம், பிப்ரவரி 2023 மாதத்தில் இருசுழற்சியின வித்தகமாக மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

6.3.பல்நிலை குளிர்பதன அலகுகள்

வெண்பட்டுக்கான தேவை அதிகரித்து வருவதால். தமிழ்நாடு விவசாயிகள் 97 சதவீதம் இருசுழற்சியின (வெண்பட்டு) பட்டு முட்டைகளையே வளர்த்து வருகின்றனர்.

பட்டுப் புழுவானது பொதுவாக ஓர் ஆண்டில் ஒன்று, இரண்டு மற்றும் பல வாழ்க்கைச் சுழற்சி முறைகளைக் கொண்டுள்ளது. இவை முறையே ஒரு சுழற்சி இனம், இரு சுழற்சி இனம் மற்றும் பல சுழற்சி இனம் என அழைக்கப்படுகிறது. துயில் நிலை அற்ற இனங்களில் (பல சுழற்சியினம்) முட்டையிட்ட நாளிலிருந்து 10 நாட்களிலும், துயில் நிலை இனங்களில் (ஒரு சுழற்சி இனம் மற்றும் இரு சுழற்சி இனம்) முட்டையிட்ட நாளிலிருந்து சுமார் 6-10 மாதங்கள் கழித்தும் முட்டைத் தொகுதிகள் பொரித்துவிடும்.

இரு சுழற்சி இன பட்டுப் புழுக்கள் வருடத்திற்கு 2 வாழ்க்கை சுழற்சியினை கொண்டுள்ளன. இந்த பட்டு முட்டைத் தொகுதிகள் சாதாரண சூழலில் எதிர்பார்க்கும் நேரத்தில் பொரிப்பு ஆகாது என்ற தனித்தன்மை உடையவை.

வெற்றிகரமான பட்டுக் கூடு அறுவடைக்கு பட்டு முட்டையினை முறையாக பாதுகாப்பது அத்தியாவசியமானதாகும். பட்டு முட்டையின் முறையற்ற பாதுகாப்பு சீரான முட்டை பொரிப்பினை பாதிப்பதுடன் பட்டுப் புழுக்களின் ஆரோக்கியமான வளர்ச்சியினையும், தரமான பட்டுக் கூடு உற்பத்தியினையும் மட்டுப்படுத்துகின்றது.

எனவே, இரு சுழற்சியின பட்டு முட்டைகள் சீரான முட்டை பொரிப்பிற்கு குளிர்பதன அறையில் 120 நாட்கள் முதல் 300 நாட்கள் வரையில் 2.5° செல்சியஸ் முதல் 25° செல்சியஸ் வரையிலான வெவ்வேறு வெப்ப நிலைகளில், நிர்ணயிக்கப்பட்ட காலத்திற்கு பாதுகாப்பாக குளிர்பதனம் செய்வது அத்தியாவசியமாகிறது. இரு சுழற்சியின முட்டைத் தொகுதிகளை குளிர்பதனம் செய்வதன்மூலம் ஆண்டு முழுவதும் பட்டு விவசாயிகளின் தேவைக்கு ஏற்ப முட்டை விநியோகம் செய்வது எளிதாகின்றது.

2023 ஏப்ரல் 13]

இருசுழற்சியின பட்டு முட்டைகளை தேவைக்கேற்ப விவசாயிகளுக்கு விநியோகம் செய்வதற்காக கிருஷ்ணகிரி & ஓசூர் (கிருஷ்ணகிரி மாவட்டம்) மற்றும் சின்னவேடம்பட்டி (கோயம்புத்தூர் மாவட்டம்) ஆகிய இடங்களில் மூன்று பல்நிலை குளிர்பதன அலகுகள் செயல்பட்டு வருகின்றன. 2022-2023 ஆம் ஆண்டில், இம்மூன்று பல்நிலை குளிர்பதன அலகுகளில் 48.093 இலட்சம் இரு சுழற்சியின பட்டு முட்டைகள் பதனப்படுத்தப்பட்டுள்ளன.

2022-2023 ஆம் ஆண்டில் அரசு பல்நிலை குளிர்பதன அலகுகளில் பதனப்படுத்தப்பட்டுள்ள முட்டைத் தொகுதிகள்

மாவட்டம்	வ. எண்.	பல்நிலை குளிர்பதன அலகின் பெயர்	பதனப்படுத்தப்பட்ட முட்டைத் தொகுதிகள் (இலட்சம் எண்களில்)	
			2022-2023	முட்டை இருப்பு (31.03.2023 இல்)
கிருஷ்ணகிரி	1	ஓசூர்	10.205	3.872
	2	கிருஷ்ணகிரி	24.555	10.872
கோயம்புத்தூர்	3	சின்னவேடம்பட்டி	13.333	6.082
		மொத்தம்	48.093	20.826

கூடுதலாக, கிருஷ்ணகிரி மாவட்டம் ஓசூரில் செயல்பட்டுவரும் தமிழ்நாடு பட்டு வளர்ச்சி பயிற்சி நிலையத்தில் நிறுவப்பட்டுவரும் 10.00 இலட்சம் நோயற்ற பட்டு முட்டைகள் பதனப்படுத்தும் திறன் கொண்ட ஒரு பல்நிலை குளிர்பதன அலகு, 2023-2024 ஆம் ஆண்டில் செயல்பாட்டிற்கு கொண்டுவரப்பட உள்ளது.

6.4. அரசு பட்டுப் பண்ணைகள்

அரசு பட்டுப் பண்ணைகள் பல்வேறு பட்டு வளர்ச்சி செயல்பாடுகளில் ஈடுபட்டு வருகின்றன. அவை,

- தரமான மல்பெரி நாற்று உற்பத்தி மற்றும் விநியோகம்
- தரமான இளம்புழுக்களை (2 ஆம் பருவம் வரையிலான இளம் பட்டுப் புழுக்கள்) வளர்த்தல் மற்றும் விநியோகம் செய்தல்

- பட்டுப் புழு வளர்ப்பு செயல்பாடுகள்
- நவீன பட்டுப் புழு வளர்ப்புத் தொழில்நுட்பங்கள் குறித்து செயல்விளக்கம் அளித்தல்
- பட்டு விவசாயிகளுக்கு பயிற்சி வழங்குதல்.

இத்துறையின்கீழ் 32 அரசு பட்டுப் பண்ணைகள் செயல்பட்டு வருகின்றன. அவற்றின் செயல்பாடுகளுக்கேற்ப அவை வகைப்படுத்தப்படுகின்றன.

பண்ணையின் வகை	எண்
செயல்விளக்கம் மற்றும் பயிற்சி மையங்கள்	6
அரசு கலப்பின பட்டுப்பண்ணைகள்	6
விவசாயிகள் பயிற்சி மையங்கள்	10
இளம்புழு வளர்ப்புப் பண்ணைகள்	5
மாதிரி மல்பெரி பட்டுப் பண்ணைகள்	4
பட்டு உலகம் (பட்டு சுற்றுலா மையம்)	1
மொத்தம்	32

2022-2023 ஆம் ஆண்டில் அரசு பட்டுப் பண்ணைகளின் வருவாய்

மாவட்டம்	வ. எண்	அரசு பட்டுப் பண்ணையின் பெயர்	வருவாய் (ரூ. இலட்சத்தில்)
கிருஷ்ணகிரி	1	செயல் விளக்கம் மற்றும் பயிற்சி மையம், ஓசூர்	0.271
	2	கலப்பின பட்டுப் பண்ணை, ஊத்தங்கரை	2.306

மாவட்டம்	வ. எண்	அரசு பட்டுப் பண்ணையின் பெயர்	வருவாய் (ரூ. இலட்சத்தில்)
தருமபுரி	3	விவசாயிகள் பயிற்சி மையம், சோகத்தூர்	1.120
	4	இளம்புழு வளர்ப்புப் பண்ணை, பாப்பாரப்பட்டி	0.579
சேலம்	5	பட்டு உலகம், ஏற்காடு	0.210
	6	விவசாயிகள் பயிற்சி மையம், நத்தக்கரை	2.716
	7	கலப்பின பட்டுப் பண்ணை, மணியார்குண்டம்	0.950
	8	கலப்பின பட்டுப் பண்ணை, புதூர்	0.761
கள்ளக்குறிச்சி	9	கலப்பின பட்டுப் பண்ணை, வெள்ளிமலை	0.741
ஈரோடு	10	விவசாயிகள் பயிற்சி மையம், தாளவாடி	2.404
	11	இளம்புழு வளர்ப்புப் பண்ணை இராமாபுரம்	0.641
	12	கலப்பின பட்டுப் பண்ணை, கீர்மாளம்	0.080
திருப்பூர்	13	விவசாயிகள் பயிற்சி மையம், மைவாடி	0.526
காஞ்சிபுரம்	14	விவசாயிகள் பயிற்சி மையம், விச்சந்தாங்கல்	1.356
திருப்பத்தூர்	15	விவசாயிகள் பயிற்சி மையம், மின்னூர்	1.233
திருவண்ணாமலை	16	இளம்புழு வளர்ப்புப் பண்ணை, நாடானூர்	0.905

மாவட்டம்	வ. எண்	அரசு பட்டுப் பண்ணையின் பெயர்	வருவாய் (ரூ. இலட்சத்தில்)
திருப்பத்தூர்	17	இளம்புழு வளர்ப்புப் பண்ணை, புலியூர்	1.048
கடலூர்	18	விவசாயிகள் பயிற்சி மையம், நெய்வேலி	1.230
திருச்சிராப்பள்ளி	19	செயல்விளக்கம் மற்றும் பயிற்சி மையம், உப்பிலியாபுரம்	0.457
	20	மாதிரி மல்பெரி பட்டுப் பண்ணை, கலிங்கப்பட்டி	0.595
	21	மாதிரி மல்பெரி பட்டுப் பண்ணை, கருக்கமடை	0.546
	22	கலப்பின பட்டுப் பண்ணை, பச்சமலை	0.688
	23	விவசாயிகள் பயிற்சி மையம், மணிகண்டம்	2.001
தஞ்சாவூர்	24	விவசாயிகள் பயிற்சி மையம், நாஞ்சிக்கோட்டை	1.754
திண்டுக்கல்	25	மாதிரி மல்பெரி பட்டுப் பண்ணை, சி.கே.புதூர்	1.580
சிவகங்கை	26	இளம்புழு வளர்ப்புப் பண்ணை, நாகம்பட்டி	0.600
	27	செயல்விளக்கம் மற்றும் பயிற்சி மையம், ஓ.புதூர்	1.480
இராமநாதபுரம்	28	செயல்விளக்கம் மற்றும் பயிற்சி மையம், பாண்டியூர்	1.979
திருநெல்வேலி	29	செயல்விளக்கம் மற்றும் பயிற்சி மையம், திருநெல்வேலி (இருப்பு) வி.எம்.சத்திரம்	1.178

2023 ஏப்ரல் 13]

மாவட்டம்	வ. எண்	அரசு பட்டுப் பண்ணையின் பெயர்	வருவாய் (ரூ. இலட்சத்தில்)
விருதுநகர்	30	விவசாயிகள் பயிற்சி மையம், திருவில்லிபுத்தூர்	2.016
	31	மாதிரி மல்பெரி பட்டுப் பண்ணை, செவலூர்	2.077
கன்னியாகுமரி	32	செயல்விளக்கம் மற்றும் பயிற்சி மையம், கோணம்	1.536
		மொத்தம்	37.564

6.4.1.இளம்புழு வளர்ப்பு மையங்கள்

பட்டு முட்டை பொரித்தது முதல், இரண்டாம் தோலுரிப்பு வரையிலான 7 நாட்கள் புழுவளர்ப்பு, 'இளம்புழுவளர்ப்பு' என்றழைக்கப்படுகிறது. சுகாதாரம் பேணுவதிலும், தேவையான தட்ப—வெப்பநிலைகளைப் பராமரிப்பதிலும், தரமான மல்பெரி இலைகளை உணவாக அளிப்பதிலும் இளம்புழுவளர்ப்பிற்கு சிறப்பான கவனிப்பு தேவைப்படுகிறது.

இளம்புழுவளர்ப்பு செய்து அவற்றை விவசாயிகளுக்கு விநியோகம் செய்யும் மையங்கள் 'இளம்புழுவளர்ப்பு மையங்கள்' என்று அழைக்கப்படுகின்றன.

மாநிலத்தில் வெற்றிகரமான இரு சுழற்சியின பட்டு வளர்ப்பிற்கு முக்கிய காரணியாக இளம்புழுவளர்ப்பு முறை திகழ்கிறது. இளம்புழுவளர்ப்பு மையங்களிலிருந்து இளம்புழுக்களை பெற்று வளர்ப்பதால், பட்டு விவசாயிகளுக்கு புழுவளர்ப்பு காலத்தில் 7 நாட்கள் சேமிக்கப்படுவதுடன், பட்டுக் கூடு உற்பத்தி மற்றும் வருமானம் அதிகரிக்க உதவுகிறது.

26 அரசு பட்டுப் பண்ணைகள்மூலம் பட்டு விவசாயிகளுக்குத் தேவைப்படும் தரமான இளம்புழுக்கள் வளர்த்து விநியோகம் செய்யப்பட்டு வருகின்றன.

அரசு இளம்புழுவளர்ப்பு மையங்கள் தவிர 39 தனியார் இளம்புழுவளர்ப்பு மையங்களும் மாநிலத்தில் செயல்பட்டு வருகின்றன.

[2023 ஏப்ரல் 13

6.5.தொழில்நுட்ப சேவை மையங்கள்

மல்பெரி சாகுபடி, மல்பெரித் தோட்டப் பராமரிப்பு, பட்டுப் புழு வளர்ப்பு மற்றும் பயிர்ப் பாதுகாப்பு முறைகள் குறித்த தொழில்நுட்ப உதவிகளை பட்டு விவசாயிகளுக்கு அவர்களது இல்லம் தேடிச்சென்று வழங்கிட 105 தொழில்நுட்ப சேவை மையங்கள் துறையின் கட்டுப்பாட்டில் இயங்கி வருகின்றன.

ஒவ்வொரு தொழில்நுட்ப சேவை மையத்திலும் ஓர் பட்டு ஆய்வாளர்/உதவி பட்டு ஆய்வாளர் தலைமையில், 4—7 இளநிலை பட்டு ஆய்வாளர்கள், பட்டு விவசாயிகளது தேவைகளை கவனித்து வருகின்றனர்.

மேலும், இத்தொழில்நுட்ப சேவை மையங்கள் விவசாயிகளுக்கு பட்டு வளர்ச்சித் துறையின் பல்வேறு நலத் திட்டங்களின்மூலம் வழங்கப்படும் பயன்களைப் பெறவும் உதவுகின்றன.

தொழில்நுட்ப சேவை மையங்கள்

மண்டலம்	மாவட்டங்கள்	வ. எண்	உதவி இயக்குநர் அலுவலகம்	தொழில் நுட்ப சேவை மையங்களின் எண்ணிக்கை
தருமபுரி	கிருஷ்ணகிரி	1	ஓசூர்	7
		2	தேன்கனிக் கோட்டை	6
		3	கிருஷ்ணகிரி	4
	தருமபுரி	4	தருமபுரி	4
		5	பென்னாகரம்	6
ஈரோடு	சேலம்	6	சேலம்	7
	கோயம்புத்தூர்	7	கோயம்புத்தூர்	4
	திருப்பூர் ஈரோடு	8	உடுமலைப் பேட்டை	5
		9	ஈரோடு	7
		10	தாளவாடி	3
	நீலகிரி	11	குன்னூர்	1

2023 ஏப்ரல் 13]

மண்டலம்	மாவட்டங்கள்	வ. எண்	உதவி இயக்குநர் அலுவலகம்	தொழில் நுட்ப சேவை மையங்களின் எண்ணிக்கை
வேலூர்	வேலூர் திருப்பத்தூர் இராணிப்பேட்டை திருவள்ளூர் காஞ்சிபுரம் செங்கல்பட்டு	12	வாணியம்பாடி	8
	திருவண்ணாமலை மற்றும் திருப்பத்தூர் மாவட்ட மலைப் பகுதிகள்	13	திருவண்ணாமலை	6
	விழுப்புரம் கள்ளக்குறிச்சி கடலூர்	14	விழுப்புரம்	4
திருச்சிராப் பள்ளி	திருச்சிராப்பள்ளி புதுக்கோட்டை அரியலூர் திருவாரூர் தஞ்சாவூர் பெரம்பலூர் நாகப்பட்டினம் மயிலாடுதுறை	15	திருச்சிராப்பள்ளி	8
	நாமக்கல் கரூர்	16	நாமக்கல்	7
மதுரை	திண்டுக்கல் சிவகங்கை	17	திண்டுக்கல்	6
	தேனி மதுரை இராமநாதபுரம்	18	தேனி	5
	தென்காசி திருநெல்வேலி விருதுநகர் தூத்துக்குடி கன்னியாகுமரி	19	தென்காசி	7
			மொத்தம்	**105**

6.6.அரசு விதைக் கூடு அங்காடி, ஓசூர்

அரசு விதைக் கூடு அங்காடி, ஓசூர் ஒழுங்குபடுத்தப்பட்ட சந்தையாக செயல்பட்டு, 'பி1' விதைக் கூடு உற்பத்தி செய்யும் விவசாயிகள் மற்றும் அரசு ஆதார விதைப் பண்ணைகளில்

உற்பத்தி செய்து விற்பனைக்கு எடுத்துவரப்படும் இருசுழற்சியின விதைக் கூடுகள் இங்கு பரிவர்த்தனை செய்யப்பட்டு தரமான விதை உற்பத்திக்காக வித்தகங்களுக்கு வழங்கப்படுகிறது. விதைக் கூடுகளின் விற்பனை மதிப்பில் தலா 0.75 சதவீதம் சேவைக் கட்டணமாக விற்போர் மற்றும் வாங்குவோரிடம் இருந்து வசூலிக்கப்படுகிறது.

2022-2023 ஆம் ஆண்டில், இவ்விதைக் கூடு அங்காடியில் 35,585 கிலோ கிராம் விதைக் கூடுகள் ரூ.348.560 இலட்சம் மதிப்பிற்கு பரிவர்த்தனை செய்யப்பட்டுள்ளது.

6.7. அரசு பட்டுக் கூடு அங்காடிகள்

அரசு பட்டுக் கூடு அங்காடிகள், ஒழுங்குபடுத்தப்பட்ட சந்தையாக செயல்பட்டு, இடைத் தரகர்களை நீக்கி, விவசாயிகள் தங்களது பட்டுக் கூடுகளை விற்பனை செய்தல் மற்றும் பட்டு நூற்பாளர்கள் தங்களது மூலப் பொருளை வாங்குவதற்கான சந்தை வசதிகளை வழங்குகிறது. பட்டுக் கூடுகளின் விற்பனை மதிப்பில் தலா 0.75 சதவீதம் சேவைக் கட்டணமாக விற்போர் மற்றும் வாங்குவோரிடம் இருந்து வசூலிக்கப்படுகிறது.


மாநிலம் முழுவதும் பல்வேறு மாவட்டங்களில் 21 அரசு பட்டுக் கூடு அங்காடிகள் உள்ளன. 2022-2023 ஆம் ஆண்டில், இந்த பட்டுக் கூடு அங்காடிகளில் 1,801 மெட்ரிக் டன் பட்டுக் கூடுகள் ரூ.10,041.760 இலட்சம் மதிப்பிற்கு பரிவர்த்தனை செய்யப்பட்டுள்ளது.

2022-2023 ஆம் ஆண்டில் அரசு பட்டுக் கூடு அங்காடிகளில் பட்டுக் கூடு பரிவர்த்தனை

மாவட்டம்	வ. எண்	அரசு பட்டுக்கூடு அங்காடியின் பெயர்	பட்டுக் கூடுகள் (மெட்ரிக் டன்களில்)	பரி வர்த்தனை மதிப்பு (ரூ. இலட்சத்தில்)
கிருஷ்ணகிரி	1	ஒசூர்	49.091	272.592
	2	கிருஷ்ணகிரி	25.678	135.497

2023 ஏப்ரல் 13]

மாவட்டம்	வ. எண்	அரசு பட்டுக்கூடு அங்காடியின் பெயர்	பட்டுக் கூடுகள் (மெட்ரிக் டன்களில்)	பரி வர்த்தனை மதிப்பு (ரூ. இலட்சத்தில்)
தருமபுரி	3	பென்னாகரம், பாலக்கோடு	33.293	141.557
	4	தருமபுரி	583.260	3467.088
சேலம்	5	சேலம்	95.662	442.648
கோயம்புத்தூர்	6	கோயம்புத்தூர்	240.483	1322.387
ஈரோடு	7	ஈரோடு	74.905	450.666
	8	தாளவாடி	22.300	147.003
திருப்பூர்	9	மைவாடி	130.338	702.083
திருப்பத்தூர்	10	வாணியம்பாடி	74.888	411.402
திருவண்ணா—மலை	11	திருவண்ணாமலை	11.496	63.017
திருச்சிராப் பள்ளி	12	திருச்சிராப்பள்ளி	11.337	49.197
புதுக்கோட்டை	13	புதுக்கோட்டை	10.862	56.397
நாமக்கல்	14	இராசிபுரம்	124.608	600.322
திண்டுக்கல்	15	திண்டுக்கல்	15.626	59.917
	16	பழனி (இருப்பு) சி.கே.புதூர்	16.617	61.785
சிவகங்கை	17	சிவகங்கை	29.879	173.380
தேனி	18	தேனி	92.077	551.653
தென்காசி	19	நன்னகரம்	81.250	483.008
விருதுநகர்	20	திருவில்லிபுத்தூர்	57.126	330.570
கன்னியாகுமரி	21	நாகர்கோவில்	20.296	119.591
மொத்தம்			**1801.072**	**10041.760**



கடந்த மூன்று ஆண்டுகளில் பட்டுக் கூடுகளின் சராசரி விலை

விவசாயிகளின் பட்டுக் கூடுகளுக்கு நல்ல விலை கிடைப்பதால், 2021—2022 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில், 2022—2023 ஆம் ஆண்டில் பட்டுக் கூடுகளின் சராசரி விலை 16 சதவீதம் உயர்ந்துள்ளது.

பட்டுக் கூடுகள் பரிவர்த்தனையில் வெளிப்படைத் தன்மையை உறுதிசெய்திட அனைத்து அரசு பட்டுக் கூடு அங்காடிகளிலும் மின்னணு ஏல முறையை அறிமுகப்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

6.8. அரசு பட்டு நூற்பு / முறுக்கேற்றும் அலகுகள்

பட்டுத் தொழிலின் முக்கிய பிரிவான பட்டுக் கூடுகளுக்கு பிந்தைய பிரிவிற்கு துணைபுரிவதற்காக, பட்டுநூற்பு மற்றும் பட்டு முறுக்கேற்றும் தொழில்முனைவோர்களுக்கான மாதிரி அலகுகளாக அரசு பலமுனை பட்டுநூற்பு அலகுகள் செயல்பட்டு வருகின்றன.

அரசு பட்டு நூற்பகங்கள், பட்டுக் கூடு அங்காடி ஏலத்தில் பங்கேற்று பட்டு விவசாயிகளது உற்பத்திப் பொருளான பட்டுக் கூடுகளுக்கு நியாயமான விலை கிடைக்க உதவுகின்றன.

இத்துறையின்கீழ் 8 அரசு பட்டு நூற்பு அலகுகள் செயல்பட்டு வருகின்றன. இந்த 8 அரசு பட்டு நூற்பு அலகுகளில், ஓசூர், சேலம்,

2023 ஏப்ரல் 13]

தாளவாடி மற்றும் நன்னகரம் ஆகிய இடங்களில் உள்ள பட்டு நூற்பு அலகுகள் பட்டு முறுக்கேற்றும் அலகுகளுடன் செயல்பட்டு வருகின்றன. இங்கு கச்சாப்பட்டு நூல் முறுக்கேற்றிய பட்டு நூலாக மாற்றப்படுகிறது.

2022-2023 ஆம் ஆண்டில் அரசு பட்டுநூற்பு அலகுகளில் பட்டு உற்பத்தி மற்றும் வருவாய்

மாவட்டம்	வ. எண்	அலகின் பெயர்	கச்சாப் பட்டு உற்பத்தி (கி.கி)	முறுக்கேற்-றிய பட்டு உற்பத்தி (கி.கி)	வருவாய் (ரூ. இலட்சத்தில்)
கிருஷ்ணகிரி	1	ஓசூர்	2025.00	524.60	99.678
சேலம்	2	சேலம்	1676.95	485.65	76.441
ஈரோடு	3	தாளவாடி	1428.80	362.30	67.673
திருப்பத்தூர்	4	வாணியம்பாடி	523.65	0	20.713
புதுக்கோட்டை	5	புதுக்கோட்டை	1297.55	0	52.091
சிவகங்கை	6	சிவகங்கை	2360.00	0	108.833
தென்காசி	7	நன்னகரம்	2870.00	2142.00	129.194
கன்னியாகுமரி	8	கோணம்	2266.65	0	100.530
மொத்தம்			**14448.60**	**3514.55**	**655.153**

2022-2023 ஆம் ஆண்டில், அரசு பட்டு நூற்பு அலகுகளில் கச்சாப் பட்டு, முறுக்கேற்றிய பட்டு மற்றும் இதர உபப் பொருட்கள் விற்பனைமூலம் ரூ.655.153 இலட்சம் வருவாய் கிடைக்கப் பெற்றுள்ளது.

6.9.தனியார் பட்டு நூற்பகங்கள்

மாநிலத்தில் உற்பத்தி செய்யப்படும் பட்டுக் கூடுகளின் நுகர்வினை அதிகரிக்கவும், பட்டு விவசாயிகளால் உற்பத்தி செய்யப்படும் பட்டுக் கூடுகளுக்கு நியாயமான விலை கிடைக்கச் செய்யவும், தொழில்முனைவோர்களை இலாபகரமான பட்டுநூற்புத் தொழிலில் ஈடுபட ஊக்குவிக்கத் தேவையான நடவடிக்கைகளை பட்டு வளர்ச்சித் துறை எடுத்து வருகிறது.

பட்டுநூற்பு அலகுகளை நிறுவிட தொழில்முனைவோர்களை ஊக்குவித்து பட்டுக்கூட்டிற்கு பிந்தைய பிரிவினை வலுப்படுத்துவதன்மூலம், தமிழ்நாட்டில் உற்பத்தியாகும் பட்டுக் கூடுகளை முழுமையாக மாநிலத்திற்குள்ளாகவே பயன்படுத்திட இயலும்.

தற்போது தமிழ்நாட்டில் 155 தனியார் பட்டு நூற்பகங்கள் இயங்கி வருகின்றன.

தனியார் பட்டு நூற்பு அலகுகள்

வ. எண்	பெயர்	எண்ணிக்கை
1	சர்க்கா பட்டுநூற்பு அலகுகள்	15
2	காட்டேஜ் பேசின் பட்டுநூற்பு அலகுகள்	84
3	பலமுனை பட்டுநூற்பு அலகுகள்	46
4	தானியங்கி பட்டுநூற்பு அலகுகள்	9
5	தானியங்கி டூபியான் பட்டுநூற்பு அலகு	1
	மொத்தம்	**155**


2023-2024 ஆம் ஆண்டில், 400 முனைகள் கொண்ட ஏழு தானியங்கி பட்டுநூற்பு அலகுகளும், 200 முனைகள் கொண்ட இரண்டு தானியங்கி பட்டுநூற்பு அலகுகளும், 142 முனைகள் ஒரு தானியங்கி டூபியான் பட்டுநூற்பு அலகும் நிறுவிட தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இந்த பட்டுநூற்பு அலகுகள் ஆண்டொன்றுக்கு 273.00 மெட்ரிக் டன் கச்சாப் பட்டுநூலினை உற்பத்தி செய்யும் திறன் கொண்டவையாகும்.

6.10. அரசு அண்ணா பட்டுப் பரிமாற்றகம், காஞ்சிபுரம்

மாநிலத்தில் உள்ள பட்டு நூற்பாளர்களால் உற்பத்தி செய்யப்படும் கச்சாப் பட்டு நூல் காஞ்சிபுரம் மற்றும் சேலத்தில் செயல்பட்டு வரும் அரசு அண்ணா பட்டுப் பரிமாற்றகங்களில் பரிவர்த்தனை செய்யப்படுகிறது. அரசு அண்ணா பட்டுப் பரிமாற்றகம் ஒழுங்குபடுத்தப்பட்ட சந்தையாக செயல்பட்டு, பட்டு நூற்பாளர்கள் தங்களது உற்பத்திப் பொருளான கச்சாப்பட்டு நூலை சந்தைப்படுத்துவதற்கான வசதிகளை வழங்குகிறது.

2023 ஏப்ரல் 13]

பட்டின் தரம் மற்றும் கச்சாப்பட்டு நூலுக்கு நிலவும் சந்தை விலைக்கேற்ப அடிப்படை விலை நிர்ணயம் செய்யப்பட்டு கச்சாப் பட்டு நூல் ஏலம் விடப்படுகிறது. பெருநெசவாளர்கள், முறுக்காளர்கள் மற்றும்'டான்சில்க்'போன்றோர்,வெளிப்படையான ஏலத்தில் பங்கேற்று பட்டுநூலினை கொள்முதல் செய்கின்றனர். பட்டுநூலின் விற்பனை மதிப்பில் தலா 0.75 சதவீதம் சேவைக் கட்டணமாக விற்போர் மற்றும் வாங்குவோரிடம் இருந்து வசூலிக்கப்படுகிறது.



கடந்த மூன்று ஆண்டுகளில் கச்சாப் பட்டுநூலின் சராசரி விலை

2022-2023 ஆம் ஆண்டில், அரசு அண்ணா பட்டுப் பரிமாற்றகம் காஞ்சிபுரம் மற்றும் சேலம் கிளைகளில் 149.691 மெட்ரிக் டன் கச்சாப் பட்டு நூல் ரூ.5,947.885 இலட்சம் மதிப்பிற்கு பரிவர்த்தனை செய்யப்பட்டுள்ளது.

2022-2023 ஆம் ஆண்டில் அரசு அண்ணா பட்டு பரிமாற்றகங்களில் கச்சாப்பட்டு பரிவர்த்தனை

வ. எண்	பட்டின் வகை	அளவு (மெட்ரிக் டன்களில்)	மதிப்பு (ரூ. இலட்சத்தில்)
1	*கச்சாப் பட்டு*	*104.299*	*5,105.667*

வ. எண்	பட்டின் வகை	அளவு (மெட்ரிக் டன்களில்)	மதிப்பு (ரூ. இலட்சத்தில்)
2	டூபியான் பட்டு	45.392	842.218
மொத்தம்		**149.691**	**5,947.885**

கச்சாப்பட்டு நூல் பரிவர்த்தனையில் வெளிப்படைத் தன்மையை உறுதி செய்திட அரசு அண்ணா பட்டு பரிமாற்றகங்களில் மின்னணு ஏல முறை அறிமுகப்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

6.11.தமிழ்நாடு பட்டு வளர்ச்சி பயிற்சி நிலையம், ஓசூர்

பட்டு வளர்ச்சித்துறையின் களப்பணியாளர்களுக்கு புத்தாக்கப் பயிற்சியும், புதிய விவசாயிகள் மற்றும் பட்டு நூற்பாளர்களுக்கு பயிற்சியும் தொடர்ந்து வழங்கப்படுவதற்காக ஓசூரில் அனைத்து உட்கட்டமைப்பு மற்றும் உறைவிட வசதிகளுடன் கூடிய ஒரு பயிற்சி நிலையத்தினை பட்டு வளர்ச்சித் துறை கொண்டுள்ளது.

அலுவலர்கள் மற்றும் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டு வரும் பயிற்சி குறித்த விவரங்கள்:

வ. எண்	பயிற்சியின் பெயர்	காலம்
1.	மத்திய பகுதித் திட்டம்: விவசாயிகள் பயிற்சி	5 நாட்கள்
2.	ஆத்மா அலுவலர் பயிற்சி	3 நாட்கள்
3.	அலுவலர்களுக்கான களப் பயிற்சி	5 நாட்கள்

‘பட்டுமலர்’ எனும் மாதாந்திர தொழில்நுட்ப இதழ் இப்பயிற்சி நிலையம்மூலம் அச்சிடப்பட்டு இதழ் ஒன்றிற்கு ரூ.2/— என்ற மானிய விலையில் பட்டு விவசாயிகளுக்கு விநியோகிக்கப்படுகிறது. பட்டு வளர்ச்சிக்கு உதவிடும் வகையில் காலத்திற்கேற்ப புதிய தொழில்நுட்பங்கள், மேம்பாடுகள் குறித்து பட்டு விவசாயிகள் அறிந்து கொள்ள இது துணைபுரிகிறது.

2023 ஏப்ரல் 13]

6.12.கூட்டுறவுச் சங்கங்கள்

பட்டு வளர்ச்சித் துறையின்கீழ் ‘தமிழ்நாடு கூட்டுறவு பட்டு உற்பத்தியாளர் இணையம்’ (டான்சில்க்) தலைமைக் கூட்டுறவு இணையம் மற்றும் 25 இதர பட்டுத் தொழிற்கூட்டுறவுச் சங்கங்கள் செயல்பட்டு வருகின்றன.

6.12.1.தொழிற்கூட்டுறவுச் சங்கங்கள்

பட்டுத் தொழிலுக்கு தேவைப்படக் கூடிய இடுபொருட்களை உறுப்பினர்களுக்கு வழங்குவது, மூலப்பொருட்களை ஆயத்தப் பொருட்களாக மாற்றுவதற்காக உறுப்பினர்களுக்கு வழங்குவது, ஆயத்தப் பொருட்களை உறுப்பினர்களிடமிருந்து பெற்று அவற்றை நல்ல விலைக்கு விற்பனை செய்வதன்மூலம் சங்க உறுப்பினர்களுக்கு வேலைவாய்ப்பு அளித்து, அவர்களின் பொருளாதார நிலையை மேம்படுத்துவது போன்றவை, இந்த தொழிற்கூட்டுறவுச் சங்கங்களின் செயல்பாடுகளாகும்.

6.12.2.தமிழ்நாடு கூட்டுறவு பட்டு உற்பத்தியாளர் இணையம் (டான்சில்க்), காஞ்சிபுரம்

தமிழ்நாடு கூட்டுறவு பட்டு உற்பத்தியாளர் இணையம் (டான்சில்க்), தமிழ்நாட்டிலுள்ள பட்டு கூட்டுறவுச் சங்கங்களின் தலைமைக் கூட்டுறவு இணையமாக, பதிவு செய்யப்பட்டு, காஞ்சிபுரத்தில் இயங்கிவருகிறது.

இதன் கிளைகள் ஆரணி, கோயம்புத்தூர், ஈரோடு, காஞ்சிபுரம், கும்பகோணம் மற்றும் சேலம் ஆகிய ஆறு இடங்களில் அமைந்துள்ளன. பட்டு நூற்பாளர்கள், முறுக்காளர்கள், பட்டு நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் மற்றும் சர்வோதய சங்கங்கள் இதன் உறுப்பினர்களாக உள்ளனர். அரசு அண்ணா பட்டு பரிமாற்றகத்திலிருந்து இவ்விணையம் பெருமளவு கச்சாப் பட்டினை கொள்முதல் செய்து, தனது உறுப்பினர்களுக்கு விநியோகித்து வருகிறது.

பட்டு நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள், கதர் மற்றும் கிராமத் தொழில் வாரியம் மற்றும் சர்வோதய சங்கங்கள் போன்ற சான்றளிக்கப்பட்ட நிறுவனங்கள் ‘டான்சில்க்’ இணையத்திலிருந்து முறுக்கேற்றிய பட்டினை கொள்முதல் செய்கின்றன. முறுக்கேற்றிய பட்டு நூல் நெசவு செய்யப்பட்டு சேலை, வேட்டி மற்றும் இதர பட்டுப் பொருட்களாக விற்பனை செய்யப்படுகின்றன.

2022-2023 ஆம் ஆண்டில் டான்சில்க், காஞ்சிபுரத்தின் பட்டு நூல் கொள்முதல் மற்றும் விற்பனை

வ. எண்	பட்டின் வகை	கொள்முதல்		விற்பனை	
		அளவு (மெட்ரிக் டன்களில்)	மதிப்பு (ரூ. கோடியில்)	அளவு (மெட்ரிக் டன்களில்)	மதிப்பு (ரூ. கோடியில்)
1.	கச்சாப் பட்டு	107.224	52.754	105.262	52.578
2.	டூபியான் பட்டு	45.392	8.485	45.392	8.571
3.	முறுக்கேற்றிய பட்டு	126.802	74.404	126.802	74.425
மொத்தம்		**279.418**	**135.643**	**277.456**	**135.574**

7.பட்டு வளர்ச்சித் துறை பணியமைப்பு

பட்டு வளர்ச்சித் துறை சீரிய முறையில் நிரவலாக்கப்பட்ட, விரிவாக்க அமைப்புகளுக்கான தொழில்நுட்பப் பணியாளர்கள் மற்றும் அமைச்சுப் பணியாளர்களை கொண்டுள்ளது. மாநிலத்தில் பல்வேறு பட்டு வளர்ச்சித் திட்டங்களை செயல்படுத்துவதற்காக தமிழ்நாடு அரசால் அனுமதிக்கப்பட்டுள்ள பணியிடங்கள் பின்வருமாறு:

வ. எண்	பதவியின் பெயர்	அனுமதிக்கப்பட்டுள்ள எண்ணிக்கை
1	இயக்குநர்	1
2	இணை இயக்குநர்	3
3	துணை இயக்குநர் (நிருவாகம்)	1
4	துணை இயக்குநர்	9
5	உதவி இயக்குநர்	27
6	பட்டு ஆய்வாளர்	67
7	உதவி பட்டு ஆய்வாளர்	179

2023 ஏப்ரல் 13]

வ. எண்	பதவியின் பெயர்	அனுமதிக்கப்பட்டுள்ள எண்ணிக்கை
8	*இளநிலை பட்டு ஆய்வாளர்*	*824*
9	*அமைச்சுப் பணியாளர், மற்றோர்*	*316*
	மொத்தம்	**1,427**

8.நிலையான வளர்ச்சி இலக்குகள்

தமிழ்நாட்டினை இந்தியாவிலேயே வறுமையிலிருந்து விடுபட்ட, மிக வளமான மற்றும் முற்போக்கான மாநிலமாக ஆக்குவதுடன், அதன் மக்கள் ஒரு நவீன சமுதாயத்தின் அனைத்து அடிப்படை வசதிகளையும் அடைந்து, சுற்றுச்சூழலுக்கு உகந்த வாழ்க்கையை உலகத்தின் பிற பகுதிகளுடன் இயைந்து வாழ வேண்டும் என்பதே தமிழ்நாடு அரசின் தொலைநோக்குத் திட்டம் ஆகும்.

பட்டுத் தொழில் பல்வேறு வழிகளில் பொருளாதார ரீதியாக பயனளிக்கிறது. முதலாவதாக, பட்டு உற்பத்தியில் ஈடுபடும் பட்டு விவசாயிகள் மற்றும் பட்டுத் தொழில் மேற்கொள்பவர்களுக்கு சீரான வருமானத்தை தருகிறது. இது வறுமையிலிருந்து மீளவும், கிராமப்புற வளர்ச்சிக்கும் உதவுகிறது. இரண்டாவதாக, பட்டு வளர்ப்பின் குறைவான அறுவடை காலம், குறைந்த முதலீட்டில் அதிக வருமானம் ஆகியன பட்டுத் தொழிலை சிறந்த வருவாய் அளிக்கக்கூடிய தொழிலாக மாற்றுகிறது. மூன்றாவதாக, குறிப்பாக ஆடம்பரப் பொருட்களுக்கான சந்தையில், பட்டின் தேவை ஒப்பீட்டளவில் அதிகமாக இருப்பதால், பட்டுத் தயாரிப்புகளுக்கு அதிக விலை கிடைக்கிறது. இறுதியாக, பட்டு வளர்ப்பு, பெண்கள், சமூக மற்றும் பொருளாதார ரீதியாக பின்தங்கிய பிரிவினருக்கு வேலை வாய்ப்புகளை வழங்குவதோடு, பாலின சமத்துவத்தை மேம்படுத்தவும் வறுமையை குறைக்கவும் உதவுகிறது. ஒட்டுமொத்தமாக, நாட்டின் பொருளாதார வளர்ச்சி மற்றும் மேம்பாட்டிற்கு, குறிப்பாக கிராமப்புறங்களில் குறிப்பிடத்தக்க பங்களிப்பை வழங்கும் ஆற்றலை பட்டுத்தொழில் கொண்டுள்ளது.

9. துறையின் அனைத்து செயல்பாடுகளையும் கணினிமயமாக்குவதற்கு மென்பொருள் உருவாக்குதல்

நோயற்ற பட்டு முட்டைத் தொகுதிகள் (Disease Free Layings — DFLs) உற்பத்தி முதல் கச்சாப்பட்டு உற்பத்தி வரையிலான துறையின் அனைத்து செயல்பாடுகளையும் உடனுக்குடன் கண்காணித்து, குறைபாடுகளைக் கண்டறிந்து அவற்றை சரிசெய்யும் நோக்கத்தில், தமிழ்நாடு மின் ஆளுமை முகமையின் உதவியுடன் அனைத்து செயல்பாடுகளையும் கணினிமயமாக்குவதற்கு, ERP (Enterprise Resource Planning) போன்று ஒரு மென்பொருள் உருவாக்கும் பணிகள் தொடங்கப்பட்டு, முடிவுறும் தருவாயில் உள்ளது. இந்த மென்பொருள் பயனாளர்களின் உபயோகத்திற்கு ஏற்றதாகவும், பிழைகள் ஏதும் இன்றியும் இருப்பதை உறுதி செய்திட, மென்பொருளின் ஒவ்வொரு தொகுதிகளும் அதை சார்ந்த பயனாளர்கள்மூலம் சோதனை செய்யப்பட்டு வருகிறது.

10. 2023-2024 ஆம் ஆண்டிற்கான நிதி ஒதுக்கீடு

பட்டு வளர்ச்சித் துறைக்கான 2023—2024 ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டில், திட்டம் மற்றும் திட்டம் சாரா பணிகளுக்கெனகீழ்க்கண்டுள்ளவாறு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது:

வ. எண்	திட்டத்தின் பெயர்		2023-2024 ஆண்டுக்கான நிதி ஒதுக்கீடு ரூபாய் இலட்சத்தில்)
1	திட்டப்பணிகள்		
அ	1. பட்டு வளர்ச்சி மேம்பாடு மற்றும் விலை உறுதிப்படுத்தும் நிதியின்கீழ் வளர்ச்சித் திட்டங்கள்	150.00	370.00
	2. பட்டு வளர்ச்சி மேம்பாடு மற்றும் விலை உறுதிப்படுத்தும் நிதி (கணக்குகள் இடையே மாற்றம்)	220.00	
ஆ	புதிய திட்டங்கள்		2091.97

2023 ஏப்ரல் 13]

வ. எண்	திட்டத்தின் பெயர்	2023-2024 ஆண்டுக்கான நிதி ஒதுக்கீடு ரூபாய் இலட்சத்தில்)
இ	மேற்குத் தொடர்ச்சி மலைகள் அபிவிருத்தித் திட்டம்	0.01
ஈ	சிறப்பு பகுதி மேம்பாட்டுத் திட்டம்	0.01
உ	இராஷ்ட்ரிய க்ரிஷி விகாஸ் யோஜனா	100.03
	திட்டப் பணிகள் மொத்தம்	2562.02
2	திட்டம் சாரா பணிகள்	
	அரசு அலகுகளைப் பராமரித்தல், ஊதியம் மற்றும் கூலித் தொகைகள் முதலியன	6647.86
	ஒட்டுமொத்தம் (திட்டப் பணிகள் + திட்டம் சாரா பணிகள்)	9209.88

தமிழ்நாடு கைத்திறத் தொழில்கள் வளர்ச்சிக் கழகம்

1. முன்னுரை

தமிழ்நாடு சங்க காலத்திலிருந்து கைவினைப்பொருட்களின் வளமான களஞ்சியமாக திகழ்ந்து வருகிறது. தமிழ்நாட்டின் கைவினைப்பொருட்கள் தொன்றுதொட்டு வரும் நமது பாரம்பரியம், கலாச்சாரம் மற்றும் பண்பாட்டை வெளிப்படுத்துகின்றன. தமிழ்நாடு கைவினைப் பொருட்கள் வளர்ச்சிக் கழகமானது தமிழ்நாட்டின் கைவினைப் பொருட்களின் பொக்கிஷமாக விளங்குகிறது, இந்நிறுவனம் 1973 ஆம் ஆண்டு அப்போதைய தமிழ்நாடு முதலமைச்சர் டாக்டர். கலைஞர் அவர்களால் ஒரு பொதுத் துறை நிறுவனமாக துவக்கப்பட்டது. இது மாநிலத்தின் கைவினைப் பொருட்களுக்காக

[2023 ஏப்ரல் 13


பிரத்யேகமாக உருவாக்கப்பட்ட நிறுவனமாகும். இந்நிறுவனம் அதன் வணிகப் பெயரான "பூம்புகார்"மூலம் நன்கு அறியப்படுகிறது. கைவினைஞர்களால் உற்பத்தி செய்யப்படும் கைவினைப் பொருட்களை உள்நாடு மற்றும் வெளிநாடுகளில் பிரபலப்படுத்துவதும் சந்தைப்படுத்துவதும் இக்கழகத்தின் முக்கிய நோக்கமாகும். கைவினைஞர்களின் வாழ்வாதாரத்தை உயர்த்துவதற்கு பல்நோக்கு நலத் திட்டங்களையும் மேம்பாட்டுத் திட்டங்களையும் முனைப்புடன் இந்நிறுவனம் செயல்படுத்தி வருகிறது.

2.நிறுவனத்தின் முக்கிய நோக்கங்கள்

- தமிழ்நாட்டிலுள்ள கைவினைஞர்களுக்கு சந்தை வாய்ப்பினை ஏற்படுத்துவதன்மூலம் அவர்களின் வாழ்வாதாரம் மற்றும் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துதல்.
- கைவினைஞர்களுக்கு உரிய பயிற்சி அளிப்பதன்மூலம் அவர்களின் உற்பத்தித் திறனை உயர்த்துதல்.
- கைவினைஞர்களின் உற்பத்தியை அதிகரித்து அவர்களின் உற்பத்தித் தரத்தை உயர்த்துதல்.
- உற்பத்தித் திறனில் புதிய வடிவமைப்புகளையும், புதுமைகளையும் அறிமுகப்படுத்துதல்.
- கைவினைப் பொருட்கள் உற்பத்தியில் ஏற்படும் பணிப்பளுவை குறைத்து, கைத்திறத் தொழிலில் நேரிடும் இடர்பாடுகளை நீக்குதல்.
- கைவினைஞர்களின் பாதுகாப்பு மற்றும் பொருளாதார உதவிகளை உறுதிசெய்தல்.
- மாநிலத்தில் உற்பத்தி செய்யப்படும் கைவினைப் பொருட்கள், கைவினைஞர்களின் விவரங்களை டிஜிட்டல் முறையில் ஆவணமாக்கி பதிவு செய்து சந்தை வாய்ப்புகளை விரிவாக்குதல்.
- கைத்திறத் தொழிலில் கைவினைஞர்களின் கடின உழைப்பு, கலைப் படைப்பு மற்றும் அர்ப்பணிப்பை விருதுகள் வழங்கி அங்கீகரித்தல்.
- மாநில மற்றும் ஒன்றிய அரசின் கைவினைக் கலைஞர்களுக்கான வளர்ச்சி மற்றும் நலத் திட்டங்களை செயல்படுத்துதல்.

2023 ஏப்ரல் 13]

3.நிர்வாக அமைப்பு



3.1.நிறுவன அமைப்பு

தலைமை அலுவலகம்

இந்நிறுவனம் தலைவர், இயக்குநர்கள் குழு உறுப்பினர்களைக் கொண்ட அமைப்பாகும். இந்நிறுவனத்தின் செயலாக்க அதிகாரியாக மேலாண் இயக்குநர் நியமிக்கப்பட்டுள்ளார். இவருக்கு அனைத்து நிர்வாக அதிகாரங்களும் வழங்கப்பட்டுள்ளது.

மேலாண் இயக்குநரைத் தொடர்ந்து இரண்டாம் நிலை அதிகாரிகள், விற்பனை மற்றும் உற்பத்தி மேலாளர், நிதி மேலாளர், பணி மேலாளர் உள்ளனர். அதைத் தொடர்ந்து உதவி மேலாளர் ஒவ்வொரு பிரிவுக்கும் கண்காணிப்பாளர்கள் மற்றும் உதவியாளர்கள் உள்ளனர்.

விற்பனை நிலையம்

பூம்புகார் விற்பனை நிலையங்களானது, விற்பனை நிலைய மேலாளர்களின் தலைமையின்கீழ், கணக்காளர்கள், இளநிலை உதவியாளர்கள் மற்றும் விற்பனை உதவியாளர்களைக் கொண்டு செயல்பட்டு வருகிறது.

4.நிலையான வளர்ச்சி இலக்குகள் (Sustainable Development Goals)

நிலையான வளர்ச்சி இலக்குகள், ஐக்கிய நாடுகளின் உறுப்பு நாடுகளுக்காக வகுக்கப்பட்டுள்ளன, இது சிறந்த எதிர்காலத்திற்காக வகுக்கப்பட்ட செயல் திட்ட குறிகாட்டிகளுடன் பதினேழு இலட்சியங்கள் மற்றும் இலக்குகளை நிர்ணயித்துள்ளது.

நீண்ட கால மற்றும் குறுகிய கால நிலையான வளர்ச்சி இலக்குகளை தமிழ்நாடு கைத்திறத் தொழில்கள் வளர்ச்சிக் கழகம் பின்பற்றுகிறது. கைவினைஞர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதும், பயிற்சி, சந்தைப்படுத்தல், வடிவமைப்பு மற்றும் ஆராய்ச்சி மற்றும் நேரடி உதவிகளை வழங்குவதன்மூலம் அவர்களின் திறன்களை மேம்படுத்துவதை முக்கிய நோக்கமாக கொண்டுள்ளது. கைவினைஞர்களால் உற்பத்தி செய்யப்பட்ட கைவினைப்பொருட்கள் நிறுவனத்தின் விற்பனை நிலையங்கள்மூலம் சந்தைப்படுத்தி அவர்களுக்கு வருமானம் ஈட்ட உதவியாக உள்ளது.

2023 ஏப்ரல் 13]

நிலையான வளர்ச்சியின் முக்கிய குறிக்கோள்களில் பின்வரும் இலக்குகளை பூம்புகார் நிறுவனம் கொண்டுள்ளது.

இலக்கு (1) : வறுமையின்மை:

(1.1.) எல்லா இடங்களிலும் உள்ள அனைத்து மக்களுக்கும் தீவிர வறுமை ஒழிப்பு:

கைவினைஞர்கள் பயன்பெறும் வகையில், மாநில மற்றும் ஒன்றிய அரசால் அங்கீகரிக்கப்பட்ட வடிவமைப்பாளர்களை ஈடுபடுத்துவதன்மூலம் புதிய வடிவமைப்புகளை உருவாக்கவும், உற்பத்தித் திறனை மேம்படுத்தவும், வருவாயை அதிகரிக்கவும், திறன் மேம்பாட்டுத் திட்டங்கள், வடிவமைப்பு மற்றும் தொழில்நுட்பப் பட்டறைகள் தொடர்ந்து நடத்தப்படுகின்றன.

2022-2023 ஆம் ஆண்டில் சுமார் 200 கைவினைஞர்களுக்கு திறன் மேம்பாட்டு பயிற்சி மற்றும் இலவச உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளது. இவர்களில் பெரும்பாலானோர் பெண்கள் மற்றும் இளம் கைவினைஞர்கள் ஆவார்கள்.

கைவினைஞர்களின் வருமானத்தை உயர்த்தவும், அவர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தவும் இந்தியாவின் முக்கிய நகரங்களில் விற்பனையுடன்கூடிய கண்காட்சிகள் நடத்தப்படுகின்றன.

மேலும், பூம்புகார் விற்பனை நிலையங்கள்மூலம் கைவினைஞர்கள் தயாரிக்கும் பொருட்களை விற்பனை செய்து அவர்களின் வாழ்வாதாரம் உயர்த்தப்படுகிறது.

கைவினைஞர்களின் நலன் மற்றும் சமூக பாதுகாப்பு நடவடிக்கைகள் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் கைவினைஞர்களுக்கான விழிப்புணர்வு முகாம்கள் தமிழ்நாடு முழுவதும் நடத்தப்பட்டுள்ளன.

இலக்கு [8]: கண்ணியமான வேலை மற்றும் பொருளாதார வளர்ச்சி:

(8.5) அனைத்து பெண்கள் மற்றும் ஆண்களுக்கும் ஆக்கவளமுள்ள வேலைவாய்ப்பினை முழுமையாக வழங்குதல்:

நீண்ட கால உத்தியாக முக்கிய கைவினைப் பொருட்களுக்கு 11 பொது வசதி மையங்கள் மற்றும் 3 நலிந்து வரும் கைவினை பொருட்களான களிமண், சுடுகளிமண் மற்றும் பத்தமடை பாய்

போன்ற கைத்திறத் தொழில்களுக்கு பொது வசதி மையங்கள் நிறுவப்பட்டுள்ளன. இந்த பொது வசதி மையங்களில் நவீன இயந்திரங்கள் மற்றும் கருவிகள் பொருத்தப்பட்டுள்ளன. இதனை கைவினைஞர்கள் இலவசமாக பயன்படுத்திக் கொள்ளலாம். இதன்மூலம் சுமார் 5,000 கைவினைஞர்கள் பயனடைவார்கள்.

முப்பரிமாண நவீன மாதிரிகள் தயாரிக்க வடிவமைப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு நிலையம் (DRDC) நிறுவப்பட்டுள்ளது.

இவ்வாறான முயற்சிகளால் மாற்றுத்திறனாளி கைவினைஞர்கள் உட்பட அனைத்து வயதுடையவர்கள் மற்றும் ஆண், பெண் இருபாலரும் போதுமான வருவாயினை பெற இயலும்.

5. சந்தைப்படுத்துவதற்கான செயல்பாடுகள்

5.1.விற்பனை நிலையங்கள்

பூம்புகார் நிறுவனம் சென்னை, கோயம்புத்தூர், ஈரோடு, சேலம், தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி, மதுரை, திருநெல்வேலி, கன்னியாகுமரி, மாமல்லபுரம், புது தில்லி மற்றும் கொல்கத்தா ஆகிய இடங்களில் 12 விற்பனை நிலையங்களை அமைத்துள்ளது. மேலும், வண்டலூர் உயிரியல் பூங்கா, சென்னை & கோயம்புத்தூர் விமான நிலையங்கள், எழும்பூர் அருங்காட்சியகம், சுவாமிமலை, கெவாடியா (குஜராத்) போன்ற இடங்களில் 9 சிறிய விற்பனைக் கூடங்கள் அமைத்து தமிழ்நாடு கைவினைக் கலைஞர்களின் படைப்புகளை உலக அளவில் சந்தைப்படுத்த உதவி செய்து வருகிறது.

அனைத்து பூம்புகார் விற்பனை நிலையங்களிலும் (Centralised Computer Billing) மையப்படுத்தப்பட்ட கணினிமூலம் விலைப்பட்டியல், கண்காணிப்பு கேமரா மற்றும் மின் அலுவலகம் (e—office) அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன.

5.2.பூம்புகார் விற்பனை நிலையங்களை நவீனப்படுத்துதல்

இந்நிறுவனம் 2022-2023 ஆம் நிதியாண்டில் சென்னை, கோயம்புத்தூர், புது தில்லி, கொல்கத்தா மற்றும் கடலூர் ஆகிய இடங்களில் உள்ள பூம்புகார் விற்பனை நிலையங்களை ரூ.6.00 கோடி செலவில் நவீனமயமாக்கும் பணிகள் நடைபெற்று

2023 ஏப்ரல் 13]

வருகின்றன. மேலும், சேலத்தில் ரூ.2.00 கோடி செலவில் புதிய விற்பனை நிலையம் கட்டுவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

5.3. கண்காட்சிகள்

5.3.1.கருத்துசார் கண்காட்சி (Thematic Exhibition)

*இந்நிறுவனத்தின் விற்பனை நிலையங்கள்மூலம் கைவினை கலைஞர்கள் உற்பத்தி செய்யும் கலைப் பொருட்களை நேரடியாக விற்பனை செய்ய 57*N *உட்புற/வெளிப்புற கண்காட்சிகள் நடத்தப்பட்டன. மேலும் விற்பனை நிலையங்களில் கொலு பொம்மைகள், கிருஷ்ண தர்ஷன், கணேஷ் தர்ஷன் போன்ற கருத்துசார் கண்காட்சிகள் இவ்வாண்டில் நடத்தப்பட்டது.*

மாமல்லபுரத்தில் 44—வது செஸ் ஒலிம்பியாட் முன்னிட்டு 28.07.2022 முதல் 10.08.2022 வரை மற்றும் ஜி—20 உச்சிமாநாட்டை முன்னிட்டு 31.01.2023 மற்றும் 01.02.2023 ஆகிய நாட்களில் சிறப்பு கண்காட்சிகள் நடத்தப்பட்டன.

5.3.2.பிற கண்காட்சிகள்

சிறப்பு கண்காட்சி நிகழ்வுகள் ஏற்காட்டிலும், புது தில்லியில் உள்ள தமிழ்நாடு இல்லம், அமைச்சரவை செயலகம், இந்திய சர்வதேச வர்த்தக கண்காட்சி, புவிசார் குறியீடு பெற்ற பொருட்கள் கண்காட்சி ஆகிய கண்காட்சிகள் நடத்தப்பட்டன.

5.3.3.சாலை நிகழ்ச்சி (Road Show) - ஸ்வீடன்

*தமிழ்நாட்டின் கைவினைப் பொருட்களைப் பிரபலப்படுத்துவதற்காக, ஸ்வீடன் நாட்டில் உள்ள ஸ்டாக்ஹோம் (*Sweden, Stockholm*) தமிழ்ச் சங்கம்மூலம் “பண்டைய கால தமிழர் கலை மற்றும் கலாச்சாரம்” சாலைக் காட்சி செப்டம்பர் 2022-இல் நடத்தப்பட்டது.*

5.4.வாங்குவோர் – விற்போர் சந்திப்பு

*எக்ஸ்போ மார்ட் கிரேட்டர் நொய்டாவில் 15.03.2023 முதல் 19.03.2023 வரை சர்வதேச பரிசு பொருட்கள் கண்காட்சியில் (*Spring Fair*) பூம்புகார் கலந்து கொண்டது. சர்வதேச அளவில் வாங்குவோர்—விற்போர் முகவர்கள் இக்கூட்டத்தில் கலந்து கொண்டனர்.*

5.5.B2B சந்தைப்படுத்துவதற்கான செயல்பாடுகள்

தமிழ்நாடு கைவினை கலைஞர்களின் கைவினைப் பொருட்களுக்கு உலகளாவிய சந்தையை உறுதி செய்வதற்காக, பூம்புகார் B2B முறையில் சந்தைப்படுத்த நேரடி மற்றும் இணைய வழி விற்பனையை செயல்படுத்தி வருகிறது. இதற்காக கைவினைப் பொருட்கள் மொத்தமாக கொள்முதல் செய்யும் நிறுவனங்கள், இணைய வழி (online) விற்பனை செய்யும் நிறுவனங்கள் மற்றும் ஏற்றுமதி நிறுவனங்களுடனும் (Export houses) ஒப்பந்தங்கள் செய்யப்பட்டுள்ளது.

5.6.ஏற்றுமதி

பூம்புகார் பாரம்பரிய கைவினைப் பொருட்களை சிங்கப்பூர், மலேசியா, இங்கிலாந்து, ஆஸ்திரேலியா, வளைகுடா நாடுகள் மற்றும் அமெரிக்கா ஆகிய நாடுகளுக்கு ஏற்றுமதி செய்து வருகிறது. பஞ்சலோக சிற்பங்கள், பித்தளை அலங்கார விளக்குகள், மரத்திலான அலங்கார பொருட்கள், தஞ்சாவூர் ஓவியங்கள் மற்றும் பல கைவினைப் பொருட்கள் இந்நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டு வருகிறது. கடந்த ஆண்டில் பூம்புகார் ரூ.1.45 கோடி ஏற்றுமதி செய்துள்ளது.


5.7.வணிக வளர்ச்சி

பூம்புகார் தனது வணிக நடவடிக்கைகளை பல்வகைப்படுத்தியுள்ளது. அதில் ஒரு பகுதியாக அரசு அலுவலகங்கள், கார்ப்பரேட் நிறுவனங்கள், விமான நிலையங்கள் போன்றவற்றை கைவினைப் பொருட்களைக் கொண்டு அழகுபடுத்துதல், அலங்கார வேலைகள், உட்புற அலங்காரம் போன்றவற்றில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டுள்ளது. பித்தளை சலவைப் பெட்டிகள் வழங்குதல், வர்த்தக நிறுவனங்களுக்கான கைவினைப் பரிசு பொருட்கள், பதக்கங்கள், கோப்பைகள் மற்றும் நினைவுப் பொருட்கள் (சிறிய அளவிலான பிரபலமான கோயில்கள் மற்றும் நினைவுச் சின்னங்கள்) ஆகிய சிறப்பு திட்டங்கள்மூலம் 2022-2023 ஆம் நிதியாண்டில் ரூ.5.15 கோடி விற்பனை செய்யப்பட்டுள்ளது.

2023 ஏப்ரல் 13]

5.8.ஆண்டு விற்பனை அளவு

2022-2023 ஆம் நிதியாண்டில் 31.03.2023 முடிய இந்நிறுவனம் ரூ.40.00 கோடி விற்பனை செய்துள்ளது.



5.9. மின் வணிகம்மூலம் விற்பனை


பூம்புகார் கைவினைப் பொருட்களை உலகளாவிய அளவில் விற்பனை செய்வதற்காக www.poompuhar.com என்ற மின் வணிக தளத்தின்மூலம் விற்பனை செய்கிறது. மேலும், அமேசான் (Amazon), பிளிப்கார்ட் (Filpkart), எக்ஸோடிக் (Exotic) மற்றும் டென்காலி (Denkali) போன்ற மின் வணிக இணையதள நிறுவனங்களுடன் இணைந்து விற்பனை செய்து வருகிறது. மேலும், பூம்புகார் மற்ற மின் வணிக தள (e—Commerce) நிறுவனங்களுடன் இணைந்து மின் வணிகத்தை விரிவுபடுத்தும் பணியிலும் ஈடுபட்டுள்ளது.

6. பூம்புகார் உற்பத்தி நிலையங்கள்

பூம்புகார் நிறுவனம் நாச்சியார்கோயில் (பாரம்பரிய வெண்கல மற்றும் பித்தளை விளக்குகள்), மதுரை (பித்தளை விளக்குகள் மற்றும் கலைப் பொருட்கள்), வாகைக்குளம் (பித்தளை விளக்குகள் மற்றும் கலைப்பொருட்கள்), சுவாமிமலை (பஞ்சலோக சிலைகள்), தஞ்சாவூர் (கலை தட்டுகள்), கள்ளக்குறிச்சி (மரச் சிற்பங்கள்) மற்றும் மாமல்லபுரம் (கற்சிற்பங்கள்) ஆகிய 7 சொந்த உற்பத்தி நிலையங்களைக் கொண்டுள்ளது. இந்த உற்பத்தி மையங்களின்மூலம்

கைவினை கலைஞர்களுக்கு தொடர்ச்சியாக வேலைவாய்ப்புகள் வழங்கப்பட்டு வருகிறது. மேலும், அப்பகுதியிலுள்ள கைவினைப் பொருட்களை தயாரிக்கும் கைவினைக் கலைஞர்களும் இந்த உற்பத்தி நிலையங்கள்மூலம் பயனடைந்து வருகின்றனர்.

2022-2023 ஆம் ஆண்டில் ரூ.3.25 கோடி மதிப்பிலான கைவினைப் பொருட்களை அதன் உற்பத்தி நிலையங்கள்மூலம் உற்பத்தி செய்துள்ளது.



7. தகவல் தொழில்நுட்ப செயல்பாடுகள்

தகவல் தொடர்பு தொழில்நுட்பப் (ICT) பயன்பாடு இந்நிறுவனத்தில் அனைத்து பிரிவுகளிலும் செயல்படுத்தப்படுகிறது. சந்தைத்திறன், நிதி மேலாண்மை திறன் மற்றும் நிர்வாகத்திறன் ஆகியவைகளை மேம்படுத்துவதற்காக பின்வரும் நோக்கங்களுடன் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது:

- *கைவினைஞர்கள் மற்றும் கைவினைஞர்களின் திறமைக்கான தகவல் மின் தொகுப்பு உருவாக்குதல்.*
- *பூம்புகார் உடனான வாடிக்கையாளர்கள் / வாங்குவோரின் அனுபவத்தினை மற்றும் நம்பகத்தன்மையை உருவாக்குதல்.*
- *நிர்வாகத்தை மேம்படுத்துதல் மற்றும் அதன் பங்குதாரர்களுக்கு சேவைகளை வழங்குதல்.*

2023 ஏப்ரல் 13]

7.1. நிர்வாக சீர்த்திருத்தங்கள்

- *மின் தளம்:* www.poompuhar.com *என்ற வலைதளம் அனைத்து பங்குதாரர்களையும் கைவினைப் பொருட்கள் மற்றும் பூம்புகார் பற்றி அறியும் வகையில் உருவாக்கப்பட்டுள்ளது.*
- *மின் வருகை: பயோ மெட்ரிக் வருகை முறை நடைமுறையில் உள்ளது.*
- *மின் தொடர்பு: இந்நிறுவன அலுவலகம், அனைத்து விற்பனை நிலையங்கள் மற்றும் உற்பத்தி நிலையங்கள் ஆகியவற்றில் வைஃபை (*Wi—Fi*) இணைப்பு வழங்கப்பட்டுள்ளது.*
- *நாடு முழுவதும் உள்ள கைவினைஞர்களை டிஜிட்டல் தொழில்நுட்பம்மூலம் பயன்பெற கரிகார் (*KARIGAR*) திட்டத்தின்கீழ் மின்—வணிகம் நிறுவனமான அமேசானுடன் இணைக்கப்பட்டுள்ளது.*

7.2.சந்தை வாய்ப்பில் சீர்திருத்தங்கள்

*அ) பூம்புகார் தனது பொருட்களை உலக அளவில் நேரடியாக மின் வணிகம் (*Online*)மூலம் விற்பனை செய்வதற்கு* www. poompuhar.com *என்ற சொந்த மின் வணிக இணைய தளத்தினை அமைத்துள்ளது. இந்நிறுவனம் பிற மின் வணிக நிறுவனங்களான அமேசான் (*Amazon*), பிளிப்காட் (*Flipkart*) மற்றும் இதர நிறுவனங்களுடன் இணைந்து தனது தயாரிப்புகளின் விற்பனையை மேற்கொள்கிறது.*

ஆ) பூம்புகாரின் விற்பனை நிலையங்கள் இணைய வழிகள்மூலம் விற்கப்படும் அனைத்து கைவினைப் பொருட்களுக்கும் மின்னணு விலைக் குறியீடு வழங்கப்பட்டுள்ளது.

இ) பூம்புகாரின் அனைத்து விற்பனை நிலையங்களிலும் மையப்படுத்திய கணினிமயமாக்கப்பட்ட மின் விலைச்சீட்டு முறை பயன்படுத்தப்படுகிறது.

*ஈ) பூம்புகார் முகநூல் (*Facebook*), டுவிட்டர் (*Twitter*), யூடியூப் (*Youtube*) மற்றும் இன்ஸ்டாகிராம் (*Instagram*) போன்ற இணையதள சமூக ஊடகங்கள் வாயிலாக விளம்பரம் செய்யவும், உலகளவில் சந்தை வாய்ப்பை பெறவும் நடவடிக்கைகள் மேற்கொண்டுள்ளது.*

7.3.பூம்புகார் மெய்நிகர் தோற்ற விற்பனை நிலையம் (Virtual Reality Poompuhar Showroom)

பூம்புகார் தனது சென்னை விற்பனை நிலையத்தில் மெய்நிகர் தோற்ற தொழில் நுட்பத்தை உருவாக்கியுள்ளது. வடிவமைப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு மையத்தின் வடிவமைப்பு குழுவினர், பூம்புகார் படைப்புகளை மெய் நிகர் தொழில் நுட்பம்மூலம் முப்பரிமாண வடிவில் உருவாக்கி, முப்பரிமாண அச்சு எந்திரம் வாயிலாக அச்சடிக்கப்பட்டு, அந்த பொருட்களை மெய்நிகர் தோற்ற முப்பரிமாண பிம்பங்களாக வடிவமைப்புக்குழு தயாரித்து, அதனை மெய்நிகர் தோற்ற இணையகத்தில் (Virtual Reality Server) நிறுவப்படுவதன்மூலம் வாடிக்கையாளர்கள் அந்த முப்பரிமாணப் பொருட்களை தங்களது மெய் நிகர் தோற்றக் கரங்களால் தேர்ந்தெடுத்து, அப்பொருள் குறித்த தங்களது கருத்துகளை பதிவு செய்யவும், அப்பொருட்களை மின் வணிக வர்த்தகம்மூலம் கொள்முதல் செய்யவும், வாடிக்கையாளர்களுக்கு வசதி செய்து கொடுக்கப்பட்டுள்ளது.

7.4.உருப்பெருக்கும் மெய்தோற்ற செயலி (Augmented Reality App)

இந்நிறுவனம் உருப்பெருக்கும் மெய்தோற்ற செயலி (Augmented Reality App) என்ற செயலியை உருவாக்கியுள்ளது. கைவினைப் பொருட்களை முப்பரிமாணத்தில் காட்சிப்படுத்தி, வாடிக்கையாளர்கள் உருப்பெருக்கும் மெய்தோற்ற செயலியின்மூலம் வீடு/தேவைப்பட்ட இடங்களில் மெய்நிகராக அலங்கரித்துக் காட்டி கைவினைப் பொருட்களை மின்வணிகம் மற்றும் பூம்புகார் விற்பனை நிலையங்கள் மூலமாக கொள்முதல் செய்ய ஏதுவாக வடிவமைக்கப்பட்டுள்ளது. இதன்மூலம் வாடிக்கையாளர்களின் வாங்கும் ஆர்வம் ஊக்குவிக்கப்படுகிறது.

7.5.வடிவமைப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு நிலையம் (DRDC)

பூம்புகார் நிறுவனம் முப்பரிமாண வடிவமைப்பு முப்பரிமாண அச்சுத் தொழில் நுட்பத்தை பயன்படுத்தி இக்காலத்திற்கு ஏற்ப, புதிய வடிவமைப்புகளை அறிமுகப்படுத்துவதற்காக வடிவமைப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு நிலையம் (DRDC) உருவாக்கப்பட்டுள்ளது..

2023 ஏப்ரல் 13]

இத்தொழில்நுட்பத்தை பயன்படுத்தி *2022—2023* ஆம் நிதியாண்டில் புதிய முன்மாதிரி பொருட்கள் உருவாக்கப்பட்டுள்ளன. அவற்றுள் சில பின்வருவன:

- ஜல்லிக்கட்டு
- தமிழ் நாட்டின் நடனங்கள்
- ஐந்து ரதங்கள்
- அர்சுனன் தபசு

8. கைவினைஞர்களுக்கான வளர்ச்சித் திட்டங்கள்

கைவினைஞர்களின் நலனே இந்நிறுவனத்தின் முக்கிய நோக்கமாகும். பல்வேறு நலத் திட்டங்களை செயல்படுத்துவதன்மூலம் கைவினைஞர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த இந்நிறுவனம் பாடுபட்டு வருகிறது. பூம்புகார் நிறுவனம் மாநில மற்றும் ஒன்றிய அரசின் கைவினைஞர்களுக்கான நலத்திட்டங்களை இந்நிறுவனத்தின் தனிப் பிரிவான மேம்பாட்டு பிரிவு (Development Cell)மூலம் செயல்படுத்தி வருகிறது.

8.1. விருதுகள்

ஒவ்வோர் ஆண்டும் பூம்புகார் நிறுவனம் கைத்திறத் தொழிலில் தனித்திறமைக் கொண்ட கைவினைஞர்களை பாராட்டி அங்கீகரிக்கும் பொருட்டு கீழ்க்கண்ட விருதுகளை வழங்குகின்றது:

1. வாழும் கைவினைப் பொக்கிஷம் விருது
2. பூம்புகார் மாநில விருது
3. பூம்புகார் மாவட்ட கைத்திறன் விருது
4. பயன்பாடு சார்ந்த கைவினைப் பொருட்கள் விருது
5. கைவினைப் பொருட்கள் ஏற்றுமதி விருது
6. குழு உற்பத்தி விருது
7. அடுத்த தலைமுறை கைவினைஞருக்கான கைத்திறப் போட்டி விருது

[2023 ஏப்ரல் 13

விருதுகளின் விவரங்கள்

வ. எண்	விருதுகளின் பெயர்கள்	விருதுகளின் விவரம்	விருதுகளின் எண்ணிக்கை
1	வாழும் கைவினைப் பொக்கிஷம் விருது	ரூ.1.00 இலட்சம் ரொக்கம், 8 கிராம் தங்கப்பதக்கம், தாமிரப்பத்திரம் மற்றும் சான்றிதழ்	10
2	பூம்புகார் மாநில விருது	ரூ.50,000/— ரொக்கம், 4 கிராம் தங்கப்பதக்கம், தாமிரப்பத்திரம் மற்றும் சான்றிதழ்	10
3	பூம்புகார் மாவட்ட கைத்திறன் விருது	ரூ.10,000/—ரொக்கம், வெள்ளிப்பதக்கம் மற்றும் சான்றிதழ்	85
4	கைவினைப் பொருள் ஏற்றுமதி விருது	ரூ.40,000/— ரொக்கம், 4 கிராம் தங்கப்பதக்கம், தாமிரப்பத்திரம் மற்றும் சான்றிதழ்	2
5	குழு உற்பத்தி விருது	ரூ.40,000/— ரொக்கம், 4 கிராம் தங்கப்பதக்கம், தாமிரப்பத்திரம் மற்றும் சான்றிதழ்	3 குழுக்கள்
6	பயன்பாடு சார்ந்த கைவினைப் பொருட்கள் விருது	ரூ.40,000/— ரொக்கம்,4 கிராம் தங்கப்பதக்கம், தாமிரப்பத்திரம் மற்றும் சான்றிதழ்	3

2023 ஏப்ரல் 13]

வ. எண்	விருதுகளின் பெயர்கள்	விருதுகளின் விவரம்	விருதுகளின் எண்ணிக்கை
7	அடுத்த தலைமுறை கைவினைஞர்—களுக்கான கைத்திறப் போட்டி விருது	ரூ.2,000/— ரொக்கம், வெள்ளிப்பதக்கம் மற்றும் சான்றிதழ்	150
	மொத்தம்		263

நாட்டிலேயே கைவினைஞர்களுக்கு அதிக எண்ணிக்கையிலான விருதுகளை வழங்கும் தனித்துவமிக்க மாநிலமாக தமிழ்நாடு திகழ்கிறது.

8.2.பொது வசதி மையங்கள்

பொது வசதி மையங்கள் கைவினைஞர்களுக்கென பிரத்யேகமாக அமைக்கப்பட்ட உற்பத்தி மையம் ஆகும். பல கைவினைக் குழுமங்களைச் சேர்ந்த கைவினைஞர்கள், பொது வசதி மையங்களில் ஏற்படுத்தப்பட்டுள்ள உட்கட்டமைப்பு வசதி, அங்குள்ள நவீன இயந்திரங்கள் மற்றும் கருவிகளை பயன்படுத்தி கைவினைப்பொருட்களை தயாரிக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது. இங்கு CNC இயந்திரங்கள், முப்பரிமாண அச்சு இயந்திரங்கள், மின் உலைகள், 4 அச்சு செதுக்குதல் இயந்திரம், நவீன மரம் செதுக்கும் இயந்திரம் மற்றும் அச்சு கருவிகள் ஆகியவை பொருத்தப்பட்டுள்ளன. இவை வேலையில் ஏற்படும் இடர்களை தவிர்த்து புதிய வடிவமைப்புகளை உருவாக்க, கைவினைஞர்களின் உற்பத்தி செயல்திறனை மேம்படுத்துகிறது.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் காஞ்சிபுரம்—காகிதக்கூழ் பொம்மைகள், அரும்பாவூர்—மரச்சிற்பங்கள், தம்மம்பட்டி—மரச்சிற்பங்கள், அம்பாசமுத்திரம்—மரவர்ணக் கடைசல் பொம்மைகள் மற்றும் ஆசனூர்—ஒன்னிக்குச்சி கைவினைப் பொருட்கள் ஆகிய கைத்திறத் தொழில்களுக்கான 5 பொது வசதி மையங்களை அப்பகுதியில் வாழும் கைவினைஞர்கள் பயனடையும் வகையில் 13.04.2022 அன்று துவக்கி வைத்தார், இப்பொது வசதி மையங்களில் நவீன இயந்திரங்கள் நிறுவப்பட்டுள்ளதால், கைவினைப்பொருட்களின் உற்பத்தி மேம்பட்டுள்ளது. இவை தலா ரூ.60.00 இலட்சம் செலவில் அமைக்கப்பட்டுள்ளன.

மேலும் 6 பொது வசதி மையங்கள் சுவாமிமலை, நாச்சியார்கோவில், தஞ்சாவூர், மதுரை, வாகைக்குளம் மற்றும் கன்னியாகுமரி ஆகிய இடங்களில் ஏற்கனவே கைவினைஞர்களின் பயன்பாட்டிற்காக செயல்பட்டு வருகிறது. இப்பொது வசதி மையங்களின்மூலம் தோராயமாக 5,000 கைவினைஞர்கள் பயனடைந்து வருகிறார்கள்.

8.3.நலிந்த கைத்திறத் தொழில்களை புத்துயிரூட்ட பொது வசதி மையங்கள் அமைத்தல்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 13.04.2022 அன்று நலிந்த கைத்திறத் தொழில்களுக்கு புத்துயிர் அளிக்கும் விதமாக திருநெல்வேலி மாவட்டம் பத்தமடையில் கோரைப்பாய்கள் மற்றும் விழுப்புரம் மாவட்டம் விக்கிரவாண்டியில் களிமண் & சுடுகளிமண் கைத்திறத் தொழிலுக்கான இயந்திரங்கள் மற்றும் உபகரணங்களுடன் கூடிய இரண்டு பொது வசதி மையங்களை துவக்கி வைத்தார். இப்பொது வசதி மையங்கள் தலா ரூ.47.00 இலட்சம் செலவில் அமைக்கப்பட்டுள்ளன.

8.4.உபகரணங்கள் வழங்குதல்

இந்நிறுவனம் தமிழ்நாடு முழுவதுமுள்ள கைவினைஞர்களின் திறமையை உயர்த்தவும், அவர்களின் உற்பத்தித் திறனை அதிகரிக்கவும் ரூ.5,000/— மதிப்பிலான உபகரணங்களை 6,000—திற்கும் மேற்பட்ட கைவினைஞர்களுக்கு இலவசமாக வழங்கி உள்ளது.

8.5.பயிற்சித் திட்டங்கள்/பட்டறைகள்

ஒருங்கிணைந்த கைவினைப் பொருட்கள் மேம்பாடு மற்றும் வளர்ச்சித் IDPH (Integrated Development and Promotion of Handicrafts) திட்டத்தின்கீழ் 40 கைவினைஞர்களுக்கு ரூ.14.85 இலட்சம் செலவில் தஞ்சாவூர் (கலைத்தட்டு), நாச்சியார்கோவில் (பித்தளை விளக்குகள்), மதுரை (பித்தளை விளக்குகள் மற்றும் கலைப்பொருட்கள்), சுவாமிமலை (பஞ்சலோக சிலைகள்) மற்றும் தம்மம்பட்டி (மரச்சிற்பம்) ஆகிய கைத்திறத் தொழில்களில் 3 மாத கால கைத்திறத்தொழில் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்மூலம் மொத்தம் 200 கைவினைஞர்கள் பயிற்சிப் பெற்றார்கள்.

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

2023 ஏப்ரல் 13]

8.6.வடிவமைப்பு மற்றும் தொழில்நுட்ப மேம்பாட்டுப் பயிற்சிப் பட்டறை

ஒருங்கிணைந்த கைவினைப் பொருட்கள் மேம்பாடு மற்றும் வளர்ச்சித் திட்டத்தின்கீழ், வடிவமைப்பு மற்றும் தொழில்நுட்ப மேம்பாட்டுப் பயிற்சி தமிழ்நாடு முழுவதும் 27 இடங்களில் தலா ரூ.4.60 இலட்சம் செலவில் நடத்தப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்மூலம் 810 கைவினைஞர்கள் பயிற்சிப் பெற்றார்கள்.

8.7.நகர்ப்புற கண்காட்சித் திடல்கள்

கைவினைஞர்கள் மற்றும் கைத்தறி நெசவாளர்களுக்கு பெருநகரங்கள்/சுற்றுலாத் தலங்கள் போன்ற இடங்களில் நிரந்தர சந்தை வாய்ப்பிற்கான உட்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்துவது நகர்ப்புறக் கண்காட்சித் திடலின் முக்கிய நோக்கமாகும். இத்திடல்மூலம் கைவினைஞர்கள் தங்களது பொருட்களை ஆண்டு முழுவதும் விற்பனை செய்வதுடன் பெருமளவில் வாடிக்கையாளர்களை ஈர்க்க இயலும். இத்திடல், உள்நாடு/ சர்வதேச சுற்றுலா பயணிகள்/நுகர்வோர்களை கவரும் வகையில் கலைநயத்துடன் பொழுதுபோக்கு அம்சங்கள் கொண்டதாக அமைக்கப்பட்டுள்ளது.

8.7.1.கன்னியாகுமரி நகர்ப்புற கண்காட்சித்திடல்

பூம்புகார் நிறுவனம், கன்னியாகுமரியில் ரூ.2.75 கோடி மதிப்பீட்டில் ஒரு நகர்ப்புறக் கண்காட்சித் திடலை வர்த்தக உட்கட்டமைப்புடன் அமைத்துள்ளது. இக்கண்காட்சித் திடல் 50 கடைகள், உணவுக்கூடம், ஓய்வறை, காட்சி அரங்கம், குழந்தைகள் பூங்கா மற்றும் வாகனம் நிறுத்தும் இடம் ஆகிய வசதிகளைக் கொண்டுள்ளது. இக்கண்காட்சித்திடல் கைவினைஞர்கள் சுழற்சி முறையில் பங்கு பெற்று பயனடைவார்கள்.

8.7.2.மாமல்லபுரம் நகர்ப்புற கண்காட்சித்திடல்

பூம்புகார் நிறுவனம் மற்றும் ஒரு நகர்ப்புற கண்காட்சித்திடலை சென்னையை அடுத்த மாமல்லபுரத்தில் ரூ.4.24 கோடி செலவில் வர்த்தக கட்டமைப்புடன் கட்டியுள்ளது. இக்கண்காட்சி திடலில் விற்பனை செய்வதற்கு ஏற்ப 50 விற்பனை அரங்குகள், உணவுக்கூடம், காட்சி அரங்கம், குழந்தைகள் பூங்கா, கைவினைஞர்கள் தங்குமிடம் வாகனம் நிறுத்துமிடம் போன்ற வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

[2023 ஏப்ரல் 13

8.8.கைவினை சுற்றுலா கிராமம், மாமல்லபுரம் (Craft Tourism Village)

சென்னையை அடுத்துள்ள மாமல்லபுரத்தில் "கைவினை சுற்றுலா கிராமம்" என்ற ஒன்றிய அரசின் திட்டத்தை ரூ.2.24 கோடி செலவில் தமிழ்நாடு கைத்திறத் தொழில்கள் வளர்ச்சிக் கழகம் (பூம்புகார்)மூலம் அப்பகுதியிலுள்ள கைவினைஞர்கள் நலனுக்காக செயல்படுத்தி உள்ளது.

கைவினை சுற்றுலா கிராமத் திட்டத்தில், கைவினைஞர்களுக்கு வீடுகள், உற்பத்தி நிலையங்கள் மற்றும் காட்சிப் பகுதிகள் ஆகியவை புதிதாக மேம்படுத்தப்பட்டுள்ளன. இந்த இடங்களை மாமல்லபுரத்திலுள்ள சுற்றுலாத் தலங்களுடன் இணைத்து இங்கு தயாரிக்கும் கற்சிற்பப் பொருட்களை, இங்கு வருகை புரியும் வெளிநாட்டு சுற்றுலா பயணிகளுக்கு விற்பனை செய்வதோடு இந்த வரலாற்று சிறப்பு மிக்க இடத்தை சுற்றுலா பயணிகளை கவருவதும் இத்திட்டத்தின் நோக்கமாகும்.

இத்திட்டத்தின்கீழ் ரூ.1.80 கோடி செலவில் மாமல்லபுரம் மற்றும் அதனை சுற்றியுள்ள பகுதிகளில் கீழ்க்கண்ட பணிகள் முடிவடைந்துள்ளன:

- காரணை கிராமத்தில் 30 கைவினைஞர்களின் வீடுகள் அழகுபடுத்தப்பட்டு, முகப்புச்சுவர் அமைக்கப்பட்டு, வர்ணம் பூசப்பட்டு, சிமெண்ட் சாலை மற்றும் வடிகால்வாய் அமைக்கப்பட்டு மேம்படுத்தப்பட்டுள்ளது.
- ஐந்துரத வீதியில் உள்ள கைவினைஞர்களின் உற்பத்தி நிலையங்கள் புதுப்பித்தல் மற்றும் மேம்படுத்தும் பணிகள் நிறைவேற்றப்பட்டுள்ளது.
- மாமல்லபுரத்தின் நுழைவு வாயிலில் கைவினை சுற்றுலா கிராமத்திற்கான பிரமாண்டமான சிற்பக்கலைத்தூண் சுற்றுலா பயணிகள் மற்றும் பார்வையாளர்களை கவரும் விதமாக அமைக்கப்பட்டுள்ளது. அதை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 27.07.2022 அன்று திறந்து வைத்தார்.
- கைவினை சுற்றுலா கிராமத்திற்கான விளம்பர பதாகைகள் மற்றும் வழிகாட்டிகளை பல்வேறு இடங்களில் அமைத்தல்.

2023 ஏப்ரல் 13]

8.9.கைவினை விழிப்புணர்வு முகாம்கள்

தமிழ்நாடு கைவினைத் தொழிலாளர்கள் நல வாரியத்தின் சமூகப் பாதுகாப்புத் திட்டங்களைத் தொழிலாளர் துறைமூலம் (சம்பந்தப்பட்ட உதவி ஆணையர்கள்) கைவினைக் கலைஞர்களுக்கு தெரிவிக்கவும், அபிவிருத்தி ஆணையர் (கைவினைப் பொருட்கள்) அலுவலகத் திட்டங்களை, அமைப்பு சாரா கைவினைஞர்களுக்கு பெறுவதற்கு உதவும் நோக்கத்துடன், தமிழ்நாடு மற்றும் ஒன்றிய அரசின் பல்வேறு திட்டங்களை விளக்குவதற்காக கைவினைஞர்களுக்கு விழிப்புணர்வு முகாம்கள் 2022—2023 ஆம் ஆண்டு நடத்தப்பட்டன.

9.கைவினைப் பொருட்களுக்கு புவிசார் குறியீடு

புவிசார் குறியீடு பதிவு பெறப்பட்ட பொருட்கள் ஒன்றிய அரசின் புவிசார் குறியீடு பதிவு மற்றும் பாதுகாப்புச் சட்டம்–1999 அதன்கீழ் உருவாக்கப்பட்ட 2002 விதிகளின்படி நிர்வகிக்கவும், பாதுகாக்கப்படுகிறது.

ஒன்றிய அரசின் புவிசார் குறியீடு பதிவகம், பூம்புகார் நிறுவனத்தின் முயற்சியினால் கீழ்க்கண்ட தமிழ்நாடு கைவினைப் பொருட்களுக்கு புவிசார் குறியீடு பெறப்பட்டுள்ளது.

1. *நாச்சியார்கோயில் பித்தளை விளக்குகள்*
2. *பத்தமடை பாய்கள்*
3. *தோடா சித்திரத் தையல்*
4. *மாமல்லபுரம் கற்சிற்பங்கள்*
5. *சுவாமிமலை பஞ்சலோக சிலைகள்*
6. *வடசேரி கோயில் நகைகள்*
7. *தஞ்சாவூர் கலைத்தட்டுகள்*
8. *தஞ்சாவூர் ஓவியங்கள்*
9. *தஞ்சாவூர் பொம்மைகள்*
10. *கள்ளக்குறிச்சி மரச்சிற்பம்*

11. கருப்பூர் கலம்காரி ஓவியம்

12. தஞ்சாவூர் நெட்டி வேலை

13. அரும்பாவூர் மரச்சிற்பம்

இந்த புவிசார் குறியீட்டின்மூலம் அப்பகுதியில் உள்ள தமிழ்நாட்டு கைவினைஞர்களின் படைப்புகள் உலகளாவிய சந்தை அணுகுமுறைக்கு வாய்ப்பாக அமையப்பெறும்.

10. மாமல்லபுரம்—ஓர் உலக கற்சிற்ப நகரம்

உலக கைத்திறக் குழுமம் (World Crafts Council) மாமல்லபுரத்தை “உலக கற்சிற்ப நகரம்” என்று அங்கீகரித்துள்ளது. இது மாமல்லபுர கற்சிற்ப கலைக்கு அளிக்கப்பட்ட மிகப் பெரிய அங்கீகாரம் ஆகும். இது பூம்புகார் மற்றும் இந்திய கைத்திறக் குழுமம் (Craft Council of India) முயற்சியால் பெறப்பட்டுள்ளது.

11. 2022–2023 ஆம் ஆண்டிற்கான அறிவிப்புகளின் முன்னேற்றம்

11.1. மரச்சிற்பக் கைவினைக் கிராமம்-தம்மம்பட்டி

சேலம் மாவட்டம் தம்மம்பட்டியில் மரச்சிற்பக் கைத்திறத் தொழில் செய்யும் கைவினைக் கலைஞர்களின் நலனுக்காக மரச்சிற்பக் கைவினைக் கிராமத்தை உருவாக்க தமிழ்நாடு கைத்திறத் தொழில்கள் வளர்ச்சிக் கழகம் முன்மொழிந்துள்ளது. அதற்காக 5.5 ஏக்கர் நிலம் ஒதுக்கப்பட்டுள்ளது. இத்திட்டம் விரைவில் செயல்படுத்தப்படும்.

11.2.13 பொது வசதி மையங்களின் செயல்பாடுகளை முழுமையாகப் பயன்படுத்த ஆலோசகரை நியமித்தல்

தமிழ்நாட்டில் 13 பொது வசதி மையங்களை வியாபாரயுக்தியுடன் இயக்கவும், பராமரிக்கவும், உகந்த முறையில் செயல்படுத்தவும், நேரடிப் பயிற்சி அளிப்பதற்காகவும், புதிய வடிவமைப்புகள் மற்றும் தொழில்நுட்பங்களை அறிமுகப்படுத்தவும், தமிழ்நாடு கைத்திறத் தொழில்கள் வளர்ச்சிக் கழகம் ஒரு தொழில்நுட்ப ஆலோசகரை நியமித்துள்ளது. 13 பொது வசதி மையங்களுக்கான விரிவான அறிக்கை மற்றும் பகுப்பாய்வு (SWOT analysis) தயாரிக்கப்பட்டு கைவினைஞர்களுக்கான பயிற்சி தொடங்கப்பட்டுள்ளது.

11.3. கைவினைஞர்களின் கலைப்பொருட்கள் புகைப்படம் எடுத்தல் மற்றும் ஆவணப்படுத்துதல்

மாநிலம் முழுவதும் உள்ள கைவினைஞர்களின் கைவினைப் பொருட்களை புகைப்படம் எடுத்து ஆவணப்படுத்தி, பூம்புகார் இணையதளத்தில் பதிவேற்றம் செய்து, கைவினைப் பொருட்களின் விற்பனையை மேம்படுத்தும் பணி நடந்து வருகிறது. இதுவரை பல்வேறு பிரிவுகளின்கீழ் 4560 வகையான கைவினைப் பொருட்களின் புகைப்படம் எடுக்கும் பணி நிறைவடைந்துள்ளது.

11.4.தமிழ்நாட்டின் வரலாற்றுச் சின்னங்களின் முக்கியத்துவத்தை கைவினைப் பொருட்கள்மூலம் பிரபலப்படுத்துதல்

தமிழ்நாட்டின் செழுமையான பாரம்பரியங்கள், சுற்றுலாத் தலங்கள், கோயில்கள், நினைவுச் சின்னங்கள் ஆகியவற்றின் முக்கியத்துவத்தை கைவினைப் பொருட்கள்மூலம் முன்வைத்து பிரபலப்படுத்த வருகை தரும் சுற்றுலாப் பயணிகளுக்கு நினைவுப் பொருட்கள் மற்றும் பரிசுப் பொருட்கள் சந்தைப்படுத்தப்படுகிறது.

மாமல்லபுரம் அர்ச்சுனன் தபசு, ஐந்து ரதங்கள், கடற்கரை கோவில், ஜல்லிக்கட்டு, பாரம்பரிய நடனங்கள், கன்னியாகுமரி திருவள்ளுவர் சிலை, வள்ளுவர்கோட்டம் சின்னம், சென்னை கலங்கரை விளக்கம், பிரசித்திபெற்ற சுற்றுலா நினைவுச் சின்னங்கள் போன்ற கலை உருவங்களை எழுதுகோல்தாங்கி மற்றும் சுவர் அலங்கார பொருட்களாக சிறிய அளவில் அழகுணர்வுடன் வடிவமைத்து தயாரிக்கப்பட்டுள்ளன.

11.5.வாங்குவோர்-விற்போர் சந்திப்பு

தமிழ்நாடு கைவினைஞர்களால் உற்பத்தி செய்யப்படும் கைவினைப் பொருட்களுக்கு பரந்த சந்தை வாய்ப்பை வழங்குவதற்காக, இந்நிறுவனம் சென்னையில் வாங்குவோர்-விற்போர் சந்திப்பை நடத்தியது. நொய்டாவில் நடத்தப்பட்ட இத்தகைய வாங்குவோர்-விற்போர் சந்திப்பில் இந்நிறுவனம் கலந்துகொண்டது.

[2023 ஏப்ரல் 13

11.6.கைவினைஞர்களுக்கு திறன் மேம்பாட்டு பயிற்சிப்பட்டறைகள் நடத்துதல்

நவீன புதிய வடிவமைப்புகளை அறிமுகப்படுத்தவும், கைவினைப்பொருட்களை நல்ல வேலைப்பாடுகளுடன் விரைவாக உற்பத்தி செய்யவும், கைவினைஞர்களுக்கு திறன் மேம்பாட்டு பயிற்சிப்பட்டறைகள் தமிழ்நாட்டில் உள்ள முக்கிய இடங்களில் நடத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

11.7.இந்தியா முழுவதும் கைவினைப் பொருட்களை சந்தைப்படுத்தும் நிகழ்வுகளில் கைவினைஞர்கள் பங்கேற்க செலவினங்கள் மேற்கொள்ளுதல்

தமிழ்நாடு கைவினைஞர்களின் தயாரிப்புகளுக்கு சந்தைவாய்ப்புகளை பெறுவதற்கு நாட்டின் முக்கிய நகரங்களில் நடத்தப்படும் கண்காட்சிகளில் பங்கேற்கும் கைவினைஞர்களுக்கு விற்பனைக்கூடக் கட்டணம், போக்குவரத்துச் செலவு, ஏற்றுக்கூலி மற்றும் இறக்குக்கூலி ஆகியவைகள் வழங்கப்பட்டு வருகின்றன.

11.8.நலத்திட்டங்கள் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்துதல்

தமிழ்நாடு முழுவதும் உள்ள கைவினைக் கலைஞர்களுக்கு "கைவினைஞர்கள் விழிப்புணர்வு முகாம்கள்" பின்வரும் நோக்கங்களுக்காக நடத்தப்பட்டன:

- *தமிழ்நாடு கைவினைத் தொழிலாளர் நல வாரியத்தின் (*https://tnuwwb.tn.gov.in*)கீழ் கைவினைக் கலைஞர்களை சேர்ப்பது / புதுப்பித்தல் குறித்த விழிப்புணர்வு.*

- *தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு அமைச்சகத்தின் இ-ஷ்ரம் போர்ட்டலின் (*https://register.eshram.gov.in*)கீழ் கைவினைக் கலைஞர்களை சேர்ப்பதற்கான விழிப்புணர்வு.*

- *கைவினைக் கலைஞர்களுக்கான "தமிழ்நாடு கைவினைத் தொழிலாளர்கள் நல வாரியத்தின்" நலத்திட்டங்கள் குறித்த விழிப்புணர்வு.*

2023 ஏப்ரல் 13]

- *அபிவிருத்தி ஆணையர் (கைவினைப் பொருட்கள்), புது தில்லி அவர்களால் வழங்கப்படும் "PEHCHAN" கைவினைஞர்களுக்கான அடையாள அட்டையின்கீழ் கைவினைஞர்களின் பதிவு/புதுப்பித்தல் மற்றும் நலன் மேம்பாட்டுத் திட்டங்கள் குறித்த விழிப்புணர்வு.*

தமிழ்நாடு முழுவதும் இதுவரை 20 விழிப்புணர்வு முகாம்கள் நடத்தப்பட்டு 1,250 கைவினைஞர்கள் கலந்து கொண்டனர்.

12.நிறுவனத்தின் தொலைநோக்கு பார்வை

மேம்படுத்தப்பட்ட உட்கட்டமைப்பு, புதிய சந்தைப்படுத்தல் வழிகள், கைவினைஞர்களுக்கு நேரடி உதவி போன்ற பல்வேறு வளர்ச்சி நடவடிக்கைகளை செயல்படுத்த பூம்புகார் இலட்சியத் திட்டங்களைக் கொண்டுள்ளது. இனிவரும் ஆண்டுகளில் அதன் சொந்த வணிக வளர்ச்சிக்கு வலுவான நடவடிக்கைகளை எடுப்பதுடன், கைவினைஞர்களின் வருமானம் அதிகரிக்கவும் பல முயற்சிகள் மற்றும் புதுமைகளை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும்.

தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம்

"நமக்கு கதர் மீதான உள்ளார்ந்த உணர்வு இருந்தால், நம் வாழ்வின் ஒவ்வொரு நிகழ்வுகளிலும் எளிமை நம்மைச் சூழ்ந்திருக்கும்."

-மகாத்மா காந்தியடிகள்

தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம், 1959 தமிழ்நாடு சட்டம் 18-ன் படி ஏப்ரல் 1960-ல், கிராமப்புறங்களில் கதர் மற்றும் கிராமத் தொழில்களை மேம்படுத்தும் நோக்கில் அப்பொருட்களை

சந்தைப்படுத்துவதற்கான வழிகளை வழங்குவதற்காக ஒரு சட்டப்பூர்வ அமைப்பாக உருவாக்கப்பட்டது. இவ்வாரியம், கிராமப்புற கைவினைஞர்களுக்கு வேலைவாய்ப்புகளை உருவாக்குவதையும் முக்கிய நோக்கமாகக் கொண்டுள்ளது.

1. நோக்கங்கள்

1. கதர் மற்றும் கிராமத் தொழில்களைத் தொடங்குதல், ஊக்குவித்தல் மற்றும் நடத்துதல்.
2. கதர் மற்றும் கிராமத் தொழில்களை ஊக்குவித்து, முன்னேற்றி மேம்படுத்துதல்.
3. கைவினைஞர்களை ஒருங்கிணைத்து அவர்களின் பொருளாதார நிலையை உயர்த்துதல்.
4. கிராமத் தொழில்களுக்கான தொழிற்கூட்டுறவுச் சங்கங்களை அமைத்தல்.
5. சந்தைபடுத்தக்கூடிய சுற்றுச்சூழலுக்கு உகந்த கதர் கிராமத் தொழிற் பொருட்களை உற்பத்தி செய்தல்.
6. கிராமப்புற ஏழை மக்களிடையே சமூக உணர்வினை ஏற்படுத்தி சுயசார்பு நம்பிக்கையை உருவாக்குதல்.
7. தகுதியுள்ள கிராமப்புற கைவினைஞர்களுக்கு வருவாய் ஈட்டும் வேலைவாய்ப்பை வழங்குதல்.
8. வடிவமைப்புகளில் புதுமைகளை புகுத்துதல்.

2. நிருவாகம்

மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் அவர்கள், தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியத்தின் தலைவர் ஆவார். அலுவல்சார் உறுப்பினர்களின் விவரம் பின்வருமாறு:

1. அரசு முதன்மைச் செயலாளர், கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை.
2. அரசு துணைச் செயலாளர், நிதித் துறை.
3. தலைமைச் செயல் அலுவலர், தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம்.

2023 ஏப்ரல் 13]

4. தொழில் ஆணையர் மற்றும் தொழில் வணிக இயக்குநர்.

5. நிதிநிலை ஆலோசகர் மற்றும் தலைமைக் கணக்கு அலுவலர், தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம்.

இவ்வாரியத்தின் திட்டங்களை செயல்படுத்துவதற்கான முக்கிய கொள்கை முடிவுகள் வாரியத்தால் மேற்கொள்ளப்படுகிறது. அன்றாட நடவடிக்கைகள் வாரிய தலைமைச் செயல் அலுவலரால் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம், கதர் தொழிலை மேம்படுத்துதல் மற்றும் கிராமத் தொழில்களை வளர்த்தல் ஆகிய இரண்டு முக்கியமான பணிகளில் கவனம் செலுத்துகிறது.

3. நிலையான வளர்ச்சி இலக்குகள்

நிலையான வளர்ச்சி இலக்குகள் என்பது வறுமை மற்றும் அதன் அனைத்து பரிமாணங்களையும் முடிவுக்குக் கொண்டு வருவதற்கான ஒரு துணிச்சலான, உலகளாவிய ஒப்பந்தமாகும். மக்களுக்கும், புவிக்கும், செழிப்பூட்டும் வகையில் சமமான, நியாயமான மற்றும் பாதுகாப்பான உலகத்தை உருவாக்குவதே இதன் இலக்காகும்.

பல்வேறு அரசாங்கங்களும், உலகெங்கிலும் உள்ள குடிமக்களின் குழுக்களும், சாதக பாதகங்களை கலந்தாலோசித்து எட்டப்பட்ட கருத்துக்களின் படி இலட்சிய இலக்குகளை அடைவதற்காகவே நிலையான வளர்ச்சி இலக்குகள் உருவாக்கப்பட்டுள்ளன.

இலக்கு 1: எல்லா இடங்களிலும் வறுமையை அதன் அனைத்து பரிமாணங்களிலும் முடிவுக்குக் கொண்டு வருதல்.

இலக்கு 1.1: ஒரு நாளைக்கு $ 1.25-க்கும் குறைவாக வருவாய் பெறும் மக்களிடம் காணப்படும் கடும் வறுமையை 2030 ஆம் ஆண்டுக்குள் ஒழிக்க வேண்டும்.

சுயஉதவி குழுக்கள், உழவர் உற்பத்தியாளர் அமைப்பு, சிறு, குறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்களின்மூலம் உற்பத்தி செய்யப்படும் பொருட்களை உரிய முறையில் தரத்தினை உயர்த்தி, பேக்கிங்கில் புதுமையைப் புகுத்தி, முறையாக விளம்பரப்படுத்தி, சந்தைப்படுத்தும் பணியை வாரியம் மேற்கொள்கிறது. இதன்மூலம் ஏழை எளிய மக்களுக்கு போதுமான வருவாய் கிடைப்பதால்

அவர்களின் வறுமையை போக்கிட இயலும். இவ்வாரியம், அவர்களின் வணிக மேம்பாட்டிற்கு நிதியுதவி அளிப்பதால், அவர்களின் சமூக-பொருளாதார நிலை மேம்படுத்தவும் உதவுகிறது.

இலக்கு 8: மதிக்கத்தக்க வேலை மற்றும் வேலைவாய்ப்பை உருவாக்குதல்.

இலக்கு 8.5: உற்பத்தித் திறனுடன் கூடிய வேலைவாய்ப்பை அனைத்து ஆண்கள் மற்றும் பெண்களுக்கு உருவாக்குதல்.

மேற்கண்ட இலக்கை எட்டும் வகையில் தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம், நூற்போர் மற்றும் நெய்வோர்களுக்கு குறிப்பாக கிராமப்புற மகளிருக்கு வேலைவாய்ப்பை வழங்கி அவர்களின் வருவாயை அதிகப்படுத்தி கண்ணியமான வாழ்விற்கு முன்னெடுத்துச் செல்கிறது.

4. கதர்

கதர் இயக்கம், சுதேசி துணிகளின் பயன்பாட்டை ஊக்குவிக்க மகாத்மா காந்தியடிகளால் தொடங்கப்பட்டது. கதர் துணிகளை அவரவர் கிராமங்களிலேயே உற்பத்தி செய்வதன்மூலம் ஆடைத் தேவையில் தன்னிறைவு அடைவதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது. ஒவ்வொரு கிராமத்தையும் ஒரு சுய-நிலையான தன்னாட்சி அமைப்பாக மாற்றவும், கிராமங்களில் அனைத்து வசதிகளுடன் கூடிய நிறைவான வாழ்வு கிடைக்க செய்வதையும் இந்த இயக்கம் நோக்கமாகக் கொண்டுள்ளது.

கதர் என்பது பருத்தி, பட்டு, கம்பளி அல்லது இரண்டு வகை நூல் கலந்த, கையால் நூற்கப்பட்ட, கையால் நெய்யப்பட்ட இயற்கை இழையிலான துணியாகும். கதர் என்பது இந்திய கலாச்சாரம் மற்றும் வாழ்வியல் முறையை குறிப்பதாகும். மேலும், இந்திய கிராமங்களின் பொருளாதார வளர்ச்சிக்கும் இது உதவுகிறது. கதர் துணிகள் வெப்பமண்டலமான இந்திய காலநிலைக்கு மிகவும் பொருத்தமானவையாகும்.

வாரியம், தற்போது மாறிவரும் நவீன சந்தைக்கேற்ப ஆடைப் பொருட்களை தயாரித்து, அதன் அலகுகளை பொருளாதார ரீதியில் இயக்கி, சந்தையிலுள்ள நிறுவனங்களின் தயாரிப்புகளுடன் போட்டி போட்டு வணிகம் செய்து வருகிறது.

2023 ஏப்ரல் 13]

4.1. கதர் பருத்தி மற்றும் பாலிவஸ்திரா

கதர் பருத்தி மற்றும் பாலிவஸ்திரா உற்பத்தி நடவடிக்கைகள் முழுமையாக கைமுறையில் நடைபெறுவதால், கிராமப்புற கைவினைஞர்களுக்கு அதிகளவிலான வேலைவாய்ப்புகள் உருவாக்கப்படுகின்றன. கை நூற்பு மற்றும் கை நெசவு பணிகள் பெரும்பாலும் பெண்களால் மேற்கொள்ளப்படுகிறது. இந்த முழு உற்பத்தி பணிகள், நூற்பு, நெசவு, வெளுத்தல் மற்றும் சாயமிடுதல் போன்றவற்றை உள்ளடக்கியதாகும்.

கதர் மற்றும் கிராமத் தொழில் ஆணையத்தின் மத்திய பட்டை பஞ்சு ஆலையிலிருந்து கொள்முதல் செய்யப்படும் பட்டை பஞ்சு, கிராமிய நூற்பு நிலையங்களுக்கு விநியோகிக்கப்படுகிறது. இந்த பட்டை பஞ்சு, நூற்பதற்காக நூற்பாளர்களுக்கு (1116 நூற்பாளர்கள்) வழங்கப்படுகிறது. இந்த பட்டைப் பஞ்சு நூலாக நூற்கப்பட்டு கதர் உபகிளைகளுக்கு அனுப்பப்படுகிறது. இந்த நூல், நெசவாளர்களுக்கு (224 நெசவாளர்கள்) வழங்கப்பட்டு, கோரா துணியாக உற்பத்தி செய்யப்பட்டு கதர் உப கிளைகளில் திரும்பப் பெறப்படுகிறது.

கோரா துணியிலிருந்து, வேட்டிகள், சட்டைகள், துண்டுகள், படுக்கை விரிப்புகள், மெத்தை விரிப்புகள், சீருடை துணி மற்றும் பிற துணி இரகங்கள் உற்பத்தி செய்யப்படுகின்றன.

சந்தையில் பாலியஸ்டர் வகைகள் மக்களிடையே பிரபலமாக உள்ளதால், சந்தையின் போக்கையும், வாடிக்கையாளர்களின் விருப்பத்தையும் கருத்தில்கொண்டு, கதர் கிராமத் தொழில் வாரியமும் பாலியஸ்டர் நூலுடன் பருத்தி நூலை முறையே 67:33 என்ற விகிதத்தில் கலந்து பாலியஸ்டர் துணிகளை உற்பத்தி செய்து வருகிறது.

I. நூற்பு மையங்கள்

வ. எண்	மாவட்டம்	அலகின் இருப்பிடம்
1.	திருப்பூர்	பூளவாடி
2.		அவிநாசி
3.		வெள்ளக்கோயில்
4.		கொளத்துப்பாளையம்

[2023 ஏப்ரல் 13

வ. எண்	மாவட்டம்	அலகின் இருப்பிடம்
5.	ஈரோடு	காவிலிபாளையம்
6.		கெட்டிச்செவியூர்
7.	சேலம்	விருதாசம்பட்டி
8.		நார்த்தம்பட்டி
9.	கோயம்புத்தூர்	சூலூர்
10	திருச்சிராப்பள்ளி	கருங்குளம்
11.	கரூர்	தென்னிலை
12.	நாமக்கல்	நாமக்கல்
13.	திண்டுக்கல்	சின்னாளப்பட்டி
14.	புதுக்கோட்டை	திருவரங்குளம்
15.	மதுரை	அன்னமார்பட்டி
16.	சிவகங்கை	கண்டனூர்
17.	விருதுநகர்	வண்ணியம்பட்டி
18.		ஆர்.என்.பட்டி
19.		மங்காபுரம்
20.	தென்காசி	பாவூர்சத்திரம்
21.		பெருமாள்பட்டி
22.	கன்னியாகுமரி	அகஸ்தீஸ்வரம்
23.		தேவிகோடு
24.		மூதலாறு

II. நெசவு மையங்கள்

வ.எண்	மாவட்டம்	அலகின் இருப்பிடம்
1.	திருப்பூர்	பூளவாடி
2.		அவிநாசி

வ.எண்	மாவட்டம்	அலகின் இருப்பிடம்
3.	ஈரோடு	காவிலிபாளையம்
4.		கெட்டிச்செவியூர்
5.	கோயம்புத்தூர்	சூலூர்
6.	சேலம்	காட்டாம்பட்டி
7.	கரூர்	தென்னிலை
8.	நாமக்கல்	நாமக்கல்
9.	திண்டுக்கல்	சின்னாளப்பட்டி
10.	மதுரை	உசிலம்பட்டி
11.	சிவகங்கை	கண்டனூர்
12.	விருதுநகர்	வத்திராயிருப்பு
13.	தென்காசி	கீழப்பாவூர்
14.	கன்னியாகுமரி	மார்த்தாண்டம்

2020-2021 முதல் *2022-2023* வரை கதர் மற்றும் கிராமத் தொழில் ஆணையத்திடமிருந்து கொள்முதல் செய்யப்பட்ட பட்டை பஞ்சு, துணி உற்பத்தி மதிப்பு, நூற்பாளர்கள் மற்றும் நெசவாளர்களின் எண்ணிக்கை, நூற்பாளர் மற்றும் நெசவாளர்களுக்கு வழங்கப்பட்ட கூலி ஆகிய விவரங்கள் பின்வருமாறு:—

வருடம்	பட்டை பஞ்சு கொள்முதல்		நூற்பாளர்கள்		நெசவாளர்கள்		துணி உற்பத்தி மதிப்பு (ரூ. இலட்சத்தில்)
	கிலோ	மதிப்பு (ரூ. இலட்சத்தில்)	பணியாற்றுபவர் (எண்ணிக்கை)	கூலி வழங்கியது (ரூ. இலட்சத்தில்)	பணியாற்றுபவர் (எண்ணிக்கை)	கூலி வழங்கியது (ரூ. இலட்சத்தில்)	
2020–2021	3,780	7.77	1,116	83.18	224	44.82	377.59
2021–2022	57,505	120.20	1,049	115.00	291	76.23	569.90
2022–2023	50,750	135.60	1,116	104.25	224	105.70	720.66

[2023 ஏப்ரல் 13

இது தவிர, கதர் மற்றும் கிராமத் தொழில் ஆணைக் குழுவால் சான்றளிக்கப்பட்ட 73 சர்வோதய சங்கங்கள், கதர் கிராமத் தொழில் வாரியத்தைப் போன்றே கதர் உற்பத்தி மற்றும் விற்பனையை மேற்கொண்டு வருகிறது.

தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம் 2022-2023 ஆம் நிதியாண்டில் கதர் இரகங்களை உற்பத்தி செய்வதற்காக 1116 நூற்பாளர்கள் மற்றும் 224 நெசவாளர்களை நேரடியாக ஈடுபடுத்தியுள்ளது. இந்த அலகுகள்மூலம் உற்பத்தி செய்யப்படும் பொருட்களை விற்பனை செய்ய "காதி கிராப்ட்" என்ற பெயரில் 47 விற்பனை நிலையங்களை வாரியம் நடத்தி வருகிறது.

கதர் வாரிய அலகுகளில் கடந்த மூன்று ஆண்டுகளில் நடைபெற்ற உற்பத்தி மற்றும் விற்பனை விவரங்கள் பின்வருமாறு:

(ரூ.இலட்சத்தில்)

வ. எண்	வருடம்	ஆரம்ப இருப்பு	உற்பத்தி	மொத்தம்	விற்பனை	இறுதி இருப்பு
1.	2020-2021	3582.77	377.59	3960.36	1297.29	2663.07
2.	2021-2022	2663.07	509.61	3172.68	1504.41	1668.27
3.	2022-2023 *	1668.27	720.66	2388.93	1186.20	1202.73

* தணிக்கை செய்யப்படவில்லை.

4.2. கதர் பட்டு

வாரியம் தொடங்கப்பட்ட நாளிலிருந்தே கதர் பட்டு உற்பத்தியில் ஈடுபட்டு வருகிறது. கதர் பட்டு இரகங்கள் 6 பட்டு உபகிளைகளில் உற்பத்தி செய்யப்படுகின்றன. தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியத்தால் உற்பத்தி செய்யப்படும் பட்டு இரகங்களுக்கு மத்திய பட்டு வாரியத்தால் "சில்க் மார்க்" முத்திரை வழங்கப்படுவதால், இப்பட்டு புடவைகள் மக்களிடையே நல்ல வரவேற்பை பெற்றுள்ளன. வாரியம், புதிய வடிவமைப்புகளுடன் கண்கவரும் வண்ணம் அச்சிடப்பட்ட/எம்பிராய்டரி வேலைப்பாடு கொண்ட பட்டுப் புடவைகளை உற்பத்தி செய்து வருகிறது. இவைகள் இளைய தலைமுறையினரிடையே பிரபலமடைந்துள்ளது. தரமான பட்டுப் புடவைகள், பட்டு வேட்டிகள் மற்றும் பட்டுத்

2023 ஏப்ரல் 13]

துண்டுகள் வாடிக்கையாளரின் விருப்பத்திற்கேற்ப உற்பத்தி செய்யப்படுகின்றன.

வருடந்தோறும் 277 பட்டு நெசவாளர்களுக்கு கீழ்குறிப்பிட்டுள்ள பட்டு நெசவு மையங்களின்மூலம் வேலை வாய்ப்பு வழங்கப்படுகிறது.

வ.எண்	மாவட்டம்	நெசவு மையம்
1.	தஞ்சாவூர்	கும்பகோணம்
2.		கபிஸ்தலம்
3.	திண்டுக்கல்	நரிக்கல்பட்டி
4.	சேலம்	சேலம்
5.		தாரமங்கலம்
6.	கோயம்புத்தூர்	வடவள்ளி

கடந்த மூன்று ஆண்டுகளில் மேற்கொள்ளப்பட்ட பட்டு உற்பத்தி மற்றும் விற்பனை விவரங்கள் பின்வருமாறு:

(ரூ. இலட்சத்தில்)

வ. எண்	வருடம்	ஆரம்ப இருப்பு	உற்பத்தி	மொத்தம்	விற்பனை	இறுதி இருப்பு
1.	2020-2021	1437.81	311.17	1748.98	539.94	1209.04
2.	2021-2022	1209.04	172.97	1382.01	629.03	752.98
3.	2022-2023 *	752.98	496.65	1249.63	657.29	592.34

** தணிக்கை செய்யப்படவில்லை.*

4.3. நலத்திட்டங்கள்

4.3.1. கதர் நூற்போர் மற்றும் நெசவாளர் நலவாரியம்

கதர் வாரியம் மற்றும் சர்வோதய சங்கங்களில் பதிவு செய்யப்பட்ட நூற்போர் மற்றும் நெசவாளர்களின் நலனுக்காக "கதர் நூற்போர் மற்றும் நெசவாளர் நல வாரியம்" என்ற பெயரில்

2010-2011 ஆம் ஆண்டில் ஒரு நல வாரியம் அமைக்கப்பட்டது. தற்போது இந்நல வாரியத்தில் 7933 உறுப்பினர்கள் உள்ளனர்.

இந்த நல வாரியத்தால் வழங்கப்படும் நலத்திட்ட உதவிகளின் விவரங்கள் பின்வருமாறு:

வ. எண்	**உதவிகளின் விவரம்**		**தொகை (ரூபாயில்)**
1		விபத்து ஈட்டுறுதி திட்டத்தின்கீழ்	
	a	விபத்தினால் மரணம் ஏற்பட்டால்	1,00,000/-
	b	விபத்தினால் ஊனம் ஏற்பட்டால் ஊனத்தின் தன்மைக்கேற்ப	10,000/- முதல் 1,00,000/- வரை
2		இயற்கை மரணத்திற்கான உதவித் தொகை	15,000/-
3		ஈமச்சடங்கு செலவு	2,000/-
4		கல்வி உதவித் தொகை	
	a	10 ஆம் வகுப்பு படித்து வரும் பெண் குழந்தைகளுக்கு	1,000/-
	b	10 ஆம் வகுப்பு தேர்ச்சி பெற்றவர்களுக்கு	1,000/-
	c	11 ஆம் வகுப்பு படித்து வரும் பெண் குழந்தைகளுக்கு	1,000/-
	d	12 ஆம் வகுப்பு படித்து வரும் பெண் குழந்தைகளுக்கு	1,500/-
	e	12 ஆம் வகுப்பு தேர்ச்சி பெற்றவர்களுக்கு	1,500/-
	f	முறையான பட்டப் படிப்பிற்கு	1,500/-
		விடுதி வசதியுடன் முறையான பட்டப் படிப்பிற்கு	1,750/-

2023 ஏப்ரல் 13]

வ. எண்		உதவிகளின் விவரம்	தொகை (ரூபாயில்)
	g	முறையான பட்ட மேற்படிப்பிற்கு	*2,000/-*
		விடுதி வசதியுடன் முறையான பட்ட மேற்படிப்பிற்கு	*3,000/-*
	h	தொழில் கல்வி பட்டப் படிப்பிற்கு	*2,000/-*
		விடுதி வசதியுடன் தொழில் கல்வி பட்டப்படிப்பிற்கு	*4,000/-*
	i	தொழில் கல்வி பட்ட மேற்படிப்பிற்கு	*4,000/-*
		விடுதி வசதியுடன் தொழில் கல்வி பட்ட மேற்படிப்பிற்கு	*6,000/-*
	j	ஐ.டி.ஐ. தொழிற் பயிற்சி படிப்பிற்கு	*1,000/-*
		விடுதி வசதியுடன் ஐ.டி.ஐ. தொழிற் பயிற்சி படிப்பிற்கு	*1,200/-*
5		திருமண உதவித் தொகை	*2,000/-*
6		மகப்பேறு உதவித் தொகை	
	a	மாதம் ஒன்றுக்கு ரூ.1,000/- வீதம் (மகப்பேறுக்கு முன் 3 மாதங்கள், மகப்பேறுக்குப் பின் 3 மாதங்கள்)	*6,000/-*
	b	கருக்கலைப்பு/கருச்சிதைவு	*3,000/-*
7		மூக்குக் கண்ணாடி செலவுத் தொகையை ஈடுசெய்தல்	*500/-* வரை
8		முதியோர் ஓய்வூதியம் (மாதந்தோறும்)	*1,000/-*

2022-2023 ஆம் நிதியாண்டில் நூற்போர் மற்றும் நெசவாளர்களுக்கு ரூ.*23.00* இலட்சம் உதவித் தொகையாக வழங்கப்பட்டுள்ளது.

[2023 ஏப்ரல் 13

4.3.2 நூற்போர் மற்றும் நெசவாளர்களுக்கான நல நிதி

நூற்போர் மற்றும் நெசவாளர்களுக்கான நல நிதி 1990 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டது. கைவினைஞர்கள், அவர்கள் பெறும் கூலித்தொகையில் 12 விழுக்காடு தொகையினை பங்களிப்பாக வழங்குகிறார்கள். வாரியமும் அதற்கு ஈடான தொகையை பங்களிப்பாக வழங்குகிறது. நூற்பாளர்கள் மற்றும் நெசவாளர்கள் தங்கள் கணக்கில் இருக்கும் இருப்புத் தொகையிலிருந்து பண்டிகை, கல்வி, மருத்துவம் மற்றும் தங்கள் குடும்ப உறுப்பினர்களின் திருமணம் போன்றவற்றிற்கான செலவுகளை எதிர்கொள்ள எந்த நேரத்திலும் எடுத்துக்கொள்ள அனுமதிக்கப்படுகிறார்கள். நூற்போர் மற்றும் நெசவாளர்களின் கணக்கில் இருக்கும் இருப்புத் தொகை முழுவதும் அவர்கள் ஓய்வுபெறும் போது திரும்ப வழங்கப்படுகிறது. வாரியம், நூற்போர் மற்றும் நெசவாளர்களுக்கு நிர்ணயிக்கப்பட்ட கூலித் தொகையுடன், அவர்களது அடிப்படை கூலியில் 10 விழுக்காடு தொகையை, ஊக்கத் தொகையாக வழங்கி வருகிறது.

இத்திட்டத்தின்கீழ், 2022-2023 ஆம் நிதியாண்டில் 1617 கைவினைஞர்களுக்கு ரூ.73.85 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.

5. மண்பாண்டத் தொழிலாளர்களுக்கான நலத்திட்டங்கள்

மண்பாண்டத் தொழிலாளர்களுக்கு நல்ல வருமானம் தரும் தொழிலாக கிராமத் தொழில்களில் மண்பாண்டத் தொழில் விளங்கி வருகிறது. வாரியத்தின் கட்டுப்பாட்டில் 34 மண்பாண்டத் தொழிற் கூட்டுறவுச் சங்கங்கள் 3816 உறுப்பினர்களுடன் செயல்பட்டு வருகிறது. ஒவ்வொரு ஆண்டும் மண்பாண்டத் தொழிலாளர் குடும்பத்திற்கு மழைக்கால பராமரிப்புத் தொகையாக ரூ.5000/- வீதம் அரசு வழங்கி வருகிறது.

இதன் விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன: —

வருடம்	மழைக்கால பராமரிப்புத் தொகை (ரூ.)	பயனடைந்தோரின் எண்ணிக்கை	மொத்த தொகை (ரூ.)
2020–2021	5000.00	11,957	5,97,85,000
2021–2022	5000.00	11,822	5,91,10,000
2022–2023	5000.00	11,676	5,83,80,000

2023 ஏப்ரல் 13]

இது தவிர, 5,700 மண்பாண்டத் தொழிலாளர் குடும்பங்களுக்கு தலா ரூ.20,400/- மதிப்புள்ள மின்சாரத்தால் இயங்கும் 5,700 சீலா மின்விசை மண்பாண்ட சக்கரங்கள் இதுவரை வழங்கப்பட்டுள்ளன.

நடப்பு ஆண்டில் தேவையான நிதி அரசால் ஒப்பளிப்பு செய்யப்பட்டு மீதமுள்ள 2,475 சீலா மின்விசை மண்பாண்ட சக்கரங்களை உற்பத்தி செய்து வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

6. வணிக அபிவிருத்தி நிதியுதவி (MDA)

6.1. கதர் கிராமத் தொழில்கள் ஆணையம்

கதர் உற்பத்தி மற்றும் விற்பனையை ஊக்குவிப்பதற்காக 2010-2011 ஆம் ஆண்டு முதல் கதர் மற்றும் கிராமத் தொழில்கள் ஆணையத்தால் வணிக அபிவிருத்தி நிதியுதவி (MDA) திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது.

கதராணையத்தால், கதர், பாலிவஸ்திரா மற்றும் பட்டு உற்பத்தியின் பிரதான செலவின மதிப்பில் 30 விழுக்காடு வணிக அபிவிருத்தி நிதியுதவியாக (MDA) கதர் கிராமத் தொழில் வாரியம் மற்றும் சர்வோதயா சங்கங்களுக்கு வழங்கப்பட்டு வருகிறது.

மேற்கூறிய 30 விழுக்காடு தொகையில், 40 விழுக்காடு தொகை நூற்போர், நெசவாளர் மற்றும் கைவினைஞர்களுக்கு ஊக்கக் கூலித் தொகையாக வழங்கப்படுகிறது. இத்தொகையானது மின்னணு தீர்வை முறையில் நேரடியாக தனிநபரின் வங்கிக் கணக்கிற்கு ஒவ்வொரு காலாண்டிலும் அனுப்பப்படுகிறது. இவ்விவரங்கள் கதராணைக் குழுவின் இணையதளத்தில் பதிவேற்றம் செய்யப்படுகிறது. மீதமுள்ள 60 விழுக்காடு, சர்வோதய சங்கங்கள் மற்றும் தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரிய கணக்குகளில் வரவு வைக்கப்படுகிறது. கதர் கிராமத் தொழில் வாரியத்தால் பெறப்பட்ட வணிக அபிவிருத்தி நிதியுதவி விவரம் பின்வருமாறு:—

(ரூ.இலட்சத்தில்)

வருடம்	தொகை
2020-2021	*151.34*

2021-2022	163.80
2022-2023 (தணிக்கை செய்யப்படவில்லை)	219.08

6.2. மாநில அரசு

தமிழ்நாடு அரசு, கதர் கிராமத் தொழில் வாரியம் மற்றும் சர்வோதய சங்கங்களுக்கு கதர் இரகங்களின் உற்பத்தி மதிப்பின் அடிப்படையில் வணிக அபிவிருத்தி நிதியுதவியாக 20 விழுக்காடு எனக் கணக்கிட்டு வழங்குகிறது. 2022-2023 ஆம் நிதியாண்டில் மாநில அரசு, தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியத்திற்கு ரூ.4 கோடியும், சர்வோதய சங்கங்களுக்கு ரூ.22 கோடியும் நிதியுதவி வழங்கியுள்ளது.

7. கிராமத் தொழில்கள்

ஊரகப் பகுதிகளில் கிடைக்கும் மூலப்பொருட்கள் மற்றும் மனிதவளத்தைப் பயன்படுத்தி சந்தைப்படுத்தக்கூடிய பொருட்களின் உற்பத்தியை ஊக்குவிப்பதன்மூலம் கிராமப்புற வறுமையைப் போக்க கிராமத் தொழில் திட்டங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளது. குறைந்த மூலதன முதலீட்டில் அதிகளவிலான வேலைவாய்ப்பு என்பது கிராமத் தொழில் திட்டத்தின் தனிச்சிறப்பாகும். இவ்வாரியம், தச்சு மற்றும் கருமாரத் தொழில், தோல் பொருட்கள் உற்பத்தி, சோப்பு உற்பத்தி, கைமுறைக் காகிதம் உற்பத்தி, மட்பாண்டங்கள் மற்றும் தேனீ வளர்ப்பு போன்ற பல்வேறு தொழில்களை ஊக்குவித்து வருகிறது.

வாரியம், கிராமத் தொழில்களை தொடர்ந்து மேம்படுத்தி, மாநிலம் முழுவதும் உள்ள தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம், சர்வோதய சங்கங்கள் மற்றும் பொது விநியோக அமைப்பின் சில்லறை விற்பனை நிலையங்கள்மூலம் விற்பனை செய்ய ஊக்குவிக்கிறது.

7.1. சோப்புத் தொழில்

தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியத் தொழில்களுள் முதன்மையான மற்றும் இலாபகரமான தொழில்களில் சோப்புத் தொழிலும் ஒன்றாகும். வாரியக் கட்டுப்பாட்டில் பின்வரும் மாவட்டங்களில் மொத்தம் 9 அலகுகள் இயங்கி வருகின்றன.

2023 ஏப்ரல் 13]

இந்த சோப்பு அலகுகள் வாரியத்திற்கு பெரும் வருவாயை ஈட்டித் தருகிறது.

சோப்பு அலகுகள்

வ. எண்	மாவட்டம்	அலகு இருப்பிடம்
1.	செங்கல்பட்டு	திருக்கழுக்குன்றம்
2.		மாமண்டூர்
3.	திருச்சிராப்பள்ளி	சமயபுரம்
4.	தஞ்சாவூர்	நாஞ்சிக்கோட்டை
5.	ஈரோடு	மொடக்குறிச்சி
6.	சிவகங்கை	கண்டனூர்
7.	கன்னியாகுமரி	மயிலாடி
8.	திருவள்ளூர்	பூண்டி
9.	கடலூர்	பண்ருட்டி

குமரி, மூலிகா, நித்தம், வேம்பு, சந்தனம் மற்றும் கார்பாலிக் போன்ற சோப்பு வகைகள் குளியல் சோப்பு அலகுகளில் தயாரிக்கப்படுகின்றன. கிளீனிங் பவுடர், சலவை சோப்புக் கட்டி, சலவைத் தூள் மற்றும் பார் சோப்பு ஆகியவை இதர சோப்பு அலகுகளில் 'கோபுரம்' எனும் வணிக குறியீட்டில் தயாரிக்கப்படுகிறது.

ரோஸ், லாவெண்டர், செஞ்சந்தனம் மற்றும் சந்தனம் ஆகிய 4 நறுமணங்களில் புதிதாக அறிமுகப்படுத்தப்பட்ட "காதி ப்ராக்ரென்ஸ்" சோப்புகள், இதுவரை ரூ.82.16 இலட்சம் மதிப்பில் விற்பனை செய்யப்பட்டுள்ளன.

தரமான சோப்புகள், நியாயமான விலையில் உற்பத்தி செய்யப்படுவதால், பொதுமக்கள் இவற்றை விரும்பி வாங்குகின்றனர். இவ்வாரியத்தால், சமீபகாலமாக கதர் கிராமத் தொழில் பொருட்கள் இணைய வழி விற்பனையை துவக்கி செயல்படுத்தி வருகிறது. மேலும், மாநிலம் முழுவதுமுள்ள அனைத்து பிரதான பல்பொருள் அங்காடிகள் மூலமாக வாரியத்தின் பொருட்களை விற்பனை செய்ய மொத்த வணிகர்கள் நியமிக்கப்பட்டுள்ளார்கள்.

[2023 ஏப்ரல் 13

சிவகங்கை மாவட்டம் கண்டனூர் கதர் வளாகத்தில் இவ்வாரியத்தால் சமீபத்தில் அறிமுகப்படுத்தப்பட்ட திரவ சலவை சோப்பு தொடர்ந்து உற்பத்தி செய்யப்பட்டு வருகிறது. மேலும், இவ்வாரியம், புதிய இரக கிளிசரின் சோப்பை அறிமுகப்படுத்த பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது.

இவ்வாரியம், செங்கல்பட்டு மாவட்டம் திருக்கழுக்குன்றம் சோப்பு அலகில் தானியங்கி முத்திரை பதிக்கும் இயந்திரத்தை கொள்முதல் செய்து நிறுவியுள்ளதோடு, ஈரோடு மாவட்டம் மொடக்குறிச்சி சோப்பு அலகில் மற்றொரு இயந்திரத்தை கொள்முதல் செய்து நிறுவவுள்ளது. இந்த இயந்திரங்களை நிறுவுவதன்மூலம், சோப்பு தயாரிப்புகளின் வடிவம் மேம்படும்.

2022-2023 ஆம் நிதியாண்டில் ரூ.1546.79 இலட்சம் மதிப்பிலான சோப்புகள் உற்பத்தி செய்யப்பட்டு விற்பனை செய்யப்பட்டுள்ளன.

8. தச்சு மற்றும் கருமாரத் தொழில்

கிராமப்புற கைவினைஞர்களுக்கு நல்ல வேலை வாய்ப்பை வழங்கும் பழமையான கிராமத் தொழில்களில் தச்சு மற்றும் கருமார தொழிலும் ஒன்றாகும். தற்போது, ஐந்து தச்சு மற்றும் கருமார அலகுகள் பின்வரும் இடங்களில் செயல்பட்டு வருகின்றன:

வ. எண்	மாவட்டம்	அலகு இருப்பிடம்
1.	திருவள்ளூர்	வீரராகவபுரம்
2.	இராணிப்பேட்டை	அரக்கோணம்
3.	வேலூர்	பள்ளிகொண்டா
4.	சிவகங்கை	கண்டனூர்
5.	திருநெல்வேலி	பேட்டை

இவ்வலகுகளில் உற்பத்தி செய்யப்படும் மரம் மற்றும் இரும்பிலான அறைகலன்கள் அரசுத் துறைகள், நீதிமன்றங்கள், பல்கலைக்கழகங்கள், இந்து சமய அறநிலையத் துறை, பொது நூலகங்கள், பள்ளிகள் மற்றும் கல்லூரிகளுக்கு விநியோகம் செய்யப்பட்டு வருகின்றன.

தற்போது, திருநெல்வேலி மாவட்டம் பேட்டை அலகில் தரம் மற்றும் உற்பத்தித் திறனை மேம்படுத்துவதற்காக நவீன ஸ்டீல் தகடு வெட்டும் மற்றும் வளைக்கும் இயந்திரம் நிறுவப்பட்டுள்ளது.

2023 ஏப்ரல் 13]

2022-2023 ஆம் நிதியாண்டில், ரூ.470.00 இலட்சம் மதிப்பிலான மரம் மற்றும் இரும்பிலான தளவாடங்கள் உற்பத்தி செய்யப்பட்டு பல்வேறு துறைகளுக்கு விற்பனை செய்யப்பட்டுள்ளன.

9. காலணித் தொழில்

தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியத்தின் கட்டுப்பாட்டில் 8 காலணி உற்பத்தி அலகுகள் செயல்பட்டு வருகின்றன.

வ. எண்	மாவட்டம்	அலகு இருப்பிடம்
1	திருவள்ளூர்	அம்பத்தூர்
2	சேலம்	சேலம்
3	திருப்பூர்	திருப்பூர்
4	திண்டுக்கல்	திண்டுக்கல்
5	சிவகங்கை	கண்டனூர்
6	நாமக்கல்	நாமக்கல்
7	திருநெல்வேலி	பாளையங்கோட்டை
8	கன்னியாகுமரி	நாகர்கோவில்

அரசுத்துறைகளுக்கான கோப்புப் பெட்டிகள், அரசு மருத்துவமனைகளுக்கான இரப்பர் தேங்காய் நார் மெத்தைகள், காலணிகள், நடத்துனர் பணப்பைகள், கையுறைகள், உள்ளாட்சி ஊழியர்களுக்கான காலணிகள் ஆகியவை இவ்வலகுகளில் உற்பத்தி செய்யப்பட்டு வருகின்றன.

தோல் பொருட்களின் தரம் மற்றும் வடிவினை மேம்படுத்த சேலம், நாமக்கல் மற்றும் கண்டனூரில் (சிவகங்கை மாவட்டம்) மூன்று பஃபிங் மற்றும் பாலிஷ் இயந்திரங்கள் நிறுவப்பட்டுள்ளன.

இவ்வாரியம், 2022-2023 ஆம் நிதியாண்டில், ரூ.115.89 இலட்சம் மதிப்புள்ள தோல் பொருட்களை உற்பத்தி செய்து, விற்பனை செய்துள்ளது.

10. தேனீ வளர்ப்புத் தொழில்

10.1. காதி தேன்

தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியத்தால் ஊக்குவிக்கப்படும் முக்கிய கிராமத் தொழில்களில் தேனீ

வளர்ப்புத் தொழிலும் ஒன்றாகும். வாரியம், தற்போது நேரடியாக தேனீ விவசாயிகளிடம் இருந்து பச்சைத் தேனை கொள்முதல் செய்து கன்னியாகுமரி மாவட்டம் மார்த்தாண்டத்திலுள்ள தேன் பதப்படுத்தும் அலகில் பதப்படுத்தி தரம் பரிசோதித்து அக்மார்க் சான்றிதழுடன் காதி கிராப்ட் விற்பனை நிலையங்கள் மற்றும் சர்வோதய சங்கங்கள்மூலம் விற்பனை செய்கிறது. இதன்மூலம் சுமார் 10,000 தேனீ விவசாயிகள் பயனடைகின்றனர்.

இவ்வாரியத்தால், அத்திப்பழம், பேரீச்சம்பழம், நெல்லி, வால்நட் மற்றும் உலர் பழங்கள் போன்ற ஆரோக்கியமான பொருட்களுடன் மதிப்பு கூட்டப்பட்ட தேன் 400 கிராம் முதல் 450 கிராம் அளவுகளில் சமீபத்தில் அறிமுகப்படுத்தப்பட்டது.

2022-2023 ஆம் நிதியாண்டில், ரூ.155.69 இலட்சம் மதிப்பிலான பதப்படுத்தப்பட்ட தேன் விற்பனை செய்யப்பட்டுள்ளது.

10.2. தேன் பரிசோதனைக் கூடம்

வாரியம், மார்த்தாண்டத்திலுள்ள அம்சி தேன் பதப்படுத்தும் நிலையத்தில் அதிக அளவுத் தேனை பரிசோதனை செய்யும் பொருட்டு நவீன தேன் பரிசோதனைக் கூடத்தை நிறுவியுள்ளது, தரமான பச்சைத் தேனை கொள்முதல் செய்து சந்தையில் நிலவும் தரநிலையை எட்ட இப்பரிசோதனைக் கூடம் வாரியத்திற்கு உதவியாக இருக்கும்.

11. கைமுறைக் காகிதத் தொழில்

சுற்றுச்சூழலுக்கு உகந்த வகையில் செய்யப்பட்ட காகிதத் தயாரிப்புகளான கச்சா அட்டை, கோப்பு அட்டைகள், பாண்டு பேப்பர், அலுவலக கவர், எக்ஸ்ரே கவர், அட்டை பெட்டிகள் மற்றும் எழுதும் காகிதம் ஆகியவை கீழ்க்காணும் அலகுகளில் உற்பத்தி செய்யப்பட்டு வருகின்றன:

வ.எண்	மாவட்டம்	அலகு இருப்பிடம்
1	விழுப்புரம்	பிடாகம்
2	கடலூர்	வடலூர்
3	திருப்பூர்	திருப்பூர்
4	ஈரோடு	சென்பகப்புதூர்

2022-2023 ஆம் நிதியாண்டில், ரூ.82.01 இலட்சம் மதிப்பிலான கைமுறைக் காகிதப் பொருட்கள் உற்பத்தி செய்யப்பட்டு, விற்பனை செய்யப்பட்டுள்ளன.

2023 ஏப்ரல் 13]

12. இதர கிராமத் தொழில்கள்

இவ்வாரியம், பூஜை பொருட்கள், வலி நிவாரண தைலம், ஷாம்பு, மரச்செக்கு எண்ணெய் ஆகியவற்றை உற்பத்தி செய்து விற்பனை செய்வதுடன், பாரம்பரிய அரிசி மற்றும் சிறு தானியங்களை சந்தைப்படுத்துகிறது. இதன் விவரங்கள் பின்வருமாறு:

வ. எண்	பொருட்களின் பெயர்	அலகுகளின் எண்ணிக்கை	நிறுவப்பட்ட ஆண்டு	2022–2023–இல் உற்பத்தி (ரூ.இலட்சத்தில்)	2022–2023–இல் விற்பனை (ரூ.இலட்சத்தில்)
1	அகர்பத்தி, ஜவ்வாது பவுடர், மூலிகை பற்பொடி, ரோஸ் வாட்டர் மற்றும் பல	1	2013	88.10	92.73
2	நீலகிரி தைலம்	1	2022	11.30	12.14
3	ஷாம்பு, கை கழுவும் திரவம், குளியல் திரவம் மற்றும் திரவ சலவை சோப்பு	1	2022	14.20	15.35
4	மரச்செக்கு எண்ணெய்	4	2022	59.05	69.10
5.	பாரம்பரிய அரிசி வகைகள்	4	2022	13.05	15.17
6.	சிறு தானியங்கள்	4	2022	1.10	1.25
	மொத்தம்			186.80 *	205.74 *

*தணிக்கை செய்யப்படவில்லை

13. வணிகம்

13.1.கதர் அங்காடிகள்

வாரியத்தின் பல்வேறு அலகுகளில் உற்பத்தி செய்யப்படும் கதர் கிராமப் பொருட்களை சந்தைப்படுத்துவதற்கு தமிழ்நாடு முழுவதும் “காதி கிராப்ட்” என்ற பெயரில் 47 விற்பனை அங்காடிகளை வாரியம் நடத்தி வருகிறது.

13.2.ஒவ்வொரு மாவட்டத்திற்கும் சிறப்பு சேர்க்கும் கிராமப் பொருட்களின் விற்பனை (ODOP)

இத்திட்டத்தின்மூலம் அந்தந்த மாவட்டத்திற்கு சிறப்பு சேர்க்கும் பொருட்களான கிராமத் தொழில் பொருட்கள், உணவுப் பொருட்களை உற்பத்தி செய்யும் மகளிர் சுயஉதவி குழுக்கள் (SHGs), பஞ்சாயத்து அளவிலான மகளிர் குழுக்களின் கூட்டமைப்பு (PLFs), உழவர் உற்பத்தியாளர் அமைப்புகள் (FPOs), பிரதம மந்திரியின் வேலைவாய்ப்பு உருவாக்கும் திட்டத்தின் பயனாளிகள் (PMEGP)

மற்றும் சிறு, குறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களிடமிருந்து கொள்முதல் செய்து சந்தைப்படுத்தப்படுகிறது.

முக்கிய படிநிலைகள்:

(i) சிறப்பு மற்றும் தனித்துவமான கிராமத் தயாரிப்புகளை அடையாளம் காணுதல்.

(ii) கொள்முதல், பேக்கிங், விளம்பரம், வணிகம் மற்றும் சந்தைப்படுத்துவதற்கு உதவுதல்.

(iii) சந்தையில் போட்டியிடும் வகையில் பொருட்களின் விலையை நிர்ணயித்தல்.

(iv) கதரங்காடிகள், சர்வோதய சங்கங்கள், தனியார் சிறப்பு அங்காடிகள் மூலம் சந்தைப்படுத்தல்.

வாரியத்தால், 5-2-2023 அன்று அனைத்து கதரங்காடிகள் மற்றும் சர்வோதய சங்கங்களில் இத்திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது. இத்திட்டத்தின்கீழ், இதுவரை ரூ.51.20 இலட்சம் மதிப்பிலான கிராமப் பொருட்கள் விற்பனை செய்யப்பட்டுள்ளன.

13.3. இணைய வழி விற்பனை

கதர் கிராமப் பொருட்கள் மற்றும் பனைப் பொருட்களின் இணையதள விற்பனையை அதிகரிக்க கதர் கிராமத் தொழில் வாரியத்தால் www.tnkvib.org மற்றும் www.tnkhadi.com ஆகிய இரண்டு இணையதளங்கள் உருவாக்கப்பட்டுள்ளன. இதைத் தவிர, குறிப்பாக இளைய தலைமுறையினரைக் கவரும் வகையில் ஆண்ட்ராய்டு மற்றும் iOS வழியில் செயல்படும் “tnkhadi” எனும் கைபேசி செயலி அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

அமேசான் (Amazon), பிளிப்கார்ட் (Flipkart) போன்ற பல்வேறு மின் வணிகத் (e—Commerce) தளங்கள் வாயிலாகவும் கதர் கிராமப் பொருட்கள் மற்றும் பனைப் பொருட்கள் இணைய வழி மூலமாக விற்பனை செய்யப்பட்டு வருகின்றன.

2022-2023 ஆம் நிதியாண்டில் ரூ.5.27 இலட்சம் மதிப்பிலான பொருட்கள் விற்பனை செய்யப்பட்டுள்ளன.

2023 ஏப்ரல் 13]

13.4. தனி உரிமைக் கிளைகள் (Franchise)

கதரங்காடி இல்லாத பகுதியிலுள்ள வாடிக்கையாளர்களுக்கு கதர் கிராமப் பொருட்கள் மற்றும் பனைப் பொருட்கள் கிடைக்கும் வகையில் தனி உரிமைக் கிளைகள் அமைக்க உரிமம் வழங்கப்பட்டுள்ளது.

தற்போது செயல்படும் தனி உரிமை கிளைகளின் விவரங்கள் பின்வருமாறு:

வ.எண்	மாவட்டம்	இடம்
1.	காஞ்சிபுரம்	திருப்பெரும்புதூர்
2.	நாமக்கல்	கொல்லிமலை
3.	கன்னியாகுமரி	சுசீந்திரம்
4.	திருச்சிராப்பள்ளி	திருவெறும்பூர்
5.	திருநெல்வேலி	திருநெல்வேலி

2022-2023 ஆம் நிதியாண்டில் தனியுரிமை கிளைகளின்மூலம் ரூ.8.75 இலட்சத்திற்கு விற்பனை எய்தப்பட்டுள்ளது.

13.5. கண்காட்சி மற்றும் விற்பனை

கதர் கிராமப் பொருட்கள் மற்றும் பனைப் பொருட்களை அரசு அலுவலர்கள், கல்லூரி மாணவர்கள் மற்றும் பொதுமக்கள் மத்தியில் பிரபலப்படுத்துவதற்கு அரசு அலுவலக வளாகம் மற்றும் கல்லூரிகளில் விற்பனை மற்றும் கண்காட்சி தொடர்ந்து நடத்தப்பட்டு வருகிறது. சென்னைக் குறளகம் கதரங்காடியில் நடைபெற்ற கொலு கண்காட்சியில் மண்பாண்டப் பொருட்களுக்கு என பிரத்தியேகமாக 9 அரங்குகளுடன் 35 அரங்குகள் அமைத்து கைவினைப் பொருட்கள் காட்சிப்படுத்தப்பட்டன. இக்கண்காட்சியை நடத்தியதன்மூலம் ரூ.104.40 இலட்சம் மதிப்பிலான கதர் கிராமப் பொருட்கள், பொம்மைகள், கைவினைப் பொருட்கள் மற்றும் பீங்கான் பொருட்கள் விற்பனை செய்யப்பட்டுள்ளன.

காந்தி ஜெயந்தி தினமான 02.10.2022 அன்று, AMET *பல்கலைக்கழகத்தின் 4000 மாணவர்கள், ஆசிரியர்கள் மற்றும் அலுவலர்களால் “கை கொடுப்போம் காதிக்கும் கைத்தறிக்கும் காந்தி பிறந்த நாளில்“ என்ற புதிய முயற்சியின்கீழ் ரூ.44.00 இலட்சம் மதிப்புள்ள கதர் கிராமப் பொருட்கள் விற்பனை செய்யப்பட்டன.*

[2023 ஏப்ரல் 13

13.6. விளம்பரங்கள்

கதர் கிராமத் தொழில் வாரியமும், பனை வாரியமும் தரமான பொருட்களைத் தயாரித்தாலும், பொதுமக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்த முறையான விளம்பரங்கள் கடந்த காலங்களில் மேற்கொள்ளப்படவில்லை. ஆதலால், ஆதிரை பட்டு, காதி ப்ராக்ரென்ஸ் சோப்புகள், காதி தேன், பதநீர், பனை வெல்லம் மற்றும் சுக்கு காபி தூள் பற்றிய குறும் விளம்பரப் படங்கள் தயாரிக்கப்பட்டு தொலைக்காட்சி சேனல்களில் ஒளிபரப்பப்பட்டும், திரையரங்குகள் மற்றும் அரசு எல்.இ.டி வாகனங்களில் திரையிடப்பட்டும் வருகிறது.

பாரம்பரிய அரிசி, மரச்செக்கு எண்ணெய், பனைப் பொருட்கள் மற்றும் பனை ஓலைப் பொருட்களை பிரபலப்படுத்த 4 குறும்படங்கள் தயாரிக்கப்பட்டு வருகின்றன. வலையொளி (YouTube), இன்ஸ்டாகிராம் (Instagram), ட்விட்டர் (Twitter) மற்றும் முகநூல் (Facebook) போன்ற சமூக ஊடகங்களிலும் விளம்பரப்படுத்தப்பட்டு வருகின்றன.

14. தொழிற் கூட்டுறவுச் சங்கங்கள்

தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியத்தின் கட்டுப்பாட்டின்கீழ், 165 தொழிற்கூட்டுறவுச் சங்கங்கள் இயங்கி வருகின்றன. இதனில், 34 மண்பாண்ட தொழிற்கூட்டுறவுச் சங்கங்களும் அடங்கும்.

தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியத்தின் தலைமைச் செயல் அலுவலர், இத்தொழிற்கூட்டுறவுச் சங்கங்களுக்கு செயற்பதிவாளராகச் செயல்படுகிறார். இத்தொழிற்கூட்டுறவுச் சங்கங்களின் கணக்குகள் மற்றும் செலவுகள் கூட்டுறவு தணிக்கைத் துறையால் தணிக்கை செய்யப்படுகிறது.

2022-2023 ஆம் நிதியாண்டில், ரூ.2991.10 இலட்சத்திற்கு இச்சங்கங்களால் உற்பத்தி மேற்கொள்ளப்பட்டு, விற்பனை செய்யப்பட்டுள்ளது.

15. பிரதம மந்திரியின் வேலைவாய்ப்பு உருவாக்கும் திட்டம் (PMEGP)

ஒன்றிய அரசின் குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில்கள் துறையின் “பிரதம மந்திரியின் வேலைவாய்ப்பு உருவாக்கும் திட்டம்”

2008-2009 ஆம் ஆண்டில் அறிமுகப்படுத்தப்பட்டது. இத்திட்டம், தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம், தொழில் மற்றும் வணிகத் துறை, கதர் கிராமத் தொழில்கள் ஆணையம் மற்றும் கயிறு வாரியம் ஆகியவற்றின்மூலம் செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டம் 1-7-2016 முதல் இணைய வழியாக வெற்றிகரமாக செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இத்திட்டத்தின்கீழ், வங்கிகளால், உற்பத்தி பணியில் ஈடுபடும் பயனாளிகளுக்கு திட்ட மதிப்பீட்டில் அதிகபட்சமாக ரூபாய் 50 இலட்சமும், சேவைப் பிரிவில் ஈடுபடும் பயனாளிகளுக்கு அதிகபட்சமாக ரூபாய் 20 இலட்சமும் வழங்கப்படுகிறது. உற்பத்திப் பிரிவின்கீழ் ரூ.10 இலட்சத்துக்கு மேல் கடன் பெறுவதற்கும், சேவைப் பிரிவின்கீழ் ரூ.5 இலட்சத்துக்கு மேல் கடன் பெறுவதற்கும் பயனாளிகள் குறைந்தபட்சம் 8 ஆம் வகுப்பு தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும்.

தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியத்தால் 2020-2021 முதல் 2022-2023 வரை விடுவிக்கப்பட்ட விளிம்புத் தொகை மானிய விவரங்கள் பின்வருமாறு:

வருடம்	**அலகுகளின் எண்ணிக்கை**	**விடுவிக்கப்பட்ட விளிம்புத் தொகை (ரூ.இலட்சத்தில்)**	**வேலைவாய்ப்பு வழங்கியது (பயனாளிகளின் எண்ணிக்கை)**
2020–2021	792	1,829.75	5,489
2021–2022	1085	2,601.26	8,680
2022–2023 *	952	2,668.95	7,616

***இறுதி செய்யப்படவில்லை**



16. கதர் கிராமப் பொருட்களின் உற்பத்தி மற்றும் விற்பனை

தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியத்தால் 2021-2022 மற்றும் 2022-2023-ல் ஒட்டுமொத்தமாக கதர் கிராமப் பொருட்களின் உற்பத்தி மற்றும் விற்பனையின் சாதனை விவரம் பின்வருமாறு:

(ரூ. இலட்சத்தில்)

வ. எண்	தொழில்	2021–2022 (தணிக்கைக்கு பின்பு)		2022–2023 (தணிக்கை செய்யப்பட வேண்டும்)	
		உற்பத்தி	விற்பனை	உற்பத்தி	விற்பனை
1.	**கதர்**	682.58	2137.25	1217.31	1843.49
2.	**கிராமத் தொழில்கள்**				
	அ. சோப்பு	1265.70	1234.41	1404.71	1546.79
	ஆ. தச்சு மற்றும் கருமாரம்	746.12	815.04	465.00	470.00
	இ. தோல் பொருட்கள்	66.55	55.55	101.44	115.89
	ஈ. கை முறைக் காகிதம்	49.83	34.07	49.22	82.01
	உ. தேனீ வளர்ப்பு	105.35	133.11	116.96	155.69
	ஊ. இதர தொழில்கள்	50.62	296.93	186.80	601.45*
	எ. ஒரு மாவட்டம் ஒரு பொருள்	–	–	–	51.20
3.	**தொழிற் கூட்டுறவு சங்கங்கள்**	1518.83	2084.32	2032.96	2991.10
	கூடுதல்	**4485.58**	**6790.68**	**5574.40**	**7857.62**

* கண்காட்சி வழி விற்பனை மற்றும் கழிவுப் பொருள் விற்பனை ஆகியவற்றின் மூலம் ஈட்டப்பட்ட தொகையும் இதில் அடங்கும்

2023 ஏப்ரல் 13]



17. அரசிடமிருந்து பெறப்படும் நிதியுதவி

தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியப் பணியாளர்களுக்கு ஊதியம் மற்றும் ஓய்வூதியதாரர்களுக்கு ஓய்வூதியம் வழங்கவும், கதர் இரகங்களுக்கு வணிக அபிவிருத்தி நிதியுதவி வழங்கவும் தேவையான நிதியுதவியை மாநில அரசு, தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியத்திற்கு வழங்கி வருகிறது.

அரசால், தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம் மற்றும் தமிழ்நாடு பனை பொருள் வளர்ச்சி வாரியம் ஆகியவற்றிற்கு, *2023-2024* ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டில் ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதியுதவி விவரங்கள் பின்வருமாறு:

வ. எண்	விவரம்		தொகை (ரூ. இலட்சத்தில்)
1.	பணியாளர்களுக்கான ஊதியம் மற்றும் ஓய்வூதியதாரர்களுக்கு ஓய்வூதியம் வழங்குவதற்கான மானியம்.		9837.76
2.	தள்ளுபடி மானியம்	கதர் வாரியத்திற்கு	400.00
		சான்றளிக்கப்பட்ட நிறுவனங்களுக்கு	2200.00
3.	தணிக்கைக் கட்டணம்		163.38
4.	கிராமத் தொழில் மேம்பாட்டிற்கான உதவி		0.01
5	தமிழ்நாடு பனை பொருள் வளர்ச்சி வாரியம்		0.01
6.	கதர் நூல் நூற்போர் மற்றும் நெசவாளர் நலவாரியம்		0.01
7.	மண்பாண்ட தொழிலாளர்களுக்கு பராமரிப்பு உதவித் தொகை		584.35
8.	மண்பாண்ட தொழிலாளர்களுக்கு 'சீலா' மின்விசைச் சக்கரங்கள் வழங்குதல்		0.01
9.	விளம்பரமும் பிரச்சாரமும்		10.00
	மொத்தம்		13195.53

[2023 ஏப்ரல் 13

தமிழ்நாடு பனை பொருள் வளர்ச்சி வாரியம்

தமிழ்நாடு பனை பொருள் வளர்ச்சி வாரியம், 1994 தமிழ்நாடு சட்டம் 15-ன்கீழ் பனைத் தொழில் தொடர்பான திட்டங்களை செயல்படுத்த உருவாக்கப்பட்டது. இந்த வாரியத்தின் கட்டுப்பாட்டில், 720 தொடக்க பனை வெல்லம் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்கள், மாவட்ட அளவில் 8 மாவட்ட பனைவெல்ல கூட்டுறவு சம்மேளனங்கள் மற்றும் மாநில அளவில் தமிழ்நாடு மாநில பனை வெல்லம் மற்றும் தும்பு விற்பனை கூட்டுறவு இணையம் ஒன்றும் செயல்பட்டு வருகிறது.

1. நோக்கங்கள்

பனைத் தொழிலாளர்களுக்கு நிதியுதவியுடன், தேவையான மூலப்பொருட்கள், கருவிகள் மற்றும் உபகரணங்களை வழங்குவதுடன், பனைத் தொழிலாளர்களின் வருவாயை அதிகரிக்க அவர்களால் உற்பத்தி செய்யப்படும் பனைப் பொருட்களை சந்தைப்படுத்துவதும் இவ்வாரியத்தின் நோக்கமாகும்.

2. நிருவாகம்

மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் அவர்கள், தமிழ்நாடு பனைப் பொருள் வளர்ச்சி வாரியத்தின் தலைவர் ஆவார். அலுவல் சார் உறுப்பினர்களின் விவரம்:—

1. *அரசு முதன்மைச் செயலாளர், கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை.*
2. *தலைமைச் செயல் அலுவலர், தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம்.*
3. *கூடுதல் காவல்துறை இயக்குனர், (மதுவிலக்கு மற்றும் கலால்).*
4. *அரசு இணை இயக்குநர், நிதி (BPE) துறை.*
5. *தலைமைச் செயல் அலுவலர் (அலுவலால்), தமிழ்நாடு பனை பொருள் வளர்ச்சி வாரியம்.*

தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியத்தின் தலைமைச் செயல் அலுவலர், தமிழ்நாடு பனை பொருள் வளர்ச்சி வாரியத்தின் கட்டுப்பாட்டின்கீழ் செயல்படும் அனைத்து தொடக்க பனை வெல்லம் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்கள், மாவட்ட பனை வெல்ல கூட்டுறவு சம்மேளனங்கள் மற்றும் தமிழ்நாடு மாநில

2023 ஏப்ரல் 13]

பனை வெல்லம் மற்றும் தும்பு விற்பனை கூட்டுறவு இணையம் ஆகியவற்றிற்கு செயற்பதிவாளர் ஆவார்.

3. பதநீர் இறக்குவதற்கான உரிமம்

பதநீரை, கள் போன்ற இதர போதைப்பொருளாக மாற்றி பயன்படுத்துவதை தடுக்கும் வகையில், முறையான உரிமத்துடன் மட்டுமே பதநீரை இறக்கி விற்பனை செய்ய வேண்டுமென அரசு உத்தரவிட்டுள்ளது. இந்த ஆணையின் படி, பதநீரை இறக்குவதற்கான உரிமம் ஒவ்வொரு நிதியாண்டிலும் புதுப்பிக்கப்படுகிறது.

2022-2023 ஆம் நிதியாண்டில் 2927 பனைத் தொழிலாளர்களுக்கு சம்பந்தப்பட்ட மாவட்ட கதர் கிராமத் தொழில்களின் உதவி இயக்குநர்களால் உரிமம் வழங்கப்பட்டுள்ளது.

4. பதநீர் (நீரா)

பனை வெல்லம் (கருப்பட்டி), பனங்கற்கண்டு, பனஞ்சர்க்கரை, பனை மிட்டாய் போன்ற உண்ணக்கூடிய பனைப் பொருட்களின் தொடர் உற்பத்திக்கு பதநீர் ஒரு முக்கிய மூலப்பொருளாகும். பதநீர் ஓர் இயற்கை பானமாகும்.

பனை வாரியம், 2022-2023 ஆம் நிதியாண்டில் பதநீர் இறக்குபவர்களிடமிருந்து 1.42 இலட்சம் லிட்டர் பதநீரைக் கொள்முதல் செய்து ரூ.104.80 இலட்சத்திற்கு விற்பனை செய்துள்ளது.

5. பொது விநியோகக் கடைகள்மூலம் பனை வெல்லம் விற்பனை

வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறையின் நிதிநிலை அறிக்கையில் அறிவித்ததைத் தொடர்ந்து, தமிழ்நாடு முழுவதும் "கற்பகம்" என்ற பெயரில் தமிழ்நாடு மாநில பனை வெல்லம் மற்றும் தும்பு விற்பனை கூட்டுறவு இணையத்தால் பொது விநியோகத் திட்டக் கடைகளுக்கு பனை வெல்லம் விநியோகிக்கப்படுகிறது. இதுவரை ரூ.490.19 இலட்சம் மதிப்பிலான 124.10 மெட்ரிக் டன் பனை வெல்லம் விநியோகிக்கப்பட்டுள்ளது. பல்பொருள் அங்காடிகளில் "கரும் பனை" என்ற பெயரில் பனை வெல்லம் விற்பனை செய்யப்பட்டு வருகிறது.

6. பனை ஓலைப் பொருட்கள்

பனை வாரியத்தின்கீழ் செயல்படும் கூட்டுறவுச் சங்கங்களில் பனை ஓலை பொருட்களான விசிறிகள், மிதியடிகள், கூடைகள்,

பரிசுப் பொருட்களுக்கான பெட்டிகள், நகைப் பெட்டிகள், பேனா ஸ்டாண்டுகள், சாவி கொத்துகள், மாலைகள், விளையாட்டு பொம்மைகள் மற்றும் பனந்தும்பு தூரிகைகள் போன்ற பொருட்கள் உற்பத்தி செய்யப்பட்டு வருகின்றன. 2023 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்தில் தரமான பனை ஓலை பொருட்களை தயாரிக்கும் பயிற்சி திட்டத்தின்கீழ், இராமநாதபுரம் மற்றும் திருச்செந்தூரில் 100 பெண்களுக்கு பயிற்சி அளிக்க திட்டமிடப்பட்டுள்ளது.

7. சந்தைப்படுத்துதல்

உண்ணும் பனைப் பொருட்களான பதநீர், பனை வெல்லம், பனங்கற்கண்டு, பனை மிட்டாய், பனம்பழச்சாறு, சுக்கு காபிதூள் மற்றும் உண்ணாப் பனைப் பொருட்களான பனை ஓலைப் பொருட்கள், தூரிகைகள் போன்றவை கதரங்காடிகள், பனைப் பொருள் விற்பனை அங்காடிகள் மற்றும் பல்பொருள் அங்காடிகளில் விற்பனை செய்யப்பட்டு வருகின்றன.

சென்னை குறளகம், கோயம்பேடு புறநகர் பேருந்து நிலையம், சென்னை உயர்நீதிமன்ற மதுரைக் கிளை, சிவகங்கை ஆட்சியர் அலுவலக வளாகம், திருவில்லிப்புத்தூர் பேருந்து நிலையம், நெய்வேலி நகரம் மற்றும் இராமநாதபுரத்திலுள்ள டாக்டர் ஏ.பி.ஜே. அப்துல் கலாம் நினைவிடம் ஆகிய இடங்களில் பனைப் பொருட்கள் விற்பனை செய்யப்பட்டு வருகின்றன. சமீபத்தில், பனைப் பொருட்களின் விற்பனையை ஊக்குவிக்கும் வகையில், கீழ்க்கண்ட 10 மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகங்களில் பனைப் பொருள் விற்பனை அங்காடிகள் நிறுவப்பட்டுள்ளன:

வ. எண்	மாவட்டம்
1.	இராணிப்பேட்டை
2.	வேலூர்
3.	திருவண்ணாமலை
4.	விழுப்புரம்
5.	பெரம்பலூர்
6.	தஞ்சாவூர்
7.	புதுக்கோட்டை
8.	நாகப்பட்டினம்

2023 ஏப்ரல் 13]

9.	தூத்துக்குடி
10.	தேனி

8. பொது வசதி மையம்

சுத்தமான பனை வெல்லம் தயாரிப்பது சவாலான பணியாகும். இச்சிரமங்களை போக்க, தூத்துக்குடி மாவட்டம் காயல்பட்டினத்தில் பொது வசதி மையம் (CFC) நிறுவப்பட்டுள்ளது. இம்மையத்தில் கட்டுப்படுத்தப்பட்ட சுற்றுப்புறச் சூழலில், கொதி நீராவி முறையில் பனை வெல்லம் தயாரிக்கப்படவுள்ளது. வெப்பநிலையை கட்டுப்படுத்தும் முறையின்மூலம், பனை வெல்லம் கருகுவதைத் தவிர்ப்பதோடு, தூசி மற்றும் சுத்தமற்றப் பொருட்கள் இல்லாத தரமான வெல்லம் தயாரிக்க முடியும்.

9. கட்டடம் கட்டுதல் மற்றும் புனரமைத்தல்

மண்டல பனைப் பொருட்கள் பயிற்சி மையம் கடலூரில் கட்டுப்படுத்தப்பட்ட வெப்பநிலையில் பனை வெல்லத்தைச் சேமிக்க ஒரு புதிய கட்டடம் கட்டப்பட்டு வருகிறது. சிவகங்கை மாவட்டம் மானாமதுரையிலுள்ள பனைப் பொருட்கள் தயாரிப்பு பயிற்சி மையம் சமீபத்தில் புதுப்பிக்கப்பட்டுள்ளது. மாநில இணையத்தின், செங்கல்பட்டு மாவட்டம் கடப்பாக்கத்திலுள்ள கட்டடத்தை புதுப்பிக்கும் பணி நடைபெற்று வருகின்றன.

10. பனை வெல்லம் தயாரிப்புக்கான பயிற்சி

தரமான பனை வெல்லம் தயாரிப்பதற்காக ஐந்து குழுக்களுக்கு (50/குழு) ரூ.50.00 இலட்சம் செலவில் 250 நபர்களுக்கு பனைவெல்லம் உற்பத்திக்கான பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. கீழ்க்கண்ட இடங்களில் பயிற்சி பெற்றவர்களுக்கு கருவிகள் மற்றும் உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளன:

வ.எண்	மாவட்டம்	அலகு இருப்பிடம்
1.	இராமநாதபுரம்	சாயல்குடி
2.	தூத்துக்குடி	வீரபாண்டியபட்டினம்
3.	கடலூர்	கடலூர்
4.	திண்டுக்கல்	கோவிலூர்
5.	ஈரோடு	சிறுவலூர்

இத்திட்டத்திற்கான நிதி, வேளாண்மை மற்றும் உழவர் நலத் துறையால் ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது.

11. பனை விதைகள் விநியோகம்

பனை மரங்களின் எண்ணிக்கையை அதிகப்படுத்திட, ரூ.30.00 இலட்சம் மதிப்பிலான 10 இலட்சம் பனை விதைகள், மாவட்ட பனை வெல்ல இணையத்தால் சேகரிக்கப்பட்டு, ஆர்வமுள்ள பனை விவசாயிகளுக்கு விநியோகம் செய்வதற்காக தோட்டக்கலை துறைக்கு வழங்கப்பட்டுள்ளன. இத்திட்டத்திற்கான நிதி, வேளாண்மை மற்றும் உழவர் நலத் துறையால் வழங்கப்பட்டுள்ளது.

12. பனை பொருட்களின் உற்பத்தி மற்றும் விற்பனை


கடந்த 3 ஆண்டுகளின் பனைப் பொருட்களின் உற்பத்தி மற்றும் விற்பனை விவரம் பின்வருமாறு:

(ரூ.இலட்சத்தில்)

வ. எண்	வருடம்	ஆரம்ப இருப்பு	உற்பத்தி	மொத்தம்	விற்பனை	இறுதி இருப்பு
1.	2020-2021	1088.21	1511.03	2599.24	1623.49	975.75
2.	2021-2022	975.75	1381.18	2356.93	1505.93	851.00
3.	2022-2023*	851.00	1817.70	2668.70	2084.35	584.35

* தணிக்கை செய்யப்படவில்லை.

(ரூ. இலட்சத்தில்)



இணைப்பு- III

(148 ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.)

மானியக் கோரிக்கை எண் 15-சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத் துறை

கொள்கை விளக்கக் குறிப்பு, 2023-2024

விரிந்த வானே, வெளியே — எங்கும்

விளைந்த பொருளின் முதலே !

திரிந்த காற்றும் புனலும் — மண்ணும்

செந்தீ யாவும் தந்தோய்

தெரிந்த கதிரும் நிலவும் — பலவாச்

செறிந்த உலகின் வித்தே !

புரிந்த உன்றன் செயல்கள் — எல்லாம்

புதுமை! புதுமை! புதுமை !

பாவேந்தர் பாரதிதாசன்

1. முன்னுரை

ஒவ்வோர் உயிரினமும் ஆரோக்கியமான மற்றும் பாதுகாப்பான சுற்றுச்சூழலை விரும்புகிறது. மனிதனின் ஆரோக்கியம் மற்றும் நலவாழ்வு சுற்றுச்சூழலுடன் நெருங்கிய தொடர்புடையதாகும். காலநிலை மாற்றம் உலகளவில் மனித இனம் மற்றும் இயற்கையைப் பாதிக்கும் வகையில் மிகப்பெரிய சவாலாக விளங்குவதோடு வளரும் நாடுகளையும் பெரும் பாதிப்புக்குள்ளாக்குகிறது. காலநிலை மாற்றத்தால் பல்வேறு நாடுகள் பாதிப்படைவதோடு, அந்நாடுகளின் வளர்ச்சி மற்றும் பொருளாதார வளர்ச்சியில் நேரடியான தாக்கத்தை ஏற்படுத்துகிறது.

இந்திய அளவில் பொருளாதார வளர்ச்சியில் இரண்டாவது இடத்தில் உள்ள தமிழ்நாட்டிலுள்ள 38 மாவட்டங்களில் 1.3 இலட்சம் சதுர கிலோ மீட்டர் பரப்பளவில், 1076 கிலோ மீட்டர்

கடற்கரையை கொண்டுள்ள தமிழ்நாடு, இயற்கை மாறுபாடுகளால் அடிக்கடி பாதிப்பிற்குள்ளாகிறது. இயற்கை வளங்களை மிகையாக சார்ந்துள்ள நிலையில், மனித செயல்பாடுகள் மற்றும் காலநிலை மாற்றத்தின் தாக்கத்தால், சூழல் அமைப்பு மிகுந்த அழுத்தத்திற்கு உள்ளாகிறது.

தொழிற்சாலைகள், கல்வியாளர்கள், சமுதாயம் மற்றும் பெருமளவிலான பொதுமக்கள் உள்ளிட்ட பல்வேறு பங்களிப்பாளர்களின் அர்ப்பணிப்பும் கவனமும் தேவைப்படும் ஒரு முக்கிய தொடர் பிரச்சினையாக சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றம் இருந்து வருகிறது.

2. சுற்றுச்சூழல் பாதுகாப்பிற்கான சட்ட விதிகள்

வருங்கால தலைமுறையினரின் தேவைகளை நிறைவு செய்யும் திறனை சமரசம் செய்து கொள்ளாமல், நிகழ்காலத்தின் தேவைகளை நிறைவு செய்யும் வளர்ச்சிப் பாதையை உருவாக்குவதே நிலையான வளர்ச்சிப் பொருளாதாரத்தின் மற்றொரு வழிகாட்டுக் கொள்கையாகும். சுற்றுச்சூழல், சமூக, பொருளாதார அமைப்புகள் ஒன்றுக்கொன்று சார்ந்திருப்பதை நிலைத்த சூழல் அமைப்பு ஏற்றுக் கொள்வதுடன், மக்களை மேம்படுத்தி அவர்களிடையே சமத்துவம் மற்றும் சமநீதி வழங்கப்படுவதையும் உறுதி செய்து, அவர்களை உலகளாவிய குடிமக்களாக உணரச் செய்கிறது.

அ. அரசியலமைப்பில் வழிவகை

உலகில் சுற்றுச்சூழல் பாதுகாப்பின் முக்கியத்துவத்தை முதன்முதலாக அரசியலமைப்புச் சட்டத்தில் அங்கீகரித்த அரசுகளில் இந்திய அரசும் ஒன்றாகும். "சுற்றுச்சூழலைப் பாதுகாத்து மேம்படுத்துவதோடு, நாட்டின் காடுகள் மற்றும் வனவிலங்குகளைப் பாதுகாக்கவும் அரசு முயற்சிக்கும்" என அரசியலமைப்பின் 42-வது திருத்தத்தில் அறிமுகப்படுத்தப்பட்ட பிரிவு 48 (A)—ல் உள்ள அரசு வழிகாட்டு நெறிமுறைகளில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

அதுபோல், "இயற்கைச் சூழலைப் பாதுகாத்து மேம்படுத்துவது, இந்தியாவின் ஒவ்வொரு குடிமகனின் கடமையாகும்" என அடிப்படைக் கடமைகளுக்கான பிரிவு 51 (ஏ)(ஜி) தெரிவிக்கிறது.

ஒரு மக்கள் நல அரசை உருவாக்குவதற்கான செயல் திட்டத்தை வரையறுத்துள்ள இந்திய அரசியலமைப்பு, மக்களின் நலவாழ்வு

2023 ஏப்ரல் 13]

மற்றும் சுற்றுச்சூழலை பாதிக்காத வகையில் நாட்டின் இயற்கை வளங்களை சரியான அளவில் பயன்படுத்துவது அவசியமாகும் என்று தெரிவிக்கிறது. இதுவே, 'நிலையான வளர்ச்சி' என்ற கூற்றின் சாராம்சமாகும். இயற்கை வளங்கள் மற்றும் வாழ்வாதார அமைப்புகளுக்கு பாதிப்பு ஏற்படாத வகையில் பாதுகாப்புடன் வளர்ச்சிப் பணிக்கான சூழலை ஏற்படுத்த வேண்டும்.

ஆ. சுற்றுச்சூழல் (பாதுகாப்பு) சட்டம்: சுற்றுச்சூழல் மற்றும் சுற்றுச்சூழல் தொடர்புடைய அம்சங்களைப் பாதுகாக்கவும், சுற்றுச்சூழலை மேம்படுத்தும் நோக்கத்துடனும் 1986 ஆம் ஆண்டு நடைமுறைப்படுத்தப்பட்டது.

இ. சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு அறிவிக்கை, 2006: இந்தியாவின் அனைத்து பகுதிகளிலும் நடைமுறைப்படுத்தப்படும் புதிய திட்டங்கள், புதிய செயல்பாடுகள், தற்போதுள்ள செயல்பாடுகளின் விரிவாக்கம் அல்லது நவீனமயமாக்கம் ஆகிய பணிகளை மேற்கொள்ளும்போது அவற்றினால் ஏற்படும் சுற்றுச்சூழல் பாதிப்புகளைக் கருத்திற்கொண்டு அத்திட்டங்களுக்கு கட்டுப்பாடுகள் மற்றும் தடைகளை விதிக்கும் நோக்கத்துடன், ஒன்றிய அரசினால் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

ஈ. கடலோர ஒழுங்குமுறை மண்டல அறிவிக்கை: மீனவர் சமுதாயம் மற்றும் பிற உள்ளூர் சமுதாயங்களுக்கான வாழ்வாதாரப் பாதுகாப்பினை உறுதிசெய்யும் நோக்கில், ஒன்றிய அரசின், சுற்றுச்சூழல், வனம் மற்றும் காலநிலை மாற்ற அமைச்சகத்தினால், சுற்றுச்சூழல் (பாதுகாப்பு) சட்டம், 1986-ன்கீழ், கடலோர ஒழுங்குமுறை மண்டல அறிவிக்கை, 2011 இல் நடைமுறைக்கு வந்தது.

3. சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத் துறை:

பிரேசிலின் ரியோ டி ஜெனிரோவில் ஜூன் 1992 இல் நடைபெற்ற சுற்றுச்சூழல் மற்றும் வளர்ச்சி குறித்த ஐக்கிய நாடுகளின் புவி உச்சி மாநாட்டில் வெளியிடப்பட்ட முக்கியக் குறிப்பு 21-ன்படி, சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறையின் 13-10-1995 நாளிட்ட அரசாணை (நிலை) எண் 335-ன்படி தமிழ்நாட்டில் சுற்றுச்சூழல் துறை உருவாக்கப்பட்டது.

சமீப காலமாக காலநிலை மாற்றத்தால் ஏற்படும் சவாலான நிலைமையை எதிர்கொள்வதற்கான பணிகளை

மேற்கொள்வதற்காக சுற்றுச்சூழல் துறையை, சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத் துறை என அரசு ஆணை (நிலை) எண் 65, சுற்றுச்சூழல் காலநிலை மாற்றம் மற்றும் வனத் துறை நாள் 6-4-2022 மூலம் மறு பெயரிடப்பட்டுள்ளது.

3.1. துறையின் பணிகள்:

- *சுற்றுச்சூழல் தொடர்பான கொள்கைகளை மாநில அரசிற்காக வடிவமைத்தல்.*
- *பல்வேறு சுற்றுச்சூழல் தொடர்புடைய துறைகளுக்கிடையே ஒருங்கிணைப்பினை ஏற்படுத்தி மாநிலத்திற்கான சுற்றுச்சூழல் கொள்கை திட்டங்களை உருவாக்குதல்.*
- *தேசிய மற்றும் பன்னாட்டு அளவிலான முகமைகளுடன் இணைந்து, அவற்றின் பங்களிப்புடன் அறிவு மற்றும் அனுபவங்களை ஒருங்கிணைத்தல்.*
- *காலநிலை மாற்றத்திற்கேற்ப தகவமைத்துக் கொள்ளவும், அதன் பாதிப்புகளை குறைப்பதற்கும் தேவையான கட்டமைப்புகளை பல்வேறு பங்குதாரர்களுடன் (தொடர்புடைய துறைகள், நிறுவனங்கள், பல்கலைக்கழகங்கள், ஆராய்ச்சியாளர்கள், வல்லுநர்கள், அரசு சாரா நிறுவனங்கள்) இணைந்து உருவாக்குதல்.*
- *கடலோர ஒழுங்குமுறை மண்டல அறிவிக்கை மற்றும் சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு அறிவிக்கை ஆகியவற்றின் சட்டப்பூர்வ விதிகளை நடைமுறைப்படுத்துதல்.*

மேலும் இத்துறை, தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியத்தால் மேற்கொள்ளப்படாத, ஏனைய சூழல் பாதுகாப்பு மற்றும் மேலாண்மை பணிகளை மேற்கொள்கிறது. காலநிலை மாற்றம் தொடர்பான அனைத்துத் திட்டங்களையும், தமிழ்நாட்டில் நடைமுறைப்படுத்தும் துறையாகவும் சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத் துறை செயல்படுகிறது. மேலும், தேசிய பசுமைப்படை வாயிலாக கல்லூரிகள் மற்றும் பள்ளிகளில் சுற்றுச்சூழல் குறித்த விழிப்புணர்வு ஏற்படுத்தும் முக்கிய தொடர்பு நிறுவனமாகவும் இத்துறை செயல்படுகிறது.

2023 ஏப்ரல் 13]

4. தொலைநோக்கு

தமிழக மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதற்காக, தமிழ்நாட்டின் இயற்கை வளங்களை நீடித்த மற்றும் சமநிலையான பயன்பாடு மூலமாக காலநிலை மாற்றத்தின் பாதிப்புகளிலிருந்து மீட்டு, சிறந்த சமூகத்தை உருவாக்குவதே தமிழ்நாடு அரசின் தொலைநோக்குத் திட்டமாகும்.

4.1 பணிகள்

இயற்கை மாறுபாடுகளுக்கு எதிரான அனைத்து இடர் தணிப்பு மற்றும் தகவமைப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வதன்மூலம் மாநிலத்தின் சுற்றுச்சூழலைப் பாதுகாப்பதும், இயற்கை வளங்கள் மற்றும் இயற்கை வாழ்விடங்களைப் பாதுகாப்பதற்குண்டான திட்டங்களைத் தயாரிப்பதும் இத்துறையின் பணியாகும்.

4.2 செயல் திட்டங்கள்

1) இயற்கை வளங்களைக் பாதுகாத்துப் பேணுவதுடன், நிலையான சுற்றுச்சூழல் அமைப்புகளையும் சுற்றுச்சூழலின் செயல்பாடுகளையும் பேணிக்காப்பதன்மூலம் இயற்கை வளங்களை நீடித்த காலத்திற்கு பயன்படுத்துதல்.

2) மாநில நிருவாகத்தின் அனைத்துத் துறைகளையும் ஒருங்கிணைத்து காலநிலை மாற்றத்தின் பாதிப்புகளை தணித்தல் மற்றும் அதற்கேற்றவாறு தகவமைத்துக் கொண்டு வாழ்வதற்கு உதவும் ஒரு முழுமையான கொள்கையை உருவாக்குதல்.

3) கடற்கரை ஒழுங்குமுறைப் பகுதிக்குகந்த வகையில், கடலோர ஒழுங்குமுறை அறிவிக்கையின்படி, கடலோர மண்டல மேலாண்மைத் திட்டம் தயாரித்தல் மற்றும் கடலோரப் பாதுகாப்பு மேலாண்மைத் திட்டம் தயாரித்தல் மூலமாக 1076 கி.மீ நீளம் கொண்ட தமிழ்நாடு கடற்கரையை பாதுகாத்தல்.

4) கடற்கரை மேலாண்மை சேவைகள் அமைப்புமூலம் நிலைத்த சுற்றுலா மேம்பாடு மற்றும் சிறப்பான கடலோர மேலாண்மையை உருவாக்குதல்.

5) காலநிலை மாற்றத்திற்கேற்ப தகவமைத்துக் கொள்ளுதல் மற்றும் காலநிலை மாற்றத்தால் ஏற்படும்

துயரைத் தணிப்பதற்கான சிறந்த நடைமுறைகளை மேற்கொள்ளும்போது, காலநிலை மாற்றத்தை அடிப்படையளவில் மேலாண்மை செய்வதற்காக உள்ளூர் சமூகங்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்துதல் மற்றும் திறன் மேம்படுத்துதல்.

6) தேசிய பசுமைப்படை மற்றும் சூழல் மன்றங்களின் ஆதரவுடன் இயற்கை வளங்களை நிலைத்தகு முறையில் பயன்படுத்துவதற்கான விழிப்புணர்வை உருவாக்குதல்.

7) கார்பன் உமிழ்வைக் குறைக்கவும், ஒழுங்காற்று வழிமுறைகளைக் கொண்டு வருவதற்கும் பசுமைப் பரவலுக்கான செய்முறை மாதிரிகளை உருவாக்குவதன்மூலம் ஆற்றலைச் சேமித்தல் மற்றும் நுகர்வைக் குறைக்கும் ஆற்றல் திறன் மிக்க உள்கட்டமைப்புக்கான தர நிலைகளை உருவாக்குதல்.

8) வெளிப்படையான மற்றும் நம்பகத்தன்மையுடன் கூடிய சிறந்த சுற்றுச்சூழல் நிலைப்பாட்டை அடைவதற்கு ஏற்ற வலுவான மற்றும் உரிய கண்காணிப்பு அமைப்புகளை உருவாக்கி, பங்குதாரர்கள் பங்கேற்பு அணுகுமுறைமூலம், காலநிலை மாற்றத்தை எதிர்கொள்வதற்கான விரைவான நடவடிக்கையினை மேம்படுத்துதல்.

9) தமிழ்நாட்டில் 'நிகர பூஜ்ஜிய கார்பன்' அளவு என்ற நிலையை அடைவதற்காக ஒருங்கிணைந்து செயல்படுவதுடன், இப்பணியில் சமூகத்தையும் இணைத்துக் கொள்வதற்கான நீண்ட கால செயல் திட்டத்தினை உருவாக்குதல்.

10) பல்வேறு ஆராய்ச்சி நிறுவனங்களுடன் இணைந்து பல பசுமை மாதிரிகளை உருவாக்கி, ஆதாரங்களின் அடிப்படையில் அளவிடுதல் மற்றும் வலுவான தொழில்நுட்ப உத்திகளை உருவாக்குதல்.

11) எதிர்கால கணிப்புகள், பயனுள்ள கொள்கை மற்றும் முடிவெடுத்தலுக்கான காலநிலை அறிவியல் மற்றும் காலநிலை மாற்றங்களை வகுக்க விரிவான தரவுக் களஞ்சிய உட்கட்டமைப்பை உருவாக்குதல்.

2023 ஏப்ரல் 13]

5. கவனம் செலுத்தப்பட வேண்டிய அம்சங்கள்

5.1. காலநிலை மாற்றம் குறித்த தமிழ்நாடு மாநில செயல் திட்டம் (TNSAPCC)

தமிழ்நாடு அரசு, காலநிலை மாற்றம் ஒரு சிக்கல் நிறைந்த பிரச்சினை என்பதை உணர்ந்து, அதற்கான நடவடிக்கை எடுப்பதில் உறுதியாக உள்ளது. காலநிலை மாற்றத்தை எதிர்த்துப் போராடுவதற்கு அரசு பல நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. காலநிலை மாற்றத்தால் ஏற்படும் முக்கியமான பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பதில் இந்த அரசுக்கு உள்ள பொறுப்புணர்வை இது எடுத்துக்காட்டுகிறது. காலநிலை மாற்றம் குறித்த மாநில செயல் திட்டத்தை (SAPCC) செயல்படுத்துவதன் முக்கியத்துவத்தை அரசு புரிந்துகொண்டுள்ளதோடு, மாறிவரும் காலநிலையால் ஏற்படும் வாய்ப்புகள் மற்றும் அபாயங்கள் ஆகிய இரண்டையும் கருத்தில்கொண்டு காலநிலை மாற்றம் குறித்த தமிழ்நாடு மாநில செயல் திட்டம் (TNSAPCC) 2.0 (2022-2030) உருவாக்கப்பட்டுள்ளது. அரசு உருவாக்கி செயல்படுத்த முனைந்துள்ள இலக்குகள், இலட்சியங்கள், கொள்கைகள், செயல் திட்டங்கள் ஆகியவற்றை காலநிலை மாற்றம் குறித்த மாநில செயல் திட்டம் (SAPCC) ஒருங்கிணைக்கிறது.

காலநிலை மாற்றத்திற்கான தேசிய செயல் திட்டத்தின்கீழ்வரும் தேசிய இயக்கப் பணிகளில் காணப்படும் காலநிலைத் தொடர்பான செயல் திட்டங்களை தமிழ்நாடு அரசு கவனத்தில் கொண்டுள்ளது.

தமிழ்நாடு மாநில காலநிலை மாற்றம் குறித்த செயல் திட்டம் (TNSAPCC) பாதிக்கப்படக்கூடிய பின்வரும் ஏழு துறைகளை அடையாளம் கண்டுள்ளது:—

1. நிலையான விவசாயம்

2. நீர் வளங்கள்

3. காடுகள் & உயிர் பன்மயம்

4. கடலோரப் பகுதி மேலாண்மை

5. மேம்படுத்தப்பட்ட ஆற்றல் திறன் & சூரிய ஒளிப் பயன்கள்

6. நிலையான வாழ்விடம்

7. அறிவு மேலாண்மை

[2023 ஏப்ரல் 13

தமிழ்நாடு மாநில காலநிலை மாற்றம் குறித்த செயல் திட்ட வரைவு (TNSAPCC) 2.0 ஆவணம் பேரிடர் மேலாண்மை மற்றும் பாதிப்பு தணிப்பு, நிலையான வளர்ச்சி இலக்குகள் மற்றும் மாநிலத்திற்கான கூட்டு பாதிப்புக் குறியீடு ஆகியவற்றை வலியுறுத்துகிறது.

5.2. நிலையான வளர்ச்சி இலக்கு 13: காலநிலை தொடர்பான நடவடிக்கைகள்

சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத் துறை என்பது மாநிலத்தின் காலநிலை மாற்றத்திற்கேற்ற தகவமைப்பு மற்றும் பாதிப்புகளைக் குறைப்பதற்கான நடவடிக்கைகளுக்குப் பொறுப்பேற்கும் துறையாகும். காலநிலை மாற்றத் தகவமைப்பு மற்றும் துயர் தணிப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டு நிலைத்தகு வளர்ச்சி இலக்கு 13—ஐ அடைய இத்துறை பாடுபடுகிறது.

13.1. காலநிலை மாற்றத்தால் ஏற்படும் தீங்குகள் மற்றும் இயற்கைப் பேரழிவுகளுக்கு எதிரான தகவமைப்புத் திறனை வலுப்படுத்துவதை காலநிலை செயல் திட்டம் வலியுறுத்துகிறது.

13.2. காலநிலை மாறுபாடு தொடர்பான நடவடிக்கைகளை தேசியக் கொள்கைகள், செயல் திட்டங்கள் மற்றும் திட்டமிடுதலுடன் ஒருங்கிணைத்தல்.

13.3. காலநிலை மாற்றத்தால் ஏற்படும் தாக்கங்களுக்கேற்ப தகவமைத்துக் கொள்ளுதல், பாதிப்புகளை மட்டுப்படுத்துதல், முன்னெச்சரிக்கை செய்தல் போன்றவற்றிற்கு தேவையான கல்வியறிவை வளர்த்தல், விழிப்புணர்வை ஏற்படுத்துதல், மனித மற்றும் அமைப்புசார் திறனை மேம்படுத்துதல்.

காலநிலை மாற்றத்திற்கான தமிழ்நாடு மாநில செயல் திட்டம் 2.0 என்பது, நிலையான வளர்ச்சி இலக்குகளுடன் நெருக்கமாக இணைந்த தகவமைப்பு மற்றும் பாதிப்பு தணிப்பு உத்திகளுக்கான மாநில செயல்திட்டமாகும். தமிழ்நாடு காலநிலை மாற்றத்திற்கான செயல் திட்டம் நிலையான வளர்ச்சி இலக்குகளான 13.1, 13.2 மற்றும் 13.3-ஐ அடையத் துணைபுரிகிறது.

சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத் துறையானது, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறையுடன் இணைந்து, மாவட்ட அளவிலான பேரிடர் முன்னெச்சரிக்கைத் திட்டங்களை

2023 ஏப்ரல் 13]

வகுப்பதில் அவர்களுடன் இணைந்து செயல்படுகிறது. இது தீவிர வானிலை நிகழ்வுகளால் ஏற்படும் பாதிப்புகளைக் குறைப்பதற்கான முன்னெச்சரிக்கை அமைப்புகளை உருவாக்க உதவுகிறது. காலநிலை மாற்றம் தொடர்பான பாதிப்புகள் மற்றும் இயற்கைப் பேரழிவுகளை எதிர்கொள்ளக்கூடிய மீள்திறனையும், தகவமைப்பையும் வலுப்படுத்துவதன் வாயிலாக தேசியக் குறியீட்டு அளவில் 'பாதிப்பின்மை நிலை' என்ற குறிக்கோளை அடைவதை நோக்கி இம்மாநிலம் வேகமாக முன்னேறி வருகிறது.

காலநிலை மாற்றத்தின் தீவிர நிகழ்வுகளால், இம்மாநிலம் கடும் பாதிப்புக்குள்ளாகும் நிலையில் உள்ளது. இத்தகைய பாதிப்புகளை உணர்ந்து, தமிழ்நாடு காலநிலை மாற்றத்திற்கான செயல் திட்டம் 2.0, காலநிலை மாற்றத்தால் ஏற்படும் பாதிப்புகள் தொடர்பான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மற்றும் இடர் மேலாண்மையில், சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத் துறை மிகுந்த கவனம் செலுத்தி வருகிறது.

5.3 தமிழ்நாடு பசுமை காலநிலை நிறுவனம்

சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத் துறையின்கீழ், மாநிலத்தில் காலநிலை மாற்றத்தின் தாக்கத்தினை எதிர்கொள்ளும் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக இலாப நோக்கமற்ற மற்றும் தனித்துவம் கொண்ட "தமிழ்நாடு பசுமை காலநிலை நிறுவனம்" என்ற ஓர் அமைப்பை இந்த அரசு உருவாக்கியுள்ளது. இந்நிறுவனம், முதன்முதலாக ஒரு மாநில அரசின் இலட்சிய முன்னெடுப்பு அமைப்பாகவும், மாநிலத்தின் காலநிலை மாற்ற நெருக்கடிகளுக்கு தீர்வு மேற்கொள்ளும் சிறப்பு செயல் நிறுவனமாகவும், காலநிலைக் கொள்கைக்கு உடனடிக் கவனம் செலுத்தவும் மற்றும் சரிவிகித நீண்ட காலத்தீர்வுக்கு வழிவகுக்கக்கூடிய வகையிலும் செயல்படும்.

மாநிலம் முழுவதும் காலநிலை சீர்குலைவால் கடுமையாக பாதிப்புக்குள்ளாகும் சமூகங்கள், நகர்புற மற்றும் கிராமப்புற உள்கட்டமைப்பை மாற்றுவதன்மூலம் புதுமையான காலநிலை மற்றும் நிலைத்தன்மைத் தீர்வுகளை இந்நிறுவனம் முன்னெடுக்கும்.

இந்நிறுவனம் ஒரு வாரியத்தால் நிருவகிக்கப்படும்.

சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத் துறையின் அரசு கூடுதல் தலைமைச் செயலர் இந்நிறுவனத்தின் தலைவர் மற்றும் மேலாண் இயக்குநராக செயல்படுவார்.

கீழ்க்காண் உயர் அலுவலர்கள் இந்நிறுவனத்தின் இயக்குநர்களாக செயல்படுவர்

- அரசு கூடுதல் தலைமைச் செயலர், நிதித் துறை
- அரசு கூடுதல் தலைமைச் செயலர், எரிசக்தித் துறை
- அரசு கூடுதல் தலைமைச் செயலர், நகராட்சி நிர்வாகம் (ம) குடிநீர் வழங்கல் துறை
- செயலர், வேளாண்மை (ம) உழவர் நலத் துறை
- அரசு கூடுதல் தலைமைச் செயலர், நீர்வளத் துறை
- தமிழ்நாடு வனத் துறையின் முதன்மை தலைமை வனப் பாதுகாவலர்

சுற்றுச்சூழல் (ம) காலநிலை மாற்றத் துறையின் சிறப்புச் செயலர் இந்நிறுவனத்தின் நிதி குறித்த செயல்பாடுகளை மேற்கொள்ளும் சிறப்பு பணி அதிகாரியாக செயல்படுவார்.

மேலும், கீழ்க்கண்ட உறுப்பினர்களைக் கொண்டு திட்ட மேலாண்மை அலகு இந்நிறுவனத்தில் உருவாக்கப்பட்டுள்ளது.

- தலைமை திட்ட இயக்குநர்
- காலநிலை மாற்ற நிபுணர்
- சதுப்பு நில நிபுணர்
- நெகிழி மற்றும் கழிவு மேலாண்மை நிபுணர்
- எரிசக்தி நிபுணர்
- சுகாதார நிபுணர்
- தகவல் தொடர்பு நிபுணர்

இந்தத் திட்ட மேலாண்மை அலகானது, காலநிலை மாற்றத்தை ஏற்படுத்தும் காரணிகள் குறித்த நிபுணர் கருத்தை அளிப்பதுடன், உரிய காலநிலை நடவடிக்கைகளை மேற்கொள்ளவும், இத்துறையில் செயல்படுத்தப்படும் 3 இயக்கங்களின் செயல்பாட்டை கண்காணிக்கவும், தமிழ்நாடு பசுமை காலநிலை நிறுவனத்திற்கு உதவிகரமாக இருக்கும்.

2023 ஏப்ரல் 13]

தமிழ்நாடு பசுமை காலநிலை நிறுவனமானது, மாநிலத்தின் காலநிலை மாற்றம் தொடர்பாக நேர்மறையான மற்றும் நீடித்த மாற்றத்தை உருவாக்கவும், காலநிலை மாற்றத்திற்கெதிரான செயல்திட்ட இலக்குகளை உருவாக்கவும் மற்றும் விரிவான ஆராய்ச்சி மற்றும் பகுப்பாய்வுமூலம் நிலைத்த மற்றும் காலநிலை மாற்றத்தால் ஏற்படும் பாதிப்பிலிருந்து விரைவில் மீண்டு வருவதற்கான திறனையும் உருவாக்க இந்நிறுவனம் உறுதி பூண்டுள்ளது.

மேற்கூறிய இலக்குகளை அடைவதற்காக கீழ்க்கண்ட மூன்று மகத்தான இயக்கங்கள் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தலைமையில் உருவாக்கப்பட்டுள்ளது.

1. பசுமை தமிழ்நாடு இயக்கம்
2. தமிழ்நாடு ஈர நில இயக்கம்
3. தமிழ்நாடு காலநிலை மாற்ற இயக்கம்

இந்த முதன்மை இயக்கங்களின் குறிக்கோளை அடைவதற்காக, காலநிலை மாற்றத்தால் ஏற்படும் பாதிப்புகளை தணித்தல், தகவமைப்பு மற்றும் நிலையான வளர்ச்சியால் உருவாகும் இணை பலன்களை அதிகரிப்பதற்கான ஒருங்கிணைந்த செயல் திட்டங்கள் மற்றும் கொள்கைகளை செயல்படுத்த தமிழ்நாடு பசுமை காலநிலை நிறுவனம் முனைந்துள்ளது.

5.4. தமிழ்நாடு காலநிலை மாற்ற நிர்வாகக் குழு

அரசின் அனைத்துப் பணிகளும் தமிழ்நாடு காலநிலை மாற்ற இயக்கத்தின் குறிக்கோள்களுடன் இணைந்து அமைவதை உறுதிசெய்ய, தீவிர பரிசீலனைக்குப் பின், தமிழ்நாடு அரசு, தமிழ்நாடு காலநிலை மாற்ற நிர்வாகக் குழுவினை அமைத்துள்ளது. இது இந்தியாவிலேயே காலநிலை மாற்றத்திற்காக பிரத்தியேகமாக அமைக்கப்பட்ட முதல் நிர்வாக குழுவாகும்.

தமிழ்நாடு காலநிலை மாற்ற நிர்வாகக் குழுவின் குறிக்கோள்கள்

1. தமிழ்நாடு காலநிலை மாற்ற இயக்கத்திற்கான கொள்கை வழிகாட்டுதல்களை வழங்குதல்.

[2023 ஏப்ரல் 13

2. *காலநிலை மாற்றத்திற்கேற்ப தகவமைத்துக் கொள்ளுதல் மற்றும் பாதிப்புகளை தணிப்பதற்கு தேவையான ஆலோசனை வழங்குதல்.*

3. *காலநிலை மாற்றம் குறித்த தமிழ்நாடு அரசின் மாநில செயல் திட்டத்திற்கு ஒப்புதல் அளித்தல்.*

4. *காலநிலை தொடர்பான பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொள்ளும் பணியில் மாநில மற்றும் மாவட்ட காலநிலை மாற்ற இயக்கங்களுக்குத் தேவையான வழிகாட்டுதல்களை வழங்குதல்.*

தமிழ்நாடு காலநிலை மாற்ற நிர்வாகக் குழுவின் அமைப்பு

இக்குழுவானது மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களை தலைவராகக் கொண்டு மொத்தம் 26 உறுப்பினர்களை உள்ளடக்கியதாகும். பல்வேறு துறை அமைச்சர்கள், துறை சார்ந்த அரசு செயலர்கள் தேசிய மற்றும் சர்வதேச நிறுவனங்களின் வல்லுனர்கள் இக்குழுவில் உறுப்பினர்களாக உள்ளனர். முதலாவது தமிழ்நாடு காலநிலை மாற்ற நிர்வாகக் குழு கூட்டம் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தலைமையில் 3-3-2023 அன்று நடைபெற்றது.

5.5 பசுமை தமிழ்நாடு இயக்கம்

தமிழ்நாட்டில் காடு மற்றும் மரங்களின் பரப்பளவை மாநிலத்தின் மொத்த நிலப்பரப்பில் 33 சதவீதமாக உயர்த்த வேண்டும் என்ற இலக்குடன் தமிழ்நாடு அரசு பசுமை தமிழ்நாடு இயக்கத்தை அறிவித்துள்ளது. இந்த இயக்கத்தின்கீழ், பல துறைகள், பொது மற்றும் தனியார் நிறுவனங்களின் ஒருங்கிணைப்புடன், பல்வேறு உள்ளூர் மற்றும் பாரம்பரிய ரக மரங்களை நடும் மாபெரும் திட்டம் எதிர்வரும் 10 ஆண்டுகளில் மக்கள் இயக்கமாக உருவாக்கப்படும்.

5.6 தமிழ்நாடு ஈர நில இயக்கம்

தமிழ்நாட்டில் ஈர நிலங்களை சுற்றுச்சூழல் அடிப்படையில் மீட்டெடுக்கும் நோக்கத்துடன், ஈர நிலங்களைக் கண்டறிந்து வரைபடம் தயாரித்து, வாழ்வாதாரத்தை மையமாகக் கொண்டு சுற்றுச்சூழல் சமநிலையை ஈர நிலங்களில் மீட்டெடுக்கும் பணி இந்த இயக்கத்தின்கீழ் 5 ஆண்டுகளுக்குள் மேற்கொள்ளப்படும். இந்த இயக்கத்தின்கீழ், எண்ம முறை தொழில்நுட்பங்கள் மற்றும்

2023 ஏப்ரல் 13]

ஒருங்கிணைந்த மேலாண்மை திட்டம் செயல்படுத்தப்படும். இதன்மூலம் ஈர நிலங்களின் சுற்றுச்சூழல் மறுசீரமைப்பு பணி, உள்ளூர் சமூகங்கள் மற்றும் பிற தொடர்புடைய அனைத்துப் பங்குதாரர்களையும் உள்ளடக்கிய ஒரு பங்கேற்பு செயல்திட்டமாக மேற்கொள்ளப்படும்.

5.7 தமிழ்நாடு காலநிலை மாற்ற இயக்கம்

காலநிலை மாற்றத்தின் தாக்கத்தை எதிர்த்துப் போராடுவதும், அவற்றின் பாதிப்புகளை தணிப்பதும் தமிழ்நாடு போன்ற கடலோர மாநிலத்தில் மிகவும் கவனம் செலுத்த வேண்டிய அம்சமாகும். 2021-2022 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையின்போது, காலநிலை மாற்றத்திற்கேற்ற தகவமைப்பு மற்றும் தணிப்பு நடவடிக்கைகளில் கவனம் செலுத்துவதற்காக, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் தமிழ்நாடு காலநிலை மாற்ற இயக்கம் மொத்தம் ரூ.500 கோடி செலவில் செயல்படுத்தப்படும் என அறிவிக்கப்பட்டது. அதன்படி மாநிலங்களின் இயற்கை வளங்களைப் பாதுகாக்கவும் மேலும் நீண்ட கால அடிப்படையில் தக்கவைக்கவும், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் “தமிழ்நாடு காலநிலை மாற்ற இயக்கம்” டிசம்பர் 9, 2022—ல் துவக்கி வைக்கப்பட்டது. இந்திய மாநிலங்களை பொறுத்தவரை, தமிழ்நாட்டில்தான் முதல் முறையாக இதுபோன்ற திட்டம் உருவாக்கப்பட்டுள்ளது. நிர்வாகத்தின் உயர் மட்டத்தில், மாநில மக்களுக்கு நிலையான மற்றும் காலநிலை மாற்றத்திற்கு ஏற்ற எதிர்காலத்தை உருவாக்க தமிழக அரசு உறுதி பூண்டுள்ளது. மாநிலத்தின் காலநிலை மாற்றப் பிரச்சினைகளை மேற்பார்வையிடவும், ஒருங்கிணைக்கவும் இயக்குநர், சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத் துறை தலைமையில் இந்த இயக்கம் செயல்படும்.

தமிழ்நாடு காலநிலை மாற்ற இயக்கத்தின்கீழ் வரும் செயல்பாடுகளுக்காக 2021-2022 மற்றும் 2022-2023 ஆம் நிதியாண்டில், ரூ.77.35 கோடி நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. அடிப்படை ஆய்வுகள் மேற்கொள்ள 2021-2022 ஆம் ஆண்டில் ரூ.1.85 கோடி நிதி ஒதுக்கப்பட்டு சென்னை, இந்திய தொழில்நுட்ப நிறுவனம், காலநிலை மாற்றம் மற்றும் பேரிடர் மேலாண்மை, அண்ணா பல்கலைக்கழகம், உலக வள நிறுவனம் மற்றும் தேசிய கடலோர நிலைத்திட்ட கடற்கரை மேலாண்மை மையம் போன்ற நிபுணத்துவம் மிக்க நிறுவனங்களின் ஆலோசனையுடன் செயல்படுத்தப்படுகிறது.

2022-2023 ஆம் ஆண்டுக்கான பணிகளுக்காக ஒதுக்கப்பட்ட ரூ.75.5 கோடிக்கான விவரங்கள் பின்வருமாறு:

5.7.1. பங்குதாரர்களின் கருத்தரங்கம்:

உள்ளூர் சமூகங்கள் மற்றும் அரசாங்கத் துறைகளுக்கான திறன் மேம்பாட்டு கருத்தரங்கம் நடத்துதல். காலநிலை மாற்றத்தால் உடனடி பாதிப்புக்குள்ளாகும் மாவட்டங்களில் உள்ள துறைகளின் தகவமைப்பு மற்றும் தணிப்பு திட்டமிடலுக்கு முன்னுரிமை அளித்தல். மண்டல மற்றும் உலகளாவிய சூழல் அடிப்படையிலான அறிவியல் ஆதாரங்களை முன்னிலைப்படுத்துதல், சமூக, காலநிலை மாற்றப் பாதிப்பிலிருந்து மீளும் திறனை உருவாக்குவதற்காக இயற்கை அடிப்படையில் தேவைப்படும் வெற்றிகரமான, சுயமான/ தொழில்நுட்ப உத்திகளை உருவாக்குதல்.

5.7.2. இயற்கை அடிப்படையிலான தீர்வுகள்மூலம் காலநிலை மாற்றத்திற்கு ஏற்ப கடலோர வாழ்விடங்களை மறுசீரமைப்பு செய்தல்:

சவுக்கு, பனை, முந்திரி மற்றும் பிற சிறப்பு இனங்களை நடவு செய்வதன்மூலம் உயிர் கேடயங்களை உருவாக்குதல். கடலோர மாவட்டங்களில் உள்ளூர் சுற்றுச்சூழல் அமைப்புகளில், வளரக்கூடிய அலையாத்திக் காடுகளை வளர்ப்பது. கடல் புல் மற்றும் பவளப் பாறைகளின் வளர்ச்சியைப் பாதுகாத்து மேம்படுத்துவது. தமிழ்நாட்டின் நிலையான கடற்கரை மேலாண்மைக்கான செயல் திட்டத்தை உருவாக்குவது மற்றும் இதற்குரிய புவி வரைபடம் தயாரிப்பது ஆகிய பணிகள் மேற்கொள்ளப்படும்.

5.7.3. கார்பன் செறிவூட்டல் திட்டம்

நிலத்தில் கார்பன் சேமிப்பு என்பது ஒரு முக்கியமான சுற்றுச்சூழல் சேவையாகும். இது மண்ணின் ஊட்டச்சத்துக்களை அதிகரிக்கவும், நிலத்தடி நீரை மேம்படுத்தவும் மற்றும் கணிசமான அளவு கார்பனை சேமித்து தாவரங்களின் வளர்ச்சியை ஊக்குவித்தலிலும் மிக முக்கிய பங்கு வகிக்கிறது. சென்னை பெருங்குடியில், உயிர்க்கழிவு அகழ்ந்தெடுக்கும் அமைப்பினை சென்னை பெருநகர மாநகராட்சி அமைத்துள்ளது. பல வருடங்களாக தேங்கியுள்ள நகராட்சி திடக்கழிவுகளை அகழ்ந்தெடுத்த பின்னர் பெறப்பட்ட மண்ணில், ஊட்டச்சத்துக்கள் மற்றும் கார்பன் அதிக அளவில் உள்ளது. நன்மங்கலம் வனப்பகுதியில் வனத்துறை, சென்னை பெருநகர மாநகராட்சி மற்றும் அண்ணா பல்கலைக்கழகம் ஆகியவை இணைந்து, வளங்குன்றிய காடுகளில் உயிர் செறிவூட்டப்பட்ட

2023 ஏப்ரல் 13]

மண்ணைச் சேர்த்து, மரங்கள் மற்றும் காடுகளின் வளர்ச்சியை அதிகரிக்கும் நோக்கத்துடன் ஒரு மாதிரித் தளம் அமைக்க இம்முன்னோடித் திட்டத்தில் உத்தேசிக்கப்பட்டுள்ளது.

5.7.4. நிலையான வாழ்விடம்

நம் வாழ்விடத்தின் சுற்றுச்சூழல் நலனை இனியும் புறக்கணிக்க முடியாது என்பதை உணர வேண்டிய காலம் தற்போது உருவாகியுள்ளது. மேலும் நமது சுற்றுச்சூழலில் ஏற்படும் பாதிப்பைக் குறைக்க பசுமைக் கட்டட நடைமுறைகளின் நன்மைகளை உணர வேண்டும்.

அரசு மற்றும் தனியார் கட்டடங்கள், தனி வீடுகள், அடுக்குமாடிக் குடியிருப்புகள் ஆகியவற்றில் எரிசக்தி சேமிப்பை நடைமுறைப்படுத்துவதன்மூலம் அவற்றிலிருந்து வெளியாகும் பசுமைக்குடில் உமிழ்வை குறைத்து காலநிலை மாற்றத்தின் தாக்கத்தைக் குறைத்தல் வேண்டும். இதனடிப்படையில் எரிசக்தியைச் சேமிக்கும் விளக்குகள் மற்றும் மின்சாரத்தின் அவசியத்தைப் பற்றி குடியிருப்பாளர்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்துதல், கட்டுமான பணி மேற்கொள்பவர்களுக்கு குறைந்த செலவில் காலநிலைக்கேற்ற கட்டடக் கட்டமைப்புகளை உருவாக்குவதற்காக கருத்தரங்குகள் மூலமாக பயிற்சி அளித்தல், ஆற்றல் திறன் கொண்ட வீடு கட்டும் திட்டங்களை உருவாக்குவதற்கு நிலையான வழிகாட்டு நடைமுறையை உருவாக்குதல் மற்றும் பசுமைக் கட்டட மதிப்பீட்டு முறையினை ஒரு முன்னோடித் திட்டமாக உருவாக்குதல் ஆகியவை புதிதாக மேற்கொள்ளப்பட வேண்டிய பெரும் பணிகளாகும்.

5.7.5. காலநிலை குறித்த கல்வியறிவு மற்றும் சர்வதேச காலநிலை உச்சி மாநாடு

காலநிலை மாற்றத்தால் ஏற்படும் தாக்கங்கள் மற்றும் பாதிப்புகளை தணிக்கும் வழிமுறைகள் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துதல், காலநிலை அறிவியல் மற்றும் தகவமைப்பு மற்றும் தணிப்பு நடவடிக்கைகள் தொடர்பாக மாணவர்களுக்கு கற்பித்தல், ஊடகங்கள், குறும்படங்கள் மற்றும் செயலிகள் மூலமாக காலநிலை மாற்றத்தால் ஏற்படும் பாதிப்புகளை தணிப்பதற்கான நடைமுறைக்கேற்ற சிறந்த தீர்வுகளை அறிமுகப்படுத்துதல், பசுமை தினக் கொண்டாட்டங்களின்போது காலநிலை வேறுபாடு குறித்த குழு விவாதங்கள் நடத்துதல், கணினிவழி பதாகைகள் உருவாக்குதல், தெரு நாடகங்கள், பொது விழிப்புணர்வு கருத்தரங்குகள் நடத்துதல் போன்றவற்றில் மாணவர்களை ஈடுபடுத்துதல்

ஆகியவையும் காலநிலை மாற்ற பாதிப்புத் தடுப்புக்கான சிறந்த நடைமுறைகளாகும். சமூக அமைப்புகள், குடியிருப்போர் நலச் சங்கங்கள் ஆகிய பங்குதாரர்களுடன் இணைந்து காலநிலை மாற்றம் தொடர்புடைய முக்கிய நிகழ்வுகளான உலக சுற்றுச்சூழல் நாள், உலக தண்ணீர் நாள், புவிநாள் போன்ற கொண்டாட்டங்களின் வாயிலாகவும் விழிப்புணர்வு ஏற்படுத்தப்படும்.

5.7.6. காலநிலைத் திறன்மிகு கிராமங்கள்

சமூக அளவில் காலநிலை மாற்றத்தால் ஏற்படும் பாதிப்புகளை எதிர்கொள்வதற்காக பல்வேறு தொழில்நுட்பம் மற்றும் நிறுவனங்களின் பங்களிப்புடன் முன்மாதிரி வாழ்விடங்களாக காலநிலைத் திறன்மிகு கிராமங்கள் உருவாக்கப்படும்.

பஞ்சாயத்து அளவில் நிலையான வளர்ச்சி இலக்கை அடைவதற்காக, புதுப்பிக்கத்தக்க எரிசக்தியை பயன்படுத்தி சுத்தமான, சுற்றுச்சூழலை பாதுகாக்கும், பசுமையான கிராமங்களை நமது எதிர்கால குழந்தைகளின் நலனுக்காக உருவாக்க வேண்டும். சுற்றுச்சூழலைப் பாதுகாக்கவும், சுற்றுச்சூழல் மேலும் சீர்கெடுவதை தடுக்கவும் உள்ளூர் பகுதியில் வசிக்கும் மக்களுக்கு இயற்கை மூல வளங்களின் முக்கியத்துவத்தை உணர்த்த வேண்டும்.

தெரிவுசெய்யப்பட்ட கிராமங்களில் பல பங்குதாரர்களின் பங்களிப்புடன் பின்வரும் நோக்கங்களுக்காக இந்த முன்னோடித் திட்டம் செயல்படுத்தப்படும்:

அ) கிராமங்களிலுள்ள இயற்கைச் சுற்றுச்சூழல் அமைப்புகளைப் பாதுகாத்தல்

ஆ) காலநிலை இடர்களுக்கு உள்ளாகும் உள்ளூர் சமூகத்தினர் எதிர்கொள்ளும் சவால்கள் மற்றும் பாதிப்புகளை புரிந்துகொள்ளுதல்.

இ) காலநிலை மீள்தன்மையை உருவாக்குவதற்கும், தகவமைப்பு மற்றும் தணிப்பு நடவடிக்கைகளை அதிகரிப்பதற்கும் தேவையான எதிர்கால தீர்வுகளை உருவாக்குதல்.

ஈ) வேளாண் ஆலோசனைகள் உள்ளிட்ட, கிராம அளவிலான காலநிலை தகவல் மையத்தை அமைப்பது போன்ற கிராம/சமூக அளவிலான வேளாண் சுற்றுச்சூழல் மற்றும் சமூக பொருளாதார தீர்வைக் கண்டறிந்து செயல்படுத்துதல்.

2023 ஏப்ரல் 13]

உ) வேளாண் வனவியல், நிலப் பயன்பாடு, கால்நடை மேலாண்மை மற்றும் உயிரி எரிபொருட்களின் சிறந்த மேலாண்மைக்கான கார்பன்/ஊட்டச்சத்து சார்ந்த சிறந்த நடைமுறைகளைப் பின்பற்றுதல்.

ஊ) உழவர்களுக்கிடையே தகவல் பரிமாற்றத்தின்மூலம் காலநிலை மாற்றம் மற்றும் சந்தைத் தகவல்களை அறிந்து கொள்ளல் போன்ற நிறுவன/சந்தை சார்ந்த செயல்பாடுகள்.

எ) களநிலையிலான காலநிலை சார்ந்த செயல்பாடுகளை திறன்மிகு கிராமங்களிலிருந்து அறிந்துகொள்ளுதல்மூலம், பல்வேறு அரசுத் திட்டங்களை மாநில அளவில் சிறப்பாகச் செயல்படுத்த உதவுதல்.

5.7.7. காலநிலை மாற்ற பாதிப்பை மீட்டெடுக்கும் பசுமை புராதனச் சின்னங்கள்

புராதனச் சின்னங்களில் தட்பவெப்ப நிலைத் தணிப்பு மற்றும் மட்டுப்படுத்தும் நடவடிக்கைகளை மாதிரி செயல் விளக்கம் செய்வதற்காக, இரண்டு கோயில்களில் இத்திட்டம் முன்னெடுக்கப்படும். இத்திட்டத்தின்கீழ் இரண்டு கோயில்களில் சூரிய சக்தி விளக்குகள், நீர் மேலாண்மை, வெப்ப மேலாண்மை, பசுமையாக்குதல், கோயில் குளங்களின் சுற்றுச்சூழல் மறுசீரமைப்பு, நெகிழி மற்றும் நுண்நெகிழி அகற்றுவதற்கான செயல்பாடுகள் ஆகியவை மேற்கொள்ளப்படும். பல்லுயிர்ப் பெருக்கத்தை மேம்படுத்த கோவில் நந்தவனங்களை வளப்படுத்துவதும் இதில் அடங்கும். இந்த முன்னோடித் திட்டம், பண்பாடு விழுமிய மரபு சார்ந்த கட்டடங்களை, காலநிலை மாற்றத்திற்கேற்ப சிறப்பாக மாற்றுவதற்கான முன்னோடித் திட்டமாக விளங்கும்.

6. துறையின் நடவடிக்கைகள்

6.1 கடலோர மண்டல மேலாண்மை

தமிழ்நாடு 1076 கி.மீ. நீளமுள்ள, பரந்த கடற்பகுதியைக் கொண்டுள்ளது. இது இந்திய கடலோரப் பகுதியில் 15 சதவீதம் ஆகும். இது சதுப்பு நிலங்கள், பவளப்பாறைகள், கடற்பாறைகள், கடற்புற்கள், உப்பு நிலங்கள், மணல் தேரிகள், மணல் குன்றுகள் போன்ற பல்வேறு வகையான கடலோர வாழ்விடங்களைக் கொண்டுள்ளது.

கடலோர மற்றும் கடல் பகுதிகளில் ஒருங்கிணைந்த மற்றும் நிலையான நிர்வாகத்தை ஊக்குவிக்க, பல ஒழுங்குமுறைகளைப்

பின்பற்றுவது அவசியமாகிறது. கடலோர செயல்முறைகள், கடற்கரை மேலாண்மை, கடலோர பாதிப்பு மற்றும் அபாயங்கள் தொடர்பான அறிவினை மேம்படுத்துதல் ஆகியவை இதன் முக்கிய நோக்கமாகும்.

6.1.1. நிலையான வளர்ச்சி இலக்கு 14—கடல்வாழ் உயிரினங்கள்

கடல்சார் மற்றும் கடற்கரை சூழலியலமைப்பை நிலைத்த தன்மையுடன் பாதுகாப்பதற்காகவும், அதனை குறிப்பிடத்தக்க பாதகமான விளைவுகளிலிருந்து தவிர்ப்பதற்காகவும் நிலையான வளர்ச்சி இலக்கு 14 பின்வரும் நடவடிக்கைகளை வலியுறுத்துகிறது:—

14.1 கடலில் ஏற்படும் அனைத்து வகையான மாசுபாடுகளையும் தடுத்தல் மற்றும் குறிப்பிடத்தக்க அளவு குறைத்தல்.

14.2 கடல்சார்ந்த, கடலோர சமச்சீர் சூழலை குறிப்பிடத்தக்க பாதகமான விளைவுகளிலிருந்து பாதுகாப்பதற்காக நீடித்த மேலாண்மை மற்றும் பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்.

14.3 அனைத்து நிலைகளிலும் மேம்பட்ட அறிவியல் வழிமுறைகள் மூலமாக கடல் அமிலமயமாவதால் உண்டாகும் தாக்கங்களை கண்டறிந்து அவற்றைக் குறைத்தல்

6.1.2. தொழில்நுட்ப செயல்பாடுகள் - புவியியல் தகவல் அமைப்பு (Geographical Information System)

உலக வங்கி நிதியின்கீழ் செயல்படுத்தப்படும் அவசரகால சுனாமி மறுசீரமைப்பு திட்டத்தின் ஒரு பகுதியாக, சுற்றுச்சூழல் துறையானது, ஒரு புவியியல் தகவல் அமைப்பு பிரிவை துவக்கியுள்ளது. அவசரகால சுனாமி மறுசீரமைப்பு திட்டம்/ பேரிடர் அபாய குறைப்புத் திட்டத்தின் செயல்பாடுகளான தமிழகத்தின் கடலோரப் பகுதிகளின் உயர் அலைக் கோட்டினை வரையறுத்தல், ஒருங்கிணைந்த கடலோர மண்டல மேலாண்மைத் திட்டம் தயாரித்தல், கடலோர பாதிப்பு வரைபடங்கள் தயாரித்தல், உயர் அலை கோடுகளில் கல்தூண்கள் அமைத்தல் போன்ற நடவடிக்கைகள், புவியியல் தகவல் அமைப்பு பிரிவுமூலம் கண்காணிக்கப்பட்டு வருகிறது.

2023 ஏப்ரல் 13]

சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத் துறையானது, கடலோர ஒழுங்குமுறை மண்டலத்தில் செயல்படுத்தப்படும் திட்டங்களுக்கு அனுமதி வழங்கும் ஒரு மாநில அமைப்பு ஆகும். கடலோர ஒழுங்குமுறை மண்டல பகுதிகளில் ஏற்படும் விதிமீறல்களைக் கண்காணித்தல், வரைபடங்களை தயார் செய்தல், அறிக்கைகள் சமர்ப்பித்தல் போன்ற பணிகளில் பசுமைப்படைக்கு (Green Squad) உதவியாக புவியியல் தகவல் அமைப்பு செயல்படுகிறது. இவ்வமைப்பு, உள்ளூர் அளவிலான வரைபடங்கள்மூலம் திட்டங்கள் தொடர்பான இடங்களை சுட்டிக்காட்டுவதில், தொழில்நுட்ப வல்லுநர் குழுவுக்கும், தமிழ்நாடு கடற்கரை மண்டல மேலாண்மைக் குழுவுக்கும் பணி செய்து வருகிறது.

6.1.3 கடலோர மண்டல மேலாண்மைத் திட்டம் (Coastal Zone Management Plan)

கடலோரப் பகுதிகளைப் பாதுகாக்கவும் மற்றும் கடலோரப் பகுதிகளில் நிலையான வளர்ச்சியை ஊக்குவிக்கவும், சுற்றுச்சூழல் பாதுகாப்புச் சட்டம் 1986—ன்கீழ் வெளியிடப்பட்ட, கடலோர ஒழுங்குமுறை மண்டல அறிவிக்கை 2011, ஒன்றிய அரசின் சுற்றுச்சூழல், வனம் மற்றும் காலநிலை மாற்ற அமைச்சகத்தின் அறிவிக்கை எண் 19(E), நாள் 6—1—2011மூலம் வெளியிடப்பட்டது.

இவ்வறிவிக்கையின்படி கடற்பகுதிகள் 5 வகை மண்டலங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளன:

- *கடற்கரை ஒழுங்குமுறை மண்டலம்—I (சூழல் முக்கியத்துவம் வாய்ந்தவை)*
- *கடற்கரை ஒழுங்குமுறை மண்டலம்—II (வளர்ச்சியடைந்த பகுதி)*
- *கடற்கரை ஒழுங்குமுறை மண்டலம்—III (ஊரகப் பகுதி)*
- *கடற்கரை ஒழுங்குமுறை மண்டலம்—IV (கடல்நீர் பகுதியில் உயர் அலை கோட்டிலிருந்து, நாட்டின் கடல் எல்லை பகுதிக்கு (12 நாட்டிகல் மைல்கள்) இடைப்பட்ட கடல் பகுதி மற்றும் அலை தாக்கமுள்ள நீர்நிலைப்பகுதிகள்)*
- *கடற்கரை ஒழுங்குமுறை மண்டலம்—V சிறப்புக் கவனம் செலுத்தி பாதுகாக்கப்பட வேண்டிய குறுகிய கடல் சூழல் பகுதிகள்*

கடலோர ஒழுங்குமுறை அறிவிக்கையின்படி, மாநில அரசால் கடலோரப் பகுதி மேலாண்மைத் திட்டம் தயாரித்தல் என்பது அவசியமான ஒன்றாகும்.

கடலோர ஒழுங்குமுறை மண்டல அறிவிக்கை 2011—ன் வழிமுறைகளின்படி, தமிழ்நாட்டில் உள்ள கடலோர மாவட்டங்களுக்கான வரைவு கடலோர மண்டல மேலாண்மை திட்டம் தயாரிக்கும் பணி, ஒன்றிய அரசின் சுற்றுச்சூழல் வனம் மற்றும் காலநிலை மாற்ற அமைச்சகத்தின் ஏற்பு பெற்ற நிறுவனமான சென்னையில் உள்ள தேசிய கடலோர நிலைத்தகு மேலாண்மைக்கான மையத்திடம் (National Centre for Sustainable Coastal Management) வழங்கப்பட்டது.

தேசிய கடலோர மண்டல மேலாண்மைக் குழுமத்தின் பரிந்துரைகளின்படி, ஒன்றிய அரசின் சுற்றுச்சூழல், வனம் மற்றும் காலநிலை மாற்ற அமைச்சகம் தமிழ்நாட்டிற்கான கடலோர மண்டல மேலாண்மை திட்டத்திற்கு 24-10-2018 அன்று ஒப்புதல் வழங்கியது. 117 வரைபடங்களை உள்ளடக்கிய அங்கீகரிக்கப்பட்ட கடலோர மண்டல மேலாண்மை திட்டம் சுற்றுச்சூழல் துறையின் (www.environment.tn.nic.in) (http://tnenvis.nic.in) வலைதளத்தில் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளது. அங்கீகரிக்கப்பட்ட கடலோர மண்டல மேலாண்மைத் திட்டத்தின் மென்பொருள், மாவட்ட கடலோர மண்டல மேலாண்மைக் குழுமங்கள் மற்றும் தொடர்புடைய துறையினருக்கும் தேவையான நடவடிக்கைகளை எடுக்கும் பொருட்டு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

ஒன்றிய அரசின் சுற்றுச்சூழல், வனம் மற்றும் காலநிலை மாற்ற அமைச்சகம் கடலோர ஒழுங்குமுறை மண்டல அறிவிக்கை 2019 விதிகளின்படி, கடலோர மண்டல மேலாண்மைத் திட்டத்தினைத் தயாரிக்க வேண்டும் என்று அறிவுறுத்தியது. அதன்படி, தமிழ்நாட்டிற்கான கடலோர மண்டல மேலாண்மைத் திட்டத்தினை 1:25000 என்ற அளவில் கடலோர ஒழுங்குமுறை மண்டல அறிவிக்கை, 2019-ன்படி தயாரிக்கும் பணியினை, 1.82 கோடி ரூபாய் செலவில், ஒன்றிய அரசின் தேசிய கடலோர நிலையான மேலாண்மை மையம் மேற்கொண்டு வருகிறது.

கடலோர ஒழுங்குமுறை அறிவிக்கை 2019-ன்படி தயாரிக்கப்படும் கடலோர மண்டல மேலாண்மை திட்டத்திற்கு ஒப்புதல் வழங்கும்வரை, கடலோர ஒழுங்குமுறை மண்டல

2023 ஏப்ரல் 13]

அறிவிக்கை 2011-ன்படி தயாரிக்கப்பட்ட, கடலோர மண்டல மேலாண்மைத் திட்டத்தினைப் பின்பற்றுமாறு ஒன்றிய அரசு, அனைத்து மாநிலங்களையும் அறிவுறுத்தியுள்ளது.

6.1.4 உள்ளூர் அளவிலான கடலோரப் பகுதி மேலாண்மைத் திட்டம் தயாரித்தல்

பேரிடர் அபாயக் குறைப்புத் திட்டத்தின்கீழ் உள்ளூர் அளவிலான ஒருங்கிணைந்த கடலோர மண்டல மேலாண்மைத் திட்டத்தினை 1:4000 அளவிலான வரைபடங்களை, 2.99 கோடி ரூபாய் செலவில் தயாரிப்பதற்கான ஏற்பாணையினை, சென்னை அண்ணா பல்கலைக்கழகத்தின் தொலையுணர்வு மையத்திற்கு, தமிழ்நாடு அரசின் வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை துறை அனுமதி அளித்தது. இப்பணியினை அண்ணா பல்கலைக்கழக தொலையுணர்வு மையம் முடித்ததைத் தொடர்ந்து, கடலோர ஒழுங்குமுறை அறிவிக்கை, 2011—ன்படி தயாரிக்கப்பட்ட உள்ளூர் அளவிலான வரைபடங்கள் கடற்கரை மேலாண்மை திட்டங்களை செயல்படுத்துவதற்காக, அனைத்து கடற்கரை மாவட்ட ஆட்சியர்கள், மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர்கள், தொடர்புத் துறைகள், உள்ளாட்சி அமைப்புகள் உள்ளிட்ட மற்ற அமைப்புகளுக்கு அனுப்பப்பட்டுள்ளது.

6.1.5 கடலோர ஒழுங்குமுறை மண்டலத்தின் ஒழுங்குமுறை விதிகளை நடைமுறைப்படுத்துதல்

கடலோர ஒழுங்குமுறை மண்டல விதிமுறைகளானது, ஒன்றிய அரசின் சுற்றுச்சூழல், வனம் மற்றும் காலநிலை மாற்ற அமைச்சகத்தால் வெளியிடப்பட்ட கடலோர ஒழுங்கு முறை மண்டல அறிவிக்கை, 2011-ல் கூறப்பட்டுள்ளவாறு நடைமுறைப் படுத்தப்பட்டுள்ளது. இந்த விதிமுறைகளை அறிவியல் முறையிலான கொள்கைகளின் அடிப்படையில் நடைமுறைப்படுத்துவதன் மூலமாக, கடலோரப் பகுதிகள், அதன் தனித்துவமிக்க சுற்றுச்சூழல் மற்றும் கடல் பகுதிகள் பாதுகாக்கப்படுகின்றன. மேலும், இந்த விதிமுறைகள் கடலோரப் பகுதிகளில் வசிக்கும் மீனவ சமூகத்தினர் மற்றும் உள்ளூர் மக்களுக்கு வாழ்வாதாரப் பாதுகாப்பை அளிக்கும் நோக்கத்தோடு நடைமுறைப்படுத்தப்படுகிறது. தமிழ்நாடு ஒரு கடலோர மாநிலமாக விளங்குவதால், இந்த விதிமுறைகள், மாநில மற்றும் மாவட்ட அளவில் உள்ள கடலோரப் பகுதி மேலாண்மை அமைப்புகள் மூலமாக நடைமுறைப்படுத்தப்படுகிறது.

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

[*2023 ஏப்ரல் 13*

தமிழ்நாடு மாநில கடலோர மண்டல மேலாண்மைக் குழுமம் (Tamil Nadu State Coastal Zone Management Authority)

கடலோர ஒழுங்குமுறை மண்டலத்தின் நடவடிக்கைகளை ஒழுங்குபடுத்தவும், அப்பகுதிகளின் விதிமீறல்களைக் கண்காணிக்கவும், மாநில அளவிலான கடலோர மண்டல மேலாண்மைக் குழுமம், ஒன்றிய அரசின் சுற்றுச்சூழல், வனம் மற்றும் காலநிலை மாற்ற அமைச்சகத்தினால் தோற்றுவிக்கப்பட்டுள்ளது. தமிழ்நாடு அரசின் சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத் துறையின் முதன்மைச் செயலாளர்/கூடுதல் தலைமைச் செயலாளரைத் தலைவராகவும், சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத் துறை இயக்குநரை உறுப்பினர் செயலராகவும் கொண்டு இக்குழுமம் செயல்படுகிறது.

மாவட்ட கடலோர மண்டல மேலாண்மைக் குழுமம் (District Coastal Zone Management Authority)

மாநில அரசு, மாவட்ட ஆட்சியரைத் தலைவராகக் கொண்ட மாவட்ட அளவிலான கடலோர மண்டல மேலாண்மைக் குழுமங்களை 1998 ஆம் ஆண்டு அமைத்துள்ளது. இக்குழுமங்கள் குறிப்பிட்ட கால இடைவெளிகளில் கூடி கடற்கரை ஒழுங்குமுறை அறிவிக்கைகள் குறித்த பொருண்மைகள் மீது முடிவுகள் மேற்கொள்கின்றன.

தொழில்நுட்ப வல்லுநர் குழு (Technical Expert Committee)

தமிழ்நாடு கடலோர மண்டல மேலாண்மைக் குழுமத்தின் ஒப்புதலுக்காக சமர்பிக்கப்படும் விண்ணப்பங்களை முன் ஆய்வு செய்யவும் கடற்கரை ஒழுங்குமுறைப் பகுதி தொடர்பான நீதிமன்ற வழக்குகளை ஆய்வு செய்யவும் 13-6-2022 நாளிட்ட சுற்றுச்சூழல் காலநிலை மாற்றம் மற்றும் வனத் துறை (சு.சூ-3-ன் அரசாணை (நிலை) எண் 100—ல், மூன்று உறுப்பினர்களைக் கொண்ட தொழில்நுட்ப வல்லுநர் குழுவை அரசு நியமித்துள்ளது.

6.2. தமிழ்நாடு சுற்றுச்சூழல் மேலாண்மை முகமை

(Environment Management Agency of Tamil Nadu)

தேசிய நதிநீர்ப் பாதுகாப்புத் திட்டம் மற்றும் தேசிய ஏரிகள் பாதுகாப்புத் திட்டங்களின்கீழ் ஒன்றிய சுற்றுச்சூழல், வனம் மற்றும் காலநிலை மாற்ற அமைச்சகத்தின் உதவியுடன்

2023 ஏப்ரல் 13]

செயல்படுத்தப்படும் திட்டங்களைக் கண்காணிக்கவும், அவற்றை செயல்படுத்தவும் "தமிழ்நாடு சுற்றுச்சூழல் மேலாண்மை முகமை" தமிழ்நாடு அரசால், 2002 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டது.

இம்முகமை, பள்ளிகளில் சுற்றுச்சூழல், கடலோரப் பாதுகாப்பு விழிப்புணர்வு மற்றும் சூழல் மீட்புப் பணிகள் போன்ற நடவடிக்கைகளை தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம், மாநகராட்சிகள், நகராட்சிகள், அரசுசாரா தொண்டு நிறுவனங்கள் மற்றும் தேசிய பசுமைப்படை ஒருங்கிணைப்பாளர்கள் ஆகியோரின் ஒத்துழைப்புடன் மேற்கொண்டு வருகிறது.

மேலும், சுற்றுச்சூழல் பாதுகாப்பு நிதி, சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு நிதி, மாசுக் கட்டுப்பாடு வாரிய நிதி, அரசின் மானியம் உள்ளிட்ட நிதி மூலமாக பல்வேறு ஒத்த துறைகள்/ உள்ளாட்சி அமைப்புகளுடன் இணைந்து, நீர்நிலைகளில் சூழல் மீட்புப் பணிகளை, தமிழ்நாடு சுற்றுச்சூழல் மேலாண்மை முகமை செயல்படுத்தி வருகிறது. இது ஒரு தன்னாட்சி நிறுவனம் என்பதால் அரசு மற்றும் அரசு சாரா நிறுவனங்களுக்குள் ஒரு தொடர்பை ஏற்படுத்தி திட்டங்களை திறம்பட செயல்படுத்த வழிவகை செய்கிறது.

6.3 தேசிய பசுமைப்படை (National Green Corps)

இந்தியாவிலேயே தமிழ்நாட்டில் தான் 1998 ஆம் ஆண்டு, முதன்முறையாக சூழல் மன்றங்கள் துவங்கப்பட்டன. சூழல் மன்றங்கள் வெற்றிகரமாக செயல்பட்டதன் அடிப்படையில், ஒன்றிய அரசின் சுற்றுச்சூழல், வனம் மற்றும் காலநிலை மாற்ற அமைச்சகம், 2002 ஆம் ஆண்டில் இந்தியா முழுவதும் சூழல் மன்றங்களை ஏற்படுத்தியது.

தமிழ்நாட்டில் சுற்றுச்சூழல் துறையால் நடத்தப்படும் சுற்றுச்சூழல் விழிப்புணர்வுப் பணிகளில், 8000 தேசிய பசுமைப்படைப் பள்ளிகளிலுள்ள சுமார் 4 இலட்சம் மாணாக்கர் பங்கேற்கின்றனர். ஒவ்வொரு கல்வி மாவட்டத்திற்கும் ஒரு ஆசிரிய ஒருங்கிணைப்பாளர் நியமிக்கப்பட்டு, தேசிய பசுமைப்படையின் நடவடிக்கைகள் கண்காணிக்கப்படுகின்றன. விழிப்புணர்வு நிகழ்ச்சிகள், மரங்கள் நடுதல், பசுமைத் தினங்கள் கொண்டாடுதல், சூழல் போட்டிகள், சூழல் சுற்றுலா போன்ற சமுதாய மற்றும் பள்ளிகள் சார்ந்த நிகழ்ச்சிகளில் பள்ளி மாணவர்களை ஈடுபடுத்துவது இத்திட்டத்தின் முக்கிய நோக்கமாகும். தேசிய

பசுமைப்படை மற்றும் சூழல் மன்றங்கள்மூலம் உள்ளூர் பூர்வீக மரங்கள் மற்றும் காய்கறிகளைக் கொண்ட ஊட்டச்சத்து மிக்க தோட்டங்களை உருவாக்குவதற்கும் பராமரிப்பதற்கும் உதவுகின்றன.

6.4 மாநில அளவிலான சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆணையம் (State Environment Impact Assessment Authority of Tamil Nadu)

சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு அறிவிக்கை 2006 இன்படி சில புதிய திட்டங்களுக்கும், ஏற்கனவே செயல்பாட்டிலுள்ள திட்டங்களை விரிவாக்கம் செய்ய அல்லது நவீனமயமாக்குவதற்கும், சுற்றுச்சூழல் தாக்கத்தினால் ஏற்படும் பாதிப்பின் அடிப்படையில் சுற்றுச்சூழல் முன் அனுமதி பெறுவது கட்டாயமாகும். இவ்வறிக்கையின் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள ‘அ’ பிரிவு இனங்களுக்கு ஒன்றிய அரசின் சுற்றுச்சூழல், வனம் மற்றும் காலநிலை மாற்ற அமைச்சகத்திடமிருந்தும், ‘ஆ’ பிரிவு இனங்களுக்கு அதன் செயல்பாடுகளைச் சார்ந்து மாநில அளவிலான சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆணையத்திடமிருந்தும் சுற்றுச்சூழல் முன் அனுமதி பெறப்படல் வேண்டும்.

சுற்றுச்சூழலைப் பாதுகாத்து மாசுபாடுகளைக் குறைக்கத் தேவையான திட்டங்களை ஆராய்ந்து சுற்றுச்சூழல் முன் அனுமதி வழங்க மாநில சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆணையம் (SEIAA) மற்றும் அவ்வாணையத்திற்கு உதவ மாநில வல்லுநர் மதிப்பீட்டுக் குழு ஆகியவற்றை அமைக்க சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு அறிவிக்கை, 2006 இல் வழிவகை செய்யப்பட்டுள்ளது. மாநில வல்லுநர் மதிப்பீட்டுக் குழு, இத்திட்டங்களை ஆய்வு செய்து அதன் பரிந்துரைகளை மாநில சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆணையத்திற்கு (SEIAA) வழங்கும். இக்குழுவின் பரிந்துரையின் அடிப்படையில், சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு அறிவிக்கை 2006 இல் நிர்ணயிக்கப்பட்டுள்ள சட்டப்பூர்வ விதிகளுக்குட்பட்டு திட்டங்களுக்கு, சுற்றுச்சூழல் முன் அனுமதியை மாநில சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆணையம் வழங்கும். ஒன்றிய அரசின், சுற்றுச்சூழல், வனம் மற்றும் காலநிலை மாற்ற அமைச்சகத்தின் 11-01-2022 நாளிட்ட அறிவிக்கை எண் 146 இன்படி, தற்போதைய சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆணையம் மூன்று உறுப்பினர்களையும், மாநில வல்லுநர் மதிப்பீட்டுக் குழு 12 உறுப்பினர்களையும் கொண்டுள்ளது. இந்த ஆணையம் மற்றும் மதிப்பீட்டுக்குழு மூன்று ஆண்டுகளுக்கு செயல்படும்.

2023 ஏப்ரல் 13]

சுற்றுச்சூழல் அனுமதி வழங்கும் நடைமுறையில் செயல்திறன், எளிமை மற்றும் பொறுப்புணர்வை மேம்படுத்த வெளிப்படையான நடைமுறைகள் பின்பற்றப்படுகின்றன. திட்டப் பயனாளிகள் மற்றும் பொதுமக்கள், தங்களது பணிகளை சுலபமாக மேற்கொள்ளவும், தங்களது விண்ணப்பங்களின் நிலையை எளிதாக அறிந்து கொள்ளவும், ஒன்றிய அரசால் உருவாக்கப்பட்ட "PARIVESH" என்ற இணையதளத்தை தமிழக அரசு பயன்படுத்தி இதற்கு வழிவகுக்கிறது.

6.5 சுற்றுச்சூழல் தகவல் மையம் (Environmental Information System -ENVIS)

ஒன்றிய அரசின் சுற்றுச்சூழல், வனம் மற்றும் காலநிலை மாற்ற அமைச்சகத்தால், 1982 இல் ஒன்றிய அரசு திட்டமான சுற்றுச்சூழல் தகவல் மையம் என்ற அமைப்பை நிறுவியது. தமிழ்நாட்டில் சுற்றுச்சூழல் தகவல் மையம் (ENVIS) ஒன்றிய அரசின் சுற்றுச்சூழல், வனம் மற்றும் காலநிலை மாற்ற அமைச்சகத்தின் நிதியுதவியுடன் 2002 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் முதல் சுற்றுச்சூழல் துறையில் இயங்கி வருகிறது.

தமிழகத்தின் சுற்றுச்சூழல் மற்றும் அதன் தொடர்புடைய பல்வேறு தகவல்களை இம்மையம் வழங்கி வருகிறது. தகவல்கள் சேகரித்தல், ஒப்பிடுதல், சேமித்தல், சீர்படுத்துதல் மற்றும் www.tnenvis.nic.in என்ற வலைதளத்தின்மூலம் சுற்றுச்சூழல் தகவல்களைப் பரப்புதல் ஆகிய பணிகளில் இம்மையம் ஈடுபட்டுள்ளது. செய்திமடல் வெளியிடுதல், வலைதளம் சார்ந்த தகவல் தொகுப்புகளை உருவாக்குதல், விழிப்புணர்வு பிரசுரங்கள், சுற்றுச்சூழல் அறிக்கை, சுற்றுப்புறச்சூழல் விழிப்புணர்வு செயல்பாடுகள் போன்றவை சுற்றுச்சூழல் தகவல் மையத்தின் நடப்பில் உள்ள திட்டங்களாகும்.

"சுற்றுச்சூழல் விழிப்புணர்வு, கொள்கை, திட்டம் மற்றும் முடிவு மதிப்பீடு ஆகியவற்றுக்கான உதவி அமைப்பு" என்ற திட்டத்தின்கீழ் செயல்பட்டு வந்த சுற்றுச்சூழல் தகவல் மையம் தற்போது ஜூன் 2022 இல், 2021-2022 முதல் 2025-2026 ஆண்டு வரை ஒப்புதல் வழங்கப்பட்ட "மறுசீரமைக்கப்பட்ட சுற்றுச்சூழல் கல்வி, விழிப்புணர்வு ஆராய்ச்சி மற்றும் திறன் மேம்பாடு" என்ற திட்டத்துக்குள் உட்படுத்தப்பட்டுள்ளது. "சுற்றுச்சூழல் தகவல்கள், விழிப்புணர்வு, திறன் கட்டமைப்பு மற்றும் வாழ்வாதார திட்டங்கள்" ஆகியவை இந்த மறுசீரமைக்கப்பட்ட கூறுகளில் ஒன்றாகும்.

[2023 ஏப்ரல் 13

7. தற்போது செயல்படுத்தப்படும் திட்டங்கள்

7.1 மாவட்ட அளவிலான காலநிலை மாற்ற இயக்கம்

காலநிலை மாற்றத்தின் தாக்கம் குறித்து கிராமங்களில் விழிப்புணர்வு ஏற்படுத்த மாவட்டந்தோறும் காலநிலை மாற்ற இயக்கங்களை அமைக்க அரசு முடிவு செய்துள்ளது. இத்திட்டத்தின்கீழ் 3.80 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அனைத்து மாவட்டங்களிலும், மாவட்ட காலநிலை மாற்ற இயக்கத்தை செயல்படுத்த அரசு ஒப்புதல் அளித்துள்ளது. இந்த மாவட்ட இயக்கத்தில், மாவட்ட ஆட்சித் தலைவர் தலைவராகவும், மாவட்ட வன அலுவலர் மாவட்ட காலநிலை அலுவலராகவும் செயல்படுவார்கள்.

மாவட்ட அளவிலான காலநிலை மாற்ற இயக்கத்தின் நோக்கங்கள்:—

1) மாநில செயல்திட்டத்தை செயல்படுத்த மாவட்ட அளவில் அனைத்து துறைகளுடன் இணைந்து மாவட்ட காலநிலை மாற்ற இயக்கம் செயல்படும்.

2) தமிழ்நாடு பசுமை காலநிலை நிறுவனத்தின் (TNGCC) திட்ட மேலாண்மை அலகுடன் மாவட்ட காலநிலை மாற்ற இயக்கம் இணைந்து செயல்படும்.

3) காலநிலை திறன்மிகு கிராமங்கள், தட்ப வெப்ப நிலையை தாங்கும் பசுமைக் கோயில்கள், பசுமைப் பள்ளிக்கூடங்கள், உயிரி கேடயத்தை உருவாக்குதல், நீலக்கொடித் திட்டம், நிலையான வாழ்விடம், கார்பன் செறிவூட்டல் திட்டம் மற்றும் கழிவு மின் ஆற்றல் உற்பத்தி செய்தல் போன்ற திட்டங்களில் மாவட்ட காலநிலை மாற்ற இயக்கம் தமிழ்நாடு காலநிலை மாற்ற இயக்கத்தின் செயல்பாடுகளுடன் இணைந்து செயல்படும்.

4) மாவட்ட அளவில் காலநிலை மாற்றத்திற்கேற்ப தகவமைப்பு மற்றும் தணிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக மாவட்ட அளவிலான பங்குதாரர்களுக்கான கருத்துப் பட்டறைகள் மாவட்ட காலநிலை மாற்ற இயக்கத்தின் உதவியுடன் நடத்தப்படும்.

2023 ஏப்ரல் 13]

மாவட்ட அளவிலான காலநிலை மாற்ற இயக்கத்தின் செயல்திட்டங்கள்

அ) மாவட்டத்தின் வளர்ச்சித் திட்டங்களுடன், காலநிலை மாற்றத்திற்கேற்ற தகவமைப்பு மற்றும் பாதிப்பு தணிப்பு செயல்பாடுகளை ஒருங்கிணைத்தல்.

ஆ) திறன் கட்டமைத்தல் மற்றும் நிறுவன திறனை மேம்படுத்துதல்.

இ) காலநிலை தொடர்பாக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகளுக்கான கண்காணிப்பு மற்றும் மதிப்பீடு கட்டமைப்பை உருவாக்குதல்.

எதிர்நோக்கும் பலன்கள்

1. *மாவட்ட அளவிலான காலநிலை மாற்றத்திற்கேற்ற தகவமைப்பு மற்றும் பாதிப்புகளை தணிப்பதற்கான திட்டத்தை தயாரித்தல்*

2. *கார்பன் குறைப்பு, காலநிலை மாற்றத்தால் ஏற்படும் பாதிப்புகளிலிருந்து மீள்வதற்கான திட்டங்கள், துறை வாரியான திட்டங்களை ஆய்வு செய்தல் போன்றவற்றிற்கு தேவையான தரவுகளை அளித்தல் மற்றும் மாநில அரசின் காலநிலை கொள்கைக்கேற்ப செயல்படுவதை உறுதி செய்தல்.*

3. *கீழ்மட்ட அளவில் காலநிலை குறித்த கல்வியறிவை உருவாக்குதல்*

4. *காலநிலை திறன்மிகு கிராமங்களை உருவாக்குதல்*

7.2. மாண்புமிகு தமிழ்நாடு முதல்வரின் பசுமைப் புத்தாய்வுத் திட்டம்

தமிழ்நாட்டில் காலநிலை மாற்றத்திற்கேற்ற தகவமைப்பு மற்றும் பாதிப்புகளை தணிப்பதற்காக எடுக்கப்படும் பல்வேறு புதிய முயற்சிகளில் சிறப்பாகச் செயல்படும் இளைஞர்களை ஈடுபடுத்துவது அவசியம் என அரசு உணர்ந்துள்ளது. இளைஞர்களின் கையில் எதிர்கால இந்தியா உள்ளது என்பதன் அடிப்படையில், தமிழ்நாடு அரசு, மாண்புமிகு தமிழ்நாடு முதல்வர்

[*2023 ஏப்ரல் 13*

பசுமைப் புத்தாய்வு திட்டம்மூலம் சுற்றுச்சூழல் குறித்த பல்வேறு பிரச்சனைகளை அணுகி தீர்வு காணும் வகையில் இயற்கை மற்றும் இயற்கையில் ஆர்வமுள்ள இளைஞர்களை அடையாளம் கண்டு அவர்களை காலநிலை மாற்றம் தொடர்பான பணிகளில் ஈடுபடுத்த முனைந்துள்ளது.

இளைய தலைமுறையினர் மற்றும் மாணவர்களை ஈர்ப்பதற்கான வழிமுறைகள்மூலம், காலநிலை மாற்றம் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துவதும், சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத்தால் ஏற்படும் தாக்கத்தை குறைக்கவும், இயற்கையைப் பாதுகாக்கவும் தேவையான பசுமைக்கு வளம் சேர்க்கும் யோசனைகளை உருவாக்குவதும், தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி பாதிப்புகளை குறைப்பதும் இத்திட்டத்தின் இலக்காகும்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் இந்த பசுமை புத்தாய்வுத் திட்டம் தமிழ்நாட்டில் 38 மாவட்டங்களில் செயல்படுத்தப்படும். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் பசுமைப் புத்தாய்வு திட்டத்தில் திட்டமிடுதல், ஒருங்கிணைத்தல், மேற்பார்வை மற்றும் கண்காணித்தல் ஆகிய அனைத்து பணிகளும், சுற்றுச்சூழல் துறை மற்றும் காலநிலை மாற்ற இயக்குநரகத்தால் மேற்கொள்ளப்படும். காலநிலை மாற்றத்திற்கேற்ற தகவமைப்பு மற்றும் பாதிப்புகளை தணிக்கும் செயல்பாடுகளில் மாவட்ட காலநிலை மாற்ற இயக்கப் பணிகளுக்கு பசுமைத் தோழர்கள் தேவையான உதவிகளை வழங்குவார்கள்.

7.3. பசுமைப் பள்ளிக்கூடத் திட்டம்

காலநிலை மாற்றம் என்பது நாம் எதிர்கொள்ள வேண்டிய யதார்த்தம் என்பதால், இளைய தலைமுறையினர் மற்றும் சிறுவர்கள் அதனை ஏற்பதற்கும் அதன் பாதிப்புகளை தடுப்பதற்கும் தயாராக வேண்டியது அவசியமாகும். பசுமைப் புரட்சி என்பது இளைய தலைமுறையில் இருந்து உருவாக வேண்டும்.

சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத் துறையின் 03-10-2022 நாளிட்ட அரசாணை (நிலை) எண். 174 இல் வெளியிடப்பட்டுள்ள ஆணையின்படி, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சரின் பசுமை திட்டத்தை செயல்படுத்த 25 பள்ளிகள் தேர்ந்தெடுக்கப்பட்டு, இந்த பள்ளிகளில் சூரிய ஒளி விளக்குகள், சூரிய ஒளி பம்புகள் மற்றும் சூரிய ஒளி போர்வெல் போன்றவற்றைப் பயன்படுத்தி எரிசக்தியை சேமித்தல், மழைநீர்

2023 ஏப்ரல் 13]

சேமிப்பு, உரம் தயாரித்தல், காய்கறி தோட்டம் உருவாக்குதல், மருத்துவ தோட்டம் உருவாக்குதல் மற்றும் பழ மரங்கள் நடுதல், குறைவான நீர் பயன்பாடு, கழிவுநீர் மறுசுழற்சி, பிளாஸ்டிக் இல்லாத சூழலை உருவாக்குதல் போன்ற பல்வேறு பசுமை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

இந்த பசுமை பள்ளி திட்டத்தின் முன்னெடுப்பு மற்ற பள்ளிகளுக்கு வழிகாட்டியாக அமைவதோடு, இப்பள்ளிகள் பசுமைப் பள்ளிக் குறியீட்டில் தரவரிசைப்படுத்தப்படும். பசுமைப் பள்ளி திட்டமானது, பள்ளிக் கல்வித் துறை மூலமாக 5 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 25 பள்ளிகளில் தலா 20 இலட்சம் ரூபாய் செலவில் மேற்கொள்ளப்படும்.

7.4. காலநிலை மையம் (Climate Studio)

அண்ணா பல்கலைக்கழகத்தில் காலநிலை மாற்றம் மற்றும் அது தொடர்பான ஆய்வுப் பணிகளை மேற்கொள்ள ஏற்கனவே அமைக்கப்பட்ட ஆய்வு மையம், 'காலநிலை மாற்றம் மற்றும் பேரிடர் மேலாண்மை ஆய்வு மையம்' என தமிழ்நாடு அரசால் மறுபெயரிடப்பட்டது. இச்சிறப்பு ஆய்வு மையம், காலநிலை மாற்றம் குறித்த அறிவை மேம்படுத்தி, காலநிலை மாற்றத்தை எதிர்கொள்வதற்கான நமது திறனை வலுப்படுத்துவதற்கான ஆய்வுகளை மேற்கொள்ளும்.

அண்ணா பல்கலைக்கழகத்தின் காலநிலை மாற்றம் மற்றும் பேரிடர் மேலாண்மை ஆய்வு மையத்தினை (CCCDM), காலநிலை மாற்றம் சார்ந்த அறிவு மேலாண்மைக்கான நிபுணத்துவம் வாய்ந்த அரசு சார்பு நிறுவனமாக ஏற்கனவே உருவாக்கப்பட்ட தமிழ்நாடு மாநில காலநிலை மாற்றம் குறித்த செயல் திட்டம் (TNSAPCC) அடையாளம் கண்டுள்ளது.

இம்மையத்தில் காலநிலை மாதிரியாக்கத்திற்கான உயர் செயல்திறன் கணக்கீட்டு வசதிகள் மற்றும் தரவுகள் சேமிப்பதற்கான துணைக் கருவிகளுடன்கூடிய காலநிலை மையம் உருவாக்கப்பட்டுள்ளது.

காலநிலை மையத்தின் நோக்கங்கள்

- *தமிழ்நாடு முழுமைக்குமான, நுண் அளவு கொள்கை திட்டமிடலுக்குத் தேவையான உயர் தரம் மிக்க,*

நுணுக்கமான, மண்டல அளவிலான காலநிலை தொடர்பான தகவல்களை திரட்டி அளித்தல்.

- IPCC—யின் தொடர் மதிப்பீடு அறிக்கைகளின் அடிப்படையில் வேளாண்மை, நீர் வளம், வனம் மற்றும் பல்—உயிரினம் மற்றும் கடலோர மண்டலம் போன்ற இயற்கை வளங்களின் மீது காலநிலை மாற்றத்தின் பாதிப்பு குறித்து குறிப்பிட்ட காலத்திற்கு ஒருமுறை மதிப்பீடு செய்தல்.

- மேற்படி மதிப்பீடுகளை மேற்கொள்ள புவி தகவல் தரவு அடிப்படையில் தகவல்கள் பெறப்பட்டு, அவற்றிலிருந்து அறிவியல் வழியிலான அறிக்கைகள் தயாரிக்க நீர்வளத் துறையில் MIKE SHE மற்றும் SWAT, வேளாண்மை துறையில் DSSAT மற்றும் கடலோர மேலாண்மையில் SimCLIM மற்றும் வனத் துறையில் MAXENT எனப்படும் மென்பொருட்களைப் பயன்படுத்தி காலநிலை மாற்றம் தொடர்பான ஒரு தெளிவை அடைவதுடன், காலநிலை மாற்றத்தினால் எதிர்காலத்தில் ஏற்படும் தாக்கங்கள் மற்றும் அழிவுகளைக் கணித்தல் மற்றும் இயற்கை வளங்கள், சூழல் அமைவிடங்களில் நிகழும் மாற்றங்களைக் கணக்கிடுதல்.

- திட்டமிடல் நிபுணர்கள் மற்றும் அறிவியலாளர்கள், தன்னார்வு நிறுவனங்கள் மற்றும் சமூகத்தினர் ஆகியோர் இது குறித்து அறிந்து கொள்வதற்காக மாநில மொழிகளில் தகவல்களை அளித்தல்.

காலநிலை மையத்தின் செயல்பாடுகள்

- தேசிய, மாநில மற்றும் உள்ளூரளவில், காலநிலை மாற்றம் மற்றும் சுற்றுச்சூழல் குறித்த தகவல்களை உரிய ஆதாரங்களுடன் அளித்தல்.

- நீர்வளம், வேளாண்மை, வனவியல், கடலோர, நகர்ப்புற வாழ்விடம், சுகாதாரம் மற்றும் பல்லுயிர்ப் பெருக்கம் போன்ற துறைகளில் காலநிலை மாற்றத்தின் தாக்கத்தை மதிப்பிடுவதற்கான பயிற்சித் திட்டங்களை செயல்படுத்துதல்.

- காலநிலை மாற்றம் தொடர்பான திட்டமிடல் மற்றும் பாதிப்புக்குள்ளாவதை ஈடுசெய்யத்தக்க பணிகளுக்கு தேவையான அறிவியல் ஆற்றலை உருவாக்குதல்.

2023 ஏப்ரல் 13]

- *காலநிலை மாற்றம் தொடர்பான தகவல்கள், தொழில்நுட்பங்களை பரிமாறிக்கொள்ளவும் ஒருங்கிணைந்து ஆய்வு நடவடிக்கையில் ஈடுபடவும், அனைத்து ஆய்வு நிறுவனங்களை உள்ளடக்கிய ஒருங்கிணைந்த தகவல் மையமாக உருவாக்குதல்.*

காலநிலை மையத்தினால் எதிர்நோக்கும் பலன்கள்

- *மாவட்ட, வட்டார அளவிலான காலநிலை மாற்றத் தகவல்களை பெறுதல்.*
- *ஒரு வலைதளம் மூலமாக காலநிலை மாற்றம் தொடர்பான தகவல்களை அனைவரும் எளிமையாக பெறுதல்.*
- *சமீபத்திய காலநிலை மாற்றம் குறித்த தகவல்களை வழங்கும் பொருட்டு பன்னாட்டுக் காலநிலைத் தரவுகளை உடனுக்குடன் சேகரித்தல்.*
- *காலநிலை மாற்றம் தொடர்பான அனைத்து நிறுவனங்களையும், ஆய்வு நிலையங்களையும் ஒருங்கிணைத்து, தொழில்நுட்பம் மற்றும் தரவுகளை பரிமாறிக் கொள்வதுடன், அவற்றுடன் ஒருங்கிணைந்து ஆய்வுகளை மேற்கொள்ளுதல்.*
- *காலநிலை குறித்த ஆய்வுகளில் தொடர்புடைய அனைத்து பன்னாட்டு மற்றும் தேசிய அளவிலான அறிவியல் மையங்களிலிருந்து தகவல்களைப் பெற்று ஒருங்கிணைத்தல்.*

7.5. நீலக்கொடி கடற்கரை சான்றளிப்புத் திட்டம் (Blue Flag Beach Certification Programme)

நிலையான சுற்றுலா மற்றும் ஆரோக்கியமான கடலோர நிருவாகத்தை திட்டமிடவும், மேம்படுத்தவும் சுற்றுச்சூழல், வனம் மற்றும் காலநிலை மாற்ற அமைச்சகத்தால் உருவாக்கப்பட்டுள்ள கடற்கரை சுற்றுச்சூழல் மற்றும் அழகியல் மேலாண்மை அமைப்பு [Beach Environment and Aesthetic Management System (BEAMS)] எனும் ஒருங்கிணைந்த கடலோர மேலாண்மை திட்டம், கடற்கரைகளில் இருக்கும் மாசைக் குறைக்கவும் மற்றும் சர்வதேச தர அளவீட்டிற்கு இந்தியாவின் கடற்கரைகளை உயர்த்தவும் தேவையான அம்சங்களுடன் செயல்படுத்தப்படுகிறது.

TRUTH ALONE TRIUMPHS

[2023 ஏப்ரல் 13

கடற்கரைகள் மற்றும் படகுத்துறைகளுக்கு அளிக்கப்படும் நீலக்கொடி சான்றிதழானது, சர்வதேச, அரசு சாரா, இலாப நோக்கமற்ற சுற்றுச்சூழல் கல்வி நிறுவனத்தால் (Foundation for Environmental Education) அளிக்கப்படுகிறது. மேலும், தரம், சுற்றுச்சூழல் கல்வி மற்றும் தகவல்கள், பாதுகாப்பு மற்றும் சேவைகளை வழங்குதல் மற்றும் பொது சுற்றுச்சூழல் மேலாண்மை ஆகிய 4 தலைப்புகளின் கீழ் உள்ள நீலச் சான்றிதழுக்கான 33 தகுதிகளை கொண்டுள்ள கடற்கரைகளுக்கே இச்சான்றிதழ் வழங்கப்படும். நீலக்கொடியானது, உள்ளூர், மண்டல மற்றும் தேசிய அளவில் சுற்றுலா மற்றும் சுற்றுச்சூழல் துறைகளை ஒன்றிணைக்கும் வகையில் மிகவும் மதிப்புமிக்க, சிறப்பு வாய்ந்த மற்றும் ஏற்றுக்கொள்ளப்பட்ட சுற்றுச்சூழல் அடையாளமாக மாறியுள்ளது.

செங்கல்பட்டு மாவட்டத்திலுள்ள, கோவளம் கடற்கரையானது, நீலக்கொடித் திட்டத்தின்கீழ், நீரின் தரம் மற்றும் பாதுகாப்பு அளவுகளை நிறைவு செய்யும் வகையில், தமிழ்நாட்டில் ஒரு முன்னோடித் திட்டமாக செயல்படுத்த தேர்வு செய்யப்பட்டு, ஒன்றிய அரசின், சுற்றுச்சூழல், வனம் மற்றும் காலநிலை மாற்ற அமைச்சகத்தின், ஒருங்கிணைந்த கடலோர மேலாண்மைச் சங்கம் (Society of Integrated Coastal Management (SICOM)) மூலமாக செயல்படுத்த ஒரு மாதிரி கடற்கரையாக தேர்வு செய்யப்பட்டது. கோவளம் கடற்கரையில் நீலக்கொடி கடற்கரைத் திட்டத்தைக் கண்காணிக்கவும், மேற்பார்வையிடவும் செங்கல்பட்டு மாவட்ட ஆட்சியர் தலைமையில் கடற்கரை மேலாண்மைக் குழு (Beach Management Committee) அமைக்கப்பட்டுள்ளது. இந்த கோவளம் கடற்கரைக்கு அக்டோபர் 2021 முதல் மே 2022 வரை 21-09-2021 அன்று நீலக்கொடி சான்றிதழ் வழங்கப்பட்டு 2022-2023 ஆண்டு வரை புதுப்பிக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு அரசின் நிதிநிலை அறிக்கை 2021-2022 உரையில், அடுத்த 5 ஆண்டுகளில் 10 கடற்கரைகளுக்கான மதிப்புமிக்க நீலக்கொடி சான்றிதழைப் பெறுவதற்கான திட்டத்தை ரூ.100 கோடி செலவில் அரசு அறிவித்துள்ளது. அதன்படி தமிழ்நாட்டின் பல்வேறு மாவட்டங்களிலுள்ள கீழ்க்காணும் 10 கடற்கரைகளில் நீலக்கொடி சான்றிதழ் திட்டமானது செயல்படுத்தப்படும் என அறிவிக்கப்பட்டது. அத்திட்டத்தை செயல்படுத்த கடற்கரைகள் குறித்த அடிப்படை ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. ஆய்வுக்கு பிறகு திட்டம் செயல்படுத்தப்படும்

2023 ஏப்ரல் 13]

1. மெரினா கடற்கரை – சென்னை மாவட்டம்
2. மணமேல்குடி கடற்கரை – புதுக்கோட்டை மாவட்டம்
3. குஷி கடற்கரை – இராமநாதபுரம் மாவட்டம்
4. வெள்ளி கடற்கரை – கடலூர் மாவட்டம்
5. கோட்டைப்பட்டினம் கடற்கரை – புதுக்கோட்டை மாவட்டம்
6. நீலாங்கரை கடற்கரை – செங்கல்பட்டு மாவட்டம்
7. காமேசுவரம் கடற்கரை – நாகப்பட்டினம் மாவட்டம்
8. நாரவாக்கம், மரக்காணம் கடற்கரை – விழுப்புரம் மாவட்டம்
9. காயல்பட்டினம் கடற்கரை – தூத்துக்குடி மாவட்டம்
10. நெய்தல் நகர் கடற்கரை – நாகப்பட்டினம் மாவட்டம்

7.6 துறைக்கென பசுமைக் கட்டடம் கட்டுதல்

சுற்றுச்சூழல் துறை 1995—ஆம் ஆண்டு துவங்கப்பட்டு வாடகைக் கட்டடத்தில் செயல்பட்டு வருகிறது. கடந்த சில ஆண்டுகளாக துறையின் செயல்பாடு பலமடங்கு அதிகரித்து வருகிறது. “தமிழ்நாடு காலநிலை மாற்ற இயக்கம்” என்ற திட்டத்தை செயல்படுத்துவதில் சுற்றுச்சூழல் துறை ஒரு செயலாக்கத் துறையாக செயல்பட்டு வருகிறது.

அதிக மற்றும் விரிவான பொறுப்புகளை இத்துறை கொண்டுள்ளதன் காரணமாக, சுற்றுச்சூழல் துறையின் கீழ் செயல்படும் பல்வேறு பிரிவுகளின் தேவையைப் பூர்த்தி செய்ய ஏதுவாக துறைக்கென தனியாக ஒரு கட்டடம் தேவை ஆகும். எனவே, நவீன தொழில்நுட்ப வசதிகளுடன்கூடிய ஒரு பசுமைக் கட்டடத்தை 20 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டுவதற்கு அரசாணை வெளியிடப்பட்டுள்ளது. உகந்த இடம் தேர்வு செய்யப்பட்டவுடன் பசுமை கட்டடம் உடனடியாக கட்டப்படும்.

8. நிறைவுரை

பொருளாதார வளர்ச்சி மற்றும் சுற்றுச்சூழல் பாதுகாப்பினை சமமாக நோக்கி, இவை இரண்டின் வளர்ச்சிக்கும் இடையூறு

[2023 ஏப்ரல் 13

ஏற்படாமல் நிலைத்த வளர்ச்சியை அடைவது ஒரு அரிய கலையாகும். காலநிலை மாற்றத்தின் எதிர்மறையான தாக்கங்களை குறைப்பதற்கு சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டிற்கு அதிக கவனமளிப்பது அவசியமான ஒன்றாகும். சுற்றுச்சூழல் மற்றும் சமூகம் ஆகிய இரண்டிற்கும் உகந்த பயன் தரக்கூடிய, புதிய திட்டங்கள் மற்றும் கொள்கைகளை தமிழ்நாடு அரசு செயல்படுத்தி வருகிறது.

தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்

"நிலம் தீ நீர் வளி விசும்போடு ஐந்தும்
கலந்த மயக்கம் உலகம்"... என்கிறது

—தொல்காப்பியம்

ஐம்பூதங்களாகிய நிலம், நீர், நெருப்பு, காற்று மற்றும் ஆகாயம் முதலானவை கலந்தது தான் உலகம் என்று தொல்காப்பியம் கூறுகிறது.

1. முன்னுரை

"மாசு கட்டுப்பாடு" இயற்கை வளங்களை பாதுகாத்து சுற்றுச்சூழலை பாதுகாக்கும் அதே நேரத்தில், தொழில் துறையில் திறமையான உற்பத்திமூலம் பொருளாதார வளர்ச்சியை மேம்படுத்துவதோடு வீடுகள், வணிகங்கள் மற்றும் சமூகத்தின் கழிவுகளைக் கையாளுவதற்கான தேவையை குறைக்கிறது. இயற்கைச் சூழலைப் பாதுகாப்பதும், மேம்படுத்துவதும் ஒவ்வொரு குடிமகனின் கடமையாகும். இதன் அடிப்படையில் தமிழ்நாடு அரசு, நீர் (மாசு தடுப்பு மற்றும் கட்டுப்பாடு) சட்டம், 1974-இன் (ஒன்றிய சட்டம் 6) பிரிவு 4 (1) இன்கீழ் 19-02-1982 நாளிட்ட சுகாதாரம் மற்றும் குடும்ப நலத் துறையின் அரசாணை எண் 340 இன்படி, தமிழ்நாடு நீர் மாசு தடுப்பு மற்றும் கட்டுப்பாடு தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியத்தை நிறுவியது. இது 1982 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 27ஆம் தேதி தமிழ்நாடு அரசிதழில் வெளியிடப்பட்டு, அதே நாளில் வாரியம் செயல்பாட்டுக்கு வந்தது. பின்னாளில், தமிழ்நாடு நீர் (மாசு தடுப்பு மற்றும் கட்டுப்பாடு) விதிகள், 1983 இல் இயற்றப்பட்ட பிறகு, மேற்குறிப்பிட்ட வாரியம் தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் (TNPCB) என பெயர் மாற்றம் செய்யப்பட்டது.

2023 ஏப்ரல் 13]

தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் தற்போது தமிழ்நாடு அரசின் சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத் துறையின்கீழ் செயல்படுகிறது. வாரியம் ஒன்றிய அரசின் சட்டங்களை அமல்படுத்துவதன்மூலம் சுற்றுச்சூழல் மாசுபாட்டைக் குறைப்பதற்கும் கட்டுப்படுத்துவதற்குமான மாநிலத்தின் சட்டப்பூர்வமான அமைப்பாகும். நீர் (மாசு தடுப்பு மற்றும் கட்டுப்பாடு) சட்டம், 1974 பிரிவு 4 இன் படி, தலைவர், உறுப்பினர் செயலர், மாநில அரசாங்கத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் ஐந்து அதிகாரிகள், உள்ளாட்சி அமைப்புகளை பிரதிநிதித்துவப்படுத்தும் ஐந்து நபர்கள், விவசாயம், மீன்பிடித் துறை, தொழில் அல்லது வர்த்தகம் போன்றவற்றின் நலன்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அதிகாரிகள் அல்லாத மூன்று நபர்கள் மற்றும் மாநில அரசுக்கு சொந்தமான நிறுவனங்கள் அல்லது கழகங்களை பிரதிநிதித்துவப்படுத்தும் இரண்டு நபர்கள் வாரிய உறுப்பினர்களாக நியமிக்கப்படுகின்றனர்.

2. வாரியத்தின் பணிகள்:

- *மாநிலத்தில் நீர் மற்றும் காற்று மாசுபடுவதைத் தடுக்கவும், கட்டுப்படுத்தவும் மற்றும் குறைக்கவும் விரிவான திட்டங்களைத் திட்டமிடுதல்.*
- *நீர் மற்றும் காற்று மாசுபாட்டைத் தடுப்பது, கட்டுப்படுத்துவது அல்லது குறைப்பது தொடர்பான எந்தவொரு விஷயத்திலும் மாநில அரசுக்கு ஆலோசனை வழங்குதல்.*
- *அன்றாடக் கழிவுநீர் மற்றும் தொழிற்சாலைக் கழிவுநீரை சுத்திகரிப்பதற்காக அமைக்கப்பட்ட கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களை ஆய்வு செய்தல் மற்றும் அன்றாடக் கழிவுநீர் மற்றும் தொழிற்சாலைக் கழிவுநீரை அகற்றுவதற்கான அமைப்பு மற்றும் சுத்திகரிப்பு நிலையங்கள் தொடர்பான திட்டங்கள், விவரக்குறிப்புகள் மற்றும் பிறதரவுகளை மதிப்பாய்வு செய்தல்.*
- *நீர் மற்றும் காற்று மாசுபாட்டைத் தடுத்தல், கட்டுப்படுத்துதல் மற்றும் குறைத்தல் தொடர்பான திட்டங்களில் ஈடுபட்டுள்ள அல்லது ஈடுபடும் பணியாளர்களுக்குப் பயிற்சியை ஏற்பாடு செய்வதில் ஒன்றிய மாசு கட்டுப்பாடு வாரியத்துடன் (*Central Pollution Control Board*) ஒத்துழைத்து, அது தொடர்பான பெருமளவிலான விழிப்புணர்வு கல்வித் திட்டத்தை ஏற்பாடு செய்தல்.*


- நீர் மாசுபாடு தொடர்பான தடைகள் மற்றும் நீர் மாசுபாட்டைத் தடுத்தல், கட்டுப்படுத்துதல் மற்றும் குறைத்தல் தொடர்பான ஆலோசனைகள் மற்றும் ஆராய்ச்சிகளை ஊக்குவித்தல் மற்றும் அவற்றில் பங்குபெறுதல்.

- வாரியம் அதன் செயல்பாடுகளை திறம்படச் செய்ய ஏதுவாக ஆய்வகங்களை நிறுவுதல் அல்லது அங்கீகரித்தல், ஆறு, ஓடை அல்லது கிணற்று நீரின் மாதிரிகள் அல்லது அன்றாடக் கழிவுநீர் மற்றும் தொழிற்சாலைக் கழிவுநீரின் மாதிரிகள் மற்றும் காற்று மாசுபாட்டினை ஆய்வு செய்தல்.

- ஒன்றிய மாசுகட்டுப்பாடு வாரியம் அல்லது மாநில அரசாங்கத்தால் அவ்வப்போது ஒப்புவிக்கப்படும் பிற பணிகளை மேற்கொள்ளுதல்.

3. நிறுவன அமைப்பு

தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், (i) சென்னையில் உள்ள தலைமை அலுவலகம் (ii) எட்டு மண்டல அலுவலகங்கள் (iii) முப்பத்தியெட்டு மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர் அலுவலகங்கள் ஆகியவற்றைக் கொண்ட மூன்று அடுக்கு அமைப்பினைக் கொண்டுள்ளது. கூடுதலாக ஐந்து பறக்கும்படை அலுவலகங்கள் மற்றும் மூன்று உதவி சுற்றுச்சூழல் பொறியாளர் அலுவலகங்களையும் ஏற்படுத்தியுள்ளது.



2023 ஏப்ரல் 13]

மேலும் தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் எட்டு மேம்பட்ட சுற்றுச்சூழல் ஆய்வகங்கள் மற்றும் பத்து மாவட்ட சுற்றுச்சூழல் ஆய்வகங்களை நீர் மற்றும் கழிவுநீர் மாதிரிகளை ஆய்வு செய்யவும், தொழிற்சாலைகளின் புகை வெளியேற்றத்தின் மாதிரிகளை ஆய்வு செய்யவும் மற்றும் மாநிலத்தின் நீர் ஆதார கண்காணிப்பு மற்றும் சுற்றுச்சூழல் காற்று தர ஆய்வுக்காகவும் நிறுவியுள்ளது.

வாரியத்தின் தலைமை அலுவலகம், தலைவர் அவர்களின் தலைமையில் சென்னையிலும், இணை தலைமை சுற்றுச்சூழல் பொறியாளர் (கண்காணிப்பு) தலைமையில் எட்டு மண்டல அலுவலகங்களும் மற்றும் மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர்கள் தலைமையில் முப்பத்தியெட்டு மாவட்ட அலுவலகங்களும் செயல்பட்டு வருகின்றன. இவை தவிர, ஈரோடு, திருப்பூர், சென்னை, சேலம், வேலூர் ஆகிய இடங்களில் சுற்றுச்சூழல் பொறியாளர் தலைமையில் ஐந்து பறக்கும் படைகளும் செயல்பட்டு வருகின்றன.

மேலும், 2021-2022 ஆம் ஆண்டில் மணலி, மேட்டூர் மற்றும் இராணிப்பேட்டை போன்ற அதிக மாசடையும் பகுதிகளில் மூன்று உதவி சுற்றுச்சூழல் பொறியாளர் அலுவலகங்கள் உருவாக்கப்பட்டன. மேலும், ஒரகடம் மற்றும் நாகப்பட்டினத்தில் இரண்டு மாவட்ட சுற்றுச்சூழல் ஆய்வகங்கள் பிப்ரவரி 2023 இல் புதிதாக உருவாக்கப்பட்டன மற்றும் இணை தலைமை சுற்றுச்சூழல் பொறியாளர் (கண்காணிப்பு) அலுவலகம் செங்கல்பட்டு மாவட்டத்தில் மறைமலைநகரில் ஏற்படுத்தப்பட்டு வருகிறது.

4. தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியத்தின் செயல்பாடுகள்

4.1. இசைவாணை வழங்குதல்

4.1.1. தமிழ்நாட்டில் உள்ள தொழிற்சாலைகளின் வகைப்பாடு

ஒன்றிய மாசு கட்டுப்பாடு வாரியத்தின் உத்தரவுகளின் அடிப்படையில், தொழிற்சாலைகள் சிவப்பு, ஆரஞ்சு, பச்சை மற்றும் வெள்ளை என மாசு குறியீட்டு மதிப்பின் அடிப்படையில் வகைப்படுத்தப்படுகின்றன. மேலும், தொழிற்சாலைகளின் மொத்த நிலையான சொத்துக்களின் (Gross Fixed Assets) அடிப்படையில் தொழிற்சாலைகள் பின்வருமாறு வகைப்படுத்தப்படுகின்றன:

[2023 ஏப்ரல் 13

மொத்த நிலையான சொத்துக்களின் அடிப்படை யிலான வகை	மொத்த நிலையான சொத்துக்கள் (ரூபாய் கோடியில்)	மாசுபடுத்தும் தன்மையை அடிப்படையாகக் கொண்ட வகைப்பாடு			
		சிவப்பு	ஆரஞ்சு	பச்சை	வெள்ளை
பெரிய வகை	> 10	அதிக மாசுபாடு	நடுத்தர மாசுபாடு	குறைவான மாசுபாடு	மிகக் குறைவான மாசுபாடு
நடுத்தர வகை	> 5 — < 10				
சிறிய வகை	< 5				

3-3-2023 வரை வாரியத்தின் இசைவாணை முறையின்கீழ் உள்ள தொழிற்சாலைகளின் எண்ணிக்கை கீழே கொடுக்கப்பட்டுள்ளது:—



4.1.2. தொழிற்சாலைகளுக்கு இசைவாணை வழங்குவதற்கான அளவுகோல்கள்

காற்று மற்றும் நீர் மாசுபாடு தொடர்பாக தொழிற்சாலைகளை கண்காணிப்பதற்காக, தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் நிறுவுவதற்கான இசைவாணை மற்றும் இயக்குவதற்கான இசைவாணை இரண்டு நிலைகளில் வழங்கப்படுகிறது. முதல் கட்டத்தில், 'நிறுவுவதற்கான இசைவாணை' (CTE) பிற அளவுகோல்களோடு, தொழிற்சாலைகளின் அமைவிடம் குறித்து ஆய்வு செய்த பிறகு வழங்கப்படுகிறது. எடுத்துக்காட்டாக

2023 ஏப்ரல் 13]

30-03-1989 நாளிட்ட சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறையின் அரசாணை எண் 213 இன்படி, குறிப்பிட்டுள்ள நீர்நிலைகளிலிருந்து ஒரு கி.மீ தொலைவிற்குள்ளாகவும் மற்றும் 8-5-1998 நாளிட்ட அரசாணை எண் 127 இன்படி தமிழ்நாட்டின் முக்கிய ஆறுகளின் கரையில் இருந்து ஐந்து கி.மீ. தொலைவிற்குள்ளாகவும் அதிக மாசுபடுத்தும் தொழிற்சாலைகள் அமைவதை தடை செய்கிறது. இரண்டாவதாக, நிறுவுவதற்கான இசைவாணையில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகள் கடைபிடிக்கப்பட்டுள்ளதை உறுதி செய்தபிறகு, தொழிற்சாலைகளை இயக்க 'இயக்குவதற்கான இசைவாணை' (CTO) *வழங்கப்படுகிறது. மேற்கண்ட அரசாணையிலிருந்து ஃபவுண்டரி தொழிற்சாலைக்கு சில நிபந்தனைகளுடன் விலக்கு அளித்துள்ளது.*

21-2-2020 நாளிட்ட தமிழ்நாடு அரசின் அரசிதழ் அறிவிப்பின்படி, காவிரி டெல்டா பகுதிகளான தஞ்சை, திருவாரூர், நாகப்பட்டினம் மாவட்டங்கள், அரசாணை எண் 797 நாள் 28-12-2020 இன்படி நாகப்பட்டினம் மாவட்டத்திலிருந்து பிரிக்கப்பட்ட மயிலாடுதுறை மாவட்டம், கடலூர் மாவட்டத்தில் உள்ள காட்டுமன்னார் கோவில், மேல்புவனகிரி, கீரப்பாளையம், பரங்கிப்பேட்டை மற்றும் குமராட்சி வட்டாரங்கள், புதுக்கோட்டை மாவட்டத்தில் உள்ள அறந்தாங்கி, ஆவுடையார்கோயில், மணமேல்குடி, திருவரங்குளம் மற்றும் கறம்பக்குடி வட்டாரங்கள், பாதுகாக்கப்பட்ட வேளாண்மண்டலம் (Tamil Nadu Protected Agricultural Zone) *என அறிவிக்கப்பட்டது. இப்பகுதியில் துத்தநாக உருக்கி, இரும்புதாமிர உருக்கி, அலுமினியம், எலும்பு கழிவுகள், விலங்குகளின் கொம்பு மற்றும் பிற உடல்பாகங்களை பதப்படுத்துதல், தோல்பதனிடும் தொழிற்சாலை, எண்ணெய் மற்றும் இயற்கை எரிவாயு, நிலக்கரி படுகை மீத்தேன், ஷேல்கேஸ் போன்ற ஹைட்ரோகார்பன்கள் ஆய்வு மற்றும் எடுத்தல், கப்பல்களை உடைக்கும் தொழிற்சாலைகள் மற்றும் பெட்ரோகெமிக்கல் தொழிற்சாலைகள் போன்றவற்றை தடைசெய்கிறது.*

பாதுகாக்கப்பட்ட வேளாண் மண்டலத்தைத் தவிர மற்ற பகுதிகளில் ஹைட்ரோ கார்பன் ஆய்வு மற்றும் சுரங்கப்பணிகளினால் ஏற்படும் தாக்கம் குறித்து ஆய்வு மேற்கொள்ள நியமிக்கப்பட்ட உயர்மட்ட நிபுணர் தொழில்நுட்பக் குழுவை அரசு மீண்டும் திருத்தி 9-8-2021 நாளிட்ட தொழில் துறை (MMA.1) *அரசாணை எண் 195 இல் வெளியிட்டுள்ளது.*

[2023 ஏப்ரல் 13

4.1.3. இணையவழி மூலம் இசைவாணை வழங்குதல்

தமிழ்நாடு அரசின் மின்—ஆளுமை முன்முயற்சியின் ஒரு பகுதியாகவும், வாரியம் மற்றும் தொழிற்சாலைகளுக்கு இடையே ஆரோக்கியமான மற்றும் செயல்திறன் மிக்க தொடர்பினை வழங்கும் நோக்கில், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் இசைவாணை மேலாண்மை மற்றும் கண்காணிப்பு அமைப்பு (Online Consent Management and Monitoring System — OCMMS) என்ற இணைய செயலியை அறிமுகப்படுத்தியுள்ளது. 19-1-2015 முதல் இந்த அமைப்பு இசைவாணை வழங்குவதில் வெளிப்படைத்தன்மை மற்றும் விரைவுத்தன்மையைக் கொண்டு வந்துள்ளது. தொழிற்சாலைகள் நிறுவுவதற்கு இசைவாணை / இயக்க இசைவாணை / இசைவாணை புதுப்பித்தல், ஆகியவற்றுக்கான விண்ணப்பங்களை இணையவழியில் சமர்ப்பித்தல், ஆவணங்களைச் சமர்ப்பித்தல், இசைவாணை கட்டணங்களை இணையவழியில் செலுத்துதல், விண்ணப்பங்களின் நிலையை அறிதல் மற்றும் இணையவழிமூலம் விளக்கங்களை சமர்ப்பித்தல் ஆகியவற்றிற்கு இந்த செயலி உதவுகிறது. இச்செயலிமூலம் விண்ணப்பத்தை சமர்ப்பிப்பதில் தொழிற்சாலைகளுக்கு உதவ, தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், தலைமை அலுவலகம் மற்றும் அனைத்து மாவட்ட அலுவலகங்களிலும் 'உதவி மையத்தை' அமைத்துள்ளது.

சட்டங்கள் மற்றும் விதிகளை திறம்பட செயல்படுத்துதல் மற்றும் திறமையான கண்காணிப்பிற்காக, தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், தலைமை அலுவலகம், மண்டல அலுவலகம் மற்றும் மாவட்ட அலுவலக அளவில் பல்வேறு குழுக்களை முறையே இசைவாணை அனுமதி குழு, மண்டல அளவிலான இசைவாணை அனுமதி குழு மற்றும் மாவட்ட அளவிலான இசைவாணை அனுமதி குழு அமைத்துள்ளது. இந்தக் குழுக்கள் சீரான இடைவெளியில் கூட்டங்களை நடத்தி இசைவாணை வழங்குதல் போன்றவற்றை முடிவு செய்கின்றன.

நிறுவுவதற்கான இசைவாணை மற்றும் இயக்குவதற்கான இசைவாணை தவிர, தீங்கு விளைவிக்கும் மற்றும் பிற கழிவுகள், மருத்துவக்கழிவுகள், திடக்கழிவுகள், மின்—கழிவுகள், கட்டுமானம் மற்றும் இடிமானக் கழிவுகள், பிளாஸ்டிக் கழிவுகள் மற்றும் மின்கலன் கழிவுகளைக் கையாள்வதற்கான அங்கீகாரம் தொழிற்சாலைகளுக்கு இணையவழியில் வழங்கப்படுகின்றன. இது தொடர்பான தரவுகள் வாரியத்தின் இணையதளத்தில் பதிவேற்றப்படுகின்றன.

2023 ஏப்ரல் 13]


- சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டின் கீழ்வரும் திட்டங்கள் மற்றும் அதன்கீழ் வராத திட்டங்களுக்கு முறையே ஏழு ஆண்டுகள் மற்றும் ஐந்து ஆண்டுகள் செல்லுபடியாகும் விதத்தில் நிறுவுவதற்கான இசைவாணை வழங்கப்படுகிறது.
- சிவப்பு, ஆரஞ்சு மற்றும் பச்சை வகைத் தொழிற்சாலைகளுக்கு முறையே 5 ஆண்டுகள், 10 ஆண்டுகள் மற்றும் 14 ஆண்டுகள் வரை செல்லுபடியாகும் விதத்தில் தகுதியுள்ள தொழிற்சாலைகளுக்கு இயக்குவதற்கான இசைவாணை தொகுப்பாக வழங்கப்படுகிறது.
- 13—1—2020 முதல் நகர மற்றும் ஊரமைப்பு இயக்குனரகம்/ சென்னை பெருநகர வளர்ச்சி குழுமம்/உள்ளூர் திட்டக்குழுமம்மூலம் அமைக்கப்பட்டுள்ள தொழில் துறை பயன்பாட்டு மண்டலம் / தொழிற்பேட்டையில், உத்தேசிக்கப்பட்ட பச்சை வகை தொழிற்சாலைகளுக்கு நிறுவுவதற்கான இசைவாணையின்றி இயக்குவதற்கான இசைவாணையை வாரியம் நேரடியாக வழங்குகிறது.
- மாண்புமிகு சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத் துறை அமைச்சர் அவர்கள் சட்டமன்ற பேரவையில் அறிவித்தபடி, தொழிற்சாலைகளுக்கு எளிதாக தொழில் செய்ய ஏதுவாக இயக்குவதற்கான இசைவாணை/ இசைவாணை புதுப்பித்தல் போன்றவற்றை ஒவ்வொரு ஆண்டும் வழங்குவதற்கு பதிலாக 8—10—2021 நாளிட்ட சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத் (சு.சூ.1) துறையின் அரசாணை எண் 144—ன்படி ஒரு தொகுப்பாக வழங்கப்படுகிறது.

4.1.3. தானியங்கு இசைவாணை புதுப்பித்தல்

அனைத்து சிவப்பு, ஆரஞ்சு மற்றும் பச்சை வகைத் தொழில்களுக்கான 'தானியங்கு புதுப்பித்தல்' (Auto Renewal) என்ற முறையை வாரியம் அறிமுகப்படுத்தியுள்ளது. அதன்படி, தொழிற்சாலைகள் சுயசான்றிதழை சமர்ப்பித்தவுடன் ஆய்வு இல்லாமல் தொழிற்சாலைகளுக்கு இசைவாணை புதுப்பிக்கப்படுகிறது. இணையவழி இசைவாணை மேலாண்மை மற்றும் கண்காணிப்பு அமைப்புமூலம் விண்ணப்பத்தைப் பெற்ற ஏழு நாட்களுக்குள் இசைவாணை புதுப்பிக்கப்படுவதை இது உறுதி செய்கிறது. தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் 'தானியங்கு

[2023 ஏப்ரல் 13

புதுப்பித்தல்' மூலம் நிறுவுவதற்கான இசைவாணையிலும் கால அளவினை நீட்டித்து வழங்குகிறது.



1-4-2022 முதல் 31-3-2023 வரை இயக்குவது மற்றும் புதுப்பித்தலுக்காக வழங்கப்பட்ட இசைவாணைகள்

5. சுற்றுப்புற நீர், காற்று மற்றும் ஒலிதர கண்காணிப்பு

சுற்றுச்சூழல் மாசினை கண்காணிப்பதற்கும் மற்றும் சுற்றுச்சூழல் பாதுகாப்பு சம்பந்தமான கொள்கைகளை உருவாக்குவதற்கும், மாற்றுவதற்கும், மாசினை ஏற்படுத்தும் காரணங்களைக் கண்டறியவும் சுற்றுச்சூழல் காரணிகளின் தர கண்காணிப்பு மற்றும் புள்ளி விவரம் சேகரித்தல் மிகவும் அவசியமானதாகும். நீர் மற்றும் காற்று சட்டங்களின்கீழ், வரையறுக்கப்பட்ட செயல்பாட்டின் அடிப்படையில் வாரியம், மாநிலத்தின் நீர் ஆதாரங்கள், சுற்றுச்சூழல் காற்று மற்றும் ஒலி தரத்தினை பல்வேறு திட்டங்களின் வாயிலாக தொடர்ந்து கண்காணித்து வருகிறது.

5.1. காற்றுத் தர கண்காணிப்பு மற்றும் நீர் தர கண்காணிப்பு மையம்

சென்னையில் உள்ள தலைமை அலுவலகத்தில் இந்த மையம் இயங்குகிறது. இம்மையத்தின் முக்கிய நோக்கம், தொழிற்சாலைகளின் புகை போக்கியிலிருந்து வெளியேறும் மாசினையும் மற்றும் சுற்றுப்புறக் காற்றின் தரத்தினையும் 24X7 கால அளவில் தொடர்ந்து கண்காணிப்பதாகும். அதிக மாசினை

2023 ஏப்ரல் 13]

ஏற்படுத்தும் தொழிற்சாலைகளான சிமெண்ட் தொழிற்சாலை, எண்ணெய் சுத்திகரிப்பு நிலையங்கள், பெட்ரோகெமிக்கல் தொழிற்சாலைகள், அனல் மின் நிலையங்கள், உரத் தொழிற்சாலைகள், இரும்பு மற்றும் எஃகு தொழிற்சாலைகள், இவை அனைத்தும் இம்மையத்தோடு இணைக்கப்பட்டுள்ளது. இந்த தொழிற்சாலைகளில் மாசு, நிர்ணயிக்கப்பட்ட அளவை விட கூடுதலாக இருப்பின் அந்த தொழிற்சாலைகளுக்கு குறுஞ்செய்தி மற்றும் மின்னஞ்சல்மூலம் தகவல் அனுப்பப்படும். அந்த பகுதியில் உள்ள இணை தலைமை சுற்றுச்சூழல் பொறியாளர் (கண்காணிப்பு) மற்றும் மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர் ஆகியோருக்கும் உடனுக்குடன் தகவல் தெரிவிக்கப்பட்டு, தகுந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது. தற்போது 820 தொழிற்சாலைகளின் புகை போக்கியில் வெளியேறும் காற்றின் தரத்தையும், 154 தொழிற்சாலைப் பகுதிகளின் சுற்றுச்சூழல் காற்றின் தரத்தையும் கண்காணிக்க தொழிற்சாலைகள் இம்மையத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.

இந்த திட்டத்தின் வெற்றியை தொடர்ந்து தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், மேலும், நீர் தர கண்காணிப்பு மையம் ஒன்றை நிறுவியுள்ளது. நிலத்தடி நீரினை மாசுபடுத்தும் தோல் பதனிடும் தொழிற்சாலை, எரிசாராய தொழிற்சாலைகள், சர்க்கரை ஆலைகள், மருந்து தயாரிக்கும் தொழிற்சாலைகள், பூச்சி கொல்லி மருந்து நிறுவனங்கள், ஆடை உற்பத்தி நிறுவனங்கள், பொது கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்கள் ஆகியவை இம்மையத்துடன் இணைக்கப்பட்டுள்ளன. சுத்திகரிக்கப்பட்ட கழிவுநீரின் தரம் நிகழ் நேர அடிப்படையில் இம்மையத்தில் கண்காணிக்கப்படுகிறது. தற்போது 360 தொழிற்சாலைகள், இம்மையத்துடன் இணைக்கப்பட்டு, இதன் தரவுகள் வாரிய இணையதளத்தில் பதிவேற்றம் செய்யப்படுகிறது.

5.2. நீர் மாசு கண்காணிப்பு முறைகள்

தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் தொழிற்சாலைகள், பொது கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்கள் மற்றும் அன்றாடக் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்கள் ஆகியவற்றின் செயல்பாடுகளை கண்காணித்து வருகிறது. மேலும், அன்றாடக் கழிவுநீர் மற்றும் தொழிற் கழிவுநீர் நிலம், நீர்நிலைகள் மற்றும் கடலில் வெளியேற்றப்படும் முன் தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் நிர்ணயித்துள்ள தர அளவிற்கு சுத்திகரிக்கப்படுவதையும் கண்காணிக்கிறது.

5.2.1. பொது கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்கள் (Common Effluent Treatment Plant – CETP)

குறு, சிறு மற்றும் நடுத்தர தொழிற்சாலைகளின் பங்களிப்பையும், முக்கியத்துவத்தையும் கருத்தில் கொண்டும், வாரியம் நிர்ணயித்துள்ள தர அளவீடுகளை அடைவதற்கு அவை படும் சிரமத்தை அறிந்தும், தொழில் முன்னேற்றம், சுற்றுச்சூழலுக்கு உகந்த வகையில் அமைப்பதற்கான ஒரு உன்னதமான திட்டத்தை தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் செயல்படுத்தி வருகிறது. இத்திட்டம் பொதுவான வசதிகளை தொழிற்சாலைகளிடம் ஏற்படுத்தி கழிவுநீரை சுத்திகரிக்க உதவும். தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், மாநிலத்தில், சிறு முதலீட்டு தொழிற்சாலைகள் குழுவாக அமைந்துள்ள இடங்களில் பொதுகழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களை ஏற்படுத்துவதற்கு ஆதாரமாக செயல்படுகிறது. இது தவிர, வாரியமானது அதற்கு தேவைப்படும் உத்தேச தொழில்நுட்பத்தையும் வழங்குகிறது.

தமிழ்நாட்டில் ஏற்படுத்தப்பட்டுள்ள பொது கழிவுநீர் சுத்திகரிப்பு நிலைய திட்டங்களின் (CETPs) விவரங்கள் பின்வருமாறு:

வ. எண்	தொழிற்சாலை வகை	பொது கழிவுநீர் சுத்திகரிப்பு நிலைய திட்டங்களின் எண்ணிக்கை
1	தோல் பதனிடும் தொழிற்சாலைகள்	13
2	துணி சலவை மற்றும் சாயத் தொழிற்சாலைகள்	19
3	மின் முலாம் பூசும் தொழிற்சாலைகள்	2
4	உணவகங்கள் மற்றும் தங்கும் விடுதிகள்	1
5	மருந்து தயாரிக்கும் தொழிற்சாலை	1
	மொத்தம்	36

மேற்கண்ட, 19 சலவை மற்றும் சாயத் தொழிற்சாலைகளுக்கான பொது கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்கள் மட்டுமின்றி, ஈரோடு மற்றும் நாமக்கல் மாவட்டங்களில் உத்தேசிக்கப்பட்ட 10 பொது கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்கள், நிறுவுவதற்கான இசைவாணையினை தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் வழங்கியுள்ளது. ஒன்றிய அரசின் ஜவுளித் துறை அமைச்சகத்தின் ஒருங்கிணைந்த செய்முறை மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் மற்றும் ஒன்றிய அரசின் ஜல்சக்தி அமைச்சகத்தின் “நடந்தாய் வாழி காவேரி” திட்டத்தின்கீழ் நிதியுதவி கோரியுள்ளது.

1-1-2016 அன்று சுற்றுச்சூழல், வனம் மற்றும் காலநிலை மாற்ற அமைச்சகம் வெளியிட்ட அறிவிக்கையின்படி தோல் தொழிற்சாலைகளின் 10 பொது கழிவு சுத்திகரிப்பு நிலையங்களில் உள்நுழையும் கழிவுநீருக்கான தர அளவுகள் ஒன்றிய தோல் ஆராய்ச்சி நிறுவனம்மூலம் உருவாக்கப்பட்டு வாரியத்தால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

5.2.2. உள்ளாட்சி அமைப்புகளின் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களின் தற்போதைய நிலை

சென்னை பெருநகர குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியம் (Chennai Metropolitan Water Supply and Sewerage Board (CMWSSB)), நகர பஞ்சாயத்து ஆணையரகம் (Commissionerate of Town Panchayat (CTP)) மற்றும் நகராட்சி நிர்வாக இயக்குநரகம் (Directorate of Municipal Administration (DMA)) ஆகியவற்றிலிருந்து பெறப்படும் தரவுகளின் அடிப்படையில் தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் மாதாந்திர அறிக்கையை ஒன்றிய அரசுக்கு சமர்ப்பித்து வருகிறது. இதன் அடிப்படையில், தமிழ்நாட்டிலுள்ள 72.14 மில்லியன் மக்கள் தொகை மூலமாக மொத்தம் நாளொன்றுக்கு 3938.28 மில்லியன் லிட்டர் கழிவுநீர் உற்பத்தியாகிறது. நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளால் நிறுவப்படும் அனைத்து கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களும் (Sewage Treatment Plant) தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியத்தால் சிவப்பு வகையாக வகைப்படுத்தப்பட்டுள்ளன. மாநிலத்தில் தற்போது நாளொன்றுக்கு 2172.47 மில்லியன் லிட்டர் மொத்த சுத்திகரிப்பு திறன் கொண்ட 99 கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்கள் செயல்பாடு மற்றும் சோதனை ஓட்ட நிலையில் உள்ளன. இதில் 76 நிலையங்கள் வாரியத்திடம் இயக்குவதற்கான இசைவாணையை மற்றும் 26 நிலையங்கள் நிறுவுவதற்கான இசைவாணையை பெற்றுள்ளன. அதே நேரத்தில்

466.83 மில்லியன் லிட்டர் திறன் கொண்ட 16 கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்கள் கட்டுமான நிலையிலும் மேலும் 38 நிலையங்கள் முன்மொழிவு அல்லது திட்ட அறிக்கை நிலையிலும் உள்ளன.

தமிழ்நாட்டில் 32 மலக்கசடு சுத்திகரிப்பு நிலையங்கள் (Faecal Sludge Treatment Plants) செயல்பாட்டிலும் 19 மலக்கசடு சுத்திகரிப்பு நிலையங்கள் கட்டுமான நிலையிலும் உள்ளன. இதில் 20 நிலையங்கள் இயக்குவதற்கான இசைவாணையையும், 12 நிலையங்கள் நிறுவுவதற்கான இசைவாணையையும் வாரியத்திடம் பெற்றுள்ளன.

5.2.3. சுத்திகரிக்கப்படாத கழிவுநீர், நீர்நிலைகளில் வெளியேற்றப்படுவதைத் தடுக்க தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் மேற்கொண்ட நடவடிக்கைகள்

சென்னை பெருநகர குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியம் (CMWSSB), நகர பஞ்சாயத்து ஆணையரகம் (CTP) மற்றும் நகராட்சி நிர்வாக இயக்குநரகம் (DMA) ஆகியவற்றிற்கு பாதாள சாக்கடை இல்லாத பகுதிகளுக்கு பாதாள சாக்கடை அமைப்பை நிறைவு செய்யவும், சுத்திகரிக்கப்படாத கழிவுநீர் ஆறுகளில் அல்லது நீர்நிலைகளில் வெளியேற்றப்படாமல் இருப்பதை உறுதி செய்யவும், வாரியத்திடம் தக்க இசைவாணையை பெற்று சுத்திகரிப்பு நிலையங்களை இயக்குமாறும் உத்தரவுகள் வழங்கப்பட்டுள்ளன. ஒன்றிய மாசு கட்டுப்பாடு வாரியத்தின் அறிவுறுத்தல்களின்படி தற்போது இயக்கத்தில் இருக்கும் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களை தொடர்ந்து கண்காணிக்க இணையவழி தொடர் கழிவுநீர் கண்காணிப்பு அமைப்பு (Online Continuous Effluent Monitoring System) மற்றும் கைப்பேசி செயலி பயன்பாட்டை நிறுவுவதற்கான கூடுதல் வழிமுறைகளும் வழங்கப்பட்டுள்ளன. வாரியத்தின் நிபந்தனைகளை நிறைவேற்றத் தவறும் உள்ளாட்சி அமைப்புகளுக்கு வாரியத்தால் சுற்றுச்சூழல் இழப்பீடு விதிக்கப்படுகிறது.

மேலும், நீர்நிலைகளில் முறைகேடாக கழிவுநீரை கொட்டும் டேங்கர் லாரிகளின் பதிவு எண்களை ரத்து செய்ய போக்குவரத்து துறைக்கு வாரியம் உத்தரவிட்டு தொடர்ந்து நடவடிக்கை மேற்கொண்டு வருகிறது. கடந்த பிப்ரவரி மாதத்தில் இவ்வாறு முறைகேடாக செயல்பட்ட 21 லாரிகளின் பதிவு எண்களை ரத்து செய்ய வாரியம் பரிந்துரை செய்துள்ளது. மேலும்,

2023 ஏப்ரல் 13]

சுத்திகரிக்கப்படாத கழிவுநீரை நீர்நிலைகளில் வெளியேற்றுவதைக் குறைக்கும் வகையில், கழிவுநீர் டேங்கர் லாரிகளில் டிஜிட்டல் லாக் (Digital Lock) அமைப்பை நிறுவவும் சென்னை பெருநகர குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியம் (CMWSSB), நகர பஞ்சாயத்து ஆணையரகம் (CTP) மற்றும் நகராட்சி நிர்வாக இயக்குநரகம் (DMA) ஆகியவற்றிற்கு வாரியத்தால் உத்தரவுகள் வழங்கப்பட்டுள்ளன.

5.3. நீர் நிலைகள் கண்காணிப்பு

5.3.1. தேசிய நீர் தர கண்காணிப்புத் திட்டம்

தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், தேசிய நீர் தர கண்காணிப்புத் திட்டத்தின்கீழ் நான்கு முக்கிய நதிகளான காவிரி, தாமிரபரணி, பாலாறு, வைகை மற்றும் எட்டு பெரிய ஏரிகளான உதகமண்டலம், கொடைக்கானல், ஏற்காடு, வீராணம், போரூர், பூண்டி, பழவேற்காடு மற்றும் செங்குன்றம் ஆகியவற்றின் நீரின் தரத்தினை ஒன்றிய மாசு கட்டுப்பாடு வாரிய நிதி உதவியுடன் கண்காணிப்பு செய்து வருகின்றது. 2021-2022 ஆம் ஆண்டில் நீர் தர கண்காணிப்பு நிலையங்கள் 58 நிலையங்களில் இருந்து 72 நிலையங்களாக அதிகரிக்கப்பட்டுள்ளன. மாதந்தோறும் நீர் மாதிரிகள் எடுக்கப்பட்டு, ஆய்வு செய்யப்படுகின்றன.

மாநிலத்தில், நிலத்தடிநீர் மாசு அடைய வாய்ப்புள்ள முக்கியமான இடங்களில் நிலத்தடி நீரின் தன்மையை கண்காணிக்கும் பொருட்டு, வாரியம் 2020 முதல் ஈரோடு, நாமக்கல், சேலம், கரூர், திருநெல்வேலி, தூத்துக்குடி, திருச்சி மற்றும் திருவள்ளூர் ஆகிய மாவட்டங்களில் மொத்தம் 18 இடங்களில் மாதந்தோறும்/ஆறுமாதங்களுக்கு ஒரு முறையும் நீர் மாதிரிகள் எடுத்து பகுப்பாய்வு செய்யப்படுகின்றன. மேலும், ஒன்றிய மாசு கட்டுப்பாடு வாரியத்தின் மின்னணு நீர் தர தரவு அமைப்பிலும் பதிவேற்றம் செய்யப்படுகிறது.

5.3.2. தேசிய நதிகள் பாதுகாப்புத் திட்டம்

தேசிய நதிநீர் பாதுகாப்புத் திட்டத்தின் கீழ், மாநிலத்தில் உள்ள நதிநீர் மாசுபடுவதை கண்காணிக்க ஒன்றிய மாசு கட்டுப்பாடு வாரியம் அடையாளம் கண்டுள்ள, 51 நிலையங்களில் நதி நீரின் தரம் கண்காணிக்கப்பட்டு வருகிறது. இந்நிலையங்களில் காவிரி மற்றும் அதன் துணை ஆறுகள், வைகை, வெண்ணாறு, தாமிரபரணி, பாலாறு, அடையாறு, கூவம், பக்கிங்ஹாம் கால்வாய்

மற்றும் ஓட்டேரி நல்லா ஆகியவற்றில் 35 நிலையங்களும், சென்னை, பவானி, ஈரோடு, பள்ளிப்பாளையம், குமாரபாளையம், மயிலாடுதுறை, மதுரை, திருச்சி, தஞ்சாவூர், கும்பகோணம் மற்றும் திருநெல்வேலி ஆகிய நகரங்களின் அன்றாடக் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களின் வெளியேற்றத்தில் 16 நிலையங்களும் உள்ளன. இந்நிலையங்களில் மாதந்தோறும் நீர் மாதிரிகள் எடுக்கப்பட்டு பகுப்பாய்வில் அறியப்படும் விபரங்கள் வாரிய இணையதளத்தில் பதிவேற்றம் செய்யப்படுகிறது.

5.3.3. கடலோர நீர் தர கண்காணிப்பு

தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் மாநிலத்தின் 14 கடலோர மாவட்டங்களில் 34 இடங்களில் கடற்கரையோரங்களின் கடல்நீரின் தரத்தை மதிப்பிடுவதற்காக மாதாந்திர மாதிரிகள் சேகரித்து கண்காணித்து வருகிறது. கடல் நீரின் தரமானது SW (Sea Water)—I—லிருந்து SW—V வரை வகைப்படுத்தப்பட்டுள்ளது. SW—I – உப்பளங்கள், ஷெல் மீன்பிடித்தல், கடல்வளர்ப்பு மற்றும் சுற்றுச்சூழல் உணர்திறன் மண்டலம் ; SW—II – குளித்தல், கடல் நீர் விளையாட்டு, மீன்பிடித் தொழில், SW—III— தொழிற்சாலைகளின் குளிரூட்டல், பொழுதுபோக்கு இடங்கள், SW—IV — துறைமுகம் மற்றும் SW—V — கடற்பயணம் மற்றும் கட்டுப்படுத்தப்பட்ட கழிவு அகற்றல் போன்று வகைப்படுத்தப்பட்டுள்ளது.

5.3.4. மாசடைந்த நதிப் பகுதிகள்

ஒன்றிய மாசு கட்டுப்பாடு வாரியம், தேசிய நீர் தர கண்காணிப்பு திட்டத்தின்கீழ் சேகரிக்கப்பட்ட புள்ளி விவரங்கள் அடிப்படையில் நாடு முழுவதும் 351 நதிப் பகுதிகளை மாசடைந்த பகுதிகள் என அறிவிப்பு செய்துள்ளது. அவற்றில் ஆறு நதிப் பகுதிகள் தமிழ்நாட்டில் உள்ளன. அவை காவிரி, பவானி, சரபங்கா, திருமணிமுத்தாறு, வசிஷ்டா மற்றும் தாமிரபரணி ஆறுகள் ஆகும்.

நதிகள் மாசு அடைவதற்கு, உள்ளாட்சி அமைப்புகள் சுத்திகரிக்கப்படாத கழிவுநீர் மற்றும் திடக் கழிவுகளை நீர்நிலைகளில் வெளியேற்றுவதே முக்கிய காரணமாக கண்டறியப்பட்டுள்ளது. மேற்படி நதிப் பகுதிகளை மீட்க ஒன்றிய மாசு கட்டுப்பாடு வாரியம் வழங்கிய வழிகாட்டுதல் நெறிமுறைகளின்படி திட்ட அறிக்கை தயார் செய்யப்பட்டு ஒன்றிய மாசு கட்டுப்பாடு வாரியத்திடம் ஒப்புதல் பெறப்பட்டுள்ளது. இத்திட்ட அறிக்கையின் முக்கிய அம்சமாக நகர பகுதிகளில் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்கள் அமைத்தல்,

2023 ஏப்ரல் 13]

திடக் கழிவு மேலாண்மை வசதி ஏற்படுத்துதல், ஆக்கிரமிப்புகளை அகற்றுதல், கடலோர மாசு மற்றும் தொழிற்சாலைகளினால் மாசடைவதைத் தவிர்த்தல், நீர்நிலைகளை மேம்படுத்த அணைகள் கட்டுதல், சுற்றுச்சூழல் பூங்காக்கள் அமைத்தல் போன்ற திட்டங்கள் இடம்பெற்றுள்ளன. இத்திட்டங்கள் சம்பந்தப்பட்ட துறைகளான நகராட்சி நிர்வாக இயக்குநரகம், நகர பஞ்சாயத்து ஆணையரகம், பொதுப்பணித் துறை, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை மற்றும் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி துறைமூலம் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

மேற்கண்ட திட்ட அறிக்கைகளின் பணிகள் அனைத்தும் அரசு கூடுதல் தலைமைச் செயலர், சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத் துறை அவர்களின் தலைமையில் நிர்வகிக்கப்படும் ஆறுகள் தூய்மைப்படுத்தும் குழுவால் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. மேற்கண்ட திட்டப்பணிகள் மாண்புமிகு தேசிய பசுமைத் தீர்ப்பாய ஆணையின்படி தமிழ்நாடு அரசு தலைமைச் செயலர், மற்றும் ஒன்றிய ஜல்சக்தி அமைச்சரவைமூலம் ஆய்வு செய்யப்பட வேண்டும். இப்பணியில் சம்பந்தப்பட்டுள்ள அனைத்து உள்ளாட்சிகளும் பணிகளை துரிதப்படுத்தி முடிக்க அறிவுரை கூறப்பட்டுள்ளது. தமிழ்நாடு அரசின் தொடர் முயற்சியால் மேற்கண்ட ஆறு மாசடைந்த நதிகளில் சரபங்கா, காவேரி மற்றும் பவானி நதிகளின் தூய்மைப்படுத்தும் முன்னுரிமை அளவீடுகள் ஒன்றிய மாசு கட்டுப்பாடு வாரியத்தால் குறைக்கப்பட்டுள்ளன.

5.4. சுற்றுப்புற காற்று தர கண்காணிப்பு

5.4.1. தேசிய காற்று தர கண்காணிப்பு திட்டம்

ஒன்றிய மாசு கட்டுப்பாடு வாரிய நிதியுதவியின் கீழ், தேசிய காற்று தர கண்காணிப்பு திட்டத்தில் தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், மாநிலத்தில் மொத்தம் 28 இடங்களில் அதாவது சென்னை (8), கோயம்புத்தூர் (3), மதுரை (3), சேலம் (1), திருச்சி (5), தூத்துக்குடி (3), மேட்டூர் (2) மற்றும் கடலூர் (3) ஆகிய நகரங்களில் ஒன்றிய மாசு கட்டுப்பாடு வாரிய வழிகாட்டுதலின்படி, வாரத்திற்கு இரண்டு மாதிரிகள் என்ற அடிப்படையில் ஆண்டிற்கு 104 மாதிரிகள் சேகரிக்கப்பட்டு நுண்துகள்கள் (PM_{10} மற்றும் $PM_{2.5}$), சல்பர் டை ஆக்ஸைடு (SO_2) மற்றும் நைட்ரஜன் டை ஆக்ஸைடு (NO_2) ஆகிய காரணிகள் கண்காணிக்கப்படுகிறது. இக்காரணிகளைக் கொண்டு காற்று தர குறியீட்டு எண் (Air Quality Index) கணக்கிடப்பட்டு,

அவை வாரிய இணையதளத்தில் பொதுமக்களின் பார்வைக்கு வெளியிடப்படுகிறது.

மேலும், இத்திட்டத்தினை அனைத்து மாவட்டங்களில் உள்ள நகர்ப்புற பகுதிகளுக்கு விரிவுப்படுத்தும் வகையில், வாரியம் மேலும் கூடுதலாக 24 நிலையங்களை எட்டு மாவட்டங்களில் தலா மூன்று நிலையங்கள் என தருமபுரி, கன்னியாகுமரி, பெரம்பலூர், சிவகங்கை, திருவாரூர், தேனி, விழுப்புரம் மற்றும் திருவண்ணாமலை ஆகிய நகரங்களில் அமைத்து 2021 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் முதல் செயல்படுத்தி வருகிறது. தற்சமயம் தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் மாநிலத்தில் மொத்தம் 52 நிலையங்களை தேசிய காற்று தர கண்காணிப்பு திட்டத்தின்மூலம் நிறுவியுள்ளது.

5.4.2. தொடர் காற்று தர கண்காணிப்பு நிலையங்கள்:

சுற்றுப்புற காற்றின் தரத்தினை, தொடர்ந்து கண்காணிக்கும் வண்ணம், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் மாநிலத்தில் மொத்தம் 34 இடங்களில் தொடர் சுற்றுப்புற காற்று தர கண்காணிப்பு நிலையங்களை (Continuous Ambient Air Quality Monitoring System (CAAQMS)) அமைத்துள்ளது.

மேலும், 25 இடங்களில் தொடர் சுற்றுப்புற காற்று தர கண்காணிப்பு நிலையங்களை அமைக்க திட்டமிடப்பட்டுள்ளன. விவரங்கள் பின்வருமாறு :—

மாவட்டம்	தற்போது இருக்கும் நிலையங்களின் எண்ணிக்கை	முன்மொழியப்பட்ட நிலையங்களின் எண்ணிக்கை
அரியலூர்	1	—
செங்கல்பட்டு	1	3 (பல்லாவரம், தாம்பரம், செங்கல்பட்டு)
சென்னை	4	—
கோயம்புத்தூர்	2	—

2023 ஏப்ரல் 13]

மாவட்டம்	தற்போது இருக்கும் நிலையங்களின் எண்ணிக்கை	முன்மொழியப்பட்ட நிலையங்களின் எண்ணிக்கை
கடலூர்	2	1
திண்டுக்கல்	1	—
தருமபுரி	—	1
ஈரோடு	1	1
கள்ளக்குறிச்சி	—	1
காஞ்சிபுரம்	1	1
கன்னியாகுமரி	—	1
கரூர்	1	—
கிருஷ்ணகிரி	1	1
மயிலாடுதுறை	—	1
மதுரை	1	—
நாகப்பட்டினம்	1	—
நாமக்கல்	1	—
பெரம்பலூர்	—	1
புதுக்கோட்டை	1	—
ராமநாதபுரம்	1	—
ராணிப்பேட்டை	1	—
சேலம்	1	—
சிவகங்கை	—	2 (சிவகங்கை, காரைக்குடி)

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS
வாய்மையே வெல்லும்

மாவட்டம்	தற்போது இருக்கும் நிலையங்களின் எண்ணிக்கை	முன்மொழியப்பட்ட நிலையங்களின் எண்ணிக்கை
தென்காசி	—	1
தேனி	—	1
தஞ்சாவூர்	1	1
திருவள்ளூர்	3	2 (திருவள்ளூர், ஆவடி)
தூத்துக்குடி	1	—
திருச்சிராப்பள்ளி	2	—
திருநெல்வேலி	1	—
திருப்பூர்	1	—
திருவாரூர்	—	1
திருவண்ணாமலை	—	1
திருப்பத்தூர்	—	2 (திருப்பத்தூர், ஆம்பூர்)
நீலகிரி	1	—
வேலூர்	1	—
விழுப்புரம்	—	1
விருதுநகர்	1	1
மொத்தம்	34	25

இந்நிலையங்களின்மூலம் காற்றில் கலந்துள்ள 10 மைக்ரான் அளவிற்குக்கீழ் உள்ள நுண்துகள்கள், 2.5 மைக்ரான் அளவிற்குக்கீழ் உள்ள நுண் துகள்கள், சல்பர்—டை—ஆக்ஸைடு, நைட்ரஜன்—டை—ஆக்ஸைடு, அம்மோனியா, ஓசோன், கார்பன்

2023 ஏப்ரல் 13]

மோனாக்சைடு, பென்சீன், டொலுவின் மற்றும் சைலீன் ஆகிய வாயு காரணிகள் தொடர்ந்து கண்காணிக்கப்படுகிறது.

*நிகழ்கால சுற்றுப்புற காற்றுதர விபரங்கள் மற்றும் காற்று தர குறியீடு (*AQI*) தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரிய இணையதளத்தில் வெளியிடப்படுகின்றன. மேலும் ஒன்றிய மாசு கட்டுப்பாடு வாரிய மின்னணு காற்று தர தரவு அமைப்பிலும் பதிவேற்றம் செய்யப்படுகிறது.*

5.4.3. காற்று தர குறியீட்டினை எட்டாத நகரங்கள்

*தேசிய காற்று தர கண்காணிப்பு திட்டத்தின்கீழ் சேகரிக்கப்பட்ட புள்ளி விவரங்களின் அடிப்படையில், காற்றில் நுண் துகள்களின் (*PM*10) அளவினைக் கொண்டு நாடு முழுவதும் மொத்தம் 131 நகரங்கள், காற்று தர வருடாந்தர குறியீட்டினை (60*kg/m3*) எட்டாத நகரங்கள் என ஒன்றிய மாசு கட்டுப்பாடு வாரியம் வகைப்படுத்தியுள்ளது. நுண்துகள்கள், தர அளவுகளை விட அதிகமாக இருப்பதற்கு வாகன போக்குவரத்து, சாலைகளில் புழுதி மேலெழும்புதல், திடக் கழிவுகளை எரித்தல், கட்டுமான பணிகள் மேற்கொள்ளுதல், குடியிருப்பு மற்றும் வணிக வளாகங்களில் பயன்படுத்தப்படும் எரி பொருட்கள் மற்றும் தொழிற்சாலைகளில் இருந்து வெளிவரும் காற்று மாசு ஆகியவை காரணங்கள் ஆகும். தமிழ்நாட்டில் தூத்துக்குடி, திருச்சி, மதுரை மற்றும் சென்னை நகரங்கள் காற்று தர குறியீட்டினை எட்டாத நகரங்கள் வரிசையில் அடையாளம் காணப்பட்டுள்ளன. மேற்படி நகரங்களில் காற்று தரத்தினை மேம்படுத்தும் வகையில் மேற்கண்ட நகரங்களுக்கு திட்ட அறிக்கை தயார் செய்யப்பட்டு ஒன்றிய மாசு கட்டுப்பாடு வாரியத்தின் ஒப்புதல் பெறப்பட்டு, சம்பந்தப்பட்ட துறைகள்மூலம் அமல்படுத்தப்பட்டு வருகிறது.*

*ஒன்றிய அரசு 2019 ஆம் ஆண்டு முதல் 2023 ஆம் ஆண்டு வரை தேசிய தூய்மையான காற்று திட்டத்தின் (*National Clean Air Program*) கீழ், ரூ 482.89 கோடியை உள்ளாட்சி அமைப்புகளுக்கு கீழ்க்கண்டவாறு நிதியளித்துள்ளது.*

[2023 ஏப்ரல் 13

வ. எண்	காற்று தர குறியீட்டினை எட்டாத நகரங்கள்	வழங்கப்பட்ட தொகை (ரூ. கோடியில்)				
		2019-2020	2020-2021	2021-2022	2022-2023	மொத்தம்
1	தூத்துக்குடி	0.06	3	—	4.13	7.19
2	திருச்சி	—	21	18.35	11	39.35
3	மதுரை	—	31	22.35	16	69.35
4	சென்னை	—	181	91	95	367.00
தமிழ்நாடு		மொத்தம்				482.89

இந்நிதியானது, மூலப் பகிர்வு ஆய்வுகள் (Source Apportionment Studies), அதிகாரிகளின் பயிற்சி மற்றும் மேம்பாடு, காடு வளர்ப்பு— மியாவாக்கி காடுகள், சாலைகளின் ஓரத்தில் நடைபாதை அமைத்தல், மின்கலன்மூலம் இயக்கப்படும் வாகனங்களை ஊக்குவித்தல், இயந்திர தெரு துடைப்பான்கள் (Mechanical Street Sweepers), தூசியை குறைப்பதற்கான தண்ணீர் தெளிப்பான்கள் வாங்குதல் போன்றவற்றுக்கு பயன்படுத்தப்படுகிறது.

5.5. சுற்றுப்புற ஒலி அளவு கண்காணிப்பு திட்டம்

ஒன்றிய மாசு கட்டுப்பாடு வாரியம், சென்னையில் எழும்பூர், தியாகராய நகர், பெரம்பூர், கிண்டி, திருவல்லிக்கேணி, பள்ளிக்கரணை, வேளச்சேரி, வண்ணாரப்பேட்டை, அண்ணா நகர் மற்றும் சவுகார்பேட்டை ஆகிய 10 இடங்களில், சுற்றுப்புற ஒலி அளவினை தொடர்ந்து கண்காணிக்கும் கருவிகளை பொருத்தி, ஒலி அளவினை பதிவு செய்து வருகின்றது. இத்தகவல்கள் ஒன்றிய மாசு கட்டுப்பாடு வாரிய இணையதளத்தில் பதிவேற்றம் செய்யப்படுகின்றன.

6. கழிவு மேலாண்மை கண்காணிப்பு

6.1. மருத்துவக் கழிவு மேலாண்மை

மனிதர்கள் மற்றும் விலங்குகளின் நோய் அறிவதற்கான பரிசோதனையின் போது வெளிப்படும் கழிவுகள், சிகிச்சை மற்றும் தடுப்பூசி அதன் தொடர்பான ஆராய்ச்சி நடவடிக்கையின்

2023 ஏப்ரல் 13]


போது வெளியேறும் கழிவுகள், உயிரியல் பரிசோதனையில் வெளியேற்றப்படும் கழிவுகள் ஆகியவை மருத்துவக் கழிவுகள் ஆகும். மருத்துவக்கழிவு மேலாண்மை விதிகள், 2016—ன்படி மருத்துவக் கழிவுகளை பாதுகாப்பான முறையில் சேகரித்து சுத்திகரிப்பு செய்து அகற்றுவது, மருத்துவக் கழிவுகளை உற்பத்தி செய்வோர் மற்றும் அனுமதிக்கப்பட்ட பொது மருத்துவக்கழிவு சுத்திகரிப்பு நிலையத்தினை இயக்குவோர் ஆகியோரின் பொறுப்பாகும். மருத்துவமனைகள் மற்றும் பொது மருத்துவக்கழிவு சுத்திகரிப்பு நிலையங்களுக்கு இணையவழிமூலம் வாரியம் அங்கீகாரம் வழங்குகிறது, மேலும், வாரியம் இவ்விதிகளின்படி பல்வேறு சாராம்சங்கள் கடைப்பிடிக்கப்படுவதை கண்காணிக்கிறது. இவ்விதிகள் செயல்படுத்தப்படுவதை கண்காணிக்க, அரசு, மாநில அளவில் ஆலோசனைக் குழு ஒன்றையும் அமைத்துள்ளது.

*தமிழ்நாட்டில், இது வரை 28,435 படுக்கை மற்றும் படுக்கையில்லா தனியார் மற்றும் அரசு மருத்துவமனைகளுக்கும், கால்நடை நிறுவனங்கள், நோய்குறி ஆய்வகங்கள் (*Pathological Labs*), இரத்த சேமிப்பு வங்கிகள் மற்றும் ஆராய்ச்சி நிறுவனங்களுக்கு வாரியம், மருத்துவக்கழிவு மேலாண்மை விதிகள், 2016—ன்படி அங்கீகாரம் வழங்கியுள்ளது. அங்கீகாரமானது இசைவாணை முடிவடையும் காலம் வரை வழங்கப்படுகிறது.*

6.1.1. பொது மருத்துவக் கழிவு சுத்திகரிப்பு வசதிகள்

பொது மருத்துவக் கழிவு சுத்திகரிப்பு அமைப்புகள் மருத்துவக் கழிவுகளை சேகரித்தல், கொண்டு செல்லுதல், சுத்திகரிப்பு மற்றும் அறிவியல் பூர்வமாக அகற்றுவதற்காக செயல்படுகின்றன. 2021 ஆம் ஆண்டில் மாநிலத்தில் மருத்துவக் கழிவுகளின் தினசரி சராசரி உற்பத்தி 45.2 டன்களாக இருந்தது. தமிழ்நாட்டில் 10 பொது மருத்துவ கழிவு சுத்திகரிப்பு அமைப்புகள் செயல்பாட்டில் உள்ளன. 10 பொது மருத்துவ கழிவு சுத்திகரிப்பு அமைப்புகளின் நாள் ஒன்றிற்கான மொத்த நிறுவப்பட்ட திறன் 90.35 டன்களாகும் (நாள் ஒன்றிற்கான திறன் எரிப்பான் 56.5 டன், கிருமிகள் அழிப்பான் 33.85 டன்). தமிழ்நாட்டில் அமைந்துள்ள பொது மருத்துவ கழிவு சுத்திகரிப்பு அமைப்புகளின் விவரங்கள் பின்வருமாறு:

[2023 ஏப்ரல் 13



6.1.2. கோவிட்-19 மருத்துவக் கழிவு மேலாண்மை

மருத்துவமனைகள், தனிமைப்படுத்தப்பட்ட முகாம்கள், வீடுகள் / வீட்டு பராமரிப்பு வசதிகள், ஆய்வகங்கள் மற்றும் நகர்ப்புற உள்ளாட்சிகளில் உருவாகும் கோவிட்—19 பாதிக்கப்பட்ட நோயாளிகளின் மருத்துவக் கழிவுகள் ஒன்றிய மாசு கட்டுப்பாடு வாரியத்தின் நெறிமுறைகளின்படி, இயக்கத்திலுள்ள 10 பொது மருத்துவக் கழிவு சுத்திகரிப்பு நிறுவனங்களால் முறையாக சேகரிக்கப்பட்டு, சுத்திகரிக்கப்பட்டு அகற்றப்படுகின்றன.


ஒன்றிய மாசு கட்டுப்பாடு வாரியத்தின் வழிகாட்டுதல்களின்படி, தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் அனைத்து பொது மருத்துவக் கழிவு சுத்திகரிப்பு நிலையங்களையும், கூடுதலாக உருவாகும் கோவிட்–19 மருத்துவ கழிவுகளை கையாள்வதற்காக அதிக நேரம் செயல்பட அறிவுறுத்தியுள்ளது.

மேலும், ஒன்றிய மாசு கட்டுப்பாடு வாரியத்தின் வழிகாட்டுதல்களின்படி, கோவிட்–19 மருத்துவ கழிவுகளை எரிப்பதற்கு கும்மிடிப்பூண்டியில் அமைந்துள்ள தீங்கு விளைவிக்கும் கழிவு மேலாண்மை அமைப்பிலுள்ள எரிப்பானை பயன்படுத்துவதற்கு தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் அனுமதி வழங்கியுள்ளது.

2023 ஏப்ரல் 13]

தினந்தோறும் சேகரித்து அகற்றப்படும் கோவிட்—19 மருத்துவக் கழிவுகளின் விவரங்கள் வாரியத்தின் இணையதளத்தில் பதிவேற்றம் செய்யப்படுகிறது. ஜனவரி 2022 முதல் பிப்ரவரி 2023 வரை சராசரியாக தினசரி கோவிட்—19 மருத்துவ கழிவுகளின் அளவு 1.65 டன்களாகும்.

மருத்துவக்கழிவு மேலாண்மை விதிகள், 2016-ன் பகுதி-I



6.2. மின்கலக் கழிவு மேலாண்மை

*சுற்றுச்சூழல், வனம் மற்றும் காலநிலை மாற்ற அமைச்சகமானது (*Ministry of Environment and Forest, Climate Change *(*MoEF & CC*)) சுற்றுச்சூழல் (பாதுகாப்பு) சட்டம், 1986-ன்கீழ் மின்கலன் (மேலாண்மை & கையாளுதல்) விதிகள், 2001-ஐ தளர்த்தி மின்கலன் கழிவு (மேலாண்மை) விதிகள், 2022-ஐ 22-8-2022 அன்று அறிவிப்பு செய்தது.*

[*2023 ஏப்ரல் 13*

இந்த விதிகள்

i. *மின்கலன் உற்பத்தியாளர், முகவர், நுகர்வோர், சேகரிப்பு, பிரித்தல், போக்குவரத்து, மறுசீரமைப்பு மற்றும் மறுசுழற்சி செய்தல் ஆகியவற்றில் ஈடுபட்டுள்ள பங்குதாரர்களுக்கும்,*

ii. *வேதியியல், வடிவம், அளவு, எடை, பொருள் கலவை மற்றும் பயன்பாடு ஆகியவற்றைப் பொருட்படுத்தாமல் அனைத்து வகையான மின்கலன்களுக்கும் பொருந்தும்.*



மின்கலக் கழிவுகள்

TRUTH ALONE TRIUMPHS

*விரிவாக்கப்பட்ட உற்பத்தியாளர் பொறுப்பு (*Extended Producer Responsibility *(*EPR*)) என்ற கருத்தின் அடிப்படையில் இவ்விதியானது செயல்படுகிறது. மின்கலன் உற்பத்தியாளர்கள், கழிவு மின்கலன்களை சேகரித்து மறுசுழற்சி செய்தல்/புதுப்பித்தல் மற்றும் கழிவுகளில் இருந்து மீட்டெடுக்கப்பட்ட பொருட்களை புதிய மின்கலன்களாக பயன்படுத்துதல் ஆகியவற்றிற்கு பொறுப்பானவர்கள்.*

இந்த விதிகளில் குறிப்பிடப்பட்டுள்ள விரிவாக்கப்பட்ட உற்பத்தியாளர் பொறுப்பு இலக்குகள், பொறுப்புகள் மற்றும் கடமைகளை நிறைவேற்றாததற்காக சுற்றுச்சூழல் இழப்பீடு விதிக்கப்படும்.

2023 ஏப்ரல் 13]

6.3. திடக் கழிவு மேலாண்மை

வீடுகள், வணிக நிறுவனங்கள் மற்றும் தொழிற்சாலைகளின் நடவடிக்கைகளால் உருவாகின்ற மக்கும் மற்றும் மக்காத திடக் கழிவுகள் நகர திடக் கழிவுகளாகும். திடக் கழிவு மேலாண்மை விதிகள், திடக் கழிவுகளை சேகரித்தல், சுத்திகரித்தல் மற்றும் வெளியேற்றுதல் ஆகியவற்றில் உள்ளாட்சி அமைப்புகளுக்கு உள்ள பொறுப்பினை வரையறுத்துள்ளது. தமிழ்நாட்டில் மாநகராட்சிகள், நகராட்சிகள் மற்றும் பேரூராட்சிகளில் நாளொன்றிற்கு 5 டன்களுக்கு மேல் திடக் கழிவுகளை உற்பத்தி செய்யும் மொத்தம் 219 உள்ளாட்சி அமைப்புகளுக்கு திடக் கழிவு மேலாண்மை விதிகளின்படி அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது.

நகராட்சி கழிவுகள் நீர்நிலைகளில் கொட்டப்படுவதை தடுக்கும் பொருட்டு, தலைமைச் செயலாளர், கூடுதல் தலைமைச் செயலாளர், சுற்றுச்சூழல், வனம் மற்றும் காலநிலை மாற்றத் துறை, கூடுதல் தலைமைச் செயலாளர், நகராட்சி நிர்வாகம் மற்றும் நீர் வழங்கல் துறை, முதன்மைச் செயலாளர், ஊரக வளர்ச்சி மற்றும் பஞ்சாயத்து ராஜ் துறை, ஆகியோர் திடக்கழிவு மேலாண்மை விதிகள், 2016 செயல்படுத்தப்படுவதை தனிப்பட்ட விதத்தில் மதிப்பாய்வு செய்து, அதனை மாநிலத்தில் நடைமுறைப்படுத்துவதற்கான செயல் திட்டத்தை சமர்ப்பிக்குமாறு, மாண்புமிகு தேசிய பசுமை தீர்ப்பாயம், வழக்கு எண் 95/2021 மற்றும் 30/2020 இல் தனது 31-3-2022 தேதியிட்ட ஆணையில் உத்தரவிட்டுள்ளது.

திடக் கழிவுகள் நீர்நிலைகளில் கொட்டப்படுவதை தடுக்கவும், இதன் கண்காணிப்பை தீவிரப்படுத்தவும் சென்னை, வேலூர் மற்றும் சேலம் ஆகிய மாவட்டங்களில் பறக்கும் படைகள் அமைக்கப்பட்டுள்ளன.

6.3.1. குப்பை கிடங்குகளில் உயிரி நிலப்பரப்பு மீட்டெடுத்தல் (Bio Mining)

திடக் கழிவுகள் மேலாண்மை விதிகளின்படி, உள்ளாட்சி அமைப்புகள் பழைய குப்பை கிடங்குகளில் உயிரி நிலப்பரப்பு மீட்டெடுத்தல் நடவடிக்கைகளை மேற்கொண்டு நிலங்களை மீட்டெடுக்க வேண்டும் என்று விதிகள் கூறுகின்றன. இதன்படி, உள்ளாட்சி அமைப்புகளால் தமிழ்நாட்டில் கண்டறியப்பட்ட 269 நெடுங்கால குப்பைக் கிடங்குகளில், 180 இடங்களில் குப்பைக் கழிவுகளை அகற்றும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு அதில் 69 இடங்களில் பணிகள் நிறைவடைந்துள்ளன மற்றும் மீதம் உள்ள

111 இடங்களில் பணிகள் நடைபெற்று வருகின்றன. இதன்மூலம் 360 ஏக்கர் பரப்பளவு கொண்ட நிலம் மீட்டெடுக்கப்பட்டுள்ளது.

6.4. பிளாஸ்டிக் கழிவு மேலாண்மை

அதிகரிக்கும் நகரமயமாக்கல், மக்கள் தொகை பெருக்கம், பொருளாதார நிலைகள் மற்றும் தொழில் துறை வளர்ச்சி ஆகியவை பிளாஸ்டிக் கழிவுகளின் உற்பத்தி அதிகரிக்க காரணமாகின்றன.

2021-2022 ஆம் ஆண்டறிக்கையின்படி தமிழ்நாட்டில் உள்ள 21 மாநகராட்சிகள், 138 நகராட்சிகள் மற்றும் 490 பேரூராட்சிகளிலிருந்து நாளொன்றிற்கு மொத்தம் 1088.734 டன் பிளாஸ்டிக் கழிவுகள் உருவாக்கப்பட்டுள்ளன. இதில் 95% (1028.25 டன்/நாள்) கழிவுகள் சேகரிக்கப்பட்டு மறுசுழற்சி மற்றும் பிற நோக்கங்களுக்காக அனுப்பப்படுகிறது. சேகரிக்கப்பட்ட கழிவுகள் பின்னர் வளங்கள் மீட்பு மையங்களுக்கு அனுப்பப்படுகின்றன, அங்கு அவை தரம் பிரிக்கப்பட்டு மறுசுழற்சி செய்யக் கூடிய கழிவுகள் பதிவு செய்யப்பட்ட மறுசுழற்சியாளர்களுக்கு விற்பனை செய்யப்படுகின்றன. மறுசுழற்சி செய்ய முடியாத கழிவுகள் சிமெண்ட் உற்பத்தியாளர்களுக்கு இணை செயலாக்கத்திற்காக அனுப்பப்படுகின்றன.

திருத்தப்பட்ட பிளாஸ்டிக் கழிவு மேலாண்மை விதிகள், 2016-ன்கீழ், தமிழ்நாட்டில் 216 அங்கீகரிக்கப்பட்ட பிளாஸ்டிக் கழிவு மறுசுழற்சியாளர்கள் உள்ளனர். அவர்களால் சேகரிக்கப்பட்ட மொத்த பிளாஸ்டிக் கழிவுகளில் இருந்து மறுசுழற்சிக்கு அனுப்பப்படும் பிளாஸ்டிக் கழிவுகளின் மொத்த அளவு சுமார் 1,76,319 டன் ஆகும்.

2021-2022 ஆம் ஆண்டில் 8000 டன் மறுசுழற்சி செய்ய முடியாத பிளாஸ்டிக் கழிவுகள் சாலை கட்டுமானத்திற்காக பயன்படுத்தப்பட்டுள்ளன. மாநிலத்தில் 38 மக்கும் பிளாஸ்டிக் உற்பத்தி ஆலைகள் தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளன.

6.4.1. ஒரு முறை பயன்பாட்டிற்கு பிறகு தூக்கி எறியும் பிளாஸ்டிக் பொருட்கள் மீதான தடை

தமிழ்நாடு அரசு, 25-6-2018 நாளிட்ட சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறையின் அரசாணை எண் 84-ல், ஒருமுறை பயன்படுத்தி

2023 ஏப்ரல் 13]

தூக்கி எறியப்படும் சில வகை பிளாஸ்டிக் பொருட்கள் மீது தடிமன் வரைமுறையின்றி பயன்படுத்த தடை அறிவித்தது. இத்தடையானது 1-1-2019 முதல் அமலில் உள்ளது.

இந்திய அரசின் சுற்றுச்சூழல், வனம் மற்றும் காலநிலை மாற்ற அமைச்சகம், 12-8-2021 தேதியிட்ட அறிவிக்கையின் வாயிலாக ஒருமுறை பயன்படுத்தி தூக்கி எறியப்படும் சிலவகை பிளாஸ்டிக்பொருட்களை பயன்படுத்த தடை அறிவித்தது. இத்தடையானது 1-7-2022 முதல் அமலில் உள்ளது.

6.4.2. பிளாஸ்டிக் தடை மீதான அமலாக்கம்

ஜனவரி 2019 முதல் பிப்ரவரி 2023 வரை தடை செய்யப்பட்ட பிளாஸ்டிக் பொருட்களான நெய்யப்படாத கைப் பைகள், பிளாஸ்டிக் கைப் பைகள், தண்ணீர் பைகள் உற்பத்தியில் ஈடுபட்டிருந்த 208 தொழிற்சாலைகளை மூடவும் மற்றும் மின் இணைப்புகளை துண்டிக்கவும் ஆணை வழங்கப்பட்டுள்ளது.

நகர்ப்புற உள்ளாட்சி அமைப்பு அதிகாரிகளால் அடிக்கடி ஆய்வுகள் நடத்தப்பட்டு, ஒருமுறை பயன்படுத்தும் பிளாஸ்டிக்கை பயன்படுத்துபவர்களுக்கு எதிராக அபராதம் விதிக்கப்படுகிறது. ஜனவரி 2019 முதல் பிப்ரவரி 2023 வரை 11,51,118 சோதனைகள் நடத்தப்பட்டு 2018 டன் தடை செய்யப்பட்ட ஒருமுறை பயன்படுத்தும் பிளாஸ்டிக்கை பறிமுதல் செய்து ரூபாய் 13.62 கோடி அபராதம் வசூலிக்கப்பட்டுள்ளது.

6.4.3. சிறப்பு அமலாக்க நடவடிக்கைகள்

தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் ஒரு முறை பயன்படுத்தும் பிளாஸ்டிக் தடையை கடுமையாக அமல்படுத்துவதற்கு, 2022 ஆம் ஆண்டு அக்டோபர்—டிசம்பர் மாதங்களில், ஒன்றிய மாசு கட்டுப்பாடு வாரியத்தின் அறிவுறுத்தல்களின்படி தெருவோர வியாபாரிகள், பூ மற்றும் பழக்கடைகள், உள்ளூர் சந்தைகள் மற்றும் மொத்த விற்பனை சந்தைகள், தொழில் துறை பகுதிகள் மற்றும் மாநிலங்களுக்கு இடையேயான எல்லைகளில் சிறப்பு ஆய்வுகள் அனைத்து மாவட்டங்களிலும் நடத்தப்பட்டது.

ஆய்வின்போது, 17436 நிறுவனங்கள் ஆய்வு செய்யப்பட்டு, அவற்றில் 3970 விதிமீறல்களைக் கண்டறிந்தனர், அவற்றில் 54.432 டன் தடை செய்யப்பட்ட ஒருமுறை பயன்படுத்தும் பிளாஸ்டிக்

பொருட்கள் பறிமுதல் செய்யப்பட்டு ரூ.20.91 இலட்சம் அபராதத் தொகை வசூலிக்கப்பட்டது.

6.4.4. பிளாஸ்டிக் தடை குறித்த விழிப்புணர்வு நடவடிக்கைகள்

கீழ்க்கண்ட நடவடிக்கைகள் வாரியம்மூலம் மேற்கொள்ளப்பட்டன.

- தடைசெய்யப்பட்ட பிளாஸ்டிக் பொருட்களை சேமித்தல், விநியோகம், கொண்டு செல்லுதல், விற்பனை மற்றும் பயன்பாடு ஆகியவற்றைத் தடுப்பதை உறுதிசெய்யும் பொறுப்பில் உள்ள மாவட்ட ஆட்சியர்களுடன் ஒருங்கிணைந்து தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியத்தின் அனைத்து மாவட்ட அதிகாரிகளும் விழிப்புணர்வு பிரச்சாரத்தினை மேற்கொண்டுள்ளனர். பல்வேறு மாவட்டங்களில் மேற்கொள்ளப்பட்ட விழிப்புணர்வு பிரச்சாரமானது, வாகன பிரச்சாரம், பொதுமக்களுக்கு துண்டு பிரசுரங்கள் விநியோகம் ஆகியவற்றின் மூலமாக மேற்கொள்ளப்பட்டன. மேலும், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரிய மாவட்ட அலுவலகங்கள், அரசு அலுவலகங்கள், பள்ளிகள், கல்லூரிகள், வணிக நிறுவனங்கள் போன்றவற்றில் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டுள்ளன. மருத்துவமனைகள், உணவகங்கள், தொழிற்பேட்டைகள், வணிக வளாகங்கள், பேருந்து நிலையம், ரயில் நிலையம், திரையரங்குகள் போன்ற மக்கள் கூடும் பகுதிகளில் சுவரொட்டிகள் ஒட்டுதல், காட்சிப்படுத்துதல் போன்றவை மேற்கொள்ளப்பட்டன.
- ஒருமுறை பயன்படுத்தும் பிளாஸ்டிக்கின் தீமைகள், ஒரு முறை பயன்பாட்டிற்கு பிறகு தூக்கி எறியப்படும் பிளாஸ்டிக் பொருட்கள் மீதான தடையை அமல்படுத்துவதற்கான அரசாங்கத்தின் முயற்சிகள் மற்றும் அதை அகற்ற மக்களின் ஒத்துழைப்பையும், ஆதரவையும் கோரி தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் ஆங்கிலம் மற்றும் தமிழில் செய்தி வெளியிட்டுள்ளது.

6.4.5. மாநில அளவிலான சிறப்புப் பணி குழு

ஒருமுறை பயன்படுத்தும் பிளாஸ்டிக் பொருட்கள் மீதான தடையை அமல்படுத்துவதைக் கண்காணிப்பதற்காக, 7-2-2022 தேதியிட்ட சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத்துறையின் அரசாணை எண் 25-ன்படி, அரசு மாநில அளவிலான சிறப்புப்

2023 ஏப்ரல் 13]

பணிக் குழுவை, தலைமைச் செயலர் தலைமையிலும், மாவட்ட அளவிலான பணிக் குழுவை மாவட்ட ஆட்சியர் தலைமையிலும் மற்றும் சென்னை பெருநகர மாநகராட்சிப் பகுதிக்கான பணிக் குழுவை ஆணையர் தலைமையிலும் அமைத்துள்ளது. மாநில அளவிலான சிறப்புப் பணிக் குழுவின் கூட்டங்கள் 5-3-2022 மற்றும் 2-3-2023 அன்று நடைபெற்றது. தமிழ்நாட்டில் இத்தடை மாபெரும் வெற்றியை அடைவதற்கான முன்முயற்சிகளை மேற்கொள்ள அனைத்து சம்பந்தப்பட்ட துறைகளும் சீரிய நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

6.5. கட்டுமானம் மற்றும் இடிமான கழிவு மேலாண்மை

*கட்டுமானம் மற்றும் இடிமான (*Construction & Demolition*) கழிவுகள், மறுசுழற்சி மதிப்பைக் கொண்ட கான்கிரீட், பிளாஸ்டர், உலோகம், மரம், பிளாஸ்டிக் போன்ற மக்காத பொருட்களைக் கொண்டுள்ளன. கட்டுமானம் மற்றும் இடிமான கழிவு மேலாண்மை விதிகள், உள்ளாட்சி அமைப்புகள், கட்டுமான மற்றும் இடிமான கழிவுகளின் முறையான மேலாண்மையை உறுதி செய்ய வேண்டும் என கூறுகிறது. சென்னை, மதுரை, கோயம்புத்தூர், திருச்சிராப்பள்ளி மற்றும் திருப்பூர் போன்ற பெரிய மாநகராட்சிகள் இத்தகைய செயலாக்க வசதிகளை அமைக்க முன்வந்துள்ளன. சென்னை பெருநகரப் பகுதியில், கொடுங்கையூர் மற்றும் பெருங்குடி குப்பை கிடங்கில் நாளொன்றிற்கு தலா 400 டன் திறன் கொண்ட இரண்டு அமைப்புகள் செயல்பட்டு வருகின்றன. சென்னை பெருநகர மாநகராட்சி, கட்டுமானம் மற்றும் இடிமானக் கழிவுகளைப் பெறுவதற்காக 15 மண்டலங்களில் சேகரிப்பு மையங்களை நிறுவியுள்ளது.*

6.6. மின்னணு கழிவு மேலாண்மை

*மின் மற்றும் மின்னணு உபகரணங்களின் தயாரிப்பாளர்கள், மின்னணு கழிவு மேலாண்மை விதிகள், 2016-ன்படி விரிவாக்கப்பட்ட தயாரிப்பாளர்கள் பொறுப்பின் (*Extended Producer Responsibility*) கீழ், தங்கள் தயாரிப்புகளின் 'முழு செயல்திறன் இழந்த' கழிவுகளிலிருந்து உருவாகும் மின்னணு கழிவுகளை சேகரித்து அனுப்புவதற்கு பொறுப்பாவார்கள். ஒன்றிய மாசுக்கட்டுப்பாடு வாரியமானது தயாரிப்பாளர்களுக்கு விரிவாக்கப்பட்ட உற்பத்தியாளர்கள் பொறுப்பு (*Extended Producer Responsibility*)*

அங்கீகாரத்தை வழங்குகிறது. மின்னணு கழிவு மேலாண்மை விதிகள்-2016-ஐ கடைப்பிடிக்கப்படுவதை வாரியம் கண்காணிக்கிறது. தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியமானது மின்னணு கழிவுகளை கையாளும் உற்பத்தியாளர்கள், அகற்றுபவர்கள், மறுசுழற்சி செய்பவர்கள் மற்றும் புதுப்பிப்பவர்களுக்கு அங்கீகாரம் அளிக்கிறது. அவ்விவரங்கள் அனைத்தும் தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரிய இணையதளத்தில் பதிவேற்றப்பட்டுள்ளது.

தேசிய உற்பத்தி கவுன்சில் (National Productivity Council of India), சென்னை, தமிழ்நாடு மாநிலத்தில் மின்னணு கழிவுகளை கையாளும் உற்பத்தியாளர்கள், அகற்றுபவர்கள், மறுசுழற்சி செய்பவர்கள் மற்றும் புதுப்பிப்பவர்களைக் கண்டறியும் பணியை மேற்கொண்டு, இது குறித்த விவரங்கள் அடங்கிய பட்டியலை வாரியத்திடம் சமர்ப்பித்துள்ளது.

தேசிய உற்பத்தி கவுன்சில் நடத்திய ஆய்வில், மொத்த மின்னணு கழிவு உற்பத்தி 2020 ஆம் ஆண்டில் 4,00,482 டன்னாகவும், 2030 ஆம் ஆண்டில் மாநிலம் முழுவதும் 5,78,356 டன்னாகவும் இருக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டில் சுமார் 8831 பங்குதாரர்கள் (உற்பத்தியாளர்கள், விற்பனையாளர்கள், தயாரிப்பாளர்கள், மொத்த நுகர்வோர்கள், புதுப்பிப்பவர்கள், சேகரிப்பு மையங்கள் மற்றும் மறுசுழற்சி செய்பவர்கள்) அடையாளம் காணப்பட்டனர். அனைத்து பங்குதாரர்களையும் (பட்டியலின்படி) கண்டறிவதற்கும், மின்னணு கழிவுகளை அறிவியல் பூர்வமாக அகற்றுவதற்காக அவற்றை தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியத்தின்கீழ் கொண்டு வருவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

சுற்றுச்சூழல், வனம் மற்றும் காலநிலை மாற்றம் அமைச்சகம் மின்னணு கழிவு (மேலாண்மை) விதிகள், 2022-ஐ 2-11-2022 அன்று அறிவிக்கை செய்துள்ளது. இந்த விதிகள் 1-4-2023 முதல் அமலுக்கு வரும்.

2023 ஏப்ரல் 13]



மின்னணு கழிவுகள்

6.7. தீங்கு விளைவிக்கும் கழிவுகள் மேலாண்மை

தீங்கு விளைவிக்கும் மற்றும் இதர கழிவுகள் (மேலாண்மை மற்றும் எல்லை கடந்து கொண்டு செல்லுதல்) விதிகள், 2016-ன்கீழ் உள்ள அம்சங்களின் அடிப்படையில், தீங்கு விளைவிக்கும் கழிவுகள் மேலாண்மை செயல்பட்டு வருகிறது. தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், 4284 தீங்கு விளைவிக்கும் கழிவுகள் உற்பத்தி செய்யும் தொழிற்சாலைகளைக் கண்டறிந்து, 4266 தொழிற்சாலைகளுக்கு அங்கீகாரம் வழங்கியுள்ளது. 2021-2022 ஆம் ஆண்டில் உற்பத்தியான 8.21 இலட்சம் டன் தீங்கு விளைவிக்கும் கழிவுகளில், 0.95 இலட்சம் டன் (11.57%) கழிவுகள் நிலத்தில் பாதுகாப்பாக கொட்டப்படக்கூடிய கழிவுகளாகவும், 0.189 இலட்சம் டன் (2.3%) கழிவுகள் எரிக்கப்படுபவையாகவும், 1.14 இலட்சம் டன் (13.93%) கழிவுகள் மறுசுழற்சி செய்யப்படுபவையாகவும் மற்றும் 5.93 இலட்சம் டன் (72.23%) கழிவுகள் பயன்படுத்தக் கூடியவையாகவும் அமைந்துள்ளன. தீங்கு விளைவிக்கும் கழிவுப் பொருட்களைச் சுற்றுச்சூழலுக்கு எந்தவித பாதிப்புமின்றி விஞ்ஞான முறையில் பாதுகாப்பாக கையாளுவதற்கு தகுந்த மேலாண்மை நடவடிக்கையினை தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் எடுத்து வருகிறது.

[*2023 ஏப்ரல் 13*

6.7.1. சிமெண்ட் தொழிற்சாலைகளில் தீங்கு விளைவிக்கும் கழிவுகளின் இணை செயலாக்கம்

*தீங்கு விளைவிக்கும் கழிவுகளை சிமெண்ட் தொழிற்சாலைகளில் இணை செயலாக்கம்மூலம் பயன்படுத்தப்படுவது சுற்றுச்சூழலுக்கு உகந்ததாக உள்ளது. ஒன்றிய மாசு கட்டுப்பாடு வாரியத்தின் வழிகாட்டுதல்களின் அடிப்படையில், தீங்கு விளைவிக்கும் கழிவுகள் மற்றும் இதர கழிவுகளை சிமெண்ட் தொழிற்சாலைகளில், இணை செயலாக்கத்திற்கான (*Co—processing*) மாற்று மூலப்பொருளாகவோ அல்லது எரிசக்தி மீட்புக்கான மாற்று எரிபொருளாகவோ குறிப்பிட்ட இணக்க அளவுகோல்களுக்கு உட்பட்டு பயன்படுத்த வாரியம் அனுமதியளித்துள்ளது. தீங்கு விளைவிக்கும் மற்றும் இதர கழிவுகள் (மேலாண்மை மற்றும் எல்லை கடந்து கொண்டு செல்லுதல்) விதிகள், 2016-ன்கீழ் ஆண்டு ஒன்றுக்கு மொத்தம் 18.41 இலட்சம் டன் கழிவுகளை செயலாக்கம் செய்ய, 14 சிமெண்ட் தொழிற்சாலைகளுக்கு அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. 2021-2022 ஆம் ஆண்டில் சுமார் 2.18 இலட்சம் டன் கழிவு நீர் சுத்திகரிப்பு நிலைய கழிவுகள் சிமெண்ட் தொழிற்சாலைகளில் இணை செயலாக்கத்திற்கென பயன்படுத்தப்பட்டுள்ளன.*

6.7.2. தீங்கு விளைவிக்கும் கழிவுகளின் முன் செயலாக்க வசதிகள் கொண்ட நிறுவனங்கள்

சிமெண்ட் தொழிற்சாலைகளில் தீங்கு விளைவிக்கும் கழிவுகளை இணை செயலாக்கம் மூலம் பயன்படுத்துவதை ஊக்குவிப்பதற்காக, நான்கு தீங்கு விளைவிக்கும் கழிவு முன்—செயலாக்க வசதிகளுக்கு அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. இந்த நிறுவனங்கள் இணை செயலாக்கத்திற்கு ஏற்றவாறு தீங்கு விளைவிக்கும் கழிவுகளின் கலவையை உருவாக்குகிறது. இக்கலவை சிமெண்ட் தொழிற்சாலைகளில் மூலப்பொருளுக்கு அல்லது எரிபொருளுக்கு மாற்றாக பயன்படுத்தப்படுகிறது. இதன் மூலம் 2021-2022 ஆம் ஆண்டில் 0.43 இலட்சம் டன் தீங்கு விளைவிக்கும் மற்றும் இதர கழிவுகளை செயலாக்கி, சிமெண்ட் தொழிற்சாலைகளில் இணை செயலாக்கத்திற்கு அனுப்பியுள்ளன.

6.7.3. தீங்கு விளைவிக்கும் கழிவுகளால் பாதிக்கப்பட்ட இடங்களின் மறுபுனரமைப்பு

- *ராணிப்பேட்டை மாவட்டத்தில் அமைந்துள்ள தமிழ்நாடு குரோமேட்ஸ் அண்டு கெமிக்கல்ஸ்*

லிமிடெட் நிறுவனம் 1995 ஆம் ஆண்டு உற்பத்தியினை நிறுத்தியது. இத்தொழிற்சாலையின் இயக்கத்தின்போது வெளியேற்றப்பட்ட சுமார் 2.2 லட்சம் டன் குரோமியம் கலந்த திடக் கழிவுகள் இத்தொழிற்சாலை வளாகத்தில் சுமார் 2 ஹெக்டேர் நிலப்பரப்பில் கொட்டப்பட்டு இது வரை அகற்றப்படாமல் உள்ளது. இதனால் நிலத்தடி நீர் மாசடைவதை தவிர்க்கும் பொருட்டு, மேற்படி திடக் கழிவு கொட்டப்பட்டுள்ள பகுதியில் மழைநீர் உட்புகாவண்ணம் பாதுகாப்பாக மூடுவதற்கு ஒன்றிய மாசு கட்டுப்பாடு வாரியம்மூலம் திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது. இதனை ரூ.12 கோடி செலவில் செயல்படுத்துவதற்கு வாரியம் நடவடிக்கை எடுத்து வருகின்றது.

- மேலும், தேசிய பசுமை தீர்ப்பாயத்தின் 2020 ஆம் ஆண்டின் OA எண் 186 இல் 2-9-2022 தேதியிட்ட உத்தரவில், ஒரு வருட காலத்திற்குள் மேலும் மாசுபடுவதைத் தடுக்க இடைக்காலத் தீர்வு நடவடிக்கையாக அதை மூடுவதற்கான பணியைத் தொடங்கவும் தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியத்திற்கு உத்தரவிட்டுள்ளது. மேலும் ஆறு மாதங்களுக்குள் நிரந்தர தீர்வுக்கான பணியை தொடங்கவும் உத்தரவிட்டுள்ளது. தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் இடைக்கால தீர்வு நடவடிக்கையை செயல்படுத்துவதற்கான தொழில்நுட்ப ஆவணம் மற்றும் டெண்டர் ஆவணம் தயாரிப்பதற்கான பணியை தி/ள்.ஸ்ட்ராடஸ் சுற்றுச்சூழல் பிரைவேட் லிமிடெட் நிறுவனத்திடம் ஒப்படைத்துள்ளது.

- கொடைக்கானலில் உள்ள ஹிந்துஸ்தான் யூனிலிவர் தொழிற்சாலை வளாகத்தில் பாதரச கழிவினால் பாதிக்கப்பட்ட நிலப்பரப்பினை சீர் செய்யும் பணியினை இந்நிறுவனம் மார்ச் 2021-லிருந்து மேற்கொண்டு வருகின்றது. இப்பணி தேசிய சுற்றுச்சூழல் பொறியியல் ஆராய்ச்சி நிறுவனத்தின் மேற்பார்வையில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. சீர் செய்யப்பட வேண்டிய மொத்த பரப்பளவு 17,858 சதுர மீட்டரில் பிப்ரவரி, 2023 வரை 5176 சதுர மீட்டர் பரப்பளவிற்கு மண் சீர் செய்யப்பட்டுள்ளது. மேலும் 500 சதுர மீட்டர் பரப்பளவு பகுதியினை சீரமைக்கும் பணி நடைபெற்று வருகிறது. டிசம்பர் 2024 இறுதிக்குள் பணிகள் முடிவடையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

- *சென்னை தண்டையார்பேட்டை பகுதியில் 2013 ஆம் ஆண்டு தி/ள்.பாரத் பெட்ரோலியம் கார்ப்பரேஷன் லிமிடெட் நிறுவனத்திற்கு சொந்தமான நிலத்தடி பெட்ரோலிய எண்ணெய் குழாயில் கசிவு ஏற்பட்டு நிலத்தடி நீர் மாசடைந்தது. இதனை சீர் செய்யும் பணியினை மேற்படி நிறுவனம் கடந்த ஆறு ஆண்டுகளாக தொடர்ந்து மேற்கொண்டு வருகின்றது. தற்போது இப்பணி முடிவுறும் தருவாயில் உள்ளது. மேலும் தேசிய பசுமை தீர்ப்பாயம் உத்தரவின்படி இந்த எண்ணெய் கசிவினால் பொதுமக்களுக்கு ஏதேனும் உடல்நலத் தாக்கம் ஏற்பட்டுள்ளதா என்பது குறித்து இந்திய மருத்துவ ஆராய்ச்சி நிறுவனத்தின்மூலம் சுகாதார ஆய்வு மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.*

6.7.4. தோல் மற்றும் சாயத் தொழிற்சாலைகளின் பூஜ்ய கழிவுநீர் வெளியேற்றும் அமைப்புகள்மூலம் உருவான கலவை உப்பினை மறு உபயோகம் செய்ய எடுக்கப்பட்ட முயற்சிகள்

தமிழ்நாட்டில் வேலூர், இராணிபேட்டை, திருப்பத்தூர், திருச்சி, ஈரோடு, காஞ்சிபுரம், திருவள்ளூர், திண்டுக்கல், செங்கல்பட்டு மாவட்டங்களில் அமைந்துள்ள தோல் தொழிற்சாலைகள் மற்றும் திருப்பூர், ஈரோடு, நாமக்கல் மற்றும் சேலம் மாவட்டங்களில் அமைந்துள்ள சாயத் தொழிற்சாலைகளுக்கென அமைக்கப்பட்டுள்ள பொது கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களின், பூஜ்ய கழிவுநீர் வெளியேற்றும் அமைப்பிலிருந்து வெளியேற்றப்பட்ட முறையே சுமார் 100839.4 டன் மற்றும் 162039.8 டன் அடர்கலப்பு உப்பானது தொழிற்சாலை வளாகங்களில் பாதுகாப்பாக சேகரித்து வைக்கப்பட்டுள்ளது.

*ஒன்றிய மாசு கட்டுப்பாடு வாரியத்தால் சலவை மற்றும் சாயத் தொழிற்சாலைகளிலிருந்து உற்பத்தியாகும் அடர்கலவை உப்பை சுத்திகரித்து மீண்டும் தொழிற்சாலைகள் பயன்படுத்துவதற்கான நிலைத்தகு செயல்முறைகள் (*Standard Operating Procedures*) ஜூன்—2021 அன்று வழங்கப்பட்டுள்ளது. இதனைப் பின்பற்றி, இராமநாதபுரத்தில் ஒரு தனியார் நிறுவனம், சாயத் தொழிற்சாலைகளிலிருந்து வெளியேற்றப்பட்டு, சேமிக்கப்பட்ட கலவை உப்பினை சுத்திகரிப்பு செய்வதற்கான அமைப்பை நிறுவி வருகிறது. மேலும், இதற்காக வாரியத்தால் 31-3-2027 வரை செல்லத்தக்க நிறுவுவதற்கான இசைவாணை 13-1-2023 அன்று வழங்கப்பட்டுள்ளது.*

2023 ஏப்ரல் 13]

தோல் தொழிற்சாலைகளிலிருந்து வெளியேற்றப்பட்ட கலவை உப்பிலிருந்து சோடியம் குளோரைடு உப்பினை பிரித்தெடுத்து, உரத் தொழிற்சாலைகள் உற்பத்தியில் சோதனை முறையில் பயன்படுத்துவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

7. சட்ட நடவடிக்கைகள்

சுற்றுச்சூழல் சட்டங்களை மீறும் தொழிற்சாலைகள் மீது, சுற்றுச்சூழல் சட்டங்களின்கீழ் புகார்கள் பதிவு செய்யவும், மேலும் தொழிற்சாலைகளை மூடுவதற்கும் மற்றும் மின் இணைப்பை துண்டிப்பதற்கும் தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியத்திற்கு அதிகாரம் உள்ளது.

7.1. மேல்முறையீட்டு ஆணையம்

மேல் முறையீட்டு ஆணையம் (Appellate Authority), 2000 ஆம் ஆண்டு முதல் இயங்கி வருகிறது. மாசு கட்டுப்பாடு வாரியத்தால் பிறப்பிக்கப்பட்ட ஆணைக்கு எதிர்ப்பு தெரிவிக்கும் எந்தவொரு நபரும்/தொழிற்சாலையும் மேற்கூறிய ஆணையத்திடம் மேல்முறையீடு செய்யலாம்.

7.2. தேசிய பசுமைத் தீர்ப்பாயம்

தேசிய பசுமைத் தீர்ப்பாயத்தின் தென் மண்டல அமர்வு 2012 ஆம் ஆண்டிலிருந்து சென்னையில் இயங்கி வருகிறது. தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்/ மாநில அரசு/மேல்முறையீட்டு ஆணையத்தால் வழங்கப்படும் உத்தரவால் பாதிக்கப்பட்ட எந்த ஒரு நபரும், உத்தரவு பிறப்பித்த 30 நாட்களுக்குள் தேசிய பசுமை தீர்ப்பாயத்தில் மேல்முறையீடு செய்யலாம்.

7.3. இணையவழி சட்ட வழக்கு மேலாண்மை மற்றும் கண்காணிப்பு அமைப்பு

தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், உச்ச நீதிமன்றம், உயர் நீதிமன்றம், தேசிய பசுமைத் தீர்ப்பாயம், மேல் முறையீட்டு ஆணையம் ஆகிய நீதிமன்றங்களில் உள்ள வழக்குகளை மேலாண்மை மற்றும் கண்காணிப்பு செய்வதற்கு இணையவழி அமைப்பு ஒன்றை உருவாக்கியுள்ளது.

8. வாரியத்தின் இதர செயல்பாடுகள்

8.1. சுற்றுச்சூழல் பயிற்சி நிலையம்

மாசு கட்டுபாடு வாரியத்தின் சுற்றுச்சூழல் பயிற்சி நிலையம் சென்னையிலுள்ள தலைமை அலுவலகத்தில் செயல்பட்டு

வருகின்றது. இப்பயிற்சி நிலையத்தின்மூலம் வாரியத்தில் பணிபுரிவோர், தொழிற்சாலை பிரதிநிதிகள், நகராட்சி மற்றும் மாநகராட்சி நிர்வாகிகள் மற்றும் அரசு சாரா அமைப்பின் பிரதிநிதிகள் ஆகியோருக்கு மாசு கட்டுபாடு மற்றும் சுற்றுச்சூழல் பாதுகாப்பு குறித்து பயிற்சிகள் அளித்து வருகின்றது. ஏப்ரல், 2022 முதல் பிப்ரவரி, 2023 வரை சுற்றுச்சூழல் பயிற்சி நிலையத்தின்மூலம் 10 பயிற்சிகள் தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியத்தாலும் மற்றும் 11 பயிற்சிகள் இதர நிறுவனங்கள் மூலமாகவும் நடத்தப்பட்டுள்ளன. இப்பயிற்சிகள் மூலம் 1073 நபர்கள் பயனடைந்துள்ளனர்.

8.1.1. வாரிய பணியாளர்களுக்கு பயிற்சி அளித்தல்

தமிழ்நாடு மாசுகட்டுப்பாடு வாரிய சுற்றுச்சூழல் பயிற்சி மையம்மூலம் அரசாங்க அலுவலர்கள், வாரிய பொறியாளர்கள் மற்றும் விஞ்ஞானிகளுக்கு சுற்றுச்சூழல் குறித்த புதிய தொழில்நுட்பங்கள், சுற்றுச்சூழல் சட்டங்கள் பற்றிய விளக்கங்கள் மற்றும் சுயமுன்னேற்றம்/நேர மேலாண்மை/மன அழுத்த மேலாண்மை பற்றிய பயிற்சிகள் அளிக்கப்பட்டு வருகின்றன.

8.2. சுற்றுச்சூழல் விழிப்புணர்வு நிகழ்ச்சிகள்

சுற்றுச்சூழல் பாதுகாப்பு குறித்து பொதுமக்களிடம் விழிப்புணர்வு ஏற்படுத்தவும், நேர்மறையான நடவடிக்கைகள்மூலம் சுற்றுச்சூழலை பாதுகாக்கவும் பல்வேறு வகையான சுற்றுச்சூழல் விழிப்புணர்வு நிகழ்ச்சிகளை வாரியம் ஒவ்வொரு ஆண்டும் பேரணிகள், தானியங்கி மூன்று சக்கர வாகனம் (Auto Rickshaw) மூலம் பரப்புரைகள், சுற்றுச்சூழல் வினாடி வினா, மரக் கன்றுகளை பொது இடங்களில் நடுதல், துண்டு பிரசுரங்கள் விநியோகம், காட்சி பலகைகள், வானொலி பண்பலைகள்மூலம் பரப்புரைகள், விழிப்புணர்வு குறித்த குறும்படங்களை ஊடகங்களில் திரையிடுதல் போன்ற பல வழிகளில் நடத்தி வருகிறது. கூடுதலாக தீபாவளி மற்றும் போகி பண்டிகைகளின் போது சிறப்பு காற்று தர ஆய்வுகளை நடத்தி காற்றின் தரத்தினை அளவிட்டு அதன் முடிவுகளை வெளியிட்டு வருகிறது.

மேலும், வாரியம் விநாயகர் சதுர்த்தியின் போது சிலைகளை அறிவிக்கப்பட்ட நீர்நிலைகளில் கரைப்பதற்கு முன்னும் பின்னும், நீரின் தரத்தை ஆய்வு செய்து அதன் முடிவுகளை ஒன்றிய மாசு கட்டுபாடு வாரியத்திற்கு அனுப்பி வருகின்றது.

2023 ஏப்ரல் 13]

8.3. இணையவழி குறைகள் மனு நிவர்த்தி அமைப்பு (Online Grievance Petition Redressal System)

சுற்றுச்சூழல் சம்பந்தமான பொதுமக்களின் புகார் மனுக்கள் மீது உடனடியாக தீர்வு காணும் விதமாக, வாரியம் இணையவழி குறைகள் மனு நிவர்த்தி அமைப்பை உருவாக்கியுள்ளது. ஏப்ரல் 2022 முதல் பிப்ரவரி 2023 வரை, 3696 புகார்கள் பதிவு செய்யப்பட்டு அதில் 2874 புகார்கள் விசாரிக்கப்பட்டு முடிக்கப்பட்டுள்ளன.

9. வாரியத்தால் எடுக்கப்பட்ட புதிய முயற்சிகள்

தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியத்தினை நவீனமயமாக்கல்

- *அதிக மாசு ஏற்படுத்தும் தொழிற்சாலைகள் மற்றும் அவை அதிகம் உள்ள பகுதிகளை கண்காணிப்பதன் அவசியத்தை கருத்தில் கொண்டு, குறிப்பிட்ட காலத்திற்குள் விசாரணைகளை கையாளுதல் மற்றும் புகார்/ மேம்படுத்தப்பட்ட கண்காணிப்பு மற்றும் மேலாண்மைக்காக மணலி, ராணிப்பேட்டை மற்றும் மேட்டூரில் மூன்று புதிய உதவி சுற்றுச்சூழல் பொறியாளர் அலுவலகங்கள் நிறுவப்பட்டு டிசம்பர் 2021 முதல் செயல்பட்டு வருகின்றன.*

- *தொழிற்சாலை கழிவுகள், கழிவுநீர் மற்றும் நகராட்சி திடக் கழிவுகளை வெளியேற்றுவதில் இருந்து நீர்நிலைகளை பாதுகாத்தல் மற்றும் கண்காணிப்பை மேம்படுத்த சென்னை, வேலூர் மற்றும் சேலத்தில் பறக்கும் படை டிசம்பர், 2021 முதல் செயல்பட்டு வருகின்றன.*

- *கடலூர் மற்றும் அதைச் சுற்றியுள்ள பகுதிகளில் அதிக எண்ணிக்கையில் 17 வகைத் தொழிற்சாலைகள் இருப்பதால், கண்காணிப்பு செயல்திறனை மேம்படுத்தும் வகையில், கடலூரில் புதிய இணை தலைமை சுற்றுச்சூழல் பொறியாளர் (கண்காணிப்பு) அலுவலகம் நிறுவப்பட்டு டிசம்பர் 2021 முதல் செயல்பட்டு வருகின்றது.*

- *நீர் (மாசு தடுப்பு மற்றும் கட்டுப்பாடு) சட்டம், காற்று (மாசு தடுப்பு மற்றும் கட்டுப்பாடு) சட்டம், சுற்றுச்சூழல் பாதுகாப்புச் சட்டம் மற்றும் அதனால் உருவாக்கப்பட்ட விதிகளின் சிறந்த மேற்பார்வை மற்றும் கண்காணிப்பை உறுதி செய்வதற்காக, இணை தலைமை சுற்றுச்சூழல்*

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY LIBRARY — TRUTH ALONE TRIUMPHS

பொறியாளர் (கண்காணிப்பு) அலுவலகம் தற்போது செங்கல்பட்டில் (மறைமலை நகர்) அமைக்கப்பட்டு வருகிறது.

- வாரியத்தில் பல்வேறு தகவல் தொழில் நுட்ப இணைய வழி பயன்பாடுகளை உருவாக்குவது மற்றும் பராமரிப்பதற்காக தகவல் தொழில் நுட்பப் பிரிவு (Information Technology Wing) உருவாக்கப்பட்டுள்ளது.

மின்-வாகன பயன்பாடு

- பசுமை இல்ல வாயு உமிழ்வைக் குறைப்பதன் ஒரு பகுதியாக தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியத்தில், 25 மின்-வாகனங்கள் வாங்கப்பட்டு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் உலக சுற்றுச்சூழல் தினத்தில் (5-6-2022) கொடியசைத்து தொடங்கி வைக்கப்பட்டு பயன்படுத்தப்பட்டு வருகின்றன.

தொகுப்பு இசைவாணை வழங்குதல்

- தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியம் அரசாங்கத்தின் எளிதாக வணிகம் செய்வதற்கான கொள்கையின்கீழ் ஒவ்வொரு ஆண்டும் இசைவாணை வழங்குவதற்குப் பதிலாக ஒரு தொகுப்பாக செயல்பாடு மற்றும் புதுப்பிப்பதற்கான இசைவாணையை வழங்குகிறது. 2021-2022 ஆம் நிதியாண்டிலிருந்து தேவையான ஒப்புதல் கட்டணத்தைப் பெற்று சிவப்பு, ஆரஞ்சு மற்றும் பச்சை வகைத் தொழிற்சாலைகளுக்கு முறையே 5/10/14 ஆண்டுகள் நீட்டிக்கப்பட்ட காலத்திற்கு இசைவாணை வழங்கப்படுகிறது. டிசம்பர் 2021 முதல் பிப்ரவரி 2023 வரை மொத்தம் 10428 தொழிற்சாலைகளுக்கு இசைவாணை தொகுப்பாக வழங்கப்பட்டுள்ளது. இது தொழிற்சாலைகள் ஒவ்வொரு ஆண்டும் விண்ணப்பங்கள் செய்வதிலிருந்து விடுபட உதவுகிறது. இதனால் பல்வேறு கழிவு மேலாண்மை கண்காணிப்புக்கு இந்த நேரத்தை செலவிட ஏதுவாக உள்ளது. இந்த ஏற்பாட்டின்மூலம் கிடைக்கும் பயன் மற்றும் பலன்கள் குறித்து தொழில் துறையினர் தங்கள் நேர்மறையான கருத்துக்களை வழங்கியுள்ளனர்.

2023 ஏப்ரல் 13]

நிகழ்நேர நீர் தர கண்காணிப்பு நிலையங்கள் (Real Time Water Quality Management System), தொடர்ச்சியான சுற்றுப்புற காற்று தர கண்காணிப்பு நிலையங்கள் (Continuous Ambient Air Quality Monitoring System) மற்றும் ஒருங்கிணைந்த சுற்றுசூழல் கண்காணிப்பு காட்சியகம்

- *மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களின் 2021 ஆம் ஆண்டிற்கான வரவு—செலவு திட்ட உரையில் அறிவித்தபடி தமிழ்நாடு மாசுக்கட்டுப்பாடு வாரியம் நிகழ்நேர நீர் தர கண்காணிப்பு நிலையங்கள் (RTWQMS) மற்றும் தொடர்ச்சியான சுற்றுப்புற காற்று தர கண்காணிப்பு நிலையங்கள் (CAAQMS) ஆகியவற்றை நிறுவுவதற்கான முயற்சிகளை எடுத்து வருகிறது.*
- *அண்ணா பல்கலைக்கழகம் மற்றும் சுவிஸ் ஃபெடரல் ஏஜென்சியுடன் இணைந்து நிகழ்நேர அடிப்படையில் காற்றின் தரத்தை முன்கூட்டியே எச்சரிக்கை செய்யும் அமைப்பை நிறுவுதல்.*
- *இந்தியாவின் முதல் ஒருங்கிணைந்த சுற்றுசூழல் கண்காணிப்பு காட்சியகம் அமைப்பதற்கான பணிகள் நடைபெற்று வருகின்றன. இக்கண்காணிப்பு மையத்தில் தொழிற்சாலைகளின் புகை மற்றும் கழிவு நீரின் காரணிகள், சுற்றுபுற காற்றின் தரம் மற்றும் நீர் நிலைகளின் தரம், தீங்கு விளைவிக்கும் கழிவுகள் மற்றும் மருத்துவ கழிவுகளை எடுத்து செல்லும் வாகனங்கள் முதலியவை கண்காணிக்கப்படும்.*

தொழிற்சாலைகளின் மேல் எடுக்கப்பட்ட நடவடிக்கை

- *சுற்றுச்சூழலை பாதுகாக்கும்பொருட்டு ஏப்ரல் 2022 முதல் பிப்ரவரி 2023 வரை தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் இசைவாணையின் நிபந்தனைகளை மீறிய மற்றும் சுற்றுச்சூழல் விதிகளுக்கு இணங்காத, சுற்றுசூழலுக்கு மாசு ஏற்படுத்திய 366 தொழிற்சாலைகளுக்கு மூடுதல் உத்தரவு பிறப்பித்துள்ளது மற்றும் 4190 தொழிற்சாலைகளுக்கு முகாந்திர கடிதம் அனுப்பியுள்ளது.*

நேரடி கலந்தாய்வு அமர்வு

- *வாரியத்தின் செயல்பாடுகளை மிகவும் வெளிப்படையானதாகவும், பங்குதாரர்களிடையே*

புரிதலையும் நம்பிக்கையையும் ஏற்படுத்துவதற்காகவும், வெளிப்படைத்தன்மை மற்றும் செயல்திறனை அதிகரிப்பதற்கும் ஏதுவாக வாரியம் ஒவ்வொரு மாதமும் 5 ஆம் தேதி அன்று 'நேரடி கலந்தாய்வு அமர்வு' (Open House Session) ஏப்ரல் 2022 முதல் நடத்தப்பட்டு வருகின்றன. ஏப்ரல் 2022 முதல் பிப்ரவரி 2023 வரை 498 புகார்கள் இக்கலந்தாய்வு அமர்வில் பதிவு செய்யப்பட்டு 480 புகார்கள் தீர்க்கப்பட்டுள்ளன.

பசுமை முதன்மையாளர் விருது

- 2021 முதல் தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், சுற்றுச்சூழல் பாதுகாப்பில் முன்மாதிரியான பங்களிப்பைச் செய்த அமைப்பு/கல்வி நிறுவனங்கள்/பள்ளிகள்/ கல்லூரிகள்/ குடியிருப்பு நலச் சங்கங்கள்/ தனிநபர்கள்/உள்ளாட்சி அமைப்புகள்/ தொழிற்சாலைகளுக்கு பசுமை முதன்மையாளர் விருதை வழங்குகிறது. இவ்விருதுக்காக ஒவ்வொரு ஆண்டும் 100 நபர்கள்/ நிறுவனங்கள் தேர்ந்தெடுக்கப்படுவார்கள். ஒவ்வொரு விருதும் ரூ.1 இலட்சம் பரிசுத் தொகையைக் கொண்டுள்ளது. 2021-2022 ஆம் ஆண்டிற்கான பசுமை முதன்மையாளர் விருது வழங்குவதற்காக 32 மாவட்ட ஆட்சியர்களால் 85 பரிந்துரைகள் தேர்ந்தெடுக்கப்பட்டு, கடந்த 2022 ஆம் ஆண்டு உலக சுற்றுச்சூழல் தினத்தின் போது தேர்ந்தெடுக்கப்பட்டவர்களுக்கு பசுமை முதன்மையாளர் விருதுகள் வழங்கப்பட்டது. 2022-2023 ஆம் ஆண்டிற்கான பசுமை முதன்மையாளர் விருதுகளுக்கான விண்ணப்பம் தொடர்பான பணிகள் தொடங்கப்பட்டுள்ளன. 2023 ஆம் ஆண்டு உலக சுற்றுச்சூழல் தினத்தன்று விருதுகள் வழங்கப்படும்.

மீண்டும் மஞ்சப்பை பிரச்சாரத்தில் தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியத்தின் முக்கிய சாதனைகள் பின்வருமாறு:—

- மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தவும் பிளாஸ்டிக்கிற்கு மாற்று வழிகளை ஊக்குவிக்கவும், ஒரு முறை பயன்படுத்தி தூக்கி எறியப்படும் பிளாஸ்டிக் மீதான தடையை அமல்படுத்தும் பொருட்டு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் 23-12-2021 அன்று சென்னையில் "மீண்டும் மஞ்சப்பை" பிரச்சாரத்தை தொடங்கி வைத்தார். "மீண்டும்

மஞ்சப்பை பிரச்சாரம்” என்பது ஒரு முறை பயன்படுத்தி தூக்கி எறியப்படும் பிளாஸ்டிக்குகளுக்கு எதிரான ஒரு மாபெரும் மக்கள் பிரச்சாரம் மற்றும், பாரம்பரியத்திற்கு திரும்புவதற்கும், எதிர்காலத்திற்கான திட்டமிடலுக்குமான அழைப்பாகும்.

° தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியம், தமிழ்நாடு அரசு மற்றும் இந்திய அரசின் சுற்றுச்சூழல் வனம், மற்றும் காலநிலை மாற்ற அமைச்சகம் (MoEF & CC) ஆகியவற்றின் ஒருங்கிணைப்புடன், ஒரு முறை பயன்படுத்தி தூக்கி எறியப்படும் பிளாஸ்டிக் பொருட்களுக்கு மாற்றான சுற்றுச்சூழலுக்கு உகந்த பொருட்கள் மற்றும் ஸ்டார்ட்அப் மாநாட்டின் தேசிய கண்காட்சியினை சென்னை வர்த்தக மையத்தில் 27-9-2022 & 28-9-2022 ஆகிய தினங்களில் நடத்தியது. பிளாஸ்டிக் பொருட்களுக்கு மாற்றுப் பொருட்களை உற்பத்தி செய்வதற்கும் விற்பனை செய்வதற்கும் உகந்த சூழலை ஊக்குவித்தல் மற்றும் ஒரு முறை பயன்படுத்தி தூக்கி எறியப்படும் பிளாஸ்டிக்களுக்கு பலதரப்பட்ட மாற்றுப் பொருட்கள் கிடைப்பது குறித்து பொதுமக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்துதல் ஆகிய நோக்கத்துடன் இந்தக் கண்காட்சி நடத்தப்பட்டது. இந்தியா முழுவதிலும் இருந்து மொத்தம் 173 கண்காட்சியாளர்கள் இக்கண்காட்சியில் கலந்துகொண்டனர்.

° முதன்முறையாக தமிழ்நாட்டில் ஒரு முறை பயன்படுத்தி தூக்கி எறியப்படும் பிளாஸ்டிக் பொருட்களுக்கான சுற்றுச்சூழல் மாற்றுப் பொருட்களின் உற்பத்தியாளர்கள் மற்றும் விநியோகிப்பவர்களின் தகவல் அடங்கிய தொகுப்பு வெளியிடப்பட்டது. இதில் 659 சுற்றுச்சூழல் மாற்று உற்பத்தியாளர்கள் பற்றிய விவரங்கள் தரப்பட்டுள்ளன. இம்முயற்சி சென்னை உயர் நீதிமன்றத்தின் பாராட்டைப் பெற்றுள்ளது. இத்தொகுப்பு பிற மாசு கட்டுப்பாடு வாரியங்களால் ஒரு குறிப்பு ஆவணமாகப் பயன்படுத்தப்படுகிறது.

° அனைத்து மாவட்டங்களிலும், மாவட்ட ஆட்சியர் அலுவலகங்கள் மற்றும் அதனைச் சார்ந்த துறைகளின் ஒருங்கிணைப்பில் விழிப்புணர்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. உள்ளாட்சி அமைப்புகள், கடைகள், வணிக நிறுவனங்களில் ஒரு முறை பயன்படுத்தி

தூக்கி எறியப்படும் பிளாஸ்டிக் பயன்படுத்தப்படுகிறதா என்பதை ஆய்வுசெய்து நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. ஏற்கெனவே தமிழ்நாடு அரசால் தடை செய்யப்பட்ட பொருட்கள் பறிமுதல் செய்யப்பட்டு வருகின்றன.

பிளாஸ்டிக் மாசில்லா உயர்நீதிமன்ற வளாகங்கள்

◦ இந்த பிரச்சாரத்திற்கு ஆதரவாகவும், மஞ்சப்பை பொதுமக்களுக்கு கிடைக்கவும் தமிழ்நாடு அரசு முதன்முறையாக துணி பை விற்பனை இயந்திரத்தை சந்தைகள், வணிக வளாகங்கள், பொது கட்டட வளாகங்கள் என அதிக மக்கள் நடமாட்டம் உள்ள இடங்களான சென்னை மற்றும் மதுரையில் உள்ள உயர்நீதிமன்ற வளாகம், கோயம்பேடு மார்க்கெட் வளாகம், மாவட்ட ஆட்சியர் அலுவலகங்கள் போன்ற கட்டட வளாகங்களில் நிறுவியுள்ளது. சென்னை உயர்நீதிமன்றம் மற்றும் மதுரை கிளை வளாகங்களை நெகிழி இல்லா வளாகமாக மாற்ற தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் முறையே ஐந்து மஞ்சப்பை இயந்திரங்களை வழங்கியுள்ளது. மேலும் சென்னை உயர்நீதிமன்ற வளாகத்தினுள் இரண்டு நெகிழி நொறுக்கும் இயந்திரங்களையும் (Reverse Vending Machine) மற்றும் மதுரை கிளையில் ஒரு நெகிழி நொறுக்கும் இயந்திரத்தையும் நிறுவியுள்ளது,

◦ இதுவரை 36 துணிப்பை விற்பனை இயந்திரங்கள் வாங்க திட்டமிடப்பட்டு, 16 இயந்திரங்கள் வெவ்வேறு இடங்களில் நிறுவப்பட்டுள்ளது. இந்த இயந்திரங்கள் இன்றுவரை கிட்டத்தட்ட 25000 மஞ்சப்பைகளின் தேவையை பூர்த்தி செய்துள்ளன.

மீண்டும் மஞ்சப்பை—விரைவு இரயில் கண்காட்சி

◦ மாணவர்கள், சுய உதவி குழுக்கள் (SHGs) மற்றும் பொது மக்களுக்கு பெரும் விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில், 2023 ஆம் ஆண்டு ஜூன் மாதம் உலக சுற்றுச்சூழல் தினத்தன்று, மாநிலம் முழுவதும் செல்லும் வகையில் மஞ்சப்பை விரைவு ரயில் தொடங்க திட்டமிடப்பட்டுள்ளது.

மஞ்சப்பை விருதுகள்

◦ ஒரு முறை பயன்படுத்தி தூக்கி எறியப்படும் பிளாஸ்டிக் பயன்படுத்துவதைத் தவிர்த்து சிறந்த முறையில்

2023 ஏப்ரல் 13]

விழிப்புணர்வு ஏற்படுத்தும் 3 சிறந்த பள்ளிகள், 3 சிறந்த கல்லூரிகள் மற்றும் 3 சிறந்த வணிக வளாகங்களுக்கு வெகுமதி அளிக்கும் வகையில் தமிழ்நாடு அரசு மஞ்சப்பை விருதுகளை வழங்க உள்ளது. ஏப்ரல் 1, 2022 முதல் மார்ச் 31, 2023 வரையிலான ஒரு வருட காலத்தில் செய்யப்படும் முயற்சிகள் மதிப்பீடு செய்யப்பட்டு, 2023 ஆம் ஆண்டு உலக சுற்றுச்சூழல் தினத்தன்று விருதுகள் வழங்கப்படும். ஒருமுறை பயன்படுத்தி தூக்கி எறியப்படும் நெகிழிகள் குறைப்பு மற்றும் தவிர்ப்பது குறித்து விழிப்புணர்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளுதல், சுற்றுச்சூழல் கருத்து குறித்த நிகழ்வுகளில் பங்கேற்று சுற்றுச்சூழல் விருதுகள் பெற்றிருத்தல், உலக சுற்றுச்சூழல் தினம் கடைபிடித்தல் போன்ற சுமார் 10-15 கருத்துருக்களை மையமாக கொண்டு, நிறுவனங்கள் இவ்விருதுக்காக தேர்ந்தெடுக்கப்பட உள்ளன.

- **கார்பன் சமநிலை கொண்ட கோயம்பேடு சந்தை**

 - ஆசியாவின் மிகப்பெரிய சந்தை வளாகங்களில் ஒன்றான கோயம்பேடு சந்தை வளாகத்திற்கு கார்பன் சமநிலை அடைவதற்கான பயனுள்ள நடவடிக்கைகளை தமிழ்நாடு அரசு மேற்கொண்டுள்ளது. இத்திட்டம் மற்ற நகரங்கள் மற்றும் மாநிலங்களுக்கு முன்மாதிரியாக அமையும். சென்னை பெருநகர வளர்ச்சி குழுமம் மற்றும் பெருநகர சென்னை மாநகராட்சி ஒருங்கிணைந்து தமிழ்நாடு மாசு கட்டுபாடு வாரியம்மூலம் இந்தத் திட்டம் செயல்படுத்தப்படும். இத்திட்டத்திற்கான விரிவான திட்ட அறிக்கை இந்திய தொழில்நுட்ப கழகம், சென்னைமூலம் தயாரிக்கப்பட உள்ளது. இத்திட்டம் கோயம்பேடு சந்தை வளாகத்தின், புதுப்பிக்கத்தக்க எரிசக்தி ஆதாரங்களைப் பயன்படுத்துதல், பசுமையான இடங்களை உருவாக்குதல், நிலையான பொருட்களின் பயன்பாடு, கார்பன் தடயங்களைக் குறைப்பதற்கான வழிகள், ஒருமுறை பயன்படுத்தி தூக்கி எறியப்படும் பிளாஸ்டிக் தடையை அமல்படுத்துதல் மற்றும் சந்தையின் முழு செயல்பாட்டிலும் சுற்றுச்சூழல் பொறுப்பைக்கொண்டு வருவதை உறுதி செய்தல் போன்ற அம்சங்களை உள்ளடக்கியது. இத்திட்டத்திற்கான திட்ட மதிப்பீடு ரூ.25 கோடி ஆகும்.

[*2023 ஏப்ரல் 13*

தொழிற்சாலைகளுக்கு பசுமை மதிப்பீடு

- *தமிழ்நாடு அரசு, தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியம்மூலம் தொழிற்சாலைகளுக்கு பசுமை மதிப்பீடு செய்யும் திட்டத்தினை செயல்படுத்த முன்வந்துள்ளது. தொழிற்சாலைகள் சுற்றுச்சூழல் பாதுகாப்பிற்காக மேற்கொள்ளும் செயல்திறனை மதிப்பீடு செய்வதால் இத்திட்டம் சுற்றுச்சூழலுக்கு பெரிதும் பயனளிக்கும் முயற்சியாகும். மேலும், இத்திட்டம் ஆற்றல் திறன் மேம்பாடு (*Energy efficiency*), பசுமை இல்ல வாயு உமிழ்வைக் குறைத்தல், நீர் பாதுகாப்பு, புதுப்பிக்கத்தக்க ஆற்றல் (*Renewable energy*), உற்பத்தி மற்றும் வட்டப் பொருளாதாரம் (*Circular economy*) சார்ந்த கழிவு மேலாண்மை போன்ற சிறந்த நடைமுறைகளுக்கு தொழிற்சாலைகளை ஊக்குவிக்கிறது. தொழிற்சாலைகளின் பசுமை மதிப்பீடு சுற்றுச்சூழல் தரத்தை அடைவதில் தொழிற்சாலைகளின் செயல்திறனை எளிதாக்குகிறது மற்றும் தூய்மையான தொழில்நுட்பங்கள் மற்றும் பிற புதுமையான முயற்சிகளை பின்பற்றுவதன்மூலம் சுற்றுச்சூழலை மேம்படுத்துவதற்கு, நிர்ணயிக்கப்பட்ட தரத்தை விட சிறப்பாக செயல்பட தொழிற்சாலைகளை ஊக்குவிக்கும். செயல்திறன் அடிப்படையில் தொழிற்சாலைகள் பிளாட்டினம், தங்கம், வெள்ளி மற்றும் வெண்கலம் என மதிப்பிடப்படும்.*

தேசிய பசுமை தீர்ப்பாயத்தின் ஆணைப்படி எடுக்கப்பட்ட நடவடிக்கைகள்

- *மணலி தொழிற்சாலை பகுதியில் தற்போதுள்ள மாசு சுமையின் தன்மையை அறிவதற்கும், மேலும் இப்பகுதியில் அமைந்துள்ள தொழிற்சாலைகளின் விரிவாக்கம் மற்றும் இது போன்ற பிற தொழிற்சாலைகளுக்கு அப்பகுதியில் இடம் அளிக்க முடியுமா என்பது குறித்தான மாசு சுமை தாங்கும் திறன் (*Carrying Capacity*) ஆய்வினை திறன் வாய்ந்த நிறுவனங்கள் மூலமாக நடத்துவதற்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.*

- *தேசிய பசுமை தீர்ப்பாயத்தின் உத்தரவின்படி* OA *எண் 147/2020 தேதி 24-8-2022 இல் நாமக்கல் மாவட்டத்தில் உள்ள 943 கோழிப் பண்ணைகளும், ஈரோடு மாவட்டத்தில் உள்ள 70 கோழிப் பண்ணைகளும் தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு*

2023 ஏப்ரல் 13]

வாரியத்தின் கண்காணிப்பின்கீழ் கொண்டு வர நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

எளிதாக வணிகம் செய்யும் கொள்கையின்கீழ் அதிகாரம் வழங்கல்

- *13-4-2022, 23-8-2022 வாரிய ஆணையின்படி* B*1* & B*2 வகை திட்டங்களின்கீழ் வரும் மணல் குவாரிகளுடன் சிறு கனிமங்களின் சுரங்கம் உட்பட 29 வகை தொழில்களுக்கு இயக்குவதற்கான மற்றும் புதுப்பிப்பதற்கான இசைவாணைகள் வழங்குவதற்காக இணை தலைமை சுற்றுச்சூழல் பொறியாளர்க்கு (கண்காணிப்பு) அதிகாரம் வழங்கியது. மேலும் அதை நீட்டிக்க வாரியத்தின் கூட்டத் தேதி 16-3-2023-ல் ஒப்புதல் வழங்கப்பட்டது.*

வாரிய பணியாளர்களுக்கு திறன் மேம்பாடு

- *வாரியத்தின் பொறியாளர்கள் மற்றும் விஞ்ஞானிகளின் திறன் மற்றும் ஆற்றலை மேம்படுத்தும் பொருட்டு* "Listening to Leaders" *என்ற திட்டத்தை வாரியம் ஏற்பாடு செய்கிறது. ஒவ்வொரு 2-வது மற்றும் 4-வது வியாழன் தோறும் சுற்றுச்சூழல் பாதுகாப்பு துறையில் வல்லுநர்கள் சுற்றுச்சூழல் பாதுகாப்பு குறித்த பல்வேறு தலைப்புகளில் உரையாற்றுகின்றனர். இதில் இதுவரை ஏழு நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டுள்ளன.*

10. நிலையான வளர்ச்சி இலக்குகள்

*உலக அளவில் வறுமையை ஒழித்து, பூமியை பாதுகாத்து அனைத்து மக்களும் அமைதியுடனும், வளமுடனும் வாழ்வதற்காக அனைத்து நாடுகளும் ஒன்றுபட்டு செயல்படும் நோக்கத்துடன், நிலையான வளர்ச்சி இலக்குகள் (*Sustainable Development Goals*) நிர்ணயிக்கப்பட்டுள்ளன. செப்டம்பர் 2015-ல் நடைபெற்ற ஐக்கிய நாடுகள் சபையின் உச்சி மாநாட்டில் தீர்மானிக்கப்பட்ட 17 இலக்குகள் மற்றும் 169 குறிக்கோள்களை இந்த நிலையான வளர்ச்சி இலக்குகள் கொண்டுள்ளது. வரும் 2030 ஆம் ஆண்டிற்குள் இந்த குறிக்கோள்களை அடைவதற்கான ஒப்பந்தத்தில் இந்தியாவும் கையெழுத்திட்டுள்ளது. அதன்படி தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியத்திற்கு தொடர்புடைய இலக்குகள், குறிக்கோள்கள் மற்றும் குறியீடுகள், பின்வருமாறு வழங்கப்படுகிறது.*

இலக்கு-6:*"சுத்தமான நீர் மற்றும் சுகாதாரம்" – என்ற இலக்கின்கீழ் உருவாக்கப்பட்ட குறிக்கோள் 6.3-ன்படி, 2030 ஆம்*

ஆண்டிற்குள் உலகளவில் நீரின் தரத்தினை உயர்த்துவதற்காக, நீர் மாசினை குறைத்தல், கழிவுகள் கொட்டப்படுவதை தவிர்த்தல், தீங்கு விளைவிக்கும் கழிவுகள் வெளியேற்றத்தை குறைத்தல், கழிவுநீர் வெளியேற்றத்தை பாதியாகக் குறைத்தல் மற்றும் சுத்திகரிக்கப்பட்ட கழிவுநீரை மறுசுழற்சி செய்தல் ஆகியவற்றை மேற்கொள்ள வேண்டும்.

செயல்பாட்டு குழு-2: "ஆரோக்கியம் மற்றும் சுகாதாரம்" கீழ் இந்த இலக்கு செயல்படுத்தப்படுகிறது. இந்த இலக்கு தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியத்துடன் நேரடியாக தொடர்பற்றதாக இருப்பினும் 6.3.2 என்ற குறியீடு மூலம் மறைமுகத் தொடர்புடையதாக உள்ளது. "கழிவுநீரினை சுத்திகரிப்பு செய்து வெளியேற்றும் தொழிற்சாலைகளின் சதவீதம்" என்ற ஒரு குறியீடாக 6.3.2 அமைக்கப்பெற்று, இது தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியத்தின்கீழ் வருகிறது.

ஒன்றிய மாசு கட்டுப்பாடு வாரியம் நிர்ணயித்த அளவீடுகளை எட்ட தொழிற்சாலைகள் அனைத்தும் தொழிற்கழிவுநீரை சுத்திகரிப்பு செய்கின்றனவா? என்பதனை உறுதி செய்வது இக்குறிக்கோளின் நோக்கமாக உள்ளது. நீரின் பயன்பாட்டை குறைக்கவும், சுத்திகரிக்கப்பட்ட கழிவுநீரை முழுவதுமாக மறுசுழற்சி செய்யும் பொருட்டும், அதிக மாசு ஏற்படுத்தும் தொழிற்சாலைகள் பூஜ்ய திரவ வெளியேற்ற முறையினை அமைக்க வேண்டுமென அத்தொழிற்சாலைகளை தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் வலியுறுத்துகிறது. மேலும் இக்குறியீடு தேசியக் குறியீடாகும்.

இலக்கு-9: "தொழிற்சாலைகளில் புதுமை மற்றும் உள்கட்டமைப்பு" - என்ற இலக்கின்கீழ் வகுக்கப்பட்ட குறிக்கோள் 9.2-ன்படி, 2030 ஆம் ஆண்டிற்குள் தேசிய அளவில் வேலைவாய்ப்பு மற்றும் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் தொழிற்சாலைகளின் பங்களிப்பினை குறிப்பிடும்படியாக உயர்த்துதல் மற்றும் வளர்ந்த நாடுகளில் தொழிற்சாலைகளின் பங்களிப்பினை இரட்டிப்பாக்கல் ஆகும்.

செயல்பாட்டு குழு-5: "புதுமை, தொழில்மயமாக்கல் மற்றும் நிலையான வளர்ச்சி"-ன்கீழ் இந்த இலக்கு செயல்படுத்தப்படுகிறது. இந்த இலக்கு தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியத்துடன் நேரடியாக தொடர்பற்றதாக இருப்பினும் 9.4.1a என்ற குறியீடுமூலம் மறைமுகத் தொடர்புடையதாக உள்ளது. "காற்றுத் தர கண்காணிப்பு நிலையங்களின் எண்ணிக்கை" என்ற ஒரு

2023 ஏப்ரல் 13]

குறியீடாக 9.4.1a அமைக்கப்பெற்று, இது தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியத்தின்கீழ் வருகிறது.

தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் சுற்றுப்புற காற்று தரத்தினை மாவட்ட தலைநகரம் மற்றும் முக்கிய தொழிற்சாலை பகுதிகளை உள்ளடக்கிய 87 இடங்களில் (தேசிய சுற்றுப்புற காற்றுதர கண்காணிப்பு திட்டத்தின்கீழ்-52 நிலையங்கள், தொடர் சுற்றுப்புற காற்று தர கண்காணிப்பு நிலையங்கள்—34, நடமாடும் தொடர் சுற்றுப்புற காற்று தர கண்காணிப்பு நிலையம்—1) கண்காணித்து வருகிறது. இதுதவிர காற்றின் தரத்தினை பெருநகரங்கள், நகர்புறங்கள் மற்றும் ஊரக பகுதிகளில் கண்காணிக்கும் வண்ணம், வாரியம் இன்னும் 25 தொடர் சுற்றுப்புற காற்று தர கண்காணிப்பு நிலையங்களை அமைக்க நடவடிக்கை எடுத்து வருகிறது. நுண்துகள்கள் அளவீட்டின் அடிப்படையில், நான்கு நகரங்கள், காற்று தரத்தினை அடையாத நகரங்களாக உள்ளன. காற்றின் தரத்தினை இந்த நகரங்களில் சீர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

மேலும், இந்த குறியீடு தேசிய குறியீடு இல்லை, இருப்பினும் மாநில அளவில் மாநில குறியீட்டு கட்டமைப்பின் கீழும் மாவட்ட அளவில் மாவட்ட குறியீட்டு கட்டமைப்பின் கீழும், கண்காணிக்கப்பட்டு வருகிறது.

இலக்கு-12: *"வளங்களை பொறுப்பான முறையில் நுகர்தல் மற்றும் உற்பத்தி செய்தல்" என்ற இலக்கின் கீழ் வகுக்கப்பட்ட குறிக்கோள் 12.4—ன்படி, வேதிப்பொருட்கள் மற்றும் அனைத்து கழிவுகளை சர்வதேச சட்ட அமைப்புக்குள் சுற்றுச்சூழலை பாதிக்காத வண்ணம் மேலாண்மை செய்யவும், கழிவுகள் அவற்றின் வாழ்நாள் சுழற்சி முழுக்க சுற்றுச்சூழல் பாதிக்காமல் மேலாண்மை செய்யவும் மற்றும் கழிவுகள் காற்று, நீர் மற்றும் நிலம் ஆகியவற்றில் வெளியேற்றப்படுவதை குறிப்பிடும் படியான அளவில் குறைத்து சுற்றுச்சூழல் மற்றும் மக்கள் நலனில் ஏற்படும் பாதிப்பினை குறைத்தல் ஆகும். மேலும் இந்த இலக்கின்கீழ் வகுக்கப்பட்ட குறிக்கோள் 12.5-ன்படி, 2030 ஆம் ஆண்டிற்குள், தடுத்தல், குறைத்தல், மறுசுழற்சி செய்தல் மற்றும் மறு பயன்பாடு மூலம் கழிவுகளின் உற்பத்தியை குறைக்க வேண்டும் என்பதாகும்.*

செயல்பாட்டு குழு-6: "நிலையான நுகர்வு மற்றும் உற்பத்தி"—ன்கீழ் இந்த இலக்கு செயல்படுத்தப்படுகிறது. இந்த இலக்கு தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியத்துடன் நேரடியாக

தொடர்பற்றதாக இருப்பினும் 12.4.2a, 12.5.4 மற்றும் 12.5.5 ஆகிய குறியீடுகள் மூலம் மறைமுகத் தொடர்புடையதாக உள்ளது.

"மாநிலம் முழுவதும் கண்காணிக்கும் நிலையங்களை அமைத்து சுற்றுப்புற தரத்தினை கண்காணித்தல்" (குறியீடு எண்.12.4.2a), "தனி நபரால் உற்பத்தி செய்யப்படும் தீங்கு விளைவிக்கும் கழிவுகளின் அளவு" (குறியீடு எண்.12.5.4), மற்றும் "தீங்கு விளைவிக்கும் கழிவுகளின் உற்பத்தி மறுசுழற்சி விகிதாச்சாரம்" (குறியீடு எண்.12.5.5) ஆகிய குறியீடுகள் அமைக்கப்பெற்று, இவை தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியத்தின் கீழ் வருகின்றன.

நீர் தர கண்காணிப்பு நிலையங்கள், காற்றுத் தர கண்காணிப்பு நிலையங்கள், சுற்றுப்புற ஒலி தர கண்காணிப்பு நிலையங்கள் ஆகியவை மூலம் சுற்றுச்சூழலின் தரத்தை கண்காணிப்பது குறியீடு 12.4.2a—ன் நோக்கமாகும். தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் உள்நாட்டு நீர்நிலைகளின் தரத்தினை கண்காணிக்கும் பொருட்டு 175 கண்காணிப்பு நிலையங்களை அமைத்துள்ளது. அவற்றில் 158 நிலையங்கள் தேசிய நீர்தர கண்காணிப்பு திட்டத்தின் கீழும் 17 நிலையங்கள் சென்னை மாநகர நீர்வழி கண்காணிப்பு திட்டத்தின் கீழும் அமைக்கப்பட்டுள்ளது. அதேபோல் சுற்றுப்புற காற்றுத் தரம் மாநிலத்தில் 87 நிலையங்களிலும் சுற்றுப்புற ஒலி மாசின் அளவு சென்னையில் 10 நிலையங்களிலும் கண்காணிக்கப்பட்டு வருகிறது. இதற்கான தரவுகள் தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரிய இணையதளத்தில் பதிவேற்றம் செய்யப்பட்டு வருகிறது. மேலும் இக்குறியீடான 12.4.2a மாவட்ட அளவில், மாவட்ட குறியீட்டு கட்டமைப்பின் கீழ் கண்காணிக்கப்பட்டு வருகிறது.

தனிநபரால் உற்பத்தி செய்யப்படும் தீங்கு விளைவிக்கும் கழிவுகளை அளவிடுவது குறியீடு 12.5.4-ன் நோக்கமாகும். இக்குறியீடு தேசிய குறியீடாகும். இது மாவட்ட அளவிலும், மாவட்ட குறியீட்டு கட்டமைப்பின் கீழ் கண்காணிக்கப்பட்டு வருகிறது.

தீங்கு விளைவிக்கும் கழிவுகளின் உற்பத்தி மறுசுழற்சி விகிதாச்சாரத்தை கண்டறிவது குறியீடு 12.5.5-ன் நோக்கமாகும். இக்குறியீடு தேசிய குறியீடாகும். இது மாவட்ட அளவிலும், மாவட்ட குறியீட்டு கட்டமைப்பின் கீழ் கண்காணிக்கப்பட்டு வருகிறது.

இலக்கு-13: "காலநிலை நடவடிக்கை" என்ற இலக்கின் கீழ் வகுக்கப்பட்ட குறிக்கோள் 13.3—ன்படி கல்வி அறிவினை

2023 ஏப்ரல் 13]

மேம்படுத்துதல், விழிப்புணர்வை அதிகரித்தல், தனிநபர் மற்றும் நிறுவனங்களின் தரத்தை, பருவநிலை மாற்றத்தை கட்டுப்படுத்துதல், தகவமைத்துக் கொள்ளுதல், தாக்கத்தை குறைத்தல் மற்றும் முன்னெச்சரிக்கை செய்தல் ஆகியவற்றை உயர்த்துதல்.

செயல்பாட்டு குழு—7: "நிலையான சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றம்"—ன்கீழ் இந்த இலக்கு செயல்படுத்தப்படுகிறது. இந்த இலக்கு தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியத்துடன் நேரடியாக தொடர்பற்றதாக இருப்பினும் 13.3.2 என்ற குறியீடு மூலம் மறைமுகத் தொடர்புடையதாக உள்ளது.

"மாநிலத்தில் காலநிலை மாற்ற நடவடிக்கைகளை தகவமைக்க, தாக்கத்தை குறைக்க மற்றும் தொழில்நுட்ப பரிமாற்றம் மற்றும் மேம்பாட்டு நடவடிக்கைகளை செயல்படுத்த, நிறுவனங்கள் மற்றும் தனிநபர்களின் திறன்களை வலுப்படுத்துதல்" என்ற குறியீடாக 13.3.2 அமையப்பெற்று, இது தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியத்தின் கீழ் வருகிறது.

மக்களின் திறனை மேம்படுத்துதல் குறியீடு 13.3.2—ன் நோக்கமாகும். தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் தனது சுற்றுச்சூழல் பயிற்சி நிலையம் மூலம் பயிற்சி நிகழ்ச்சிகளை நடத்தி வருகிறது. மேலும் வாரியம் தனது ஊழியர்களை தொழில்நுட்ப நிபுணத்துவ நிறுவனங்கள் நடத்தும் பயிற்சி நிகழ்ச்சிகளில் பங்கேற்கும்படி ஊக்குவிக்கின்றது. அது மட்டுமல்லாமல் தனது மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர்கள் மூலம் பொது மக்களிடையே கழிவு மேலாண்மை தொடர்பான விழிப்புணர்வு நிகழ்ச்சிகளையும் குறிப்பாக பண்டிகை காலங்களில் மாநிலம் முழுவதும் தொடர்ந்து நடத்தி வருகிறது.

———

இணைப்பு-IV

(149 ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.)

மானியக் கோரிக்கை எண் 54-வனம் (சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத் துறை)

கொள்கை விளக்கக் குறிப்பு, 2023-2024

மணிநீரும் மண்ணும் மலையும் அணிநிழற்
காடும் உடைய தரண்.

(குறள் :742)

பளிங்கு போல் தெளிந்த நீரும், வெட்ட வெளியான நிலமும், மழையும், நிழல் உடைய காடும் இவை நான்கும் அரண் ஆகும் என்பதை வலியுறுத்தி மனித சமூகத்தின் நலன் பேணும் சாதகமான நிலைகளாக தெய்வப்புலவர் திருவள்ளுவர் 742—வது குறளில் குறிப்பிட்டுள்ளார். இவ்வாறு வாழ்கைக்குகந்த சூழ்நிலையினை மேற்கண்ட நான்கு காரணிகளுடன் உறுதி செய்வது என்பது, மூன்றில் ஒரு பங்கு நிலத்தினை மரப்பரப்பின்கீழ் கொண்டு வருவதன்மூலம் நீடித்த சூழலியல் அமைப்பு மேலாண்மையினை மேற்கொள்வதால் மட்டுமே சாத்தியமாகும்.

தொலைநோக்குப் பார்வை (Vision)

வனம் மற்றும் வன உயிரினங்களை சமூக பொறுப்பு மற்றும் அறிவியல் சார்ந்த மேலாண்மையில் நம் மாநிலத்தை இந்தியாவிலேயே முதன்மை மாநிலமாக உருவாக்கி தற்போதைய மற்றும் வருங்கால தலைமுறையினருக்கு நிலையான நீடித்த பொருளாதார, சமூக, சுற்றுச்சூழல், பண்பாட்டு பயன்களை வழங்குதல்.

தொலைநோக்கு செயல் (Mission)

தமிழ்நாட்டிலுள்ள வனம் மற்றும் வன உயிரின மேலாண்மையினை சமுதாய பங்களிப்பு, புதுமையான முயற்சிகள் ஒத்துழைப்பு மற்றும் அறிவியல் சார்ந்த முறையில் வளமான மற்றும் மீள்தன்மை உடைய வனங்களை உருவாக்குதல்.

2023 ஏப்ரல் 13]

வனச் செல்வங்கள் மற்றும் வன உயிரினங்களை நன்முறையில் மேலாண்மை செய்ய வனத் துறையிலுள்ள பணியாளர்களுக்கு திறன் மேம்பாடு மற்றும் தேவையான உபகரணங்களை வழங்குதல்.

வெளிப்படைத்தன்மை குறிக்கோள்கள் என்பது கொள்கையின் முக்கியமானதாக கொண்டும் மற்றும் நீடித்த நிலையான வனங்களை தற்போதைய மற்றும் வருங்கால தலைமுறையினருக்கு அளித்தலுக்கு திட்ட செயலாக்குதல் ஆகும்.

1. முன்னுரை

இயற்கை வளங்களாகிய வனங்கள், பொருளாதார வருவாய் அன்றி சூழலியல் சேவைகளுக்காகவே முக்கியத்துவம் பெறுகிறது. ஒரு நாட்டின் நலன் என்பது அதன் வன வளத்தையே சார்ந்துள்ளது. இயற்கை வளங்களை பாதுகாப்பதில் வனங்கள் முக்கிய பங்காற்றுகின்றன. மேலும், வனங்கள் மற்ற சூழலியல்களை விட அதிகளவு பல்லுயிர்களை கொண்டுள்ளதால் உலக பல்லுயிர் மேலாண்மையில் வனங்கள் முக்கியமானதாக உள்ளது.

பருவநிலை மாறுபாட்டிற்கான தீர்வாக சதுப்பு நிலங்கள், ஈர நிலங்கள், பவளப் பாறைகள், கரி நிலங்கள் (பீட் நிலங்கள்) மற்றும் பிறநில அமைப்புகள் கொண்ட வனங்கள் அமைந்துள்ளன. சுற்றுச்சூழல் பாதுகாப்பு, பருவநிலை சமநிலை பேணுதல் மற்றும் சீரான மழைபொழிவு ஆகியவற்றில் வனங்கள் பெரும் பங்காற்றுகிறது.

நாட்டின் தென்கோடியில் அமையப் பெற்றுள்ள, நமது மாநிலத்தின் பரப்பு 1,30,060 சதுர கிலோமீட்டர் ஆகும். இது, நாட்டின் மொத்தப்பரப்பில் 3.96% உள்ளது. புவியியல்ரீதியாக, கடலோர சமவெளிகள், கிழக்கு தொடர்ச்சி மலைகள், மத்திய பீடபூமி மற்றும் மேற்கு தொடர்ச்சி மலைகள் என நான்கு மண்டலங்களாக மாநிலம் பிரிக்கப்பட்டுள்ளது.

தேசிய வனக் கொள்கை 1988, மாநில வனக் கொள்கை 2018 மற்றும் நிலையான வளர்ச்சி குறிக்கோள்கள் ஆகியவற்றில் குறிப்பிடப்பட்டுள்ள இலக்குகளை அடைவதற்கான திட்டங்களுக்கு தேவையான நடவடிக்கைகள் தொடர்ச்சியாக தொய்வின்றி வனத்

துறையால் மேற்கொள்ளப்பட்டு வரப்படுகின்றன. வனங்களின் பாதுகாப்பு, தரம் குன்றிய வனங்களை மீட்டெடுத்தல் மற்றும் காடு வளர்ப்பு ஆகியற்றின்மூலம் வனப் பரப்பினை மேம்படுத்துதலை அர்ப்பணிப்புடன் வனத் துறை மேற்கொள்ளும்.

தற்போதைய நிலையினை உணர்ந்து, வனங்களுக்கு வெளியே வன மற்றும் மரப் பரப்பினை அதிகரித்து பசுமைப் பரப்பின்கீழ் கொண்டு வருவதிலும் வனத் துறை அனைத்து விதமான முயற்சிகளையும் மேற்கொண்டு வருகிறது. அதே நேரத்தில் தரங்குன்றிய வனங்களை மீட்டெடுத்தல், மண் மற்றும் ஈரப்பதப் பாதுகாப்புப் பணிகள், வாழ்விட மேம்பாடு, கருத்தரங்குகள், பட்டறைப் பயிற்சிகள் வாயிலாக மக்களுக்கு விழிப்புணர்வு அளித்து, அவர்களின் திறனை மேம்படுத்தி ஊக்குவித்தல் வாயிலாக உள்ளூர் சமூகங்களுக்கும், பொதுமக்களுக்கும் அதிகாரமளித்தல் ஆகியவற்றில் ஒரு முக்கிய கவனம் செலுத்தப்பட்டு வருகிறது. சூழல் சுற்றுலாவினை மேம்படுத்த, துறைமூலம் பொருத்தமான இடங்களில் சூழல் சுற்றுலா மையங்கள் உருவாக்கப்படும்.


மாநிலத்தில் வன உயிரினங்கள் மற்றும் பல்லுயிர்களை பாதுகாத்தல் மற்றும் மேம்படுத்தும் நோக்கில் மூன்று மீட்பு மற்றும் மறுவாழ்வு மையங்களை நிறுவுதல், பள்ளிக்கரணை பாதுகாப்பு மையம், கழுவேலி பாதுகாப்பு மையம், பல்லுயிர் அருங்காட்சியகம் மற்றும் பாதுகாப்பு மையம், கிண்டி சிறுவர் பூங்காவினை மறு வடிவமைப்பு செய்தல், சென்னைக்கு அருகில் தாவரவியல் பூங்கா, லாங்வுட் சோலைக் காடுகள் பாதுகாப்பு மையம் மற்றும் தெப்பக்காடு யானைகள் முகாம் நவீனமயமாக்குதல் போன்ற திட்டங்கள் முக்கிய திட்டங்களாக தொடங்கப்பட்டுள்ளன.


2. தமிழ்நாட்டின் வன வளங்கள்


இந்திய தொலையுணர் செயற்கைக்கோள்மூலம் பெறப்படும் தரவுகளின் அடிப்படையில், இரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை இந்திய மாநிலங்களின் வன நிலை குறித்த அறிக்கை வெளியிடப்படுகிறது. 2021 ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட இந்த அறிக்கையின்படி, மாநிலத்தில் வனப் பரப்பு 26,419.23 சதுர கிலோமீட்டராக உள்ளன. இது மாநிலத்தின் புவிப்பரப்பில் 20.31 விழுக்காடாகும்.

2023 ஏப்ரல் 13]

வன அடர்த்தியைப் பொருத்தமட்டில், தமிழ்நாட்டில் 3593.01 சதுர கிலோமீட்டர் புவி பரப்பில் (2.76 விழுக்காடு), மிக அடர்ந்த வனப் பகுதியாகவும் (மிஅவ), 11,034.03 சதுர கிலோமீட்டர் (புவி பரப்பில் 8.48 விழுக்காடு) அடர் வனப் பகுதியாகவும் (அவ), 11,729.19 சதுர கிலோமீட்டர் (புவி பரப்பில் 9.07 விழுக்காடு) வனப் பகுதி திறந்த வனமாக (திவ) உள்ளது. வனப்பரப்பு, காப்புக்காடு பகுதிகளுக்குள் 17,531 ச.கி.மீ பரப்பளவும், காப்புக்காடு பகுதிகளுக்கு வெளியே 8888 ச.கி.மீ. பரப்பளவும் கொண்டுள்ளது.







TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

[2023 ஏப்ரல் 13

இந்திய வன நில அளவை நிறுவனத்தால் வெளியிடப்பட்டுள்ள 2019 ஆம் ஆண்டுக்கான அறிக்கையுடன், 2021 ஆம் ஆண்டு அறிக்கையினை ஒப்பிட்டுப் பார்க்கும்பொழுது தமிழ்நாட்டின் வனப் பரப்பு 55.21 சதுர கிலோ மீட்டர் அதிகரித்துள்ளது. தமிழ்நாட்டில் வன நிலம் அல்லாத நிலங்களில் மரப் பரப்பு 4,424 சதுர கிலோ மீட்டராக உள்ளது என மாதிரி அடிப்படையிலான ஆய்வுமூலம் மதிப்பிடப்பட்டுள்ளது. மாநிலத்தின் மொத்த வனப்பரப்பு மற்றும் மரப்பரப்பு 30,843.23 சதுர கிலோ மீட்டராகும். இது மாநிலத்தின் நிலப்பரப்பில் 23.71% விழுக்காடாகும்.

தமிழ்நாட்டில் உள்ள வனங்கள் 9 வன வகைக் குழுக்களாக (Forest Type Groups) வகைப்படுத்தப்பட்டுள்ளன. மேலும், அவைகள் 39 வன உட்பிரிவு வகைகளாகப் (Forest Types) பிரிக்கப்பட்டுள்ளன. முக்கிய வன வகைக் குழுக்கள் கீழே உள்ளவாறு வகைப்படுத்தப்பட்டுள்ளன.

1. வெப்பமண்டல ஈர பசுமைமாறாக் காடுகள்
2. வெப்பமண்டல பகுதியளவு பசுமைமாறாக் காடுகள்
3. வெப்பமண்டல ஈர இலையுதிர் காடுகள்
4. அலையாத்தி மற்றும் சதுப்பு நிலக் காடுகள்
5. வெப்பமண்டல வறண்ட இலையுதிர் காடுகள்,
6. வெப்பமண்டல முட்புதர் காடுகள்,
7. வெப்பமண்டல வறண்ட பசுமைமாறாக் காடுகள்
8. பகுதி வெப்பமண்டல அகன்ற இலை காடுகள்
9. மிதவெப்ப ஈர இலையுதிர் காடுகள்.

உலகிலுள்ள முக்கியமான 36 உயிர்ப்பன்மை மிக்க தளங்களில் மேற்குத் தொடர்ச்சி மலை ஒன்றாக விளங்குகிறது. இப்பகுதியானது குறிப்பிடத்தக்க அளவில் பல்லுயிர்களை கொண்டுள்ளது. மேலும் இந்தியாவின் மூன்று மாபெரும் தனிச் சிறப்புமிக்க உயிர்ப்பன்மை நிறைந்த இடங்களில் ஒன்றாகவும் உள்ளது. மாநிலத்தின் நீண்ட கடற்கரையும், சதுப்புநிலங்கள் மற்றும் பவளப் பாறைகள் உட்பட செழுமையான பல்லுயிர்களை கொண்டுள்ளது, இம்மாநிலத்தின் சிறப்பாகும். மாநில உயிர்ப்பன்மையின் செழுமைக்கு கிழக்குத் தொடர்ச்சி மலையும் முக்கிய பங்களிக்கிறது. 2017-2031 ஆம்

2023 ஏப்ரல் 13]

ஆண்டுகளுக்கான தேசிய வன உயிரினச் செயல்திட்டத்தில், வனங்களின் உயிர்ப்பன்மையினை செழுமைப்படுத்த வலியுறுத்தப்பட்டுள்ளது. அதனடிப்படையில், அரிதான மற்றும் அழிந்து வரும் உயிரின வகைகளை பாதுகாத்தல் மற்றும் வனஉயிரின வாழ்விடங்களை அதன் இயல்பு நிலைக்கு கொண்டு வருவதன்மூலம் அதன் தரத்தினை மேம்படுத்துதல் போன்ற நடவடிக்கைகள் தமிழ்நாட்டின் உயிர்ப்பன்மை மிக்க இடங்களில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

2.1 தாவர பல்லுயிர்ப் பெருக்கம்

இந்தியாவின் மூடியவிதை தாவர பன்முகத்தன்மை 17,672 இனங்களை உள்ளடங்கியது. இதில் 5,640-இனங்களுடன் தமிழ்நாடு இந்தியாவிலேயே முதல் இடத்தில் உள்ளது. மேலும் 533 உள்ளூர் வகை தாவரங்கள்,230 அச்சுறுத்தப்படும் வகையில் உள்ள இனங்கள், 1,559 மருத்துவ தாவரங்கள் மற்றும் 260 வகையான பயிர் வகைகளின் மூல ஆதாரத் தாவர இனங்கள் மாநிலத்தில் கண்டறியப்பட்டுள்ளன. நாட்டில் திறந்த விதை தாவர பன்முகத்தன்மை 64 இனங்கள். இதில் தமிழ்நாட்டில் 4 வகையான உள்ளூர் வகையில் திறந்த விதை தாவர இனங்கள் மற்றும் சுமார் 60 அறிமுகப்படுத்தப்பட்ட இனங்கள் உள்ளன. இந்தியாவில் பூவாத் தாவரங்களின் பன்முகத்தன்மை 1022 இனங்களை உள்ளடக்கியது. அவற்றில் தமிழ்நாட்டில் சுமார் 184 இனங்கள் உள்ளன. தமிழ்நாடு வனப் பகுதிகளில் ஏராளமான பிரையோபைட்டுகள் (பாசி), லிகன்ஸ் (மரப்பாசி), பூஞ்சை, பாசிகள், பாக்டீரியா ஆகியவைகள் காணப்படுகின்றன.

2.2 விலங்கினப் பல்லுயிர் பெருக்கம்

தமிழ்நாட்டின் உயிரின பல்லுயிர் பெருக்க தன்மையில் 165 வகையான நன்னீர் மீன்கள், 76 வகையான நீர் நில வாழ்வன, 177 வகையான ஊர்வன, 454 வகையான பறவைகள் மற்றும் 187 வகையான பாலூட்டிகள் ஆகியவை அடங்கும். உயிரினப் பேணுகை மற்றும் மேலாண்மை திட்ட அறிக்கையின்படி அச்சுறுத்துலுக்கு உள்ளாகும் இனங்களில், 126 வகையான நீர்வாழ்வன, 56 வகையான நீர்நில வாழ்வன, 77 வகையான ஊர்வன, 32 வகையான பறவைகள் மற்றும் 40 வகையான பாலூட்டிகள் உள்ளன. உள்ளூர் வகை விலங்கினங்களாக 36 வகையான நீர் நில வாழ்வன, 63 வகையான

ஊர்வன, 17 வகையான பறவைகள் மற்றும் 24 வகையான பாலூட்டிகள் உள்ளன.

வனம் மற்றும் வன உயிரினங்களை பாதுகாப்பதிலும், தேசிய பூங்காக்கள் மற்றும் சமூக பாதுகாப்பு பகுதி வன உயிரின சரணாலயப் பகுதிகளை உள்ளடக்கிய பாதுகாக்கப்பட்ட பகுதிகளை அமைப்பதில் தமிழ்நாடு இந்தியாவிலேயே முன்னோடி மாநிலமாகும். மேலும் வனம் மற்றும் வன உயிரினங்களை பாதுகாக்கும் வகையில், புலிகளை முன்னிலைப்படுத்தி புலிகள் பாதுகாக்கப்படுவது மட்டுமின்றி அதைச் சார்ந்த வன உயிரினங்களையும் பாதுகாப்பதற்காக 5 புலிகள் பாதுகாப்பகங்கள் உருவாக்கப்பட்டுள்ளன. 1988 ஆம் ஆண்டு தேசிய வன உயிரின செயல்திட்டத்தில் கூறப்பட்டுள்ளவாறு பாதுகாக்கப்பட்ட வன உயிரினப் பகுதிகள், வனப் பரப்பில் 25 விழுக்காடு கொண்டிருக்க வேண்டும் என்பதையும் தாண்டி, தமிழ்நாடு 36.13 விழுக்காடு (8378.528 ச.கி.மீ) வனப் பகுதியை பாதுகாக்கப்பட்ட பகுதியாக கொண்டிருப்பது நமது மாநிலத்தின் பெருமையாகும்.

2.3. தேசிய பூங்காக்கள்

சூழலியல், வன உயிரினம், தாவர வளம், புவியமைப்பு, வன உயிரின முக்கியத்துவம் போன்றவற்றில் தனித்தன்மையுள்ள இடங்களைப் பேணிப்பாதுகாக்கும்பொருட்டு, வன உயிரின (பாதுகாப்பு) சட்டம், 1972, பிரிவு 35-ன்கீழ் தேசிய பூங்காக்கள் அறிவிக்கை செய்யப்படுகின்றன. நமது மாநிலத்தில் அவ்வாறு கீழ்க்கண்ட 5 தேசிய பூங்காக்கள் அறிவிக்கை செய்யப்பட்டுள்ளன:

வ. எண்	தேசிய பூங்கா	பரப்பளவு (ஹெக்டரில்)	மாவட்டம்	அறிவிக்கை செய்யப்பட்ட ஆண்டு
1	மன்னார் வளைகுடா கடல்வாழ் தேசிய பூங்கா	52,602.00	இராமநாதபுரம், தூத்துக்குடி, திருநெல்வேலி மற்றும் கன்னியாகுமரி	1986
2	இந்திரா காந்தி தேசிய பூங்கா	11,710.00	கோயம்புத்தூர்	1989

2023 ஏப்ரல் 13]

வ. எண்	தேசிய பூங்கா	பரப்பளவு (ஹெக்டரில்)	மாவட்டம்	அறிவிக்கை செய்யப்பட்ட ஆண்டு
3	*கிண்டி தேசிய பூங்கா*	*270.57*	*சென்னை*	*1978*
4	*முக்குர்த்தி தேசிய பூங்கா*	*7,846.00*	*நீலகிரி*	*2001*
5	*முதுமலை தேசிய பூங்கா*	*10,323.00*	*நீலகிரி*	*2005*

2.4. வன உயிரின சரணாலயங்கள்

ஒரு குறிப்பிட்ட இடத்தின் தனித்துவமான சூழலியல், வன உயிரினங்கள், தாவர வகைகள், புவியமைப்பு மற்றும் வன உயிரின முக்கியத்துவம் போன்றவற்றைக் கருத்தில்கொண்டு அப்பகுதிகள் வன உயிரின (பாதுகாப்பு) சட்டம் 1972 பிரிவு 18 மற்றும் 26 A *ஆகியவற்றின்கீழ் வன உயிரின சரணாலயமாக அறிவிக்கப்பட்டுள்ளது. மேலும், சுற்றுச்சூழல் மற்றும் வன உயிரினங்களை பேணுதல், மேம்படுத்துதல் ஆகிய நோக்கங்களைக் கொண்டு தமிழ்நாட்டில் 17 வன உயிரின சரணாலயங்கள் உள்ளன. அவை பின்வருமாறு:—*

வ. எண்	வன உயிரின சரணாலயம்	பரப்பளவு (ஹெக்டரில்)	மாவட்டம்	அறிவிக்கை செய்யப்பட்ட ஆண்டு
1	*முதுமலை வன உயிரின சரணாலயம்*	*21,776.00*	*நீலகிரி*	*1940*
2	*முண்டந்துறை வன உயிரின சரணாலயம்*	*58,207.58*	*திருநெல்வேலி மற்றும் தென்காசி*	*1962*
3	*கோடியக்கரை வன உயிரின சரணாலயம்*	*1,728.81*	*நாகப்பட்டினம்*	*1967*
4	*இந்திரா காந்தி வன உயிரின சரணாலயம்*	*84,149.00*	*கோயம்புத்தூர் மற்றும் திருப்பூர்*	*1976*

வ. எண்	வன உயிரின சரணாலயம்	பரப்பளவு (ஹெக்டரில்)	மாவட்டம்	அறிவிக்கை செய்யப்பட்ட ஆண்டு
5	களக்காடு வன உயிரின சரணாலயம்	22,358.00	திருநெல்வேலி மற்றும் தென்காசி	1976
6	வல்லநாடு வெளிர்மான் சரணாலயம்	1641.00	தூத்துக்குடி	1987
7	சாம்பல் நிற அணில் சரணாலயம்	48,520.00	விருதுநகர்	1988
8	கன்னியாகுமரி வன உயிரின சரணாலயம்	40,239.55	கன்னியாகுமரி	2007
9	சத்தியமங்கலம் வன உயிரின சரணாலயம்	1,41,160.94	ஈரோடு	2008
10	மேகமலை வன உயிரின சரணாலயம்	26,910.81	தேனி மற்றும் மதுரை	2009
11	கோடியக்கரை வன உயிரின சரணாலயம் பிளாக் ஏ & பி	12,407.27	தஞ்சாவூர், திருவாரூர் மற்றும் நாகப்பட்டிணம்	2013
12	கொடைக்கானல் வன உயிரின சரணாலயம்	60,895.48	திண்டுக்கல் மற்றும் தேனி	2013
13	கங்கைகொண்டான் புள்ளிமான் சரணாலயம்	288.40	திருநெல்வேலி	2013
14	காவேரி வடக்கு வன உயிரின சரணாலயம்	50,433.48	கிருஷ்ணகிரி	2014
15	நெல்லை வன உயிரின சரணாலயம்	35,673.33	தென்காசி	2015

2023 ஏப்ரல் 13]

வ. எண்	வன உயிரின சரணாலயம்	பரப்பளவு (ஹெக்டரில்)	மாவட்டம்	அறிவிக்கை செய்யப்பட்ட ஆண்டு
16	கடவூர் தேவாங்கு சரணாலயம்	11,806.56	கரூர் மற்றும் திண்டுக்கல்	2022
17	காவேரி தெற்கு வன உயிரினச் சரணாலயம்	68640.61	கிருஷ்ணகிரி மற்றும் தருமபுரி	2022

2.5 பறவைகள் சரணாலயங்கள்

உலகளவில் அதிக எண்ணிக்கையிலான இடம் பெயர் பறவைகளை ஈர்க்கும் இடமாக தமிழ்நாடு அறியப்படுகிறது. ஒவ்வொரு ஆண்டும் உலகின் பல்வேறு பகுதிகளிலிருந்து வலசை போகும் பறவைகள், தமிழ்நாட்டில் உள்ள பல்வேறு குளங்கள் மற்றும் ஏரிகளில் அதிகளவில் வருகின்றன. அவற்றிற்கு உணவளிப்பதற்கும், இனப்பெருக்கம் செய்வதற்கும் மற்றும் வளர்ப்பதற்கும் சிறந்த சூழல் பாதுகாப்புடன்கூடிய வாழ்விடங்கள் தமிழ்நாட்டில் அமைந்துள்ளது. தமிழ்நாட்டில் 1936 ஆம் ஆண்டு அறிவிக்கை செய்யப்பட்ட வேடந்தாங்கல் பறவைகள் சரணாலயம் இந்தியாவில் முதன்முதலாக அறிவிக்கை செய்யப்பட்ட பறவைகள் சரணாலயம் ஆகும். இதுவரை தமிழ்நாட்டில் பின்வரும் 17 பறவைகள் சரணாலயங்கள் அறிவிக்கை செய்யப்பட்டுள்ளன:—

வ. எண்	பறவைகள் சரணாலயத்தின் பெயர்	பரப்பளவு ஹெக்டேரில்	மாவட்டம்	ஆண்டு
1.	வேட்டங்குடி பறவைகள் சரணாலயம்	38.40	சிவகங்கை	1977
2.	பழவேற்காடு ஏரி பறவைகள் சரணாலயம்	15,367	திருவள்ளூர்	1980
3.	கரிக்கிலி பறவைகள் சரணாலயம்	61.21	காஞ்சிபுரம்	1989
4.	காஞ்சிரங்குளம் பறவைகள் சரணாலயம்	104.00	இராமநாதபுரம்	1989

[2023 ஏப்ரல் 13

வ. எண்	பறவைகள் சரணாலயத்தின் பெயர்	பரப்பளவு ஹெக்டேரில்	மாவட்டம்	ஆண்டு
5.	சித்திரங்குடி பறவைகள் சரணாலயம்	47.630	இராமநாதபுரம்	1989
6.	கூந்தங்குளம் பறவைகள் சரணாலயம்	129.000	திருநெல்வேலி	1994
7.	வெள்ளோடு பறவைகள் சரணாலயம்	77.180	ஈரோடு	1997
8.	வேடந்தாங்கல் பறவைகள் சரணாலயம்	30.00	காஞ்சிபுரம்	1936
9.	உதயமார்த்தாண்டபுரம் பறவைகள் சரணாலயம்	45.28	திருவாரூர்	1998
10.	மேலச்செல்வனூர், கீழச்செல்வனூர் பறவைகள் சரணாலயம்	593.08	இராமநாதபுரம்	1998
11.	வடுவூர் பறவைகள் சரணாலயம்	128.100	திருவாரூர்	1999
12.	கரைவெட்டி பறவைகள் சரணாலயம்	453.710	அரியலூர்	1999
13.	தேர்த்தங்கல் பறவைகள் சரணாலயம்	29.290	இராமநாதபுரம்	2010
14.	சக்கரக்கோட்டை பறவைகள் சரணாலயம்	230.490	இராமநாதபுரம்	2012
15.	ஒசுடு ஏரி பறவைகள் சரணாலயம்	331.785	விழுப்புரம்	2015
16.	கழுவேலி பறவைகள் சரணாலயம்	5151.600	விழுப்புரம்	2021
17.	நஞ்சராயன் பறவைகள் சரணாலயம்	125.865	திருப்பூர்	2022

2023 ஏப்ரல் 13]

2.6 பாதுகாக்கப்பட்ட சமுதாயப் பகுதிகள்

தாவர வகைகள் மற்றும் உயிரினங்களை பாதுகாக்க சில பொது நிலங்கள், வன உயிரின (பாதுகாப்பு) சட்டம், 1972 இன்படி பாதுகாக்கப்பட்ட சமுதாயப் பகுதிகளாக அறிவிக்கை செய்யப்படுகின்றன. உள்ளூர் மக்களுடன் கலந்தாலோசித்தே இந்தப் பகுதிகள், பாதுகாக்கப்பட்ட சமுதாயப் பகுதிகள் என அறிவிக்கப்படுகின்றன. மாநிலத்தில், வன உயிரின (பாதுகாப்பு) சட்டம், 1972 பிரிவு 36A இன்கீழ் பின்வரும் இரண்டு வன உயிரின காப்பகங்கள் உள்ளன:—

வ. எண்.	பாதுகாப்புப் பகுதிகள்	பரப்பளவு (ஹெக்டேரில்)	மாவட்டம்	அறிவிக்கை செய்யப்பட்ட ஆண்டு
1.	திருப்புடை மருதூர் பறவைகள் பாதுகாப்புப் பகுதி	*2.84*	திருநெல்வேலி	*2005*
2.	சுசீந்திரம்—தேரூர்—மணகுடி பாதுகாப்புப் பகுதி	*484.77*	கன்னியாகுமரி	*2015*
3.	பாக் வளைகுடா கடற்பசு பாதுகாப்புப் பகுதி	*44834.00*	தஞ்சாவூர்	*2022*

2.7 புலிகள் காப்பகங்கள்

இந்தியாவில் அழிந்து வரும் புலிகள் எண்ணிக்கையை அதிகரிக்கும் நோக்கிலும், அதன் வாழ்விடங்களின் அறிவியல், பொருளாதார, கலாச்சார மற்றும் சூழலியல் மதிப்பீடுகளை

[2023 ஏப்ரல் 13

காக்கும் நோக்கிலும் ஒன்றிய அரசால், 1973 ஆம் ஆண்டு, ஏப்ரல் திங்கள் புலிகள் திட்டம் துவங்கப்பட்டது. இதன்மூலம் வாழ்விட முக்கியத்துவம் வாய்ந்த பகுதிகளைப் பாதுகாப்பதும், மக்களின் கல்வி மற்றும் பொழுதுபோக்கு நன்மைகளை அவர்களுக்கு அளிப்பதும் இத்திட்டத்தின் ஒரு நோக்கமாகும்.


புலிகள் காப்பகத் திட்டம் அறிவிப்பு செய்வதற்கு 11 ஆண்டுகள் முன்னரே தமிழ்நாட்டில் 1962 ஆம் ஆண்டிலேயே திருநெல்வேலி மாவட்டம், முண்டந்துறையில் புலிகள் பாதுகாப்பின் முக்கியத்துவத்தினை கருத்தில்கொண்டு புலிகள் சரணாலயத்தை தமிழ்நாடு அரசு அறிவித்து முன்னோடி மாநிலமாக திகழ்கிறது.

தமிழ்நாட்டில் உள்ள புலிகள் காப்பகங்களின் விவரங்கள் பின்வருமாறு:—

வ. எண்.	புலிகள் காப்பகங்கள்	மாவட்டம்	உள் மண்டலம் ச.கி.மீ	வெளி மண்டலம் ச.கி.மீ	மொத்த பரப்பளவு ச.கி.மீ
1	களக்காடு – முண்டந்துறை புலிகள் காப்பகம்	திருநெல்வேலி மற்றும் தென்காசி	895.000	706.542	1,601.542
2	ஆனைமலை புலிகள் காப்பகம்	கோயம்புத்தூர் மற்றும் திருப்பூர்	958.590	521.280	1,479.870
3	முதுமலை புலிகள் காப்பகம்	நீலகிரி	321.000	367.590	688.590
4	சத்தியமங்கலம் புலிகள் காப்பகம்	ஈரோடு	793.493	614.912	1,408.405
5	திருவில்லி—புத்தூர் மேகமலை புலிகள் காப்பகம்	விருதுநகர், தேனி மற்றும் மதுரை	641.862	374.709	1,016.571

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY — TRUTH ALONE TRIUMPHS

புலிகள் காப்பகம் உள் மற்றும் வெளி மண்டல பகுதிகள்



2.8 யானைகள் காப்பகங்கள்

யானைகள் மற்றும் அவற்றின் வாழ்விடங்களை பாதுகாக்கும் நோக்கத்துடன் 1992 ஆம் ஆண்டு ஒன்றிய அரசால் யானைகள் திட்டம் தொடங்கப்பட்டது. யானையின் வழித்தடங்கள் மற்றும் வாழ்விடத்தை பாதுகாப்பது, வனப் பகுதியில் யானைகள் வாழ்வதற்கு தகுந்த சூழ்நிலையினை உருவாக்குவது இத்திட்டத்தின் முக்கிய நோக்கமாகும். யானைகளின் வாழ்விடம் மற்றும் இடம் பெயர்தல் போன்றவற்றைக் கருத்தில்கொண்டு, மேலாண்மை நோக்கத்திற்காக யானைகள் காப்பகங்கள் அமைக்கப்படுகின்றன. ஒரு யானை காப்பகம் என்பது இரண்டு அல்லது மூன்று வனக் கோட்டங்கள் அல்லது மாவட்டங்களை உள்ளடக்கியதாக இருக்கும். களக்காடு—முண்டந்துறை புலிகள் காப்பகம் மற்றும் கன்னியாகுமரி வன உயிரின சரணாலயங்களில் உள்ள நிலப்பரப்பில் 1,19,748.26 ஹெக்டேர் பரப்பளவு கொண்ட நிலப்பரப்பை அகஸ்த்தியமலை யானைகள் காப்பகமாக 2022-2023 ஆம் ஆண்டில் அறிவிக்கை செய்யப்பட்டுள்ளது. தமிழ்நாட்டில் பின்வரும் 5 யானைகள் காப்பகங்களை ஒன்றிய அரசு அறிவித்துள்ளது. அவை பின்வருமாறு:—


வ. எண்.	யானைகள் காப்பகங்கள்	மாவட்டம்	பரப்பளவு (ஹெக்டேரில்)
1	நீலகிரி கிழக்குத் தொடர்ச்சி மலை — (நீலகிரி யானைகள் காப்பகம்)	நீலகிரி, ஈரோடு, தருமபுரி மற்றும் கிருஷ்ணகிரி	4,66,245
2	நிலம்பூர் அமைதிப் பள்ளத்தாக்கு – கோயம்புத்தூர் யானைகள் காப்பகம் (நிலம்பூர் யானைகள் காப்பகம்)	கோயம்புத்தூர் மற்றும் நீலகிரி	56,557
3	பெரியார் யானைகள் காப்பகம் (திருவில்லிபுத்துர் யானைகள் காப்பகம்)	தேனி, விருதுநகர் மற்றும் தென்காசி	1,24,910
4	ஆனைமலை – பரம்பிக்குளம் யானைகள் காப்பகம் (ஆனைமலை யானைகள் காப்பகம்)	கோயம்புத்தூர் மற்றும் திண்டுக்கல்	1,45,723
5	அகஸ்த்தியர் மலை யானைகள் காப்பகம்	திருநெல்வேலி மற்றும் கன்னியாகுமரி	119748.26

2023 ஏப்ரல் 13]

2.9. உயிர்க்கோள் காப்பகங்கள்

உயிர்க்கோள் காப்பகங்கள் ஒன்றிய அரசால் அறிவிக்கை செய்யப்பட்டு, யுனெஸ்கோவின் மனிதன் மற்றும் உயிர்க்கோளம் (MAB) திட்டத்தின்கீழ் அங்கீகரிக்கப்பட்டு உள்ளூர் சமூகங்களின் முயற்சி மற்றும் அறிவியல் சார்ந்த மேலாண்மைமூலம் நிலையான வளர்ச்சியினை ஊக்குவிக்கும் நோக்கில் ஏற்படுத்தப்பட்டன. 1971—ல் யுனெஸ்கோவால் உயிர்க்கோள் காப்பகங்கள் திட்டம் தொடங்கப்பட்டது. இத்திட்டத்தின் நோக்கமானது உயிர்க்கோள் காப்பக பகுதிகளில் உயிரினங்கள் மற்றும் சூழலியல் தன்மை மாறாமல் பேணுவதாகும். மேலும் உயிரினங்களை அந்தந்த சூழலியல் மண்டலங்களில் பாதுகாத்து அதனால் ஏற்படும் மாற்றங்களை கண்காணிப்பதற்கும், மதிப்பீடு செய்வதற்கும் ஏற்ற ஒரு பரிந்துரை அமைப்பாக இது செயல்படும். தமிழ்நாட்டில் கீழ்க்கண்ட 3 உயிர்க்கோள் காப்பகங்கள் உள்ளன:—

வ. எண்	உயிர்க்கோள் காப்பகங்கள்	மாவட்டம்	பரப்பளவு (ஹெக்டேரில்)
1	*நீலகிரி உயிர்க்கோள் காப்பகம்*	*நீலகிரி*	*2,53,800*
2	*மன்னார் வளைகுடா உயிர்க்கோள் காப்பகம்*	*இராமநாதபுரம், தூத்துக்குடி, திருநெல்வேலி மற்றும் கன்னியாகுமரி*	*10,50,000*
3	*அகஸ்திய மலை உயிர்க்கோள் காப்பகம்*	*கன்னியாகுமரி, தென்காசி மற்றும் திருநெல்வேலி*	*1,67,236*



3. மனித வன உயிரின மோதலைத் தடுப்பதற்காக தமிழ்நாடு வனத் துறையின் சமீபத்திய நடவடிக்கைகள்

- *மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் வனப் பகுதிகளில் இயற்கைக்கு மாறான மற்றும் தவிர்க்கக்கூடிய யானைகளின் இறப்புகள் தொடர்பாக விரிவான பகுப்பாய்வு செய்து அது தொடர்பான விரிவான புரிதல் குறித்த மேலாண்மை நடவடிக்கைகளை பரிந்துரைக்க, இந்தியாவிலேயே முதன்முறையாக யானைகள் இறப்பு தணிக்கை கட்டமைப்பினை (*Elephant Death Audit Framework*) அறிமுகப்படுத்தியுள்ளார்.*

- *இந்தியாவிலேயே முதன்முறையாக வன உயிரினங்களுக்கு சாதகமான, உட்கட்டமைப்புகளை இனிவரும் நாட்களில் உருவாக்குவதற்கான செயல்முறைகளை பரிந்துரைப்பதற்கான மாநில அளவிலான ஆலோசனைக் குழு உருவாக்கப்பட்டுள்ளது.*

- *யானைகள் மின்சாரம் தாக்கி இறப்பதை முற்றிலுமாக தடுப்பதற்காக மின்வாரிய அலுவலர்களுடன் இணைந்து மின்சாரக் கம்பிவடப் பாதைகளை கூட்டாய்வு செய்தல், ஏற்கனவே உள்ள பகிர்வு மின்மாற்றிகளை சுற்றி மின்கம்பங்களில் முள்கம்பி வேலி அமைப்புகளை*

2023 ஏப்ரல் 13]

பொருத்துதல், அவ்வப்போது மரக் கிளைகளை நறுக்கி விடுதல், உயர் மின் கம்பங்கள் அமைத்தல், முள்கம்பி வேலி அமைத்தல், மின்கம்பங்களின் உயரத்தை அதிகரித்தல் மற்றும் தாழ்நிலை மின் கம்பிகளை சரிசெய்தல் போன்ற பாதுகாப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

- *வன உயிரினங்கள் மனித வசிப்பிடங்களுக்குள் நுழைவதை தடுக்கும்பொருட்டு இரும்பு கம்பிவட வேலிகள், கற்சுவர் வேலிகள், சூரிய மின் வேலிகள், யானை புகா அகழிகள், தொங்கும் சூரிய மின்வேலிகள் அமைத்தல் ஆகியவற்றோடு வனப் பகுதிக்குள் தீவன வளங்கள், நீர்த்துளைகள் மற்றும் தடுப்பணைகள், கசிவுநீர் குட்டைகள், பயிர்கள் பயிரிடுதல், மேய்ச்சல் தடுப்புக் காவலர்களை நியமித்தல் மற்றும் நீர்க்குட்டைகள் அமைக்கப்படுவதுடன் வேட்டைத் தடுப்புக் காவலர்களின் வழக்கமான ரோந்துப் பணிகள் ஆகியவை மேற்கொள்ளப்படுகின்றன.*

- *இவ்வழக்கமான பணிகளுக்கு வலுசேர்க்கும் பொருட்டு வன உயிரினங்களின் நிகழ்நேர கண்காணிப்பிற்காக விலங்கு வருகையினை அறிவிக்கும் முன்னெச்சரிக்கை அமைப்புகள், இடையூறு ஏற்படுத்தும் வன உயிரினங்களுக்கு ரேடியோ காலரிங் கருவி பொருத்துதல், செயற்கை நுண்ணறிவு அடிப்படையிலான யானை வருகையினை அறிவிக்கும் முன்னெச்சரிக்கை அமைப்பு, மின்னோட்டத்தினை தடுக்கும் அபாய ஒலி அமைப்பு மற்றும் புவியிடக் குறியீடு முறையிலான முன்னெச்சரிக்கை அமைப்பு ஏற்படுத்துதல் போன்ற செயலாக்கமுள்ள திட்டங்கள் கையாளப்படுகின்றன.*

- *மேற்கூறிய அமைப்புகளின் உதவியுடன் வனப் பகுதியைவிட்டு வெளியே வரும் வன உயிரினங்கள் அதிவிரைவுப் படைகள் மற்றும் வேட்டைத் தடுப்புக் காவலர்களைப் பயன்படுத்தி வனப் பகுதிக்குள் திருப்பி அனுப்பப்படுகின்றன. அனைத்து நிலப்பரப்புகளிலும், தீயணைப்பு பணிகளுக்காக பிறவகை மீட்புப் பணிகளுக்கு செல்லும் திறன் வாய்ந்த 35 அதிநவீன வாகனங்கள் வனத் துறையால் கொள்முதல் செய்யப்பட்டுள்ளன.*

- *அடிக்கடி வனப் பகுதியை விட்டு வெளியேறி இடையூறு ஏற்படுத்தும் குறிப்பிட்ட வன விலங்குகளை கண்டறிந்து வன உயிரினப் (பாதுகாப்பு) சட்டம், 1972 பிரிவு 11 (1)—ன்படி கும்கி யானைகள் மற்றும் மயக்க மருந்தினை பயன்படுத்தி கால்நடை மருத்துவ நிபுணர்களின் நேரடி மேற்பார்வையில் பிடிக்கப்பட்டு அடர் வனப் பகுதிக்குள் விடப்படுகின்றன.*

- *மனித வன உயிரின மோதல் குறித்து பொதுமக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தப்படுவதோடு இது குறித்து சீரான இடைவெளியில் மாவட்ட நிர்வாகத்துடன் இணைந்து விழிப்புணர்வு கூட்டங்கள் நடத்தப்படுகின்றன.*

- *வன விலங்குகளால் ஏற்படும் மனித இறப்புகள், பயிர்ச் சேதங்கள், மனித காயங்கள், விவசாயிகளுக்கு ஏற்படும் பயிர்ச் சேதம் மற்றும் உடைமைச் சேதங்களால் பாதிக்கப்பட்ட பொதுமக்களுக்கும் நிவாரணத் தொகை வழங்கப்பட்டு வருகிறது.*

3.1 பாதுகாக்கப்பட்ட வனப் பகுதிக்கு வெளியேயான வன உயிரின மேலாண்மை:

அரசு சாரா தொண்டு நிறுவனங்களின் உதவியோடு, தமிழ்நாடு வனத் துறையால் கடல் ஆமை பாதுகாப்பதற்காக பின்வரும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

1. *தமிழக கடலோரப் பகுதிகளில் முக்கியத்துவம் வாய்ந்த கடல் ஆமைகள் கூடு கட்டும் மற்றும் இரைதேடும் இடங்கள் கண்காணிக்கப்படுதல், அக்கூடுகளை வனத் துறையால் அமைக்கப்பட்டுள்ள 35 அடை காப்பகங்களில் குஞ்சு பொரிக்கச் செய்தல் மற்றும் இதுபோன்ற பணிகளால் ஆண்டுதோறும் ஏறத்தாழ ஒரு இலட்சம் ஆமைக் குஞ்சுகள் பாதுகாக்கப்பட்டு கடலில் விடப்படுகிறது.*

2. *பொதுமக்களிடையே கடல் ஆமைகளின் குணாதிசயங்கள் மற்றும் வாழ்வியல் மற்றும் அவற்றை வேட்டையாடுவதால் ஏற்படும் விளைவுகள் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்துதல்.*

3. *கடல் ஆமை கண்காணிப்பு மற்றும் வேட்டை தடுப்பிற்காக மீனவ சமுதாயத்திலிருந்து கடல் ஆமை பாதுகாவலர்களாக உருவாக்குவதன்மூலம் பொதுமக்கள் பங்கேற்பினை ஊக்குவித்தல்.*

2023 ஏப்ரல் 13]

3.2 அந்நிய களைத் தாவரங்களை அகற்றுதல்

முன்னுரை:

அந்நிய களைத் தாவரங்களது பரவல் அதிகரித்து வருவதால் உள்ளூர் தாவரங்களது எண்ணிக்கை குறைந்து வருகிறது. இதனால் உலகம் முழுவதும் அந்நிய களைத் தாவரங்கள் பல்லுயிர் பாதுகாப்பிற்கு பெரும் அச்சுறுத்தலாக விளங்குகின்றன.

எடுக்கப்பட்ட நடவடிக்கைகளின் விவரங்கள்:

*உள்ளூர் தாவரங்களை பாதுகாக்கும்பொருட்டு, 4 முக்கிய அந்நிய களைத் தாவரங்களான சீமைக் கருவேலம், உண்ணிச் செடி, சீமைக் கொன்னை மற்றும் சீகை மரம் ஆகியவற்றை 535.21 இலட்சம் ரூபாய் செலவில் சுமார் 700 ஹெக்டேர் பரப்பளவில் அகற்றிட தமிழ்நாடு அரசு முன்னோடித் திட்டத்தினை அறிவித்துள்ளது. மேலும் அந்நிய களைத் தாவரங்களை இதர திட்டங்களான நபார்டு, தமிழ்நாடு கேம்பா (*TN CAMPA*), சிறப்பு பகுதி வளர்ச்சி திட்டம் (*SADP*), புலிகள் திட்டம் (*Project Tiger*) மற்றும் யானைகள் திட்டம் (*Project Elephant*) போன்ற திட்டங்களின்கீழும் நடப்பாண்டில் அகற்றப்பட்டு வருகின்றன.*

அகற்றப்பட்ட அந்நிய களைச் செடிகளின் மொத்தப் பரப்பளவு:

மேற்குறிப்பிட்ட நடவடிக்கைகளின்படி 2022–2023 ஆம் நிதியாண்டில் 28-2-2023 வரை அந்நிய களைச் செடிகள் சுமார் 2969.29 ஹெக்டேர் பரப்பளவில் அகற்றப்பட்டுள்ளன. அதன் விவரம் பின்வருமாறு:—

வ. எண்	அந்நிய தாவரங்களின் பெயர்	அகற்றப்பட்ட பரப்பளவு (ஹெக்டரில்)
1.	*உண்ணிச் செடி (*Lantana camara*)*	*1449.09*
2.	*சீமைக் கருவேலம் (*Prosopis juliflora*)*	*803.20*
3.	*சீமைக் கொன்னை (*Senna spectabilis*)*	*306.00*
4.	*சீகை மரம் (*Wattle*)*	*395.00*

வ. எண்	அந்நிய தாவரங்களின் பெயர்	அகற்றப்பட்ட பரப்பளவு (ஹெக்டரில்)
5.	ஆயப்பனை (Euphatorium)	14.00
6.	பார்த்தீனியம் (Parthenium hysterophorus)	2.00
	மொத்தம்	**2969.29**

தமிழ்நாட்டிலுள்ள அந்நிய களைச் செடிகளை அகற்றுவதற்கும், சுற்றுச்சூழலை மறுசீரமைப்பு செய்வதற்கான கொள்கை (TN PIPER)

அந்நிய களைத் தாவரங்களை அகற்றுவதற்கு மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் சட்டமன்றத்தில் 3-9-2021 அன்று அறிவித்தவாறு தமிழ்நாட்டிலுள்ள அந்நிய களைச் செடிகளை அகற்றுவதற்கும், சுற்றுச்சூழலை மறுசீரமைப்பு செய்வதற்கும் கொள்கை வகுக்கப்பட்டுள்ளது. இக்கொள்கையானது, இந்தியாவிலேயே தமிழ்நாட்டில்தான் முதலில் வகுக்கப்பட்டுள்ளது.

இக்கொள்கையானது, அந்நிய களைச்செடிகளை கண்டறியவும், அதன் பரவலைத் தடுப்பதற்கும் மற்றும் நீர் மற்றும் நிலப் பகுதிகளில் வாழும் அந்நிய களைச் செடிகளை முழுமையாக அகற்றிடவும் வழிவகுக்குகிறது.

தமிழ்நாடு காகித ஆலைக்கு சீமைக் கொன்னை களைச் செடியினை ஒதுக்குதல்

*மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றத்தின் அறிவுறுத்தலின்படி, சீமைக் கொன்னை களைச் செடிகளை அகற்றுவதற்கு நீலகிரி உயிர்க்கோள காப்பகப் பகுதியில் (*Nilgiri Biosphere Reserve*) வளர்ந்துள்ள சீமைக் கொன்னை களைச் ச்செடிகளை டன் ஒன்றுக்கு ரூ.350/- வீதம் அகற்றுவதற்கு தமிழ்நாடு காகித ஆலைக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.*

மேற்குறிப்பிட்ட ஆணையின்படி, தமிழ்நாடு காகித ஆலைக்கு சீமைக் கொன்னை களைச் செடிகளை அகற்றிட முதுமலை புலிகள் காப்பகத்தின்மூலம் 60 ஹெக்டேர் பரப்பளவும், சத்தியமங்கலம் புலிகள் காப்பகத்தின்மூலம் 645 ஹெக்டேர் பரப்பளவும் ஒதுக்கப்பட்டுள்ளது.

2023 ஏப்ரல் 13]

4. முக்கிய மாநிலத் திட்டங்கள்

4.1.1. காலநிலை மாற்றத்திற்கான தமிழ்நாடு உயிர்ப்பன்மை பாதுகாப்பு மற்றும் பசுமையாக்குதல் திட்டம் (TBGPCCR)

ஜப்பான் பன்னாட்டு கூட்டுறவு முகமையின் (JICA) நிதியுதவியுடன்கூடிய "காலநிலை மாற்றத்திற்கான தமிழ்நாடு உயிர்ப்பன்மை பாதுகாப்பு மற்றும் பசுமையாக்குதல் திட்டம் (TBGPCCR)" எனும் புதிய திட்டத்தினை 2022-2023 முதல் 2029-2030 வரையிலான 8 ஆண்டு காலத்தில் 920.52 கோடி ரூபாய் மதிப்பீட்டில் செயல்படுத்த ஒன்றிய அரசு ஒப்புதல் வழங்கியுள்ளது. கூட்ட நடவடிக்கை குறிப்புகள் (MoD) மற்றும் கடன் ஒப்பந்தமானது (LA) முறையே 5-1-2022 மற்றும் 31-3-2022 அன்று கையெழுத்திடப்பட்டு 28-7-2022 முதல் கடன் ஒப்பந்தம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் நோக்கமானது,

(i) சூழலமைப்பு சார்ந்த காலநிலை மாற்ற நடவடிக்கைகள்,

(ii) மனித—வன உயிரின மோதல் தடுப்பு நடவடிக்கைகள்,

(iii) விநியோக சங்கிலி மேம்பாட்டினை ஊக்குவித்தல்,

(iv) வாழ்வாதார மேம்பாட்டு நடவடிக்கைகள் மற்றும்

(v) மேலாண்மைத்திறன் மேம்பாடு

போன்ற 5 முக்கிய அங்கங்களின் வாயிலாக காலநிலை மாற்றத் தணிப்பு மற்றும் தகவமைப்புக்கு உறுதுணையாக இருப்பதே ஆகும். இதன்மூலம் தமிழ்நாட்டின் நிலையான சமூகப் பொருளாதார மேம்பாட்டில் முக்கிய பங்காற்றுகிறது.

இத்திட்டத்தின் வாயிலாக 2032 ஆம் ஆண்டிற்குள், 4 இலட்சம் மெட்ரிக் டன் அளவிலான கார்பன் சேகரம் அதிகரிப்பு, 3.6 ஹெக்டேர் பரப்பிலான பவளப்பாறைப் பகுதிகள் மறுசீரமைப்பு, 600 ஹெக்டேர் பரப்பிலான கடற்புற்கள் மற்றும் 300 ஹெக்டேர் பரப்பிலான கடற்பாசிகள் மீட்பு, 1050 ஹெக்டேர் பரப்பிலான சதுப்புநிலப்பகுதிகள் அதிகரிப்பு, வனங்களுக்கு வெளியே 60,000 ஹெக்டேர் அளவிலான பசுமைப்பரப்பு அதிகரித்தல் மற்றும் 5400 துறைப் பணியாளர்களின் திறன் மேம்பாடு போன்ற முக்கிய பலன்கள் எதிர்பார்க்கப்படுகிறது.

2023-2024 ஆம் ஆண்டில், நகர்ப்புற மற்றும் புறநகர்ப் பகுதிகளில் நடுவதற்கென 68.40 இலட்சம் மரக்கன்றுகளை வளர்த்தல், 25 கி.மீ.

நீளத்திற்கு யானை புகா அகழிகள் அமைத்தல், 8 வன விரிவாக்க மையங்களில் உயர்தர மைய நாற்றங்கால்களை நிறுவுதல், சூழல் சுற்றுலா மற்றும் சூழல் மேம்பாட்டுப் பணிகள், உள்கட்டமைப்பு மற்றும் வாகன வசதி மேம்பாடு போன்ற ஒப்பளிக்கப்பட்ட பணிகளை 177.29 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மேற்கொள்ள திட்டமிடப்பட்டுள்ளது.

4.1.2. தமிழ்நாட்டில் உள்ள தரங்குன்றிய காடுகளை மேம்படுத்துதல்

சுற்றுச்சூழல் அமைப்புகளின் சீர்கேட்டை தடுத்து அவற்றை உலகளாவிய இலக்குகளை சமப்படுத்தும் வகையில் மீட்டெடுக்கும் நோக்கத்துடன், ஐக்கிய நாடுகள் பொதுச் சபை இந்த பத்தாண்டுகளை (2021 முதல் 2030 வரை) "சூழல் மண்டலங்களை மீளுருவாக்குவதற்கான பத்தாண்டுகளாக" அறிவித்துள்ளது.

ஆரோக்கியமான சூழல் அமைப்புகளால் மட்டுமே மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தவும், காலநிலை மாற்றத்தை எதிர்கொள்ளவும் மற்றும் பல்லுயிர் வீழ்ச்சியினை தடுக்கவும் முடியும்.

*வனங்கள் தரங்குன்றுவதால் ஊரகப் பொருளாதாரத்தில் பாதிப்பு ஏற்படுவதுடன், காலநிலை மாற்றத்தினை எதிர்கொள்வதில் பெரும் இடர்களையும் ஏற்படுத்துகின்றன. காலநிலை மாற்றம் தொடர்பான ஐக்கிய நாடுகள் கட்டமைப்பு ஒப்பந்தத்தின்கீழ் (*United Nations Framework Convention on Climate Change*), தேசிய அளவில் நிர்ணயிக்கப்பட்ட பங்களிப்புகளின்படி (*Intended Nationally Determined Contributions*), பசுமை இல்ல வாயு வெளியேற்றங்களைக் (*Green House Gas emissions*) குறைப்பதற்காக இந்தியாவிற்கு நிர்ணயித்துள்ள இலக்குகளையும் இது பெருமளவில் பாதிக்கிறது.*

வேளாண் உற்பத்தித் திறன், மண்ணின் வளம் மற்றும் நீரின் இருப்பினை பெரிதும் சார்ந்துள்ளது. மண் அரிமானத்தைத் தடுப்பதும் மற்றும் நீர் ஆதாரங்களை தொடர்ந்து வழங்கி வருவதும் வனங்களின் முக்கிய சூழல் சேவையாகும். நமது வனச்சூழல் அமைப்புகள் வேளாண்மை, எரிசக்தி, சுற்றுலா மற்றும் சுகாதாரம் போன்ற பிற துறைகளிலும் தாக்கத்தினை ஏற்படுத்துகின்றன. தரங்குன்றிய காடுகளை அதன் இயல்பு நிலைக்கு கொண்டு வருவதை நோக்கமாகக் கொண்டு பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

2023 ஏப்ரல் 13]

நபார்டு வங்கி நிதி உதவியுடன் தமிழ்நாட்டிலுள்ள தரம் குன்றிய காடுகளை மீட்டெடுப்பதற்கான ஒரு விரிவான திட்டம் 481.148 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 2021-2022 முதல் 2025-2026 வரை செயல்படுத்த தமிழ்நாடு அரசால் ஒப்புதல் வழங்கப்பட்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இத்திட்டத்தின்கீழ் 33290 ஹெக்டேர் நலிவடைந்த வனப் பகுதிகளில் 33,50,000 மரங்கள் வளர்க்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின்கீழ், தீ தடுப்பு மற்றும் மேலாண்மையின் ஒரு பகுதியாக, சென்னையில் மாநில தீயணைப்பு கட்டுப்பாட்டு மையம் மற்றும் 33 மாவட்டங்களில் தீ கட்டுப்பாட்டு மையங்கள், நிகழ் காட்டுத் தீ எச்சரிக்கை மற்றும் கண்காணிப்புக்காக அமைக்கப்பட்டு வருகின்றன. இந்த தீ கட்டுப்பாட்டு மையங்கள், கட்டளை மையங்களாக செயல்படும். தீ ஏற்படும் காலங்களில் தீ கட்டுப்பாட்டு நடவடிக்கைகளை ஒருங்கிணைக்கவும் மற்றும் விரைந்து செயல்படவும் இந்த மையங்கள் உதவும். வனப் பகுதிகளில், தீயை கட்டுப்படுத்த மற்றும் அணைக்க தீயணைப்பு கருவிகள் வாங்கப்பட்டுள்ளன.

4.2 தொடர்ந்து செயல்படுத்தப்பட்டு வரும் திட்டங்கள்

4.2.1 தேக்கு மரத் தோட்டங்கள்

2017-2018 ஆம் ஆண்டு முதல், 8 ஆண்டு காலத்திற்கு 6,000 ஹெக்டேர் பரப்பில் தேக்குமரத் தோட்டங்களை வளர்க்கும் இத்திட்டமானது 52.64 கோடி ரூபாய் செலவில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. 2021-2022 வரை 24.05 கோடி ரூபாய் செலவில் 5565.55 ஹெக்டேர் பரப்பளவில் மரக்கன்றுகள் நடப்பட்டு இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

4.2.2 சந்தன மரத் தோட்டங்கள்

நமது மாநிலத்தில் ஜவ்வாதுமலை, சேர்வராயன்மலை, கொல்லிமலை, பச்சைமலை மற்றும் சித்தேரிமலை ஆகிய பகுதிகள் பாரம்பரியமாக சந்தன மரங்கள் வளரும் பகுதிகளாக அமைந்துள்ளன. எனவே, பாரம்பரிய சந்தன மரப் பகுதிகளில் வளர்ந்து வரும் சந்தன மரங்களின் இருப்பை மேம்படுத்தும் வகையில் 2015-2016 முதல் 2024-2025 வரையிலான 10 ஆண்டு காலத்திற்கு காப்புக்காடுகளில் சந்தன மரத் தோட்டங்களை வளர்க்கும் திட்டம் 100 கோடி ரூபாய் மதிப்பீட்டில் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

[2023 ஏப்ரல் 13

2017-2018 ஆம் ஆண்டு வரை, இத்திட்டத்தின்கீழ் 8.94 கோடி ரூபாய் செலவில் சுமார் 7.10 லட்சம் மரக்கன்றுகள் நடப்பட்டுள்ளன.

4.2.3 யானைகள் பாதுகாப்புத் திட்டம்

அதிகரித்து வரும் மனித வன விலங்கு மோதல்களை தவிர்க்கும் பொருட்டு பல்வேறு பல்முனை உத்திகளான வாழ்விடத்தை மேம்படுத்துதல், நீர் ஆதாரங்களை பெருக்குதல், வனப் பகுதிக்குள் வன விலங்குகளுக்கான வளங்களை மேம்படுத்துதல், வன எல்லையில் செயற்கை தடைகளை உருவாக்குதல் போன்ற தணிப்பு நடவடிக்கைகள் எடுக்கப்படுவதுடன் உள்ளூர் மக்களிடையேயும் விழிப்புணர்வு ஏற்படுத்தப்படுகிறது. 2022—2023 ஆம் ஆண்டில் 241.190 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டுள்ளது.

4.2.4. வன உயிரினங்களால் ஏற்படும் பாதிப்பிற்கு இழப்பீடு வழங்குதல்

மனித—வன உயிரின மோதல் என்பது மனிதர்களுக்கும் வன உயிரினங்களுக்கும் இடையிலான எதிர்மறையான தொடர்புகளைக் குறிக்கிறது. இது மக்களுக்கும் அவர்களின் வளங்களுக்கும் மற்றும் வன உயிரினத்திற்கும் அவற்றின் வாழ்விடங்களுக்கும் விரும்பத்தகாத விளைவை கொண்டுள்ளது. மனித—வன உயிரின மோதலின் காரணமாக ஏற்படும் விளைவுகள் தனிப்பட்ட நபரை மட்டுமல்லாமல் முழு குடும்பத்தையும் பாதிக்கும் வகையில் எதிர்மறையான தாக்கங்களையும் ஏற்படுத்துகிறது. வன உயிரின மோதலைத் தடுக்க வன எல்லைகளில் அகழிகள் மற்றும் வேலிகள் அமைத்தல், வன உயிரின நடமாட்டங்களைக் கண்காணித்தல், தீவன மற்றும் நீர்வளங்களை அதிகரிப்பது உள்ளிட்ட பல்வேறு முக்கிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மனித உயிரிழப்புகள், பயிர்ச்சேதம் மற்றும் உடைமைகளுக்கு வன உயிரினங்களால் ஏற்படும் சேதங்களுக்கு இழப்பீட்டுத் தொகையை வனத் துறை வழங்கி வருகிறது. 2022-2023 ஆம் நிதியாண்டில், மனித — வன உயிரின மோதல்களின்மூலம் பாதிக்கப்பட்டவர்களுக்கு இழப்பீட்டுத் தொகையாக 10.00 கோடி ரூபாய் தமிழக அரசால் ஒதுக்கப்பட்டுள்ளது. இந்த இழப்பீட்டுத் தொகையினை உடனடியாக பாதிக்கப்பட்டவர்களுக்கு சென்றடையும் வகையில், அனைத்து வனக் கோட்டங்களிலும் தனியாக வங்கிக் கணக்கு தொடங்கப்பட்டுள்ளது. இத்திட்டம், 2023-2024 ஆம் நிதியாண்டிலும் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

2023 ஏப்ரல் 13]

4.2.5. சென்னை மற்றும் அதனைச் சுற்றியுள்ள காப்புக்காடுகள் ஆக்கிரமிப்பு மற்றும் குப்பைகளைக் கொட்டுவதிலிருந்து பாதுகாக்க கான்கிரீட் சுற்றுச்சுவர் மற்றும் உயிர்வேலி அமைத்தல்

சென்னை மற்றும் அதனைச் சுற்றியுள்ள காப்புக் காடுகளை ஆக்கிரமித்தல் மற்றும் திடக் கழிவு குப்பைகள் கொட்டுவதிலிருந்து பாதுகாக்க கான்க்ரீட் சுவர் மற்றும் உயிர்வேலி அமைக்கும் திட்டம் 25.00 கோடி ரூபாய் செலவில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. 31-3-2022 வரை, இத்திட்டத்தின்கீழ் கான்க்ரீட் சுவர் மற்றும் உயிர்வேலி அமைக்கும் பணிகள் 20.40 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டன. 2022-2023 ஆம் ஆண்டில் இத்திட்டம் செயல்படுத்துவதற்காக 439.51 இலட்சம் ரூபாய் ஒப்பளிக்கப்பட்டு திட்டப் பணிகள் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

4.3 ஒன்றிய மற்றும் மாநில அரசு பங்கேற்பு திட்டங்கள்

பொதுவாக, ஒன்றிய மற்றும் மாநில அரசுகளின் 60:40 என்கிற பங்கீட்டு விகிதத்தில் இத்திட்டங்கள் செயல்படுத்தப்படுகின்றன. முக்கியமான ஒன்றிய—மாநில அரசு பங்களிக்கும் திட்டங்களாவன:

4.3.1. ஒருங்கிணைந்த வன உயிரின வாழ்விட மேம்பாட்டுத் திட்டம்

ஒருங்கிணைந்த வன உயிரின வாழ்விட மேம்பாட்டுத் திட்டம் கீழ்க்கண்ட இனங்களைக் கொண்டுள்ளது:

பாதுகாக்கப்பட்ட பகுதிகளுக்கான உதவி (தேசியப் பூங்காக்கள், வன உயிரின சரணாலயங்கள், பாதுகாக்கப்பட்ட பகுதிகள் மற்றும் சமுதாயப் பகுதிகள்) பாதுகாக்கப்பட்ட பகுதிகளுக்கு வெளியே வன உயிரினங்கள் பாதுகாப்பு, அழிவின் விளிம்பிலுள்ள இனங்கள் மற்றும் வாழ்விடங்களை மீட்டெடுக்கும் திட்டம்.

இத்திட்டத்தின்கீழ், ஒன்றிய அரசு தமிழ்நாட்டில் உள்ள தேசிய பூங்காக்கள், வன உயிரின சரணாலயங்கள், பறவைகள் சரணாலயங்கள் மற்றும் பாதுகாக்கப்பட்ட பகுதிகளின் மேம்பாட்டு நடவடிக்கைக்கு மொத்தம் 29 திட்டங்களுக்கு நிதி ஒப்பளிப்பு வழங்கியுள்ளது. 2022-2023 ஆம் ஆண்டில், 11.04 கோடி ரூபாய் மதிப்பீட்டில் செயல்படுத்தப்பட்டுள்ளது. 2023-2024 ஆம் ஆண்டிலும் இத்திட்டம் தொடர்ந்து செயல்படுத்தப்பட உள்ளது.

[*2023 ஏப்ரல் 13*

4.3.2. புலிகள் திட்டம்

வேட்டையாடக்கூடிய விலங்கினங்களில் முதன்மையானதாக உள்ள புலிகளின் பாதுகாப்பின் முக்கியத்துவமானது சூழலியல் அமைப்பின் ஆரோக்கியத்தின் ஒரு குறியீடாக உள்ளது. திருநெல்வேலி மாவட்டத்தில் களக்காடு—முண்டந்துறை புலிகள் காப்பகம், கோவை மற்றும் திருப்பூர் மாவட்டங்களில் உள்ள ஆனைமலை புலிகள் காப்பகம், நீலகிரி மாவட்டம் முதுமலை புலிகள் காப்பகம், ஸ்ரீவில்லிபுத்தூர் – மேகமலை புலிகள் காப்பகம் மற்றும் ஈரோடு மாவட்டம் சத்தியமங்கலம் புலிகள் காப்பகம் ஆகிய ஐந்து புலிகள் காப்பகங்களில், புலிகளையும் அவற்றின் வாழ்விடங்களையும் பாதுகாக்க வனத் துறை பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. புலிகள் காப்பகத்தின் வாழ்விடப் பாதுகாப்பு தொடர்பான பணிகள், தீத்தடுப்பு உள்ளிட்ட பாதுகாப்பு, சூழல் மேம்பாடு, நீர்வளத்தைப் பெருக்குதல், சுற்றுலா மேம்பாடு, மனித—வன உயிரின மோதல்களைக் கட்டுப்படுத்துதல் மற்றும் உள்கட்டமைப்பு வசதிகளைப் பெருக்குதல் போன்ற பணிகளுக்கு இத்திட்டம் துணை புரிகின்றது. மனித துன்புறுத்தல்களை குறைக்கும் விதமாக முதுமலை புலிகள் காப்பக பகுதியில் இருந்து 435 குடும்பங்கள் இடம்பெயர்வு செய்யப்பட்டுள்ளன. தொடர் செலவினத்திற்கு ஒன்றிய, மாநில அரசுகளுக்கிடையே, 50:50 விகிதாச்சார அடிப்படையில் 2022-2023 ஆம் ஆண்டில் 40.817 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. 2023-2024 ஆம் ஆண்டிலும் இத்திட்டப் பணிகள் தொடர்ந்து மேற்கொள்ளப்படும்.

4.3.3 யானைகள் திட்டம்

அறிவியல் ரீதியிலான மேலாண்மை மற்றும் வாழ்விட பாதுகாப்புமூலம் யானைகள் திட்டம், மாநிலத்தில் செயல்படுத்தப்படுவதால், இத்திட்டத்தினை செயல்படுத்துவதில் தமிழ்நாடு முன்னோடியாக உள்ளது. மேலும், மே 2017—ல் இறுதியாக நடத்தப்பட்ட யானைகளின் கணக்கெடுப்பின்படி, தமிழ்நாட்டில் உள்ள யானைகளின் எண்ணிக்கை 2761 என மதிப்பிடப்பட்டுள்ளது. யானைகள் திட்டம் ஐந்து யானைகள் காப்பகங்களிலும் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இக்காப்பகங்களுக்கென தனியான சட்ட அந்தஸ்து கிடையாது. யானைகள் பாதுகாப்பு மற்றும் அவற்றின் வாழ்விட பகுதி மேம்பாட்டிற்காக இத்திட்டம் செயல்படுத்தப்படுகின்றது. இத்திட்டத்தின்கீழ் யானைகளின்

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

2023 ஏப்ரல் 13]

மீட்பு மற்றும் மறுவாழ்வு மையம், யானைகள் காப்பக பகுதிகளில் வாழும் பழங்குடியினர் நலம் பேணுதல், மனித—வன உயிரின மோதல்களால் ஏற்படும் உயிரிழப்பு மற்றும் பயிர்ச்சேதங்களுக்கு இழப்பீடு வழங்குவதும் சேர்க்கப்பட்டுள்ளதுடன், மோதல்களைக் குறைப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் வழிவகை செய்யப்பட்டுள்ளது. 2022—2023 ஆம் ஆண்டில் 7.74 கோடி ரூபாய் மதிப்பீட்டில் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டுள்ளது. இத்திட்டம் 2023-2024 ஆம் ஆண்டிலும் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

4.3.4. வனத் தீ தடுப்பு மற்றும் மேலாண்மை

தீத்தடுப்பு, கண்டறிதல் மற்றும் மேலாண்மை ஆகியவற்றைக் கருத்தில்கொண்டே வனத் தீத்தடுப்பு மற்றும் மேலாண்மைத் திட்டம் செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டத்தின்கீழ் தீத்தடுப்பு உபகரணங்கள் வாங்குதல், கட்டுப்படுத்தப்பட்ட தீ ஏற்படுத்துதல், தீத்தடுப்புக் கோடுகள் உருவாக்குதல் மற்றும் பராமரிப்பு, மண் மற்றும் ஈரப்பத பாதுகாப்புப்பணிகள், விழிப்புணர்வு ஏற்படுத்துதல், உள்ளூர் சமுதாயத்தினரின் திறன் மேம்பாட்டுப்பயிற்சி, ஆராய்ச்சி, கண்காணிப்பு போன்ற பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

5.1. வண்டலூரிலுள்ள அறிஞர் அண்ணா உயிரியல் பூங்காவினை மேம்படுத்துதல்

1855 ஆம் ஆண்டில் நிறுவப்பட்ட நாட்டின் மிகப் பழமையான மிருகக்காட்சி சாலையான சென்னையிலுள்ள அறிஞர் அண்ணா உயிரியல் பூங்கா தற்போதுள்ள வண்டலூர் காப்பு காட்டிற்கு 1985 ஆம் ஆண்டு மாற்றப்பட்டு, இயங்கி வருகிறது. 602 ஹெக்டேர் நிலப்பரப்பில் அமைந்துள்ள இப்பூங்கா, தென்கிழக்கு ஆசியாவில் அமைந்துள்ள மிகப்பெரிய உயிரியல் பூங்காக்களில் ஒன்றாகும். விலங்குகளின் இயற்கையான வாழ்விடத்தை உருவகப்படுத்தும் இயற்கையான அமைப்பாகும்.

நவீன மற்றும் விஞ்ஞானரீதியில் மேலாண்மை செய்யப்படும் இப்பூங்காவானது, உலகளாவிய உயிரியல் பூங்காக்கள் மற்றும் நீர்வாழ் உயிரினப் பூங்கா அமைப்பின் (WAZA) நிறுவன அங்கமாகவும் உள்ளது. இப்பூங்காவில் 44 பாலூட்டியின வகைகள், 89 பறவையின வகைகள், 39 ஊர்வன வகைகள் என மொத்தமாக 172 வகையான வன உயிரினங்கள் அடங்கிய 2,368 வன உயிரினங்கள் வளர்க்கப்படுகின்றன. அறிஞர் அண்ணா உயிரியல் பூங்காவிற்கு,

[2023 ஏப்ரல் 13

விலங்குகள் பரிமாற்றத் திட்டத்தின்கீழ் 2022—2023 ஆம் ஆண்டில் பிலிகுலா உயிரியல் பூங்கா, மங்களூரு மற்றும் லக்னோ உயிரியல் பூங்காவில் இருந்து விலங்குகள் கொண்டு வரப்பட்டன.

வன உயிரினங்கள், தாவரங்கள் மீது கவனம் செலுத்தி, மனித குலத்தின் நீண்ட கால நலனுக்காக, அவற்றைப் பாதுகாக்கும் சூழலியல் உணர்வு கொண்ட மக்களைக் கொண்டிருப்பதே அறிஞர் அண்ணா உயிரியல் பூங்காவின் தொலைநோக்குப் பார்வையாகும்.

- கிழக்கு மற்றும் மேற்குத் தொடர்ச்சி மலைகளிலுள்ள உயிரினங்கள் குறிப்பாக சிங்கவால் குரங்கு, நீலகிரி கருங்குரங்கு, காட்டெருமை மற்றும் சிறு வகையான பாலூட்டியினங்களின் பாதுகாப்பு
- பூங்காவில்வைக்கப்பட்டுள்ள அனைத்துவிலங்கினங்களுக்கும் உயர்தர வாழ்விட வசதி, பராமரிப்பு மற்றும் சுகாதார நலன்களை வழங்குதல்
- பூங்காவின் பார்வையாளர்களுக்கு வன உயிரினங்களை தடையின்றிக் காண்பதற்கான வாய்ப்புகள் மற்றும் புரிதல்களை வழங்குதல்
- உயிரியலின் பல்வேறு அம்சங்கள், அழிந்து வரும் வன உயிரினங்களின் நடத்தை மற்றும் மரபணு ஒப்பனை மற்றும் அவற்றின் இனப்பெருக்கத்தினை எளிதாக்குதல் போன்றவை குறித்த ஆராய்ச்சிகளை மேற்கொள்ளுதல்.
- பல்வேறு வகைகளில் மீட்கப்பட்ட வன உயிரினங்களுக்குத் தேவையான வாழ்விட வசதி, பராமரிப்பு மற்றும் சுகாதார நலன்களை வழங்குதல்.

பல அழிந்து வரும் உயிரினங்களின் தலைசிறந்த இனப்பெருக்க மையமாகவும், வனங்களுக்கு வெளியே வெற்றிகரமாக பாதுகாக்கும் இடமாகவும் இப்பூங்கா உருப்பெற்றுள்ளது. இதனை அங்கீகரிக்கும் வகையில் மத்திய உயிரியல் பூங்கா ஆணையம், சிங்கவால் குரங்கு, நீலகிரி கருங்குரங்கு ஆகியவற்றிற்கான ஒருங்கிணைந்த இனப்பெருக்க மையமாகவும், புலிகள், இந்திய காட்டெருமை, சாம்பல் நிற அணில் மற்றும் காட்டு நாய்கள் ஆகியவற்றின் பங்கேற்பு உயிரியல் பூங்காவாகவும் நியமித்துள்ளது. மேலும், பாதுகாப்பு இனப்பெருக்கத்திற்கு அறிஞர் அண்ணா உயிரியல்

2023 ஏப்ரல் 13]

பூங்காவானது இனப்பெருக்க நுட்பங்களுக்கு முன்மாதிரியாக திகழ்கிறது.

இணையதள பயனர்களின் எளிதான அணுகலுக்காக, BOT அமைப்பினைத் தொடர்பு கொள்ள உயிரியல் பூங்காவின் இணையதளத்தில் வழிவகை செய்யப்பட்டுள்ளது. தனித்துவமான இணையதள நுழைவுச்சீட்டுகளுக்கு—விரைவு தகவல் குறியீடு (QR code) உருவாக்கப்பட்டுள்ளது. இணையதள பார்வையாளர்களின் கேள்விகளுக்கு சரியான நேரத்தில் பதிலளிக்க டாஷ்போர்டு உதவிப் பலகை உருவாக்கப்பட்டுள்ளது. மேலும், இணையதளம்மூலம் விலங்குகளை தத்தெடுப்பதும் புதுப்பிக்கப்பட்டுள்ளது. விலங்குகளின் இருப்பிடத்தை பராமரிப்பதன்மூலம் விலங்குகளின் நலன் மற்றும் பராமரிப்பு மேற்கொள்ளப்படுகிறது.

உயிரியல் பூங்காவினுள்ள 16 வகை விலங்குகளின் செயல்பாடுகளை 24X7 நேரலை செய்தல் மக்களிடமிருந்து பெரும் வரவேற்பைப் பெற்றுள்ளது, உயிரியல் பூங்காவில் 225 கண்காணிப்பு கேமராக்கள் பொருத்தப்பட்டு மின்—கண்காணிப்பு பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது.

அறிஞர் அண்ணா உயிரியல் பூங்காவின் பூங்காப் பள்ளிமூலம் பல்வேறு கல்வி நிகழ்ச்சிகளை நடத்தி வருகிறது. இந்த நிகழ்ச்சிகளில் உயிரியல் பூங்கா தூதர் திட்டம், விழிப்புணர்வு கருத்தரங்கம், உயிரியல் பூங்காவினுள் பயிற்சி, சிறப்பு கருப்பொருள் பட்டறைகள், தன்னார்வ நடவடிக்கைகளுக்கான உயிரியல் பூங்கா குழுமம், முக்கிய வனம் மற்றும் வன உயிரின தினங்களைக் கொண்டாடுதல் மற்றும் பல்வேறு போட்டிகள் ஆகியற்றின்மூலம் வன உயிரின பாதுகாப்புக் கல்வியைப் பரப்புதல் மற்றும் மனிதர்கள் மற்றும் வன விலங்குகளின் வாழ்வு முக்கியத்துவம் மற்றும் சுற்றுச்சூழலைப் பாதுகாப்பதின் முக்கியத்துவம் குறித்து மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் நோக்கத்துடன் செயல்படுத்தப்படுகிறது.

உயிரியல் பூங்காவின் பூங்கா பள்ளியின்மூலம் பெரியவர்கள் மற்றும் இளைஞர்களுக்கான விலங்கு இனங்களின் தூதுவர் திட்டத்தை தொடங்கியுள்ளது. ஒவ்வொரு வன உயிரின விலங்கு பாதுகாப்பு குறித்த இத்தூதுவர் திட்டமானது இந்திய உயிரியல் பூங்காக்களிலேயே முதன்முறையாக செயல்படுத்தப்படுகிறது. தேவாங்கு மற்றும் நீலகிரி கருங்குரங்கு ஆகியவற்றை மையமாகக் கொண்ட குறிப்பிட்ட இனங்களின் தூதர் நிகழ்ச்சியாக நடத்தப்பட்டது. மெய்நிகர் தளம்மூலம் உயிரியல் பூங்கா தூதர்

[2023 ஏப்ரல் 13

திட்டம், வனவிலங்கு பாதுகாப்பு பிரச்சினைகள் குறித்த வலைப்பதிவுகள், முக்கியமான வன உயிரின தினங்களில் போட்டிகள் மற்றும் நிகழ்ச்சிகள் போன்றவை நடத்தப்படுகிறது.

பெருநிறுவனங்களின் சமூக பங்களிப்புமூலம் உடல் கட்டுபாட்டு சாதனம், யானைகளுக்கு நீர் குட்டை, கழிப்பறை மற்றும் ஒட்டேரி ஏரிக்கு செல்லும் மழை நீர் வடிகால்வாய் கட்டுதல், எரிவாயுமூலம் எரியூட்டும் வசதி மேம்படுத்துதல், சிறு விலங்குகளுக்கு நவீன மயக்க மருந்து செலுத்தும் கருவி, நோயுற்ற விலங்குகளை கண்காணிக்கும் பாராமீட்டர், நவீன உயர் ரக அல்ட்ராசோனாகிராபி கருவி ஆகியவற்றின்மூலம் வன உயிரின மருத்துவமனையினை மேம்படுத்துதல் போன்றவை செயல்படுத்தப்பட்டுள்ளது, மேலும், 14 இருக்கைகள் கொண்ட இரு மின்கல வாகனங்கள் பெரு நிறுவனங்களின் சமூக பங்களிப்புமூலம் பெறப்பட்டுள்ளன.

உயிரியல் பூங்காவில் உள்ள விலங்குகளுக்கு மருத்துவம் மற்றும் சுகாதாரப் பாதுகாப்பு வழங்குவதில் உயிரியல் பூங்காவினுள் உள்ள கால்நடை மருத்துவக் குழு ஈடுபட்டுள்ளது. மாநில கால்நடை பராமரிப்புத் துறை, கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகம் மற்றும் கால்நடை மருத்துவ வல்லுநர் ஆகியோருடன் இணைந்து அறிவியல்பூர்வமான சுகாதார மேலாண்மையை செயல்படுத்தி வருகிறது. மேலும், தேவைப்படும் சமயங்களில் மாநிலம் முழுவதும் உள்ள அனுபவம் வாய்ந்த கால்நடை மருத்துவர்களிடம் இருந்து மருத்துவ ஆலோசனைகளும் பெறப்படுகிறது.

வண்டலூரில் உள்ள அறிஞர் அண்ணா உயிரியல் பூங்காவில் பராமரிக்கப்படும் வன உயிரினங்களின் முறையான பராமரிப்பை உறுதி செய்வதற்காக தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகத்துடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்யப்பட்டு தொடர் பராமரிப்பு மற்றும் கண்காணிப்பு முறையாக செயல்படுத்தப்பட்டு வருகிறது. ஜார்ஜியா பல்கலைக்கழகத்துடன் புரிந்துணர்வு ஒப்பந்தம்மூலம் இரு நிறுவனங்களின் பரஸ்பர கல்வி சேவை மற்றும் ஆராய்ச்சி மேற்கொள்ள நடவடிக்கையில் உள்ளது.

உயிரியல் பூங்காவின் மேலாண்மை, திறம்பட செயல்படுதல் மற்றும் மதிப்பீடு ஆகியவற்றின் அடிப்படையில், தேசிய அளவில் உள்ள 147 பெரிய உயிரியல் பூங்காக்களில், அறிஞர் அண்ணா உயிரியல் பூங்கா 82% மதிப்பீட்டுடன் முதலிடம் வகிக்கிறது.

2023 ஏப்ரல் 13]

5.2. வன விலங்கு பாதுகாப்பிற்கான மேம்பட்ட நிறுவனம்

வன விலங்கு பாதுகாப்பு மற்றும் வன உயிரின பாதுகாப்பு சட்டத்தை அமல்படுத்துவதில் அறிவியல் அறிவை பயன்படுத்தவும், அதன்மூலம் மாநிலத்தின் வன உயிரினப் பாதுகாப்பு முயற்சிகளை மேம்படுத்தவும், தமிழ்நாடு அரசு வன விலங்கு பாதுகாப்புக்கான மேம்பட்ட நிறுவனத்தை (ஆராய்ச்சி, பயிற்சி மற்றும் கல்வி) நிறுவியுள்ளது. இந்த நிறுவனம் வன விலங்கு தடயவியல் மையம், வன விலங்கு பராமரிப்பு அறிவியல் மையம் மற்றும் பாதுகாப்பு கல்வி மையம் என மூன்று செயல்பாட்டு மையங்களை 14.13 கோடி ரூபாய் செலவில் நிறுவியுள்ளது. வன விலங்குகள் தொடர்பான ஆய்வுகளுக்கான வளாக வசதிகளை வலுப்படுத்த 7.65 கோடி ரூபாய் செலவில் உயர்நிலை வன உயிரினப் பாதுகாப்பு நிறுவனம் (ஆராய்ச்சி, பயிற்சி மற்றும் கல்வி) வளாகத்தில் ஒரு சர்வதேச ஆராய்ச்சியாளர்கள் விடுதி கட்டப்பட்டுள்ளது.

வன விலங்கு தடயவியல் அறிவியல் மையத்தின்கீழ் (CWFS) திசுக்கூறுயியல், மரபணு மற்றும் வன விலங்குகளின் எச்சங்களின் மரபணு ஆய்வகங்களில் அடிப்படை வன விலங்கு தடயவியல் ஆராய்ச்சி மற்றும் கண்டறியும் செயல்பாடுகளை நிறுவனம் தொடங்கியுள்ளது. இதில் 35 பாலூட்டிகள், 10 ஊர்வன, 8 பறவை இனங்கள் மற்றும் மீன்/திருக்கை/சுறா உட்பட 53 இனங்களுக்காக தமிழ்நாட்டின் முக்கியமான விலங்கு இனங்களின் மரபணு குறிப்பு தரவுத்தளம், உயர்நிலை வன உயிரினப் பாதுகாப்பு நிறுவனம் (ஆராய்ச்சி, பயிற்சி மற்றும் கல்வி) நிறுவனத்தால் சேமித்து வைக்கப்பட்டுள்ளது. திசுக்கூறுயியல் ஆய்வகம் மண்டை ஓடுகள், நீண்ட எலும்புகள், கொம்புகள், தந்தம், முடி மாதிரிகள், இறகுகள் மற்றும் தோல் மாதிரிகள் வரையிலான வன விலங்கு மாதிரிக் களஞ்சியத்தை உருவாக்கி, உருவவியல் ஒப்பீட்டு ஆய்வுக்காகவும், இனங்கள் அடையாளம் காண உதவும் தர நிலைகளை நிறுவுவதில் ஈடுபட்டுள்ளது.

வன விலங்கு தடய அறிவியல் மையத்தின்கீழ் மரபணு வரிசைப்படுத்தும் வசதி நிறுவப்பட்டுள்ளது. வன விலங்கு பாதுகாப்புத் துறையில் பெருகிவரும் சவால்களை எதிர்கொள்ளும் வகையில், இந்நிறுவனத்தில் நவீன வசதிகளை உருவாக்க, விலங்கு பராமரிப்பு அறிவியல் மையத்தின்கீழ் திசு நோயியல் பிரிவு நிறுவப்பட்டுள்ளது. கல்வி மற்றும் விழிப்புணர்வு திட்டங்களுடன் பல்வேறு பங்குதாரர்களின் அறிவியல் திறனை வளர்ப்பதில்

கவனம் செலுத்துவதன்மூலம் நாட்டில் உள்ள மற்ற மேம்பட்ட அறிவியல் சிறப்பு மையங்களுக்கு நிகராக தன்னாட்சி நிறுவனமாக உருவாக்க மறுசீரமைப்பு மேற்கொள்ளப்பட்டு வருகிறது,

மேலும், முனைவர் படிப்பில் சேரும் ஆராய்ச்சியாளர்கள் மற்றும் களப் பணியாளர்களை ஊக்குவிப்பதற்காக, சென்னை பல்கலைக்கழகத்தின் அங்கீகாரம் பெற இந்த நிறுவனம் முன்மொழியப்பட்டுள்ளது. ஆய்வக அங்கீகாரம் என்பது மூன்றாம் தரப்பு மதிப்பீட்டின் அடிப்படையில் மற்றும் சர்வதேச தரங்களைப் பின்பற்றுவதன் அடிப்படையில் குறிப்பிட்ட சோதனைகள்/அளவீடுகளுக்கான தொழில்நுட்பத் திறனை முறையான அங்கீகாரம் வழங்கும் ஒரு செயல்முறையாகும். இந்த நிறுவனம் அதன் தடயவியல் ஆய்வகங்களுக்கான சோதனை மற்றும் அளவுத்திருத்த ஆய்வகங்களுக்கான (NABL) அங்கீகாரத்தினை தேசிய அங்கீகார வாரியத்திடம் பெற உரிய நடவடிக்கைகளை தொடங்கியுள்ளது. மேலும், இந்த நிறுவனம் சமீபத்தில் மேம்பட்ட கருவி மரபணு சாங்கர் சீக்வென்சரை பயன்படுத்தி ஆராய்ச்சிக்கான மரபணு மாதிரி வரிசைப்படுத்துதல் வசதியைப் பெற்றுள்ளது. மிருகக்காட்சி சாலையில் விலங்குகளின் சுகாதார கண்காணிப்பு மற்றும் பல்வேறு நோய்க் கிருமிகளைக் கண்டறிந்து காட்டு விலங்குகளின் சுகாதார கண்காணிப்பு ஆகியவற்றின் காரணமாக இந்த நிறுவனம் திசு நோயியல் பிரிவு போன்ற கூடுதல் வசதிகளையும் கொண்டுள்ளது.

5.3. மன்னார் வளைகுடா உயிர்க்கோள காப்பக அறக்கட்டளை (GOMBRT)

இந்தியாவின் தென்கிழக்குப் பகுதியில் அமைந்துள்ள மன்னார் வளைகுடாவானது, வளமான உயிரிப்பன்மை கொண்ட தனித்துவம் வாய்ந்த கடலோர சூழலியல் அமைப்பாகும். மன்னார் வளைகுடா உயிர்க்கோள் காப்பக அறக்கட்டளையானது கடலோரப் பகுதிகளில் வாழ்கின்ற மக்களின் வாழ்வாதார பாதுகாப்புடன், உயிர்ப்பன்மை பாதுகாப்பு மற்றும் கடலோர வள ஆதாரங்னை நிலைத்து பயன்பெறுவதற்கிடையேயான இணைப்பினை ஏற்படுத்தும் ஒரு தனித்துவம் வாய்ந்த தமிழ்நாடு அரசின் முன்னோடி முயற்சியாகும். 2022-2023 ஆம் ஆண்டில் அரசு இத்திட்டத்திற்கு 1.50 கோடி ரூபாய் ஒப்புதல் அளித்து இத்திட்டத்தினை செயல்படுத்த ஆணை வழங்கியுள்ளது. 47.41 கோடி ரூபாய் செலவில் 5 ஆண்டுகளுக்கான (2022-2023 முதல் 2026-2027 வரை) விரிவான செயல் திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது.

2023 ஏப்ரல் 13]

6. இயக்கங்கள்

6.1. பசுமை தமிழ்நாடு இயக்கம்

பசுமை தமிழ்நாடு இயக்கம் பத்து ஆண்டுகளுக்குள் (அதாவது 2030-2031-க்குள்) மாநிலத்தின் புவிபரப்பில் 23.7% இருக்கும் வனம் மற்றும் மரப்பரப்பினை 33% ஆக உயர்த்துவதை நோக்கமாகக் கொண்டு தமிழ்நாடு அரசால் துவங்கப்பட்டுள்ளது. வன நில மீளுருவாக்கம் மற்றும் வனத்துக்கு வெளியே மரப்பரப்பினை அதிகரிப்பதுமூலம் 2030–2031 ஆம் ஆண்டுக்குள் வனம் மற்றும் மரப்பரப்பில் 50-60 மில்லியன் டன் கார்பன் மடுவினை உருவாக்கும் மாநில திட்டத்துக்கு உறுதுணையாக விளங்குகிறது. பொருத்தமான பொது நிலங்களான நகர்ப்புறப் பகுதி, விளைநிலம், கல்வி நிலையங்கள், கோயில் நிலங்கள், புனித தளங்கள், தொழிற்சாலைப் பகுதி, குளக்கரை, படுகை நிலங்களில் பொருளாதார முக்கியத்துவம் மற்றும் சுற்றுப்புறச்சூழல் தன்மைக்கேற்ற நாட்டு மரங்கள் இவ்வியக்கத்தின்கீழ் நடவு செய்யப்படுகின்றன.

பசுமை தமிழ்நாடு இயக்க பணியில் மக்களை ஈடுபடுத்தி இயக்கத்தை மக்கள் இயக்கமாக மாற்றுதல், பல்வேறு நிறுவனங்கள் (அரசு மற்றும் தனியார் தொண்டு நிறுவனம்), தனிநபர், விவசாயி, உள்ளூர் அமைப்பு, தனியார் நிறுவனம், கல்வி நிறுவனங்கள், வணிக நிறுவனங்கள், பள்ளி மற்றும் கல்லூரி மாணவர், இளைஞர் அமைப்பு ஆகியவற்றை இணைத்து செயல்படுத்துதல் ஆகியவை பசுமை தமிழ்நாடு இயக்கத்தினை செயல்படுத்தும் நெறிமுறைகளில் ஒன்றாக திகழ்கிறது.

பசுமை தமிழ்நாடு இயக்கத்தின்கீழ் 2021—2023 ஆம் ஆண்டில் 350 நாற்றங்கால் தோட்டங்கள் உருவாக்கப்பட்டு, 25,829 ஹெக்டேர் பரப்பில் 34 மாவட்டங்களில் 2.8 கோடி மரக் கன்றுகள் நடவு செய்யப்பட்டன. அதில் 1.10 கோடி நாற்றுகள் தமிழ்நாடு வனத் துறையால் உருவாக்கப்பட்டன. இதர நாற்றுகள் அரசு துறைகள், தன்னார்வ தொண்டு நிறுவனங்கள், அறக்கட்டளைகள், பொதுமக்கள் ஆகியோரால் நடவு செய்யப்பட்டன. நாற்றங்கால் உருவாக்குதல் மற்றும் நடவு பணிகளுக்கான செலவு விவரம் பின்வருமாறு:—

செலவு

வ.எண்	பணிகள்	தொகை (கோடி)
1.	*2021-2023 ஆம் ஆண்டு தோட்ட பணிக்கு வழங்கப்பட்ட நிதி*	*25.31*
2.	*2021-2023 ஆம் ஆண்டு நடவு பணிக்கு வழங்கப்பட்ட நிதி*	*24.06*
3.	*2023-2024 ஆம் ஆண்டு முன்னோடி நாற்றங்கால் பணிக்கு வழங்கப்பட்ட நிதி*	*0.70*
4.	*நிர்வாக செலவு*	*2.6*
மொத்தம்		**52.67**

நிதி தேவை

வ.எண்	பணிகள்	தொகை (கோடி)
1.	*2023-2024 ஆம் ஆண்டு முன்னோடி நாற்றங்கால் பணிக்கு தேவைப்படும் நிதி*	*96.5*
2.	*2022-2023 ஆம் ஆண்டு நடவு செய்யப்பட்ட நாற்றங்கால் பராமரிப்பிற்கு தேவைப்படும் நிதி*	*4.17*
3.	*ஜனவரி 2023 - மார்ச் 2023 நடவு செய்யப்பட்ட நாற்றுகளுக்கு நீரூற்றலுக்காக தேவைப்படும் நிதி*	*4.88*
மொத்தம்		**105.57**

திண்டுக்கல் மாவட்டம், இயக்க பணிகளில் பொதுமக்களின் பங்கேற்பு தொடர்பாக பிற மாவட்டங்களுக்கு முன்னுதாரணமாக விளங்குகிறது. இம்மாவட்டத்தில் ஒரே நாளில் ஆறு இலட்சம் மரக்கன்றுகள் நடவு செய்யப்பட்டன. 604 கி.மீ. சாலையோர பகுதிகளில் 89,000 மரக்கன்றுகள் நடவு செய்யப்பட்டன. கொடைக்கானல் கோட்டத்தில் சீகை மரங்கள்

2023 ஏப்ரல் 13]

அப்புறப்படுத்தப்பட்ட பகுதிகளில் 1,03,400 மரக்கன்றுகள் நடவு செய்யப்பட்டு பசுமை தமிழ்நாடு இயக்கத்தின்கீழ் வளமிழந்த நிலப்பரப்பில் வெற்றிகரமாக சுற்றுச்சூழல் மீளுருவாக்கம் செய்யப்பட்டது.

பசுமை தமிழ்நாடு இயக்கத்தின் செயல்பாட்டில் உள்ள நியாயத் தன்மை மற்றும் வெளிப்படைத் தன்மையினை உறுதிப்படுத்த, நாற்றங்கால் தோட்டம், மக்கள் பங்கேற்பு தொடர்பான விரிவான விவரங்களை பராமரிக்க www.greentnmission.com *என்ற பிரத்யேக வலைதளம் உருவாக்கப்பட்டுள்ளது. இவ்வலைதளம் மக்களை பசுமை தமிழ்நாடு இயக்கத்தோடு இணைக்கவும், இணையவழியாக மரக்கன்றுகளை பெறவும் உதவுகிறது, மேலும் இந்த வலைதளம்மூலம் தமிழ்நாடு அரசின் இதர துறைகள், 86 தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள், 2502 பதிவு செய்த தன்னார்வலர்கள், 91 அறக்கட்டளைகள் இணைந்துள்ளன. பசுமை தமிழ்நாடு இயக்கம் மக்கள் இயக்கமாகும் பொருட்டு நல்ல முறையில் முன்னேறி வருகிறது.*

தமிழ்நாடு மாநிலத்தில் பசுமை தமிழ்நாடு இயக்கத்தினை பிரபலப்படுத்துவதற்காக கட்டணமில்லா சேவை எண் 1800-599-7634 தோற்றுவிக்கப்பட்டு மக்கள், தன்னார்வ தொண்டு நிறுவனம், அறக்கட்டளை ஆகியோரின் மரக்கன்று தேவை மற்றும் மரம் தொடர்பான புகார்கள் பெறப்படுகிறது. பசுமை தமிழ்நாடு இயக்கத்தின் நடவு செய்யப்பட்ட செடிகள் புவிக் குறியீடு செய்யப்பட்டு, வனப் பாதுகாவலரால் நாற்றங்கால் மற்றும் நடவுப்பணிகள் கூர்ந்தாய்வு செய்யப்பட்டு, புவியிட விவரங்கள் மற்றும் நிலவிவரங்கள் பசுமை தமிழ்நாடு இயக்க வலைதளத்தில் பதிவேற்றம் செய்யப்படுகின்றன. தோட்ட உற்பத்தியின் துல்லியத்தன்மை மற்றும் வெளிப்படைத் தன்மையை உறுதி செய்ய மாநிலம் முழுவதும் நாற்றங்கால் மற்றும் நடவுபணியினை மூன்றாம் நபர் சரிபார்ப்பு மற்றும் கணக்கெடுப்புமூலம் மதிப்பிடும் பணிகள் இவ்வியக்கத்தின்கீழ் மேற்கொள்ளப்படுகின்றன.

பசுமை தமிழ்நாடு இயக்கத்தில் திட்டமிடல் மற்றும் இலக்குகளை நிர்ணயிக்கும் செயல்பாடுகளில் அடித்தட்டு நிலை அணுகுமுறை பின்பற்றப்படுகிறது. மாவட்ட ஆட்சியர்கள் தலைமையின்கீழ் 2023-2024 ஆம் ஆண்டிற்கான மாவட்ட வருடாந்திர செயல்திட்டங்கள், மாவட்ட பசுமை குழுக்களால்

சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. மாவட்ட ஆட்சியர்களிடமிருந்து பெறப்பட்ட மாவட்ட வருடாந்திர செயல் திட்டத்தின்படி 7.5 கோடி நாற்றுகளில், அதில் 2.6 கோடி நாற்றுகள் வனத் துறையினாலும், இதர நாற்றுகள் ஊரக வளர்ச்சித் துறை, வேளாண்மைத் துறை, தோட்டக்கலைத் துறை மற்றும் தன்னார்வ நிறுவனங்கள்மூலம் நடவு செய்யப்பட்டுள்ளன. இந்த இயக்கம்மூலம் மரம் வளர்ப்போருடன் கைகோர்த்து அவர்கள் வளர்க்கும் மரங்களை விற்பனை செய்யவும், அதன்மூலம் கார்பன் கிரெடிட் வணிகம் செய்யவும் அதன்மூலம் உரிய பங்கேற்பாளர்களுடன் தொடர்பு ஏற்படுத்தி அரசு மற்றும் மரம் வளர்ப்போர் வருவாய் ஈட்ட வழிவகை ஏற்படுத்தும்.

6.1.1 சதுப்பு நிலக் காடுகளின் மறுசீரமைப்பு

சதுப்புநிலக் காடுகள் கடற்கரையோர சுற்றுச்சூழலில் உப்புத் தன்மையை தாங்கி வளரக்கூடியவை. வளம் மிக்க பல்லுயிர் பெருக்கம் கொண்டவை. அலையாத்திகளின் கூடுதல் சிறப்பு அதன் வண்டல்கள், நீலக்கார்பன் சேமிப்பகமாக விளங்குவதாகும். காலநிலை மாற்றம் உலகளவில் மிகப்பெரிய அச்சுறுத்தலாக உள்ளது. கடலோர மாநிலமான தமிழ்நாடு காலநிலை மாற்றம் ஏற்படுத்தும் தாக்கத்தினால் அதிகமான பாதிப்பிற்கு உள்ளாகிறது. இதற்கு இயற்கையிலே அமைந்த தீர்வு அலையாத்திகாடுகள் ஆகும். அலையாத்திகாடுகள் கார்பன் சேமிப்பகமாக விளங்கி கடலோர சுற்றுச்சூழல் காலநிலை மாற்றத்தை எதிர்கொள்ள வழிவகுக்கிறது. கடலோர மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துதல், அலையாத்திக் காடுவளர்ப்பின்மூலம் காலநிலை மாற்றத்தை எதிர்கொள்ளுதல் மற்றும் தகவமைத்தல் முதலிய கடலோர வாழ்விட மீட்டமைப்பு செயல்களுக்காக 25 கோடி ரூபாய் பசுமை தமிழ்நாடு இயக்கத்திற்கு தமிழ்நாடு காலநிலை மாற்ற இயக்கத்தால் வழங்கப்பட்டுள்ளது. மாவட்ட பசுமை குழு அங்கீகரித்த நுண்திட்டங்களை பின்பற்றி அலையாத்தி காடுகளின் மறுசீரமைப்பு பணிகள் மேற்கொள்ளப்படும்.

6.1.2. பொது நிதி/நன்கொடை திரட்டி பசுமை தமிழ்நாடு இயக்க பணிகளை மேற்கொள்ளுதல்

I அரசாணை எண்.13, சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத் துறை (வனம்.6), நாள் 11-1-2023-ன் மூலமாக பொதுமக்கள், நிறுவன அமைப்புகள்,

2023 ஏப்ரல் 13]

மக்கள் நல சங்கம், தனிநபர் ஆகியோரிடம் இருந்து பசுமை தமிழ்நாடு இயக்கம் நன்கொடை பெற்று இலக்கை அடைய வழிவகை செய்யப்பட்டுள்ளது.

II பொதுமக்கள் பங்கேற்பு (நன்கொடை):

அ) பொது மக்களின் குறைந்தபட்ச பங்களிப்பு என்பது ஒரு செடி பெறுவதற்கான தொகை ஆகும்.

ஆ) பொதுமக்களின் அதிகபட்ச பங்களிப்பிற்கு வரன்முறை ஏதுமில்லை. தாங்கள் வேண்டிய செடிகளின் எண்ணிக்கைக்கு நன்கொடை அளிக்கலாம்.

இ) நன்கொடை அளிக்க விரும்பும் நபர்கள்/ தொழிற்சாலைகள்/ அமைப்புகள் இணைய வாயிலாக www.greentnmission.com *என்கிற வலைதளம்மூலம் நன்கொடை வழங்கலாம்.* Offline*மூலம் நன்கொடை அளிக்க விரும்புபவர்கள், கூடுதல் முதன்மை தலைமை வனப் பாதுகாவலர் & தலைமை திட்ட இயக்குநர், பசுமை தமிழ்நாடு இயக்கம் அவர்களுக்கு வரைவு காசோலைமூலம் செலுத்தலாம். கடித (நிலை) எண் 310, நிதித் துறை (*BPE*)/2020, நாள் 31-7-2020-ன்படி* CSR (Corporate Social Responsibility)*—ன்கீழ் எந்த நிறுவனம் பங்களித்தாலும் அது பொது மக்களின் பங்களிப்பாகவே கருதப்படும்.*

ஈ) பெறப்பட்ட நிதிகள் பசுமை தமிழ்நாடு இயக்கத்தின் வங்கிக் கணக்கில் செலுத்தப்பட்டு அதற்கான இரசீதுகளும் வழங்கப்படும்.

உ) நன்கொடை பெற்று அதன்மூலம் வளர்க்கப்பட்ட கன்றுகள் இடம் பெற்றுள்ள நாற்றங்கால்/நடவு செய்த இடம், புவிக் குறியீடு இடப்பட்டு வலைதளத்தில் பதிவேற்றம் செய்யப்படுகிறது. நாற்றுகள் வளர்க்கப்படும் இடம், தற்போதைய நிலை, அதன் தரவுகள் நன்கொடையாளர்கள் அறிந்து கொள்ள வழிவகை செய்யப்பட்டுள்ளது.

6.2. தமிழ்நாடு ஈரநில இயக்கம்

தமிழ்நாடு அரசு விரிவான பாதுகாப்பு மற்றும் மேலாண்மைத் திட்டத்தின்மூலம் ஈரநிலங்களைப் பாதுகாக்க முனைந்துள்ளது. அதன்படி, "தமிழ்நாடு ஈரநிலங்கள் இயக்கம்" உருவாவதற்கு, அரசாணை (நிலை) எண் 59, சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம்

மற்றும் வனத் (வ.9) துறை, நாள் 25-3-2022-ன்படி 2021-2022 முதல் 2025-2026 வரையிலான ஐந்து ஆண்டுகளில் வாழ்வாதாரத்தை மையமாகக் கொண்டு ஈரநிலங்களை மேம்படுத்தவும், 100 ஈரநிலங்களின் சுற்றுச்சூழல் மறுசீரமைப்பிற்காகவும் 115.15 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

6.2.1. ஈரநிலங்கள் உலகத்தின் அதிக உயிர் உற்பத்தி செய்யும் உயிர் ஆதார சூழியலுடன் கூடிய மகத்தான சமூக பொருளாதார, சுற்றுச்சூழல் மற்றும் உயிர்—அழகியல் முக்கியத்துவம் கொண்ட ஓர் அமைப்பாகும். ஈரநிலங்கள் நிலையான அடிப்படையில் மனித இனத்திற்கு பல்வேறு உறுதியான மற்றும் கண்ணுக்கு தெரியாத வகையான நன்மைகளை வழங்குகிறது. பல இலட்சக்கணக்கான மக்களின் வாழ்வாதாரத்தை நேரடியாக ஆதரிப்பதுடன், மேலும் நீர்சுத்திகரிப்பு, நிலத்தடி நீர் செறிவூட்டல், பல்லுயிர் பாதுகாப்பு, காலநிலை மாற்றம் தணிப்பு மற்றும் தழுவல் போன்ற மகத்தான சுற்றுச்சூழல் சேவைகளை வழங்குகிறது. கடல்மட்ட உயர்வு போன்ற காலநிலை நெருக்கடியால் கடலோர ஈரநிலங்கள் மோசமாக பாதிக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது; அவற்றில் சில மறைந்து போகலாம்; இன்னும் சில அவற்றின் உருவவியல், நீர்சமநிலை, உப்புத்தன்மை அளவுகள் மற்றும் பல்லுயிர்த் தன்மை ஆகியவற்றில் மாற்றங்களை உணரும். கடல் மட்ட உயர்வினால் சேற்று நிலங்கள், பவளப் பாறைகளும் கணிசமாக பாதிக்கப்படலாம். பனிப் பாறைகளின் அடர்த்தி மற்றும் பரப்பளவு குறைவதால் ஏற்படும் பிரச்சனைகளால் உயரமான ஈரநிலங்கள் பாதிக்கப்படும். மழைப்பொழிவு முறையில் ஏற்படும் மாறுபாடு ஈரநில சூழலியல் அமைப்புகளிலும் அவற்றின் அறிவுசார் உபயோகத்தின் மீதும் தாக்கத்தை ஏற்படுத்தும். எனவே, காலநிலை மாற்றம் மற்றும் ஈரநிலங்களில் அதன் தாக்கத்தை கருத்தில் கொண்டு எதிர்காலத்தை திட்டமிட வேண்டிய அவசியம் உள்ளது. இதன் அடிப்படையில் பின்வரும் செயல்பாடுகள் அரசாணை (நிலை) எண் 59, சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத் (வ.9) துறை, நாள் 25-3-2023-ன்படி தமிழ்நாடு ஈரநிலங்கள் இயக்கத்தின்கீழ் பின்வரும் செயல்பாடுகள் செயல்படுத்தப்படும்:—

i. தமிழ்நாட்டில் 100 ஈரநிலங்கள் கண்டறிந்து வரைபடமாக்கப்படும்.

ii. ஈரநிலங்கள் (பாதுகாப்பு மற்றும் மேலாண்மை) விதிகள், 2017—ன்படி ஒருங்கிணைந்த மேலாண்மைத் திட்டங்கள் தயாரிக்கப்படும்.

2023 ஏப்ரல் 13]

iii. *ஆதார அடிப்படையிலான வழிமுறைகளின்படி, ஈரநிலங்களின் சூழலியல் அமைப்பின் அடிப்படையிலும் ஈரநில சூழலியல் மறுசீரமைப்பு செய்யப்படும்.*

iv. *பொதுமக்களுக்கு விழிப்புணர்வு பிரச்சாரம்மூலம் ஈரநில பாதுகாப்பு குறித்த விழிப்புணர்வு ஏற்படுத்தப்படும்.*

v. *சிறந்த மேலாண்மைக்காக ஈரநில வளங்களின் ஆராய்ச்சி, இருப்பு மற்றும் கண்காணிப்பு மேற்கொள்ளப்படும்.*

vi. *ஈரநில வளத்தின் பயன்பாடு மற்றும் உற்பத்தித் திறனை உறுதி செய்வதற்காக நிலையான வாழ்வாதார பயன்பாடு ஊக்குவிக்கப்படும்.*

vii. *ஈரநிலங்களை திறம்பட மேலாண்மை செய்வதற்கான பங்குதாரர்களின் பங்கேற்பு உறுதி செய்யப்படும்.*

viii. *சமூக அடிப்படையிலான அணுகுமுறைகளின்மூலம் ஈரநிலங்களின் பல்லுயிர் பெருக்கம் பாதுகாக்கப்படும்.*

6.2.2. ஈரநிலங்கள் (பாதுகாப்பு மற்றும் மேலாண்மை) விதிகள், 2017-ன்கீழ் ஈரநிலங்களை கண்டறிதல், வரைபடம் தயாரித்தல் மற்றும் இருப்புகளை கணினிமயமாக்கல்

“தமிழ்நாடு ஈரநிலங்கள் இயக்கத்தின்” கீழ் 100 ஈரநிலங்களை கண்டறிதல் மற்றும் அவற்றை வரைபடமாக்குதல் ஆகியவை மேற்கொள்ளப்படும். “தமிழ்நாடு ஆளில்லா வான்வழி வாகனங்கள் கழகம்” வாயிலாக ட்ரோன் LIDAR & RGB *தொழில்நுட்பம்மூலம் ஒவ்வொரு ஈரநிலத்தின் தன்மையும் கண்டறியப்பட்டு,* DGPS *உதவியுடன் ஈரநிலங்களின் எல்லைகள் உறுதி செய்யப்படும். ஈரநிலங்களை வரைபடமாக்குவதற்கான ட்ரோன்* LIDAR & RGB *அடிப்படையிலான தொழில்நுட்பம், சுற்றுப்பாதை, செயற்கைக்கோள் படங்களைக் காட்டிலும் அதிக இடஞ்சார்ந்த 5 செ.மீ.—க்கும் குறைவான பிழையுடன், தெளிவுத்திறனுடன் கூடிய சிறிய ஈரநிலங்களைக் கூட மிகத் துல்லியமாக வரையறுத்து ஈரநில சீரழிவிலிருந்து பாதுகாக்க இயலும். இந்த தொழில்நுட்பம் எதிர்காலத்தில் ஈரநிலச் சீரழிவைத் தடுப்பதில் கருவியாக இருக்கும், இந்த செயல்திட்டம் “தமிழ்நாடு ஈரநிலங்கள் இயக்கத்தின்” முக்கிய அம்சங்களில் ஒன்றாகும்.*

[*2023 ஏப்ரல் 13*

6.2.3. ஈரநிலங்கள் (பாதுகாப்பு மற்றும் மேலாண்மை) விதிகள், 2017-ன்படி ஈரநிலங்களின் சூழலியல் மறுசீரமைப்பு

ஈரநிலங்கள் (பாதுகாப்பு மற்றும் மேலாண்மை) விதிகள், 2017-ன்படி 100 ஈரநிலங்களை சுற்றுச்சூழல் மறுசீரமைப்பு, வாழ்வாதார விருப்பத்தை மையமாகக் கொண்டு செயல்படுவது "தமிழ்நாடு ஈரநிலங்கள் இயக்கத்தின்" மற்றொரு முக்கிய நோக்கமாக இருக்கும். கண்டறியப்பட்ட ஈரநிலங்களின் சுற்றுச்சூழல் மறுசீரமைப்பு ஈரநிலங்கள் (பாதுகாப்பு மற்றும் மேலாண்மை) விதிகள், 2017-ஐ பின்பற்றி, ஆழப்படுத்துதல், நீரியல்மட்ட ஆய்வு, கரைகளை பலப்படுத்துதல், களைத் தாவரங்களை அகற்றுதல், நீர்வரத்து மற்றும் நீர் வெளியேற்றம் ஆகியவற்றை கட்டுப்படுத்துதல் போன்ற நடவடிக்கைகள் மாவட்ட அளவிலான ஈரநில மேலாண்மை குழு ஒப்புதலுடன் செயல்படுத்தப்படும்.

*எண்ணூர் சிற்றோடை பகுதியில் விரைவான தொழில்மயமாக்கல் மற்றும் உள்ளூர் மீனவர்களின் வாழ்வாதாரத்தை மிகவும் பாதிக்கும் அயல்நாட்டு களை இனங்களின் ஆக்கிரமிப்பு காரணமாக கடந்த இருபது ஆண்டுகளில் வெகுவாகக் குறைந்துள்ளது. ஏறக்குறைய 9000 மீனவ குடும்பங்களின் நலனுக்காக "தமிழ்நாடு ஈரநிலங்கள் இயக்கத்தின்" கீழ் உள்ளூர் மீனவர்களின் வாழ்வாதாரத்தை மையமாகக் கொண்டு எண்ணூர் சிற்றோடை சூழலியல் மீளுருவாக்கம் நீர்வளத் துறையின் (*WRD*) ஆலோசனையுடன் மேற்கொள்ளப்படும். நீரியல் மட்ட ஆய்வு அளவீடு மற்றும் விரிவான திட்ட அறிக்கை (*DPR*) தயாரித்தபிறகு, 9000 மீனவ மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்காக நீர்வளத் துறையின்மூலம் "தமிழ்நாடு ஈரநில இயக்கத்தின்" கீழ் 162500 சதுர மீட்டர் சுற்றுச்சூழல் மறுசீரமைப்பு மற்றும் ஆழப்படுத்துதல் ஆகியவை மேற்கொள்ளப்படும்.*

6.2.4. தமிழ்நாட்டில் உள்ள 12 ராம்சார் தளங்களுக்கு ஒருங்கிணைந்த மேலாண்மைத் திட்டம் தயாரித்தல்

தமிழ்நாடு ஈரநிலங்கள் இயக்கத்தின்கீழ், 20 ஆண்டுகளுக்குப் பிறகு சர்வதேச முக்கியத்துவம் வாய்ந்த 13 ஈரநிலங்கள் ராம்சார் தளங்களாக அறிவிக்கப்பட்டுள்ளன. நாட்டில் உள்ள மொத்த 75 ராம்சார் தளங்களில் அதிக எண்ணிக்கையிலான 14 ராம்சார் தளங்களைக் கொண்டு நாட்டிலேயே தமிழ்நாடு முன்னணி மாநிலமாகத் திகழ்கிறது. 14 ராம்சார் தளங்களின் விவரங்கள் பின்வருமாறு:

2023 ஏப்ரல் 13]

தமிழ்நாட்டில் உள்ள 14 ராம்சார் தளங்களில் புதிதாக அறிவிக்கப்பட்ட 12 ராம்சார் தளங்களுக்கான ஒருங்கிணைந்த மேலாண்மைத் திட்டம், சூழலியல் ரீதியாக இருக்க, கோவையில் உள்ள சலீம் அலி பறவையியல் மற்றும் இயற்கை வரலாற்றுக்கான ஆராய்ச்சி மையம் (SACON), மூலம் 71.28 இலட்சம் ரூபாயில் தயாரிக்கப்பட உள்ளது. சுற்றுச்சூழல் சேவைகள் மற்றும் வாழ்வாதார விருப்பங்களை மேம்படுத்துவதற்காக தளங்களின் சுற்றுச்சூழல், நீரியல், மண்ணின் காரணிகள் மற்றும் பல்லுயிர் பாதுகாப்பு ஆகியவற்றை கருத்தில்கொண்டு மேம்படுத்தப்படும்.

வ. எண்	**ராம்சார் தளம்**	**மாவட்டம்**	**பரப்பு (ஹெக்டேரில்.)**
1	பள்ளிக்கரணை சதுப்பு நிலம்	சென்னை	1247.54
2	கரிக்கிலி பறவைகள் சரணாலயம்	செங்கல்பட்டு	58.44
3	வேடந்தாங்கல் பறவைகள் சரணாலயம்	செங்கல்பட்டு	40.35
4	பிச்சாவரம் அலையாத்தி காடுகள்	கடலூர்	1478.64
5	வெள்ளோடு பறவைகள் சரணாலயம்	ஈரோடு	77.185
6	சுசீந்திரம் தேரூர் சதுப்பு நில வளாகம்	கன்னியாகுமரி	94.23
7	வேம்பனூர் துப்பு நில வளாகம்	கன்னியாகுமரி	19.75
8	சித்திரங்குடி பறவைகள் சரணாலயம்	இராமநாதபுரம்	260.47

வ. எண்	ராம்சார் தளம்	மாவட்டம்	பரப்பு (ஹெக்டேரில்.)
9	*மன்னார் வளைகுடா கடல் உயிர்க்கோள காப்பகம்*	*இராமநாதபுரம்*	*52671.88*
10	*காஞ்சிரங்குளம் பறவைகள் சரணாலயம்*	*இராமநாதபுரம்*	*96.89*
11	*கூந்தன்குளம் பறவைகள் சரணாலயம்*	*திருநெல்வேலி*	*72.04*
12	*உதயமார்த்தாண்டபுரம் பறவைகள் சரணாலயம்*	*திருவாரூர்*	*43.77*
13	*வடுவூர் பறவைகள் சரணாலயம்*	*திருவாரூர்*	*112.64*
14	*கோடியக்கரை வனவிலங்கு மற்றும் பறவைகள் சரணாலயம்*	*நாகப்பட்டினம் மற்றும் திருவாரூர்*	*38500.0*
மொத்த பரப்பளவு			**94773.825**

6.2.5. ஈரநிலங்கள் 25-க்கு சுகாதார அட்டை, சுருக்க ஆவணம் தயார் செய்ய சுற்றுச்சூழல் மையம், அண்ணா பல்கலைக்கழகம் கருத்துரு சமர்ப்பித்துள்ளது

25 ஈரநிலங்களுக்கு சுகாதார அட்டை, சுருக்க ஆவணம் ஆகியவற்றிற்கு சுற்றுச்சூழல், மண்ணின் காரணிகள், நீரியல் தன்மை, மண்ணின் படிவு, கார்பன், மீத்தேன், நைட்ரஸ் ஆக்சைடு ஆகியவற்றின் மதிப்பீடு அடிப்படையில் தயார் செய்ய, சுற்றுச்சூழல் மையம், அண்ணா பல்கலைக்கழகம் 25 இலட்ச ரூபாயில் கருத்துரு சமர்ப்பித்துள்ளது. இதுபோன்று 75 ஈரநிலங்களுக்கு கருத்துரு பெறப்படும்.

2023 ஏப்ரல் 13]

6.2.6. தமிழ்நாட்டின் மன்னார் வளைகுடாவில் உள்ள கடற்பரப்பு புல்வெளிகளை மையமாகக் கொண்டு சீரழிந்த கரையோர ஈரநிலங்களை மீட்டெடுக்கவும், உள்ளூர் சமூகங்களின் வாழ்வாதார நிலைத்தன்மைக்காகவும் காலநிலை தழுவல் மற்றும் காலநிலை தாக்கங்களின் தன்மையை வலுப்படுத்துதல்

கடற்புற்கள் முக்கியமான கடலோர ஈரநிலங்களில் ஒன்றாகும். மேலும், இவை அதிக உற்பத்தித் திறன் கொண்ட சுற்றுச்சூழல் அமைப்புகளாகும் மற்றும் கரையோர மீன்பிடி, கடல்வாழ் ஊர்வன மற்றும் பாலூட்டிகளுக்கு தங்குமிடம் மற்றும் உணவை வழங்குகின்றன. கடற்புற்கள் நீலகார்பனைப் பிரித்து முக்கியமான கார்பன் சேமிப்பு கிடங்காக செயல்படுகின்றன. கடற்புற்கள் வெப்ப மண்டல மழைக்காடுகளைவிட 35 மடங்கு வேகமாக கார்பனைச் சேமிக்கிறது. இவை கடற்பரப்பின் 0.2% பகுதியையே உள்ளடக்கியிருந்தாலும், ஒவ்வொரு ஆண்டும் கடலின் 10% கார்பனை சேமித்து, காலநிலை மாற்றத்திற்கு எதிரான நடவடிக்கைகளுக்கு இது ஒரு முக்கிய கருவியாக திகழ்கிறது. சமீபத்திய ஆய்வின்படி மன்னார் வளைகுடாவில் உள்ள கடல் புல்வெளிகளின் நீலகார்பன் இருப்பு 0.001782 Tg C *(344,720* gC *ஹெக்டேர்-1-ல் 5170.66 ஹெக்டேர் கடற்பரப்புக்கு) மற்றும் பாக்விரிகுடாவில் 0.043996* Tg C *(13,323 ஹெக்டேருக்கு) என கணக்கிடப்பட்டுள்ளது. கடற்பகுதி 3,885,615* gC *ஹெக்டேர்-1). மன்னார் வளைகுடாவின் கடல் புல்வெளிகளில் சேமிக்கப்பட்டுள்ள நீல கார்பனின் மதிப்பிடப்பட்ட நாணய மதிப்பு* USD *17,820 ஆகவும், பாக் விரிகுடாவில் நாணய மதிப்பு* USD *43,99,682 ஆகவும் இருந்தது (நீலகார்பனுக்கு* USD *10 என்ற நிலையான விலை நிர்ணயம், கலாதரன் மற்றும் பலர், 2020). மன்னார் வளைகுடாவில் உள்ள கடல்புல்வெளிகளை மையமாகக் கொண்டு சீரழிந்த கரையோர ஈரநிலங்களை புனரமைக்கும் பணியை சுகந்தி தேவதாசன் கடல் ஆராய்ச்சி நிறுவனம் (*SDMRI*) ரூ.95.54 இலட்சத்தில் மேற்கொள்ளும். நீலகார்பனைப் பிரித்தெடுப்பதன்மூலம் காலநிலை மாற்றத்தைத் தணிக்கும். சுற்றுச்சூழல் மற்றும் உள்ளூர் சமூகத்தை மேம்படுத்தும்.*

6.2.7 ஓட்டேரி ஏரியின் சுற்றுச்சூழல் மறுசீரமைப்பு

ஓட்டேரி ஏரி, அறிஞர் அண்ணா உயிரியல் பூங்கா, வண்டலூர் வளாகத்தில் உள்ள ஒரே நீர்நிலையாகும், இங்குள்ள பல்லுயிர்

பெருக்கத்தின் நலனுக்காக ஏரியின் கொள்ளளவு, முழுபருவத்திலும் பறவைகள் தங்குவதற்கு வசதியாக வாழ்விடத்தை மேம்படுத்துதல், வண்டல் மற்றும் வண்டல் இல்லாத நீர் சேமிப்புமூலம் நீரின் தரத்தை மேம்படுத்துவதுடன், சுற்றியுள்ள கிராமங்களின் பயன்பாட்டிற்கு நல்ல தரமான நீர் வழங்குதல். ஓட்டேரி ஏரியின் சுற்றுச்சூழல் மறுசீரமைப்புக்காக 1.50 கோடி ரூபாய் தமிழ்நாடு விலங்கியல் ஆணையத்திற்கு (ZAT) அளிக்கப்பட்டுள்ளது.

6.2.8. ஈரநிலங்கள் இந்தியா வலைதளத்தில் உள்ள தமிழ்நாடு ஈரநிலங்களின் நண்பர்கள் (வெட்லேண்ட் மித்ராஸ்).

“தமிழ்நாடு ஈரநிலங்கள் இயக்கம்” ஈரநிலங்களைப் பாதுகாத்தல் மற்றும் மேலாண்மையை மக்கள் இயக்கமாக மாற்றுவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. அதன்படி, ஒவ்வொரு மாவட்டத்திலும் வெட்லேண்ட் மித்ராஸ் (ஈரநிலங்களின் நண்பர்கள்) பதிவு செய்யப்படுவார்கள். இதனால் உள்ளூர் சமூகங்கள் ஈரநிலங்களை சொந்தமாக வைத்திருக்க வேண்டும் மற்றும் எதிர்கால சந்ததியினருக்காக இந்தத் தனித்துவமான சுற்றுச்சூழல் அமைப்பைப் பாதுகாப்பதின்மூலம் அரசாங்கத்தின் முயற்சிகளை எளிதாக்குகின்றன. இதுவரை 166 ஈரநிலங்களின் நண்பர்கள் (வெட்லேண்ட் மித்ராஸ்) ஆர்வலர்களாக இந்தியாவின் ஈரநில இணையதளத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளனர். மேலும், 250-க்கும் மேற்பட்ட ஈரநில ஆர்வலர்கள் மாநிலத்தில் ஈரநிலங்கள் பாதுகாப்பு மற்றும் பாதுகாப்பில் மக்களின் பங்களிப்பை எளிதாக்கும் வகையில் எதிர்காலத்தில் பதிவு செய்யப்படும்.

7. 2023-2024 ஆம் ஆண்டிற்கான செயல்திட்டங்கள்

7.1. தமிழ்நாடு நெய்தல் மீட்சி இயக்கம்

பருவநிலை மாற்றத்தின் தாக்கத்தாலும், மக்கள் தொகை பெருக்கத்தாலும் கடலோர சுற்றுச்சூழலும், கடலோர மக்களின் வாழ்வாதாரமும் வருங்காலங்களில் கடுமையாகப் பாதிக்கப்படக்கூடும். கடல் அரிப்பைத் தடுக்கவும், கடல் மாசுபாட்டைக் குறைக்கவும், கடல்சார் உயிரியல் பன்முகத்தன்மையை பாதுகாக்கவும், “தமிழ்நாடு நெய்தல் மீட்சி இயக்கம்” என்ற திட்டத்தை 2,000 கோடி ரூபாய் மதிப்பீட்டில் உலக வங்கி நிதியுதவியுடன் அடுத்த ஐந்து ஆண்டுகளில் இந்த அரசு செயல்படுத்த உள்ளது.

2023 ஏப்ரல் 13]

7.2 தந்தை பெரியார் வன விலங்கு சரணாலயம்

அழிந்துவரும் வன உயிரினங்களைக் காக்க ஒரு தொடர்ச்சியான பாதுகாக்கப்பட்ட வனப்பரப்பு அவசியம். எனவே, நீலகிரி உயிர்கோள் காப்பகத்தை, காவிரி (தெற்கு) வன விலங்கு சரணாலயத்துடன் இணைக்கும் வகையில், ஈரோடு மாவட்டத்தில் உள்ள அந்தியூர், கோபிசெட்டிபாளையம் வட்டங்களில் உள்ள 80,567 ஹெக்டேர் வனப் பரப்பில் "தந்தை பெரியார் வன விலங்கு சரணாலயம்" எனும் புதிய சரணாலயம் மாநிலத்தின் 18-வது வன விலங்கு சரணாலயமாக அமைக்கப்படும் என 2023-2024 ஆம் ஆண்டுக்கான நிதிநிலை உரையின்போது அரசு அறிவித்துள்ளது.

7.3. மரக்காணத்தில் பன்னாட்டுப் பறவைகள் மையம்

மத்திய ஆசியாவின் பறவைகள் வலசை பாதையில் தமிழ்நாடு அமைந்துள்ளதால் ஒவ்வொரு ஆண்டும் பெரும் எண்ணிக்கையில் பறவைகள் நமது மாநிலத்திற்கு வருகை தருகின்றன. பறவைகளின் பாதுகாப்பை பேணவும், பறவையியல் ஆராய்ச்சியை ஊக்குவிக்கவும், இயற்கையில் பறவைகளின் பங்கு பற்றிய விழிப்புணர்ச்சி ஏற்படுத்தவும் மரக்காணத்தில் 25.00 கோடி ரூபாய் செலவில் "பன்னாட்டுப் பறவைகள் மையம்" அமைக்கப்படும் என 2023-2024 ஆம் ஆண்டுக்கான நிதிநிலை உரையின்போது அரசு அறிவித்துள்ளது.

8. வனக் கொள்கை மற்றும் சட்ட கட்டமைப்பு

வனம் மற்றும் வன உயிரினங்களை நிர்வகிப்பதற்கான ஒரு சிறந்த கொள்கை மற்றும் சிறந்த சட்டங்களை தமிழ்நாடு கொண்டுள்ளது. திட்டங்களை முறையாக செயல்படுத்துவதை உறுதி செய்யும் வகையில் கொள்கை கட்டமைப்பு வடிவமைக்கப்பட்டுள்ளது.

இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் சட்டப் பிரிவு 48-A மற்றும் 51A(g)-ன் வாயிலாக வகுக்கப்பட்ட வழிகாட்டுக் கொள்கைகள், மாநிலத்திற்கும் மற்றும் அனைத்து குடிமக்களுக்குரிய கடமைகளை தீர்மானிக்கிறது.

> *"சுற்றுச்சூழலைப் பாதுகாத்து, மேம்படுத்துவதற்கும், நாட்டின் காடுகளையும் மற்றும் வன உயிரினங்களையும், பாதுகாத்து வருவதற்கு அரசு முயலுதல் வேண்டும்"*

என இந்திய அரசியலமைப்புச் சட்டப் பிரிவு 48—A வலியுறுத்துகிறது.

"காடுகள், ஏரிகள், ஆறுகள், வனஉயிரினங்கள் உள்ளடக்கிய இயற்கைச்சூழலை அழியாது காத்து வளர்த்தலும், உயிரினங்களிடம் இரக்கங்காட்டுதலும், இந்திய குடிமக்கள் ஒவ்வொருவரின் கடமையாகும்."

என்று இந்திய அரசியலமைப்புச் சட்டப்பிரிவு 51 A (g) எடுத்துரைக்கிறது.

தேசிய வனக் கொள்கை, 1988, வன உயிரினப் (பாதுகாப்பு) சட்டம், 1972, மாநில வனக் கொள்கை, 2018, சூழல் சுற்றுலா கொள்கை, 2017, காலநிலை மாற்றம் குறித்த மாநில செயல் திட்டம் மற்றும் நிலையான வளர்ச்சிக் குறிக்கோள்கள் போன்றவற்றில் உள்ள கொள்கைகள் மற்றும் நடவடிக்கைகளைக் கருத்தில் கொண்டும், வனங்களுக்கு நீடித்த, நிலையான மேலாண்மை திட்டங்களும் மற்றும் உத்திகளும் வகுக்கப்படுகின்றன. மாநில வனக் கொள்கை, 2018, சூழல் சுற்றுலா கொள்கை, 2017 ஆகியவை மூலம் தற்போதைய நடைமுறைகள் மற்றும் மாறிவரும் உலகளாவிய மற்றும் தேசிய சூழலுக்கேற்ப மாற்றியமைத்து மேம்படுத்த இந்த அரசு திட்டமிட்டுள்ளது.

8.1 தேசிய வனக் கொள்கை, 1988

சுற்றுச்சூழல் நிலைத்தன்மை, சூழல் சமநிலையைப் பேணுதல் என்பது அனைத்து உயிர்களுக்கும் உயிராதாரமான தேவையாகும். இதற்கென நாட்டின் புவிப்பரப்பில் மூன்றில் ஒரு பங்கு வனப் பரப்பு மற்றும் மரப் பரப்பாக இருக்க வேண்டுமென தேசிய வனக்கொள்கை, 1988 நோக்கமாக கொண்டுள்ளது. மண் அரிமானம் மற்றும் நிலவளம் குன்றுதல் பலவீனமான சூழலமைப்பினை வலுப்படுத்துதல் போன்றவற்றை தடுக்க வனப் பரப்பு மூன்றில் இரு பங்கு மலைப் பகுதிகளில் இருக்க வேண்டுமெனவும் தேசிய வனக் கொள்கை வலியுறுத்துகிறது.

8.2 மாநில வனக் கொள்கை, 2018

மாநில வனக் கொள்கை, 2018, வனச் சட்டங்களை கடுமையாக அமல்படுத்துதல், தரங்குன்றிய வனப் பகுதிகளை மேம்படுத்துதல், அனைத்து வனப் பகுதிகளிலும் நீர் பிடிப்பு, சேகரிப்பு திறனை அதிகப்படுத்துதல், பாதுகாக்கப்பட்ட பகுதிகளை பலப்படுத்துதல்,

2023 ஏப்ரல் 13]

வன உயிரினங்களின் வழித் தடங்களை கையகப்படுத்துதல் மற்றும் வனஉயிரின வாழ்விடங்களை விரிவாக்குதல் ஆகியவற்றை நோக்கமாக கொண்டுள்ளது. மேலும், ஈரநிலங்களைப் பாதுகாத்தல், பசுமை பகுதியினை அதிகரிப்பதுமூலம் பருவநிலை மாற்றத்தை தணித்தல் / தகவமைத்தல், வலுவான வன விரிவாக்க அமைப்பை ஏற்படுத்துதல், பழங்குடியின சமுதாயத்தினரின் வளமான பாரம்பரிய அறிவைப் பயன்படுத்துதல் போன்றவை மாநில வனக் கொள்கையின் முக்கிய அம்சங்களாகும்.

8.2 சட்டங்கள் மற்றும் விதிகள்

வனப் பாதுகாப்பு மற்றும் மேலாண்மைக்கென மாநிலத்தில் நடைமுறையில் உள்ள சில முக்கிய சட்டங்கள் மற்றும் விதிகள் கீழே பட்டியலிடப்பட்டுள்ளன.

சட்டங்கள்

- *தமிழ்நாடு வனச் சட்டம், 1882*
- *தமிழ்நாடு (தனியார் காடுகள் பாதுகாப்பு) சட்டம், 1949*
- *தமிழ்நாடு மலைப் பகுதிகள் (மரங்கள் பாதுகாப்பு) சட்டம், 1955*
- *வன உயிரின (பாதுகாப்பு) சட்டம், 1972*
- *வன (பாதுகாப்பு) சட்டம், 1980*
- *தமிழ்நாடு ஈட்டி மரங்கள் (பாதுகாப்பு) சட்டம், 1994*
- *உயிர்ப்பன்மை சட்டம், 2002*

விதிகள்

- *தமிழ்நாடு சந்தனமர போக்குவரத்து விதிகள், 1967*
- *தமிழ்நாடு தடி மரப் போக்குவரத்து விதிகள், 1968*
- *தமிழ்நாடு சந்தனமர இருப்பு விதிகள், 1970*
- *தமிழ்நாடு தொழிற்சாலை / வணிக நோக்கங்களுக்கு பயன்படுத்தப்படும் அட்டவணைப்படுத்தப்பட்ட தடிமரங்களுக்கான கணக்குகள் பராமரிப்பு விதிகள், 1988*

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

- *தமிழ்நாடு பட்டா நில சந்தன மர விதிகள், 2008*
- *தமிழ்நாடு மர அறுவை ஆலைகள் ஒழுங்குமுறை விதிகள், 2010*
- *ஈரநிலங்கள் (பாதுகாப்பு மற்றும் மேலாண்மை) விதிகள், 2017*
- *தமிழ்நாடு வனம் மற்றும் வன உயிரினப் பகுதிகள் (மலையேற்ற ஒழுங்கு முறை) விதிகள், 2018*
- *வன (பாதுகாப்பு) விதிகள், 2022.*

8.4. நிலையான வளர்ச்சிக் குறிக்கோள்கள் (SDGs)

நிலையான வளர்ச்சி இலக்குகள் (SDGs) என்பது உலகம் எதிர்கொள்ளும் பொருளாதார, அரசியல் மற்றும் சுற்றுச்சூழல் சவால்களை சமாளிக்க ஐக்கிய நாடுகள் சபையின் உறுப்பு நாடுகளால் ஒப்புக்கொள்ளப்பட்ட உலகளாவிய செழுமைக்கான இலக்குகளாகும். ஐக்கிய நாடுகள் மாநாட்டில் மொத்தம் 17 நிலையான வளர்ச்சி குறிக்கோள்கள் அறிவிக்கப்பட்டன. 2012 ஆம் ஆண்டில் 169 குறிக்கோள்கள் மற்றும் 232 குறிகாட்டிகளாக வரையறுக்கப்பட்டுள்ளன. 2030—க்குள் ஒப்புக்கொள்ளப்பட்ட இலக்குகளை உலகம் முழுவதும் அடைய அரசுகள் பொறுப்பேற்க வேண்டும். ஒவ்வொரு இலக்கும் குறிப்பிட்ட மற்றும் செயல்படக்கூடிய இலக்குகளை வழங்குகிறது. நிலையான வளர்ச்சி இலக்குகள் (SDGs) இலக்குகள் 14 மற்றும் 15 நேரடியாக துறையுடன் இணைக்கப்பட்டுள்ளன. இருபத்தேழு குறிகாட்டிகள் சுற்றுச்சூழல், வனங்கள் மற்றும் காலநிலை மாற்ற அமைச்சகம் (MoEF & CC) துறையால் முன்னுரிமை செயல்படுத்துவதற்காக வரையறுக்கப்பட்டுள்ளன.

8.4.1. நிலையான வளர்ச்சி இலக்குகளுக்கான துறையின் பணிகள்

வனத் துறையில் இரண்டு நிலையான வளர்ச்சி இலக்குகள், அலகுகள் (அதாவது) மாநில / மாவட்ட அளவில் உருவாக்கப்பட்டுள்ளன, அலகுகள் நிலையான வளர்ச்சி இலக்குகள் (SDGs) டாஷ்போர்டில் தரவுகளைத் தொடர்ந்து கண்காணித்து புதுப்பிக்கும் வகையில் திட்டமிடல் மற்றும் மேம்பாட்டுத் துறையின்கீழ் நிலையான வளர்ச்சி இலக்குகளின் (SDGs) நெருக்கமான ஒருங்கிணைப்புடன் செயல்படும் குழுக்கள் 7 (இலக்கு 13,14, மற்றும் 15) மற்றும் 6 (இலக்கு—12).

2023 ஏப்ரல் 13]

இலக்கு எண் 14 (கடல்சார் வாழ்க்கை) மற்றும் இலக்கு எண் 15 (நிலம்சார் வாழ்க்கை) காடுகள் மற்றும் வன விலங்குகளுடன் நேரடியாக இணைக்கும் இலக்குகளைக் கொண்டுள்ளது. இலக்கு 6 (சுத்தமான நீர்) 12 (பொறுப்பு நுகர்வு மற்றும் தயாரிப்பு) மற்றும் இலக்கு 13 (காலநிலை செயல்) காடு மற்றும் வன விலங்கு ஒன்றுடன் ஒன்று சேரும் களம் கொண்டுள்ளது.

இலக்கு-14 கடல் மாசுபாட்டைத் தடுப்பது, சட்ட விரோதமான மற்றும் அழிவுக்கு வழிவகுக்கும் மீன்பிடி நடைமுறைகளை முடிவுக்குக் கொண்டு வருவது மற்றும் கடல் மற்றும் கடலோர சுற்றுச்சூழல் அமைப்புகளை நிலையான முறையில் நிர்வகித்தல் மற்றும் பாதுகாத்தலுடன் கடலின் வளத்தை மேம்படுத்துதல் மற்றும் அழிவின் விளிம்பிலுள்ள உயரினங்களை பாதுகாப்பதற்கும், அறிவியல் அறிவு, ஆராய்ச்சி மற்றும் கடல் தொழில் நுட்ப முறையில் மாற்றுதல் ஆகியவற்றில் கவனம் செலுத்துகிறது.

நிலப்பரப்பு சுற்றுச்சூழல் அமைப்புகளின் நிலையான பயன்பாட்டைப் பாதுகாத்தல், மீட்டமைத்தல் மற்றும் ஊக்குவித்தல், காடுகளை நிலையான முறையில் நிர்வகித்தல், பாலைவனமாக்கலை எதிர்த்துப் போராடுதல் மற்றும் நிலச்சீரழிவை நிறுத்தி அதன் பழைய நிலைக்கு மாற்றுதல் மற்றும் பல்லுயிர் இழப்பை நிறுத்துதல்.

இந்தியா நிலையான வளர்ச்சி இலக்கு குறியீட்டின்படி (2.0), நிலையான வளர்ச்சி இலக்குகள் (SDGs) 14—ஐ செயல்படுத்தும் ஒன்பது கடலோர மாநிலங்களில் தமிழ்நாடு இரண்டாவது இடத்தைப் பிடித்துள்ளது.

நிலையான வளர்ச்சி இலக்குகள் (SDGs) 15 தேசிய மற்றும் உள்ளூர் திட்டமிடல், வளர்ச்சி செயல்முறைகள், வறுமைக் குறைப்பு, உற்பத்திகள் மற்றும் தேசிய கணக்குகளில் சுற்றுச்சூழல் மற்றும் பல்லுயிர்ப் பெருக்கத்தை ஒருங்கிணைப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது. மரபியல் வளங்களைப் பயன்படுத்துதல், அத்தகைய வளங்களுக்கான சரியான அணுகல், பாதுகாக்கப்பட்ட தாவரங்கள் மற்றும் விலங்கினங்களின் வேட்டையாடுதல் மற்றும் கடத்தலைத் தடுப்பது போன்றவற்றிலிருந்து எழும் நன்மைகளின் நியாயமான மற்றும் சமமான பகிர்வையும் இது ஊக்குவிக்கிறது.

அந்நிய களைச்செடிகளை அகற்றுவது மற்றும் மரபணு வேறுபாடு பாதுகாப்பு இந்த இலக்கை அடைவதற்கான முக்கிய திட்டங்களாகும்.

(அ) பெறப்பட்ட நிலையான வளர்ச்சி இலக்குகள் (SDGs) அறிக்கைகளில் சுட்டிக்காட்டப்பட்ட செயல் திறன்

NITI Aayog *இந்தியா நிலையான வளர்ச்சி இலக்குகள் (*SDGs*) குறியீட்டின்படி, தமிழ்நாடு மாநிலங்களில் 2வது இடத்தில் உள்ளது. இலக்கு 15-ஐப் பொறுத்தவரை, தமிழ்நாடு 2018 இல் 12வது இடத்தில் இருந்தும், 2019 இல் 8வது இடத்திற்கும், 2021 இல் 4வது இடத்திற்கும் முன்னேறி உள்ளது. இது ஒரு குறிப்பிடத்தக்க முன்னேற்றம் ஆகும்.*

(ஆ) மாநில அளவில் குறிகாட்டிகள் (மாநில குறிகாட்டி கட்டமைப்பு)

*மாநில குறிகாட்டி கட்டமைப்பில், வனத் துறையைப் பொறுத்தமட்டில் 13 இலக்குகள் மற்றும் 27 குறிகாட்டிகள் இடம் பெற்றுள்ளன, மேற்கண்ட குறிகாட்டிகள் நிலையான வளர்ச்சி இலக்குகள் (*SDGs*) 14 மற்றும் 15 இன்கீழ் வருகின்றன. அவை மாநில அளவில் தொடர்ந்து கண்காணிக்கப்பட்டு வருகின்றன.*

8.4.2. வளர்ச்சி இலக்கு குறிகாட்டியின் நிலையானதை மேம்படுத்துவதில் கவனம் செலுத்தும் திட்ட நடவடிக்கைகள்

*தேசிய மற்றும் மாநில அரசாங்கங்களின் வளர்ச்சித் திட்டங்கள் மற்றும் விருப்பத்தின்படி மையப்புள்ளியாக நிலையான வளர்ச்சி குறிக்கோள்கள் மாறியுள்ளன. நிலையான வளர்ச்சி குறிக்கோள் இலக்குகள் மற்றும் குறிகாட்டிகளை அடைவதில் திட்டங்களின்மீது உரிய கவனம் செலுத்துவதன் இலக்குகளை நிறைவு செய்வதில் முன்னோடியாக உள்ளது. நிலையான வளர்ச்சி குறிக்கோள் 14 (கடல்சார் வாழ்க்கை) குறித்த துறையின் முன் முயற்சிகள்— கடலோர சுற்றுச்சூழல் அமைப்பின் முக்கியத்துவம் மற்றும் பலவீனத்தை கருத்தில் கொண்டு, சதுப்பு நிலகாடுகள், ஈரநிலங்கள் மற்றும் கடல் தேசிய பூங்கா ஆகியவற்றை நிர்வகிப்பதற்கான கவனம் செலுத்தும் திட்டங்களை துறை செயல்படுத்துகிறது. சமீபத்திய இந்திய மாநில வன அறிக்கை (*ISFR*), 2021 இன்படி, தமிழ்நாட்டின் சதுப்பு நிலப்பரப்பு 44.94 சதுரகி.மீ. சதுப்பு நில மறுசீரமைப்பு, பழைய தோட்டங்களை பராமரித்தல், அந்நிய களைச்செடிகளை அகற்றுதல், பாதுகாப்பு, சுற்றுச்சூழல் மேம்பாட்டு நடவடிக்கைகள், விழிப்புணர்வு உருவாக்கம் போன்ற வாழ்விட மேம்பாட்டு நடவடிக்கைகள், கண்காணிப்பு மற்றும் மதிப்பீடு போன்றவை முக்கிய செயல்பாடுகளாகும்.*

2023 ஏப்ரல் 13]

காற்றின் திசை வேகத்தை குறைக்கவும், சுனாமி, சூறாவளி, கடல் அலைகள் மற்றும் வெள்ளம் போன்ற இயற்கையின் மாறுபாடுகளுக்கு எதிராக கடலோரப் பகுதிகளுக்கு பாதுகாப்பு கவசமாக செயல்படவும் காற்றின் வேகத்தைக் குறைக்கும் வகையில் கடலோரப் பாதுகாப்பு அரண்கள் அமைக்கப்பட்டு பாதுகாக்கப்படுகின்றன.

மன்னார் வளைகுடா உயிர்கோள காப்பகம் மற்றும் கடல்வாழ் உயிரின தேசியப் பூங்கா போன்ற திட்டங்களின்மூலம் வாழ்வாதார மேம்பாட்டு பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன. அழிந்து வரும் கடல் பாலூட்டியான கடற்பசு மற்றும் அதன் வாழ்விடத்தை காப்பாற்றும் நோக்கத்துடன், தமிழ்நாடு அரசு 3—9—2021 அன்று வெளியிட்ட அறிவிக்கையின்படி, "தமிழ்நாட்டில் அழிந்து வரும் கடற்பசு இனங்களையும் அதன் கடல் வாழ்விடங்களையும் பாதுகாக்கும் வகையில், கடற்பசு பாதுகாப்பகம்", மன்னார் வளைகுடா, பால்க் விரிகுடா பகுதியில் ஏற்படுத்தப்பட்டு உள்ளது.

நிலையான வளர்ச்சி குறிக்கோள் 15 (நிலம்சார் வாழ்க்கை) தொடர்பான துறையின் முயற்சிகள்—மொத்த நிலப்பரப்பில், ஒரு பகுதியில் காடு மற்றும் மரங்களின் பரப்பளவின் சதவீதத்தை அதிகரிக்க வனத் துறை பல்வேறு முயற்சிகளை எடுத்து வருகிறது. பல்லுயிர் பாதுகாப்பு, மண் மற்றும் ஈரப்பத பாதுகாப்பு, வாழ்விட பாதுகாப்பு மற்றும் செறிவூட்டல், மனித—வன விலங்கு மோதலை தவிர்த்தல் மற்றும் வனப் பகுதி மற்றும் அதை சுற்றியுள்ள மக்களுக்கு அதிகாரமளித்தல் ஆகியவற்றுக்கு வழிவகுக்கும் நிலையான வன மேலாண்மைக்கு தமிழ்நாடு அரசு அதிக முக்கியத்துவம் அளிக்கிறது.

நிலையான வளர்ச்சி குறிக்கோள்கள் மற்றும் ஒட்டு மொத்த வளர்ச்சியை அடைவதில் முக்கியத்துவத்தை உணர்ந்து, தற்போதைய தமிழ்நாடு அரசு இரண்டு முக்கியமான இயக்கங்களை (பசுமை தமிழ்நாடு இயக்கம் மற்றும் தமிழ்நாடு ஈரநிலங்கள் இயக்கம்) அறிவித்துள்ளது.

8.4.3. குறிகாட்டிகளைக் கண்காணிப்பதற்கும் மாவட்ட அளவிலான ஏற்றத்தாழ்வுகளைக் குறைப்பதற்கும் மாவட்ட அளவிலான குறிகாட்டி கட்டமைப்பை உள்ளூர்மயமாக்கல்

நிலையான வளர்ச்சி இலக்குகள் (SDGs) செயல்படுத்தல் உத்தியின் ஒரு பகுதியாக நிலையான வளர்ச்சி இலக்குகளின்

(SDGs) உள்ளூர் மயமாக்கல் ஒன்றிய அரசால் வலுவாக பரிந்துரைக்கப்படுகிறது. மாநில அளவிலான செயல் திறனில் மாவட்டங்கள் முக்கிய பங்குதாரர்களாக இருப்பதால், நிலையான வளர்ச்சி இலக்குகளின் (SDGs) உள்ளூர் மயமாக்கல் அட்டவணையை மாவட்ட அளவிலான குறிகாட்டி கட்டமைப்பிற்கு எடுத்துச்செல்வது அவசியம். மாநில அரசாங்கம் மாவட்ட அளவிலான குறிகாட்டி கட்டமைப்பு பயிற்சி அமைத்தல் மூலமாக நிலையான வளர்ச்சி இலக்குகளை அடைவதை நோக்கிய பயணத்தினை ஊக்கமளிக்கும் வகையில் உள்ளது.

8.4.4. நிலையான வளர்ச்சி இலக்குகளுக்கான (SDGs) குறிப்பிடப்பட்ட சிறந்த நடைமுறைகள்

வனத் துறையானது 2030 ஆம் ஆண்டுக்கான உலகளாவிய நிலையான வளர்ச்சி குறிக்கோளை அடைய முழுமையாக அர்ப்பணிப்புடன் செயல்படுகிறது. நிலையான வளர்ச்சி குறிக்கோள் மற்றும் குறிகாட்டிகளை அடைவதற்கு இத்துறையானது பல லட்சிய திட்டங்களைத் தொடங்கியுள்ளது. பல முன் முயற்சிகளுக்கு பல பங்குதாரர்களின் ஒருங்கிணைப்பு மற்றும் ஒருங்கிணைந்த உத்திகள் தேவை. தற்போதைய அரசால் அறிவிக்கப்பட்ட "பசுமை தமிழ்நாடு இயக்கம்" மற்றும் "தமிழ்நாடு ஈரநிலங்கள் இயக்கம்" போன்றவை முக்கிய திட்டமாக உள்ளது.

2030-2031 ஆம் ஆண்டுக்குள் தமிழ்நாட்டின் காடு மற்றும் மரங்களின் பரப்பை தற்போதுள்ள 23.8% இலிருந்து 33% ஆக உயர்த்தும் நோக்கத்துடன் பசுமைத் தமிழ்நாடு இயக்கம் முன்மொழியப்பட்டது. இலக்கு நடவுப்பகுதியில் 50% வனம் அல்லாத நிலங்களாக இருப்பதால், பிற துறைகளுடன் இணைந்து திட்டம் செயல்படுத்தப்படும். (வேளாண்மை, ஊரக வளர்ச்சி மற்றும் பஞ்சாயத்து ராஜ், தொழில்கள், தோட்டக்கலைத் துறை போன்றவை) மற்றும் தனியார் நில உரிமையாளர்கள் உள்ளிட்ட இயற்கை பங்குதாரர்களுடன் வலுவான ஒத்துழைப்பு இத்திட்டத்திற்கு தேவைப்படுகிறது. இதே போல், மாநிலத்தின் ஈர நிலங்களை மீட்டெடுக்கும் நோக்கத்துடன் தொடங்கப்பட்ட தமிழ்நாடு ஈரநில இயக்கம், பல துறைகள் முக்கியமாக நிலம் வைத்திருக்கும் துறைகளை உள்ளடக்கிய ஒருங்கிணைந்த முயற்சிகள் மற்றும் ஒருங்கிணைந்த செயல் திட்டம் தேவை. 100 ஈரநிலங்களை கண்டறிந்து வரை படமாக்குவது மற்றும் வாழ்வாதார விருப்பங்களை மையமாகக் கொண்டு சுற்றுச்சூழல்

2023 ஏப்ரல் 13]
சமநிலையை மீட்டெடுப்பது ஐந்தாண்டு தலையாய பணியாக கருதப்படுகிறது.

8.5. தேசிய வனச்செயல் குறியீடு

தேசிய செயல் திட்டக் குறியீடு 2014 இன்படி, செயல்திட்டம் என்பது ஒரு வனக்கோட்டத்தில் உள்ள வனங்களை மேலாண்மை செய்வதற்கான ஆவணம் ஆகும். இந்தத் திட்டம் வன வளம் நிலை குறித்த மதிப்பீடு, கடந்த கால மேலாண்மையின் வெளிப்பாடு மற்றும் வருங்காலத்தில் நிலைத்த வன மேலாண்மைக்கான திட்டத்தை கொண்டுள்ளதாகும். வனச்செயல் திட்டம் ஒவ்வொரு பத்தாண்டு காலங்களுக்கு ஒருமுறை எழுதப்படுவதாகும். அறிவியல் முறையில் வன மேலாண்மை மேற்கொள்ள வனச்செயல் திட்டம் ஒரு முக்கிய ஆவணமாக விளங்குகிறது. வனச்செயல் திட்டத்தில் குறிப்பிட்டுள்ளபடியே அனைத்து வனங்களும் நிலைத்த தன்மையுடன் மேலான்மை செய்யப்பட வேண்டும். தேசிய வனக்கொள்கை 1988 இன்படி "அதிகாரம் பெற்ற அலுவலரால் ஒப்பளிக்கப்பட்ட வனச்செயல் திட்டத்தின்படியே வனங்களில் பணிகள் மேற்கொள்ளப்பட வேண்டும்", ஒன்றிய அரசின் சுற்றுச்சூழல், வனம் மற்றும் பருவகால மாற்ற அமைச்சகம் இந்த வனச்செயல் திட்டத்திற்கு ஒப்புதல் வழங்க அதிகாரம் பெற்றுள்ளது.

தமிழ்நாட்டில் உள்ள அனைத்து வனம் மற்றும் வன உயிரின கோட்டங்களில் கட்டுப்பாட்டில் உள்ள வனங்கள் அனைத்தும், வனச்செயல் திட்டம் மற்றும் மேலாண்மை திட்டம் ஆகியவற்றில் குறிப்பிட்டுள்ளபடியே விஞ்ஞான முறையில் மேலாண்மை செய்யப்படுகிறது.

9. வன மற்றும் வனஉயிரின மேலாண்மைக்கான சட்ட ரீதியான அமைப்புகள்

9.1 . தமிழ்நாடு உயிரிப்பல்வகைமை வாரியம்

உயிரிப்பல்வகைமை என்பது நுண்ணுயிரிகள் மற்றும் பூச்சிகள் போன்ற மிகச் சிறிய உயிரினங்கள் முதல் மரங்கள் மற்றும் பாலூட்டிகள் போன்ற பெரிய உயிரினங்கள் வரை உள்ள உயிரினங்களுக்கிடையே உள்ள வகைமையைக் குறிக்கிறது. உயிரிப்பல்வகைமை உணவுப் பாதுகாப்பை உறுதிசெய்யும் வளங்களை வழங்குகிறது மற்றும் உள்ளூர் சமூகங்களின் வாழ்வாதார

உருவாக்கத்திற்காகவும் பயன்படுத்தப்படுகிறது. இருப்பினும் மானுடவியல் அழுத்தம், காலநிலை மாற்றம் மற்றும் உயிர் வளங்களை வரையறையின்றி பயன்படுத்துதல் போன்றவற்றால் உயிரிப்பல்வகைமை அச்சுறுத்தல்களை எதிர்கொள்கிறது. 1992 ஆம் ஆண்டு ரியோ நகரில் நடைபெற்ற UNCED மாநாட்டில் உயிரியல் பன்முகத்தன்மைக்கான மாநாடு (CBD) உலகளவில் மேற்குறிப்பிட்ட பிரச்சனையை எடுத்துரைத்தது. மேலும், உயிரியல் பல்வகைமையின் பாதுகாப்பு, அதன் நிலையான பயன்பாடு மற்றும் பயன்பாட்டிலிருந்து கிடைக்கப்பெறும் பயன்கள் மற்றும் சமமான பகிர்வு ஆகிய மூன்று நோக்கங்கள் உருவாக்கப்பட்டது. இந்த உயிரியல் பன்முகத்தன்மை மாநாட்டில் இந்தியா ஒரு அங்கமாக இருக்க 1994 இல் கையெழுத்திட்டது. இதன் பொருட்டு உயிரிப்பல்வகைமை சட்டம், 2002 மற்றும் 2004 இல் விதிகளை இயற்றியது. இது சமூகம் சார்ந்த நிலையான உயிரிப்பல்வகைமை பாதுகாப்பின் சட்டப்பூர்வ கட்டமைப்பை வழங்குகிறது.

உயிரிப்பல்வகைமை சட்ட விதிகளை கீழ் நிலையில் செயல்படுத்தும் நிறுவனங்கள் உயிரிப்பல்வகைமை மேலாண்மை குழுக்கள் ஆகும். இவை, உயிரிப்பல்வகைமை சட்டம், 2002 பிரிவு 41 இன்கீழ், ஒவ்வொரு உள்ளாட்சி அமைப்பிலும் அமைக்கப்பட்டுள்ளன. உயிரிப்பல்வகைமை மேலாண்மை குழுக்கள் சமூகம் சார்ந்த உயிரிப்பல்வகைமை வளங்களை பாதுகாத்து நிர்வாகத்தை எளிதாக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. தமிழ்நாட்டில் இதுவரை 13,608 உயிரிப்பல்வகைமை மேலாண்மை குழுக்கள் உருவாக்கப்பட்டுள்ளன. இந்த குழுக்கள் உயிரிப்பல்வகைமை சட்டம் 2002—ஐ செயல்படுத்துவதன்மூலம் ஏற்படும்தாக்கங்களை மதிப்பீடுசெய்கின்றன.அதன் அடிப்படையில் தமிழ்நாடு உயிரிப்பல்வகைமை வாரியத்தால் பங்குதாரர்கள் மற்றும் வல்லுநர்கள் உதவியோடு உயிரிப் பல்வகைமை மேலாண்மை குழுக்களுக்கு பயிற்சி மற்றும் திறன் மேம்பாடு வழங்குவதற்காக மிக மேலான நடவடிக்கைகள் மேற்கொள்ள திட்டமிடப்பட்டுள்ளன. மேலும், மாவட்டங்களிலுள்ள 119 உயிரிப் பல்வகைமை மேலாண்மை குழுக்களுக்கு, மாவட்ட, ஒன்றிய மற்றும் கிராம அளவில் இணையவழி பயிற்சி உட்பட பயிற்சிகள் நடத்தப்பட்டுள்ளது. உலகளாவிய சுற்றுச்சூழல் வசதி (Global Environment Facility) அமைப்பின் உதவியுடன், தமிழ்நாடு உயிரிப்பல்வகைமை வாரியத்துடன் இணைந்து "உயிரிப்பல்வகைமை பாதுகாப்பு பலப்படுத்துவதற்கான

2023 ஏப்ரல் 13]

சம்மந்தப்பட்ட நிறுவனங்களின் திறன்களை வலுப்படுத்துதல்" சத்தியமங்கலம் பகுதியில் வரவிருக்கிறது. இத்திட்டத்தின் முக்கிய குறிக்கோள் தன்னாட்சி நிறுவனங்களின் திட்டமிடுதல் மற்றும் செலவுத்திட்ட அமைப்புகளில் உயிரிப்பல்வகைமை பாதுகாப்பு மற்றும் வளங்களின் நிலையான பயன்பாடு போன்ற கொள்கைகளுக்கு முன்னுரிமை வழங்குதல். இத்திட்டம் பல்வேறு பங்குதாரர்களின் ஆலோசனையின்படி இணைத்து தற்போது உருவாக்கப்பட்டு வருகிறது. மேலும் 2023 ஆம் ஆண்டின் பிற்பகுதியிலிருந்து இத்திட்டம் செயல்படுத்தப்பட உள்ளது.

உயிரிப்பல்வகைமை விதிகள் 2004 இன் விதி 20(6) இன்படி 13,604 மக்கள் உயிரிப் பல்வகைமை பதிவேடுகள் (People Biodiversity Registers) தயாரிக்கப்பட்டு அவற்றில் சில மேம்படுத்தப்பட்டு சரிபார்க்கப்பட்டு வருகின்றன. உயிர் வள பாதுகாப்பு, நிலையான பயன்பாடு, மூலிகைத் தாவரங்கள் சாகுபடி மற்றும் பிற வருமானம் தரும் பயிர்களை மேம்படுத்துவதற்கு உயிரிப்பல்வகைமை மேலாண்மை குழுக்களுக்கு உதவிட உள்ளூர் அறிவியல் வல்லுநர்களை தமிழ்நாடு உயிரிப்பல்வகைமை வாரியம் ஈடுபடுத்துகிறது. மேலும், உள்ளூர் மக்கள் விநியோகஸ்தர்களிடம் நேரடி தொடர்பு கொள்ள வழிவகை செய்யப்படும். தமிழ்நாடு உயிரிப்பல்வகைமை வாரியம் "வலுப்படுத்துதல் மற்றும் மறுசீரமைப்பு திட்டம்" என்ற ஒரு விரிவான திட்டத்தை 2022—2025 வரையிலான மூன்று ஆண்டுகளுக்கு 8.8 கோடி ரூபாய் செலவில் தயாரித்து அரசிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. மேலும் 35.8 லட்சம் ரூபாய் மதிப்பிலான திட்டங்கள் தேசிய உயிரிப்பல்வகைமை ஆணையத்திடம் சமர்ப்பிக்கப்பட்டு நிதியுதவியும் பெறப்பட்டுள்ளது. மேலும், தேசிய உயிரிப்பல்வகைமை ஆணையத்திடமிருந்து 90 மாதிரி உயிரிப்பல்வகைமை மேலாண்மை குழுக்களுக்கு ஆரம்ப நிதியாக 72 லட்சம் ரூபாயும் மற்றும் மக்கள் உயிரிப்பல்வகைமை பதிவேடு தயாரிப்பின்கீழ் 25 லட்சம் ரூபாயும் பெறப்பட்டுள்ளது.

மதுரை மாவட்டத்திலுள்ள அரிட்டாப்பட்டி பகுதியினை முதன்முதலாக உயிரிப்பல்வகைமை பாரம்பரிய தளமாக உயிரிப் பல்வகைமை சட்டம் 2002 இன் பிரிவு 37(1) இன்கீழ் தமிழ்நாடு அரசால் 21 நவம்பர் 2022 அன்று அறிவிக்கை செய்யப்பட்டது. மேலும், தமிழ்நாடு உயிரிப்பல்வகைமை வாரியம் பாரம்பரிய தளங்களில் ஒவ்வொரு தளத்தையும் களத்தணிக்கை செய்து 30 உயிரிப் பல்வகைமை பாரம்பரிய தளங்களுக்கான அறிவிப்பு முன்

மொழிவுகளைத் தயாரித்து வருகிறது. தமிழ்நாடு உயிரிப்பல்வகைமை வாரியம், தமிழ்நாட்டில் உள்ள உயிரிப் பல்வகைமை பாரம்பரிய தளங்களை பாதுகாத்தல் மற்றும் நிர்வகிப்பதற்கான புதிய விதிகளை உருவாக்குவதற்கு 2022 ஆம் ஆண்டு ஜூலை 12 ஆம் தேதி அரசிடம் வரைவினை சமர்ப்பித்துள்ளது.

உயிரிப் பல்வகைமை சட்டம் 2002 இன் பிரிவுகள் 3,4,6,7 மற்றும் 24 இன்கீழ் அணுகல் மற்றும் பயன்கள் பகிர்வுக்கான தொகையாக ரூ.1,78,43,617/- உயிரிப்பல்வகைமை வாரியத்திற்கு கிடைக்கப்பெற்று அதில் ரூ.53,04,104/-சம்மந்தப்பட்ட பயனாளிகளுக்குவழங்கப்பட்டது. தமிழ்நாடு அரசு மற்றும் வாரியமும் உயிரிப்பல்வகைமை சட்டம் 2002 இன் நோக்கங்களை அடைவதற்கும் அனைத்து பகுதிகளிலும் திறன்களை மேம்படுத்துவதில் கவனம் செலுத்துவதன்மூலம் தற்போதைய சவால்களை சமாளிப்பதற்கும், தமிழ்நாடு உயிரிப்பல்வகைமை வாரியம் திறம்பட செயல்படுத்துவதற்கும் உறுதியாக உள்ளது. அதன்படி தமிழ்நாடு உயிரிப்பல்வகைமை வாரியம் வலுப்படுத்துதல் மற்றும் மறுசீரமைப்பு திட்டம் 2022-2025 என்ற தலைப்பில் விரைவில் செயல்படுத்தப்பட உள்ளது.

9.2. மாநில வனஉயிரின வாரியம்

வனஉயிரின (பாதுகாப்பு) சட்டம், 1972 இன்கீழ் உள்ள பிரிவு 6 இன்படி, தமிழ்நாடு மாநில வனஉயிரின வாரியம் ஏற்படுத்தப்பட்டுள்ளது. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சரின் தலைமையின்கீழ் இவ்வாரியமானது இயங்கி வருகிறது. இவ்வாரியத்தில், 3 சட்டமன்ற உறுப்பினர்கள், 14 அலுவல்வழி உறுப்பினர்கள் மற்றும் 13 அலுவல் சாரா உறுப்பினர்கள் உள்ளனர். வன உயிரினம் மற்றும் முக்கிய தாவர வகைகளை பேணிப் பாதுகாப்பதற்கான கொள்கையை வகுப்பதில் இவ்வாரியம் அரசுக்கு உரிய அறிவுறுத்தல்களை வழங்குகிறது. வன உயிரினங்களைப் பேணிப் பாதுகாப்பதற்கும், உரிய நடவடிக்கைகள் குறித்தும் அரசுக்கு உரிய அறிவுறுத்துதலையும் இவ்வாரியம் வழங்குகிறது.

9.3. தமிழ்நாடு உயிரியல் பூங்கா ஆணையம்

தமிழ்நாடு உயிரியல் பூங்கா ஆணையம் மாநில அரசால் 2005 ஆம் ஆண்டு ஏற்படுத்தப்பட்டது. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் தலைமையின்கீழ் இயங்கும் இந்த ஆணையம், ஒன்றிய உயிரியல் பூங்கா ஆணையம், ஒன்றிய

2023 ஏப்ரல் 13]

அரசு, மாநில அரசு மற்றும் இதர முகமைகளிலிருந்து நேரடியாக பெறப்படும் நிதி மற்றும் உதவித் தொகைகளை கொண்டு உயிரியல் பூங்காக்கள் மேம்பாட்டிற்கு பயன்படுத்த வழிவகை செய்கிறது.

9.4. தமிழ்நாடு மாநில ஈரநிலங்கள் ஆணையம்

தமிழ்நாடு ஈரநிலங்கள் ஆணையமானது தமிழ்நாட்டில் உள்ள அனைத்து ஈரநிலங்களின் பாதுகாப்பு, வளம் பேணல் மற்றும் சூழலியல் மறுசீரமைப்புக்கான முதன்மை ஆணையமாகும். இந்த மாநில ஈரநிலங்கள் ஆணையத்தை அமைப்பதில் முன்னோடி மாநிலங்களில் தமிழ்நாடு மாநிலமும் ஒன்றாகும். 2016 ஆம் ஆண்டு அமைக்கப்பட்ட தமிழ்நாடு மாநில ஈரநிலங்கள் ஆணையம், 26-9-2017 இல் நடைமுறைக்கு கொண்டு வரப்பட்ட ஈரநிலங்கள் (பாதுகாப்பு மற்றும் மேலாண்மை) விதிகள் 2017 இன்படி தமிழ்நாடு ஈரநிலங்கள் ஆணையம் 2019 ஆம் ஆண்டு திருத்தியமைக்கப்பட்டது. இதேபோல், மாவட்ட அளவில் ஈரநிலங்களைப் பாதுகாத்தல், மேலாண்மை செய்தல், வளம் பேணல் மற்றும் ஈரநிலங்கள் (பாதுகாப்பு மற்றும் மேலாண்மை) விதிகள் 2017-ஐ நடைமுறைப்படுத்துவதற்காக மாநில ஈரநிலங்கள் ஆணையத்திற்கு உதவும் பொருட்டு 2017 ஆம் ஆண்டு அமைக்கப்பட்ட மாவட்ட அளவிலான ஈரநிலங்கள் மேலாண்மைக் குழுவானது 2019 ஆம் ஆண்டு திருத்தியமைக்கப்பட்டது.

மாண்புமிகு வனத்துறை அமைச்சர் அவர்களை தலைவராகவும், அரசு தலைமை செயலாளரை துணைத் தலைவராகவும் கொண்டு தமிழ்நாடு மாநில ஈரநிலங்கள் ஆணையம் அமைக்கப்பட்டுள்ளது. ஈரநிலங்களின் பாதுகாப்பு, பராமரிப்பு மற்றும் மேலாண்மைக்கென மாவட்டந்தோறும் மாவட்ட ஆட்சியரைத் தலைவராகக் கொண்டு, மாவட்ட அளவிலான மேலாண்மைக் குழுக்கள் இயங்கி வருகின்றன.

9.5 பள்ளிக்கரணை சதுப்புநிலப் பாதுகாப்பு ஆணையம்

பள்ளிக்கரணை சதுப்பு நிலத்திற்கென மாநில / ஒன்றிய அரசுகளிலிருந்து பெறப்படும் / விடுவிக்கப்படும் நிதியினை உரிய வகையில் பயன்படுத்தி மேலாண்மை செய்யும்பொருட்டு பள்ளிக்கரணை சதுப்பு நிலப்பாதுகாப்பு ஆணையம் ஏற்படுத்தப்பட்டது. நிதி, சுற்றுச்சூழல், சுற்றுலா, சென்னை மாநகர குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீர் வாரியம் மற்றும் பொதுப் பணித் துறை போன்ற பல்வேறு துறைகளின்

[*2023 ஏப்ரல் 13*

பங்களிப்புடன் சதுப்புநிலப் பாதுகாப்பு மற்றும் மேலாண்மையில் ஒருங்கிணைந்த அணுகுமுறையினைக் கையாள இவ்வாணையம் ஏற்படுத்தப்பட்டது. சென்னை, காஞ்சிபுரம் மற்றும் திருவள்ளூர் மாவட்டத்திற்குட்பட்ட சதுப்பு நிலங்களுக்கான உயர்தொழில்நுட்ப ஆலோசனை அமைப்பாக இவ்வாணையம் செயல்பட்டு வருகிறது.

9.6. தமிழ்நாடு ஈடுசெய் காடு வளர்ப்பு நிதி மேலாண்மை மற்றும் திட்ட ஆணையம் (TN CAMPA)

*ஈடுசெய் காடு வளர்ப்பு நிதி சட்டம், 2016 மற்றும் ஈடுசெய் காடு வளர்ப்பு விதிகள், 2018 இன்கீழ் தமிழ்நாடு ஈடுசெய் காடு வளர்ப்பு நிதி மேலாண்மை மற்றும் திட்ட ஆணையம் (*Tamil Nadu CAMPA*) எனும் சட்ட ரீதியான அமைப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது.*

இந்த அமைப்பானது வனமற்ற பிற பணிக்காக வனநில ஒதுக்கீடு செய்யப்பட்ட வன நிலத்தின் இழப்பீட்டிற்காக, பெறப்பட்ட மற்றும் வன நிலத்தின் நிகர மதிப்பைப் பயன்படுத்தி, ஈடுசெய்யும் காடு வளர்ப்பை ஊக்குவிப்பதற்காக ஒரு ஒருங்கிணைந்த கட்டமைப்பை வழங்குகிறது. மேலும் காடுகளை மீளுருவாக்கம் செய்வது மற்றும் நிறுவனங்களை வலுப்படுத்துவது, அனைத்து நிலை வன அலுவலர்களுக்கான குறிப்பாக சரக அளவில் திறன் மேம்பாடு உட்பட, பயிற்சி அளித்தல் இதன் முதன்மை நோக்கம் ஆகும்.

தமிழ்நாடு ஈடுசெய் காடு வளர்ப்பு நிதி மேலாண்மை மற்றும் திட்ட ஆணையத்தின் நிதி உதவிமூலம் மேற்கொள்ளப்படும் அனைத்து விதமான பணிகளை செயல்படுத்துதல் மற்றும் கண்காணித்தல் இந்த அமைப்பின் பொறுப்பாகும். இவ்வாணையத்தின் நிர்வாகக் குழுவின் தலைவராக மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செயல்படுகிறார். இந்த ஆணையம், வன நிலங்களை வனமற்ற பிற பணிகளுக்காக பயன்படுத்துவதால் ஏற்படும் தாக்கத்தினை தணிக்கும் அமைப்பாகவும், ஈடு செய்காடு வளர்ப்பு நிதியினை உரிய காலத்தில் விடுவித்து, வெளிப்படைத் தன்மையுடன் உரிய முறையில் பயன்படுத்துவதை உறுதி செய்யும் அமைப்பாகவும் இவ்வாணையம் இயங்கி வருகிறது.

10. வன மேலாண்மை

மனிதநாகரிகத்தின்நீண்ட காலவாழ்வாதாரத்திற்குவனங்களின் பாதுகாப்பு மற்றும் மேலாண்மை மிகவும் இன்றியமையாதது.

2023 ஏப்ரல் 13]

உள்ளூர் சமூகங்களின் முழுமையான பங்கேற்பின் வாயிலாக வனங்களின் சீரிய பாதுகாப்பு மற்றும் மேலாண்மையில் உரிய பலன்களை அடைய முடியும் என்பதை தமிழ்நாடு வனத் துறை நன்கு உணர்ந்துள்ளது. சமூக, பாதுகாப்பு மற்றும் உற்பத்தித் தேவைகளை பூர்த்தி செய்யும்பொருட்டு தமிழ்நாட்டில் உள்ள வனங்கள் பின் வரும் விரிவான நோக்கங்களுடன் மேலாண்மை செய்யப்பட்டு வருகின்றன.

1. *வனங்கள் மற்றும் வன உயிரினங்களைப் பாதுகாப்பதன் வாயிலாக, உயிர்ப்பன்மை மற்றும் மரபியல் வளங்களைப் பேணுதல்*
2. *வனப் பகுதிகளில் நீர் வளங்களைப் பாதுகாத்தல் மற்றும் பெருக்குதல்*
3. *வனங்கள் அடர்ந்த பகுதிகளின் மேம்பாட்டிற்காக தரங்குன்றிய காடுகளை மீளுருவாக்கி அதன் இயல்பு நிலைக்கு கொண்டு வருதல்*
4. *பழங்குடியினர் மற்றும் இதர வனம் சார்ந்து வாழும் சமுதாயத்தினரின் நலன் மற்றும் பொருளாதார செழுமையினை நிலைத்த சூழல் தன்மையுடன் உறுதி செய்தல்*

10.1. வனப் பாதுகாப்பு

வன வளங்களைப் பாதுகாப்பதற்கும் பல்லுயிர் பெருக்கத்தை மேம்படுத்துவதற்கும், சட்ட விரோதமாக மரங்கள் வெட்டுதல், தீ விபத்துகள், வன நில ஆக்கிரமிப்பு, மணல் மற்றும் வளங்களை சட்ட விரோதமாக அகற்றுதல் மற்றும் வன விலங்குகளை வேட்டையாடுதல் போன்றவற்றால் மாநிலத்தின் வனச்செழுமை அச்சுறுத்தலுக்கு உள்ளாகியுள்ளது. வன வளங்களின் பாதுகாப்பினை உறுதி செய்யவும் மற்றும் உயிர்பன்மையினை மேம்படுத்தவும் வன வளங்களின் பாதுகாப்பினை உறுதி செய்யவும் மற்றும் உயிர்பன்மையினை மேம்படுத்தவும் வனத் துறை பின்வரும் உத்திகளைக் கையாள்கிறது:—

1. *முன் களப்பணியாளர்களை நியமிப்பதன் மூலமும், அறிவு மற்றும் திறனை மேம்படுத்த சிறப்பு பயிற்சி வழங்குதல் மூலமாகவும் வனப் பாதுகாப்பை வலுப்படுத்துதல்.*

2. பணியாளர்களுக்கு நவீன ஆயுதங்கள் மற்றும் வெடிமருந்துகள், தகவல் தொடர்பு, போக்குவரத்து வசதிகளை வழங்குவதன்மூலம் உள்கட்டமைப்பை வலுப்படுத்துதல்.

3. நுண்ணறிவு சேகரிப்பு மற்றும் பிற அமலாக்க நிறுவனங்களுடன் ஒருங்கிணைப்பை மேம்படுத்துதல்.

4. டிஃபெரன்ஷியல் குளோபல் பொசிஷனிங் சிஸ்டம்ஸ் (டிஜிபிஎஸ்) சர்வே, தொலை உணர்வு மற்றும் புவியியல் தகவல் அமைப்பு தொழில்நுட்பங்கள் போன்ற மேம்பட்ட தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தி காடுகளின் எல்லைகளை ஆய்வு செய்து எல்லைகளை நிர்ணயம் செய்து வனநிலங்களை ஒருங்கிணைத்தல்.

5. மேம்பட்ட தொழில்நுட்பங்களுடன் கண்காணிப்பு அமைப்பை உருவாக்குதல்.

6. கடல் சுற்றுச்சூழல் பாதுகாப்பை வலுப்படுத்துதல்.

மாநிலத்தில் வன மேலாண்மைக்கு வனத் தீ மிகப்பெரிய சவாலாக உள்ளது. தமிழ்நாட்டின் பெரும்பாலான காடுகள் இலையுதிர் காடுகள் என்பதால், வனத் தீயின் நிகழ்வுகள் அதிக அளவில் உள்ளன. பல்வேறு மானுடவியல் காரணிகளால் மாநிலத்தின் காடுகள் அடிக்கடி வனத் தீயிற்கு இரையாகின்றன.

இன்று வரை, பிராந்திய மற்றும் வன விலங்கு பிரிவுகள் 13 வனப் பாதுகாப்புப் படைகள், 17 வன நிலையங்கள் மற்றும் 11 சூழல் சோதனைச் சாவடிகள் மாநிலம் முழுவதும் முக்கியமான மற்றும் பாதிக்கப்படக் கூடிய பகுதிகளில் செயல்படுகின்றன. கண்காணிப்பு வசதியுடன் 112 வனச் சோதனைச் சாவடிகள் உள்ளன.

அரசாணை (நிலை) எண் 117, சுற்றுச்சூழல் மற்றும் வனங்கள் (FR.SPL.A) துறை, நாள் 27—9—2017 இல் பாதுகாப்பு, கண்காணிப்பு, வனம் மற்றும் வன உயரின குற்ற புலனாய்வு தகவலகம் அமைக்கப்பட்டது. மேலும், கூடுதல் முதன்மை தலைமை வனப் பாதுகாவலர் (பாதுகாப்பு & கண்காணிப்பு) பதவியானது கூடுதல் முதன்மை தலைமை வனப் பாதுகாவலர் பாதுகாப்பு, கண்காணிப்பு, வனம், வன உயிரின குற்றப் புலனாய்வு

2023 ஏப்ரல் 13]

தகவலகம் (PVFWCB) என்று மாற்றி அமைக்கப்பட்டுள்ளது. பாதுகாப்பு, கண்காணிப்பு, வனம், வன உயிரின குற்ற புலனாய்வு தகவலகம் (PVFWCB) இன் நிர்வாகக் கட்டுப்பாட்டின்கீழ், பேரிடர் மேலாண்மை, தீ தடுப்பு மற்றும் தணிப்பு மற்றும் பிற அவசரகால சூழ்நிலைகளில் தேவைகளைப் பூர்த்தி செய்ய வன உயரடுக்குப் படை உருவாக்கப்பட்டது.

பாதுகாப்பு, கண்காணிப்பு, வனம், வன உயிரின குற்றப் புலனாய்வு தகவலக (PVFWCB) பிரிவு, வன வளங்களைப் பாதுகாப்பதற்கான வன விலங்கு குற்றக் கட்டுப்பாட்டுப் பணியகம் (WCCB), சுங்கம், காவல் துறை மற்றும் பிற துறைகள் போன்ற பிற சட்ட அமலாக்க நிறுவனங்களுடன் ஒருங்கிணைக்கிறது. அதன் சொந்த தகவல் வலையமைப்பிலிருந்து நுண்ணறிவு உள்ளீடுகளைச் சேகரித்து, மற்ற சட்ட அமலாக்க நிறுவனங்களுடன் பகிர்ந்து கொள்வது மட்டுமல்லாமல் வன நிலையங்கள், வனப் பாதுகாப்புப் படைகள் மற்றும் பிற பணியாளர்கள்மூலம் இரகசிய மற்றும் வழக்கமான குற்றக் கட்டுப்பாட்டு நடவடிக்கைகளிலும் ஈடுபடுகிறது. 2022-2023 ஆம் ஆண்டில் பாதுகாப்பு, கண்காணிப்பு, வனம், வன உயிரின குற்றபுலனாய்வு தகவலகம் (PVFWCB)இன் பல்வேறு இரகசிய நடவடிக்கைகள்மூலம் பல மதிப்புமிக்க பறிமுதல்கள் மற்றும் கைதுகள் நடைபெற்றன. இதில் யானை தந்தங்கள், அம்பர்கிரிஸ், செம்மரம் போன்ற சட்டவிரோத கடத்தல் பொருட்கள் பெரிய அளவில் பறிமுதல் செய்யப்பட்டு, குற்றவாளிகள் மீது தகுந்த நீதிமன்ற நடவடிக்கையைத் தொடர சம்பந்தப்பட்ட வனச்சரகங்களிடம் ஒப்படைக்கப்பட்டது.

10.1.1. தமிழ்நாடு வனம் மற்றும் வனஉயிரினக் குற்றக் கட்டுப்பாட்டுக் குழும்ம் உருவாக்கம் மற்றும் செயல்பாடுகள்.

அரசாணை (நிலை) எண் 97 சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத் (வனம்.5) துறை, நாள் 2-11-2021 இன்படி சென்னை, கோவை, மதுரை மற்றும் ராமநாதபுரத்தில் நான்கு மண்டல அலுவலகங்களுடன் தமிழ்நாடு வனம் மற்றும் வனஉயிரின குற்றக் கட்டுப்பாட்டு தலைமையகம் அமைப்பதற்காக ஆணை வெளியிடப்பட்டது. மேலும் மாநில அளவில் வனம் மற்றும் வன உயிரின குற்றங்களை கண்டறிந்து தடுக்கும் பொருட்டு சென்னையில் தலைமையகம் அமைக்கப்பட்டுள்ளது.

அரசாணை (நிலை) எண் 158 சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத் (வனம்5) துறை, நாள் 14-9-2022 இன்படி மண்டலத்

தலைவர்கள் மற்றும் பணியாளர்களை மறுபகிர்வு செய்ய ஆணைகள் வழங்கப்பட்டுள்ளது. அதன்படி, சம்பந்தப்பட்ட அலுவலர்கள் தங்களின் புதிய பணியிடங்களிலும், பணியில் சேர்ந்துள்ளார்கள். மேலும் நான்கு மண்டல அலுவலகங்களின் கட்டுப்பாட்டின்கீழ் கொண்டு வரப்பட்டுள்ளது. மண்டல அலுவலர்கள் கடமைகள் மற்றும் பொறுப்புகள் பின்வருமாறு.

1. பயிற்சியளிக்கப்பட்ட வனப் பணியாளர்களைக் கொண்ட சிறப்பான அமைப்பின் மூலமாக வனம் மற்றும் வன உயிரின குற்றங்களை தடுத்தல்.

2. வனக் குற்றம் மற்றும் வன உயிரின குற்றங்கள் மற்றும் மாநிலங்களுக்கிடையேயான எல்லைகளுக்குட்பட்ட பகுதிகளிலும் நடைபெறும் சட்டத்திற்கு புறம்பான வர்த்தகம் தொடர்பான தகவல்களை சேகரம் செய்தல்.

3. வனக் குற்றம் மற்றும் வன உயிரின குற்றங்களை குறைப்பதற்கும் மற்றும் கட்டுப்படுத்துவதற்கும் பிற இதர நிறுவனங்களுடன் தொடர்பு கொண்டு தகவல்களை பெறுதலும் மற்றும் ஒருங்கிணைத்து செயல்படுதலும்.

4. விசாரணை மேற்கொள்ளும் நிறுவனங்களுக்கு உதவி புரிந்திடும் வகையில் மாநில அளவில் வனக் குற்றம் மற்றும் வன உயிரின குற்றத் தரவு வங்கியினை அமைத்தல்.

5. வனக் குற்றம் மற்றும் வன உயிரின குற்றத்தை கட்டுப்படுத்துவதற்கும் மற்றும் கண்காணிப்பு செய்வதற்கும் நிலையான வரன்முறைகளை உருவாக்குதல்.

6. சட்டத்திற்கு புறம்பான வியாபாரங்களைக் குறித்து சிறப்பான முறையில் கண்காணிப்பதற்கு பல்வேறு அரசு துறைகளில் திறமையான பயிற்சி பெற்ற அலுவலர்களைக் கொண்ட குழுவினை அமைத்தல்.

7. சட்டத்திற்கு புறம்பான வன உயிரின பொருட்களின் வியாபாரங்கள் குறித்து விசாரணை மேற்கொள்ளவும், அதனை கட்டுப்படுத்தவும் பாராட்டும் வகையிலான சாட்சியங்களைக் கொண்ட விசாரணை திறனை மேம்படுத்துதல்.

8. வன மற்றும் வனஉயிரினச் சூழல் அமைப்புகளுக்கு அருகில் வசிக்கும் உள்ளூர் சமுதாய மக்களிடமிருந்து தகவல் பெறக்கூடிய அமைப்பினை உருவாக்குதல்.

2023 ஏப்ரல் 13]

9. எதிர்காலத்தில் சட்டத்திற்கு புறம்பான நடவடிக்கைகளை சிறப்பாக கட்டுப்படுத்துதல் மற்றும் கண்காணிப்புகளுக்கு மாநில அளவில் வேட்டையாடுதல் மற்றும் சட்டத்திற்கு புறம்பான வியாபாரம் நடைபெறும் இடங்கள் குறித்த வரைபடம் தயாரித்தல்.

10.1.2. வன உயரடுக்குப் படை

20-8-2018 அன்று வைகை அணை, தேனி மற்றும் தமிழ்நாடு வன உயர் பயிற்சியகம், கோயம்புத்தூர் ஆகிய இரண்டு இடங்களில் "வன உயரடுக்குப் படை" ஆல்பா & டெல்டா உருவாக்கப்பட்டது. வனப் பகுதிகளில் ஏற்படும் எந்த அவசரச் சூழலுக்கும் திறம்பட செயல்படுவதே வன உயரடுக்கு படையின் நோக்கமாகும். வனத் தீ, மீட்பு மற்றும் தேடல் நடவடிக்கைகள், மனித – வன விலங்கு மோதல்கள், சூறாவளி மற்றும் வெள்ள சேதங்களை அகற்றும் நடவடிக்கைமற்றும்பிறபேரிடர்சூழ்நிலைகளின்தீவிரநிகழ்வுகளுக்கு வன உயரடுக்கு படை உடனடியாக பயன்படுத்தப்படும். மேலும் வழக்கமான வன மற்றும் வன உயிரின பாதுகாப்பு கடமைகளுக்கு வன உயரடுக்குப் படை பயன்படுத்துவது இல்லை. வன உயரடுக்குப் படைக்கு அவசரகால தேவைகள் பற்றிய அனைத்து அம்சங்களிலும் விரிவான பயிற்சி அளிக்கப்பட்டது. திறன் மேம்பாட்டு செயல்முறை பின்வரும் முக்கிய கூறுகளை உள்ளடக்கியது :—

1) நீச்சல் அடிப்படை பயிற்சிகள், விலங்கு நடத்தை ஆய்வுகள், மிருகக்காட்சி சாலை மேலாண்மை & மீட்பு நுட்பங்களுக்கான நிறுவன பயிற்சி ஆகிய பயிற்சிகள் அறிஞர் அண்ணா உயிரியல் பூங்கா, வண்டலூரில் அளிக்கப்பட்டுள்ளது.

2) வனஉயிரின குற்றங்கள் மற்றும் மாதிரி சேகரிப்பு முறைகளுக்கான தடயவியல் அறிவியல் குறித்த நிறுவன பயிற்சி வன உயிரினங்களுக்கான மேம்படுத்தப்பட்ட நிறுவனம், கொளப்பாக்கத்தில் அளிக்கப்பட்டுள்ளது.

3) உடல் வலுவூட்டல், ஆயுதங்களைக் கையாளுதல் மற்றும் அவைகளை வைத்திருக்கும் நுட்பங்கள், ஆயுதங்களின் தொழில்நுட்பத் தகவல்கள், சிறிய ஆயுதங்களின் கோட்பாடு, துப்பாக்கி சுடும் பயிற்சி, வரைபடம் வரைதல், புவிதள குறியீட்டினை கையாளுதல், தடைகளை கடத்தல், உருமறைப்பு மற்றும் மறைத்தல் ஆகியவற்றிற்கான பயிற்சி சிறப்புப் பணிக்குழுமூலம் அளிக்கப்பட்டுள்ளது.

TRUTH ALONE TRIUMPHS

4) சுற்றுச்சூழல் சுற்றுலா மேலாண்மை, மலையேற்றம், மனித விலங்கு மோதல், உடல் சகிப்புத் தன்மை, பல்லுயிர் மேலாண்மை ஆகியவற்றிற்கான நிறுவன பயிற்சி ஆனைமலை புலிகள் காப்பகம், அட்டகட்டியில் அளிக்கப்பட்டுள்ளது.

5) வனத் தீ மேலாண்மை, ஊட்டச்சத்து முறை, யானை முகாம் பராமரிப்பு, மோப்ப நாய் படை, புவிதள குறியீடு நடைமுறைகள் குறித்த நிறுவனப் பயிற்சி முதுமலை புலிகள் காப்பகத்தில் அளிக்கப்பட்டுள்ளது.

10.1.3. மோப்ப நாய் படை பிரிவு

மேலும், வன உயரடுக்குப் படையில் 4 நாய்கள் கொண்ட மோப்ப நாய் படை இணைக்கப்பட்டுள்ளது. நாய் படையை உள்ளடக்கிய நான்கு நாய்களும் உள்ளூர் இனங்களிலிருந்து வளர்க்கப்படுகின்றன.

வன உயரடுக்குப் படை பல்வேறு நடவடிக்கைகளில் துறைக்கு உதவ உள்நாட்டு இனங்களுக்கு பயிற்சி அளிப்பதில் வெற்றி பெற்றுள்ளது. “வனத் தீ மேலாண்மை விழிப்புணர்வுத் திட்டம்” கீழ் மற்ற வனப் பணியாளர்களைப் பயிற்றுவிப்பதற்காக வன உயரடுக்குப் படையின் சேவைகளைப் பயன்படுத்தி, வன உயரடுக்குப் படைக்கு அளிக்கப்படும் தீ உள்ளிட்ட பல்வேறு அவசரகாலச் சூழ்நிலைகள் குறித்த விரிவான பயிற்சி தமிழ்நாட்டின் அனைத்து வன வட்டங்களுக்கும் விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

10.1.4. கடல்சார் உயர் இலக்கு படை

கடலோர மற்றும் கடல் பல்லுயிர்களின் பாதுகாப்பு, வன உயிரின வேட்டையாடுதல் மற்றும் கடலோரப் பகுதிகளில் சட்டவிரோத வணிகம் ஆகியவற்றைத் தடுப்பதற்காக இரண்டு பிரிவுகளுடன் மன்னார் வளைகுடா உயிர்க்கோள காப்பகம் மற்றும் பால்க் பே பகுதிகளில் கடல் சார் உயர் இலக்கு படை உருவாக்க அரசு ஆணை வெளியிட்டுள்ளது. இது நாட்டின் முதல் கடல்சார் உயர் இலக்கு படை ஆகும்.

10.1.5. வனப்படை நவீனமயமாக்கல்

வனவியல் மற்றும் வனஉயிரின மேலாண்மை அறிவியல் புதிய தொழில்நுட்பங்களின் வருகையுடன் கடந்த சில ஆண்டுகளாக கணிசமாக வளர்ந்துள்ளது. நவீன கால வனத்திற்கு வன வளம்

2023 ஏப்ரல் 13]

மற்றும் அதன் பல்லுயிர் பாதுகாப்பிற்கான பொருத்தமான மற்றும் நன்கு திட்டமிடப்பட்ட உத்திகள் தேவைப்படுகின்றன. உயிர் வாழ்வதற்கு ஆக்ஸிஜன், நீர், தாவரங்கள் மற்றும் விலங்கினங்களுக்கான வாழ்விடங்கள் மற்றும் அவற்றைச் சார்ந்திருக்கும் மில்லியன் கணக்கான மக்களுக்கு வாழ்வாதார வாய்ப்புகளை வழங்கும் விலைமதிப்பற்ற வளங்களான காடுகளை ஆதரிப்பதற்காக நவீன வன நடைமுறைகள் நிலையான வனவியல் செயல்முறைகளில் உள்ள கவனம் செலுத்த வேண்டும். வனத் துறையில் உள்ள சவால்களை சிறப்பாக சமாளிப்பதற்கு சமீபத்திய தொழில்நுட்பங்கள் மற்றும் உபகரணங்கள் துறைக்கு தேவைப்படுகிறது. எனவே, 2022-2023 முதல் 2024-2025 வரையிலான காலகட்டத்தில் "தமிழ்நாடு வனப்படையை நவீன மயமாக்குதல்" திட்டத்தை செயல்படுத்துவதற்கு ரூ.52.83 கோடியும், 2022–2023-ஆம் ஆண்டில் இத்திட்டத்தினை செயல்படுத்த 22.11 கோடி ரூபாய நிதி ஒதுக்கீடு வழங்கப்பட்டுள்ளது. மேலும் இத்திட்டம் 2023-2024 ஆம் ஆண்டிலும் தொடரும்.

10.2. வனங்களை பேணுதல்

10.2.1 வன மற்றும் வனஉயிரின உயிர்ப்பன்மை மற்றும் மரபியல் வளங்களின் பாதுகாப்பு

பாதுகாக்கப்பட்ட பகுதிகளின் மேலாண்மை மற்றும் வன உயிரினப் பாதுகாப்பில் மாநிலத்தின் வனப் பரப்பில் 36.13% விழுக்காடு அளவு (8378.528 சதுர கிலோ மீட்டர்) பாதுகாக்கப்பட்ட பகுதி மேலாண்மையின்கீழ் அமைந்துள்ளது. மொத்தத்தில் 5 தேசிய பூங்காக்கள். 17 வன உயிரின சரணாலயங்கள், 17 பறவைகள் சரணாலயங்கள், 3 உயிர்க்கோள் காப்பகங்கள், 5 புலிகள் காப்பகங்கள் மற்றும் ஒரு மரபியல் பூங்காவும் மாநிலத்தில் அமைந்துள்ளன. மேற்குத் தொடர்ச்சி மலைப்பகுதி உலகின் 36 முக்கியமான உயிர்ப்பன்மைத் தளங்களில் ஒன்றாகவும் மற்றும் மாபெரும் தனிச்சிறப்பைக் கொண்ட 3 மையங்களில் ஒன்றாகவும் உள்ளது. தமிழ்நாட்டின் நிலப்பரப்பில் ஐந்து யானை காப்பகங்கள் அமைந்துள்ளன. மேலும், இம்மாநிலம், தனிச்சிறப்புடைய கடலோரப் பகுதியானது வளமான சதுப்பு நிலத்தாவரங்கள் மற்றும் வனப் பகுதி இணைவுடன் கூடிய தாவர வகைகளைக் கொண்டுள்ளது. மேற்கு தொடர்ச்சி மலையும், கிழக்கு தொடர்ச்சி மலையும் இணைந்து இம்மாநிலத்திற்குரிய பல்வகை உயிரினத் தாவரத் தொகுதி வளங்களுக்கு செழுமை சேர்க்கிறது. அரிதான

[*2023 ஏப்ரல் 13*

மற்றும் அழியும் நிலையில் உள்ள இனங்களைப் பேணிப் பாதுகாத்தல், வனங்களின் மறுசீரமைப்பு மற்றும் தர மேம்பாடு ஆகிய குறிக்கோள்கள்மூலம் தேசிய வன விலங்கு செயல் திட்டத்தில் குறிப்பிட்டுள்ளவாறு மாநில வன வளங்களின் பல்லுயிர்ப்பரவல் செறிவூட்டப்படும்.

வனஉயிரினங்களின் சுற்றுச்சூழல் தேவைகள் மற்றும் நிலப்பரப்பு சார்ந்த நடவடிக்கைகளைக் கருத்தில்கொண்டு, இயற்கை நிலப்பகுதிகளில் உயிர்ப்பன்மை பாதுகாப்பிற்கு முக்கியத்துவம் அளிக்கும்பொருட்டு சிறப்பு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. வன உயிரினங்கள் விரும்பி உண்ணக்கூடிய உள்ளூர் தாவரங்கள் கொண்ட பகுதியினை அதிகரிக்கும்பொருட்டு அந்நிய களைச்செடிகளை (உண்ணிச்செடி, கருவேல், சீகை மரங்கள்) அகற்ற சீரிய முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அந்நிய களைச்செடிகளை அகற்றும் நடவடிக்கையானது, உள்ளூர் தாவரங்களின் மறு உற்பத்தி மற்றும் வளர்ச்சி, வன உயிரினங்களின் தீவனப் பயிர்ப் பகுதிகள் அதிகரிப்பு, பாதுகாக்கப்பட்ட மற்றும் இதர வனப் பகுதிகளில் செழுமையான உயிர்ப்பன்மை, வன உயிரினங்களின் வாழ்விட மேம்பாடு மற்றும் தீவனப் பயிர்கள் அதிகரிப்பின்மூலம் மனித—வன உயிரின மோதல்களை குறைத்தல் போன்றவற்றில் நேர்மறைத் தாக்கத்தினை ஏற்படுத்தவல்லது.

வன எல்லைகளில் உள்ள மனித வன உயிரின மோதல்களின் தீவிரத்தன்மையினை உணர்ந்த வனத் துறை மனித—வன உயிரின மோதல்கள் மேலாண்மையில் பல்வேறு உத்திகளை வகுத்துள்ளது. பழமையான தடுப்புக் காவலர் ரோந்துப்பணி முறை மற்றும் நவீனக் கருவிகளான புவியியல் தகவல் அமைப்பு, புவிநிலை இடங்காட்டி மற்றும் ஆளில்லா விமானங்கள் போன்றவைகளைக் கொண்டும் இப்பிரச்சினை கையாளப்படுகிறது. உள்ளூர் மக்கள் மற்றும் வன விலங்குகள், பரஸ்பரம் நன்மை பெறும் வகையிலும், இணைந்து வாழத்தக்க வகையிலுமான பல்வேறு தரப்பட்ட நடவடிக்கைகளை வனத் துறை மேற்கொண்டுள்ளது. ஆயினும் மனித வன—உயிரின மோதல் நிகழ்வுகள் நடக்கும் போது அவைகள் களப்பணியாளர்கள் மூலமாக திறமையாக கையாளப்படுகின்றன.

மனித—வன உயிரின மோதல்களைக் கட்டுப்படுத்த பின்வரும் முக்கிய முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

1. *வன உயிரினங்களின் வாழ்விடங்களில் நீர் மற்றும் உணவு இருப்பினை கண்காணித்தல்.*

2023 ஏப்ரல் 13]

2. *வன உயிரின மோதல்கள் நிகழும் மண்டலங்களில் வன உயிரினங்களின் நடமாட்டத்தை தொடர்ந்து கண்காணித்தல்.*

3. *மனித — வன உயிரின மோதல்கள் ஏற்படும் மண்டலங்களில் உள்ள மக்களை எச்சரிப்பதற்கான முன்னெச்சரிக்கை அமைப்பை ஏற்படுத்துதல்.*

4. *உள்ளூர் வாசிகளுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்துதல்.*

5. *மனித – வன உயிரினங்களால் ஏற்படும் சேதத்திற்காக பாதிக்கப்பட்ட நபர்களுக்கு உடனடியாக நிவாரணம் வழங்குதல்.*

6. *வனப் பகுதிகளில் இருந்து வெளியேறும் வன உயிரினங்களை மீட்டெடுத்தல் மற்றும் மறுவாழ்விற்கான தரப்படுத்தப்பட்ட வழி நெறிமுறைகள் வகுத்தல்.*

7. *அதி விரைவுக் குழுக்கள் மற்றும் நடமாடும் கால்நடை உதவி மையங்கள்மூலம் வன உயிரினங்களுக்கான கால்நடை மருத்துவப் பணிகளை பலப்படுத்துதல்.*

வனஉயிரினங்களின் நலம் என்பது உயிரியல், சமூகவியல் மற்றும் சூழலியல் ஆகியவற்றுடன் ஒன்றோடொன்று இணைந்து செயல்படும் திறன் சார்ந்தது. வன உயிரினங்கள் பாதுகாப்பில், தொற்று நோய்கள் கவலையளிப்பதாக உள்ளது. வன உயிரினங்களால் உருவாக்கப்படும் நெருக்கடி நிலைகளை கவனிக்கும் குழுவில் கால்நடை மருத்துவர்கள் ஒரு அங்கமாக இணைந்துள்ளனர். இடம் விட்டு இடம் பெயரும் வன உயிரினங்களால் ஏற்படுத்தப்படும் அழுத்தங்களைக் குறைப்பதிலும், அவற்றின் நலனை மேம்படுத்துவதிலும் கால்நடை மருத்துவர்களின் பொறுப்பு முக்கியமானதாக உள்ளது.

10.2.2. கடலோர சுற்றுச்சூழல் அமைப்புகளின் பாதுகாப்பு மற்றும் மேலாண்மை

தமிழ்நாடு 14 மாவட்டங்களை உள்ளடக்கிய 1076 கி.மீ. நீண்ட கடற்கரையைக் கொண்டுள்ளது. சதுப்பு நிலக்காடுகள், நன்செய் நிலங்கள் மற்றும் கடல்சார் தேசியப் பூங்காக்கள் ஆகியவற்றுக்கு முக்கியத்துவம் அளிப்பதுடன், எளிதில் பாதிப்புக்கு ஆளாகக் கூடிய கடலோரப் பகுதிகளின் உயிரின வாழ்க்கைச்சூழல் ஏற்பாட்டு

[2023 ஏப்ரல் 13

முறைக்கான மேலாண்மையிலும் சிறப்பு கவனம் செலுத்தப்பட்டு வருகிறது. கடலோர உயிரின வாழ்க்கைச் சூழல் ஏற்பாட்டு முறையில் அவற்றின் முக்கியமான பங்கினைக் கருத்திற்கொண்டு, தரம் குறைக்கப்பட்ட சதுப்பு நிலக்காடுகளுக்கு தொடர்ச்சியாக புத்துயிர் அளிக்கின்றது.

மாநில வனத் துறை, சதுப்பு நிலக்காடுகளை வளர்த்து மேம்படுத்தியுள்ளது. சதுப்பு நிலக் காடுகள், வண்டல் படிவதன் காரணமாக கடல் நீர் மட்டம் உயர்வதைத் தடுத்து, நிலத்தினை நிலைநிறுத்துதல், ஊட்டச்சத்து சுழற்சி, மாசினைக் களைதல், கடல்வாழ் உயிரின இருப்பிட ஆதாவு, எரிபொருள், தடிமரம் மற்றும் மீன்வளங்கள் வழங்குதல் போன்ற பல்வேறு சூழலமைப்பு சேவைகளைத் தருகின்றது. கடலோர சமுதாயத்தினரால், இருப்பிடம், உணவு மற்றும் எரிபொருள் தேவைகளைப் பூர்த்தி செய்தல், மருத்துவத் தாவரங்கள் மற்றும் வேளாண் உற்பத்தி, குறிப்பாக, நெல் உற்பத்தி செய்வதற்கு ஏற்ற நிலமாக, சதுப்புநிலக் காடுகள் கருதப்படுகின்றது. விலங்குகளுக்கு இனப்பெருக்கம், தங்குமிடம், உணவு வழங்கும் வாழ்விடம் போன்ற முக்கிய சேவைகளையும் சதுப்பு நிலக்காடுகள் வழங்குகின்றன. கடல்நீரின் அமிலத்தன்மை, பருவநிலை மாற்றத்தின் காரணமாக வெப்பத்தினால் ஏற்படும் அழுத்தம், ஆகியவற்றிலிருந்து இயற்கையை பாதுகாத்து பவளப்பாறைகளின் தாங்கு திறனை சதுப்புநிலக் காடுகள் அதிகரிக்கின்றன.

மேற்கண்ட சேவைகளைத் தவிர, புயல், சுனாமி மற்றும் வெப்பமண்டல புயல்கள் போன்ற கடலோர சீற்றங்களிலிருந்து பாதுகாப்பளிப்பது, சதுப்பு நிலக்காடுகள் வழங்கும் முக்கியமான சேவைகளாக அடையாளம் காணப்பட்டுள்ளது. உலகளாவிய பருவநிலை மாற்றத்தினை எதிர்கொள்வதில், கார்பன் சேகரிப்பான் மற்றும் வடிகால், நிலம் மற்றும் கடல்சார் சூழலமைப்பில் ஒரு அலகுப் பகுதியில் அதிகளவு கார்பன் தேக்கி வைப்பது போன்றவற்றிலும் சதுப்பு நிலக் காடுகள் முக்கிய பங்காற்றுகின்றன. சமீபத்திய இந்திய வன நிலஅளவை நிறுவன 2021 ஆம் வருடத்திய அறிக்கையின்படி, தமிழ்நாட்டில் எட்டு மாவட்டங்களை உள்ளடக்கிய 49 ச.கி.மீ. பரப்பில் சதுப்புநிலக் காடுகள் உள்ளன.

காற்றின் வேகத்தினை குறைத்து, காற்றினால் ஏற்படும் அரிப்பினைக் குறைப்பதற்கும், சுனாமி, புயல், அலையேற்றங்கள் மற்றும் வெள்ளங்கள் போன்ற இயற்கை சீற்றங்களிலிருந்து கடலோரப்

2023 ஏப்ரல் 13]

பகுதிகளைப் பாதுகாக்கும் அரண்களாக விளங்குவதற்கும், கடலோர தொடர் தடுப்புக் காடுகள் வளர்க்கப்படுகின்றன.

தொடர்புடைய துறைகளின் செயல்பாடுகளை ஒருங்கிணைத்தல், சமுதாயத்தைப் பங்கேற்கச் செய்தல், அறிவியல் சார்ந்த நிருவாகக் கொள்கைகள் மற்றும் திட்டங்களைப் பின்பற்றுதல் ஆகியவற்றின்மூலம் கடல்சார் பல்லுயிர் உயிரினங்களை பாதுகாக்க மன்னார் வளைகுடா உயிர்க்கோளக் காப்பகம் உதவுகின்றது. அதன் வாயிலாக, இவை தற்போதைய மற்றும் வருங்காலத் தலைமுறையினருக்கும் சுற்றுச்சூழல் பயன்களை தொடர்ந்து அளிக்கமுடியும்.

மன்னார் வளைகுடாவினை ஒட்டிய கடலோரப் பகுதிகளில் 2 லட்சம் மக்கள் தொகையைக் கொண்ட 225 மீனவர் கிராமங்கள் உள்ளன. பங்களிப்பு அணுகுமுறையை பலப்படுத்தும் விதத்தில், இராமநாதபுரம் மற்றும் தூத்துக்குடி மாவட்டங்களில் கடலோர கிராம மக்களை உறுப்பினர்களாகக் கொண்டு, 252 கடலோர கிராமக் குழுக்கள் மற்றும் சூழல் மேம்பாட்டுக் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. மாற்று வருமானம் பெருக்கும் நடவடிக்கையின்கீழ் கிராம மக்களுக்கு சிறிய அளவிலான கடன்கள் வழங்கப்படுகின்றன. சுய உதவிக் குழுக்கள் மற்றும் தொழில்முனையும் குழுக்கள்மூலம், குழு தொழில் முனைப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. திரும்பிச் செலுத்தும் அடிப்படையில், நிதி உதவிகள் வழங்கப்படுகின்றன. சுழற்சி முறையில் நிதி ஆதரவு பெறுவதின் 2.543 சுய உதவிக் குழுக்களும் 80 வகையான மாற்று வருமானத்தைப் பெருக்க நடவடிக்கைகள் / குழு தொழில் முனையங்கள், சுய உதவிக் குழுக்கள் வாயிலாகவும் மேற்கொள்ளப்படுகின்றன.

மலையேற்ற விதிகள்

அரசாணை (டி) எண் 296, சுற்றுச் சூழல் மற்றும் வனத் (வனம்.14) துறை, நாள் 12-10-2018 இன்படி, தமிழ்நாட்டில் உள்ள பாதுகாக்கப்பட்ட வனப் பகுதி மற்றும் வன உயிரினப் பகுதிகளுக்கு மலையேற்றம் செல்வதற்கான ஒழுங்குமுறை விதிகளை தமிழ்நாடு அரசு வெளியிட்டுள்ளது. இவ்விதிமுறைகளின்படி, உரிய அலுவலரிடம் அனுமதி பெறாமல் எந்த ஒரு நபரும் மலையேற்றம் மேற்கொள்ள இயலாது. எந்த ஒரு குழுவும், மலையேற்றம் மேற்கொள்ள விரும்பினால், உரிய படிவத்தில், நேர்வழிப்

பாதையில் மலையேற்றம் மேற்கொள்ள உரிய அலுவலரிடம் விண்ணப்பித்தல் வேண்டும். மலையேற்றம் மேற்கொள்வதற்கான அனைத்து தேவைகளும் விதிகளின்படி இருக்கும்பட்சத்தில் உரிய அலுவலரால், அதற்கான அனுமதி வழங்கப்படுவதுடன், நிர்ணயிக்கப்பட்ட கட்டணத்தை குழுத் தலைவர் செலுத்திட வேண்டும்.

10.2.3. காலநிலை மாற்றத் தணிப்பு மற்றும் தகவமைப்பு

பசுமை இல்ல வாயுக்கள் வெளியேற்றத்தினைக் குறைப்பதற்கான பல்வேறு பன்னாட்டு ஒப்பந்தங்களில் கையொப்பமிட்டுள்ள நாடுகளில் இந்தியாவும் ஒன்றாகும். வனங்களை வளர்த்து கரிமத்தை சேமித்தல் என்பது குறைந்த செலவில் காலநிலை மாற்றத்திற்கு தீர்வு காணும் வழிமுறையாகக் கருதப்படுகிறது. பசுமைத் தமிழ்நாடு திட்டத்தினை செயல்படுத்துவதன் வாயிலாக, காலநிலை மாற்றத் தணிப்பு மற்றும் தகவமைப்பில் நெடுந்தூரம் பயணிக்க உறுதுணை புரியும்.

மாநிலத்திலுள்ள வனங்கள் மற்றும் மரப்பரப்பில் அதாவது, ஒரு ஹெக்டேருக்கு மேல் இருக்கும் வனங்களுக்கு வெளியே உள்ள மரங்களில் காணப்படும் கார்பனின் இருப்பு 214.61 மில்லியன் டன்கள் (786.90 மில்லியன் டன்கள் கார்பன்—டை—ஆக்சைடுக்கு சமம்). இது நாட்டின் வனங்களில் காணப்படும் மொத்த கார்பனில் 2.98 விழுக்காடு ஆகும்.

(ஆதாரம்: இந்திய வனநிலை அறிக்கை, 2021)

10.2.4. ஒருங்கிணைந்த நீர்ப்பிரி முகடு மேலாண்மை வாயிலாக நீர்ப்பெருக்கம்

வனங்கள் மற்றும் ஒருங்கிணைந்த நீர்ப்பிரி முகடு மேம்பாடு என்பது ஒரு நீர்ப்பிடிப்பு பகுதியில் உள்ள நிலம், நீர், தாவரம், வன உயிரினம் மற்றும் மனித இனம் போன்ற அனைத்து இயற்கை வளங்களையும் பாதுகாத்தல், மறு உற்பத்தி செய்தல் மற்றும் சரியான பயன்பாட்டினைக் குறிப்பதாகும். நீர்ப்பிரி முகடு மேலாண்மையானது ஒருபுறம் இயற்கை வளங்களுக்கும், மறுபுறம் மனிதனுக்கும் வன உயிரினங்களுக்கும் இடையேயுள்ள சூழல் சமநிலையை பராமரிப்பதில் முக்கிய பங்காற்றுகிறது.

மண் மற்றும் நீர்வளப் பாதுகாப்பு மற்றும் ஊரக எளிய மக்களின் வாழ்வாதாரத்தினை மேம்படுத்துதல் என்ற இரட்டைக்

2023 ஏப்ரல் 13]

குறிக்கோள்களுடன் தமிழ்நாட்டில் வனச் செயல்பாடுகள் பல்வேறு திட்டத்தின்கீழ் செயல்படுத்தப்படுகின்றன.

ஒருங்கிணைந்த நீர்ப்பிரி முகடு மேலாண்மையின்கீழ் பல்வேறு வகையான நடைமுறைகள் மேற்கொள்ளப்படுகின்றன. அவற்றில் மண் மற்றும் நீர்வளப் பாதுகாப்புப் பணிகள் (சம உயர் வரப்புகள், தளர்வான கற்பாறை தடுப்பணைகள், சிறு தடுப்பணைகள், பெரிய தடுப்பணைகள், கசிவுநீர்க் குட்டைகள்) மற்றும் காடு வளர்ப்புப் பணிகளும் அடங்கும். வனம் மற்றும் சுற்றுச்சூழலைப் பாதுகாப்பது மட்டுமின்றி வனத்தைச் சார்ந்து வாழ்வோரின் வாழ்வாதாரப் பாதுகாப்பு போன்றவைகளை அடிப்படையாக கொண்டு நீர்ப்பிரி முகடு செயல்பாடுகள் உள்ளன.

10.2.5. பழங்குடியினர் மற்றும் வனம் சார்ந்த பிற சமுதாயத்தினரின் நலன்

2011 ஆம் ஆண்டின் மக்கள் தொகைக் கணக்கெடுப்பின்படி தமிழ்நாட்டில் 7.21 இலட்சம் பழங்குடியின மக்கள் வசிக்கின்றனர். இது மாநிலத்தின் மொத்த மக்கள் தொகையில் 1.10 விழுக்காடு ஆகும். பழங்குடியினரின் சமூக—கலாச்சார வாழ்க்கை இயற்கையை மையமாகக் கொண்டது. பழங்குடி மக்களின் நலனுக்கென, வனத் துறைமூலம் கீழ்க்கண்ட நோக்கங்களுக்கான திட்டங்கள் செயல்படுத்தப்படுகின்றது.

- தொடர்பு சாலைகள், குடிநீர், வீட்டு வசதி மற்றும் மரபுசாரா முறை வாயிலாக மின்வசதி போன்ற அடிப்படை வசதிகளை பழங்குடியினர் குடியிருப்புகளுக்கு வழங்குதல்

- பட்டியலிடப்பட்ட பழங்குடியினர் மற்றும் பிற பாரம்பரிய வனவாசிகள் (வன உரிமைகள் அங்கீகாரம்) சட்டம். 2006 இன்கீழ், தனிநபர் மற்றும் சமூக உரிமைகள் வழங்கப்பட்டு வருகின்றன

- 2022-2023 ஆம் ஆண்டில், இருளர் பழங்குடியினர் சங்கத்திற்கு, ரூ.80.55 இலட்சம் விற்பனைத் தொகை மதிப்பிலான 10 முந்திரி அலகுகள் 379.88 ஹெக்டேர் பரப்பளவில் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது

- 2022-2023 ஆம் ஆண்டில் 78 பழங்குடியின வேட்டைத்தடுப்பு காவலர்கள் வன காவலர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர்

- மாற்று வாழ்வாதார பணிகளுக்காக பழங்குடியினர் திறன் மேம்பாட்டு பயிற்சி அளித்தல்
- பழங்குடியினர் இளைஞர்களுக்கு வேலைவாய்ப்புகளை வழங்க தனியார் நிறுவனங்களுடன் இணைந்து பழங்குடியினர் வேலைவாய்ப்பு முகாம்களை நடத்துதல்

10.2.6 சூழல் சுற்றுலா

சுற்றுலா என்பது சமூகப் பொருளாதார மற்றும் பொருளாதார செழிப்பையும் சாத்தியமாக்கும் ஒரு துறையாகும். தமிழ்நாட்டில் அதிகம் அறியப்படாத பல்வேறு சூழல் சார்ந்த பகுதிகள் உள்ளன. பொறுப்பான சுற்றுச்சூழல் என்பது இயற்கை பாரம்பரியத்தை பாதுகாப்பதுடன் வேலைவாய்ப்பினை உருவாக்குதலுடன், உள்ளூர் கலாச்சாரம் மற்றும் அதன் பாரம்பரியத்தையும் ஊக்குவிப்பதாகும். இக்கொள்கை இயற்கை பாரம்பரியத்தை பாதுகாக்கவும், உள்ளூர் கலாச்சாரம் மற்றும் பாரம்பரியத்தை மேம்படுத்தவும் உதவும். சூழல் சுற்றுலா கொள்கை கட்டமைப்பானது உள்ளூர் சமூகத்துடன் வளங்களைப் பகிர்தலுடன் நிலையான மற்றும் பொருத்தமான சூழல் சுற்றுலா வழிகாட்டுதல்களைப் பயன்படுத்துவதை உறுதி செய்கிறது.

10.2.7. வன ஆராய்ச்சி

தமிழ்நாடு வனத் துறையின் ஆராய்ச்சிப் பிரிவானது 1918 ஆம் ஆண்டு துவக்கப்பட்டு, 2018 ஆம் ஆண்டில் நூற்றாண்டை கொண்டாடியது. அவ்வப்போது களத்தின் தேவையினை கண்டறிவதை அடிப்படையாக கொண்டு அதன்மீது பல்வேறு ஆராய்ச்சி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. ஆராய்ச்சிப் பிரிவு சென்னையை தலைமையிடமாகக் கொண்டு சென்னை, கோவை, தருமபுரி, திருச்சி மற்றும் மதுரை ஆகிய ஐந்து கோட்டங்கள் தமிழ்நாட்டில் உள்ள 7 வேளாண் தட்பவெப்ப மண்டலங்களிலும் மொத்தமாக 52 ஆராய்ச்சி மையங்களில் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இதில் பல்வேறு மர வகைகளில் விதையில்லா இனப்பெருக்கத்தின்மூலம் விதை உற்பத்தி தோட்டம் (64), விதையின்மூலம் விதை உற்பத்தி தோட்டம் (167), விதை உற்பத்தி தோட்டம் (75) எழுப்பப்பட்டு பராமரிக்கப்பட்டு வருகிறது. மேலும் 1220-க்கு மேல் நல்லியல்பு மரங்கள் தேர்வு செய்யப்பட்டு அதிலிருந்து தரமான விதைகள் சேகரம் செய்யப்பட்டு வருகிறது.

2023 ஏப்ரல் 13]

ஆராய்ச்சிப் பிரிவின் முக்கிய குறிக்கோள்களாக தேர்வு செய்யப்பட்ட நல்லியல்பு மரங்களிலிருந்து விதைகள் சேகரம் செய்து விநியோகம் செய்தல் மற்றும் தரமான விதைகளை பதப்படுத்தி பாதுகாத்தல், தரமான விதைகளை உற்பத்தி செய்து விநியோகம் செய்தல், வேளாண் காடுகளுக்கு உகந்த மரங்களை கண்டறிதல், தொழிற்சாலைகளுக்கு தேவைப்படும் வேகமாக வளரக்கூடிய மரங்களை கண்டறிதல், தரமான மண்புழு உரம் உற்பத்தி மற்றும் விநியோகம், மரம் அடிப்படையிலான பயன்பாட்டு தயாரிப்புகளின் மதிப்பு கூட்டல் மற்றும் அழியும் தருவாயில் உள்ள தாவரங்களை மரபணு தோட்டம் (Germplasm bank) *அமைத்து பாதுகாத்தல் ஆகியவையாகும்.*

விதை சேமிப்பு சரகத்தில் விதைகளின் தரத்தை ஆய்வு செய்ய ஆய்வகம் நிறுவப்பட்டுள்ளது. அதில் வழக்கமான விதை ஆய்வு சோதனைகளைத் தவிர, இந்த சரகத்தில் சுமார் 110 மர இனங்களுக்கான விதை நெறிமுறைகளைத் தரப்படுத்தி முடிவுகளை விதை புத்தகமாக வெளியிடப்பட்டுள்ளது. எந்தவொரு மர மேம்பாடு அல்லது காடு வளர்ப்பு திட்டங்களிலும் விதை முக்கிய பங்கு வகிக்கின்றது. எனவே சுமார் 200 வகையான விதைகளை சேகரிப்பதற்கான விதை நாட்காட்டி தயாரிக்கப்பட்டுள்ளது.

மரபியல் மற்றும் காடு வளர்ப்பு மேம்பாடுமூலம் உற்பத்தி திறனை அதிகரித்து இயற்கை வளத்தின் மீதான அழுத்தத்தை குறைப்பது, வேளாண் காடு வளர்ப்பு, தரிசு நில மேம்பாடு, சுற்றுச்சூழல் மறுசீரமைப்பு மற்றும் வன சுற்றுச்சூழலைப் பாதுகாத்தல் ஆகியவை தற்போது ஆராய்ச்சி பிரிவின் செயல்பாடுகள் ஆகும். காடு பரப்பளவை அதிகரிக்க பொருளாதார ரீதியாக முக்கியத்துவம் வாய்ந்த மர வகைகளின் உயர்தர நாற்றுக்கள் கிடைப்பதை உறுதிசெய்வது, தனியார் நிலங்களில் பெரிய அளவிலான மரம் வளர்ப்பை மேற்கொள்ளவும், ஆராய்ச்சிப் பிரிவில் விதையில்லா இனப்பெருக்கத்தின்மூலம் விதை உற்பத்தி தோட்டம், விதையின்மூலம் விதை உற்பத்தி தோட்டம், விதை உற்பத்தி தோட்டம் மற்றும் ஹெட்ஜ்ஸ்டூல் எழுப்பப்பட்டு பராமரிக்கப்பட்டு வருகிறது. தேக்கு, சந்தனம், சில்வர் ஓக், தைலம், மலைவேம்பு, பீநாரி, சவுக்கு போன்ற பொருளாதார முக்கியத்துவம் வாய்ந்த மர இனங்களுக்கு நுண் தாவர பெருக்கம் மற்றும் பேரின பெருக்கத்தின்மூலம் நாற்றுக்கள் உற்பத்தி செய்யும் முறை தரப்படுத்தப்பட்டுள்ளது.

தற்போதைய ஆராய்ச்சியை வலுப்படுத்தவும், மேம்படுத்தவும் பின்வரும் வழிமுறைகள் முன்மொழியப்படுகின்றன. CPT, SS, SPA *ஆகியவற்றைக் கொண்டு பல்வேறு வணிக ரீதியாக முக்கியத்துவம் வாய்ந்த மரம் மற்றும் மருத்துவ தாவரங்களின் மரபணுவை கண்டறிந்து வளப்படுத்துவது, அனைத்து ஆராய்ச்சி மையங்களில் இருக்கக்கூடிய உள்கட்டமைப்பு வசதிகளை வலுப்படுத்தி பாதுகாப்பது, உயிரியல் தொழில்நுட்ப ஆய்வுகளை மேற்கொள்ள மேம்பட்ட ஆய்வக வசதிகளை நிறுவுவது, தேவையான தாவர வளங்களின் மரபணுவை வலுப்படுத்துதல் மற்றும் நுண்ணுயிரியல் ஆராய்ச்சிகளை மேற்கொள்வது, அதிக உற்பத்தித் திறனை ஊக்குவிப்பது, வணிக ரீதியாக முக்கியத்துவம் வாய்ந்த வேகமாக வளரக் கூடிய செடிகளை அதிக அளவில் உற்பத்தி செய்வது மற்றும் வணிக மரம் மற்றும் மருத்துவப் பொருட்களின் தரத்திற்கான சான்றிதழை வழங்குவது போன்றவையாகும்.*

11. தகவல் தொழில்நுட்பம்

11.1. வனக் காப்பகம் மற்றும் வன தரவு மையத்தை நிறுவுதல்

தமிழ்நாடு வனத் துறை மிகவும் வளமான வரலாறு மற்றும் பல்லுயிர் பாரம்பரியத்தை கொண்டுள்ளது. 1856 ஆம் ஆண்டு நிறுவப்பட்ட இத்துறையானது 160 ஆண்டுகளில் மிகப்பெரும் வளர்ச்சியைப் பெற்றுள்ளது. காடுகளின் வளமான பாரம்பரியம், அவற்றின் மேலாண்மை அமைப்புகள் மற்றும் பாதுகாப்பு முயற்சிகளை பிரதிபலிக்கும் பல வரலாற்று ஆவணங்கள், ஆய்வுக் கட்டுரைகள், புத்தகங்கள் மற்றும் குறிப்புப் பொருட்கள் துறையிடம் உள்ளது. வனப் பாதுகாப்பு, பல்லுயிர் பாதுகாப்பு மற்றும் வன விலங்கு மேலாண்மை ஆகிய துறைகளில் ஈர்க்கக்கூடிய பணிகளைக் கொண்ட இந்தியாவின் பழமையான வனத் துறைகளில் இதுவும் ஒன்றாகும் என்பதில் திணைக்களம் பெருமைகொள்ளலாம். காடு தொடர்பான பொருள்களின் ஈர்க்கக் கூடிய சேகரிப்பு இருந்தாலும், தகவல் மற்றும் தரவை எளிதாக அணுகுவதற்கு எந்த வனக் களஞ்சியமும் இல்லை. வன தகவல்களின் டிஜிட்டல் களஞ்சியத்தை உருவாக்குவது எதிர்கால வனத் துறை முயற்சிகளுக்கு மிகவும் பயனுள்ளதாக இருக்கும் தகவலைப் பாதுகாக்க உதவும்.

வனக் காப்பகம் மற்றும் தரவு மையம் அமைக்கப்படும் என்று 3 செப்டம்பர் 2021 அன்று தமிழ்நாடு சட்டமன்றத்தில்

2023 ஏப்ரல் 13]

அரசால் அறிவிப்பு வெளியிடப்பட்டது. இந்த அறிவிப்பின்படி, தமிழ்நாடு வனக் காப்பகங்கள் மற்றும் தரவு மையம் (TNFADC) தமிழ்நாட்டின் தாவரங்கள் மற்றும் விலங்கினங்கள் மற்றும் அதன் வளமான பாதுகாப்பு வரலாறு பற்றிய விலைமதிப்பற்ற தகவல் களஞ்சியமாக சென்னையில் அமைக்கப்படும். TNFADC தமிழ்நாடு வன முயற்சிகள் பற்றிய கூடுதல் புரிதலுக்கு பங்களிக்கும். தகவல்களுக்கான அணுகலை விரைவாகவும் அர்த்தமுள்ளதாகவும் வழங்க, முழு வளத்தையும் ஒரு மின் நூலகமாக டிஜிட்டல்மயமாக்க தரவு மையம் முயற்சிக்கும். TNFADC வனப் பாதுகாப்பு மற்றும் பாதுகாப்பு தொடர்பான வளமான காப்பகப் பொருட்களின் "புதையல்" ஆகும்.

தமிழ்நாடு வனக் காப்பகங்கள் மற்றும் தரவு மையம் பின்வருவனவற்றின் களஞ்சியமாக இருக்கும்:

I. *வன ஆராய்ச்சி அறிக்கைகள்*

II. *அறிவியல் வெளியீடுகள் மற்றும் ஆவணங்கள்*

III. *அரசாங்க ஆணைகள் மற்றும் அரசிதழ் அறிவிப்புகள்*

IV. *பழைய கையெழுத்துப் பிரதிகள் மற்றும் வரலாற்றுக் குறிப்புகள்*

V. *வன வரைபடங்கள்*

VI. *வன தாவரங்கள் மற்றும் விலங்கினங்களின் புத்தகங்கள் / கையேடுகள், ஹெர்பேரியா*

VII. *அரிய புகைப்படங்கள்*

VIII. *வன வேலைத் திட்டங்கள், மேலாண்மைத் திட்டங்கள் மற்றும் ஆண்டு அறிக்கை*

IX. *ஆராய்ச்சி வெளியீடுகள்*

X. *வனம் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பருவ இதழ்கள், செய்தி மடல்கள்*

XI. *வன கையேடுகள் மற்றும் நிலையான செயல்பாட்டு நடைமுறைகள் (SOP-கள்)*

XII. பாதுகாப்பு இயக்கத்தை உள்ளடக்கிய தனித்துவமான வளங்கள்

XIII. உலகம் முழுவதும் உள்ள காடு தொடர்பான வளங்கள்

XIV. தமிழ்நாடு வனத் துறையின் பரிணாம வளர்ச்சியின் வரலாற்றை ஆவணப்படுத்தும் அரிய புகைப்படங்கள், ஸ்லைடுகள், எதிர்மறைகள் மற்றும் தட்டுகள்

XV கட்டுரைகள், கடிதப் பிரதிகள், துண்டுப் பிரசுரங்கள் மற்றும் புகைப்படங்கள் போன்றவற்றின் பிரதிகள் உட்பட வன சேவை தொடர்பான வரலாற்றுக் குறிப்புகளின் தொகுப்பு

XVI. விருதுகள் மற்றும் உதவித் தொகைகள் போன்றவற்றின் புகைப்படங்கள் மற்றும் விவரங்கள்

XVII. காடுகள் மற்றும் சுற்றுச்சூழலைப் பாதுகாத்தல் மற்றும் பாதுகாப்பதற்கான செயல் திட்டங்கள் மற்றும் தொலைநோக்கு ஆவணங்களை மத்திய மற்றும் மாநில அரசுகள் அங்கீகரித்துள்ளன

TNFADC ஆராய்ச்சி, வெளியீடு மற்றும் கல்விப் பரப்பில் மிகவும் பயனுள்ளதாக இருக்கும். காடுகளின் வரலாறு, இயற்கை வளங்கள் மற்றும் மேலாண்மை நுட்பங்களில் ஆர்வமுள்ள எவருக்கும் TNFADC மதிப்புமிக்கதாக இருக்கும். ஆராய்ச்சியாளர்கள், பள்ளிகள் மற்றும் கல்லூரிகளின் மாணவர்கள் தவிர, இந்தியா மட்டுமல்லாது உலகம் முழுவதும் உள்ள மாணவர்கள், பத்திரிகையாளர்கள், ஆசிரியர்கள், காடுகள் மற்றும் சுற்றுச்சூழலில் ஆர்வமுள்ளவர்களுக்கும் இது மிகவும் பயனுள்ளதாக இருக்கும்.

தமிழ்நாடு காப்பகம் மற்றும் தரவு மையம் மெல்லிய வரலாற்று மற்றும் அறிவியல் ஆவணங்களை நிரந்தரமாகப் பாதுகாப்பதில் நீண்ட தூரம்செல்லும், TNFADC வெற்றிகரமாக ஆவணப்படுத்தி, தமிழ்நாடு வனத் துறையின் பாரம்பரியத்தை வெளி உலகுக்குக் காண்பிக்கும். இந்தக் களஞ்சியம் வனத் துறையினர் மற்றும் ஆர்வலர்கள் மற்றும் பொதுமக்களின் தற்போதைய மற்றும் வருங்கால சந்ததியினரை நிச்சயம் ஊக்குவிக்கும். இந்த முயற்சியை செயல்படுத்த விரிவான திட்ட அறிக்கை மற்றும் முன்மொழிவு தயாரிக்கப்பட்டுள்ளது.

11.2.DGPS நில அளவீடு மூலம் எல்லை விவரங்களுடன் தேவையான புவி-தரவுத் தளத்தை தயார் செய்தல்

எல்லை நிர்ணயம் / ஒருங்கிணைத்தல் என்பது எந்த இடையூறும் இல்லாத நிலம் சார்ந்த வள மேலாண்மைக்கான அடிப்படைத் தேவையாகும். தேசிய வரைபடக் கொள்கை 2005 நில அடிப்படையிலான வள மேலாண்மைக்கான உயர்தர இடஞ்சார்ந்த தரவுகளின் அவசியத்தையும் வலியுறுத்துகிறது. வீட்டு வசதி, விவசாயம், மேய்ச்சல் போன்றவற்றுக்கான தேவை அதிகரித்து வருவதால் காடுகளின்மீது எப்போதும் அழுத்தம் உள்ளது. களத்தில் சரியான எல்லை நிர்ணயம் இல்லாததால், ஆக்கிரமிப்பு நிலத் தகராறு மற்றும் சட்டச் சிக்கல்கள் ஏற்படுகின்றன. 2007 ஆம் ஆண்டின் IA எண் 1868 இல் 1995 ஆம் ஆண்டின் WP சிவில் (எண் 202 இல் TN கோதவர்மன் திருமால் பத்மந்திரம் வழக்கில் தாக்கல் செய்யப்பட்ட IA எண் 1868 இல், மாண்புமிகு இந்திய உச்ச நீதிமன்றம் 6 ஜீலை 2011 அன்று வழங்கிய இறுதித் தீர்ப்பில் இந்தியா மற்றும் பிறவற்றின் மாண்புமிகு இந்திய உச்ச நீதிமன்றம் வன பாதுகாப்புச் சட்டம், 1980 மற்றும் சுற்றுச்சூழல் பாதுகாப்பு சட்டம், 1986 இன்கீழ் ஒன்றிய அரசு, மாநில அரசு மற்றும் பல்வேறு அதிகாரிகளால் எடுக்கப்பட வேண்டிய நீண்ட கால மற்றும் குறுகிய கால நடவடிக்கைகள் குறித்த வழிகாட்டுதல்களை வெளியிட்டது.

1. வன வளங்களைப் பாதுகாப்பதற்கு வசதியாக துல்லியமான வன வள அதிகார வரம்பைக் கண்டறிந்து வரையறுத்தல்.

2. வனப் பகுதி வன எல்லையை அடையாளம் கண்டு வன எல்லையை நிர்ணயம் செய்து ஆக்கிரமிப்புகளை கண்டறிந்து வனப் பகுதியை பாதுகாக்க வேண்டும்.

3. பொருளாதார நலன் மற்றும் வனப் பாதுகாப்பிற்காக அனைத்து வன சொத்துக்களின் முழுமையான GIS தளத்தை வழங்குதல்.

4. ஐ.நா. கட்டமைப்பின்கீழ் கார்பன் வர்த்தகத்திற்காக காடுகளில் சேமிக்கப்படும் கார்பனின் அளவை கணக்கிடுவதற்கு கார்பன் பங்கு மதிப்பீடு செய்தல்.

5. வனச் சான்றளிப்பு மற்றும் மாடலிங்கிற்கான விதான மொத்த அடர்த்தி மற்றும் விதான அடித்தள உயரம் போன்ற வன அளவீடுகளின் கணக்கீடு செய்தல்.

6. ஆற்றுப்படுகை புத்துயிர் மற்றும் நீர்ப்பிடிப்புப் பகுதி ஆய்வுகள், வனப் பரப்பை அதிகரிக்க உதவுவதோடு கூடுதலாக ஒவ்வொரு 5 கி.மீ. சுற்றளவுப் பகுதியிலும் போதுமான நீரை உறுதி செய்வதற்காக வன விலங்குகளுக்கான நீர்த்துளைப் பகுதிகளை அடையாளம் காண உதவுகிறது.

7. காட்டுத் தீ பற்றிய ஆய்வு மற்றும் மேலாண்மை.

8. வன காப்பகங்களுக்கு இடையே உள்ள வன விலங்கு வழித்தடங்களின் பாதுகாப்பு மற்றும் மேலாண்மை.

வான்வழி LIDAR மற்றும் டிஜிட்டல் கேமராமூலம் தமிழ்நாடு வனப் பகுதியின் முழு வனப் பகுதியின் எல்லைக் கணக்கெடுப்பை மேற்கொள்வதே ஒட்டுமொத்த நோக்கமாகும். இது பல்வேறு பயன்பாடுகளில் வன எல்லைகளை விரைவாகப் பயன்படுத்துவதற்கு வன எல்லைகளை மிகத் துல்லியமாகவும் முழுமையாகவும் வரைபடமாக்க உதவுகிறது. மேலும், முதுமலை புலிகள் காப்பகம் மற்றும் சேலம் வட்டத்தில் உள்ள லாங்வுட் காப்புக் காடுகள், நீலகிரி மாவட்டம் மற்றும் கஞ்சமலை காப்புக்காடு சேலம் மாவட்டத்தில் முறையே 19.2629 ச.கி.மீ. (1926.29 ஹெக்டேர்) பரப்பளவில் உள்ள ரிசர்வ் காடுகளில் வான்வழி லிடார் ஆய்வு மேற்கொள்ள நடவடிக்கை தொடங்கப்பட்டுள்ளது.

12. வன வருவாய் மற்றும் செலவின விவரங்கள்

12.1. வன வருவாய்

தடிமர விற்பனை மற்றும் சமூகக்காடு தோட்டங்கள் விற்பனை ஆகியவை வன வருவாய்க்கான முக்கிய ஆதாரங்களாக விளங்குகின்றன. ஆற்றுப்படுகைகளில் வளர்க்கப்படும் முதிர்ந்த தேக்கு மரங்கள் ஆண்டுதோறும் அறுவடை செய்யப்பட்டு வருகின்றன. முதிர்ந்த தைல மரம் மற்றும் சீகை மரத்திலிருந்து பெறப்படும் வன மூலப்பொருட்கள் காகித ஆலை பிளைவுட் மற்றும் பிற தொழிற்சாலைகளுக்கு மூலப்பொருட்களாக வழங்கப்படுகின்றன.

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

2023 ஏப்ரல் 13]

வ. எண்	வருவாய் இனங்கள்	வரவு-செலவு திட்ட மதிப்பீடு 2023-24 (ரூ. லட்சங்களில்)
1	*சந்தன மரம்*	*190.00*
2	*தடிமரம்*	*1421.00*
3	*தொழிற்சாலைகளுக்கு மூலப்பொருட்கள் வழங்குதல்*	*239.74*
4	*இதர சிறு வனப் பொருட்கள்*	*37.20*
5	*பண்ணைக் காடுகள் வளர்த்தல் (மீள அளிக்கப்படும் தொகையைத் தவிர்த்து)*	*945.00*
6	*மூங்கில் மென்மரம், முந்திரி முதலிய தோட்டங்களின் விற்பனை*	*91.46*
7	*இதர வருவாய்கள்*	*5837.11*
	மொத்தம்	*8761.69*
	பிடித்தங்களைக் கழிக்க (—)	*(—)30.41*
	ஆக மொத்தம்	***8731.29***

12.2. செலவினம்

வன உயிரினங்களின் வாழ்விட மேம்பாடு, வன விரிவாக்க நடவடிக்கைகள், வன ஆராய்ச்சி மற்றும் கல்வித் திட்டங்கள் உட்பட அனைத்து பாதுகாப்பு மற்றும் மேம்பாட்டுத் திட்டங்கள் பயனுள்ள முறையில் தொடரும். நிதியொதுக்கத்தில் துறை சார்ந்த திட்டங்களுக்குத் தேவையான மதிப்பீட்டுத் தொகைகள் பின்வருமாறு வழங்கப்பட்டுள்ளன:—

திட்டங்களின் பெயர்	வரவு-செலவு திட்ட மதிப்பீடு 2023-2024 (ரூ. இலட்சங்களில்)
மாநில திட்டங்கள்	77916.58
வெளிநாட்டு நிதியுதவி பெறும் திட்டங்கள்	17756.50
ஒன்றிய அரசு பொறுப்பேற்கும் திட்டங்கள்	235.47
ஒன்றிய மற்றும் மாநில அரசு பொறுப்பேற்கும் திட்டங்கள்	12811.26
கூட்டுக—திருப்பி வசூலிப்பவை	2353.08
கடன்கள்	0.01
மொத்தம்	**111072.90**

13. வனக் கழகங்கள்

13.1. தமிழ்நாடு வனத் தோட்டக் கழகம்

1974 ஆம் ஆண்டு நிறுவப்பட்ட தமிழ்நாடு வனத் தோட்டக் கழகம், தைலத் தோட்டங்களை உற்பத்தி செய்து, தொடர்ந்து பராமரித்து, அறுவடை செய்து, கூழ்மர மற்றும் காகித ஆலை நிறுவனங்களுக்கு வினியோகம் செய்தல், வனப் பரப்புகளின் உற்பத்தித் தன்மையை அதிகப்படுத்தப்படுவது, ஊரக வேலைவாய்ப்பு வழங்குவது, மண்வளப் பாதுகாப்பு மற்றும் ஊரக மக்களின் விறகு மர தேவையைப் பூர்த்தி செய்வது ஆகிய நோக்கங்களுடன் செயல்பட்டு வருகிறது.

இந்தக் கழகம் 10.00 கோடி ரூபாய் மதிப்பில் அனுமதிக்கப்பட்ட மூலதனம் மற்றும் 5.64 கோடி ரூபாய் மதிப்பிலான வழங்கப்பட்ட செலுத்தப்பட்ட மூலதனத்தைக் கொண்டுள்ளது. இக்கழகத்தின் ஒட்டுமொத்த பங்கு மூலதனமும் தமிழ்நாடு அரசிடம் உள்ளது. தற்போது, 71,540.50 ஹெக்டேர் காப்புக் காடுகள், தமிழ்நாடு வனத் துறையால் தமிழ்நாடு வனத் தோட்டக் கழகத்திற்கு குத்தகைக்கு விடப்பட்டுள்ளது. அரசின் ஆணைப்படி ஆண்டு வருவாயில் 30 விழுக்காடு அளவு தொகையை தமிழ்நாடு வனத் துறைக்கு இக்கழகம் செலுத்தி வருகிறது.

2023 ஏப்ரல் 13]

அதிக மகசூல் தரக்கூடிய வகையில் ஒட்டுமுறை நுட்பம், தோட்டங்கள் எழுப்பும் நடவடிக்கைகளில் இயந்திரங்கள் பயன்பாடு, பாசனம் ஆகிய நவீன யுக்திகளை தழுவி தமிழ்நாடு வனத் தோட்டக் கழகம் வெற்றிகரமாக உற்பத்தியினைப் பெருக்கியுள்ளது. 2021-2022 மற்றும் 2022-2023 ஆம் ஆண்டில் தமிழ்நாடு வனத் தோட்டக் கழகத்தில் எழுப்பப்பட்டுள்ள தோட்டங்கள் மற்றும் செலவின விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

வ. எண்	எழுப்பப்பட்ட தோட்ட வகைகள்	செயல் (ஹெக்டேரில்)		நிதி (ரூ.இலட்சத்தில்)	
		2021-2022	2022-2023 (31.03.2023)	2021-2022	2022-2023 (31.03.2023)
1	தைல மரம்	1004	1669	488.34	604.92
2	முந்திரி	252	639	154.70	220.65

தைல மரம் உற்பத்தி செய்வதற்கு மாண்புமிகு சென்னை உயர் நீதிமன்றம் மதுரை கிளையில் விதிக்கப்பட்ட இடைக்கால தடை காரணமாக தைல மரத்திற்கு பதிலாக பொருத்தமான மாற்று வணிக கூழ்மர இனங்களை நடவு செய்வதற்கான கள/ ஆய்வு பரிசோதனைகளை மேற்கொள்ள அரசு பரிந்துரைத்தது. அதன்படி தமிழ்நாடு வனத் தோட்டக் கழகம் பரிசோதனையின் அடிப்படையில் 97.00 ஹெக்டேர் பரப்பளவில் அறந்தாங்கி, காரைக்குடி மற்றும் புதுக்கோட்டை மண்டலத்தில் சவுக்கு மரக் கன்றுகளை (Clonal Casurina) 2022-2023 ஆம் ஆண்டில் பயிர் செய்துள்ளது.

கம்பெனி நிறுவன சட்டம், 2013 பிரிவு 135 இன்படி தமிழ்நாடு வனத் தோட்டக் கழகம் ஒவ்வொரு ஆண்டும் சமூக கூட்டாண்மை பொறுப்புணர்வுமூலம் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகிறது. கடந்த மூன்று நிதியாண்டுகளில் சராசரி நிகர இலாபத்தில் சமூக கூட்டாண்மை பொறுப்புணர்வு தொகை 2% எனக் கணக்கிடப்படுகிறது. தமிழ்நாடு வனத் தோட்டக் கழகம் 2022-2023 ஆம் ஆண்டில் சமூக கூட்டாண்மை பொறுப்புணர்வு செயல்பாடுகளுக்காக 90.00 இலட்சம் ரூபாய் செலவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

2021-2022 மற்றும் 2022-2023 ஆம் ஆண்டுகளில் காகித ஆலைகளுக்கு விநியோகம் செய்யப்பட்ட கூழ்மரங்களின் விவரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

ஆண்டு	விநியோகம் செய்யப்பட்ட அளவு (மெட்ரிக் டன்னில்)	வருவாய் (ரூ.லட்சத்தில்)
2021-2022	224398.785	9985.75
2022-2023 (31.03.2023)	331397.761	14747.20
2023-2024 (வரவு-செலவு திட்ட மதிப்பீடு)	200000.000	8900.00

தமிழ்நாடு வனத் தோட்டக் கழகத்தில் அதிக அளவு வருவாயை ஈட்டுவதில் முந்திரி இரண்டாவது இடத்தை வகிக்கிறது. வருவாய் ஈட்டப்பட்ட விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

ஆண்டு	வருவாய் (ரூ.லட்சத்தில்)
2021-2022	1697.34
2022-2023 (31.03.2023)	1571.011
2023-2024 (வரவு-செலவு திட்ட மதிப்பீடு)	1928.00

2021-2022 மற்றும் 2022-2023 ஆம் ஆண்டுகளுக்கான கழகத்தின் வருவாய் மற்றும் செலவின விவரங்கள் மற்றும் 2022-2023 ஆம் ஆண்டுக்கான வரவு—செலவு திட்ட மதிப்பீடு கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

ஆண்டு	வருவாய்	செலவினம்	லாபம்(+) / நட்டம்(-)	
			திட்ட மதிப்பீடு	உள்ளபடியாக
2021-2022	13052.56	10175.05	——	2877.51

2023 ஏப்ரல் 13]

ஆண்டு	வருவாய்	செலவினம்	லாபம்(+) / நட்டம்(-)	
			திட்ட மதிப்பீடு	உள்ளபடியாக
2022-2023 (திருத்திய (வரவு-செலவு திட்ட மதிப்பீடு)	*17746.97*	*12965.00*	——	*4781.97*
2023-2024 (வரவு-செலவு திட்ட மதிப்பீடு)	*12383.33*	*10335.33*	*2048.00*	——

2023-2024 ஆம் ஆண்டில் எழுப்பப்படவுள்ள புதிய தைல மற்றும் முந்திரி தோட்டங்கள் மற்றும் செலவின விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

தோட்டங்கள்	செயல் (ஹெக்டேரில்)	நிதி (ரூ.லட்சத்தில்)
தைல மரம்	*1300*	*533.25*
முந்திரி மரம்	*663*	*304.22*

2022-2023 ஆம் நிதியாண்டில் தமிழ்நாடு வனத் தோட்டக் கழகத்தில் 4781.97 இலட்சம் ரூபாய் இலாபம் ஈட்டியுள்ளது. இந்த அளவு லாபத்தொகை இதற்கு முன் எந்த நிதியாண்டிலும் தமிழ்நாடு வனத் தோட்டக் கழகத்தால் ஈட்டப்படவில்லை.

13.2. தமிழ்நாடு தேயிலைத் தோட்டக் கழகம் (TANTEA)

1968 ஆம் ஆண்டு தமிழ்நாடு அரசு இலங்கையிலிருந்து தாயகம் திரும்பிய தமிழர்களுக்கு மறுவாழ்வு அளிக்கும் நோக்குடன் நீலகிரியில் தேயிலை சாகுபடி திட்டத்தை அரசு வனத் துறைமூலம் துவக்கியது. பின்னர் இத்தேயிலை சாகுபடித் திட்டம் தமிழ்நாடு தேயிலைத் தோட்டக் கழகமாக (டேன்டீ) 1976 ஆம் ஆண்டு உருப்பெற்றது. இக்கழகம் தமிழ்நாடு அரசு வனத் துறையின் நிர்வாகத்தின்கீழ் இயங்கி வருகிறது. இக்கழகத்தின் அங்கீகரிக்கப்பட்ட மூலதனம் 25.00 கோடி ரூபாய் ஆகும். இதன் செலுத்தப்பட்ட மூலதனம் 14.96 கோடி ரூபாய் ஆகும். இக்கழகத்தின் முழு மூலதனமும் தமிழ்நாடு அரசு வசமே உள்ளது.

[*2023 ஏப்ரல் 13*

குறிக்கோள்

இக்கழகத்தின் முதன்மையான குறிக்கோள்கள் பின்வருமாறு:—

- *இலங்கையிலிருந்து தாயகம் திரும்பிய தமிழர்களுக்கு தேயிலைத் தோட்டங்களில் பணி வழங்கி அவர்களுக்கு மறுவாழ்வு அளிப்பது*
- *நீலகிரி மற்றும் தமிழ்நாட்டின் இதர தகுந்த இடங்களில் அரசு வனத் துறைக்கு சொந்தமான நிலங்களை குத்தகைக்கு எடுத்து, அதில் தேயிலைத் தோட்டங்களை உருவாக்கி, இலங்கையிலிருந்து தாயகம் திரும்பிய தமிழர்களுக்கு மறுவாழ்வு அளித்தல்*

தேயிலைத் தோட்ட பரப்பளவு

இக்கழகம் தமிழ்நாடு அரசு வனத் துறைக்கு சொந்தமான நிலங்களை குத்தகைக்கு எடுத்து 4053.758 ஹெக்டேர் நிலத்தில் தேயிலை பயிரிட்டு பராமரித்து வருகிறது.

நிலை	ஆண்டு	சாகுபடி பரப்பு (ஹெக்டேர்)		
		நீலகிரி	ஆனைமலை	மொத்தம்
முதல் நிலை	*1969-1979*	*1747.32*	——	*1747.32*
இரண்டாம் மற்றும் மூன்றாம் நிலை	*1979-1984*	*795.87*	——	*795.87*
நான்காம் நிலை	*1990-1995*	*554.21*	*956.358*	*1510.568*
மொத்தம்		*3097.40*	*956.358*	*4053.758*

அரசிடமிருந்து பெறப்பட்ட நிதி உதவி

(அ) அரசாணை (1டி) எண் 107, சுற்றுச்சூழல் (ம) வனத் (வனம் 8) துறை, நாள் 31-7-2018 மற்றும் அரசாணை எண் 266, நாள் 20-9-2018 இன்படி முன்பணமாக ரூ.39.95 கோடி தொகை

2023 ஏப்ரல் 13]

கீழ்க்காணும் செலவினங்களை மேற்கொள்ள இந்த அரசு தமிழ்நாடு தேயிலைத் தோட்டக் கழகத்திற்கு ஒதுக்கீடு செய்துள்ளது. அதன் விவரம் பின்வருமாறு:—

ரூபாய் கோடியில்

வ. எண்	விவரம்	ஒதுக்கப்பட்ட தொகை
1	*வங்கிகடன் திரும்ப செலுத்த வேண்டியது*	*12.00*
2	*பணிக்கொடை / ஓய்வூதிய பலன்கள்*	*13.09*
3	*கடனீந்தோருக்கு செலுத்த வேண்டிய கடன்*	*2.30*
4	*உரமிடுதலுக்காக*	*2.15*
5	*நடைமுறை மூலமான தேவைக்காக*	*6.00*
6	*தொழிலாளர் குடியிருப்பு கட்ட மற்றும் பராமரிக்க*	*4.41*
	மொத்தம்	***39.95***

(ஆ) அரசாணை எண் 157 சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத் துறை, நாள் 14-9-2022 இன்படி, அரசு 2938.75 இலட்சம் ரூபாய் ஒப்பளித்து, அதனை நிலுவையிலிருந்து வந்த தொழிலாளர்கள் மற்றும் ஊழியர்களின் ஓய்வூதிய பணிக்கொடை, விடுப்பு ஒப்புவிப்பு ஊதியம், மருத்துவ விடுப்பு ஊதியம் மற்றும் கள மேற்பார்வையாளர்களின் நிலுவை ஊதியம் ஆகியவற்றை வழங்க செலவிடப்பட்டது.

(இ) மாண்புமிகு முதலமைச்சரின் அறிவிப்பின் அடிப்படையில், தமிழ்நாடு தேயிலை தோட்டக் கழகத்தில் பணிபுரிந்து ஓய்வு பெற்ற 573 தொழிலாளர்களுக்கு, நீலகிரி மாவட்டத்தில் தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியத்தால் கட்டப்பட்ட குடியிருப்பு வீடுகளை ஒதுக்குவதற்காக, பயனாளிகளின் பங்களிப்பாக 13.46 கோடி ரூபாயை அரசு ஒதுக்கீடு செய்துள்ளது.

தேயிலைத் தூளின் விற்பனையை அதிகரிக்க எடுக்கப்பட்ட நடவடிக்கை

இக்கழகத்தில் மாவட்ட மொத்த விற்பனை முகவர்கள் மற்றும் சில்லறை விற்பனை முகவர்களை அதிகளவில் நியமிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. தற்போது 103 சில்லறை விற்பனை முகவர்களையும் 13 மாவட்ட மொத்த விற்பனை முகவர்களையும் மற்றும் 2 மண்டல முகவர்களையும் கொண்டுள்ளது. மேலும், டேன்டீ தயாரிப்புகளை விளம்பரப்படுத்தும் நோக்கிலும், அதிகளவில் நுகர்வோர்களை சென்றடையும் வகையிலும், அரசு கண்காட்சிகள், சுற்றுலாத் துறை விழாக்களிலும் இக்கழகம் கலந்து கொண்டு வருகின்றது.

தமிழ்நாடு தேயிலைத் தோட்டக் கழகம் மேற்கொண்ட சீரிய முயற்சிகளைத் தொடர்ந்து பொது விநியோகத் திட்டத்தின்கீழ் டேன்டீ தேயிலைத் தூள் விற்பனை செய்ய நுகர்வோர் வாணிபக் கழகத்திடமிருந்து ஆணை கிடைக்கப்பெற்றுள்ளது. தேயிலைத்தூள் பொது விநியோகத் திட்டத்தின் மூலமாக 335.500 மெட்ரிக் டன் தேயிலைத் தூள் கடந்த 5 ஆண்டுகளில் விற்பனை செய்யப்பட்டுள்ளது.

மேலும், அண்டை மாநிலமான, கர்நாடகா போன்றவற்றில் பொது விநியோக திட்டத்தின்மூலம் டேன்டீ தேயிலைத் தூளை விற்பனை செய்ய உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

தமிழ்நாடு அரசு நிறுவனங்களான நெய்வேலி நிலக்கரி கழகம், சேலம் உருக்காலை, தமிழ்நாடு போக்குவரத்துக் கழகம், இராணுவ பொருள் அங்காடிகள் மற்றும் தபால் நிலையங்கள், சிறைச்சாலைகள் மற்றும் மின்வாரியம் போன்ற நிறுவனங்களுக்கும் இக்கழக தயாரிப்புகள் விற்பனை செய்யப்பட்டு வருகின்றன.

ஆர்கானிக் (இயற்கை உரம்) தேயிலை உற்பத்தி

குன்னூர் தேயிலைக் கோட்டத்தில் 7.5 ஹெக்டேர் பரப்பளவிற்கான தேயிலைத் தோட்டத்திற்கு IMO கன்ட்ரோல் பிரைவேட் லிமிடெட், பெங்களூரு நிறுவனத்திடமிருந்து இயற்கை வழி தேயிலை உற்பத்தி செய்ய சான்றிதழ் பெறப்பட்டுள்ளது. இச்சான்றிதழ் வருடந்தோறும் புதுப்பிக்கப்பட்டு வருகின்றது.

2023 ஏப்ரல் 13]

சந்தைப்படுத்துதல்

டேன் டீயில் தயாரிக்கப்படும் தேயிலைத் தூள் ஏல மையங்கள் மற்றும் முகவர்கள் மூலமாக விற்கப்படுகின்றன. இக்கழகத்தின் தேயிலைத் தூளை தயாரிக்க அதனை சந்தையில் அதிக விலையை பெறுவதற்கும், அவைகளை ஏற்றுமதி செய்வதற்கும், இக்கழகத்தின் தொழிற்சாலைகளை நவீனப்படுத்துவதற்கும் உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அதன்மூலம் இக்கழகத்திற்கு இலாபத்தை அதிகரிக்க வாய்ப்புகள் உள்ளது.

இக்கழக செயல்பாடு அறிக்கை

(இலட்சம் கிலோவில்)

விவரங்கள்	**2021-2022**		**2022-2023**		**2023-2024**
	இலக்கு	**உள்ளபடி**	**இலக்கு**	**உள்ளபடி 31.12.2022**	**பட்ஜெட்**
அ) செயல்					
பசுந் தேயிலை அறுவடை	*357.00*	*305.78*	*390*	*185.04*	*325*
தேயிலைத் தூள் உற்பத்தி	*89.25*	*81.26*	*89.70*	*47.74*	*81.25*
ஆ) வரவு-செலவு	(ரூ. இலட்சத்தில்)				
வருமானம்	*10781.43*	*8033.60*	*11806.14*	*4650.00*	*8940.27*
செலவு	*10364.63*	*11890.66*	*11342.90*	*7022.00*	*8790.00*
இலாப நட்டம் ஆதாயம் (+) நட்டம்(—)	*(+) 416.80*	*(—) 3857.06*	*(+) 463.15*	*(—) 2372.00*	*(+) 150.27*

[2023 ஏப்ரல் 13

13.3. அரசு ரப்பர் கழகம் (ARC)

இலங்கையில் இருந்து தாயகம் திரும்பிய அகதிகளின் மறு வாழ்வினையும் அவர்களது தொழில்திறனையும் கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள தட்பவெப்ப சூழ்நிலையையும் கருத்தில் கொண்டு அரசு ரப்பர் தோட்டங்கள் 1961 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டு 1961 முதல் படிப்படியாக 4785.7 ஹெக்டேர் அளவுக்கு 1979 ஆம் ஆண்டு வரை விரிவாக்கம் செய்யப்பட்டது. 1984 ஆம் ஆண்டு மேற்படி அரசு ரப்பர் தோட்டங்களை எடுத்து நிறுவனமாக அரசு ரப்பர் கழகம் ஆரம்பிக்கப்பட்டது. இக்கழகம் 1-10-1984 முதல் நிறுவனச் சட்டத்தின்கீழ் பதிவு செய்யப்பட்டு, தற்போது 13.07 கோடி ரூபாயை அனுமதிக்கப்பட்ட மற்றும் கொடுக்கப்பட்ட மூலதனமாக கொண்டு செயல்பட்டு வருகின்றது. இப்பங்குகள் அனைத்தும் தமிழ்நாடு அரசின் வசம் உள்ள பங்குகளாகும். ரப்பர் நடவிற்கு உகந்ததாக இல்லாத பகுதிகளை மீண்டும் வனத் துறைக்கு ஒப்படைத்தது போக, தற்போது 3708.715 ஹெக்டேரில் செயல்பட்டு வருகிறது. அரசு ரப்பர் கழகம் இதர பெரு நிறுவனங்கள் போன்று அல்லாமல், தட்பவெப்ப சூழ்நிலை சார்ந்த நிறுவனமாகும். அரசு ரப்பர் கழகம் மேலும் சுமார் 1500 நபர்களுக்கு வேலைவாய்ப்பு வழங்கி வருகிறது.

i) அரசு ரப்பர் கழகத்தின் நோக்கங்கள்

1. ரப்பர் தோட்டங்களின் எதிர்கால நலனை பாதுகாத்தல்.
2. தொழிலாளர்களின் நலனை பாதுகாத்தல் மற்றும் உபரி தோட்ட தொழிலாளர்களுக்கு வேலைவாய்ப்பை உறுதிசெய்தல் மற்றும் இலங்கை அகதிகளுக்கு மறுவாழ்வு அளித்தல்.
3. ரப்பர் தொழிலில் உள்ள ஊக வணிகத்தை தடை செய்தல்.
4. ரப்பர் தொழிலின் உரிமை ஒரு சில தனி மனிதர்களிடம் மட்டும் இருப்பதை தடுத்தல்.

2023 ஏப்ரல் 13]

ii) அரசு ரப்பர் கழகத்தின் ரப்பர் உற்பத்தி மற்றும் ஈட்டப்பட்ட வருமானம்

வ. எண்	விவரங்கள்	2021-2022 (உண்மை நிலவரம்)	2022-2023 திருத்திய மதிப்பீடு அடிப்படையில்	2023-2024 பட்ஜெட் மதிப்பீடு அடிப்படையில்
அ)	*ரப்பர் உற்பத்தி (மெட்ரிக் டன்னில்)*	*1622*	*1400*	*1450*
ஆ)	*வரவு மற்றும் செலவு (ரூபாய் இலட்சத்தில்)*	*(தணிக்கை செய்யப்பட்டது)*	*(மாறுதலுக்கு உட்பட்டது)*	*(மாறுதலுக்கு உட்பட்டது)*
	அ) வரவு	*5196.00*	*3781.19*	*3665.48*
	ஆ) செலவு	*4126.71*	*4131.72*	*4099.98*
இ)	*லாபம்(+) அல்லது நட்டம் (—) (ரூ.இலட்சத்தில்)*	*(+)1069.29*	*(—)350.53*	*(—)434.50*

iii) எதிர்காலத் திட்டங்கள்

ரப்பர் தோட்டங்கள் 1961 ஆம் வருடம் முதல் 1979 ஆம் வருடம் வரை உள்ள இடைப்பட்ட வருடத்தில் 4785.70 ஹெக்டேர் பரப்பளவில் படிப்படியாக நடப்பட்டன. ஒரு ரப்பர் மரம் ஏழாவது வருடத்தில் ரப்பர் பால் வடிப்பு பணி மேற்கொள்வதற்குரிய வளர்ச்சியடையும். 35 வருடங்களுக்குப் பின்னர் ரப்பர் பால் உற்பத்தி மிகவும் குறையும். எனவே, பொருளாதார ரீதியாக கூடுதல் ரப்பர் பால் உற்பத்தி பெறுவதற்கு 35 ஆண்டுகளான ரப்பர் மரங்களை முறித்து அப்புறப்படுத்திவிட்டு புதிய ரப்பர் செடிகள் நடவு செய்யப்பட வேண்டும். எனவே, முதலில் நடப்பட்ட ரப்பர் மரங்கள் அந்தந்த தோட்டங்களின் வயதின் அடிப்படையில் 1995 முதல் 2014 வரை இடைப்பட்ட வருடத்திற்குள் முறித்து அப்புறப்படுத்தியிருக்க வேண்டும். இருப்பினும், பல்வேறு காரணங்களால் முதலில் நடப்பட்ட ரப்பர் மரங்களை மேற்குறிப்பிட்டுள்ள கால அட்டவணைக்குள் முறிக்க

[2023 ஏப்ரல் 13

இயலவில்லை. எனவே, தற்போது முதிர்ந்த ரப்பர் மரங்களை முறித்து அப்புறப்படுத்தி மறுநடவு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேலும், உற்பத்தி மற்றும் உற்பத்தி திறனை மேம்படுத்த முதிர்ந்த ரப்பர் மரங்களை குறிப்பிட்டுள்ள கால அட்டவணைப்படி அவை முறிக்கப்பட்டு வருகின்றன. அவ்விடங்களில் உயர்தர வீரியமிக்க ரப்பர் கன்றுகள் நடவு செய்யப்பட்டு வருகின்றன.

மறுநடவுப் பணிகள் அனைத்தும் முடிவடைந்து, மறுநடவு செய்யப்பட்ட மரங்களில் 7 வருடங்கள் ஆன மரங்களில் பால் வடிப்பு பணி மேற்கொள்ளப்படும். இது வருவாய் உருவாக்கத்திற்கான பெரும்பங்காகும். இதனால், கழகத்தின் நிதிநிலை நன்றாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

iv) அரசு ரப்பர் கழகத்தின் பணியாளர்கள் விவரம்

அரசு ரப்பர் கழகத்தில் மொத்தம் ஒப்பளிப்பு செய்யப்பட்ட பதவிகள் 200 எனினும், தற்போதைய பணியாளர்கள் 81 அவர்களில் 12 (7 அலுவலர்கள் மற்றும் 5 பணியாளர்கள்) பணியாளர்கள் வனத் துறையிலிருந்தும், 69 (4 அலுவலர்கள் மற்றும் 65 பணியாளர்கள்) பணியாளர்கள் கழகப் பணியாளர்களும் ஆவர்.

v) அரசு ரப்பர் கழகத்தின் மொத்த நிரந்தர தொழிலாளர்கள் விவரம்

கழகத்தில் 480 பால் வடிப்பு தொழிலாளர்களும், 138 களப்பணி தொழிலாளர்களும், 38 தொழிற்கூட தொழிலாளர்களும் மற்றும் 17 பால் வடிப்பு மேற்பார்வையாளர்களும் நிரந்தர தொழிலாளர்களாக பணிபுரிகிறார்கள். இது தவிர சுமார் 300 தொழிலாளர்களுக்கு தற்காலிக அடிப்படையில் தேவைக்கேற்ப பணி வழங்கப்படுகிறது. பணிபுரியும் தொழிலாளர்களுக்கு உற்பத்தி அடிப்படையிலான ஊக்கத்தொகை, (குறியளவைவிட உற்பத்தி அதிகமாக கொண்டு வருபவர்களுக்கு மட்டும்) மழைநாள் படி, தொழிலாளர் வருங்கால வைப்பு நிதி மற்றும் வருடாந்திர போனஸ் மற்றும் சட்டப்படியான இதர சலுகைகளும் வழங்கப்படுகிறது. அனைத்து தொழிலாளர்களுக்கும் வாடகையில்லா குடியிருப்பு, சீருடை, மருத்துவ ஊர்தி மற்றும் இலவச மருத்துவ வசதிகள் வழங்கப்படுகின்றன. மேலும், தோட்ட தொழிலாளர் சட்டம் மற்றும் தொழிற்சாலைகள் சட்டத்தின்படி ஒவ்வொரு வருடமும் ஒரு போர்வை மற்றும் ஒரு குடை வழங்கப்படுகிறது.

2023 ஏப்ரல் 13]

2023-2024 பணியாளர்கள் மற்றும் தொழிலாளர்களின் வருடாந்திர ஊதிய செலவு (தோராயமாக)

i	*தோராயமாக (பணியாளர்கள்)*	*செலவு* —	*ரூ.832.72 இலட்சம் (வருடத்திற்கு)*
ii	*தோராயமாக (தொழிலாளர்கள்)*	*செலவு* —	*ரூ.2108.46 இலட்சம் (வருடத்திற்கு)*

14. 2022-2023 ஆம் ஆண்டின் முக்கிய நிகழ்வுகள்

செங்கல்பட்டு மாவட்டத்தில் கடம்பூர் கிராமத்தில் தாவரவியல் பூங்கா

2022-2023 ஆம் ஆண்டில் செங்கல்பட்டு மாவட்டத்திலுள்ள கடம்பூர் கிராமத்தில் 137.65.05 ஹெக்டேர் பரப்பளவில் 300 கோடி ரூபாய் மதிப்பீட்டில் தாவரவியல் பூங்கா அமைக்க ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. இத்திட்டமானது இங்கிலாந்தில் கியூ ராயல் தாவர பூங்காவுடன் இணைந்து செயல்படுத்தப்படவுள்ளது. இந்த தாவரவியல் பூங்காவினை 137.65.05 ஹெக்டேர் பரப்பில் அமைப்பதற்கு வருவாய்த் துறையிலிருந்து வனத் துறைக்கு நில மாற்றம் செய்யப்பட்டுள்ளது. அளவு பணிகள் தற்பொழுது முடிவுற்றது. விரிவான திட்ட அறிக்கை தயார் செய்வதற்கு நடவடிக்கையில் உள்ளது.

பசுமை தமிழ்நாடு இயக்கம்

மாநிலத்தின் பசுமை பரப்பினை தேசிய வனக் கொள்கை இலக்கான 33 சதவீதத்திற்கு அதிகப்படுத்த "பசுமை தமிழ்நாடு இயக்கம்" மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் துவங்கப்பட்டுள்ளது. இதுவரை தமிழ்நாடு முழுவதும் 25829 ஹெக்டேர் பரப்பளவில் 2.8 கோடி மரக்கன்றுகள் நடப்பட்டுள்ளன.

கடல்சார் உயர் இலக்கு படை

கடலோர சூழலியலின் பாதுகாப்பினை பலபடுத்தும்பொருட்டு மன்னார் வளைகுடா உயிர்க்கோள காப்பகம் பாக்—ஜலசந்தி ஆகிய பகுதிகளில் சிறப்பு கடல்சார் உயர் இலக்கு படை இரண்டு உருவாக்கப்பட்டுள்ளது. இது நாட்டின் முதல் சிறப்பு கடல்சார் உயர் இலக்கு படையாகும். ஒவ்வொரு படைக்கும் ஒரு படகு மற்றும் ஐந்து வனக் காப்பாளர்கள் வழங்கப்பட்டுள்ளது.

[2023 ஏப்ரல் 13

ராம்சார் தளங்கள்

ராம்சார் தலைமையகம் புதிதாக 13 ராம்சார் தளங்களை தமிழ்நாட்டில் அறிவிக்கை செய்தது. இதன்மூலம் இந்தியாவில் தமிழ்நாடு அதிக ராம்சார் தளங்களைக் (அதாவது 14 ராம்சார் தளங்கள்) கொண்ட மாநிலமாக திகழ்கிறது.

அகஸ்தியமலை யானைகள் காப்பகம்

யானைகள் வழித்தடங்கள் மற்றும் அதன் வாழ்விடங்களை பாதுகாக்கும்பொருட்டு களக்காடு முண்டந்துறை புலிகள் காப்பகம் மற்றும் கன்னியாகுமரி வனவிலங்கு சரணாலயத்தினை உள்ளடங்கி 1,19,748 ஹெக்டேர் பரப்பளவில் அகஸ்தியமலை யானைகள் காப்பகம் உருவாக்கப்பட்டது. இது மாநிலத்தின் ஐந்தாவது யானைகள் காப்பகம் ஆகும். அகஸ்தியமலை நிலப்பரப்பில் யானைகளின் இயற்கையான வாழ்விடங்களை மீளக் கொண்டு வருதல், யானைகள் இடம்பெயரும் பாதையினை மீளுருவாக்குதல், மனித—யானை மோதலை குறைத்தல், அறிவியல் பூர்வமான ஆராய்ச்சியை மேற்கொள்ளுதல் மற்றும் ஆவணப்படுத்துதல் ஆகிய நோக்கத்திற்காக இந்த புதிய யானை காப்பகம் அமைக்கப்பட்டுள்ளது.

நஞ்சராயன் பறவைகள் சரணாலயம்

திருப்பூரின் ஊத்துக்குளி மற்றும் திருப்பூர் வடக்கு தாலுகாக்களில் 125.86.5 ஹெக்டேர் பரப்பளவில் அமைந்துள்ள நஞ்சராயன் குளத்தை நஞ்சராயன் பறவைகள் சரணாலயமாக அறிவிக்கப்பட்டுள்ளது.

கடற்பசு பாதுகாப்பகம்

தமிழ்நாட்டில் அழிந்துவரும் கடற்பசு இனத்தையும் மற்றும் அதன் கடலோர வாழ்விடங்களை பாதுகாக்கவும் “கடற்பசு பாதுகாப்பகம்” மன்னார் வளைகுடா, பாக்—ஜலசந்தி பகுதியில் ஏற்படுத்தப்பட்டுள்ளது. இது இந்தியாவின் முதல் கடற்பசு பாதுகாப்பகம் ஆகும். இதுகுறித்து அடிப்படை ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது மற்றும் விரிவான அறிக்கையும் தயார் செய்யப்பட்டுள்ளது.

2023 ஏப்ரல் 13]

தேவாங்கு வன உயிரின சரணாலயம்

அழிந்து வரும் தேவாங்கு இனத்தினை பாதுகாக்கும்பொருட்டு கரூர் மற்றும் திண்டுக்கல் மாவட்டங்களில் ஏழு பகுதிகளில் 11,806.56 ஹெக்டேர் பரப்பளவில் கடவூர் தேவாங்கு வன உயிரின சரணாலயம் அறிவிக்கை செய்யப்பட்டுள்ளது. இது இந்தியாவின் முதல் தேவாங்கு வன உயிரின சரணாலயம் ஆகும். வாழ்விடங்களை மேம்படுத்துதல் மற்றும் அச்சுறுத்தலை குறைத்து இந்த இனத்தின் பாதுகாப்பினை பலப்படுத்தும் வகையில் அமையும்.

காவிரி தெற்கு வன உயிரின சரணாலயம்

கிருஷ்ணகிரி மற்றும் தருமபுரி மாவட்டங்களை உள்ளடக்கிய 68640.613 ஹெக்டேர் காப்புக்காடு பகுதியில் காவிரி தெற்கு வன உயிரின சரணாலயம் அறிவிக்கை செய்யப்பட்டுள்ளது. தென்னிந்தியாவில் உள்ள யானைகள் வாழ்விடங்களில் இது ஒரு முக்கியமான வாழ்விடமாகும் மற்றும் ஆற்றங்கரையோர பகுதிகளில் வாழும் உயிரினங்களுக்கு பாதுகாப்பாகவும் மற்றும் காவேரி ஆற்றின் இருபுற கரைகளிலும் சுமார் 5 கி.மீ. நீளத்திற்கு தொடர்ச்சியாக உள்ள பாதுகாக்கப்பட்ட பகுதியும் கொண்டுள்ளது. இந்த நிலப்பரப்பானது நீலகிரி உயிர்க்கோள காப்பகம், சத்தியமங்கலம் மற்றும் ஈரோடு வனக் கோட்ட பகுதிகளுடன் தொடர்ச்சியாக இணைந்துள்ளது.

குயின்ஸ் காமன்வெல்த் அங்கீகாரம்

2015 ஆம் ஆண்டில் வனப் பாதுகாப்பு முயற்சியாக நீலகிரி மாவட்டம், கோத்தகிரியில் தொடங்கப்பட்ட லாங்வுட் சோலைக் காடுகளுக்கு அறிவுசார் மாற்றம் தகுந்த செயல்முறை பரிமாற்றங்கள் மற்றும் புதிய முயற்சிகளை இணைந்து உருவாக்குதல் ஆகியவற்றிற்கு குயின்ஸ் காமன்வெல்த் (QCC) அங்கீகாரத்தை பெற்றுள்ளது.

வன உயிரினக் குற்றக் கட்டுப்பாட்டுத் தகவலகம்

தமிழ்நாட்டில் உள்ள வளமான பல்லுயிர் பாதுகாப்பு மற்றும் மாநில அளவில் வனம் மற்றும் வன உயிரின வணிகத்தை தடுக்கவும் சென்னை, கோயம்புத்தூர், மதுரை மற்றும் இராமநாதபுரம் ஆகிய நான்கு மண்டலங்களில் தமிழ்நாடு வனம் மற்றும் வன உயிரினக் குற்றக் கட்டுப்பாட்டுத் தகவலகம் உருவாக்கப்பட்டுள்ளது.

[*2023 ஏப்ரல் 13*

உயிரிப் பல்வகைமை பாரம்பரிய தளம்

உயிரிப் பல்வகைமை சட்டம், 2002ன் பிரிவு 37(1) இன்கீழ் மதுரை மாவட்டம், அரிட்டாப்பட்டி பகுதி தமிழ்நாட்டின் முதல் பல்லுயிர் பாரம்பரிய தளமாக அறிவித்துள்ளது.

நீலகிரி வரையாடு திட்டம்

நீலகிரி வரையாடு எண்ணிக்கை பற்றி நன்கு அறிதல். அவைகளின் நடமாட்ட முறைகள் மற்றும் அவைகளின் வாழ்விடங்களை கதிர் தொலையியல் ஆய்வுமூலம் அவைகளின் வரலாற்று வாழ்விடங்களை அறிதல் ஆகியவற்றிற்கு தமிழ்நாட்டின் மாநில விலங்கான நீலகிரி வரையாட்டின் பாதுகாப்பை உறுதி செய்வதற்காக "நீலகிரி வரையாடு திட்டம்" ரூ.25.13 கோடி செலவில் தொடங்கப்பட்டுள்ளது.

கிண்டியில் உள்ள தேசிய பூங்கா வளாகத்தில் ஆமைகள் பாதுகாப்பு மற்றும் மறுவாழ்வு மையம்

சென்னை கிண்டியில் உள்ள தேசிய பூங்கா வளாகத்தில் கடல் ஆமைகளின் பாதுகாப்பினை அதிகரிக்கும்பொருட்டு பாதுகாப்பு மற்றும் மறுவாழ்வு மையம் ரூ.6.30 கோடி செலவில் அமைக்க அரசாணை வழங்கப்பட்டுள்ளது. இந்த மையமானது சமீபத்திய தொழில்நுட்பத்தை பயன்படுத்தி பாதுகாப்பு முயற்சிகளை மேம்படுத்தல் ஆகும்.

முதலமைச்சர் பொது நிவாரண நிதி

வனத் தீயினை கட்டுப்படுத்தும்பொழுது துரதிஷ்டவசமாக வேட்டைத் தடுப்புக் காவலர்கள், வனக் காவலர்கள், வனக் காப்பாளர்கள், வனவர்கள் மற்றும் வனச் சரக அலுவலர்கள் உயிரிழக்க நேர்ந்தால் முதலமைச்சர் பொது நிவாரண நிதியிலிருந்து அவர்களின் குடும்பத்திற்கு 25 இலட்சம் ரூபாய் வழங்க அரசாணை வழங்கப்பட்டுள்ளது.

உயிர்ப்பன்மை—ஆய்வகம் மற்றும் சூழல் பூங்கா

களக்காடு முண்டந்துறை புலிகள் காப்பகத்தில் (காக்காச்சி, அம்பாசமுத்திரம் சரகம் சிங்கம்பட்டி) உயிர்ப்பன்மை–ஆய்வகம் மற்றும் சூழல் பூங்கா 7.00 கோடி ரூபாய் செலவில் ஏற்படுத்த அரசு ஒப்புதல் வழங்கியுள்ளது

2023 ஏப்ரல் 13]

சோலைக் காடுகள் பாதுகாப்பு மையம்

நீலகிரி மாவட்டம், கோத்தகிரி நகருக்கு அருகில் உள்ள லாங்வுட் சோலைக் காடுகளை பாதுகாப்பதன் முக்கியத்துவத்தை கருத்தில்கொண்டு, லாங்வுட் சோலை பாதுகாப்பு மையம் 4.60 கோடி ரூபாய் செலவில் அமைக்க அரசு ஒப்புதல் வழங்கியுள்ளது. வாழ்க்கை அளவு மாதிரிகள், கலந்துரையாடல் மற்றும் மிகுதியான மெய்மை ஆகியவைகளை குழந்தைகள் மற்றும் இளைஞர்களுக்கு உருவாக்குதல், ஒருங்கிணைத்தல் மற்றும் விழிப்புணர்வு நிகழ்ச்சிகளை நடத்துதல் போன்றவை இதன் முக்கிய நோக்கமாகும்.

வன ஆணையம்

வனப் பாதுகாப்பு, பசுமைப் பரப்பை விரிவுபடுத்துதல், வன மேலாண்மையில் பழங்குடியினரின் பங்கேற்பு, மனித விலங்கு மோதல்களைத் தடுப்பது போன்றவற்றில் தேவையான கொள்கை மாற்றங்களைப் பரிந்துரைக்க வன ஆணையம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

கிண்டி சிறுவர் பூங்காவை மறுவடிவமைத்தல்

கிண்டி குழந்தைகள் பூங்காவை 20 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மறுவடிவமைத்து இயற்கை பூங்காவாக மேம்படுத்தப்படும்.

மரகதப் பூஞ்சோலை (கிராம பசுமை பூங்காக்கள்)

தமிழ்நாட்டிலுள்ள 100 கிராமங்களில், மரகதப் பூஞ்சோலைகள் என்ற பெயரில் 100 கிராமங்களில் பசுமை பூங்காக்கள் 25.00 கோடி ரூபாய் மதிப்பீட்டில் உருவாக்கப்படும்.

சூழல் சுற்றுலா

காலநிலை மாற்றத்திற்கான தமிழ்நாடு உயிர்ப்பன்மை பாதுகாப்பு மற்றும் பசுமையாக்குதல் திட்டம் மூலம் 14.00 கோடி ரூபாய் செலவில் சூழல் சுற்றுலா சுற்றுத்தடங்கள் உருவாக்கப்படும். மேலும், சுற்றுச்சூழல் சுற்றுலாவை ஊக்குவிக்கும் வகையில் சேத்துமடை, மன்னவனூர் தடியன்குடிசை மற்றும் ஏலகிரி ஆகிய பகுதிகளில் சூழல் சுற்றுலா தலங்கள் தனியார் பங்களிப்புடன் ஏற்படுத்தப்படும்.

நகர் மற்றும் நகர்ப்புற வனவியல் ஏற்படுத்துதல்

அடையாறு மற்றும் பக்கிங்ஹாம் ஆறுகள் கால்வாய் ஆகியவற்றின் கரைகளில் 237.00 கோடி ரூபாய் செலவில் நகர் மற்றும் நகர்ப்புற வனவியல் உருவாக்கப்படும்.

நீலக்கரிம உள்ளிருப்புக்கான முன்னெடுப்புகள்

நீலக்கரிம உள்ளிருப்புக்கான முன்னெடுப்பிற்கு ஊக்கமளிக்கும் வகையில் காலநிலை மாற்றத்திற்கான தமிழ்நாடு உயிர்ப்பன்மை பாதுகாப்பு மற்றும் பசுமையாக்குதல் திட்டம்மூலம் அலையாத்தி காடுகள் மீளுருவாக்கம் மற்றும் பவளப்பாறைகள் பாதுகாப்பு பணிகள் 7.74 கோடி ரூபாய் செலவில் மேற்கொள்ளப்படும்.

15. விருதுகள்

- *ஒன்றிய அரசின் சுற்றுச்சூழல், வனம் மற்றும் காலநிலை மாற்ற அமைச்சகத்தின் யானைகள் திட்ட பிரிவின் 'கஜகௌரவ் விருதை' ஆனைமலை மலைப் பகுதியைச் சேர்ந்த மலசார் பழங்குடியின மக்கள் பெற்றனர்.*
- *MDT23 புலியை உயிருடன் மீட்ட உறுதுணையாக இருந்த முதுமலை புலிகள் காப்பக முன்களப் பணியாளர்களுக்கு உலகளாவிய புலிகள் தினம் 2022 இல் வெகுமதிகளை வழங்கப்பட்டுள்ளது.*
- *ஈரோடு சத்தியமங்கலம் புலிகள் காப்பகத்திற்கு புலிகளின் எண்ணிக்கை இரு மடங்காக உயர்த்தப்பட்டதற்கான சர்வதேச TX2 விருது பெறப்பட்டது.*
- *தெப்பக்காடு யானைகள் முகாமில் ஆதரவற்ற யானைக் குட்டிகளை வளர்ப்பதை அடிப்படையாகக் கொண்ட "தி எலிஃபண்ட் விஸ்பரர்ஸ்" என்ற ஆவணப்படம், ஆவணக் குறும்படப் பிரிவின்கீழ், ஆஸ்கர் விருதை வென்றது. இந்த ஆவணப்படத்தின்மூலம், தமிழ்நாடு வனத் துறையின் யானைகளின் பாதுகாப்பு மற்றும் சிறைப்பிடிக்கப்பட்ட யானைகளின் மேலாண்மைக்கான பணிகள் உலக கவனத்தைப் பெற்றன.*

2023 ஏப்ரல் 13]

- *மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஆதரவற்ற யானைக் குட்டி பராமரிப்பாளர்களான திரு. பொம்மன் மற்றும் திருமதி பெல்லி ஆகியோருக்கு தலா ஒரு இலட்சம் ரூபாய் காசோலை மற்றும் சான்றிதழ் வழங்கி பாராட்டினார். மேலும் யானைகள் முகாமில் பணிபுரியும் 91 யானைப் பாகன்கள் மற்றும் காவடிகளுக்கு மானியமாக முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து தலா ஒரு லட்சம் ரூபாய் வீதம் நல்கை வழங்கப்பட்டது.*

- *ஆனைமலை புலிகள் காப்பகம் மற்றும் முதுமலையில் உள்ள அனைத்து யானை பராமரிப்பு பணியாளர்களுக்கும் சுற்றுச்சூழல் நட்பு மற்றும் 91 வீடுகள் கட்டப்படும் என அரசு அறிவித்துள்ளது.*

- *ஆனைமலை புலிகள் காப்பகத்தில் கோழிகமுத்தி யானைகள் முகாம் 5.00 கோடி ரூபாய் செலவில் புதுப்பிக்கப்படும் என்றும், கோவை மாவட்டம் சாடிவயலில் யானைகளை பராமரிக்க தேவையான அனைத்து வசதிகளுடன் 8.00 கோடி ரூபாய் செலவில் மேற்கொள்ளப்படும் என அரசு அறிவித்துள்ளது.*

- *தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஆஸ்கார் விருது பெற்ற ஆவணப் படமான “தி எலிஃபண்ட் விஸ்பரர்ஸ்” படத்தினை உருவாக்கிய செல்வி கார்த்திகி கொன்சால்வ்ஸ் அவர்களுக்கு பாராட்டு சான்றிதழும் 1.00 கோடி ரூபாய்க்கான காசோலையும் வழங்கினார்.*

முடிவுரை

வனங்கள் நம் சமூகங்களுக்கு சுற்றுச்சூழல் அமைப்பு சேவைகளை வழங்குவதோடு, உலகளாவிய காலநிலையை ஒழுங்குபடுத்துவதில் முக்கிய பங்கு வகிப்பதால் வனங்கள் முதன்மையான முக்கியத்துவம் வாய்ந்தவையாக திகழ்கின்றன. நகரமயமாக்கல் காரணமாக வன வளங்கள் மற்றும் வனப் பகுதிக்கான தேவை அதிகரித்து வருவதால், வனத்தை பாதுகாப்பு மற்றும் மேலாண்மை செய்வது என்பது தற்போது இன்றியமையாததாகிவிட்டது.

[*2023 ஏப்ரல் 13*

இயற்கை வளங்களின் நிலையான பயன்பாடு குறித்த பொது விழிப்புணர்வு அதிகரித்து வருவதால், வனங்கள் பற்றிய பார்வை அடிப்படை சுரண்டலில் இருந்து பல்லுயிர் பாதுகாப்பு, கார்பன் வரிசைப்படுத்துதல், இயற்கை வள மேலாண்மை மற்றும் பொழுதுபோக்கு மற்றும் ஓய்வுநேர மேம்பாடு (சூழல் — சுற்றுலா) என உருமாற்றம் பெற்றுள்ளது. இந்தச் சூழலில், கார்பன் மூழ்குவதை அதிகரித்து, கார்பன் உமிழ்வைக் குறைப்பதன்மூலம் சுற்றுச்சூழல் பாதுகாப்பு, காலநிலை மாற்றத்தைத் தணித்தல் ஆகியவற்றை நோக்கிய அரசாங்க முன்முயற்சிகள் சிறந்த எதிர்காலத்திற்காக ஆரோக்கியமான மற்றும் மீள்தன்மை கொண்ட காடுகளை ஊக்குவிக்கும் வகையில் அமையும்.

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

இணைப்பு-V

(355 ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.)

மானியக் கோரிக்கை எண் 26-வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை

கொள்கை விளக்கக் குறிப்பு, 2023-2024

முன்னுரை

நகரமயமாதலில் நாட்டிலேயே தமிழ்நாடு முன்னணி மாநிலமாகத் திகழ்கிறது. தமிழ்நாட்டில் 1991 இல் 1.90 கோடியாக (34%) இருந்த நகர்ப்புற மக்கள் தொகை, 2011 ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி 3.49 கோடியாக (48.40%) அதிகரித்துள்ளது. சில மதிப்பீடுகளின்படி, நகர்ப்புற மக்கள்தொகை விகிதம் 2023-க்குள் 4.5 கோடியாக (60%) இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. எதிர்வரும் ஆண்டுகளில் தமிழ்நாட்டில் நகரமயமாக்கல் விகிதங்கள் அதிகரிப்பதற்கான சாத்தியக்கூறு இருப்பதால் இந்தப் போக்கு தொடரும் என எதிர்பார்க்கப்படுகிறது. 2031 ஆம் ஆண்டில் தமிழ்நாட்டில் நகர்ப்புற மக்கள் தொகை 5.34 கோடியாக (67%) உயரும் என்று கணிக்கப்பட்டுள்ளது. இதன் விளைவாக, வாங்கும் திறனுக்கேற்ற வீடுகள் மற்றும் நிலையான நகர்ப்புற வளர்ச்சியின் தேவை தமிழ்நாடு வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறையால் கவனம் செலுத்த வேண்டிய முக்கிய இனமாக உருவாகியுள்ளது.

இதைக் கருத்தில்கொண்டு, அனைத்து மக்களுக்கும் பாதுகாப்பான மற்றும் வாங்கும் திறனுக்கேற்ற வீடுகளை வழங்குவதற்கு முன்னுரிமை அளிக்கும் மற்றும் நிலையான நகர்ப்புற வளர்ச்சியை ஊக்குவிக்கும் பல்வேறு வீட்டுவசதித் திட்டங்களை இத்துறை வகுத்து செயல்படுத்தி வருகிறது.

இத்தொலைநோக்கு பார்வையானது, வீட்டுவசதி என்பது மனிதனின் அடிப்படை உரிமை என்றும், தரமான வீட்டுவசதியானது நல்வாழ்விற்கும் சமூக மற்றும் பொருளாதார இயக்கத்திற்கும் அவசியம் என்ற நம்பிக்கையை அடித்தளமாகக் கொண்டுள்ளது.

[2023 ஏப்ரல் 13

தமிழ்நாடு வீட்டுவசதி மற்றும் நகர்ப்புர வளர்ச்சித் துறையானது அதன் வளர்ந்து வரும் நகர்ப்புற மக்கள்தொகையின் வீட்டுவசதித் தேவைகளை நிறைவேற்றுவதிலும் நிலையான மற்றும் உள்ளடக்கிய நகர்ப்புற வளர்ச்சியை ஊக்குவிப்பதிலும் உறுதியாக உள்ளது.

ஐக்கிய நாடுகள் சபை (United Nations) 17 இலக்குகளை நீடித்த வளர்ச்சி இலக்குகளாக உருவாக்கி அதனை நிலையான வளர்ச்சிக்கான உலகளாவிய நோக்கங்களாக ஊக்குவிக்கின்றது. மேற்படி 17 இலக்குகளில் "நிலையான நகரங்கள் மற்றும் சமூகங்கள் (Sustainable cities and communities)" எனும் இலக்கு 11 இன்கீழ் நகர்ப்புறங்களில் சிறந்த திட்டமிடல் மற்றும் மேலாண்மையை முன்னெடுப்பதையும், பாதுகாப்பான, போதுமான வீட்டுவசதியை உறுதிசெய்வதையும், வாழ்விடங்களை மேம்படுத்துவதையும் பொதுப் போக்குவரத்து மற்றும் சாலைகள் போன்ற அடிப்படை உட்கட்டமைப்புகளையும் ஏற்படுத்துவதன்மூலம் நீடித்த, நிலையான நகரப்பகுதிகளை உருவாக்குவதையும் குறிக்கோளாகக் கொண்டுள்ளது. வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறையின் கொள்கைகள் மற்றும் திட்டங்கள், ஐக்கிய நாடுகள் சபையால் ஏற்றுக்கொள்ளப்பட்ட நீடித்த வளர்ச்சி இலக்குகளுடன் (Sustainable Development Goals) ஒத்துப்போகின்றன.

இலக்கு 11 இன்கீழ் எய்த வேண்டிய இத்துறை தொடர்புடைய குறிக்கோள்களாவன:

- 2030 ஆம் ஆண்டிற்குள் அனைவருக்கும் போதுமான, பாதுகாப்பான, வாங்கும் திறனுக்கேற்ற வீடுகளையும், அடிப்படை வசதிகளையும் அளித்தல், குடிசைப்பகுதிகளை மேம்படுத்துதல்.

- 2030 ஆம் ஆண்டிற்குள் அனைத்துப் பகுதிகளிலும் ஒருங்கிணைந்த நிலைத்தத் தன்மை கொண்ட குடியேற்றங்களுக்கான திட்டமிடலையும் மேலாண்மையையும் உள்ளடக்கிய நீடித்தத் தன்மை கொண்ட பங்களிப்புடன்கூடிய நகரமயமாதலை மேம்படுத்துதல்.

- தேசிய மற்றும் மண்டல வளர்ச்சிக்கான திட்டமிடலை வலுப்படுத்துவதன்மூலம், நகரங்கள், புறநகர்ப் பகுதிகள் மற்றும் கிராமப்பகுதிகள் ஆகியவற்றிற்கு இடையே

2023 ஏப்ரல் 13]

ஆக்கப்பூர்வமான பொருளாதார, சமூக மற்றும் சுற்றுச்சூழலுக்கான தொடர்புகளை ஏற்படுத்த ஆதரவு அளித்தல்.

மேற்கூறப்பட்ட கொள்கைகள், திட்டங்கள் மற்றும் திட்டப்பணிகள் யாவும் இத்துறையின் நிர்வாகக் கட்டுப்பாட்டின்கீழ் இயங்கும் தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம் (TNHB), தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியம் (TNUHDB), கூட்டுறவு வீட்டுவசதி சங்கங்கள் (RCS (Housing)), நகர் ஊரமைப்பு இயக்ககம் (DTCP), சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் (CMDA) மற்றும் புதிய நகர வளர்ச்சிக் குழுமங்கள் ஆகிய அமைப்புகள்/ துறைகள்மூலம் செவ்வனே செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

மேலும், வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறையானது சென்னை ஒருங்கிணைந்த பெருநகரப் போக்குவரத்துக் குழுமம் (CUMTA), தமிழ்நாடு கட்டடம் மனை விற்பனை ஒழுங்குமுறைக் குழுமம் (TNRERA) மற்றும் கட்டட, மனை விற்பனை மேல்முறையீட்டு தீர்ப்பாயம் (TNREAT) ஆகியவற்றின் நிர்வாகத் துறையாகும்.

அனைத்துத் தரப்பு மக்களுக்கும் அவர்களது வாங்கும் திறனுக்கேற்றவாறு வீடுகளைக் கட்டி விற்பனை செய்வது தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தின் முக்கியப் பணியாகும். இவ்வாரியம் குடியிருப்பு மனைகள், மேம்படுத்தப்பட்ட மனைகள், தனி வீடுகள், குடியிருப்புகள், வணிக வளாகங்கள் போன்ற திட்டங்களைச் செயல்படுத்த திட்ட வரைவுகளைத் தயாரித்து வருகிறது. மேலும், தமிழ்நாடு வீட்டுவசதி வாரியமானது, பட்டினப்பாக்கத்தில் மெரினா வணிக மையம், நந்தனத்தில் வணிக மையம் போன்ற பெரிய அளவிலான திட்டங்களைச் செயல்படுத்த திட்ட வரைவுகளை தயாரித்து வருகிறது. தமிழ்நாடு அரசு ஊழியர்கள் வாடகை வீட்டுவசதித் திட்டத்தின்கீழ் (TNGRHS) 8 புதிய திட்டங்கள் இந்த ஆண்டுக்குள் முடிக்கப்பட்டுள்ளன. அவை தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தால் அரசு ஊழியர்களுக்கு ஒதுக்கப்படும். பெருகிவரும் மக்கள்தொகையின் தேவைகளைப் பூர்த்தி செய்யவும், நகரங்களின் நெரிசலைக் குறைக்கவும், தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம், திருமழிசை, மதுரை-தோப்பூர்உ-ச்சப்பட்டி மற்றும் புதுக்கோட்டை-முள்ளூர் போன்ற நகர்ப்புறங்களில் துணை நகரத் திட்டங்களையும் செயல்படுத்தி வருகிறது.

வாங்கும் திறனுக்கேற்ற விலையில் கூட்டுறவு சங்க உறுப்பினர்களுக்கு மனைகள்/வீடுகள் கிடைக்கச் செய்யும் நோக்கில் அவற்றை விற்பனை செய்வதும், அவர்கள் வீடு கட்டுவதற்கான நிதி வழங்குவதும், அவ்வுறுப்பினர்களால் ஏற்படுத்தப்பட்ட சங்கங்கள் கூட்டுறவு வீட்டுவசதி சங்கங்களின் பதிவாளர் மூலமாக முறைப்படுத்தப்படுகிறது.

1-4-2021 முதல் 31-3-2023 வரை கூட்டுறவு வீட்டுவசதி சங்கங்கள் உறுப்பினர்களிடமிருந்து திரட்டப்பட்ட வைப்பு நிதிமூலம் 84,332 உறுப்பினர்களுக்கு ரூ.1,547.89 கோடி கடன் வழங்கியுள்ளது. கடனை திரும்ப செலுத்திய 3,248 உறுப்பினர்களுக்குப் பத்திரங்கள் திரும்ப அளிக்கப்பட்டுள்ளது.

நகர் மற்றும் ஊரமைப்பு இயக்ககம் தமிழ்நாடு நகர் மற்றும் ஊரமைப்புச் சட்டம், 1971 இன்கீழ் வகுக்கப்பட்டுள்ள சட்டப் பிரிவுகளைச் செயல்படுத்தி வருகின்றது. இத்துறை நில உபயோகத்தினை முறைப்படுத்தி சீரான வளர்ச்சியினை ஏற்படுத்திட முழுமைத் திட்டங்கள் மற்றும் வளர்ச்சித் திட்டங்களைத் தயாரித்து, அமல்படுத்தி வருகிறது.

முழுமைத் திட்டங்களின்கீழ், தற்போதுள்ள ஒட்டு மொத்த நிலப்பரப்பினை அதிகரிக்க வேண்டும் எனும் அரசின் கொள்கையை நிறைவேற்றும் வகையில் நகர் மற்றும் ஊரமைப்பு இயக்ககம் செயல்பட்டு வருகிறது. நகரத்தின் வளர்ச்சி அதனைச் சுற்றியுள்ள பகுதிகளிலும் தாக்கத்தை ஏற்படுத்துவதால் தற்போதுள்ள 123 முழுமைத் திட்டப் பகுதிகளை விரிவாக்கம் செய்வதன் மூலமாகவும் 12 புதிய முழுமைத் திட்டங்கள் தயாரிப்பதற்காகப் புதிய பகுதிகளை அறிவிப்பு செய்வதன் மூலமாகவும் முழுமைத் திட்டத்தின்கீழ் வரும் நிலப்பரப்பு அதிகரிப்பு செய்யப்படுகிறது.

துறையின் முக்கிய முயற்சிகள்

1. வீட்டு வசதித் துறையின் பழைய சட்டங்கள் மறு ஆய்வு செய்யப்பட்டு வருவதோடு தமிழ்நாடு அடுக்குமாடி குடியிருப்பு உரிமைச் சட்டம், 2022 அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது. தமிழ்நாடு அடுக்குமாடி குடியிருப்பு உரிமை விதிகள் உருவாக்கப்பட்டு வருகிறது.

2. தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத் திட்டங்களில் ஒதுக்கீடு பெற்றவர்களில் வட்டி சுமையினால் விற்பனைப் பத்திரம் பெற்றிடாத ஒதுக்கீடுதாரர்களுக்கு விற்பனைப் பத்திரங்களை உடனடியாகப் பெறுவதற்கு உதவிடும்

வகையில் ரூ.53 கோடியில் வட்டி தள்ளுபடி திட்டத்தை செயல்படுத்துவதற்கான அரசாணை வெளியிடப்பட்டுள்ளது.

3. 50,000 முதல் 99,999 வரை மக்கள்தொகை கொண்ட 57 நகரங்களுக்கு சீரான வளர்ச்சியை உறுதி செய்வதற்காக 7,292.34 சதுர கிலோமீட்டர் பரப்பளவில் முழுமைத் திட்டங்கள் தயாரிப்பதற்கு ஆணை வழங்கப்பட்டுள்ளது.

4. கட்டடங்களுக்கான திட்ட அனுமதியைப் பொதுமக்கள் எளிதாகப் பெறுவதற்கு நகரமைப்பு மாவட்ட அலுவலர்களுக்கு கூடுதல் அதிகாரம் வழங்க நிர்வாக ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

5. மனைப்பிரிவு, கட்டடம் மற்றும் நிலப்பயன் மாற்ற விண்ணப்பங்களுக்கான ஒப்புதல் வழங்குவது உள்ளிட்டவற்றை செயல்படுத்த மாநில அளவிலான ஒற்றைச் சாளர முறை இத்துறையால் ஏற்படுத்தப்பட்டு வருகிறது. நகர் ஊரமைப்புத் துறை, சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழுமம் மற்றும் பல்வேறு உள்ளாட்சி அமைப்புகளான சென்னை பெருநகர் மாநகராட்சி, நகராட்சி நிர்வாக ஆணையரகம், பேரூராட்சிகளின் இயக்ககம், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சி துறை ஆகியவற்றை ஒற்றை சாளர முறையின்கீழ் ஒருங்கிணைப்பதால் மனுதாரர்கள் ஒப்புதல் பெறும் நடைமுறை எளிதாகுகிறது. மனைப் பிரிவுகளுக்கான விண்ணப்பங்களை நிகழ்நிலையில் பெறுவதற்கான மென்பொருள் தொகுப்பு ஜுன் 24, 2022 இல் நடைமுறைக்கு கொண்டு வரப்பட்டு செயல்பாட்டில் உள்ளது. கட்டடம் மற்றும் நிலப்பயன் மாற்ற விண்ணப்பங்களை நிகழ்நிலையில் பெறுவதற்கான மென்பொருள் தொகுப்பு செப்டம்பர் 1, 2022 இல் நடைமுறைக்கு கொண்டு வரப்பட்டு செயல்பாட்டில் உள்ளது.

6. நிலச் சேர்ம பகுதி மேம்பாட்டு திட்டம் என்பது பொது மற்றும் தனியார் நிலங்களை ஒருங்கிணைத்து வளர்ச்சிப் பணிகளுக்காக மேம்படுத்தும் திட்டமாகும். இத்திட்டத்தினை செயல்படுத்த ஏதுவாக தமிழ்நாடு நகர் ஊரமைப்புச் சட்டம், 1971 இல் உரிய திருத்தங்கள் அரசால் மேற்கொள்ளப்படவுள்ளது.

[2023 ஏப்ரல் 13

2023-2024 வரவு செலவுத் திட்ட மதிப்பீடு

ரூபாய் ஆயிரத்தில் (தொகு மொத்தம்)

வ. எண்	துறைகள்		வருவாய்	மூலதனம்	கடன்	மொத்தம்
1.	வீட்டுவசதி (ம) நகர்ப்புற வளர்ச்சித் துறை—தலைமைச் செயலகம்	அனுமதித்தது	167,75,95	—	211,50,00	379,25,95
2.	நகர் ஊரமைப்பு இயக்ககம்	சாட்டியது அனுமதித்தது	1 736,57,66	— —	— —	1 736,57,66
3.	கூட்டுறவு வீட்டுவசதி சங்கங்கள் (பதிவாளர்)	சாட்டியது அனுமதித்தது	1 14,05,31	— —	— 1	1 14,05,32
4.	சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம்	அனுமதித்தது	50,00,02	2,000,00,03	8,015,00,01	10,065,00,06
5.	தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம்	அனுமதித்தது	32,16,14	1	—	32,16,15
6.	தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியம்	அனுமதித்தது	2,727,18,07	4	1	2,727,18,12
7.	சென்னை ஒருங்கிணைந்த பெருநகர போக்குவரத்து குழுமம்	அனுமதித்தது	14,56,05	—	—	14,56,05
	மொத்தம்	**சாட்டியது** **அனுமதித்தது**	**2** **3,742,29,20**	**-** **2,000,00,08**	**-** **8,226,50,03**	**2** **13,968,79,31**

2023 ஏப்ரல் 13]

1. நகர் ஊரமைப்பு இயக்ககம்

பெருநகரங்கள், நகரங்கள் மற்றும் அதைச் சுற்றியுள்ள கிராமங்கள் ஆகியவற்றின் வளர்ச்சிக்குத் திட்டங்கள் தயாரித்தல், மேலும் அவற்றை செயல்படுத்துவதன்மூலம் ஒரு சீரான வளர்ச்சியை ஏற்படுத்துவதே நகர் ஊரமைப்பு இயக்ககத்தின் முக்கியப் பணியாகும். 2011 மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி தமிழ்நாட்டில் 48.40% மக்கள் நகரங்களில் வசித்து வருகின்றனர். இந்தியாவிலேயே நகரமயமாதலில் முதன்மை மாநிலமாக தமிழ்நாடு திகழ்கிறது. தமிழ்நாட்டில் சிறு நகரங்கள் பெரு நகரங்களாகவும், பெரு நகரங்களைச் சுற்றியுள்ள கிராமங்கள் நகரங்களாகவும் உருவெடுக்கின்றன. இத்துரிதமான நகரமயமாதல், பொருளாதார வளர்ச்சியில் முன்னேற்றத்தை ஏற்படுத்தினாலும், நகர்ப்புரங்களின் அடிப்படை வசதி மற்றும் சுற்றுச்சூழலில் இடர்பாடுகளை ஏற்படுத்துகிறது. கிராமப் பகுதிகளிலிருந்து வேலைவாய்ப்பிற்காக நகரப் பகுதிகளை நோக்கி மக்கள் புலம்பெயர்வதற்கு, மாவட்ட தலைநகரங்களிலுள்ள தொழிற்பேட்டைகளும் முக்கிய காரணமாக உள்ளது. நகரங்களில் வளர்ந்து வரும் மக்கள் தொகை பெருக்கம், பொது போக்குவரத்து, அடிப்படை கட்டமைப்பு வசதிகள், சாலை வசதிகள், காற்று மற்றும் தண்ணீர் ஆகியன நகர்ப்புர சுற்றுச் சூழலுக்கு அழுத்தத்தைக் கொடுக்கிறது. இவற்றைக் கருத்தில்கொண்டு நகர்ப்புரங்களில் மற்றும் வளர்ச்சியடைய வாய்ப்புள்ள இதர பகுதிகளில் நன்கு திட்டமிட்ட வளர்ச்சியை உறுதி செய்வதற்கு உரிய திட்டங்கள் தயாரித்து செயல்படுத்த அரசு உத்தேசித்துள்ளது. இத்திட்டங்களின் வாயிலாக முறையான நில உபயோக திட்டமிடுதல்மூலம் ஒரு அவசியமான பகுதியை மேம்படுத்த வழிகாட்டுவதாகவும், நிலையான பொருளாதார வளர்ச்சியை நிலைநாட்டுவதாகவும் அமைவதுடன் சுற்றுச்சூழல் உணர்திறன் பகுதிகளைப் பாதுகாப்பதையும் உறுதி செய்கிறது. இத்துறை நகர் மற்றும் கிராமப் பகுதிகளுக்கான திட்டமிடல் பணிகளில் உள்ளாட்சிகளுக்கு வழிகாட்டியும் மற்றும் சேவைகளை உள்ளாட்சிகளுக்கு வழங்கியும் வருகிறது. இத்துறையின் நிர்வாக அமைப்பு இணைப்பு-I மற்றும் இணைப்பு II-இல் கொடுக்கப்பட்டுள்ளது.

1.1 தொலைநோக்கு

நகர் ஊரமைப்புத் துறை, தமிழ்நாட்டிற்கு திறன்வாய்ந்த, ஒருங்கிணைந்த, விரிவான, வளர்ச்சி சார்ந்த மற்றும் நீடித்த சூழலை

வழங்குவதற்கு, நில மேலாண்மையைத் திறம்பட மேற்கொள்ள மண்டலத் திட்டங்கள் தயாரித்தல், நகரப்பகுதி மற்றும் ஊரகப் பகுதிகளில் நீடித்த வளர்ச்சியை ஏற்படுத்த முழுமைத் திட்டங்கள் தயாரித்தல், நகர்ப்புர வளர்ச்சியைச் சார்ந்து விரிவான வளர்ச்சித் திட்டங்கள் தயாரித்தல் மற்றும் சிறப்பு இனங்களான சுற்றுலா, கல்வி மற்றும் தொழிற்கூடப் பகுதிகளுக்கான புதுநகர் வளர்ச்சித் திட்டங்கள் தயாரித்தல் மற்றும் இடம் சார்ந்த திட்டமிடலுக்கு பொறுப்பாக உள்ளது.

1.2 சட்டப்பூர்வமான இடம் சார்ந்த திட்டங்கள்

நகரத் திட்டமிடல் என்பது வளர்ச்சி அல்லது பாதுகாப்பை நோக்கமாகக் கொண்டு அனைத்து வகையான நிலங்களையும் மேலாண்மை செய்வது மற்றும் மக்கள் ஆரோக்கியமான சூழ்நிலையில் வாழ்வதற்கும், வேலை செய்வதற்கும் மற்றும் விளையாடுவதற்கு அல்லது ஓய்வெடுப்பதற்கு வழிவகை செய்து பெரும்பான்மையான மனிதகுலத்திற்குச் சமூக மற்றும் பொருளாதார நல்வாழ்வை கொண்டு வருவதாகும். பல்வேறு நிலையிலான திட்டங்கள் தயாரிப்பதன்மூலம் திட்டமிடல் மற்றும் வளர்ச்சிக்கு இது உதவுகிறது.

தமிழ்நாடு நகர் ஊரமைப்புச் சட்டம், 1971 மாநிலத்தின் சமச்சீர் வளர்ச்சியை ஏற்படுத்த வேண்டி கீழ்க்காண் சட்டப்பூர்வமான திட்டங்கள் தயாரிக்க வழிவகை செய்கிறது.

1. மண்டலத் திட்டம் (Regional Plan)
2. முழுமைத் திட்டம் (Master Plan)
3. விரிவான வளர்ச்சித் திட்டம் (Detailed Development Plan)
4. புது நகர் வளர்ச்சித் திட்டம் (New Town Development Plan)

1.2.1 மண்டலத் திட்டம் (Regional Plan)

மண்டலத் திட்டம் என்பது கிராமம் முதல் நகரம் வரை பல்வேறு நிலைகளில் துறைசார், இடம் சார்ந்த மற்றும் பொருளாதார இலக்குகளை ஒருங்கிணைத்து உறுதியான செயல்பாட்டின்மூலம் அறிவியல் முறையில் மற்றும் திட்டமிடப்பட்ட வளர்ச்சியை அடைவதற்கான ஒரு

2023 ஏப்ரல் 13]

செயல்முறையாகும். இடம் சார்ந்த மற்றும் துறைசார் வளர்ச்சி, நில உபயோக முறை மற்றும் அதன் பயன்பாட்டின் அடிப்படையில் வகைப்படுத்துவதன்மூலம் ஒழுங்குபடுத்தப்படுகிறது.

இயற்கையான அல்லது மனிதனால் உருவாக்கப்பட்ட அம்சங்கள்/அளவுருக்கள், அதாவது மக்கள்தொகை, பொருளாதாரச் சார்பு, போக்குவரத்து இணைப்புகள், நிர்வாகம், சமூக இணைப்புகள், சுற்றுச்சூழல் அம்சங்கள் (காடுகள், வனவிலங்குகள் அல்லது காலநிலை), இயற்கையமைவு, முதலீடுகள், வளம் போன்ற கூறுகளைக் கருத்தில்கொண்டு மண்டலத்தின் எல்லைகள் வரையறுக்கப்படுகின்றன.

மண்டலத் திட்டங்களைத் தயாரிப்பதற்காக மாநிலத்தின் மொத்தப் பரப்பும் கீழே கொடுக்கப்பட்டுள்ளவாறு 12 மண்டலங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது.

வ. எண்	**மண்டல திட்டப்பகுதியின் பெயர்**	**பரப்பளவு ச.கி.மீ.**
1.	*சென்னைப் பெருநகர மண்டலம்*	*1,189*
2.	*செங்கல்பட்டு, காஞ்சிபுரம், திருவள்ளூர் மண்டலம்*	*6,863*
3.	*வேலூர், ராணிப்பேட்டை, திருப்பத்தூர், திருவண்ணாமலை மண்டலம்*	*12,263*
4.	*சேலம், நாமக்கல், கிருஷ்ணகிரி, தருமபுரி மண்டலம்*	*18,283*
5.	*விழுப்புரம், கடலூர், கள்ளக்குறிச்சி மண்டலம்*	*10,897*
6.	*கோயம்புத்தூர், ஈரோடு, திருப்பூர் மண்டலம்*	*15,679*
7.	*நீலகிரி மண்டலம்*	*2,565*
8.	*திருச்சிராப்பள்ளி, அரியலூர், கரூர், பெரம்பலூர், புதுக்கோட்டை மண்டலம்*	*15,753*
9.	*தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம், மயிலாடுதுறை மண்டலம்*	*8,254*

வ. எண்	மண்டல திட்டப்பகுதியின் பெயர்	பரப்பளவு ச.கி.மீ.
10.	மதுரை, தேனி, திண்டுக்கல் மண்டலம்	12,614
11.	சிவகங்கை, இராமநாதபுரம், விருதுநகர் மண்டலம்	12,578
12.	திருநெல்வேலி, தூத்துக்குடி, தென்காசி, கன்னியாகுமரி மண்டலம்	13,122
	மொத்தம்	1,30,060

கோயம்புத்தூர் மற்றும் நீலகிரி மண்டலங்களுக்கான மண்டலத் திட்டத்தைத் தயாரிக்க போபாலில் உள்ள திட்டமிடல் மற்றும் கட்டடக் கலைப் பள்ளி ஆலோசகராக நியமிக்கப்பட்டு நகர் ஊரமைப்பு வளர்ச்சி நிதியின்கீழ் ரூ.2.75 கோடி மதிப்பீட்டில் திட்டம் தயாரிக்கப்பட்டு வருகிறது. பணிகள் தொடங்கப்பட்டு, மண்டலங்களின் தற்போதைய நிலைமையை மதிப்பிடுவதற்காக ஆலோசகர்கள் பல்வேறு கள ஆய்வுகளை மேற்கொண்டு வருகின்றனர்.

"தமிழ்நாட்டின் நகர்ப்புர ஏழைகளுக்கு உள்ளடக்கிய, மீள் தன்மை கொண்ட மற்றும் நீடித்த வீடுகள் திட்டம்" இன்கீழ் மண்டலத் திட்டம் தயாரிக்க ஆசிய வளர்ச்சி வங்கி ரூ.10.50 கோடி நிதியுதவி வழங்கியுள்ளது. இந்நிதியின்கீழ் மதுரை, தேனி மற்றும் திண்டுக்கல் மாவட்டங்களை உள்ளடக்கிய மதுரை மண்டலத் திட்டம் தயாரிக்கும் பணி தொடங்கப்பட்டுள்ளது.

சென்னைப் பெருநகர மண்டலம் நீங்கலாக மீதமுள்ள எட்டு மண்டலங்களுக்குத் திட்டங்கள் தயாரிப்பதற்காக ரூ.41.63 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மண்டலத் திட்டத் தயாரிப்பிற்காகப் புகழ்பெற்ற திட்டமிடல் நிறுவனங்களிடமிருந்து பெறப்பட்டுள்ள விருப்ப முன்மொழிவுகள் பரிசீலிக்கப்பட்டு வருகின்றன.

1.2.2 முழுமைத் திட்டம் (Master Plan)

1.2.2.1 திட்டப்பகுதி விரிவாக்கம்

ஒரு முழுமைத் திட்டம் என்பது எதிர்கால வளர்ச்சிக்கு வழிகாட்டும் மாற்றங்களை உள்ளடக்கிய நீண்ட கால

2023 ஏப்ரல் 13]

திட்டமிடலுக்கான சட்டப்பூர்வ ஆவணமாக அமைகிறது. கட்டடங்கள், சமூக அமைப்பு மற்றும் அவற்றின் சுற்றுச்சூழல் ஆகியவற்றிற்கிடையே தொடர்பை ஏற்படுத்துவதுதான் முழுமைத் திட்டமிடல் என்பதாகும். ஒரு பகுதியின் மக்கள் தொகை, பொருளாதாரம், வீட்டு வசதி, போக்குவரத்து வசதி, சமூக வசதிகள் மற்றும் நிலப்பயன்பாடு ஆகியவற்றை ஆய்வு செய்தல், பரிந்துரைகள் செய்தல் மற்றும் உத்தேசங்கள் தயாரித்தல் போன்றவற்றை உள்ளடக்கியதுதான் முழுமைத் திட்டமாகும். இது பொது மக்களின் கருத்துகள், அளவீடு செய்தல், திட்டமிடல் முன்னெடுப்புகள், தற்போதுள்ள வளர்ச்சி, வளர்ச்சியின் தன்மைகள், சமூக மற்றும் பொருளாதார நிலவரங்கள் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டதாகும். ஒரு நகர்ப்புர சுற்றுச்சூழலை எவ்வாறு உருவாக்கம் செய்ய வேண்டும் என்பதில் முழுமைத் திட்டங்கள் முக்கிய பங்கு வகிக்கின்றன.

முழுமைத் திட்டங்களின்கீழ், தற்போது உள்ள 7 விழுக்காடு நிலப்பரப்பிலிருந்து 22 விழுக்காடாக அதிகரிக்க வேண்டும் எனும் அரசின் கொள்கையை நிறைவேற்றும் வகையில் நகர் ஊரமைப்பு இயக்ககம் செயல்பட்டு வருகிறது. நகரப் பகுதியின் வளர்ச்சி அதன் எல்லையை அடுத்து அமையும் பகுதிகளிலும் தாக்கத்தை ஏற்படுத்துவதால் தற்போது உள்ள 123 முழுமைத் திட்டப் பகுதிகளை விரிவாக்கம் செய்வதன் வாயிலாகவும், முழுமைத் திட்டம் தயாரிப்பதற்காகப் புதியப் பகுதிகளை அறிவிப்பு செய்வதன் வாயிலாகவும் முழுமைத் திட்டத்தின்கீழ் வரும் நிலப்பரப்பு அதிகரிப்பு செய்யப்படுகிறது. ஆகவே, தற்போதுள்ள 123 முழுமைத் திட்டங்களின்கீழ் வரும் 8,422.32 சதுர கி.மீ. நிலப்பரப்பினை விரிவாக்கம் செய்தும், மேலும் புதியதாக 12 முழுமைத் திட்டங்களுக்கான நிலப்பரப்பினை அறிவிப்பு செய்வதன் வாயிலாகவும் 135 முழுமைத் திட்டங்களின் கீழ் மொத்தம் 23,129.98 சதுர கி.மீ. நிலப்பரப்பு அமையப் பெறும்.

1.2.2.2 திட்டப் பகுதி அறிவிப்பு (Planning Area Notification)

திட்டப் பகுதிகளை விரிவாக்கம் செய்வதற்குத் தமிழ்நாடு நகர் ஊரமைப்புச் சட்டம் 1971 இன் பிரிவுகள் 10(1) மற்றும் 10(4) ஆகியவற்றின்கீழ் முறையே திட்டப் பகுதிகளைப் பிரகடனம் செய்தல் மற்றும் உறுதி செய்வதற்கான அறிவிப்புகளைத் திட்டம் தயாரிப்பதற்கு முன்பே வெளியிடுதல் அவசியமாகின்றன. இவ்வாறாக பல திட்டப் பகுதிகளை விரிவாக்கம் செய்வது அறிவிப்பு

வெளியிடும் நடைமுறையின் பல்வேறு கட்டங்களில் உள்ளது. முதல் கட்டத்தில் எடுத்துக்கொள்ளப்பட்டுள்ள 6 முழுமைத் திட்டங்களில் திட்டப் பகுதி உறுதி செய்யப்பட்டுள்ளன. மேலும், ஒன்றிய அரசின் நிதி உதவியுடன் செயல்படுத்தப்படும் அம்ரூத் 1.0 [AMRUT 1.0] திட்டத்தின்கீழ் தயாரிக்கப்படும் 17 முழுமைத் திட்டங்களுக்கான திட்டப் பகுதிகள் உறுதி செய்யப்பட்டுள்ளன. இவற்றிற்கான 23 முழுமைத் திட்டங்கள் வரைவு நிலையில் உள்ளன. வரைவுத் திட்டங்களை இறுதி செய்யும் பணி நடைபெற்று வருகிறது.

மேலும், இதர 112 முழுமைத் திட்டங்களின் திட்டப் பகுதிகள் உறுதி செய்யும் நிலை கீழ்க்கண்டவாறு குறிப்பிடப்படுகிறது.

வ. எண்	முழுமைத் திட்டங்களின் திட்டப் பகுதி அறிவிப்பு நிலை	முழுமைத் திட்டங்களின் எண்ணிக்கை
1.	சட்டப்பிரிவு 10(1) இன்கீழ் பகுதி அறிவிப்பு உத்தேசம் தயாரிக்கப்பட்டு வருவது	14
2.	சட்டப்பிரிவு 10(4) இன்கீழ் திட்டப் பகுதி உறுதி செய்வதற்கான உத்தேசம் தயாரிக்கப்பட்டு வருவது	37
3.	சட்டப்பிரிவு 10(4) இன்கீழ் திட்டப் பகுதி உறுதி செய்யப்பட்டது	61
	மொத்தம்	**112**

மொத்தம் 135 முழுமைத் திட்டங்களின் பகுதிகள், பரப்பளவு விவரங்கள் இணைப்பு—III இல் கொடுக்கப்பட்டுள்ளன.

1.2.3 விரிவான வளர்ச்சித் திட்டம் (Detailed Development Plan)

முழுமைத் திட்டங்களின் நில உபயோகத்திற்கு தொடர்புடைய வகையில் நகரப் பகுதிகளுக்கான நுண் அளவிலான நடவடிக்கைத் திட்டமே விரிவான வளர்ச்சித் திட்டமாகும். இத்திட்டம் நகர்ப்புற பகுதிகளில் மேற்கொள்ளப்படுகின்றன. பூங்கா, விளையாட்டு மைதானம், சிறு சாலை இணைப்புகள், முறையான

2023 ஏப்ரல் 13]

போக்குவரத்துக்கான சாலைகள், வணிகம், தொழிற்சாலைகள் மற்றும் பொது பயன்பாட்டு ஒதுக்கீடுகள் மற்ற பிற குறிப்பான பயன்பாட்டிற்கான விரிவான பகுதி வரையறை செய்தல் போன்றவற்றை கொண்டதாகவும் முழுமைத்திட்ட வரம்பிற்குள் அமையும் வகையில் சமச்சீரான வளர்ச்சிக்கு உதவுவதாகவும் இத்திட்டம் தயாரிக்கப்படுகிறது. இத்துறையால் 1,703 விரிவான வளர்ச்சித் திட்டங்கள் அறிவிப்பு செய்யப்பட்டு அவை வெவ்வேறு நிலைகளில் உள்ளன.

1.3 மாநில அளவிலான ஒற்றைச் சாளர முறை (Single Window Portal)

மனைப் பிரிவு, கட்டடம் மற்றும் நிலப்பயன் மாற்ற விண்ணப்பங்களுக்கான ஒப்புதல் வழங்குவது உள்ளிட்டவற்றை செயல்படுத்த மாநில அளவிலான ஒற்றைச் சாளர முறை இத்துறையால் ஏற்படுத்தப்பட்டு வருகிறது. வெளிப்படைத் தன்மையுடனான பணி செய்வது, பயன் பெறுபவர்கள் தங்களின் விண்ணப்பங்களை எளிதாக இணையம்மூலம் செயல்படும் ஒற்றைச் சாளர முறை பொது மக்கள் பயன் பெறும் வகையில் அமைந்துள்ளது மட்டுமல்லாமல் ஆவணங்களை மின்னணு முறையில் வைத்திருப்பதால் அதிகார அமைப்புகளின் எதிர்கால பயன்பாட்டிற்கும் உகந்ததாக அமையும்.

1.3.1 இத்திட்டத்தின் முக்கிய அம்சங்கள்

நகர் ஊரமைப்புத் துறை, சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் மற்றும் பல்வேறு உள்ளாட்சி அமைப்புகளான பெருநகர சென்னை மாநகராட்சி, நகராட்சி நிர்வாக ஆணையரகம், பேரூராட்சிகளின் இயக்ககம், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை ஆகியவற்றை ஒற்றை சாளர முறையின்கீழ் ஒருங்கிணைப்பதன்மூலம் மனுதாரர்கள் ஒப்புதல் பெறும் நடைமுறை எளிமையாகிறது.

- *விண்ணப்பதாரர் அனைத்துத் துறைகளுக்கும் ஒரே விண்ணப்பம் செய்தால் போதும்.*

- *விண்ணப்பங்கள் சம்பந்தப்பட்ட துறைகளுக்கு அலுவலர்களின் தொடர் ஆய்வுக்கும், ஒப்புதல் நடைமுறைக்கும் தாமாகவே அனுப்பி வைக்கப்படும்.*

➢ வரைபடங்கள் முறையாக கூராய்வு செய்யப்படும்.

➢ தடையின்மை சான்று வழங்கும் அனைத்துத் துறைகளிடமிருந்தும் சான்றுகளை நிகழ்நிலையில் (Online) பெற்றுக்கொள்ள முடியும்.

இந்த ஒற்றைச் சாளர முறையில் 19 மென்பொருள் தொகுப்புகள் உள்ளன. அவையாவன:

1. தொழில்முறை வல்லுநர்களைப் பதிவு செய்தல் மற்றும் பயன்பெறுவோர் மேலாண்மை
2. நிலப்பயன் மாற்ற ஒப்புதல் நடைமுறை
3. மனைப்பிரிவு (Layout) மென்பொருள் தொகுப்பு
4. கூராய்வு மென்பொருளுடன்கூடிய கட்டட திட்ட வரைபட ஒப்புதல்
5. கூராய்வு மென்பொருள் உருவாக்குதல்
6. கட்டுமான துவக்கம்
7. கட்டட பீட மட்டத்தில் ஆய்வு செய்யும் நடைமுறை
8. கடைசி மாடி ஆய்வு செய்யும் நடைமுறை
9. கட்டட முடிவு சான்று நடைமுறை
10. கட்டட பீட நிலையில், கடைசி மாடி நிலையில், கட்டட முடிவு நிலையில் மற்றும் பல்வேறு நிலைகளில் மாற்றங்கள் குறித்து அமலாக்க நடவடிக்கை
11. திடீரென ஆய்வு மேற்கொள்வதற்கான அமலாக்கப் பிரிவின் நடவடிக்கைகள்
12. மென்பொருள் உள்ளடக்கம் மேலாண்மை அமைப்பு
13. முகப்புத்திரை (Dash board) மற்றும் மேலாண்மை தகவல் தொகுப்பு அறிக்கைகள்
14. கைபேசி செயலி
15. மனுதாரர்கள் மற்றும் மாவட்ட ஆட்சியரகத்திலிருந்து பெறப்படும் குறை தீர்வு மனுக்கள்

2023 ஏப்ரல் 13]

16. *சட்டப் பிரிவு–நீதிமன்ற வழக்குகள் மேலாண்மை முறை*
17. *வங்கியுடன் தானியங்கி பரிமாற்றம்*
18. *பிற துறைகளுடன் ஒருங்கிணைத்தல்*
19. *தேவையான துறைகளிடமிருந்து தடையின்மைச் சான்று பெறுவதற்காக ஒருங்கிணைத்தல்*

மனைப் பிரிவுகளுக்கான விண்ணப்பங்களை நிகழ்நிலையில் பெறுவதற்கான மென்பொருள் தொகுப்பு ஜுன், 24 2022 இல் நடைமுறைக்குக் கொண்டு வரப்பட்டு செயல்பாட்டில் உள்ளது. கட்டடம் மற்றும் நிலப்பயன் மாற்ற விண்ணப்பங்களை நிகழ்நிலையில் பெறுவதற்கான மென்பொருள் தொகுப்பு செப்டம்பர் 1, 2022 இல் நடைமுறைக்குக் கொண்டு வரப்பட்டு செயல்பாட்டில் உள்ளது. அனைத்து மனைப் பிரிவு, கட்டடம் மற்றும் நிலப்பயன் மாற்ற விண்ணப்பங்கள் பெறுவதும் அனுமதி வழங்குவதும் நிகழ்நிலையில் (Online) தற்போது நடைபெறுகிறது. மேலும், பொது மக்கள் விண்ணப்பம் பதிவேற்றுவதில் சிரமம் ஏதும் ஏற்படும்பட்சத்தில் அவர்களுக்கு உதவுவதற்காக தனியே ஒரு உதவி மையம் நகர் ஊரமைப்புத் துறையின் தலைமை அலுவலகத்தில் அமைக்கப்பட்டு, நிகழ்நிலையில் (Online) விண்ணப்பம் பதிவேற்றம் செய்வதற்கு உதவி வழங்கப்பட்டு வருகிறது.

தடையின்மைச் சான்று வழங்கும் துறைகளுடன் ஒருங்கிணைத்தல் பணி முன்னேற்றம் கீழ்க்கண்டவாறு:

(அ) ஒருங்கிணைத்தல் நிறைவடைந்தது: *வனத் துறை, தமிழ்நாடு மின்னணு நிறுவனம் (எல்காட்), பொதுப் பணித் துறை, தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம், சென்னை மெட்ரோ ரயில், போக்குவரத்து காவல் துறை, மாவட்ட ஆட்சியர் அலுவலகம், கனிமங்கள் மற்றும் சுரங்கத் துறை, தமிழ்நாடு சிறு தொழில் வளர்ச்சிக் கழகம் (சிட்கோ), தெற்கு ரயில்வே, தேசிய நெடுஞ்சாலை துறை, மாநில நெடுஞ்சாலை துறை, நீர் வளத் துறை.*

(ஆ) ஒருங்கிணைத்தல் நடைப்பெற்று வருவது: *தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறை, இந்திய விமான நிலைய ஆணையம், இந்திய தொல்பொருள் துறை, இந்திய வான் படை, வருவாய் நிருவாகம் மற்றும் பேரிடர் மேலாண்மை ஆணையரகம், இந்திய நினைவுச்*

சின்னங்கள் (என்எம்ஏ), வேளாண்மைத் துறை, வேளாண்மை பொறியியல் துறை, சுற்றுச்சூழல் துறை, மாசு கட்டுப்பாடு வாரியம், தமிழ்நாடு தொழில் வெடி மருந்து நிறுவனம்.

1.4 நகர்ப்புற வளர்ச்சிக் குழுமங்கள்

நகரமயமாக்கல் மற்றும் சிறந்த வாழ்க்கைக்கான வாய்ப்புகளைத் தேடி கிராமப் பகுதிகளிலிருந்து நகரப் பகுதிகளுக்கு மக்கள் இடம்பெயர்தல் ஆகியவை வீட்டுவசதி, உள்கட்டமைப்பு மற்றும் சுகாதாரம் ஆகியவற்றில் கடுமையான சிக்கல்களை ஏற்படுத்தியுள்ளன. இந்த திட்டமிடப்படாத நகரமயமாக்கல் ஏழை மக்களை மிகவும் சுகாதாரமற்ற நகர்ப்புர குடிசைப் பகுதிகளில் வாழும் சூழலை ஏற்படுத்துகிறது.

வளர்ந்து வரும் வீட்டுவசதிப் பிரச்சினைகள் மற்றும் குறைந்த உட்கட்டமைப்பு ஆகியவற்றைச் சமாளிப்பதற்காகவும், கட்டமைக்கப்பட்ட முறையில் வளர்ச்சி நடவடிக்கைகளைத் திட்டமிடவும், செயல்படுத்தவும் மற்றும் ஒருங்கிணைக்கவும், நகர்ப்புற வளர்ச்சிக் குழுமங்கள் உருவாக்குவது அவசியமாகிறது.

நகர்ப்புற வளர்ச்சிக் குழுமங்களின் செயல்பாட்டிற்காக தமிழ்நாடு நகர் ஊரமைப்பு சட்டம் (இரண்டாம் திருத்தம்), 2022 அரசிதழில் 22 ஜூன் 2022-இல் அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது. கோவை, திருப்பூர், ஒசூர் மற்றும் மதுரை நகரத் திட்டப்பகுதிகள் அறிவிக்கப்பட்டு, உறுப்பினர் செயலர்களும் நியமிக்கப்பட்டுள்ளனர். மாவட்ட அலுவலர்கள், நகர்ப்புற வளர்ச்சிக் குழுமங்களின் உறுப்பினர் செயலர்களுடன் ஆலோசனை நடத்தி, நகர்ப்புற வளர்ச்சிக் குழுமங்களை அமைக்கும் பணியைத் துவக்கியுள்ளனர். சேலம் மற்றும் திருச்சிராப்பள்ளி நகரத் திட்டப் பகுதி வரையறுக்கப்பட்டு அறிவிக்கப்பட்டுள்ளன. நகர்ப்புற வளர்ச்சிக் குழுமங்கள் அமைக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

1.5 நில உபயோக மாற்றம்

முழுமைத் திட்டத்தில் நிலத்தின் ஒவ்வொரு பகுதியும் அதன் பயன்பாட்டைப் பொறுத்து குடியிருப்பு, வணிகம், தொழிற்சாலை, நிறுவனம், விவசாயம் மற்றும் பிற நோக்கங்களுக்காக வகைப்படுத்தப்படுகிறது. நிலத்தின் தற்போதுள்ள நிலப் பயன்பாட்டிலிருந்து புதிய நிலப் பயன்பாட்டிற்கு மாற்றப்படும்

2023 ஏப்ரல் 13]

செயல்முறை நிலப்பயன் மாற்றம் என அழைக்கப்படுகிறது. தமிழ்நாடு நகர் ஊரமைப்புச் சட்டம், 1971, பிரிவு 32(4) இன்கீழ் நிலப்பயன் மாற்றம் வழங்கப்படுகிறது. நிலப்பயன் மாற்ற கோரிக்கையானது நிலத்தின் தகுதி, அணுகுசாலை வசதி, சுற்றுப்புற வளர்ச்சிகளின் இணக்கத்தன்மை, சுற்றுச்சூழலின் தாக்கம் போன்றவற்றைக் கருத்தில் கொண்டு பரிசீலிக்கப்படுகின்றன.

தினசரி நாளிதழ்களில் அறிவிப்பு வெளியிடுதல், உரிமையாளர் ஆவணங்களை பரிசீலித்தல், இடநேராய்வு மேற்கொள்ளுதல், குழுமத்தின் தீர்மானம் பெறுதல், இயக்குநரின் பரிந்துரை மற்றும் நில உபயோக மாற்றத்தை தமிழ்நாடு அரசிதழில் அறிவிக்கை வெளியிடுதல் ஆகிய செயல்முறைகளைப் பின்பற்றி நிலப்பயன் மாற்றம் மேற்கொள்ளப்படுகிறது.

1.6 நகர் ஊரமைப்புச் சட்டம், 1971-ஐ மறு ஆய்வு செய்தல்

*“மெட்ராஸ் நகரமைப்புச் சட்டம், 1920” என நகரமைப்புக்கென தனியே ஒரு சட்டத்தை முதலில் இயற்றிய நாட்டின் சில மாநிலங்களில் தமிழ்நாடும் ஒன்றாகும். மாநிலத்தின் நகர மற்றும் கிராமப் பகுதிகளில் ஏற்படும் வளர்ச்சியை ஒழுங்குபடுத்துவதற்கு முந்தைய மெட்ராஸ் நகரமைப்புச் சட்டம், 1920—ஐ மீள் உருவாக்கம் (*Repealing*) செய்து தமிழ்நாடு நகர் ஊரமைப்புச் சட்டம், 1971 என புதிதாக இயற்றப்பட்டது. பல்வேறு இடம் சார்ந்த திட்டங்களைத் தயாரிப்பதற்கும், அவற்றைத் தயாரிப்பதற்கான அதிகார அமைப்புகளை உருவாக்குவதற்கும் தமிழ்நாடு நகர் ஊரமைப்புச் சட்டம், 1971 வழிவகுக்கிறது. மண்டலம், நகரம் மற்றும் பிரிவு ஆகிய அளவுகளில் மண்டல திட்டம், முழுமைத் திட்டம் மற்றும் விரிவான வளர்ச்சித் திட்டம் என வெவ்வேறு திட்டங்கள் தயாரிப்பதற்கு இச்சட்டம் வழி வகுத்துள்ளது. தமிழ்நாட்டில் நகரமயமாதல் 1971 ஆம் ஆண்டிலிருந்து அபரிமிதமாக உயர்ந்துள்ளது.*

மாநிலத்தின் துரிதமான நகரமயமாதல் தொழிற்சாலைகள், போக்குவரத்து உட்கட்டமைப்பு மற்றும் அதிகமான கல்வி, ஆரோக்கியம், பொழுதுபோக்கு மற்றும் சமூக உட்கட்டமைப்பு வசதிகள் ஆகியன ஏற்படுத்தப்பட்டது உள்ளிட்ட பல காரணங்களால் நிகழ்ந்துள்ளது. தேவைகள் மற்றும் சவால்கள் எப்பொழுதெல்லாம் எழுகிறதோ அவ்வப்போதெல்லாம் இச்சட்டத்தில் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. திட்டமிடுதலில் முக்கிய திருப்பமாக பருவநிலை மாற்றத்தைத் தாங்கி நிற்கும் திறன் மற்றும் நீடித்த சுற்றுச்சூழல் நிலைத்தன்மை ஆகியவற்றின் அடிப்படையில் வாழ்விடங்களை அமைப்பது தற்காலத் தேவைகளாக இருப்பதன்

பின்னணியில் இச்சட்டத்தை முழுவதும் ஆய்வு செய்து தக்கவாறு திருத்தி அமைப்பதற்கான தருணம் வந்துவிட்டதால் சட்டத்தை உரியவாறு திருத்த வேண்டும் என முடிவு செய்யப்பட்டுள்ளது. இதன்படி, அகமதாபாத்தில் உள்ள சுற்றுச்சூழல் மற்றும் தொழில்நுட்ப மைய பல்கலைக் கழகம் (Centre for Environmental Planning and Technology – CEPT University)—ஐ திருத்தங்கள் மேற்கொள்வதற்காக ஆலோசகராக நியமனம் செய்யப்பட்டுள்ளது.

வரைவு சட்டத் திருத்தம் ஆலோசகரிடமிருந்து பெறப்பட்டு இது தொடர்புடைய பல துறைகளைக் கலந்தாலோசித்து வரைவுச் சட்டத்திற்கு இறுதி வடிவம் கொடுக்கும் பணி நடைபெற்று வருகிறது.

1.7 மலையிடப் பாதுகாப்புக் குழுமம் (HACA)

மலையிடங்களைப் பாதுகாத்து ஒழுங்குபடுத்துவதன்மூலம் ஏற்கத்தக்க சூழலையுடைய மற்றும் விரும்பத்தக்க பகுதிகளாக ஆக்குவதற்கு அரசால் "மலையிடப் பாதுகாப்புக் குழுமம்" (HACA) 1990 இல் அமைக்கப்பட்டு, அவற்றின் செயல்பாடுகள் நிர்ணயிக்கப்பட்டு, 43 மலையிட வட்டங்கள் (Hill Taluks) அறிவிக்கப்பட்டது. மேலும் இக்குழுமத்தின் முன் அனுமதி தேவைப்படும் திட்டங்கள் அரசாணை (நிலை) எண் 44, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை, நாள் 2-4-1990 இல் பட்டியலிடப்பட்டுள்ளது. அதனை தொடர்ந்து, 16 மாவட்டங்களில் அமையும் 597 கிராமங்களை உள்ளடக்கிய மலையிட கிராமங்களின் புதிய பட்டியல் அரசாணை (நிலை) எண் 49, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை, நாள் 24-3-2003 இல் அறிவிக்கப்பட்டுள்ளது.

அறிவிக்கப்பட்ட மலை கிராமங்களை மாவட்ட அளவிலான குழு மறுஆய்வு செய்வதற்கான வழிகாட்டு நெறிமுறைகள் அரசாணை (1D) எண் 8, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை, நாள் 22-2-2022 இன்படி அறிவிக்கப்பட்டு, மேல் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

1.8 வழிகாட்டி நிறுவனம் (GUIDANCE) மற்றும் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில்முனைவோர் திட்டங்களுக்கு அனுமதி வழங்குதல்.

தமிழ்நாட்டில் உள்ள தொழில் துறை உற்பத்தி சூழல் அமைப்பு மிகவும் வளர்ச்சியடைந்து, தானியங்கி வாகனங்கள் (Automobiles) மற்றும் வாகன உதிரிபாகங்கள், ஜவுளிகள்,

2023 ஏப்ரல் 13]

தோல் பொருட்கள், இலகுரக மற்றும் கனரக பொறியியல், பம்புகள் மற்றும் மோட்டார்கள், மின்னணு மென்பொருள் மற்றும் வன்பொருள் ஆகியவற்றிற்கான உலகின் மிகப்பெரிய உற்பத்தி மையமாக வளர்ந்துள்ளது தானியங்கி வாகனம் மற்றும் அதன் உதிரிபாகங்கள், தோல் பொருட்கள், மென்பொருள் மற்றும் ஆயத்த ஆடைகள் ஏற்றுமதி ஆகியவற்றில் தமிழ்நாடு தேசிய அளவில் முன்னணியில் உள்ளது. உலகளவில் அங்கீகரிக்கப்பட்ட பல நிறுவனங்கள் தமிழ்நாட்டில் உற்பத்தி வசதிகளை நிறுவியுள்ளன.

தமிழ்நாடு வணிக வசதிச் சட்டம், 2018—ஐ பின்பற்றி வழிகாட்டி நிறுவனம் (GUIDANCE) மற்றும் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களிடமிருந்து பெறப்படும் மனைப் பிரிவு, நிலப்பயன்மாற்றம், கட்டட விண்ணப்பங்களுக்கு ஒற்றைச் சாளர முறையில் விரைவாக அனுமதி வழங்குவதன்மூலம் வணிகம் செய்வதற்கான வழிகள் எளிமையாக்கப்பட்டு அதன்மூலம் செலவினமும் குறைகிறது. இதன்படி 7-5-2021 முதல் 31-3-2023 வரை பல்வேறு விதமான தொழிற்சாலைகள் சம்பந்தமாக பெறப்பட்ட 390 மொத்த விண்ணப்பங்களில், 354 விண்ணப்பங்களுக்கு தீர்வு காணப்பட்டுள்ளது.

1.9 சிறப்புத் திட்டங்கள்

1.9.1 அனுமதியற்ற மனைகள் மற்றும் மனைப் பிரிவுகள் வரன்முறைப்படுத்துதல்

அனுமதியற்ற மனைகள் மற்றும் மனைப்பிரிவுகளை வரன்முறைப்படுத்த ஒரு சிறப்புத் திட்டம் 4-5-2017 முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டம் 20-10-2016-க்கு முன்னர் அமைக்கப்பட்ட அனுமதியற்ற மனைகள் மற்றும் மனைப்பிரிவுகளை வரன்முறைப்படுத்த வழிவகுக்கிறது. இதனால் அடிப்படை கட்டமைப்பு வசதிகள், குடிநீர் வசதிகள் போன்றவை உள்ளாட்சிகள் வழங்க ஏதுவாகிறது. இத்திட்டத்தின்கீழ் 31-12-2022 வரை மொத்தம் 34,168 மனைப்பிரிவு விண்ணப்பங்கள் பெறப்பட்டு, அதில் 33,489 மனைப்பிரிவுகள் வரன்முறைப்படுத்தப்பட்டுள்ளன. தற்போது மீதமுள்ள 679 விண்ணப்பங்கள் பரிசீலனையில் உள்ளன.

1.9.2 அனுமதியற்ற கட்டடங்கள்/ விதிகள் மீறி கட்டப்பட்ட கட்டடங்கள் வரன்முறைப்படுத்துதல்

1-7-2007-க்கு முன்னர் கட்டப்பட்ட அனுமதியற்ற / விதிமீறிய கட்டடங்களை வரன்முறைப்படுத்த, நகர் ஊரமைப்புச் சட்டம்

1971 இல் புதிய பிரிவு 113C சேர்க்கப்பட்டது. இந்நிலையில், மாண்பமை சென்னை உயர்நீதிமன்றத்தில் அனுமதியற்ற கட்டடங்களை வரன்முறைப்படுத்துதல் திட்டம், 2017 தொடர்பாக தொடரப்பட்ட வழக்கில், நகர் ஊரமைப்புத் துறை, விண்ணப்பங்களைப் பெற்று பரிசீலிக்கலாம் என்றும், விண்ணப்பங்களின் மீது ஆணை ஏதும் பிறப்பிக்கவேண்டாம் என்றும் தெரிவித்து மாண்பமை நீதிமன்றத்தால் உத்தரவிடப்பட்டுள்ளது. இதன் தொடர்ச்சியாக 5,940 விண்ணப்பங்கள் இத்திட்டத்தின்கீழ் பெறப்பட்டுள்ளன.

1.9.3 அனுமதியற்ற கல்விக் கட்டடங்கள் வரன்முறைப்படுத்துதல்

1-1-2011—க்கு முன்பாக திட்டமில்லாத பகுதிகளில் கட்டப்பட்டு இயங்கி வரும் அனுமதியற்ற கல்வி நிறுவனக் கட்டடங்களை வரன்முறைப்படுத்த அரசாணை (நிலை) எண் 76, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி துறை, நாள் 14-6-2018 வெளியிடப்பட்டது. இத்திட்டத்தின்கீழ் நிகழ்நிலை (Online) மூலமாக 14-6-2018 முதல் 13-9-2018 வரை மூன்று மாத காலத்தில் பெறப்பட்ட விண்ணப்பங்களுக்கு இசைவு வழங்குவதற்கு சென்னை உயர் நீதிமன்றத்தால் விதிக்கப்பட்டிருந்த தடையை நீக்கி ரிட் மேல்முறையீட்டு மனுக்கள் மீது வழங்கப்பட்டுள்ள 10-2-2021 தேதிய தீர்ப்பில் உத்தரவிடப்பட்டுள்ளது. இந்த நீதிமன்ற உத்தரவின்படி இரண்டு வார காலத்திற்கு அதாவது 23-3-2021 முதல் 4-4-2021 வரை விண்ணப்பங்கள் பெறப்பட்டன. இத்திட்டத்தின்கீழ் விண்ணப்பிக்கத் தவறியவர்களுக்கு மீண்டும் ஒரு வாய்ப்பு வழங்கும் விதமாக விண்ணப்பம் சமர்ப்பிக்க மேலும் ஆறு மாத காலம் கால நீட்டிப்பு, 24-6-2022 முதல் 31-12-2022 வரை அரசால் வழங்கப்பட்டது. தற்பொழுது இத்திட்டத்தின்கீழ் விண்ணப்பிக்கத் தவறியவர்களுக்கு மீண்டும் ஒரு வாய்ப்பாக 30-6-2023 வரை காலநீட்டிப்பு வழங்கப்பட்டுள்ளது.

31-12-2022 வரை நிகழ்நிலையில் பெறப்பட்ட விண்ணப்பங்கள்			**மொத்தம்**	**தீர்வு**	**நிலுவை**
14-6-2018 முதல் 13-9-2018 வரை	**23-3-2021 முதல் 4-4-2021 வரை**	**24-6-2022 முதல் 31-12-2022 வரை**			
1,133	*1,416*	*680*	*3,229*	*1,762*	*1,467*

2023 ஏப்ரல் 13]

1.10 உட்கட்டமைப்பு மற்றும் வசதி நிதி

பல்வேறு உட்கட்டமைப்பு மற்றும் வசதிகளை ஏற்படுத்தும் திட்டங்களைச் செயல்படுத்த பல்வேறு துறைகளுக்கு நிதியுதவி வழங்குவதன்மூலம் நகர்ப்புறங்களில் உட்கட்டமைப்பு வசதிகளை வலுப்படுத்த, தமிழ்நாடு நகர் ஊரமைப்புச் சட்டம் 1971 இல் பிரிவு 63-B-ன்கீழ் உட்கட்டமைப்பு மற்றும் வசதிகள் நிதியை அரசு உருவாக்கியுள்ளது. உள்ளாட்சி அல்லது உள்ளூர் திட்ட குழுமங்களால் கட்டடத்திற்கான திட்ட அனுமதி வழங்கும் பொழுது வசூலிக்கப்படும் கட்டணம் இந்நிதியில் சேர்க்கப்படுகிறது.

இந்த நிதியானது 2007 ஆம் ஆண்டு முதல் உருவாக்கப்பட்டு அரசு செயலாளர், வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அவர்களின் தலைமையில் உள்ள மாநில உட்கட்டமைப்பு மற்றும் வசதிகள் மேம்பாட்டுக் குழுவால் நிர்வகிக்கப்படுகிறது. 31-12-2022 வரையில் ரூ.5,208.43 கோடி வசூல் செய்யப்பட்டுள்ளது. இந்த நிதி பல்வேறு துறைகளுக்கு உட்கட்டமைப்பு மேம்பாட்டு திட்டங்கள் செயல்படுத்த வழங்கப்பட்டு வருகிறது.

1.11 திட்டக்குழும நிதி

தமிழ்நாடு நகர் ஊரமைப்புச் சட்டம் 1971 இன் பிரிவு 65 இன்கீழ், ஒவ்வொரு திட்டக் குழுமமும் திட்டக் குழுமக் கணக்கு பராமரிக்க வேண்டும்.

உள்ளூர் திட்டக் குழும நிதியானது ஆய்வுக் கட்டணம், வளர்ச்சிக் கட்டணங்கள் மற்றும் உள்ளாட்சி அமைப்புகளின் பொது நிதியில் 1% பங்களிப்பு ஆகியவற்றை உள்ளடக்கியது. இந்நிதி உள்ளூர் திட்டக் குழுமம் மற்றும் புதுநகர் வளர்ச்சிக் குழுமத்தால் நிர்வகிக்கப்படுகிறது. இந்த நிதி மூலமாக ரூ.354.49 கோடி மதிப்பீட்டில் வளர்ச்சிப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

1.12 வரி அல்லாத வரவினங்கள்

உட்கட்டமைப்பு மற்றும் வசதி கட்டணம், நன்னிலை வரி கட்டணம், கூடுதல் தளப் பரப்பளவு குறியீட்டுக் கட்டணம், அனுமதியற்ற மனைகள் மற்றும் மனைப்பிரிவுகளை வரன்முறைப்படுத்துதல் கட்டணம், பிரசுர கட்டணம், திறந்தவெளி இட ஒதுக்கீட்டுப் பகுதி கட்டணம் மற்றும் நில உபயோக மாற்றம்

[2023 ஏப்ரல் 13

செய்வதற்கு விதிக்கப்படும் கட்டணம் ஆகியவை நிலம் மற்றும் கட்டட வளர்ச்சிக்கு விதிக்கப்படும் வரியல்லாத வரவினங்களாகும்.

இதன்கீழ், இந்த நிதியாண்டில் ரூ.624.66 கோடி 31-1-2023 வரை வசூலிக்கப்பட்டுள்ளது.

1.13 மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகங்களுக்கு சொந்தக் கட்டடம்

சிவகங்கை, திருச்சி மற்றும் திருநெல்வேலி ஆகிய மாவட்டங்களில் மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகங்கள் சொந்த கட்டடங்களில் இயங்கி வருகின்றன. 2018-2019 ஆம் ஆண்டு 15 மாவட்ட அலுவலகங்களுக்கு சொந்த கட்டடங்கள் கட்ட ரூ.35.22 கோடி அரசால் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் ரூ.5 கோடி மதிப்பிலான மதுரை மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகக் கட்டடம் 15-12-2021 அன்று திறந்து வைக்கப்பட்டது. கோயம்புத்தூர், ஈரோடு மற்றும் சேலம் ஆகிய மாவட்டங்களில், சொந்த அலுவலகக் கட்டட பணிகள் நிறைவடைந்துள்ளன. தருமபுரி மற்றும் கன்னியாகுமரி மாவட்ட அலுவலகங்களுக்கு அந்தந்த மாவட்டங்களில் கட்டப்பட்டு வரும் மாவட்ட ஆட்சியர் கட்டடத்தில் இடம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. தஞ்சாவூர், தூத்துக்குடி, திண்டுக்கல் மற்றும் பெரம்பலூர் மாவட்டங்களில் சொந்த அலுவலகக் கட்டடம் கட்ட நிர்வாக அனுமதி மற்றும் நிதி ஒதுக்கீடு அரசாணை வழங்கப்பட்டுள்ளது. இதர மாவட்டங்களான விழுப்புரம், திருப்பூர், கிருஷ்ணகிரி, கடலூர் மற்றும் வேலூர் மாவட்டங்களில் சொந்த அலுவலகக் கட்டடம் கட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

2021-2022 ஆம் ஆண்டு 18 மாவட்ட அலுவலகங்களுக்கு சொந்த கட்டடங்கள் கட்டப்படும் என அறிவிக்கப்பட்டு அரசு ரூ.60 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. அந்த மாவட்டங்களில் புதிதாக அலுவலகக் கட்டடம் கட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

1.14 பணியிடம் நிரப்புதல்

பொதுமக்களுக்கு விரைவான சேவை அளிக்கவும், துறையின் பணிகளைத் துரிதமாக முடித்திடவும் தொழில்நுட்ப பணியிடங்கள் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் வாயிலாக புதிய நியமனம்மூலம் கீழ்க்கண்டவாறு நிரப்பப்படுகின்றன.

அ) 27 உதவி இயக்குநர் பணியிடங்கள் மற்றும் 03 கட்டடக்கலை/திட்ட உதவியாளர் பணியிடங்கள் ஆகியன தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் வாயிலாக நிரப்பப்பட்டுள்ளன.

ஆ) 56 அளவர் / உதவி வரைவாளர் பணியிடங்களுக்கு தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையத்தால் தேர்வு செய்யப்பட்டு பணி நியமனம் செய்யப்பட்டுள்ளனர்.

இ) 10 வரைவாளர் நிலை—III பணியிடங்களை தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் வாயிலாக நிரப்பிட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

1.15 திறன்மேம்பாட்டுப் பயிற்சி

2022-2023 ஆம் ஆண்டில் ரூ.50 இலட்சத்தில் உதவி இயக்குநர்கள் மற்றும் கட்டடக் கலை திட்ட உதவியாளர்களுக்கு திறன் மேம்பாட்டுப் பயிற்சி அளிக்கப்படும் என சட்டமன்றத்தில் அறிவிக்கப்பட்டதன் தொடர்ச்சியாக, 12-12-2022 முதல் 6-1-2023 வரை கீழ்க்கண்ட நிறுவனங்களில்/ துறைகளில் புதிதாக இத்துறைக்கு தேர்ந்தெடுக்கப்பட்ட 27 உதவி இயக்குநர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டு அவர்கள் பல்வேறு மாவட்டங்களில் பணியமர்த்தப்பட்டுள்ளனர்.

i. நகர் மற்றும் ஊரக திட்டமிடல் நிறுவனம் (TCPO), புதுடில்லி.

ii. திட்டம் மற்றும் கட்டடக்கலைக்கான பள்ளி, (SPA), புதுடில்லி.

iii. டெல்லி வளர்ச்சிக் குழுமம் (DDA), புதுடில்லி.

iv. நகர்ப்புற விவகாரங்களுக்கான தேசிய நிறுவனம் (National Institute of Urban Affairs), புதுடில்லி.

v. சுற்றுச்சூழல் மற்றும் தொழில்நுட்ப மைய பல்கலைக்கழகம் (CEPT University), அகமதாபாத்.

vi. நகர் ஊரமைப்பு இயக்ககம்.

vii. தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம்.

viii. தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியம்.

ix. சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம்.

[*2023 ஏப்ரல் 13*

மண்டலத் திட்டங்கள், முழுமைத் திட்டங்கள் புதுநகர் வளர்ச்சித் திட்டங்கள் மற்றும் விரிவான வளர்ச்சித் திட்டங்கள், பணியமைப்பு, கணக்கு, வரவு செலவு திட்டம், வழக்கு மேலாண்மை, வெவ்வேறு நிறுவனங்களின் பொறுப்புகள், திறமைகள் மற்றும் நல்ல திட்டமிடலுக்கான பண்புகள் என்ற பொருண்மைளை உள்ளடக்கி அந்தப் பயிற்சி நடத்தப்பட்டது.

2. தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம்

நகர்ப்புறம் மற்றும் புறநகர்ப் பகுதிகளில், தகுதியான நிலங்களைக் கண்டறிந்து அந்நிலங்களை முறையான திட்டமிடல்மூலம் மேம்படுத்தி, வீட்டுவசதித் திட்டங்களை ஏற்படுத்தி சமூகத்தில் உள்ள அனைத்துப் பிரிவினர்களுக்கும், குடிசைவாழ் மக்கள் மறுவாழ்விற்கும் மற்றும் அரசு ஊழியர்களுக்கும் வீடுகள் வழங்குவதே தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தின் தலையாய நோக்கமாகும். சமீபகாலமாக, வைப்பு நிதித் திட்டத்தின்கீழ் மற்ற துறைகளின் திட்டங்கள் மற்றும் முத்திரைத் திட்டங்களான பட்டினப்பாக்கத்தில் மெரினா வணிக மையம் மற்றும் நந்தனத்தில் வர்த்தக மையம் அமைக்கவும், தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தால் நெடுங்காலத்திற்கு முன்னர் கட்டப்பட்ட கட்டடங்களை மறுகட்டுமானம் செய்யவும் மற்றும் நகர்ப்புறங்களில் நெரிசலைக் குறைக்கவும் திருவள்ளூர் மாவட்டத்தில் திருமழிசை, மதுரை மாவட்டத்தில் தோப்பூர் உச்சப்பட்டி மற்றும் புதுக்கோட்டை மாவட்டத்தில் முள்ளூர் ஆகிய இடங்களில் துணை நகரங்கள் அமைக்கும் பணிகளைத் தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம் மேற்கொண்டு வருகிறது.

2.1 நிறுவன அமைப்பு

தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம், தலைவர் மற்றும் உறுப்பினர்களால் நிர்வகிக்கப்பட்டு வருகிறது. நிறுவன அமைப்பு இணைப்பு—IV இல் கொடுக்கப்பட்டுள்ளது.

2.2 முக்கியத் திட்டங்கள்

2.2.1 வீட்டுவசதித் திட்டங்கள்: தமிழ்நாட்டில் வீட்டுவசதி மற்றும் மனை மேம்பாட்டுத் திட்டங்களைத் தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம் மேற்கொண்டு வருகின்றது. அத்திட்டங்களின் விவரம் பின்வருமாறு:

2.2.1.1 சுயநிதித் திட்டம்: இத்திட்டத்தின் கீழ், ஒதுக்கீடுதாரர்களிடமிருந்து முன்பணம் பெற்று அடுக்குமாடி குடியிருப்புகள் கட்டப்பட்டு வருகிறது. இத்திட்டம் 2004 இல் தொடங்கப்பட்டுள்ளது. தற்போது ரூ.1,231.44 கோடி மதிப்பீட்டில் 23 திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டு பணிகள் பல்வேறு நிலையில் நடைபெற்று வருகின்றன. அவற்றின் விவரம் பின்வருமாறு:

வ. எண்	குடியிருப்பின் வகை மற்றும் அமைவிடம்	அலகுகளின் எண்ணிக்கை	மதிப்பீடு (ரூ.கோடியில்)
குறைந்த, மத்திய மற்றும் உயர் வருவாய்ப் பிரிவு குடியிருப்புகள்			
1.	சோழிங்கநல்லூர்	1000	218.05
குறைந்த மற்றும் மத்திய வருவாய் பிரிவு குடியிருப்புகள்			
2.	அண்ணா நகர்	205	71.89
3.	ராசுகுளிப்பேட்டை, செங்கல்பட்டு	116	25.43
4.	ஓசூர், பகுதி-XIX	70	19.41
5.	நொளம்பூர்	60	19.69
மத்திய வருவாய்ப் பிரிவு குடியிருப்புகள்			
6.	டாக்டர் இராமசாமி சாலை	120	43.75
7.	சாபர்கான்பேட்	120	36.64
8.	திருவான்மியூர்	10	4.37
உயர் வருவாய்ப் பிரிவு குடியிருப்புகள்			
9.	நெற்குன்றம்	570	323.60
10.	தெற்காசிய கூட்டமைப்பு விளையாட்டு கிராமம், கோயம்பேடு	304	115.24
11.	செனாய் நகர்	240	98.80

[2023 ஏப்ரல் 13

வ. எண்	குடியிருப்பின் வகை மற்றும் அமைவிடம்	அலகுகளின் எண்ணிக்கை	மதிப்பீடு (ரூ.கோடியில்)
12.	செனாய் நகர்	108	37.92
13.	புதிய கோபுர கட்டடம், நந்தனம்	102	41.47
14.	ஏ.பி பத்ரோ சாலை	90	31.98
15.	அண்ணா நகர்	72	30.63
16.	கணபதி, பகுதி 1, கோயம்புத்தூர்	60	40.68
17.	கணபதி, பகுதி 2, கோயம்புத்தூர்	56	
18.	வரகநேரி, திருச்சி	56	22.67
19.	கணபதி, பகுதி 3, கோயம்புத்தூர்	48	17.45
20.	நந்தனம் விரிவாக்கம்	32	12.58
21.	நடுவக்கரை, சாந்தி காலனி	16	6.76
22.	அண்ணா நகர்	16	6.30
23.	என்.ஜி.ஜி.ஓ காலனி	16	6.13
மொத்தம்		**3487**	**1231.44**

மேற்கண்ட 23 வீட்டுவசதித் திட்டங்கள் இந்நிதியாண்டிற்குள் முடிக்க திட்டமிடப்பட்டுள்ளது.

2.2.1.2 மறுவாழ்வுக்கான குடியிருப்புத் திட்டங்கள்: இத்திட்டத்தின் கீழ், நகரத்தில் உள்ள ஏழை மக்களின் மறுவாழ்வுக்காக சென்னை மாவட்டத்தில் எர்ணாவூரில் 6,877 குடியிருப்புகளும், கோயம்புத்தூர் மாவட்டத்தில் பெரியநாயக்கன்பாளையத்தில் 1,800 குடியிருப்புகளும் தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தால் ரூ. 1,082 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டு வருகின்றன.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY TRUTH ALONE TRIUMPHS

2023 ஏப்ரல் 13]

இத்திட்டங்கள் இந்நிதியாண்டிற்குள் முடிக்க திட்டமிடப்பட்டுள்ளது.

2.2.1.3 தமிழ்நாடு அரசு ஊழியர் வாடகைக் குடியிருப்பு திட்டம்: *அரசு ஊழியர்களுக்கு வாடகைக் குடியிருப்புகள் தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தால் கட்டப்பட்டு வருகின்றன. தற்போது 2,609 குடியிருப்புகள் ரூ. 541.96 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டு வருகின்றன. அதன் விவரம் பின்வருமாறு:*

வ. எண்	அமைவிடம்	அலகுகளின் எண்ணிக்கை	மதிப்பீடு (ரூ.கோடியில்)
1.	தாடண்டர் நகர், சைதாப்பேட்டை பகுதி—2, சென்னை	*1,387*	*278.50*
2.	திருச்சி	*464*	*92.28*
3.	மதுரை	*224*	*51.21*
4.	விருதுநகர்	*222*	*49.96*
5.	தேனி	*122*	*28.16*
6.	திண்டுக்கல்	*88*	*16.10*
7.	அரியலூர்	*72*	*16.66*
8.	கூடலூர், நீலகிரி	*30*	*9.09*
	மொத்தம்	*2,609*	*541.96*

மேற்கண்ட 8 திட்டங்கள் இந்நிதியாண்டில் முடிக்க திட்டமிடப்பட்டுள்ளது.

2.2.1.4 மனை மேம்பாட்டுத் திட்டம்: *இத்திட்டத்தின்கீழ், தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்திற்குச் சொந்தமான நிலங்களில் மனை வரைபடம் தயார் செய்யப்பட்டு, அம்மனைகளுக்கு அடிப்படை வசதிகளான சாலை, தெருவிளக்கு, குடிநீர் மற்றும் கழிவுநீர் அகற்று ஆகியவை ஏற்படுத்தி, அம்மனைகள் குடியிருப்பு அல்லது வணிக மனைகளாகப் பொது மக்களுக்குக் குலுக்கல் மற்றும் பொது ஏலம் முறையில் விற்பனை செய்யப்படுகின்றன.*

தற்போது, ரூ.60.94 கோடி மதிப்பீட்டில் 9 திட்டங்கள் நடைபெற்று வருகின்றன. அவற்றின் விவரம் பின்வருமாறு:

வ. எண்	அமைவிடம்	அலகுகளின் எண்ணிக்கை	மதிப்பீடு (ரூ.கோடியில்)
1.	வெள்ளக்கிணறு, கோயம்புத்தூர்	1,006	25.55
2.	குடியாத்தம், வேலூர்	465	9.73
3.	விளாங்குறிச்சி, கோயம்புத்தூர்	427	11.51
4.	அம்பத்தூர், சென்னை	152	4.54
5.	சோழிங்கநல்லூர், சென்னை	117	3.75
6.	ஆத்தூர், சேலம்	82	2.07
7.	தத்தநேரி, மதுரை	67	1.14
8.	ஓசூர், கிருஷ்ணகிரி	54	1.65
9.	ஆவடி, திருவள்ளூர்	45	1.00
	மொத்தம்	2,415	60.94

மேற்கண்ட 9 மனைமேம்பாட்டுத் திட்டங்கள் இந்நிதியாண்டிற்குள் முடிக்கப்பட்டு விற்பனைக்குக் கொண்டு வரத் திட்டமிடப்பட்டுள்ளது.

2.2.2 கூட்டு மேம்பாட்டுத் திட்டங்கள் (Mixed Development Schemes): இத்திட்டத்தின்கீழ், குடியிருப்புகள் மற்றும் வணிக வளாகங்கள் கட்டப்பட்டு வருகின்றன. 4 திட்டங்கள் ரூ. 624.18 கோடி மதிப்பீட்டில் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. அவற்றின் விவரம் பின்வருமாறு:

வ. எண்	அமைவிடம்	அலகுகளின் எண்ணிக்கை	மதிப்பீடு (ரூ.கோடியில்)
1.	அரும்பாக்கம்	305	392.84
2.	அசோக்பில்லர், கே.கே நகர்	217	180.32

2023 ஏப்ரல் 13]

வ. எண்	அமைவிடம்	அலகுகளின் எண்ணிக்கை	மதிப்பீடு (ரூ.கோடியில்)
3.	ஈ.வி.என் சாலை, ஈரோடு	*37*	*21.16*
4.	பெசன்ட் நகர்	*33*	*29.86*
	மொத்தம்	**592**	**624.18**

பெசன்ட் நகர் மற்றும் ஈரோட்டில் மேற்கொள்ளப்பட்டுள்ள இத்திட்டங்கள் இந்நிதியாண்டிற்குள் முடிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

2.2.3 வணிக மேம்பாட்டுத் திட்டம்: இத்திட்டத்தின் கீழ், 12 திட்டங்கள் ரூ.435.91 கோடி மதிப்பீட்டில் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. அவற்றின் விவரம் பின்வருமாறு:

வ. எண்	அமைவிடம்	மதிப்பீடு (ரூ.கோடியில்)
I.	சென்னை மாவட்டம்	
1.	வணிக வளாகங்களுடன் கூடிய அலுவலக வளாகம், பீட்டர்ஸ் காலனி	*236.76*
2.	வணிக வளாகம், சி.ஐ.டி நகர் பகுதி—VII	*44.85*
3.	வணிக வளாகம், சி.ஐ.டி நகர் பகுதி—VI	*41.02*
4.	வணிக வளாகம், பெசன்ட் நகர்	*30.58*
5.	வணிக வளாகங்களுடன் கூடிய அலுவலக வளாகம், சிந்தாமணி, அண்ணா நகர்	*18.17*
6.	வணிக வளாகங்களுடன் கூடிய அலுவலக வளாகம், நெற்குன்றம்	*15.60*
7.	வணிக வளாகம், அசோகா காலனி	*11.67*
8.	வணிக வளாகங்களுடன் கூடிய அலுவலக வளாகம், அண்ணா நகர்	*10.92*
9.	சமுதாயக் கூடம், மாதவரம்	*7.48*

வ. எண்	அமைவிடம்	மதிப்பீடு (ரூ.கோடியில்)
10.	வணிக வளாகம், நந்தனம்	*5.34*
11.	வணிக வளாகம், திருவான்மியூர்	*5.52*
II.	கோயம்புத்தூர் மாவட்டம்	
12.	வணிக வளாகம், குறிச்சி, கோயம்புத்தூர்	*8.00*
	மொத்தம்	**435.91**

மேற்கண்ட 12 வணிக வளாகங்கள் இந்நிதியாண்டிற்குள் முடிக்க திட்டமிடப்பட்டுள்ளது.

2.2.4 வைப்பு நிதித் திட்டம்: *இத்திட்டத்தின்கீழ், திருப்பூர் மாவட்டத்தில் குமரன் கல்லூரியில் கூடுதல் கட்டடம் ரூ.19.47 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டு வருகின்றது.*

2.2.5 முத்திரைத் திட்டங்கள் (Iconic Projects): *தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தின் சார்பில் சென்னை மாநகரில் இரண்டு முத்திரைத் திட்டங்களைச் செயல்படுத்திட பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.*

2.2.5.1 மெரினா வணிக மையம், பட்டினப்பாக்கம், சென்னை: *பட்டினப்பாக்கத்தில் உள்ள 25.16 ஏக்கர் நிலப்பரப்பில் உலகத்தரம் வாய்ந்த வணிகம், கடற்கரை சார்ந்த பொழுது போக்கு மற்றும் சுற்றுலா மையமாக உருவாக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. பல கோடி மதிப்பிலான இத்திட்டத்தினைச் செயல்படுத்திட பரிவர்த்தனை ஆலோசகர் தேர்வு செய்யப்பட்டுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.*

2.2.5.2 வர்த்தக மையம், நந்தனம், சென்னை: *நந்தனத்தில் பழைய தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத் தலைமை அலுவலகம் மற்றும் ஈ.வே.ரா கட்டடம் அமைந்துள்ள முறையே 1.49 ஏக்கர் மற்றும் 1.42 ஏக்கர் ஆகிய இரு இடங்களில் அலுவலக மற்றும் வணிக வளாகங்கள் ஏற்படுத்திட முடிவு செய்யப்பட்டுள்ளது. பழைய தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம் அமைந்துள்ள இடத்தில் பொது மற்றும் தனியார் பங்களிப்புடன் இத்திட்டத்தினைச் செயல்படுத்திட விரிவான திட்ட அறிக்கை தயார் செய்திடவும்*

2023 ஏப்ரல் 13]

மற்றும் ஈ.வே.ரா கட்டடம் அமைந்துள்ள இடத்தில் விரிவான திட்ட அறிக்கை தயார் செய்திடவும் பரிவர்த்தனை ஆலோசகர்கள் நியமனம் செய்யப்பட்டுள்ளனர்.

2.2.6 மறுமேம்பாட்டுத் திட்டம்: *தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தால் இரண்டு வகைகளில் மறுமேம்பாட்டுத் திட்டங்கள் செயல்படுத்தப்படுகின்றன.*

i) அரசு ஊழியர் வாடகைக் குடியிருப்பு மறுமேம்பாட்டுத் திட்டம்: *மறுமேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் சைதாப்பேட்டை, தாடண்டர் நகரில் பல ஆண்டுகளுக்கு முன்னர் கட்டப்பட்ட தமிழ்நாடு அரசு ஊழியர் வாடகைக் குடியிருப்பு கட்டடங்கள் இடிக்கப்பட்டு அவ்விடத்தில் 1,387 குடியிருப்புகள் 9 தொகுப்புகளாக கட்டப்பட்டு வருகின்றன. 504 குடியிருப்புகள் 3 தொகுப்புகளாக கட்டப்பட்டு முடிக்கப்பட்டுள்ளன. தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்திற்கு சொந்தமான 14 இடங்களில் பழைய குடியிருப்புக் கட்டடங்கள் மறுமேம்பாட்டிற்கு படிப்படியாக எடுத்துக் கொள்ளப்படும்.*

ii) பழைய வாரியக் குடியிருப்புகளின் மறுமேம்பாட்டுத் திட்டம்: *இத்திட்டத்தின்கீழ் ஒதுக்கீடுதாரர்கள் அல்லது குடியிருப்போர் நலச்சங்கங்கள் அவர்களது பழுதடைந்த கட்டடங்கள் மற்றும் கட்டட வளாகங்களை மறுமேம்பாடு செய்ய கோரும் கோரிக்கையினை ஏற்று தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம் மறுமேம்பாட்டு பணிகளுக்கு துணைபுரிந்து வருகிறது.*

2.2.7 துணை நகரங்கள்: *பெருகி வரும் மக்கள் தொகையினால் நகரங்கள் நெரிசல் ஆவதுடன் குடிநீர், கழிவுநீர் வசதிகள் மற்றும் சாலைகள் போன்ற பொது வசதிகள் அழுத்தம் அடைகின்றன. அவற்றை குறைத்துச் சீரான வளர்ச்சியினை உறுதிப்படுத்திட புறநகர்ப் பகுதிகளில், தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம் 3 துணை நகரங்களை அமைத்து வருகின்றது. அவற்றின் விவரம் பின்வருமாறு:*

(i) திருமழிசை, சென்னை: தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்திற்குத் திருமழிசையில் 311.05 ஏக்கர் பரப்பளவு நிலம் சொந்தமாக உள்ளது. இவற்றில் 123 ஏக்கர் நிலப்பரப்பு 8 மனைப்பகுதிகளாக பிரிக்கப்பட்டு மேம்பாட்டிற்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழுமத்திற்குப் பேருந்து நிலையம் அமைக்க 24.80 ஏக்கர் பரப்பளவு கொண்ட 2 ஆம் பகுதி

நிலம் கொடுக்கப்பட்டுள்ளது. 16.92 ஏக்கர் பரப்பளவு கொண்ட 3 ஆம் பகுதி நிலத்தில் ஒருங்கிணைந்த குடியிருப்பு மற்றும் வணிக வளாகங்கள் ரூ.1,280 கோடி மதிப்பீட்டில் ஏற்படுத்தப்பட உள்ளன. பொது மற்றும் தனியார் பங்களிப்புடன் (PPP mode) இத்திட்டத்தினைச் செயல்படுத்துவதற்கான சாத்தியக்கூறு ஆய்வு முடிவுகள் பெறப்பட்டுள்ளன. இத்திட்டம் நடப்பு நிதியாண்டில் செயல்படுத்தப்படும்.

(ii) தோப்பூர் உச்சப்பட்டி, மதுரை: தோப்பூர் உச்சப்பட்டியில் 490.51 ஏக்கர் நிலப்பரப்பில் 6,580 மனைப்பிரிவுகள் ரூ.77.46 கோடி மதிப்பீட்டில் ஏற்படுத்தப்பட்டுள்ளன. மாநில சுற்றுச்சூழல் பாதிப்பு மதிப்பீட்டு ஆணையத்திடம் அனுமதி பெற்று மனைப் பிரிவுகளை இந்நிதியாண்டில் விற்பனைக்குக் கொண்டு வரத் திட்டமிடப்பட்டுள்ளது.

(iii) முள்ளூர், புதுக்கோட்டை: புதுக்கோட்டை மாவட்டத்தில் முள்ளூர் கிராமத்தில் 100 ஏக்கர் நிலப்பரப்பளவில் 1,603 மனைப்பிரிவுகள் ஏற்படுத்தப்பட்டு இந்நிதியாண்டிற்குள் விற்பனைக்குக் கொண்டு வரத் திட்டமிடப்பட்டுள்ளது.

2.3 விற்பனைப் பத்திரங்கள்: விற்பனைப் பத்திரங்களை உடனடியாக வழங்கும் பொருட்டு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆலோசனைப்படி, மே 2021 முதல் சிறப்பு முகாம்கள் நடத்தப்பட்டு மார்ச் 2023 வரை, 11,137 விற்பனை பத்திரங்கள் ஒதுக்கீடுதாரர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. ஒதுக்கீடுதாரர்கள் பயன்பெறும் வகையில் இம்முகாம்கள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன.

2.4 குடியிருப்பு அலகுகளின் விற்பனை: முடிக்கப்பட்ட திட்டங்களில், 4,834 மனைகளும் 3,706 குடியிருப்புகளும் ஆக மொத்தம் 8,540 குடியிருப்பு அலகுகள் தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்திடம் கையிருப்பில் உள்ளன. இவற்றை இந்நிதியாண்டிற்குள் விற்பனைக்குக் கொண்டு வரத் திட்டமிடப்பட்டுள்ளது. இவற்றில் குடியிருப்புகளை விற்பனை செய்வதற்குச் சரியான வட்டி விகிதம், தொழில்நுட்பப் பயன்பாடு ஆகியவற்றை அறிமுகப்படுத்தி விற்பனையை அதிகரிக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

2.5 தொழில்நுட்ப சேவைகள்: திட்டங்களின் முன்னேற்றத்தினைக் கண்காணிக்கவும், சொத்துகளை நிர்வகிக்கவும், ஒப்பந்தம் மற்றும் ஏலத்தில் வெளிப்படைத்தன்மையை உறுதிப்படுத்திடவும், விற்பனை

2023 ஏப்ரல் 13]

மற்றும் சந்தைப்படுத்துதல், இணையவழி வாடகை ஒதுக்கீடு, கணக்குகள் மற்றும் நிதி மேலாண்மை, ஓய்வூதியம் மற்றும் பணியாளர்களுக்கான சேவை ஆகிய அனைத்திற்கும் ஆரம்பம் முதல் இறுதி வரைக்கான ஒருங்கிணைந்த தகவல் தொழில்நுட்ப தீர்வு உருவாக்கப்பட்டு இந்த நிதியாண்டிற்குள் செயல்படுத்தப்பட உள்ளது.

2.6 வருவாய் வசூல்: *குடியிருப்பு மற்றும் வணிகக் கட்டடங்களிலிருந்து பெறப்படும் வாடகை, குடியிருப்பு அலகுகளான மனைகள், குடியிருப்புகள் மற்றும் வீடுகள் ஆகியவற்றின் விற்பனைமூலம் பெறப்படும் வருவாய் ஆகியவை தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்திற்கான வருவாயாகும். கடந்த ஐந்து ஆண்டுகளில் வசூலிக்கப்பட்ட வருவாய் விவரங்கள் பின்வருமாறு:*

வ. எண்	நிதியாண்டு	வருவாய் வசூல் (ரூ. கோடியில்)
1.	*2017-2018*	*788.77*
2.	*2018-2019*	*643.48*
3.	*2019-2020*	*309.55*
4.	*2020-2021*	*1,237.36*
5.	*2021-2022*	*1,269.85*
6	*2022-2023*	*1,362.13*

2.7 2021-2022 மற்றும் 2022-2023 ஆம் ஆண்டுகளின் சாதனைகள்

1. *முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களது 97-வது பிறந்தநாளை முன்னிட்டு, தேசிய விருதுகளான ஞானபீடம், சாகித்ய அகாடமி, மாநில இலக்கிய விருது மற்றும் பிரசித்திபெற்ற உலக நிறுவனங்கள் வழங்கும் விருதுகள் பெற்ற தமிழ்நாட்டைச் சார்ந்த 20 எழுத்தாளர்களுக்கு ரூ.26.32 கோடி மதிப்பிலான குடியிருப்புகள் வழங்க அரசு ஆணையிட்டுள்ளது.*

2. *11,137 விற்பனை பத்திரங்கள் ஒதுக்கீடுதாரர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன.*

3. தமிழ் மொழியில் 5,447 ஒதுக்கீட்டு ஆணைகள் மற்றும் 1,514 விற்பனைப் பத்திரங்கள் வழங்கப்பட்டுள்ளன.

4. தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத் திட்டங்களில் ஒதுக்கீடு பெற்றவர்களில் வட்டி சுமையினால் விற்பனைப் பத்திரம் பெற்றிடாத ஒதுக்கீடுதார்களுக்கு விற்பனைப் பத்திரங்களை உடனடியாகப் பெறுவதற்கு உதவிடும் வகையில் ரூ.53 கோடியில் வட்டி தள்ளுபடி திட்டத்தைச் செயல்படுத்துவதற்கான அரசாணை வெளியிடப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்கீழ் மார்ச் 2023 வரை 524 ஒதுக்கீடுதாரர்கள் பயனடைந்துள்ளனர். ரூ.4.16 கோடி தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது.

5. தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தில் பணிபுரிந்து பணிக்காலத்தில் இயற்கை எய்திய 63 நபர்களின் குடும்ப உறுப்பினர்களுக்கு கருணை அடிப்படையில் பணி நியமன ஆணைகள் வழங்கப்பட்டுள்ளன.

6. 1994-ஆம் ஆண்டில் இயற்றப்பட்ட தமிழ்நாடு அடுக்குமாடிக் குடியிருப்பு உரிமையாளர் சட்டத்தில் தற்கால தேவைகளுக்கேற்ப 2022 இல் திருத்தம் மேற்கொள்ளப்பட்டு 23-12-2022 அன்று அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது.

7. 1961 ஆம் ஆண்டு இயற்றப்பட்ட தமிழ்நாடு வீட்டுவசதி வாரிய சட்டம், தற்கால தேவைகளுக்கேற்ப மறு ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

8. தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்திற்கு சொந்தமான ரூ.133.68 கோடி மதிப்பிலான சென்னை, அண்ணாநகர் போன்ற முக்கிய இடங்களிலுள்ள 9.73 ஏக்கர் நிலம் ஆக்கிரமிப்புதாரர்களிடம் இருந்து மீட்கப்பட்டுள்ளது.

9. தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தால் 4,806 மனைகள், 1,351 அடுக்குமாடி குடியிருப்புகள் மற்றும் 85 தனி வீடுகள் விற்பனை செய்யப்பட்டுள்ளன.

10. வைப்பு நிதித் திட்டத்தின்கீழ் ரூ.9.76 கோடி மதிப்பீட்டில் நகர் ஊரமைப்புத் துறை அலுவலகக் கட்டடங்கள் ஈரோடு, சேலம் மற்றும் கோயம்புத்தூர் மாவட்டங்களில் கட்டி முடிக்கப்பட்டுள்ளன.

2023 ஏப்ரல் 13]

3. கூட்டுறவு வீட்டுவசதி சங்கங்கள்

"ஒவ்வொரு குடும்பத்திற்கும் ஒரு வீடு" என்ற தமிழ்நாடு அரசின் இலக்கை நிறைவேற்றும் நோக்கத்துடன் கூட்டுறவு வீட்டுவசதி சங்கங்கள் செயல்பட்டு வருகின்றன. சங்கங்கள் உறுப்பினர்களால் இயக்கப்படும், தன்னாட்சி பெற்ற இலாப நோக்கமற்ற சுய உதவி நிறுவனங்களாகச் செயல்படுகின்றன.

சென்னைப் பெருநகரக் கூட்டுறவு வீட்டுவசதி சங்கம் 1912 ஆம் ஆண்டு கூட்டுறவு வீட்டுவசதித் துறையில் நிறுவப்பட்ட முதல் சங்கமாகும். தமிழ்நாட்டில் 10—க்கும் மேற்பட்ட வகையான கூட்டுறவு வீட்டுவசதி சங்கங்கள் உருவாக்கப்பட்டுச் செயல்பட்டு வருகின்றன.

தமிழ்நாடு கூட்டுறவு வீட்டுவசதி இணையம் 1959 ஆம் ஆண்டு முதன்மை கூட்டுறவு சங்கங்களுக்காக உருவாக்கப்பட்ட தலைமைச் சங்கமாகும். தற்போது 1,169 தொடக்கக் கூட்டுறவு வீட்டுவசதி சங்கங்கள் இயங்கி வருகின்றன. அவற்றில் 725 செயல்படும் சங்கங்களாகவும் 444 கலைத்தல் நடவடிக்கையில் உள்ள சங்கங்களாகவும் உள்ளன.

தமிழ்நாடு கூட்டுறவு வீட்டுவசதி இணையம் 499 நகர்ப்புற வீட்டுவசதி சங்கங்கள் மற்றும் 154 கிராமப்புற வீட்டுவசதி சங்கங்கள் என்ற எண்ணிக்கையில் 653 இணைப்புச் சங்கங்களைக் கொண்டுள்ளது.

3.1 கூட்டுறவு வீட்டுவசதி சங்கங்களின் நோக்கங்கள்

கூட்டுறவு வீட்டுவசதித் துறை முதன்மை சங்கம் மற்றும் தொடக்கக் கூட்டுறவு வீட்டுவசதி சங்கங்கள் என ஈரடுக்கு அமைப்பாக செயல்படுகிறது.

3.1.1 தமிழ்நாடு கூட்டுறவு வீட்டுவசதி இணையம்

இணையம் அரசாங்க உத்திரவாதத்துடனும் உத்திரவாதம் இல்லாமலும் அதன் நிதி ஆதாரங்களை இந்திய ஆயுள் காப்பீட்டுக் கழகம் (எல்.ஐ.சி), வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சிக் கழகம், தேசிய வீட்டுவசதி வங்கி, வீட்டுவசதி மேம்பாட்டு நிதிக் கழகம், வணிகம் மற்றும் கூட்டுறவு வங்கிகள் ஆகியவற்றிலிருந்து பெறுகிறது.

முதன்மை நோக்கம்

1. தமிழ்நாட்டில் உள்ள கூட்டுறவு வீட்டுவசதி சங்கங்களின் இணையமானது, தன் இணைப்புச் சங்கங்களுக்கு மனைத்திட்டங்களை உருவாக்க நிதியுதவி வழங்குதல்.

2. இணையத்தின் தனிநபர் உறுப்பினர்களுக்கு வீட்டுக் கடன்கள் மற்றும் நகைக்கடன்கள் நேரடியாக வழங்குதல்.

3.1.2 தொடக்க கூட்டுறவு வீட்டுவசதி சங்கங்கள்

முக்கிய நோக்கங்கள்

1. உறுப்பினர்களுக்கு வீட்டுமனைகள்/ வீடுகளை ஒதுக்கீடு செய்தல்.

2. உறுப்பினர்களிடையே விநியோகிப்பதற்காக வீட்டு மனைகளை மேம்படுத்துதல்.

3. உறுப்பினர்களுக்கு, புதிய வீடுகள் கட்டுவதற்கும், கட்டிய வீடுகளை விரிவுபடுத்துவதற்குமான கடன்களும், வீட்டு அடமான கடன்களும் வழங்குதல்.

4. பொதுப் பயன்பாட்டிற்கென திருமண மண்டபம் மற்றும் சமுதாயக் கூடம் கட்டுதல் மற்றும் அவற்றின் பராமரிப்புப் பணிகளை மேற்கொள்ளுதல்.

5. உறுப்பினர்கள் மற்றும் அவர்களது குடும்ப உறுப்பினர்களின் நலனுக்காக சமூக, பொழுதுபோக்கு, கல்வி, பொதுச் சுகாதாரம் மற்றும் மருத்துவ வசதிகளை நிறுவிப் பராமரித்தல்.

3.2கொள்கை ரீதியில் மேற்கொள்ளப்பட்ட துறை நடவடிக்கைகள்

3.2.1 ஒரு முறை கடன் தீர்வு திட்டம்

தமிழ்நாடு அரசு ஒருமுறை கடன் தீர்வு திட்டத்தை அறிவித்து செயல்படுத்தி வருகிறது. இத்திட்டத்தின்படி தவணை தவறிய கடன்தாரர்களிடமிருந்து 1-4-2021 முதல் 31-3-2023 முடிய ரூ.80.37 கோடி கடன் தொகை வசூல் செய்யப்பட்டு, செலுத்தப்படாத தவணை தவறிய தொகைக்கான வட்டி மற்றும் அபராத வட்டி ரூ.94.84 கோடி தள்ளுபடி செய்யப்பட்டு 3,674

2023 ஏப்ரல் 13]

எண்ணிக்கையிலான அசல் ஆவணங்கள் உறுப்பினர்களுக்குத் திரும்ப வழங்கப்பட்டுள்ளன. இத்திட்டம் 03.09.2023 வரை அமலில் இருக்கும், என தற்போது ஆணையிடப்பட்டுள்ளது.

3.2.2 அசல் ஆவணங்கள் திருப்பி வழங்குதல்

தொடக்கக் கூட்டுறவு வீட்டுவசதி சங்கங்களிடமிருந்து உறுப்பினர்கள் பெற்ற கடனை அவர்கள் முழுவதும் திருப்பிச் செலுத்தியும், சம்பந்தப்பட்ட சங்கங்கள் பல்வேறு காரணங்களால் அத்தொகையினை இணையத்திற்கு செலுத்தாமல் விடுபடும் நேர்வுகளில் கடன்தாரர்கள் எதிர்கொள்ளும் சிரமங்களைத் தவிர்க்க 1-6-2019 முதல் 31-3-2023 முடிய உள்ள காலத்தில் திருப்பி தரவேண்டி நிலுவையிலுள்ள 4,904 கடன் ஆவணங்களை உறுப்பினர்களுக்கு திரும்ப வழங்க தமிழ்நாடு கூட்டுறவு வீட்டுவசதி இணையம் நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.

3.2.3 மருத்துவக் காப்பீட்டுத் திட்டம்

கூட்டுறவு ஊழியர்களுக்கான மருத்துவக் காப்பீட்டுத் திட்டம் இணையத்தின்மூலம் கூட்டுறவு வீட்டுவசதி சங்கப் பணியாளர்களுக்கெனச் செயல்படுத்தப்படுகிறது. சுமார் 1,500 பணியாளர்கள் மற்றும் அவர்களின் 2,500 குடும்ப உறுப்பினர்கள் இத்திட்டத்தின்கீழ் இணைக்கப்பட்டுள்ளனர். இத்திட்டத்தின்கீழ் நவம்பர் 2021 முதல் மார்ச் 2023 வரை 26 பணியாளர்களுக்கு மருத்துவக் காப்பீட்டுத் தொகையாக ரூ.22.32 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது .

3.2.4 இணையத்தின்மூலம் மனைத் திட்டங்களுக்குக் கடன் வழங்குதல்

கூட்டமைப்பு முறையில் தொடக்கக் கூட்டுறவுச் சங்கங்கள் செயல்படுத்தும் மனைத் திட்டங்களுக்கு நிதியுதவி அளிக்க இணையம் முனைப்பான நடவடிக்கை மேற்கொண்டுள்ளது. சங்கத்தில் பதிவு செய்யப்பட்ட நில மதிப்பின் அடிப்படையில் திட்டக் கடன் வழங்கப்படுகிறது. 2022-2023 ஆம் நிதியாண்டில் மூன்று மனைத்திட்டங்களுக்கு ரூ.73.23 கோடி விடுவிக்கப்பட்டுள்ளது.

3.2.5 சமத்துவபுரம் மனைத்திட்டம்

சமூக நீதியை மேம்படுத்தவும், சமுதாய சமத்துவத்தை உருவாக்கவும் 1997-1998 ஆம் ஆண்டு தமிழ்நாடு அரசால் கொண்டுவரப்பட்ட "சமத்துவபுரம் என்ற வீட்டுமனைத்

SATYAMEVA JAYATE / TRUTH ALONE TRIUMPHS

[2023 ஏப்ரல் 13

திட்டத்தின்” கீழ் அரசாணை (நிலை) எண் 171, ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை, நாள் 22-10-1997 இன்படி அம்மனைகளில் வீடு கட்டிக்கொள்ள வழங்கப்பட்ட மானியமான ரூ.35,000 தவிர கூடுதலாக அவரவர் தேவைக்கேற்ப வீடுகள் கட்ட வீட்டுவசதி கூட்டுறவுச் சங்கங்கள் ரூ.7.73 கோடி கடனாக வழங்கியது. இத்திட்டத்தின்கீழ் 8,257 வீடுகள் கட்டப்பட்டுள்ளன.

3.3 துறையின் சிறப்பம்சங்கள்

3.3.1 மகளிர் கல்லூரி

புகழ்பெற்ற சுதந்திரப் போராட்ட தியாகியான திருப்பூர் குமரன் அவர்களின் பெயரில் திருப்பூர் கூட்டுறவு வீட்டுவசதி சங்கம்மூலம் 1996 ஆம் ஆண்டு மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி நிறுவப்பட்டுச் செயல்பட்டு வருகிறது. இக்கல்லூரி பாரதியார் பல்கலைக் கழகத்துடன் இணைக்கப்பட்டுள்ளது. இக்கல்லூரியில் குறைந்த கட்டணத்தில் தரமுயர்ந்த கல்வி வழங்கப்படுகிறது. 2,440 மாணவிகள் நடப்புக் கல்வியாண்டில், இக்கல்லூரியில் பயில்கின்றனர். கல்லூரி நிறுவிய காலம் முதல் இளங்கலை பட்டப் படிப்புகளில் 11,738 மாணவிகளும், முதுகலை படிப்புகளில் 2,228 மாணவிகளும் முனைவர் படிப்பில் 56 மாணவிகளும் பட்டம் பெற்றுள்ளனர். மேலும், 129 மாணவிகள் தங்கப் பதக்கங்கள் பெற்றுள்ளனர்.

3.3.2 சேவை சங்கங்கள்

2022-2023 ஆம் நிதியாண்டில் 135 தொடக்கக் கூட்டுறவு வீட்டுவசதி சங்கங்களுக்கு சொந்தமான கடைகள், திருமண மண்டபங்கள், சமுதாயக் கூடங்கள் போன்ற 1,167 சொத்துக்கள் வாடகைக்கு விடப்பட்டதன்மூலம் ரூ.290.09 இலட்சம் வருமானம் ஈட்டப்பட்டுள்ளது.

3.3.3 அரசு சிமெண்ட் விற்பனை

நான்கு தொடக்கக் கூட்டுறவு வீட்டுவசதி சங்கங்கள் அரசு சிமெண்ட் விற்பனை செய்து வருகின்றன. 2022-2023 ஆம் நிதியாண்டில் ரூ.1.05 கோடி மதிப்பிலான 736 மெட்ரிக் டன் சிமெண்ட் விற்பனை செய்யப்பட்டுள்ளது.

3.3.4 பொது சேவை மையங்கள்

தொடக்கக் கூட்டுறவு வீட்டுவசதி சங்கங்கள்மூலம் 39 பொது சேவை மையங்கள் செயல்பட்டு வருகின்றன. இதன்மூலம் ரூ.46.06 இலட்சம் மதிப்பில் 61,317 சேவைகள் வழங்கப்பட்டுள்ளன.

2023 ஏப்ரல் 13]

3.4 துறையால் மேற்கொள்ளப்பட்ட சிறப்பு முயற்சிகள்

3.4.1. இணையத்திற்கும் முதன்மை கூட்டுறவு வீட்டுவசதி சங்கங்களுக்கும் இடையேயான கடன் கணக்குகள் ஒத்திசைவு

தமிழ்நாடு கூட்டுறவு வீட்டுவசதி இணையம் 653 தொடக்கக் கூட்டுறவு சங்கங்களை இணைப்புச் சங்கங்களாகக் கொண்டுள்ளது. 583 தொடக்கச் சங்கங்கள் இணையத்துடன் கடன் நிலுவை கொண்டுள்ளன. ஒரு சிறப்பு முயற்சியாக, முதன்மைச் சங்கங்களின் கணக்குகளை இணையத்தின் கணக்குகளுடன், ஒத்திசைவு செய்வதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இந்த நடைமுறையில் இணையம் மற்றும் தொடக்கக் கூட்டுறவு வீட்டுவசதி சங்க உறுப்பினர்களின் கடன் கணக்குகளைத் தனித்தனியே பராமரிப்பதற்கும் உறுப்பினர்கள் கடனைத் தீர்வு செய்தவுடன் ஆவணங்களை உரிய நேரத்தில் திரும்ப வழங்குவதற்கும் ஏதுவாக அமையும். தற்போது இணையத்துடன் கடன் நிலுவை கொண்டுள்ள 583 சங்கங்களுள் 562 சங்கங்களின் கடன் கணக்குகள் ஒத்திசைவு செய்யப்பட்டுள்ளன.

3.4.2 20 ஆண்டுகளுக்கு மேலாக நிலுவையில் உள்ள மனைத்திட்டங்கள்

அனுமதி வழங்கப்பட்டு 20 ஆண்டுகளுக்கு மேலாக நிலுவையில் உள்ள 13 மனைத் திட்டங்களை நடப்பு ஆண்டில் செயல்படுத்திட பல்வேறு நிலைகளில் சட்டபூர்வ அனுமதி பெறுவதற்காக முனைப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு உள்ளன.

3.5 கூட்டுறவு வீட்டுவசதி சங்கங்களின் சாதனைகள்

3.5.1 தமிழ்நாடு கூட்டுறவு வீட்டுவசதி இணையம்

தமிழ்நாடு கூட்டுறவு வீட்டுவசதி இணையம் கூட்டுறவு வீட்டுவசதி சங்கங்கள் மூலமாக வீடு கட்டுவதற்கு கடன் வழங்குகிறது. 2021-2022 மற்றும் 2022-2023 ஆம் நிதியாண்டுகளில் ரூ.76.76 கோடி மதிப்பிலான கடன் வீட்டுவசதி சங்கங்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

3.5.2 தொடக்கக் கூட்டுறவு வீட்டுவசதி சங்கங்கள்

மனைத் திட்டங்களைச் செயல்படுத்துதல் மற்றும் சங்க உறுப்பினர்களுக்கு வீடு விரிவுபடுத்தும் கடன் போன்ற வசதிகளை

வழங்குதல் ஆகியவை கூட்டுறவு வீட்டுவசதி சங்கங்களின் முதன்மை நோக்கங்களாகும். நோக்கங்களின் விவரம் பின்வருமாறு:

i. மாநிலம் முழுவதும் உள்ள சங்கங்களால் மேம்படுத்தப்பட்ட மனைத் திட்டங்களாலேயே தமிழ்நாட்டில் நகரமயமாக்கல் தொடங்கப்பட்டது. இதுவரை 725 மனைத் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு 1,05,094 வீட்டுமனைகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. தற்போது செயல்பாட்டில் உள்ள 6 மனைத்திட்டங்களில் 1,599 வீட்டுமனைகள் ரூ.408.66 கோடி மதிப்பில் விற்பனை செய்யப்பட்டுள்ளன. மேலும், 241.77 ஏக்கர் நிலப்பரப்பில் 8 மனைத்திட்டங்கள் செயல்படுத்திட அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

ii. தொடக்கக் கூட்டுறவு வீட்டுவசதி சங்கங்கள் உறுப்பினர்களுக்குக் கடன் வசதிகளை வழங்க சங்க உறுப்பினர்களிடமிருந்து நிரந்தர வைப்பீடு பெறுகின்றன. 2022-2023 ஆம் ஆண்டில் 164 தொடக்க சங்கங்கள்மூலம் ரூ.736.97 கோடி வைப்புகள் திரட்டப்பட்டு ரூ.635.33 கோடி மதிப்பிலான கடன்கள் வழங்கப்பட்டுள்ளது.

iii. 2021-2022 அறிவிப்பின்படி, செங்கல்பட்டு மண்டலத்தில் உள்ள கார்த்திகேயபுரம் கூட்டுறவு வீட்டுவசதி சங்கத்திற்கு சொந்தமான கல்யாண மண்டபம் திருத்திய மதிப்பீட்டின்படி ரூ.105.95 இலட்சம் செலவில் நவீனமயமாக்கப்பட்டுள்ளது.

iv. 2021-2022 அறிவிப்பின்படி வேலூர் மண்டலத்தில் உள்ள காட்பாடி நகர கூட்டுறவு வீட்டுவசதி சங்கத்திற்குச் சொந்தமான நிலத்தில் ரூ.98 இலட்சம் செலவில் 24 கடைகளுடன் கூடிய வணிக வளாகங்கள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன.

4. தமிழ்நாடு கட்டடம் மற்றும் மனை விற்பனை ஒழுங்குமுறைக் குழுமம்

4.1 கட்டடம் மற்றும் மனை விற்பனைத் துறையை வெளிப்படைத் தன்மையுடனும் திறம்பட செயல்படவும் ஒழுங்குபடுத்தி மேம்படுத்துவதற்காகவும், வீடு வாங்குவோரின் நலனைப் பாதுகாக்கும் நோக்கத்துடனும் ஒன்றிய அரசால் 2016 ஆம் ஆண்டில் கட்டடம் மற்றும் மனை விற்பனை (முறைப்படுத்துதல் மற்றும் மேம்படுத்துதல்) சட்டம் இயற்றப்பட்டது. தமிழ்நாடு அரசு,

2023 ஏப்ரல் 13]

தமிழ்நாட்டில் இச்சட்டத்தினை நடைமுறைப்படுத்த தமிழ்நாடு கட்டடம் மற்றும் மனை விற்பனை (முறைப்படுத்துதல் மற்றும் மேம்படுத்துதல்) விதிகள் 2017 இல் உருவாக்கப்பட்டது. இக்குழுமம் தலைவர் மற்றும் நான்கு உறுப்பினர்கள் அடங்கிய தமிழ்நாடு கட்டட மனை விற்பனை ஒழுங்குமுறை குழுமமாக செயல்பட்டு வருகிறது.

4.2 கட்டட மனை திட்டங்கள் மற்றும் முகவர்களைப் பதிவு செய்வது மற்றும் புகார்களின் மீது தீர்ப்பு அளிப்பது குழுமத்தின் முக்கியமான பணிகள் ஆகும். மேம்படுத்தப்படும் மனையின் பரப்பளவு 500 சதுர மீட்டருக்கு மேல் அல்லது அனைத்துக் கட்டடங்களிலும் கட்டப்படும் குடியிருப்புகளின் எண்ணிக்கை எட்டு (8)க்கு மேல் இருக்கும் பட்சத்தில் கட்டட, மனை விற்பனைத் திட்டங்கள் அனைத்தும் தமிழ்நாடு கட்டட மனை விற்பனை ஒழுங்குமுறை குழுமத்தில் பதிவு செய்யப்பட வேண்டும்.

4.3 கட்டட மனை விற்பனைக் குழுமம் மற்றும் தீர்ப்பாயத்தின் உத்தரவுகளின் மீதான மேல்முறையீடுகளை விசாரிக்க உயர்நீதிமன்றத்தில் பணிபுரிந்து ஒய்வு பெற்ற நீதியரசருடன் 2 உறுப்பினர்களடங்கிய தமிழ்நாடு கட்டட மனை விற்பனை மேல்முறையீட்டுத் தீர்ப்பாயம் (TNREAT) செயல்பட்டு வருகிறது.

4.4 31-3-2023-இன்படி 15,411 வீட்டு மனை மற்றும் கட்டடத் திட்டங்கள் ஒழுங்குமுறை குழுமத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளன. அதேபோல் 2,843 முகவர்களுக்கும் பதிவு வழங்கப்பட்டுள்ளது. பதிவு செய்யப்பட்ட திட்டங்களின் எண்ணிக்கையை முந்தைய ஆண்டுகளோடு ஒப்பிடுகையில் ஒவ்வோர் ஆண்டும் 1,000 திட்டங்களுக்குகீழ் பதிவு செய்யப்பட்டுள்ள நிலையில், 2022 ஆம் ஆண்டில் அதிக எண்ணிக்கையில் 10,558 திட்டங்கள் தமிழ்நாடு கட்டட மனை விற்பனை ஒழுங்குமுறை குழுமத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளன.

4.5 31-3-2023 வரையில் திட்ட மேம்பாட்டாளர்களின் மீது வீட்டுமனை மற்றும் குடியிருப்புகளை ஒப்படைப்பதில் காலதாமதம் மற்றும் செலுத்திய தொகையைத் திரும்பக் கோரி 3,644 புகார்கள் தமிழ்நாடு கட்டட மனை விற்பனை மற்றும் ஒழுங்குமுறை குழுமத்திடம் பெறப்பட்டுள்ளன. இவற்றுள் 2,742 புகார்கள் மீது இறுதி ஆணைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன. மீதமுள்ள 902 புகார்கள் மீதான விசாரணை நடைபெற்று வருகின்றது.

[2023 ஏப்ரல் 13

4.6 தமிழ்நாடு கட்டட மனை விற்பனை மேல்முறையீட்டு ஆணையத்தில் பெறப்பட்ட 402 மேல்முறையீடுகளுள் 358 மேல்முறையீடுகள் முடித்து வைக்கப்பட்டுள்ளன. மீதமுள்ள 44 மேல்முறையீடுகள் விசாரணையிலுள்ளன.

5. அரசுப் பணியாளர்களுக்கு வீடு கட்டும் முன்பணம்

5.1 வீடுகள் கட்டும் முன்பண விதிகளின்கீழ், தமிழ்நாடு அரசுப் பணியாளர்கள் மற்றும் அனைத்திந்தியப் பணி அலுவலர்களுக்கு வீடுகட்டும் முன்பணமானது வீடுகட்டுவதற்கும், கட்டப்பட்ட குடியிருப்பு அல்லது வீட்டினை வாங்குவதற்கும் வழங்கப்படுகிறது.

5.2 இம்முன்பணம் நான்கு ஆண்டுகள் முறையான பணி மற்றும் நுழைவுப்பதவியில் தகுதிகாண் பருவம் முடித்த அனைத்திந்தியப் பணி அலுவலர்களுக்கு ரூ.60 லட்சமும் தமிழ்நாடு அரசுப் பணியாளர்களுக்கு ரூ.40 லட்சமும் கடனாக அவரது ஊதியத் தகுதிக்கேற்ப வழங்கப்படுகிறது. உயர்ந்து வரும் கட்டுமானச் செலவுகளைக் கருத்திற்கொண்டு, 2023-2024 முதல் தமிழ்நாடு அரசுப் பணியாளர்களுக்கு வழங்கப்படும் வீடுகட்டும் முன்பணம் ரூ.40 லட்சத்திலிருந்து ரூ.50 லட்சமாக வரும் நிதியாண்டு முதல் உயர்த்தப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. இவ்வீடுகட்டும் முன்பணத்தில், 50 விழுக்காடு மனையிடம் வாங்குவதற்கும் மீதமுள்ள 50 விழுக்காடு அம்மனையில், வீடுகட்டவும் வழங்கப்படுகிறது. வீடுகட்டும் முன்பணத்தின்மூலம் கட்டப்பட்ட வீட்டை மேம்படுத்தவும், விரிவாக்கவும் மேற்காண் கடன் தொகையின் தகுதியுள்ள முன்பணத்தில் 50 விழுக்காடு என்ற வரம்பிற்குட்பட்டு அனுமதிக்கப்படுகிறது.

5.3 தற்போது தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தால் சென்னையில் நெற்குன்றம் பகுதியில் கட்டப்பட்டு வரும் அடுக்குமாடிக் குடியிருப்பினை வாங்க அனைத்திந்தியப் பணி அலுவலர்களுக்கு ரூ.80 லட்சமும் தமிழ்நாடு அரசுப்பணியாளர்களுக்கு ரூ.50 லட்சமும் கடனாக அனுமதிக்கப்படுகிறது.

5.4 இந்திய ரிசர்வ் வங்கியின் வழிகாட்டு நெறிமுறைகளுக்கு கட்டுப்பட்டு இயங்கும் வங்கிகள் மற்றும் நிதிநிறுவனங்களில் வீடுகட்ட கடன் பெற்றிருக்கும் அலுவலர்களுக்கு அவற்றை அரசின் வீடுகட்டும் முன்பணமாக மாற்றிக்கொள்ளும் நடைமுறையை அரசு சில விதிமுறைகளுடன் தற்போது அனுமதித்துள்ளது.

2023 ஏப்ரல் 13]

*5.5 மேற்காண் கடன் தொகையானது முதலில் 180 தவணைகளில் அசல் முழுவதும் பிடித்தம் செய்யப்பட்டு பின்னர் 60 தவணைகளாக வட்டி பிடித்தம் செய்யப்படும். இக்கடன் தொகைக்கான வட்டி, மாதாந்திர நிலுவைத் தொகைக்குறைவின் (*Monthly diminishing balance*) அடிப்படையில், ஒவ்வொரு மாத இறுதியில், நிலுவையாக உள்ள தொகைக்கு படி வீத முறைப்படி (*Slab rates*) கணக்கிடப்படுகிறது.*

5.6 வீடுகட்டும் முன்பணம் பெற்ற ஓர் அரசு ஊழியர் பணியில் இருக்கும் போது இறக்க நேரிட்டால் அவரது குடும்பத்துக்கு உதவி செய்யும் வகையில், "அரசுபணியாளர் வீடுகட்டுவதற்கான முன்பண சிறப்பு குடும்ப சேமநல நிதித் திட்டம்" என்னும் இணையற்ற திட்டத்தை அரசு வகுத்துள்ளது. இதன்படி, வீடுகட்டும் முன்பணம் பெறும் அனைத்து அரசு ஊழியர்களின் ஊதியத்திலிருந்து ஒவ்வொரு மாதமும், மாதாந்திர தவணைத் தொகையில் 1 விழுக்காடு பிடித்தம் செய்யப்படும். இத்தொகையானது, அரசால் ஒரு நிதியாக பராமரிக்கப்படுகிறது. இத்திட்டத்தில் உறுப்பினராக உள்ள ஓர் அரசு ஊழியர் பணியிலிருக்கும்போது இறக்க நேரிட்டால் அவரது குடும்பத்துக்கு நிவாரணம் அளிக்கும் வகையில் அவரது கணக்கில் நிலுவையிலுள்ள வீடுகட்டும் முன்பணம் அசல் மற்றும் வட்டியுடன் இந்நிதியிலிருந்து ஈடுசெய்து கொள்ளப்படும்.

5.7 2023-2024 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையில் வீடுகட்டும் முன்பணம் அளிப்பதற்காக ரூ.210.00 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதுதவிர, தலைமைச் செயலகப் பணியாளர்கள் மற்றும் அனைத்திந்தியப் பணி அலுவலர்களுக்கு வீடுகட்டும் முன்பணம் வழங்குவதற்கு ஏதுவாக, தலைமைச் செயலகத்தின் அனைத்துத் துறைகளுக்கும் தனித்தனியே நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

6. சொத்து உரிமையாளர்கள் மற்றும் வாடகைதாரர்களின் உரிமைகள் மற்றும் பொறுப்புகள் முறைப்படுத்துதல்

6.1 தமிழ்நாட்டில் குறிப்பாக நகரப் பகுதிகளில், வீட்டுமனை விற்பனைத் தொழில் அதிகரித்துள்ளதாலும் அதிகமான அளவில் தனியார் வாடகை வீடுகள் மற்றும் வீட்டு உரிமையாளர்கள் இருப்பதாலும், ஏற்கனவே நடைமுறையில் இருந்த பழைய சட்டமான தமிழ்நாடு கட்டடங்கள் (குத்தகை மற்றும் வாடகைக் கட்டுப்பாடு) சட்டம், 1960 ரத்து செய்யப்பட்டு, தமிழ்நாடு அரசால்

தமிழ்நாடு சொத்து உரிமையாளர்கள் மற்றும் வாடகைதாரர்களின் உரிமைகள் மற்றும் பொறுப்புகள் முறைப்படுத்துதல் சட்டம், 2017 (தமிழ்நாடு சட்டம் 42/2017) இயற்றப்பட்டது.

6.2 இச்சட்டமானது, திருத்தங்கள் செய்யப்பட்டு தமிழ்நாடு சட்டம் 39/2018 என்று வெளியிடப்பட்டது. இத்திருத்தப்பட்டச் சட்டம் பிப்ரவரி 22, 2019 முதல் நடைமுறைப்படுத்த அறிவிக்கை வெளியிடப்பட்டது. தமிழ்நாடு சொத்து உரிமையாளர்கள் மற்றும் வாடகைதாரர்களின் உரிமைகள் மற்றும் பொறுப்புகள் முறைப்படுத்துதல் விதிகள், 2019, பிப்ரவரி 22, 2019 முதல் நகர்ப்புறங்களுக்கு மட்டும் நடைமுறைக்கு கொண்டுவரப்பட்டன. அதனைத் தொடர்ந்து பிப்ரவரி 4, 2021 முதல் மாநிலத்தின் அனைத்து கிராமங்களிலும் நடைமுறைக்கு கொண்டுவரப்பட்டன. தமிழ்நாடு சொத்து உரிமையளர்கள் மற்றும் வாடகைதாரர்களின் உரிமைகள் மற்றும் பொறுப்புகள் முறைப்படுத்துதல் சட்டம், 2017, உள் வாடகை மீதான கட்டுபாடு, சொத்து மேலாளரின் கடமைகள் மற்றும் கடமை மீறுவதால் ஏற்படும் விளைவுகள், சொத்துரிமையாளர் இறக்கும் நேர்வில் வளாகங்களின் உடைமையை மீண்டும் பெறுதல் மற்றும் வெளியேற்றுதல் குறித்து திருத்தம் மேற்கொள்ளப்பட்டு 10-6-2022 அன்று செயல்பாட்டிற்கு கொண்டுவரப்பட்டது.

6.3 வாடகைதாரர் மற்றும் உரிமையாளர் இடையே செய்யப்பட்ட ஒப்பந்தத்தில் உள்ள நிபந்தனைகள் மற்றும் விதிமுறைகளின்படி வாடகையை முறைப்படுத்துவதும், வாடகைதாரர் மற்றும் உரிமையாளர்களின் உரிமைகள் மற்றும் பொறுப்புகளைச் சமன்செய்வதும், இச்சட்டத்தின் முக்கிய நோக்கமாகும். அனைத்து வாடகை ஒப்பந்தங்களைக் கட்டாயமாகப் பதிவு செய்ய இச்சட்டத்தில் வழிவகை செய்யப்பட்டுள்ளது.

6.4 இத்துறையினால் ஏற்படுத்தப்பட்ட வாடகை பதிவு செய்யும் வலைதளம் (www.tenancy.tn.gov.in) மூலமாக சொத்து உரிமையாளர்கள் மற்றும் வாடகைதாரர்கள் தங்களின் வாடகை ஒப்பந்தங்களைப் பதிவு செய்யலாம். 31-3-2023 வரை 11,426 வாடகை ஒப்பந்தங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

6.5 வாடகைக் கட்டுப்பாட்டு அதிகாரிகள் தேவையான ஆவணங்களைக் கூர்ந்தாய்வு செய்து சிரமம் இல்லாத வகையிலும் பயனீட்டாளர்களுக்கு எளிய வகையிலும் வாடகை ஒப்பந்த எண்கள்

2023 ஏப்ரல் 13]

வழங்குவார்கள். இச்சட்டப் பிரிவு 30 இன்கீழ் அந்தந்த மாவட்ட ஆட்சியாளர்களால் வாடகைக் கட்டுப்பாட்டு அதிகாரிகள் நியமனம் செய்யப்பட்டுள்ளனர். மேலும், வாடகை நீதிமன்றங்கள் மற்றும் வாடகைத் தீர்ப்பாயங்கள் முறையே இச்சட்டப் பிரிவு 32 மற்றும் 35 இன்கீழ் அமைக்கப்பட்டு செயல்பட்டு வருகின்றன.

6.6 வாடகைத் தீர்ப்பாயம் மேல்முறையீட்டை பிரதிவாதிக்கு அறிவிப்பு வழங்கிய நாளிலிருந்து 120 நாட்களுக்குள் தீர்வு செய்யும். வாடகை தீர்ப்பாயத்தின் முடிவே இறுதியானது. இதன்மீது மீண்டும் மேல்முறையீடு அல்லது சீராய்வு மேற்கொள்ள இயலாது.

7. சென்னை ஒருங்கிணைந்த பெருநகரப் போக்குவரத்துக் குழுமம் (CUMTA)

முன்னுரை

சென்னை ஒருங்கிணைந்த பெருநகரப் போக்குவரத்துக் குழுமமானது (CUMTA) சென்னை ஒருங்கிணைந்த பெருநகரப் போக்குவரத்துக் குழுமச் சட்டம் 2010 இன்கீழ் உருவாக்கப்பட்ட சட்டபூர்வமான அமைப்பாகும். சென்னைப் பெருநகரப் பகுதியில் (CMA) போக்குவரத்துச் சேவை மற்றும் பணிகளில் ஈடுபட்டுள்ள நிறுவனங்கள் / துறைகளை ஒருங்கிணைக்கும் செயலியக்கம் கொண்ட அமைப்பாகும்.

சென்னை ஒருங்கிணைந்த பெருநகரப் போக்குவரத்துக் குழுமத்தின் முதல் குழுமக் கூட்டம், 17-11-2022 அன்று குழுமத் தலைவர் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் பல முக்கிய முடிவுகள் எடுக்கப்பட்டன.

7.1 சென்னை ஒருங்கிணைந்த பெருநகரப் போக்குவரத்துக் குழுமம் (CUMTA) மேற்கொள்ளவிருக்கும் நடவடிக்கைகள்

1. *சென்னை ஒருங்கிணைந்தப் பெருநகரப் போக்குவரத்துக் குழுமத்திற்கு (CUMTA) அரசாணை (நிலை) எண் 70 வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை, நாள் 10-5-2022 இல் செயல்பாட்டு ஆவணத்திற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. இந்த ஆவணம் உலக வங்கியின் சென்னை நகரக் கூட்டமைப்பு–1 திட்டத்தின்கீழ்*

தயாரிக்கப்பட்டது. இந்த ஆவணம் சென்னை ஒருங்கிணைந்த பெருநகரப் போக்குவரத்துக் குழுமம் (CUMTA) மற்றும் இதர துறைகளுக்கு வழிகாட்டியாகச் செயல்படும்.

2. அரசாணை (நிலை) எண் 45, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை, நாள் 6-6-2022 இல் சென்னை ஒருங்கிணைந்த பெருநகரப் போக்குவரத்துக் குழுமத்திற்கு (CUMTA) சிறப்பு அதிகாரி பணியிடம் உருவாக்கப்பட்டது. இப்பணியிடம் இந்திய இரயில்வே போக்குவரத்து பணியில் (IRTS) மூத்த அதிகாரி கொண்டு நிரப்பப்பட்டது.

3. சென்னை ஒருங்கிணைந்த பெருநகரப் போக்குவரத்துக் குழுமத்திற்குப் பல்வேறு அரசு ஆணைகளின் மூலமாக 19 பணியிடங்களை அரசு உருவாக்கியுள்ளது. அவற்றுள் 12 பணியிடங்கள் நிரப்பப்பட்டுள்ளன. மீதமுள்ள பணியிடங்களை விரைவில் நிரப்புவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

4. அரசாணை (நிலை) எண் 6, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை, நாள் 6-1-2023 இல் சென்னை ஒருங்கிணைந்த பெருநகரப் போக்குவரத்துக் குழுமத்திற்கு (CUMTA) அலுவலகச் செலவினங்கள், சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழும (CMDA) நிலுவைத் தொகை செலுத்துதல் மற்றும் 2022–2023 ஆம் நிதியாண்டில் மெட்ரோஸ் (METROS) நந்தனத்தில் சென்னை ஒருங்கிணைந்த பெருநகரப் போக்குவரத்துக் குழும அலுவலகத்தை உருவாக்குவதற்காக சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்திற்கு முன்பணம் செலுத்த ரூ.8.08கோடி, அரசால் வழங்கப்பட்டது.

5. சென்னை ஒருங்கிணைந்த பெருநகரப் போக்குவரத்துக் குழுமத்தின்கீழ் (CUMTA) நான்கு துணைக் குழுக்கள் அரசாணை (நிலை) எண் 165, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை, நாள் 9-9-2022 இன் மூலமாக உருவாக்கப்பட்டது. அவை

 i. சாலைப் பாதுகாப்பு மற்றும் மோட்டார் அல்லாத போக்குவரத்து (NMT) துணைக்குழு,

ii. *பலவகையான போக்குவரத்து ஒருங்கிணைப்பு (MMI) துணைக்குழு,*

iii. *நகர்ப்புற போக்குவரத்து மீள்திறன் துணைக்குழு*

iv. *டிஜிட்டல் சென்னை துணைக்குழு,*

6. *உருவாக்கப்பட்ட நான்கு துணைக் குழுக்களும் நகரின் பல்வகைப் போக்குவரத்துத் திட்டங்களையும் ஆய்வு செய்து தொழில்நுட்ப ஆலோசனை மற்றும் பரிந்துரைகளை வழங்கத் துவங்கியுள்ளது.*

7.2 புதிய முயற்சிகள்

7.2.1கிளாம்பாக்கம் புதிய புறநகர் பேருந்து நிலையத்தில் போக்குவரத்து நெரிசலைக் குறைப்பதற்கான முயற்சிகள்

1. *கோயம்பேடு புறநகர் பேருந்து முனையத்தில் (CMBT) ஏற்படும் நெரிசலைக் குறைக்கும் நோக்கத்துடன் உருவாக்கப்படுகின்ற கிளாம்பாக்கம் புதிய புறநகர் பேருந்து முனையம் (NMBT) சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தின்(CMDA) முக்கியத் திட்டமாகும்.*

2. *சென்னை ஒருங்கிணைந்த பெருநகரப் போக்குவரத்துக் குழுமம் இத்திட்டத்தை ஆய்வு செய்து பயணிகளுக்கான கூடுதல் பயண இணைப்பினை வழங்குவதற்காக கிளாம்பாக்கத்தில் ஒரு புறநகர் இரயில் நிறுத்தம் தென்னக இரயில்வே துறைக்கு பரிந்துரை செய்துள்ளது.*

3. *இந்த இரயில் நிறுத்தத்தை, மாநகர் போக்குவரத்துக் கழக (MTC) முனையம் மற்றும் கிளாம்பாக்கம் புதிய புறநகர் பேருந்து முனையத்துடன் (NMBT) நகரும் மின்தரை (travelator), மின்தூக்கி (lift) மற்றும் நகரும் மின்படிக்கட்டு (escalator) கொண்ட மேல்மட்ட நடைமேடை (Skywalk) மூலமாக இணைப்பதற்கான சாத்தியக்கூறு மற்றும் விரிவான திட்ட அறிக்கையினைத் தயாரிக்க சென்னை ஒருங்கிணைந்த பெருநகரப் போக்குவரத்துக் குழுமம் துவங்கியுள்ளது.*

7.2.2 பல்வகை போக்குவரத்து ஒருங்கிணைப்பு (MMI):

1. *பெருநகர சென்னை மாநகராட்சியின் மெகா தெருக்கள் திட்டத்தின்கீழ் முன்மொழியப்பட்ட கிண்டி மற்றும்*

வண்ணாரப்பேட்டை பல்வகை போக்குவரத்து ஒருங்கிணைப்புத் திட்டங்களைச் சென்னை ஒருங்கிணைந்த பெருநகரப் போக்குவரத்துக் குழுமம் (CUMTA), பல்வகை போக்குவரத்து ஒருங்கிணைப்பு (MMI) துணைக்குழு மூலமாக ஆய்வு செய்து பயணிகளுக்கு உகந்த உள்கட்டமைப்புகளை மேம்படுத்தத் தொழில்நுட்ப ஆலோசனை வழங்கியுள்ளது.

2. சென்னை மெட்ரோ இரயில் பகுதி—II திட்டத்தில் விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்ட மெட்ரோ நிலையங்களில் பல்வகை போக்குவரத்து ஒருங்கிணைப்பு (MMI) செய்வதற்கான சாத்தியக் கூறினை ஆய்வு செய்யும் பணியினை, சென்னை ஒருங்கிணைந்த பெருநகரப் போக்குவரத்துக் குழுமம் மேற்கொண்டு வருகிறது.

7.2.3 பெருந்திரள் விரைவு இரயில் நிலையங்களை மேம்படுத்துதல் (MRTS)

பெருந்திரள் விரைவு இரயில் (MRTS) என்பது சென்னை நகரில் செயல்பட்டு வரும் தரையிலிருந்து உயர்த்தப்பட்ட புறநகர் இரயில் சேவை அமைப்பாகும். இந்தத் திட்டம் ஒன்றிய அரசு மற்றும் தமிழ்நாடு அரசின் மூலமாகக் கூட்டாகச் செயல்படுத்தப்பட்டு வருகிறது. சென்னை ஒருங்கிணைந்த பெருநகரப் போக்குவரத்துக் குழுமம் (CUMTA), பெருந்திரள் விரைவு இரயில் (MRTS) நிலையங்களை மேம்படுத்திப் பல்வகை போக்குவரத்து ஒருங்கிணைப்புகளை மேற்கொள்ளவும், பயணிகளின் எண்ணிக்கையை அதிகரிக்கவும் மற்றும் இந்நிலையங்களை வர்த்தகரீதியாகப் பயன்படுத்தவும் முன்மொழியப்பட்டுள்ளது.

7.2.4 இணைந்த செயல்பாடுகள் மற்றும் பயிற்சி:

1. சென்னை ஒருங்கிணைந்த பெருநகரப் போக்குவரத்துக் குழுமத்தை (CUMTA), லண்டன் போக்குவரத்து அமைப்பு (TfL) மற்றும் சிங்கப்பூர் தரைப் போக்குவரத்துக் குழுமம் (LTA) போன்ற நிறுவனங்கள்போல் உருவாக்க அந்நிறுவனங்களுடன் நீண்டகாலம் ஒன்றிணைந்து செயல்படுவதற்கான அம்சங்களைக் கண்டறியும் நோக்குடன் கலந்தாய்வுப் பேச்சுவார்த்தை துவக்கப்பட்டுள்ளது.

2023 ஏப்ரல் 13]

2. *சென்னை ஒருங்கிணைந்த பெருநகரப் போக்குவரத்துக் குழுமத்தின் (CUMTA) முயற்சியின் பலனாக TfL நிறுவனக்குழு சென்னைக்கு வருகை தந்து 2022 ஆம் ஆண்டு நவம்பர் 23, 24 மற்றும் 25 தேதிகளில் மூன்று நாட்கள் பயிலரங்கத்தை நடத்தியது.*

3. *இந்தியத் தொழிநுட்பக் கழகம்-சென்னை (IIT), இந்திய அறிவியல் கழகம்—பெங்களூரு (IISc), திட்டமிடுதல் மற்றும் கட்டடக்கலைப் பள்ளி—டெல்லி (SPA) மற்றும் அகமதாபாத்தின் சுற்றுச்சூழல் திட்டமிடுதல் மற்றும் தொழில்நுட்ப மையம் (CEPT) ஆகியவற்றுடனும் நீண்ட காலம் ஒன்றிணைந்து செயல்படுவதற்கான பேச்சுவார்த்தையைத் துவங்கியுள்ளது.*

7.2.5 ஒருங்கிணைந்த போக்குவரத்துத் திட்டம்:

ஒருங்கிணைந்த போக்குவரத்துத் திட்டம் என்பது சென்னைப் பெருநகரப் பகுதியில் (CMA) அனைத்து போக்குவரத்து சார்ந்த திட்டங்களுக்குமான ஒரு கொள்கை ஆவணமாகும். 2018-2019 இல் சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம் (CMRL) மற்றும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் (CMDA) ஒன்றிணைந்து சென்னைப் பெருநகரப் பகுதிக்கான (CMA) ஒருங்கிணைந்த போக்குவரத்துத் திட்டத்தைத் (CMP) தயாரித்தது. சென்னை பெருநகரப் பகுதியை அரசு 1189 சதுர கி.மீலிருந்து 5904 சதுர கி.மீ—க்கு விரிவுபடுத்தியுள்ளது. இதைக் கருத்தில்கொண்டு விரிவு படுத்தப்பட்ட சென்னை பெருநகரப் பகுதிக்கு (CMA) ஒருங்கிணைந்த போக்குவரத்துத் திட்டத்தை (CMP) புதுப்பிக்கும் பணியை, சென்னை ஒருங்கிணைந்த பெருநகரப் போக்குவரத்துக் குழுமம் (CUMTA) துவங்கியுள்ளது.

7.2.6 டிஜிட்டல் சென்னை:

1. *டிஜிட்டல் சென்னை என்பது சென்னை ஒருங்கிணைந்த பெருநகரப் போக்குவரத்துக் குழுமத்தின் (CUMTA) உலக வங்கியின் சென்னை நகரக் கூட்டமைப்பு-2 நகர்புறப் போக்குவரத்து மற்றும் இடவசதி மேம்பாட்டுத் (UMSD) திட்டத்தின்கீழ் உருவாக்கப்பட்ட மற்றுமொரு முக்கியமான திட்டமாகும்.*

[2023 ஏப்ரல் 13

2. இந்தத் திட்டத்தின்கீழ், ஒருங்கிணைந்த நகர்ப்புற தரவு மையம் (Integrated Urban Data Platform, IUDP) மற்றும் நகர்ப்புறத் திட்டங்களின் திட்டமிடுதல் மற்றும் மேலாண்மை (Urban Project Planning and Management, UPPM) ஆகியவற்றை உருவாக்க முன்மொழியப்பட்டுள்ளது.

3. நகர்ப்புறத் திட்டப் பணியின் திட்டமிடுதல் மற்றும் மேலாண்மை (UPPM) நகர்ப்புறப் போக்குவரத்து சேவை மற்றும் பணிகளில் ஈடுபட்டுள்ள நிறுவனங்கள்/துறைகளுக்குத் திட்டமிடல், மேலாண்மை, ஒருங்கிணைப்பு, மேற்பார்வை மற்றும் கண்காணிப்புக்கு உதவும். ஒரே நேரத்தில் தொடர்ச்சியான திட்டங்களின் நேரம் மற்றும் கால அளவை ஒழுங்குபடுத்துவதன் மூலம் போக்குவரத்து மேலாண்மை மற்றும் பொது பாதுகாப்புக்குப் பங்களிக்க முடியும்.

4. டிஜிட்டல் சென்னை திட்டம்மூலம் உள்கட்டமைப்புத் திட்டங்களைச் சரியான நேரத்தில் செயல்படுத்தி முடிப்பதை உறுதி செய்ய முடியும், ஒரே பகுதியில் பல்வேறு நிறுவனங்கள் / துறைகளால் மேற்கொள்ளப்படும் திட்டங்களால் அரசு வளம் பலமுறை விரயமாகுவதை தடுக்க முடியும். ஆக்கிரமிப்புகளில் இருந்து முக்கியமான வழித்தடங்களைப் பாதுகாக்கவும், ஒப்பந்ததாரர்களின் செயல் திறனைக் கண்காணிக்கவும் முடியும். டிஜிட்டல் சென்னை மூலமாகப் புதிய கட்டுமானத்தின் தற்போதைய செயல்பாடுகள் குறித்து கண்காணிக்கவும் மற்றும் அரசு சொத்துக்களை மேலாண்மை செய்யவும் உதவும்.

சென்னை ஒருங்கிணைந்த பெருநகர போக்குவரத்து குழுமத்தின் தொலைநோக்கானது சென்னையின் ஒவ்வொரு குடிமகனுக்கும், தடையற்ற மற்றும் நிலையான நகர்ப்புற போக்குவரத்து கட்டமைப்பு மற்றும் சேவைகளை வழங்குவதன் மூலம் நகரத்தில் வசிப்பதற்கான உரிமையை உறுதி செய்வதாகும். பயணிகளை மையமாகக் கொண்ட அணுகுமுறையின் மூலம், பாதுகாப்பான, உள்ளடக்கிய, சுத்தமான, ஆரோக்கியமான மற்றும் மாசுபடுத்தாத நிலையான போக்குவரத்து தீர்வுகளை உருவாக்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. இந்த நோக்கத்தை அடைய, சென்னை ஒருங்கிணைந்த பெருநகர போக்குவரத்து குழுமமானது சென்னையின் பெருநகரப் பகுதியில் பல்வேறு

2023 ஏப்ரல் 13]

போக்குவரத்து முறைகள் (நடை, சைக்கிள், மோட்டார் அல்லாத போக்குவரத்து, பொதுப் போக்குவரத்து போன்றவை) திட்டமிடல், செயல்பாடுகள் மற்றும் கண்காணிப்பை வழிநடத்தும் ஒரு ஒற்றை முகமை நிறுவனமாக செயல்படும்.


நிறைவுரை

மாண்புமிகு முதலமைச்சரின் 'எல்லாருக்கும் எல்லாம்' என்ற தொலைநோக்குப் பார்வையை நிறைவேற்ற, இந்தத் துறையானது அனைவருக்கும் வாங்கும் திறனுக்கேற்ற விலையில் வீடுகளை உறுதி செய்வதற்கும், நகரங்கள் மற்றும் குடியிருப்புகளை, உள்ளடக்கிய, பாதுகாப்பான, மீள் தன்மையுடைய மற்றும் நிலையானதாக மாற்றுவதற்கும் உறுதி பூண்டுள்ளது. நிலையான நகரங்கள் மற்றும் சமூகங்களில் கவனம் செலுத்துவது, வரும் தலைமுறைகளுக்கு சிறந்த எதிர்காலத்தை உருவாக்குவதற்கான ஒரு படிக்கல்லாகும். வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறையின் இந்த முயற்சிகள் பல இலட்சக்கணக்கான மக்களின் வாழ்க்கையில் குறிப்பிடத்தக்க முன்னேற்றங்களை ஏற்படுத்தும் என்பதில் ஐயமில்லை.

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS


இணைப்பு - I

நகர் ஊரமைப்பு இயக்ககத்தின் நிர்வாக அமைப்பு



2023 ஏப்ரல் 13]

மாவட்ட அலுவலகத்தின் நிர்வாக அமைப்பு – இணைப்பு – II



இணைப்பு - III

வ. எண்	திட்டப் பகுதி	மாவட்டம்	பரப்பளவு ச.கி.மீ.
1.	ஒசூர்	கிருஷ்ணகிரி	734.08
2.	கோயம்புத்தூர்	கோயம்புத்தூர்	1531.53
3.	ஈரோடு	ஈரோடு	731.00
4.	திருச்சிராப்பள்ளி	திருச்சிராப்பள்ளி	804.55
5.	மதுரை	மதுரை	1254.93
6.	திருப்பூர்	திருப்பூர்	618.78
7.	நாகப்பட்டினம் & வேளாங்கன்னி	நாகப்பட்டினம்	80.08
8.	இராஜபாளையம்	விருதுநகர்	161.68
9.	காரைக்குடி	சிவகங்கை	115.77
10.	கடலூர்	கடலூர்	315.35
11.	காஞ்சிபுரம்	காஞ்சிபுரம்	155.25
12.	வேலூர்	வேலூர்	351.21
13.	ஆம்பூர்	திருப்பத்தூர்	17.97
14.	திருவண்ணாமலை	திருவண்ணாமலை	65.53
15.	சேலம்	சேலம்	1273.24
16.	தஞ்சாவூர்	தஞ்சாவூர்	543.46
17.	கும்பகோணம்	தஞ்சாவூர்	272.14
18.	புதுக்கோட்டை	புதுக்கோட்டை	115.00
19.	திண்டுக்கல்	திண்டுக்கல்	1247.38
20.	நாகர்கோவில்	கன்னியாகுமரி	438.86
21.	இராமேஸ்வரம்	இராமநாதபுரம்	52.36

2023 ஏப்ரல் 13]

வ. எண்	திட்டப்பகுதி	மாவட்டம்	பரப்பளவு ச.கி.மீ.
22.	தூத்துக்குடி	தூத்துக்குடி	468.02
23.	திருநெல்வேலி	திருநெல்வேலி	854.53
24.	செங்கல்பட்டு	செங்கல்பட்டு	727.49
25.	தருமபுரி	தருமபுரி	180.19
26.	பழனி	திண்டுக்கல்	93.41
27.	கோபிசெட்டிபாளையம்	ஈரோடு	147.45
28.	கிருஷ்ணகிரி	கிருஷ்ணகிரி	125.49
29.	கரூர்	கரூர்	85.76
30.	நாமக்கல்	நாமக்கல்	335.27
31.	உதகமண்டலம்	நீலகிரி	442.79
32.	அரக்கோணம்	ராணிப்பேட்டை	107.35
33.	ஆத்தூர்-நரசிங்கபுரம்	சேலம்	94.45
34.	திருவள்ளூர்	திருவள்ளூர்	672.12
35.	பூம்புகார்	மயிலாடுதுறை	55.32
36.	கோவில்பட்டி	தூத்துக்குடி	264.42
37.	உடுமலைப்பேட்டை	திருப்பூர்	241.60
38.	தேனி அல்லிநகரம்	தேனி	239.64
39.	கும்மிடிப்பூண்டி	திருவள்ளூர்	200.62
40.	திருவாரூர்	திருவாரூர்	90.32
41.	விழுப்புரம்	விழுப்புரம்	424.70
42.	சிவகாசி	விருதுநகர்	83.83
43.	ஜெயங்கொண்டம்	அரியலூர்	23.09
44.	திருக்கழுக்குன்றம்	செங்கல்பட்டு	18.56
45.	புஞ்சைபுளியம்பட்டி	ஈரோடு	7.00


வ. எண்	திட்டப் பகுதி	மாவட்டம்	பரப்பளவு ச.கி.மீ.
46.	கள்ளக்குறிச்சி	கள்ளக்குறிச்சி	248.15
47.	பள்ளிபாளையம்	நாமக்கல்	4.10
48.	நெல்லியாளம்	நீலகிரி	94.28
49.	வேதாரண்யம்	நாகப்பட்டினம்	36.26
50.	கீரனூர்	புதுக்கோட்டை	16.50
51.	கீழக்கரை	இராமநாதபுரம்	2.49
52.	காங்கேயம்	திருப்பூர்	177.80
53.	வெள்ளகோயில்	திருப்பூர்	64.75
54.	ஜோலார்பேட்டை	திருப்பத்தூர்	17.84
55.	கூடலூர்	தேனி	57.17
56.	காயல்பட்டினம்	தூத்துக்குடி	29.37
57.	வந்தவாசி	திருவண்ணாமலை	41.64
58.	விக்கிரமசிங்கபுரம், அம்பாசமுத்திரம்	திருநெல்வேலி	67.85
59.	பேர்ணாம்பட்டு	வேலூர்	7.61
60.	மாமல்லபுரம்	செங்கல்பட்டு	277.58
61.	மதுராந்தகம்	செங்கல்பட்டு	38.90
62.	மாமல்லபுரம் (புதுநகர் வளர்ச்சிக் குழுமம்)	செங்கல்பட்டு	12.56
63.	வால்பாறை	கோயம்புத்தூர்	217.87
64.	மேட்டுப்பாளையம்	கோயம்புத்தூர்	7.20
65.	சிதம்பரம்	கடலூர்	137.93
66.	விருத்தாசலம்	கடலூர்	136.91
67.	பண்ருட்டி	கடலூர்	128.64

வ. எண்	திட்டப் பகுதி	மாவட்டம்	பரப்பளவு ச.கி.மீ.
68.	நெல்லிக்குப்பம்	கடலூர்	56.18
69.	பவானி	ஈரோடு	314.56
70.	சத்தியமங்கலம்	ஈரோடு	165.47
71.	பவானிசாகர்	ஈரோடு	78.59
72.	குழித்துறை	கன்னியாகுமரி	37.22
73.	பத்மநாபபுரம்	கன்னியாகுமரி	34.42
74.	குளச்சல்	கன்னியாகுமரி	15.96
75.	காகிதபுரம்	கரூர்	161.66
76.	குளித்தலை	கரூர்	37.81
77.	உசிலம்பட்டி	மதுரை	8.76
78.	மயிலாடுதுறை	மயிலாடுதுறை	75.86
79.	சீர்காழி	மயிலாடுதுறை	36.60
80.	திருச்செங்கோடு	நாமக்கல்	53.60
81.	வேலூர் (பரமத்தி)	நாமக்கல்	44.59
82.	ராசிபுரம்	நாமக்கல்	22.87
83.	குமாரபாளையம்	நாமக்கல்	19.45
84.	அறந்தாங்கி	புதுக்கோட்டை	59.76
85.	பரமக்குடி	இராமநாதபுரம்	56.78
86.	இராமநாதபுரம்	இராமநாதபுரம்	6.33
87.	இராணிப்பேட்டை & வாலாஜாபேட்டை	இராணிப்பேட்டை	120.40
88.	ஆற்காடு	இராணிப்பேட்டை	84.21
89.	எடப்பாடி	சேலம்	109.77
90.	மேட்டூர்	சேலம்	65.11

வ. எண்	திட்டப் பகுதி	மாவட்டம்	பரப்பளவு ச.கி.மீ.
91.	ஏற்காடு	சேலம்	62.39
92.	சிவகங்கை	சிவகங்கை	47.15
93.	தேவகோட்டை	சிவகங்கை	12.42
94.	சங்கரன்கோவில்	தென்காசி	119.99
95.	தென்காசி	தென்காசி	113.20
96.	கடையநல்லூர்	தென்காசி	63.18
97.	புளியங்குடி	தென்காசி	55.16
98.	குற்றாலம்	தென்காசி	7.68
99.	செங்கோட்டை	தென்காசி	2.68
100.	பல்லடம்	திருப்பூர்	3.48
101.	பட்டுக்கோட்டை	தஞ்சாவூர்	43.39
102.	குன்னூர் & கோத்தகிரி	நீலகிரி	394.35
103.	பெரியகுளம்	தேனி	112.25
104.	கம்பம்	தேனி	77.36
105.	சின்னமனூர்	தேனி	76.61
106.	போடிநாயக்கனூர்	தேனி	75.09
107.	திருத்தணி	திருவள்ளூர்	66.32
108.	மன்னார்குடி	திருவாரூர்	56.90
109.	கூத்தாநல்லூர்	திருவாரூர்	40.04
110.	திருத்துறைப்பூண்டி	திருவாரூர்	35.29
111.	மணப்பாறை	திருச்சிராப்பள்ளி	59.48
112.	துறையூர்	திருச்சிராப்பள்ளி	51.50
113.	வடக்குவள்ளியூர்	திருநெல்வேலி	103.56
114.	திசையன்விளை	திருநெல்வேலி	18.63

வ. எண்	திட்டப் பகுதி	மாவட்டம்	பரப்பளவு ச.கி.மீ.
115.	திருப்பத்தூர்	திருப்பத்தூர்	106.67
116.	வாணியம்பாடி	திருப்பத்தூர்	8.91
117.	தாராபுரம்	திருப்பூர்	85.06
118.	போளூர்	திருவண்ணாமலை	33.06
119.	திருவத்திபுரம்	திருவண்ணாமலை	52.90
120.	ஆரணி	திருவண்ணாமலை	69.06
121.	குடியாத்தம்	வேலூர்	37.59
122.	திண்டிவனம்	விழுப்புரம்	281.52
123.	ஸ்ரீவில்லிபுத்தூர்	விருதுநகர்	83.50
124.	சாத்தூர்	விருதுநகர்	53.54
125.	விருதுநகர்	விருதுநகர்	49.88
126.	அருப்புக்கோட்டை	விருதுநகர்	38.97
127.	வடலூர்	கடலூர்	96.24
128.	திருக்கோவிலூர்	கள்ளக்குறிச்சி	11.99
129.	கூடலூர்	நீலகிரி	47.71
130.	சோளிங்கர்	இராணிப்பேட்டை	9.51
131.	தோப்பூர் - உச்சப்பட்டி	மதுரை	107.56
132.	பெரம்பலூர் (புதியது)	பெரம்பலூர்	67.13
133.	அரியலூர் (புதியது)	அரியலூர்	77.37
134.	ஒட்டன்சத்திரம் (புதியது)	திண்டுக்கல்	12.42
135.	பொள்ளாச்சி (மறுஆய்வு)	கோயம்புத்தூர்	18.36
	மொத்தம்		23,129.98

இணைப்பு - IV


நிறுவன அமைப்புப் படம்
தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம்
தலைவர்
மேலாண்மை இயக்குநர்
செயலாளர் (ம) பணியாளர் அலுவலர்
நிர்வாகம்
ஒதுக்கீடு (நகரம் (ம) புறநகர்)
சட்டம்
பொதுப்பிரிவு
தலைமைப் பொறியாளர் (நகரம்)
தலைமைப் பொறியாளர் (புறநகர்)
மேற்பார்வைப் பொறியாளர்கள் (தலைமையகம் (ம) தரக்கட்டுப்பாடு)
நிதி ஆலோசகர்
நிதி மற்றும் கணக்கு அலுவலர்கள்
தலைமை வருவாய் அலுவலர்
வாடகை மற்றும் வருவாய் அலுவலர்கள்
மாவட்ட வருவாய் அலுவலர் (திட்டம்)
மாவட்ட வருவாய் அலுவலர் (நில எடுப்பு)
நில எடுப்பு மற்றும் வருவாய் அலுவலர்கள்
மேற்பார்வைப் பொறியாளர்கள் (நகர சரகங்கள்)
மேற்பார்வைப் பொறியாளர்கள் (புறநகரச் சரகங்கள்)
செயற்பொறியாளர் மற்றும் நிர்வாக அலுவலர்கள்
செயற்பொறியாளர் மற்றும் நிர்வாக அலுவலர்கள்

இணைப்பு-VI

(356 ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.)

மானியக் கோரிக்கை எண் 26-வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியம்

கொள்கை விளக்கக் குறிப்பு, 2023-2024

முன்னுரை

"ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காண்போம்" என்ற குறிக்கோளுடன் தமிழ்நாட்டில் வாழும் நகர்ப்புர ஏழைக்குடும்பங்களுக்கு அனைத்து வசதிகளுடன் கூடிய வாழ்விட மேம்பாட்டினை ஏற்படுத்த முன்னாள் முதலமைச்சர் முத்தமிழ் அறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களால் 1970 ஆம் ஆண்டு தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியம் தொடங்கப்பட்டது. நகர்ப்புர ஏழைக் குடும்பங்களின் வாழ்க்கை நிலையினை உயர்த்தவும் அவ்விடங்களைக் குடியிருக்கத்தக்கதாக மேம்படுத்தவும் அடிப்படை வசதிகள் உள்ளிட்ட திறனுக்கேற்ற வீட்டுவசதி வழங்கும் நோக்கத்துடன் 1971 ஆம் ஆண்டு தமிழ்நாடு குடிசைப்பகுதிகள் (மேம்படுத்துதல் மற்றும் அகற்றுதல்) சட்டம் (தமிழ்நாடு சட்டம் 11/1971) இயற்றப்பட்டது.

குடிநீர், சுகாதாரம், மின்சாரம், போக்குவரத்து, கல்வி, மருத்துவ வசதி, திடக்கழிவு மேலாண்மை, பொதுப் பயன்பாட்டிற்கான இடம் போன்ற போதுமான அடிப்படை வசதிகளுடன் வீட்டுவசதி மேம்பாட்டுத் திட்டத்தினை உருவாக்குவது அவசியமாகின்றது. அதற்கிணங்க, இந்நோக்கினைக் கருத்தில் கொண்டு, இவ்வாரியத்தால் அப்பகுதிகளின் முழுமையான வாழ்விட மேம்பாட்டிற்கு அரசு முழு முயற்சியினை மேற்கொண்டுள்ளது. இவ்வாரியத்தின் முதன்மைப் பங்கானது, குடிசைப்பகுதிகளை அகற்றுதலுக்கு மாறாக, குடிசைப்பகுதிகளை மேம்படுத்துதல், மற்றும் அவற்றை ஏற்புடைய வாழ்விடமாக மாற்றுதல் ஆகும். எனவே, அரசாணை (நிலை) எண் 103, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை, நாள் 01-09-2021 இல், தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியத்தின்

பெயர் "தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியம்" என அரசால் மாற்றப்பட்டுள்ளது. அதனடிப்படையில் மேற்கூறப்பட்ட பெயர் மாற்றத்திற்குச் சட்டபூர்வ அங்கீகாரம் வழங்க, தமிழ்நாடு குடிசைப்பகுதிகள் (மேம்படுத்துதல் மற்றும் அகற்றுதல்) சட்டத்தில் அரசால் திருத்தம் செய்யப்பட்டுள்ளது.

நகரங்களில் பொருளாதார நடவடிக்கைகள் செறிந்துள்ளதன் காரணமாகக் கிராமப்புற ஏழை மக்கள் அவர்களது வாழ்வாதாரத்திற்காக வேலை வாய்ப்பைத் தேடி நகரங்களுக்கு ஈர்க்கப்படுகின்றனர். நகரமயமாதல், பொருளாதார மேம்பாட்டினை எளிதாக்கினும், துரித நகரமயமாதலின் காரணமாகக் குடிசைப்பகுதிகள் பெருகிச் சமூக மற்றும் கொள்கை அளவிலான சவால்களை ஏற்படுத்துகின்றன.

தமிழ்நாடு, நாட்டின் நகரமயமாக்கப்பட்ட முதன்மை மாநிலங்களில் ஒன்றாகும். இம்மாநிலத்தின் நகர்ப்புற மக்கட் தொகை 2023 ஆம் ஆண்டில் 60 சதவிகிதத்தை எட்டும் என்றும், 2031 ஆம் ஆண்டில் 67 சதவிகிதமாக உயரும் எனவும் எதிர்பார்க்கப்படுகிறது. துரித நகரமயமாதலின் காரணமாக மிகவும் பாதிக்கப்பட்ட பிரிவினர்களான நகர ஏழை மக்கள், துயரமான சமூகப் பொருளாதார நிலைகளில் வாழ்கின்றனர். எனவே, மக்கள் நலனை கருத்தில் கொண்ட இந்த அரசு குடிசைப்பகுதிகளை மேம்படுத்துதல் மற்றும் திறனுக்கேற்ற வீட்டு வசதி வழங்கல் போன்றவற்றை ஈடுபாட்டுடன் உற்று நோக்க வேண்டிய முக்கிய பகுதிகளாகக் கருதி இவற்றை அடைய முனைப்புடன் செயல்பட்டு வருகிறது.

2023–2024 வரவு செலவுத் திட்ட மதிப்பீடு

ரூபாய் ஆயிரத்தில் (தொகு மொத்தம்)

வ. எண்	துறைகள்		வருவாய்	மூல தனம்	கடன்	மொத்தம்
1.	வீட்டுவசதி (ம) நகர்ப்புற வளர்ச்சித் துறை—தலைமைச் செயலகம்	அனுமதித்தது	167,75,95	———	211,50,00	379,25,95

2023 ஏப்ரல் 13]

வ. எண்	துறைகள்		வருவாய்	மூல தனம்	கடன்	மொத்தம்
2.	நகர் ஊரமைப்பு இயக்ககம்	சாட்டியது அனுமதித்தது	*1* *736,57,66*	— —	— —	*1* *736,57,66*
3.	கூட்டுறவு வீட்டுவசதி சங்கங்கள் () பதிவாளர்)	சாட்டியது அனுமதித்தது	*1* *14,05,31*	— —	— *1*	*1* *14,05,32*
4.	சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம்	அனுமதித்தது	*50,00,02*	*2,000,00,03*	*8,015,00,01*	*10,065,00,06*
5.	தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம்	அனுமதித்தது	*32,16,14*	*1*	—	*32,16,15*
6.	தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியம்	அனுமதித்தது	*2,727,18,07*	*4*	*1*	*2,727,18,12*
7.	சென்னை ஒருங் கிணைந்த பெருநகர போக்கு வரத்து குழுமம்	அனுமதித்தது	*14,56,05*	—	—	*14,56,05*
மொத்தம்		**சாட்டியது** **அனுமதித்தது**	**2** **3,742,29,20**	**...** **2,000,00,08**	**-** **8,226,50,03**	**2** **13,968,79,31**

1. நிறுவன அமைப்பு

தமிழ்நாடு குடிசைப்பகுதி (மேம்பாடு மற்றும் அகற்றுதல்) சட்டம் 1971 இன்கீழ் இயங்கிவரும் தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியம், தமிழ்நாடு அரசின் வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறையின்கீழ் செயல்பட்டு வருகிறது. தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியத்தின் நிறுவன அமைப்பினை விளக்கும் படம் இணைப்பு-I இல் விவரிக்கப்பட்டுள்ளது.

2. நிலையான மேம்பாட்டிற்கான இலக்கு-11

*"நிலையான மேம்பாடு இலக்கு-11 இன்கீழ் (*Sustainable Development Goal*—11) 2030 ஆம் ஆண்டிற்குள் "அனைவரும் போதுமான, பாதுகாப்பான மற்றும் திறனுக்கேற்ற வீட்டுவசதி மற்றும் அடிப்படை வசதிகள் பெறுவதை உறுதி செய்தல், நகர்ப்புற குடிசைப்பகுதிகளை மேம்படுத்துதல்" போன்றவை இலக்காக உள்ளன. இந்த இலக்கினை அடைதல் தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியத்தின் குறிக்கோளாகும்.*

3. 1970 முதல் 2023 வரையிலான சாதனைகள்

*தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியத்தால் 4.86 இலட்சத்திற்கும் அதிகமான அடுக்குமாடிக் குடியிருப்புகள் மற்றும் தனி வீடுகள் (மறுகட்டுமானம் உட்பட) சென்னை மற்றும் பிற நகரங்களில் கட்டப்பட்டுள்ளன. மேலும், சென்னைப் பெருநகர் வளர்ச்சித் திட்டம் (*MUDP*) மற்றும் தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சித் திட்டத்தின்கீழ் (*TNUDP*) 1.31 இலட்சம் குடும்பங்களுக்கு மேம்படுத்தப்பட்ட மனைகள் உருவாக்கப்பட்டுள்ளன.*

தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியத்தால் 393 அடுக்குமாடி குடியிருப்பு திட்டப்பகுதிகளில் கட்டப்பட்டுள்ள 1,78,714 அடுக்குமாடி குடியிருப்புகள் பராமரிக்கப்படுகின்றன. அவற்றுள், சென்னை மாநகரில் 203 திட்டப்பகுதிகளில் 1,14,158 அடுக்குமாடிக் குடியிருப்புகளும் மற்றும் இதர நகரங்களில் 190 திட்டப்பகுதிகளில் 64,556 அடுக்குமாடிக் குடியிருப்புகளும் உள்ளன.

4.நகர்ப்புர ஏழைகளுக்கான வாழ்விட மேம்பாடு – பின்பற்றப்படும் அணுகுமுறைகள் மற்றும் கொள்கைகள்

- *தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியம், அதன் முதல் பத்தாண்டு சேவைகளில், குடிநீர் விநியோகம், கழிவுநீரகற்றுதல், சாலைகள் மற்றும் தெருவிளக்குகள் அமைத்தல் போன்றவற்றுடன் கூடிய அடுக்குமாடிக் குடியிருப்புகளைக் கட்டும் பணிகளில் கவனம் செலுத்தியது. இக்குடியிருப்புகள் தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியத்தால் பராமரிக்கப்பட்டு வருகின்றன.*

- *பின்னர் நகர ஏழை குடும்பங்களின் விருப்பத்திற்கிணங்க, உலக வங்கி நிதியுதவியுடன் செயல்படுத்தப்பட்ட சென்னை*

2023 ஏப்ரல் 13]

நகர்ப்புற வளர்ச்சி திட்டம் மற்றும் தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சி திட்டங்களின்கீழ் உறைவிடத்திற்கான நிதியுதவி மற்றும் நில உரிமத்துடன் "உள்ளது உள்ளபடி" நிலையில் கட்டமைப்பு மேம்பாட்டுப் பணிகள் அமைக்கப்பட்டன.

- *நீர் வழிகளின் கரைகள், சாலையின் ஓரங்கள் மற்றும் பொது பயன்பாட்டிற்கான திட்டப்பணிகளுக்கு தேவைப்படும் இடங்களில் ஏழ்மை நிலையில் வாழும் நகர்ப்புர ஏழைக் குடும்பங்களுக்குச் சமுதாய மற்றும் அடிப்படை கட்டமைப்பு வசதிகளுடன் ஒருங்கிணைந்த நகர மேம்பாட்டில் அடுக்குமாடி குடியிருப்புகள் மாற்றிடங்களில் வழங்கப்படுகின்றன.*

- *பழுதடைந்த அடுக்குமாடிக் குடியிருப்பு திட்டப்பகுதிகள் மற்றும் அதன் அருகிலுள்ள குடிசைப்பகுதிகளில் வாழும் குடும்பங்கள் மறுகட்டுமானத் திட்டங்களின்கீழ் கட்டப்படும் புதிய குடியிருப்புகளில் மறுகுடியமர்வு செய்யப்படுகின்றனர்.*

- *நகரங்களின் குடிசைப்பகுதிகளில் ஏற்படும் தீ விபத்துக்களைத் தடுக்க தீப்பிடிக்காத வீடுகள் பெருமளவில் கட்டப்பட்டன.*

- *அடுக்குமாடி குடியிருப்புத் திட்டப்பகுதிகளின் தோற்றப் பொலிவினை மேம்படுத்தவும், அக்குடியிருப்புகளில் வாழும் மக்களின் வாழ்க்கைக்குத் தேவையான வசதிகள் ஏற்படுத்திடவும் இக்குடியிருப்புத் திட்டப் பகுதிகளில் புனரமைப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.*

- *அடுக்குமாடிக் குடியிருப்புகளைப் பராமரிக்கக் குடியிருப்போர் நலச்சங்கங்களை உருவாக்க பயனாளிகள் ஊக்குவிக்கப்படுகின்றனர்.*

5. தற்போதைய திட்டப்பணிகள்

5.1 வாழ்விடங்களிலேயே உட்கட்டமைப்புகளுடன் அடுக்குமாடி குடியிருப்புகள் கட்டுதல்

நகர்ப்புற ஏழைகள் நெருக்கமாக வாழும் ஆட்சேபணையற்ற நிலங்களில் அவர்தம் வாழுமிடங்களில் சாத்தியமான தளப்பரப்பு

குறியீட்டின் (FSI) அடிப்படையில் அடுக்குமாடிக் குடியிருப்புகள் கட்டப்பட்டு, அக்குடியிருப்புகள் அப்பகுதியில் முன்னர் வாழ்ந்த குடும்பங்களுக்கு ஒதுக்கீடு செய்யப்படுகின்றன. இக்குடியிருப்புகள், குடிநீர் மற்றும் கழிவுநீரகற்று வசதி, மின்தூக்கி, சாலைகள், தெரு மின்விளக்குகள், கான்கிரிட் நடைபாதை, மழைநீர் வடிகால் போன்ற அடிப்படை வசதிகளுடன் கட்டப்படுகின்றன. ஒவ்வொரு குடியிருப்பிலும் ஒரு பல்நோக்கு அறை, உறங்கும் அறை, சமையலறை மற்றும் கழிவறை உள்ளன. இக்குடியிருப்புகள் தகுதி வாய்ந்த நகர்ப்புற ஏழைக் குடும்பங்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டு வருகின்றன.

5.2 அடிப்படை மற்றும் சமூகக் கட்டமைப்பு வசதிகளுடன் மாற்றிடங்களில் அடுக்குமாடிக் குடியிருப்புகள்

சாலையின் ஓரங்கள், நதிக்கரைகள் மற்றும் பொதுத் திட்டப்பணிகளுக்குத் தேவைப்படும் இடங்கள் போன்ற பகுதிகளில் வாழும் நகர ஏழைக் குடும்பங்களுக்கு அவர்களது வாழ்விடங்களில் அடுக்குமாடிக் குடியிருப்புகள் கட்ட இயலாது. இக்குடும்பங்களை மறுகுடியமர்வு செய்ய அருகில் உள்ள காலி நிலங்களில், மின்தூக்கி, குடிநீர் வசதி, கழிவுநீரகற்று வசதி மற்றும் சமூக வசதிகளான பள்ளிகள், நூலகம், பூங்காக்கள், அங்கன்வாடி மையங்கள், ஆரம்ப சுகாதார நிலையம், பேருந்து நிலையம், தொழிற்பயிற்சி நிலையம், சிறு கடைகள், பால் விற்பனை நிலையம், சமுதாயக் கூடம் போன்ற வசதிகளுடன் அடுக்குமாடிக் குடியிருப்புகள் கட்டப்பட்டு ஒருங்கிணைந்த நகரங்களாக மேம்படுத்தப்படுகின்றன. மறுகுடியமர்வின் போது வாழ்வாதாரங்களை எளிதாக்க இடமாற்று தொகை மற்றும் வாழ்வாதாரத் தொகை ஒவ்வொரு குடும்பத்திற்கும் வழங்கப்படுகிறது. மேலும், மறுகுடியிருப்பு திட்டப்பகுதியில் அக்குடும்பங்கள் வேலை வாய்ப்புப் பெறுவதை எளிதாக்க, வாழ்வாதாரத் திறன் மேம்பாட்டுப் பயிற்சிகள் மற்றும் வேலைவாய்ப்பு முகாம்கள் நடத்தப்படுகின்றன.

5.3 பழுதடைந்த அடுக்குமாடிக் குடியிருப்புகள் மறுகட்டுமானம்

காலகடப்பு, நீண்டகால பயன்பாடு மற்றும் மாறுபட்ட தட்பவெப்ப நிலையின் காரணமாக, பல ஆண்டுகளுக்கு முன்பு கட்டப்பட்ட அடுக்குமாடிக் குடியிருப்புகளில் சில பழுதடைந்து அப்பகுதிகளில் வாழும் குடும்பங்களின் உயிர்களுக்கும் உடைமைகளுக்கும் ஆபத்தினை ஏற்படுத்தும் நிலையில் உள்ளன.

2023 ஏப்ரல் 13]

இக்குடியிருப்புகளின் பாதிப்புத்தன்மை குறித்து தொழில்நுட்பக் குழுவினரால் ஆய்வு செய்யப்பட்டு, நிலையற்ற குடியிருப்புகள் எனப் பரிந்துரைக்கப்பட்ட பழைய குடியிருப்புகள் இடிக்கப்பட்டு, மறுகட்டுமானப் பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன. இக்குடியிருப்புகளில் வாழும் குடும்பங்கள் அவர்கள் முன்னர் வாழ்ந்த குடியிருப்புகளைக் காலி செய்து கட்டுமான காலத்தில் திட்டப்பகுதிக்கு வெளியே வாடகை செலுத்தி வாழ்வதற்கு ஏதுவாக முன்னர் வழங்கப்பட்ட ஒரு முறை கருணைத் தொகையான ரூ.8,000/- தற்போது ரூ.24,000/- ஆக உயர்த்தி அரசாணை 4(D) எண் 48, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை, நாள் 22-11-2021 இல் ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. இப்புதிய குடியிருப்புகள் முன்னர் சிதிலமடைந்த குடியிருப்புகளில் வாழ்ந்த குடும்பங்களுக்கு ஒதுக்கீடு செய்யப்படுகின்றன. பெரும்பாலான திட்டப்பகுதிகளில் அதிக தளப்பரப்பு குறியீட்டினை அடிப்படையாகக் கொண்டு கூடுதலாகக் குடியிருப்புகள் கட்டப்பட்டு, அத்திட்டப்பகுதிகளில் வாழும் குடியிருப்புதாரர்களின் விரிவாக்கப்பட்ட குடும்பங்களுக்கும் அருகில் வாழும் ஏழை எளிய குடும்பங்களுக்கும் ஆக்கிரமிப்பாளர்களுக்கும் உரிய விதிமுறைகளைப் பின்பற்றி ஒதுக்கீடு செய்யப்படுகின்றன.

5.4 பயனாளிகள் தாமாக வீடுகள் கட்டுதல்

நகரங்களில், சுகாதாரமற்ற நிலையில் கழிப்பிட வசதியின்றி ஓலைக்குடிசை அல்லது ஓட்டுக் கூரை வேயப்பட்ட தற்காலிக வீடுகளில் வாழ்ந்து வரும் நில உரிமை கொண்ட ஏழைக் குடும்பங்களால் தங்களுக்கான வீடுகளைக் கட்டிக் கொள்ள இயலவில்லை. இக்குடும்பங்களுக்கு கான்கிரீட் கூரையுடன் நிலையான வீடுகளைத் தாமாகக் கட்டிக் கொள்வதற்கு ஏதுவாக மானியம் வழங்கப்படுகின்றது.

5.5 நகர்ப்புற ஏழை மக்களின் வாழ்விடங்கள் மேம்பாடு

தாமாக வீடுகள் கட்டும் முறையின்கீழ் வீடுகள் கட்டப்பட்டுள்ள நகர ஏழைக் குடும்பங்களின் வாழ்விடங்களில் அப்பகுதிகளை அவர்கள் வாழ்வதற்கு ஏற்றவாறு மேம்படுத்த தார் சாலைகள், தெரு மின்விளக்குகள், கான்கிரீட் நடைபாதை, ஆழ்துளைக் குழாய் கிணறுகள், பொதுக் குடிநீர் குழாய், மழைநீர் வடிகால் போன்ற மேம்பாட்டுப் பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

5.6 அடுக்குமாடிக் குடியிருப்புத் திட்டப் பகுதிகள்- புனரமைப்பு மற்றும் பராமரிப்பு

அடுக்குமாடிக் குடியிருப்புத் திட்டப்பகுதிகளின் நிலைத்தன்மை மேம்பாட்டிற்கும், குடியிருப்புகளின் கட்டமைப்பு உறுதித்தன்மையை அதிகரிக்கவும் கீழே கூறப்பட்டுள்ள புதிய திட்டங்கள் செயல்படுத்தப்படுகின்றன.

5.6.1 அடுக்குமாடிக் குடியிருப்புத் திட்டப் பகுதிகளுக்குப் புனரமைப்புப் பணிகள்

அடுக்குமாடிக் குடியிருப்புத் திட்டப் பகுதிகளில் அடிப்படை வசதிகள் மேம்பாடு மற்றும் குடியிருப்புகளின் கட்டமைப்பு உறுதித் தன்மையை மேம்படுத்துதல் போன்ற புனரமைப்புப் பணிகள் 15 ஆண்டுகளுக்கு முன்னர் கட்டப்பட்ட அடுக்குமாடிக் குடியிருப்புத் திட்டப்பகுதிகளில் மேற்கொள்ளப்படுகின்றன.

5.6.2 அடுக்குமாடிக் குடியிருப்புகளைப் பராமரித்தல்

அடுக்குமாடிக் குடியிருப்புகளின் ஆயுட் காலம் மற்றும் கட்டமைப்பு நிலைத்தன்மையினை உறுதிப்படுத்த, பழுது நீக்கம் மற்றும் புதுப்பித்தல் பணிகள் தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியத்தால் மேற்கொள்ளப்படுகின்றன. “நம் குடியிருப்பு நம் பொறுப்பு” என்ற திட்டம் செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டத்தின்கீழ் குடியிருப்புகளைப் பராமரிக்கக் குடியிருப்புதாரர்கள் குடியிருப்போர் நல சங்கங்கள் உருவாக்க ஊக்குவிக்கப்படுகின்றனர்.

5.7 மூன்றாம் தரப்பு தரக் கட்டுபாடு வல்லுநர் குழுக்கள்

அண்ணா பல்கலைக்கழகம் கிண்டி தொழில்நுட்ப கல்லூரி, CUBE, இந்திய தொழில்நுட்ப நிறுவனம், சென்னை மற்றும் அண்ணா பல்கலைக்கழகம்–BIT வளாகம் – திருச்சி போன்ற முக்கியத்துவம் வாய்ந்த தொழிற்கல்வி நிறுவனங்கள் மூன்றாம் தரப்பு தரக் கட்டுபாடு வல்லுநர் குழுக்களாக இயங்க ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தம் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

இந்நிறுவனங்கள் அவர்களுக்கான கட்டடப் பணிகளின் தரத்தினைப் பல்வேறு நிலைகளில் ஆய்வு மேற்கொண்டு அறிக்கை சமர்ப்பித்து வருகின்றன.

2023 ஏப்ரல் 13]

5.8 திறனுக்கேற்ற வீட்டு வசதிக்கான புதிய தொழில்நுட்பங்கள்

*பாதுகாப்பான, நிலைத்த மற்றும் சுற்றுப்புற சூழலுக்கு உகந்த வீடுகளை விரைந்து கட்ட கட்டுருவாக்க கான்கிரீட் (*Prefabricated concrete*), அலுமினியம் சாரத்தினைக் கொண்ட ஒற்றைக் கட்டுமானத் தொழில்நுட்பம் (*Monolithic Concrete Structure*) போன்ற நவீனக் கட்டுமானத் தொழில் நுட்பங்களை தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியம் பயன்படுத்துகின்றது.*

5.9 இதர முயற்சிகள்

நகர்ப்புற ஏழைகள், குறிப்பாக இளைஞர்கள் மற்றும் பெண்கள் பொருளாதார நிலையில் தன்னிறைவு மற்றும் சுயவாழ்வாதாரம் பெறுதல் இன்றியமையாததாகும்.

அவர்களிடையே வேலைவாய்ப்புத் திறனை ஊக்குவிக்க திறன் மேம்பாட்டுக் கழகம், தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம் மற்றும் சிறந்த தன்னார்வத் தொண்டு நிறுவனங்களுடன் இணைந்து திறன் மேம்பாட்டுப் பயிற்சிகள் அளிக்கப்படுகின்றன. வேலை வாய்ப்பினை உறுதி செய்ய வேலைவாய்ப்பு முகாம்களும் நடத்தப்பட்டு வருகின்றன.

6. தற்போது நடைபெற்று வரும் பெரும் திட்டங்கள்

தமிழ்நாட்டில் உள்ள அனைத்து நகர்ப்புற ஏழைகளுக்கும் திறனுக்கேற்ற வீட்டுவசதி வழங்கல் எனும் தொலைநோக்கினை அடைய கீழே கூறப்பட்டுள்ள பெரும் திட்டப்பணிகள் தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியத்தால் செயல்படுத்தப்படுகின்றன.

6.1 பிரதம மந்திரி வீட்டுவசதித் திட்டம் (நகர்ப்புறம்) — அனைவருக்கும் வீட்டுவசதித் திட்டம்

நகர ஏழை மக்களின் வீட்டுவசதித் தேவையினை நிறைவு செய்ய பிரதம மந்திரி வீட்டுவசதித் திட்டம் ஏற்படுத்தப்பட்டது. இத்திட்டத்தின் ஒரு பகுதியாக, ஒன்றிய, மாநில அரசுகளின் மானியம் மற்றும் பயனாளிகளின் பங்களிப்புடன் அடிப்படை கட்டமைப்புகளுடன் அடுக்குமாடிக் குடியிருப்புகள் மற்றும் பயனாளிகள் தாமாக வீடு கட்டும் வகைப்பாட்டின்கீழ் தனி வீடுகள் கட்டப்படுகின்றன.

தமிழ்நாட்டின் நகரப்பகுதிகளில் அனைவருக்கும் வீட்டு வசதி (Housing For All) திட்டப்பணிகளை நிறைவேற்ற தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியம் மாநில அளவிலான முகமை நிறுவனமாக நியமிக்கப்பட்டுள்ளது. இத்திட்டப்பணிகள் கீழே கூறப்பட்டுள்ள நிதி ஆதாரங்களைக் கொண்டு செயல்படுத்தப்படுகின்றன.

அனைவருக்கும் வீட்டுவசதி (நகர்ப்புறம்)

நிதி ஆதாரம்

வ. எண்	**விவரம்**	**பங்களிப்புடன் திறனுக்கேற்ற வீட்டு வசதி (அடுக்குமாடி குடியிருப்புகள்) (ஒரு குடியிருப்பிற்கான தொகை ரூ. இலட்சத்தில்)**	**பயனாளிகள் தாமாக வீடுகள் கட்டுதல் (தனி வீடுகள்) (ஒரு வீட்டிற்கான தொகை ரூ. இலட்சத்தில்)**
1	ஒன்றிய அரசின் மானியம்	1.50	1.50
2	மாநில அரசின் மானியம்	7.50 to 13.00	0.60
3	பயனாளிகள் பங்களிப்புத் தொகை	1.00 to 6.00	0.90
மொத்தம்		**10.00 to 17.00**	**3.00**

அனைவருக்கும் வீட்டு வசதி திட்டத்தின் ஒருபகுதியாக 5.59 இலட்சம் அடுக்குமாடி குடியிருப்புகள் / வீடுகள் ரூ.29,239.07 கோடி திட்ட மதிப்பீட்டில் கட்ட ஒன்றிய அரசின் ஒப்புதல் பெறப்பட்டு, அவற்றுள் 3.16 இலட்சம் அடுக்குமாடி குடியிருப்புகள் / வீடுகளுக்கானப் பணிகள் முடிவுற்றுள்ளன. 1.92 இலட்சம் அடுக்குமாடி குடியிருப்புகள் / வீடுகளுக்கான பணிகள் பல்வேறு நிலைகளில் முன்னேற்றத்திலுள்ளன. இத்திட்டப்பணிகளுக்காக இதுவரை ரூ.15252.57 கோடி

2023 ஏப்ரல் 13]

செலவிடப்பட்டுள்ளது. மேலும், 1,13,467 அடுக்குமாடி குடியிருப்புகள் மற்றும் 1,29,758 வீடுகளுக்கான பணிகளை 2023-2024 மற்றும் 2024-2025 ஆகிய ஆண்டுகளில் நிறைவேற்ற திட்டமிடப்பட்டுள்ளது.

6.1.1 பங்களிப்புடன் திறனுக்கேற்ற வீட்டுவசதி — அடுக்குமாடிக் குடியிருப்புகள் கட்டுதல்

நகர்ப்புறப் பகுதிகளில் ஆட்சேபணையற்ற, நெருக்கமான குடிசைப்பகுதிகளில் வாழும் குடும்பங்களுக்கும் அதே இடங்களிலும் மற்றும் பொருளாதாரத்தில் நலிவுற்ற பிரிவினைச் சார்ந்த குடும்பங்களுக்கும், அடுக்குமாடி குடியிருப்புகள் கட்டப்படுகின்றன. இக்குடியிருப்புகள் குடிநீர் விநியோகம், கழிவுநீர் அகற்றும் வசதி, சாலைகள், தெரு மின்விளக்குகள், மழைநீர் வடிகால் போன்ற வசதிகளுடன் கட்டப்பட்டு வருகின்றன.

ஒரு குடியிருப்பிற்கு ரூ.1.50 இலட்சம் மானியமாக ஒன்றிய அரசு வழங்குகிறது. மாநில அரசால் ஒரு குடியிருப்பிற்கு ரூ.7.50 இலட்சத்திலிருந்து ரூ.13.00 இலட்சம் வரை மானியமாக வழங்கப்பட்டு வருகிறது. மீதமுள்ள தொகையினைப் பயனாளிகள் பங்களிப்பாக பெறப்படுகிறது. அதிகபட்ச தரை பரப்பளவு குறியீட்டினை அடிப்படையாகக் கொண்டு குடியிருப்புகள் கட்டப்படும் மறுகட்டுமான திட்டங்களில் பயனாளிகளுக்கு ஏற்படும் நிதிச் சுமையினைக் குறைக்க அரசாணை (4D) எண் 54, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை, நாள் 17-12-2021 இல் பயனாளிகள் பங்களிப்பு தொகையினை மாதத் தவணைகளில் செலுத்த அனுமதிக்கப்பட்டுள்ளது. பயனாளிகளின் பங்களிப்பு தொகையினை மேலும் குறைக்க, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறையால் நிர்வகிக்கப்படும் உள்கட்டமைப்பு மற்றும் வசதிகள் நிதி மற்றும் உறைவிட நிதி ஆகியவற்றிலிருந்து திட்டச் செலவின் ஒரு பகுதியினைப் பெற ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

இத்திட்டப்பணிகளின் ஒரு பகுதியாக, 1,50,898 அடுக்குமாடிக் குடியிருப்புகள் ரூ.16,749.29 கோடி திட்ட மதிப்பீட்டில் கட்ட ஒன்றிய அரசின் ஒப்புதல் பெறப்பட்டுள்ளது. அவற்றுள் 37,431 அடுக்குமாடி குடியிருப்புகளுக்கானப் பணிகள் முடிவுற்றுள்ளன. 88,012 அடுக்குமாடி குடியிருப்புகளுக்கானப் பணிகள் பல்வேறு நிலைகளில் முன்னேற்றத்தில் உள்ளன மற்றும் 25,455 அடுக்குமாடி குடியிருப்புகளுக்கானப் பணிகள் 2023-2024 ஆம்

ஆண்டில் தொடங்கப்படும். இத்திட்டப்பணிகளுக்காக இதுவரை ரூ.8,595.92 கோடி செலவிடப்பட்டுள்ளது. இத்திட்டப் பணிகள் முன்னேற்றம் குறித்த மாவட்ட வாரியான விவரம் இணைப்பு-II இல் விவரிக்கப்பட்டுள்ளது.

6.1.2 பயனாளிகள் தாமாக வீடுகள் கட்டுதல் – தனி வீடுகள் கட்டுதல்

நகரங்களில் வாழும் நில உரிமையுடன் கூடிய மனையினை கொண்ட வீடற்ற, ஆண்டு வருமானம் ரூ.3.00 இலட்சத்திற்குக்கீழ் உள்ள பொருளாதாரத்தில் நலிவுற்ற பிரிவினர் மற்றும் நகர ஏழைக் குடும்பங்களுக்கு வீடு கட்ட மானியமாக குடும்பம் ஒன்றிற்கு ரூ.2.10 இலட்சம் வழங்கப்படுகிறது. இத்திட்டப் பயனாளிகள் அவர்களின் வீடுகளைத் தாமாகக் கட்ட வேண்டும்.

இத்திட்டத்தின் ஒருபகுதியாக, 4,08,158 தனி வீடுகள் ரூ.12,489.77 கோடி திட்ட மதிப்பீட்டில் கட்ட ஒன்றிய அரசின் ஒப்புதல் பெறப்பட்டுள்ளது. அவற்றுள் 2,78,400 வீடுகள் முடிவுற்றுள்ளன. 1,03,717 வீடுகள் பல்வேறு நிலைகளில் முன்னேற்றத்தில் உள்ளன. மற்றும் 26,041 வீடுகளுக்கான கட்டுமானப் பணிகள் தொடங்கப்படவுள்ளன. இத்திட்டப் பணிகளுக்காக ரூ.6,656.65 கோடி செலவிடப்பட்டுள்ளது. இத்திட்டப் பணிகள் முன்னேற்றம் குறித்த மாவட்ட வாரியான விவரம் இணைப்பு-III இல் விவரிக்கப்பட்டுள்ளது.

2021-2022 மற்றும் 2022-2023ஆம் ஆண்டுகளில் இத்திட்டப்பணிகள் குறித்த விவரம் பின்வருமாறு:

வ. எண்	வீடுகள் விவரம்	குடியிருப்புகள் / வீடுகள்
1	ஒப்புதல் வழங்கப்பட்டவை	78,476
2	முடிவுற்றவை	9,412
3	முன்னேற்றத்திலுள்ளவை	32,586

மேற்கூறப்பட்ட இரண்டு திட்டங்களின்கீழ் பணிகளை நிறைவேற்ற 2023-2024 ஆம் ஆண்டிற்கு அரசால் ரூ.2,281.08 கோடி வழங்கப்பட்டுள்ளது.

2023 ஏப்ரல் 13]

6.1.3 பழுதடைந்த அடுக்குமாடிக் குடியிருப்புகள் மறுகட்டுமானம்

தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியத்தால் சென்னை மற்றும் இதர நகரங்களில் அடுக்குமாடிக் குடியிருப்புகள் முன்னர் கட்டடப்பட்டன. இக்குடியிருப்புகளில் சில சூழ்நிலை பாதிப்புகள், தட்பவெப்ப மாறுபாடு, காலக்கடப்பு மற்றும் நீண்ட காலப் பயன்பாடு காரணமாக சிதிலமடைந்து இக்குடியிருப்புகளில் வாழும் குடும்பங்களின் உயிர்களுக்கும், உடைமைகளுக்கும் ஆபத்தினை ஏற்படுத்துவதாக உள்ளன. எனவே, அரசால் நியமிக்கப்பட்ட தொழில்நுட்பக் குழு திட்டப்பகுதிகளை ஆய்வு செய்து உறுதித்தன்மையின் அடிப்படையில் மறுகட்டுமானப் பணிகளை மேற்கொள்ள பழுதடைந்த குடியிருப்புகளை இடிக்கப் பரிந்துரைக்கின்றது. மறுகட்டுமானத்திற்குப் பின்னர், புதிதாகக் கட்டடப்படும் இக்குடியிருப்புகள், அனுமதிக்கப்பட்ட தரைப் பரப்பளவு குறியீட்டினைத் திறமையான வகையில் பயன்படுத்தி புதுமையான மற்றும் வசதியான வடிவங்களில் கூடுதல் குடும்பங்கள் வாழ்வதற்குத் தேவையான பொது அடிப்படை வசதிகளைக் கொண்டிருக்கும்.

மறுகட்டுமானம் செய்யப்படும் புதிய குடியிருப்புகள், பழைய குடியிருப்புகளில் முன்னர் வாழ்ந்த குடும்பங்களுக்கு ஒதுக்கீடு செய்யப்படும். கூடுதலாகக் கட்டப்பட்ட குடியிருப்புகள் இதே திட்டப்பகுதிகளின் அருகில் வாழும் வீடற்ற நகர்ப்புற ஏழைக் குடும்பங்களுக்கு ஒதுக்கீடு செய்யப்படும்.

இதுவரை, மொத்தம் 32,813 அடுக்குமாடிக் குடியிருப்புகள் மறுகட்டுமானத்திற்காகக் கண்டறியப்பட்டு, அவற்றுள் 11,490 அடுக்குமாடிக் குடியிருப்புகள் மறுகட்டுமானப் பணிகள் முடிவுற்றுள்ளன. 6,862 அடுக்குமாடிக் குடியிருப்புகளின் மறுகட்டுமானப் பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன. மீதமுள்ள 14,461 அடுக்குமாடிக் குடியிருப்புகள் படிப்படியாக மறுகட்டுமானம் செய்யப்படும்.

6.1.4 இடம் பெயர்ந்த தொழிலாளர்களுக்குத் திறனுக்கேற்ற வாடகை வீட்டுவசதி வளாகங்கள்

இத்திட்டத்தின்கீழ் தங்கும் இடங்கள் / குடியிருப்புகளைக் கொண்ட, திறனுக்கேற்ற வாடகை வீட்டுவசதி வளாகத் திட்டங்கள் தமிழ்நாட்டில் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

இடம்பெயர்ந்த தொழிலாளர்களுக்கு அவர்கள் பணிபுரியும் இடங்களுக்கு அருகில் வீட்டுவசதி அளித்து அவர்கள் வாழ்வினை எளிதாக்க, இவ்வளாகங்களைப் பொது மற்றும் தனியார் நிறுவனங்கள் அவர்களது சொந்த நிலத்தில் கட்டமைத்து, இயக்கி, பராமரிக்க அனுமதிக்கப்படும். இத்திட்டங்களுக்குக் கடைபிடிக்கப்படும் புதுமையான தொழில் நுட்பங்களுக்கான மானியம் ஒன்றிய அரசால் வழங்கப்படும். மேலும் உள்ளாட்சி நிறுவனங்களின்மூலம் தேவையான அடிப்படை வசதிகளும் அமைக்கப்படும். இத்திட்டப் பணிகளைத் தமிழ்நாட்டில் செயல்படுத்தி நிர்வகிக்க ஒன்றிய அரசுடன் ஒரு புரிந்துணர்வு (MoA) ஒப்பந்தம் ஏற்படுத்தப்பட்டுள்ளது. முதற்கட்டமாக, தமிழ்நாட்டில் கீழே கூறப்பட்டுள்ள நகரங்களில், மாற்றுத் தொழில் நுட்பங்களைப் பயன்படுத்தித் திறனுக்கேற்ற வாடகை வீட்டுவசதி வளாகங்கள் கட்டும் கீழ்க்காணும் பணிகள் செயல்படுத்தப்படுகின்றன. இத்திட்டப் பணிகள் பல்வேறு நிலைகளில் முன்னேற்றத்தில் உள்ளன.

வ. எண்	நகரம்	நிறுவனம்	நவீன தொழில் நுட்பங்களுக்கான மானியம் (ரூ.கோடியில்)	தங்கும் இடங்கள் / குடியிருப்புகள்
அ) முன்னேற்றத்தில் உள்ளவை				
1	சென்னை	தமிழ்நாடு மாநில தொழில் முன்னேற்ற நிறுவனம் (SIPCOT)	*37.44*	*18720*
2	ஸ்ரீபெரும்புதூர்	SPR கட்டுமானம் தனியார் நிறுவனம்	*7.95*	*3969*
3	ஒசூர்	TATA மின்னணு சக்தி நிறுவனம்	*28.62*	*13500*

2023 ஏப்ரல் 13]

வ. எண்	நகரம்	நிறுவனம்	நவீன தொழில் நுட்பங்களுக்கான மானியம் (ரூ.கோடியில்)	தங்கும் இடங்கள் / குடியிருப்புகள்
ஆ) தொடங்கப்பட உள்ளவை				
4	சென்னை	சென்னை பெட்ரோலியம் நிறுவனம்	2.88	1040
5	சென்னை	SPR கட்டுமானம் நிறுவனம்	10.13	5045
6	ஸ்ரீபெரும்புதூர்	SPR நகரம் எஸ்டேட் தனியார் நிறுவனம்	36.22	18112
மொத்தம்			**123.24**	**60386**

7. பன்னாட்டு நிதி நிறுவனங்களின் நிதியுதவியுடன் செயல்படுத்தப்படும் திட்டங்கள்

வீட்டுவசதித் துறையினை மேம்படுத்த உலக வங்கி மற்றும் ஆசிய வளர்ச்சி வங்கி போன்ற பன்முகத் தன்மை கொண்ட நிதி நிறுவனங்கள் நிதியுதவி வழங்கியுள்ளன.

(i) திறனுக்கேற்ற வீட்டுவசதித் திட்டங்களில் தனியார் துறையின் பங்களிப்பை ஊக்கப்படுத்தவும், கொள்கை சீர்திருத்தம்மூலம் நகர வீட்டு வசதித் துறையினை வலுப்படுத்துதல்.

(ii) தமிழ்நாடு நகர வீட்டுவசதி நிறுவனங்களின் நிலைத்தத் தன்மையினை உயர்த்தவும் அதனை வலுப்படுத்துதல் மற்றும்

(iii)சென்னை மூன்றாவது முதன்மை திட்டத்தினைத் தயார் செய்வதற்கும் உலக வங்கி நிதியுதவி வழங்குகின்றது.

ஆட்சேபணைக்குரிய பகுதிகளில் வாழும் குடும்பங்கள், நகர்ப்புற ஏழை மக்கள் மற்றும் புலம் பெயர்ந்த தொழிலாளர்களுக்கு

வீட்டுவசதியினை ஏற்படுத்துவதற்கும், மண்டல திட்டங்களைத் தயார் செய்வதற்கும் ஆசிய வளர்ச்சி வங்கி நிதியுதவி வழங்குகிறது.

7.1உலக வங்கியின் நிதியுதவியுடன் நகர்ப்புற ஏழைகளுக்கான தமிழ்நாடு வீட்டுவசதி மற்றும் வாழ்விட மேம்பாட்டுத் திட்டம்

தமிழ்நாடு வீட்டுவசதி மற்றும் வாழ்விட மேம்பாட்டுத் திட்டத்தினை ரூ.5,363 கோடி (715 மில்லியன் அமெரிக்க டாலர்கள்) திட்ட மதிப்பீட்டில், உலக வங்கியின் கடனுதவி ரூ.3,750 கோடியுடன் (500 மில்லியன் அமெரிக்க டாலர்கள்) செயல்படுத்த திட்ட முன்மொழிவுகள் உலக வங்கிக்கு அனுப்பப்பட்டது. இத்திட்டம் இரண்டு வெவ்வேறு நிதி ஆதாரங்கள்மூலம் செயல்படுத்தப்படுகின்றது.

7.1.1 தமிழ்நாடு வீட்டு வசதித் துறை வலுவூட்டல் திட்டம்: இத்திட்டமானது 390 மில்லியன் அமெரிக்க டாலர்கள் மொத்த மதிப்பீட்டில் உலக வங்கி நிதியுதவியுடன் வீட்டு வசதிக் கொள்கைகள், நிறுவனங்கள் மற்றும் திட்டங்கள் ஆகியவற்றை வலுப்படுத்த அரசிற்கு ஆதரவு அளிக்கும். இத்திட்டம் கீழே கூறப்பட்டுள்ள மூன்று கட்டமைப்பு ஆதாரங்களுடன் செயலாக்கத்தில் உள்ளது.

(i) உள்ளடக்கிய மற்றும் சிறந்த வீட்டுவசதி துறையின் மேம்பாட்டிற்கு ஆதரவு அளிக்க கொள்கைகள் மற்றும் நிறுவனங்களை வலுப்படுத்துதல்.

(ii) திறனுக்கேற்ற வீடுகள் வழங்குவதை அதிகரிக்க எளிதான சூழலை மேம்படுத்துதல்

(iii) திறனுக்கேற்ற வீட்டுவசதி சந்தையில் தனியார் நிறுவனங்களின் பங்கேற்பினை அதிகரித்தல்

(அ) முதலாவது தமிழ்நாடு வீட்டு வசதித் துறை வலுவூட்டல் திட்டத்தின்கீழ் கொள்கை மேம்பாட்டுக் கடன் ரூ.1,492.40 கோடி (200 மில்லியன் அமெரிக்க டாலர்கள்) கொள்கை மற்றும் நிறுவனங்களை வலுப்படுத்துதல், வீட்டு வசதிக்கான நடைமுறைகளை மேம்படுத்துதல் போன்ற பணிகளுக்காகப் பெற திட்டமிடப்பட்டு, கடன் தொகை ரூ.1,492.40 கோடி தமிழ்நாடு அரசின் வரவு செலவு திட்டத்தின் நிதி உலக வங்கியில் முழுமையாக விடுவிக்கப்பட்டது. இத்திட்டப்பணிகள்

2023 ஏப்ரல் 13]

23-07-2020 முதல் நடைமுறைப்படுத்தப்பட்டு 30-06-2022 இல் நிறைவு பெற்றது.

ஆ) இரண்டாவது தமிழ்நாடு வீட்டுவசதித் துறையினை வலுவூட்டும் திட்டம், ரூ.1,545.90 கோடி (190 மில்லியன் அமெரிக்க டாலர்) திட்ட மதிப்பீட்டில் தமிழ்நாடு அரசின் அமைப்பு மற்றும் நிறுவனங்கள் வலுப்படுத்த திட்டமிடப்பட்டு மூன்று பிரிவுகளாக வகைப்படுத்தப்பட்டுள்ளது.

(i) திறனுக்கேற்ற வீட்டுவசதியினை அதிக அளவில் பெறும் வண்ணம் நிறுவனங்களையும் கொள்கைகளையும் வலுப்படுத்துதல்,

(ii) திறனுக்கேற்ற வீட்டுவசதியினைப் பெருமளவில் ஏற்படுத்தும் வண்ணம் ஏதுவான, சாதகமான சூழலை அதிகப்படுத்துதல் மற்றும்

(iii) வீட்டுவசதிப் பிரிவில் நிலைத்த தன்மையையும் பருவநிலை மாற்றங்களின் மீள் தன்மையையும் அதிகரிக்கும் வகையில் வரைமுறைகளை ஏற்படுத்துதல்.

இத்திட்டப்பணிகள் 30-09-2022 முதல் செயலாக்கத்தில் உள்ளன. அரசாணை (நிலை) எண் 18, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை, நாள் 08-02-2023 இல் இத்திட்டப்பணிகளின் செயலாக்கத்திற்கு நிர்வாக ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

7.1.2 தமிழ்நாடு வீட்டு வசதி மற்றும் வாழ்விட மேம்பாட்டுத் திட்டம்: *72 மில்லியன் அமெரிக்க டாலர் (ரூ.504 கோடி) திட்ட மதிப்பீட்டில், 50 மில்லியன் அமெரிக்க டாலர் நிதியுதவி உலக வங்கியிடமிருந்தும், 22 மில்லியன் அமெரிக்க டாலர்களுக்கு இணை நிதியாகத் தமிழக அரசிடமிருந்தும் பெற்றது, இரண்டாவது தமிழ்நாடு வீட்டுவசதித் துறையினை வலுவூட்டும் திட்டத்தில் கூறப்பட்டுள்ளவாறு தமிழ்நாடு அரசு வீட்டுவசதி நிறுவனங்களின் செயலாக்கத்தினை வலுப்படுத்துதல் மற்றும் கொள்கைகளைத் தூண்டுதல் போன்ற பணிகள் இத்திட்டத்தின்கீழ் செயலாக்கத்தில் உள்ளது. இத்திட்டப் பணிகளுக்காகச் செலவிடப்பட்ட தொகை ரூ.161.35 கோடி உலக வங்கியிடமிருந்து பெறப்பட்டுள்ளது.*

7.2 தமிழ்நாட்டில் ஆசிய வளர்ச்சி வங்கி நிதியுதவியுடன் நகர ஏழை மக்களுக்கான வீட்டுவசதித் திட்டம்

இடம் பெயர்ந்த தொழிலாளர்கள், நகர்ப்புற ஏழைகள் போன்ற பாதிப்புக்குள்ளாகக் கூடிய சமூகங்களுக்குத் திறனுக்கேற்ற

வீட்டுவசதி மற்றும் மண்டலதிட்டமிடல் ஆகிய கூறுகளைக் கொண்ட உள்ளடக்கிய, மீள் தன்மையுடைய மற்றும் நிலையான வீடுகளுக்கான திட்டப் பணிகளை ரூ.1,595 கோடி (215 மில்லியன் அமெரிக்க டாலர்) திட்ட மதிப்பீட்டில் செயல்படுத்த இந்த அரசு ஆசிய வளர்ச்சி வங்கியுடன் ஒரு கடன் உடன்படிக்கைக்குக் கையெழுத்திட்டுள்ளது.

நகர்ப்புற ஏழை மக்களை உள்ளடக்கிய, மீள் தன்மையுடைய மற்றும் நிலையான வீடுகளுக்கான இத்திட்டத்தின்கீழ் 2745 அடுக்குமாடி குடியிருப்புகள் ரூ.419.35 கோடி மதிப்பீட்டில் கீழே கூறப்பட்டுள்ளவாறு கட்டுமானப் பணிகள் முன்னேற்றத்தில் உள்ளது.

வ. எண்	மாவட்டம் / திட்டப்பகுதி பெயர்	குடியிருப்புகள் எண்ணிக்கை	திட்ட மதிப்பீடு (ரூ.கோடி)
1.	தஞ்சாவூர் — வல்லம் அய்யனார் கோவில் பகுதி-II	969	149.32
2.	சிவகங்கை - கழனிவாசல்	900	130.23
3.	திருநெல்வேலி — ரெட்டியார்பட்டி பகுதி—II	876	139.80
	மொத்தம்	**2745**	**419.35**

மேலும், நாமக்கல் மாவட்டம் பள்ளிப்பாளையம் பகுதியில் 520 வீடுகளுக்கான பணிகள் 2023-2024 ஆம் ஆண்டில் தொடங்கப்படும்.

தமிழ்நாட்டில் சென்னை மற்றும் இதர நகர பகுதிகளில் வாழ்விடங்கள் மறுமேம்பாடு, மறுகட்டுமானம், புதிய குடியிருப்புகள் கட்டுதல் போன்ற பணிகளுக்காக 3000 குடியிருப்புகள் இத்திட்டத்தின் ஒருபகுதியாக மேற்கொள்ள முன்மொழிவுகள் அனுப்பப்பட்டு ஆசிய வளர்ச்சி வங்கியின் ஒப்புதல் எதிர்பார்க்கப்படுகிறது.

இத்திட்டத்தின் வகைப்பாடு 2 இன்கீழ் ஆசிய வளர்ச்சி வங்கி, தமிழ்நாடு உள்கட்டமைப்பு நிதி மேலாண்மை கழகத்தால் நிர்வகிக்கப்படும் உறைவிட நிதிக்குத் தொழில் துறை வீட்டுவசதி

2023 ஏப்ரல் 13]

அமைக்க, குறைந்த வருமானத்தில் பணிபுரியும் மகளிருக்கான தங்கும் விடுதிகள் மற்றும் இடம் பெயர்ந்த தொழிலாளர்களுக்குப் பொது மற்றும் தனியார் பங்களிப்பு முறையில் வீடுகள் கட்ட ரூ.259.00 கோடி நிதி ஆதரவு அளிக்கப்படும்.

இத்திட்டத்தின் வகைப்பாடு 3 இன்கீழ் தற்போது நடைமுறையில் உள்ள மற்றும் முன்மொழியப்பட்ட வளர்ச்சித் திட்டங்களை ஒருங்கிணைத்து மண்டலத் திட்டங்கள் தயார் செய்ய நிதியுதவி வழங்குவதுடன், மண்டல ஏற்றத் தாழ்வுகளின் அடிப்படையில் உள்கட்டமைப்பு மேம்பாட்டுடன் கூடிய திறனுக்கேற்ற வீடுகள், பொருளாதார முன்னேற்றம், சுற்றுச்சூழல் பாதுகாப்பு மற்றும் இயற்கைப் பேரிடர் மேலாண்மை போன்றவற்றை செயல்படுத்த, ஆசிய வளர்ச்சி வங்கி, நகர் ஊரமைப்பு இயக்ககத்திற்கு நிதி ஆதாரம் வழங்கும்.

8. மாநில நிதியுதவித் திட்டங்கள்

8.1 அடுக்குமாடிக் குடியிருப்புத் திட்டப்பகுதிகள் புனரமைப்பு

தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியம், சென்னை மற்றும் இதர நகரங்களில் கீழே கூறப்பட்டுள்ளவாறு 1.78 இலட்சம் அடுக்குமாடி குடியிருப்புகளைப் பராமரித்து வருகின்றது.

வ. எண்	மாவட்டங்கள்	திட்டப் பகுதியின் எண்ணிக்கை	அடுக்குமாடி குடியிருப்புகளின் எண்ணிக்கை
1	சென்னை	203	1,14,158
2	இதர மாவட்டங்கள்	190	64,556
மொத்தம்		**393**	**1,78,714**

இக்குடியிருப்புகளுக்குப் பராமரிப்புப் பணிகள் உரிய காலங்களில் மேற்கொள்ளப்படுகிறது. மாநில அரசால் வழங்கப்படும் நிதியுதவியினைக் கொண்டு அடுக்குமாடிக் குடியிருப்புகளுக்குப் பழுதுப் பார்த்தல் மற்றும் புதுப்பித்தல் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. பல ஆண்டுகளுக்கு முன்னர் கட்டப்பட்ட அடுக்குமாடிக் குடியிருப்புகளின் பொலிவினை

மேம்படுத்த புனரமைப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. புனரமைப்புப் பணிகளுக்காகக் கீழே கூறப்பட்டுள்ள முக்கியப் பணிகள் முன்மொழியப்பட்டு உள்ளன.

- குடிநீர் வசதி அமைப்புகளை மேம்படுத்துதல்
- பழுதடைந்த கழிவுநீர் குழாய்களை மாற்றியமைத்தல்
- மின் இணைப்புப் பெட்டிகள் (Panel Board) பாதுகாப்பான முறையில் அமைத்தல்
- தேவைப்படும் வசிப்பிட அறைகளில் UPVC சன்னல்கள் அமைத்தல்
- குளியலறை மற்றும் கழிவறையில் உள்ள சேதமடைந்த கான்கிரீட் ஜன்னல்களைப் புதிதாக மாற்றியமைத்தல்
- வெளிப்புறச் சுவர்களை முழுமையாகப் பழுது நீக்கி முழுமையாக வண்ணம் பூசுதல்
- தளம், படிக்கட்டுகள் மற்றும் மாடித்தளம் போன்றவற்றைப் பழுதுபார்த்தல்

(i) அடுக்குமாடிக் குடியிருப்புத் திட்டப் பகுதிகள் புனரமைப்பு, பகுதி-I

சென்னை, திருநெல்வேலி மற்றும் தூத்துக்குடி மாவட்டங்களில் உள்ள 65 திட்டப்பகுதிகளில் கட்டப்பட்டுள்ள 26,483 அடுக்குமாடி குடியிருப்புகளுக்கு ரூ.68.72 கோடி செலவில் மேற்கொள்ளப்பட்டுள்ள புனரமைப்புப் பணிகள் பல்வேறு நிலைகளில் செயலாக்கத்தில் உள்ளன. இப்பணிகள் 4 திட்டப்பகுதிகளில் முடிவுற்றுள்ளன மற்றும் 52 திட்டப்பகுதிகளில் முன்னேற்றத்தில் உள்ள பணிகள் 2023 ஆம் ஆண்டின் இறுதிக்குள் முடிக்க திட்டமிடப்பட்டுள்ளது.

(ii) அடுக்குமாடிக் குடியிருப்புத் திட்டப் பகுதிகள் புனரமைப்பு, பகுதி-II

மேலும், சென்னை, திருச்சி மற்றும் கோயம்புத்தூர் மாவட்டங்களில் 28 திட்டப்பகுதிகளில் கட்டப்பட்டுள்ள 23,546 அடுக்குமாடிக் குடியிருப்புகளுக்கு ரூ.79.15 கோடி செலவில் புனரமைப்புப் பணிகள் மேற்கொள்ளத் திட்டமிடப்பட்டுள்ளது. இப்பணிகள் 2023-2024 ஆம் ஆண்டில் தொடங்கப்படும்.

2023 ஏப்ரல் 13]

8.2 அடுக்குமாடிக் குடியிருப்புகளுக்கான பழுது நீக்கம் மற்றும் புதுப்பித்தல் பணிகள்

அடுக்குமாடிக் குடியிருப்புகளுக்கான புனரமைப்புப் பணிகளின்கீழ் மேற்கொள்ளப்படாத மாடிப்படிகள், பால்கனி, தரைத்தளம், கூரைத்தளங்களில் ஏற்படும் பழுதுகளை நீக்குதல், கூரைத்தளத்தில் ஓடுகள் பதித்தல், குடிநீர் விநியோகம், கழிவுநீரகற்று குழாய்கள், கழிப்பிட பீங்கான்கள் போன்றவைகளை மாற்றுதல் போன்ற பணிகள் குடியிருப்புகளை நன்முறையில் பராமரிக்கும் நோக்கத்துடன் செயல்படுத்தப்படுகின்றன. இப்பணிகள் மாநில அரசின் நிதி மற்றும் இதர நிதியினைக் கொண்டு செயல்படுத்தப்படும். இதுவரை 125 திட்டப்பகுகளில் கட்டப்பட்டுள்ள 77,370 அடுக்குமாடி குடியிருப்புகளுக்கு ரூ.60.28 கோடி செலவில் பழுது பார்த்தல் மற்றும் புதுப்பித்தல் பணிகள் மேற்கொள்ள ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. அவற்றுள் 98 திட்டப்பகுதிகளில் உள்ள 44,452 குடியிருப்புகளுக்கானப் பணிகள் முடிவுற்றுள்ளன மற்றும் 2022-2023 ஆம் ஆண்டில் ரூ.43.21 கோடி செலவிடப்பட்டுள்ளது. மீதமுள்ள 19 திட்டப்பகுதிகளில் ரூ.17.07 கோடி செலவில் 2023-2024 ஆம் ஆண்டில் பணிகள் முடிவுறும்.

8.3 உட்கட்டமைப்பு மற்றும் வசதிகள் நிதி

வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறையால் நிர்வகிக்கப்படும் உட்கட்டமைப்பு மற்றும் வசதிகள் நிதியிலிருந்து கீழ்க்காணும் பணிகளுக்கு நிதி ஆதாரம் வழங்கப்படுகிறது.

8.3.1பயனாளிகள் தாமாக வீடுகள் கட்டும் திட்டப்பகுதிகளில் மேம்பாட்டுப் பணிகள்

உட்கட்டமைப்பு மற்றும் அடிப்படை வசதி நிதியினை பயன்படுத்திப் பயனாளிகள் தாமாக வீடுகள் கட்டும் திட்டத்தின்கீழ் வீடுகள் கட்டப்பட்டுள்ள திட்டப்பகுதிகளில் அடிப்படை வசதிகள் அமைக்கப்படுகின்றன. தார் சாலைகள், கான்கீரிட் நடைபாதைகள், மழைநீர் வடிகால், தெரு மின்விளக்குகள் மற்றும் குடிநீர் விநியோக அமைப்புகள் போன்ற அடிப்படை வசதிகள் இத்திட்டப்பகுதிகளில் அமைக்கப்படும். இப்பணிகள் 307 திட்டப்பகுதிகளில் அமைக்கப்பட்டுள்ளன. ரூ.32.80 கோடி செலவிடப்பட்டுள்ளது.

8.3.2 அடுக்குமாடிக் குடியிருப்பு திட்டப்பகுதிகளில் மேம்பாட்டுப் பணிகள்

பங்களிப்புடன் திறனுக்கேற்ற வீட்டு வசதி திட்டங்களில் நிறைவேற்றப்படும் அடிப்படை வசதிகளுக்கான பணிகள் மற்றும் கீழே கூறப்பட்டுள்ள இதரப் பணிகளை ரூ.364.80 கோடி திட்ட மதிப்பீட்டில் நிறைவேற்ற அரசால் 2022-2023 ஆம் ஆண்டில் ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

வ. எண்	விவரம்	ஒப்புதல் வழங்கப்பட்ட தொகை (ரூ. கோடி)	குறிப்பு
அ) பங்களிப்புடன் திறனுக்கேற்ற வீட்டு வசதி திட்டங்கள்			
1	பங்களிப்புடன் திறனுக்கேற்ற வீட்டு வசதி திட்டத்தின்கீழ் 46 திட்டப்பகுதிகளில் அடிப்படை வசதிகளுக்கான பணிகள்	252.20	முன்னேற்றத்திலுள்ளன
2	பங்களிப்புடன் திறனுக்கேற்ற வீட்டு வசதி திட்டத்தின்கீழ் 14 திட்டப்பகுதிகளில் குடிநீர் விநியோகம், கழிவுநீரகற்று பணிகள் மற்றும் மின் சேவை இணைப்பு பணிகள்	59.22	முன்னேற்றத்திலுள்ளன
மொத்தம் (அ)		**311.42**	
ஆ) அடிப்படை வசதிகள்			
1	கோயம்புத்தூரில் 12 திட்டப்பகுதிகளில் அடிப்படை வசதிகள்	1.69	முன்னேற்றத்திலுள்ளன

2023 ஏப்ரல் 13]

வ. எண்	விவரம்	ஒப்புதல் வழங்கப்பட்ட தொகை (ரூ. கோடி)	குறிப்பு
2	*சென்னையில் 13 அடுக்குமாடி குடியிருப்பு திட்டப்பகுதிகளுக்குக் குடிநீர் விநியோக அமைப்புகள்*	*16.73*	*பணிகள் தொடங்கப்பட உள்ளன*
3	*சென்னை பெரும்பாக்கம் மறுகுடியமர்வு திட்டப்பகுதிகளில் சாலைகள் அமைத்தல் மற்றும் இதர அடிப்படை வசதிகளுக்கான பணிகள்*	*24.31*	*முன்னேற்றத்திலுள்ளன*
4	*தஞ்சையில் ஆசிய வளர்ச்சி வங்கி நிதியுதவியின்கீழ் நிறைவேற்றப்படும் வல்லம் திட்டப்பகுதிக்கு குடிநீர் விநியோக அமைப்புகள் மற்றும் இதர அடிப்படை வசதிகளுக்கான பணிகள்*	*10.65*	*பணிகள் தொடங்கப்பட உள்ளன*
மொத்தம் (ஆ)		**53.38**	
ஆக மொத்தம் (அ+ஆ)		**364.80**	

8.4 உறைவிட நிதி

பொருளாதாரத்தில் நலிவுற்ற பிரிவினர் மற்றும் குறைந்த வருவாய் பிரிவினர்களுக்குப் பொருளாதாரத்தில் பின்தங்கிய பிரிவினர்களுக்கான வீடுகளை மேம்படுத்துவதற்காக அரசாணை (4D) எண் 135, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை,

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

நாள். 21-07-2017 இல் உறைவிட நிதியினை அரசு ஏற்படுத்தியுள்ளது. உறைவிட நிதியிலிருந்து பின்வரும் இனங்களுக்கு நிதி வழங்க முன்மொழியப்பட்டுள்ளது:

i. மாற்றுத்திறனாளி பயனாளிகளுக்குப் பங்களிப்பு தொகையில் ஒரு பகுதியினை வழங்குதல்.

ii. தேசிய நகர்ப்புற வாழ்வாதார இயக்கம் (NULM) / தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தால் செயல்படுத்தப்படும் வாழ்வாதாரத் திட்டப் பணிகளுக்குத் தேவையான இடைவெளி நிதியினை வழங்குதல்.

iii. குடியிருப்பு நலச் சங்கங்களை உருவாக்குதல் மற்றும் இச்சங்கங்களின் திறனை மேம்படுத்தும் பணிகள்.

iv. கல்விக்கான நடவடிக்கைகள்.

v. வங்கிகளில் பெற்ற கடனுக்கு உரிய கால கட்டத்தில் வட்டித் தொகையினைச் செலுத்திய பயனாளிகளுக்கு வட்டிக்கான ஊக்கத்தொகை வழங்கல்.

வீட்டுவசதித் திட்டங்களுக்கான திட்ட மதிப்பீட்டின் ஒரு பகுதியினை உறைவிட நிதியிலிருந்து நிறைவு செய்ய 2022-2023 ஆம் ஆண்டு வரை ரூ.47.34 கோடி அரசால் வழங்கப்பட்டுள்ளது.

8.5 அடுக்குமாடிக் குடியிருப்புகளைப் பராமரித்தல்—புதிய அணுகுமுறை — "நம் குடியிருப்பு நம் பொறுப்பு" திட்டம்

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் 15-07-2021 அன்று நடத்தப்பட்ட ஆய்வின் போது, கீழே கூறப்பட்டுள்ள இலக்குகளை அடைய குடியிருப்போர் நலச் சங்கங்களை உருவாக்குவதற்கும் அடுக்குமாடிக் குடியிருப்புகளின் பராமரிப்புப் பணிகளைக் குடியிருப்போர் நலச் சங்கங்கள் மேற்கொள்வதற்கும் ஏதுவாக "நம் குடியிருப்பு நம் பொறுப்பு" என்ற புதிய திட்டம் தொடங்க அறிவுறுத்தப்பட்டது.

i. அடுக்குமாடிக் குடியிருப்பு திட்டப்பகுதிகளை, சுத்தமாகவும், நேர்த்தியாகவும் பராமரித்தல்.

ii. பழுது பார்த்தல் மற்றும் புதுப்பித்தல் பணிகளை உரிய தருணத்தில் மேற்கொள்ளுதல்.

2023 ஏப்ரல் 13]

iii. அடுக்குமாடிக் குடியிருப்புகளுக்கு உரிய கால அவகாசத்தில் புதுப்பித்தல் பணிகள் மேற்கொள்ளுதல்

iv. அடுக்குமாடிக் குடியிருப்புகளில் வாழும் குடியிருப்போர்களின் கோரிக்கைகளுக்கு இணங்க கூடுதல் அடிப்படை வசதிகள் அமைத்தல்

v. பொது உட்கட்டமைப்பு வசதிகளைப் பராமரித்தல்.

vi. எழுச்சியான குடியிருப்போர் நலச் சங்கங்களை உருவாக்குதல்.

vii. அடுக்குமாடிக் குடியிருப்புகளுக்கு வழக்கமான பராமரிப்புப் பணிகள் மேற்கொள்ளும் பொறுப்பினை குடியிருப்போர் நலச் சங்கங்களுக்கு வழங்குதல்

viii. குடியிருப்போர் நலச் சங்கங்களுக்கு நிதி அதிகாரம் அளித்தல்.

ix. குடியிருப்புதாரர்களுக்கும் வாரியத்திற்கும் இடையே சுமுகமான ஒருங்கிணைப்பினை ஏற்படுத்துதல்.

x. குறை தீர்க்கும் நெறிமுறைகளை எளிதாக்குதல்.

இதனைத் தொடர்ந்து, மாண்புமிகு அமைச்சர் (குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள்) அவர்கள் இது தொடர்பான அறிவிப்பினை வெளியிட்டார்கள். அதற்கிணங்க "குடியிருப்போர் நலச் சங்கங்கள் அமைப்பதை எளிதாக்கவும், அடுக்குமாடிக் குடியிருப்புகளைச் சீரிய முறையில் பராமரிக்க, குடியிருப்போர் நலச் சங்கங்களை ஈடுபடுத்தவும் "நம் குடியிருப்பு நம் பொறுப்பு" திட்டம் தொடங்கப்பட்டது. இத்திட்டத்தின்கீழ் வசூலிக்கப்பட்ட பராமரிப்புக் கட்டணங்களுக்கு இணையான மானியத்தினைத் தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியத்திற்கு மாநில அரசு வழங்கும். குடியிருப்போர் நலச் சங்கங்கள் தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியத்தின் மேற்பார்வையில் சிறிய பழுதுகள் மற்றும் வழக்கமான பராமரிப்புப் பணிகளை மேற்கொள்ள அனுமதிக்கப்படும்.

மொத்தம் 694 குடியிருப்போர் நலச் சங்கங்கள் ஏற்படுத்த திட்டமிடப்பட்டு, இதுவரை 630 குடியிருப்போர் நலச் சங்கங்கள் அமைக்கப்பட்டு, அவற்றுள் 446 குடியிருப்போர் நலச் சங்கங்கள்

பதிவு செய்யப்பட்டுள்ளன. மீதமுள்ள சங்கங்களைப் பதிவு செய்ய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. குடியிருப்போர் நலச் சங்கங்கள் பதிவு செய்வதற்காகச் செலுத்திய கட்டணங்கள் அரசால் ஈடு செய்யப்படுகின்றன.

9. சென்னை மாநகரின் நீர்வழிகளை மறுசீரமைத்தல் – நதிகளின் கரைகளில்வாழும்குடும்பங்களுக்கு அடுக்குமாடிக்குடியிருப்புகள் வழங்கல்

அடையாறு மற்றும் கூவம் ஆற்றின் கரைகளில் வாழும் குடும்பங்கள், நீர்வளத் துறையால் கணக்கெடுக்கப்பட்டு பெருநகர சென்னை மாநகராட்சி மற்றும் பிற துறைகளின் ஒருங்கிணைப்புடன் சென்னை நகர நீர்வழிகள் மறுசீரமைப்பு திட்டத்தின் ஒரு பகுதியாக, நீர்வளத் துறையின் கோரிக்கையின் அடிப்படையில், தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியத்தால் கட்டப்பட்ட குடியிருப்புகளில் குடியமர்த்தப்படுகின்றனர்.

கீழே கூறப்பட்டுள்ள நதிகளின் கரைகளில் வாழும் நகர்ப்புற ஏழைக் குடும்பங்கள் மறுகுடியமர்வின் தற்போதைய நிலை பின்வருமாறு:

வ. எண்.	நதிகளின் பெயர்கள்	மறு குடியமர்வு செய்யப்பட வேண்டிய மொத்த குடும்பங்கள்	மறு குடியமர்வு செய்யப்பட்ட குடும்பங்கள்	மறு குடியமர்வு செய்யப்பட வேண்டிய குடும்பங்கள்
1	கூவம்	14257	13388	869
2	அடையாறு	9539	4545	4994
	மொத்தம்	**23796**	**17933**	**5863**

கூவம் மற்றும் அடையாறு நதிகளின் கரைகளிலிருந்து 17,933 குடும்பங்கள் ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புறச் சீரமைப்பு திட்டம் மற்றும் அனைவருக்கும் வீட்டுவசதி திட்டத்தின்கீழ் கட்டப்பட்ட குடியிருப்புகளில் குடியமர்த்தப்பட்டனர். மீதமுள்ள 5,863 குடும்பங்களை மறுகுடியமர்த்துவதற்கான அடுக்குமாடிக் குடியிருப்புகளின் கட்டுமானப் பணிகள் பல்வேறு நிலைகளில் முன்னேற்றத்திலுள்ளன. இப்பணிகள் 2023-2024 ஆம் ஆண்டில் முடிவுறும்.

2023 ஏப்ரல் 13]

மறுகுடியமர்வின்போது இடமாற்றுத் தொகை, வாழ்வாதார உதவித் தொகை, பயனாளிகளின் பங்களிப்புத் தொகை மற்றும் பிற வாழ்வாதார உதவிகள் நதிக்கரைகளிலிருந்து மறுகுடியமர்வு செய்யப்பட்ட குடும்பங்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. இச்செலவினங்கள் சென்னை நதிகள் சீரமைப்பு அறக்கட்டளைமூலம் அரசால் ஏற்று கொள்ளப்படுகிறது.

பக்கிங்ஹாம் கால்வாயின் கரைகள், அடையாறு மற்றும் கூவம் ஆற்றில் கலக்கும் சிறு கால்வாய்களின் கரையோரங்களில் வாழும் குடும்பங்களின் மறுகுடியமர்வினை எளிதாக்க, வருவாய்த் துறை, பெருநகர சென்னை மாநகராட்சி மற்றும் தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியத்துடன் இணைந்து நில நிர்வாகத் துறையான நீர்வள ஆதாரத் துறையால் கணக்கெடுப்புப் பணிகள் மேற்கொள்ளப்படும்.

10. சிறப்பு உள்ளடக்கத் திட்டம் (SCSP) (2022-2023)

தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியத்தால் செயல்படுத்தப்பட்டு வரும் பல்வேறு வீட்டு வசதித் திட்டங்களின்மூலம் பட்டியல் இனத்தவர் மற்றும் பழங்குடியினத்தைச் சேர்ந்த நகர்ப்புற ஏழைக் குடும்பங்கள் பயனடைகின்றனர். 2022—2023 ஆம் ஆண்டிற்கான SCSP சிறப்பு திட்டத்தினை செயல்படுத்த ரூ.887.60 கோடி மற்றும் பழங்குடியினர் துணைத் திட்டத்திற்கு (TSP) ரூ.77.49 கோடி அரசால் வழங்கப்பட்டுள்ளது. இந்நிதியுதவியினை முழுமையாக பயன்படுத்தி, தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியத்தால் இக்குடும்பங்களுக்குக் குடியிருப்புகள் / வீடுகள் கட்டப்பட்டு பட்டியல் மற்றும் பழங்குடியினர் இனத்தைச் சேர்ந்த குடும்பங்களுக்கு வழங்கப்பட்டு வருகின்றன. 2022-2023 ஆம் ஆண்டின் வரவு செலவுத் திட்டத்தில் மேற்கூறப்பட்ட திட்டப்பணிகளுக்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகை முழுவதுமாக செலவிடப்பட்டுள்ளன.

11. நில உரிமை/ விற்பனைப் பத்திரங்கள் வழங்குதல்

11.1 மனைகளுக்கான நில உரிமை

சென்னை மற்றும் 9 நகரங்களில் அரசு மற்றும் பிற துறைகளுக்குச் சொந்தமான நிலங்களிலுள்ள ஏழைகளின் வாழ்விடங்களில்

தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியத்தால் நகர்ப்புற ஏழைகளுக்கான வாழ்விட மேம்பாட்டுப் பணிகள் "உள்ளது உள்ளபடி" நிலையில் செயல்படுத்தப்பட்டுள்ளது. இப்பகுதிகள் அமைந்துள்ள நிலங்கள் தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியத்திற்கு மாற்றம் செய்யப்பட்டவுடன், நகர்ப்புற ஏழைக் குடும்பங்கள் வாழ்ந்து வரும் மனைகளுக்கான நில உரிமை விற்பனைப்பத்திரங்கள் வாயிலாக உறுதி செய்யப்படுகிறது. இக்குடும்பங்களுக்குக் விற்பனைப்பத்திரங்கள் வழங்கப்பட்டுள்ள விபரம் பின்வருமாறு:

வ. எண்	விவரம்	சென்னை	இதர நகரங்கள்	மொத்தம்
1	ஒதுக்கீடு செய்யப்பட்ட மனைகள்	1,01,149	34,135	1,35,284
2	விற்பனைப் பத்திரங்கள் வழங்கப்பட்டவை	44,097	5,346	49,443
3	விற்பனைப் பத்திரங்கள் வழங்க வேண்டிய மீதமுள்ள குடும்பங்கள்	57,052	28,789	85,841

11.2 அடுக்குமாடி குடியிருப்புகளுக்கான விற்பனைப் பத்திரங்கள்

தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியத்தால் கட்டப்பட்ட 1.78 இலட்சம் குடியிருப்புகளுள் 32,247 குடியிருப்புகளுக்கு விற்பனைப் பத்திரங்கள் வழங்கப்பட்டுள்ளன.

மேம்படுத்தப்பட்ட மனைகள் மற்றும் அடுக்குமாடிக் குடியிருப்புகளில் வாழும் மீதமுள்ள குடும்பங்களுக்குக் விற்பனைப் பத்திரங்கள் வழங்கும் பணிகள் பின்வரும் காரணங்களால் தாமதமாகின்றது:

i. வாரியத்திற்குச் செலுத்தப்பட வேண்டிய நிலுவைத் தொகை

ii. உரிய ஆவணங்கள் கிடைக்கப்பெறாமை

2023 ஏப்ரல் 13]

iii. இறந்த ஒதுக்கீடுதாரர்களின் குடும்ப உறுப்பினர்களிடையே சட்டப் பூர்வமான வாரிசு குறித்த சிக்கல்கள்.

iv. அடுக்குமாடி குடியிருப்புகளில் வாடகைமுறை ஒதுக்கீடுதாரர்கள் தவணைமுறைத் திட்டத்தின்கீழ் வர விருப்பமின்மை

v. நிலுவையில் உள்ள நீதிமன்ற வழக்குகள் மற்றும் மேல்முறையீடுகள்.

vi. ஒதுக்கீடுதாரர்களிடமிருந்து மனைகளை வசதியானவர்கள் (Non—EWS) விலைக்கு வாங்கியுள்ள நிலை

vii. வாரியத்தின் பெயரில் நில உரிமை மாற்றம் பெறாமல் நிலுவையாக உள்ளவை.

மேம்படுத்தப்பட்ட மனைகள் மற்றும் குடியிருப்புகளின் ஒதுக்கீடுதாரர்கள் விற்பனைப் பத்திரங்கள் விரைவாகப் பெற்றிட அவர்களை ஊக்கப்படுத்தும் வகையில் ஒதுக்கீடுதாரர்களுக்கு அவர்கள் செலுத்த வேண்டிய நிலுவைத் தொகை விவரங்களைக் குறிப்பிட்டு நேரடியாகவும் தபால் மூலமாகவும் மனைகளின் ஒதுக்கீடுதாரர்களுக்கு 23921 வரைவு விற்பனைப் பத்திரங்களும் மற்றும் குடியிருப்புகளுக்கு 54106 வரைவு விற்பனைப் பத்திரங்களும் வழங்கப்பட்டுள்ளன. அதனைப் பெற்றுக்கொண்டு வாரியத்திற்கு நிலுவைத் தொகையினை செலுத்தி 2022—2023 ஆம் ஆண்டில் 1232 மனை ஒதுக்கீடுதாரர்களும், 1433 குடியிருப்பு ஒதுக்கீடுதாரர்களும் விற்பனைப் பத்திரங்களைப் பெற்று பயனடைந்துள்ளனர்.

11.3 நில உரிமை மாற்றத்திற்கான அதிகாரமளிக்கப்பட்ட குழு

நில உரிமை மாற்றத்திற்கான செயல்முறைகளை விரைவுபடுத்த அதிகாரமளிக்கப்பட்ட குழு (Empowered Committee) ஒன்று அரசால் ஏற்படுத்தப்பட்டுள்ளது. இக்குழு இதுவரை 294 திட்டங்களுக்கான ஒப்புதல் அளித்துள்ளது, 116 திட்டப்பகுதிகளுக்குத் தேவையான அரசாணைகளும் வழங்கப்பட்டுள்ளன.

12. சமுதாய மேம்பாட்டுப் பணிகள்

மறுகுடியமர்வு செய்யப்பட்ட குடும்பங்களின் வாழ்வாதாரம் மற்றும் வாழ்க்கை நிலையினை மேம்படுத்த கீழே கூறப்பட்டுள்ள சமுதாய மேம்பாட்டுப் பணிகள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

[*2023 ஏப்ரல் 13*

தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகத்தால், ஒப்புதல் அளிக்கப்பட்ட பயிற்சி நிறுவனங்கள்மூலம் திறன் மேம்பாட்டுப் பயிற்சிகள் வாரியத்தின் ஒருங்கிணைப்புடன் வழங்கப்படுகிறது. தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகத்தால் 10 வர்த்தக பிரிவுகளில் 7 பயிற்சி நிறுவனங்கள்மூலம் 1596 நபர்களுக்குப் பயிற்சிகளை வழங்க பணி ஆணைகள் வழங்கப்பட்டு, கார் ஓட்டுநர் பயிற்சி நிலை—III, உதவி அழகு சிகிச்சையாளர், பொது உதவியாளர் மற்றும் அழகுக் கலை நிபுணர் போன்ற பயிற்சிகள் நடைபெற்று வருகின்றன.

தமிழ்நாடு நகரப்புற வாழ்வாதார இயக்கத்துடன் இணைந்து திறன் மேம்பாட்டுப் பயிற்சிகள் வழங்கப்படுகின்றன. இதுவரை தையல் பயிற்சி, மண் அள்ளும் கனரக வாகன இயக்குதல் பயிற்சி, மின் பழுது நீக்குநர், ஓட்டுநர் பயிற்சி நிலை—III, கணினி இயக்குபவர், காட்சிப்பதிவு தொலைக்காட்சி நிறுவுதல் (CCTV), ஆய்வக உதவியாளர், தையல் மேற்பார்வையாளர், தையல் இயந்திரம் இயக்குபவர் போன்ற இனங்களில் 299 நபர்களுக்குப் பயிற்சிகள் வழங்கப்பட்டுள்ளன, மேலும் 258 நபர்களுக்கு பயிற்சிகள் வழங்கப்பட்டு வருகின்றன.

தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியம், தன்னார்வ நிறுவனங்களுடன் இணைந்து பல்வேறு தொழில்பிரிவுகளில் 1438 நபர்களுக்குப் பயிற்சிகள் வழங்கியுள்ளது. இவர்களில் பெரும்பாலோனோர் பயிற்சி பெற்ற அதே தொழிலிலும், சுய தொழிலிலும், மற்ற பிரிவுகளிலும் பணிபுரிந்து வருகிறார்கள்.

12.1 சமூகத் தணிக்கை

பயனாளிகளின் ஒத்துழைப்புடன் திட்டப் பணிகளைச் சிறப்பாக செயல்படுத்த கட்டுமானப் பணிகள் துவங்கப்பட்டது முதல் ஒருங்கிணைந்து பங்காற்றவும் இதர பணிகளை மேம்படுத்தவும், 9 சமூகப்பணி நிறுவனங்களான சென்னை சமூகப் பணி கல்லூரி, சென்னை கிறிஸ்துவ கல்லூரி, இந்து கல்லூரி, ஸ்டெல்லா மேரி கல்லூரி, பெட்ரிசியன் கலை மற்றும் அறிவியல் கல்லூரி, மதுரை சமூக அறிவியல் நிறுவனம், பிஷப் கால்டுவெல் கல்லூரி, தூத்துக்குடி, கோயம்புத்தூர், பாரதியார் பல்கலைக்கழகம் மற்றும் லயோலா கல்லூரி ஆகியவற்றால் 27 திட்டப்பகுதிகளில் சமூக தணிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

வாகனம் நிறுத்துவதற்கான இடம், திட்டப்பகுதியின் பாதுகாப்பிற்காகச் சுற்றுச்சுவர் மற்றும் வாயிற் கதவு அமைத்தல்,

2023 ஏப்ரல் 13]
காட்சிப் பதிவு தொலைக்காட்சி (CCTV) நிறுவுதல், தனி குடிநீர்த் தொட்டிகள் அமைத்தல்,இளைஞர்களின் நலன் கருதி விளையாட்டுத் திடல், குடியிருப்போர் கண்காணிப்பு குழு அமைத்தல் போன்ற இதரப் பரிந்துரைகள் சமூக தணிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளன.

12.2 உயர் கல்விக்கான உதவித் தொகை

மறுகுடியமர்வு செய்யப்பட்டுள்ள பெரும்பாலான குடும்பங்களில் ஆட்டோ ஓட்டுதல், வீடுகளைப் பராமரித்தல், கட்டுமானப் பணிகள், சில்லறை வியாபாரம் மற்றும் குழாய்கள் அமைத்தல் போன்ற பணிகளில் ஈடுபட்டுள்ளதால், அவர்களது குழந்தைகளின் கல்வித் தேவைகளைப் பூர்த்தி செய்ய இயலவில்லை. வாரியத்தின் அடுக்குமாடிக் குடியிருப்புகளில் வாழ்ந்து வரும் 141 உயர்கல்வி பயிலும் மாணவர்களுக்கு ரூ.42.30 இலட்சம் கல்வி உதவித் தொகையாக எச்.டி.எப்.சி. வங்கிமூலம் 2021–2022 ஆம் ஆண்டில் பெற்றுத் தரப்பட்டுள்ளது. மேலும், வாரியத்தின் அடுக்குமாடிக் குடியிருப்புகளில் வாழ்ந்து வரும் 120 உயர் கல்வி பயிலும் மாணவர்களுக்கு எச்.டி.எப்.சி. வங்கிமூலம் 2022–2023 ஆம் ஆண்டில் ரூ.39.20 இலட்சம் கல்வி உதவித் தொகை வழங்கப்பட்டுள்ளது.

12.3 பள்ளிக் கல்வி

அடுக்குமாடிக் குடியிருப்புகளில் வாழும் பள்ளிக் கல்வி மாணவர்களின் கல்வி பயிலும் திறனை மேம்படுத்த தன்னார்வ நிறுவனங்களுடன் இணைந்து தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியத்தால் மாலை நேரங்களில் பயிற்சி வகுப்புகள், கற்கும் மையங்கள் (Study Centre) நடத்தப்படுகின்றன. கல்வி கற்றல், பொருட்கள், எழுது பொருட்கள் மற்றும் சிற்றுண்டி ஆகியவை, கல்வி கற்கும் குழந்தைகளுக்கு வழங்கப்படுகின்றன. இதுவரை 1750 குழந்தைகள் பயன்பெற்றுள்ளனர்.

12.4 விளையாட்டு நடவடிக்கைகளில் பயிற்சி

தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியத்தின் கோரிக்கைகளை ஏற்று தன்னார்வ நிறுவனங்கள் காவல் துறை சிறுவர் மற்றும் பெண்கள் சங்கங்கள்மூலம் கபடி, சிலம்பம், பறை, கால்பந்து, கிரிக்கெட், கைபந்து போன்ற விளையாட்டு நடவடிக்கைகளில் அடுக்குமாடிக் குடியிருப்புத் திட்டப்பகுதிகளில்

வாழும் குழந்தைகள் மற்றும் இளைஞர்களுக்குப் பயிற்சிகள் வழங்கப்படுகின்றன.

முடிவுரை

நகர்ப்புறங்களில் உள்ள அனைத்துக் குடிசைப்பகுதி வாழ் குடும்பங்களுக்கும் அடிப்படை மற்றும் சமூக வசதிகளுடன் கூடிய வீட்டுவசதி வழங்கவும், திட்டப்பகுதிகளில் கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தவும் இம்மக்களுக்குத் திறன் மேம்பாட்டுப் பயிற்சிகளை வழங்கி அவர்களின் பொருளாதார நிலையினை உயர்த்தவும், 2030 ஆம் ஆண்டிற்கு முன்னர் "குடிசைப் பகுதிகளற்ற தமிழ்நாடு" என்ற நிலையினை அடைந்து "ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காண்போம்" என்ற நோக்கினை அடைய, இந்த அரசால் தொடர் நடவடிக்கைகள் முனைப்புடன் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இணைப்பு-VII

(357 ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.)

மானியக் கோரிக்கை எண் 26-வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை

சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம்

கொள்கை விளக்கக் குறிப்பு, 2023-2024

முன்னுரை

நகரமயமாக்கல் என்பது பொருளாதார வளர்ச்சியின் ஒரு முக்கிய அம்சம் ஆகும். பெரிய நகர்ப்புற மையங்களின் பொருளாதார வளர்ச்சி, பல்வேறு வேலை வாய்ப்புகளையும் வாழ்வாதாரத்திற்கான வழிமுறைகளையும் வழங்குகிறது. நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் (GDP) நகர்ப்புறங்கள் முக்கியப் பங்களிப்பாளர்களாக இருப்பதால், நகரமயமாக்கல் விரிவடையும்போது தேசிய வருமானத்தின் பங்கும் அதிகரிக்கிறது.

சென்னைப் பெருநகரப் பகுதியின் வளர்ச்சியை ஒழுங்குபடுத்துவதற்கு விரிவான திட்டமிடல் தேவை என்றுணர்ந்து, சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் (செ. பெ.வ.கு) அமைக்க அரசாங்கம் நடவடிக்கை மேற்கொண்டது. இக்குழுமம் 1972 இல் மெட்ராஸ் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் (MMDA) என்ற பெயரில் தற்காலிக அமைப்பாக இருந்து, பின்னர் 1975 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகர் மற்றும் ஊரமைப்புச் சட்டம், 1971 பிரிவு 9—A—இன்கீழ் சட்டப்பூர்வ குழுமமாக மாறியது. 1972 ஆம் ஆண்டில் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தின் அதிகார செயல்திட்ட வரம்பு (சென்னைப் பெருநகர திட்டமிடல் பகுதி) 1,189 சதுர.கி.மீ ஆக இருந்தது.

திருப்பெரும்புதூர், காஞ்சிபுரம், செங்கல்பட்டு, திருவள்ளூர், கும்மிடிப்பூண்டி போன்ற பெருநகரைச் சுற்றியுள்ள பகுதிகளில் நடைபெற்றுவரும் துரித வளர்ச்சிகளைக் கணக்கில் கொண்டு, அரசாணை (நிலை) எண். 184, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை நாள் 21-10-2022 இல் திருவள்ளூர், காஞ்சிபுரம்,

செங்கல்பட்டு மற்றும் இராணிப்பேட்டை மாவட்டங்களில் உள்ள பகுதிகளையும் சேர்த்து ஏற்கெனவே இருந்த சென்னைப் பெருநகரப் பகுதியான 1,189 சதுர.கி.மீட்டரிலிருந்து 5,904 சதுர. கி.மீட்டராக விரிவுபடுத்தப்பட்டுள்ளது. இதில் 4 மாநகராட்சிகள் (பெருநகர சென்னை மாநகராட்சி, ஆவடி மாநகராட்சி, காஞ்சிபுரம் மாநகராட்சி மற்றும் தாம்பரம் மாநகராட்சி), 12 நகராட்சிகள், 14 பேரூராட்சிகள் மற்றும் 22 ஊராட்சி ஒன்றியங்களுடன் 1,321 கிராமங்களை உள்ளடக்கிய பகுதிகளைக் கொண்டு சென்னைப் பெருநகரத் திட்டப் பரப்பு விரிவாக்கம் செய்யப்பட்டது.

*சென்னைப் பெருநகரப் பகுதியுடன் திருவள்ளூர், திருத்தணி, செங்கல்பட்டு மற்றும் அரக்கோணம் போன்ற தனித்த உள்ளூர் திட்டக் குழுமங்களும், மாமல்லபுரம், கும்மிடிப்பூண்டி மற்றும் காஞ்சிபுரம் உள்ளிட்ட கூட்டு உள்ளூர் திட்டக் குழுமங்களும் மற்றும் மாமல்லபுரம் புதுநகர் வளர்ச்சிக் குழுமத்தையும் இணைப்பதற்கான முன்மொழிவு தயாரிக்கப்பட்டுள்ளது. விரிவாக்கப்பட்ட பகுதிக்கான மண்டலச் செயலாக்கத் திட்டம் (*Regional Planning Strategy*) தயாரிக்கப்படவுள்ளது.*

2023-2024 வரவு செலவுத் திட்ட மதிப்பீடு

ரூபாய் ஆயிரத்தில் (தொகு மொத்தம்)

வ. எண்	துறைகள்		வருவாய்	மூல தனம்	கடன்	மொத்தம்
1.	வீட்டுவசதி (ம) நகர்ப்புற வளர்ச்சித் துறை—தலைமைச் செயலகம்	அனுமதித்தது	167,75,95	—	211,50,00	379,25,95
2.	நகர் ஊரமைப்பு இயக்ககம்	சாட்டியது அனுமதித்தது	1 736,57,66	— —	— —	1 736,57,66
3.	கூட்டுறவு வீட்டுவசதி சங்கங்கள் (பதிவாளர்)	சாட்டியது அனுமதித்தது	1 14,05,31	— —	— 1	1 14,05,32

2023 ஏப்ரல் 13]

வ. எண்	துறைகள்		வருவாய்	மூல தனம்	கடன்	மொத்தம்
4.	சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம்	அனுமதித்தது	*50,00,02*	*2,000,00,03*	*8,015,00,01*	*10,065,00,06*
5.	தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம்	அனுமதித்தது	*32,16,14*	*1*	—	*32,16,15*
6.	தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியம்	அனுமதித்தது	*2,727,18,07*	*4*	*1*	*2,727,18,12*
7.	சென்னை ஒருங்கிணைந்த பெருநகர போக்குவரத்து குழுமம்	அனுமதித்தது	*14,56,05*	—	—	*14,56,05*
மொத்தம்		**சாட்டியது** **அனுமதித்தது**	**2** **3,742,29,20**	**...** **2,000,00,08**	**-** **8,226,50,03**	**2** **13,968,79,31**

1.1 நிறுவன அமைப்பு

சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் தற்போது மாண்புமிகு இந்து சமய அறநிலையத் துறை அமைச்சரின்கீழ் செயல்படுகின்றது. துணைத் தலைவர், உறுப்பினர்-செயலர் மற்றும் தலைமை நிர்வாக அதிகாரி ஆகியோர் இந்தக் குழுமத்தில் செயல் அலுவலர்களாக உள்ளனர். இக்குழுமத்தின் அதிகாரக் குழுவானது அரசாங்கத்தால் பரிந்துரைக்கப்பட்ட, தேர்ந்தெடுக்கப்பட்ட அரசுத் துறைகளின் தலைவர்கள், கல்வி நிறுவனங்கள், வர்த்தகம் மற்றும் வணிகத் துறையின் பிரதிநிதிகள் போன்ற பல்வேறு பங்குதாரர்களை உள்ளடக்கியதாகும்.

1.2 சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தின் செயல்பாடுகள்

சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தில் பின்வரும் பிரிவுகள் செயல்பட்டு வருகின்றன.

1. நிருவாகப் பிரிவு (Administrative Unit)

2. முழுமைத் திட்டப் பிரிவு (Master Plan Unit)

3. பரப்பு வளர்ச்சிப் பிரிவு (Area Development Unit)

4. பரப்புத் திட்டப் பிரிவு (Area Plans Unit)

5. வரன்முறைத் திட்டப் பிரிவு (Regularisation Unit)

6. சாலை மற்றும் இரயில் பிரிவு (Road and Rail Unit)

1.2.1 நிருவாகப் பிரிவு (Administrative Unit)

சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தின் அலுவலர்கள் / ஊழியர்களுக்கான அனைத்து நிருவாக நடவடிக்கைகளும் இப்பிரிவின்கீழ் மேற்கொள்ளப்படுகின்றன.

1.2.1.1 சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தின் பணி விதிமுறைகள், 2022

26-02-1980 அன்று பிறப்பிக்கப்பட்ட அரசாணை (நிலை) எண் 210 இன் வாயிலாக, தமிழ்நாடு நகர் மற்றும் ஊரமைப்புச் சட்டம், 1971 - பிரிவு 124 இன் துணைப் பிரிவு (1) இன்கீழ், குழும ஊழியர்களுக்கான பணி விதிமுறைகளுக்கு அரசு ஒப்புதல் அளித்தது. மேலும் தற்போதைய தொழில்நுட்பத் தேவைக்கேற்ப, முந்தைய பணி விதிமுறைகளில் பல மாற்றங்களை உருவாக்கி, புதிய பணி விதிமுறைகள் அரசாணை (நிலை) எண் 262 மூலம் 16-12-2022 அன்று அரசு ஒப்புதல் அளித்தது. இப்பணி விதிமுறைகள் 01-01-2023 முதல் நடைமுறையில் உள்ளன.

1.2.1.2 நேர்முக ஆட்சேர்ப்பு

2022 ஆம் ஆண்டில், சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தில் 10 ஆண்டுகளுக்கும் மேலாகக் காலியாக இருந்த 15 உதவித் திட்ட அமைப்பாளர்கள் (Assistant Planner) மற்றும் 15 திட்ட உதவியாளர்களும் - நிலை-I (Planning Assistant Grade—I) நியமனம் செய்யப்பட்டுள்ளனர். மூன்றாம் முழுமைத் திட்டம், வெளிவட்டச் சாலை மேம்பாடு, புதுநகரங்கள் மேம்பாடு, மறுவடிவமைப்புத் திட்டங்கள், பொது உட்கட்டமைப்புத் திட்டங்கள் போன்ற பல்வேறு செயல்பாடுகளை மேற்கொள்வதற்கான ஆயத்தங்களைக் கருத்தில் கொண்டு சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் இவர்களை நியமனம் செய்துள்ளது.

TRUTH ALONE TRIUMPHS

2023 ஏப்ரல் 13]

சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தில் ஓட்டுநர் பதவிக்கான 10 காலியிடங்கள் 2022 ஆம் ஆண்டில் நேரடி நியமனம்மூலம் நிரப்பப்பட்டுள்ளன. இதில் ஒரு பெண் ஓட்டுநரும் நியமிக்கப்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது.

*மேலும் 13 உதவிப் பொறியாளர்களைப் பணியமர்த்துவதற்கு, தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தை (*TNPSC*) சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் நாடியுள்ளது. மேலும், உதவிப் பொறியாளர்கள் நியமிப்பதற்கான நடவடிக்கைகள் முன்னேற்றத்தில் உள்ளன.*

1.2.1.3 தளிரகம்

தமிழகத்தில் குழந்தை காப்பகத்தைத் திறக்கும் அரசு நிறுவனங்களில் சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழுமமும் ஒன்றாகும். 2007 ஆம் ஆண்டின் மகப்பேறு நலச் சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள வழிகாட்டுதல்களை உள்ளடக்கி, ஐந்து வயதுக்குட்பட்ட குழந்தைகளுக்காக தளிரகம் திட்டம் உருவாக்கப்பட்டுள்ளது. பணிபுரியும் பெற்றோர்கள், குறிப்பாகப் பெண்கள், அவர்களின் பணிச் சூழலையும், வீட்டுச் சூழலையும் சமமாகப் பராமரிக்க உதவிடும் விதமாக, அவர்களுக்கு ஏற்படும் தடைகளைத் தகர்க்கும் வகையில் இத்திட்டம் தன் முதல் படியை எடுத்து வைத்துள்ளது. குழந்தைகள் காப்பகத்திற்கு இரண்டு முழுநேரப் பராமரிப்பாளர்களை சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழுமம் நியமித்துள்ளது.

1.2.2 முழுமைத் திட்டப் பிரிவு (Master Plan Unit)

முழுமைத் திட்டப் பிரிவு சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தின் ஒரு முக்கியமான பிரிவாகும். இப்பிரிவின் முக்கியச் செயல்பாடுகள் கீழ்வருமாறு:

i. *முழுமைத் திட்டம் தயாரித்தல்*

ii. *விரிவான வளர்ச்சித் திட்டம் தயாரித்தல்*

iii. *வளர்ச்சி வரைமுறைகளை மதிப்பாய்வு செய்து திருத்தங்களை முன்மொழிதல்*

iv. *அரசாங்கத்தால் குறிப்பிடப்படும் நகர்ப்புற மேம்பாடு மற்றும் பெருநகரத் திட்டமிடல் தொடர்பான கொள்கை முடிவுகளைச் செயல்படுத்துதல்.*

v. பாரம்பரிய கட்டடங்கள்/வளாகங்களைப் பாதுகாத்தல்.

vi. முழுமைத் திட்டம் செயல்படுத்துதல் மற்றும் திருத்தம் செய்தல்.

vii. முழுமைத் திட்டத்தின்கீழ், துறை வாரியான குழுக்களின் கூட்டங்களை நடத்துதல்

viii. புவிசார் தகவல் அமைப்பில் (GIS) முழுமைத் திட்டம் தயாரித்தல்

ix. நிலவகைப்பாடுகளில் உபயோக மாற்றங்களை முழுமைத் திட்டம் மற்றும் விரிவான வளர்ச்சித் திட்டங்களில் அமல்படுத்துதல்.

x. அரசு குறிப்பிடும் இடம்சார்ந்த திட்டங்களைத் தயாரித்தல்.

1.2.2.1 சென்னைப் பெருநகரப் பகுதிக்கான மூன்றாம் முழுமைத் திட்டம் (2027- 2046) தயாரித்தல்

சென்னைப் பெருநகரப் பகுதியில் பெருகிவரும் மக்கள்தொகைக்கு ஏற்ப, போக்குவரத்து மற்றும் உள்கட்டமைப்பில் கவனம் செலுத்தவும், நகரத்தின் நெரிசலைக் குறைப்பதற்கும் 1976 ஆம் ஆண்டில் முதலாம் முழுமைத் திட்டம் (1976-1996) தயாரிக்கப்பட்டது. முதலாம் முழுமைத் திட்டத்தைத் திறம்படச் செயல்படுத்தியதின் காரணமாக இரண்டாம் முழுமைத் திட்டம் (2006-2026) தயாரிக்க அடித்தளம் அமைத்தது. இரண்டாம் முழுமைத் திட்டமானது நகர்ப்புறப் பகுதிகளில் வளர்ச்சியை ஒழுங்குபடுத்துவதற்கும், நகரத்தின் நெரிசலைக் குறைப்பதற்கும் செயற்கைக்கோள் நகரங்கள் மற்றும் புதுநகரங்களை உருவாக்குவதிலும் கவனம் செலுத்துகிறது. வெள்ள அபாயங்கள், மாசுபாடு, நீர்நிலைகள் குறைதல், நகரத்தில் போதுமான பசுமை இல்லாதது போன்ற பிற சுற்றுச்சூழல் மற்றும் நிலையான வளர்ச்சி சவால்களை எதிர்கொள்ள இரண்டாம் முழுமைத் திட்டம் முயற்சித்தது. இரண்டாம் முழுமைத் திட்டமானது சூழலியல் முக்கியத்துவம் வாய்ந்த பகுதிகள் மற்றும் ஒழுங்குபடுத்தப்பட்ட நீர்ப்பிடிப்பு பகுதிகளைக் கண்டறிந்து அவற்றைச் சுற்றியுள்ள அடர்த்தியைக் கட்டுப்படுத்த வரையறுக்கப்பட்ட வளர்ச்சி மண்டலங்களாக அறிவித்தது. ஊக்கத் தளப்பரப்பு குறியீடு (FSI), மாற்றத்தக்க மேம்பாட்டு உரிமைகள் (TDR), திறந்தவெளி இட ஒதுக்கீடு (OSR)

2023 ஏப்ரல் 13]

மற்றும் அங்கீகரிக்கப்படாத மனைப் பிரிவுகளை முறைப்படுத்துதல் போன்ற பல்வேறு மேம்பாட்டு விதிமுறைகளும் இத்துடன் இணைக்கப்பட்டன.

இரண்டாம் முழுமைத் திட்டத்திற்கான கால வரம்பு 2026 ஆம் ஆண்டு முடிவடைவதால், மூன்றாம் முழுமைத் திட்டத்திற்கான (2027-2046) ஆயத்தப் பணிகளை சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் தொடங்கியுள்ளது. உலக வங்கியின் உதவியோடு தமிழ்நாடு வீட்டுவசதி மற்றும் வாழ்விட மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் (TNHHDP) மூன்றாம் முழுமைத் திட்டம் பற்றிய ஆய்வுகள் தொடங்கப்பட்டுள்ளன. பொருளாதார மேம்பாடு, நகர்ப்புற வீட்டுவசதி, சமூக உட்கட்டமைப்பு, சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் பேரிடர் மேலாண்மை, பாலின சமத்துவம், மரபு மற்றும் சுற்றுலா, போக்குவரத்து மற்றும் போக்குவரத்து தொழில்நுட்பம், நகர்ப்புற உட்கட்டமைப்பு போன்ற சேவைகள் மூன்றாம் முழுமைத் திட்டத்தில் கவனம் செலுத்தப்பட வேண்டிய முக்கியத் துறைகளாகும்.

2027-2046-க்கான 'மூன்றாம் முழுமைத் திட்டத்திற்கான தொலைநோக்கு ஆவணம் தயாரித்தல் குறித்த ஆய்வு தொடங்கியுள்ளது. இந்த ஆய்வின்கீழ், பெருநகர சென்னை மாநகராட்சியில் உள்ள 15 மண்டலங்களிலும், பெருநகர சென்னை மாநகராட்சிப் பகுதிக்கு வெளியே உள்ள 14 இடங்களிலும் பொது மக்கள் கருத்துக் கேட்புக் கூட்டம் டிசம்பர் 2022 முதல் ஜனவரி 2023 வரை நடைபெற்றது. பல்வேறு துறைகளுடனான துறைசார் கூட்டங்கள் விரைவில் நடைபெறும். மேலும், சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழும நிறுவனத்தினை வலுப்படுத்துவதற்கான மதிப்பீடு மற்றும் செயல் திட்டத்திற்கான ஆவணம் தயாரித்தல், சென்னைப் பெருநகர் பகுதியில் நில மதிப்பு, அடர்த்திப்பரவல் மற்றும் தமிழ்நாடு ஒருங்கிணைந்த வளர்ச்சி மற்றும் கட்டட விதிகள் 2019-ஐ வலுப்படுத்துவதற்கான மதிப்பாய்வு மற்றும் பரிந்துரைகளுக்கான ஆய்வுகள் நடைபெற்று வருகின்றன.

சென்னைப் பெருநகரப் பகுதியின் (CMA) வேலைவாய்ப்பு மற்றும் வருமான வகையிலான இடப்பரவல் மற்றும் ஒருங்கிணைப்புப் பொருளாதாரங்கள் (Spatial Distribution of Employment and Agglomeration Economies), வீட்டுவசதித் தேவை மற்றும் விநியோக முறை, (Demand and Supply pattern of Housing) சென்னைப் பெருநகரப் பகுதியின் நீர் மற்றும் பசுமை

*உட்கட்டமைப்பை ஒருங்கிணைத்து அதன்படி வெள்ள அழிவுகள் மற்றும் அபாயங்களை தடுக்கும் வகையில் நகர்ப்புற திட்டமிடல் மற்றும் நிர்வாகம் (*Integrating Blue—Green Infrastructure for Flood Disaster and Risk Reduction in Urban Planning*) போன்றவை குறித்த ஆய்வுகள் மூன்றாம் முழுமைத் திட்டத்திற்கான உள்ளீடுகளை வழங்கும் கூறுகளாக முன்மொழியப்பட்டுள்ளன.*

*மூன்றாம் முழுமைத் திட்டத் தயாரிப்பினை ஒருங்கிணைக்கப் பல்வேறு துறைகளில் இருந்து அலுவலர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். மூல வரைபடத்தைப் (*Base Map*) புதுப்பிப்பதற்கான நில அளவை வரை படங்களைச் (*Survey Map*) சேகரிக்கும் பணியும் நடைபெற்று வருகிறது.*

1.2.2.2 சாலை வலைப்பின்னல் அமைப்புத் திட்டம் (Grid of Roads)

*சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் 201 கிராமங்களுக்கு சாலைகள் வலைப்பின்னல் அமைப்பு (*Grid of Roads*) திட்டத்தைத் தயாரித்துள்ளது. இத்திட்டம் சென்னைப் பெருநகரப் பகுதியின் வளர்ச்சியடையாத பகுதிகளில் சிறப்பான போக்குவரத்தை அளிக்க சாலை படிநிலை அமைப்பை (*Hierarchial System of Roads*) வழங்குகிறது.*

*தமிழ்நாடு நகர் மற்றும் ஊரமைப்புச் சட்டம், 1971, பழைய சாலைகள் மற்றும் தெருக்களை மாற்றியமைத்தல், புதிய சாலைகள் மற்றும் தெருக்களை அமைத்தல், சமூக வசதிகளை ஏற்படுத்துதல் போன்ற நுண்ணிய முன்னேற்றங்களுக்கான விரிவான வளர்ச்சித் திட்டங்களை (*Detailed Development Plan*) தயாரிக்க வழிவகுக்கிறது. சென்னைப் பெருநகரப் பகுதி விரைவான வளர்ச்சியைக் கண்டு வருகிறது. இதனால் வளர்ந்து வரும் போக்குவரத்து நெரிசலை சமாளிக்க சாலைகளின் படி நிலை அமைப்புமூலம் (*Hierarchial system of Roads*) சீரிய போக்குவரத்து சுழற்சியினை அமைப்பது அவசியமாகிறது. சென்னைப் பெருநகரப் பகுதியை ஒட்டிய கிராமப் பகுதிகளில் பெரிய அளவில் வளர்ச்சிகள் உருவாகி வருவதால் அதற்கேற்றார்போல சிறந்த சாலை வலைப்பின்னல் அமைப்பையும் (*Network of Roads*) போக்குவரத்து சுற்றோட்டத்தையும் முன்கூட்டியே திட்டமிடுவது அவசியமாகிறது.*

சென்னைப் பெருநகரப் பகுதியில் ஏற்கெனவே உள்ள 422 சாலைகளுக்கு விரிவாக்கப் பணிகள்

2023 ஏப்ரல் 13]

மற்றும் சாலை வலைப் பின்னல் அமைப்பு (Grid of Roads) திட்டத்தில் 653 புதிய சாலைகள் அமைக்க கருத்துரு முன்மொழியப்பட்டுள்ளது.

முதற்கட்டமாக, சாலை வலைபின்னல் அமைப்புத் திட்டத்தில் 422 சாலைகளை அகலப்படுத்தும் முடிவைச் செயற்படுத்தும் பொருட்டு நாளிதழ்களில் அறிவிக்கை செய்து பொதுமக்களின் ஆட்சேபனைகள் மற்றும் ஆலோசனைகள் பெறப்பட்டுள்ளன. பெறப்பட்ட கருத்துக்கள் ஆய்வு செய்யப்பட்டு ஒப்புதலுக்கு பின் இரண்டாம் முழுமைத் திட்டத்தில் இப்பொருண்மையை இணைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும். இரண்டாம் கட்டமாக சாலை வலைப்பின்னல் அமைப்புத் திட்டத்தில் உத்தேசிக்கப்பட்டுள்ள 653 புதிய சாலைகள் குறித்த அறிவிக்கை செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

2022-2023 ஆம் நிதியாண்டில் சென்னைப் பெருநகர்ப் பகுதிக்குள் வரும் (18 மீ மற்றும் அதற்கு மேல்) அகலம் கொண்ட சாலைகளை ரூ. 200 கோடி மதிப்பீட்டில் விரிவுபடுத்துவதற்கான அறிவிப்பு வெளியிடப்பட்டதினைத் தொடர்ந்து முதற்கட்டமாக வெளிவட்ட சாலைக்கு அருகில் இரண்டு புதிய சாலைகள் அமைக்கத் தீர்மானம் செய்யப்பட்டது. ஏற்கெனவே உள்ள மாரம்பேடு, சோத்துப்பாக்கம், மலையம்பாக்கம் இவற்றின் வழியாக வெளிவட்ட சாலைகளை இணைக்கும் மூன்று சாலைகளை விரிவாக்கம் செய்வது குறித்தும் நாளிதழ்களில் செய்தி வெளியிடப்பட்டது. விரிவான கள ஆய்வுகளை நடத்தி, நில எடுப்பு அட்டவணையை (Land Plan Schedule) தயாரிப்பதற்கான செயல்முறைகள் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தில் விரைவாக நடைப்பெற்று வருகின்றன.

மேலும் அரசாணை (நிலை) எண் 41, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை, நாள் 30-03-2023 இன் மூலமாக இதற்கான ஒப்புதலை அரசு வழங்கியுள்ளது.

1.2.2.3 மீஞ்சூர், திருமழிசை, திருவள்ளூர், செங்கல்பட்டு, காஞ்சிபுரம் மற்றும் மாமல்லபுரம் ஆகிய துணைநகரங்களுக்கான புதுநகர் மேம்பாட்டுத் திட்டங்களைத் தயாரித்தல்.

திருமழிசை, மீஞ்சூர், திருவள்ளூர், செங்கல்பட்டு, காஞ்சிபுரம், மாமல்லபுரம் போன்ற நகர்ப்புற வளர்ச்சி மையங்களையும்,

[2023 ஏப்ரல் 13

அவற்றைச் சுற்றியுள்ள பகுதிகளையும் துணைக்கோள் நகரங்களாக உருவாக்கிட இவை ஒவ்வொன்றிற்கும் தனித்தனியாக புதுநகர் மேம்பாட்டுத் திட்டங்களை (New Town Development Plans) சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் உருவாக்க நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.

அ) மீஞ்சூர் புதுநகர்

மீஞ்சூரில் உள்ள புதுநகர் வளர்ச்சிக்கான பகுதி, 111.62 சதுர கி.மீட்டர் பரப்பளவைக் கொண்டு மீஞ்சூர் கிராமத்தைச் சுற்றியுள்ள பன்னிரண்டு கிராமங்களை உள்ளடக்கியதாக வரையறுக்கப்பட்டுள்ளது. மீஞ்சூரை, நகர்ப்புற வளர்ச்சி மையமாக (Urban Growth Centre) மேம்படுத்துவதற்கான தொலைநோக்குப் பார்வையைக் கருத்தில் கொண்டு, மீஞ்சூர் புதிய நகரத்திற்கான விரிவான பொருளாதார மற்றும் வணிகத் திட்டம், புதுநகர் மேம்பாட்டுத் திட்டத்தைத் தயாரிப்பதற்கு சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழுமம் தீர்மானித்துள்ளது.

அரசாணை (நிலை) எண் 15, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை, நாள் 07-02-2023 இன்மூலம் மீஞ்சூர் புதுநகருக்காக அதன் வரையறுக்கப்பட்ட எல்லையில் அமைந்துள்ள பன்னிரண்டு கிராமங்களை உள்ளடக்கி, அறிவிக்கை செய்து ஆணை வெளியிடப்பட்டுள்ளது. இதனைத் தொடர்ந்து 22-02-2023 நாளிட்ட தமிழ்நாடு அரசிதழில் அறிவிக்கை (Gazette Notification) வெளியிடப்பட்டது. இவ்வறிவிக்கை வெளியிடப்பட்ட நாளிலிருந்து அந்தப் பகுதியில் வசிக்கும் நபர்கள், உள்ளாட்சி அமைப்புகள் / நிறுவனங்களிடமிருந்தும் ஆட்சேபனைகள் மற்றும் ஆலோசனைகள் பெறப்பட்டு வருகிறது.

ஆ) திருமழிசை புதுநகர்

திருமழிசை புதுநகர்ப் பகுதி 34.1 சதுர கிலோமீட்டர் பரப்பளவில் 17 கிராமங்களை உள்ளடக்கியதாக வரையறுக்கப்பட்டுள்ளது. திருமழிசை புதுநகருக்கான உத்தேசிக்கப்பட்டுள்ள எல்லையை வரையறுத்து வெளியிடும் பொருட்டும், வெளியிடப்பட்ட நாளிலிருந்து இரண்டு மாதங்களுக்குள் ஏதேனும் ஆட்சேபனை மற்றும் பரிந்துரைகளுக்கு அழைப்பு விடுக்கும் நோக்கத்திற்காகவும் வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை அரசாணை (நிலை) எண். 209, நாள் 23-11-2022 அன்று வெளியிடப்பட்டது. இதனைத் தொடர்ந்து

2023 ஏப்ரல் 13]

14-12-2022 நாளிட்ட தமிழ்நாடு அரசிதழில் அறிவிக்கை வெளியிடப்பட்டது. இதனைத் தொடர்ந்து பெறப்பட்ட ஆட்சேபனைகள்/ ஆலோசனைகள் பரிசீலிக்கப்பட்டு வருகிறது. மேலும், 15வது நிதிக்குழுவின்கீழ் இத்திட்டத்திற்கான ஒன்றிய அரசின் நிதியுதவி பெறும் போட்டிக்கான கருத்தியல் முழுமைத்திட்ட அறிக்கை 30-12-2022 அன்று சமர்ப்பிக்கப்பட்டது.

இ) திருவள்ளூர் புதுநகர்

*திருவள்ளூரில் புது நகர வளர்ச்சிக்கான பகுதி 37.74 சதுர கி.மீட்டர் பரப்பளவைக் கொண்ட 11 கிராமங்களை உள்ளடக்கியதாக வரையறுக்கப்பட்டுள்ளது. திருவள்ளூர் புதிய நகரத்தை நகர்ப்புற வளர்ச்சி மையமாக (*Urban Growth Centre*) மேம்படுத்துவதற்கான ஒட்டுமொத்த பார்வையைக் கருத்தில் கொண்டு புதிய நகர மேம்பாட்டுத் திட்டத்தைத் தயாரிப்பதற்கு ஒப்புதல் அளிக்க குழுமம் தீர்மானித்துள்ளது.*

*திருவள்ளூரில் உத்தேசித்துள்ள புதிய நகரத்திற்கான 11 கிராமங்களை உள்ளடக்கி அதன் வரையறுக்கப்பட்ட எல்லையை அறிவிக்கை செய்து அரசாணை (நிலை) எண் 14, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை, நாள் 07-02-2023 இன் மூலமாக அரசாணை வெளியிடப்பட்டுள்ளது. இதனைத் தொடர்ந்து 22-02-2023 ஆம் நாளிட்ட தமிழ்நாடு அரசிதழில் அறிவிக்கை (*Gazette Notification*) வெளியிடப்பட்டது. இவ்வறிவிக்கை வெளியிடப்பட்ட நாளிலிருந்து அந்தப் பகுதியில் வசிக்கும் நபர்கள், உள்ளாட்சி அமைப்புகள் / நிறுவனங்களிடமிருந்தும் ஆட்சேபனைகள் மற்றும் ஆலோசனைகள் பெறப்பட்டு வருகிறது.*

ஈ) செங்கல்பட்டு புதுநகர்

*செங்கல்பட்டு புதுநகர் வளர்ச்சிக்கான பகுதி 136.25 சதுர கிலோமீட்டர் பரப்பளவைக் கொண்ட 60 கிராமங்களை உள்ளடக்கியதாக வரையறுக்கப்பட்டுள்ளது. செங்கல்பட்டு புதிய நகரத்தை நகர்ப்புற வளர்ச்சி மையமாக (*Urban Growth Centre*) மேம்படுத்துவதற்கான ஒட்டுமொத்த தேவையைக் கருத்தில் கொண்டு, புதிய நகர மேம்பாட்டுத் திட்டத்தைத் தயாரிப்பதற்கு ஒப்புதல் அளிக்க குழுமம் தீர்மானித்துள்ளது.*

அரசாணை (நிலை) எண் 210, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை, நாள் 23-11-2022 இன்மூலம், செங்கல்பட்டு

புதுநகருக்காக உத்தேசித்துள்ள 60 கிராமங்களை உள்ளடக்கி அதன் எல்லையை வரையறுப்பதில் உள்ள ஆட்சேபனைகளைக் கோருவதற்கான அறிவிக்கை செய்து ஆணை வெளியிடப்பட்டது. இதனை தொடர்ந்து 14-12-2022 ஆம் நாளிட்ட தமிழ்நாடு அரசிதழில் அறிவிக்கை வெளியிடப்பட்டது. இதன்படி பெறப்பட்ட ஆட்சேபனைகள் மற்றும் ஆலோசனைகள் பரிசீலிக்கப்பட்டு வருகின்றன.

உ) காஞ்சிபுரம் புதுநகர்

காஞ்சிபுரம் புதுநகர் வளர்ச்சிக்கான பகுதி 62.78 சதுர கிலோ மீட்டர் பரப்பளவைக் கொண்டு 18 கிராமங்களை உள்ளடக்கி வரையறுக்கப்பட்டுள்ளது. காஞ்சிபுரம் புதுநகரைப் பாரம்பரிய அடிப்படையிலான நகர்ப்புற வளர்ச்சி மையமாக (Heritage Based Urban Growth Centre) மேம்படுத்துவதற்கான தொலைநோக்குப் பார்வையைக் கருத்தில் கொண்டு, விரிவான புதுநகர் மேம்பாட்டுத் திட்டத்தைத் தயாரிக்க சென்னைப் பெருகர் வளர்ச்சிக் குழுமம் தீர்மானித்துள்ளது.

அரசாணை (நிலை) எண்.13, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை, நாள் 07-02-2023 இன்மூலம், காஞ்சிபுரம் புதுநகருக்காக உத்தேசித்துள்ள 18 கிராமங்களை உள்ளடக்கி அதன் எல்லையை வரையறுப்பதில் உள்ள ஆட்சேபனைகளைக் கோருவதற்கான உத்தரவை அரசு வழங்கியுள்ளது. இதனைத் தொடர்ந்து 22-02-2023 ஆம் நாளிட்ட தமிழ்நாடு அரசிதழில் அறிவிக்கை(Gazette Notification) வெளியிடப்பட்டது. இவ்வறிவிக்கை வெளியிடப்பட்ட நாளிலிருந்து அந்தப் பகுதியில் வசிக்கும் நபர்கள், உள்ளாட்சி அமைப்புகள் / நிறுவனங்களிடமிருந்தும் ஆட்சேபனைகள் மற்றும் ஆலோசனைகள் பெறப்பட்டு வருகிறது.

ஊ) மாமல்லபுரம் துணைக்கோள் நகரம்

நடைபெற்று வரும் 2023-2024 சட்டமன்ற கூட்டத்தொடரில் மேதகு ஆளுநர் உரையில் முன்மொழியப்பட்ட மாமல்லபுரம் துணைக்கோள் நகரம் அமைக்க ஏதுவாக, 1971 இல் உருவாக்கப்பட்ட தமிழ்நாடு நகர் மற்றும் ஊரமைப்பு சட்டத்தின்கீழ் புதுநகர் மேம்பாட்டுத் திட்டத்திற்காக வரையறுக்கப்பட்டுள்ள நடைமுறையைப் பின்பற்றி "மாமல்லபுரம் துணைக்கோள் நகரம்" அமைக்கப்பட உள்ளது. மேலும் கிழக்குக் கடற்கரைச் சாலையை

2023 ஏப்ரல் 13]

நான்கு வழிச் சாலையாக மேம்படுத்துவதுடன் மாமல்லபுரம் துணைக்கோள் நகரத்தின் வளர்ச்சியும் சென்னைப் பெருநகரப் பகுதியின் எதிர்கால வளர்ச்சிக்கு உறுதுணையாக இருக்கும்.

1.2.3 பரப்பு வளர்ச்சிப் பிரிவு (Area Development Unit)

சென்னைப் பெருநகரப் பகுதிக்கான முழுமைத்திட்டத்தின் செயல்பாடுகளுக்கு வடிவம் கொடுக்கும் திட்டங்களைச் செயல்படுத்துவதற்காக சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தில், பரப்பு வளர்ச்சிப் பிரிவு நிறுவப்பட்டுள்ளது. இப்பிரிவு பின்வரும் உட்பிரிவுகளைக் கொண்டுள்ளது.

(i) திட்டமிடல் பிரிவு,

திட்டங்களை உருவாக்குதல், நிலங்களைக் கையகப்படுத்துதல் மற்றும் திட்டத்தை மேம்படுத்துதல் ஆகியவற்றைத் திட்டமிடல் பிரிவு மேற்கொள்ளுகிறது.

(ii) கட்டுமானப் பிரிவு,

திட்டங்களை நிறைவேற்றுவது கட்டுமானப் பிரிவின் பொறுப்பாகும்.

(iii) நில நிருவாகப் பிரிவு

கையகப்படுத்தப்பட்ட நிலங்களின் மேலாண்மை மற்றும் சந்தைப்படுத்தல், ஒதுக்கீடு நில நிருவாகப் பிரிவின் பொறுப்பாகும்.

(iv) நிதிப் பிரிவு

திட்டங்களுக்கான நிதி மேலாண்மை மற்றும் விலை நிர்ணயம் ஆகியவை நிதிப் பிரிவின் பொறுப்பாகும்.

பரப்பு வளர்ச்சிப் பிரிவினால் கையாளப்படும் திட்டங்களின் விவரங்கள் கீழே வழங்கப்பட்டுள்ளன:

1.2.3.1 கிளாம்பாக்கத்தில் புதிய புறநகர் பேருந்து முனையம் (New Mofussil Bus Terminus at Kilambakkam)

கோயம்பேடு புறநகர்ப் பேருந்து நிலையத்தில் நிலவும் போக்குவரத்து நெரிசலைக் கருத்தில் கொண்டு சென்னையிலிருந்து தெற்கு நோக்கிச் செல்லும் பேருந்துகளுக்காக கிளாம்பாக்கத்தில்

புதிய புறநகர் பேருந்து முனையத்தைக் கட்டுவதற்கு தமிழ்நாடு அரசால் சுமார் 88.52 ஏக்கர் நிலம் ஒதுக்கப்பட்டது. இத்திட்டத்திற்கு ரூ.417.80 கோடி திருத்திய நிர்வாக ஒப்புதலை அரசு வழங்கியுள்ளது.

இப்பேருந்து முனையமானது சுமார் 44.7 ஏக்கர் பரப்பளவில் அமைந்துள்ளது. இரண்டு அடித்தளம், தரைத்தளம் மற்றும் முதல் தளத்துடன் கூடிய பிரதான முனையக் கட்டடம் சுமார் 60,329 ச.மீ. அளவில் கட்டப்பட்டு வருகிறது. இப்பேருந்து முனையத்தில் சுமார் 324 மகிழுந்துகள் மற்றும் 2,798 இருசக்கர வாகன நிறுத்துமிடம் உருவாக்கப்பட்டுள்ளது. தரை மற்றும் முதல் தளத்தில் பல்நோக்கு கூடம், 100 கடைகள், உணவகம், பயணச்சீட்டு வழங்குமிடம், போக்குவரத்து அலுவலகம், பொதுமக்கள் தங்குமிடம், கழிப்பிட வசதியுடன் கூடிய பணியாளர்கள் தங்குமிடம் ஆகியவை அமைந்துள்ளன.

இப்பேருந்து நிலையத்தில் 14 ஏக்கர் நிலப்பரப்பில், சுமார் 153 அரசுப் பேருந்துகள், 62 தனியார் சொகுசுப் பேருந்துகள் மற்றும் 50 மாநகரப் பேருந்துகளை நிறுத்தும் வகையிலும், பழுது பார்க்கும் பணிமனை, எரிபொருள் நிரப்புமிடம், துணை மின்நிலையம், மற்றும் கழிவறைகள் ஆகிய வசதிகளுடன் உருவாக்கப்பட்டு வருகிறது. இந்நிலையத்தின் தெற்குப் பகுதியில் தொல்லியல் துறை வரையறைக்குள் உள்ள 16.90 ஏக்கர் நிலத்தில் பொதுமக்கள் பயன்பெறும் வகையிலும் சுற்றுச்சூழலைப் பாதுகாப்பதற்கும் பூங்கா உருவாக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. இப்பேருந்து முனையத்தின் கட்டுமானப் பணிகள் விரைவில் முடிக்கப்படும்.

1.2.3.2 குத்தம்பாக்கத்தில் புதிய புறநகர் பேருந்து முனையம்(New Mofussil Bus Terminus at Kuthambakkam)

சென்னை மாநகரத்தின் மேற்குப் பகுதியிலிருந்து ஆந்திரா மற்றும் கர்நாடக மாநிலங்களிலிருந்து வரும் பேருந்துகளின் எண்ணிக்கை அதிகரித்து வருவதால் கோயம்பேடு மற்றும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளில் போக்குவரத்து நெரிசல் அதிகரித்துக் காணப்படுகிறது. ஆகவே கூட்ட நெரிசலைக் குறைக்கும் பொருட்டு குத்தம்பாக்கத்தில் புதிய புறநகர் பேருந்து முனையத்தைக் கட்டுவதற்கு தமிழ்நாடு அரசு ஒப்புதல் அளித்துள்ளது.

இப்பேருந்து முனையமானது 25 ஏக்கர் நிலப்பரப்பில் ரூ. 336 கோடி மதிப்பீட்டில் மாநகரப் பேருந்து நிறுத்தம், புறநகர் பேருந்து

2023 ஏப்ரல் 13]

நிறுத்தம், பேருந்துகளைப் பராமரிப்பதற்கான பணிமனை, தனியார் பேருந்துகள் நிறுத்தம், இருசக்கர மற்றும் நான்கு சக்கர வாகன நிறுத்தம், கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம், துணை மின் நிலையம், கடைகள் மற்றும் கழிவறைகள் ஆகிய வசதிகளுடன் கட்டப்பட்டு வருகிறது.

1.2.3.3 செங்கல்பட்டு புதிய பேருந்து நிலையம் (Chengalpet Bus Stand)

செங்கல்பட்டு நகரில் போக்குவரத்து நெரிசலைக் குறைப்பதற்காகவும்,நகரின் எதிர்காலபோக்குவரத்துத்தேவைகளைப் பூர்த்தி செய்யவும், செங்கல்பட்டில் சுமார் 14 ஏக்கர் பரப்பளவில் ரூ.90 கோடி மதிப்பீட்டில் நவீன வசதிகளுடன் கூடிய புதிய பேருந்து நிலையம் அமைக்க முன்மொழியப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்கான விரிவான திட்ட அறிக்கை (Detailed Project Report) தயாரிக்கப்பட்டு வருகிறது.

1.2.3.4மாமல்லபுரம் புதிய பேருந்து நிலையம் (Mamallapuram Bus Stand)

மாமல்லபுரத்தில் நெரிசலைக் குறைப்பதற்காகவும், நகரின் எதிர்கால போக்குவரத்துத் தேவைகளைப் பூர்த்தி செய்யவும், மாமல்லபுரத்தில் சுமார் 6.79 ஏக்கர் பரப்பளவில் ரூ.50 கோடி மதிப்பீட்டில் நவீன வசதிகளுடன் கூடிய புதிய பேருந்து நிலையம் அமைக்க முன்மொழியப்பட்டுள்ளது, இதற்கான நில உரிமை மாற்றம் (Land Alienation) செய்வதற்கான நடவடிக்கைகள் மேற்கோள்ளப்பட்டு வருகின்றன. இத்திட்டத்திற்கான விரிவான திட்ட அறிக்கை (Detailed Project Report) தயாரிக்கப்பட்டு வருகிறது.

1.2.3.5கோயம்பேடு மொத்த விற்பனை அங்காடி வளாகம்

சென்னை ஜார்ஜ் டவுன், கொத்தவால் சாவடியில் இருந்த மைய வணிகப் பகுதியில் ஏற்படும் நெரிசலைக் குறைக்க முதலாம் முழுமைத் திட்டத்தின்கீழ் கோயம்பேட்டில் மொத்த விற்பனை அங்காடி வளாகம் 1996 ஆம் ஆண்டு முதல் செயலாக்கத்தில் உள்ளது. இவ்வங்காடி காய், கனி மற்றும் மலர் போன்ற அழுகக்கூடிய பொருட்கள் மற்றும் உணவு தானியங்கள் ஆகியவற்றை மொத்தமாக விற்பனை செய்யும் வகையில் தேவையான அடிப்படை வசதிகளுடன் அமைக்கப்பட்டுள்ளது. இவ்வங்காடி, 86 ஏக்கர்

பரப்பளவில் ஏற்படுத்தப்பட்டு மக்கள் பயன்பாட்டில் உள்ளது. இவ்வங்காடியானது வரையறுக்கப்பட்ட பொருட்களுக்கான அங்காடி (அமைவிடம் மற்றும் முறைப்படுத்துதல்) சட்டம், 1996 இன்படி அங்காடி நிருவாகக் குழுவால் நிர்வகிக்கப்படுகிறது.

முதல் கட்டமாக, ரூ.77 கோடி செலவில் 2,358 கடைகள் நிறுவப்பட்டன. இக்கடைகள் 150 சதுர அடியில் இருந்து 2400 சதுர அடி வரையிலான அளவுள்ளதாக அமைக்கப்பட்டது. மேலும், உணவகங்கள், சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் வசதி, கழிவறைகள், தபால் நிலையம், குடோன்கள், காவல் நிலையம், தீயணைப்பு சேவை நிலையம், தொலைபேசி நிலையம், குளிர்பதன கிடங்கு (TANFED), வாகன எரிபொருள் நிலையங்கள், லாரிகள் நிறுத்துமிடம் போன்ற பல்வேறு வசதிகள் இவ்வளாகத்தில் உள்ளன. இரண்டாம் கட்டமாக, பழ வியாபாரிகளின் நலனுக்காகக் கூடுதலாக 321 கடைகள் கட்டப்பட்டு ஆக மொத்தம் 3,941 கடைகள் இயங்கி வருகின்றன.

கோயம்பேடு மொத்த விற்பனை அங்காடி வளாகத்தை நவீனப்படுத்துதல் தொடர்பாக கடந்த 2021-2022 ஆம் ஆண்டின் தமிழக அரசின் நிதி நிலையறிக்கையில் அறிவித்ததன் விளைவாக அதற்கான சாத்தியக் கூறுகளை ஆராய்ந்து கீழ்க்கண்டவாறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன:

1. வளாக நுழைவு வாயில் எண் 14 மற்றும் 18 இல் வாகன நுழைவு தடுப்பு அமைக்கப்பட்டு மின்னணு முறையில் இயங்கக்கூடியதாக வடிவமைக்கப்பட்டு செயலாக்கம் பெற்றுள்ளது.

2. வளாகத்தில் முதற்கட்டமாக 10 எண்ணிக்கையிலான நவீன சிறுநீர் கழிப்பிடங்கள், ரூ.45.00 இலட்சம் மதிப்பீட்டில் உருவாக்கப்பட்டுப் பயன்பாட்டில் இருந்து வருகிறது.

3. வளாகத்தில் உள்ள கடைகளுக்கு குடிநீர் தேவையைப் பூர்த்தி செய்யும் வகையில் முந்தைய கட்டுமானங்களில் ஸ்திரத்தன்மை ஆய்வு செய்யப்பட்டு அறிக்கை பெறப்பட்டுள்ளது.

4. வளாகத்தில் அன்றாடம் நிலவும் போக்குவரத்து நெரிசலைச் சீர் செய்யும் பொருட்டு, மேற்கொள்ள

வேண்டிய நடவடிக்கைகளை ஆய்வு செய்யும் வகையில் ஓய்வு பெற்ற வட்டார போக்குவரத்து அலுவலர், காவல் துணை கண்காணிப்பாளர் மற்றும் வாகன ஆய்வாளர் நிலையில் குழு அமைக்கப்பட்டு அவர்களிடமிருந்தும் அறிக்கை பெறப்பட்டுள்ளது. மேலும், வளாகத்தினை மேம்படுத்துவதற்காக பல்வேறு சீரமைப்புப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

1.2.3.6 இரும்பு மற்றும் எஃகு அங்காடி, சாத்தாங்காடு

சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தால், முதலாம் முழுமைத் திட்டத்தில் உத்தேசிக்கப்பட்டபடி, 1991 ஆம் ஆண்டில் எண்ணூர் விரைவுச் சாலைக்கு அருகில் சாத்தங்காட்டில் ரூ.17.00 கோடி திட்ட மதிப்பீட்டில் 203 ஏக்கர் நிலப்பரப்பில் இரும்பு மற்றும் எஃகு அங்காடி தொடங்கப்பட்டது. பொதுத் துறைகளான SAIL, VSP, IOCL மற்றும் HPCL ஆகியவை இத்திட்டத்தில் ஒதுக்கீடு பெற்று 50.72 ஏக்கர் பரப்பளவில் நிறுவப்பட்டு கடந்த 30 ஆண்டுகளாக செயல்பாட்டில் உள்ளது. மீதமுள்ள 152.28 ஏக்கர் நிலப்பரப்பில் வெவ்வேறு அளவுகளில் 850 மனைகள் மேம்படுத்தப்பட்டன. இதுவரை, 719 மனைகள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன, மேலும் 131 மனைகளை ஒதுக்கீடு செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. ஒதுக்கீடு செய்யப்பட்ட 719 மனைகளில், 535 ஒதுக்கீடுதாரர்கள் அங்காடி நிர்வாகக் குழுவில் பதிவு செய்து இரும்பு மற்றும் எஃகு மொத்த விற்பனைக்கான உரிமம் பெற்றுள்ளனர். இவ்வங்காடியானது சென்ட்ரல் இரயில் நிலையம் மற்றும் எழும்பூர் ரயில் நிலையங்கள் மற்றும் எண்ணூர் துறைமுகத்துடன் இணைக்கப்பட்டுள்ளது. தண்டையார்பேட்டை ரயில் நிலையத்திலிருந்து சந்தைக்குள் செல்லும் இரயில் பாதை இணைப்பானது, SAIL, VSP மற்றும் சில நிறுவனங்களுக்கு பிலாய், ரூர்கேலா போன்ற உற்பத்தி ஆலைகளில் இருந்து இரும்பு மற்றும் எஃகு கொண்டு வருவதற்குப் பெருமளவில் உதவியாக உள்ளது.

இவ்வங்காடியை நிர்வகிக்க அரசாணை எண் 91, நாள் 12-06-2009 இன்படி வரையறுக்கப்பட்ட பொருட்களின் அங்காடி (இருப்பிடத்தை முறைப்படுத்துதல்) சட்டம் 1996 (தமிழ்நாடு சட்டம் 24, 1996) பிரிவு 5(1) இன்கீழ் அங்காடி நிர்வாகக்குழு அமைக்கப்பட்டுள்ளது.

TRUTH ALONE TRIUMPHS

[2023 ஏப்ரல் 13

தற்பொழுது சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தின் உறுப்பினர்—செயலர் அவர்களைத் தலைவராகக் கொண்டு அங்காடி நிர்வாகக் குழு செயல்படுகிறது. மாவட்ட வருவாய் அலுவலர் நிலையில் உள்ள அலுவலர் முதன்மை நிர்வாக அலுவலராக அங்காடியை நிர்வகிக்கிறார்.

மேலும் குழாய்கள்மூலம் அனைத்து ஒதுக்கீடுதாரர்களுக்கும் தண்ணீர் வசதி வழங்குதல். கட்டணமில்லாக் கழிப்பிடம், குளியலறை வசதிகள், மின்சாரம், தெரு விளக்கு, உயர் கோபுர விளக்கு வசதிகள், இதர மின்சாதனங்கள் பொருத்துதல் மற்றும் பராமரித்தல். போக்குவரத்தை வரன்முறைப்படுத்துதல் உரிய பாதுகாப்புப் பணிகள், சாலை மற்றும் மழைநீர் வடிகால்களைப் பராமரித்தல் போன்ற சேவைகள் அங்காடி நிர்வாகக் குழுமூலம் செயல்படுத்தப்படுகின்றன. வியாபாரிகளின் வசதிக்காகவும் வியாபாரத்தை மேம்படுத்தவும் அரசாங்கம் வழிவகை செய்து வருகிறது.

1.2.3.7 பெரிய பரப்பளவிலுள்ள திறந்தவெளிப் பூங்காக்கள் மற்றும் விளையாட்டு மைதானங்களை மேம்படுத்துதல்

1971 ஆம் ஆண்டு இயற்றப்பட்ட தமிழ்நாடு நகர் மற்றும் ஊரமைப்புச் சட்டத்தின்படி, பன்னடுக்குமாடிக் கட்டடங்கள், மனைப்பிரிவுகள் மற்றும் பெரிய அளவிலான நிலங்களில் சிறப்புக் கட்டடங்களுக்கான திட்ட அனுமதிகள் வழங்கும்போது, 10% திறந்த வெளி இட ஒதுக்கீடு, சம்பந்தப்பட்ட உள்ளாட்சி அமைப்புகளுக்கு தானமாக வழங்கப்பட வேண்டும்.

அதன்படி, 2002 ஆம் ஆண்டு முதல் இதுவரை 626 திறந்த வெளி இடங்கள் 346 ஏக்கர் பரப்பளவில் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தால் தானமாக பெறப்பட்டுள்ளன. இவற்றில் 403 திறந்த வெளி இடங்கள் அமைந்துள்ள 227 ஏக்கர் நிலம் சம்பந்தப்பட்ட உள்ளாட்சி அமைப்புகளிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன. மீதமுள்ள 223 திறந்த வெளி இடங்களை சம்பந்தப்பட்ட உள்ளாட்சி அமைப்புகளிடம் ஒப்படைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

2021-2022 ஆம் நிதியாண்டில் கிளாம்பாக்கம் மற்றும் போரூரில் பெரிய திறந்தவெளிப் பூங்காக்கள் மற்றும் விளையாட்டு மைதானங்களை மேம்படுத்துவதற்கான அறிவிப்பு வெளியிடப்பட்டு, ரூ.30 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டது.

2023 ஏப்ரல் 13]

அ) கிளாம்பாக்கத்தில் திறந்தவெளி பூங்கா மேம்படுத்துதல்

புதிய கிளாம்பாக்கம் பேருந்து முனையத்தை ஒட்டி அமைந்துள்ள திறந்தவெளியிடத்தில் **“காலநிலைப் பூங்கா மற்றும் தொல்பொருள் விளக்கப் பூங்கா”** *அமைக்க திட்டமிடப்பட்டுள்ளது.*

இத்திறந்தவெளியிடத்தில் 16.9 ஏக்கர் பரப்பளவில் பொதுப் பூங்கா மற்றும் விளையாட்டு மைதானம் மேம்படுத்துவதற்கான பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இத்திட்டம் ரூ.14.98 கோடி மதிப்பீட்டில் காலநிலைப் பூங்கா, தொல்லியல் விளக்கப் பூங்கா, பூர்வீக நிலப்பரப்புகள், நீல—பச்சை உட்கட்டமைப்பு, நகர்ப்புற சதுப்புநிலப் பூங்கா, இயற்கை சார்ந்த பொழுதுபோக்கு, மரபுசார்ந்த பல்லுயிர் அமைப்பு மற்றும் சுற்றுச்சூழல் கல்வி, நகர்ப்புற உள்கட்டமைப்பு, சமூக வசதி போன்ற திட்டக் கூறுகளுடன் செயல்படுத்தப்படும். இத்திட்டத்திற்கு சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தின் 272 ஆவது குழுமக் கூட்டத்தில் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

ஆ) போரூரில் திறந்தவெளிப் பூங்கா மேம்படுத்துதல்

*போரூரில் உள்ள திறந்தவெளியிடமானது, 16.63 ஏக்கர் பரப்பளவில் பெருநகர சென்னை மாநகராட்சியின் வளசரவாக்கம் மண்டலத்தில் உள்ள இராமச்சந்திரா மருத்துவ ஆராய்ச்சி நிறுவனத்தின் கிழக்குப் பகுதியில் அமைந்துள்ளது. இத்திறந்த வெளியிடத்தில், நீர் உறிஞ்சிப் பூங்கா (*Sponge Park*), பூர்வீக நிலப்பரப்புகள், நீல—பச்சை உட்கட்டமைப்பு, இயற்கை சார்ந்த பொழுதுபோக்கு, மரபு சார்ந்த பல்லுயிர் அமைப்பு மற்றும் சுற்றுச்சூழல் கல்வி, மின்னணு தகவல் மையம், நகர்ப்புற உள்கட்டமைப்பு, சமூக வசதி போன்ற திட்டக் கூறுகளுடன் அமைக்க திட்டமிடப்பட்டுள்ளது. இத்திட்டத்தை செயல்படுத்த சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் 272 ஆவது குழுமக் கூட்டத்தில் ரூ.16.60 கோடி ஒப்புதல் அளித்துள்ளது.*

1.2.3.8 கட்டுமானப் பிரிவு

1983 ஆம் ஆண்டு பரப்பு வளர்ச்சிப் பிரிவால் உருவாக்கப்பட்ட உட்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டங்களை மேற்கொள்வதற்காக சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தில் கட்டுமானப் பிரிவானது உருவாக்கப்பட்டது. இப்பிரிவு கோயம்பேடு மொத்த விற்பனை அங்காடி வளாகம்,

புரட்சித் தலைவர் டாக்டர்.எம்.ஜி.ஆர் பேருந்து முனையம் (முன்னர் சி.எம்.பி.டி. என அழைக்கப்பட்டது), அலுவலக வளாகக் கட்டடங்கள் (I, II & III), சாத்தங்காடில் இரும்பு மற்றும் எஃகு அங்காடி வளாகம், மாதவரம் பேருந்து மற்றும் கனரக ஊர்தி முனையம் போன்ற முக்கிய உள்கட்டமைப்புத் திட்டங்கள், மறைமலை நகர், மணலி புதுநகரம், சென்னை ஒப்பந்தப் பேருந்து நிலையம், போன்ற வளர்ச்சிப் பணிகளை செயல்படுத்தி உள்ளது.

1.2.4 பரப்பு திட்டப் பிரிவு (Area Plans Unit)

சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தின் பரப்பு திட்டப் பிரிவு, சென்னை பெருநகரத் திட்டமிடல் பகுதியில் மேம்பாடுகளை (கட்டிடங்கள் மற்றும் மனைப்பிரிவுகள்) ஒழுங்குபடுத்துவற்காக, முழுமைத் திட்டம் அல்லது விரிவான வளர்ச்சித் திட்டத்தின்படி அங்கீகரிக்கப்பட்ட நில பயன்பாடு மற்றும் வளர்ச்சி விதிமுறைகளைச் அமலாக்கம் செய்கிறது. தமிழ்நாடு நகர் மற்றும் ஊரமைப்புச் சட்டம், 1971 இன் 49 ஆம் பிரிவின்கீழ் அதிகாரத்தைப் பெற்று, தற்போதுள்ள தமிழ்நாடு ஒருங்கிணைந்த வளர்ச்சி மற்றும் கட்டட விதிகள்(TNCD&BR), 2019 இன்கீழ், கட்டடங்கள், மனைப்பிரிவுகள் மற்றும் மனை உட்பிரிவுக்கான திட்ட அனுமதியை வழங்குவதன்மூலம், சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் வளர்ச்சியை ஒழுங்குபடுத்துகிறது.

உயரம் குறைந்த கட்டடங்கள் (Non High Rise Buildings), பன்னடுக்குமாடி கட்டடங்கள் (High Rise Buildings), தொழிற்சாலை (Industrial) மற்றும் நிறுவனக் கட்டடங்கள் (Institutional), மனைப்பிரிவுகள் (Layouts)/ மனை உட்பிரிவுகளுக்கான (Sub—Divisions) திட்ட அனுமதி மற்றும் நில உபயோக மாறுபாடு (Re—classification) ஆகியவற்றுக்கான விண்ணப்பங்களை சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் ஏற்றுக்கொண்டு அதனை பரிசீலித்து அனுமதி வழங்குகிறது.

பன்னடுக்குமாடி கட்டடங்களைப் பொறுத்தவரை, திட்ட அனுமதி விண்ணப்பங்கள் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தால் பகுப்பாய்வு செய்யப்பட்டு MSB குழு (Multi Storyed Buildings Committee) மற்றும் HRB குழு (High Rise Buildings Committee) குழுவின் முன் வைக்கப்படும். HRB குழுவின் பரிந்துரைக்கேற்ப, சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தால் திட்ட அனுமதிகள் வழங்கப்படுகின்றன.

2023 ஏப்ரல் 13]

அரசின் ஆணைகளுக்கிணங்க, உயரம் குறைந்த கட்டடங்கள், குறிப்பிட்ட வகை தொழிற்சாலைகள் மற்றும் நிறுவனக் கட்டடங்கள், மனைப்பிரிவு மற்றும் மனை உட்பிரிவு (கட்டுப்படுத்தப்பட்ட பகுதியுடன்) போன்ற சிறிய மேம்பாடுகளுக்குத் திட்ட அனுமதி வழங்குவதற்கு சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் தனது அதிகாரங்களை உள்ளாட்சி அமைப்புகளுக்கு பகிர்ந்தளித்துள்ளது.

*முதலாம் முழுமைத் திட்டத்தின் வளர்ச்சிக் கட்டுப்பாட்டு விதிகளின்கீழ் (*Development Control Rules*), சிறப்பு வகைக் கட்டடத்திற்கு அனுமதிக்கப்பட்ட தளப்பரப்பு குறியீடு 1.50 மற்றும் பன்னடுக்கு மாடி கட்டடத்திற்குத் தளப்பரப்பு குறியீடு 2.00 முதல் 2.50 வரை வழங்கப்பட்டது. இதேபோல், இரண்டாம் முழுமைத் திட்டத்தின்கீழ் வழங்கப்பட்ட வளர்ச்சி விதிமுறைகளின்கீழ் (*Development Regulations*), சிறப்பு கட்டடத்திற்கான அனுமதிக்கப்பட்ட தளப்பரப்பு குறியீட்டு அளவில் மாற்றம் ஏதுமில்லை எனினும் பன்னடுக்கு மாடி கட்டடத்திற்கு (*MSB*) தளப்பரப்பு குறியீடு 1.5 முதல் 2.5 வரை வழங்கப்பட்டது. தமிழ்நாடு ஒருங்கிணைந்த வளர்ச்சி மற்றும் கட்டட விதிகள் (*TNCD&BR*) 2019 இல், அனுமதிக்கப்பட்ட தளப்பரப்பு குறியீடு உயரம் குறைந்த கட்டடங்களுக்கு (*NHRB*) 2.00 ஆகவும், உயரமான கட்டடத்திற்கு (*HRB*) 2.50 முதல் 3.25 ஆகவும் உயர்த்தப்பட்டுள்ளது.*

1.2.4.1 இணையவழி திட்ட அனுமதி வழங்குதல்

சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் ஒற்றை சாளர முறை அடிப்படையில் இணையவழி திட்ட அனுமதி மென்பொருளை உருவாக்கி, அதில் தமிழ்நாடு ஒருங்கிணைந்த வளர்ச்சி மற்றும் கட்டட விதிகள், 2019 இன்படி, 2022 ஆம் ஆண்டு மே மாதம் முதல் பொதுமக்கள் பயன்பாட்டிற்குக் கொண்டு வரப்பட்டுள்ளது. இந்த இணைய வழி திட்ட அனுமதி வசதியின்மூலம் அனைத்துத் திட்ட அனுமதி விண்ணப்பங்களையும் இணைய வழியாகச் சமர்ப்பிக்கவும், வரைபடங்களை விதிகளின்படி சரி பார்த்துக்கொள்ளவும் மற்றும் பல்வேறு கட்டணங்களைச் செலுத்தவும் வழிவகை செய்யப்பட்டுள்ளது. விண்ணப்பதாரர்கள் தங்களுடைய திட்ட அனுமதி விண்ணப்பங்களின் நிலையினை இணையதளம் வாயிலாக அவ்வப்போது தெரிந்துகொள்ளும் வசதியும் ஏற்படுத்தப்பட்டுள்ளது. தற்போது திட்ட அனுமதி விண்ணப்பங்கள் சமர்ப்பிப்பது முதல் திட்ட அனுமதி வழங்கும் வரை முற்றிலுமாக இணையவழி வாயிலாக மட்டுமே

மேற்கொள்ளப்பட்டு வருகிறது. பிற துறைகளின் தடையின்மைச் சான்றுகளைப் பெறுவதற்கு ஏதுவாக சம்மந்தப்பட்ட துறைகளுடன் இணைய வழிமூலம் ஒருங்கிணைக்கும் பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேலும் திட்ட அனுமதி சார்ந்த அனைத்துக் கடிதங்களும், ஒப்புதல் அளிக்கப்பட்ட வரைபடமும் சம்பந்தப்பட்ட கட்டட வல்லுநர் மற்றும் அதிகாரிகளின் மின் கையொப்பமிட்டு விரைவாக அனுப்பப்படுகிறது.

சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தால் பதிவு செய்யப்பட்ட கட்டட வல்லுநர்கள், கட்டட பொறியாளர்கள் மற்றும் மேம்பாட்டாளர்கள் ஆகியோருக்கு திட்ட அனுமதி விண்ணப்பம் இணையதளம் வாயிலாக சமர்ப்பிப்பது, கையாளுவது சம்பந்தமாக பல்வேறு பயிற்சிகள் வழங்கப்பட்டன. மேலும் இத்திட்டம் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்திடப் பல்வேறு நேர்முக பயிற்சிகளும் கலந்துரையாடல்களும் நடத்தப்பட்டுள்ளன.

இந்த ஒற்றைச் சாளர மென்பொருள் செயல்படுத்தப்பட்ட 2022 ஆம் ஆண்டு, முதற்கொண்டு சிறந்த வரவேற்பைப் பெற்றுள்ளது. திட்ட அனுமதி வழங்கும் முறையினை எளிதாக்குவதற்கு மேற் கொள்ளப்பட்ட அரசின் சீரிய முயற்சிகளின் மூலமும் பல்வேறு பொது விழிப்புணர்வுப் பயிற்சிகள் மூலமும் இணைய வழித் திட்ட அனுமதி வழங்கும் முறை வரவேற்பும், வளர்ச்சியும் அடைந்துள்ளது.

1.2.4.2 மாற்றத்தக்க வளர்ச்சி உரிமைகள் (Transferable Development Rights)

சென்னைப் பெருநகரப் பகுதிக்கான இரண்டாம் முழுமைத் திட்டத்தில் அறிமுகப்படுத்தப்பட்ட, திட்டங்களில் மாற்றத்தக்க வளர்ச்சி உரிமை (Transferable Development Rights) எனும் புதிய திட்டத்தை அறிமுகப்படுத்தி சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் செயல்படுத்தி வருகிறது. தற்போது இந்த மாற்றத்தக்க வளர்ச்சி உரிமை (TDR) திட்டத்தின் படி, சாலை விரிவாக்கம், புதிதாக சாலை அமைத்தல் மற்றும் உட்கட்டமைப்பு வளர்ச்சி உள்ளிட்டவைகளுக்கு மட்டுமே வழங்கப்பட்டு வருகிறது. இதன்படி, சாலை விரிவாக்க திட்டத்திற்காக 135 ஏக்கர் நிலம் சம்பந்தப்பட்ட நில உடைமையாளர்களிடமிருந்து திட்ட அனுமதி வழங்கும்போது தானமாக பெறப்பட்டுள்ளது. இதற்கு ஈடாக, வளர்ச்சி உரிமைச் சான்றிதழ் கோரி விண்ணப்பித்த நில உடைமையாளர்களுக்கு 110 வளர்ச்சி உரிமைச் சான்றிதழ்கள் வழங்கப்பட்டுள்ளன.

2023 ஏப்ரல் 13]

மேலும், குடிசைப் பகுதிகளை மேம்படுத்த தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியத்திற்கு 44 சிறப்பு வளர்ச்சி உரிமைச் சான்றிதழ்கள் வழங்கப்பட்டுள்ளது.

1.2.4.3 அமலாக்கப் பிரிவு

தமிழ்நாடு நகர்ப்புற மற்றும் ஊரமைப்புச் சட்டம் 1971, பிரிவு 56 மற்றும் 57 இன்கீழ் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் அமலாக்க நடவடிக்கைகள் மேற்கொண்டு வருகிறது. அமலாக்கப் பிரிவின் செயல்பாடுகள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன:

i. *சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழுமம், வழங்கிய திட்ட அனுமதியின் படி கட்டப்பட்ட கட்டடங்களுக்கு மட்டுமே அமலாக்க நடவடிக்கையை மேற்கொள்கிறது.*

ii. *சென்னைப் பெருநகர எல்லைக்குட்பட்ட பகுதிகளில் அனைத்து வகையான கட்டடங்களின் மீதும் அமலாக்க நடவடிக்கை மேற்கொள்ள சம்பந்தப்பட்ட உள்ளாட்சி அமைப்புகளுக்கு அதிகாரங்களைப் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் பகிர்ந்தளித்துள்ளது.*

iii. *திட்ட அனுமதி பெற்று கட்டிய கட்டடத்திற்கான பணிநிறைவுச் சான்றுக்கான விதிமுறைகள் மற்றும் தமிழ்நாடு ஒருங்கிணைந்த கட்டட விதிகளைப் பயன்படுத்தி பணிநிறைவுச் சான்றிதழ் வழங்கப்படுகிறது.*

iv. *திட்ட அனுமதியற்ற மற்றும் அனுமதிக்குப் புறம்பாக கட்டப்பட்ட கட்டடங்களுக்கு இடிப்பதற்கான அறிவிப்பு வழங்குதல், பூட்டுதல் மற்றும் முத்திரை வைத்தல் போன்ற நடவடிக்கைகளை மேற்கொள்கிறது.*

1.2.5 வரன்முறைத் திட்டப் பிரிவு (Regularization Unit)

அ) அங்கீகரிக்கப்படாத/விதி மீறிய கட்டடங்களை வரன்முறைப் படுத்துதல்

தமிழ்நாடு நகர் மற்றும் ஊரமைப்புச் சட்டம், 1971 பிரிவு 113—A இன்கீழ் அங்கீகரிக்கப்படாத / விதி மீறிய கட்டடங்களை வரன்முறைப்படுத்துவதற்காக 28-02-1999-க்கு முன் கட்டப்பட்ட கட்டடங்களுக்கு வரன்முறைப்படுத்தும் திட்டத்தை தமிழ்நாடு அரசு அறிவித்தது. இதுவரை 327 கட்டடங்களுக்கு

வரன்முறை செய்து ஒப்புதல் அளிக்கப்பட்டு, ரூ.359.15 கோடி வசூலிக்கப்பட்டுள்ளது. தமிழ்நாடு நகர் மற்றும் ஊரமைப்பு சட்டம், 1971-ன் பிரிவு 113-C இன்கீழ் மற்றொரு வரன்முறைப்படுத்துதல் திட்டம் 01-07-2007 வரை கட்டப்பட்ட அங்கீகரிக்கப்படாத கட்டடங்களை வரன்முறைப் படுத்துவதற்காக ஜூன், 2017 அன்று அறிவிக்கப்பட்டது.

இந்தத் திட்டத்தை எதிர்த்து தாக்கல் செய்யப்பட்ட ரிட் மனுவில், மாண்பமை சென்னை உயர் நீதிமன்றத்தின் ஆணையின்படி சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் விண்ணப்பங்களைப் பெற்று ஆய்வு செய்யலாம் எனவும், ஆனால் நீதிமன்றத்தின் மறு உத்தரவு வரும் வரை இறுதி உத்தரவுகளை வழங்கக் கூடாது எனவும் உத்தரவிட்டது. அதன்படி, இத்திட்டத்தின்கீழ் பெறப்பட்ட விண்ணப்பங்களை சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் ஆய்வு செய்து வருகிறது. இதுவரை, 2,808 விண்ணப்பங்களும் வரன்முறைப்படுத்துதல் கட்டணமாக ரூ.35.65 கோடியும் பெறப்பட்டுள்ளது.

ஆ) அங்கீகரிக்கப்படாத மனைகள் / மனைப் பிரிவு ஆகியவற்றை வரன்முறைப்படுத்தும் திட்டம்—2017

தமிழ்நாடு நகர் ஊரமைப்புச் சட்டம், 1971 சட்டம் (35/1972) பிரிவு 113 இன்கீழ் அனுமதியற்ற மனை/மனைப் பிரிவுகளை வரன்முறைப் படுத்துவதற்கு ஏதுவாக அனுமதியற்ற மனை/மனைப் பிரிவுகள் வரன்முறைப்படுத்தும் விதிகள், 2017 உருவாக்கப்பட்டன. 20-10-2016-க்கு முன் வாங்கப்பட்ட மனை / விற்கப்பட்ட மனைகளின் உரிமையாளர்கள் இத்திட்டத்தின்மூலம் தகுதி பெறுவதற்கும் நிகழ்நிலை வாயிலாக விண்ணப்பங்களை சமர்ப்பிக்க வேண்டும்.

தனிப்பட்ட மனைகளை வரன்முறை செய்யும்பொழுது, திறந்தவெளி ஒதுக்கீடுக்கு ஈடான தொகை செலுத்துவதிலிருந்து விலக்களிக்கப்பட்டுள்ளது. மனைப்பிரிவுகளை வரன்முறைப்படுத்தும் போது விற்பனையாகாமல் உள்ள மீதி மனைகளுக்கு மட்டுமே 10% திறந்தவெளி ஒதுக்கீடு செய்யப்பட வேண்டும். மனைப்பிரிவு/ மனைகள் முழுமைத்திட்டத்தில் வேறு எந்த விதமான நிலப் பயன்பாட்டிற்காக ஒதுக்கப்பட்டிருந்தாலும், வரன்முறைப் படுத்தும் பொழுது குடியிருப்பு உபயோகத்திற்கு மட்டுமே வரன்முறை செய்யப்படுகிறது.

2023 ஏப்ரல் 13]

இத்திட்டத்தின்படி விண்ணப்பதாரர்கள் விண்ணப்பங்களை இணையதளம்மூலம் சமர்ப்பிக்க வேண்டும். உள்ளாட்சி அமைப்புகள் உரிய ஆய்வு அறிக்கையுடன் விண்ணப்பங்களை சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்திற்கு ஒப்புதல் வேண்டி மேல்நடவடிக்கைக்காக சமர்ப்பிக்க வேண்டும். சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் சம்பந்தப்பட்ட மனைப்பிரிவுளுக்குக் கொள்கை ரீதியான (In Principle) அனுமதி அளித்த பின்பு, சம்பந்தப்பட்ட உள்ளாட்சி அமைப்புகளுக்கு தொடர் நடவடிக்கை எடுக்க அனுப்பி வைக்கப்படும்.

சென்னைப் பெருநகர் பகுதியில் உள்ள உள்ளாட்சி அமைப்புகளிடமிருந்து பெறப்பட்ட அங்கீகரிக்கப்படாத மனை மற்றும் மனைப் பிரிவுகளுக்கான விண்ணப்பங்களைப் பரிசீலித்து 6,303 மனைப் பிரிவுகளுக்கு கொள்கை ரீதியான மற்றும் மனைப்பிரிவு ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

1.2.6 சாலை மற்றும் இரயில் பிரிவு (Road and Rail Unit)

1.2.6.1 பழைய மாமல்லபுரம் சாலை (OMR) மற்றும் கிழக்கு கடற்கரை சாலை (ECR) இடையேயான சாலை இணைப்பை மேம்படுத்துதல்

பழைய மாமல்லபுரம் சாலை (OMR) மற்றும் கிழக்குக் கடற்கரை சாலை (ECR) இடையேயான சாலை இணைப்பை அடையாளம் கண்டு திட்ட அறிக்கையைத் தயாரிப்பதற்காக, சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தால் ஒரு கலந்தாலோசகர்மூலம் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. இதில் பல்வேறு அளவுகோல்களின் அடிப்படையில் ஆறு இணைப்புகள் கண்டறியப்பட்டுள்ளன. இவற்றில் கண்ணகி நகர் – ஈஞ்சம்பாக்கம் இடையே உள்ள இணைப்பை நடைமுறைப்படுத்தத் தீர்மானிக்கப்பட்டது. மேலும் ஆலோசித்ததில், பக்கிங்ஹாம் கால்வாயின் இருபுறமும் சாலைகள் அமைத்து, மூன்று இடங்களில் சாலைகளை ஒன்றாக இணைத்து, பக்கிங்ஹாம் கால்வாயின் கரைகளைப் பலப்படுத்தி ஒருங்கிணைந்த முறையில் செயல்படுத்த முடிவு செய்யப்பட்டுள்ளது.

மாநில நெடுஞ்சாலைத் துறையுடன் இணைந்து, திட்டத்தைச் செயல்படுத்துவதற்கான விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கப்படும். மேலும், இந்தத் திட்டத்திற்காக, தலைமைப் பொறியாளர், நெடுஞ்சாலைத் துறை (மெட்ரோ), மேலாண்மை இயக்குநர்,

தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியம், இயக்குநர், சுற்றுச்சூழல் துறை, தலைமைப் பொறியாளர், நீர்வளத் துறை, சென்னை ஆகியோர் அடங்கிய தொழில்நுட்ப குழு அமைத்து அரசாணை (நிலை) எண் 44, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை, நாள் 05-04-2023 இல் ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

1.2.6.2 வெளிவட்டச் சாலையின் கிழக்கு எல்லையை ஒட்டிய 50 மீட்டர் நிலப்பரப்பில் திட்டங்களை மேம்படுத்துதல்

வெளிவட்டச் சாலையின் கிழக்கு பகுதியை ஒட்டியுள்ள 50 மீட்டர் நிலப்பரப்பையும் அதைச் சுற்றியுள்ள மற்ற நிலங்களையும் உகந்த முறையில் பயன்படுத்துவதற்காக சாத்தியக்கூறு ஆய்வு மேற்கொள்ளப்பட்டு மேம்படுத்தப்படும் என்று 2021-2022 ஆம் நிதியாண்டில் அரசால் அறிவிக்கப்பட்டது.

இது தொடர்பாக, சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் மற்றும் பிற துறைகள்மூலம் சாத்தியக்கூறு ஆய்வு அடிப்படையில் பல்வேறு திட்டங்கள் உருவாக்க முன்மொழியப்பட்டு வருகிறது. தற்போது, வெளிவட்டச் சாலையின் மேம்பாட்டுடன் பல்வேறு திட்டங்களைப் படிப்படியாக நடைமுறைப்படுத்த சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் திட்டமிட்டுள்ளது.

1.2.6.3 வெளிவட்டச் சாலைக்கான முழுமைத் திட்டம்

*வெளிவட்டச் சாலையை ஒட்டி அமைந்துள்ள நிலங்களில் ஒரு நிலையான உயர்—அடர்த்தி பாதையாக (*Sustainable High Density Corridor*) நெறிப்படுத்த, வெளிவட்டச் சாலையின் இருபுறமும் 1 கிமீ பரப்பளவிற்கு முழுமைத்திட்டம் தயாரிக்கப்படும். இந்தத் திட்டம் எதிர்கால வளர்ச்சியை எதிர்கொள்ள வெளிவட்டச் சாலையுடன் இணைந்து நிலச்சேர்மம் திட்டங்கள் மற்றும் சாலை வலைப்பின்னல் அமைப்பு திட்டங்களுக்கான சாத்தியக் கூறுகளை ஆராய்ந்து அதற்கான அடித்தளத்தை அமைக்கும்.*

1.2.6.4 வெளிவட்டச் சாலை வளர்ச்சிப் பாதைக்கான சிறப்பு நோக்கு நிறுவனம்

வெளிவட்டச் சாலையை நிர்வகிப்பதற்கும், வெளிவட்டச் சாலையை ஒட்டி முன்மொழியப்பட்ட திட்டங்கள் மற்றும் மேம்பாடுகளை நிர்வகிப்பதற்கும், அத்திட்டங்களுக்கான வருவாய் மற்றும் செலவினங்களில் கவனம் செலுத்துவதற்கும்,

2023 ஏப்ரல் 13]

*மற்ற துறைகளுடன் ஒருங்கிணைப்பதற்கும், ஒரு சிறப்பு நோக்கு நிறுவனம் (*Special Purpose Vehicle*) உருவாக்கப்படும்.*

1.2.6.5 சென்னை பெருந்திரள் விரைவு போக்குவரத்து அமைப்பு (MRTS) - நிலை II - விரிவாக்கம்

வேளச்சேரி முதல் புனித தோமையார் மலை வரை சுமார் 5 கி.மீ. நீளத்திற்கு ரூ.732.89 கோடி மதிப்பீட்டில் இத்திட்டத்திற்கான இரண்டாம் கட்ட விரிவாக்கப் பணிகள் நடைபெற்று வருகின்றன. இத்திட்டத்தைச் செயல்படுத்துவதற்காக தென்னக ரயில்வேக்கு தமிழக அரசு தனது பங்காக ரூ.488.62 கோடியை விடுவித்துள்ளது. இந்தத் திட்டம் 2023 டிசம்பர் மாதத்திற்குள் முடிக்கப்பட்டு செயல்பாட்டிற்கு வரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

1.2.6.6 மத்திய சதுக்கம் மேம்பாடு

மத்திய சதுக்கமானது ரிப்பன் மாளிகை, விக்டோரியா பப்ளிக் ஹால், சென்னை பூங்கா ரயில் நிலையம், சென்னை சென்ட்ரல் ரயில் நிலையம், தென்னக ரயில்வே தலைமையக் கட்டடம், சென்னை மருத்துவக் கல்லூரி, ராஜீவ் காந்தி அரசு பொது மருத்துவமனை, பார்க்டவுன் ரயில் நிலையம், மற்றும் இராமசாமி முதலியார் சத்திரம் போன்ற சென்னை நகரின் முக்கிய அடையாளங்களுக்கிடையே உள்ள பகுதியை உள்ளடக்கி, சென்னை சென்ட்ரல் மெட்ரோ ரயில் நிலையத்தின் இடத்தில், பல்வேறு போக்குவரத்து முறைகளுக்கு இடையே பயணிகளின் தடையற்ற இயக்கத்தை உறுதி செய்வதற்காக உருவாக்கப்பட்டது.

*மத்திய சதுக்கத்தின் முக்கிய அம்சங்களில், இடைவழி இணைப்பு (*Inter Model Connectivity*), சுரங்கப்பாதைகள்மூலம் இணைப்பு, பேருந்து நிறுத்துமிடங்கள் அமைத்தல், வாகன நிறுத்துமிட வசதிகள், பாரம்பரிய கட்டடங்களைப் பாதுகாத்தல், ஸ்டான்லி சாலை மற்றும் ஈ.வெ.ரா பெரியார் சாலை பாலத்தைப் புனரமைத்தல் போன்றவை அடங்கும். இத்திட்டத்தினைத் திறம்படச் செயல்படுத்த சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் ரூ.120.03 கோடி நிதி வழங்கியுள்ளது.*

1.2.6.7 சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் நிதியுதவியுடன் செயல்படுத்தப்படும் பிற உள்கட்டமைப்பு திட்டங்கள்

பாதசாரிகளின் போக்குவரத்திற்குத் தடையற்ற இணைப்பை ஏற்படுத்தவும், ஆலந்தூர் மெட்ரோ நிலையத்திற்கு இணைப்பினை

உருவாக்கவும் ஆலந்தூரில் நடைமேம்பாலம் அமைக்க சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் ரூ.3.70 கோடி நிதி அளித்துள்ளது. மேலும், சென்னைப் பெருநகர் பரப்பில் ஒருங்கிணைந்த போக்குவரத்துத் திட்டம் தயாரிக்க ரூ.2.12 கோடி நிதி வழங்கியுள்ளது. இந்நிதியுதவி மட்டுமின்றி கிண்டி கத்திப்பாராவில் நகர்ப்புற சதுக்கம் (Urban Square) திட்டத்தைச் செயல்படுத்தவும், ஷெனாய் நகர் மெட்ரோ நிலையத்தைச் சுற்றியுள்ள ஷெனாய் நகர் பூங்காவை மேம்படுத்த சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தின்மூலம் நிதியுதவி அளிக்க முன்மொழியப்பட்டுள்ளது.

1.3 புதிய முயற்சிகள்

1.3.1 சென்னை கடற்கரை மறுசீரமைப்பு மற்றும் புத்துயிரூட்டல் (CSRR)

அரசாணை (நிலை) எண் 146, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை, நாள் 25-07-2022 மூலமாக சென்னை கடற்கரை மறுசீரமைப்பு மற்றும் புத்துயிரூட்டல் திட்டத்தை (மெரினா முதல் கோவளம் வரை) சுமார் 30 கி.மீ தூரத்திற்கு ரூ.100 கோடி மதிப்பீட்டில் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தால் செயல்படுத்தப்படும் என அரசு ஆணையிட்டுள்ளது. இத்திட்டத்திற்கான விரிவான கடற்கரை மேம்பாட்டுத் திட்டத்தை (Comprehensive Shoreline Development Plan) தயாரிக்கும் பணியானது உலக வங்கி நிதியுதவியுடன் மேற்கொள்ளப்படவுள்ளது. விரிவான திட்ட அறிக்கை தயாரிப்பதற்கு ஒரு ஆலோசகரை நியமிப்பதற்காக ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு முடிவு செய்யும் நிலையில் உள்ளது. சென்னை கடற்கரை மேம்பாட்டுத் திட்டம் என்பது சென்னைக்கான மூன்றாவது முழுமைத் திட்டத்தின் துணைத் திட்டமாக இருக்கும். இக்கடற்கரை பகுதி தற்போதுள்ள சூழ்நிலைகள், பயனாளிகள் செயல்பாடு, கடற்கரை மேம்பாட்டு ஒழுங்குமுறை மற்றும் சுற்றுச்சூழல் முக்கியத்துவம் வாய்ந்த பகுதிகள் ஆகியவற்றின் அடிப்படையில் பல்வேறு மண்டலங்களாக பிரிக்கப்படும். மேலும், இந்த ஆய்விலிருந்து அடையாளம் காணப்பட்ட திட்டங்களைத் திட்டமிடுதல், செயல்படுத்துதல், இயக்குதல் மற்றும் பராமரித்தல் போன்ற பணிகளுக்காக ஒரு பிரத்தியேக நிருவாக அமைப்பைக் கொண்ட ஒரு சிறப்புப் நோக்கு நிறுவனம் (Special Purpose Vehicle) அமைக்க அரசாணை (நிலை) எண் 25, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை, நாள் 15-02-2023 வாயிலாக அரசு ஆணையிட்டுள்ளது.

2023 ஏப்ரல் 13]

1.3.2 சென்னை பெருநகரப் பகுதியில் ஏரிக்கரை மற்றும் நீர்முனை மேம்பாடு

சென்னைப் பெருநகரப் பகுதிக்குட்பட்ட ஏரிக்கரை மற்றும் நீர்முனை மேம்பாட்டிற்கான ஆணையினை வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அரசாணை (நிலை) எண் 8, நாள் 12-01-2023 இன்மூலம் அரசு வெளியிட்டுள்ளது. இத்திட்டத்தின் மதிப்பு ரூ.100 கோடி ஆகும். இத்திட்டம், பெரும்பாக்கம், ரெட்டேரி, முடிச்சூர், மாடம்பாக்கம், செம்பாக்கம், அயனம்பாக்கம், வேளச்சேரி, ஆதம்பாக்கம், புழல் மற்றும் கொளத்தூர் ஆகிய ஏரிகளைப் பாதுகாப்பதற்கும், அவற்றைப் பாதுகாப்பதற்காக திறன்மிக்க உத்திகளைப் பயன்படுத்தி, பொழுதுபோக்கிற்குத் தகுந்த சமூக உட்கட்டமைப்பை வழங்குவதன்மூலம், அவற்றை செயல்மிக்க பொது இடங்களாக மாற்றுவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமமும் நீர்வளத்துறையும் இணைந்து இத்திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள ஏரிகளை மேம்படுத்தும். ஏரிமுகப்பு வடிவமைப்பிற்கான போட்டிக்குறிப்பு 17-03-2023 அன்று செய்தித்தாள் வாயிலாக வெளியிடப்பட்டுள்ளது.

1.3.3 நிலச் சேர்மப் பகுதி வளர்ச்சித் திட்டம்

இந்திய அரசு, பெருநகரங்களுக்குள் வளர்ச்சியடையாத பகுதிகளுக்கான நகரத் திட்டமிடலுக்கான பணியை ஒரு வெற்றிகரமான பசுமைத் திட்டமாக அடையாளம் கண்டுள்ளது. இத்திட்டம் நிலச் சேர்ம வளர்ச்சித் திட்டத்தைப் போன்றதாகும். இந்தத் திட்டங்களைத் தயாரிப்பதற்காக நகரங்களின் திறனைக் கட்டமைப்பதற்காக அம்ருத் திட்டத்தின்கீழ் ஒவ்வொரு நகரத்திற்கும் ரூபாய் ஒரு கோடி மானியம் ஒதுக்கப்பட்டுள்ளது. சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்திற்கு முன்மாதிரி நகர திட்டமிடல் திட்டத்தைத் தயாரிப்பதற்காக ரூபாய் 1.00 கோடி மானியம் வழங்க ஒன்றிய அரசு ஒப்புதல் அளித்துள்ளது. சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்திற்கு இதுவரை ரூ.60.00 லட்சம் விடுவிக்கப்பட்டுள்ளது.

சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் தென் சென்னைப் பகுதியில் அமைந்துள்ள அகரம்தென், கோவிலஞ்சேரி மற்றும் மாடம்பாக்கம் கிராமத்தில் 600 ஏக்கர் பரப்பளவில் நில சேர்மப் பகுதி வளர்ச்சித் திட்டத்தைத் தயாரித்து வருகிறது. நில சேகரிப்புப் பகுதி வளர்ச்சித் திட்டத்திற்காக தமிழ்நாடு நகர் ஊரமைப்புச்

சட்டம், 1971 இல் சட்டத் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

1.3.4 சென்னையின் தேர்ந்தெடுக்கப்பட்ட முக்கியப் போக்குவரத்து வழித்தடங்களை ஒட்டி அமைந்துள்ள பகுதிகளுக்குத் தளப்பரப்புக் குறியீடு (Floor Space Index) அதிகரிக்கப்படும்.

மெட்ரோ இரயில் வழித்தடங்கள் மற்றும் பிரதான சாலைகளை ஒட்டிய பகுதிகளில் தளப்பரப்பு குறியீட்டை அதிகப்படுத்துதல் மூலமாக நெருக்கமான மற்றும் அடர்த்தியான வளர்ச்சியை ஊக்குவிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. இதன்மூலம் கலப்பு உபயோக (Mixed Usage) பகுதிகள் மற்றும் பொதுப் போக்குவரத்துப் பயன்பாட்டை ஊக்குவிப்பதுடன் நீண்ட தினசரி பயணங்கள், தனியார் வாகனங்களின் பயன்பாடு, நெரிசல் மற்றும் சுற்றுச் சூழல் பாதிப்பு போன்றவற்றைக் குறைக்கும் விதமாகத் திட்டமிடப்பட்டுள்ளது.

1.3.5 இளநிலை திட்டமிடல் (B. Plan) பாடத்திட்டம்

நகரத் திட்டமிடுபவர்களுக்கான தேவையைப் பூர்த்தி செய்யும் முயற்சியில், நகரமயமாக்கல் அதிகரித்துள்ள நிலையில், நிதி ஆயோக்கின் (NITI Aayog) பரிந்துரைகளின் அடிப்படையில், அண்ணா பல்கலைக்கழகம், 2022-2023 ஆம் ஆண்டிற்கான கல்வியாண்டில் தமிழ்நாட்டில் முதன்முறையாக திட்டமிடலில் இளநிலை திட்டமிடல் (B.Plan) பட்டப்படிப்பைத் தொடங்கியுள்ளது. இளநிலை திட்டமிடல் (B. Plan) பட்டதாரிகள் சிறந்த எதிர்கால நகரங்களை வடிவமைப்பதற்கும், தமிழ்நாட்டில் மிகவும் சீரான நகரமயமாக்கல் செயல்முறைக்கும் பங்களிப்பார்கள். அதிகரித்து வரும் நகரமயமாக்கல் மற்றும் ஸ்மார்ட் சிட்டி திட்டங்களால், இளநிலை திட்டமிடல் பட்டதாரிகளுக்கு மிகுதியான தொழில் வாய்ப்புகள் இருக்கும்.

அரசாணை (நிலை) எண் 156, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை, நாள் 23-08-2022 இன்படி சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் மற்றும் நகர் ஊரமைப்பு இயக்ககம் (DTCP) ஆகியவை அண்ணா பல்கலைக்கழகத்திற்கு 80:20 என்ற விகிதத்தில் இளநிலை திட்டமிடல் படிப்புக்குத் தேவையான நிதியை வழங்கும்.

2023 ஏப்ரல் 13]

இதன்படி சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழுமம் ஆரம்ப தொகையாக ரூ.8.00 கோடியை அண்ணா பல்கலைக்கழகத்திற்கு வழங்கியுள்ளது. இளநிலை திட்டமிடல் பாடத்திட்டம் 28-10-2022 அன்று தொடங்கி 36 மாணவர்கள் இளநிலை திட்டமிடல் பாடத்திட்டத்தில் சேர்ந்துள்ளனர்.

1.3.6 காஞ்சிபுரம், செங்கல்பட்டு, திருவள்ளூர் மாவட்டங்கள் மற்றும் ராணிப்பேட்டை மாவட்டத்தில் உள்ள அரக்கோணம் தாலுகா ஆகியவற்றின் வளர்ச்சிக்காக ரூ.100 கோடி உள்கட்டமைப்பு நிதியுதவி

சென்னைப் பெருநகரப் பகுதியின் விரிவாக்கத்தில் காஞ்சிபுரம், செங்கல்பட்டு மற்றும் திருவள்ளூர் மாவட்டங்களின் பகுதிகளும், ராணிப்பேட்டை மாவட்டத்தில் உள்ள அரக்கோணம் தாலுகாவும் அடங்கும். இந்த விரிவாக்கப்பட்ட பகுதியில் வளர்ச்சியைக் கொண்டுவரும் பொறுப்பு சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்திடம் உள்ளது. இந்தப் பகுதிகளின் அனைத்துத் துறை வளர்ச்சியையும் முன்னெடுத்துச் செல்ல, இந்தப் பகுதிகளில் சாலைகள், பாலங்கள், பூங்கா உள்ளிட்ட பொழுதுபோக்கு வசதிகள், விளையாட்டு மைதானம் போன்ற உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்த வேண்டியது அவசியம். இதற்காக, மாவட்ட வாரியாக சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தால் பின்வருமாறு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

1. காஞ்சிபுரம் மாவட்டம் — ரூ.35 கோடி,

2. செங்கல்பட்டு மாவட்டம் — ரூ.32 கோடி,.

3. திருவள்ளூர் மாவட்டம் — ரூ.25 கோடி

4. ராணிப்பேட்டை மாவட்டம் (அரக்கோணம் தாலுகா) — ரூ.8 கோடி.

இதில் செங்கல்பட்டு மாவட்டம், பரங்கிமலை ஊராட்சி ஒன்றியத்திலுள்ள முடிச்சூர் கிராமத்தின் அமுதம் நகர், நேமி நத்தம் நகர் மற்றும் வரதராஜ பெருமாள் நகர் பகுதிகளுக்கு மழைநீர் வடிகால் அமைக்க ரூ.4.20 கோடி வழங்கப்பட்டுள்ளது. காஞ்சிபுரம் மாவட்டத்திலுள்ள கோவூர், பரணிபுத்தூர், தாரப்பாக்கம், தண்டலம், வரதராஜபுரம், கொளப்பாக்கம், பெரியப்பனிச்சேரி, கெருகம்பாக்கம், மௌலிவாக்கம், இரண்டாம் கட்டளை மற்றும்

காரப்பாக்கம் கிராமங்களில் மழைநீர் வடிகால் மற்றும் சாலை வசதிகளை மேம்படுத்த ரூ.34.95 கோடி ரூபாய் வழங்கப்பட்டுள்ளது.

முடிவுரை

தமிழ்நாட்டின் முன்னாள் முதல்வர் முத்தமிழ் அறிஞர் டாக்டர் கலைஞர் அவர்கள் 1975 ஆம் ஆண்டு சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தைத் தொலைநோக்குப் பார்வையுடன் அமைத்ததால், அவர் "நவீன சென்னையின் தந்தை" என்று அழைக்கப்படுகிறார். அவரது முன்மாதிரியான வழிகாட்டுதலின் படி, சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் பல்வேறு திட்டங்களை, முன்னோக்கு திட்டமிடல் மற்றும் பரந்த கண்ணோட்டத்துடன் நவீன தொழில்நுட்பங்களின் உதவியுடன் தொடர்ந்து செயல்படுத்தி வருகிறது. தற்போதுள்ள அனைத்து திட்டங்கள் மற்றும் வளர்ச்சித் திட்டப் பணிகள் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தின் புதிய முயற்சிகள் மற்றும் செயல்திறனைத் தெளிவாக விளக்குகின்றன.

"முறைசெய்து காப்பாற்றும் மன்னவன் மக்கட்கு
இறையென்று வைக்கப் படும்." – குறள் 388.

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

2023 ஏப்ரல் 13]

இணைப்பு

(147 ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.)

மானியக் கோரிக்கை எண் 9-பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை

கொள்கை விளக்கக் குறிப்பு, 2023-2024

முன்னுரை

"தாளாற்றித் தந்த பொருள் எல்லாம் தக்கார்க்கு
வேளாண்மை செய்தல் பொருட்டு"

—குறள் 212

தமிழ்நாடு, சமூகநீதி கொள்கைகளை நிறுவுவதிலும், அதனை செயல்படுத்துவதிலும் நாட்டிற்கே முன்மாதிரிமாநிலமாக திகழ்கிறது. மக்கள் தொகையில் பெரும் பகுதியினரான பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் வகுப்பினர் வளங்களை அணுகுவதற்கும், வளங்களில் உரிய பங்கினை பெற்று முன்னேறுவதற்கும் இவ்வரசு உறுதுணையாக உள்ளது.

பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் வகுப்பினரின் ஒருங்கிணைந்த சமூக, பொருளாதார மற்றும் கல்வி முன்னேற்றத்திற்காக இத்துறை பல்வேறு நலத் திட்டங்களை வகுத்து செயல்படுத்தி வருகிறது. பிற்படுத்தப்பட்ட, மிகப்பிற்படுத்தப்பட்ட மற்றும் சீர்மரபினர் வகுப்பினரின் நலனுக்காக அரசு தீட்டும் திட்டங்களை முனைப்புடன் செயல்படுத்துவதற்காக 1969 ஆம் ஆண்டு பிற்படுத்தப்பட்டோர் நல இயக்ககமும், 1989 ஆம் ஆண்டு மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நல இயக்ககமும் இவ்வரசால் ஏற்படுத்தப்பட்டன.

பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் வகுப்புகளை சேர்ந்தவர்கள் கல்வி, வேலைவாய்ப்பு மற்றும் தொழில் போன்ற நிலைகளில் தங்களது நிலையினை உயர்த்திக்கொள்வதற்கான வாய்ப்புகள் அளிப்பதையும், சமுதாயத்தில் உள்ள இதர பிரிவினருக்கு சமமான நிலையினை

அனைத்து துறைகளிலும் அவர்கள் அடைவதையும் இலக்காக கொண்டு, தமிழ்நாட்டின் தனித்துவமான கொள்கையான இடஒதுக்கீட்டு கொள்கை 1921 ஆம் ஆண்டு முதல் தமிழ்நாட்டில் பின்பற்றப்பட்டு வருகிறது. இக்கொள்கை, மாநிலத்தின் வளர்ச்சியில் முக்கிய பங்காற்றியுள்ளதுடன், இம்மக்களின் வாழ்வில் நம்பிக்கையும், புத்துணர்ச்சியும் ஏற்படுத்தி உள்ளது.

இளைய தலைமுறையை முறையாக வழிநடத்துவதிலும், சமுதாயத்திற்கான அவர்களது பங்களிப்பை உறுதிசெய்வதிலும் கல்வி முக்கிய பங்கு வகிக்கிறது. கல்வியே ஒருவருக்கு அழிவில்லாத செல்வமாகும் என்ற கருத்தை நன்கு உணர்ந்த இவ்வரசு இவ்வகுப்பினரின் கல்விக்கு அதிக முக்கியத்துவம் அளித்து வருகிறது. இவ்வகுப்பை சார்ந்த மாணவ, மாணவியருக்கு கல்வி உதவித் தொகை வழங்குதல், இலவச கல்வி—பட்டப்படிப்பு/பட்டயப்படிப்பு/தொழில்நுட்ப கல்வி, இலவச மிதிவண்டிகள் வழங்குதல், இலவச சீருடை வழங்குதல், இலவசமாக தங்கி பயில விடுதிகள் ஏற்படுத்தித் தருதல் ஆகிய திட்டங்கள் இத்துறையின்மூலம் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. கிராமப்புற மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் இன மாணவிகளுக்கு ஊக்கத்தொகை வழங்கப்படுகிறது. பிரமலை கள்ளர் வகுப்பினரின் கல்வி முன்னேற்றத்திற்காக மதுரை, தேனி மற்றும் திண்டுக்கல் ஆகிய மாவட்டங்களில் கள்ளர் சீரமைப்புப் பள்ளிகள் நடத்தப்பட்டு வருகின்றன.

பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் வகுப்பினரின் வாழ்வில் மறுமலர்ச்சி ஏற்படுத்துவதற்கும் அவர்களது வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்கும் பொருளாதார வளர்ச்சி இன்றியமையாததாகும். இதனை நன்கு உணர்ந்து, தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம்மூலம் இப்பிரிவு மக்களுக்கு சுயதொழில் துவங்க கடன் உதவி அளிக்கப்பட்டு வருகிறது.

பொருளாதார மேம்பாட்டு திட்டங்களின்கீழ், இவ்வகுப்பை சார்ந்த ஏழை, எளிய மக்களுக்கு பித்தளை சலவைப் பெட்டிகள் மற்றும் மின்மோட்டார் பொருத்தப்பட்ட தையல் இயந்திரங்கள் இலவசமாக வழங்கப்பட்டு வருகின்றன. இன்றைய காலமாற்றத்தை கருத்தில்கொண்டு, ஆயத்த ஆடை அலகுகள் (Readymade Garment Units) அமைப்பதற்கும், நவீனமுறை சலவையகங்கள் (Modern Laundry units) அமைப்பதற்கும் நிதியுதவி அளிக்கும் திட்டங்கள் புதிதாக வகுக்கப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

2023 ஏப்ரல் 13]

வீடற்ற இவ்வகுப்பை சார்ந்த மக்களுக்கு இலவச வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கப்படுகின்றன.

இவ்வரசால் 2007 ஆம் ஆண்டில் சீர்மரபினர் நல வாரியமும், 2008 ஆம் ஆண்டில் தமிழ்நாடு நரிக்குறவர் நல வாரியமும் ஏற்படுத்தப்பட்டு நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டு வருகின்றன.

*2015 ஆம் ஆண்டில் ஐக்கிய நாடுகளின் பொது அவையால் உருவாக்கப்பட்ட நீடித்த வளர்ச்சி இலக்குகளில் (*Sustainable Development Goals*), இலக்கு-1 (வறுமையை ஒழித்தல்), இலக்கு-4 (தரமான கல்வி), இலக்கு-10 (ஏற்றத்தாழ்வுகளை குறைத்தல்) ஆகியன இத்துறையுடன் நேரடி தொடர்புடையதாகும். இந்நீடித்த வளர்ச்சி இலக்குகளை அடைவதற்கு இத்துறை தொடர்ந்து செயலாற்றும்.*

2. இடஒதுக்கீடு

சமூக, பொருளாதார மற்றும் கல்வி நிலைகளில் இப்பிரிவு மக்கள் முன்னேற்றம் அடையும் வகையில் அரசு பணிகளில் நியமனம் மற்றும் கல்வி நிலையங்களில் மாணவ, மாணவியர் சேர்க்கை ஆகியவற்றிற்கான இடஒதுக்கீடு கொள்கை தமிழ்நாட்டில் 1921 ஆம் ஆண்டு முதல் நடைமுறையில் இருந்து வருகிறது. மாநிலத்தின் மக்கள் தொகையில் பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் 88 விழுக்காட்டிற்கும் மேல் உள்ளனர். இடஒதுக்கீட்டின் அளவு பல்வேறு காலங்களில் உயர்த்தப்பட்டது. தற்போது உள்ள 69 விழுக்காடு இடஒதுக்கீடு மாநிலத்தில் 1990 ஆம் ஆண்டு முதல் செயல்படுத்தப்படுகிறது.

தமிழ்நாட்டில் தற்போது பின்பற்றப்பட்டுவரும் இடஒதுக்கீட்டின் விவரம் பின்வருமாறு:

வ. எண்.	பிரிவு	இடஒதுக்கீடு விழுக்காடு
1,	பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்	26.5
2.	பிற்படுத்தப்பட்ட வகுப்பு முஸ்லிம்கள்	3.5
3.	மிகப்பிற்படுத்தப்பட்ட வகுப்பு/சீர்மரபினர்	20
4.	ஆதி திராவிடர்	18
5.	பழங்குடியினர்	1
	மொத்தம்	**69**

இந்திய அரசமைப்பு சட்டம் செயல்பாட்டிற்கு வந்தவுடன் "வகுப்புவாரி பிரதிநிதித்துவ அரசாணை" என்று அழைக்கப்பட்ட பல்வேறு பிரிவினர்களுக்கு இடஒதுக்கீடு வழங்கும் ஆணை செல்லாது என உச்ச நீதிமன்றத்தால் 1951 ஆம் ஆண்டு அறிவிக்கப்பட்டது. இதனை எதிர்த்து தந்தை பெரியார் அவர்கள் தமிழ்நாட்டில் வழி நடத்திய பெருந்திரளான எதிர்ப்பு ஊர்வலங்கள் மற்றும் கண்டனக் கூட்டங்களின் விளைவாக அரசமைப்பு சட்டத்தில் பிரிவு 15(4) சேர்க்கப்பட்டு முதல் அரசமைப்பு சட்டத் திருத்தத்திற்கு வழி வகுத்தது. பல நூற்றாண்டுகளாக அநீதிக்கு உள்ளாக்கப்பட்டு வந்த பிற்படுத்தப்பட்ட, மிகப்பிற்படுத்தப்பட்ட மற்றும் சீர்மரபின மக்கள் கல்வி, சமூக மற்றும் பொருளாதார நிலைகளில் மேம்பாடு அடைவதற்கான சமூக நீதிப் போராட்டத்தில் இது ஒரு வரலாற்று சாதனை எனப் போற்றப்படுகிறது.

1992 ஆம் ஆண்டு உச்ச நீதிமன்றம் இந்திராசஹானி (மண்டல் குழு) வழக்கில் இடஒதுக்கீடு 50 விழுக்காட்டிற்கு மிகாமல் இருக்க வேண்டுமென்று தீர்ப்பளித்தது. தமிழ்நாட்டில் வழங்கப்பட்டு வரும் 69 விழுக்காடு இடஒதுக்கீட்டினை தொடர்ந்து செயல்படுத்தும் விதமாக, தமிழ்நாடு சட்டம் 45/1994 நிறைவேற்றப்பட்டது. பின்னர் அரசமைப்பு சட்டத்தின் பிரிவு 31-பி—யின் பாதுகாப்பு பெறும்பொருட்டு, இச்சட்டம் இந்திய அரசமைப்பு சட்டத்தின் ஒன்பதாவது விவர அட்டவணையில் சேர்க்கப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டில் கல்வி நிறுவனங்கள் மற்றும் அரசுப் பணிகளில் 69 விழுக்காடு இடஒதுக்கீட்டினை தொடர்ந்து செயல்படுத்திடவும், பேணிகாத்திடவும் இவ்வரசு உறுதி பூண்டுள்ளது.

சிறுபான்மையின கல்வி நிறுவனங்கள் நீங்கலாக, தனியார் கல்வி நிறுவனங்களிலும் இடஒதுக்கீடு வழங்குவதற்கான சட்டம் 2006 ஆம் ஆண்டில் இயற்றப்பட்டது.

சிறுபான்மையின சமுதாயத்தினரின் தனி இடஒதுக்கீடு கோரிக்கைகள்மீது தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் ஆணையத்தின் பரிந்துரையைப் பெற்று பரிசீலித்த அரசு, பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு வழங்கப்பட்டு வந்த 30 விழுக்காடு இடஒதுக்கீட்டிலிருந்து பிற்படுத்தப்பட்ட வகுப்பு முஸ்லீம்களுக்கு 3.5 விழுக்காடு இடஒதுக்கீடு வழங்கும் சட்டத்தினை (தமிழ்நாடு சட்டம் 33/2007) 2007 ஆம் ஆண்டில் நிறைவேற்றியது. இச்சட்டம் 15-9-2007 முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

2023 ஏப்ரல் 13]

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் மேற்கொண்ட தொடர் நடவடிக்கைகளின் காரணத்தினாலும், உயர் நீதிமன்றம் மற்றும் உச்ச நீதிமன்றத்தில் வழக்குகள் தொடரச் செய்ததினாலும், இளநிலை மற்றும் முதுநிலை மருத்துவ படிப்புகளுக்கான, அகில இந்திய ஒதுக்கீட்டில், இதர பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு 27 சதவீத இட ஒதுக்கீட்டினை 2021-2022 ஆம் கல்வியாண்டில் இருந்து வழங்க, ஒன்றிய அரசு முடிவு செய்தது. இதன்மூலம் சமூகநீதி பாதுகாக்கப்பட்டுள்ளது.

ஒன்றிய அரசின் கட்டுப்பாட்டில் உள்ள உயர்கல்வி நிலையங்கள் உள்ளிட்ட கல்வி நிலையங்களில் மாணவர்கள் சேர்க்கையில் இதர பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு 27 விழுக்காடு இடஒதுக்கீடு வழங்கும் சட்டத்தினை ஒன்றிய அரசு 2006 ஆம் ஆண்டில் செயல்பாட்டிற்கு கொண்டு வந்ததில் அன்றைய முதல்வர் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்கள் மிக முக்கியப் பங்காற்றியுள்ளார்கள்.

*ஒன்றிய அரசின் இதர பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு (*OBC*) இடஒதுக்கீடு வழங்கும்போது "வளமான பிரிவினரை" (*Creamy layer*) நீக்கம் செய்யும் கொள்கையை இவ்வரசு எப்போதும் எதிர்த்து வருகிறது. தந்தை பெரியாரும், பேரறிஞர் அண்ணாவும், முத்தமிழ் அறிஞர் கலைஞரும் வலியுறுத்தி வந்தவாறு, பொருளாதார நிலையை அளவுகோலாகக் (*Creamy layer*) கருதாமல், சமூக நிலையை மட்டும் கருதி, பிற்படுத்தப்பட்டோர் அனைவரும் ஒன்றிய அரசின் பணிகளிலும், ஒன்றிய அரசின் கல்வி நிறுவனங்களிலும் இடஒதுக்கீடு பெற வழிவகுக்கும் வகையில் வளமான பிரிவினரை நீக்கம் செய்யாமல் இடஒதுக்கீடு வழங்க வேண்டுமென்று ஒன்றிய அரசை தமிழ்நாடு அரசு வலியுறுத்திக் கேட்டுக்கொள்ளும்.*

ஒன்றிய அரசு உயர் கல்வி நிறுவனங்களில் இதர பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு வழங்கப்பட்டுள்ள 27 விழுக்காடு இட ஒதுக்கீட்டினை முழுமையாக நடைமுறைப்படுத்தப்படுவதில்லை எனத் தெரிய வருகிறது. எனவே, IIT, IIM, AIIMS *ஆகிய உயர்கல்வி நிறுவனங்கள் உள்ளிட்ட அனைத்து கல்வி நிறுவனங்களிலும் இதர பிற்படுத்தப்பட்டோருக்கான 27 விழுக்காடு இட ஒதுக்கீட்டினை முழுமையாக நடைமுறைப்படுத்திட வேண்டுமென்று ஒன்றிய அரசை இவ்வரசு தொடர்ந்து வலியுறுத்தும்.*

[2023 ஏப்ரல் 13

அனைத்து சமுதாய மக்களின் நீண்ட நாள் கோரிக்கையான முழுமையான சாதிவாரி மக்கள் தொகைக் கணக்கெடுப்பினை, தேசிய மக்கள் தொகை கணக்கெடுப்புடன் சேர்த்து நடத்திட தமிழ்நாடு அரசு ஒன்றிய அரசைத் தொடர்ந்து வலியுறுத்தும்.

இந்திய அரசமைப்புச் சட்டம் அரசு பணிகளிலும், கல்வி நிறுவனங்களிலும் இட ஒதுக்கீடு செய்ய வழிவகை செய்கிறது. மாநிலங்களில் உள்ள பிற்படுத்தப்பட்டோர், தாழ்த்தப்பட்டோர் மற்றும் பழங்குடியினர் மக்கள்தொகைக்கேற்ப ஒவ்வொரு மாநிலத்திலும் பின்பற்றப்பட்டுவரும் இட ஒதுக்கீட்டின் அளவு வேறுபடுகிறது. எனவே, மாநிலங்கள் தங்கள் தேவைக்கேற்ப இடஒதுக்கீடு விழுக்காட்டை நிர்ணயிக்கும் உரிமை அந்தந்த மாநில அரசுகளுக்கே இருக்க வேண்டும் என்பதற்கேற்ப இந்திய அரசமைப்புச் சட்டத்தில் உரிய திருத்தம் செய்யுமாறு ஒன்றிய அரசினை தமிழ்நாடு அரசு தொடர்ந்து வலியுறுத்தும்.

அரசுப் பணிகளில் நியமனங்களுக்கு இடஒதுக்கீடு வழங்கப்பட்டு வருகிறது. இந்திய அரசமைப்புச் சட்டத்தில் தனியார் நிறுவனங்களில் இடஒதுக்கீடு வழங்குவது குறித்து எதுவும் குறிப்பிடப்படவில்லை. தற்போது தனியார் நிறுவனங்களில் வேலைவாய்ப்புகள் பெருகி வருகின்றன. அரசு தனியார் நிறுவனங்களை ஊக்குவிக்கும் விதமாக வரிச்சலுகை போன்று பல்வேறு சலுகைகளை வழங்கி வருகிறது. இந்தப் பயன்கள் பிற்படுத்தப்பட்ட, ஆதி திராவிடர், பழங்குடியினருக்கும் சென்றடையும் விதத்தில் தனியார் நிறுவனங்களில் வேலைவாய்ப்பில் இடஒதுக்கீடு அவசியம் என கருதப்படுகிறது. இந்திய அரசமைப்பு சட்டத்தில் தகுந்த திருத்தம் கொண்டு வந்தால் மட்டுமே தனியார் துறையிலும் இடஒதுக்கீடு வழங்க இயலும். இந்நோக்கத்தை அடைவதற்கு தேவையான அரசமைப்பு சட்டத் திருத்தம் கொண்டு வர இந்த அரசு ஒன்றிய அரசை வலியுறுத்திக் கேட்டுக்கொள்ளும்.

3. கல்வி

"யாதானும் நாடாமால் ஊராமால் என்னொருவன்
சாந்துணையுங் கல்லாத வாறு."

—குறள் 397

கற்றோருக்கு சென்ற இடமெல்லாம் சிறப்பு. மேலும், சமூகத்தின் வளர்ச்சியை அளவிடும் அளவுகோலாக கல்வி விளங்குகிறது. எனவே, இவ்வரசு பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர்

2023 ஏப்ரல் 13]

மற்றும் சீர்மரபினர் வகுப்புகளை சார்ந்த மக்கள் கல்வியில் முன்னேற்றம் அடைவதில் சிறப்பு கவனம் செலுத்தி வருகிறது. நிதி ஒதுக்கீட்டில் பெரும் பகுதி இம்மக்களின் கல்வி முன்னேற்றத்திற்காக செலவிடப்படுகிறது. இவ்வகுப்பைச் சார்ந்த மாணவ, மாணவியர் நலனுக்காக விடுதி வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன மற்றும் பிரமலைக் கள்ளர் வகுப்பினரின் கல்வி முன்னேற்றத்திற்காக கள்ளர் சீரமைப்பு பள்ளிகள் நடத்தப்பட்டு வருகின்றன. கல்வி உதவித் தொகைகள் வழங்குதல், சீருடைகள் வழங்குதல், மிதிவண்டிகள் வழங்குதல் போன்ற பல்வேறு திட்டங்கள் இவ்வகுப்பை சார்ந்த மாணவ, மாணவியர் பயனடையும் வகையில் இவ்வரசால் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

4. கள்ளர் சீரமைப்பு பள்ளிகள்


பிரமலைக் கள்ளர் வகுப்பைச் சார்ந்த மக்களின் கல்வித் தரத்தை மேம்படுத்தும்வண்ணம், இப்பிரிவு மக்கள் அதிகமாக வசிக்கும் மதுரை, தேனி, திண்டுக்கல் மாவட்டங்களில் 298 பள்ளிகள் (213 தொடக்கப் பள்ளிகள், 22 நடுநிலைப் பள்ளிகள், 20 உயர்நிலைப் பள்ளிகள், 40 மேல்நிலைப் பள்ளிகள் மற்றும் 3 உண்டு உறைவிடப் பள்ளிகள்) இத்துறையால் நடத்தப்பட்டு வருகின்றன. இப்பள்ளிகளில் 27,279 மாணவ, மாணவியர் பயின்று வருகின்றனர்.

அரசு கள்ளர் பள்ளி மாணவ / மாணவியர் எண்ணிக்கை

வ. எண்	பள்ளிகளின் விவரம்	பள்ளிகளின் எண்ணிக்கை	மாணாக்கர்களின் எண்ணிக்கை		
			மாணவர்	மாணவியர்	மொத்தம்
1.	தொடக்கப் பள்ளிகள் (15 தொடக்கப் பள்ளிகளில் LKG வகுப்பு உட்பட)	213	4974	4787	9761
2.	நடுநிலைப் பள்ளிகள்	22	885	834	1719
3.	உயர்நிலைப் பள்ளிகள்	20	1281	1050	2331
4.	மேல்நிலைப் பள்ளிகள்	40	7213	6095	13308
5.	உண்டு உறைவிடப் பள்ளிகள்	3	80	80	160
	மொத்தம்	**298**	**14433**	**12846**	**27279**

[2023 ஏப்ரல் 13


கள்ளர் சீரமைப்பு பள்ளிகளில் பயிலும் மாணவ, மாணவியர் எண்ணிக்கை



கடந்த 5 ஆண்டுகளில் கள்ளர் சீரமைப்பு பள்ளிகளில் மாணவ/ மாணவியரின் எண்ணிக்கை விவரம்

கல்வி ஆண்டு	*மாணவ/மாணவியரின் எண்ணிக்கை*
2018—2019	*24,895*
2019—2020	*24,544*
2020—2021	*24,912*
2021—2022	*27,607*
2022—2023	*27,279*

2023 ஏப்ரல் 13]



கள்ளர் சீரமைப்பு பள்ளி மாணவ, மாணவியருக்கு அரசு/ அரசு உதவி பெறும் பள்ளிகளில் பயிலும் மாணவ, மாணவியருக்கு வழங்கப்படுவதைப் போன்று, சிறப்பு ஊக்கத் தொகை, புத்தகப்பை, கணித உபகரணப்பெட்டி, வண்ணப் பென்சில்கள், உலக வரைபடப் புத்தகம் மற்றும் காலணி ஆகியன பள்ளிக் கல்வித் துறையால் வழங்கப்படுகின்றன.

கள்ளர் சீரமைப்புப் பள்ளிகளில் பயிலும் கிராமப்புறத்தைச் சார்ந்த மிகப்பிற்படுத்தப்பட்ட, சீர்மரபினர் இன மாணவியருக்கு ஊக்கத் தொகையாக ஆண்டிற்கு 3 ஆம் வகுப்பு முதல் 5 ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவியருக்கு ரூ.500 வீதமும், 6 ஆம் வகுப்பு பயிலும் மாணவியருக்கு ரூ.1,000 வீதமும் வழங்கப்படுகிறது. கள்ளர் சீரமைப்பு மேல்நிலைப் பள்ளிகளில் திறன்மிகு வகுப்பறைகள் (smart classrooms) அமைத்துத் தரப்பட்டுள்ளன.

2021-2022 ஆம் ஆண்டில், கள்ளர் சீரமைப்பு பள்ளிகளில் 8 ஆம் வகுப்பு முதல் 11 ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவ/ மாணவியருக்கு தமிழ்நாடு திறன் வளர்ச்சி மேம்பாட்டுக் கழகம்மூலம் ஆங்கில பேச்சாற்றல் மற்றும் தனித்திறன் வளர்க்கும் பயிற்சி வழங்கப்பட்டது.

கள்ளர் சீரமைப்பு பள்ளிகளில் பயிலும் மாணவ, மாணவியருக்கு ஆண்டுதோறும் 3 முறை இலவச மருத்துவப் பரிசோதனைகள்

நடத்தப்பட்டு வருகின்றன. இதற்கென வழங்கப்படும் இடைநிகழ் செலவினம் ரூ.1000-லிருந்து ரூ.3000 ஆக 2022-2023 ஆம் ஆண்டில் உயர்த்தப்பட்டுள்ளது.

4.1 கள்ளர் சீரமைப்பு உண்டு உறைவிடப் பள்ளிகள்

கள்ளர் சீரமைப்பு பள்ளிகளில் பயின்று வரும் மாணவ, மாணவியருக்கு தரமான கல்வியை வழங்கும் பொருட்டு, மதுரை மற்றும் தேனி மாவட்டங்களில் 3 உண்டு உறைவிடப் பள்ளிகள் 2-11-2022 அன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது. இப்பள்ளிகளில் 160 மாணவ/மாணவியர் சேர்க்கப்பட்டு, கல்வி பயின்று வருகின்றனர்.

இப்பள்ளிகளில், திறன்மிகு வகுப்பறைகள், நூலகங்கள், விளையாட்டு கருவிகள் ஆகிய வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. இம்மாணவர்களின் முழுமையான முன்னேற்றத்தினை கருத்திற்கொண்டு, அபாகஸ், யோகா, இசைக்கருவிகள் ஆகியவற்றிற்கான பயிற்சி வகுப்புகள் நடத்தப்படுகின்றன.

4.2 கல்விச் சுற்றுலா

2022-2023 ஆம் கல்வியாண்டில், கள்ளர் சீரமைப்பு பள்ளிகளில் 11 ஆம் வகுப்பு பயிலும் மாணவ, மாணவியர் ரூ.42.16 இலட்சம் செலவில் கல்விச் சுற்றுலாவிற்கு அழைத்து செல்லப்பட்டனர். 1,757 மாணாக்கர்கள் இக்கல்விச் சுற்றுலாவில் பங்கேற்றனர்.

இக்கல்வி சுற்றுலா திட்டத்தின்கீழ், இராமநாதபுரம், நீலகிரி மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்களில் உள்ள வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த மற்றும் கலாச்சார பாரம்பரியம் மிக்க இடங்களுக்கு தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சி கழகத்தின்மூலம் மாணவ, மாணவியர் அழைத்து செல்லப்பட்டனர்.

4.3 கள்ளர் சீரமைப்பு பள்ளிகளில் ஆங்கில வழிக் கல்வி

மதுரை, தேனி மற்றும் திண்டுக்கல் மாவட்டங்களில் மொத்தம் 15 கள்ளர் சீரமைப்பு ஆரம்பப் பள்ளிகளில், ஆங்கில வழி மழலையர் வகுப்புகள் (LKG) தொடங்கப்பட்டன. 2021-2022 ஆம் ஆண்டில் ஒன்றாம் வகுப்பு நடைபெற்ற அனைத்து 225 பள்ளிகளிலும் ஒன்றாம் வகுப்பில் ஆங்கில வழி வகுப்புகள் தொடங்கப்பட்டு நடைபெற்று வருகிறது. மேலும், 2022-2023 ஆம் ஆண்டில், 15 கள்ளர் சீரமைப்புப் பள்ளிகளில் 9 ஆம் வகுப்பில்

2023 ஏப்ரல் 13]

ஆங்கில வழி வகுப்புகள் தொடங்கப்பட்டன. இவ்வாங்கில வழி வகுப்புகளில் 2022–2023 ஆம் கல்வியாண்டில் 1,648 மாணவ, மாணவியர் பயின்று வருகின்றனர். அவ்விவரம் பின்வருமாறு:

வ. எண்	வகுப்புகள்	மாணாக்கர்களின் எண்ணிக்கை		
		மாணவர்	மாணவியர்	மொத்தம்
1.	தொடக்கப் பள்ளி மழலையர் (LKG)	115	103	218
2.	தொடக்கப் பள்ளி மழலையர் (UKG)	171	154	325
3.	1 முதல் 5 ஆங்கில வழி	197	206	403
4.	6 முதல் 9 ஆங்கில வழி	349	353	702
	மொத்தம்	**832**	**816**	**1,648**

4.4 கள்ளர் சீரமைப்புப் பள்ளிக் கட்டடங்கள் பராமரிப்பு

2022-2023 ஆம் ஆண்டில், கள்ளர் சீரமைப்புப் பள்ளிக் கட்டடங்களின் பராமரிப்பு மற்றும் பழுதுபார்க்கும் பணிகளுக்காக ரூ.700 இலட்சம் ஒப்பளிப்பு செய்யப்பட்டு, 104 கள்ளர் சீரமைப்புப் பள்ளிகளில் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

2021-2022 ஆம் ஆண்டில், 234 கள்ளர் பள்ளி கட்டடங்களில் மாற்றுத்திறனாளி மாணவ, மாணவியருக்கு கழிப்பறை வசதிகள் ரூ.468 இலட்சம் செலவில் ஏற்படுத்த ஆணையிடப்பட்டு பணிகள் நிறைவுற்றன.

2023-2024 ஆம் ஆண்டிற்கு கள்ளர் சீரமைப்புப் பள்ளிகளின் கட்டட பராமரிப்புக்காக ரூ.142.88 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

4.5 நபார்டு வங்கி நிதி உதவியுடன் கள்ளர் சீரமைப்பு பள்ளிகளில் உட்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்துதல்

2021-2022 ஆம் ஆண்டில், 92 கள்ளர் சீரமைப்பு பள்ளிகளில் ஆய்வகக் கட்டடங்கள், கணினி ஆய்வகம், கூடுதல் வகுப்பறைகள், கூடுதல் கழிவறைகள், ஆழ்துளை கிணறு மற்றும் சுற்றுச்சுவர் அமைத்தல் போன்ற உட்கட்டமைப்பு வசதிகளை ரூ.5,009.18 இலட்சம் மதிப்பீட்டில் நபார்டு வங்கி நிதி உதவியுடன் ஏற்படுத்த

ஆணையிடப்பட்டது. 54 திட்டப் பணிகள் முடிவுற்றுள்ளன மற்றும் மீதமுள்ள பணிகள் நடைபெற்று வருகின்றன.

4.6 கள்ளர் சீரமைப்பு உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளித் தலைமை ஆசிரியர்கள்/ஆசிரியர்களுக்கு பரிசுகள் வழங்கும் திட்டம்

கற்பித்தல் தரத்தை மேம்படுத்தும் நோக்கில், கள்ளர் சீரமைப்புப் பள்ளிகளில் 10 மற்றும் 12 ஆம் வகுப்புகளில் பயிலும் மாணவ, மாணவியரை அரசுப் பொதுத் தேர்வில் 95 விழுக்காடு மற்றும் அதற்கு அதிகமாக தேர்ச்சி பெறச் செய்யும் உயர்நிலை/மேல்நிலைப் பள்ளித் தலைமையாசிரியர்களுக்கு தலா ரூ.10,000 பரிசுத் தொகை மற்றும் நற்சான்றிதழ் வழங்கப்படுகிறது.

இதேபோன்று, கள்ளர் சீரமைப்பு உயர்நிலை/மேல்நிலைப் பள்ளிகளில் 10 மற்றும் 12 ஆம் வகுப்பு அரசு பொதுத் தேர்வுகளில் தத்தமது பாடப்பிரிவில் 100 விழுக்காடு மாணவ, மாணவியரை தேர்ச்சி பெறச் செய்யும் முதுகலைப் பட்டதாரி மற்றும் இளங்கலை பட்டதாரி ஆசிரியர்களுக்கு தலா ரூ.5,000 பரிசுத் தொகையாக வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின்கீழ் 2022-2023 கல்வியாண்டில் 430 ஆசிரியர்களுக்கு ரூ.24.70 இலட்சம் செலவில் பரிசுத்தொகை வழங்கப்பட்டது.

2023-2024 ஆம் ஆண்டிற்கு இத்திட்டங்களுக்காக ரூ.31 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

2022-2023 ஆம் ஆண்டில் 3 உண்டு உறைவிடப் பள்ளிகளுக்காக செலவிடப்பட்ட ரூ.117.90 இலட்சம் உட்பட கள்ளர் சீரமைப்பு பள்ளிகளின் நிருவாகத்திற்காக ரூ.14620.89 செலவிடப்பட்டுள்ளது.

2023-2024 ஆம் ஆண்டிற்கு ரூ.15,313.52 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

5. கல்வி உதவித் தொகைத் திட்டங்கள்

பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் வகுப்பினைச் சார்ந்த ஏழ்மை நிலையிலுள்ள மாணவ, மாணவியர் தங்களது கல்வியினை இடையூறின்றி தொடர ஏதுவாக பள்ளிப்படிப்பு, பள்ளி மேற்படிப்பு, இலவசக் கல்வி, பட்டியலிடப்பட்ட ஒன்றிய அரசு கல்வி நிறுவனங்களான ஐஐடி,

2023 ஏப்ரல் 13]

ஐஐஎம், ஐஐஐடி, என்ஐடி மற்றும் மத்திய பல்கலைக்கழகங்களில் பயிலும் தமிழ்நாட்டைச் சேர்ந்த மாணவர்களுக்கான கல்வி உதவித் தொகைத் திட்டங்களை அரசு செயல்படுத்தி வருகிறது. 2021–2022 ஆம் ஆண்டில் கல்வி உதவித் தொகை பெறுவதற்கான பெற்றோரது ஆண்டு வருமான வரம்பு ரூ.2.00 இலட்சத்திலிருந்து ரூ.2.50 இலட்சமாக உயர்த்தப்பட்டுள்ளது.

5.1 பள்ளிப்படிப்பு கல்வி உதவித்தொகை

பள்ளிப்படிப்பு கல்வி உதவித்தொகை திட்டத்தின்கீழ், அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் ஆங்கில வழியில் 10 ஆம் வகுப்பு பயிலும் பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் வகுப்பைச் சார்ந்த மாணவ, மாணவியர்களுக்கு தேர்வுக் கட்டணம் ஈடு செய்யப்படுகிறது.

கட்டணம்	தமிழ் வழி (அரசு/ அரசு உதவி பெறும்)	ஆங்கில வழி (அரசு/ அரசு உதவி பெறும்)
கற்பிப்பு கட்டணம்	*விலக்களிக்கப் பட்டுள்ளது*	*விலக்களிக்கப்பட்டுள்ளது*
சிறப்பு கட்டணம்	*விலக்களிக்கப் பட்டுள்ளது*	*விலக்களிக்கப்பட்டுள்ளது*
10 ஆம் வகுப்பு தேர்வு கட்டணம்	*விலக்களிக்கப் பட்டுள்ளது*	*பெற்றோரது ஆண்டு வருமானம் ரூ.2.50 இலட்சத்திற்கு மிகாமல் இருக்க வேண்டும் என்ற நிபந்தனைக்குட்பட்டு பிற்படுத்தப்பட்டோர் மாணவ, மாணவியருக்கு ஈடுசெய்யப்படுகிறது. மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் மாணவ, மாணவியருக்கு எவ்வித நிபந்தனையுமின்றி ஈடுசெய்யப்படுகிறது.*

இத்திட்டத்தின்கீழ் 2022-2023 ஆம் ஆண்டில் 1,07,405 மாணவ, மாணவியர் பயனடையும் வகையில் ரூ.123.52 இலட்சம் செலவிடப்பட்டது. அதன் விபரம் பின்வருமாறு:

வகுப்பு	மாணவ, மாணவியர் எண்ணிக்கை	தொகை (ரூபாய் இலட்சத்தில்)
பிவ	60,929	70.07
மிபிவ/சீம	46,476	53.45
மொத்தம்	**1,07,405**	**123.52**

இதர பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், பொருளாதாரத்தில் பின்தங்கிய வகுப்பினர் மற்றும் சீர்மரபினர் இன மாணவர்களுக்கான பள்ளிப் படிப்பு கல்வி உதவித்தொகைத் திட்டத்தின்கீழ், 2021-2022 ஆம் ஆண்டுவரை 50 சதவீத நிதியுதவி ஒன்றிய அரசினாலும் 50 சதவீத நிதியுதவி மாநில அரசினாலும் வழங்கப்பட்டு வந்தது. தற்போது இந்த நிதியுதவியானது 60:40 (ஒன்றிய அரசு : மாநில அரசு) என்ற விகிதமாக மாற்றப்பட்டுள்ளது.

தற்போது ஒன்றிய அரசின் திருத்திய வழிகாட்டி நெறிமுறைகளின்படி, பள்ளிப்படிப்பு கல்வி உதவித்தொகைத் திட்டத்தின்கீழ், பெற்றோரது ஆண்டு வருமானம் ரூ.2.5 இலட்சம் மற்றும் அதற்கும் குறைவாக உள்ள அரசுப் பள்ளிகளில் 9 மற்றும் 10 ஆம் வகுப்பு பயிலும் மாணவ, மாணவியருக்கு ஆண்டிற்கு ரூ.4,000- வழங்கப்படும். இத்திட்டத்தின்கீழ் மிகப்பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மற்றும் சீர்மரபினர் இன மாணவ, மாணவியருக்கு கல்வி உதவித்தொகை வழங்க அரசின் பரிசீலனையில் உள்ளது.

2023–2024 ஆம் ஆண்டிற்கு இத்திட்டத்தின்கீழ் பிற்படுத்தப்பட்டோர் நலத் துறைக்கு ரூ.106 இலட்சமும், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலத்துறைக்கு ரூ.4439.40 இலட்சமும் என மொத்தம் ரூ.4545.40 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

5.2 பள்ளி மேற்படிப்பு கல்வி உதவித்தொகை

5.2.1 பள்ளி மாணாக்கர்களுக்கான பள்ளி மேற்படிப்பு கல்வி உதவித்தொகை

பள்ளி மேற்படிப்பு கல்வி உதவித்தொகை திட்டத்தின்கீழ், அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் ஆங்கில வழியில் 11 மற்றும் 12 ஆம் வகுப்பு பயிலும் பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் வகுப்பைச்

2023 ஏப்ரல் 13]

சார்ந்த மாணவ, மாணவியர்களுக்கு தேர்வுக் கட்டணம் ஈடு செய்யப்படுகிறது.

கட்டணம்	தமிழ் வழி (அரசு/ அரசு உதவி பெறும்)	ஆங்கில வழி (அரசு/ அரசு உதவி பெறும்)
கற்பிப்பு கட்டணம்	விலக்களிக்கப் பட்டுள்ளது	விலக்களிக்கப்பட்டுள்ளது
சிறப்பு கட்டணம்	விலக்களிக்கப் பட்டுள்ளது	விலக்களிக்கப்பட்டுள்ளது
11 மற்றும் 12 ஆம் வகுப்பு தேர்வு கட்டணம்	விலக்களிக்கப் பட்டுள்ளது	பெற்றோரது ஆண்டு வருமானம் ரூ.2.50 இலட்சத்திற்கு மிகாமல் இருக்க வேண்டும் என்ற நிபந்தனைக்குட்பட்டு பிற்படுத்தப்பட்டோர் மாணவ, மாணவியருக்கு ஈடுசெய்யப்படுகிறது. மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் மாணவ, மாணவியருக்கு எவ்வித நிபந்தனையுமின்றி ஈடுசெய்யப்படுகிறது.

இத்திட்டத்தின்கீழ் 2022-2023 ஆம் ஆண்டில் 1,87,276 மாணவ, மாணவியர் பயனடையும் வகையில் ரூ.413.59 இலட்சம் செலவிடப்பட்டது. அதன் விபரம் பின்வருமாறு:

வகுப்பு	பள்ளி மற்றும் கல்லூரி மாணவ, மாணவியர் எண்ணிக்கை	தொகை (ரூபாய் இலட்சத்தில்)
பிவ	1,08,378	239.55
மிபிவ/சீம	78,898	174.04
மொத்தம்	**1,87,276**	**413.59**

5.2.2 பட்டியலிடப்பட்ட ஒன்றிய அரசு கல்வி நிறுவனங்களில் பயிலும் மாணவ, மாணவியருக்கான பள்ளி மேற்படிப்பு கல்வி உதவித் தொகை திட்டம்.

தமிழ்நாடு உட்பட நாடு முழுவதும் உள்ள பட்டியலிடப்பட்ட ஒன்றிய அரசு கல்வி நிறுவனங்களான ஐஐடி, ஐஐஎம், ஐஐஐடி, என்ஐடி மற்றும் மத்திய பல்கலைக்கழகங்களில் பட்டப்படிப்பு மற்றும் பட்டமேற்படிப்பு பயிலும் தமிழ்நாட்டைச் சேர்ந்த பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் இன மாணவ, மாணவியருக்கு இத்திட்டத்தின்கீழ் கல்வி உதவித்தொகை வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின்கீழ், நபர் ஒருவருக்கு ஆண்டொன்றிற்கு அதிகபட்சமாக ரூ.2 இலட்சம் வரை கல்வி உதவித்தொகை வழங்கப்படுகிறது. இத்திட்டத்திற்கான பெற்றோரது ஆண்டு வருமான வரம்பு ரூ.2.50 இலட்சம் ஆகும். 2022-2023 ஆம் ஆண்டில் 558 மாணவ, மாணவியர் பயனடையும் வகையில் ரூ.403.71 இலட்சம் செலவிடப்பட்டது.

2023–2024 ஆம் ஆண்டிற்கு பள்ளி மாணாக்கர்களுக்கான பள்ளி மேற்படிப்பு கல்வி உதவித்தொகை மற்றும் ஒன்றிய அரசு கல்வி நிறுவனங்களில் பயிலும் மாணவ, மாணவியருக்கான பள்ளி மேற்படிப்பு கல்வி உதவித்தொகை திட்டத்தின்கீழ் பிற்படுத்தப்பட்டோர் நலத் துறைக்கு ரூ.690 இலட்சமும், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலத் துறைக்கு ரூ.490 இலட்சமும் என மொத்தம் ரூ.1180 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

5.2.3. கல்லூரி மாணவ, மாணவியருக்கான பள்ளி மேற்படிப்பு கல்வி உதவித்தொகை (ஆன்லைன் வாயிலாக)

பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் வகுப்புகளைச் சார்ந்த ஐ.டி.ஐ, பட்டயப் படிப்பு, பட்ட மேற்படிப்பு, தொழிற்கல்வி மற்றும் ஆராய்ச்சிப் படிப்பு பயிலும் மாணவ, மாணவியருக்கு கற்பிப்புக் கட்டணம் மற்றும் சிறப்புக் கட்டணம் அரசு கல்வி நிலையங்களில் நிர்ணயிக்கப்பட்ட அளவில் வழங்கப்படுகிறது. தேர்வுக் கட்டணம் முழுமையாகவும், புத்தகக் கட்டணம் கல்வி உதவித்தொகை அறிவிக்கையில் குறிப்பிட்டுள்ளவாறும் வழங்கப்படுகிறது. இக்கல்வி உதவித்தொகையினை பெற பெற்றோரது ஆண்டு வருமானம் ரூ.2.50 இலட்சத்திற்கு மிகாமல் இருக்க வேண்டும். அரசு மற்றும்

2023 ஏப்ரல் 13]

அரசு உதவி பெறும் கல்லூரிகளில் இரண்டாவது முறைமாற்றம் (Second Shift) வகுப்புகளில் பயிலும் மாணவ, மாணவியருக்கும் காலை நேர அரசு மற்றும் அரசு உதவிபெறும் கல்லூரிகளில் பயிலும் மாணவ, மாணவியருக்கு உள்ள அதே விதிமுறைகளுக்கும், வரையறைகளுக்கும் உட்பட்டு கல்வி உதவித்தொகை வழங்கப்படுகிறது. மேலும், உண்டி, உறையுள் கட்டணமாக கல்வி நிலையங்களே நடத்தும் விடுதிகளில் தங்கிப் பயிலும் மாணவ, மாணவியருக்கு மேற்படி கல்வி உதவித்தொகையுடன் பட்டப்படிப்பு பயிலும் மாணவ, மாணவியருக்கு மாதம் ஒன்றுக்கு ரூ.175 என்ற விகிதத்திலும், தொழிற்கல்வி பயிலும் மாணவ, மாணவியருக்கு மாதம் ஒன்றுக்கு ரூ.350 என்ற விகிதத்திலும், ஐ.டி.ஐ/பட்டயப்படிப்பு மற்றும் முதுகலை மாணவ, மாணவியருக்கு மாதம் ஒன்றுக்கு ரூ.225 என்ற விகிதத்திலும் ஆண்டிற்கு 10 மாதங்களுக்கு வழங்கப்பட்டு வந்தது. 2021-2022 ஆம் ஆண்டு முதல் இக்கட்டணங்கள் அனைத்து படிப்புகளுக்கும் ஒரே அளவாக மாதம் ஒன்றுக்கு ரூ.400 ஆக உயர்த்தப்பட்டு, ஆண்டிற்கு (10 மாதங்களுக்கு) மொத்தம் ரூ.4,000 வழங்கப்படுகிறது.

6. இலவசக் கல்வி உதவித்தொகை

இத்திட்டத்தின்கீழ் பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் வகுப்புகளைச் சார்ந்த அரசு மற்றும் அரசு உதவி பெறும் கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் மூன்று ஆண்டு இளங்கலைப் பட்டப்படிப்பு பயில்பவர்களுக்கும்/அரசு மற்றும் அரசு உதவி பெறும் பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகளில் (Polytechnics) பட்டயப் படிப்பு பயில்பவர்களுக்கும்/அரசு ஒதுக்கீட்டின்கீழ் ஒற்றைச் சாளர முறையில் தேர்வு செய்யப்பட்டு அரசு, அரசு உதவிபெறும் கல்லூரிகள் மற்றும் சுயநிதிக் கல்லூரிகளில் தொழிற்படிப்பு பயில்பவர்களுக்கும் பின்வருமாறு கட்டணங்கள் வழங்கப்படுகின்றன:

கட்டணம்	பட்டப்படிப்பு	பட்டயப் படிப்பு	தொழிற்படிப்பு
கற்பிப்பு கட்டணம்	*விலக்களிக்கப் பட்டுள்ளது*	*அரசு நிர்ணயித்த அளவில்*	*குடும்பத்தில் முதல் பட்டதாரியாக இருப்பவர்களுக்கு விலக்களிக்கப் பட்டுள்ளது*

கட்டணம்	பட்டப்படிப்பு	பட்டயப் படிப்பு	தொழிற்படிப்பு
சிறப்பு கட்டணம்	அரசு நிர்ணயித்த அளவில்	அரசு நிர்ணயித்த அளவில்	அரசு நிர்ணயித்த அளவில்
திரும்ப பெற இயலாத கட்டாய கட்டணங்கள்	அரசு நிர்ணயித்த அளவில்	அரசு நிர்ணயித்த அளவில்	அரசு நிர்ணயித்த அளவில்
புத்தக கட்டணம்	கல்வித் தொகை அறிவிக்கையில் குறிப்பிட்டுள்ளவாறு	கல்வித் தொகை அறிவிக்கையில் குறிப்பிட்டுள்ளவாறு	கல்வித் தொகை அறிவிக்கையில் குறிப்பிட்டுள்ளவாறு
தேர்வுக் கட்டணம்	முழுவதுமாக வழங்கப்படுகிறது	முழுவதுமாக வழங்கப்படுகிறது	முழுவதுமாக வழங்கப்படுகிறது
நிபந்தனைகள்	நிபந்தனைகள் இல்லை	பெற்றோரின் ஆண்டு வருமானம் ரூ.2.50 இலட்சத்திற்கு மிகாமல் இருக்க வேண்டும் மற்றும் குடும்பத்தில் முதல் பட்டதாரியாக இருக்க வேண்டும்	பெற்றோரின் ஆண்டு வருமானம் ரூ.2.50 இலட்சத்திற்கு மிகாமல் இருக்க வேண்டும் மற்றும் குடும்பத்தில் முதல் பட்டதாரியாக இருக்க வேண்டும்

மேற்படி இக்கல்வி உதவித்தொகையுடன், கல்வி நிறுவனங்களுடன் இணைந்துள்ள விடுதிகளில் தங்கிப் பயிலும் மாணவ, மாணவியருக்கு வழங்கப்பட்ட உண்டி உறையுள் கட்டணம் மாதமொன்றுக்கு ரூ.400 ஆக 2021–2022 ஆம் ஆண்டு முதல் உயர்த்தப்பட்டு ஆண்டிற்கு (10 மாதங்களுக்கு) மொத்தம் ரூ.4,000 வழங்கப்படுகிறது.

6.1 இணையதளம்மூலம் கல்வி உதவித்தொகை ஒப்பளிப்பு செய்தல்

கல்லூரிகளில் பயிலும், பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் வகுப்புகளைச் சார்ந்த மாணவ, மாணவியருக்கு தேசிய தகவல் மையத்தால் உருவாக்கப்பட்ட www.bcmbcscholarship.tn.gov.in என்ற இணையதளம்மூலம் கல்வி உதவித்தொகை ஒப்பளிப்பு செய்து

2023 ஏப்ரல் 13]

வழங்கப்பட்டு வருகிறது. கல்வி உதவித்தொகைகள் அந்தந்த துறைத் தலைமை அலுவலகங்கள் மூலமாகவே பொது நிதி மேலாண்மை அமைப்பு (PFMS) முறையில் மாணவ, மாணவியரின் வங்கிக் கணக்குகளில் நேரடியாக மின்னணு பரிமாற்றம் (ECS) மூலம் வரவு வைக்கப்படும்.

கல்லூரி மாணாக்கர்களுக்கான பள்ளி மேற்படிப்பு கல்வி உதவித்தொகை, இலவச கல்வி உதவித்தொகை பட்டப்படிப்பு, பட்டயப்படிப்பு, தொழிற்படிப்பு ஆகியவற்றின் திட்டங்களின்கீழ் 2022-2023 ஆம் ஆண்டில் 4,53,488 மாணவ, மாணவியர் பயனடையும் வகையில் ரூ.19,093.25 இலட்சம் செலவிடப்படுகிறது. அதன் விபரம் பின்வருமாறு:

வகுப்பு	மாணவ, மாணவியர் எண்ணிக்கை	தொகை (ரூபாய் இலட்சத்தில்)
பிவ	255712	11503.25
மிபிவ/சீம	197776	7590.00
மொத்தம்	**453488**	**19093.25**

இதர பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், பொருளாதாரத்தில் பின்தங்கிய வகுப்பினர் மற்றும் சீர்மரபினர் இன மாணவர்களுக்கான பள்ளி மேற்படிப்பு கல்வி உதவித்தொகைத் திட்டத்தின்கீழ், 2021-2022 ஆம் ஆண்டுவரை 100 சதவீத நிதியுதவி ஒன்றிய அரசினால் வழங்கப்பட்டு வந்தது. தற்போது இந்த நிதியுதவியானது 60:40 (ஒன்றிய அரசு:மாநில அரசு) என்ற விகிதமாக மாற்றப்பட்டுள்ளது.

2023-2024 ஆம் ஆண்டிற்கு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறைக்கு ரூ.11,903 இலட்சமும், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலத் துறைக்கு ரூ.7,590 இலட்சமும் என மொத்தம் ரூ.19,493 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

7. அரசு பள்ளிகளில் பயின்று 7.5% இடஒதுக்கீட்டின்கீழ் மருத்துவ படிப்புகளில் சேரும் மாணவ/மாணவியருக்கு கல்வி கட்டணம் ஈடு செய்தல்

மருத்துவம் மற்றும் பல் மருத்துவம் படிப்புகளில் அரசு பள்ளிகளில் பயின்று 7.5% இடஒதுக்கீட்டின்கீழ் சேரும் மாணவ/

மாணவியருக்கு கல்வி கட்டணம் ஈடு செய்யப்படுகிறது. 2022-2023 ஆம் ஆண்டில் இத்திட்டத்தின்கீழ் 683 மாணவ, மாணவியருக்கு கல்வி கட்டணத்தொகையாக ரூ.2347.16 இலட்சம் ஈடு செய்யப்பட்டது.

2023-2024 ஆம் ஆண்டிற்கு இத்திட்டத்திற்கு ரூ.3,000 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

8. மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் வகுப்புகளைச் சார்ந்த கிராமப்புற பள்ளி மாணவியருக்கு ஊக்கத்தொகை வழங்குதல்

பெண்களை மேம்பாடு அடையச் செய்வதில் கல்வியே முதற்படியாகும். கிராமப்புறங்களில் உள்ள மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் பெண் குழந்தைகளிடையே கல்வி கற்பதை ஊக்கப்படுத்தவும் மற்றும் ஆரம்பக்கல்வியை இடையிலேயே கைவிடுவதைத் தடுப்பதை நோக்கமாகக் கொண்டும் 1999-2000 ஆண்டிலிருந்து, அரசு/ அரசு உதவிபெறும் பள்ளிகளில் 3 ஆம் வகுப்பு முதல் 5 ஆம் வகுப்பு வரை பயிலும் கிராமப்புற மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் இன பெண் குழந்தைகளுக்கு வருடத்திற்கு ரூ.500 வீதமும், 6 ஆம் வகுப்பில் பயிலும் கிராமப்புற மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் இன பெண் குழந்தைகளுக்கு வருடத்திற்கு ரூ.1000 வீதமும் ஊக்கத்தொகை வழங்கும் திட்டம் அரசால் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இத்திட்டத்தின்கீழ் பயன் பெறுவதற்கான பெற்றோரது ஆண்டு வருமான வரம்பு ரூ.72,000-லிருந்து ரூ.1 இலட்சமாக 2021-2022 ஆம் ஆண்டு முதல் உயர்த்தப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின்கீழ் 2022-2023 ஆம் ஆண்டில் 2,85,959 மாணவியர் பயனடையும் வகையில் ரூ.1,816.90 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது.

2023-2024 ஆம் ஆண்டிற்கு ரூ.1,725 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

9. இலவச மிதிவண்டிகள் வழங்கும் திட்டம்

மேல்நிலைப்படிப்பை ஊக்குவிக்கும் வகையில் அரசு, அரசு உதவிபெறும் மற்றும் பகுதியாக நிதிஉதவிபெறும் பள்ளிகளில் 11 ஆம்

2023 ஏப்ரல் 13]

வகுப்பு பயிலும் பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் வகுப்புகளைச் சார்ந்த மாணவ, மாணவியருக்கு எவ்வித வருமான உச்சவரம்பின்றி மிதிவண்டிகள் வழங்கப்படுகின்றன. மேலும், 2006-2007 ஆம் ஆண்டிலிருந்து பேருந்து கட்டணசலுகை பெறும் மாணாக்கர்களுக்கும் மிதிவண்டிகள் வழங்கும் திட்டம் விரிவாக்கம் செய்யப்பட்டது. பள்ளி வளாகத்திலேயே அமைந்துள்ள விடுதிகளில் தங்கி அதே பள்ளியில் பயிலும் மாணவ, மாணவியருக்கும், உண்டு உறைவிடப் பள்ளிகளில் பயிலும் மாணவ, மாணவியருக்கும் மிதிவண்டிகள் வழங்கப்படுவதில்லை.

இத்திட்டத்தின்கீழ் 2021-2022 ஆம் ஆண்டில் 11 ஆம் வகுப்பு பயின்ற மாணாக்கர்களுக்கு நடப்பு 2022-2023 ஆம் ஆண்டில் ரூ.22,126.53 இலட்சம் மதிப்பீட்டில் 4,35,624 மிதிவண்டிகள் வழங்கப்பட்டன.

துறை	மாணவ, மாணவியர்களின் எண்ணிக்கை	தொகை (இலட்சம்)
பி.வ	225004	11425.78
மி.ப.வ	210620	10700.75
மொத்தம்	**435624**	**22126.53**

2023-2024 ஆம் ஆண்டிற்கு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறைக்கு ரூ.19,475.23 இலட்சமும், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலத் துறைக்கு ரூ.11,028.28 இலட்சமும் என மொத்தம் ரூ.30,503.51 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

10. விடுதிகள்


தொலைதூர கிராமங்களைச் சேர்ந்த மாணவ, மாணவியர் கல்வி கற்பதை ஊக்குவிக்கவும் மற்றும் அவர்கள் கல்வியினை தொடரவும் 1332 பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் வகுப்பினர்களுக்கான விடுதிகளை இத்துறை நடத்தி வருகிறது. மாணவ, மாணவியர் எவ்வித தடையின்றி தங்களின் கல்வியினை தொடர இலவச உணவு மானியம், தங்கும் வசதி வழங்கப்படுகிறது. இத்துறையின்கீழ் செயல்படும்

[2023 ஏப்ரல் 13

பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் விடுதிகளின் விவரம் பின்வருமாறு:

வ. எண்	துறை	விடுதிகள்	விடுதிகளின் எண்ணிக்கை		
			மாணவர்	மாணவியர்	மொத்தம்
1	பிவ	கல்லூரி	85	66	151
		பள்ளி	369	205	574
		மொத்தம்	454	271	725
2	மிபிவ	கல்லூரி	50	53	103
		பள்ளி	236	113	349
		மொத்தம்	286	166	452
3	சீம	கல்லூரி	13	9	22
		பள்ளி	87	46	133
		மொத்தம்	100	55	155
கல்லூரி			148	128	276
பள்ளி			692	364	1056
மொத்தம்			**840**	**492**	**1332**

விடுதிகளின் எண்ணிக்கை



TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

2023 ஏப்ரல் 13]

ஒப்பளிக்கப்பட்ட மாணவ, மாணவியர் எண்ணிக்கை


வ. எண்	துறை	விடுதிகள்	மாணவர்கள் எண்ணிக்கை		
			மாணவர்	மாணவியர்	மொத்தம்
1	பிவ	கல்லூரி	7740	5260	13000
		பள்ளி	20940	11520	32460
		மொத்தம்	28680	16780	45460
2	மிபிவ	கல்லூரி	4250	4765	9015
		பள்ளி	12700	6225	18925
		மொத்தம்	16950	10990	27940
3	சீம	கல்லூரி	1105	740	1845
		பள்ளி	6814	3440	10254
		மொத்தம்	7919	4180	12099
கல்லூரி			13095	10765	23860
பள்ளி			40454	21185	61639
மொத்தம்			**53549**	**31950**	**85499**

அனுமதிக்கப்பட்ட மாணவ, மாணவியர் எண்ணிக்கை

வ. எண்	துறை	விடுதிகள்	மாணவர்கள் எண்ணிக்கை		
			மாணவர்	மாணவியர்	மொத்தம்
1	பிவ	கல்லூரி	6795	4323	11118
		பள்ளி	16635	9427	26062
		மொத்தம்	23430	13750	37180
2	மிபிவ	கல்லூரி	3533	4508	8041
		பள்ளி	11665	5728	17393
		மொத்தம்	15198	10236	25434
3	சீம	கல்லூரி	696	608	1304
		பள்ளி	4783	2621	7404
		மொத்தம்	5479	3229	8708
கல்லூரி			11024	9439	20463
பள்ளி			33083	17776	50859
மொத்தம்			**44107**	**27215**	**71322**

[2023 ஏப்ரல் 13

ஒப்பளிக்கப்பட்ட மற்றும் அனுமதிக்கப்பட்ட மாணவ, மாணவியர் எண்ணிக்கை



இவ்விடுதிகளில் 85,499 மாணவ, மாணவியர் தங்கிப் பயன்பெற அனுமதிக்கப்பட்டுள்ளது. இவ்விடுதிகளில் மாணவ, மாணவியர் சேர்க்கைக்கான பெற்றோரது ஆண்டு வருமான வரம்பு 2021-2022 ஆம் ஆண்டு முதல் 1 இலட்சம் ரூபாயிலிருந்து 2 இலட்சம் ரூபாயாக உயர்த்தப்பட்டுள்ளது.

ஒவ்வொரு விடுதியிலும் 4 சதவீத இடங்கள் மாற்றுத்திறனாளி மாணவ, மாணவியருக்காக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன. மேலும் மீட்கப்படும் குழந்தைத் தொழிலாளர்கள், விடுதிகளில் கல்வி ஆண்டின் இடையிலும் எந்தவித நிபந்தனைகளும் இல்லாமல் சேர்த்துக் கொள்ளவும், படிப்பு முடியும் வரை தங்கிப் பயிலவும் அனுமதிக்கப்பட்டுள்ளது.

ஒவ்வொரு விடுதியிலும் முகாம்வாழ் இலங்கைத் தமிழர்களின் குழந்தைகளுக்கு தலா 5 இடங்கள் கூடுதலாக ஒதுக்கப்பட்டுள்ளன. இவ்விடுதிகளில் ஒப்பளிக்கப்பட்ட எண்ணிக்கைக்குக் கூடுதலாக

2023 ஏப்ரல் 13]

10 விழுக்காடு இடங்களில் மாணவ, மாணவியரைச் சேர்க்க மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது. மாவட்ட ஆட்சியரின் அதிகாரத்திற்குட்பட்ட கூடுதல் இடங்கள் அனுமதிக்கப்பட்ட பின்னரும், தேவை அதிகரிப்பின் விடுதிகளில் ஒப்பளிக்கப்பட்ட எண்ணிக்கைக்குக் கூடுதலாக, மொத்தம் 2,185 மாணவ, மாணவியரைச் சேர்த்திட, துறை தலைவர்களுக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டை பிறப்பிடமாக கொண்டு கேரள எல்லையோரப் பகுதியில் உள்ள மலைத் தோட்டங்களில் பணிபுரியும் தோட்டத் தொழிலாளர்களின் குழந்தைகளை தேனி மாவட்டத்தில் உள்ள விடுதிகளில் சேர்ப்பதற்கு ஏதுவாக, சாதி மற்றும் வருமானச் சான்றிதழ் அளிப்பதிலிருந்து அவர்களுக்கு விலக்கு அளிக்கப்பட்டு அவர்களின் பெற்றோர் அளிக்கும் சுய உறுதி மொழி ஏற்கப்படுகிறது.

மீட்கப்பட்ட குழந்தை தொழிலாளர் — 7

முகாம்வாழ் இலங்கைத் தமிழர்களின்

குழந்தைகள்— 3

கேரள எல்லையோரப் பகுதியில் உள்ள

மலைத் தோட்டங்களில் பணிபுரியும்

தோட்டத் தொழிலாளர்களின் குழந்தைகள்— 227

பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் விடுதிகளில் தங்குவதற்கு கல்லூரி மாணவியர்களின் மத்தியில் தேவை அதிகரித்ததைத் தொடர்ந்து, அவர்களின் தேவையை பூர்த்தி செய்வதற்காக பள்ளி மாணவியர்களின் விடுதியில் காலியாக உள்ள இடங்களில் கல்லூரி மாணவியர்களை தங்க அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இதன்மூலம் 2022-2023 ஆம் ஆண்டில் 430 கல்லூரி மாணவியர்கள் பயனடைந்துள்ளனர்.

2021-2022 ஆம் ஆண்டில், அனைத்து கல்லூரி விடுதிகளில் பயிலும் மாணவ, மாணவியருக்கு தமிழ்நாடு திறன் வளர்ச்சி மேம்பாட்டுக் கழகம்மூலம் தனித்திறன் மற்றும் ஆங்கில பேச்சாற்றல் பயிற்சிகள் வழங்கப்பட்டன.

விடுதி மாணவ, மாணவியருக்கு கட்டுரைப் போட்டி, விளையாட்டுப் போட்டி போன்ற போட்டிகள் "கலைத்திருவிழா" என்ற பெயரில் நடத்தப்பட்டன.

[*2023 ஏப்ரல் 13*

10.1 உணவுக் கட்டணம்

பள்ளி விடுதிகளில் தங்கிப் பயிலும் மாணவ, மாணவியர் ஒருவருக்கு உணவுக் கட்டணம் மாதமொன்றுக்கு ரூ.1,000 ஆகவும், கல்லூரி விடுதிகளில் தங்கிப் பயிலும் மாணவ, மாணவியர் ஒருவருக்கு மாதமொன்றுக்கு ரூ.1,100 ஆகவும், ஒரு ஆண்டில் 10 மாதங்களுக்கு வழங்கப்பட்டு வருகிறது. பள்ளி மற்றும் கல்லூரி விடுதிகளில், விடுதி மாணவ, மாணவியருக்கான உணவுப் பட்டியலில் மாற்றம் செய்யப்பட்டு, மாற்றம் செய்யப்பட்ட திருத்திய உணவுப் பட்டியல் 3-6-2022 முதல் நடைமுறைக்கு கொண்டுவரப்பட்டது.

விடுதி மாணவ/மாணவிகளுக்கு பண்டிகை நாட்களில் சிறப்பு உணவு கட்டணமாக ஒரு பண்டிகைக்கு பள்ளி விடுதி மாணவ, மாணவியருக்கு ரூ.40-ம், கல்லூரி விடுதி மாணவ, மாணவியருக்கு ரூ.80-ம் அனுமதிக்கப்பட்டு, தைப்பொங்கல், குடியரசு தினம், தமிழ் புத்தாண்டு, சுதந்திரதினம் மற்றும் தீபாவளி ஆகிய நாட்களில் வழங்கப்படுகிறது.

2021-2022 ஆம் ஆண்டு முதல் விடுதி மாணவ, மாணவியருக்கு சோப்பு, பற்பசை போன்றவற்றுக்காக வழங்கப்பட்டு வரும் மாதாந்திர பல்வகை செலவினத் தொகை பள்ளி விடுதி மாணவ, மாணவியருக்கு மாதம் ஒன்றுக்கு 50 ரூபாயிலிருந்து 100 ரூபாயாகவும், கல்லூரி விடுதி மாணவ, மாணவியருக்கு மாதம் ஒன்றுக்கு 75 ரூபாயிலிருந்து 150 ரூபாயாகவும் இருமடங்காக உயர்த்தப்பட்டுள்ளது.

2022-2023 ஆம் ஆண்டில் விடுதிகளின் உணவுக் கட்டணம், நிர்வாகம், பராமரிப்பு மற்றும் பிற செலவினங்களுக்காக ரூ.29001.25 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது.

2023-2024 ஆம் ஆண்டிற்கு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறைக்கு ரூ.18,780.10 இலட்சமும், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலத் துறைக்கு ரூ.14,742.60 இலட்சமும் என மொத்தம் ரூ.33,522.70 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

2023 ஏப்ரல் 13]

10.2 விடுதி மாணவ, மாணவியர் பெறும் இதர பயன்கள்

1. 4 ஆம் வகுப்பு முதல் 10 ஆம் வகுப்பு வரை விடுதியில் தங்கிப் பயிலும் மாணவ, மாணவியருக்கு, மதிய உணவு திட்ட பயனாளிகளுக்கு வழங்கப்படுவதைப் போன்று வண்ணம் மற்றும் வடிவமைப்பில் நான்கு இணை சீருடைகள் வழங்கப்படுகின்றன.

2. அனைத்து கல்லூரி விடுதிகளில் ரூ.259 இலட்சம் செலவில் "செம்மொழி நூலகங்கள்" ஏற்படுத்தப்பட்டுள்ளன.

3. அனைத்து கல்லூரி விடுதிகளில் ரூ.202 இலட்சம் செலவில் E—Library அமைக்கப்பட்டுள்ளன.

4. விடுதிகளில் தங்கிப் பயிலும் மாணவ, மாணவியருக்குப் பன்னிரெண்டாம் வகுப்பு வரை அனைத்து பாடப் புத்தகங்களும் இலவசமாக பள்ளிக் கல்வித் துறையால் வழங்கப்படுகின்றன.

5. விடுதிகளில் தங்கிப்பயிலும் 10 மற்றும் 12 ஆம் வகுப்பு மாணவ, மாணவியர் பொதுத் தேர்வில் சிறந்த மதிப்பெண்கள் பெற்றிட, அவர்களுக்கு இலவச சிறப்பு வழிகாட்டி நூல்கள் வழங்கப்படுகின்றன.

6. 10 மற்றும் 12 ஆம் வகுப்பு மற்றும் கல்லூரி விடுதி மாணவ, மாணவியருக்கு வேலைவாய்ப்புகள் பெறுவதற்காக நடத்தப்படும் பல்வேறு போட்டித் தேர்வுகள் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்த வாழ்க்கை வழிகாட்டி நிகழ்ச்சிகள் நடத்தப்படுகின்றன.

7. ஒவ்வொரு விடுதிக்கும் ஒரு ஆங்கிலம் மற்றும் இரண்டு தமிழ் நாளிதழ்கள் வழங்கப்படுகின்றன.

8. அனைத்து விடுதி மாணவ, மாணவியருக்கு ஆண்டு தோறும் மூன்று முறை மருத்துவப் பரிசோதனைகள் நடத்தப்படுகின்றன. இதற்கென வழங்கப்படும் இடைநிகழ்வு செலவினத் தொகை 2022-2023ஆம் ஆண்டிலிருந்து ஆண்டிற்கு ரூ.1000-லிருந்து ரூ.3000 ஆக உயர்த்தப்பட்டது.

9. விடுதி மாணவ, மாணவியருக்கு பாய்கள், ஜமக்காளங்கள், போர்வைகள், எவர்சில்வர் தட்டுகள் மற்றும் தண்ணீர் குவளைகள் (tumbler) வழங்கப்படுகின்றன.

10. மலைப் பிரதேசங்களில் உள்ள விடுதி மாணவ, மாணவியருக்கு கம்பளி ஆடை வழங்கப்படுகிறது.

11. விடுதிகளில் அவசர பராமரிப்புப் பணிகளை மேற்கொள்ள விடுதி ஒன்றுக்கு ஓராண்டிற்கு ரூ.50,000 வழங்கப்படுகிறது.

12. பள்ளி மற்றும் கல்லூரி விடுதிகளில் நூலகப் புத்தகங்கள், புத்தக அலமாரிகள், விளையாட்டு பொருட்கள், வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டி, மாவரைக்கும் இயந்திரம், மின்அரைப்பான், நீர் சுத்திகரிப்புக் கருவி, சுகாதார குட்டைத்தகளி, தீயணைப்பான் கருவிகள், இட்லி வேகவைப்பான்கள் மற்றும் பூச்சி அழிப்பான் மின் கருவி ஆகியன வழங்கப்படுகின்றன. இவற்றுடன் கல்லூரி விடுதிகளுக்கு இரண்டடுக்கு கட்டில்கள், இன்வர்ட்டர் கருவி, பார்வை குறிப்புப் புத்தகங்கள், உடனடி மாவரைக்கும் இயந்திரம் மற்றும் நீராவி கொதிக்கலன், உடற்பயிற்சி விளையாட்டு உபகரணங்கள் மற்றும் தொலைக்காட்சி பெட்டி வழங்கப்படுகின்றன.

13. மாலை நேர சிற்றுண்டியாக தினந்தோறும் சுண்டல் மற்றும் சுக்குமல்லி காபி/தேநீர் வழங்கப்படுகின்றன

14. மாணவ/மாணவியர் ஒருவருக்கு ஒரு மாதத்திற்கு 20 முட்டைகள் வழங்கப்படுகின்றன. முட்டை சாப்பிடாதவர்களுக்கு வாழைப்பழங்கள் வழங்கப்படுகின்றன.

15. ஒவ்வொரு மாதத்தின் முதல் மற்றும் மூன்றாம் புதன்கிழமைகளில் ஆட்டிறைச்சியும், இரண்டாம் மற்றும் நான்காம் புதன்கிழமைகளில் கோழி இறைச்சியும் வழங்கப்படுகின்றன.

16. விடுதி மாணவ, மாணவியர்கள் பயன்பெறும் வண்ணம் காப்பாளர்/காப்பாளினிகள் தங்கள் விடுதிகளை திறம்பட நடத்திட விடுதிகளில் பணிபுரியும் காப்பாளர்/ காப்பாளினிகளுக்கு ரூ.49.55 இலட்சம் செலவில் புத்தாக்க பயிற்சி அளிக்கப்பட்டது.

11. அரசால் அங்கீகரிக்கப்பட்ட தனியார் விடுதிகளுக்கு உணவு மானியம்

அரசால் அங்கீகரிக்கப்பட்ட 39 தனியார் விடுதிகளில் தங்கிப் பயிலும் பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் வகுப்பு மாணவ, மாணவியருக்கு உணவு மானியம் வழங்கப்படுகிறது. 2021-2022 ஆம் ஆண்டில் இவ்விடுதிகளில் சேர்வதற்கான பெற்றோரது ஆண்டு வருமான வரம்பு ரூ.1 இலட்சத்திலிருந்து ரூ.2 இலட்சமாக உயர்த்தப்பட்டது. அவர்களின் உணவுச் செலவினங்களுக்காக நபர் ஒருவருக்கு மாதம் ஒன்றுக்கு ரூ.1,000 வீதம் 10 மாதங்களுக்கு உணவு மானியம் வழங்கப்படுகிறது.

இத்திட்டத்தின்கீழ் 2022-2023 ஆம் ஆண்டில் 733 மாணவ, மாணவியர் பயன்பெறும் வகையில் ரூ. 70.59 இலட்சம் செலவிடப்பட்டது.

2023-2024 ஆம் ஆண்டிற்கு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறைக்கு ரூ.41 இலட்சமும், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலத் துறைக்கு ரூ.46.79 இலட்சமும் என மொத்தம் ரூ.87.79 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

12. விடுதிகளுக்கு பரிசுகள் வழங்குதல்

(i) மாநில அளவிலான பரிசுகள்

விடுதிகளை செம்மையான முறையில் பராமரிப்பதற்கு விடுதி பணியாளர்களை ஊக்கப்படுத்தும் வகையில், மாநில அளவில் 3 சிறந்த விடுதிகளை தேர்ந்தெடுத்து அவ்விடுதிகளுக்கு கேடயம் மற்றும் நினைவுப் பரிசுகள் வழங்கப்படுகின்றன. மேலும், அவ்விடுதிகளில் பணியாற்றும் பணியாளர்களுக்கும் பரிசுகள் வழங்கப்படுகின்றன. அதன் விவரம் பின்வருமாறு:

வ. எண்.	வகை	முதல் பரிசு ரூ.	இரண்டாம் பரிசு ரூ.	மூன்றாம் பரிசு ரூ.
1.	காப்பாளர்/ காப்பாளினி	20,000	15,000	10,000
2.	காவலர் மற்றும் ஏவலர்	10,000	5,000	3,000
3.	சமையலர்	10,000	5,000	3,000
4.	தூய்மைப் பணியாளர்	5,000	3,000	2,000

இத்திட்டத்தின்கீழ் 2022-2023 ஆம் ஆண்டில் பரிசுகள் வழங்குவதற்காக ரூ.1.37 இலட்சம் செலவிடப்பட்டது.

2023-2024 ஆம் ஆண்டிற்கு ரூ.1.37 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

(ii) மாவட்ட அளவிலான பரிசுகள்

விடுதிகள் சிறப்பாக செயல்படுவதை ஊக்கப்படுத்தும் வகையில் ஆண்டுதோறும் மாவட்ட அளவில் ஒவ்வொரு மாவட்டத்திலும் உள்ள பிற்படுத்தப்பட்டோர்/ மிகப்பிற்படுத்தப்பட்டோர்/ சீர்மரபினர் நல விடுதிகளுள் 3 விடுதிகளையும், கள்ளர் சீரமைப்பு விடுதிகளுள் 3 விடுதிகளையும் தேர்வு செய்து நினைவுப் பரிசும் காப்பாளர்/ காப்பாளினிகளுக்கு பரிசுகளும் வழங்கும் புதிய திட்டம் 2021-2022 ஆம் ஆண்டில் அறிமுகப்படுத்தப்பட்டது. காப்பாளர்/ காப்பாளினிகளுக்கு முதல், இரண்டாம் மற்றும் மூன்றாம் பரிசாக முறையே ரூ.10,000, ரூ.5,000 மற்றும் ரூ.3,000 வழங்கப்படுகிறது.

மாவட்ட அளவிலான பரிசுகள் வழங்குவதற்காக 2022-2023 ஆம் ஆண்டில் ரூ.7.80 இலட்சம் செலவினம் மேற்கொள்ளப்பட்டது.

மாவட்ட அளவிலான பரிசுகள் வழங்குவதற்காக 2023-2024 ஆம் ஆண்டிற்கு ரூ.7.80 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

13. விடுதிகளுக்கு சொந்தக் கட்டடங்கள் கட்டுதல்

மொத்தமுள்ள 1332 பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நல விடுதிகளில் 1254 விடுதிகள் சொந்தக் கட்டடங்களில் செயல்பட்டு வருகின்றன மற்றும் 78 விடுதிகள் வாடகை/வேறு அரசுக் கட்டடங்களில் இயங்கி வருகின்றன. இவற்றுள் 28 விடுதிகளுக்கு சொந்த கட்டடம் கட்ட ஆணையிடப்பட்டு பணிகள் பொதுப் பணித்

துறைமூலம் நடைபெற்று வருகின்றன. மீதமுள்ள 50 விடுதிகளுக்கு மாணவர்களின் எண்ணிக்கை அடிப்படையில் சொந்த கட்டடங்கள் கட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

2022-2023 ஆம் ஆண்டில் கட்டுமானப் பணிகளுக்காக ரூ. 2,303.46 இலட்சம் செலவிடப்பட்டது.

இத்திட்டத்திற்காக 2023-2024 ஆம் ஆண்டிற்கு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறைக்கு ரூ.406.99 இலட்சமும், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலத் துறைக்கு ரூ.1295.24 இலட்சம் என மொத்தம் ரூ.1702.23 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

14. விடுதி கட்டடங்கள் பராமரிப்பு

அரசு சொந்தக் கட்டடங்களில் இயங்கி வரும் விடுதிகளின் பராமரிப்பு பணிகள் பொதுப் பணித் துறைமூலம் மேற்கொள்ளப்படுகின்றன. இப்பணிகளுக்காக 2022–2023 ஆம் ஆண்டில் ரூ.660 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டு, 112 விடுதிகளில் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டன. 2021–2022 ஆம் ஆண்டில் விடுதிகளுக்கு சிறப்பு பராமரிப்பு மற்றும் பழுது பார்த்தல் பணிகளுக்கு ரூ.1300 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டு, 145 விடுதிகளில் பராமரிப்பு மற்றும் பழுது பார்த்தல் பணிகள் பொதுப் பணித் துறைமூலம் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

2023–2024 ஆம் ஆண்டிற்கு விடுதிகளின் பராமரிப்பு பணிகளுக்காக ரூ.693.26 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

15. சீருடைகள் வழங்குதல்

ஆண்டுதோறும் கள்ளர் சீரமைப்புப் பள்ளிகளில் எட்டாம் வகுப்பு வரை பயிலும் மாணவ, மாணவியருக்கு 4 இலவச இணை சீருடைகள் சமூக நலன் மற்றும் மகளிர் உரிமை துறையால் வழங்கப்படுகின்றன. பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் விடுதிகளில் தங்கி 10 ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவ, மாணவியருக்கு 4 இணை சீருடைகள் இலவசமாக ஒவ்வொரு ஆண்டும் வழங்கப்படுகின்றன. இச்சீருடைகள் வண்ணம் மற்றும் வடிவமைப்பில் அரசுப் பள்ளிகளில் பின்பற்றப்படுவது போலவே வழங்கப்படுகின்றன. சீருடைக்கான துணிகள் கோ—ஆப்டெக்ஸ் நிறுவனத்திடமிருந்து

கொள்முதல் செய்யப்பட்டு, மாவட்ட மகளிர் தையல் தொழில் கூட்டுறவு சங்கங்கள்மூலம் தைத்து வழங்கப்படுகின்றன.

இத்திட்டத்தின்கீழ் 2022-2023 ஆம் ஆண்டில் 30,118 மாணவ, மாணவியர் பயனடையும் வகையில் ரூ.357.47 இலட்சம் செலவிடப்பட்டது.

2023-2024 ஆம் ஆண்டிற்கு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறைக்கு ரூ.250 இலட்சமும், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலத் துறைக்கு ரூ.159.14 இலட்சமும் என மொத்தம் ரூ.409.14 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

16. பொருளாதார மேம்பாட்டுத் திட்டங்கள்

16.1 இலவச பித்தளை தேய்ப்பு பெட்டிகள் வழங்குதல்

ஏழ்மை நிலையில் உள்ள சலவைத்தொழில் செய்யும் பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் வகுப்பினரின் பொருளாதார நிலையை மேம்படுத்த இலவச பித்தளை தேய்ப்பு பெட்டிகள் வழங்கப்படுகின்றன. இத்திட்டத்தின்கீழ் பயன்பெறுவதற்கான பயனாளிகளின் ஆண்டு வருமான வரம்பு ரூ.72,000/-லிருந்து ரூ.1 இலட்சமாக 2021-2022 ஆம் ஆண்டில் உயர்த்தப்பட்டுள்ளது.

2022-2023 ஆம் ஆண்டிற்கு 1,085 பித்தளை தேய்ப்பு பெட்டிகள் ரூ.71.08 இலட்சம் செலவில் வழங்கப்பட்டது.

2023-2024 ஆம் ஆண்டிற்கு ரூ.71.13 இலட்சம் தேய்ப்புப் பெட்டிகள் வழங்குவதற்காக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

16.2 நவீன சலவையக அலகுகள் அமைத்தல்

2022-2023 ஆம் ஆண்டில், 25 நவீன சலவையக அலகுகள் ரூ.75 இலட்சம் மதிப்பில் அமைக்கப்படுவதற்கான புதிய திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது. இத்திட்டத்தின்கீழ் பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் வகுப்பை சார்ந்த சலவைத் தொழிலில் ஈடுபட்டுள்ள மக்களில் ஒரு குழுவிற்கு 10 பேர் வீதம் இணைந்து ஒரு நவீன சலவையகம் அமைப்பதற்கு ரூ.3 இலட்சம் வழங்கப்படும். இத்திட்டத்தின்கீழ் பயன்பெற பயனாளியின் ஆண்டு வருமானம் ரூ.1 இலட்சத்திற்கு மிகாமல் இருக்க வேண்டும். இதுவரை 4 நவீன சலவையக அலகு அமைப்பதற்கு ரூ.12 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.

2023 ஏப்ரல் 13]

2023-2024 ஆம் ஆண்டிற்கு நவீன சலவையகம் அமைப்பதற்காக ரூ.75 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

16.3 இலவச மின்மோட்டார் பொருத்தப்பட்ட தையல் இயந்திரங்கள் வழங்குதல்

ஏழ்மை நிலையில் உள்ள பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் வகுப்பினரின் பொருளாதார நிலையை மேம்படுத்த இலவச மின்மோட்டார் பொருத்தப்பட்ட தையல் இயந்திரங்கள் வழங்கப்படுகின்றன. இத்திட்டத்தின்கீழ் பயன்பெறுவதற்கான பயனாளிகளின் ஆண்டு வருமான வரம்பு ரூ.72,000-லிருந்து ரூ.1 இலட்சமாக 2021-2022 ஆம் ஆண்டில் உயர்த்தப்பட்டுள்ளது.

2021-2022 ஆம் ஆண்டிற்கு 3,000 மின்மோட்டார் பொருத்தப்பட்ட தையல் இயந்திரங்கள் பயனாளிகளுக்கு வாங்கி வழங்கப்படும்.

2023-2024 ஆம் ஆண்டிற்கு மின்மோட்டார் பொருத்தப்பட்ட தையல் இயந்திரங்கள் வழங்க ரூ.117.46 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது

16.4 ஆயத்த ஆடை உற்பத்தி அலகு அமைத்தல்

2022-2023 ஆம் ஆண்டில், 25 ஆயத்த ஆடை உற்பத்தி அலகுகள் ரூ.75 இலட்சம் மதிப்பில் அமைக்கப்படுவதற்கான புதிய திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது. இத்திட்டத்தின்கீழ் பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் வகுப்பை சார்ந்த தையல் தொழிலில் ஈடுபட்டுள்ள மக்களில் ஒரு குழுவிற்கு 10 பேர் வீதம் இணைந்து ஒரு ஆயத்த ஆடை உற்பத்தி அலகு அமைப்பதற்கு ரூ.3 இலட்சம் வழங்கப்படும். இத்திட்டத்தின்கீழ் பயன்பெற பயனாளியின் ஆண்டு வருமானம் ரூ.1.00 இலட்சத்திற்கு மிகாமல் இருக்க வேண்டும்.

இதுவரை 25 ஆயத்த ஆடை உற்பத்தி அலகு அமைப்பதற்கு ரூ.75 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.

2023-2024 ஆம் ஆண்டிற்கு ஆயத்த ஆடை உற்பத்தி அலகுகள் அமைக்கும் திட்டத்திற்காக ரூ.75 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

[2023 ஏப்ரல் 13

17. இலவச வீட்டு மனை வழங்குதல்

வீட்டுமனையற்ற பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் வகுப்பினருக்கு சொந்தமாக அவர்கள் வீடு கட்டி கொள்வதற்காக இலவச வீட்டுமனைகள் வழங்கப்படுகின்றன. இத்திட்டத்தின்கீழ் பயன்பெறுவதற்கான பயனாளிகளின் ஆண்டு வருமான வரம்பு 2021-2022 ஆம் ஆண்டில் ரூ.72,000/-லிருந்து ரூ.1 இலட்சமாக உயர்த்தப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின்கீழ் 2022-2023 ஆம் ஆண்டில் 47 பயனாளிகளுக்கு ரூ.39.50 இலட்சம் செலவில் வீட்டுமனைகள் வழங்கப்பட்டுள்ளன.

2023-2024 ஆம் ஆண்டிற்கு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறைக்கு ரூ.200 இலட்சமும், மிகப்பிற்படுத்தப்பட்டோர் நலத் துறைக்கு ரூ.150.020.02 இலட்சமும் என மொத்தம் ரூ.350.02 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

18. சீர்மரபினர் நல வாரியம்

சீர்மரபினர் வகுப்பினரின் சமூக, பொருளாதார மற்றும் கல்வி மேம்பாட்டிற்காக "சீர்மரபினர் நல வாரியம்", 2007 ஆம் ஆண்டில் அரசால் அமைக்கப்பட்டது. இவ்வாரியத்தில் பதிவு செய்துள்ள உறுப்பினர்களுக்கு அமைப்பு சாரா தொழிலாளர்களுக்கு, தொழிலாளர் நலன்-திறன் மேம்பாட்டுத் துறையின் கட்டுப்பாட்டின்கீழ் இயங்கி வரும் நல வாரியங்கள்மூலம் வழங்கப்பட்டு வரும் நல உதவித் திட்டங்கள் போன்று விபத்து நிவாரணம், கல்வி உதவித்தொகை, திருமண உதவித்தொகை, மகப்பேறு உதவித்தொகை மற்றும் முதியோர் ஓய்வூதியம் ஆகிய உதவிகள் வழங்கப்படுகின்றன. சீர்மரபினர் வகுப்பைச் சார்ந்த 18 வயது நிறைவு செய்து 60 வயதுக்கு மேற்படாதவர்கள் இவ்வாரியத்தில் உறுப்பினராக பதிவு செய்ய தகுதியுடையவர் ஆவர். இந்நலவாரியத்திற்கென இதுவரை ரூ.200 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இவ்வாரியத்தில் இதுவரை மொத்தம் 38,117 நபர்கள் உறுப்பினர்களாக பதிவு செய்யப்பட்டுள்ளனர். இவ்வாரியத்தின்மூலம் 2022-2023 ஆம் ஆண்டில் 398 பயனாளிகளுக்கு ரூ.28.05 இலட்சம் செலவில் நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டுள்ளன.

2023 ஏப்ரல் 13]

சீர்மரபினர் நல வாரியத்தில் பதிவு செய்துள்ள உறுப்பினர்களுக்கு வழங்கப்படும் நல உதவிகள்

வ. எண்.		நிதி உதவிகள் விவரம்	உதவித் தொகை ரூ.
	அ)	விபத்து ஈட்டுறுதித் திட்டத்தின் கீழ் உதவித் தொகை விபத்தினால் ஏற்படும் மரணம்	1,00,000
	ஆ)	விபத்தினால் ஏற்படும் ஊனம்	10,000 முதல் 1,00,000 வரை
		இயற்கை மரணம்	20,000
		ஈமச்சடங்கு செலவினம்	5,000
4. கல்வி உதவித்தொகை			
	அ)	10 ஆம் வகுப்பு படித்து வரும் பெண் குழந்தைகளுக்கு	1,000
	ஆ)	10 ஆம் வகுப்பு தேர்ச்சிப் பெற்றவர்களுக்கு	1,000
	இ)	11 ஆம் வகுப்பு படித்து வரும் பெண் குழந்தைகளுக்கு	1,000
	ஈ)	12 ஆம் வகுப்பு படித்து வரும் பெண் குழந்தைகளுக்கு	1,500
	உ)	12 ஆம் வகுப்பு தேர்ச்சி பெற்றவர்களுக்கு	1,500
	ஊ)	(i) முறையான பட்டப் படிப்பிற்கு	1,500
		(ii) விடுதி வசதியுடன் கூடிய முறையான பட்டப்படிப்பிற்கு	1,750
	எ)	(i) முறையான பட்ட மேற்படிப்பிற்கு	4,000
		(ii) விடுதி வசதியுடன் கூடிய முறையான பட்ட மேற்படிப்பிற்கு	5,000

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

வ. எண்.	நிதி உதவிகள் விவரம்		உதவித் தொகை ரூ.
	ஏ)	(i) தொழிற்கல்வி பட்டப் படிப்பிற்கு	4,000
		(ii) விடுதி வசதியுடன் தொழிற்கல்வி பட்டப் படிப்பிற்கு	6,000
	ஐ)	(i) தொழிற்கல்வி பட்ட மேற்படிப்பிற்கு	6,000
		(ii) விடுதி வசதியுடன் தொழிற்கல்வி பட்ட மேற்படிப்பிற்கு	8,000
	ஒ)	(i) ஐ.டி.ஐ அல்லது தொழிற் பயிற்சிப் படிப்பிற்கு	1,000
		(ii) விடுதி வசதியுடன் ஐ.டி.ஐ அல்லது தொழிற் பயிற்சிப் படிப்பிற்கு	1,200
5.		திருமண உதவித்தொகை (i) ஆண்களுக்கு (ii) பெண்களுக்கு	 3,000 5,000
6. மகப்பேறு உதவித்தொகை			
	அ)	மாதம் ஒன்றுக்கு ரூ.1,000 வீதம் (6 மாதங்களுக்கு)	6,000
	ஆ)	கருச்சிதைவு / கருக்கலைப்பு	3,000
7.		மூக்குக்கண்ணாடி செலவுத் தொகையை ஈடுசெய்தல்	500 வரை
8.		முதியோர் ஓய்வூதியம் (மாதந்தோறும்)	1,000

இதுவரை இவ்வாரியத்தில் பதிவு செய்துள்ள 39315உறுப்பினர்களுக்கு ரூ.123.295இலட்சம் மதிப்பிலான நல உதவிகள் வழங்கப்பட்டுள்ளன.

வலையர், அம்பலக்காரர் (சேர்வை உட்பட) இனத்தை சேர்ந்த மக்களின் நலனுக்காக பல்வேறு நலத்திட்டங்களை செயல்படுத்த "வலையர் அம்பலக்காரர் (சேர்வை உட்பட) புனரமைப்பு வாரியம்" அமைத்திட ஆணையிடப்பட்டுள்ளது.

2023 ஏப்ரல் 13]

19. தமிழ்நாடு நரிக்குறவர் நல வாரியம்

"தமிழ்நாடு நரிக்குறவர் நல வாரியம்" நரிக்குறவர்களுக்கு கல்வி உதவித்தொகை வழங்குவதற்கும், அவர்கள் மாற்று தொழில் புரிவதற்கான நிதியுதவி அளிப்பதற்கும், 2008 ஆம் ஆண்டில் அரசால் அமைக்கப்பட்டது. இவ்வாரியத்தில் பதிவு செய்துள்ள உறுப்பினர்களுக்கு அமைப்பு சாரா தொழிலாளர்களுக்கு, தொழிலாளர் நலன்–திறன் மேம்பாட்டுத் துறையின் கட்டுப்பாட்டின்கீழ் இயங்கி வரும் நல வாரியங்கள்மூலம் வழங்கப்பட்டுவரும் நல உதவித் திட்டங்கள் போன்று விபத்து நிவாரணம், கல்வி உதவித்தொகை, திருமண உதவித்தொகை, மகப்பேறு உதவித்தொகை மற்றும் முதியோர் ஓய்வூதியம் ஆகிய உதவிகள் வழங்கப்படுகின்றன. நரிக்குறவர் வகுப்பைச் சார்ந்த 18 வயது நிறைவு செய்து 60 வயதுக்கு மேற்படாதவர்கள் இவ்வாரியத்தில் உறுப்பினராக பதிவு செய்ய தகுதியுடையவர் ஆவர்.

இவ்வாரியத்தில் பதிவு செய்துள்ள உறுப்பினர்கள் சுயதொழில் துவங்க நிதியுதவி அளிக்கப்படுகிறது. தனிநபருக்கு தொழில் துவங்க ரூ.75,000 மானியமும், குழுவாக சேர்ந்து தொழில் துவங்க தனிநபர் மானியமாக ரூ.10,000 அல்லது குழுவிற்கு ரூ.1,25,000 மானியமாக பின் நிகழ்வாக வழங்கப்படுகிறது.

இவ்வாரியத்திற்கென இதுவரை ரூ.1,085 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

2022-2023 ஆம் ஆண்டில் 234 நபர்கள் புதிய உறுப்பினர்களாக பதிவு செய்யப்பட்டு, இவ்வாரியத்தில் இதுவரை மொத்தம் 16,010 நபர்கள் உறுப்பினர்களாக உள்ளனர். இவ்வாரியத்தின் மூலம் 2022-2023 ஆம் ஆண்டில் 190160பயனாளிகளுக்கு ரூ.12.78 இலட்சம் செலவில் நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டுள்ளன.

தமிழ்நாடு நரிக்குறவர் நல வாரியத்தில் பதிவு செய்துள்ள உறுப்பினர்களுக்கு வழங்கப்படும் நல உதவிகள்

வ. எண்	**நிதி உதவிகள் விவரம்**		**உதவித் தொகை ரூ.**
1.	*அ)*	விபத்து ஈட்டுறுதித் திட்டத்தின் கீழ் உதவித் தொகை விபத்தினால் ஏற்படும் மரணம்	*1,00,000*

[2023 ஏப்ரல் 13

	ஆ)	விபத்தினால் ஏற்படும் ஊனம்	10,000 முதல் 1,00,000 வரை
2.		இயற்கை மரணம்	20,000
3.		ஈமச்சடங்கு செலவினம்	5,000
4.	கல்வி உதவித் தொகை		
	அ)	1 முதல் 5ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவ, மாணவியருக்கு	500
	ஆ)	6 முதல் 9ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவ, மாணவியருக்கு	1,000
	இ)	10ஆம் வகுப்பு படித்து வரும் பெண் குழந்தைகளுக்கு	1,000
	ஈ)	பத்தாம் வகுப்பு தேர்ச்சி பெற்றவர்களுக்கு	1,000
	உ)	11ஆம் வகுப்பு படித்து வரும் பெண் குழந்தைகளுக்கு	1,000
	ஊ)	12ஆம் வகுப்பு படித்து வரும் பெண் குழந்தைகளுக்கு	1,500
	எ)	12ஆம் வகுப்பு தேர்ச்சி பெற்றவர்களுக்கு	1,500
	ஏ)	(i) முறையான பட்டப்படிப்பிற்கு	1,500
		விடுதி வசதியுடன் முறையான பட்டப்படிப்பிற்கு	1,750
	ஐ)	(i)முறையான பட்ட மேற்படிப்பிற்கு	4,000
		விடுதி வசதியுடன் கூடிய முறையான பட்ட மேற்படிப்பிற்கு	5,000
	ஒ)	(i) தொழிற்கல்வி பட்டப்படிப்பிற்கு	4,000
		விடுதி வசதியுடன் கூடிய தொழிற்கல்வி பட்டப்படிப்பிற்கு	6,000
	ஓ)	(i)தொழிற்கல்வி பட்டமேற்படிப்பிற்கு	6,000

2023 ஏப்ரல் 13]

		(ii) விடுதி வசதியுடன் தொழிற்கல்வி பட்ட மேற்படிப்பிற்கு	*8,000*
	ஔ)	*(i) ஐ.டி.ஐ அல்லது தொழிற்பயிற்சி படிப்பிற்கு*	*1,000*
		(ii) விடுதி வசதியுடன் கூடிய ஐ.டி.ஐ அல்லது தொழில் பயிற்சி படிப்பிற்கு	*1,200*
5.		*திருமண உதவித் தொகை* *ஆண்களுக்கு* *பெண்களுக்கு*	 *3,000* *5,000*
6.	*மகப்பேறு உதவித் தொகை*		
	அ)	*மகப்பேறு: மாதம் ஒன்றுக்கு ரூ.1000 வீதம் (6 மாதங்களுக்கு)*	*6,000*
	ஆ)	*கருச்சிதைவு/ கருக்கலைப்பு*	*3,000*
7.		*மூக்குக் கண்ணாடி செலவுத் தொகையை ஈடுசெய்தல்*	*500வரை*
8.		*முதியோர் ஓய்வூதியம் (மாதந்தோறும்)*	*1,000*
9.	*அ)*	*தனிநபர் தொழில் தொடங்க மானியம்*	*7,500*
	ஆ)	*குழுவாகத் தொழில் தொடங்க மானியம்*	*10,000 தனி நபருக்கு (அல்லது) 1,25,000 குழுவிற்கு*

இதுவரை இவ்வாரியத்தில் பதிவு செய்துள்ள 14,308 உறுப்பினர்களுக்கு ரூ.811.27 இலட்சம் மதிப்பிலான நல உதவிகள் வழங்கப்பட்டுள்ளன.

2023-2024 ஆம் ஆண்டிற்கு ரூ.10 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

20. தமிழ்நாடு வன்னியகுல சத்திரியர் பொது அறநிலைப் பொறுப்பாட்சிகள் மற்றும் நிலைக்கொடைகள் வாரியம்

வன்னியகுல சத்திரிய சமுதாயத்தினரின் முன்னேற்றத்திற்காக வன்னியர் வள்ளல்களால் உயிலாக எழுதி வைக்கப்பட்ட

அறக்கட்டளைகளை அடையாளம் கண்டு அவை உருவாக்கப்பட்ட நோக்கத்தின் பலன்கள் முழுவதும் உரியவர்களுக்குச் செல்வதற்கான வழிவகைகளைக் காண்பதற்காக அரசால் 2009 ஆம் ஆண்டில் "வன்னியர் பொதுச் சொத்து நல வாரியம்" தோற்றுவிக்கப்பட்டது.

உயில் எழுதிய வன்னியகுல சத்திரிய சமுதாயத்தை சேர்ந்த விருப்பங்களை நிறைவேற்றுவதற்காகவும் வன்னிய பொறுப்பாட்சிகள் மற்றும் நிலைக் கொடைகளின் சொத்துக்களை பாதுகாப்பதற்கும், அரசால் "தமிழ்நாடு வன்னியகுல சத்திரிய பொது அறநிலைப் பொறுப்பாட்சிகள் மற்றும் நிலைக் கொடைகள் (பாதுகாத்தல் மற்றும் பேணிவருதல்) சட்டம், 2018" இயற்றப்பட்டு, 4-2-2019 அன்று நடைமுறைக்கு வந்தது.

இச்சட்டத்தினை நடைமுறைப்படுத்தும் வகையில் 1 தலைவர், பதவிவழி உறுப்பினர்கள் இருவர் உள்ளிட்ட 12 உறுப்பினர்கள் மற்றும் 1 உறுப்பினர் செயலாளர் அடங்கிய தமிழ்நாடு வன்னியகுல சத்திரிய பொது அறநிலைப் பொறுப்பாட்சிகள் மற்றும் நிலைக்கொடைகள் வாரியம் அரசால் உருவாக்கப்பட்டது. இவ்வாரியத்திற்கு நிருவாகச் செலவினங்களை மேற்கொள்ள 2022-2023 ஆம் ஆண்டில் அரசு ரூ.1 கோடி ஒப்பளிப்பு செய்தது. இவ்வாரியம் அமைக்கப்பட்டதில் இருந்து இதுவரை மொத்தம் 16 வாரியக் கூட்டங்கள் நடத்தப்பட்டுள்ளன.

2021–2022 ஆம் ஆண்டில் புதிதாக 22 வன்னிய அறக்கட்டளைகள் கண்டறியப்பட்டு ஆக மொத்தம் 119 அறக்கட்டளைகள் இதுவரை கண்டறியப்பட்டுள்ளன. இந்த அறக்கட்டளைகள் 25 மாவட்டங்களில் அமைந்துள்ளன. இவ்வாறு கண்டறியப்பட்ட அறக்கட்டளைகளுள் இதுவரை மொத்தம் 69 அறக்கட்டளைகள் இவ்வாரியத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளன. மீதமுள்ள அறக்கட்டளைகளை பதிவு செய்ய இவ்வாரியத்தால் துரித நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

பதிவு செய்யப்பட்ட அறக்கட்டளைகளுள், இதுவரை 17 வன்னியகுல சத்திரிய பொது அறநிலைப் பொறுப்பாட்சிகள் மற்றும் நிலைக் கொடைகளின் சொத்துப் பட்டியல் தமிழ்நாடு அரசிதழில் அறிவிக்கையாக வெளியிடப்பட்டுள்ளது. எஞ்சியுள்ள பதிவு செய்யப்பட்ட அறக்கட்டளைகளின் சொத்துப் பட்டியலினை அரசிதழில் வெளியிட இவ்வாரியத்தால் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

2023 ஏப்ரல் 13]

இவ்வாரியத்திற்கு நிருவாகச் செலவினங்களை மேற்கொள்ள 2023-2024 ஆம் ஆண்டிற்கு ரூ.100 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

21. சமூக நீதிக்கான தந்தை பெரியார் விருது

சமூக நீதிக்காக மிகச் சிறந்த முறையில் பங்காற்றியவர்களை சிறப்பு செய்யும் பொருட்டு சமூக நீதிக்கான தந்தை பெரியார் விருது வழங்கப்பட்டு வருகிறது. ஆண்டுதோறும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் தேர்வு செய்யப்படும் நபர் ஒருவருக்கு இவ்விருது வழங்கப்படுகிறது.

இவ்விருது பெறுபவருக்கு விருது தொகையாக 1 இலட்சம் ரூபாயும், ஒரு சவரன் தங்கப் பதக்கமும் வழங்கப்பட்டு வந்தது. இவ்விருதுத் தொகை 2021-2022 ஆம் ஆண்டில் ரூ.1 இலட்சத்திலிருந்து ரூ.5 இலட்சமாக உயர்த்தப்பட்டு, இவ்விருது பெறுபவருக்கு ஒரு சவரன் தங்கப் பதக்கமும், ரூ.5 இலட்சம் விருதுத் தொகையும் வழங்கப்படுகிறது. 2022 ஆம் ஆண்டிற்கான தந்தை பெரியார் விருது கவிஞர் கலி. பூங்குன்றன் அவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

2023-2024 ஆம் ஆண்டிற்கு இத்திட்டத்திற்காக ரூ.5.80 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

22. தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் ஆணையம்

இந்திரா சஹானி—எதிர்—இந்திய ஒன்றியம் என்னும் மண்டல் குழு வழக்குகளில் உச்ச நீதிமன்றம் அளித்த வழிகாட்டுதல்களின் அடிப்படையில் இந்திய அரசமைப்புச் சட்டத்தின் கூறு 16(4)இன்கீழ், கூறு 340 உடன் படிக்கப்பட்டு, ஒரு நிலையான அமைப்பாக தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் ஆணையம் அமைக்கப்பட்டது. இவ்வாணையம் 15-3-1993 அன்று முதல் செயல்பட்டு வருகிறது.

தற்போதைய ஆணையம் உயர் நீதிமன்றத்தின் ஓய்வுபெற்ற நீதியரசர் திரு வீ. பாரதிதாசன் தலைமையில், எட்டு உறுப்பினர்களுடன், மூன்று ஆண்டு காலத்திற்கு, 17-11-2022 முதல் திருத்தியமைக்கப்பட்டுள்ளது.

மேற்கூறப்பட்டுள்ள அரசாணையின்படி ஆணையத்திற்கு கீழ்க்காணும் செயல்வரம்புகள் நிர்ணயிக்கப்பட்டுள்ளன.

(1) பிற்படுத்தப்பட்டோர்/மிகவும் பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் சேர்க்கக் கோரும் மனுக்கள் மற்றும்

[*2023 ஏப்ரல் 13*

பட்டியல்களில் மிகுதியாகச் சேர்த்திருத்தல் அல்லது சேர்க்கப்படாமலிருத்தல் குறித்த முறையீடுகள் ஆகியவற்றைப் பெறுதல், ஆய்வுசெய்தல் மற்றும் அதன்மீது பரிந்துரைகளை வழங்குதல்.

(2) அவ்வப்போது எடுக்கப்படும் முடிவுகளின்படி, பிற்படுத்தப்பட்டோர்/மிகவும் பிற்படுத்தப்பட்டோர் பட்டியல்களை காலமுறைப்படி சீராய்வு செய்தல்.

(3) கிருஸ்துவர், இஸ்லாமியர் மற்றும் பிற சிறுபான்மையினர் சமுதாயங்களுக்கு, சமூக மற்றும் கல்வி ரீதியிலான பிற்படுத்தப்பட்ட நிலையின் அடிப்படையில் மேம்படுத்தப்பட்ட இடஒதுக்கீடு வழங்குதல் குறித்து ஆணையம் பரிந்துரை செய்தல்.

(4) பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் ஆகியோரின் வகைப்பாடு மற்றும் உள்—வகைப்பாடு செய்தல் தொடர்பாக அரசமைப்புச் சட்டத்தின் கூறுகள் மற்றும் தொடர்புடைய உச்ச நீதிமன்றத் தீர்ப்புகள் ஆகியவற்றின் அடிப்படையில் ஆணையத்தின் அறிக்கைகளை சமர்ப்பித்தல்.

(5) பல்வேறு சமுதாயங்களின் கோரிக்கைகளை பரிசீலனை செய்யும் நோக்கில், அரசால் அறிவிக்கப்பட்டு நடைமுறையிலுள்ள பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் பட்டியல்களில் இடம்பெற்றுள்ள சமுதாயங்களின் தற்போதைய நிலையை ஆராயத் தக்க புள்ளிவிவரங்களை சேகரிப்பதற்காக ஆணையம் தனிப்பட்ட ஆய்வுகள் நடத்தியும், மதிப்பீடுகள் செய்தும் அதன் பரிந்துரைகளை அரசுக்கு வழங்குதல்.

(6) அவ்வப்போது அரசால் பரிந்துரை கோரப்படும் பிற்படுத்தப்பட்டோர் தொடர்பான பொருண்மைகள் பிறவற்றையும் ஆய்வுசெய்து பரிந்துரை வழங்குதல்.

சி.ஏ. எண்.2600/2022 என்ற வழக்கில், 31-3-2022 அன்று உச்ச நீதிமன்றம் வழங்கியுள்ள தீர்ப்பில் குறிப்பிடப்பட்டுள்ளபடி, கூடுதல் செயல்வரம்புகள் நிர்ணயிக்கப்பட்டுள்ளன.

2023 ஏப்ரல் 13]

23. தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம்

பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் வகுப்பினைச் சார்ந்த தனி நபர்கள் மற்றும் குழுக்கள் தங்களது பொருளாதார முன்னேற்றத்திற்காக சாத்தியக் கூறுள்ள சிறு தொழில்கள், வியாபாரம் ஆகியவற்றைச் செய்ய குறைந்த வட்டி விகிதத்தில் தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம் நிதியுதவி வழங்கி வருகிறது. 1982 ஆம் ஆண்டு இந்நிறுவனம் அமைக்கப்பட்டது. இந்நிறுவனம் இந்திய கம்பெனிகள் சட்டம் 1956-ன்கீழ் பதிவுபெற்ற ஒரு அரசுத்துறை நிறுவனமாகும். இந்நிறுவனத்தின் அங்கீகரிக்கப்பட்ட பங்கு மூலதனம் ரூ.30 கோடி. இதன் செலுத்தப்பட்ட பங்கு மூலதனம் ரூ.12.27 கோடி. இந்நிறுவனம், தேசிய பிற்படுத்தப்பட்டோர் நிதி மற்றும் வளர்ச்சிக் கழகத்தின் மாநில முகமையாக செயல்பட்டு வருகிறது. இக்கழகம் செயற்படுத்தும் பல்வேறு கடன் திட்டங்களுக்கான நிதியை, தேசிய பிற்படுத்தப்பட்டோர் நிதி மற்றும் வளர்ச்சிக் கழகத்திடமிருந்து, தமிழ்நாடு அரசின் பொறுப்புறுதியின்மீது கடனாகப் பெறுகிறது.

23.1 கடன் திட்டங்கள்

தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம் தனி நபர்கள் மற்றும் சுய உதவிக் குழுக்களுக்கு கடனுதவி வழங்கி வருகிறது. கடன் திட்டங்களுக்கான பயனாளிகளை, அந்தந்த மாவட்ட கூட்டுறவு சங்கங்களுக்கான இணைப்பதிவாளர், மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலர், மாவட்ட தொழில்மையத்தின் பொது மேலாளர் மற்றும் அந்தந்த மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கியின் மேலாண்மை இயக்குநர் ஆகியோரைக் கொண்ட குழு தெரிவு செய்கிறது. தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம், மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி/கூட்டுறவு நகர வங்கி/ தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்கள் மூலம் பயனாளிகளுக்கு கடன் வழங்கி வருகிறது.

23.1.1 பொது காலக் கடன் திட்டம்

பொதுக் காலக் கடன் திட்டத்தின்கீழ், குறைந்த வட்டி விகிதத்தில் சிறு வர்த்தகம்/வணிகம், விவசாயம் மற்றும் அதனை சார்ந்த தொழில்கள், கைவினை பொருட்கள் மற்றும் மரபுவழிச்

சார்ந்த தொழில்கள் செய்வதற்கு கீழ்க்கண்டவாறு கடன் உதவி வழங்கப்படுகிறது.

வ. எண்.	கடன் தொகை	வட்டி விகிதம் (ஆண்டொன்றுக்கு)	திரும்ப செலுத்தும் காலம்	ஆண்டு வருமானம் உச்சவரம்பு
1	*ரூ.5 இலட்சம் வரையிலான கடன்களுக்கு*	*6%*	*3 ஆண்டு முதல் 8 ஆண்டுகள் வரை*	*ரூ.3 இலட்சம்*
2	*ரூ.5 இலட்சம் முதல் ரூ.10 இலட்சம் வரையிலான கடன்களுக்கு*	*7%*		
3	*ரூ.10 இலட்சம் முதல் ரூ.15 இலட்சம் வரையிலான கடன்களுக்கு*	*8%*		

இக்கடன் திட்டத்தில் பயனாளிகள் கடன்களை திரும்ப செலுத்தும் விகிதம் 91 விழுக்காடாக உள்ளது.

2022-2023 ஆம் ஆண்டில் இத்திட்டத்தின்கீழ் 576 பயனாளிகளுக்கு ரூ.756.35 இலட்சம் கடனாக வழங்கப்பட்டுள்ளது.

23.1.2 பெண்களுக்கான புதிய பொற்காலத் திட்டம்

பெண்களின் சுயசார்பு பண்பினை வளர்க்கும் நோக்குடன் இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ் பெண்கள் சிறு வணிகம் செய்வதற்கு கடன் உதவி வழங்கப்படுகிறது.

கடன் தொகை	வட்டி விகிதம் (ஆண்டொன்றுக்கு)	திரும்ப செலுத்தும் காலம்	ஆண்டு வருமானம் உச்சவரம்பு
ரூ.2 இலட்சம் வரை	*5%*	*3 முதல் 8 ஆண்டுகள்*	*ரூ.3 இலட்சம்*

2023 ஏப்ரல் 13]

இக்கடன் திட்டத்தில் பயனாளிகள் கடன்களை திரும்ப செலுத்தும் விகிதம் 92 விழுக்காடாக உள்ளது.

2022-2023 ஆம் ஆண்டில் இத்திட்டத்தின்கீழ் 554 பயனாளிகளுக்கு ரூ.320.35 இலட்சம் கடனாக வழங்கப்பட்டுள்ளது.

23.1.3 பெண்களுக்கான நுண் கடன் திட்டம்

இத்திட்டத்தின்கீழ், மகளிர் சுய உதவிக்குழு உறுப்பினர்கள் தனியாகவோ அல்லது குழுவாகவோ சிறுதொழில்/வணிகம் செய்வதற்கு கடன் வழங்கப்படுகிறது. ஒரு குழுவில் அதிகபட்சம் 20 உறுப்பினர்கள் அனுமதிக்கப்படுவர்.

கடன் தொகை	வட்டி விகிதம் (ஆண்டொன்றுக்கு)	திரும்ப செலுத்தும் காலம்	ஆண்டு வருமானம் உச்சவரம்பு
ஒரு நபருக்கு ரூ.1.25 இலட்சம் வரை குழுவிற்கு ரூ.15 இலட்சம் வரை	4%	4 ஆண்டுகள்	ரூ.3 இலட்சம்

இக்கடன் திட்டத்தில் பயனாளிகள் கடன்களை திரும்ப செலுத்தும் விகிதம் 95 விழுக்காடாக உள்ளது.

2022-2023 ஆம் ஆண்டில் இத்திட்டத்தின்கீழ் 13,663 பயனாளிகளுக்கு ரூ.8,728.44 இலட்சம் கடனாக வழங்கப்பட்டுள்ளது.

23.1.4 ஆண்களுக்கான நுண் கடன் திட்டம்

இத்திட்டத்தின்கீழ், ஆண்கள் சுய உதவிக் குழு உறுப்பினர்கள் தனியாகவோ அல்லது குழுவாகவோ சிறுதொழில்/வணிகம் செய்வதற்கு கடன் வழங்கப்படுகிறது. ஒரு குழுவில் அதிகபட்சம் 20 உறுப்பினர்கள் அனுமதிக்கப்படுவர்.

கடன் தொகை	வட்டி விகிதம் (ஆண்டொன்றுக்கு)	திரும்ப செலுத்தும் காலம்	ஆண்டு வருமானம் உச்சவரம்பு
ஒரு நபருக்கு ரூ.1.25 இலட்சம் வரை குழுவிற்கு ரூ.15 இலட்சம் வரை	5%	4 ஆண்டுகள்	ரூ.3 இலட்சம்

இக்கடன் திட்டத்தில் பயனாளிகள் கடன்களை திரும்ப செலுத்தும் விகிதம் 95 விழுக்காடாக உள்ளது.

2022-2023 ஆம் ஆண்டில் இத்திட்டத்தின்கீழ் 121 பயனாளிகளுக்கு ரூ.89.84 இலட்சம் கடனாக வழங்கப்பட்டுள்ளது.

23.1. 5 கறவை மாடுக் கடன்

பொதுக்கால கடன் திட்ட விதிமுறைகளுக்குட்பட்டு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கங்களில் உறுப்பினராக உள்ளவர்களுக்கு ஒரு கறவை மாட்டிற்கு ரூ.30,000 வீதம் அதிகபட்சம் ரூ.60,000 வரை கடன் வழங்கப்படுகிறது.

கடன் தொகை	வட்டி விகிதம் (ஆண்டொன்றுக்கு)	திரும்ப செலுத்தும் காலம்	ஆண்டு வருமானம் உச்சவரம்பு
ரூ.60,000/— (2 கறவை மாடுகளுக்கு)	6%	3 ஆண்டுகள்	ரூ.3 இலட்சம்

இக்கடன் திட்டத்தில் பயனாளிகள் கடன்களை திரும்ப செலுத்தும் விகிதம் 99 விழுக்காடாக உள்ளது.

2022-2023 ஆம் ஆண்டில் இத்திட்டத்தின்கீழ் 237 பயனாளிகளுக்கு ரூ.67.54 இலட்சம் கடனாக வழங்கப்பட்டுள்ளது.

2022-2023 ஆம் ஆண்டில் இக்கழகத்தால் பல்வேறு கடன் திட்டங்களின்கீழ் மொத்தம் 15,151 பயனாளிகளுக்கு ரூ.9,962.52 இலட்சம் கடனாக வழங்கப்பட்டுள்ளது.

2023-2024 ஆம் ஆண்டிற்கு பல்வேறு திட்டங்களின்கீழ்

2023 ஏப்ரல் 13]

ரூ.11,656 இலட்சம் (தேசிய பிற்படுத்தப்பட்டோர் நிதி மற்றும் வளர்ச்சிக் கழகத்தின் பங்குத் தொகை ரூ.11,000 இலட்சம் மற்றும் தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக் கழகத்தின் பங்கு தொகை ரூ.656 இலட்சம்) அளவில் கடன் வழங்க திட்டமிடப்பட்டுள்ளது.

23.1.6 சிறு, குறு விவசாயிகளுக்கான நீர்பாசன வசதி ஏற்படுத்த மானியத்துடன் கூடிய கடன் வழங்கும் திட்டம்

பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் வகுப்பினைச் சார்ந்த சிறு, குறு விவசாயிகளுக்கு நீர்ப்பாசன வசதி ஏற்படுத்த மானியத்துடன் கூடிய கடன் வழங்கும் திட்டம் 2007—2008 ஆம் ஆண்டு முதல் செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டத்தின்கீழ், தேர்வு செய்யப்படும் பயனாளிகளுக்கு கூட்டுறவு வங்கிகள்/தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகள் மூலம் 50 விழுக்காடு மானியத்துடன் அதிகபட்சம் ரூ.1 இலட்சம் வரை கடன் வழங்கப்படுகிறது. இதுவரை 5,821 சிறு, குறு விவசாயிகளுக்கு மானியமாக ரூ.2,760.60 இலட்சம் விடுவிக்கப்பட்டுள்ளது.

2023-2024 ஆம் ஆண்டிற்கு சிறு குறு விவசாயிகளுக்கு நீர்ப்பாசன வசதி ஏற்படுத்த மானியம் வழங்குவதற்கு ரூ.450 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

முடிவுரை

பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபின வகுப்பினர் சமூக, கல்வி மற்றும் பொருளாதாரம் என அனைத்து நிலைகளிலும் முன்னேற்றம் அடைவதை தனது தத்துவமாகவும், கொள்கையாகவும் கொண்டு இவ்வரசு செயல்பட்டு வருகிறது. இவ்வகுப்பினரின் முன்னேற்றத்திற்கு முக்கிய கருவியாக திகழும் இடஒதுக்கீட்டு கொள்கையினை அரசு செவ்வனே செயல்படுத்தி வருகிறது. இவ்வகுப்பினரின் வாழ்வை மேம்பாடு அடைய செய்யும் வகையில் இவ்வரசு தொடர்ந்து செயலாற்றும்.

———

இணைப்பு

2023 – 2024 ஆம் ஆண்டிற்கான ஒதுக்கீடு

(ரூபாய் இலட்சத்தில்)

துறை	வருவாய்	மூலதனம்	கடன்	மொத்தம்
தலைமைச் செயலகம்	855.62	—	0.01	855.63
வக்ஃப் மற்றும் ஹஜ் குழு	3325.90	—	—	3325.90
பிற்படுத்தப்பட்டோர் நலன்	57954.92	407.01	—	58361.93
மிகப்பிற்படுத்தப்—பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலன்	56702.13	3422.19	—	60124.32
தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் ஆணையம்	129.89	—	—	129.89
மாநில சிறுபான்மையினர் ஆணையம்	88.35	—	—	88.35
சிறுபான்மையினர் நலன்	3612.72	31403.73	—	35016.45
தமிழ்நாடு வக்ஃப் தீர்ப்பாயம்	108.60	—	—	108.60
மொத்தம்	122778.13	35232.93	0.01	158011.07

———

Copies can be had from the
Assistant Director,
Government Publication Depot,
110, Anna Salai, Chennai-600 002.

©

Published under Rules 280 and 283 of the Tamil Nadu Legislative Assembly Rules and printed by the
Commissioner of Stationery and Printing,
Chennai-600 002.